பிஸ்மில்லாஹி

# கீமியாயெ ஸஆதத்து.

நான்காவது வால்யம்.

## ருகுனு முஞ்ஜியாத்து.

இஃது

பார்ஸி பாஷையிலிருந்து

மதுரை

ஹலரத்து முகம்மது இபுராஹீம் சாகிபு நக்ஷபந்தி

அவர்களின் ஷாகிர்துகளில் ஒருவராகிய

நெல்லிகுப்பம்

## அப்துர் ரஹ்மான் சாகிபால்

உரைபடுத்தப்பட்டு,

சென்னை :

மத்ராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

---

முதற்பதிப்பு காப்பிகள் 1000.

ஹிஜ்ரி 1330ஞு றஜபுமீ

ஈசவீ 1912ஞு ஜூலைமீ

காப்பிரைட் ரிஜிஸ்டர்.

விலை ரூபா 1-10-0. வி-பி. செலவு 0-4-0.

MADRAS

770

297.

530

4.12

பிஸ்மில்லாஹி.

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில் மீமியாயெ ஸ்ஆதத்து என்னும் இப்புத்தகம் 1867௵ 25-வது ஆக்டு 20-வது பிரிவு ?-வது விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மதராசில் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால் இந்த மீமியாயெ ஸஆதத்து 4-வது வால்யம் முழுமையுமாவது இதிற் சில பாகத்தையாவது அடியிற் கையொப்பமிட்டிருக்கிற உரையாசிரியனுடைய உத்திரவின்றி ஒருவரும் அச்சிடக்கூடாது. மீறி அச்சிட்டால் மேற்கண்ட ஆக்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனாலுண்டாகும் நஷ்டமனைத்தும் வசூல் செய்யப்படும்.

டைட்டில்பேஜில் என் கையெழுத்தாவது தா. அப்துல் கபூர் சாகிபுடைய கையெழுத்தாவது இல்லாத புத்தகம் கள்ளர்களால் வெளிவந்ததாகையால் அக்கள்ளர்களைக் காண்பித்தவர்களுக்குத் தக்க இனாம் கொடுக்கப்படும்.

இப்புஸ்தகம் தேவையுள்ளவர்கள்

☞ தா. அப்துல்கபூர் சாஹிபு,

இஸ்லாமியா புஸ்தகசாலை, நெல்லிகுப்பம்

என்ற விலாசக்காரரிடம் கைவிலைக்கும் வி. பி. பார்சல் மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்:

உரையாசிரியன்,

☞ அப்துர்ரஹ்மான்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
23 MAR 1912
MADRAS

பிஸ்மில்லாஹி.

# ஃமியாயெ ஸஆதத்து

## நான்காவது ருகுனு முஞ்ஜியாத்தின் தமிழுரைக்கு

# முகவுரை.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா சய்யிதில் முர்சலீன முஹம்மதின் வ ஆலிஹிஸ் ஸாபிரீனஷ்ஷாகிரீன். வஅஸ்ஹாபிஹிஸ் ஸாஹிதீனல் ஆரிபீனஅஜ்மயீன்.

அம்மாபஃது:—இதற்குமுன் ஃமியாயெ ஸஆதத்தில் அடங்கியுள்ள நான்கு மஃரிபத்துகளும் ருகுனு இபாதாத்துமான முதல் வால்யமும், ருகுனுமுஆமலாத்தான இரண்டாம் வால்யமும், ருகுனு முஹ்லிகாத்தான மூன்றும் வால்யமும் தனித்தனியே தமிழில் அச்சியற்றப்பட்டிருப்பதும்,

முதல் வால்யத்தின் நான்கு உன்வான்களிலும் முறையே தன்னையும் அல்லாகு தஆலாவையும் இகலோகத்தையும் பரலோகத்தையும் அறியும் விவரமும் அதில் முடிந்திருக்கிற ருகுனு இபாதாத்தில் சுன்னத்து ஜமாஅத்தின் நிர்ணயம், இல்மைத்தேடல், சுத்தம், தொழுகை, ஸக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு, குருஆன் ஓதல், திகுரு, தஸ்பீஹு அவுராது ஓதுகிற ஒழுங்கு இவைகளின் விவரமும் கூறப்பட்டிருப்பதுடன் நூன்முகத்தில் நூலாசிரியரான ஹலரத்து இமாம் முஹம்மது கஸ்ஸாலிறஹ்மத்துல்லாஹி அலைஹியவர்களின் ஜீவவிருத்தாந்தச் சுருக்கமும் சொல்லப்பட்டிருப்பதும்,

இரண்டாம் வால்யத்தில் உணவருந்தல், நிகாகுசெய்தல், வர்த்தகம் முதலிய தொழில்செய்தல், ஹலாலைச் சம்பாதித்தல், ஜனங்களுடன் சகவாசித்தல், ஜனங்களைவிட்டுத் தனித்தல், சபர்போதல், இராகம் கேட்டல், நன்மை தீமைகளைப்பற்றி ஜனங்களுக்கு உணர்த்தல், அதிகாரம் செலுத்தல் இவைகளின் விஸ்தரிப்புகள் அடங்கியிருப்பதும்,

மூன்றும் வால்யத்தில் நபுசுடன் போர்புரிந்து துர்க்குணங்களையொழிப்பதற்கும் நற்குணங்களையடைவதற்கும் பரிகாரங்கள், போகவிச்சை போஜனப்பிரியம் இவைகளை அடக்குவதற்குப் பரிகாரங்கள், பேச்சுப் பிரியத்தை யொழிப்பதற்குப் பரிகாரங்கள், கோபத்தைத் தணிப்பதற்கும் பொறாமையைப் போக்குவதற்கும் பரிகாரங்கள், துன்யாவின் உவப்பை ஒழிப்பதற்குப் பரிகாரங்கள், பொரு

ளாசைசனைப் போக்குவதற்குப் பரிகாரங்கள், கவுரவப் பிரியத்தைக் கரைப்பதற்குப் பரிகாரங்கள், இபாதத்துகளில் ரியாவையும் நிபாகையும் நீக்குவதற்குப் பரிகாரங்கள், அகம், பெருமை இவைகளை அகற்றுவதற்குப் பரிகாரங்கள், மருட்சி, மறதி இவைகளை மாய்ப்பதற்குப் பரிகாரங்கள் இவைபோல் சித்தசுத்திக்குரிய சாதனங்கள் யாவும் கூறப்பட்டிருப்பதும் அநேகர்க்குத் தெரிந்தவிஷயமே.

மனிதன் ஆகிரத்தில் அல்லாகுதஆலாவைத் தெரிசித்துத் தீர்க்காநந்த சுகத்தை அடையும்பொருட்டுத் துன்யாவில் அவன் பெற வேண்டிய பேறுகளான மகாமாத்துகள் இனையவெனக் காட்டுவதே இந்த நாலாவது வால்யத்தின் மொத்தக் கருத்தாம்.

இது முழுதும் மூன்றாவது வால்யம்போலவே மூலப்பிரதியான பார்சி கீமியாயெ ஸஆதத்தின் உரையாயிருக்கிறது. இதிலும் மற்ற மூன்று வாலியங்களிலும் ஏதேனும் வழுவிருப்பதாகக் காண்பவர்கள் மூலப்பிரதியைப் பார்த்தபின் அவ்வழுவைத் திருத்திக் கொளவதுடன் அடியேனுக்கும் அதைத் தெரிவிக்கும்படி அவர்களை யான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கீமியாயெ ஸஆதத்தின் கடைசி ருகுனு முன்ஜியாத்தாகிய இந்த நாலாவது வால்யத்தின் உரை ஹிஜ்ரி ஆயிரத்து முன்னூற்று முப்பதாம் ஆண்டில் அச்சியற்றப்பட்டுப் புத்தகம் பூர்த்தியடைந்ததற்கு அல்லாகு தஆலாவை ஆயிரமாயிரமுறைப் புகழ்கின்றேன். பலில்லாஹில் ஹம்து ஹம்தன் கதீரன் தய்யிபன் முபாரகன்பீஹி.

## யானடைந்த ஓர் நன்கொடை.

திருச்சிறாப்பள்ளி ஜில்லாவைச்சேர்ந்த இலுப்பூர் என்னும் நகரில்வசிக்கும் மாசங்கைபொருந்திய கனவானும் கல்விப்பிரியருமான ஜனுப், T. A. முஹம்மது மீராசாகிபவர்கள் யானிதைத் துரிதமாக உரைபடுத்தி அச்சியற்றும்பொருட்டு எனக்கு நன்கொடையாக ரூபாய் 25 மணியார்டர் அனுப்பினதுமன்றி இதுகாரியத்தில் பன்முறை என்னைத் தூண்டி வற்புறுத்திக்கொண் டிருந்ததற்கு யான் அவர்களின் நன்றியறிந்தவனாயிருக்கிறேன். ஜஸாஹுல்லாஹு கைரஜஸா.

இங்ஙனம்: உரையாசிரியன்,

ஷெ அப்துர் ரஹ்மான்.

# கீமியாயெ ஸஆதத்து 4-வது ருகுனு
## முஞ்ஜியாத்கல் அடங்கியுள்ள
## விஷய அட்டவணை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| இந்த ருகுனு முஞ்சியாத்தில் அடங்கிய அஸ்லுகளின் தொகையும் விஷயங்களும் | 1 |
| முதலாவது அஸ்லு:-தவுபாவின் பயான் ... ... | 1 |
| தவுபாவின்வரிசையும் சவாபும் ... | 2 |
| தவுபாவுக்கு மூலகாரணம் இது வென்பது ... ... | 6 |
| தவுபாஎல்லார்பேரிலும்எல்லாநேரத்திலும் வாஜிபென்பது ... | 7 |
| தவுபாவின் கபூலியத்து ... | 13 |
| சிறுபாவங்களும் பெரும்பாவங்களும் இனையவென்பது ... | 16 |
| சிறுபாவங்கள் ஏதனுல் பெரும்பாவங்களாகின்றனவென்பது... | 19 |
| சரியான தவுபாவின் ஷாத்றும் அதன் அடையாளமும் ... | 23 |
| (பசல்) தவுபாவின்மேல் நிலைத்திருக்கிற ... ... | 29 |
| ஜனங்கள் தவுபா செய்யாமலிருக்கிற காரணங்களும் அவற்றின் பரிகாரங்களும் ... | 30 |
| (பசல்)ஒருவன்எல்லாபாவங்களில் நின்றும் தவுபாசெய்யாமல் | 34 |
| இரண்டாவது அஸ்லு:—சபுரு ஷுக்குரு இவைகளின்பயான் | 35 |
| சபுரு இதுவென அதன் ஹகீகத்தை விளக்கல் ... ... | 37 |
| ஈமானின் ஒருபாதி சபுரும் மற்றொருபாதி நோன்புமாம் என்றதற்குக் காரணம் ... | 41 |
| எல்லா நிலைமைகளிலும் சபுரு வேண்டுமென்பது ... | 43 |
| சபுரை உண்டாக்கிக் கொள்வதற்குப் பரிகாரம் ... ... | 51 |
| ஷுக்குரின் மேம்பாடு ... | 53 |
| ஷுக்குரு இதுவென அதன் ஹகீகத்தை விளக்கல் .. | 56 |
| நன்றிமறக்குதல் இதுவென்பது | 63 |
| நிகுமத்து இதுவென அதன்பொருளை விளக்கல் .. ... | 73 |
| (பசல்) துன்யாவுடைய பொருட்கள் அநேகமாய்க் கலப்புண்டிருக்கும் ... ... | 74 |
| (பசல்) ஜனங்கள் எதைநல்லதென்றஎண்ணுகிறார்களோ அது மூன்று நிலைமைக்குள் அடங்கும் ... ... ... | 74 |
| (பசல்) எதுவொன்று பிரியமாய்த் தெரிகிறதோ அது நிகுமத்தாகும் ... .. | 75 |
| எல்லாநிகுமத்துகளின் தொகையும் அவற்றின் வகையும் ... | 77 |
| ஜனங்கள் ஷுக்குரில்குறைசெய்தல் ... ... ... | 85 |
| மூன்றுவது அஸ்லு:-கவுபு, ரஜா என்னும்அச்சம் ஆதாவுகளின் பயான் ... ... | 92 |
| ரஜா என்னும் ஆதாவின்வரிசைப்பாடு ... ... | 92 |
| ரஜாஇதுவென அதன்பொருளை விளக்கல் ... ... | 96 |
| ரஜா என்னும் ஆதாவையுண்டாக்கிக்கொள்ளப் பரிகாரம் ... | 99 |
| அச்சத்தின் மேம்பாடு ... | 110 |

# விஷய அட்டவணை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| அச்சம் இதுவென அதன்பொருளை விளக்கல் ... .. | 114 |
| அச்சத்தின் வகுப்புகள் ... | 117 |
| அச்சத்தின் வகைகள் ... | 119 |
| முடிவின் கேடு ... ... | 121 |
| (பசல்) எதற்கு எல்லாரும் பயந்திருக்கிறார்களோ அந்த முடிவின் கேடு ... ... | 123 |
| அச்சத்தை உண்டாக்கிக்கொள்ள பரிகாரம் ... ... | 126 |
| கபிமார்கள் மலக்குகள் இவர்களின் ஹிகாயத்துகள் ... | 129 |
| அஸ்ஹாபுகள் சலபுகள் இவர்களின் ஹிகாயத்துகள் ... | 132 |
| (பசல்) அச்சம் ஆதரவு இவை ஒவ்வொன்றின் வரிசை ... | 136 |
| நான்காவது அஸ்லு:-பக்ரு, ஜாஹிது என்னும் எழிமை, தெண்டிப்புகளின் பயான் ... | 137 |
| பக்ரு, ஜாஹிது, இவற்றின் ஹகீகத்தான பொருள் ... | 138 |
| எழிமையின் மேம்பாடு ... | 140 |
| உள்ளது போதுமெனத் திருப்தியடையும் ஏழையின் மேம்பாடு | 145 |
| (பசல்) சபுருசெய்கிறஏழையோ அல்லது ஷுக்குருசெய்கிற சீமானோ யார் அதிகவரிசையுள்ளவன் ... ... | 147 |
| ஏழை தன் எழிமையில் அனுசரிக்கவேண்டிய அதபுகள் ... | 152 |
| அவசியமில்லாமல் சுவால்செய்தல் ஹராம் என்பது ... | 155 |
| (பசல்) பகீருகளின் வகுப்புகள் பலவாயிருக்கின்றனவென்பது | 159 |
| ஜாஹிது இதுவென அதன்ஹகீகத்தையும் அதன் மேம்பாட்டையும் விளக்கல் ... | 164 |
| ஜாஹிதின் மேம்பாடு ... | 165 |
| ஜாஹிதின் வகுப்புகள் ... | 170 |
| ஜாஹிது தன்யாவில்போதுமாக்கிக்கொள்ளவேண்டிய வஸ்து | 174 |



| விஷயம். | பக்கம். |
|---|---|
| ஐந்தாவது அஸ்லு:-நிய்யத்து சிதுகு இகுலாசு இவைகளின் பயான் ... ... | 186 |
| முதலாவது பாபு நிய்யத்து ... | 187 |
| நிய்யத்து இதுவென அதன்பொருளை விளக்கல் ... ... | 190 |
| (பசல்) ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாயினால் மூமினுடைய நிய்யத்து ... | 192 |
| இருதயவசசிப்பு, கெட்டசிந்தனைகள் இவைகளில் பொறுக்கப்படுவது இதுவெனவும்குற்றம் பிடிக்கப்படுவது இதுவெனவும் விளக்கல் ... ... | 195 |
| அமல்களில் எந்த அமல் நிய்யத்தினால் மாறும் என்பதை விளக்கல் ... ... | 200 |
| நிய்யத்து சக்திக்குள் அடக்கினதல்ல வென்பது ... | 205 |
| (பசல்) அமலின்பேரில் தூண்டுகிற மனநோக்கமே நிய்யத்துக்குப்பொருள் என்பது ... | 208 |
| இரண்டாவது பாபு இகுலாசு ... | 210 |
| இகுலாசு இதுவென அதன்பொருளை விளக்கல் ... ... | 214 |
| (பசல்) ஜாஹிலான ஓர் மூடன் செய்கிற ஒருவருஷத்தின் இபாதத்தைவிட ஆலிமான ஒரு அறிவாளன்தொழுகிற இரண்டு ரக்கஅத்துகள் அதிகவரிசையுள்ளது ... ... | 218 |
| (பசல்) நிய்யத்து கலப்புள்ளதாயிருந்து ... ... | 220 |
| மூன்றாவது பாபு-சிதுகுஎன்னும் சத்தியம் அல்லது உண்மை | 223 |
| ஆறாவது அஸ்லு:-முஹாசபா முராகபா இவைகளிற்பேசுவது | 228 |
| முதலாவது தானம் முஷாரதா அதாவது நப்சின்மீது ஷாத்தை விதிப்பது ... ... | 229 |
| இரண்டாவதுதானம் முராகபா | 232 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| (புசல்) முராகபாவாந்து இரண்டுதாஜாவின்பேரிலிருக்கிறது | 235 |
| மூன்றுவது தானம் முஹாஸபா | 242 |
| நாலாவது தானம் முஆகபா ... | 244 |
| ஐந்தாவது தானம் முஜாஹதா ... | 247 |
| ஆறுவது தானம் முஆத்தபா ... | 251 |
| ஏழாவது அஸ்லு:-தபக்குரு அதாவது ஆராய்ந்து பார்ப்பதின் பயான் ... ... | 257 |
| ஆராய்ந்து பார்ப்பதின்மேம்பாடு | 258 |
| ஆராய்தல் என்பதற்குப்பொருள் | 259 |
| எதற்காக ஆராய்தல்செய்வது ... | 260 |
| ஆராய்தலுக்கிடமான மைதானவெளியும்அதன்விசாலமும்... | 261 |
| மனிதன் தன்னிலேஆராய்தல் ... | 262 |
| ஹக்கு தஆலாவிலே ஆராய்தல் | 265 |
| ஹக்கு தஆலாவுடைய சிருஷ்டியின் புதுமைகளில் ஆராய்தல் | 268 |
| எறும்புமுட்டை மனிதனை வனம் செய்தது ... ... | 280 |
| எட்டாவது அஸ்லு:-தவக்குலின் பயான் ... ... | 290 |
| தவக்குலின் மேம்பாடு ... | 291 |
| தவக்குலுக்கு நிலைகளான தவ்ஹீது இதுவென அதன்பொருளை விளக்கல் ... ... | 293 |
| (பசல்) அகத்தியம் நீ இந்நாலாவது வகுப்பு தவ்ஹீது கஷ்டமாய்த் தெரிகிறதென்றும் எல்லாம் ஒன்றில்நின்றுமே உள்ளதென எப்படி காண்பதென்றும் சொல்லுவாய் ... | 296 |
| (பசல்) அகத்தியம் நீ சொல்லக்கூடும் ... ... | 302 |
| தவக்குலுக்கு நிலைகளமான மற்றொரு ஈமான் ... ... | 307 |
| தவக்குல் இதுவென அதன்பொருளை விளக்கல் ... ... | 309 |
| தவக்குலின் வகுப்புகள் ... | 311 |
| தவக்குலின் அமல்கள் ... | 314 |
| தவக்குலின் முதலாவது மகாம் | 314 |
| குடும்பஸ்தனுடைய தவக்குல் ... | 324 |
| தவக்குலின் இரண்டாவதுமகாம் | 327 |
| (பசல்) ஒருவன் எதும் தங்கரித்து வைத்துக்கொள்ளாதபக்ஷம் | 331 |
| தவக்குலின்மூன்றுவதுமகாம் ... | 330 |
| பொருளைக் கள்ளன் கொண்டுபோய்விட்டால் ... | 333 |
| தவக்குலின் நாலாவது மகாம் பிணிக்குப் பரிகாரம் ... | 337 |
| (பசல்) சூடுபோட்டுக் கொள்வதும் ... ... ... | 341 |
| சிலநிலைமைகளில் மருந்தை உபயோகிக்காமலிருப்பதுமேல் | 341 |
| (பசல்) பிணியைமறைத்துக்கொள்வது தவக்குலுக்கு ஷாத்து | 347 |
| ஒன்பதாவது அஸ்லு: - மஹப்பத்துஷவுகு ரிலா இவைகளின் பயான் ... ... | 346 |
| அல்லாகு தஆலாவை நேசிப்பது | 348 |
| மஹப்பத்துக்குப் பொருள் ... | 351 |
| நேசத்துக்குரியவன் அல்லாகுதஆலாவின் றிவேறுயாருமில்லை என்பதற்குக் காரணங்கள் ... | 353 |
| ஜமால் இதுவென அதன்பொருளை விளக்கல் ... ... | 356 |
| அல்லாகுதஆலா ஒருவன் மாத்திரமே நேசத்துக்கு அருகன் ... | 358 |
| எந்த இன்பமும்அல்லாகு தஆலாவைத்தெரிசிக்கும் இன்பத்துக்கு நிகரல்லவென்பது ... | 366 |
| (பசல்) தெரிசனையின் இன்பம் அறிவின் இன்பத்தைப் போன்றதா யிருக்கிறபக்ஷம் இது அவ்வளவுஅதிகமான ஓர்இன்பமல்லவென்று நீ சொல்லுவாய் | 376 |
| (பசல்) ஒருக்கால் நீ ஞானமே எப்படித் தெரிசனமாகும் என்று சொல்லக்கூடும் ... | 377 |
| (பசல்) ஒருக்கால் நீ சுவர்க்கத்துடைய இன்பத்தை ஜனங்கள் மறந்துபோகிற விதமான ஓர் | |

# விஷய அட்டவணை.


| விஷயம். | பக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|---|
| இன்பம் உண்டென்பது எனக்கு ஏற்படவில்லை யென்பாய் | 378 | மவுத்தின் நினைவு மனதில் குணஞ்செய்வதற்குப் பரிகாரம் ... | 416 |
| அல்லாகுத்ஆலாவை அறிதலென்னும் மஃரிபத்து மறைந்திருப்பதற்குக் காரணம் | 386 | நெடுநாளிருக்கலாமென்கிற மேலெண்ணத்தைச் சுருக்குவதின் மேம்பாடு ... ... | 418 |
| அல்லாகுதஆலாவின்மீது மஹப்பத்துண்டாவதற்குப் பரிகாரம் | 388 | மேலெண்ணத்துக்குக் காரணங்கள் ... ... ... | 421 |
| அல்லாகுதஆலாவை நேசிப்பதற்கு அடையாளங்கள் ... | 393 | மேலெண்ணத்துக்குப் பரிகாரம் | 423 |
| அல்லாவின்மீது ஷவுகு இதுவென அதன்பொருளை விளக்கல் | 397 | மேலெண்ணத்தின் வகுப்புகள் | 424 |
| ரிலாவாகிய பொருத்தம் இதுவென அதன்பொருளையும் அதன் மேம்பாட்டையும் விளக்கல் ... | 401 | மவுத்துடைய சகராத்தும் உயிர் வாங்கலின் கஷ்டமும் .. | 426 |
| ரிலா என்னும் பொருத்தத்துக்குப் பொருள் ... ... | 405 | சகராத்தின்போதுண்டாகிற பயங்கரமான சம்பவங்கள் ... | 428 |
| பத்தாவது அஸ்லு:—மவுத்தை நினைப்பதின் பயான் ... | 411 | மய்யித்தினிடம் கபுருபேசுவது | 433 |
| (பசல்)மவுத்தை நினைப்பதுமூன்றுவித மென்பது ... | 415 | முன்கர் நகீருகளுடைய சுவால் | 434 |
| | | மவுத்தானவர்களுடைய அஹ்வால்களில் நின்றும் சொப்பன வழியாக வெளியாயிருக்கிற அஹ்வால்கள் ... ... | 439 |


விஷய அட்டவணை முற்றிற்று.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்.

# இமியாயெ ஸஆதத்து.

## நான்காவது ருகுனு

### முஞ்ஜியாத்தின் பயான்.

(முதலாவது, இரண்டாவது, மூன்ருவது ருகுனுகளுக்குப்
போல்) இந்த நான்காவது ருகுனுக்கும் பத்து அஸ்லுகளுண்டு. முத
லாவது அஸ்லு: தவுபா அதாவது பாவ வழியிலிருந்து திரும்பி வண
க்கவழிக்கு வருவதின் பயான். இரண்டாவது அஸ்லு: சபுரு, ஷுகுரு
அதாவது பொறுமை நன்றியறிதல் இவைகளின் பயான். மூன்ருவது
அஸ்லு: கவுபு, ரஜா அதாவது அச்சம், ஆதரவுகளின் பயான். நான்
காவது அஸ்லு: பக்ரு, ஜுஹ்து அதாவது எழிமை தெண்டிப்பு
இவைகளின் பயான். ஐந்தாவது அஸ்லு: நிய்யத்தில் இக்லாசும் சிது
கும் அதாவது கலப்பற்றதும் நிஜமானதுமான நிய்யத்தின் பயான்.
ஆறுவது அஸ்லு: முஹாசபா, முராகபா இவைகளின் பயான். ஏழா
வது அஸ்லு: தபக்குரு அதாவது ஆராய்ந்து நோட்டமிடுவதின்
பயான். எட்டாவது அஸ்லு: தவ்ஹீது, தவக்குல் அதாவது ஓர்மைப்
படுத்தல் பாரஞ்சாட்டல் இவைகளின் பயான். ஒன்பதாவது அஸ்லு:
மஹப்பத்து, ஷவுகு அதாவது உவப்பு, ஆசை இவைகளின்
பயான். பத்தாவது அஸ்லு: மவுத்தை நினைக்குதல், ஆகிரத்துடைய
அஹ்வால்கள் இவைகளின் பயான்.

### முதலாவது அஸ்லு-தவுபாவின் பயான்.

அறிந்துகோள்:—தவுபாசெய்து அல்லாகு தஆலாவின் பக்கம்
திரும்புவதானது முரீதுகளின் நடைக்கு முதல் அடியாயும் தீன்
வழி நடப்பவர்களின் நேர்வழி நடைக்கு ஆரம்ப நடையாயு மிருக்
கிறது. தவுபாவை விட்டுவிட எந்த மனிதனுக்கும் வழியில்லை. ஏனெ
னில் படைத்ததுமுதல் கடைசிவரையில் பாவஞ் செய்யாமல் சுத்த
மாயிருப்பது மலக்குகளின் குணமாயும், வயது முழுதும் பாவத்தி
லும் விரோதத்திலும் மூழ்கிக்கிடப்பது ஷைத்தானுடைய செய்கை

யாயும், தவ்பாவினாலும் மனம் நாணி வெட்கிப்பதினாலும் பாவமான வழியைவிட்டு நீங்கி வணக்கமான வழியில் திரும்புவது ஆதம் அலைஹிஸ்ஸலாமுடையவும் மற்ற மனிதர்களுடையவுமான வேலையாயும் இருக்கிறது. யாராவதொருவன் தன்னால் நிகழ்ந்த பாவங்களைத் தவ்பாவினால் பொருப்பித்துக்கொள்ளுவானாகில் அவன் தன்னை ஆதம் அலைஹிஸ்ஸலாமுடன் சேர்த்தவனானான். இன்னும் யாராவதொருவன் தன் வயது முழுவதும் பாவத்திலேயே நிலைத்திருப்பானாகில் அவன் தன்னை ஷைதானுடன் சேர்த்தவனானான். ஆனால் ஆயிசு பரியந்தம் பாவமில்லாமல் வழிபாட்டிலிருக்க மனிதனுக்கு இடம்பாடில்லை. ஏனெனில் மனிதனைப் படைத்திருப்பதில் ஆரம்பத்தில் அவனுக்குப் பூரணத்துவமும் புத்தியுமிருந்ததில்லை. முதல்முதல் அவனில் இச்சை உண்டாக்கப்பட்டது. அந்த இச்சை ஷைதானுக்கு உதவியான ஓர் கருவியாயிருக்கிறது. அது மனிதனை மிகைத்து அவனுடையமனக்கோட்டையை வசப்படுத்திக்கொண்டது. நபுசும்அந்த இச்சையுடன் பழகி அதனிடத்தில் சிநேகம் பிடித்துக்கொண்டது. இப்படியாக இச்சை மேற்கொண்டபிறகு அதற்குச் சத்துருவாயும் மலக்குகளின் ஆதார ஒளியாயுமிருக்கிற புத்தியை அவனில் படைக்கப்பட்டது. பின்பு புத்தி எப்போது தலையெடுத்ததோ அப்போது கட்டாயமாகத் தவ்பாவும் தெண்டிப்பும் தேவையாயின. ஏனெனில், அந்தக் கோட்டையை ஜெயிக்கவும் ஷைதான், இச்சை இவைகளுடைய கைவசத்திலிருந்து அதை விடுவிக்கவுமாமென்க. ஆதலால் தவ்பா மனிதர்களுக்கு அவசியமாயும் தீன்வழி நடப்பவர்களின் முதல் அடியாயும் இருக்கிறது. புத்தி, ஷரகு இவைகளின் வெளிச்சத்தால் மனக்கண் திறக்கப்பட்டு தப்புவழியிலநின்றும் நேர்வழியைப் பார்த்துக்கொண்டதின் பின்னால் தவ்பா செய்வதன்றி வேறு விதியில்லை. தப்புவழியிலிருந்து திரும்பி நேர்வழிக்கு வருவதென்பதே தவ்பாவுக்குப் பொருளாயிருக்கிறது.

## தவ்பாவின் வரிசையும் சவாபும்.

அறிந்துகோள்:—அல்லாகுதஆலா எல்லா ஜனங்களையும் தவ்பாச் செய்யும்படி ஆக்கியாபித்து, "ஓ மூமின்களே! நீங்கள் எல்லாருமாகத் தவ்பாச்செய்து அல்லாவின் பக்கம் திரும்புங்கள்; நீங்கள் ஜெயம் பெறலாம்" என்று கூறுகின்றான். இதன் கருத்தாவது:—ஜெயம்பெற ஆசிப்பவன் தவ்பாச் செய்யக்கடவன் என்பதேயாம். றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "மேற்றிசையான மகுரிபுபக்கத்திலிருந்து சூரியன் உதிப்பதற்குமுன்னே ஒருவன் தவ்

பாச்செய்வானாகில் அவனுடைய தவ்பா கபூலாகும்" என்றும், "பாவத்தை நினைத்து மனம் நாணி வெட்கிப்பது தவ்பாவாயிருக்கிறது" என்றும் அருளிச்செய்திருக்கிறார்கள். இன்னும் "ஜனங்கள் நடந்துசெல்லும் வழியில் நீங்கள் நிற்கவேண்டாம்" என்றும், "அதேனெனில் ஒருவன் அங்கு நின்றுகொண்டு அவ்வழியாய் நடப்பவர்மீது நகைத்துப் பரிகசிப்பவனையும் அங்குவருகிற ஒவ்வொரு ஸ்திரியிடத்திலும் கெட்ட சொற்களைச் சொல்லுகிறவனையும் இருப்பான்" என்றும், "நரகம் அவனுக்கு விதிக்கப்படாதவரையில் அவன் அந்த இடத்தை விட்டுக் கிளம்பமாட்டான்" என்றும், "ஆனால் தவ்பாச்செய்தால் நரகம் அவனுக்கு விதிக்கப்படுவதில்லை" என்றும் அருளிச்செய்திருக்கிறார்கள். இன்னும் "தினம் ஒன்றுக்கு எழுபது தரம் நான் தவ்பாவும் இஸ்திகுபாரும் செய்கிறேன்" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "யாராவதொருவன் தன் பாவங்களைவிட்டும் தவ்பாச்செய்வானாகில் அந்தப் பாவங்கள் ஞாபகத்துக்கு வராதபடி அல்லாகு தஆலா அந்தப் பாவங்களை எழுதின மலக்குகள்மீதும் அவைகளைச் செய்த கை, கால் முதலிய உறுப்புகள்மீதும் அவை செய்யப்பட்டிருக்கிற தலங்கள்மீதும் மறதியை உண்டாக்குகிறான் என்றும், "அதேனெனில் அவன் அல்லாகு தஆலாவைப் பார்க்கும்போது அவன்மீது எதுவும் சாக்ஷி சொல்லாமலிருப்பதற்கே" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் அடியான் தன்னுடைய உயிர் தொண்டைக்கு வருவதற்கும் தொண்டையில் கர்கரா என்ற சத்தம் எழும்புவதற்கும் முன்னே செய்கிற தவ்பாவை அல்லாகு தஆலா கபூல்செய்வான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "பகலில் பாவஞ் செய்கிறவனுக்காக அவன் இரவில் தவ்பாச்செய்தால் அதைக் கபூல் செய்யும் பொருட்டும், இரவில் பாவஞ்செய்கிறவனுக்காக அவன் பகலில் தவ்பாச்செய்தால் அதைக் கபூல் செய்யும்பொருட்டும் அல்லாகுதஆலா தன்னுடைய கிருபைக்கரத்தை விசாலமாக விரித்துக்கொண்டிருக்கிறான்" என்றும், "சூரியன் மேற்றிசையிலிருந்து உதிக்கிற காலம் வரையில் அப்படி விரித்துக்கொண்டிருப்பான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "நான் தினந்தோறும் நூறுதரம் தவ்பாச் செய்கிறேனாதலால் நீங்களும் தவ்பாச் செய்யுங்கள்" என்று அருளிச் செய்ததாக உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் "பாவியாயிராத மனிதன் ஒருவனுமில்லை" என்றும், ஆனால்

பாவிகளில் தவுபாச்செய்கிறவர்கள் மிகவும் நல்லவர்கள்” என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் “ஒருவன் தன் பாவத்தைவிட்டும் தவுபாச்செய்வானாகில் அவன் அறவே பாவஞ்செய்யாமலிருப்பவன்போல் ஆவான்” என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். “பாவத்தைவிட்டுத் தவுபாச்செய்தலென்பது திரும்ப நீ அந்தப் பாவத்தினிடத்தில் நெருங்காமலிருப்பதே” என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஆயிஷா றலியல்லாகு அன்ஹாவை நோக்கி “யா ஆயிஷா! அல்லாகு தஆலா “எந்த ஜனங்கள் தங்கள் தீனைப் பிரித்து அவர்கள் ஒரு கூட்டமானார்களோ என்று கூறுகின்றானே, அவர்கள்தான் பிதுஅத்தை யுடையவர்கள்” என்றும், “எதும் பாவமுள்ளவனுக்குத் தவுபாவுண்டு” என்றும், “ஆனால் பிதுஅத்துக்காரனுக்குத் தவுபாயில்லை” என்றும், “நான் அவர்களை வெறுக்கிறேன், அவர்கள் என்னை வெறுக்கிறார்கள்” என்றும் அருளிச்செய்தார்கள். இன்னுமவர்கள் திருவுளமாயிருப்பதாவது:—இபுறாஹீம் அலைகிஸ்ஸலாமவர்களை வானத்துக்குக் கொண்டுபோனபோது அவர்கள் பூமியைப் பார்த்தார்கள். அதில் ஒரு மனிதன் ஒரு பெண்பிள்ளையுடன் ஜினாச்செய்துகொண் டிருப்பதைக் கண்டு அவர்களைச் சபித்து பத்துஆ செய்தார்கள். உடனே அவர்கள் அழிந்து நாசமாய்ப் போனார்கள். பின்பு மற்றொரு மனிதனைப் பாவத்தில் கண்டு அவனுக்காகவும் பத்துஆ செய்தார்கள். அப்போது “ஓ இபுறாஹீமே! நீர் என் அடியார்களை விட்டுவிடும். அவர்களால் மூன்றிலொருகாரியம் உண்டாகும். தவுபாச் செய்வார்கள். அதை நான் கபூல் செய்வேன். அல்லது பிழையைப் பொறுக்கும்படி கேட்பார்கள். நான் பொறுப்பேன். அல்லது அவர்களுக்குப் பிள்ளைகள் பிறக்கும் அந்தப் பிள்ளைகள் என்னை வணங்கும். சபூர் என்பது என்னுடைய நாமங்களில் ஒன்றென்று உமக்குத் தெரியாதா?” என்று ஒஹிவந்தது என்பதே. இன்னும் ஒரு பாவத்தின்மீது மனம் நாணி வெட்கமடைந்த எந்த அடியானுக்கும் அவன் பிழை பொறுக்கத்தேடுவதற்குமுன்னே அல்லாகுதஆலா அவன் பிழையைப் பொறுக்காமலிருப்பதில்லை” என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானதாக ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் “மகுரிபு பக்கத்தில் ஒரு வாசல் இருக்கிறது” என்றும், “அது எழுபது அல்லது நாற்பது வருஷத்துடைய தொலையின் அகலமுள்ளது” என்றும் “வானம்பூமிகளைப்படைத்ததுமுதல் தவுபாவுக்காக அது திறக்கப்பட்டிருக்கிறது” என்றும்,

'சூரியன் மேற்றிசையிலிருந்து உதிக்கிறவரையில் அது சாத்தப்படுவதில்லை" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "திங்கள், வியாழன் இந்தக் கிழமைகளில் அமல்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன" என்றும், யாராவது தவ்பாச் செய்திருந்தால் அது கபூல் செய்யப்படுகிறது" என்றும், "யாராவது பிழை பொறுக்கும்படி கேட்டிருந்தால் அவர்கள் பொறுக்கப்படுகிறார்கள்" என்றும், "எந்த ஜனங்கள் தங்கள் இருதயங்களை வஞ்சகங்களால் நிறைத்து வைத்திருக்கிறார்களோ அவர்கள் பொறுக்கப்படாமல் அப்படியே விட்டுவிடப் படுகிறார்கள்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "அடியானுடைய தவ்பாவைக்கொண்டு அல்லாகு தஆலா அடைகிற சந்தோஷமானது ஓர் காட்டறபியின் சந்தோஷத்தினும் அதிகமாயிருக்கிறது. அந்த அறபியானவன் உயிரைப் பக்ஷிக்கின்ற உக்கிரமான ஓர் காட்டில் உணவுப்பொருள்களும் மற்றும்சாமான்களும்ஏற்றப்பட்டிருந்த தன்னுடைய ஒட்டகையை விட்டுக் கீழேயிறங்கிக் கொஞ்சநேரம் தரையிற் சாய்ந்து நித்திரைசெய்தான். பின்பு விழித்துப் பார்க்க ஒட்டகையைக் காணாமையினால் திடுக்கிட்டெழுந்து அக்காட்டில் அங்குமிங்கும் அதைத் தேடியலைந்துகொண்டிருந்தான். அவனுக்குப் பசியும் தாகமும் மேலிட்டு அதனால் அவன் அங்கு மாண்டுபோவான் என்று அவனுக்குப் பயம் பிடித்துக்கொண்டது. அவன் தன் உயிரை வெறுத்து முன்னிருந்த ஜாகையிற்போய்ப் படுத்து உயிரை விடலாம் என்று தன் மனதுக்குட் சொல்லிக்கொண்டு அந்த இடத்திற்குத் திரும்பிவந்து கையை முடக்கித் தலைமாட்டில் வைத்துக்கொண்டு அவன் சாகவே சாவான் என்ற எண்ணத்துடன் படுத்தான். படுத்தவன் அபபடியே நித்திரைபோய்விட்டான். பின்பு நித்திரையினின்றும் விழித்துப்பார்த்தபோது ஏற்றியிருந்த சாமான்களுடன் ஒட்டகம் தன் தலைமாட்டில் வந்து நிற்பதைக் கண்டான். அப்போது அவனுக்குண்டான சந்தோஷப் பெருக்கினால் "ஆண்டவனே! நீ என் நாயகன். நான் உன் அடிமை" என்றுசொல்லி அல்லாகு தஆலாவுக்கு நன்றியறிந்து ஷுக்குரு செய்ய நாடினான். சந்தோஷத்தில் அவனுடைய நாக்குத்தவறி "ஆண்டவனே! நீ எனது அடிமை, நான் உனது நாயகன்" என்று சொல்லுகிறான். இப்படித் தன் உணவு குடிப்புகளுடன் வந்துநிற்கக் கண்ட அந்த ஒட்டகையைக் கொண்டு அம்மனிதன் சந்தோஷித்ததினும் அதிகமாக அல்லாகு தஆலா தன் அடியானுடைய தவ்பாவைக்கொண்டு சந்தோஷிக்கின்றான்" என்று திருவுளமானார்கள்.

## தவுபாவுக்கு மூலகாரணம் இதுவென்பது.

அறிந்துகொள்:—மஃரிபத்தென்னும் அறிவினாலும் ஈமான் என்னும் நம்புதலாலும் ஏற்பட்ட ஒளியே தவுபாவுக்கு முதலாயிருக்கிறது. அந்த ஒளியின் வெளிச்சத்தினால் பாவமானது கொல்லுகிற நஞ்சுபோ லிருக்கிறதென்று அவன் அறிந்துகொள்ளுகிறான். எப்போது அவன் இந்தப் பாஷாணத்தை அதிகமாய்த் தின்றுவிட்டதாகவும் கேடு நெருங்கிவிட்டதாகவும் காண்கின்றானோ அப்போது அவனுக்கு அகத்தியம் வெட்கமும் அச்சமும் உண்டாகும். உதாரணமாக:—பாஷாணத்தைத் தின்றுவிட்டேன் என்று தெரிந்துகொண்ட ஒருவன் அப்படித் தின்றதைப்பற்றி வெட்கப்படுகிறான். இப்போது சாகிறதைப்பற்றித் திகில் கொள்ளுகிறான். அந்த வெட்கத்தினால் தொண்டையில் விரலைவிட்டு வாந்தி எடுக்கிறான். இந்தத் திகிலினால் மருந்தைத் தின்ன எத்தனிக்கிறான். ஏனெனில் தன்னிலுறைந்த அந்தப் பாஷாணத்தின் விஷத்தை நிவர்த்திக்கவேயா மென்க. இதேவிதமாக ஒருவன் அநுபவித்த ஒவ்வொரு இச்சையும் விஷங்கலந்த தேனைப்போல் அதை அநுபவிக்கும்போது இன்பமா யிருந்ததென்றும் கடைசியில் கேடாய் முடியும் என்றும் அவன் எப்போது தெரிந்துகொண்டானோ அப்போதவன் தன்னுடைய சென்ற பாவங்களை நினைத்து அகத்தியம் வெட்கப்படுவான். அதன் கெடுதியை அறிந்ததினால் அவன் மனதில் அச்சமென்னும் அக்கினி விழும். இந்த வெட்கமும் அச்சமுமான நெருப்பானது இனி இச்சையிலும் பாவத்திலும் ஹிருசுண்டாகாதபடி அதைச் சுட்டெரிக்கும். அப்போதவன் தன்னுடைய சென்ற பாவங்களை அவற்றிற்குரிய பரிகாரத்தினால் நிவர்த்திக்கவும் இனிமேல் அந்தப் பாவத்தினிடம் நெருங்காம லிருக்கவும் வைராக்கியம் பூணுவான். பாவமென்னும் உடையைக் களைந்து அப்புறப்படுத்துவான். விசுவாசமென்னும் விரிப்பின்மேல் உட்காருவான். தன்னுடைய எல்லா ஆட்டம் அடக்கங்களையும் மாற்றி விடுவான். அதெப்படியென்றால், இதற்குமுன் அவனுக்கு முழுதும் சிரிப்பும் சந்தோஷமும் மறதியுமாயிருந்தது. இப்போது முழுதும் அழுகையும் கைசேதமும் விசாரமுமாயிருக்கும். இதற்குமுன் மறதியாளருடன் சகவாசமிருந்தது. இப்போது அறிவாளரோடு சகவாசமிருக்கும். ஆகவே பாவத்தை நினைத்து வெட்கிப்பதே தவுபாவின் நப்ஸான சமையலாயும் அறிவும் ஈமானுமான ஒளியே அதன் அஸ்லான காரணமாயும் முன்னிருந்த கெட்ட நிலைமைகளை மாற்றி ஷரக்கு இணங்கி வழிபடுவதினால் எல்லா உறுப்புகளையும் பாவமும்

விரோதமுமான வேலைகளிலிருந்து விலக்குவதே அதன் பரஆன காரியமாயும் இருக்கிறது.

## எல்லார்பேரிலும் எல்லா நேரத்திலும் தவுபா வாஜிபென்பதை விளக்கல்.

ஆனால் எல்லார்பேரிலும் தவுபா வாஜிபென்றதில், ஒருவன் பாலிகானால் அவன் காபிராயிருக்கிறபக்ஷம் குபுரைவிட்டும் தவுபாச் செய்வது அவன்மேல் வாஜிபு என்றும், முஸ்லிமாயிருக்கிறபக்ஷம் தாய் தந்தைபருடைய தக்லீது என்னும் பின்பற்றலால் நாவைக் கொண்டுமாத்திரம் கலிமாசொல்லி மனதால் அதை அறியாமல் மறந்திருந்தால் அந்த மறதியைவிட்டு நீங்கி ஈமான் இன்னதென்று அவன் மனம் அறிந்து உணர்வை அடைகிற விதமாகத் தவுபா செய்வது அவன்மேல் வாஜிபு என்றும் நீ அறிந்திருக்கிறாய். மனம் அறிந்து உணர்வை யடைகிறவிதமாய் என்றதில் இல்முல் கலாமில் சொல்லுகிறபடி அதன் அத்தாட்சிகளை அவன் படிக்கவேண்டுமென்பதல்ல நமது கருத்து. ஏனெனில், இது எல்லார்பேரிலும் வாஜிபல்ல. என்கிலும் ஈமானாகிய சுல்தான் இவனுடைய கல்பை அடக்கி அதன்மேல் மிகைத்துவிடவேண்டும். சர்வ அதிகாரமும் அந்த சுல்தானுக்கே இருக்கவேண்டும். எதுவொன்று சரீரமாகிய ராச்சியத்தில் நடக்கின்றதோ அதுவெல்லாம் ஷைத்தானுடைய உத்திரவைக் கொண்டில்லாமல் ஷரகுடைய உத்தரவைக் கொண்டிருந்தால் அப்போதுதான் ஈமானாகிய சுல்தானுக்குச் சர்வ அதிகாரமுமிருக்கும். அந்த ராச்சியத்தில் பாவம் நடக்கும்போது ஈமான் பூர்த்தியாயிராது. உதாரணமாக:—"ஜினாச்செய்கிற நேரத்திலும் திருடுகிற நேரத்திலும் மூமினாயிருந்துகொண்டு எவனும் ஜினாச்செய்கிறதுமில்லை திருடுகிறதுமில்லை" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இதில் நாயகமவர்களின் கருத்து. அந்த நேரங்களில் அவன் காபிராயிருப்பான் என்பதல்ல. ஏன்கிலும் ஈமானுக்கு அநேகம் கிளைகளும் பணர்களும் இருக்கின்றன. ஜினாவானது கொல்லுகிற நஞ்சாயிருக்கிறது என்று அவன் அறிவது அந்த ஈமானுடைய கிளைகளில் ஒன்றாம். பாஷாணத்தைத் தின்னுகிறேன் என்று அறிந்தவன் திரும்ப அதைத் தின்னமாட்டான். ஆகவே அதைத் தின்னுகிற நேரத்தில் இச்சையென்னும் கல்தான் ஜினாகெட்டதென்று வாதிக்கிற அவனுடைய ஈமானைத் தோர்த்தோடும்படி செய்திருக்கும்; அல்லது மறதியினால் அந்த ஈமான் தென்படாமற் போயிருக்கும்; அல்லது இச்சையென்னும் இருளான புகையில் அந்த ஈமான் மறைந்துபோயிருக்கும்.

ஆகவே முதலில் குபுரைவிட்டும் தவ்பாச்செய்வது வாஜிபு
என்றும் காபிரா யில்லாமற்போனால் வழக்கமும் தக்லீதுமான
ஈமானைவிட்டும் தவ்பாச் செய்வது வாஜிபு என்றும் நீ தெரிந்து
கொண்டாய். பின்னர் ஒருவன் இப்படியும் ஈமான் கொண்டிருந்
தால் அநேகமாய் அவன் பாவத்தைவிட்டும் ஒழிந்திருக்கமாட்டான்.
அதைவிட்டும் தவ்பாச் செய்வது வாஜிபாகும். அவனுடைய
வெளியரங்கமான உறுப்புகளையெல்லாம் பாவத்தினின்று நீக்கி
யிருந்தால் அந்தரங்கத்தில் அந்தப் பாவங்களின் கருவில்லாம
லிராது. எதுபோலெனில் ஊணாசை, பேச்சுப்பிரியம், பொரு
ளாசை, பெரியதனவிருப்பம் இவைபோலவும்; பொறாமை, பெரு
மை, ரியா இன்னுமிவைபோன்ற முஹ்லிகாத்துகளைப் போலவுமாம்.
இவையெல்லாம் கெட்டவைகளாயும் பாவங்களுக்கு மூலமாயுமிருக்
கின்றன. இவையெல்லாவற்றையும் விட்டுத் தவ்பாச் செய்வது
வாஜிபாகும். ஏனெனில் இக்குணங்களில் ஒவ்வொன்றையும் மிதமான
ஹத்தில் கொண்டுவரவும் இவ்விச்சைகளை ஷரகுக்கும் புத்திக்கும்
பணியும்படி செய்யவுமேயாம். இதுவோ நீண்டகாலப் பழக்கமான
பிரயாசையினால் உண்டாகுவதாம். இவைகளையும் விட்டு ஒழிந்திருந்
தால் வஸ்வாசான விபரீத எண்ணத்தையும் நபுசின் வசனிப்பையும்
தகாத யோசனைகளையும் விட்டு ஒழிந்திருக்கமாட்டான். இதையும்
விட்டு தவ்பாச்செய்வது வாஜிபாகும். இதுவும் ஒழிந்திருந்தால்
சில சமயங்களில் அல்லாகு தஆலாவுடைய திக்ரை மறக்காமலிருந்
திருக்கமாட்டான். இந்த மறதியையும் விட்டு தவ்பாச்செய்வது
வாஜிபாகும். எல்லா நஷ்டங்களுக்கும் மூலமாயிருப்பது அல்லாகு
தஆலாவை மறந்துபோவதேயாம். அப்படி மறந்ததெல்லாம் ஒரி
மைப்பொழுதா யிருந்தாலும் அதையும் விட்டு தவ்பாச்செய்வது
வாஜிபாகும். பின்பு உவமையில் ஒருவன் திக்ரு பிக்ருகளைவிட்டு
ஒழியாமல் எப்போதும் அதில் இருக்கிற விதமாக ஆய்விட்டானா
ல் அதற்கும் ஏற்றவாட்டங்களான பல ஸ்தானங்க ளிருக்கின்றன.
அந்த ஸ்தானங்களில் ஒவ்வொன்றையும் அதற்குமேலானுள்ள ஸ்தா
னத்துடன் சேர்த்துப் பார்க்க அது குறைச்சலுள்ளதா யிருக்கும்.
குறைச்சலா யிருப்பதைப் பூர்த்தியாக்கிக்கொள்ள இடம்பாடிருக்க
அந்தக் குறைச்சலைப் போதுமெனப் பொருந்திக்கொள்வது நஷ்ட
மேயாம். இதைவிட்டும் தவ்பாச்செய்வது வாஜிபாகும். நான் தினந்
தோறும் எழுபதுதரம் தவ்பாவும் இஸ்திகுபாரும் செய்கிறேன்
என்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்

அந்த தவுபா இதுவாகவே யிருந்திருக்கலாம். ஏனெனில், அவர்களுடைய காரியமானது இடைவிடாமல் எப்போதும் விருத்தியடைந்து அதிகரிப்பதாயும் அவர்கள் எடுத்துவைக்கிற ஒவ்வொரு அடியின்போது ஓர் நிறப்பமான காட்சி அவர்களுக்குத் தென்படுவதாயும், சென்றுபோன முந்தின அடியைப் பிந்தின அடியுடன் சேர்த்துப்பார்க்க அது மிகவும் குறையுள்ளதென்று அவர்களுக்குத் தெரிவதாயும் இருந்ததினால் அந்த சென்ற அடிக்காக அவர்கள் தவுபாவும் இஸ்திகுபாரும் செய்கிறவர்களா யிருந்தார்கள். அதேனெனில் ஒருவன் ஒரு திருஹம் என்னும் வெள்ளி நாணயத்தைச் சம்பாதிக்கக்கூடிய ஓர் வேலையைச்செய்து அதைக் கைப்பற்றுவானுகில் சந்தோஷப்படுவான். ஒரு தீனார் என்னும் பொன்னுணயத்தை அப்போதுசம்பாதித்திருக்கலாமென்று அறிந்தானுகில்ஒருவெள்ளிநாணயத்தைப் போதுமாக்கிக்கொண்டதற்காகத் துக்கப்படுவான். அன்றியும் தான் செய்த குறைச்சலைப்பற்றி வெட்கப்படுவான். பின்பு தீனருக்குமேல் ஒன்றுமேஇல்லைஎன்று அவன்மருண்டுபோயிருக்கிறவரையில் அந்தத் தீனர் கைவசமாகும்போது அவன் சந்தோஷமாவான். பின்பு ஆயிரந் தீனர் பெறுமான ஓர் இரத்தினத்தைச் சம்பாதிக்கக் கூடியவனுயிருந்தேன் என்று அவன் அறிந்தானுகில் முன்செய்த குறைச்சலை நினைத்து வெட்கப்பட்டுத் தவுபாச்செய்வான். இதனுலேதான் அபுராருகளிடத்தில் நன்மைகளா யிருப்பவை முகர்ரபீன்களிடத்தில் தீமைகளா யிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிதுகளின் ஹக்கில் நிறப்பமானது பெரியோர்களின் ஹக்கில் குறைச்சலானதாம். ஆகவே அவர்கள் அதைவிட்டும் தவுபாச்செய்வார்கள்.

சுவால்:— குபுரையும் பாவத்தையும் விட்டுத் தவுபாச்செய்தால் அதன்பிறகு பெரும்பதவிகளை அடைவதற்காக மறதி, குறை இவைகளை விட்டும் தவுபாச்செய்வது பர்ளுகளிற் சேர்ந்ததல்லவென்றும் வரிசைப்பாடுகளைச் சேர்ந்ததென்றும் அப்படியிருக்க அதையும்விட்டுத் தவுபாச்செய்வது வாஜிபு என்று ஏன் சொன்னீர்? என்று எவரேனும் கேட்கிறபக்ஷம் அதற்கு நாம் சொல்லும் ஜவாபு: வாஜிபு என்பது இரண்டுவகையாயிருக்கிறது. அவாமுன்னுஸ் என்னும் சாமானிய ஜனங்களின் தராதரப்படி அவர்கள் எவ்வளவாகப் பராக்காவதினுல் அவர்களுடைய துன்யா க்ஷீணிக்காமல் அவர்கள் துன்யாவை நடத்திவரக்கூடுமோ அவ்வளவாக நாம் வெளிப்படையான பத்துவாவில் சொல்லுவது ஒருவகை வாஜிபாம். இந்த வாஜி

பானது அவர்களை நரகவேதனையினின்றும் நீக்குவதாம். மற்றொரு வகை வாஜிபு சாமானியரால் செய்யமுடியாத வாஜிபாம். ஒருவன் அதைச் செய்யாமற்போனால் அவன் நரகவேதனைக்கு ஆளாவதில்லையென்றாலும் உன்னத பதவியை அடையாததினால் உண்டாகிற கைசேதமென்னும் வேதனையினின்றும் விடுபடமாட்டான். உதாரணமாக:— வானத்தின்மேல் நட்சத்திரத்தைப் பார்ப்பதுபோல் ஒருவன் ஆகிரத்தில் தனக்குமேலால் ஒரு கூட்டத்தைப் பார்ப்பான். அப்போது அவனுக்கு உண்டாகிற பரதவிப்பும் கைசேதமும் இதுவும் ஒருவேதனையாயிருக்கும். இந்த வேதனையினின்றும் மீட்சி பெறுவதற்காக நாம் சொன்ன தவுபா வாஜிபாகும். இன்னு மிவ்வுலகத்தில் நாம் பார்க்கிறோம். அக்கம்பக்கத்தில் யாருக்காவது அதிக மேம்பாடான பெருமையும் அந்தஸ்தும் உண்டானால் அங்கிருக்கிற மற்றொருவன் கண்ணுக்கு உலகம் சயிக்காமல் நெருக்கமும் இருட்டு முள்ளதாய்ப் போகிறது. பரதவிப்பினாலும் கைசேதத்தினாலும் அவனுடைய உயிருக்குள் ஓர் நெருப்பு விழுகின்றது. கழியடி, கையறுப்பு, அபராதம் விதித்தல் இவைகளாலுண்டாகும் வேதனையினின்று அவன் நீங்கியிருந்தபோதிலும் (உயிருக்குள் விழுந்த நெருப்பு அவனைக் கொளுத்துகின்றது) இதனாலேதான் கியாமத்துநாளை (யவுமுத்தகாபுன்) கைசேதத்துடையநாள் என்று சொல்லுகிறார்கள். ஏனெனில், அந்த நாளில் எந்த மனிதனும் கைசேதப்படாமலிருக்கமாட்டான். இபாதத்து செய்யாதவன் "ஆ நான் என் இபாதத்துசெய்யாமலிருந்தேன்!" என்று கைசேதப்படுவான். இபாதத்து செய்தவனும் "ஆ! நான் இன்னும் அதிகமாக இபாதத்து செய்யாமற்போனேனே" என்று கைசேதப்படுவான். இன்னுமிதனாலேயே அம்பியாக்களும் அவுலியாக்களும் அவர்களால் கூடியமட்டும் கொஞ்ச நேரமும் இபாதத்தைவிட்டும் நீங்காத வழியை எடுத்துக்கொண்டதுமன்றி "நாம் குறைசெய்தோம் என்ற கைசேதம் நாளை கியாமத்தில் நமக்கில்லாமற் போவதற்கே (இந்தப் பிரயாசை)" என்றுஞ்சொல்லியிருக்கிறார்கள். பசியின்போது உணவருந்துவது ஹராமல்லவென்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குத் தெரிந்திருந்தும் அவர்கள் தங்களைப் பசியோடிருக்க வைத்திருந்தார்களே இதற்கு நீ என்ன (சமாதானம்) சொல்லுகிறாய்? ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் சொல்லுகிறார்கள்: "நான் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வயிற்றின்மீது என் கையை வைத்தேன். அவர்கள் மேல் எனக்கு இரக்கம் வந்ததினால் நான் அழுது "நாயகமே! என்

உயிர் தங்களுக்குக் குருபானியாகக்கடவது. தாங்கள் துன்யாவில் ஏதும் உணவை வயிறுற உண்டால் என்ன?" என்று கேட்டேன். அதற்கவர்கள் 'ஓ ஆயிஷாவே! உலுல் அஸ்மிகளான என் சகோதரர்கள் எனக்கு முன்னே போய்விட்டார்கள். அவர்கள் சங்கையான மேம்பாடுகளையும் பரிவட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள். நான் துன்யாவின் பாகத்தை அடைவேனாகில் என்னுடைய பதவியானது அவர்களுடைய பதவியினும் குறைந்துபோமென்று பயப்படுகிறேன். என் சகோதரர்களினும் நான் குறைச்சலுள்ளவனா யிருப்பதைவிட கொஞ்சநாள் கிஞ்சித்து சபுருசெய்து கொள்வதை நான் அதிகமாய் நேசிக்கிறேன்" என்று அருளிச்செய்தார்கள்.

ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் தங்கள் தலைமாட்டில் ஓர் கல்லை வைத்துக்கொண்டு படுத்து நித்திரை செய்தார்கள். அப்போது அவர்களிடம் இபுலீசு வந்து "தாங்கள் துன்யாவை விட்டுவிட்டதாய்ச் சொல்லவில்லையா? இப்போது நாணமடைந்தீர்களே" என்று சொன்னான். அதற்கவர்கள் "நான் என்ன செய்தேன்?" என்று கேட்டார்கள். அதற்கவன் "தங்கள் தலைமட்டில் கல்லை வைத்துக் கொண்டு சுகமாய்த் தூங்குகிறீர்கள்" என்றான். அப்போதவர்கள் அந்தக் கல்லை எடுத்தெறிந்துபோட்டு "இதையும் துன்யாவுடன் உன்னிடம் விட்டுவிட்டேன்" என்று அவனுக்குச்சொன்னார்கள். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் பாதரட்சைக்குப் புதிய வார்மாட்டி யிருந்தார்கள். அது அவர்கள் கண்ணுக்கு நல்லதென்று தெரிந்தபடியால் அதை எடுத்துவிட்டு அந்தப் பழைய வாரையே மாட்டும்படி உத்திரவு செய்தார்கள். அபூபகர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள் ஒருமுறை பாலைக்குடித்து அதில் ஏதோ சந்தேகமுண்டென்று அறிந்து வாந்தியினால், அதை வெளிப்படுத்தும்பொருட்டுத்தொண்டையில் எந்தமட்டும் விரலைவிட்டாகவென்றால் அதனால் அவர்கள் பிராணன் போய்விடுமென்ற பயமாயிருந்தது. "நீ என்ன சொல்லுகிறாய்? சாமானிய ஜனங்களின் பத்துவாவில் இப்படி வாந்தி பண்ணுவது வாஜிபல்லவென்று அவர்களுக்குத் தெரியாதா? ஆயினும் சாமானியர்களின் பத்துவா வேறாயும் சித்தீகுகள் பார்த்திருக்கும் காரியத்தின் அபாயம் வேறாயும் இருக்கிறது. ஜனங்களில், அல்லாகு தஆலாவையும் அவனுடைய தந்திரத்தையும் அவனுடையவழியின் அபாயத்தையும் அதிகமாய் அறிந்தஜனங்கள் இவர்கள்தான். இவர்கள் வீணாகத் தங்களுக்கு இந்தக் கஷ்டங்களைக் கொடுத்தார்கள் என்று நீ எண்ணாதே. இவர்களைப் பின்பற்றி நட.

சாமானிய ஜனங்களின் பத்துவாவில் மாட்டிக்கொள்ளாமே. அது வேறோர் பேச்சாயிருக்கிறது. இந்தச் சங்கதிகளால் எந்த நிலைமையிலும் அடியான் தவ்பாவை விட்டுவிட வழியில்லையென்று நீ தெரிந்து கொண்டாய். இதனாலேதான் மனிதன் வேறொன்றின்பேரிலும் அழாமல் தன்னுடைய வயதில்நின்றும் இதுவரையில் பழுதாக்கிவிட்ட வயதைப்பற்றி அழுவானாகில் இந்த துக்கமானது அவன் மவுத்தாகிற காலம்வரையில் அவனுக்குப் போதுமாயிருக்கிறது" என்று அபூசுலைமான் தாரானி யவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் இனிமேலும் முன்போலவே வயதைப் பழுதாக்குகிறவனைப்பற்றி நீ என்ன சொல்லுகிறாய் ?

இன்னுமறிந்துகோள்:—ஒருவன் வைத்துக்கொண்டிருந்த அருமையான ஓர் இரத்தினம் பழுதாய்ப்போனால் அவன் அழவேண்டியதாகும். அப்படிப் பழுதாய்ப் போனதுமல்லாமல் அது அவன்வேதனைக்கும் துன்பத்துக்கும் காரணமாகும். அழுகையும் அதிகரிக்கும். வயதில் நின்றும் ஒவ்வொரு மூச்சும் ஆகிரத்துடைய நற்பதவியை வேட்டையாட உதவியான ஓர் இரத்தினமாயிருக்கிறது. ஒருவன் கெட்டழிந்துபோகக் காரணமாயிருக்கிற பாவத்தையே செய்து வருவானாகில் அந்தப் பாவத்தின் தீங்கை அவன் அறியும்போது அவன் கதி எப்படியாகும்? இது பெரிய ஓர் முசிபத்தாயிருக்கிறது. இதைப்பற்றிக் கைசேதப்படுவது பயன் செய்யாதபோதுதான் இந்த முசிபத்து அவனுக்குத் தெரியும். உங்களில் ஒருவனுக்கு மவுத்து வருவதற்கும் பின்பு அவன் என்னுடைய றப்பே இன்னும் அற்பகாலம் வரையில் என்னை விட்டுவிட மாட்டாயா? என்று சொல்வதற்கும் முன்னே நாம் உங்களுக்குக் கொடுத்திருக்கும் பொருளில் நின்றும் செலவு செய்யுங்கள் என்று அல்லாகு தஆலா அருளிச்செய்திருக்கிற இந்த ஆயத்துக்குப் பொருள் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—மவுத்துடைய நேரத்தில் அடியான் மலக்குல் மவுத்து அலைகிஸ்ஸலாமவர்களைப் பார்த்து இது தன் பிரயாண நேரமாயிருக்கிறது என்று தெரிந்துகொள்ளுவான். அப்போதவன் மனதில் மட்டில்லாத ஓர் பரதவிப்புண்டாகும். அதனால் அவன் "ஓ மலக்குல் மவுத்தே! எனக்கு ஒருநாள் தவணை கொடும், நான் தவ்பாச்செய்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று சொல்லுவான். மலக்குல் மவுத்து அவனை நோக்கி "உன் எதிரே அநேக நாட்கள் இருந்தன. இப்போது நேரம் வந்துவிட்டது. இனி ஒரு நாளும் மீதியில்லை" என்று சொல்லுவார்கள். பின்பு அவன் "ஓ

ஸாஅத்து நேரம் தவணை கொடுங்கள்" என்பான். அதற்கவர்கள் "ஸாஅத்துகளெல்லாம் சென்றுவிட்டன. ஒன்றும் மீதியில்லை" என்பார்கள். இனிமேல் ஆதாவு இல்லையென்ற இந்தக் குடிப்பை அவன் குடித்த உடனே அவனுடைய ஈமானின் வேர் அசைந்து ஆட்டங்கொடுக்கும். அல்லாகு தஆலா காக்கவேண்டும். ஆதிகற்பனையில் அவனுக்குத் துர்ப்பதவியை விதித்திருந்தால் அவன் சந்தேகத்திலும் நடுக்கத்திலும் மூதேவியா யொழிவான். நற்பதவியை விதித்திருந்தால் ஈமானின் வேர் அசையாமல் நிலையாயிருக்கும். இதனாலேதான் அவர்களில் ஒருவனுக்கு மவுத்து வருகிறவரையில் பாவங்களைச் செய்துகொண்டிருந்து (அதுவந்த நேரத்தில்) இப்போது நான் தவுபாச் செய்தேன் என்று சொல்லுகிறவர்களுக்குத் தவுபாயில்லை என்று அல்லாகு தஆலா அருளிச்செய்திருக்கிறான். இன்னும் இப்படியும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—அல்லாகு தஆலாவுக்கு ஒவ்வொரு அடியானிடத்திலும் இரண்டு இரகசியங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று: தாயினிடத்திலிருந்து அவன் பிறந்த நேரத்தில் "ஓ என் அடியானே! உன்னை நான் சுத்தமும் அழகும் உள்ளவனாகப் படைத்து உன்வயதை உன்னிடத்தில் அமானத்தாக ஒப்புக்கொடுத்திருக்கிறேன். மவுத்தின்போது நீ அந்த அமானத்தைத் திரும்ப எப்படி ஒப்புக்கொடுப்பாய் என்பதைக் கவனித்துக்கொள்" என்று சொல்லுவான். மற்றொன்று: மவுத்தாகிற நேரத்தில் 'ஓ என் அடியானே! நீ அந்த அமானத்தில் என்ன செய்தாய்? நல்லவிதமாக அதைக் காப்பாற்றியிருந்தாயாகில் அதற்குக்கூலியைப் பெற்றுக்கொள்வாய். அதைச் சேதப்படுத்தியிருந்தாயாகில் நரகம் உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. நீ தயாராயிரு" என்று சொல்லுவான் என்பதே.

## தவுபாவின் கபூலியத்தை விளக்கல்.

அறிந்துகொள்:—தவுபா செய்வது அதன் விதிப்படியிருந்தால் அகத்தியம் அது கபூலாகும். அப்படித் தவுபாச்செய்தாயாகில் அது கபூலாயிற்றோ என்னவோ என்று சந்தேகம் வைக்காதே. தவுபா செய்தது விதிப்படி யிருந்ததா? இல்லையா? என்பதை யோசி. ஒருவன் மனிதனுடைய கல்பின் உண்மையை உற்றுநோக்கி அது என்ன என்றும் சரீரத்துடன் அது எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறது என்றும் அல்லாகு தஆலாஉடைய சமூகத்துடன் அது எப்படிச் சேர்ந்திருக்கிறது என்றும் அந்தச் சமூகத்தைத் தெரிசிக்காதபடி அது எதனால் மறைக்கப்பட்டிருக்கிறது என்றும் ஆராய்வானாகில் மறைப்புக்குப்பாவமே காரணம் என்றும், அந்த மறைப்பு

நீங்குவதற்குத் தவ்பாவே காரணம் என்றும் அந்த மறைப்பு நீங்குவதே தவ்பாவின் கபூலியத்து என்றும், சந்தேகமற அவன் தெரிந்துகொள்ளுவான். ஏனெனில், மனிதனுடைய கல்பானது அதன் எதார்த்த ரூபத்தில் மலக்குகளுடைய இனத்தைச் சேர்ந்த சுத்தமான ஓர் ஆகாரப்பொருளாயிருக்கிறது. இன்னுமது ஓர் கண்ணாடிக்கு ஒப்பாயுமிருக்கிறது. அதில் அல்லாகு தஆலாஉடைய திருச்சமுகம் தெரியலாகும். ஆனால் அப்படித் தெரிவதற்கு அது இவ்வுலகத்துக்கு அப்புறப்பட்டதாயும் துருப்பிடிக்காததாயு மிருக்கவேண்டும். அவன் செய்கிற ஒவ்வொரு பாவத்தினாலும் அவனுடைய கல்பு என்னும் கண்ணாடியின்மேல் ஓர் கருமையான இருள் படியும். ஒவ்வொரு வணக்கத்தினாலும் ஓர் ஒளி அதிற் சேர்ந்து அந்தப் பாவ இருளைப் போக்கிவிடும். எப்போதும் கல்பு என்னும் கண்ணாடியின் பேரில் வணக்கத்தின் ஒளிகளாலாகிய குணப்பாடும் பாவங்களின் இருளாலாகிய குணப்பாடும் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டிருக்கும். இருள் அதிகமாயிருந்து அவன் தவ்பாச்செய்வானாகில் வணக்கத்தின் ஒளியானது அந்த இருளை ஓட்டிவிடும். அப்போது கல்பானது தன் சுயரூபமான சுத்தத்திலும் தெளிவிலும் மாறும். ஆனால் துருவானது கல்புக்குள் செல்லுகிற அளவாகப் பாவத்தில் நெடுநாள் நிலைத்து அதில் மூழ்கிப்போயிருப்பானாகில் அப்போது உள்ளேயும் துரு ஏறின ஓர் கண்ணாடிபோல் அது பரிகாரத்தை ஏற்காது. இவ்விதமான கல்புள்ளவன் தவ்பாச்செய்ய முடியாது. ஆனால் தவ்பாச்செய்தேன் என்று நாவால் சொல்லுவான். அழுக்குப் பிடவையை நீ சவுக்காரத்தினால் கழுவுவதுகொண்டு அது எப்படி வெண்மையாகின்றதோ அப்படியே பாவ இருளானது வணக்க ஒளியினால் ஒழிந்துபோகின்றது. இதனாலேதான் "ஒவ்வொரு தீமைக்கும் பின்னால் நன்மையைச்செய், அது அந்தத் தீமையை அழிக்கும்" என்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் வானத்தை அளாவும்படி நீங்கள் அவ்வளவு பாவங்களைச் செய்து பிறகு தவ்பாச்செய்வீர்களாகில் அல்லாகு தஆலா அந்தத் தவ்பாவைக் கபூல் செய்வான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "பாவத்தின் பொருட்டால் சுவர்க்கம்போகிற அடியானுமிருப்பான்" என்று நாயகமவர்கள் சொல்ல, "அதெப்படி யாரசூலல்லா!" என்று அஸ்ஹாபுகள் கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் "ஒருவன் ஒரு பாவத்தைச் செய்வான். பின்பு அதைப்பற்றிமனதில்நாணப்படுவான். அந்த நாணமானது அவன் சுவர்க்கத்துக்குப் போகிறவரை

யில் அவன் கண்முன் நிற்கும்" என்று அருளிச்செய்தார்கள். இதுவு
மன்றி "அவனை இந்தப்பாவத்தில் போடாமல்தானிருந்தேனே" என்று
இபுலீசு கைசேதப்படுவதுமுண்டு என்றும் சொல்லப்பட்டிருக்கி
றது. இன்னும் "தண்ணீர் எப்படிப் பிடவையின் அழுக்கைப்போக்கு
கின்றதோ அப்படியே தீமைகளை நன்மைகள் அழித்துவிடுகின்றன"
என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்
கிறார்கள். இன்னும் இபுலீசானவன் லஃனத்தை யடைந்தபோது
அல்லாகு தஆலாவினிடத்தில் "என் ஆண்டவனே! உன் பெருமையி
னாணை, மனிதனுடைய உடம்பில் உயிர் இருக்கிறவரையில் நான்
அவன் மனதைவிட்டு வெளியே போகமாட்டேன்" என்றான். அத
ற்கு அல்லாகு தஆலா" என் பெருமையினாணை; அவன் தேகத்தில்
ஆன்மாயிருக்கிறவரையில் தவுபாவின் வாசலை அவனுக்கு நான்
அடைக்கமாட்டேன்" என்று அருளிச்செய்ததாகத் திருவுளமாயிருக்
கிறார்கள். ஒரு ஹபஷியானவன் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல
மவர்களுடைய சமுகத்தில் வந்து "என்னால் அநேகம் பாவங்கள்
நடந்திருக்கின்றன; என் தவுபா கபூல் செய்யப்படுமா" என்று கேட்
டான். நாயகமவர்கள் "கபூல் செய்யப்படும்" என்று சொன்னார்
கள். அவன் போய்விட்டான். போனவன் திரும்பிவந்து "நான்
பாவஞ்செய்த நேரத்தில் அல்லாகு தஆலா என்னைப் பார்த்துக்
கொண்டிருந்தானா?" என்று கேட்டான். "ஆம் பார்த்துக்கொண்டிருந்
தான்" என்று சொன்னார்கள். இதைக்கேட்ட அந்த ஹபஷி "ஆ"
என்று ஓர் சப்தமிட்டுக் கீழேவிழுந்து இறந்துபோனான்.

புலைலு றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது: "நபி
மார்களில் ஒருவருக்கு அல்லாகு தஆலா ஒஹி அறிவித்திருக்கிறான்.
அதென்னவென்றால், "பாவிகள் தவுபாச்செய்தால் அதை நான்
கபூல்செய்வேன் என்று அந்தப்பாவிகளுக்கு நல்மாராயஞ் சொல்லும்.
இன்னும் நான் என் நீதப்படி நடத்துகிற பக்ஷம் சித்தீக்குகளை அதாபு
செய்வேன் என்று அந்த சித்தீக்குகளுக்கு அச்சத்தை பூட்டும்" என்
பதே. தல்குபுனுல் ஹபீபவர்கள் சொல்லுகிறதாவது:—"அல்லாகு
தஆலாவுடைய ஹக்குகள் நிறைவேற்றக்கூடாதவிதமாய் அவை அவ்வ
ளவு வலுப்பானவைகளாயிருக்கின்றன. ஆயினும் நீ காலையில் தவு
பாவின்பேரில் விழித்தெழும்புவதும் இரவில் தவுபாவின்பேரில்
தூங்குவதும் உனக்கு அவசியம்" என்பதே. ஹபீபுப்னுஉபைய்யில்
ஸாபித்தியவர்கள் சொல்லுகிறதாவது:—பாவங்களை அடியானுக்கு
எடுத்துக் காட்டுவார்கள். அவன் ஓர் பாவத்தைப் பார்த்து
"ஆ நான் எப்போதும உனக்குப் பயந்துகொண்டிருந்தேன்"

என்று சொல்லுவான். அந்தப் பாவத்தை அவனுக்கு உபயோகமாக்குவார்கள். ஏனெனில் அதற்கு அவன் பயந்துகொண்டிருந்ததினலென்க என்பதே.

பனீ இஸ்ராயீல்களில் ஒருவன் ஏராளமான பாவங்களைச் செய்தவனாயிருந்தான். அவன் தவ்பாச்செய்ய நாடினான். ஆனால் அது கபூல் செய்யப்படுமோ படாதோ என்பது அவனுக்குத்தெரியவில்லை. அக்காலத்தில் பெரிய ஆபிதாயிருந்த ஒருவரைக் குறிப்பிட்டு அவரிடத்தில்போய்க் கேட்கும்படி ஜனங்கள்சொன்னார்கள். அவன்போய் "நான் ஏராளமான பாவத்தை யுடையவனாயும் தொண்ணூற்றொன்பதுபேரைக் கொலைசெய்தவனாயு மிருக்கிறேன். எனக்குத் தவ்பா உண்டா?" என்று கேட்டான். அதற்கவர் "இல்லை" என்க, கொலை சரியாய் நூறாகட்டுமென்று அவரையும் கொன்றான். பின்பு அக்காலத்தில் மிகவும் அறிந்த ஓர் ஆலிமைக் குறிப்பிட்டு அவரிடத்துக்கு அவனை அனுப்பினார்கள். அவன்போய்த்(தன் பாவங்களைச் சொல்லி) "எனக்குத் தவ்பா உண்டா?" என்று கேட்டான், அதற்கவர்கள் "உண்டு" என்றும், ஆனால் "நீ வசிக்கும் பூமி கேடுள்ளதா யிருப்பதால் நீ அதைவிட்டு நீங்கி நல்லவர்கள் வசிக்கின்ற இன்ன இடத்துக்குப் போய்விடவேண்டும்" என்றும் சொன்னார். அவன் அப்படியே புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கையில் இந்த இரண்டு இடத்துக்கும் மத்தியில் அவன் இறந்துபோனான். றஹ்மத்துடைய மலக்குகளும் அதாபுடைய மலக்குகளும் அவன் விஷயத்தில் தர்க்கம் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் அவன் தங்கள் அதிகாரத்துக்குட்பட்டவன் என்று வாதித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அல்லாகு தஆலா அந்த இரண்டு இடங்களுக்கும் இடையிலுள்ள பூமியை அளக்கும்படி அவர்களுக்கு உத்தரவு செய்தான். அளந்து பார்க்க அவனை நல்லவர்களிருக்கும் இடத்துக்கு ஒரு ஜாண் அதிகமாக நெருங்கியிருக்கக் கண்டார்கள். ஆகவே றஹ்மத்துடைய மலக்குகள் அவன் உயிரைக் கொண்டுபோனார்கள். இதனால் தீமையின் தட்டுப் பாவமில்லாமல் ஒழிந்திருக்க வேண்டுமென்ற ஷரத்தில்லை என்றும், மேலும் நன்மையின் தட்டு கொஞ்சமாவது முனைத்தால், அதனால் ஈடேற்ற முண்டாகும் என்றும் தெரியவரும்.

### சிறுபாவங்களையும் பெரும்பாவங்களையும் விளக்கல்.

அறிந்துகொள்:—தவ்பா வென்பது பாவபரிகாரமாம். பாவம்எவ்வளவு சிறிதாகுமோ அவ்வளவாக அதன் பரிகாரம் இலேசாகும். ஆனால் அப்படி இலேசாகுவதற்கு அவன் அந்தப் பாவத்தின்மேல்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 20 MAY 1950 MADRAS

நிலைத்திராதவனாயிருக்கவேண்டும். பர்லு தொழுகைகள் பெரும் பாவங்கள் தவிர மற்றெல்லாப் பாவங்களுக்கும் கபாராவாயிருக்கிற தென்றும் ஜும்ஆத் தொழுகையானது ஜும்ஆ வரையில் பெரும் பாவங்கள் தவிர மற்றப் பாவங்களுக்குக்கபாராவாயிருக்கிறதென்றும் ஹதீசில் வந்திருக்கிறது. இதுவுமன்றி நீங்கள் உங்களுக்கு விலக்கப் பட்ட பெரும்பாவங்களைவிட்டுமே பேணுதல் செய்வீர்களாகில் நாம் உங் களில்நின்றும் உங்கள் பாவங்களை அழித்துவிடுவோம் என்று அல் லாகு தஆலா திருவுளமாயிருக்கிறான். அதாவது:—நீங்கள் பெரும் பாவங்களை விட்டுவிட்டால் சிறு பாவங்களை மன்னிப்பேன் என்ப தாம். ஆகவே பெரும்பாவங்கள் எவை என்று அறிவது பர்லாயிருக் கிறது. அவை எத்தனை என்பதில் அஸ்ஹாபுகளுக்குள் விகர்ப்ப முண்டு. சிலர் அவை ஏழு என்றும், சிலர் இன்னும் அதிகம் என்றும், சிலர் அதினும் குறைவு என்றும் சொல்லுகிறார்கள். இபுனு உமர்றலி யல்லாகு அன்குமா அவர்கள் பெரும்பாவங்கள ஏழு என்று சொன் னதை இபுனு அப்பாஸ் றலியல்லாகு அன்குமா அவர்கள் கேட்டு "அவை ஏழுக்குமேல் அதிகப்பட்டு எழுபதுக்கு நெருங்கியிருக்கின் றன" என்று சொன்னார்கள்.

அபூதாலிபு மக்கி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதா வது:—"எல்லா ஹதீசுகளிலும்நின்றும் அஸ்ஹாபுகளுடைய வாக்கியங் களில்நின்றும் பொருக்கி எடுத்து தீவ்வத்துல் குலூப் என்னும் கிதாபில் நான் ஒருங்கே சேர்த்திருக்கிற பெரும்பாவங்கள் பதி னேழு உண்டு. அவற்றுள் (மனதில் நாலும் நாவில் நாலும் வயிற்றில் மூன்றும் வெட்க உறுப்பில் இரண்டும் கையில் இரண்டும் காலில் ஒன்றும் சரீரமடங்கலில் ஒன்றுமாயிருக்கின்றன) மனதிலிருப்பவை நான்குபாவங்கள்:-ஒன்று: குபுரும், இன்னுமொன்று:பாவத்தின்மேல் எப்போதும் நிலைத்திருக்க நாட்டம் வைப்பதுமாம்அது சிறுபாவமா யிருந்தாலும் சரியே. எதுபோலெனில், தகாத வேலையைச் செய்து வருகிற ஒருவன் எப்போதும் அதை விட்டுவிட மனதில் நாட்டம் வைக்காமலிருப்பதுபோலெனக. மற்றொன்று: அல்லாகு தஆலா உடைய றஹ்மத்தில் அவநம்பிக்கை என்னும் நிராதாவாய்ப்போத லும்,இன்னுமொன்று:அல்லாகுதஆலாஉடைய ஆக்கினையில் அச்சம் தீர்தலுமாம். எதுபோலெனில் என் பிழைகள் பொறுக்கப்பட்டிருக் கின்றனஎன்றுமனதில்அச்சமில்லாமலிருப்பதுபோலெனக.நாவி லிரு ப்பவை நான்கு பாவங்கள்:—முதலாவது: ஒரு பாத்தியதை கெடுகிற விதமாய்ப் பொய்சாக்ஷி சொல்வதும், இரண்டாவது: விவாகஸ்திரீ

யைக்குறித்து ஹத்து விதியாகிற விதமாய்ப் படர் பேசுவதும், மூன்றாவது: ஒருவருடைய பாத்தியதையோ அல்லது பொருளோ நஷ்டமாகிற விதமாய்ப் பொய் சத்தியம் செய்வதும், நாலாவது: சூனியம் செய்வதுமாம். இதுவும் நாவிலுண்டாகிற உச்சாடனமேயாம். வயிற்றிலிருப்பவை மூன்று பாவங்கள். ஒன்று: சாராயங்குடிப்பதும், போதையையுண்டாக்குகிறயாதொருவஸ்துவைத்தின்பதும், இன்னுமொன்று: எதீம் என்னும் அநாதப்பிள்ளையின் சொத்தைத் தின்பதும், மற்றொன்று: வட்டி தின்பதுமாம். வெட்க உறுப்பிலிருப்பவை இரண்டு பாவங்கள். அவை: ஜினாவும் லிவாதத்துமாம். கையிலிருப்பவை இரண்டு பாவங்கள். அவை: கொலை செய்வதும் ஹத்துவிதிக்கிற விதமாய்க் களவு செய்வதுமாம். காலிலிருப்பது ஒருபாவம்: அது காபிர்களுடைய படையிலிருந்து ஓடுவதாம். எதுபோலெனில் இரண்டு காபிர்களுடன் ஒரு முஸ்லிமும் இருபதுகாபிர்களுடன் பத்து முஸ்லிம்களும் யுத்தத்தில் எதிர்த்து நிற்காமல் தோர்த்தோடுவதுபோலென்க. காபிர்கள் அதிகமாயிருந்தால் ஓடிப்போவது ஆகும். சர்வாங்கத்திலுமிருப்பது ஒருபாவம்: அது தாய் தந்தையர்களை வருத்தப்படுத்துவதாம் என்பதே.

இன்னுமறிந்துகொள்:—பாவங்களிற் சிலவற்றின்மீது ஹத்து விதியானதினாலும் சில பாவங்களின் விஷயத்தில் குர்ஆனில் அதிகமாய்ப் பயமுறுத்தியிருப்பதினாலும் அவைகளை இப்படிப்பெரு பாவங்களென்று அறிந்திருக்கிறார்கள். இதன் வியாக்கியானத்தில் பெரிய சுருட்டிருக்கிறது. எஹ்யாஎன்னுங்கிதாபில் அதைச்சொல்லியிருக்கிறோம். இந்தக் கிதாபு அதற்கு இடந்தராது. இதை அறிய வேண்டுமென்பதில் கருதியது யாதெனில், இந்தப் பெரும் பாவங்களில் பேணுதல் அதிகப்படவேண்டுமென்பதேயாம். இன்னும் சிறு பாவத்தின்மேல்நிலைத்திருப்பதும் பெரும்பாவமாகுமென்றும் அறிந்துகொள்ளவேண்டும். பர்ளுதொழுகைகள் சிறு பாவங்களுக்குக் கபாராவாகும் என்று நாம் சொல்லியிருந்தபோதிலும் ஒருவன் மற்றொருவனிடத்தில் அக்கிரமமாக ஒரு சின்னப்பணத்தையாயினும் அபகரித்திருப்பானாகில் பர்ளு தொழுகை அந்தப் பாவத்தை அழிக்காது என்றும், அதை அவனிடத்தில் திருப்பக் கொடுத்துவிடாத வரையில் அவன் அந்தக்குற்றத்தினின்றும் நீங்கமாட்டான் என்றும் எல்லா உலமாக்களும் ஒத்துச்சொல்லுகிறார்கள். இதிலொரு விகற்பமுமில்லை. மொத்தத்தில் ஜனங்களுடைய ஹக்கு சம்பந்தமான பாவங்களைவிட அல்லாகு தஆலாஉடைய ஹக்கு சம்பந்தமான பாவம்

மன்னிக்கப்பட மிக அருகமானதாயிருக்கிறது. ஹதீஸில் வந்திருப்பதாவது:—பாவங்களை எழுதப்படுகிற தப்தர்கள் மூன்றுண்டு. ஒன்று: மன்னிக்கப்படாத பாவங்களின் தப்தரும், மற்றொன்று: மன்னிக்கப்படுகிற பாவங்களின் தப்தரும், மற்றொன்று: விடப்படாத பாவங்களின் தப்தருமாம். மன்னிக்கப்படாத பாவமென்றது, ஷிர்க்கை. மன்னிக்கப்படுகிற பாவமென்றது, அடியான் அல்லாஹ் தஆலாவுடைய ஹக்குகளில் செய்கிற (தொழாமை போன்ற) கெடுதியை. விடப்படாத பாவமென்றது ஒருவன் மற்றவருடைய ஹக்குகளில் செய்கிற (கொலை களவுகள்போன்ற) கொடுமையை. இன்னும் எதனால் ஒரு முஸ்லிமுக்கு இடையூறு உண்டாகுமோ அதுவும் இக்கொடுமையிற் சேருமென்றுணர்ந்துகொள். அந்த இடையூறு உடம்பிலோ அல்லது பொருளிலோ அல்லது கவுரவத்திலோ அல்லது மனுஷத்தன்மையிலோ அல்லது தீனிலோ எதில் உண்டானாலும் சரி. தீனில் இடையூறு உண்டாவது எதுபோலெனில், ஒருவன் ஒரு பித்அத்தின் பக்கம் ஜனங்களை அழைத்து அவர்களுடைய தீனைக்கெடுப்பதுபோலும், அல்லது ஒருவன் ஒரு சபையில் உட்கார்ந்து ஜனங்கள் பாவத்தில் துணிவுகொள்ளும்படியான பேச்சுகளை அவர்களுக்குச் சொல்வது போலவுமாம்.

### சிறுபாவங்கள் எதனால் பெரும்பாவங்களாகின்றன வென்பதை விளக்கல்.

அறிந்துகோள்:—சிறுபாவத்துக்கு மன்னிப்பு கிடைக்கும் என்று ஆதரவு வைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால்சிறுபாவம்சிலகாரணங்களால் பெரும்பாவமாய்ப் போகின்றது. அதன் அபாயமும் பெரிதாயிருக்கும். அந்த காரணங்கள் ஆறும். முதலாவது காரணம்: எப்போதும் விடாமல் அதன்மேல் நிலைத்திருப்பதாம். எதுபோலெனில், ஒருவன் எப்போதும் புறம்பேசுவதுபோல் அல்லது எப்போதும் பட்டுடை தரிப்பதுபோல் அல்லது விளையாட்டாக எப்போதும் இராகம் கேட்பதுபோலாம். ஏனெனில், இடைவிடாமல் எப்போதும் நடைபெறுகிற பாவத்தின் கூறானது மனதை இருளாக்குவதில் பெரிதாயிருக்கிறது. இதனாலேதான் "அமல்களில் மிகவும் நல்ல அமல்நேமமாய்ச் செய்யப்படுகிற அமல்" என்றும், "அது கொஞ்சமாயிருந்தாலும் சரி" என்றும் ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இதற்கு உபமானம்: தண்ணீர் சொட்டுக்குச் சமானமாம். தண்ணீரானது இடைவிடாமல் ஓர் கல்லின் மேல் சொட்டிக்கொண்டிருந்தால் அந்தக் கல்லை அது அகத்தியம்

துளைத்துவிடும். தண்ணீரை ஒரே முறையில் சரேலென்று ஊற்றினால் குணம் செய்யாது. ஆதலால் ஒருவன் சிறுபாவத்தில் சிக்கிக் கொண்டிருந்தால் அவன் இஸ்திகுபாரினால் அதற்குப் பரிகாரம் செய்கிறவனாயிருக்கவேண்டும். மனம் நாணி வெட்கப்படுகிறவனாயும் இனிமேல் அதைச் செய்வதில்லை யென்று மனதில் உறுதியான நாட்டங் கொள்பவனாயு மிருக்கவேண்டும். "பெரும்பாவம் இஸ்திகுபாரினால் சிறுபாவமாயும், சிறுபாவத்தை நேமமாய்ச் செய்வதினால் அது பெரும்பாவமாயும் மாறுகிறது" என்று பெரியோர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.

இரண்டாவது காரணம்:—பாவத்தைச் சின்னதென்று நினைப்பதும் அதை இலேசாகக் காண்பதுமாம். இதனால் பாவம் பெரிதாகும். பாவத்தைப் பெரிதென்று நினைத்தால் அது சின்னதாகும். அதைப் பெரிதென்று நினைப்பதானது ஈமான் அச்சம் இவைகளால் உண்டாவதாம். இது மனதைப் பாவம் என்னும் இருளிலிருந்து காக்கும். அப்போது அந்தப் பாவம் யாதொரு குணஞ் செய்யாது. பாவத்தைச் சின்னதென்று நினைப்பதானது மறதியினாலும் பாவத்தில் பிரியம் வைப்பதினாலும் உண்டாவதாம். இன்னும் பாவம் மனதுக்கு ஒத்துவிட்டது என்பதற்கு இது ஓர் அத்தாட்சியுமா யிருக்கிறது. எல்லாக் காரியங்களிலும மனமே முக்கியமாகக் கருதப்படுவதாம். எதுவொன்று மனதில் அதிக குணத்தைக் கொடுக்குமோ அது மிகவும் பெரிதேயாம். மூமினானவன் தன் பக்கம் சாய்ந்திருக்கிற ஓர் மலையைப்பார்த்து அது தன்மேல் விழுமென்று எப்படி எப்போதும் பயந்துகொண்டிருப்பானோ அப்படியே தன் பாவத்தை அந்த மலைக்குச் சமானமாக நினைக்கிறான் என்றும், முனாபிகானவன் தன் பாவத்தை அவன் மூக்கின்மேல் உட்கார்ந்து எழுந்துபோய்விட்ட ஓர் ஈயைப்போல் நினைக்கிறான் என்றும் ஹதீசில் வந்திருக்கிறது. இன்னும் அடியான் ஒரு பாவத்தை இது இலேசாயிருக்கிறது என்றும், என் பாவங்களெல்லாம் இப்படி யிருக்கவேண்டுமே என்றும் சொல்வதுதான் பொறுக்கப்படாத ஓர் பாவமாயிருக்கிறது என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். நபிமார்களில் ஒருவருக்கு வந்த ஒஹியாவது:—"நபியே! நீர் பாவத்தின் சிறுமையைப் பார்க்க வேண்டாம். அல்லாகு தஆலாவுடைய உத்திரவுக்கு விரோதஞ்செய்தீர் என்று அவனுடைய பெருமையை நினைத்துப்பாரும்" என்பதே. அடியான் அல்லாகு தஆலாவுடைய பெருமையை எவ்வளவு அதிகமாய் அறிந்திருக்கிறானோ அவ்வளவு அதிகமாக அவனிடத்தில் சிறு

பாவம் பெரிதாய்த் தெரியும். அஸ்ஹாபுகளில் ஒருவர் சொல்லுகிற தாவது:—"நீங்கள் அநேகம் காரியங்களைச் செய்கிறீர்கள். அவை களை ஓர் மயிராக நினைக்கிறீர்கள். நாமோ அவைகளில் ஒவ்வொன் றையும் ஓர் மலையாக நினைக்கிறோம்" என்பதே. மொத்தத்தில் அல் லாகு தஆலாஉடைய கோபமானது பாவங்களில் மறைந்திருக்கிறது. நீ எந்தப் பாவத்தை இலேசாக நினைக்கிறாயோ அந்தப் பாவத்திலே யே அவன் கோபம் இருக்கக்கூடும். அல்லாகு தஆலா அருளிச்செய் திருப்பதுபோல் அது வருமாறு காண்க. நீங்கள் அதை இலேசு என்று நினைக்கிறீர்கள், அதுவோ அல்லாவினிடத்தில் கனமானதா யிருக் கிறது.

மூன்றாவது காரணம்:—பாவத்தின்மேல் சந்தோஷப்படுவதும், அதை ஓர் கொள்ளைப் பொருளாக நினைப்பதும், இலவசமாய்க் கிடைத்த திரவியமென் றெண்ணுவதும், அதைக்கொண்டு பெருமை யடிப்பதுமாம். இன்னும் நான் இன்னானை ஏமாற்றிப்போட்டேன் என்றும், அவனை நசுக்கிவிட்டேன் என்றும், அவன் பொருளைப் பிடுங்கிக்கொண்டேன் என்றும், திட்டினேன் என்றும், பங்கப்படுத் தினேன் என்றும், தர்க்கத்தில் அவனைத் தலைகுனிய வைத்தேன் என்றும், இன்னு மிதுபோன்றவைகளையும் சொல்லித் தன் பெரு மையைப் பிரஸ்தாபிப்பது முண்டு. எவனொருவன் தன்னுடைய கேட்டின்மேல் சந்தோஷப்பட்டுப் பெருமை யடிக்கின்றானோ அவன் மனம் இருளடைந்துவிட்டது என்பதற்கு அதுவோர் அத் தாட்சியாகும். அதனாலேயே கேடுண்டாகும்.

நாலாவது காரணம்:—இவனுடைய பாவம் பிறருக்குத் தெரி யாமல் மறைக்கப்பட்டால், அப்போதிவன் இது அல்லாகு தஆலா தன் விஷயத்தில் செய்த கிருபை என்று மருள்வதாம். இவன் பூரா வாய்க் கெட்டழியும்பொருட்டு இவனைத் தாமதப்படுத்தியும் இவ னுக்கு ஊட்டங்கொடுத்தும் வைத்திருக்கிறதை இவன் உற்றுணர் ந்து அச்சப்படுகிறதில்லை.

ஐந்தாவது காரணம்:—பாவத்தை வெளிப்படுத்துவதும் தன் மேல் அல்லாகு தஆலா மூடியிருக்கிற மறைப்பை எடுத்துவிடுவது மாம். இவனால் மற்றவர்களும் அந்தப் பாவத்தில் விருப்பங்கொள்வ துண்டு. அந்தப் பாவத்தின் அதாபும் மற்றவர் அதை விரும்பின வேதனையும் இவனுக்கு உண்டாகும். பகிரங்கமாக இவனே ஒரு வனுக்குப் பாவத்தில் விருப்பூட்டுவானாகில் இன்னுமவன் அதைப்

படித்துக்கொள்வதற்குரிய சாதனங்களை உண்டாக்குவானாகில் பாதகமும் வேதனையும் இரட்டிக்கும். இன்னும் "ஒரு பாவத்தை ஒரு முஸ்லிமுடைய கண்ணுக்கு இலேசாகக் காட்டுவதினும் அவன்மீது பெரியவஞ்சகம் ஒன்றுமேயில்லை" என்று சல்புகளான முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆறாவது காரணம்:—ஆலிமாயும் ஜனங்களால் பின்பற்றப்படுகிறவனாயும் இருக்கிற ஒருவன் பாவஞ்செய்தால் அவனுடைய செயலைப் பார்த்து மற்றவர் பாவத்தில் துணிவுகொள்வதும் அது ஆகாத செயலாயிருந்தால் அவன் செய்யமாட்டான் என்று ஆதாரமாய்ச் சொல்வதுமாம். உதாரணமாக:—ஒரு ஆலிம் பட்டுடை தரிப்பவனாயும் பாதுஷாக்களிடம் போகிறவனாயும் அவர்களின் பொருளை வாங்குகிறவனாயும் தர்க்கஞ் செய்யும்போது அற்ப வார்த்தைகளை வழங்குகிறவனாயும் தன்போன்ற ஆலிம்களைத் தாழ்த்திப் பேசுகிறவனாயும் தனக்கு அதிகப்பொருளும் அதிகாரமும் இருப்பதுபற்றிப் பெருமை பாராட்டுகிறவனாயும் இருந்தால் அவனுடைய ஷாகிர்துகளெல்லாம் அவன்செயலை எடுத்துக்கொள்ளுவார்கள். அவர்களும் தங்கள் உஸ்தாதுபோல் ஆய்விடுவார்கள். அந்த ஷாகிர்துகளை அவர்களின் ஷாகிர்துகள் பின்பற்றுவார்கள். ஒவ்வொருவராலும் ஊர்கள் கெடும். ஏனெனில் ஒவ்வொரு பட்டணத்தாரும் இவர்களில் ஒவ்வொருவரைப் பின்பற்றுகிறவர்களாயிருப்பதினாலென்க. ஆகவே பின்பற்றுகிற எல்லாருடைய பாதகமும் பின்பற்றப்படுகிற அந்தப் பெரியவருடைய பட்டோலையில் எழுதப்படும். இதனாலேதான் "எவன் இறந்து அவன் பாவங்களும் அவனோடு ஒழிந்தனவோ அவனே அதிஷ்டசாலி" என்றும், "ஒருவன் தனக்குப்பின் ஆயிரம் வருஷம் வரையில் தன்பாவம் தங்கியிருக்கும்படியான துர்ப்பாக்கியனாயுமிருந்திருப்பான்" என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். பனி இஸ்ராயில் கூட்டத்து உலமாக்களில் ஒருவர் தவ்பாச்செய்தார். அவருக்குச் சொல்லும்படி அக்காலத்து றசூல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாகு தஆலா வஹி யனுப்பினான். அதாவது:—"நீ செய்த பாவங்கள் எனக்கும் உனக்கும் நடுவிலிருந்தால் நான் உன்னை மன்னித்திருப்பேன். இப்போது நீமாத்திரம் தவ்பாச்செய்தாய். நீ வழிகெடுத்த அந்த ஜனங்கள் அப்படியே யிருக்கிறார்களே. அதற்கு என்னசெய்வாய்?" என்பதேத. இதனாலேதான் உலமாக்கள் பெரிய அச்சத்தி லிருக்கிறார்கள். ஏனெனில், அவர்களுடைய ஒருபாவம் ஆயிரம்பாவமா யிருப்பதினாலேயாம். இன்னும் அவர்க

னுடைய ஒரு வணக்கம் ஆயிரம் வணக்கமா யிருக்கிறது. ஏனெனில், அவர்களைப் பின்பற்றுகிறவர்களின் சவாபும் அவர்களுக்கு உண்டாவதினாலென்க. இதன்நிமித்தமே ஆலிம் பாவஞ்செய்யாம லிருப்பது அவன்மேல் வாஜிபாயிருக்கிறது. அப்படிச் செய்தால் அதை மறைவாகச் செய்வது அவன்மேல் கடமையாகும் (ஏனெனில், தான் கெட்டதுபோல் மற்றவர் கெடாமலிருக்கவேயாம்). மேலும் ஒரு காரியம் முபாஹா யிருந்தபோதிலும் அதை அவன் செய்கிற பக்ஷம் அதைக்கண்டு மற்றவர் மறதியினால் பாவத்தில் துணிகரங் கொள்வார்கள் என்றறிந்தானாகில் அந்த முபாஹையும் அவன்விட்டு விடவேண்டும். ஜஃறீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நாம் இதற்குமுன் சிரித்தோம். விளையாடினோம். இப்போது நாம் ஜனங்களால் பின்பற்றப்படுகிற சங்கையைப் பெற்றுக்கொண்டோம். ஆதலால் இனி நமக்குக் குஞ்சிரிப்புங் கூடாது" என்பதே. இனி எவன் ஒரு ஆலிமுடைய சருகலை எடுத்துப் பேசுகிறானோ அவனுக்கு அது பெரிய வோர் வஞ்சகத் தொழிலாகும். அதனால் அநேக ஜனங்கள் வழிவிலகிப் பாவத்தில் துணிவார்கள். ஆதலால் மற்றவர்களின் சருகலை மறைப்பது வாஜிபாயும் ஆலிமுடைய சருகலை மறைப்பது அதிலும் முக்கிய வாஜிபாயு மிருக்கிறது.

### சரியான தவுபாவின் ஷரத்தையும் அதன் அடையாளத்தையும் விளக்கல்.

அறிந்துகொள்:—பாவத்தை நினைத்து மனம் நாணி வெட்கிப்பது தவுபாவுக்கு அடிவேரா யிருக்கிறது. அதன் பயனோ பின்பு வெளியாகிற ஓர் நாட்டமாம். இனி அந்த நாணத்துக்கு அடையாளமாவது:—அவன் எப்போதும் துக்கித்துக் கைசேதப்படுவான். அழுவதும் அச்சப்படுவதும் அவன்வேலையாயிருக்கும். ஏனெனில்தனக்கு மரணம் நெருங்கிவிட்டதென்றறிந்த ஒருவனுக்கு எப்படித் துக்கமும் கைசேதமும் இல்லாமலிருக்கும்? இன்னும் அவனுக்கு ஒரு மகனிருந்து அந்த மகன் வியாதிப்பட்டுப் படுக்கையிலிருக்கிற சமயத்தில் ஒரு நஸ்றானி வயித்தியன் வந்து இந்த நோய் அபாயமானதென்றும் இதனால் உயிரைப்பற்றி அச்சப்படவேண்டியதா யிருக்கிறதென்றும் சொல்லுவானாகில் அந்தத் தகப்பனுடைய உயிருக்குள் எப்படிப்பட்ட துக்கமும் பயமுமான நெருப்பு விழுமென்பது தெரிந்தே யிருக்கிறது. இன்னும் தன் உயிரானது தன் மகனைவிடத் தனக்கு மிகவும் பிரியமுள்ளது என்பதும் தெரிந்திருக்கிறது. அல்லாவும் றஸூலும் அந்த நஸ்றானி வைத்தியனைவிட மிகவும் உண்மை

உரைப்பவர்களாயிருக்கிறார்கள். ஆகிரத்திலுண்டாகிறகேட்டின் அச்சமாகிறது மவுத்தின் அச்சத்திலும் மிகப்பெரிதாயிருக்கிறது. மவுத்துக்கு வியாதி என்னும் அத்தாட்சி வெளிப்படையாயிருப்பதைப் பார்க்கிலும் அல்லாகு தஆலாவுடைய கோபத்துக்குப் பாவம் என்னும் அத்தாட்சி மிகவும் வெளிப்படையாயிருக்கிறது. ஆகவே இதைப்பற்றி அவனுக்கு அச்சமும் கைசேதமும் உண்டாகாத பக்ஷத்தில் பாவத்தினது ஆபத்தின்மேல் இன்னும் அவனுக்கு ஈமான் வரவில்லை. இந்த நெருப்பு எவ்வளவாகக் கொளுத்துகிறதோ அவ்வளவாகப் பாவங்களை அழிப்பதில் அதுபெரிய குணப்பாட்டைக் கொடுக்கும். இந்தக் கொளுத்தலில் இருதயமானது இளகித் தெளிவாகும். ஹதீஸில் வந்திருப்பதாவது:—நீங்கள் தவுபாச் செய்தவர்களின் சகவாசத்திலிருங்கள். அவர்களுடைய இருதயம் மிகவும் இளகியிருக்கும். இனி மனம் எவ்வளவு அதிகமாய்த் தெளிந்திருக்கிறதோ அவ்வளவாக அது பாவத்தை அருவருப்பாகக் காணும். பாவத்தினுடைய இன்பம் மனதுக்குக் கசப்பாக மாறும். நபிமார்களில் ஒருவர் பனீ இஸ்ராயீல் கூட்டத்திலுள்ள ஒரு மனிதனுடைய தவுபாவைக் கபூல் செய்யும்படி அல்லாகு தஆலாவினிடத்தில் ஷபாஅத்து செய்ததற்கு "அவன் விஷயத்தில் எல்லா வானங்களிலுமுள்ள மலக்குகள் ஷபாஅத்து செய்தபோதிலும் அவனுடைய மனதில் அந்தப் பாவத்தின் இன்பம் தரிப்பட்டிருக்கிறவரையில் எனது பெருமையின்பேரில் ஆணையாக நான் அவனுடைய தவுபாவைக் கபூல்செய்யமாட்டேன்" என்று வஹீ வந்தது.

இன்னுமறிந்துகொள்:—பாவமானது சுபாவத்தில் இச்சிக்கப்படுவதேயாயினும் தவுபாச் செய்தவனிடத்தில் அது விஷங்கலந்த தேனைப்போலிருக்கிறது. அதை ஒரு முறை ருசித்து அதனால் பெரிய இம்சைப்பட்ட ஒருவன் மறுமுறை அதை நினைப்பானாகில் அப்போது அதன் அரோசகிப்பினால் அவனுடைய சரீரத்திலுள்ள ரோமங்களெல்லாம் சிலிர்த்தெழும்பக் காண்பான். அதன் இன்பத்தின் ஆசையானது அதன் இம்சையின் அச்சத்தில் மறைந்துபோம். (ஒரு பாவத்தில் அல்ல) எல்லாப்பாவங்களிலும் அவன் இந்தக் கசப்பைக் காணவேண்டும். ஏனெனில், அவன் செய்த பாவத்தில் அல்லாகு தஆலாஉடைய கோபமானது விஷத்தைப்போல் எல்லாப் பாவங்களிலும் கலந்திருக்கிறதினாலென்க.

இனி இந்த ஞானத்தினால் உண்டாகும் நாட்டமானது நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் இந்த மூன்று காலங்களில் சம்பந்

தப்பட்டிருக்கிறது. நிகழ்கால சம்பந்தமுள்ள நாட்டம் யாதெனில், எல்லாப்பாவங்களையும் விட்டுவிடுவதும்,எது அவன்மேல் பர்லாயிருக்கிறதோ அதில் பராக்காகுவதுமாம். எதிர்கால சம்பந்தமுள்ள நாட்டம் யாதெனில், வயதின் கடைசிவரையில் அதன்மேல் சபுரு செய்துகொண்டிருக்க நாட்டம் வைப்பதும், இனி ஒருபோதும் பாவத்தினிடம் நெருங்கமாட்டேன் என்றும் பர்ளுகளில் குறை செய்யமாட்டேன்என்றும் உள்ளும் புறமும் ஒருவிதமாகி அல்லாகு தஆலாவினிடம் உறுதியான அருதிமானம் செய்வதுமாம். அதெப்படியென்றால், ஒரு நோயாளி நான் இந்தப் பழத்தைத் தின்பது எனக்கு நஷ்டத்தை யுண்டாக்குமென்று அறிந்தானாகில் அவன் அதைத் தின்னாமலிருக்க நாடுவான். அப்போது அதன்மேல் அவனுக்கு ஆசை மோதிக்கொண்டிருக்கக் கூடுமென்றாலும் அவன் அந்த நாட்டத்தை இளக்கவுமாட்டான். தின்போமா ? வேண்டாமா ? என்று திரும்ப யோசிக்கவுமாட்டான். தவுபாச்செய்த மனிதன் தனித்தும் வாய்பொத்தியுமிருப்பதினாலன்றி இன்னும் ஹலாலாகச் சம்பாதித்த உணவினால் அல்லது அதைச் சம்பாதிக்க உதவியான ஒரு தொழிலைச் செய்ய அவன் சக்தி பெறுவதினாலன்றி மற்றப்படி அந்த தவுபாவை அவன் காப்பது அசாத்தியமாம். சந்தேகப் பொருள்களைத் தள்ளிவிடாதிருக்கிறவரையில் தவுபாநிறப்பமாகாது. இச்சைகளை முறிக்காதவரையில் சந்தேகப்பொருளைத் தள்ளிவிட முடியாது. இன்னும் "ஒரு பொருளில் இச்சை மேலிட்டிருக்கிற ஒருவன் ஏழுதரம் கஷ்டத்துடன் அதை விட்டுவிடுவானாகில் அதன்பிறகு அதை விடுவது அவனுக்கு இலேசாய்ப்போம்" என்பதாகவும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இனி இறந்தகால சம்பந்தமுள்ள நாட்டமானது: இதற்குமுன் சென்றுபோனவைகளுக்குப்பரிகாரம் செய்வதுகொண்டு கொளுகினதாம்.அதாவது:— அல்லாகு தஆலாஉடைய ஹக்குகளில்நின்றும் அடியார்களுடைய ஹக்குகளில்நின்றும் நான் எதில் குற்றம் செய்திருக்கிறேன் என்று அவன் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆனால் அல்லாகு தஆலாவுடைய ஹக்குகள் பர்ளுகளை நிறைவேற்றல் என்றும் பாவங்களைவிடல் என்றும் இரண்டுவகையாயிருக்கின்றன. ஆகவே பர்ளுகளை நிறைவேற்றினதில் அவன் பாலிகான நாள்முதல் ஒவ்வொரு நாளையும் யோசித்துப்பார்த்து அதில் யாதொரு தொழுகை தப்பிப்போயிருந்தால் அல்லது உடையைச் சுத்தமாக வைத்தில்லாமற்போனால் அல்லது அறியாமையினால் அவன் நிய்யத்து வஸ்ஹத்

தாகாமற்போயிருந்தால் அல்லது அவனுடைய அஸ்லு இஃதிகாதில் ஏதும் இடையூறு அல்லது சந்தேகம் உண்டாய்ப்போயிருந்தால் அந்த எல்லாத் தொழுகைகளையும் கலாசெய்வான். இன்னும் எந்த நாள்முதல் அவன் முதலாளியா யிருந்திருக்கிறானோ அப்போது பாலிகில்லாத சிறுவனா யிருந்தாலும் சரியே, அந்தநாள் முதல் கணக்கிட்டுக் கொடாத ஜக்காத்தை அல்லது கொடுத்திருந்து ஹக்காளிகள்வசம் அதைச் சேர்க்காதிருந்தால் அல்லது அவனிடத்தில் பொன்பாத்திரம் வெள்ளிப் பாத்திரங்களிருந்து அவைகளுக்கு ஜக்காத்துக் கொடாதிருந்தால் எல்லாவற்றையும் கணக்கிட்டு அவை எல்லாவற்றிற்கும் ஜக்காத்து கொடுப்பான். இன்னு மிதுபோலவே றமலானுடைய நோன்பில் யாதொரு குறைசெய்திருந்தாலும் அல்லது அதில் நிய்யத்தை மறந்துபோயிருந்தாலும் நிய்யத்தை ஷராத்துப்படி செய்யாதிருந்தாலும் நோன்பைக் கலாசெய்வான். இவைகளில்நின்றும் எதை நிறைவேற்றிவிட்டதாகச் சந்தேகமின்றி எகீனாய் அறிகின்றானோ அதைக்கலாசெய்வான். எதுசந்தேகத்தி லிருக்கிறதோ அது விஷயத்தில் எண்ணத்தின் மிகைப்பைக்கொண்டு எடுத்துக்கொள்ளுவான். இன்னும் தெண்டித்து ஆராய்தல்செய்து எதை இறுத்துவிட்டதாக எகீனைப் அறிகின்றானோ அதைக் கணக்கில் சேர்த்துக்கொண்டு மற்றவைகளைக் கலாசெய்வான். இதுவே மிக நிறப்பமானது. எண்ணத்தின் மிகைப்பினால் எடுத்ததையும் கணக்கில் சேர்த்துக்கொள்ளுவானாகில் ஆகும். இனி, பாவங்களை அவன் புலூகான ஆரம்பத்திலிருந்து அவனுடைய கண், காது, கை, நா, இரைக்குடல், மற்றும் உறுப்புகள் இவைகளால் என்ன பாவங்களைச் செய்திருக்கிறான் என்று தேடிப் பார்க்கவேண்டும். ஜினா, லிவாதத்து, களவு, கட்குடி, இன்னும் ஹத்துவிதியாகும்படியான யாதொரு பாவம் இவைகள்போன்ற பெரும் பாவங்களைச் செய்திருந்தால், தவுபாச்செய்வான். அதற்காகத் தன்பேரில் ஹத்தை நடத்தும்படி சுல்தானிடத்தில்போய்த் தன்பாவத்தைச்சொல்லி ஒப்புக்கொள்வது அவன்மேல் வாஜிபல்ல. மேலும் அவன் அதை மறைத்துக் கொள்ளுவான். அது நிவர்த்தியாகத் தவுபாவினாலும் அதிகமான வணக்கத்தினாலும் பரிகாரம் செய்துகொள்ளுவான். சிறுபாவமா யிருந்தாலும் இதுபோல்தான். உதாரணமாக:—அந்நிய ஸ்திரீயைப் பார்த்திருந்தால், அல்லது ஒலுவில்லாமல் குருஆனைத் தொட்டிருந்தால், அல்லது ஜுனுபாளியாகப் பள்ளிவாசலில் உட்கார்ந்திருந்தால், அல்லது வீணைமுதலிய இராகக் கருவிகளால் இராகம்

கேட்டிருந்தால் இவைகளில் ஒவ்வொரு பாவத்தையும் அழிக்கும்
பொருட்டு அதற்கு நேர்மாறான அமலைக்கொண்டு கபாராசெய்வான்.
தீமைகளைத் திடனாக நன்மைகள் போக்கிவிடும் என்று அல்லாகு
தஆலா திருவுளமாயிருக்கிறான். ஆயினும் எது நேர்மாறாயிருக்கிறதோ
அதன் குணப்பாடு அதிகமாயிருக்கும். ஆதலால் வீணை முதலியவை
களால் இராகம் கேட்டதற்குக் குருஆனைக் கேட்பதினாலும் இல்மு
டைய மஜ்லிஸில் இருப்பதினாலும் கபாராசெய்வான். ஜனாபாவியா
கப் பள்ளிவாசலில் இருந்ததற்கு இஃதிகாபினாலும் இபாதத்துகளி
னாலும் கபாரா செய்வான். ஒலுவில்லாமல் குருஆனைத் தொட்டத
ற்குக் குருஆனைக் கனப்படுத்திவைப்பதினாலும் அதை அதிகமாய்ப்
பார்த்து ஓதுவதினாலும்கபாரா செய்வான். சாராயம் குடித்ததற்கு
ஹலாலான எந்தக் குடிப்பை இச்சிக்கின்றானோ அதைக் குடிக்கா
மல்விடுவதினாலும்சதகாகொடுப்பதினாலும் கபாராசெய்வான்.ஏனெ
னில் அந்தப் பாவங்களா லுண்டான ஒவ்வொரு இருளையும் அழிக்
கும்பொருட்டு அதனால் ஓர் ஒளி யுண்டாகவேயாம். அன்றியும் துன்
யாவில் அநுபவிக்கிற ஒவ்வொரு சுகபோகங்களுக்கும் அதிலனுபவி
க்கிற கஷ்டதுக்கங்களே கபாராவா யிருக்கிறது. அதெப்படியென்
றால், துன்யாவினுடைய இன்பசுகங்களின் பொருட்டால் மனமா
னது துன்யாவில் பற்றியிருக்கும். அதிலனுபவிக்கிற ஒவ்வொரு கஷ்ட
த்தினால் மனமுடைந்து அதை வெறுக்கும். இதனாலேதான் "முமினு
க்கு வருகிற ஒவ்வொரு வருத்தமும் அவன் பாவங்களுக்குக்
கபாராவாகும்" என்றும், அது அவன் காலில்தைத்த ஓர் முள்ளினால்
ஏற்பட்ட அற்பகஷ்டமா யிருந்தாலும் சரியே என்றும் ஹதீஸில்
வந்திருக்கிறது. இன்னும் "சிலபாவங்கள் இருக்கின்றன" என்றும்,
"அவைகளுக்குத் துக்கமே யொழிய வேறொன்றும் கபாராவாகாது"
என்றும் ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்
கிறார்கள். இன்னுமொரு ரிவாயத்தில் குடும்பத்தினுடையவும் பிழை
ப்பினுடையவுமான விசாரமேயொழிய வேறொன்றும் அவைகளுக்
குக் கபாராவாகாது என்றும் வந்திருக்கிறது.

ஆயிஷா றளியல்லாஹு அன்ஹா அவர்கள் "ஒரு அடியான்
அதிக பாவமுள்ளவனாயும் அவைகளுக்குக் கபாராவாக்க யாதொரு
வணக்க மில்லாதவனாயும் இருந்தால் அந்தப் பாவங்களுக்குக் கபாரா
வாகும்பொருட்டு அல்லாகுதஆலா அவன் மனதில் ஓர் துக்கத்
தைப்போடுவான்" என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்தத்துக்கம்
அவனிஷ்டமாய் ஏற்பட்டதல்லவென்று நீ சொல்லுவாய். நீ சொல்

வதுபோன்ற துக்கமல்ல இது. ஏனெனில் அவன் துன்யாசம்பந்தமான ஓர் காரியத்தில் துக்கமடையக்கூடும். துன்யா காரியத்தில் துக்கமடைவது ஓர் பிசகு என்றும், ஒருபிசகு மற்றொரு பிசகுக்கு எப்படி கபாராவாகும்? என்றும் சொல்லுவாய். இது அப்படிப்பட்டதல்ல. மேலும் எதுவொன்று உன் மனதைத் துன்யா விஷயத்தில் வெறுப்படையச் செய்கிறதோ அது உனக்கு நன்மையாயிருக்கிறது. அந்த வெறுப்பு உன் இஷ்டத்தினால் ஏற்படவில்லையானாலும் சரியே. ஏனெனில், அந்தத் துக்கத்துக்குப் பதிலாக சந்தோஷம் வரவேண்டுமென்பது உன் நாட்டமாயிருந்தால் துன்யா உன் சொர்க்கமாயிருக்கும். யூசுபு அலைகிஸ்ஸலாமவர்கள் ஜீபுரயீல் அலைகிஸ்ஸலாமவர்களிடத்தில் "நீர் அந்தத்துக்கமுள்ள கிழவனை (யாகூபு அலைகிஸ்ஸலாமவர்களை) எப்படியாகப்பார்த்துவந்தீர்" என்று கேட்டதற்கு, "கொலையுண்ட குமாரனில் அவர்கொண்டிருக்கும் துக்கமான வருத்தத்தில் அவரைப் பார்த்து வந்தேன்" என்று சொன்னார்கள். அப்போது யூசுபு அலைகிஸ்ஸலாமவர்கள் "அந்தத் துக்கத்துக்காக அவர்களுக்கு என்னகூலி கிடைக்கும்?" என்று கேட்க, "நூறு ஷஹீதுகளுடைய சவாபு கிடைக்கும்" என்று ஜிப்ரயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் சொன்னார்கள்.

இனி அடியார்களுடைய ஹக்குகளில் ஒவ்வொருவரோடும் அவன் நடந்துகொண்ட நடவடிக்கைகளையும் இருந்த சபைகளையும் பேசின பேச்சுகளையும் கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். ஏனெனில், யாருக்காவது அவன்பேரில் பொருள் சம்பந்தமான யாதொரு ஹக்கிருந்தால், அல்லது யாரையாவது வருத்தப்படுத்தியிருந்தால், புறம்பேசியிருந்தால் அவைகளை இறக்கவும் பொறுப்பித்துக்கொள்ளவுமேயாம். எதைக் கொடுத்துவிடவேண்டுமோ அதைக் கொடுத்துவிடுவான். எதைப் பொறுப்பித்துக் கொள்ளவேண்டுமோ அதைப் பொறுப்பித்துக்கொள்ளுவான். யாரையாவது கொலைசெய்திருந்தால் அந்தப்பழிக்குப் பழிவாங்கிக்கொள்ளும் பொருட்டாவது அல்லது மன்னித்துவிடும்பொருட்டாவது தன்னை அந்தக் கொலையுண்டவனுடைய வார்சுகள்வசம் ஒப்புக்கொடுப்பான். ஒரு திருஹமோ அல்லது ஒரு தங்கமோ அல்லது ஒரு சின்னப்பணமோ தன்மீது கடனாயிருந்தால் அதற்கு உடையவர்களை உலகத்தில் தேடிப்பார்த்து அவர்களிடம் கொடுப்பான். அவர்கள் புலப்படாதபக்ஷம் அவர்களுடைய வார்சுகளிடம் கொடுப்பான். இது ஆமில்களான அதிகாரிகளுக்கும் தாஜிர்களான வர்த்தகர்களுக்கும் மிகவும் கஷ்டமாயிருக்

கும். ஏனெனில் இவர்கள் மற்றவர்களுடன் நடத்தும் நடவடிக்கைகள் அநேகமாயிருப்பதினாலென்க. புறம் பேசினதில் எல்லாரையும் தேடிப்பிடிப்பது எல்லார்பேரிலும் கஷ்டமாகும். இப்படி ஏலாதவனாய்ப்போனால் அப்போது கியாமத்தில் அவனுடைய வணக்கங்கள் இந்த ஹக்குகளுக்கு ஈடாகி அவனுடைய ஈடேற்றத்துக்கும்போதுமாகிற அவ்வளவு அதிக இபாதத்துகளை அவன் செய்துவரவேண்டும். இதைத்தவிர வேறு வழியில்லை.

பசல்:—தவ்பாவின்மேல் நிலைத்திருக்கிற ஒருவனால் யாதொரு பாவம் நடந்துவிட்டால் உடனே அவன் அந்தப் பாவத்துக்குக் கபாரா செய்வதிலும் அதை நிவர்த்திக்கும் பரிகாரத்திலும் பராக்காகவேண்டும். ஒரு பாவத்துக்குப்பின் எட்டு காரியங்கள் நடந்தால் அவை அந்தப் பாவத்துக்குக் கபாராவாகும் என்று பெரியோர்கள் சொல்லியிருப்பதின்பேரில் ஹதீசுகளும் அத்தாட்சியாயிருக்கிறது. அந்த எட்டில் நாலு இருதய காரியங்களாம். அவையாவன:—தவ்பா அல்லது தவ்பாசெய்ய நாட்டமும் இனிப் பாவஞ் செய்வதில்லை என்ற சரியான எண்ணமும் அதனால் அதாபுக்கு ஆளாவேன் என்ற அச்சமும் மன்னிப்பின் ஆதரவுமாம். இன்னும் நாலு தேககாரியங்களாம். அவையாவன:—இரண்டு றக்அத்து நபில் தொழுவதும், அதன் பிறகு எழுபதுதரம் இஸ்திகுபாருசெய்து நூறுதரம் சுபுஹான றப்பியல் அலீம் வபிஹம்திஹி என்று சொல்வதும், இயன்றமட்டும் சதகா கொடுப்பதும், ஒரு நோன்பு வைப்பதுமாம். இன்னும் சில ஹதீசுகளில் நல்லவிதமாக ஒலுசெய்து பள்ளிவாசலுக்குப் போய் இரண்டு றக்ஆத்துத் தொழுவான் என்றும் வந்திருக்கிறது. இன்னும் நீ மறைவாகப் பாவஞ் செய்திருந்தாயாகில் அதற்குக் கபாராவாக இரகசியத்தில் ஒரு வணக்கத்தைச்செய் என்றும், பகிரங்கமாகப் பாவஞ்செய்திருந்தாயாகில் வெளிப்படையாக ஒரு வணக்கத்தைச் செய் என்றும் ஹதீசில் வந்திருக்கிறது.

இன்னுமறிந்துகொள் :—மனம் சம்பந்தப்படாமல் நாவைக்கொண்டு மாத்திரம் தவ்பாச்செய்வது பயன்படாது. பிழைபொறுக்கத் தேடும்போது மனதில் திகிலும் அச்சமும் வெட்கமும் நாணமும் இருந்தால் அந்த மனம் நாவுடன்கூடும். இப்படி ஆய்விட்டால் அவன் தவ்பாவின் நாட்டத்தை ஸ்திரப்படுத்தாமற் போனாலும் ஆதரவுள்ளவனாயிருப்பான். மொத்தத்தில் கல்பின் மறதியுடன் நாவைக்கொண்டு இஸ்திகுபாருசெய்தால் அதுவும் பிரயோசனத்தை விட்டும் ஒழிந்ததல்ல. ஏனெனில், அப்படிச்செய்வதில் நாவை வீண்

பேச்சிலிருந்து விலக்கினவனாவான். அன்றியும் வாய் மூடியிருப்பதிலும் அது மிகநல்லதாயிருக்கிறது. நாவை நலவில் பழக்கினால் அது வசை வீண்வார்த்தை முதலியவைகளில் சார்வதைப்பார்க்கிலும் இஸ்திகுபாரில் அதிகமாய்ச் சாரும். ஒரு முரீது அபூ உசுமான் மக்ரிபீ றஹிமஹுல்லா அவர்களிடத்தில் "ஷெய்கே! சிலநேரங்களில் என் நாவுமாத்திரம் திக்ரு செய்து மனம் அதில் சம்பந்தப்படாமலிருக்கிறது" என்றுசொன்னார். அதற்கவர்கள் அந்த முரீதை நோக்கி "உன்னுடைய ஒரு உறுப்பை அல்லாகு தஆலா தன் பணிவிடையில் வைத்திருப்பதற்கு நீ ஷுக்குருசெய்" என்று சொன்னார்கள். அன்றியும் இதில் ஷைத்தானுக்கு ஏமாற்ற இடமிருக்கிறது. ஏனெனில், அவன் உன்னிடம் வந்து "திக்ரில் மனம் ஹாஸிராகாமலிருப்பது அதபு குறைவாதலால் நீ திக்ரைவிட்டு வாயை மூடு" என்றுசொல்லுவான். ஷைத்தானுக்குஜவாபு கொடுப்பதில்ஜனங்கள் (நன்மையில்முந்துகிற உத்தமர் என்றும், நபுசின்மேல் கொடுமை செய்கிற அதமர் என்றும், நடுநிலைமையுற்ற மத்திமர் என்றும்) மூன்று வகுப்பினராயிருக்கிறார்கள். முதலாவதுவகுப்பார்: உத்தமர் இவர்கள் அவனுக்கு ஜவாபாக "நீ சொன்னது சரிதான்; உனக்கு விரோதமாக நான் மனதை ஹாஸிர்படுத்துவேன்" என்று சொல்லுவார்கள். இரண்டாவது வகுப்பார் அதமர்: இவர்கள் நீ சொன்னது மெய்தான். நாவை அசைப்பதில் பயனொன்றுமில்லைதான் என்று சொல்லிச் சும்மாயிருந்துவிடுவதுமன்றிப் பெரிய நுணுக்கத்தை அறிந்தோம் என்று மருட்சியுங் கொள்வார்கள். எதார்த்தத்தில் இவர்கள் ஷைத்தானுடைய சிநேகத்திலும் அவனுக்கு இணங்குவதிலும் எழுந்தார்கள். மூன்றாவது வகுப்பார்: மத்திமர். இவர்கள் தாங்கள் மனதை ஹாஸிர்படுத்தக்கூடாமற்போனாலும் கடைசியாய் வாய் மூடியிருப்பதைக்காண நாவை திக்ரில் பாக்காக்கி வைப்பது மிகவும் நன்மையாயிருக்கிறது என்றும் மனதால் திக்ரு செய்வது இதைவிட மேலாயிருந்தாலும் சரியே என்றும்சொல்லுவார்கள். உதாரணமாக:—இராஜரீக வேலையானது சர்ராபுவேலையினும் மேலாயிருக்கிறது. ஆனால் சர்ராபு வேலையானது தெருப்பெருக்கிற வேலையைவிட மேலாயிருக்கிறது. இராஜரீக வேலைபார்க்க முடியாமற்போனால் சர்ராபு வேலையையும் விட்டுவிட்டுத் தெருவுபெருக்கிற வேலையில் போகவேண்டுமென்ற விதியில்லை.

## ஜனங்கள் தவுபாச்செய்யாமலிருக்கிற காரணங்களையும் அவற்றின் பரிகாரத்தையும் விளக்கல்.

அறிந்துகோள்:—தவுபாசெய்யாமலிருப்பவர்களுக்குப் பரிகாரமாவது: அவர்கள் என்ன காரணத்தினால் பாவத்திலேயே நிலைத்

து தவுபாசெய்யாம லிருக்கிறார்கள் என்பதை நீ தெரிந்துகொள்ள
வேண்டும். அது ஐந்து காரணங்களா யிருக்கின்றன. ஒவ்வொன்றுக்
கும் வெவ்வேறு பரிகாரமிருக்கிறது. முதலாவது காரணம்:—ஆகிரத்
தின்மேல் ஈமான் கொள்ளாமலாவது அல்லது அதில் சந்தேகங்
கொண்டாவது இருப்பதாம். இதற்கு முஹ்லிகாத்தின் கடைசியில்
மருட்சியுடைய பாடத்தில் பரிகாரம் சொல்லியிருக்கிறோம்.

இரண்டாவது காரணம்:—அவன் அதை விட்டுவிட முடியாத
படி இச்சையானது அவனை மிகைத்திருப்பதும், இன்ப சுகங்களா
னவை அவனை மேற்கொண்டு ஆகிரத்துடைய காரியத்தின் அச்ச
மில்லாதபடி அவனை மறதியிலாக்கி யிருப்பதுமாம். இச்சைகளே
அநேக ஜனங்களை மூடிக்கொண்டிருக்கிற திரையாயிருக்கிறது. இத
னுலேதான் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அடியில்வரும்
ஹதீசை அருளிச்செய்தார்கள். அதாவது:—அல்லாகுதஆலா நரகத்
தைப்படைத்து அதைப் பார் என்று ஜிபுரயீல் அலைகிஸ்ஸலா மவர்
களுக்குச் சொன்னான். அவர்கள் அதைப் பார்த்தபோது "என்
ஆண்டவனே! உன் மகிமையின் ஆணை; இதன் இலக்ஷணத்தைக்
கேட்கிற எவனும் இதிற் பிரவேசிக்கமாட்டான்" என்று சொன்னார்
கள். பின்பு அல்லாகு தஆலா நரகத்தைச் சூழ இச்சைகளைப் படை
த்து "இப்போதுபார்" என்று சொன்னான். அவர்கள் பார்த்தபோது
"என் ஆண்டவனே! நரகத்திற் போகாதவன் எவனு மிருக்கமாட்
டான்" என்று சொன்னார்கள். இன்னும் சொர்க்கத்தைப் படைத்து
"இதைப்பார்"என்று சொன்னான். அதற்கு ஜிபரயீல் அலைகிஸ்ஸலா
மவர்கள் "என் ஆண்டவனே! நான் பார்த்தேன். இதன் இலக்ஷணத்
தைக்கேட்கிற எவனும் இதற்கு அவசரப்படாமலிருக்கமாட்டான்"
என்றார்கள். பின்பு சொர்க்க வழியிலிருக்கும் பொருத்தக்கேடும்
கஷ்டமுமான காரியங்களைச் சொர்கத்தைச் சூழப்படைத்து "இப்
போது பார்" என்றான். அவர்கள் பார்த்தபோது "என் ஆண்டவ
னே! உன் மகிமையினாணை; சுவர்க்கவழியில் கஷ்டமும் துன்பமும்
அதிகமாயிருப்பதால் ஒருவனும் சொர்க்கம் போகமாட்டான் என்று
பயப்படுகிறேன் என்றார்கள்" என்பதே.

மூன்றாவது காரணம்:—ஆகிரத்து கெடுவு குறிக்கப்பட்ட கட
னையும் துனயா கைக்கு மெய்யான ரொக்கமாயு மிருப்பதாம். மனித
னுடைய சுபாவமானது ரொக்கத்தையே அதிகமாய் விரும்பும். எது
வொன்று தவணையின்பேரி லிருக்கிறதோ அது அவன் கண்
ணுக்குத் தூரமாயிருக்கிறது. அவன் கருத்துக்கும் அது தூரமா
யிருக்கும்.

நாலாவது காரணம்:— மூமினானவன் எப்போதும் தவுபா உடைய நாட்டத்தின்பேரிலிருக்கிறான். ஆனால் நாளைக்கு என்று அதைப்பிற்படுத்துகிறான். ஒவ்வொரு இச்சையும் அவனுக்கு எதிர்ப்படும்போது இதைச் செய்து இனிமேல் விட்டுவிடலாம் என்று நினைக்கிறான்.

ஐந்தாவது காரணம்:—பாவமானது இவனை நரகத்தில் சேர்ப்பது அகத்தியமல்லவென்பதும் மன்னிக்கப்படவும் கூடுமென்பதுமாம். மனிதன் தன்னுடைய ஈடேற்ற விஷயத்தில் நல்ல எண்ணமுள்ளவனாயிருப்பான். எப்போது அவனையாதொரு இச்சை மிகைக்கின்றதோ அப்போது அவன் அல்லாகு தஆலா பொறுப்பான் என்று அவனுடைய றக்மத்தை ஆதரவு வைக்கின்றான்.

## இவற்றிற்குப் பரிகாரம்.

ஆகிரத்தின்மேல் ஈமான் கொள்ளாமை என்னும் முதலாவது காரணத்துக்குப் பரிகாரம் கூறியிருக்கிறோம். பின்பு ஆகிரத்து கெடுவு குறிக்கப்பட்ட கடன் என்று மருண்டு ரொக்கத்தைக் கைவிடாமலும் ஆகிரத்து கண்ணுக்குப் புலப்படாததினிமித்தம் அதைக் கருத்துக்குள் அமைக்காமலுமிருக்கிற மனிதனுக்குப் பரிகாரம் பின்வருமாறு அவன் உற்றுணர்வதேயாம். அதாவது:—எது ஒன்று அகத்தியம் வருவதாயிருக்கிறதோ அது வந்தேவிட்டதென்று எண்ணிக்கொள். இதோ நீ கண்ணைமூடி மரித்தாயாகில் அது ரொக்கமாய்விட்டது. இவ்வளவு நெருக்கத்தில்தானிருக்கிறது. நீ இன்றைக்கே சாகவும் கெடுவு குறித்திருந்த அந்தக் கடன் இப்போதே ரொக்கமாய்ப்போகவும் கூடும். அப்போது இந்த ரொக்கம் சொப்பனம்போல் ஒழிந்துபோம் என்பதே. இன்பசுகங்களை விட்டுவிடமுடியாதவன் யோசிக்கவேண்டியதென்னவென்றால், இந்த இச்சையை ஒருமணிநேரம் விட்டிருக்கப் பொறுக்காதவனுக்கு நரக நெருப்பின் வேதனையை எப்படித் தாங்கமுடியும்? சுவர்க்கத்துடைய இன்பசுகங்களை எப்படி விட்டிருக்கப் பொறுப்பான்? இவனுக்குக் காய்ச்சல் கண்டிருந்தால் அப்போது குளிர்ந்தஜலத்திலும் வேறொன்றும் இவனுக்கு அதிக பிரியமாயிருக்கிறதில்லை. எஹூதியாகிய ஒரு வயித்தியன் வந்து, "குளிர்ந்த ஜலம் உனக்கு உதவாது அது குளிர்மையைக் கொண்டுவரும்" என்று சொன்னால், அவன் சொல்லின்மேல் சவுக்கியமடைவதை ஆதரவுவைத்துக் குளிர்ந்த ஜலத்தைக் குடிக்காமல் எப்படிப் பொறுத்துக்கொண்டிருக்கிறான். இதுபோல் இச்சையை விடுவதற்குக் காரணமாகும்பொருட்டு அல்லா

ரசூலுடைய சொல்லின்மேல் அழியாத ராஜரீகத்தை ஆதரவு வைப்பது அதினும் மேலாயிருக்கிறது. இனி, தவ்பாவைத் தாமதப் படுத்துகிறவனுக்குச் சொல்லப்படுவ தென்னவென்றால், நீ என் நாளை வரையில் தவ்பாவைத் தாமதப்படுத்துகிறாய்? நாளை என்பது உன்கையில் இல்லை. அது வராமலே நீ இன்று மாண்டுபோகக்கூடும். இதனாலே தான் நரகவாளிகளின் மிகுந்த கூக்குரல் தவ்பாவைத் தாம தப்படுத்தினதின்பேரி லிருக்கும் என்று ஹதீதில் வந்திருக்கிறது. இன்னுமவனுக்குச் சொல்லப்படுவதாவது:—நீ இன்றைக்குத் தவ் பாச்செய்யாமல் ஏன் தாமதப்படுத்துகிறாய்? இச்சையை விட்டுவிட இன்று கஷ்டமாயிருப்பது நாளைக்கு இலேசாய்ப் போமென்று நினைக்கிறாய்? நாளைக்கும் அது கஷ்டமாயிருக்கும். இச்சையை விடுவ தற்கு இலேசாகும்படி எந்த நாளையும் அல்லாகுதஆலா படைத்திரு ப்பதில்லை. உனக்கு உபமானம் ஒரு மனிதனுக்குச் சமானமாம். அவன் யாரெனில், இந்தமரத்தை வேரோடு பிடுங்கிப்போடு என்று அவனுக்குச் சொல்ல, அவன் இந்த மரம் உறுதியாயிருக்கிறது என் றும், எனக்கு இப்போது பலமில்லை என்றும், மறுவருஷம் வரையில் பொறுத்து அப்புறம் பிடுங்கிப்போடுவேன் என்றும் சொல்லுகிற வனையாம். இவனுக்கு என்ன சொல்லப்படும்? அடே மூடா! மறு வருஷத்தில் மரம் இன்னும் அதிக உறுதிப்பட்டுப்போம். நீயோ இன்னும் அதிக பெலக்கேடனாய்ப்போவாய் என்று சொல்லப்படும். இதுபோல் இச்சைகள் என்கிற மரமானது தினம் தினம் அதிக உறுதிப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஏனெனில், நீ அந்த இச்சையின் படி செய்துகொண்டிருக்கிறாய். அதற்கு விரோதஞ்செய்ய உன் னால் முடியாதபடி தினம் தினம் நீ அதிக பெலக்கேடனாய்க்கொண் டிருக்கிறாய். ஆதலால், அதைப் பிடுங்குவதில் நீ எவ்வளவாக முந் திக்கொள்வாயோ அவ்வளவாக அது இலேசாகும். இனி நான் மூமினாயிருக்கிறேன் என்றும் அல்லாகு தஆலா மூமின்களை மன் னிப்பான் என்றும் ஆதரவுவைத்துத் தவ்பாசெய்யாம லிருப்பவ னுக்கு நாம் சொல்லுவதாவது:—அல்லாகு தஆலா உன்னை மன் னிக்காம லிருக்கவுங்கூடும். நீ அவனுக்கு வழிபடாதிருக்கிற நிமித் தம் உன்னுடைய ஈமான் என்னும் மரம் பலமற்று மவுத்துடைய நேரத்தில் மரண வேதனைகளான பெருங் காற்றுகளில் அடி யோடு பெயர்ந்துபோகவும் கூடும். ஏனெனில், ஈமான் ஒரு மரமா யிருக்கிறது. அந்த மரமோவணக்கமென்னும் தண்ணீரால்வளர்வது. அந்தத் தண்ணீரில்லாமையினால் அது பெலமற்று அபாய நிலைமை

யில் இருக்கும். மேலும் வணக்கமற்றதும் மிகுந்த பாவங்களையுடையமான இந்த ஈமான எதை யொத்ததாயிருக்கிறதென்றால், அதிக வியாதிப் பட்டிருப்பதுடன் நான் சாகவே சாவேன் என்று ஒவ்வொரு க்ஷணத்திலும் பயந்துகொண்டிருக்கிற ஓர் நோயாளியின் நிலைமையை ஒத்ததாயிருக்கிறது. இதுவுமன்றி ஈமான் சலாமத்துடன் அவன் போனபோதிலும் அல்லாகு தஆலா அவனை மன்னிக்கவும் மன்னிக்காமல் அதாபுசெய்யவுங்கூடும். ஆதலால் இந்த ஆதரவின்மேலிருப்பது மூடத்தனமாகும். இவ்வுக்கு உபமானம், ஒருவன் தன்னிடத்திலிருந்த பொருளையெல்லாம் அழித்துப்போட்டுத் தன் பெண்ஜாதி பிள்ளைகளைப் பசியால் வருந்தும்படி விட்டு "ஒரு சமயம் இவர்கள் ஒரு பாழ்நிலத்தில் போகவும் அங்கு இவர்களுக்குப் புதையல் அகப்படவுங்கூடும்" என்று சொல்வதற்குச் சமானமாம். அல்லது கொள்ளையடிக்கிற ஓர் பட்டணத்தில் குடியிருக்கிற ஒருவன் தன் சொத்துக்களைப் பதுக்கிவைக்காமல் அப்படியே வீட்டில் போட்டுவிட்டு ஓடுகிறபோது "அந்த கொள்ளைக்காரக் கொடியர் என் வீட்டில் புகுந்த நேரத்தில் அவர்கள் மவுத்தாய்ப்போகவும் கூடும்; அல்லது மறந்துபோகவும் கூடும், அல்லது என் வீட்டைப்பார்க்காதபடி அவர்கள் குருடாய்ப்போகவும்" கூடும் என்று சொல்வதற்குச் சமானமாம். இவைகளெல்லாம் இடம்பாடுதான். இவன் மன்னிப்பின் இடம்பாடும் இதுபோன்றதுதான். ஆயினும் இந்த ஆதரவின் பேரில் பேணுதலைக் கைவிடுவது மூடத்தனமாகும்.

பசல்: அறிந்துகொள்:—ஒருவன் எல்லாப் பாவங்களினின்றும் தவ்பாச்செய்யாமல் சில பாவங்களினின்றும் தவ்பாச்செய்தால் கூடுமா? கூடாதா? என்பதில் உலமாக்கள் தர்க்கம் பேசியிருக்கிறார்கள். சிலர் பின்வருமாறு சொல்லுகிறார்கள். அதாவது:—ஒருவன் ஜினாவைவிட்டுத் தவ்பாச்செய்து குடியைவிட்டுத் தவ்பா செய்யாமலிருப்பது பொருந்தாவிஷயம். ஏனெனில், ஜினா பாவமாயிருப்பதற்காக அவன் தவ்பா செய்கிறபக்ஷம் குடியும் பாவமாயிருக்கிறது. ஆகவே ஒருஜாடி சாராயத்தைவிட்டும் தவ்பாச்செய்து மற்றொரு ஜாடியைவிட்டும் தவ்பாச்செய்யாமலிருப்பது எப்படி பொருந்தாவோ இன்னும் இரண்டு ஜாடி சாராயமும் ஹராமில் எப்படி சமமாயிருக்கிறதோ அப்படியே பாவமுமிருக்கிறது என்பதே. ஆயினும் இப்படியல்லவென்பதே சரி. ஏனெனில்சாராயம் குடிப்பதைவிட ஜினாசெய்வது மிகவும் கடினபாவம் என்று ஒருவன் எண்ணியிருக்கக்கூடும். ஆதலால் அந்தக் கடின பாவத்தைவிட்டும்அவன் தவ்பாச்செய்வான்.

அல்லது சாராயமானது ஜினாவிலும் மற்ற வேலைகளிலும் இழுத்துவிடுமாதலால் அது ஜினாவைவிட மிகக்கெட்டது என்று ஒருவன் எண்ணியிருக்கலாம், அல்லது ஒருவன் குடியைவிட்டும் தவுபாச்செய்யாமல் உவனமையில் புறம்பேசலைவிட்டும் தவுபாச்செய்யவும் புறம்பேசலானது அடியார்களைக்கொண்டு தொளுகினதாகையால் அதன் அபாயம் பெரிது என்று சொல்லவும் கூடும். மேலும் ஒருவன் சாராயத்தை அறவே விட்டுவிடாமல் அதிகமாய்க் குடிப்பதைவிட்டும் தவுபாச்செய்து நான் எவ்வளவு அதிகமாய்க் குடிப்பேனோ அவ்வளவு அதிகமாக அதாபாகும் என்றும், அறவே சாராயம் குடிக்காதபடி என் இச்சையை விட்டுவிட என்னால் முடியாது என்றும், அதிகத்தைக் குறைத்துக்கொள்ள முடியும் என்றும், ஒரு காரியத்தில் ஷைத்தான் என்னை மிகைத்துக்கொண்டால் அவனை நான் மிகைக்கக் கூடிய மற்றொரு காரியத்திலும் அவனோடு நான் இணங்கவேண்டுமென்ற விதியில்லையென்றும் சொல்லவுங்கூடும். இவையெல்லாம் ஆகக் கூடியவைகளே. ஆனால் தவுபாசெய்தவன் அல்லாவுக்கு உவப்பானவன் என்றும், தவுபா செய்தவர்களை அல்லாகு தஆலா திடனாக நேசிக்கின்றான் என்றும் வந்திருக்கிறதே, இதன் வெளிப்படையாகிறது எவன் எல்லாப்பாவங்களையும் விட்டுத் தவுபாச் செய்தானோ அவனுக்கே அல்லாகு தஆலாஉடைய இந்த உவப்பும் சிநேகமுமான பதவியுண்டு என்பதுதான். சில பாவங்களை விட்டும் தவுபாச் செய்வது சரியாகாது என்று சொல்லுகிறவர்கள் இந்தப் பதவியுண்டாகாது என்பதை நாடியிருப்பார்கள். இல்லாவிட்டால் எந்தச் சிறுபாவத்தைவிட்டும் தவுபாச் செய்யப்படுகிறதோ அந்த ஒவ்வொரு பாவத்துக்கும் அந்தத் தவுபா கபாராவாகின்றது. அந்தச் சிறுபாவம் இல்லாதது போல் ஆய்விடுகின்றது. ஒரேமுறையில் எல்லாப் பாவங்களையும் விட்டுத் தவுபாச்செய்வது யாவர்மீதும் கஷ்டமாகும். நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாக ஒவ்வொரு பாவத்தையும் விட்டுத் தவுபாச் செய்வதுதான் பெரும்பான்மையாயிருக்கும். பாவங்களைவிட்டும் தவுபாச்செய்ய எவ்வளவு நசீபு கிடைத்ததோ அவ்வளவாக சவாபைப் பெறுவான்.

## இரண்டாவது அஸ்லு: சபுரு, ஷுகுரு. அதாவது பொறுமை, நன்றியறிதல் இவைகளின் பயான்.

அறிந்துகொள்:—சபுரு என்னும் பொறுமையின்றித் தவுபா சரிவராது. மேலும் சபுரில்லாமற்போனால் யாதொரு பர்லை நிறைவேற்றுவதும் யாதொரு பாவத்தைவிடுவதும் நேர்பட்டு வராது. இதனு

லேதான் ஈமான் ஆவது என்ன? என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் கேட்டதற்கு சபுரு என்று ஜவாபுசொன்னார்கள். இன்னுமொரு ஹதீசில் சபுரானது ஈமானின் ஒருபாதியாயிருக்கிறது என்று வந்திருக்கிறது. சபுரின் பெருமைக்கும் மேம்பாட்டுக்கும் காரணம் அல்லாகு தஆலா குருஆனில் அதைக்குறித்து எழுபதுக்குமேல் அதிகமான இடங்களில் சொல்லியிருப்பதாம். இன்னும் மேம்பாடான தரஜாக்களில் எது மிகவும் நல்லதாயிருக்கிறதோ அதை சபுரின்மேல் பொருத்தியிருக்கிறான். எந்தமட்டென்றால், தீன்வழியில் இமாமத்தென்னும் தலைமைத்தனத்தை சபுருடன் சம்பந்தப்படுத்தி, அவர்கள் சபுரு செய்தபோது அவர்களை நம் காரியத்தில் வழிகாட்டுகிற தலைவர்களாக்கினோம் என்று அருளிச்செய்திருக்கிறான். இன்னும் முடிவில்லாததும் கணக்கற்றதுமான கூலியை சபுரில்பொருத்தி சபுரு செய்கிறவர்களுக்குக் கணக்கில்லாமல் அவர்களின் கூலியை நிறப்பமாக்குவதன்றி வேறில்லை என்று சொல்லுகின்றான். இன்னும் சபுரு செய்கிறவர்களுடன் அவனிருப்பதாக அவர்களுக்கு வாக்களித்து அல்லாகு தஆலா சபுரு செய்கிறவர்களுடன் இருக்கிறான் என்று திருவுளமானான். இன்னும் சலவாத்தையும் றஹ்மத்தையும் ஹிதாயத்தையும் இம்மூன்றையும் எவர் விஷயத்திலும் ஒருங்கே சேர்க்காமல் சபுரு செய்கிறவர்களின் விஷயத்தில் ஒருங்குசேர்த்து அவர்கள்பேரில் அவர்களுடைய றப்பிடத்தில்நின்றும் சலவாத்தும் றஹ்மத்துமுண்டு அவர்கள் ஹிதாயத்தைப் பெற்றவர்கள் என்று கூறுகின்றான். இன்னும் அல்லாகு தஆலா சபுரை அருமையாக்கி அதை எல்லாருக்கும் கொடுக்காமல் அவனுடைய தோஸ்துகளில் சிலருக்குக் கொடுத்திருப்பதும் சபுருடைய மேம்பாடுகளில் ஒன்றாயிருக்கிறது.

இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருப்பதாவது:—உங்களுக்குக் கொடுத்திருப்பவைகளில் மிகவும் கொஞ்சமாயிருப்பது எகீனும் சபுருமாம். யாருக்கு இந்த இரண்டும் கொடுக்கப்பட்டனவோ அவனிடத்தில் தொழுகை நோன்புகள் அதிகமாயில்லாமற்போனாலும் பயப்படவேண்டாம் என்று அவனுக்குச் சொல்லுங்கள். ஓ என் அஸ்ஹாபுகளே! நீங்கள் இன்று எதன்பேரிலிருக்கிறீர்களோ அதன்மேல் சபுருசெய்து அதைவிட்டு மாறாமலிருப்பீர்களாகில் அதை நான் எவ்வளவாக நேசிக்கிறேனென்றால், நீங்கள் ஒவ்வொருவரும் எல்லா அடியார்களின் இபாதத்தளவாக வணங்குவதைப் பார்க்கிலும் அதிகமாய் நேசிக்கிறேன். ஆனால் எ

க்குப் பிறகு உங்கள்மீது துன்யாவின் வழி திறக்குமென்றும், அப்போது நீங்கள் ஒருவரை யொருவர் வெறுத்து நிராகரிப்பீர்கள் என்றும், வானலோகத்தார் உங்களை வெறுத்து நிராகரிப்பார்கள் என்றும் நான் பயப்படுகிறேன். ஒருவன் சபுருசெய்து சவாபை ஆதரவுவைப்பானாகில் அவன் தன் கூலியை நிறப்பமாகப் பெற்றுக் கொள்ளுவான். சபுருசெய்யுங்கள், துன்யா அழிந்துபோம், அல்லாகு தஆலா அருளும் சவாபு அழியாமல் நிலைத்திருக்கும் என்றுசொல்லி மாஇந்தகும்யன்பது என்ற ஆயத்துமுழுமையும் ஓதினார்கள். இன்னும் சபுரானது சுவர்க்கத்துடைய புதையல்களில்ஓர் புதையலாயிருக்கிறது என்றும், சபுரு என்பது ஒரு மனிதருபத்திலிருந்தால் சங்கையுள்ள மனிதனாயிருக்கும் என்றும், அல்லாகு தஆலா சபுரு செய்கிறவர்களை நேசிக்கிறான் என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் அல்லாகு தஆலா தாவூது அலைகிஸ்ஸலாமுக்கு ஒஹியனுப்பினான். அதாவது:—"ஓ தாவூதே: நீர் குணங்களைக் கற்பதில் என்னைப் பின்பற்றுவீராக. நான் சபூராய் (பொறுமையுள்ளவனாய்) இருப்பது என்னுடைய குணங்களில் ஒன்றாம்" என்பதே. இன்னும் "நீங்கள் விரும்பாதது உங்களுக்குச் சம்பவிப்பதின் பேரில் நீங்கள் சபுரு செய்யாதவரையில் நீங்கள் விரும்பினது உங்களுக்குக்கிட்டாது" என்று ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் சொல்லியிருக்கிறார்கள். "றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அன்சாருகளில் சில ஜனங்களைக் கண்டு "நீங்கள் மூமின்களா?" என்று கேட்டார்கள். அவர்கள் "ஆம்" என்றார்கள். "அதற்கு என்ன அடையாளம்?" என்று கேட்டதற்கு "நாங்கள் சுகத்தில் நன்றியறிந்து சுகுரு செய்வோம். கஷ்டத்தில் சபுருசெய்வோம். அல்லாகு தஆலாவுடைய கற்பனைக்குப் பொருந்தியிருப்போம்" என்று சொன்னார்கள். அப்போது நாயகமவர்கள் "கஃபாவுடைய றப்பின்மேல் ஆணையாக! நீங்கள் மூமின்கள்தான்" என்று அருளிச்செய்தார்கள் இன்னும் "சரீரத்துக்குத் தலை எப்படியோ அப்படியே ஈமானுக்கு சபுரு தலையாயிருக்கிறது" என்றும், "எவனுக்குத் தலை இல்லையோ அவனுக்குச் சரீரமில்லை" என்றும், "எவனுக்கு சபுரில்லையோ அவனுக்கு ஈமானில்லை" என்றும் உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

### சபூரு இதுவென அதன் ஹகீகத்தை விளக்கல்.

அறிந்துகொள்:—சபுரு என்பது மனிதனுக்கே உரித்தான ஓர் குணமாயிருக்கிறது, ஏனெனில் மிருகங்கள் மிகவும் குறையுள்ளவை

களாயிருப்பதால் அவைகளில் சபுரு இல்லை. மலக்குகள் மிகவும் நிறப்பத்தையுடையவர்களாயும் இச்சைகளில்லாதவர்களாயும் இருக்கிறதினால் அவர்களுக்கு சபுரு தேவையில்லை. ஆகவே மிருகங்கள் இச்சையின் வசப்பட்டிருக்கின்றன. இச்சையை யன்றி வேறொரு தேட்டமும் அவைகளில் கிடையாது. மலக்குகள் அல்லாகு தஆலா உடைய திருச்சமுகத்தின் ஆநந்தத்தில் அமிழ்ந்துபோயிருக்கிறார்கள். அதிலிருந்து அவர்களை நீக்கும் தடை ஒன்றுமேயில்லை. தடையிருந்தால்தானே அதை விலக்க அவர்களுக்கு சபுரு வேண்டும்? ஆனால் அல்லாகு தஆலா மனிதனை ஆரம்பத்தில் மிருகங்களுடைய குணத்தில் படைத்திருக்கிறான். ஊண், உடை, சிங்காரம், விளையாட்டு இவைகளின் இச்சையை அவன் வசம் விட்டிருக்கிறான். அதன் பிறகு புலூகுடைய காலத்தில் மலக்குகளுடைய ஒளியில்நின்றும் ஓர் ஒளி அவனில் பிறந்தது. அந்த ஒளியில் விஷயங்களின் முடிவு அவனுக்குத் தென்படுகிறது. மேலும் இரண்டு மலக்குகளை அவன் வசம் விட்டிருக்கிறான். மிருகங்கள் இதற்கு அருகமல்லாதவைகளாயிருக்கின்றன. ஒரு மலக்கு அவனுக்கு ஹிதாயத்தான வழியைக் காட்டுகிறார். அதெப்படியென்றால், அந்த மலக்கினுடைய ஒளிகளில் நின்றும் ஓர் ஒளி அவனில் வீசுகிறது. அவன் அந்த ஒளியில் தன் காரியங்களின் முடிவைத் தெரிந்துகொள்ளுகிறான். தன்னுடைய நன்மைக்கு இணக்கமானவை. இன்னவை என்று தெரிந்துகொள்ளுகின்றான். எந்தமட்டென்றால் அந்த ஒளியில் தன்னையும் அல்லாகு தஆலாவையும் அறிந்துகொள்ளுகிறான். இதுவுமன்றி இச்சைகளின் முடிவு கேடாயிருக்கிறது என்றும், அதை அநுபவிக்கும்போது இன்பமிருந்தாலும் சரியே என்றும் தெரிந்துகொள்ளுகிறான். இன்னும் அதன் சுகமும் சந்தோஷமும் சீக்கிரத்தில் போய்விடும் என்றும், அதன் துக்கமும் வருத்தமும் நெடுநாளைக்கு இருக்கும் என்றும் உணர்ந்துகொள்ளுகிறான். இந்த ஹிதாயத்தான அறிவு மிருகங்களுக்கு இராது. ஆனால் மனிதனுக்கு இந்த ஹிதாயத்து போதாது; ஏனெனில், இது நஷ்டமான வேலையென்று தெரிந்துகொண்டு அதை நிவர்த்திக்க அவனால் முடியாமற்போனால் தெரிந்துகொண்டதில் என்ன பயனிருக்கிறது? நோயாளி தனக்கிருப்பது தன்னைக் கொல்லுகிற நோய் என்று அறிந்துகொண்டு அதை நிவர்த்திக்க அவனால் முடியாமற்போனால் அவன் அறிந்ததில் பயனொன்றுமில்லை. ஆகவே அவனுக்குப் பெலத்தையும் வலிமையையும் கொடுத்து உதவி செய்யும்பொருட்டு அல்லாகுதஆலா அந்த மற்றொரு மலக்கை

அவனிடம் விட்டிருக்கிறான். ஏனெனில் எதை அவனுக்கு நஷ்டமானதென்று அறிகின்றானோ அதை விட்டுவிடவேயாம். பின்பு எப்படி அவனில் இச்சை பாராட்டுகிற இயற்கையான ஓர் தத்துவம் இருக்கிறதோ அப்படியே அந்த இச்சைகளுக்கு விரோதம்செய்து அவைகளாலுண்டாகிற நஷ்டத்திலிருந்து தன்னை நீக்கிக்கொள்ள வேறோர் தத்துவம் அவனில் பிறக்கும். இச்சைக்கு விரோதம் செய்கிற இந்த தத்துவம் மலக்குகளுடைய படையாயும் இச்சைபாராட்டும் அந்தத் தத்துவம் ஷைத்தானுடைய படையாயும் இருக்கிறது. இச்சைகளுக்கு விரோதம் செய்கிற இந்தத் தத்துவத்துக்குத் தீன்எழுர்ச்சிஎன்றும், இச்சை பாராட்டுகிற அந்தத் தத்துவத்துக்கு ஆசை எழுர்ச்சியென்றும் நாம் பேர் வைப்போம். பின்னர் இந்த இரண்டு படைகளுக்கும் இடையில் எப்போதும் சண்டையும் விரோதமுமாயிருக்கும். அது செய்யவேண்டாம் என்றுசொல்லும். இதுசெய்யென்று சொல்லும். இப்படித் தன்தன் நோக்கத்தை நிறைவேற்றப்பார்க்கிற இந்த இரண்டு படைகளுக்கும் நடுவே இவன் மயங்கிக்கொண்டிருப்பான். ஆசை எழுர்ச்சிப்படையுடன் சண்டைசெய்வதில் தீன்எழுர்ச்சிப்படை தன் நிலைபெயராமல் நிற்குமாகில் அதனுடைய இந்த நிலை சபுரு என்று சொல்லப்படும். ஆசை எழுர்ச்சிப்படையைத் தோர்க்கடித்து அதை விலக்கி யொழித்தால் இந்த மிகைப்புக்கு ஜெயம்பெறல் என்று சொல்லப்படும். அதனோடு இன்னும் சண்டை செய்வதிலிருந்தால் இதூடபுகின் தெண்டிப்பு என்று சொல்லப்படும். ஆகவே ஆசை எழுர்ச்சிப்படையுடன் சண்டைசெய்வதில் தீன் எழுர்ச்சிப்படை நிலை பெயராமலிருப்பதே சபுரு என்பதற்குப் பொருளாகின்றது. ஒன்றுக்கொன்று எதிரியான இந்த இரண்டு படைகளும் எந்தவிடத்தில் இராவோ அந்தவிடத்தில் சபுரும் இராது. இதன் நிமித்தமே மலக்குகளுக்கு சபுரு தேவையில்லை என்றது. மிருகங்களுக்கும் குழந்தைகளுக்கும் சபுருஎன்னும் தத்துவமே கிடையாது.

இன்னுமறிந்துகொள்:—நாம் சொன்ன இந்த இரண்டு மலக்குகள்தான் கிராமுன் காதிபீன் என்பவர்கள். ஆலோசித்து விசாரணை புரியும் வழியை அல்லாகு தஆலா யாருக்குத் திறந்திருக்கிறானோ அவன், உண்டாகிற ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஓர் காரணமுண்டு என்றும், இரண்டு வஸ்துக்கள் ஒன்றுக்கொன்று நேர்மாறாயிருந்தால் அதன் காரணங்களும் நேர்மாறாயிருக்கும் என்றும்தெரிந்துகொள்ளுவான். இன்னுமவன் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கின்றான். அதாவது:—மிருகத்துக்கும் குழந்தைக்கும் ஆரம்பத்தில் காரியங்களின்

முடிவை அறியும் ஹிதாயத்தான அறிவுமிருந்ததில்லை. சபுருசெய்யும் தத்துவமும் இருந்ததில்லை. குழந்தையாயிருந்தவன் புலூகத்து நெருங்கின காலத்தில் அவனுக்கு இந்த இரண்டும் உண்டாயின. இப்படி உண்டாவதற்கு இரண்டு காரணங்கள் வேண்டும். இந்த இரண்டு காரணங்களைத்தான் இரண்டு மலக்குகள் என்றது. இன்னுமவன் அறிந்துகொள்ளுவான்:—ஹிதாயத்தான அறிவு முதற்காரணமாயிருப்பதால் அதுவே முதன்மையானது. அதன்பிறகு அதைச் செய்யும் வலிமையும் நாட்டமும் இரண்டாவதாயிருக்கிறது. ஆகலால் அவனுடன் இருந்து ஹிதாயத்து செய்கிற அந்த மலக்கு மிகச் சிறப்பும் மேன்மையும் உடையவராயிருப்பதுபற்றிக் கொலுக்கூடத்தின் வலது பாரிசத்தில் அவருக்கு இடங்கொடுக்க வேண்டும். கொலுக்கூடமென்றது உன்னைத்தான். ஏனெனில் அவர்கள் உன்மீது சாட்டப்பட்டிருப்பதினாலென்க. ஆகவே அந்த மலக்கு, உன் வலது கைப்பாரிசத்திலிருக்கிறார். அவர் உனக்கு வழிகாட்டுவதற்காக வந்திருப்பதால் அவருக்கு நீ காது தாழ்த்தி அவர்சொல்லும் ஹிதாயத்தான அறிவை உண்டாக்கிக்கொள்ளுவாயாகில் இந்தக் காதுதாழ்த்தலானது நீ அவருக்குச் செய்த ஓர் நன்றியாயிருக்கும். ஏனெனில், அவரை நீ வெறுமையாய் விடாததினாலென்க. இதை உன்மீது நன்மையாக எழுதுவார்கள். நீ அந்த மலக்கின் சொல்லைக் கேட்காமல் அவரை வெறுமையாகவிடுவாயாகில் அப்போது நீ மிருகங்களும் குழந்தைகளும்போல் காரியமுடிவுகளின் ஹிதாயத்தான அறிவுக்கு அருகனல்லாதவனாயிருப்பாய். அந்த மலக்கு விஷயத்திலும் உன் விஷயத்திலும் நீ செய்துகொண்ட இந்தச் செய்கை பாவமாகும். இதை உன்மீது எழுதுவார்கள். இதுபோலவே வேறொரு மலக்கால் நீ அடைந்த அந்தத்துவத்தை இச்சைகளுக்கு விரோதம் செய்வதில் உபயோகப்படுத்தி நபுசுடன் போர் புரிவாயாகில் இது நன்மையாகும். அப்படிச் செய்யாதபக்ஷத்தில் தீமையாகும். இந்த இரண்டு நிலைமைகளையும் உன்மீது எழுதுவார்கள். உன் பட்டோலையிலும் உன் கல்புக்குள்ளும் எழுதுவார்கள். ஆனால் உன் கல்புக்குத் தெரியாமல் எழுதுவார்கள். இந்த மலக்குகள் இவ்வுலகத்தைச்சேர்ந்தவர்களல்ல. இவர்கள் எழுதும் பட்டோலைகளு மங்ஙனமேயாம். இவர்களையும் இந்தப் பட்டோலைகளையும் இந்தக் கண்ணால் பார்க்க முடியாது. எப்போது மவுத்துவல் துபுருக்கு இந்தக் கண்போய் ஆலமுல்மலக்கூத்தான அந்த உலகத்தைப் பார்க்கக்கூடிய வேறொருகண் திறக்குமோ அப்போது இந்தப் பட்டோலைகளை உன்னிடமிருக்கக்

காண்பாய். அதை நீ பார்க்கக்கூடும். கியாமத்து சுகுராவையும் தெரிந்து கொள்வாய். ஆனால் அதன் விபரம் கியாமத்து குபுராவில்தான் தெரியும். கியாமத்து சுகுரா மவுத்துடைய நேரத்தில் உண்டாகும். றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் அருளிச்செய்திருப்பதுபோல் அது வருமாறு:—எவன் இறந்தானோ அவனுடைய கியாமத்து திடனாக நிலையாய்விட்டது. கியாமத்து குபுராவில் எது உண்டோ அது கியாமத்து சுகுராவிலுமுண்டு. இதன் விஸ்தரிப்பை எஹ்யாவில் சொல்லியிருக்கிறோம். இந்த கிதாபு அதற்கு இடந்தராது. மொத்தக் கருத்து என்னவென்றால், சண்டையுள்ளவிடத்தில் சபுரு இருக்கும். எதிரிகளாகிய இரண்டு படையுள்ளவிடத்தில் சண்டையிருக்கும். இந்த இரண்டு படைகளில் ஒன்று மலக்குகளின் கூட்டம். மற்றொன்று ஷைத்தான்களின் கூட்டம். இவர்களெல்லாரும் மனிதனுடைய கல்பில் கூடியிருக்கிறார்கள். ஆகவே இந்தச் சண்டையில் பராக்காவது தான் தீன்வழி நடைக்கு முதல் அடியாயிருக்கிறது. ஏனெனில், மனிதனுடைய மனமாகிய மைதானத்தைக் குழந்தைப்பருவத்தில் ஷைத்தானுடைய படைவந்து கைவசப்படுத்திக்கொண்டது. மலக்குப்படை புலூகுடைய நெருக்கத்தில் வெளியாயிற்று. ஆகவே இச்சைகளாகிய படையைப் பலாத்காரஞ்செய்து துரத்தாதவரையில் நற்பதவியை அடையமாட்டான். சண்டை செய்யாதவரையில் இன்னும் சண்டையில் சபுரு செய்யாதவரையில் பலாத்காரம் செய்து துரத்தமுடியாது. எவன் இந்தச் சண்டையில் பராக்காகவில்லையோ அவன் அந்த மைதானத்தை ஷைத்தானுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டான். எவனுக்கு இச்சைகள் அடங்கிவிட்டனவோ அவன் ஷரகுக்கு வழிபட்டவனாய்ப்போனான். மனமென்னும் மைதானத்தை ஜெயித்துக்கொண்டான். உதாரணமாக:—றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் ஆனால் அல்லாகு தஆலா எனக்கு என் ஷைத்தான் மீது திடனாக வெற்றியைக் கொடுத்தான். ஆதலால் அவன் எனக்கு அடங்கிவிட்டான் என்று அருளிச்செய்திருக்கிறார்கள். யுத்தத்திலிருந்தால் அநேகமாய் ஒருசமயம் வெற்றியுண்டாகுவதும் ஒரு சமயம் தோல்வியடைவதுமுண்டு. ஒரு சமயம் வெற்றி ஆசைப்படைக்கிருக்கும். ஒருசமயம் தீன்படைக்கிருக்கும். சபுரும் நிலைபெயராமல் நிற்கலுமில்லாமற்போனால் இந்தக் கோட்டை கைவசமாகாது.

### ஈமானின் ஒருபாதி சபுரும் ஒருபாதி நோன்புமாயிருக்குமென்றதற்குக் காரணம் இதுவென விளக்கல்.

அறிந்துகொள்:—ஈமான் என்பது ஒரே பொருளல்ல. மேலும் அது அநேகம் கிளைகளையும் அநேகம் வகைகளையும் உடையதாயிருக்

கிறது. உதாரணமாக:—ஹதீதில், "ஈமான் எழுபதோ சொச்சம் பாபுகளாயிருக்கிறது" என்றும், "அவை எல்லாவற்றிலும் உயர்ந்தது லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவும், எல்லாவற்றினும் தாழ்ந்தது வழியில்நின்றும் செத்தையை எடுப்பதுமாம்" என்றும் வந்திருக்கிறது. ஈமானுடைய வகைகள் அநேகமாயிருந்தபோதிலும் அந்த வகைகளின் மூலங்கள் மூன்று வஸ்துக்களுக்குமேல் அதிகம் இல்லை. அவை இல்முகளும் ஹால்களும் அமல்களுமாம். ஈமானுடைய மகாம்களில் ஒரு மகாமும் இந்த மூன்றைவிட்டும் நீங்காது. உதாரணமாக:—தவ்பா என்பது நாணப்படுவாதம். இது இருதயத்தின் ஹாலாயிருக்கிறது. தவ்பாவுக்கு அஸ்லாகிய மூலமாகிறது பாவத்தைப் பாஷாணமாக அறியும் அறிவாயிருக்கிறது. தவ்பாவுக்கு பரகு ஆகிறது பாவத்தை விடுவதும் வணக்கத்தை எடுப்பதுமான அமல்களாயிருக்கிறது. ஆகவே இந்த ஹாலும் இந்த அறிவும் இந்த அமலும் ஆக மூன்றும் ஈமானின் தொகையிற் சேர்ந்தவை. இந்த மூன்றும் பொதிந்ததுதான் ஈமானும். ஆயினும் ஈமானுக்கு அறிவு முதற்காரணமா யிருப்பதுபற்றி அறிவையே ஈமானுக்குச் சொந்தப்படுத்துவார்கள். ஏனெனில், அறிவினால் ஹால் பிறக்கும். ஹாலினால் அமல் உண்டாகும். ஆகவே அறிவானது மரம்போலும் அந்த அறிவினால் மனதின் ஹால்கள் மாறுவது அந்த மரத்துக்குக் கிளைபோலும் அந்த மாறலால் உண்டாகிற அமல்கள் அந்தக் கிளைக்குக் கனிகள்போலு மிருக்கின்றன. இனி (ஹால் மாறல் அமலில் சேர்ந்துவிடுவதால்) அறிவும் அமலுமான இரண்டு வஸ்துக்கள் சேர்ந்து ஈமானயிருக்கிறது. (அமலுக்கு சபுரு வேண்டும்) சபுரு இல்லாமற்போனால் அமலுண்டாக இடம்பாடில்லை. ஆதலால் சபுரானது ஈமானின் ஒருபாதியாயிருக்கிறது. இரண்டுவகையில் சபுரு செய்யவேண்டும். ஒன்று இச்சைகளின் வகையிலும் மற்றொன்று கோபத்தின் வகையிலுமாம். நோன்பானது இச்சைகளின் வகையில் சபுரு செய்தலாயிருப்பதால் அது சபுரின் ஒரு பாதியாயிருக்கிறது.

இன்னுமொருவிதத்தில் உன் நோக்கத்தையெல்லாம் அமலின் பேரில் வைத்து அமலை ஈமான் என்று ஏற்படுத்துகிற பக்ஷத்தில் மூமினுடைய அமலானது கஷ்டத்தில் சபுராயும் சுகத்தில் ஷுக்ருராயுமிருக்கிறது. இந்த விதத்தினால் ஈமானின் ஒருபாதி சபுரும் மற்றொருபாதி சுக்ருருமாயிருக்கிறது. இவ்விதமாக வேறொரு ஹதீதில் வந்தா மிருக்கிறது. சபுரு மிகவும் கஷ்டமென்பதை நோக்கி அதையே ஈமானின் அஸ்லு என்று சொல்லுகிறபக்ஷம சபுரிலும் அதிக

கஷ்டமானது ஒன்றுமில்லையாதலால் இந்த விதத்தில் சபுரே ஈமானு யிருக்கிறது. உதாரணமாக:—"ஈமான் ஆவது என்ன?" என்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் கேட்டதற்கு "சபுரு" என்று ஜவாபு சொன்னார்கள். இப்படிச் சொன்னதில் ஈமானுடைய பாகங்களில் மிகவும் கஷ்டமானது சபுரு என்பதை நாடியிருக்கிறார்கள். இதானது எதைப்போல்வதென்றால், "ஹஜ்ஜா என்பது அரபாவில் தரிபடுவதாயிருக்கும்" என்று அவர்கள் அருளிச்செய்திருப்பதுபோல்வதாம். இதன் கருத்து அரபாவின் பொருட்டால் அச்சமிருக்கிறது என்பதேயாம். அதாவது அரபா தப்பினால் ஹஜ்ஜா தப்பிப்போம் என்பதும் மற்ற ருகுனுகள் தப்பினால் ஹஜ்ஜா தப்பாது என்பதுமாம்.

எல்லா நிலைமைகளிலும் சபுருவேண்டும் என்பதை விளக்கல்.

அறிந்துகொள்:—அடியான் எல்லா நிலைமைகளிலும் அவன் விருப்பத்துக்கு ஒற்றுமையான அல்லது விரோதமான யாதொரு வஸ்துவில்லாமலிருக்கமாட்டான். இந்த இரண்டு நிலைமைகளிலும் அவனுக்கு சபுரு வேண்டியதாயிருக்கிறது. விருப்பத்துக்கு ஒற்றுமையான வஸ்து, ஆஸ்தியும் செல்வமும் அதிகாரமும் தேக சவுக்கியமும் கருத்துக்கிசைந்த பெண்ஜாதி பிள்ளைகளும் இன்னுமிவை போன்றவைகளுமாம். இந்த நிலைமைகளில் மனிதனுக்கு சபுரின் தேவை மிகவும் முக்கியமாதல்போல் வேறெந்த நிலைமையிலும் அவ்வளவு முக்கியமாகாது. ஏனெனில் இந்த நிலைமையிலிருக்கிற ஒருவன் இச்சைகளினின்றும் தன்னைத் தடுத்துவைக்காமல் இஷ்டம்போல் சுகித்து அதில் மனதைநாட்டி நிலைத்திருப்பானாகில் அவனில் மறதியும் மகிழ்ச்சியும் மீறலுமான குணங்கள் பிறக்கும். ஆதலால் கஷ்டத்தில் மனிதன் சபுரு செய்வான் என்றும் சுகத்தில் சித்தீகுகள் தவிர மற்றவர் சபுரு செய்யமாட்டார்கள் என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அஸ்ஹாபுகளுடைய காலத்தில் பொருள் அதிகரித்தபோது அவர்கள் சொன்னதாவது:—நாங்கள் கஷ்டத்திலிருந்த காலத்தில் நன்றாக சபுருசெய்வது எங்களுக்கு சுலுவாயிருந்தது. இப்போது செல்வத்திலும் வலிமையிலுமிருந்துகொண்டு அவ்விதம் சபுருசெய்வது கஷ்டமாயிருக்கிறது என்பதே. இதனாலேதான் அல்லாகு தஆலா உங்கள் சொத்துகளும் உங்கள் பிள்ளைகளும் (உங்களுக்குப்) பித்னாவேயன்றி வேறல்ல என்று திருவுளமாயிருக்கிறான். மொத்தத்தில் வலிமையிருக்கும்போது சபுருசெய்வது கஷ்டமேயாம், ஒருவனுக்கு வலிமை கொடுக்கப்

படாத நிலைமையே அவனைக் கெடுதியினின்றும் காக்கின்ற தடையாயிருக்கிறது. செல்வத்தில் சபுரு செய்தலென்பது அதில் மனம் வைக்காமலிருப்பதும் அதைக்கொண்டு அதிக சந்தோஷமடையாமலிருப்பதும் அது சதமல்ல இரவலென்று நினைப்பதும் சீக்கிரத்தில் திரும்ப அது எடுத்துக்கொள்ளப்படுமென்று எண்ணுவதுமாம். இதுவுமன்றி, செல்வமானது கியாமத்தில் அவனுடைய மேம்பதவிகளைக் குறைக்க ஓர் காரணமாயிருக்கக்கூடுமாதலால் அதைச் செல்வமாகவும் அவன் எண்ணாமலிருப்பான். பின்னர் செல்வத்துக்காக நன்றியறிந்து ஷுகுருசெய்வதில் அவன் பராக்காகவேண்டும். ஏனெனில் திரவியம், தேக சவுக்கியம் மற்றும் அவனிடத்திலிருக்கிற செல்வம் இவைகளில் நின்றும் அல்லாகு தஆலாஉடைய ஹக்கை நிறைவேற்றவேயாம். (அதெப்படியென்றால் திரவியத்தால் ஜக்காத் தளிப்பதும் தேகத்தால் பிறருக்கு உதவிசெய்வதும்போலென்க.) இவை ஒவ்வொன்றுக்கும் சபுருவேண்டும்.

இனி விருப்பத்துக்கு விரோதமான வஸ்து மூன்றுவிதமாயிருக்கிறது. ஒன்று அவன் இகுத்தியாரினால் அதாவது தெரிந்தெடுப்பதினால் ஆவது. எதுபோலெனில் வணங்குவதும் பாவங்களை விடுவதும் போலவாம். இன்னுமொன்று அவன் இகுத்தியாரின்றி (ஆண்டவன் செயலாய்ச்) சம்பவிப்பது. எதுபோலெனில் பலாமுசீபத்துகள் போலவாம். மற்றொன்று அவன் இகுத்தியாரின்றி உண்டாவதாயிருந்தபோதிலும் அதைத் தடைசெய்யவும் அதற்குப் பிரதி செய்யவும் அவனுக்கு இகுத்தியார் இருப்பதாம். எதுபோலெனில், மனிதர்கள் அவனை வருத்தப்படுத்துவதுபோலவாம்.

இனி முதலாவது விதம்:—அவன் இகுத்தியாரினால் உண்டாகிற வணக்கம்போன்றவைகளில் சபுருவேண்டும். ஏனெனில் தொழுகைபோன்ற சில வணக்கங்கள் சோம்பலால் அவனுக்குக் கஷ்டமாகும். ஜக்காத்துபோன்ற சில வணக்கங்கள் பகீல்தனமென்னும் உலோப குணத்தினால் அவனுக்குக் கஷ்டமாகும் ஹஜ்ஜுபோன்ற சில வணக்கங்கள் சோம்பல், உலோபகுணம் இந்த இரண்டினாலும் கஷ்டமாகும். சபுரில்லாமற்போனால் இந்த வணக்கங்கள் உண்டாக இடமில்லை. இதுவுமன்றி ஒவ்வொரு இபாதத்தின் ஆரம்பத்திலும் அதன் நடுவிலும் அது முடிந்தபின்பும் சபுருவேண்டும். இபாதத்தின் ஆரம்பத்தில் சபுராவது அதன் நிய்யத்தைச் செம்மைப்படுத்துவதும் ரியாவை மனதிலிருந்து அப்புறப்படுத்துவதுமாம். இது கஷ்டமான ஓர் சபுராகும். அதன் நடுவில் சபுரு என்றது அந்த

இபாதத்தில் யாதொரு தோஷம் கலவாதபடி அதன் ஷாத்துகளையும் அதபுகளையும் இறுப்பதின்பேரில் சபுருசெய்வதாம். உதாரணமாக:- தொழுகையில் எப்பக்கமும் நோக்காமல் எதையும் யோசிக்காமலிருக்கவேண்டும். இபாதத்து முடிந்தபின் சபுரு என்றது அதை வெளிப்படுத்தாமலும் நான் இன்னது செய்தேன் என்று தன் அகம்பாவமான அதிசயத்தைச் சொல்லாமலும் சபுருசெய்வதாம். இனி, பாவங்களை விடுவதற்கு சபுரில்லாமல் சரிப்படாது என்பதில் சந்தேகமில்லை. இச்சை எவ்வளவாக்ப் பலப்பட்டிருக்கிறதோ அவ்வளவாக அந்தப்பாவம் இலேசுபட்டிருக்கும். அதற்கு சபுருசெய்வது மிகவும் கஷ்டமாகும். இதனாலேதான் நாவின் பாவத்தினின்றும் சப்ருசெய்வது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஏனெனில் நாவை அசைப்பதற்கு இலேசாயிருப்பதினாலேயாம். பேச்சு அதிகப்பட்டால் அது வழக்கமாய்ப்போம். வழக்கம் சுபாவமாக மாறும். வழக்கமானது ஷைத்தானுடைய சேனைகளில் ஒன்றாயிருக்கிறது. இதனாலேதான் புறம்பேசுவதிலும் பொய் சொல்லுவதிலும் தன்னைப்புகழ்வதிலும் பிறரை இகழ்வதிலும் இன்னு மிவைபோன்றவைகளிலும் நாவு ஜாரியாய் நடந்துவருகிறது. ஏனெனில் நாவில் வருகிற ஒரு சொல்லைச் சொல்லி அதனால் ஜனங்களை ஆச்சரியத்திலாக்கவும் அவர்கள் அதைப் பிரியப்படவுமாயிருந்தால் அதைச் சொல்லாமல் சும்மாயிருப்பது மிகவும் கஷ்டமாகும். அநேகமாக ஜனசகவாசத்திலிருந்துகொண்டு இதை விட்டுவிட இடமில்லை. ஆனால் ஏகாங்கியாகத் தனிப்பதினால் இதைவிட்டும் சலாமத்தை அடைவான்.

இரண்டாவதுவிதம்:—ஜனங்கள் தங்கள் நாவாலும் கையாலும் அவனை வருத்தப்படுத்துவதுபோல் இதுமுதலில் அவன் இகுத்தியாரின்றி நடந்ததாயினும் பின்னிட்டு இதற்குப் பிரதிசெய்ய அவனுக்கு இகுத்தியார் இருக்கிறது. ஆகவே பிரதிசெய்யாமல் விட்டுவிடுவதற்காவது அல்லது பிரதிசெய்வதில் வரம்பைக் கடக்காமல் நிற்பதற்காவது அவனுக்குப் பூரணமான சபுருவேண்டும். இன்னும் ஈமானுடன் ஜனங்களா லுண்டாகிற இம்சைகளை நாங்கள் சகித்தாலேயன்றி மற்றப்படி எங்கள் ஈமானை நாங்கள் ஈமானாக எண்ணுகிறதில்லை என்று ஒரு அஸ்ஹாபி றளியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இதனாலேதான் அல்லாகுதஆலா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு (நஸீஹத்தாக) (ஓ நபியே! உமக்கு) அவர்கள் கொடுக்கும் இம்சைகளை விட்டுப்போட்டு நீர் அல்லாவின்மேல் தவக்குல் வைப்பீராக என்றும், அவர்கள் சொல்லுகிற

வார்த்தைகளின்மீது நீர் சபுருசெய்து அவர்களை அழகாய் விட்டுவிடுவீராக என்றும், அவர்கள் சொன்ன வார்த்தைகளினால் மெய்யாக உம்முடைய மனம் வருத்தமுற்றிருக்கிறதென்று நமக்கு நன்றாய்த் தெரியும், நீர் உம் றப்புடைய புகழைச்சொல்லித் துதிப்பீராக என்றும் அருளிச்செய்திருக்கிறான். ஒருநாள் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருபொருளை ஜனங்களுக்குப் பங்கிட்டார்கள். ஒருவர் இது அல்லாவுக்காக இட்ட நீதமான பங்கல்ல என்று சொன்னார். இந்தச்செய்தி றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு எட்டினபோது அவர்களுடைய முகம் சிவந்து அவர்கள் வருத்தப்பட்டுச் சொன்னதாவது:—"அல்லாகுதஆலா என் சகோதரரான மூஸா அலைகிஸ்ஸலாம் பேரில் றஹ்மத்து செய்வானாக; அவர்களை ஜனங்கள் இதைவிட அதிகமாக வருத்தப்படுத்தினார்கள். அவர்கள் சபுரு செய்துகொண்டார்கள்" என்பதே. இன்னும் "உங்களுக்கு யாதொருவருத்தம் கொடுக்கப்பட்டு அதற்கு நீங்கள் பிரதிசெய்கிறதாயிருந்தால் அவ்வளவாகவே பிரதிசெய்யுங்கள். அதினும் சபுரு செய்வீர்களாகில் மிக்க நலம்" என்று அல்லாகு தஆலா அருளிச்செய்திருப்பதை வஜின் ஆக்கப்த்தும் என்கிற ஆயத்திற்காண்க. இன்னும் ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் சொன்னதாக இஞ்சீலில் எழுதியிருக்க நான் பார்த்தேன். அதாவது:—எனக்குமுன் சில ஜனங்கள் (நபிமார்கள்) வந்தார்கள். அவர்கள் (பழிக்குப்பழி வாங்குவதில்) கைக்குக் கையையும் கண்ணுக்குக் கண்ணையும் பல்லுக்குப் பல்லையும் வாங்கும்படி சொல்லியிருக்கிறார்கள். நான் அந்த ஏற்பாட்டை மாற்றவில்லை. ஆயினும் நான் உங்களுக்கு உபதேசமாய்ச் சொல்லுகிறேன். நீங்கள் தீமைக்குத் தீமை செய்யவேண்டாம். மேலும் ஒருவன் உங்களை வலது கன்னத்தில் அடித்தால் நீங்கள் உங்கள் இடது கன்னத்தையும் அவனுக்குத் திருப்பிக் காட்டுங்கள். ஒருவன் உங்கள் தலைப்பாகையை எடுத்துக்கொண்டால் உங்கள் சட்டையையும் அவனுக்குக் கழட்டிக் கொடுங்கள். ஒருவன் உங்களுடன் ஒருமைல்தூரம் வந்தால் நீங்கள் அவனுடன் இரண்டுமைல்தூரம் போங்கள் என்பதே. இன்னும் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "ஒருவன் உங்களுக்குக் கொடாமற்போனாலும் நீங்கள் அவனுக்குக் கொடுங்கள்" என்றும், "ஒருவன் உங்களுக்குத் தீங்குசெய்தால் நீங்கள் அவனுக்கு நன்றி செய்யுங்கள்" என்றும் அருளிச்செய்திருக்கிறார்கள். இம்மாதிரியான சபுரு சித்தீக்குகளுடைய பதவியாயிருக்கிறது.

மூன்றாவது விதம்:—மூந்தியும் பிந்தியும் அவன் இகுத்தியாருக்கு இடமில்லாதபடி சம்பவிக்கிற முசீபத்தாம். எதுபோலெனில்

மக்களின் மரணம், தனநாசம், கனிகாது முதலிய உறுப்புகளின் சேதம் இவைபோலவும், இன்னுமிப்படி ஆண்டவன் செயலாய்ச் சம்பவிக்கிற சகல துன்பங்கள் போலவுமாம். இந்த சபுரைப்போல் அதிக சவாபும் அதிகவரிசையும் உள்ளது எந்த சபுருமில்லை. இபுனு அப்பாஸ்றலியல்லாகு அன்குமா அவர்கள் சொல்லுகிறதாவது: குருஆனில் சபுரு மூன்றுவிதத்தின்பேரி லிருக்கிறது. முதலாவது:-வணக்கத்தின்பேரில் சபுரு செய்வது. இது சவாபில்கின்றும் முந்நூறு தரஜாக்களை உடைத்தாயிருக்கிறது. இரண்டாவது:—ஹறாமை விடுவதின் பேரில் சபுருசெய்வது. இதற்கு அறுநூறு தரஜாக்கள்உண்டு. மூன்றுவதுமுசிபத்தின் ஆரம்பத்தில் அதன்மேல் சபுருசெய்வது. இதற்குத் தொளாயிரம் தரஜாக்கள் உண்டு என்பதே.

இன்னுமறிந்துகொள்:—பலாக்களில் சபுரு செய்வது சித்திகுகளுடைய தரஜாவாயிருக்கிறது. இதனாலேதான் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் துஆவில், "ஆண்டவனே! தான்யாவுடைய துன்பங்களை நாங்கள் இலேசாய்க் காணும்படி எங்களுக்கு அவ்வளவு எகீனைக் கொடு" என்று கேட்டிருக்கிறார்கள். இன்னும் அல்லாகுதஆலா "நான் யாதொரு பிணியை விடுகிற எந்த அடியான சபுருசெய்து அதைப்பற்றி ஜனங்களிடத்தில் முறைப்பாடு செய்யாமலிருக்கிறானோ அந்த அடியானுக்கு நான் ஆரோக்கியத்தைக் கொடுக்கிறபக்ஷம் முன்னிருந்ததைவிட அதிக நல்ல ஓர் சதையையும் தோலையும் அவனுக்குத் தருவேன்" என்றும், "அவனை நான் எடுத்துக்கொள்ளுகிறபக்ஷம் என்னுடைய றஹ்மத்தினால் எடுத்துக் கொள்ளுவேன்" என்றும் சொல்லுகிறதாக றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும்தாவூது அலைகிஸ்ஸலாமவர்கள் "என் ஆண்டவனே! முசிபத்தில் உனக்காக சபுரு செய்கிறவனுக்கு என்ன கூலியுண்டு" என்று கேட்டதற்கு, அல்லாகுதஆலா "அவனுக்கு நான் ஈமான் என்னும் பரிவட்டம் போர்த்துவேன்; ஒருபோதும் அதைத் திரும்ப வாங்கிக்கொள்ளேன்" என்று கூறினன். இன்னும் "நான் ஒருவனுக்குச் சரீரத்திலாவது பொருளிலாவது பிள்ளையிலாவது யாதொரு முசிபத்தை விட்டு அவன் அதற்கு சபுரு செய்வதில் நல்லவிதமாக நடந்து கொள்ளுவானாகில் அவனிடத்தில் கணக்குக் கேட்கவும் அவனை மீஜான் என்னும் தராசினிடத்தில் அனுப்பவும் தப்தரிடம் போகச்சொல்லவும் நான் வெட்கப்படுகிறேன்" என்று அல்லாகுதஆலா கூறுகிறதாகத்திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "சந்தோஷத்தை எதிர்பார்ப்பதில் சபுரு

செய்வது ஓர் இபாதத்தாயிருக்கிறது" என்றும், "ஒருவனுக்கு யாதொரு முசீபத்து அணுகும்போது அவன் இன்னாலில்லாஹிவஇன்னா இலைஹி ராஜிஊன் அல்லாஹும்ம அக்ரினி பீமுஸீபதீ வஅஃகிப்னீ கைரன் மின்ஹா என்று சொல்லுவானாகில் அவனில் நின்றும் இந்த துஆ கபூல் செய்யப்படும்" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் அல்லாகு தஆலா ஜிப்ராயில் அலைகிஸ்ஸலாமிடம் "ஓ ஜிப்ராயீலே! நான் யாருடைய கண் பார்வையைத் திரும்ப எடுத்துக்கொண்டேனோ அவனுக்குக் கிடைக்கிற கூலி இன்னது என்று உமக்குத்தெரியுமா?" என்றும், "என் தீதாராகிய தரிசனையைக்கொண்டு நான் அவனைச் சங்கைப்படுத்துவேன்" என்றும் சொன்னதாக ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "பெரியோர்களில் ஒருவர் நீ உன் நாயகன் விதித்த விதிக்கு சபுருசெய். திடனாக நீ நம் பார்வையிலிருக்கிறாய் என்ற ஆயத்தை ஓர் காயிதத்தில் எழுதித் தமது ஜேபில் வைத்துக்கொண்டு தமக்கு யாதொரு துன்பம் வந்த நேரத்தில் அந்தக் காகிதத்தை ஜேபிலிருந்து எடுத்து ஓதுகிறவராயிருந்தார். பத்ஹு மூசிலி ரஹிமஹுல்லா அவர்களுடைய மனைவியர் ஒரு தரம் கீழேவிழுந்து அன்னாருடைய நகம்முறிந்துவிட்டது. அதற்கு அந்தம்மாள் சிரித்தனர். கணவனார் "உனக்கு வலி தோன்றவில்லையா?" என்று கேட்டதற்கு, "ஆகிரத்தில் நன்மை கிடைக்குமென்ற சந்தோஷமானது என்னை அந்தவலியினின்றும் மறக்கச் செய்தது" என்று சொல்லினர். ஒருராவி ரிவாயத்து செய்கிறதாவது:—நான் அபூஹுசைபாவுடைய மவுலாவாகிய சாலிம் றலியல்லாகு அன்குமானை யுத்தகளத்தில் காயத்துடன் விழுந்திருக்கக் கண்டு "தண்ணீர் வேண்டுமா?" என்று கேட்டேன். அதற்கவர் "நீர் என்னை இழுத்து என் பகைவனுக்குச் சமீபத்தில் விடும். தண்ணீரை என் கேடயத்தில் ஊற்றிவையும். நான் நோன்பு வைத்திருக்கிறேன். இரவுபடுகிறவரையில் பிழைத்திருப்பேனாகில் குடிப்பேன்" என்று சொன்னார் என்பதே.

இன்னுமறிந்துகொள்:— அழுகிறதினாலும் துக்கப்படுகிறதினாலும் சபுருடைய வரிசை தப்பிப்போகாது. மேலும் சப்தம் போடுவதினாலும் உடையைக் கிழிப்பதினாலும் அதிக முறைப்பாடு செய்வதினாலுமே அதன் வரிசை தப்பிப்போகும். ஏனெனில் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய பிள்ளையாகிய இபுராஹீம் றலியல்லாஹு அன்கு அவர்கள் மவுத்தானபோது நாயகமவர்கள்

அழுதார்கள். அப்போது அஸ்ஹாபுகள் "யாரசூலல்லா! இது ஆகாது என்று தாங்கள் விலக்கவில்லையா?" என்று கேட்டதற்கு, "இல்லை, இது மனமிளகி இரக்கப்படுவதாயிருக்கிறது" என்றும், "எவன் இரக்கமுள்ளவனாயிருக்கிறானோ அவன்மீது அல்லாகு தஆலா றஹ்மத்துசெய்வான்" என்றும் திருவுளமானார்கள். "ஒருவன் துன்பமுற்றிருப்பதை மற்றவர் அறியாதபடி அவன் மறைத்துக்கொள்வது (சபுருன் ஜமீலுன்) அழகான சபுரு" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். பின்னர் உடையைக் கிழிப்பதும் முகத்தில் அறைந்துகொள்வதும் சப்தம்போடுவதும் இவையெல்லாம் ஹராமாயிருக்கிறது. மேலும் ஹாலுகளை மாற்றிக்கொள்வதும் முக்காடு போட்டுக்கொள்வதும் தலைப்பாகையைச் சின்னதாக்கிக் கொள்வதுமான இவைகளில் ஒன்றும் தருமானதல்ல. அன்றியும் அல்லாகு தஆலா உன்னிஷ்டமின்றி அவனிஷ்டமாக ஒரு அடிமையைப் படைத்தான். அந்த அடிமையை உன்னிஷ்டமின்றி அவனிஷ்டமாய்த் திரும்ப எடுத்துக்கொண்டான் என்று நீ எண்ணவேண்டும்.

உதாரணமாக:—அபூதல்ஹாவுடைய பெண்ஜாதியும் சலீமுடைய தாயாருமான ரமீலா றலியல்லாகு அன்ஹா வஅன்ஹுமா அவர்கள் சொல்லுகிறதாவது:—"என்கணவனார் வெளியேபோயிருந்தார். வீட்டில் வியாதிப்பட்டிருந்த என் பிள்ளை இறந்துபோய்விட்டது. நான் அந்தப் பிள்ளையின்மேல் துணியைப் போர்த்தி மறைத்துவைத்தேன். பின்பு என் கணவனார்வந்து "பிள்ளையின் பிணி எப்படியிருக்கிறது?" என்று கேட்டார். அதற்கு நான் எந்த இரவிலும் இந்தஇரவிற்போல் அவ்வளவு சுகமாயிருந்ததில்லை" என்றேன். பின்பு அவர் உண்பதற்கு உணவு கொண்டுவந்துவைத்தேன். இதற்குமுன் எந்தஇரவிலும் அலங்கரிக்காத விதமாக என்னை நான் நன்றாக அலங்கரித்துக் கொண்டேன். அவர் என்னிடம் தம் ஹாஜத்தை நிறைவேற்றிக் கொண்டார். பின்பு நான் இன்ன வீட்டுக்காரருக்கு ஒரு வஸ்துவை இரவலாகக் கொடுத்திருந்தேன் என்றும், அதைத்திரும்பக்கேட்டால் அவர்கள் வகமாயிரைச்சலிடுகிறார்கள் என்றும் அவரிடம் சொன்னேன். அதற்கவர் "இதென்ன அதிசயமாயிருக்கிறது? அவர்கள் மிகவும் தெரியாத ஜனங்களாயிருக்கிறார்கள்" என்று சொன்னார். அப்போது நான் உங்களுடைய அந்தப் பிள்ளை உங்களிடத்தில அல்லாகு தஆலா கொடுத்த இரவலாயிருந்தது. இப்போது அந்த இரவலை அவன் திரும்ப வாங்கிக்கொண்டான்" என்றேன். அப்போதவர் இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் என்று

சொன்னார். காலையில் அவர் ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களிடம் வந்து நேற்று நடந்ததைச் சொன்னார். அப்போது நாயகமவர்கள் "அல்லாகு தஆலா உங்களுக்கு நேற்றிரவை சுபமங்களமாக்குவானாக" என்று துஆசெய்து "ஆ! என்ன பெருமையுள்ள இரவாயிருந்தது" என்று வியந்து கூறினார்கள். அதன்பிறகு நாயகமவர்கள் நான் "சுவர்க்கத்துக்குப் போனேன்" என்றும், "அங்கு அபூதல்ஹா உடைய மனைவி றமீலாவைக் கண்டேன்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

பின்னர் மேற்சொல்லிவந்த சங்கதிகளால் அடியானுக்கு எந்த நிலைமையிலும் சபுரு வேண்டியதென்று நீ தெரிந்துகொண்டாய். மேலும் ஒருவன் எல்லா இச்சைகளையும் விட்டு ஏகாங்கியாய்த் தனித்தபோதிலும் அந்த ஏகாங்கத்திலும் அவனுடைய மனதுக்குள் நூறாயிரம் வஸ்வாஸ்களும்பற்பல சிந்தனைகளும் பிறந்து அல்லாகு தஆலாஉடைய திகுரிலிருந்து அவனை வேறு பராக்கிலாக்கும். அந்த சிந்தனைகள் கெட்டவைகளாயிராமல் முபாஹானவைகளாயிருந்த போதிலும் சரியே; அவைகளால் அவன் தன் காலத்தைச் சேதப்படுத்தினான். அவனுக்குத் தலைமுதலாயிருக்கிற அவன் வயதுக்குப் பெரிய நஷ்டமுண்டாயிற்று. இதைவிட்டும் தப்புவதற்கு அவன் செய்யவேண்டிய பிரயத்தன மென்னவென்றால், அவுறாதுகளை ஓத அவன் பராக்காகவேண்டும். தொழுகையில் இப்படி வஸ்வாஸ் உண்டானால் அதைப் போக்குவதற்கு அவன் மிகவும் பிரயாசை எடுத்துக் கொள்ளவேண்டும். வஸ்வாஸிலிருந்து அவனை இழுத்துக்கொள்ளுகிற யாதொரு வேலையிருந்தாலேயன்றி அவன் அதிலிருந்து நீங்கமாட்டான். "வேலையில்லாமல் ஒழிந்திருக்கிற வாலிபனை அல்லாகு தஆலா பகைக்கிறான்" என்று ஹதீதில் வந்திருக்கிறது. இப்படிச் சொன்னதற்குக் காரணம் யாதெனில், எந்த வாலிபன் யாதொரு வேலையில்லாமல் ஒழிந்த ஆளாக உட்கார்ந்திருக்கிறானோ அந்த வாலிபனுடைய மனம் வஸ்வாஸை விட்டும் நீங்கியிராது. ஷைத்தான் அவன் கூடவே யிருப்பான். அவன் மனம் வஸ்வாஸான பறவைகளுக்குப் பஞ்சரமாயிருக்கும். அல்லாகு தஆலா உடைய திக்ரைக்கொண்டு அந்த வஸ்வாஸ்களை நீக்க அவனால் முடியாமற்போனால் அந்த வஸ்வாஸிலிருந்து அவனை இழுத்துக் கொள்ளும்படியான யாதொரு தொழிலில் அல்லது யாதொரு ஊழியத்தில் அல்லது யாதொரு வேலையில் அவன் பராக்காகவேண்டும். இப்படிப்பட்ட மனிதன் ஏகாங்கியாய்த் தனித்துட்காருவதுகூடாது.

மேலும் இருதய காரியத்தைச் செய்ய ஏலாதவன் எவனோ அவன் தன் தேகத்தை யாதொரு வேலையில் அமர்த்தவேண்டும்.

### சபுரை உண்டாக்கிக் கொள்வதற்குப் பரிகாரம் இதுவென விளக்கல்.

அறிந்துகொள்:—சபுரு செய்ய வேண்டிய விஷயங்கள் ஒன்றல்ல. அவை அநேகமாயிருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் சபுரு செய்வதில் வெவ்வேறு கஷ்டமிருப்பதினால் அதன் பரிகாரமும் வெவ்வேறாயிருக்கும். எப்படி யிருந்தாலும் எல்லாவற்றிற்கும் இல்மு அமல்களான அவிழ்தப் பிரயோகமே பரிகாரமாகும். முஹ்லிகாத்துடைய ருகுனில் நாம் சொல்லி யிருப்பவை முழுதும் சபுரை யுண்டாக்கிக் கொள்வதற்கு அவிழ்தமாயிருக்கிறது. இவ்விடத்தில் உபமானமாக ஓர் விஷயத்தைச் சொல்லுவோம். ஏனெனில் இதுவோர் அறிகுறியான நமுனாவாயிருக்கவும் இதைக்கொண்டு மற்றவைகளை ஒத்திட்டுக்கொள்ளவுமேயாம். ஆதலால்,

அறிந்துகொள்:-ஆசைப்படையுடன் போர் புரிவதில் தீன்படை நிலை பெயராமல் நிற்பதே சபுரு என்பதற்குப் பொருள் என்று நாம் சொல்லியிருக்கிறோம். இது இவ்விரண்டு படைகளுக்கும் இடையில் ஒருவித சண்டையாயிருக்கிறது. ஒருவன் இரண்டுபேரைச் சண்டைக்கு விட்டு அவர்களில் ஒருவன் ஜெயிக்க வேண்டுமென்று நாடுவானாகில் அதற்கு அவன் செய்யவேண்டிய பரிகார மென்னவென்றால், எவன் ஜெயிக்கவேண்டுமென்று இவன் நாடினானோ அவனுக்கு உதவி செய்வதும் அந்த மற்றொருவனுக்கு உதவி செய்யாமல் அவனைப் பலவீனப்படுத்துவதுமேயாம். இப்போதுகேள். ஒருவனுக்குப்போக இச்சை மேலிட்டால் அவன் தன் வெட்க உறுப்பைக் காத்துகொள்ள அவனால் முடியாது. முடிந்தால் அவன் தன் கண்ணை இச்சையான பார்வையிலிருந்தும் கல்பை மோகமான எண்ணத்திலிருந்தும் காக்கவேண்டும். அப்படிக் காக்கவும் சபுரு செய்யவும் முடியாமற்போனால் அதற்கு அவன் செய்யவேண்டிய பரிகாரமாவது:-முதலில் இச்சையை எழுப்புங் காரணத்தை அவன் துர்ப்பலப்படுத்தவேண்டும். அது மூன்று வஸ்துக்களால் ஆகும். முதலாவது:—நல்ல தீனியும் உணவும் உண்பதினால் இச்சைக்கு உதவியுண்டாகிறதென்று நமக்குத் தெரிகின்றது. ஆதலால் அந்த உதவியை நீக்கும்பொருட்டு அவனை நோன்பு வைக்கும்படி சொல்லுவோம். ஆகவே அவன் இரவில் நோன்பு திறக்கும்போது வெறும் ரொட்டியைக் கொஞ்சமாகத் தின்னவேண்டும். இறைச்சியையும் இன்

னும் இச்சைக்கு வலுவைக் கொடுக்கிற எந்த உணவையும் அறவே
அவன் தின்னக்கூடாது. இரண்டாவது:—இச்சையை எழுப்புகின்ற
காரணங்களின் வழியை அவன்மீது அடைப்போம். அழகிய ரூபத்
தைப் பார்ப்பதினால் இச்சை எழும்பும். ஆதலால் அவன் ஜனசங்க
வாசத்தைவிட்டு ஏகாங்கியாய்த் தனிக்கவேண்டும். கண்ணைப் பேண
வேண்டும். பெண்கள், சிறுவர்கள் இவர்கள் நடக்கும் வழியிலிருக்
காமல் அவன் எழுந்துவிடவேண்டும். மூன்றாவது:—ஹலாலான
காரியத்தைக்கொண்டு அந்த இச்சையைத் தணிப்பதாம். ஏனெனில்
ஹறாமான இச்சையினின்றும் அவன் நீங்கவேயாம். ஆதலால் அவன்
நிகாகு செய்து அதனால் இச்சையைத் தணிக்கவேண்டும். நிகாகு
இல்லாமல் அநேகமாக இந்த இச்சையைத் தணிக்கமுடியாது. நபுசு
க்கு உபமானம் ஓர் முரட்டு மிருகத்துக்குச் சமானமாம். அந்த
மிருகத்தைப் பழக்கிச் சாதுவாக்க வேண்டுமானால் முதலில் அத
ற்குத் தீனிபோடாமல் நிறுத்திவிடுவோம். பிறகு தீனியை அது பார்
க்காமலிருக்கும்பொருட்டுப் புல்முதலிய தீனியை அதன்கண்ணுக்கு
மறைத்து வைப்போம். பிறகு அது அடங்கியிருக்கிற அளவாகத்
தீனியைக் குறைவாகப் போடுவோம். இந்த மூன்று பரிகாரங்களும்
நபுசின் விஷயத்திலும் செய்யப்படவேண்டும். இப்போது சொல்லி
வந்தது இச்சைப்படையைத் துர்ப்பலப்படுத்தும் பரிகாரமாயிருக்கி
றது. இனி, தீன் படையைப் பலப்படுத்துவதற்கு இரண்டு வஸ்துக்
கள் வேண்டும். முதலாவது:—இந்த இச்சையினின்றும் சபுரு
செய்கிறவனுக்குக் கிடைக்கிற சவாபுகளில் வந்திருக்கிற ஹதீசுக
ளைச் சொல்லி இச்சையோடு எதிர்த்துநிற்பதின் பிரயோசனத்தைக்
காட்டி, தீன் படைக்கு ஆசையூட்டவேண்டும். இதனால் ஈமான் உறு
திப்படுமாகில் அப்போது சற்றுயோசித்து இச்சையின்பயன் கொஞ்ச
நேரமிருக்கும் என்றும் அதைவிட்டு சபுரு செய்வதின் பயன் அழி
யாத இராஜரீகமாயிருக்கும் என்றும் உற்றுணர்வான். அந்த ஈமான்
எவ்வளவு உறுதிப்பட்டிருக்கிறதோ அவ்வளவாகத் தீன்படை
வலிமை அடைந்திருக்கும். இரண்டாவது:—தீன் படை தைரிய
மடையும்பொருட்டு அதைக் கொஞ்சங் கொஞ்சமாக இச்சைகளுக்கு
மாற்றஞ் செய்வதில் பழக்கிவரவேண்டும். ஏனெனில் ஒருவன் பல
சாலியாகவேண்டுமென்று விரும்புவானாகில் அவன் தன் பலத்தைச்
சோதித்துக்கொண்டிருக்கிறான். வலுவான வேலைகளை முறை முறை
யாக அதிகப்படுத்திக்கொண்டு வருகிறான். அனுவனுவாக மேலே
ஏக்கிக்கொண்டு போகிறான். இன்னுமொருவன் ஒரு பலசாலியான

பயில்வானோடு மல் யுத்தஞ்செய்ய நாடினால் அவன் முதலில் மிகவும் பலசாலிகளாயிருக்கிற மனிதர்களோடு மல்யுத்தஞ்செய்து தன்பலத்தைச் சோதித்துப் பார்க்கவேண்டும். அதனால் அவன் வலிமை அதிகரித்துத் தைரியமும் உண்டாகின்றது. இதன் நிமித்தமே கடின வேலைகளைச் செய்பவர்களுக்குப் பலம் அதிகமாயிருக்கிறது. ஆதலால் எல்லா விஷயங்களிலும் சபுரை உண்டாக்கிக்கொள்வதற்கு இதுவே பரிகாரமாம்.

## ஷுகுரின் மேம்பாட்டையும் அதன் பொருளையும் விளக்கல்.

அறிந்துகொள்:—ஷுகுரு ஓர் அருமையான மகாமாயிருக்கிறது. அதன் தரஜா உயர்த்தியையுடையது. எல்லாருமே இந்தத் தரஜாவுக்கு வரமாட்டார்கள். இதனாலேதான் என் அடியார்களில் ஷுகுரு செய்பவர்கள் கொஞ்சம் பேர்தான் என்று அல்லாகு தஆலா திருவுளமாயிருக்கிறான். இன்னும் "இபுலீசானவன் மனிதர் விஷயத்தில் ஆலோசனையாக அவர்களில் அநேகரை ஷுகுரு செய்பவர்களாக நீ பார்க்கமாட்டாய். மனிதர்களில் மிகுதகம்பேர் ஷுகுரு செய்யமாட்டார்கள்" என்று கூறினான். இன்னுமறிந்துகொள்:— நாம் முஞ்சியாத்து என்று சொல்லியிருக்கிற நற்குணங்கள் இருவகைப்பட்டிருக்கின்றன. ஒருவகை தீன்வழி நடையின் அடியெடுப்புகளிற் சேர்ந்தவை. அவை தம்மிலே கருதப்பட்டனவல்ல. ஏனெனில் தவ்பாசெய்தல், சபுரு செய்தல், தெண்டித்தல், எளிமையைத் தெரிந்துகொள்ளல், முஹாஸபா செய்தல் இவையெல்லாம் இவற்றிற்கு வேறாயுள்ள ஓர் காரியத்துக்கு உதவியான சாதனங்களாயிருக்கின்றன. மற்றொருவகை (அந்தச் சாதனங்களில்) கருதிய பொருள்களும் முடிவுகளுமாம். அவை மற்றொன்றைக் கருதிச் செய்யப்படுவனவாயிராமல் தம்மிலே கருதப்பட்டனவாயிருப்பவைகளாம். உதாரணமாக :— மஹப்பத்து, ஷவுகு, ரிலா, (பொருத்தம்) தவ்ஹீது, தவக்குல், ஷுகுரு இவைகள் இந்த வகையிற் சேர்ந்தவைகளேயாம். எதுவொன்று கருதப்பட்ட பொருளாயிருக்கிறதோ அது ஆகிரத்தில் நிலைத்திருக்கும். அப்படி நிலைத்திருப்பவைகளில் ஷுகுரும் ஒன்றாம். அல்லாகு தஆலா அருளிச்செய்திருப்பதுபோல் அது வருமாறு காண்க. வஆகிருதஃவாஹும் அனில்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன். (இதன் பொருள்) அவர்களுடைய துஆவின் முடிவாகிறது எல்லாப் புகழும் சர்வலோகரக்ஷகனாகிய அல்லாகு தஆலாவுக்கே உரித்தானவை என்பதேயாம்) ஆகவே ஷுகுருடைய பாடத்தைக் கிதாபின் கடைசியில் சொல்ல

வேண்டிய விதியிருந்தது என்றாலும் ஷுக்குரானது சபுருடன் ஒருவாறு சம்பந்தப்பட்டிருக்கிறநிமித்தம் இங்கு சொல்லப்பட்டது.

அல்லாகு தஆலா ஷுக்குரைத் தன் திக்ருடன் சேர்த்து, "நீங்கள் என்னை திக்ரு செய்யுங்கள், நான் உங்களை திக்ருசெய்வேன்; நீங்கள் எனக்கு (நன்றியறிந்து) ஷுக்குரு செய்யுங்கள், நான் உங்களுக்கு ஷுக்குருசெய்வேன் என்று கூறியிருப்பதும் "உணவை உண்டு ஷுக்குரு செய்பவனுடைய தராஜாவும் நோன்பிருந்து சபுரு செய்பவனுடைய தராஜாவும் இரண்டும் சமமாகும்" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருப்பதும் ஷுக்குரின் தராஜா பெரிதென்பதற்கு அடையாளமாம். இதுவுமன்றி, "அதிகமாய்ப் புகழ்கிறவர்கள் எழுந்து நிற்கக்கடவர் என்று கியாமத்து நாளில் கூவிச்சொல்லப்படும்" என்றும், "அப்போது எல்லா நிலைமைகளிலும் ஷுக்குரு செய்திருப்பவனேயன்றி மற்ற எவரும் எழுந்து நிற்கமாட்டார்கள்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் பொருளைச் சேகரித்து வைப்பதிலும் அது கூடாதென்பதிலும் வல்லதீன யக்னிஸூனத்தஹபவல்பில்லத்த இந்த ஆயத்து இறங்கினபோது உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை நோக்கி "யாறசூலல்லா! பின்பு பொருளில்நின்றும் நாங்கள் எதைச் சேகரிப்பது? என்று கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் "திக்ரு செய்கிற நாவையும் ஷுக்குரு செய்கிற கல்பையும் மூமினத்தாயிருக்கிற மனைவியையும் என்று விடையளித்தார்கள். இதில் நாயகமவர்கள் கருதியது யாதெனில், நீங்கள் துன்யாவில்நின்றும் இந்த மூன்றின்பேரில் போதுமாக்கிக்கொள்ளுங்கள் என்பதேயாம். மூமினுவான பெண்பிள்ளை (இபாதத்துக்காக) பராக்கு ஒழித்துவைப்பதில் உதவியாயிருப்பாள். அதனால் திக்ரும் ஷுக்குரும் உண்டாகும். இன்னும் "ஷுக்குரானது ஈமானின் ஒரு பாதியாயிருக்கிறது" என்று இபுனுமஸ்ஊது றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். அத்தா றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது "நான் ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்களிடம் போய், எனக்கு றசூல் சல்லல்லாஹு அலைகிவசல்லமவர்களுடைய ஹாலுகளில்நின்றும் புதுமையான ஓர் ஹாலைச் சொல்லுங்கள்" என்றேன். அதற்கு ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள், "றசூல் நாயகமவர்களுடைய ஹாலுகளில்நின்றும் புதுமையல்லாது என்ன இருந்தது? கேளும். ஓர் இரவு அவர்களின் திறந்தமேனி என் உடம்பில் படும்படி என் படுக்கையில் என்னுடன் இருந்தார்கள். பின்பு அவர்கள் "ஓ ஆயிஷாவே! என்னை விட்டுவிடு, நான்

என் ஆண்டவனைத் தொழுதுகொள்ளப் போகிறேன்" என்றார்கள். அதற்கு நான் "ஓ நாயகமே! நான் தங்களோடிருக்க நாடுகின்றேன். ஆயினும் தாங்கள் போங்கள்" என்றேன். அவர்கள் எழுந்து துருத்தியிலிருந்து தண்ணீரெடுத்து ஒலு செய்தார்கள். தண்ணீரைக் கொஞ்சமாக ஊற்றினார்கள். பின்பு நிலையாகநின்று தொழுதுகொண்டும் அழுதுகொண்டுமிருந்தார்கள். பிலால் வந்து சுபஹு தொழுகைக்காக அவர்களைக் கூப்பிடுகிறவரையில் இப்படியே (நிலையிலும் ருகூஇலும் சுஜூதிலும் இருப்பிலும்) அழுதுகொண்டிருந்தார்கள். அப்போது நான் "யாரசூலல்லா! தங்களுடைய பாவங்களையெல்லாம் அல்லாகு தஆலா பொறுத்துவிட்டிருக்கத் தாங்கள் இப்படி அழுவானேன்?" என்று கேட்டேன். அதற்கு நாயகமவர்கள், "பின்னை நான் ஷுக்குரு செய்கிற அடிமையாயிருக்க வேண்டாமா? இந்த ஆயத்து என்மீது இறங்கியிருக்கிறதே. நான் எப்படி அழாமலிருப்பேன்?" என்றார்கள்.

ஆயத்தாவது:—ககன புவன லோகங்களின் சிருட்டிப்பிலும் இரவு பகல்களின் வேறுபாட்டிலும் அறிவாளருக்கு மெய்யாகவே அத்தாட்சிகளிருக்கின்றன. அந்த அறிவாளர் நின்றிருக்கும்போதும் உட்கார்ந்திருக்கும்போதும் படுத்திருக்கும்போதும் அல்லாகு தஆலாவை ஞாபகம் செய்வார்கள். வானம் பூமிகளின் தத்துவங்களில் ஆராய்ந்து நோட்டமிடுவார்கள். இன்னும் அவர்கள் இந்தப் பதவியைப் பெற்றுக்கொண்டதற்காக நன்றியறிந்து ஷுக்குரு செய்வதில் சந்தோஷித்து அழுவார்கள். பயந்தல்ல. உதாரணமாக:-ரிவாயத்துச் செய்யப்பட்டிருப்பதாவது, ஒரு நபியவர்கள் சிறுபாறையான ஒரு கல்லின்பக்கமாய்ச் சென்றார்கள். அந்தப் பாறையிலிருந்து அதிகமாகத் தண்ணீர் கசிந்துகொண்டிருந்தது. இதைக் கண்ட அந்த நபி ஆச்சரியப்பட்டார்கள். அப்போது அல்லாகு தஆலா அந்தக் கல்லைப் பேசும்படி செய்தான். அது என்ன பேசினதென்றால், "மனிதர்களும் கற்களுமே நரகத்துக்கு எரிகொள்ளியாகும் என்ற இந்தச் சங்கதியை நான் கேட்டதுமுதல் இப்படியே அழுதுகொண்டிருக்கிறேன்" என்று சொல்லிற்று. அப்போது அந்த நபியவர்கள் "ஆண்டவனே! இந்தக் கல்லுக்கு அச்சமில்லாமல் நீக்கு." என்று துஆ செய்தார்கள். அவர்களுடைய துஆ அங்கீகரிக்கப்பட்டு அதன் அச்சம் நீங்கினது. பிறகு ஒரு காலத்தில் அவர்கள் அந்தப் பாறையின்பக்கமாகச் சென்றார்கள். முன்போலவே அதிலிருந்து தண்ணீர் கசிந்துகொண்டிருக்கக் கண்டு "ஏ கல்லே! நீ திரும்ப இப்போது ஏன் அழுதுகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்கள். அதற்கு அந்தக்கல் "நபியே! நான் முந்தி அச்சப்பட்டு அழுதேன். இப்போது

நன்றியறிந்த ஷுகுரு செய்வதில் சந்தோஷப்பட்டு அழுகிறேன்” என்று சொல்லிற்று” என்பதே. கல்லினும் அதிக கடினமாயிருக்கிற வன்னெஞ்சனுடைய மனதுக்கு இதுவோர் உபமானமாகும். ஆகவே அவன் மனம் இளகி மிருதுவாகும்பொருட்டு ஒரு சமயம் துக்கத்தினாலும் ஒரு சமயம் சந்தோஷத்தினாலும் அவன் அழுதுகொண்டிருக்கக்கடவன்.

## ஷுகுரு இதுவென அதன் ஹகீகத்தை விளக்கல்.

அறிந்துகொள்:—தீனுடைய எல்லா மகாம்களும் இல்மு, ஹால், அமலென மூன்று அஸ்லுகளுடன் வரும் என்றும், அவற்றுள் இல்மே முதல் அஸ்லு என்றும், இதிலிருந்து ஹாலும் ஹாலிலிருந்து அமலும் உண்டாகும் என்றும் நாம் சொல்லியிருக்கிறோம். அதுபோல் ஷுகுருஎன்றமகாமின் இல்மு யாது என்றால், நிஃமத்துஎன்னும் பாக்கியமானது சுயபாக்கியவத்தனாகிய அல்லாகு தஆலாவினால் அளிக்கப்படுவது என்று அறிவதேயாம். அந்தப் பாக்கியத்தை அடைந்ததின் பேரில் எழுகின்ற மனக்களிப்பே ஷுகுரினது ஹாலாயும் அல்லாகு தஆலாவுக்குப் பிரியமான வேலையில் அந்தப் பாக்கியத்தை உபயோகிப்பதே அதன் அமலாயும் இருக்கிறது. இந்த அமலோ (மனம், வாக்கு, காயம் என்னும்) இருதயம், நா, சரீரம் இவைகளுடன் சம்பந்தப்பட்டு வரும். இவையெல்லாம் தெரியாதிருக்கிறவரையில் ஷுகுரு இதுவென விளங்காது.

அறிந்துகொள்:—இது விஷயத்தில் இல்மு என்றது யாதெனில், உனக்கிருக்கிற ஒவ்வொரு நிஃமத்தான பாக்கியத்தையும் இது அல்லாகு தஆலா கொடுத்ததென்றும், அவ்விதம் கொடுத்ததில் அவனுடன் யாருக்கும் கூட்டில்லை யென்றும் நீ அறிவதேயாம். அல்லாகுதஆலாவிலன்றி இடையிட்ட காரணங்களில் ஒரு காரணமாயிருக்கிற மற்றொருவனில் உனது நோக்கம் சென்று அந்த நிஃமத்து அவனிடத்திலிருக்கிறதென்றும் அவன் அதைக் கொடுக்கிறான் என்றும் நீ நினைப்பாயாகில் இந்த நினைவான அறிவும் ஷுகுரும் நிறப்பமாகாது. ஒரு அரசன் உனக்கு ஒரு பரிவட்டங் கொடுத்தபோதிலும் இது மந்திரியுடைய தயவால் கிடைத்ததென்று நீ நினைப்பாயாகில் அரசனுக்கு நீ அறிந்த நன்றியான ஷுகுரு நிறப்பமாகாது. மேலும் அந்த ஷுகுரில் கொஞ்சம் மந்திரிக்குமாம். அந்தப் பரிவட்டத்தினால் நீ களித்துச்சந்தோஷிப்பது முழுதுமே அரசனைப்பற்றியதாயிராது. ஆனால் பரிவட்டமானது அரசனுடைய கையொப்ப

மான முத்திரையினால் உனக்குக் கிடைத்ததென்றும், அந்த முத்திரையானது எழுதுகோல், காகிதம் இவைகளால் ஆகியது என்றும் நீ நினைப்பாயாகில் இது ஷுகுரில் யாதொரு தோஷத்தைக்கொண்டு வராது. ஏனெனில் எழுதுகோலும் காகிதமும் அரசனுக்கு ஐக்கியமானவை என்றும் இவை சுயமாக ஒன்றையும் செய்யமாட்டாவென்றும் நீ அறிந்திருப்பதினாலென்க. மேலும் அரசனுடைய பொக்கிஷக்காரன் அந்தப் பரிவட்டத்தை உன் வசம் செலுத்தினான் என்று நீ நினைப்பதும் தோஷமாகாது. ஏனெனில் பொருள் பொக்கிஷக்காரனுடைய சுயாதீனத்தில் இல்லையாதலாலும், அவன் அரசனுடைய அதிகாரத்துக்கு உட்பட்டவனாதலாலும், அரசன் ஒன்றைக்கொடு என்று ஆக்கியாபித்தால் அதைக் கொடாமல் வைத்துக்கொள்ளவும் கொடாதே என்று தடுத்தால் அதைக்கொடுத்துவிடவும் அவனுக்குச் சக்தியில்லையாதலாலும், அரசன் கையில் எழுதுகோல் எப்படியோ அப்படியே அவனுமிருக்கிறானாதலாலென்க.

இதுபோலவே உலகத்தின் சகல செல்வங்களும் மழையினால் (உண்டாகுவன) என்றும், மழையானது மேகத்தினால் (உண்டாகுவது) என்றும், கப்பலில் இருப்பவர் கரைசேர்வது பிதமான காற்றினால் என்றும் நீ நினைப்பாயாகில் உன்னில் நின்றும் ஷுகுரு சரியாகாது. ஆனால் மேகமும் மழையும் காற்றும் சூரிய சந்திர நக்ஷத்திரங்களும் மற்றும் சிருஷ்டிகள் யாவும் எழுத்துக்காரனுடைய கையில்: எழுதுகோல் எவ்வித அதிகாரமும் இல்லாமலிருப்பதுபோல அவை அல்லாகு தஆலா உடைய வல்லமைக்குள் அடங்கியிருக்கின்றனஎன்று நினைப்பாயாகில் இது ஷுகுரில் யாதொரு தோஷத்தைக் கொண்டுவராது. இனி ஒரு மனிதனுடைய கொடையினால் ஒரு பாக்கியம் உனக்குக் கிடைத்து அதை அம்மனிதனில்நின்று முள்ளதெனக் காண்பாயாகில் இது மடத்தனமாயும் ஷுகுருடைய ஸ்தானத்தைவிட்டும் தடுப்பதாயும் (தூரப்படுத்துவதாயும்) இருக்கிறது. மேலும் ஒரு மனிதன் உனக்குக் கொடுத்த நிஃமத்தில் நீ அறியவேண்டியதென்னவென்றால், அல்லாகு தஆலா அந்த மனிதன்பேரில் ஒரு முவக்கலை அனுப்பி அவன் அந்த முவக்கலுக்கு விரோதம் செய்ய எவ்வளவோ எண்ணியும் அவனால் முடியாதபடி அந்த முவக்கல் அவனைப் பலாத்காரப்படுத்தினதினால் அவன் அந்த நிஃமத்தை உனக்குக் கொடுத்தான், கொடாமல் வைத்துக்கொள்ள அவனால்முடிகிறபக்ஷம் அவன் உனக்கு ஒரு காசுங் கொடுத்திருக்கமாட்டான். அந்த முவக்கலாவது என்னவென்றால், இந்த நிஃமத்தை நீ அவனுக்குக் கொடுப்

பதில் உனக்குத் தீனிலும் துன்யாவிலும் நன்மை யிருக்கிறதென்று அல்லாகு தஆலா அவன் மனதில் போட்டதும் அவன் நோக்கத்தில் வைத்திருப்பதுமான அந்த விருப்பமேயாம். அவ்விருப்பத்தினால் அவன் இவ்வுலகத்திலோ அல்லது அவ்வுலகத்திலோ தான் கருதியிருக்கும்நோக்கத்தை அடையலாமென்று ஆசைகொண்டு அந்த நிஃமத்தை உனக்குக் கொடுத்தான். எதார்த்தத்தில் அதை அவன் தனக்கே கொடுத்துக்கொண்டான். ஏனெனில் தான் ஆசைகொண்ட நோக்கத்தை அடைவதற்கு அதை அவன் ஓர் மூலமாக்கினதினாலென்க. ஆயினும் அல்லாகு தஆலா அவன்மீது இப்படியான ஓர் முவக்கலை அனுப்பினதினால் அந்த நிஃமத்தை அல்லாகு தஆலாவே உனக்குக் கொடுத்திருக்கிறான். அவனே அதற்கு யாதொரு பிரதியை நாடுகிறவனல்ல.

ஆகவே எல்லா ஜனங்களும் அரசனுடைய பொக்கிஷக்காரன் போலிருக்கிறார்கள் என்றும், அந்த பொக்கிஷக்காரன் ஒரு எழுத்துக்காரனுடைய எழுதுகோல்போல் இடையிட்ட காரணங்களில் ஒரு காரணமாயிருக்கிறான் என்றும், எப்பொருளும் இவர்களுடைய (இவைகளுடைய)சுய அதிகாரத்திலில்லை என்றும், இவர்களிடத்தில் (இவைகளிடத்தில்) பலாத்காரமாக வேலை வாங்கப்படுகிறதென்றும் உண்மையாக நீ அறிந்தாயாகில் அப்போது அந்த நிஃமத்துக்காக அல்லாகுதஆலாவை நீ ஷுக்குரு செய்யக்கூடும். மேலும் நீ அறிந்த இந்த அறிவே ஷுக்குராயிருக்கிறது. உதாரணமாக:—மூசா அலைகிஸ்ஸலாமவர்கள் அல்லாகு தஆலாவுடன் வசனிக்கும்போது, "ஆண்டவனே! நீ ஆதம் அலைகிஸ்ஸலாமவர்களை உன் வல்லமை என்னும் கையினால்படைத்து அவர்களுக்கு இன்னின்னவிதமாக நிஃமத்தைக் கொடுத்தாய். அவர்கள் உனக்கு எப்படி ஷுக்குரு செய்தார்கள்?" என்று கேட்டதற்கு, "மூசாவே! அந்த நிஃமத்துகளெல்லாம் அவருக்கு என்னால் கிடைத்தனவென்று அவர் அறிந்தார். அப்படி அவர் அறிந்த அறிவே ஷுக்குரா யிருக்கின்றது" என்று அல்லாகு தஆலா அருளிச்செய்தான்.

இன்னுமறிந்துகொள்:—ஈமானைப்பற்றிய அறிவின் பாபுகள் அநந்தமுண்டு. அவைகளில் முதலாவது பாபு:-தக்திஸ் என்னும் பரிசுத்தப்படுத்தல், அதாவது, உலகசிருஷ்டிகளாகிய அல்லாகு தஆலா எல்லாப்படைப்புகளின் குணங்களையும் இருதயத்தில்வருகிற தோற்றம் நினைவு இவைகளையும் விட்டுச் சுத்தமும் தூய்மையுமுள்ளவனென்று நீ அறிவதேயாம். இந்தப்பொருள் பொருந்தியதே சுபுஹானல்

லாஹி என்பது. இரண்டாவது பாபு:—தவ்ஹீது என்னும் ஒன்று படுத்தல். அதாவது:—இந்தப் பரிசுத்தத்தை ஏகப்படுத்தி இது அல்லாகு தஆலாவுக்கே உரித்தானது என்றும் இதில் அவனுடன் யாதொரு இணையில்லை என்றும் நீ அறிவதாம். இந்தப்பொருள் பொருந்தியதே லாஇலாஹ இல்லல்லாஹு என்பது. மூன்றாவதுபாபு:—தஹ்மீது என்னும் புகழ்தல். அதாவது:—இருப்பவை யாவும் அவனில்நின்று முள்ளவை என்றும், அவனளித்த பாக்கியம் என்றும் நீ அறிவதாம். இந்தப் பொருள் பொருந்தியதே அல்ஹம்துலில்லாஹி என்பது. இதுவே அந்த இரண்டிலும் சிறந்தது. ஏனெனில் அந்த இரண்டு அறிவும் இதற்குள் அடங்கியிருக்கு மாதலாலென்க. இதனாலேதான் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சுபுஹானல்லாஹி என்பது பத்து நன்மைகள் என்றும், லாஇலாஹ இல்லல்லாஹு என்பது இருபது நன்மைகள் என்றும், அல்ஹம்துலில்லாஹி என்பது முப்பது நன்மைகள் என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். நாவினாற்சொல்லும் இந்த சொற்களே இந்த நன்மைகளென்பதல்ல. மேலும் இந்தச்சொற்கள் எந்த அறிவுகளைப் பொருந்தியிருக்கின்றனவோ அந்த அறிவுகளென்பதேயாம். மேலே விவரித்துச் சொல்லி வந்தது தான் ஷுகுரின் இல்மு என்பதற்குப் பொருளாம்.

இனி இந்த இல்மாகிய அறிவினால் மனதில் எழும் சந்தோஷமே ஷுகுரின் ஹாலாகும். ஏனெனில் ஒருவனால் ஒரு பொருளை அடைந்த மற்றொருவன் அதில் சந்தோஷிப்பான். ஆனால் இந்த சந்தோஷம் மூன்றுவிதத்தினால் உண்டாகும். முதலாவது:—அந்தப்பொருள் அவனுக்குத் தேவையாயிருந்து அது கிடைத்த நிமித்தம் அவனுக்குச் சந்தோஷமுண்டாவதாம். இது ஷுகுரல்ல. (இது உனக்கு விளங்காவிட்டால் ஓருபமானத்தால் விளக்குகிறோம். அதாவது) ஒரு அரசன் யாத்திரை போக நாடித் தன் வேலைக்காரனுக்கு ஒரு குதிரையைக் கொடுப்பானாகில் அந்த வேலைக்காரனுக்கு யாத்திரையில் குதிரை தேவைப்படுவதினால் அது கிடைத்ததின்பேரில் அவன் சந்தோஷிப்பான். இந்த சந்தோஷம் அரசனுக்கு அவன் நன்றியறிந்த ஷுகுரென்றாகாது. ஏனெனில், இந்தக் குதிரை (அரசனால் கொடுக்கப்படாமல்) ஒரு காட்டில் அவனுக்கு அகப்பட்டிருந்தாலும் இதேவிதமாக அவனுக்குச் சந்தோஷம் வந்திருக்குமாதலாலென்க. இரண்டாவது:—தன்மீது அரசன் பக்ஷமாயிருப்பதினால் இது தனக்குக் கிடைத்ததென்று இவன் எண்ணுவதினாலும் இனி வேறு இனும்களும் கிடைக்குமென்று இவன் ஆசை

வைப்பதினாலும் இவனுக்குச் சந்தோஷ முண்டாவதாம். இக் குதிரை இவனுக்கு ஒரு காட்டில் அகப்பட்டிருந்தால் இவ்விதமான சந்தோஷ முண்டாகாது. ஏனெனில், இது அரசன் தன்மீது பக்ஷமாயிருக்கிறான் என்பதைக் கருதியும் இனிமேலும் அரசனால் தனக்கு இனாம் கிடைக்குமென்பதை ஆசித்தும் உண்டான சந்தோஷமேதவிர அரசனுக்காக உண்டான சந்தோஷமல்லவாதலாலென்க. இது ஷுகுரில் சேர்ந்ததேயாம். என்றாலும் குறையுள்ளதே. மூன்றாவது:—அவன் அக்குதிரைமீதேறி அரசனுடைய சமுகம் போய்ச்சேர்ந்து அவனிடத்தில் வேறு பொருளைக் கேட்க அல்ல, அவனைத் தரிசிக்க மாத்திரமே ஆசிக்கிறதினால் அவனுக்குச் சந்தோஷ முண்டாவதாம். இது அரசனுக்காக உண்டான சந்தோஷமாயும் நிறப்பமான ஷுகுராயு மிருக்கிறது.

இதுபோலவே அல்லாகுதஆலா ஒருவனுக்கு ஒரு நிஃமத்தைக் கொடுக்க அப்படிக்கொடுத்த அல்லாகு தஆலாவுக்காக அவன் சந்தோஷிக்காமல் அந்த நிஃமத்தைப்பற்றி சந்தோஷிப்பானாகில் இது ஷுகுராகாது. இனி அல்லாகு தஆலா இவன்மீது பொருத்தமும் கிருபையு முள்ளவனா யிருப்பதற்கு இந்தக் கொடையை ஒரு அத்தாட்சியெனக் கண்டு அதற்காக அவன்மீது சந்தோஷிப்பானாகில் இது ஷுகுராகும். ஆனாலும் குறையுள்ளதே. இனி இல்மைப் படிப்பதற்கும் இபாதத்தைச் செய்வதற்கும் அல்லாகுதஆலா உடைய சமுகத்தில் நெருக்கலைத் தேடுவதற்கும் எப் பராக்குமில்லாமல் ஒழித்துவைக்க இந்த நிஃமத்து ஓர் சாதனமா யிருப்பதுபற்றிச் சந்தோஷிப்பானாகில் இது நிறப்பமான ஷுகுராகும். இதற்கு அடையாளமாவது:—துன்யாவில்நின்றும் எந்தப் பொருள் அவனை வேறுபராக்கில் ஆக்குமோ அந்தப் பொருளைப்பற்றி அவன் துக்கப்படுவான். அதை ஒரு நிஃமத்தாக நினைக்கமாட்டான். மேலும், அது தன்னிடத்திலிருந்து நீக்கப்படுவதை ஓர் நிஃமத்தாக நினைப்பான். அப்படி நீக்கப்பட்டால் அதற்காக ஷுகுரு செய்வான். ஆகவே தீன்வழிக்கு உதவியாயிராத எந்த வஸ்துவின்மீதும் அவன் சந்தோஷிக்கமாட்டான். இதனாலேதான் "நீ நிஃமத்தைப் பார்க்காமல் அதைக் கொடுத்த அல்லாகு தஆலாவைப் பார்ப்பதே ஷுகுரா யிருக்கிறது" என்று ஷிப்லீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். எந்த மனிதனுக்குக் கண்ணாசை, வெட்க உறுப்பின் ஆசை, வயிற்றாசைபோன்ற பஞ்சபுல னறிப்பொருள்களிலன்றி வேறொன்றிலும் இன்பமுண்டாகாதோ அந்த மனிதனில்நின்றும்

இந்த ஷுக்ரு உண்டாக இடம்பாடில்லை. ஆகவே ஷுக்ரின் இரண்டாவது தரஜாவிலாவது அவன் இருக்கவேண்டும். ஏனெனில், முதலாவது தரஜா ஷுக்ரில் சேர்ந்ததல்லவாதலினாலென்க.

இனி ஷுக்ரின் அமலாகிறது மனதாலும் நாவாலும் சரீரத்தாலும் உண்டாகும். மனதால் உண்டாகிற அமல் யாதெனில், எல்லா ஜனங்களுக்கும் அவன் நன்மையை நாடுவதும் எவருடைய செல்வத்தையும் கண்டு எரிச்சல் கொள்ளாமலிருப்பதுமாம். நாவால் உண்டாகிற அமல் யாதெனில், அல்லாகு தஆலாவைப் புகழ்வதும் எல்லா ஹால்களிலும் அல்ஹம்து லில்லாஹ் என்று சொல்வதும் நிஃமத்தைக் கொடுத்த அல்லாகு தஆலாவின்மீது சந்தோஷத்தை வெளிப்படுத்துவதுமாம். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒரு ஸஹாபியைப் பார்த்து "நீர் எப்படி இருக்கிறீர்?" என்று கேட்டார்கள். அதற்கந்த ஸஹாபி "நான் சுகமாயிருக்கிறேன். அல்ஹம்து லில்லாஹ்" என்று சொன்னார்கள். அப்போது நாயகமவர்கள் "நான் இதையே தேடிக்கொண்டிருந்தேன்" என்றார்கள். ஸலபுகளான முன்னோர்கள் ஒருவரை யொருவர்கண்டு "நீர் எப்படி இருக்கிறீர்?" என்று கேட்பதில் கைரியத்தாக இருக்கிறேன் என்ற ஜவாபு கிடைக்கவேண்டுமென்பதையே நாடினார்கள் அதில் சொன்னவரும்கேட்டவரும் சவாபில் கூட்டாகிறார்கள். ஒருவன் அப்படிச் சொல்லாமல் குறைகூறுவானாகில் அவன் குற்றவாளியாவான். அவன் துன்பத்திலிருந்தாலும் சரியே. ஏனென்றால், தன் சுயாதீனத்தில் ஒன்றுமேயில்லாத ஒரு அற்ப அடிமையினிடத்தில் சர்வலோக ஆதினனாகிய அல்லாகு தஆலாவின்மீது குறை கூறுவதினும் வேறு அதிக கெடுதி என்ன இருக்கும்? மேலும் துன்பம் வந்ததின்பேரில் அவன் ஷுக்ரு செய்யவேண்டும். அந்த ஷுக்ரே அவனுடைய நற்பதவிக்குக் காரணமா யிருக்கலாம். அப்படி ஷுக்ரு செய்ய அவனால் முடியாதபக்ஷம் சபுராவது செய்யவேண்டும். இனி சரீரத்தால் செய்யும் அமல் யாதெனில், எல்லா அவயவங்களும் அல்லாகு தஆலாவினால் கிடைத்த பாக்கியம் என்றறிந்து அவை எதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றனவோ அதைக் கவனித்து அதன் காரியங்களைச் செய்வதாம். எல்லா உறுப்புகளும் ஆகிரத்துக்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன. நீ ஆகிரத்தின் அமலில் பராக்காகவேண்டுமென்பது அல்லாகுதஆலாவின் உவப்பான நோக்கமாயிருக்கிறது. அவன் அளித்திருக்கும் நிஃமத்தை அவனுக்கு உவப்பான காரியத்தில் செலவுசெய்வையாகில் ஷுக்ரை நிறைவேற்றினாய். ஆனால் நீசெய்த

இந்த ஷுக்குரில் (உனக்கேயன்றி) அல்லாகு தஆலாவுக்கு யாதொரு பயனும் பங்குமில்லை. அவனோ இவைகளின் தேவையில்லாத துய்யவனாயிருக்கிறான். இதற்கு உபமானமாவது : ஒரு அரசனுக்கு ஒரு அடிமையின் விஷயத்தில் கிருபாநோக்க மிருக்கிறது. அந்த அடிமையோ தூரதேசத்தி லிருக்கிறான். அந்த அடிமையை அரசன் தன் சமுகத்துக்கு வரவழைக்கவும் ராஜ சமுகத்துக்கு நெருங்குவதினால் அந்த அடிமை பெருமையை அடையவும் மேம்பாடான பதவியைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டுமெனக் கருதி அவனுக்கு ஒருகுதிரையையும் வழிக்குவேண்டிய உணவுப் பொருள்களையும் அனுப்பினான். அரசனுக்கோ அந்த அடிமை தூரத்திலிருப்பதும் சமீபத்திலிருப்பதும் சமமாகவே யிருக்கிறது. ஏனெனில், அவன் வருவதினால் அரசனுடைய ராஜ்ஜியத்தில் ஒன்று ஏறவுமாட்டாது; வாராமையினால் குறையவுமாட்டாது; என்கினும், அந்த அடிமைக்கு நன்மையான மேம்பாட்டைக் கொடுக்கவேண்டுமென அரசன் நாடுகிறான். ஏனெனில், ஒரு அரசன் தயவும் இரக்கமுமுள்ள சங்கைமானா யிருப்பானாகில் அவன் தனது நயத்தையல்ல சர்வஜனங்களின் நன்மையையே நாடுவான். ஆகவே அந்த அடிமை அக்குதிரைமீதேறி அரசனுடைய சமுகத்தை நோக்கிச் செல்லுகிறவனாயும் அந்த உணவுப் பொருள்களை வழிக்கு உபயோகப்படுத்திக்கொள்ளுகிறவனாயு மிருந்தால் அவனடைந்த நிஃமத்தான குதிரையிலும் வழியின் (உணவிலும் அரசனுக்காக நன்றியறிந்து ஷுக்குரு செய்தவனாவான். இப்படிச்செய்யாமல் அக்குதிரையின்மீது உட்கார்ந்து அரசனுடைய சமுகத்தைவிட்டும் இன்னும் அதிக தூரப்படுகிற விதமாக பிற்காட்டிச் செல்லுவானாகில் நன்றிமறந்தவனாவான். அக்குதிரையின்மீது ஏறாமலும் அரசனுடைய சமுகத்துக்கு முன்னோக்கிச்செல்லாமலும் பிற்காட்டிப் போகாமலும் அதை வெறுமையாக விட்டுவிடுவானாகில் இதுவும்நன்றிமறந்ததாகும். ஆயினும், இதுபிற்காட்டிச்செல்லும்அந்த நன்றிமறப்பைப்போல் ஆகாது. இதுபோலவே அடியான் அல்லாகு தஆலாவினுடையதிருச்சமுகத்தை அடுப்பதற்கேதுவான வணக்கத்தில் அவன்கொடுத்த நிஃமத்தான பாக்கியத்தைச் செலவு செய்வானாகில் அவன் நன்றியறிந்து ஷுக்குரு செய்தவனாயினான். அவனுடைய சமுகத்தை விட்டு அப்புறப்படும்படி அந்த நிஃமத்தைப் பாவத்தில் செலவு செய்வானாகில் நன்றி மறந்தவனாவான். முபாஹான இன்பசுகங்களில் செலவு செய்தாலும் அல்லது செலவு செய்யாமல் வெறுமையாக விட்டுவிட்டாலும் அப்போதும் நன்றிமறந்தவனென்

ருவான். பாவத்தில் செய்வதுபோல் இது அவ்வளவு நன்றிமறப் பல்லவென்றாலும் சரியே. ஆகவே ஒவ்வொரு நிஃமத்துக்கும் ஷுக்ரு என்பது அதை அல்லாகு தஆலாவுக்குப் பிரியமான காரியத்தில் செலவு செய்வதே யாதலால் அவனுக்குப் பிரியமில்லாத காரியங்களில்நின்றும் பிரியமான காரியங்களைப் பிரித்தறிந்தவனன்றி மற்றவன் இதைச் செய்யமுடியாது என்று தெரியவந்தது. இதுவோ நுணுக்கமான ஓர் அறிவாயிருக்கிறது. ஒவ்வொரு வஸ்துவிலும் நோட்டமிட்டு இது என்ன நோக்கத்தின்பேரில் உண்டாக்கப் பட்டதென்ற பூராயத்தை அறியாதவரையில் இந்த நுணுக்கம் விளங்கமாட்டாது. நாம் இந்த கிதாபில் சுருக்கமான சில உபமானங்களால் சுட்டிக்காட்டுவோம். விரிவாக அறிய விருப்பங்கொண்டவர் எஹ்யாவில் தேடிப்பார்க்கவும். இந்த கிதாபு இதற்குமேல் அதிகத்துக்கு இடந்தராது.

### நன்றிமறக்குதல் இதுவென விளக்கல்.

அறிந்துகொள்:— ஒவ்வொரு நிஃமத்துக்கும் நன்றிமறக்குதலென்பது எந்த ஆழக்கருத்தான நோக்கத்துக்கென்று அந்த நிஃமத்து ஏற்பட்டதோ அந்த நோக்கமான வழியிலிருந்து அதைத் திருப்புவதும் எதற்காக அது உண்டாக்கப்பட்டதோ அதில் அதைச் செலவு செய்யாமலிருப்பதுமாம். அறிந்துகொள்:— அல்லாகு தஆலா கொடுத்த நிஃமத்தை அவனுக்குப் பிரியமான காரியத்தில் செலவு செய்வது ஷுக்ரு என்னும் நன்றியறிதலாயும் பிரியமல்லாத காரியத்தில் செலவு செய்வது குப்ரான் என்னும் நன்றிமறக்குதலாயுமிருக்கிறது. அவனுக்குப் பிரியமல்லாத காரியத்தில்நின்றும் பிரியமான காரியத்தைச் சரியான விதமாகப் பிரித்தறிதல் ஷரீஅத்தினாலன்றி முடியாது. ஆதலால் ஷரீஅத்தின் உத்தரப்படி நிஃமத்தைச் செலவுசெய்வதே விதியாகும். ஆனால் நோட்டமுள்ளவர்களுக்கு ஓர் வழியிருக்கிறது. அந்தவழியில் நோட்டமிட்டு ஆராய்ந்து அத்தாட்சி தேடுவதினால் காரியங்களின் ஆழமான கருத்து இதுவென்பதை இல்ஹாம் என்னும் உதிப்பின் மூலமாய் அவர்கள் தெரிந்துகொள்ளுகிறார்கள். ஏனெனில், மேகத்தை உண்டாக்கினதில் ஆழ்ந்த நோக்கம் மழை என்றும், மழையை உண்டாக்கினதில் நோக்கம் புற்பூடாதி தாவரங்கள் என்றும், தாவரங்களை உண்டாக்கினதில் நோக்கம் ஜீவராசிகள் என்றும், சூரியனை உண்டாக்கினதில் நோக்கம் களையாறும்பொருட்டு இரவும் ஜீவனோபாயம் செய்யும்பொருட்டுப் பகலும் தோன்றல் என்றும் ஒருவன் அறிந்துகொள்ளக் கூடும்.

இவைகளும் இவைபோன்றவைகளும் எவர்க்கும் தெரியுமென்பது
திண்ணம். ஆயினும் சூரியனில் இவைகளுக்குப் புறம்பான வேறு
அநந்தம் ஆழ்ந்த க்ருத்துகளான பூராயங்க ளிருக்கின்றன. வானத்
தின்மீது அநந்தம் நக்ஷத்திரங்கள் இருக்கின்றன. அவைகளை உண்
டாக்கினதில் கருதிய நோக்கமென்ன வென்பது ஒவ்வொருவருக்
கும் தெரியமாட்டாது. எதுபோலெனில்,மனிதனுக்குள்ள அவயவங்
களில் கையானது ஒன்றை எடுப்பதற்கென்றும், காலானது நடப்
பதற்கென்றும், கண்ணானது பார்ப்பதற்கென்றும் ஒவ்வொருவனும்
அறிவான். ஆனால் ஈரல் மண்ணீரல் இவை எதற்காகப் படைக்கப்
பட்டனவென்பதும் கண்ணில் பத்து படுதாக்கள் உண்டாக்கப்படு
வானேன் என்பதும் சிலருக்குத் தெரியாமலிருக்கும். பின்னர் இவை
களிற் சில பூராயங்கள் நுணுக்கமானவைகளாயும் இன்னும் சில
பூராயங்கள் அதினும் மிக நுணுக்கமானவைகளாயுமிருக்கும். அவை
களை கவாஸ்ஸு என்னும் சிறந்த ஜனங்களேயன்றி மற்றவர் அறிய
மாட்டார். இதை விரித்தால் பெருகும். ஆயினும் அடியிற் சொல்லு
மவ்வளவையாவது அறிவது மிக அவசியமாம். அதாவது:—

மனிதனை துன்யாவுக்காக அல்ல; ஆகிரத்துக்காக உண்டாக்கி
யிருக்கிறது. துன்யாவில் எதுவொன்று மனிதனுடைய பங்காயிருக்
கிறதோ அது ஆகிரத்துடைய வழியின் தங்கரிப்பாக* அவனுக்குப்
படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எல்லா வஸ்துக்களும் மனிதனுக்
காகவே படைக்கப்பட்டிருக்கின்றன என்று அவன் எண்ணுவது
கூடாது. ஏனெனில், அப்படி அவன் எண்ணுகிறபக்ஷம் யாதொரு
வஸ்து அவனுக்குப் பயன்படாமலிருப்பதை அவன் காணும்போது
இதை எதற்காக அல்லாகு தஆலா படைத்தான் என்று சொல்லு
வான். உதாரணமாக:—ஈ எறும்புகளை ஏன் உண்டாகினான் என்றும்
பாம்பை எதற்காகப் படைத்தான் என்றும் அதிசயப்படுவான்.
(அப்போதவன் தன் மனதோடு பிணங்கி) "நீ எறும்பை வீணாக
உன் காலால் மிதித்துக் கொன்றுபோடுகிறாயாதலால் உன்னை ஏன்
அல்லாகு தஆலா படைத்தான் என்று அந்த எறும்பும் ஆச்சரியப்
படுகிறது. அது ஆச்சரியப்படுவது போன்றதுதான் நீ ஆச்சரியப்
படுவதும் என்று சொல்லவேண்டும். இதுவுமன்றி ஜீவவர்க்கம்
மூலவர்க்கம், தாதுவர்க்கம் முதலியவைகளில்நின்றும் வகை வகை
யான எல்லாப்பொருள்களிலும் எந்தெந்தப்பொருள் உண்டாக இட
மிருந்ததோ அவைகளை மிகவும் நல்லவிதமாக உண்டாக்குவதும்
பின்பு அவைகளின் அவசியத்துக்குத் தகுந்தபடி அந்தஸ்து, அழகு,

அலங்காரம் இவைகளைக் கொடுப்பதும் அல்லாது தஆலா உடைய
அருளின் பூரணத்தன்மைக்கு அகத்தியம் வேண்டியதென்றும், அந்
தச் சமுகத்தில் தடையும் பகீல்தனமென்னும் உலோப குணமும்
இல்லை என்றும் அவன் அறியவேண்டும். ஓரிடத்தில் பூரணத்தன்மை
அழகு இவை உண்டாகாத பக்ஷம் அதற்குக் காரணம்; அந்த இடத்
தில் அதை ஏற்கும் தகுதியில்லாமையேயாம். அத்தகுதியில்லா
மைக்குக் காரணம்; அதற்கு நேர்மாறான பொருளுடன் அது பராக்
காயிருப்பதேயாம். அதற்கு நேர்மாறான பொருளை உண்டாக்கினதி
லும் ஏதோ ஓர் காரியம் நாடப்பட்டிருக்கலாம். நெருப்பானது
தண்ணீரின் குளிர்ச்சியையும் அதன் மிருதுவையும் ஏற்பது அசாத்
தியம். ஏனெனில் சூடானது குளிர்ச்சிக்கு நேர்மாறானதாகையால்
குளிர்ச்சியை சூடு ஏற்காது. நெருப்பினது சூடும் ஓர் காரிய நோக்க
மாக உண்டாக்கப்பட்டதாகையால் நெருப்பிலிருந்து அதை நீக்குவ
தும் ஓர் தோஷமாம். உண்மையில் எந்த ஈரத்திலிருந்து அல்லாது
தஆலா ஈயை ஜனிப்பித்தானோ அந்த ஈரத்திலும் ஈ மிகச்சிறந்ததா
யிருப்பதினாலேயே அதிலிருந்து அதை (ஈயை) உண்டாக்கினான்.
இந்தச் சிறப்பை ஏற்பதாயிருந்த ஈரத்துக்கு இதை ஏற்காதபடி
அதைத் தடுக்கவில்லை. அப்படித் தடுப்பது பகீல்தனமென்னும்
உலோபகுணத்தைச் சேர்ந்ததாகும். ஈரத்திலும் ஈ மிகச் சிறந்ததா
யிருப்பது ஏதனாலென்றால், அதில் உயிரும் சக்தியும் அறிவும் ஆட்ட
மும் அதிசயிக்கத்தக்க உருவமும் அவயவங்களு மிருப்பதினாலெ
ன்க. அந்த ஈரத்தில் இவை கிடையா. அந்த ஈரத்திலிருந்து மனி
தனை ஏன் உண்டாக்கவில்லையென்றால், அது மனித உற்பத்திக்கு
இடந்தராததாயும் அதை ஏற்கும் தகுதியற்றதாயு மிருப்பதினாலே
யாம். ஏனெனில் மனித உற்பத்திக்கு அகத்தியம் வேண்டிய குணங்
களுக்கு நேர்மாறான குணங்கள் அதிலிருப்பதினாலென்க. ஆனால்
ஈ என்னும் ஜந்துவுக்கு என்னென்ன தேவையா யிருந்தனவோ
அவைகளை அதற்குக் கொடாமலிருக்கவில்லை. இறக்கை, சிறகு, கை,
கால், தலை, வயிறு, இரைசெல்லும் இடம், இரை தங்கிச் செமிக்கும்
இடம், அதிலிருந்து வெளிப்படும் இடம் இவைகளைப் படைத்தான்.
இன்னும் அதன் உடம்புக்குச் சிறுமை, மிருதுவு, இலேசு இவை
எப்படி வேண்டுமோ அப்படியாக அதற்குக் கொடாமலிருக்கவில்லை.
இன்னும் அதற்குக் கண் தேவையாயிருந்ததினாலும் அதன் சிறிய
தலையில் இமையுள்ள கண்கள் அமைக்க இடமில்லாததினாலும்
இமைகளில்லாத இரண்டு விழிகளை இரண்டு கண்ணாடிகள் போல

அமைத்தான். ஏனெனில் உருவங்கள் அதற்குத் தெரிவதற்கும் அது பார்க்கவுமேயாம். இமைகள் எதற்காக அமைக்கப்படுகின்றன என்றால் கண்ணில் தூசி படும்போது அவைகளால் துடைத்துச் சுத்தப்படுத்திக்கொள்ளவும், சாணை (செப்புக்) கண்ணாடியைத் துலக்குவது போல் அந்த இமைகள் கண்ணைத் துலக்கவுமாமென்க. ஈக்கு இமைகளில்லாதபடியால் அவற்றிற்குப் பதிலாக இரண்டு கைகளை அதற்கு அதிகமாகக் கொடுத்தான். அவைகளால் அது நிமிஷந்தோறும் இரண்டு விழிகளையும் துடைத்துச் சுத்தப்படுத்திக் கொள்ளுகின்றது. பின்பு இரண்டு கைகளையும் ஒன்றாகச் சேர்த்து அவைகளில் படிந்த தூசிபோகும்படி துடைத்துப்போடுகிறது.

இதை எதற்காகச் சொன்னதென்றால், அல்லாகு தஆலாவுடைய கிருபையும் அன்பும் அருளும் சமஸ்தத்துக்கும் பொதுவாயிருக்கிறதென்றும் மனிதனுக்கு மாத்திரம் சொந்தமல்லவென்றும் நீ அறிவதற்கேயாம். ஒவ்வொரு கிருமிக்கும் கொசுவுக்கும் என்னென்ன தேவையாயிருந்தனவோ அவை யெல்லாவற்றையும் பூர்த்தியான விதமாகக்கொடுத்திருக்கிறான். ஒரு யானைக்கு எந்த உருவத்தை ஆக்கினானோ அதே உருவத்தைக் கொசுவுக்கும் அமைத்தான். இப்படி ஆக்கினது மனிதனுக்காக அல்ல. ஏனெனில் அல்லாகு தஆலா உன்னை உனக்காகப் படைத்திருப்பதுபோல் மற்றவைகளையும் அவ்வவற்றிற்காகவே படைத்திருக்கிறான். மற்றவைகள் எப்படியோ அப்படியே நீயும் உற்பத்தி காலத்துக்குமுன் யாதொரு வசீலாவும் வம்சமும் இல்லாதவனாயிருந்தாய். உனக்கு வசீலா யிருந்திருக்கிறபக்ஷம் அதனால் நீ சிருட்டிக்கப்படுவதற்குப் பாத்தியஸ்தனாயிருக்கலாம். ஏனெனில் மற்றவைகளில் அந்த வசீலா இல்லாமையினாலென்க. ஆனால் அல்லாகு தஆலாவுடைய அருள் என்னும் சமுத்திரத்தில் எல்லாப் பொருள்களும் இருந்தபோது அந்தச்சமுத்திரம் அவையெல்லாவற்றையும் சூழ்ந்திருந்தது. அந்தப் பொருள்களில் நீயுமொருவன், ஈயுமொன்று, எறும்புமொன்று, யானையுமொன்று, பறவையுமொன்று, இவைபோல் மற்றவைகளுமாம். இந்தச் சிருட்டிகளில்நின்றும் எது குறைந்த தன்மையை உடைத்தாயிருக்கிறதோ அது பூரணத்தன்மையுள்ளதின்மேல் பலியாக்கப்படுகிறது. பூமியின்மீதிருக்கும்பொருள்களெல்லாவற்றிலும் மனிதன் மிகவும் பூரணத்தன்மையுள்ளவனாயிருப்பதால் அப்பொருள்களில் பெரும்பான்மையானவை அவனுக்குப் பலியாகவேண்டிய தவசியமேயாம், ஆனால் பூமிக்குக் கீழும் சமுத்திரத்தின் ஆழத்திலும் அநேகம் பொருள்க ளிருக்கின்றன.

அவைகளில் மனிதனுக்கு யாதொரு பங்குமில்லை. அவைகளின் வெளியரங்க அந்தரங்கங்களை (உடல், உயிர்களை) உண்டாக்கினதிலும் இதே அருள் புரியப்பட்டிருக்கிறது. அவைகளின் வெளியரங்க உருவங்களில் எவராலும் எழுதமுடியாத அவ்வளவு சித்திரவிசித்திரங்களை எழுதியிருக்கவும் கூடும். இதை அறிவதற்குச் சில சாஸ்திரங்களான சமுத்திரங்களில் இறங்கநேரிடும். அந்த சாஸ்திரங்களை அநேக உலமாக்கள் அறியமாட்டாதவர்களாயிருப்பார்கள். அதை விரித்தால் பெருகும். மொத்தக்கருத்து என்னவென்றால், உன்னை நீ அல்லாகு தஆலாவுடைய சமுகத்தில் அங்கீகரிக்கப்பட்ட மஹறான்களில் ஒருவனாக மதித்துக்கொள்ளாமலும் எல்லா வஸ்துக்களையும் உனக்காகவே படைத்திருக்கிறதென்று நீ எண்ணிக்கொள்ளாமலும் ஒருவஸ்துவில் உனக்குப் பிரயோசனமில்லாவிட்டால் இதை ஏன் படைத்தான்? இதில் ஏதும் பயனில்லை என்று நீ சொல்லாமலும் இருக்கவேண்டுமென்பதுதான்.

எறும்பை உனக்காகப் படைத்திருப்பதில்லையென்று இப்போது நீ தெரிந்துகொண்டாயாகையால் இதுபோலவே சூரிய சந்திர நக்ஷத்திரங்களையும் வானங்களையும் வானவர்களையும் உனக்காகப் படைத்திருப்பதில்லையென்று நீ எண்ணிக்கொள். அவைகளில்நின்றும் சிலவற்றில் உனக்கு ஏதோ பிரயோசனமிருந்தாலும் சரியே. உதாரணமாக:—ஈயை உனக்காகப் படைக்கவில்லை, என்றாலும் அதனால் உனக்குப் பிரயோசனமிருக்கிறது. அதென்னவென்றால், எப்போது ஒருவஸ்து அருவருப்பான வாசனையடைந்து நாற்றமெடுக்க ஆரம்பிக்கின்றதோ அப்போது அந்த நாற்றம் நீங்கும்படி அதைத் தின்பதற்காக ஈயை எழுப்புகிறான். இதுபோலவே கஸாய்க்காரனை ஈக்களுக்காகப் படைக்கவில்லை. என்றாலும் ஈக்களுக்கு அவனால் பிரயோசனமிருக்கிறது. சூரியன் தினந்தோறும் உனக்காக உதயமாகிறதென்று நீ எப்படி நினைக்கிறாயோ அப்படியே ஈக்களும் கஸாய்க்காரன் தினந்தோறும் அவற்றிற்காகக் கடைவைக்கிறானென்றும், அதனால் அவை இரத்தமும் அருவருப்புகளுமான ஆகாரத்தை உறிஞ்சிக்குடித்து திருப்தியடைகின்றன என்றும் நினைக்கின்றன. கஸாய்க்காரனுடைய வேலையின் கழிவுகள் ஈக்களுக்கு ஆகாரமாயும் ஜீவனமாயும் இருந்தபோதிலும் அந்த ஈக்களின் ஞாபகமே இல்லாமல் கஸாய்க்காரன் வேறு காரியத்தில் பராக்காயிருப்பதுபோல் சூரியனும் தனது சுற்றலில் உன் ஞாபகமேயில்லாமல் அல்லாகு தஆலா அதற்கிட்ட பணிவிடையில் பராக்காயிருக்கிறது. அதனுடைய ஒளி

யின் கழிவுகளால் உன் கண்ணில் பார்வையுண்டானாலும் அதனுடைய உஷ்ணத்தின் கழிவுகளால் பூமியின் சுபாவம் சரிப்பட்டு உனக்கு ஆகாரமாகிற தாவர வஸ்துக்களை அது முளைப்பித்தாலும் சரி.

ஷுக்குரின் பொருளை விளக்குவதற்காக உன்னோடு சம்பந்தமில்லாத ஒரு வஸ்துவை உண்டாக்கினதில் நோக்கமிதுவென்று நாம் விரித்துச்சொல்வது உபயோகப்படாது. உன்னோடு சம்பந்தமுள்ள வஸ்துக்களும் அநேகமாயிருக்கின்றன. அவை யெல்லாவற்றையும் சொல்லமுடியாது. உதாரணங்களாகச் சிலவற்றைக் கூறுகின்றோம்.

கண்ணை அல்லாகுதஆலா உனக்கு இரண்டு காரியங்களுக்காகக் கொடுத்தான். அக்காரியங்களில் ஒன்று: நீ இவ்வுலகத்தில் உனக்கு வேண்டியவைகளின் வழியைத் தெரிந்துகொள்வதும், மற்றொன்று: அல்லாகு தஆலாஉடைய படைப்புகளின் விநோதங்களைப் பார்த்து அதனால் அவனுடைய மகிமையைத் தெரிந்துகொள்வதுமாம். எவர்களைப் பார்ப்பது ஆகாதோ அவர்களில் உன் பார்வையைச் செலுத்துவாயாகில் கண் என்னும் பாக்கியத்தின் நன்றியை அறியாது மறந்தவனாவாய். இதுவுந்தவிர சூரிய வெளிச்சமின்றி நீ பார்க்கமாட்டாயாகையால் சூரியனில்லாமல் உன் கண்ணினது பாக்கியம் பூர்த்தியாகாது. சூரியனோ வானம் பூமிகளின்றிக் காணப்படுவது அசாத்தியம். ஏனெனில் வானம் பூமிகளினாலேயே இரவு பகல்கள் உண்டாகவேண்டும். நீ இந்த ஒரு கெட்ட பார்வையினால் கண்ணும் சூரியனுமான பாக்கியத்தின் நன்றியையும் வானம்பூமிகளான பாக்கியத்தின் நன்றியையும் அறியாமல் மறந்தவனானாய். இதனாலேதான் "ஒருவன் பாவஞ்செய்தால் பூமியும் வானமும் அவன்மீது லகுனத்து செய்கின்றன" என்று ஹதீஸில் வந்திருக்கிறது.

இனி உனக்குக் கையைக்கொடுத்தது எதற்கென்றால், அதனால் நீ யுன் வேலைகளைச் சரிப்படுத்திக்கொள்ளவும் உணவை எடுத்து உட்கொள்ளவும் உடப்பைக் கழுவிச் சுத்தப்படுத்திக்கொள்ளவும் இன்னுமிவைபோன்றவைகளைச் செய்துகொள்ளவுமேயாம். அதனால் நீ பாவத்தைச்செய்வாயாகில் பாக்கியத்தின் நன்றியை மறந்தவனாவாய். உதாரணமாக:—மலபாதை சுத்தியை வலதுகையால் செய்து குருஆனை இடதுகையால் எடுப்பாயாகில் நன்றியை மறந்தாய். ஏனெனில், அல்லாகுதஆலாவுக்குப் பிரியமான காரியத்தினின்றும் நீ அப்புறப்பட்டதினாலேயாம். நீதம் அல்லாகு தஆலாவுக்குப் பிரியமான

காரியம். மேன்மையுள்ளதை மேன்மையுள்ளதற்கும் தாழ்மையுள்ளதைத் தாழ்மையுள்ளதற்கும் உரித்தாக்குவதுதான் நீதம். உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இரண்டு கைகளில் ஒன்றை (வலதுகையை)ப் பெரும்பாலும் மிக வலுவுள்ளதாகப் படைத்தான். ஆதலால் அது மிகவும் மேன்மையுள்ளதாயிருக்கிறது. உன் காரியங்களும் இருவகைப்பட்டு அதில் ஒருவகை மேன்மையுள்ளனவாயும் மற்றொரு வகை தாழ்மையுள்ளனவாயுமிருக்கின்றன. ஆகவே மேன்மையுள்ள வேலைகளை வலதுகையினாலும் தாழ்மையுள்ள வேலைகளை இடதுகையினாலும் நீ செய்யவேண்டும். அப்போது நீ நீதமாய் நடந்துகொண்டவனாவாய். இல்லாவிட்டால் புத்தி பூராயத்தையும் நீதத்தையும் நடுவிலிருந்து நீக்கிவிட்டவனாயிருப்பாய்.

எச்சிலை கிப்லாவின்பக்கம் துப்புவாயாகில் திசைகளும் கிப்லாவுமான பாக்கியத்தின் நன்றியை அறியாது மறந்தவனாய்ப் போனாய். ஏனெனில் எல்லாத் திசைகளும் சமமாகமாட்டா. அல்லாகுதஆலா உனது நன்மைக்காக அந்தத் திசைகளில் ஒன்றை மேன்மையுடையதாக்கினான்; ஏனென்றால், தொழுகையில் அதன் பக்கம் நீ முகம் நோக்கவும் அது உன் மனவோர்மைக்கும் அமைதிக்கும் காரணமாகவுமேயாம். இதுவுமன்றி அத்திசையில் கட்டியிருக்கும் கஃபா என்னும் கட்டிடத்தை அவன் தன் வீடென்றும் சொல்லியிருக்கிறான். மலத்துக்கிருப்பதும் எச்சில் துப்புவதும்போன்ற சில இழிவான செயல்களும் ஒலுச்செய்வதும் தொழுவதும்போன்ற சில மேலான செயல்களும் உன்னால் நிகழ்கின்றன. எல்லாவற்றையும் நீ சமமாக்குவாயாகில் மிருகம்போல் ஜீவிக்கிறவனாயிருப்பாய். இதுவுமன்றி நீதம் நன்னறிவு இவை உதிப்பதற்கு இடமாயிருக்கிற புத்தி என்னும் பாக்கியத்தின் ஹக்கையும் கிப்லா என்னும் பாக்கியத்தின் ஹக்கையும் பழுதாக்கினவனாயுமிருப்பாய்.

இன்னும் உனக்குத் தேவையில்லாமலிருக்க ஒரு மரத்திலிருந்து ஒரு கிளையை முறிப்பாயாகில் அல்லது ஒருமொக்கைப் பறிப்பாயாகில் கை என்னும் பாக்கியத்தையும் மரம் என்னும் பாக்கியத்தையும் பழுதாக்கினவனாவாய். ஏனெனில் அல்லாகுதஆலா அந்தக் கிளையை உண்டாக்கி அது தன் ஆகாரத்தை கிரகிப்பதற்காக அதில் நரம்புகளை அமைத்திருக்கிறான். இன்னும் அந்தக் கிளை பூராவாக வளர்ந்தால் அது எந்த வேலைக்கு உதவுமோ அந்த வேலையைக் கருதி அதில் ஆகாரம் ஏற்கும் சக்தியையும் வேறு சக்திகளையும் படைத்திருக்கிறான். அதன்மீது நீ அக்கிரமமாக வழிபறி செய்வாயாகில் இது நன்றியறியாமை என்றாகும். ஆயினும் உனது பூரணத்

தன்மைக்கு அது தேவையாயிருந்தால் அப்போது அதன் பூரணத்தன்மை உனது பூரணத்தன்மையின்மேல் பலியாய்விடும்; ஏனெனில் நாகிஸ் என்னும் குறைந்த தன்மையுள்ளது காமில் என்னும் பூரணத்தன்மையுள்ளதின்மேல் பலிசெய்யப்படுவது நீதமாதலினாலென்க. அந்த மரம் மற்றொருவனுடைய சுயாதீனமாயிருந்து அதை நீ முறிப்பாயாகில் அது உனக்குத் தேவையாயிருந்தபோதிலும் நீ முறிப்பது நன்றி அறியாமையென்றாகும். ஏனெனில் உன் தேவையினும் உடையவனுடைய தேவை முற்படுத்தப்பட்டதாயும் மேலாகப்பட்டதாயுமிருக்கிறதினாலென்க.

உண்மையில் அடியானுக்கு அவ்வளவாக ஏதும் சுவாதீனமில்லை. என்றாலும் துன்யாவானது; விரித்திருக்கிற ஓர் சுபுராவைப்போலிருக்கிறது. துன்யாவிலுள்ள பாக்கியங்கள் அந்த சுபுராவின்மேல் வைத்திருக்கிற பலவகையான உணவுகள்போலிருக்கின்றன. அல்லாஹு தஆலாஉடைய அடியார்கள் அந்த சுபுராவின்மீது விருந்தாளிகள்போலிருக்கிறார்கள். இவர்களில் ஒருவருக்கும் அவற்றில் ஒன்றும் சுயாதீனமல்ல. ஆனால் அந்த உணவுகளில் ஒவ்வொரு பிடியும் அவரவரைத் திருப்திகரப்படுத்தாதநிமித்தம் ஒரு விருந்தாளி தன் கையில் எடுத்துக்கொண்டதையோ அல்லது வாயில் இட்டுக்கொண்டதையோ பிடுங்கிக்கொள்ள மற்றொரு விருந்தாளிக்குப் பாத்தியமில்லை. (இந்த பாத்தியம்போன்றதுதான் அடியார்களுடைய பூரத்தியமும்) இதற்குமேல் அதிக பாத்தியம் அடியார்களுக்கு ஒன்றுமில்லை. உணவையெடுத்து ஒருவருடைய கைக்கும் எட்டாத ஓர் இடத்தில் வைத்துவிட விருந்தாளிகளுக்கு எப்படி பாத்தியமில்லையோ அப்படியே துன்யாவில் தன் தேவைக்குமேல் மிச்சமாயிருக்கிற பொருளை ஏழைகளுக்கு ஈயாமல் பதனப்படுத்தி வைக்கவும் சேர்த்துவைக்கவும் எந்த அடியானுக்கும் பாத்தியமில்லை. ஆயினும் இது வெளிப்படையான பத்வாவில் வராது. ஏனெனில் அவரவருடைய தேவையின் அளவு அறியப்படாததினாலென்க. நாம் இந்த வழியை விசாலமாகத் திறந்துவிடுவோமாகில் ஒவ்வொருவனும் மற்றொருவனுடைய பொருளையெடுத்துக்கொண்டு இது அவனுக்குத் தேவையில்லையென்று சொல்லத் துணிவான். ஆகவே அவசரநிமித்தமாக நாம் இதை விட்டுவிட்டோம். ஆனாலும் மிச்சத்தை இப்படிப் பதனப்படுத்துவது (பொருளில் கருதிய நோக்கமான) பூராயத்துக்கு விரோதமேயாம்.

இதற்காகவே பொருள் சேர்ப்பது கூடாதென்றும் அதிலும் சொந்தயாக ஜனங்களுக்கு உணவாயிருக்கிற தானியத்தைச் சேர்த்து

வைப்பது கூடாதென்றும் விலக்கப்பட்டிருக்கிறது. யாராவதொருவன் தானியம் கிராக்கியான பிறகு அதிக லாபத்துக்கு விற்கலாமென்ற நிய்யத்துடன் அதைச் சேர்த்துவைப்பானாகில், அவன் அல்லாகு தஆலாவுடைய லஃனத்துக்குள்ளாவான். மேலும் தானியத்தில் ஒருவன் வர்த்தகம் செய்வானாகில் அதாவது தானியத்தைத் தானியத்துக்கு வட்டியின்பேரில் விற்பானாகில் அவனும் லஃனத்துக்குள்ளாவான். ஏனென்றால் அது ஜனங்களுக்கு உணவாயிருக்கிறது. அதனால் விற்கல் வாங்கல் செய்கிறபக்ஷம் அது கட்டுப்பட்டிருக்கும் ஏழைகளுக்குச் சீக்கிரத்தில் கிடைக்க ஏதுவில்லாமற்போம்.

இந்த வர்த்தகம் பொன் வெள்ளிகளிலும் ஹராமாயிருக்கிறது. ஏனெனில் அல்லாகு தஆலா பொன் வெள்ளிகளை இரண்டு ஹிக்மத்தான நோக்கமாக உண்டாக்கினான். அதில் ஒரு ஹிக்மத்தாகிறது: அவைகளால் மற்றும் சரக்குகளின் விலை அறியப்படவேண்டுமென்பதாம். ஏனெனில் ஒரு குதிரை எத்தனை அடிமைகளுக்குப்பதிலாக விற்கப்படுமென்பதும் ஒரு அடிமை எத்தனைப் பிடவைகளுக்குப்பதிலாக விற்கப்படுவான் என்பதும் எவர்க்குந் தெரியாது. இவைகளையெல்லாம் ஒன்றை மற்றொன்றுக்கு விற்கவேண்டியதாயிருக்கிறது. ஆதலால் இவை எல்லாவற்றையும் மதிப்பினால் விலையிட்டறியு ஒருபொருள் அவசியமாயிற்று. ஆகவே அதற்காக அல்லாகு தஆலா பொன் வெள்ளிகளைப் படைத்தான். அதுவோ ஒவ்வொரு சரக்கின் அளவை அறிவிக்கின்ற ஒரு அதிகாரிக்குச் சமானமாயிருக்கிறது. ஒருவன் அதைப் பொக்கிஷத்தில் சேர்த்துவைப்பானாகில் முஸ்லிம்களின் அதிகாரியாயிருக்கிற ஒரு தலைவனைப் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்தவன்போலாவான். இன்னும் யாராவதொருவன் அவைகளால் கூஜா, ஆப்தாபா முதலிய பாத்திரங்களைச் செய்வானாகில் அந்த அதிகாரியைச் சுமை தூக்குகிற வேலையிலும் நெசவு வேலையிலும் வைத்தவன்போல் ஆவான். ஏனெனில் கூஜாவானது தண்ணீர் வைத்துக்கொள்ளுகிற ஓர் பாத்திரமாயிருக்கிறது. இதை மண்ணாலும் செம்பாலும் செய்துகொள்ளக்கூடும். இனி மற்றொரு ஹிக்மத்தாகிறது: பொன், வெள்ளி இவ்விரண்டும் ஆசிக்கப்படுகிற அரிய இரண்டு இரத்தினங்களாயிருக்கின்றன வென்பதாம். ஏனெனில் இவைகளால் எல்லா வஸ்துக்களும் கைவசமாகின்றன. எல்லா ஜனங்களும் இவைகளை இச்சிக்கிறார்கள். ஏனென்றால் பணமுள்ளவன் பலவுமுள்ளவனாதலினாலென்க. இதுவுமன்றிப் பிடவைகள் வைத்திருப்பவனுக்குத் தானியம் தேவையானாலும் தானியம் வைத்திருப்

பவனுக்குப் பிடவைகள் தேவையில்லாமல் போவதுமுண்டு. ஆத லால் பிடவைக்காக இவன் தன் தானியத்தை விற்கமாட்டான். அல் லாஹு தஆலா பொன் வெள்ளிகளைப்படைத்து அவைகளால் முஆம லாத்தென்னும் வர்த்தக நடவடிக்கைகள் நடந்து வரவேண்டிய நிமி த்தம் அவைகளை ஜனங்களுக்குப் பிரியமுள்ளவைக ளாக்கினான். எதார்த்தத்திலோ வெள்ளி பொன்களில் மனிதர்களுக்கு யாதொரு வேண்டுதலுமில்லை. அப்படியிருந்தும் அவற்றால் எல்லா வேண்டு தல்களையும் பெற்றுக்கொள்ளுகிறார்கள். பின்னர் பொன்னுக்குப் பொன்னையும் வெள்ளிக்கு வெள்ளியையும் விற்கத்தொடங்குவார்க ளாகில் இரண்டும் ஒன்றோடொன்று பராக்காய் ஒன்று மற்றொன் றில் கட்டுண்டிருக்கும். அப்போது மற்றும் காரியங்கள் நடந்துவரா அவை சாதனமாயிரா.

ஆகவே ஷரகில் யாதொரு காரியம் ஆழ்ந்த கருத்தான ஹிக் மத்துக்கும் நீதத்துக்கும் அப்புறப்பட்டிருக்கிறதாக நீ நினைக்காதே. மேலும் ஷரகில் ஏற்பட்டிருப்பவைகளில் ஒவ்வொன்றும் எப்படி யிருக்கவேண்டுமோ அப்படியே இருக்கிறது. ஆனால் அவைகளிற் சில ஹிக்மத்துகள் நபிமார்களேயன்றி மற்றவர் அறியக்கூடாதபடி அவ்வளவு நுணுக்கமானவைகளா யிருக்கின்றன. இன்னும் சில ஹிக் மத்துகளைப் பெரிய உலமாக்கள் தவிர மற்றவர் அறியாதவர்களா யிருக்கிறார்கள். எந்த ஆலிம்கள் விஷயங்களை (விசாரணையின்றி)த் தக் லீதினாலும் வெளியுருவத்தினாலும் தெரிந்தெடுக்கிறார்களோ அந்த ஆலிம்கள் அரைகுறையுள்ளவர்களாயும் சாமானிய ஜனங்களுக்கு அடுத்தவர்களாயு மிருக்கிறார்கள். எவர்களாயினும் இந்த ஹிக்மத்து களை அறிவார்களாகில் புக்கஹாக்கள் எதை மக்ரூஹ் என்று எண்ணுகிறார்களோ அதை அவர்கள் ஹராம் என்று எண்ணுவார் கள். பெரியோர்களில் ஒருவர் மறதியாகத் தமது இடது காலை முத லில் பாதரட்சையில் மாட்டினதற்காக (அதையுமோர் பெருக்குற்ற மாகஎண்ணி) அந்தக்குற்றம் நிவர்த்தியாகும் பொருட்டு அவர் அநே கம் கோதுமை மூட்டைகளை சதகா செய்தார். ஆனால் ஒரு சாமானி யன் ஒரு மரத்திலிருந்து ஒரு கிளையை முறிப்பானாகில் அல்லது கிப் லாபக்கம் எச்சில் துப்புவானாகில் அல்லது இடதுகையால் குருஆனை எடுப்பானாகில் அதைப்பற்றி கவாஸ்ஸு என்னும் சிறந்த ஜனங்க ளிடத்தில் நாம் ஆக்ஷேபிப்பதுபோல் அவ்வளவாக அந்தச்சாமானிய னிடத்தில் ஆக்ஷேபிக்கமாட்டோம். சாமானியன் தனது குறைந்த தன்மையினால் அந்தக் குற்றத்தைச் செய்தான். அவன் மிருகங்களு

க்கு அடுத்திருக்கிறான். இக்காரியங்களின் பூராயத்தை அறிய அவனுக்குச் சக்தியில்லை. இப்படியான நுணுக்கங்கள் ஒன்றும் அவனில் வெளியாகாதபடி அவனுடைய நடவடிக்கைகள் தாமே அந்த நுணுக்கங்களைவிட்டும் தூரப்பட்டிருக்கும். அதெப்படியென்றால், வெள்ளிக்கிழமையன்று ஜும்ஆத் தொழுகைக்குப் பாங்கு சொல்லுகிற நேரத்தில் ஒருவன் ஒரு அடிமையல்லாத சுதந்திரனை விற்பானாகில் இந்தநேரத்தில் விற்பது மக்ரூஹு என்பதற்காக ஒருவன் அவனைக் கடிந்துபேசமாட்டான். ஏனெனில் அடிமையல்லாத சுதந்திரனை விற்கும் பாவமானது இந்த மக்ரூஹை மறைத்துவிடும். இன்னும் ஒருவன் மஸ்ஜிதுடைய மிஹ்ராபில் கிபுலாவின் பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டு மலபாதைக்கிருப்பானாகில் அவன் கிபுலாபக்கம் முதுகைத்திருப்பினதற்காகக் கோபம்வர இடமிராது. ஏனெனில் அவன் செய்கிற அந்தப் பாவச்செயலில் இந்த நுணுக்கம் வெளியாகாதபடி அது அவ்வளவு கெட்டதாயிருக்கிறது. சாமானிய ஜனங்களின் காரியங்களை இலேசுபடுத்தினதற்குக் காரணம் இதுதான். வெளிப்படையான பத்வா சாமானியருக்கேயாம். ஆனால் ஆகிரத்துடைய வழியில் நடக்கும் யோகியானவன் வெளிப்படையான பத்வாவைப் பார்க்காமல் இந்த நுணுக்கங்களை நோட்டமிடவேண்டும். அப்போது அவன் நீதத்தினாலும் நுண்ணறிவான ஹிக்மத்தினாலும் மலக்குகளுக்கு அடுத்திருப்பான். இல்லாவிட்டால் இலேசை எடுப்பதினால் சாமானியர்களைப்போல இவனும் மிருகங்களுக்கு அடுத்திருப்பான்.

## நிகுமத்தென்னும் பாக்கியம் அல்லது செல்வம் இதுவென அதன் ஹகீகத்தை விளக்கல்.

அறிந்துகொள்:—அல்லாகு தஆலா மனிதனுக்காக எதை உண்டாக்கினானோ அது நான்கு வகைப்பட்டிருக்கிறது. முதலாவது வகை:- இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் பிரயோசனப்படுவதாம். எதுபோலெனில், இல்மாகிய அறிவும் நற்குணமும்போலென்க. இவ்வுலகத்தில் இதுதான் உண்மையில் நிகுமத்தாயிருக்கிறது. இரண்டாவது வகை:—ஈருலகத்திலும் நஷ்டப்படுத்துவதாம். எதுபோலெனில், ஜஹ்லு என்னும் மூடமாகிய அறிவின்மையும் துர்க்குணமும்போலென்க. உண்மையில் பலா (துன்பம்) என்பது இதுதான். மூன்றாவது வகை:—இவ்வுலகத்தில் சுகமும் அவ்வுலகத்தில் துன்பமுமாயிருப்பதாம். எதுபோலெனில், துன்யாவுடைய செல்வப்பெருக்கும் அதனால் இன்பம் பாராட்டுவதும் போலென்க. இது மூடர்களிடத்தில் நிகுமத்தாயும் அறிவாளர்கள், ஆரிபுகள் இவர்களிடத்தில் பலா

வாயுமிருக்கிறது. இதற்கு உவமானம்: பசியாளியாயிருக்கிற ஒருவன் தேனை அடைவதுபோலவும், ஆனால் அதில் விஷங்கலந்திருப்பது போலவுமாம். அவன் மூடனுயும் அதில் விஷங்கலந்திருப்பதை அறியாதவனுயுமிருந்தால் அதை ஒரு நிஃமத்தாக நினைப்பான். அறிவாளியாயிருந்தால் அதை பலா என்று எண்ணுவான். நாலாவது வகை:—இவ்வுலகத்தில் துன்பமாகவும் அவ்வுலகத்தில் சுகமாகவும் இருப்பதாம். அது யாதெனில் நப்சு, இச்சை இவைகளுக்கு விரோதம் செய்வதும் பாடுபட்டு வணங்குவதுமாம். புத்திமானுகிய ஒரு நோயாளிக்குக் கசப்பான மருந்து எப்படி ஒரு நிஃமத்தாயிருக்கிறதோ அப்படியே ஆரிபுகளுக்கு இந்தப் பாடும் வணக்கமும் ஒரு நிஃமத்தாயிருக்கிறது.

பசல்: அறிந்துகோள்:—துன்யாவுடைய பொருள்கள் அநேகமாய்க் கலப்புண்டிருக்கும். அதாவது, அவைகளில் நலவுமிருக்கும் இடறுமிருக்கும். ஆனால் எதனுடைய லாபம் அதன் நஷ்டத்திலும் அதிகமாகுமோ அது நிஃமத்தேயாம். இந்த லாபமும் நஷ்டமும் அவரவருடைய நிலைமைக்குத் தக்கவாறு மாறும். அநேக ஜனங்களின் விஷயத்தில் அவசியமான அளவுக்குப் பொருள் இருப்பதின் லாபமாகிறது (அதில்லாமையினுல் உண்டாகிற) நஷ்டத்திலும் அதிகமாயிருக்கும். அந்த அளவுக்குமேல் அதிகமாகப் பொருளிருப்பதின் நஷ்டமாகிறது (அப்படி இல்லாமையினுல் உண்டாகிற) லாபத்திலும் அதிகமாயிருக்கும். இன்னும் சிலருக்குக் கொஞ்சம் பொருளிருப்பதும் நஷ்டத்தைக் கொடுப்பதாகும். ஏனெனில், அதனுல் அவர்களுக்குப் பொருளாசை மேலிடும். ஒன்றுமே யில்லாதபக்ஷம் அவர்களுக்கு அந்த ஆசை உண்டாகாமலிருக்கும். இன்னும் சிலருக்கு அதிகப்பொருளிருப்பதும் நஷ்டந்தராது. ஏனெனில் ஏழைகளுக்கு வேண்டியபோது அவர்களுடைய வேண்டுதல்களைக் கொடுக்கக் கூடியவர்களாயிருப்பார்கள். ஆகவே ஒருபொருள் ஒருவனுடைய விஷயத்தில் நிஃமத்தாயும் அதே பொருள் மற்றொருவனுடைய விஷயத்தில் பலாவாயும் இருக்கக்கூடும் என்பதை நீ அறிந்திருக்க வேண்டும்.

பசல்: அறிந்துகோள்:—ஜனங்கள் எதை நல்லதென்று எண்ணுகிறார்களோ அது மூன்று நிலைமைக்குள் அடங்கும். அதாவது, தற்போது பிரியமானதாய் அல்லது பின்னிட்டுப் பிரயோசனங் கொடுப்பதாய் அல்லது அது தன்னிலே நல்லதாய் இருக்கும். இன்னும் எதைக் கெட்டதென்று என்னுகிறார்களோ அது தற்போது பிரிய

மில்லாததாய் அல்லது பின்னிட்டுப் பிரயோசனங் கொடாததாய்
அல்லது தன்னிலே கெட்டதாய் இருக்கும். ஆகவே இம்மூன்றும்
எதில் சேர்ந்திருக்கிறதோ அதாவது பிரியமானதாயும் பிரயோசனப்
படுவதாயும் நல்லதாயும் இருக்கிறதோ அதுவே நல்லதில் சிறப்பமா
னது. அது இல்மாகிய கல்வியும் ஹிக்மத்தாகிய நுண்ணறிவுமே
யன்றி வேறொன்றல்ல. இதற்கு எதிரிடையாகக் கெடுதியில் சிறப்ப
மானது ஜஹ்லு என்னும் மூடத்தனமாகிய அறிவின்மையாம். அது
பிரியமில்லாததாயும் நஷ்டத்தைக் கொடுப்பதாயும் கெட்டதாயும்
இருக்கிறது.

இன்னுமறிந்துகொள்:—இல்மாகிய அறிவைவிட வேறு எந்தப்
பொருளும் அதிகப்பிரியமானதல்ல. ஆனால்* எந்த மனிதனுடைய
மனம் பிணிகொள்ளாமலிருக்கிறதோ அவனுக்குத்தான் அது பிரிய
மாயிருக்கும். ஜஹ்லு என்னும் மூடத்தனமானது தற்சமயத்திலேயே
பிரியமில்லாததும் வருத்தத்தைக் கொடுப்பதுமான ஓர் வியாதியா
யிருக்கிறது. எனெனில், ஒருவன் ஒரு வஸ்துவை அறியாமலிருந்து
பின்பு அதை அறிய அவனில் நாட்டம் பிறந்தால் இது எனக்குத்
தெரியாமலிருக்கிறதேயென்ற வருத்தத்தை அதே நேரத்தில் அவன்
பரிசிக்கிறான். மூடத்தனம் கெட்டதாயிருக்கிறது. ஆனால் அவனில்
இந்தக் கெடுதி வெளியாகாமல் மனதுக்குள் மறைந்திருந்து மனோ
வடிவத்தைக் "கெடுத்துக்கொண்டிருக்கிறது. இது வெளியரங்கத்தி
லிருக்கிற கெடுதியினும் மிகக் கெட்டது. ஒருவஸ்து பின்னிட்டுப்
பிரயோசனங் கொடுப்பதாயும் தற்போது பிரியமில்லாததாயுமிருக்க
லாம். அதெப்படியென்றால்:* கைபோய்விடுமென்ற பயத்தினால் விர
லைத் தறித்துவிடுவதுபோலவாமென்க.*. இன்னும் ஒருவஸ்து ஒரு
விதத்தில் பிரயோசனங் கொடுப்பதாயும் ஒரு விதத்தில் நஷ்டத்தை
யுண்டாக்குவதாயும் இருக்கலாம். அதெப்படியென்றால்,(பாரத்தினால்)
கப்பல் கடலில் மூழ்கப்பார்க்கிற சமயத்தில் அதில் இருப்பவர்கள்
தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டுத் தங்களிடமிரு
க்கிற பொருள்களை எடுத்துக் கடலில் எறிந்துவிடுவது போலென்க.

பசல்:-எதுவொன்று* பிரியமாய்த் தெரிகிறதோ அது நிருமத்
தாகும் என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள், ஆனால் பிரியமானவை
களும் இன்பமானவைகளும் மூன்றுவகுப்பாகும். முதலாவதுவகுப்பு:-
மிகவும் அற்ப இன்பமாம். அதுவோ* வயிற்றின் இன்பமும் வெட்க
உறுப்பின் இன்பமுமேயாம். ஜனங்கள் அநேகமாய் இந்த இன்
பத்தை அறிகின்றார்கள். இதிலேயே பராக்காயிருக்கிறார்கள். இதற்

காகவே சம்பாத்தியம் செய்கிறார்கள். இது அற்ப இன்பம் என்பதற்கு அத்தாட்சி யாதெனில், எல்லா மிருகங்களும் இதில் கூட்டாயிருப்பதேயாம். இந்த இன்பத்தில் அவை மனிதனுக்கு மீசுரப்பட்டிருக்கின்றன. அதாவது மிருகங்கள் பெருந்தீனி தின்பதும் பெட்டையின்மேல் விழுவதும் அதிகமாயிருக்கிறது. மேலும் * எறும்பு புழுப்பூச்சி முதலான எல்லாப் பிராணிகளும், இந்த இன்பத்தில் மனிதனோடு ஒத்திருக்கின்றன. எவனொருவன் முற்றாகத் தன்னை இந்த இன்பத்துக்கு ஒப்புக்கொடுக்கின்றானோ அவன் பூமியிலூரும் பிராணிகளின் பதவியே தனக்குப் போதுமென்று பொருந்திக்கொண்டவனாயிருப்பான்.

இரண்டாவதுவகுப்பு:—அடக்கிக் கீழ்ப்படுத்துவதும், அதிகாரம் செய்வதும், மற்றவர்களில் மேலாயிருப்பதுமான இன்பமாம். இதுவே கோபத்தினது தத்துவமாயிருக்கிறது. வயிற்றின் இன்பத்தையும் வெட்க உறுப்பின் இன்பத்தையும் நோக்க இந்த இன்பம் மிகச் சிறந்ததா யிருந்தபோதிலும் அற்பமானதேயாம். ஏனெனில், சிங்கம், சிறுத்தைமுதலிய சில மிருகங்கள் இந்த இன்பத்தில் மனிதனுடன் ஒத்திருக்கின்றன. அடக்கிக் கீழ்ப்படுத்தலும் மேலாதலுமான இந்த ஆசை அவைகளுக்கு முண்டு. மூன்றாவது வகுப்பு:—இல்மு, ஹிக்மத்து, அல்லாஹ் தஆலாவையும் அவனுடைய சிருஷ்டிகளின் புதுமைகளையும் அறிதல் இவைகளின் இன்பமாம். இது எல்லாவற்றிலும் சிறந்த இன்பம். எந்த மிருகத்துக்கும் இந்த இன்பம் இராது. மேலும் இது மலக்குகளுடைய சிபத்தாயிருக்கிறது. அன்றியும் அல்லாஹ் தஆலாவுடைய சிபத்துகளில் ஒன்றாயுமிருக்கிறது. எவனுக்கு இதிலேயே இன்பமிருக்கிறதோ இதிலன்றி வேறொன்றில் இன்பமில்லையோ அவனே நிறப்பமானவன். இன்னும் எவனுக்கு இதில் ஏதும் இன்பமில்லையோ அவன் முழுமையும் குறைந்த தன்மையுள்ளவனாயிருக்கிறான். அன்றியும் பிணிகொண்டவனாயும் ஹலாக்காகிறவனாயுமிருக்கிறான். அனேக மூமின்கள் (மேற்கூறிவந்த அற்ப இன்பங்களும் சிறந்த இன்பமுமான) இந்த இரண்டு வகை இன்பத்திலுமிருப்பார்கள். அதாவது அவர்கள் அறிவானந்தத்தையும் அடைவார்கள். மற்றும் ஜீவர்கள் அடைவதுபோல வயிறு வெட்க உறுப்பு இவைகளுடைய இச்சையின் இன்பத்தையும் அடைவார்கள் மற்றதை அடக்கிக் கீழ்ப்படுத்தும் இன்பத்தையும் அடைவார்கள். ஆனால் 'ஒருவனுக்கு அறிவானந்தம் மேலிட்டுமற்ற இன்பங்கள் அதில் மறைந்தும்ஒடுங்கியுமிருந்தால் அவன் பூரணபதவிக்கு மிகவும் அடுத்தவனாயிருக்கிறான். இன்

னும் ஒருவனுக்கு மற்ற இன்பங்கள் மேலிட்டு இந்த அறிவானந்தம் உண்டாவது மிகப் பிரயாசையாயிருந்தால் இது சாதாரணமாகவே மேலிட்டிருக்கும்படி அவன் முயற்சி எடுக்காதவரையில் குறைந்த பதவிக்கே மிகவும் அடுத்தவனு யிருக்கிறான். நன்மைகளின் தட்டு முனைத்தல் என்பதற்குப் பொருள் இதுவேயாம்.

## எல்லா நிகுமத்துகளின் தொகையையும் அதன் வகுப்புகளையும் விளக்கல்.

அறிந்துகொள்:—ஆகிரத்தில் அடையும் நற்பதவியே மெய்யான நிகுமத்தாயிருக்கிறது. ஏனெனில், அது தனக்கு வேறாயுள்ள மற்றொரு நிகுமத்துக்காக அல்லாமல் அது தன்னிலே கருதப்பட்டதாயிருக்கிறது. அந்த நற்பதவியென்னும் நிகுமத்து நான்கு வஸ்துக்களைப் பொருந்தியிருக்கும். அவை யாவை யெனில், அழிவே இல்லாத நித்திய வாழ்க்கையும், துக்கமே இல்லாத ஆநந்தமும், மூடமும் இருளுமான களங்கமேயில்லாத ஞான, வெளிப்பாடுகளும், எழிமையே இல்லாத செல்வீகமுமாம். இந்நான்கின் சாராம்சம் யாதெனில், மனிதன் அல்லாகு தஆலாவினது திருச்சமுகத்தின் தெரிசனையான இன்பத்தில் துக்கமும் அழிவும் வாராதபடி எப்போதும் இன்புற்றிருப்பதேயாம். இதுதான் எதார்த்தமான நிகுமத்து. துன்யாவில் யாதொரு பொருளை நிகுமத்தாக நினைப்பது எதனாலென்றால், இந்த எதார்த்த நிகுமத்தை அடைவதற்கு அது உதவியாயும் வழியாயுமிருப்பதினாலென்க. எதைக்கொண்டு வேறொன்றை நாடாமல் ஆகிரத்தின் நற்பதவியை நாடுவார்களோ, அதுவே (துன்யாவில்) நிறப்பமான நிகுமத்தா யிருக்கிறது. இதன்பேரில் (சாக்ஷியாக) ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் (அல் அய்ஷு அய்ஷுல் ஆகிரத்தி) ஆகிரத்தின் இன்ப சுகமே சுகம் என்று அருளிச்செய்தார்கள். ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருமுறை அதிக துக்கத்தை யடைந்திருந்தபோது துன்யாவுடைய அந்தத் துக்கத்தினின்றும் தங்களை ஆற்றிக்கொள்வதற்காக இந்த வாக்கியத்தைச் சொன்னார்கள். இன்னும் ஒருமுறை அதிக சந்தோஷத்தை யடைந்திருந்தபோதும் இந்த வாக்கியத்தைச் சொன்னார்கள். அதெப்போதென்றால், ஹஜ்ஜத்துல்விதாகு என்னும் தங்களின் கடைசியான ஹஜ்ஜின்போது தீன்மார்க்கம் நிறப்பத்தை யடைந்திருந்தது, எல்லா ஜனங்களும் அதன் பக்கம் திரும்பிவிட்டார்கள். தாங்கள் ஒட்டகையின் மேலிருந்தார்கள். அவர்களிடத்தில் ஜனங்கள் ஹஜ்ஜுடைய அமல்களைக் குறித்துக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

இத்தன்மையாக மார்க்கம் பூர்த்தியடைந்திருப்பதை நாயகமவர்கள் கண்டபோது இந்த வாக்கியத்தைச் சொன்னார்கள். ஏனெனில் தங்கள் மனம் துன்யாவுடைய இன்பத்தை எறெடுத்துப் பார்க்காமலிருக்கவேயாமென்க. இதுவுமன்றி ஒருவர் அல்லாகு தஆலாவினிடத்தில் துஆ செய்தவராக என் ஆண்டவனே! நான் உன்னிடத்தில் நிறப்பமான நிகுமத்தைக் கேட்கிறேன் என்று சொன்னார். இதைச் செவியிலுற்ற நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவரை நோக்கி "நிறப்பமான நிகுமத்து இன்னதென்று உமக்குத் தெரியுமா?" என்று கேட்க, அவர் "தெரியாது" என்று சொன்னார். அப்போது நாயகமவர்கள் "நீர் சொர்க்கத்துக்குப் போவதுதான் நிறப்பமான நிகுமத்து" என்று அருளிச்செய்தார்கள்.

இனி துன்யாவிலிருக்கிற நிகுமத்துகளில் எதுவொன்று ஆகிரத்துக்கு உதவியாயிராதோ அது உண்மையில் நிகுமத்தே அல்ல. ஆகிரத்துக்கு உதவியாகிற நிகுமத்துகள் பதினாறு வஸ்துக்களாய்ப் பிரிந்து வரும். அவற்றுள் மனதில் நாலும், தேகத்தில் நாலும், தேகத்துக்குப் புறம்பே நாலும் இந்தப் பன்னிரண்டைச் சேகரிப்பதில் நாலுமாகப் பிரிகின்றன. பின்னர் மனதிலிருக்கிற நான்கு நிகுமத்துக்கள் எவையென்றால், இல்முல் முகாஷபா, இல்முல் முஆமலா, சாதுத்துவம், நீதம் இவைகளேயாமென்க. இல்முல் முகாஷபா என்பது அல்லாகு தஆலாவையும் அவனுடைய சிபத்துகளையும் அவனுடைய மலக்குகளையும் றசூல்மார்களையும் அறிவதாம். இல்முல் முஆமலா என்பது நாம் இந்த கிதாபின் ருகுனு முஹ்லிகாத்தில் சொல்லியபடி தீன் வழியின் கஷ்டமான கணவாய்களையும், ருகுனு இபாதாத்து, ருகுனு முஆமலாத்து இவைகளில் சொல்லியபடி தீன்வழியின் தங்கரிப்பையும், ருகுனு முஞ்ஜியாத்தில் சொல்லியபடி தீன்வழியின் மன்ஜில்களையும் இவை யெல்லாவற்றையும் பூராவாக அறிவதாம். சாதுத்துவம் என்பது இச்சை யென்னும் தத்துவத்தையும் கோபமென்னும் தத்துவத்தையும் அடக்கிப் பூரணமான நற்குணத்தை அடைவதாம். நீதம் என்பது இச்சை, கோபம் இவை அடியோடு ஒழிந்து போகாமலும் ஹத்தைவிட்டுத் தாண்டாமலும் இருக்கும்படி வைத்துக்கொள்வதாம். ஏனெனில், இவை அடியோடு ஒழிந்துபோவதில் கஷ்டமும் ஹத்தைவிட்டு மீறுவதில் அபாயமும் உண்டாகும். ஆதலால் இவைகளை நேரான நிறைகோலால் நிறுத்துப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். அல்லாகு தஆலா அருளியதுபோல் அது வருமாறு:—நீங்கள் நிறையில்

அக்கிரமம் செய்யாம லிருப்பதற்காக, நீங்கள் நிறையை நீதத்துடன் சரியாக்குங்கள். நிறையைக் குறைக்காதீர்கள் என்பதே.

மனோசம்பந்தமான இந்நான்கு நிருமத்துகளானவை தேகசம்பந்தமான நிருமத்துகளில்லாமல் நிறப்பத்தை யடையமாட்டா. அவையாவையெனின், சரீரசுகமும் பெலமும் அழகும் நீண்ட வயதுமான இந்நான்கேயாம். ஆகிரத்துடைய நற்பதவிக்குத் தேகாரோக்கியமும் வலுவும் வயதும் தேவை யென்பது எவர்க்கும் தெரியாததல்ல. ஏனெனில், இந்த மூன்றுமில்லாமல் இல்மும், அமலும், நற்குணமும், இன்னும் மனிதனுடைய கல்பின் விஷயமாக நாம் சொன்ன மேம்பாடுகளும் சரிவர வாய்க்கமாட்டா. ஆனால் அழகின் தேவை அவ்வளவு முக்கியமானதல்ல. என்றாலும் அழகுள்ளவர்களின் வேண்டுதல் அநேகமாக நிறைவேற்றப்படுகின்றது. இது விஷயத்தில் பொருளும் பெரிய தனமும் எப்படியோ அப்படியே அழகும் உதவுகின்றது. துன்யாவின் தேவையிலும் அதன் அவசியங்களிலும் எதுவொன்று உபயோகப்படுமோ அது ஆகிரத்துக்கும் உபயோகப்படுவதாகும். ஏனெனில் துன்யாவின் அவசியங்கள் ஆகிரத்துடைய அமல்களுக்காகப் பராக்கை ஒழிக்கின்ற காரணங்களாயிருக்கின்றன. அன்றியும் துன்யாவானது ஆகிரத்துக்காகப் பயிர்செய்யும் இடமாயிருக்கிறது. இதுவுமன்றி அழகில் இன்னுமோர் பயனுண்டு. அதாவது வெளியழகானது உள்ளழகுக்கு முகவுரையா யிருக்கிறது. இந்த அழகு அல்லாகு தஆலாவின் ஓர் அருளாகிய ஒளியாயிருக்கிறது. பிள்ளை பிறக்கிற நேரத்தில் அந்த அருள் பிரகாசிக்கின்றது. ஒருவனுடைய வெளியுருவத்தை அல்லாகு தஆலா அழகாக்கினால் அநேகமாய் அவன் உள்ளத்தையும் நற்குணத்தால் அழகாக்குகிறான். இதனாலேதான் "ஒரு அழகு கெட்டவனை நீ பார்க்கும்போது அவனுடைய குணக்கேட்டினும் அந்த அழகுகேட்டை மிக நல்லதாயிருக்கக் காண்பாய்" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதுவுமன்றி "நீங்கள் உங்கள் வேண்டுதல்களை அழகுள்ள மனிதரிடத்தில் கேளுங்கள்" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "நீங்கள் ஓரிடத்துக்குத் தூதனுப்பினால் நல்ல பெயரும் அழகிய முகமும் உள்ள மனிதரை அனுப்புங்கள்" என்று உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் "தொழுகையின் இமாமத்துக்காக இல்மு, கிருஅத்தோல், பேணுதல் இந்த அம்சங்களில் எல்லாரும் சமமாயிருந்தால் அப்போது அவர்களில் அதிக அழகாயிருப்பவர்

இமாமத்துக்கு அதிக அருகராவார் என்று புக்கஹாக்கள் சொல்லி யிருக்கிறார்கள். இன்னும் அறிந்துகோள்:—அழகு என்றதில் இச்சையை எழுப்புகிற அழகை நாம் கருதவில்லை. இதுவோ பெண்களின் பண்பா யிருக்கிறது. என்கிலும் ஜனங்களுடைய மனங்களுக்கும் கண்களுக்கும் அருவருப்பா யிராதபடி தக்க உயரமும் சரியான உருவமுமாயிருப்பவைதயே. நாம் அழகென்றது.

இனி, தேகத்துக்குப் புறம்பே யுள்ளவைகளும் தேகத்துக்குத் தேவையானவைகளுமான நிருமத்துகள் எவையெனில், பொருளும், கவுரவமும், பெண்ஜாதி, பிள்ளை, சுற்றத்தார் இவர்களும் மேன் குலமுமான இவைகளேயாம். ஆகிரத்துக்காகப் பொருள் தேவையென்றது எவ்விதத்தாலெனில், ஒருவனிடத்தில் பொருளில்லாமற் போனால் அவன் நாள்முழுதும் ஜீவனத்துக்குச் சம்பாதிப்பதில் பராக்காயிருப்பான். இல்மிலும் அமலிலும் அற்பநேரமே பராக்காகுவான். ஆதலால் அவசியமான அளவுக்குப் பொருள் இருப்பது ஆகிரத்துக்கு உதவியான நிருமத்தாயிருக்கும். இனி, கவுரவம் தேவை என்றது எதற்கென்றால், ஒருவன் கவுரவ மில்லாதவனா யிருந்தால் அவன் எப்போதும் ஜனங்களுடைய பார்வைக்குச் சிறுமையுள்ளவனும் இழிஞனும் பகைவருடைய பகைமைக்கு அச்சம் தீராதவனுமிருப்பான். ஆனால் பொருளும் கவுரவமும் அதிகப்படுவதில் அநேகம் ஆபத்துக்க ளிருக்கின்றன. இதற்காகவே “காலையிலெழுந்த ஒருவனுக்குத் தேகசவுக்கியமும் அச்சம் தீர்தலும் அன்றையின் உணவும் (ஆக இம்மூன்றும்) உண்டாயிருந்தால் அவன் துன்யாவின் சகலபாக்கியமும் வைத்திருப்பவன்போலாயினான்” என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இதுவோ பொருளும் கவுரவமும் இல்லாமல் சரிவர வாய்க்காது. இன்னும் அல்லாகு தஆலாவுக்குப் பயந்து வணங்குவதின்பேரில் நல்ல உதவியாயிருப்பது பொருள் என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இனி, பெண்ஜாதி பிள்ளைகளைத் தீனுக்கு உதவியான நிருமத்தென்றது எனெனில், பெண்ஜாதியானவள் அநேகம் காரியங்களின் பராக்கு ஒழிவுக்கும் இச்சையின் தீங்கைவிட்டும் அச்சம் தீர்வதற்கும் ஓர் காரணமாயிருப்பாள். இதனாலேதான் “நல்ல பெண்ஜாதியானவள் தன் புருஷனுக்குத் தீனுடைய காரியங்களின்பேரில் நல்ல உதவிக்காரியாயிருக்கிறாள்” என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் “துன்யாவில் நாங்கள் பொரு

வில்நின்றும் எதைச் சேகரிப்பது?" என்று நாயகமவர்களைக் கேட்டதற்கு, "திக்று செய்கிற நாவையும் ஷுக்று செய்கிற கல்பையும் ஈமானுவாகிய பெண்ஜாதியையும்" என்று விடையளித்தார்கள். பிள்ளையானவன் மவுத்துக்குப் பிறகு நல்ல துஆவைப் பெறுவதற்கு ஓர் காரணமாயும் துன்யாவுடைய ஜீவனத்தில் ஓர் உதவியாயுமிருப்பான். நல்ல பிள்ளைகள் அநேகம் வேலைகளுக்கு உதவியானவர்களாயிருப்பதால் அவர்கள் மனிதனுக்குக் கை, கால், இறக்கைகள் போலிருக்கிறார்கள். பிள்ளைகளால் உண்டாகும் ஆபத்துகளிலிருந்தும் மனிதன் பேணிக்கொள்வானாகில், அதாவது:—பிள்ளைகளின் பொருட்டால் அவன் தன்னுடைய முழுநோக்கத்தையும் துன்யாவின் பக்கம் திருப்பாமலிருப்பானாகில் பிள்ளைகள் அவனுக்குப் பெரும் பாக்கியந்தான். இனி மேன்குலமும் ஓர் நிஃமத்தாகும். ஏனெனில், இமாமத்தென்னும் இராஜரீகம் குறைஷிகளுக்கே சொந்தமாக்கப்பட்டிருப்பதினாலென்க. இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், நீங்கள் உங்கள் நுத்துபாக்களுக்காகச் சமமானவர்களைத் தெரிந்துகொள்ளுங்கள். குப்பைமேட்டின் செழும் பூண்டைவிட்டும் தூரப்படுங்கள். அதாவது நீங்கள் நல்ல நிலத்தில் விதையைத் தூவுங்கள். குப்பைமேட்டில் முளைத்த செழிப்பான பூண்டைவிட்டும் பேணிக்கொள்ளுங்கள் என்று அருளிச்செய்தார்கள். அப்போது அஸ்ஹாபுகள் "குப்பைமேட்டின் செழித்த பூண்டாவது என்ன? யாறசூலல்லா!" என்று கேட்க, "இழிகுலத்தில் பிறந்த அழகிய பெண்" என்று அருளிச்செய்தார்கள். அறிந்துகொள்:—மேன்குலமென்றதில் துன்யாவின் தலைமைத்தனமான மேன்குலத்தை நாம் கருதவில்லை. மேலும் சாலிஹானவர்களோடும் இல்மாளிகளான அறிவாளரோடும் தொடர்ந்து வருகிற மேன்குலத்தையே கருதினோம். இதுவும் பெரிய ஓர் நிஃமத்தாயிருக்கிறது. அநேகமாய்க் குணங்களானவை பெற்றோர்களில்நின்றும் பிள்ளைகளில் உறையும். பெற்றோர்களின் சீர்திருத்தமானது பிள்ளைகளின் சீர்திருத்தத்துக்கு வழி காட்டுவதாகும். அல்லாகு தஆலா அருளிச்செய்ததுபோல் அது வருமாறு:—அவ்விருவரின் தாய்தந்தையர் சாலிஹான (சீர்திருந்தின) வர்களாயிருந்தார்கள் என்பதே.

பின்னர் மேற்கூறிவந்த பன்னிரண்டு நிஃமத்துகளையும் சேகரித்துக்கொள்ளுகிற நாலு நிஃமத்துகள் யாவையெனில், ஹிதாயத்து, ருஷ்து, தாயீது, தஸ்தீது ஆகிய இவைகளேயாம். இந்த நாலுங்கூடிய தொகை தவுபீகு என்று சொல்லப்படும். தவுபீகு என்கிற நிஃமத்து

இல்லாமல் எந்த நிருமத்தும் நிருமத்தாகிறதில்லை. தவ்பீகு என்பதற்
குப் பொருள் யாதெனில் அல்லாகு தஆலா விதித்த விதிக்கும் அடி
யானுடைய நாட்டத்துக்கும் நடுவே ஒற்றுமை யுண்டாவதாம். இந்த
ஒற்றுமை நன்மையிலும் உண்டாகும் தீமையிலும் உண்டாகும்.
ஆனால், சொந்தமாக நன்மையில் அடியானுடைய நாட்டத்துக்கு
அல்லாகு தஆலாவின் விதி ஒத்துவருவதே தவ்பீகு என்று வழக்கச்
சொல்லாய் மாறியிருக்கிறது. இந்த தவ்பீகு நாலுவஸ்துக்களால் பூர்
த்தியாகும். அவற்றுள் ஒன்று ஹிதாயத்து. (அதாவது வழிகாட்டல்
என்பதாம்.) ஹிதாயத்தென்னும் வழிகாட்டல் தேவையில்லாதவர்
எவருமில்லை. ஏனெனில், ஒருவன் ஆகிரத்துடைய நற்பதவியைத்
தேடுகிறவனாயிருந்தால் அவன் அதன் வழியை அறியாமல் வேறு
வழியை அதன் வழியென்று அறிவதில் என்ன பயனுண்டாகும்?
பின்னர் அஸ்பாபுகள் என்னும் சாதனங்களை (அமைப்பதற்கும்
வழிகாட்டல்வேண்டும்) வழிகாட்டல் இல்லாமல் சரியாய் அமைக்க
வராது. (இப்படி வழியை அறிவதற்கும் சாதனங்களை அமைப்பதற்
கும்) இவ்விரண்டுக்கும் அல்லாகு தஆலா வழிகாட்டின நிமித்தமே
அவன் இந்த நன்றி உபகாரத்தை அடியான்மீது வைத்துப் பின்வரு
மாறு கூறுகின்றான். அதாவது:—ஒவ்வொரு வஸ்துவுக்கும் அதன்
உருவத்தைக் கொடுத்துப் பின்பு வழிகாட்டினவனே நமது நாயகன்
என்பதும் நிருமித்துப் பின்பு வழிகாட்டினான் என்பதுமாம்.

அறிந்துகொள்:—இந்த ஹிதாயத்தென்னும் வழிகாட்டலானது
மூன்று வகுப்பாயிருக்கிறது. முதலாவதுவகுப்பு:-(சாமானிய ஹிதா
யத்தாம் அதாவது) இது நல்லது இது கெட்டது எனப் பிரித்தறிவ
தாம். இந்த ஹிதாயத்து எல்லாப் புத்திமான்களுக்கும் கொடுக்கப்
பட்டிருக்கிறது. நல்லவை, கெட்டவைகளிற் சிலவற்றைப் புத்தியினா
லும் சிலவற்றை நபிமார்களுடைய நாவினாலும் தெரிந்துகொள்ளச்
செய்தான். இன்னும் மனிதனுக்கு நாம் இருவழிகளையும் காட்டி
னோம் என்று அல்லாகு தஆலா அருளிச்செய்ததில் நன்மை தீமை
களின் வழியை அவனுக்குப் புத்தியினால் காட்டினோம் என்பதைக்
கருதினான். இன்னும் சமூது கூட்டத்துக்கு நாம் வழி காட்டினோம்
பின்பு அவர்கள் வழியைப் பெறுவதினும் குருட்டுத் தன்மையை
(மேலாக) உவந்தார்கள் என்று அருளிச்செய்ததில் அந்தக் கூட்டத்
துக்கு நாம் நபிமார்களால் வழிகாட்டினோம் என்பதைக் கருதினான்.
எவனாயினும் இந்த ஹிதாயத்தான வழிகாட்டலை அடையாமல்
நிர்ப்பாக்கியனாயிருந்தால் அப்படி யிருப்பதற்குக் காரணம் பொரு

மையும் பெருமையுமாயிருக்கும். அல்லது நபிமார்களுடைய சொல்லுக்கும் உலமாக்களுடைய சொல்லுக்கும் காது தாழ்த்த அவனால் முடியாதபடி. துன்யாவுடைய காரியத்தில் அவன் அவ்வளவு பராக்கா யிருப்பான். அப்படி யில்லாதபக்ஷம் எந்தப் புத்திமானும் இந்த ஹிதாயத்தை அடையமாட்டாதவனல்ல. இரண்டாவது வகுப்பு:—சிறந்த ஹிதாயத்தாம். அதாவது தெண்டித்துப் பாடுபடுவதிலும் தீனுடைய அமல்களைச் செய்வதிலும் கொஞ்சங் கொஞ்சமாக உண்டாகிக்கொண்டும் ஹிக்மத்தென்னும் ஆழிய நுண்ணறிவுகளின் வழி விசாலமாகிக்கொண்டும் இருப்பதாம். இந்த ஹிதாயத்து நப்ஸுடைய தெண்டிப்பின் பலனாயிருக்கிறது. இதற்கு சாக்ஷியாக, யார் நம்மில் பாடுபட்டார்களோ அவர்களுக்கு நாம் நம்முடைய வழிகளைக் காட்டுவோம் என்று அல்லாகு தஆலா அருளிச்செய்திருக்கிறான். பாடுபட்டவர்களுக்கு நம் வழியைக்காட்டுவோம் என்று கூறினானே யல்லாது (அவர்கள் பாடுபடாதபடி) நாமே நம் வழியைக் காட்டுவோம் என்று கூறவில்லை. இன்னும் வழியை அடைந்தவர்களுக்கு அல்லாகு தஆலா அந்த வழியை அதிகப்படுத்தினான் என்று கூறியிருக்கிற ஹிதாயத்தும் இந்த வகுப்பிற் சேர்ந்ததாகும். மூன்றாவது வகுப்பு:—சிறந்ததிலும் மிகச் சிறந்த ஹிதாயத்தாம். இந்த ஹிதாயத்தென்னும் ஒளியானது நபிமார்களுக்கும் ஒலிமார்களுக்கும் உண்டாவதாம். இன்னும் இந்த ஹிதாயத்தானது ஹக்கு தஆலாவின் வழிக்காக அல்லாமல் அவனையே தெரிசிப்பதற்காக உண்டாகிற ஹிதாயத்தாம். இந்த ஹிதாயத்து எத்தன்மை யுடையதென்றால் புத்தி என்னும் தத்துவத்துக்கு இதை அடைய சக்தியிராது. இன்னும் அல்லாவிலே வழிகாட்டலானது திடனாக இதுவே சுயமான வழிகாட்டல் என்று நீர் சொல்வீராக என்று அல்லாகு தஆலா அருளிச்செய்திருப்பதில் இதுவே சமஸ்த ஹிதாயத்தா யிருக்கிறதென்பதைக் கருதினான். இன்னும் இதற்கு ஹயாத்து எனப் பெயர்தந்து, மவுத்தாய்ப்போயிருந்தவனைப் பின்பு நாம் ஹயாத்தாக்கினோம். இன்னு மவனுக்கு ஓர் ஒளியை அமைத்தோம். அதனால் ஜனங்களில் அவன் நடக்கின்றான் என்று கூறுகின்றான்.

இனி ருஷ்து என்பது வழிகாட்டலால் அவனறிந்த அந்த வழியில் நடக்க அவனுக்கு நாட்டமும் விருப்பமும் உண்டாவதாம். அல்லாகுதஆலா அருளிச்செய்ததுபோல் அது வருமாறு:—இதற்கு முன் இபுறாஹீமுக்கு அவரின் ருஷ்தைக் கொடுத்தோம். அதாவது அவ்

ரில் வழிநடப்பின் விருப்பத்தை யுண்டாக்கினேனும் என்பதே. பாலி
கான ஒரு சிறுவன் தன்புத்தியினால் பொருளைப் பதனப்படுத்துவது
இவ்விதம் என்று அறிந்து பின்பு அதைப் பதனப்படுத்தாமற்
போனால், அப்படியறிந்ததில் அவன் ஹிதாயத்தை அடைந்தவனே
யாயினும் பதனப்படுத்துகிற நாட்டம் அவனில் உண்டாகவில்லை
யாதலால் அவனை * ரஷீது என்று சொல்லமாட்டார்கள்.

இனி தஸ்தீது என்பது அவன் தன்னு நாட்டத்திற்குச் சீக்கி
ரம் செல்லும்பொருட்டு நன்மையில் அவனுடைய ஆட்டங்களையும்
அவயவங்களையும் கஷ்டம் தோன்றாதபடி இயக்கிவிடுவதாம். ஆகவே,
ஹிதாயத்தின் பலன் அறிவிலும், ருஷ்தின் பலன் நாட்ட விருப்பங்
களிலும், தஸ்தீதின் பலன் வலிமையிலும் இயங்குகின்ற அவயவங்
களிலும் இருக்கிறது. (இதன் கருத்து: அறிவதும் அறிந்ததில் நாட்
டங்கொள்வதும் நாட்டங்கொண்டதில் நடப்பது மென்பதாம்.)

இனி தாயீது என்பது அந்தரங்கத்தில் அகப்பார்வையின்
தீக்ஷண்யத்துக்காகவும் வெளியரங்கத்தில் ஆட்டம் அடக்கங்களின்
தத்துவத்துக்காகவும் கைபிலிருந்து உதவியை அனுப்புவதாம். அல்
லாகு தஆலா அருளிச்செய்திருப்பதுபோல் அது வருமாறு:—
ரூஹுல் குதுஸைக்கொண்டு நான் உமக்கு உதவி செய்தேன் என்
பதே. இனி இஸ்மத்து இதை அடுத்திருக்கும். இஸ்மதென்பது
யாதெனில்; பாவமும் விருத்தமான வழியிலிருந்து விலக்குகிற
ஒரு தடை அவனுக்குள் உண்டாவதாம். ஆனால் அந்தத் தடை
எங்கிருந்து வந்ததென்பதை அவன் நன்றாய் அறியமாட்டான். அல்
லாகு தஆலா வலகத் ஹம்மத்பிஹி என்ற ஆயத்தில் இதை இஷாரா
செய்திருக்கிறான். இவ் அகிராத்துடைய வழிக்கு வேண்டிய தவ்
கீப்பான் நிஃமத்துகளா யிருக்கின்றன. இவைகளுக்கு வேறு அஸ்
பாபுகள் என்னும் சாதனங்கள் வேண்டும். அந்த சாதனங்களுக்கும்
வேறு சாதனங்கள் வேண்டும்: இப்படியே கடைசியாக † தலீலுல்
முதஹய்யிரீனும் ‡ றப்புல் அர்பாபாப்புமாகிய அல்லாகுதஆலாவினிடம்
சேருகிறவரையில் எண்ணிறந்த அஸ்பாபுகள் வேண்டும். அவன்
¶ முஸப்பிபுல் அஸ்பாபாயிருக்கிறான். சபபுகள் என்னும் சங்கிலித்

* ரஷீது என்பது ருஷ்து என்னும் தொழிற்பெயர் வினைமுதல்.

† தலீலுல் முதஹய்யிரீன = திகை தப்பினவர்களுக்கு வழி காட்டு
கிறவன.

‡ றப்புல் அர்பாப் = பரிபாலகர்களின் பரிபாலகன்.

¶ முஸப்பிபுல் அஸ்பாப் = சபபுகளின் சபபை உண்டாக்குகிறவன்;
காரணங்களின் காரணத்தை அல்லது சாதனங்களின் சாதனத்தை அமைப்
பவன் எனினும் ஒக்கும்;—

தொடர்ப்பின் எல்லா வளையங்களையும் எண்ணிச் சொல்ல அதுமிகவும் நீளமாயிருக்கிறது. இந்தவிடத்தில இவ்வளவு சொன்னது போதும்.

ஜனங்கள் ஷுக்ரில் குறைசெய்தலை விளக்கல்.

அறிந்துகொள்:—ஜனங்கள் ஷுக்ரில் குறை செய்வதற்கு இரண்டு காரணங்களுண்டு. முதலாவது காரணம்:—அல்லாஹு தஆலா உடைய நிகுமத்துகளின் பெருக்கை அறியாமலிருப்பதாம். அல்லாஹு தஆலாவுடைய நிகுமத்துகளை எவரும் மட்டிட்டு இவ்வளவென்று எண்ணிச் சொல்லமாட்டார்கள். அல்லாஹு தஆலா அருளிச் செய்திருப்பதுபோல் அது வருமாறு:—அல்லாஹ்வுடைய நிகுமத்துகளை நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்களாகில் அவைகளை நீங்கள் கணக்கிலே அடக்கமாட்டீர்கள் என்பதே. நாம் எஹ்யா என்னும் கிதாபில் அல்லாஹு தஆலா அளித்த நிகுமத்துகளில்நின்றும் உணவருந்துவதிலிருக்கிற சில நிகுமத்துகளைச் சொல்லியிருக்கிறோம். எதற்காகவெனில், அதை உத்தேசித்துப்பார்ப்பதினால் எல்லா நிகுமத்துகளையும் அறிய முடியாதென்று ஜனங்கள் தெரிந்துகொள்வார்கள் என்பதற்காகவாம். இதை விவரித்துச் சொல்ல இந்த தொகுப்பு இடந்தராது. இரண்டாவது காரணம்:—எந்த நிகுமத்து சம்பூர்த்தத்துக்கும் பொதுவாயிருக்கிறதோ அதை மனிதன் ஒரு நிகுமத்தாக நினைக்கமாட்டான்; ஒருபோதும் அதன் பொருட்டு நின்று ஷுகுரு செய்யமாட்டான். உதாரணமாக:—அவன் தன் சுவாசத்தினால் இந்தச் சுத்தமான வாயுவை இழுத்து உட்கொள்ளுகிறான். அது அவன் இருதயத்திலிருக்கிற ரூஹ் ஹைவானிக்கு உதவியாகநின்று இருதயத்தின் உஷ்ணத்தை மிதமாகும்படி தணிக்கின்றது. ஒரு சுவாசம் அற்றுப்போனால் அவன் ஹலாக்காய்விடுவான். இந்த நிகுமத்துக்கு அவன் ஒருபோதும் ஷுகுரு செய்யமாட்டான். மேலும் இதை ஒரு நிகுமத்தாகவும் நினைக்கமாட்டான். இதேபோல் அநேகமாயிரம் (சுவாசங்கள்) இருக்கின்றன. அவைகளை அவன் அறியமாட்டான். ஆனால் அவனை கொஞ்சநேரம் அசுத்த வாயுவுள்ள ஓர் கிணற்றிலாகி ஒரு மூச்சு உள்ளடங்கினால் அல்லது அவனை அனல் வீசுகின்ற வெப்பமுள்ள ஓர் வெந்நீர்ப் பொய்கையில் அடைத்து வைத்தால் அந்தக் கொஞ்ச நேரம் இந்த நிகுமத்துடைய அருமையும் அவன் அறியக்கூடும். இதுவுமன்றி அவன் கண்ணில் வலியுண்டாகாதவரையில் அல்லது அவன் குருடனாய்ப் போகாதவரையில் மற்றப்படி கண்ணினது சவுக்கியத்துக்கு நின்று அவன் ஷுகுருசெய்யவேமாட்டான். இவனுக்கு உபமானமாகிறது ஒரு எஜமானால் அடியுண்டிருக்கிற

வரையில் அடியுண்ணாமையின் அருமையை அறியாமலும் அப்படி அடிக்காததினால் மறந்து மேவிட்டுயிருக்கிற ஓர் அடிமைக்குச் சமானமாம். ஆகலால் நன்றியறிந்து ஷுக்ரு செய்வதற்கு அவன் ஊடாட வேண்டிய உபாயம் என்னவென்றால், எஹ்யா என்னும் கிதாபில் நாம் சில நிஃமத்துகளை விவரித்திருப்பதுபோல் அல்லாகு தஆலா உடைய நிஃமத்துகளை அவன் தன் மனதுக்கு நினைப்பூட்டிக்கொண்டிருக்கவேண்டும். ஆனால் இந்த உபாயம் பூரண அறிவாளிக்கே தகும். அற்ப அறிவாளி ஷுக்ரு செய்வதற்கு அவன் செய்ய வேண்டிய பிரயத்தனம் என்னவென்றால், அவன் தினந்தோறும் வியாதியஸ்தர் இருக்கும் வயித்தியசாலைக்கும் குற்றவாளிகளிருக்கும் மறியல் சாலைக்கும் மரித்தோர்கள் அடங்கியிருக்கும் கபுருஸ்தானுக்கும் போய் அவர்கள் அடைகிற துன்பத்தையும் தனது சவுக்கியத்தையும் நோட்டமிடவேண்டும். அப்போது தனது சவுக்கியத்தின் நன்றியறிந்து ஷுக்ரில் அவன் பராக்காகக் கூடும். கபுருஸ்தானுக்குப் போனால் அங்கு அடங்கியிருக்கிற மரித்தோர்களில் நோட்டமிட்டு இவர்கள் தங்கள் குற்றங்கள் அழியும்பொருட்டு இனியொரு தரம் இபாதத்து செய்யலாமென்று ஒரே ஒரு நாளைக்கு இவ்வுலகத்தில் உயிரை அடைய ஆசிக்கின்றார்கள். அப்படி ஆசித்தும் அதை அடைகிறார்களில்லை, எனக்கோ இன்னும் அநேக நாட்கள் எதிரே வைக்கப்பட்டிருக்கின்றன. நான் அவைகளின் அருமையை அறியாதவனாயிருக்கிறேன் என்று எண்ணவேண்டும்.

இனி காற்று, சூரியன், கண்பார்வை இவைகள்போல் எந்த நிஃமத்து எல்லாருக்கும் பொதுவாயிருக்கிறதோ அந்த நிஃமத்தில் மனிதன் நன்றியறிந்து ஷுக்ரு செய்கிறதில்லை. பொருளையே சர்வ நிஃமத்தாக நினைக்கிறான். இன்னும் எதுவொன்று (மற்றவருக் கில்லாமல்) தனக்கே சொந்தமாயிருக்கிறதோ அதுதான் நிஃமத்தென்று அவனுக்குத் தெரிகிறது. இது மூடத்தனம் என்று அவன் அறிய வேண்டும். ஏனெனில் ஒரு நிஃமத்து எல்லாருக்கும் பொதுவாயிருப்பதினால் அது நிஃமத்தாகாமற் போவதில்லை. பின்பு நோட்டமிட்டுப் பார்ப்பானாகில் அவனுக்கே சொந்தமாக அளிக்கப்பட்டிருக்கிற அநேகம் நிஃமத்துகள் இருக்கின்றன. அதெவ்வாறெனின், தன் புத்திபோல் ஒரு புத்தியுமில்லை யென்றும் தன் குணம்போல் ஒரு குணமுமில்லையென்றும் நினைக்காதவன் எவனுமில்லை. இப்படி நினைப்பதினாலேயே மற்றவரை மூடர் என்றும் துர்க்குணமுள்ளவர் என்றும் எண்ணுகிறான். ஆகலால் இதற்காக இவன் ஷுக்ரு செய்ய

வேண்டும். மற்றவருடைய ஐபுகளைச் சொல்லக்கூடாது. மேலும் இவனுக்குத் தெரிந்தவைகளும் மற்றவர்களுக்குத் தெரியாதபடி மறைக்கப்பட்டிருப்பவைகளுமான அநந்தம் ஐபுகளும் மானக்கேடுகளும் இவனில் இருக்கின்றன. அல்லாகுதஆலா அவைகளை மற்றவர்களுக்கு மறைத்திருக்கிறான். இதுவுமன்றி இவனுடைய நினைவில் வருகிற பழிப்பான பல எண்ணங்களைப் பிறர் அறிந்தால் இவன் அதிக வெட்கப்படுவதற்கு இடமாகும். இது ஒவ்வொருவர் விஷயத்திலும் சொந்தமான ஓர் நிஃமத்தாகும். ஆதலால் இதற்காக இவன் ஷுக்குரு செய்யவேண்டும். எந்த நிஃமத்தைவிட்டும் இவன் நிர்ப்பாக்கியனாயிருக்கிறானோ அந்த நிஃமத்தின்மேலேயே எப்போதும் சிந்தையை வைத்துக்கொண்டு இந்த நிஃமத்துகளுக்கு ஷுக்குரு செய்யாத நிர்ப்பாக்கியனாய்ப் போகக்கூடாது. மேலும் யாதொரு யாத்தியதையுமில்லாதிருக்க இவனுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற நிஃமத்துகளில் இவன் நோட்டமிடவேண்டும். ஒருவன் ஒரு பெரியோரிடத்தில் போய் தனது வறுமையைக் குறித்து முறையிட்டான். அந்தப் பெரியவர் அவனை நோக்கி, உன் கண்போய் உன்னிடம் பதினாயிரம் ரூபாயிருக்க உனக்குச் சம்மதமா? என்க, அவன் இல்லையென்றான். பின்பு காதுபோய் பதினாயிரம்ரூபாயும் கைபோய் பதினாயிரம் ரூபாயும் கால்போய் பதினாயிரம் ரூபாயும் இருக்கப் பிரியமா? என்று அவர்கேட்க, அவன் இல்லை என்றான். பின்பு புத்தி போய்ப்பதினாயிரம் ரூபாய் இருக்க விரும்புகிறாயா? என்க, அவன் இல்லை என்றான். அப்போதவர் அவனை நோக்கி, இவ்வகையில் உன்னிடம் ஐம்பதினாயிரம் ரூபாய் சரக்கிருக்கிறதே, பின்பு நீ ஏன் முறைப்பாடு செய்கிறாய்? என்றார். நீ பெரும்பாலான ஜனங்களில் ஒவ்வொருவனையும் நோக்கி நீ உன் நிலைமையை இன்னானுடைய நிலைமைக்குப் பதிலாக மாற்றிக்கொள் என்று சொல்லுவாயாகில் அவர்களில் ஒருவனும் அப்படி மாற்றிக்கொள்ளமாட்டான். இப்படியே பெரும்பாலான ஜனங்களில்நின்றும் எவருடைய நிலைமைக்கும் பதிலாகத் தன் நிலைமையை மாற்றிக்கொள்ளச் சம்மதிக்கான். பின்னர் இவனுக்குக் கொடுத்திருப்பதைப் பெரும்பாலாருக்குக் கொடுக்கவில்லையாதலால் இது ஷுக்குரு செய்யவேண்டிய இடமேயாம்.

பசல்: அறிந்துகொள்:—துன்பத்திலும் ஷுக்குரு செய்யவேண்டும். ஏனெனில் குப்ரும் பாவமுமான துன்பம் தவிர மற்ற எந்தத் துன்பத்திலும் யாதொரு நன்மையிருக்கக்கூடும். அதை நீ அறிய மாட்டாய். உனது நன்மையை அல்லாகுதஆலா நன்றாய் அறிவான்.

மேலும் எந்தத் துன்பத்திலும் ஐந்திலொரு விதத்தில் ஷுகுரு வாஜிபாயிருக்கிறது. முதலாவது:-ஒரு துன்பம் உண்டாகி அது தீன் விஷயத்திலில்லாமல் துன்யாவிஷயத்திலும் சரீரத்திலுமிருப்பதாம். இது ஷுகுரு செய்யவேண்டிய இடமேயாம். ஒருவர் ஸஹல் துஸ்தரீ றஹிமஹுல்லா அவர்களிடம் போய் "என் வீட்டில் திருடன் புகுந்து என் பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டான்" என்றுசொன்னார். அதற்கவர்கள் அவரைநோக்கி "ஷைத்தான் உன் மனதுக்குட் புகுந்து உன் ஈமானைத் திருடிக்கொண்டு போய்விட்டால் நீ என்ன செய்வாய்?" என்று சொன்னார்கள். இரண்டாவது:-எந்த நோய் துன்பங்கள் வந்தாலும் அதினும் மிகக் கெட்ட ஓர் துன்பம் இருக்கக்கூடும். அதைநோக்க இந்த நோயும் துன்பமும் சுலபமானதாயிருக்கும் ஆதலால் இதற்காக ஷுகுரு செய்யவேண்டும். ஒருவன் ஆயிரம் அடியுண்ணப் பாத்தியஸ்தனாயிருந்து அவனை நூறு அடிக்குமேல் அடிக்காமல் விட்டுவிட்டால் அவன் ஷுகுரு செய்யவேண்டியவனே. ஓர் சந்தர்ப்பத்தில் ஒரு பெரியவருடைய தலையின்மீது சாம்பலைக் கொட்டிவிட்டார்கள், அதற்கவர் ஷுகுரு செய்தார். ("ஏன் ஷுகுரு செய்தீர்"? என்று அவரைக் கேட்டதற்கு) "நெருப்புக்கு அருகனாயிருந்த என்மீது சாம்பலைக் கொட்டினால் இது பெரிய ஓர் நிஃமத்தாயிருக்கிறது" என்றார். மூன்றாவது:- எந்தவேதனையையும் துன்யாவில் கொடுக்காமல் ஆகிறத்தில் கொடுக்கிறதென்று பிற்படுத்தி வைக்கிறபக்ஷம் அது இந்த வேதனையிலும் மிகப் பெரிதாயும் கெட்டதாயுமிருக்கும். ஆதலால் இது துன்யாவிலே உண்டாய்விட்டதற்காகவும் ஆகிறத்துடைய பெரிய வேதனை அவனைவிட்டு நீங்குவதற்கு இது ஓர் காரணமாயிருப்பதற்காகவும் அவன் ஷுகுரு செய்யவேண்டும். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், "எவனொருவன் துன்யாவில் வேதனைப்படுகிறானோ அவன் ஆகிறத்தில் வேதனைப்படான்" என்று அருளிச்செய்திருக்கிறார்கள். ஏனெனில் துன்யாவில் வருகிற துன்பமானது பாவங்களை அழிக்கின்ற கபாறாவாகும். அப்படி அவன் பாவமில்லாதவனாய்ப்போனால் வேதனை எங்கிருக்கும்? ஒரு வயித்தியன் உனக்குக் கசப்பான மருந்தைக் கொடுத்தால் அல்லது உன் தேகத்தில் நஷ்தர் குத்தி இரத்தம் எடுத்தால் அது உனக்கு வருத்தமாயிருந்தபோதிலும் நீ அவனுக்கு நன்றியறிந்து ஷுகுருசெய்ய வேண்டும். ஏனெனில் நீ இந்த அற்ப வருத்தத்தின் மூலமாக அதிக வருத்தத்திலிருந்து நீங்கினதினாலென்க. நாலாவது:—லவுஹுல்மஹ்

பூமியில் உனக்கு எழுதப்பட்டிருந்த இந்தத் துன்பம் உன்னைவிட்டும் கழிந்து இனி உன் வழியில இல்லாமல் எடுபட்டுப் போனதற்காக நீ ஷுக்குரு செய்யவேண்டும். ஷெய்கு அபூசயீது றஹிமஹுல்லா அவர்கள் தாங்கள் ஏறியிருந்த கழுதையின்மேலிருந்து கீழே விழுந்துவிட்டபோது அல்ஹம்து லில்லாஹ் என்று ஷுக்குரு செய்தார்கள். "ஏன் ஷுக்குரு செய்தீர்?" என்று கேட்டதற்கு "ஆதி கற்பனையில் விதித்தபடி இப்படி விழவேண்டிய விதியிருந்தது. அந்த விதி என்னைவிட்டும் கழிந்துபோனதற்காக ஷுக்குரு செய்தேன்" என்றார்கள். ஐந்தாவது:—துன்யாவில் வரும் துன்பமானது இரண்டு விதத்தில் ஆகிரத்துடைய சவாபுக்குக் காரணமாயிருக்கிறது. ஒன்று; ஹதீசுகளில் வந்திருப்பதுபோல் அதன் சவாபு பெரிதாயிருக்கும். மற்றொன்று; துன்யா உனக்குச் சொர்க்கமாகவும் அல்லாகு தஆலா உடைய சமூகத்திற் செல்வது உனக்கு மறியல்சாலையாகவும் தோன்றும்படி நீ அவ்வளவாகத் துன்யாவை நேசிப்பது பாவங்களுக்கெல்லாம் தலையாயிருக்கிறது. எந்த மனிதனுக்குத் துன்யாவில் துன்பங்கள் விடப்படுகின்றனவோ அந்த மனிதனுடைய மனம் துன்யாவை வெறுக்கும். துன்யா அவனுக்கு மறியல்சாலைபோலிருக்கும். மரணமானது அந்த மறியல்சாலையிலிருந்து அவனை விடுவிப்பதாகும். அல்லாகு தஆலாவினால் அதபு வருத்துவதன்றி எந்தத்துன்பமும் இல்லை. ஒருசிறுவன் புத்திசாலியாயிருப்பானாகில் தகப்பன் அவனைக் கண்டித்து அதபு வருத்தும்போது அச்சிறுவன் நன்றியறிந்து ஷுக்குரு செய்வான். ஏனெனில் அந்தக் கண்டிப்பில் அநேகம் பிரயோசனங்களிருப்பதினாலென்க. நீங்கள் உங்கள் வியாதியஸ்தர்களை உணவு குடிப்புகளால் சம்ரட்சிப்பதுபோல் அல்லாகு தஆலா தன்னுடைய நேசர்களைத் துன்பங்களால் சம்ரட்சிக்கிறான் என்று ஹதீசில் வந்திருக்கிறது. ஒருவர் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சமூகத்தில் "யாறசூலல்லா! என்பொருளை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்கள்" என்று சொன்னார். அப்போது நாயகமவர்கள், அவரைநோக்கி "எந்த மனிதனுடைய திரவியம் போகாமலும் தேகம் பிணிகொள்ளாமலுமிருக்கிறதோ அந்த மனிதனில் நன்மையில்லை" என்றும், "அல்லாகு தஆலா அடியானை நேசிக்கும்போது அவன்மேல் துன்பங்களைச் சொரிகிறான்" என்றும் அருளிச்செய்தார்கள். இன்னும் "சொர்க்கத்தில் அநேகம் மேம்பாடான பதவிகள் உண்டு" என்றும், "அடியான் தன்னுடைய தெண்டிப்பினால் அந்தப் பதவிகளுக்குச் செல்லமுடியாது" என்றும், "துன்பத்தின் மூலமாகு

அல்லாகு தஆலா அவனை அந்தப் பதவிகளுக்குக் கொண்டுபோகிறான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். ஒருநாள் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வானத்தைநோக்கிப் பார்த்துக்கொண்டிருந்து பின்பு சிரித்துச் சொன்னதாவது:—"மூமினுடைய விஷயத்தில் அல்லாகு தஆலா விதித்திருக்கிற கற்பனையைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். அவனுக்கு நிருமத்தை விதித்தாலும் பொருந்திக்கொள்ளுகிறான். இதில் அவனுக்கு நன்மையிருக்கிறது. துன்பத்தை விதித்தாலும்பொருந்திக்கொள்ளுகிறான். இதிலும் அவனுக்குநன்மையிருக்கிறது" என்பதே. இதன்கருத்து: மூமினானவன் துன்பத்தில் சபுரும் நிகுமத்தில் ஷுக்கூரும் செய்கிறானதலால் இரண்டிலும் அவனுக்கு நன்மையிருக்கிறது என்பதாம். இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருப்பதாவது:—"துன்யாவில் சுகமாயிருந்தவர்கள் நாளை கியாமத்தின்போது அதில் துன்பமடைந்தவர்களின் மேம்பாடான பதவிகளைப் பார்த்து "ஆ துன்யாவில் நம்முடைய சதையை நகமறுக்கும் கருவியினலாவது அறுத்திருக்கவேண்டுமே என்று ஆசிப்பார்கள்" என்பதே. நபிமார்களில் ஒருவர் "என் ஆண்டவனே! நீ காபிர்களுக்கு நிகுமத்தை அள்ளி இரைப்பதும் மூமின்களுக்குத் துன்பத்தை வாரிச்சொரிவதும் யாதுகாரணம்பற்றியோ" என்றுகேட்க, "ஓ நபியே! அடியார்களும் துன்பமும் நிகுமத்தும் சகலமும் என் ஆதீனமாயிருக்கிறது. மூமினுக்கு யாதொரு பாவமிருந்தால் அவன் சாகுந்தருணத்தில் பாவமில்லாமல் சுத்தமாகி என்னைத் தெரிசிக்கும்பொருட்டு அவனுடைய பாவங்களை இவ்வுலகத்தின் துன்பங்களால் அழித்துவிடவும், காபிருக்கு ஏதும் நன்மைகளிருந்தால் அவன் என்னைக் காணும்போது அவனுடைய ஹக்கு என்னிடத்தில் ஏதுமில்லாதபடி அந்த நன்மைகளுக்குப் பிரதிபலனாகத் துன்யாவிலேயே நிருமத்தைக் கொடுத்துவிடவும் அவனை நன்றாய் வேதனைப்படுத்தவும் விரும்புகிறேன்" என்று அல்லாகு தஆலா அருளிச்செய்தான். தீமைசெய்தவன் தெண்டனை அடைவான் என்னும் பொருள் பொருந்திய வமன்யஃமல் ஸூஅன் யுஜ்ஸ பிஹி இந்த ஆயத்து இறங்கினபோது அபூபக்கர் சித்திகு றலியல்லாகு அன்கு அவர்கள் "யாறசூலல்லா! நாங்கள் இதைவிட்டும் எப்படி விடுதலை பெறுவோம்!" என்றுகேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் "நீங்கள் வியாதிப்படுகிறதில்லையா? துக்கமடைவதில்லையா? இவைமூமினுடைய பாவத்துக்குத் தெண்டனையாகும்" என்று அருளிச்செய்தார்கள். சுலைமான் அலைகிஸ்ஸலாமவர்களுடைய பிள்ளை ஒன்று மரணத்தை

அடைந்தது. அதற்காக அவர்கள் மிகவும் துக்கித்துக்கொண் டிருந்தார்கள். அப்போது இரண்டு மலக்குகள் வாதியும் பிரதிவாதியும் போல் ரூபந்தரித்து சுலைமான் அலைகிஸ்ஸலாமவர்களிடம் வந்தார்கள். அவர்களில் ஒருவர் "யாநபிய்யல்லா! நான் நிலத்தில் விதை விதைத்தேன். இவர் அந்த விதையைக் காலால் மிதித்துச் சேதப்படுத்திவிட்டார்" என்று மற்றொருவர்மேல் வழக்குச்சொன்னார். அதற்கந்த மற்றொருவர் "யா நபிய்யல்லா! சர்வஜனங்களும் நடக்கிற பொதுப்பாட்டையில் இவர் விதை விதைத்திருந்தார். வலதிடது பக்கங்களில் நடக்க வேறு வழியில்லாமையினால் நான் அதை மிதித்துக்கொண்டு போகும்படி நேரிட்டது" என்று சொன்னார். அப்போது சுலைமான் அலைகிஸ்ஸலாமவர்கள் அந்த வாதியை நோக்கி "நடக்கிற வழியில் நீ விதையை விதைத்தாயே. ஜனங்களின் நடமாட்டமில்லாமல் அந்த பாட்டை ஒழிந்திராது என்று உனக்குத் தெரியாதா?" என்று சொன்னார்கள். அதற்கந்தவாதி சுலைமான் அலைகிஸ்ஸலாமைப் பார்த்து "நீர் உம்முடைய பிள்ளை மரணமடைந்ததைப்பற்றித் துக்கவுடை தரித்திருக்கிறீரே, மனிதர்கள் மரணமென்னும் பொதுப்பாட்டையில் இருக்கிறார்கள் என்பது உமக்குத் தெரியாதா?" என்று சொன்னார். பின்பு சுலைமான் அலைகிஸ்ஸலாமவர்கள் தவுபா இஸ்திஃபாரு செய்தார்கள். கலீபாவான உமருப்னு அப்தில் அஜீஸ் றஹிமஹுல்லா அவர்கள் தங்களுடைய பிள்ளை வியாதிப்பட்டு மரண நெருக்கத்திலிருப்பதைக்கண்டு "மகனே! நீ என் தராசில் ஆகும்படி எனக்குமுன்னே போவாயாகில் அதானது நான் உன் தராசில் ஆவதைப்பார்க்கிலும் எனக்கு மிகவும் உவப்பானதாயிருக்கிறது" என்று சொன்னார்கள். அதற்கந்தப்பிள்ளையானவர் "என் பிரிய தந்தையே! தாங்கள் உவந்ததையே நான் நாடுகிறேன்" என்றார். இபுனு அப்பாஸ் றளியல்லாகு அன்ஹுமா அவர்களின் மகன் மவுத்தையடைந்தபோது இந்தச் செய்தியை அவர்களுக்கு அறிவித்தார்கள். அவர்கள் இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் என்றுரைத்து "என் மானம் மறைந்தது, என் செலவு குறைந்தது, எனக்கு சவாபு ரொக்கமாயிற்று" என்று சொல்லித் தொழுகையைக்கொண்டும் சபுரைக்கொண்டும் நீங்கள் உதவி தேடுங்கள் என்று அல்லாகுதஆலா கட்டளையிடுகிறானதலால் நாம் அந்த இரண்டையும் நிறைவேற்றினோம் என்றும் சொன்னார்கள். ஹாத்திமுல் அசம்மு றஹிமஹுல்லா அவர்கள் சொல்வதாவது:—"அல்லாகுதஆலா நாளை கியாமத்தில் நாலு கூட்டத்தாருக்கு நாலுபேரை அத்தாட்சியாகக் காட்டுவான். அதாவது

சீமான்களுக்கு சுலைமான் அலைகிஸ்ஸலாமையும்; அடிமைகளுக்கு யூசுப் அலைகிஸ்ஸலாமையும், ஏழைகளுக்கு ஈஸா அலைகிஸ்ஸலாமையும், துன்பமுற்றவர்களுக்கு அய்யூபு அலைகிஸ்ஸலாமையும் அத்தாட்சியாக்குவான்" என்பதாம். ஷுக்குரினது இல்மின் விஷயமாக இவ்விடத்தில் இவ்வளவு சொன்னது போதும். வல்லாஹு அஃலமு பிஸ்ஸவாப்.

### மூன்றாவது அஸ்லு:—கவ்பு, ரஜா என்னும் அச்சம் ஆதரவு இவைகளின் பயான்.

அறிந்துகொள்:—நேர்வழி நடப்பவனுக்கு அச்சம், ஆதரவு இவ்விரண்டும் இரண்டு இறக்கைகள்போலிருக்கின்றன. உயர்ந்தியான ஒவ்வொரு பதவிக்கும் இவ்விரண்டின் பலத்தினாலேயே போய்ச் சேருகின்றான். ஏனெனில், அல்லாகு தஆலா உடைய திருச்சமுகத்தை அடைவதற்குத் தடையாயிருக்கிற கஷ்டமான கணவாய்கள் மிகவும் உயரமாயிருக்கின்றன. அவனுக்கு மெய்யான ஆதரவும் அல்லாகு தஆலாஉடைய பேரழகின் இன்பத்தை அடையலாமென்ற ஆசையும் இல்லாதவரையில் அந்தக் கணவாய்களைக் கடந்துபோக அவனால் முடியாது. நரகத்துக்குடைய வழியின்மீதிருக்கிற இச்சைகள் வெகுவாய் அவனை ஏமாற்றித் தங்கள் பக்கம் இழுக்கின்றவைகளாயிருக்கின்றன. அவைகளின் வலையானது தன்னில் அகப்பட்டதைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்வதாயும் சன்னபின்னலாயுமிருக்கிறது. அவன் மனதில் அச்சம் மேலிடாதவரையில் அதைவிட்டும் தப்பித்துக்கொள்ள அவனால் முடியாது. இதனாலேதான் அச்சம், ஆதரவு இவைகளின் வரிசை பெரிதாயிருக்கிறது. ஏனெனில் ஆதரவானது கடிவாளம்போலிருந்து அவனை இழுக்கின்றது. அச்சமானது சாட்டிபோலிருந்து அவனை ஓட்டுகின்றது. நாம் முதலில் ஆதரவைக் குறித்த விபரங்களைச் சொல்லி அதன் பிறகு அச்சத்தைக் குறித்துக் கூறுவோம்.

### ரஜா என்னும் ஆதரவின் விசேஷப்பாடு.

அறிந்துகொள்:—அல்லாகு தஆலாவினது கிருபை றஹ்மத்தினை ஆதரவு வைத்து அவனை வணங்குவதானது நரகவேதனைக்குப் பயந்து வணங்குவதினும் மிக நல்லதாயிருக்கிறது. ஏனெனில் ஆதரவு வைப்பது மஹப்பத்தை உண்டாக்கும். மஹப்பத்துக்கு மேலிட்ட பதவி ஒன்றுமில்லை. அச்சமானது வெறுப்பை யுண்டாக்கும். இதனாலேதான் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் உங்களில் ஒருவனும் தன் எண்ணத்தை அல்லாவின் விஷயத்தில் நல்ல

தாக்கியே யொழிய மவுத்தாக வேண்டாம் என்று திருவுளமாயிருந்திருக்கள். இன்னும் "என் அடியான் என்மீது நல்ல எண்ணம் வைக்கும்போது நான் அங்கே இருக்கிறேன்" என்றும், "எந்த எண்ணத்திலும் என்மீது ஆதரவு வைக்கும்படி என் அடியானுக்குச் சொல்வீராக" என்றும் அல்லாகு தஆலா அருளிச்செய்திருப்பதாக றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள். இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருவரை நோக்கி, "நீ உன் சகராத்து நேரத்தில் உன்னை எப்படிக் காண்பாய்?" என்று கேட்டார்கள். அதற்கவர் "என் பாவங்களைப்பற்றி நான் அந்த நேரத்தில் அச்சப்படுகிறவனும் அல்லாகு தஆலாவின் றஹ்மத்தை ஆதரவு வைக்கிறவனுமாயிருப்பேன்" என்று சொன்னார். அப்போது நாயகமவர்கள் "எந்த மனிதனுடைய மனதிலும் இப்படியான நேரத்தில் இவ்விரண்டும் சேகரமாகிறதில்லை" என்றும், "அப்படிச் சேகரமானால் அல்லாகு தஆலா அவன் அச்சப்படுவதிலிருந்து அவனைக் காத்து அச்சம் தீர்க்காமலும் அவன் ஆதரவு வைத்ததை அவனுக்குக் கொடுக்காமலும் இருப்பதில்லை" என்றும் அருளிச்செய்தார்கள். இன்னும் யாகூபு அலைகிஸ்ஸலாமவர்களுக்கு அல்லாகு தஆலா வஹியின் மூலமாக "ஓ யாகூபே! நான் யூசுபை உம்மைவிட்டும் பிரித்தது எதற்காக? அது உமக்குத் தெரியுமா? என்றும், நீர் ஏன் நாய்க்குப்பயந்தீர்? என்றும், என்மீது ஏன் ஆதரவு வைக்கவில்லை? என்றும், அவரின் சகோதரர்கள் அவரை மறந்துவிடுவார்களென்பதை ஏன் யோசித்தீர் என்றும், என் காவலை ஏன் எண்ணிப்பார்க்கவில்லை என்றும், ஓநாய் அவரைத் தின்றுவிடுமென்றே பயப்படுகிறேன் என்று ஏன் சொன்னீர் என்றும், இதற்காகவே அவரை உம்மிடத்திலிருந்து பிரித்துவிட்டேன் என்றும் அறிவித்தான். இன்னும் ஒருவர் தம்முடைய பாவங்கள் அதிகப்பட்டிருந்த நிமித்தம் தமக்கு மன்னிப்புக் கிடைக்காதென்று நிராதரவாய்ப்போயிருந்தார். அவரை அழைப்பித்து அன்று அவரிடம் "நீர் நிராதரவாய்ப் போகவேண்டாம் என்றும், அல்லாகு தஆலாவுடைய றஹ்மத்தானது உம்முடைய பாவத்திலும் பெரிதாயிருக்கின்றது" என்றும் சொன்னார்கள். இன்னும் நாளை கியாமத்தில் அல்லாகு தஆலா அடியானை நோக்கி, "நீ என் விலக்கலான இருமத்தைக் கண்டு விலக்காமலிருந்தாய்? என்று கேட்பான்; என்றும் அவனுடைய நாவுக்கு அல்லாகு தஆலா உதவி புரிவானாகில் அப்போதவன் என் ஆண்டவனே! நான் ஜனங்களுக்குப் பயந்தேன்; உன் றஹ்மத்தை ஆதரவு

வைத்தேன் என்று சொல்லுவான் என்றும், அவன்மீது அல்லாகு தஆலா றஹ்மத்து செய்வான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் ஒருநாள் றஸூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் அஸ்ஹாபுகளைப் பார்த்து, "நான் அறிந்ததை நீங்கள் அறிவீர்களாகில் அதிகமாக அழுவீர்கள், கொஞ்சமாகச் சிரிப்பீர்கள், காட்டை நோக்கிச் செல்வீர்கள், கையால் மாரடித்துக்கொள்வீர்கள், கதறியழுவீர்கள்" என்று சொன்னார்கள். அப்போது ஜிப்ரயீல் அலைகிஸ்ஸலாம் வந்து "நீர் என் அடியார்களை என் றஹ்மத்துக்கு ஆதரவில்லாதவர்களாகும்படி செய்வானேன்?" என்று அல்லாகு தஆலா கேட்கிறான் என்று அறிவித்தார்கள். அப்போது நாயகமவர்கள் வெளியே வந்து அல்லாகு தஆலா உடைய கிருபையைப் பற்றி நல்ல ஆதரவுகளைக் கூறினார்கள். இன்னும் அல்லாகு தஆலா தாவூது அலைகிஸ்ஸலாமவர்களுக்கு ஒஹியினால் "ஒ தாவூதே! நீர் என்னை நேசிப்பீராக! என் அடியார்களுடைய மனதிலும் எனது நேசத்தை யுண்டாக்குவீராக" என்று அறிவித்தான். அப்போது நபியவர்கள் "என் ஆண்டவனே! அடியார்களுடைய மனதில் நான் எப்படி உனது நேசத்தை உண்டாக்குவேன்?" என்று கேட்டதற்கு "நீர் என் கிருபை நிஃமத்துகளை அவர்களுக்கு ஞாபகமூட்டுவீரானால் என் நேசத்தை யுண்டாக்கும்" என்றும், "அவர்கள் என்னால் நன்மையையன்றித் தீமையைக் கண்டிருப்பதில்லை" என்றும் அறிவித்தான். ஒருவர் யஹ்யாபுனு அக்தம் றஹிமஹுல்லா அவர்களைச் சொப்பனத்தில் கண்டு "அல்லாகு தஆலா உமக்கு என்ன செய்தான்?" என்று கேட்டதற்கு அவர்கள் சொன்னதாவது:— "அல்லாகு தஆலா என்னைக் கேள்வியின் தானத்தில் நிறுத்தி ஓ ஷெய்கே! நீர் இன்னின்னபடி செய்தீர் என்று சொன்னான். அதனால் எனக்கு மிகவும் பெரிய பயம் வந்து பிடித்துக்கொண்டது. அப்போது நான் என் ஆண்டவனே! நீ இப்படிச் செய்வாய் என்று உன்னிலின்றும் ஹதீது எனக்கு அறிவிக்கவில்லையென்றேன். அதற்கு அல்லாகு தஆலா என்னிலின்றும் என்ன அறிவிக்கப்பட்டது என்று கேட்டான். அப்போது நான் "என் ஆண்டவனே! என் அடியான் என்மீது ஆதரவு வைத்து நான் அவனுக்கு என்னசெய்வேன் என்று எண்ணுகிறானோ அதையே நான் அவனுக்குச் செய்வேன்" என்று நீ சொன்னதாக உன்னிலின்றும் ஜிப்ரயீல் அலைகிஸ்ஸலாம் கேட்டு அவர்கள் றஸூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குச் சொல்ல, அவர்கள் அனஸ் றலியல்லாகு அன்குவுக்குச் சொ

ல்ல, அவர்கள் ஜவ்றி றஹிமகுல்லாவுக்குச் சொல்ல, அவர்கள் மிகுமர் றஹிமஹுல்லாவுக்குச்சொல்ல, அவர்கள் அப்துர் றஜ்ஜாக் றஹிமஹுல்லாவுக்குச் சொல்ல, அவர் எனக்குச்சொல்ல நான் கேட்டிருக்கிறேன். ஆதலால் நீ என்மீது றஹ்மத்து செய்வாய் என்று நான் ஆதரவு வைத்திருந்தேன்" என்று சொன்னேன். அப்போது அல்லாகு தஆலா "ஓ ஷெய்கே! ஜிப்ரயீலும் உண்மை சொன்னார். என்னுடைய றசூலும் உண்மை சொன்னார்கள். அனசும் உண்மை சொன்னார். ஜவ்றியும் உண்மை சொன்னார். மிகுமரும் உண்மை சொன்னார். அப்துர் றஜாகும் உண்மைசொன்னார். நான் உமதுபேரில் றஹ்மத்து செய்தேன்" என்று அருளிச்செய்தான். பின்பு எனக்குச் சன்கை என்னும் உடுப்பை உடுத்தினார்கள். சுவர்க்கத்து கில்மான்கள் என்னும் பணிவிடைக்காரர்கள் எனக்கு முன்பாகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். நான் நினைக்காத சந்தோஷத்தை அடைந்தேன்" என்பதே. இன்னும் பனீ இஸ்ராயீல் கூட்டத்தில் ஒருவன் அல்லாகு தஆலாவுடைய றஹ்மத்தில் ஜனங்கள் ஆதரவு வைக்காதபடி அவர்களின் காரியத்தை மிகவும் கடினமாக்கிக்கொண்டிருந்தான் என்றும், நாளை கியாமத்தில் அல்லாகு தஆலா அவனை நோக்கி "நீ என்னுடைய அடியார்களை என் றஹ்மத்தில்நின்றும் நிராதரவாகும்படி செய்ததுபோல் நான் இன்று உன்னை என் றஹ்மத்துக்கு ஆதரவில்லாதவனாக்குவேன்" என்று சொல்வான் என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் ஹதீதில் வந்திருப்பதாவது:—ஒருமனிதன் ஆயிரம் வருஷகாலம் நரகத்தில் கிடப்பான். பின்பு யா ஹன்னான்! யாமன்னான்! என்று கூப்பிடுவான். அப்போது அல்லாகு தஆலா ஜிப்ரயீல் அலைகிஸ்ஸலாமை நோக்கி நீபோய் என் அடியானைக் கொண்டுவா என்று உத்திரவுசெய்வான். ஜிப்ரயீல் அவனைக் கொண்டுவந்த பிறகு அல்லாகு தஆலா அவனைநோக்கி "நீ நரகத்தில் உன் இடத்தை எப்படியிருக்கக்கண்டாய்?" என்று கேட்பான். அதற்கவன் "மிகவும் கெட்ட இடமாயிருக்கக்கண்டேன்" என்று சொல்லுவான். அப்போது அல்லாகு தஆலா "அவனைத் திரும்ப நரகத்துக்குக் கொண்டுபோங்கள் என்று ஆக்கியாபிப்பான். அப்படியே அவனைக் கொண்டுபோகும்போது அவன் திரும்பித் திரும்பிப் பார்ப்பான். அல்லாகு தஆலா "நீ ஏன் திரும்பிப்பார்க்கிறாய்?" என்று கேட்பான். அதற்கவன் "என் ஆண்டவனே! நரகத்திலிருந்து வெளிப்படுத்திய நீ என்னைத் திருப்பவும் அதற்கு அனுப்பமாட்டாய் என்ற ஆதரவினால் பார்க்கிறேன்" என்று சொல்லுவான் அப்போது அல்லாகு

தஆலா "அவனைச் சொர்க்கத்துக்கு அனுப்புங்கள்" என்று அருளிச் செய்வான். இந்த ஆதரவினால் அவன் ஈடேற்றம் பெறுவான் என்பதே.

### ரஜா (ஆதரவு) இதுவென அதன் பொருளை விளக்கல்.

அறிந்துகொள்:—பின்னிட்டு யாதொரு நன்மை கிடைக்கும் என்று ஒருவன் எதிர்பார்ப்பானாகில் அந்த எதிர்பார்த்தலுக்கு ரஜா (ஆதரவு) என்றுசொல்லப்படும். அதைத் தமன்னா என்றும் சொல்வதுண்டு. சிலசமயம் அது மூடத்தனமும் மருட்சியுமாயிருப்பதுண்டு. தெரியாதவர்கள் இவைகளின் வித்தியாசத்தைப் பிரித்தறியமாட்டார்கள். இவையெல்லாம் நல்ல ரஜா என்றே சொல்லுவார்கள். உண்மை அப்படியல்ல. மேலும் ஒருவன் நல்ல விதையைத்தேடி உழுது பண்படுத்தப்பட்ட நிலத்தில் விதைத்து அதில் முளைக்கும் களைகளையும் பிடுங்கிச் சுத்தப்படுத்தித் தருணத்தில் தண்ணீரும் பாய்ச்சி இடி முதலிய ஆபத்துகளில்நின்றும் அல்லாகு தஆலா இதைக் காப்பாற்றினால் நான் பலனை அடைவேன் என்று அதை எதிர்பார்த்துக்கொண்டிருப்பானாகில் இந்த எதிர்பார்த்தலுக்கு ரஜா (நல்ல ஆதரவு) என்று சொல்லப்படும். அழுகிப்போன விதையை விதைத்து அல்லது கெட்டியான கரம்பில் விதைத்து அல்லது களை பிடுங்கிச் சுத்தப்படுத்தாமல் அல்லது தண்ணீர் பாய்ச்சாமல் பலனை எதிர்பார்ப்பானாகில் இந்த எதிர்பார்த்தல் மருட்சியும் மூடத்தனமுமாகும். இது ரஜா என்று சொல்லப்படாது. இனி மழை பெய்வது பெரும்பாலும் பூச்சியமாயும் சில சமயம் பெய்யக்கூடுமாயும் இருக்கிற ஒர் இடத்தில் நல்லவிதையை நல்ல நிலத்தில் தூவிக் களையுங் கொத்திச் சுத்தப்படுத்துகிறான். ஆனால் மழை வரும் என்று எதிர்பார்த்துத் தண்ணீர் இறைக்காமலிருக்கிறான். இந்த எதிர்பார்த்தலுக்குத் தமன்னா (ஆசை) என்று சொல்லப்படும்.

இதுபோலவே ஒருவன் சரியான ஈமான் என்னும் விதையைத் தன் நெஞ்சகம் என்னும் நிலத்தில் நட்டு அந்நெஞ்சகத்தைத் துர்க்குணங்களினின்றும் சுத்தப்படுத்தியும் அதில் முளைத்தெழுந்த ஈமான் என்னும் மரத்துக்கு இபாதத்துகளை இடைவிடாமற் செய்வதென்னும் தண்ணீர் பாய்ச்சியும் வருவதுடன் அந்த ஈமானுக்கு ஆபத்துகள் அணுகாமல் மரணபரியந்தம் அது அப்படியே நிலைத்திருக்கும்படி அல்லாகு தஆலா ஆபத்துகளை அகற்றிவைப்பான் என்றும், ஈமானுடன் கொண்டுபோவான் என்றும், இப்படியாக அல்லாகு

தஆலாவின் ரஹ்மத்தை எதிர்பார்ப்பானாகில் இதற்கு ரஜா என்று சொல்லப்படும். இந்த ரஜாவுக்கு அடையாளமாவது:—அவன் இனி மேல் செய்யக்கூடிய எந்த நன்மையிலும் குறைசெய்யாமலும் ஈமானின் பாதுகாப்பைக் கைவிடாமலு மிருப்பதாம். ஏனெனில் ஒருவன் விதையின் பாதுகாப்பைக் கைவிடுவதானது அவனுக்கு ஆதரவிருப்பதின் அடையாளமல்ல. ஆதரவு அற்றுப்போனதின் அடையாளமாம். இனி ஈமான் என்னும் விதை அழுகிப்போயிருந்தால் அதாவது சரியான எகீன் இல்லாமற்போனால் அல்லது சரியான எகீன் இருந்து அவன் தன் மனதைக் கெட்ட குணங்களினின்றும் சுத்தப்படுத்தாமலும் அந்த ஈமானுக்கு இபாதத்தென்னும் தண்ணீரைப் பாய்ச்சாமலு மிருந்தால் அவன் அல்லாகு தஆலா உடைய ரஹ்மத்தை ஆசைவைப்பது மூடத்தனமாகும். ரஜா (ஆதரவு) என்றாகாது. உதாரணமாக:—ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "ஒருவன் தன் நபுசினுடைய இச்சைகளைத் துயர்ந்து அல்லாகு தஆலாவின் றஹ்மத்தை ஆசிப்பானாகில் அவனே மூடன்" என்று அருளிச்செய்திருக்கிறார்கள். இதுவுமன்றி நபிமார்களுக்குப்பிறகு எந்த ஜனங்கள் இல்மை அடைந்தும் துன்யாவுடைய காரியங்களில் பராக்காகி "எங்கள்மீது அல்லாகுதஆலா றஹ்மத்துசெய்வான் என்று நாங்கள் ஆசை வைக்கின்றோம்" என்று சொன்னார்களோ அந்த ஜனங்களை பகலப மிம்பஃதிஹிம கல்புன் என்ற ஆயத்தில் அல்லாகு தஆலாவும் பழித்திருக்கிறான்.

ஆகக்கூடி ஒருகாரியம் உண்டாவதற்கு அடியானுடைய தெரியுதல் சம்பந்தமான சில காரணங்களிருந்து அவனால் அவை பூர்த்தி செய்யப்பட்ட பிறகு அதன் பலனை அவன் ஆதரவுவைப்பது ரஜா (நல்லஆதரவு)என்றும், காரணங்கள் பாழாய்க்கிடக்கப் பலனை ஆதரவு வைப்பது ஹிமாகத்து, குருரு (மூடத்தனம், மருட்சி) என்றும், காரணங்கள் பாழாகாமலும் பண்படுத்தப்படாமலு மிருப்பதுடன் பலனை ஆதரவுவைப்பது தமன்னா(வெற்றாதரவு)என்றும் சொல்லப்படும். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் லைஸத்தீனு பித்தமன்னா "தீனுடையகாரியம் வெற்றாதரவினால் சரியாவதில்லை" என்று திருவுளமாயிருக்கிறார்கள். ஆகவே ஒருவன் தவுபாசெய்தால் அது கபூலாகும் என்று அவன் ஆதரவு வைக்கவேண்டும். ஒருவன் தவுபாச்செய்யாமல் தன் பாவங்களைப்பற்றித் துக்கப்படுகிறவனாயிருந்துகொண்டு அல்லாகுதஆலா தனக்குத் தவுபாவைக்கொடுப்பானென்று ஆதரவுவைப்பானாகில இது ரஜாவாகும். ஏனெனில் அவன் தன்

பாவங்களைப்பற்றித் துக்கப்படுவதானது அவனைத் தவ்பாவின்பக்
கம் இழுக்க ஓர் காரணமாயிருக்கிறது. ஒருவன் தவ்பாச் செய்யாம
லும் பாவங்களைப்பற்றித் துக்கப்படாமலு மிருந்துகொண்டு தவ்பா
வை ஆதரவுவைப்பானாகில் இது மூடத்தனமும் மருட்சியுமாகும்.
இப்படியே தவ்பா இல்லாமல் பாவம் மன்னிக்கப்படும் என்று
ஆதரவுவைப்பதும் மருட்சியாகும். மூடர்கள் இதற்கு ரஜா என்று
பேர்வைத்தாலும் சரியே. இன்னும் ஈமான்கொண்டவர்களும் குடி
பதியை விட்டவர்களும் அல்லாவுடைய மார்க்கத்தில் யுத்தஞ்செய்த
வர்களுமான அந்த ஜனங்கள் அல்லாவுடைய றஹ்மத்தை ஆதரவு
வைப்பவர்கள் என்று அல்லாகு தஆலா கூறுகின்றான். இதன் கரு
த்து:—இஸ்லாமை விசுவாசித்துத் தங்களூரின்மீதும் வீட்டின்மீதும்
இருந்த ஆசையைவிட்டுப் பிரதேச யாத்திரைசெய்து தீனுக்காகக்
காபிர்களோடு யுத்தஞ்செய்தவர்கள் யாரோ அவர்கள் நம்முடைய
ரஹ்மத்தை ஆதரவுவைக்கலாம் என்பதே. இன்னும் "நரகவிதை
யைத்தூவிச்சொர்க்கபலனை எதிர்பார்ப்பதும் பாவிகளின் கிரியைகளைச்
செய்து வழிபட்ட அடியார்களின் வீடு வாய்க்குமென்று ஆசிப்ப
தும் அமலைச்செய்யாமல் சவாபை ஆதரவுவைப்பதுமான இந்த
மூடத்தனத்திலும் பெரிய மூடத்தனம் எதுவுமில்லை" என்று யஹ்
யப்னு மஆது றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். இன்
னும் ஒருவர் இருந்தார். அவரை ஜெய்துல்கைல் என்று சொல்லு
வார்கள். அவர் ஒருநாள் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின்
சமுகம் வந்து "யாரசூலல்லா! அல்லாகு தஆலா ஒருமனிதனுக்கு நன்
மையை நாடியிருப்பதற்கு அடையாளம் என்ன என்பதும் அவன்
ஒருவனுக்கு நன்மையை நாடாமலிருப்பதற்கு அடையாளம் என்ன
என்பதுமான இந்த விஷயத்தைத் தங்களிடம் கேட்கவந்திருக்
கிறேன்" என்று சொன்னார். நாயகமவர்கள் அவரை நோக்கி "நீ எழு
ம்புகிற ஒவ்வொருநாளும் நீ என்னகுணத்தில் இருப்பாய்?" என்று
கேட்டார்கள். அதற்கவர் "யாரசூலல்லா! நான் நன்மையை ஆசிப்
பேன்; நல்லவர்களை நேசிப்பேன்; ஒரு நன்மையைக்கண்டால் அதை
உடனே செய்வேன்; அதன் சவாபை எகீனாக நம்புவேன்; அது
என்னைவிட்டும் தப்பிப்போனால் விசனப்படுவேன்; அது இன்னு
மொருதரம் உண்டாகவேண்டுமென்று ஆசை வைத்துக்கொண்டிருப்
பேன்" என்றுசொன்னார். அப்போது நாயகமவர்கள் "இதுதான் அல்
லாகு தஆலா உனக்கு நன்மையை நாடியிருப்பதற்கு அடையாளம்"
என்றும், "அவன் உனக்கு வேறொன்றை நாடியிருப்பானாகில் உன்னை

அதில் பாாக்காக்குவான்" என்றும், "அப்போது உன்னை எந்தப் படுகுழியிலும் தள்ளி மாய்ப்பதற்கு அவன் அஞ்சமாட்டான்" என்றும் அருளிச்செய்தார்கள்.

ரஜா என்னும் ஆதரவை உண்டாக்கிக்கோள்வதற்குப் பரிகாரம்.

அறிந்துகொள்:—இந்த ஆதரவு என்னும் அவிழ்தம் இரண்டு வியாதியஸ்தருக்கேயன்றி மற்றவருக்குத் தேவையாகாது. அந்த இருவரில் ஒரு வியாதியஸ்தன் யாரெனில், தன்பாவங்கள் அதிகமாயிருக்கிறநிமித்தம் ஆதரவற்றவனைப்போய் தவுபாச்செய்யாதவனையும் என் தவுபா கபூலாகாதென்று சொல்லுகிறவனையும் இருப்பவனும். மற்றொரு வியாதியஸ்தன் யாரெனில், அதிக தெண்டிப்பினுலும் வணக்கங்களினுலும் தன்னை ஹலாக்காக்குகிறவனையும் தன் சக்திக்குமேல் அதிகமான கஷ்டத்தை எடுத்துக்கொள்ளுகிறவனையும் இருப்பவனும். இந்த இரண்டு வியாதியஸ்தருக்கும் இந்த அவிழ்தம் வேண்டும். ஆனால் மறதியாளருக்கு இந்த ஆதரவு அவிழ்தமாகாது. மேலும் கொல்லுகிற நஞ்சாய்ப்போம். இனி இரண்டுகாரணங்களால் ஆதரவு அதிகப்படும். முதலாவது காரணம்: நோட்டமிட்டு அறிவதாம். அதாவது:—உலகத்தின் புதுமைகளிலும் தாவர ஜீவ வர்க்கங்களின் சிருஷ்டிப்பிலும் இன்னும் ஷ—குருடைய பாடத்தில் நாம் சொல்லிவந்ததுபோல் பற்பல நிகுமத்துகளின் படைப்பிலும் நோட்டமிட்டு ஆராய்ச்சிசெய்வதாம். அப்படி ஆராய்ச்சிசெய்து பார்ப்பானுகில் அவைகளில் அல்லாகு தஆலாவுடைய கிருபை, அருள், அன்பு இவைகளைக்கண்டு இதினும் மேலிட்ட ஓர் கிருபையும் அருளும் அன்பும் இருக்கவேமாட்டாதென்று தெரிந்துகொள்ளுவான். ஏனெனில் அவன் (வேறுபொருளில் அல்ல) தன்னில் தானே கோட்டமிடுவானுகில் அதாவது மனிதனுக்கு வேண்டியவைகளை எப்படிப் படைத்திருக்கிறுன்! அதிலும் சிரசும் இருதயமும்போன்ற அவசியமான உறுப்புகளையும், அவசியமல்லாத கையும் காலும்போன்ற தேவைப்படும் அவயவங்களையும், தேவையுமில்லாத உதட்டின் சிவப்பு, புருவத்தின் வளைவு, கண்ணின் கருமை, இமையின் சேர்மை இவைபோன்ற அழகு சிங்காரத்தையும் எப்படிப் படைத்திருக்கிறுன்! இத்தக்கிருபையை எல்லா ஜீவராசிகளுக்கும் புரிந்திருக்கிறுன். எந்தமட்டுக்கென்றல் தேன்குளவியையும் வெகு விநோதமாகப் படைத்திருக்கிறுன். அதன் உருவத்தைத் தக்கவிதமாக அமைத்தான். அதன் சித்திரவன்னத்தை அழகுபடுத்தினுன். இன்னும் அது தன்கூட்டை எப்படிக் கட்டிக்கொள்வது?

தேனை அதில் எப்படிக்கொண்டுவந்து சேர்ப்பது? தன் அரசனுக்கு எப்படி வழிபடுவது? அரசன் அவைகளை எப்படி ஆண்டுகொள்வது? என்பனவாகிய இந்த ஹிதாயத்தான அறிவையும் அதற்குக் காட்டியிருக்கிறான். யாராவதொருவன் தனது வெளிரயங்கத்திலேயும் அந்தரங்கத்திலேயும் மற்றும் சகல படைப்புகளிலேயும் இப்படிப்பட்ட புதுமைகளைப் பொறுமையுடன் யோசித்துப் பார்ப்பானாகில் அவன் தன் ஆதரவை விட்டுவிடுவதற்கு அல்லது அச்சம் மேவிடுவதற்கு அந்த ரஹ்மத்து அப்படி அற்ப சொற்பமானதல்ல என்றும், அது மிகவும் பெரிதாயிருக்கிறதென்றும் தெரிந்துகொள்வதுமன்றி ஆதரவும் அச்சமும் சமமாயிருக்கவேண்டுமென்றும் உணர்ந்துகொள்ளுவான். பின்னர் ஆதரவுமேலிட்டபோதிலும் தகும். இனி அல்லாகு தஆலா தனது கிருஷ்டியில் வைத்திருக்கும் கிருபையும் அன்பும் அளவிலடங்காததாயிருக்கிறது. எந்தமட்டென்றால், பெரியோர்களில் ஒருவர் சொல்லுகிறதாவது:—குர்ஆனில், இதா ததாயன்தும் பிதைனின் என்கிற ஆயத்திலும் அதிகமாக ஆதரவை உண்டாக்குகிற ஆயத்து வேறு எதுவுமில்லை. ஏனெனில் நாம் கடன் கொடுத்தால் நம்முடைய பொருளைக் காப்பாற்றுவதற்கும் பொருள் சேதம்போகாமலிருப்பதற்கும் (சாசனம் செய்துகொள்ளும்படி) அல்லாகு தஆலா குர்ஆனில் அதை மிகவும் நீளமான ஒரு ஆயத்தாகக்கூறுகின்றான். (நம்முடைய நாயகன்) இப்படி அன்பும் இரக்கமுமுள்ளவனாயிருப்பதுடன் அவன் நம்மை மன்னிக்காமலிருப்பதும் நாம் நரகத்துக்குப்போவதும் எப்படி இடம்பாடாகும்? என்பதே. இவ்வாறு நோட்டமிடுவது ஆதரவை உண்டாக்கிக்கொள்வதற்கு ஒரு பரிகாரமாம். இதுவோ மிகவும் கஷ்டமானதும் முடிவில்லாததுமாயிருக்கிறது. ஒவ்வொருவரும் இந்தப் பதவிக்கு வரமுடியாது.

இரண்டாவது காரணம்:—ஆதரவின் விஷயமாக வந்திருக்கிற ஆயத்துகளிலும் ஹதீசுகளிலும் நோட்டமிடுவதாம். அதுவும் அளவுக்கு மீறினதாயிருக்கிறது. அல்லாகு தஆலா நீங்கள் என் ரஹ்மத்துக்கு ஆதரவற்றவர்களாய்ப் போகவேண்டாம் என்றும், பூமியிலிருப்பவர்களுக்குப் பிழைபொறுக்கத் தேடுகிறார்கள் அதாவது:—மலக்குகள் உங்கள் பிழையைப் பொறுக்கும்படி கேட்கிறார்கள் என்றும், அல்லாகு தஆலா தன் அடியார்களை அதனால் அச்சமுறுத்துகிறான், அதாவது:—நரகம் காபிர்களைப் போடுவதற்கேயன்றி பற்றப்படி அந்த நரகத்தைக்கொண்டு உங்களுக்கு அச்சத்தை யூட்டுகிறான் என்றும் அருளிச்செய்திருக்கிறான். இன்னும் ஜனங்கள் செய்துள்ள கொடிய குற்

றங்களை உம்முடைய நாயகன் திடனாக அவர்களுக்கு மன்னிப்பவனாயிருக்கிறான் என்ற இந்த ஆயத்து இறங்குகிறவரையில் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களை உம்மத்துக்குப் பிழைபொறுக்கத் தேடுவதைவிட்டுச் சும்மாயிருந்ததில்லை. இன்னும் உம்முடைய நாயகன் பின்னிட்டு உமக்குக் கொடுப்பான், அப்போது நீர் சமாதானத்தை அடைவீர் என்ற இந்த ஆயத்து இறங்கினபோது நாயகமவர்கள் (சலுவையாக) "முகம்மதுடைய உம்மத்தில் ஒருவராவது நாகத்திலிருக்கிறவரையில் முகம்மது சமாதானத்தை அடைவதில்லை" என்று சொன்னார்கள். இம்மாதிரியான ஆயத்துகள் இன்னும் அநந்தமிருக்கின்றன. இனி ஹதீசுகளாவன:—றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "என்னுடைய உம்மத்து ரஹமத்து செய்யப்பட்ட ஓர் உம்மத்தாயிருக்கிறார்கள்" என்றும், "அவர்களுக்கு அதாபாகிறது துன்யாவில் சோதிப்பான துன்பமும் நடுக்கலுமாயிருக்கிறது" என்றும், "கியாமநாள் வருமாகில் அப்போது அவர்களில் ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு காபிரைப் பிடித்துக்கொடுத்து உனக்குப் பதிலாக இவன் நரகத்துக்குப் பலியாகிறவன் எனச் சொல்லப்படும்" என்றும் அருளிச்செய்திருக்கிறார்கள். இன்னும் "ஜுரமானது நரகத்தின் ஓர் கொதிப்பாயிருக்கிறது" என்றும், "நரகத்தில்நின்றும் மூமினுக்குள்ள பங்கு அதுதான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். அனசு றலியல்லாகுஅன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:—றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அல்லாகு தஆலாவினிடம் "என் ஆண்டவனே! என் உம்மத்துடைய பாவங்களை (நானே யல்லாது) எவரும் பார்க்காமலிருக்கும் பொருட்டு நீ அவர்களின் கேள்வி கணக்கை என்வசம் சாட்டவேண்டும்" என்று கேட்டார்கள். அதற்கு அல்லாகுதஆலா "(என் ஹபீபே!) அவர்கள் உம்முடைய உம்மத்தாயும் என் அடியார்களாயுமிருக்கிறார்கள். நானோ அவர்கள்மீது மிகவும் கிருபையுள்ளவனாயிருக்கிறேன். அவர்களுடைய பாவங்களை நீராவது மற்ற யாராவது பார்க்க எனக்கு இஷ்டமில்லை" என்று அருளிச்செய்தான் என்பதே. இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "என் ஹயாத்தும் உங்களுக்கு நன்மையாயிருக்கிறது, என் மவுத்தும் உங்களுக்கு நன்மையாயிருக்கிறது" என்றும், "நான் ஹயாத்தோடிருப்பேனாகில் ஷரீஅத்தை உங்களுக்குப் போதித்துக்கொண்டிருப்பேன்" என்றும், "மவுத்தாய்ப்போவேனாகில் உங்களுடைய அமல்கள் எனக்கு எடுத்துக் காட்டப்படும்" என்றும், "உங்களின் நல்ல அமலைக் காணும்

போது உங்களுக்குப் பிழைபொறுக்கத் தேடுவேன்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். ஒருநாள் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் (அல்லாகு தஆலாவை விளித்து) "யாகரீமல் அபுவி! (பெருந்தன்மையாக மன்னிப்பவனே!) என்று சொன்னார்கள். அப்போது ஜிப்ரயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் "யாறசூலல்லா! தாங்கள் சொன்ன இந்தச் சொல்லுக்குப் பொருள் இதுவெனத் தங்களுக்குத் தெரியுமா? தீமையை மன்னித்து அதற்குப் பிரதியாக நன்மையைக் கொடுப்பவன் என்பதே இதற்குப் பொருள்" என்று கூறினார்கள். இன்னும் "ஒரு அடியான் தன்னால்நிகழ்ந்த பாவத்துக்கு இஸ்திருபாருசெய்து மன்னிப்புக் கேட்பானாகில் அல்லாகு தஆலா மலக்குகளை நோக்கி "ஓ மலக்குகளே! பாருங்கள்! என் அடியான் ஒருபாவத்தைச்செய்து அந்த பாவத்தைப்பற்றி அவனைப் பிடித்துக்கொள்ளுகிறவனும் அதை மன்னிப்பவனுமான ஒருஆண்டவன் இருக்கிறான் என்றறிந்தான். ஆதலால் இதோ நீங்கள் சாக்ஷியாயிருக்க நான் அவனை மன்னித்தேன்" என்று சொல்லுகிறதாக றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள். இன்னும் "என் அடியான்வானம் நிறைகிற அவ்வளவு பாவங்களைச்செய்து அவைகளை மன்னிக்கும்படி என்னிடம் கேட்டு என்மீது ஆதரவு வைப்பவனாயிருந்தால் நான் அவனை மன்னிக்கிறேன்" என்றும், "அடியான் பூமிநிறைந்த பாவத்தைச் செய்தாலும் அவனுக்காக நான் பூமிநிறைந்த றஹ்மத்தைச் செய்திருக்கிறேன்" என்றும் அல்லாகு தஆலா அருளிச்செய்ததாக றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் அடியான் பாவஞ்செய்து ஆறுமணிநேரம் செல்லாதவரையில் மலக்கானவர் அந்தப் பாவத்தை அவன்மீது எழுதமாட்டார்" என்றும், "அதற்குள்ளாக அவன் தவுபாச்செய்தால் அந்தப்பாவத்தை எழுதாமலே விட்டுவிடுவார்" என்றும், "அப்படித் தவுபாச்செய்யாமலிருந்து யாதொரு நன்மையைச் செய்வானாகில் வலதுபக்கத்து மலக்கானவர் மற்றொருவனை நோக்கி "நீ அந்தப் பாவத்தை அவன் பட்டோலையிலிருந்து அழித்துவிடு! அதற்குப் பதிலாக நானும் ஒரு நன்மையை எழுதாமலிருக்கிறேன். ஒரு நன்மைக்குப் பத்து நன்மையாதலால் ஒன்றுபோக மீதி ஒன்பது நன்மை அவன் பட்டோலையி லிருக்கட்டும்" எனச் சொல்லுகிறார் என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "அடியான் பாவஞ்செய்தால் அவன் மீது எழுதப்படும்" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அருளிச்செய்தபோது ஒரு நாட்டுப்புற நாயகமவர்களை நோக்கி

"யாரசூலல்லா! அந்த அடியான் தவுபாச் செய்தாலோ" என்க, நாயகமவர்கள் "அது அழிக்கப்படும்" என்றார்கள். அப்போதந்த அறபி "யாரசூலல்லா! பின்பும் அவன் அந்தப் பாவத்தில் திரும்பினாலோ" என்க, நாயகமவர்கள் "அது திரும்பவும் எழுதப்படும்" என்றார்கள். அதற்கந்த அறபி "அவன் தவுபாச்செய்தாலோ" என்க, நாயகமவர்கள் "அது அழிக்கப்படும்" என்றார்கள். பின்பும் அந்த அறபி "யாரசூலல்லா! இப்படி எதுவரையில அழிக்கப்படுவது?" என்று கேட்க, "அவன் தவுபாச் செய்துகொண்டிருக்கிறவரையில்" என்றும், "தவுபாச் செய்ய அடியானுக்கு மனம் லோபிக்காதிருக்கிறவரையில் அவனை மன்னிக்க அல்லாகு தஆலாவுக்கு வெறுப்புண்டாவதில்லை" என்றும், "அவன் நன்மைசெய்ய நாட்டங்கொண்டால் அதைச் செய்வதற்குமுன்னே ஒரு நன்மை அவனுக்கு எழுதப்படும்" என்றும், "செய்தால் பத்து நன்மைகள் எழுதப்படும்" என்றும், "பின்பு அது எழுநூறுவரையில் இரட்டிக்கப்படும்" என்றும், "தீமை செய்ய நாட்டங்கொண்டால் அதைச் செய்யாதவரையில் ஒன்றும் எழுதப்படுவதில்லை" என்றும், "செய்தால் ஒரே தீமை எழுதப்படும்" என்றும், "இதற்குமேல் அல்லாகு தஆலாஉடைய மன்னிப்புமிருக்கிறது" என்றும் அருளிச்செய்தார்கள். ஒருவர் ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சமூகத்தில் "யாரசூலல்லா! நான் றமலான் மாதத்தில் நோன்பு வைக்கின்றேன். ஐந்துநேரமும் தொழுதுவருகிறேன். இதற்குமேல் அதிக நன்மைகளைச் செய்யாதவனாயிருக்கிறேன். என்னிடத்தில் பொருள் இல்லாமையினால் அல்லாகு தஆலாவுக்காக என்மேல் ஸக்காத்தும் ஹஜ்ஜும் இல்லை. நாளை கியாமத்தில் நான் எங்கே இருப்பேன்?" என்று கேட்டார். அப்போது நாயகமவர்கள் சிரித்து, "நீ பொறாமை,கபடம் இவ்விரண்டினின்றும் உன் மனதையும்; பொய்யுரைத்தல், புறம்பேசல் இவ்விரண்டினின்றும் உன் நாவையும், பார்க்கத்தகாதவர்களைப்பார்த்தல், ஜனங்களை இழிவாகப்பார்த்தல் இவ்விரண்டினின்றும் உன்கண்ணையும் காத்துக்கொள்ளுவாயாகில் நீ என்னுடன் இருப்பாய் என்னுடன் சொர்க்கத்துக்கு வருவாய். நான் எனது உள்ளங்கையில் உன்னைப் பிரிய சிநேகனாக வைத்துக்கொள்வேன்" என்று அருளிச்செய்தார்கள். ஒரு நாட்டறபி ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சமூகத்தில் "யாரசூலல்லா! நாளைகியாமத்தில் கேள்வி கணக்குகேட்பது யார்?" என்று கேட்டார். அதற்கு நாயகமவர்கள் "அல்லாகு தஆலா கேட்பான்" என்றார்கள். அப்போதந்த அறபி "அவன்தானா

கேட்பான்?" என்றுகேட்டார். அதற்கு நாயகமவர்கள் "ஆம்" என்க, அந்த அறபி சிரித்தனர். அப்போது நாயகமவர்கள் அவரை நோக்கி "ஓய் அறபி! நீர் சிரிக்கிறீரா!" என்றார்கள். அதற்கவர் "ஆம் நான் சிரிக்கிறேன். பெருந்தன்மையுள்ள கரீமானவன் தனக்குக் குற்றஞ் செய்தவனைத் தண்டிக்கச் சக்தியுள்ளவனா யிருந்தபோதிலும் மன்னிப்பான். கணக்குக் கேட்டாலும் அவனை இலச்சைப்படுத்தாமல் இலேசாகக் கேட்பான்" என்றார். அப்போது நாயகமவர்கள "இந்த அறபி சொன்னது சரிதான். அல்லாகு தஆலாவினும் பெரிய கரீம் யாருமில்லை. இந்த அறபி நல்ல விளக்கமுள்ளவர் என்று சொல்லிப் பிறகு "அல்லாகு தஆலா கஃபாவுக்குப் பெருமையும் சிறப்பும் கொடுத்திருக்கிறான். அடியான் அதை இடித்துப் பாழாக்கிக் கற்களை வெவ்வேறாகப் பிரித்துக் கொளுத்திவிடுவானாகில் அந்தப் பாவமானது அல்லாகு தஆலாஉடைய நேசர்களில் ஒருவரை இலேசாகக் காண்கிற பாவத்துக்குச் சரியாகாது" என்று அருளிச்செய்தார்கள். அப்போதந்த அறபி "அல்லாவுடைய நேசர்கள் யார்?" என்று கேட்க, நாயகமவர்கள் "மூமின்கள் எல்லாரும அல்லாவுடைய நேசர்கள்தான்" என்றும், "ஈமான் கொண்டவர்களுக்கு அல்லாகு தஆலா நேசனாயிருக்கிறான். அவன் அவர்களை இருட்களினின்றும் நீக்கி வெளிச்சத்தின்பக்கம் கொண்டுவருகிறான் என்று அல்லாகு தஆலா கூறியிருப்பதை நீர் கேட்டதில்லையா?" என்றும் அருளிச்செய்தார்கள். இன்னும் "ஜனங்களை நான் படைத்தது என்னால் அவர்கள் பிரயோசனத்தை அடைவதற்கேயல்லாது அவர்களால் நான் பிரயோசனத்தை அடைய அல்ல" என்று அல்லாகுதஆலா கூறுவதாக றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "அல்லாகு தஆலா தன்கோபத்திலும் தன் றஹ்மத்து மேலிட்டிருக்கக்கடவது என்று சிருஷ்டிகளைப் படைப்பதற்குமுன்னே தன்மீது விதியாக்கிக்கொண்டான்" என்று திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் யாராவதொருவன் லாஇலாஹ இல்லல்லாஹு என்னுங் கலிமாவைச் சொல்லுவானாகில் அவன் சொர்க்கத்துக்குப் போவான்" என்றும், "எவனுடைய கடைசியான சொல் இக்கலிமாவாயிருக்குமோ அவனை நரகம் காணாது" என்றும், "எவன் ஷிர்க்கில்லாமல் அவ்வுலகத்துக்குப் போகிறானோ அவன் நரகம் போகமாட்டான்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "நீங்கள் பாவஞ்செய்யாமலிருக்கிற பக்ஷத்தில் அல்லாகு தஆலா கபூராயும் றஹீமாயும் இருக்கிறபடி

யால் அவன் தன் கிருபையினால் மன்னிக்கவேண்டியநிமித்தம்பாவஞ்
செய்வதற்காக வேறு சிருஷ்டியை உண்டாக்குவான்" என்றும்
திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "தயவுள்ள தாயானவள் தன்
பிள்ளையின்பேரில் கிருபை பாராட்டுவதைவிட அல்லாகு தஆலா
தன் அடிமையின்பேரில் அதிக கிருபை பாராட்டுகிறான்" என்று
றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.
இன்னுமவர்கள் திருவுளமாயிருப்பதாவது: "அல்லாகு தஆலா கியா
மத்துநாளில் றஹ்மத்தை எப்போதும் எவருடைய எண்ணத்தி
லும் வந்திராத அவ்வளவாக வெளிப்படுத்துவான். அதனால் இபுலீ
சும் றஹ்மத்தை ஆசித்துத் தலைதூக்குவான்" என்பதே. இன்னு
மவர்கள் திருவுளமாயிருப்பதாவது:—"அல்லாகு தஆலாவுக்கு நூறு
றஹ்மத்துகள் உண்டு. அதில் தொண்ணூற்றொன்பது றஹ்மத்து
கியாமத்துக்காக வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு றஹ்மத்துக்குமேல்
இவ்வுலகத்தில் அதிகமாக வெளிப்படுத்தவில்லை. எல்லா இருதயங்
களும் அந்த ஒரு றஹ்மத்தைக்கொண்டே றஹீமாய் (கிருபையுள்ள
தாய்) இருக்கின்றன. பிள்ளையின்மேல் தாய்க்கிருக்கிற றஹ்மத்தும்
குட்டியின்மேல் மிருகத்துக்கிருக்கிற றஹ்மத்தும் அந்த ஒரு றஹ்
மத்திலின்று முள்ளதுதான். கியாமத்துநாளில் இந்த ஒரு றஹ்மத்
தை அந்தத் தொண்ணூற்றொன்பது றஹ்மத்துடன் சேர்த்து
சிருஷ்டிகளின்பேரில் பரத்தப்படும். ஒவ்வொரு றஹ்மத்தும் வான
ங்களுக்கும் பூமிக்கும் சரியாயிருக்கும். கெட்டழிந்தவன் என்று ஆதி
கட்டளையில் தீர்மானிக்கப்பட்டவனே யல்லாமல் மற்ற எவனும்
அந்நாளில் கெட்டுப்போவதில்லை" என்பதே. இன்னும் றசூல் சல்
லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருப்பதாவது:—"என்
உம்மத்தில் யார் பெரும் பாவங்களை யுடையவர்களாயிருக்கிறார்
களோ அவர்களுக்காக என் ஷபாஅத்தை வைத்திருக்கிறேன். வணக்க
வாளிகளுக்காகவும் பேணுதலுள்ளவர்களுக்காகவும் நான் அதை
வைத்திருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள். அப்படியல்ல. பாவத்தில்
உழல்பவர்களுக்காகவும் அதில் கலந்தவர்களுக்காகவுமே அதை நான்
வைத்திருக்கிறேன்" என்பதே. சயீதுபுனுல் ஹிலால் அவர்கள்
சொல்லுகிறதாவது:—"அல்லாகு தஆலா நாளை கியாமத்தில் நரகத்தி
லிருந்து இரண்டுபேரை வெளிப்படுத்தி நீங்கள் உங்கள் செய்கையி
னாலேயே இந்த வேதனையைக் கண்டீர்கள். நான் அடிமைகளின்
பேரில் அக்கிரமம் செய்கிறவனல்ல என்று சொல்லிப் பின்பு அவர்
களை நரகத்துக்கே கொண்டுபோகும்படி உத்திரவுசெய்வான். அவர்

களில் ஒருவன் தனக்கு மாட்டியிருக்கிற விலங்குடன் அவசரம் அவசரமாக நரகத்தை நோக்கிச் செல்லுவான். அந்த மற்றொருவன் நடந்துகொண்டிருக்கையில் நின்றுவிடுவான். பின்பு அல்லாகுதஆலா அவ்விருவரையும் திரும்ப அழைத்து "நீங்கள் ஏன் இப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்பான். அவசரமாய் நடந்துபோன அந்த மனிதன் "என் ஆண்டவனே! பாவமென்னும் மோஷத்துக்குள்ளான அவ்வளவு பயந்ததினால் உன் உத்திரவைத் தாமதித்துச் செய்ய என்னால் கூடவில்லை" என்று சொல்லுவான். மற்றொருவனோ "என் ஆண்டவனே! நரகத்தினின்றும் வெளிப்படுத்திய நீ மறுபடியும் அதற்கு அனுப்பமாட்டாய் என்று ஆதரவு வைத்தேன்" என்று சொல்லுவான். பின்பு அல்லாகு தஆலா அவ்விருவரையும் சுவர்க்கத்துக்கு அனுப்புவான்" என்பதே. இன்னும் கியாமத்து நாளில், "ஓ முஃமின்களுடைய உம்மத்துகளே! நான் உங்கள் ஹக்குகளை நிறைவேற்றிவிட்டேன். உங்களில் ஒருவர்மேல் மற்றொருவருக்கிருக்கிற ஹக்குகளை நீங்கள் நிறைவேற்றிவிட்டு எல்லாரும் சொர்க்கத்துக்குப் போங்கள் என்று கூவிச் சொல்லப்படும்" என்பதாக றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னுமவர்கள் திருவுளமாயிருப்பதாவது:— கியாமத்து நாளில் என் உம்மத்தினின்றுமொருவனை ஜனங்களுக்கு முன்பாகக் கொண்டுவந்து, அவனுடைய ஒவ்வொரு பட்டோலையும் பார்வைக்கு எட்டின தூரத்தளவாயிருக்கிற தொண்ணூற்றொன்பது பட்டோலைகளை விரித்து அவனுடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக்காட்டி "ஏ அடியானே! நீ இந்தப் பாவங்களில் எதையாவது நான் செய்யவில்லை என்று மறுப்பாயா? இவைகளை எழுதின நம் உண்மை மலக்குகள் ஏதும் அக்கிரமம் செய்திருப்பார்களா?" என்று கேட்கப்படும். அதற்கவன் "இல்லை என் ஆண்டவனே!" என்பான். "நீ இதற்கு ஏதும் சமாதானம் வைத்திருக்கிறாயா?" என்று கேட்கப்படும். அதற்கவன் "இல்லை என் ஆண்டவனே!" என்பான். தன்னை நரகத்துக்கு ஒப்புக்கொடுக்கச் சித்தமாயிருப்பான். அப்போது அல்லாகுதஆலா "ஓ என் அடியானே! உனக்கு என்னிடத்தில் ஒரு நன்மை யிருக்கிறது. நான் அக்கிரமம் செய்கிறவனல்ல" என்று சொல்லுவான். பின்பு ஒரு துண்டு காயிதம் எடுத்துக்காட்டப்படும். அதில் அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு என்ற தவ்ஹீது கலிமா எழுதப்பட்டிருக்கும். அப்போதவன் "ஓ என் ஆண்டவனே! இந்தத் துண்டு காயிதம் அந்த எல்லாப் பட்டோலைகளுக்

ரும் எப்படி நடுகட்டும்?" என்று கேட்பான். அதற்கு அல்லாகுதஆலா "நான் உன்மீது அக்கிரமம் செய்கிறவனல்ல" என்று சொல்லுவான். பின்பு தராசின் ஒரு தட்டிலும் அந்த எல்லாப்பட்டோலைகளும் அந்தக் ஆண்டு காகிதம் மற்றொரு தட்டிலும் வைக்கப்படும். அது எல்லாப் பட்டோலைகளையும் தூக்கிவிடும். எல்லாப்பட்டோலைகளிலும் அது மிகக் கனமாயிருக்கும். ஏனெனில் எந்த வஸ்துவும் அல்லாகுதஆலாவுடைய திருநாமத்துக்கு முன்னால் நடுசெய்யாததினால் என்பதே. இன்னுமவர்கள் திருவளமாயிருப்பதாவது:— அல்லாகுதஆலா மலக்குகளை நோக்கி "ஓ மலக்குகளே! யாருடைய இருதயத்தில் ஒரு கனத்தியளவு நன்மை யிருக்கிறதோ அவர்களை நரகத்திலின்றும் வெளியே கொண்டுவாருங்கள்" என்று உத்திரவு செய்வான். அவர்கள் அநேக ஜனங்களைக் கொண்டுவந்து ஹாஜிர்படுத்தி "இனி இவர்களைச் சேர்ந்தவர்கள் யாருமில்லை" என்று சொல்லுவார்கள். பின்பு "யாருடைய மனதில் அரைக்கனத்தியளவு நன்மையிருக்கிறதோ அவர்களைக் கொண்டுவாருங்கள்" என்றுத்திரவு செய்வான். அப்போதும் அநேக ஜனங்களை வெளிப்படுத்தி "இனி இவர்களைச் சேர்ந்தவர்கள் ஒருவருமில்லை" என்று சொல்லுவார்கள். பின்பு "யாருடைய மனதில் ஒரு அணுவளவு நன்மை இருக்கிறதோ அவர்களை வெளிப்படுத்துங்கள்" என்று உத்திரவு செய்வான். அதனாலும் அநேக ஜனங்களை வெளிப்படுத்தி "இனி ஒரு அணுவளவு நன்மையுள்ளவன் எவனும் மீதியாயிருப்பதில்லை" என்று சொல்லுவார்கள். அப்போது அல்லாகுதஆலா "மலக்குகளுடைய ஷபாஅத்தும நபிமார்களுடைய ஷபாஅத்தும் மூமின்களுடைய ஷபாஅத்தும் இவை எல்லாம் முடிந்துவிட்டது. எல்லாம் அங்கீகரிக்கப்பட்டது. இனி அர்ஹமுர்ராஹிமீன் ஆகிய என்னுடைய றஹ்மத்துமாத்திரம் மிச்சப்பட்டிருக்கிறது" என்று சொல்லுவான். பின்பு றஹ்மத்தினுடைய ஒரு கையானது நரகத்தில் நீண்டு ஒருபோதும் ஒரு அணுவளவும் நன்மை செய்யாத ஜனங்களைப் பிடித்து வெளியே கொண்டுவரும். அவர்களெல்லாரும் வெந்து தணிந்த கரியைப்போல கறுத்துப்போயிருப்பார்கள். அவர்களைச் சொர்க்கத்தினுடைய ஆறுகளில் நஹ்றுல் ஹயத்து என்னும் ஆற்றில் முழுங்காட்டுவார்கள். அதிலிருந்து அவர்கள் வெளியேறும்போது நீர்வளம் பொருந்திய நிலத்தில்நின்றும் முளைத்தெழுந்த செழுமையான பயிரைப்போலும் முத்துகளைப்போலும் சுத்தமும் பிரகாசமும் உள்ளவர்களாயிருப்பார்கள். அவர்களுடைய கழுத்துகளில் முத்திரைகளிருக்கும். சுவர்க்கவாசிகள்

அவர்களைப் பார்த்தால், இவர்கள் ஒரு நன்மையும் செய்யாமல் அல்லாகு தஆலாஉடைய றஹ்மத்தால் உரிமை பெற்றவர்கள் என்று தெரிந்துகொள்ளுவார்கள். அல்லாகு தஆலா அவர்களை நோக்கி "நீங்கள் சொர்க்கத்துக்குப்போங்கள்" என்றும், "அங்கு நீங்கள் காண்பதெல்லாம் உங்களுக்கே" என்றும் சொல்லுவான். அப்போதவர்கள் "எங்கள் ஆண்டவனே! உலகத்தில் யாருக்கும் கொடுக்காததை நீ எங்களுக்குக் கொடுத்தருளினாய்" என்று சொல்லுவார்கள். அப்போது அல்லாகுதஆலா "உங்களுக்கு என்னிடத்தில் இதினும் மிகப் பெரிய ஓர் பொருளிருக்கிறது" என்று சொல்லுவான். "இதினும் மிகப்பெரியது ஏதாயிருக்கும்" என்று கேட்பார்கள். அதற்கு அல்லாகுதஆலா "அது என் பொருத்தம்" என்றும், நான் "உங்கள்மீது சந்தோஷமாயிருக்கிறேன் என்றும், ஒருபோதும் உங்களில் நான் வெறுப்பாயிருக்கிறதில்லை என்றும் சொல்லுவான்" என்பதே. இந்த ஹதீஸ் சஹிபுகாரி சஹீமுஸ்லிம் இரண்டிலும் இருக்கிறது.

அம்ருபுனுல் ஹஸம்றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:—"றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருபோது மூன்றுநாள்வரையில் பர்லு தொழுகைக்கேயன்றி வேறு காரியங்களுக்கு வெளியே புறப்படாமல் மறைவாயிருந்தார்கள். நாலாம்நாள் வெளியில் புறப்பட்டு வந்து அவர்கள் சொன்னதாவது:—என் உம்மத்தில்நின்றும் எழுபதினாயிரம்பேர் கேள்வி கணக்கின்றி சுவர்க்கம்போவார்கள் என்று அல்லாகு தஆலா எனக்கு வாக்களித்தான். நான் இந்த மூன்றுநாளாக அவனிடத்தில் மன்றாடி அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தேன். அவனை மிகவும் கிருபையும் பெருந்தன்மையுமுள்ளவனாகக் கண்டேன். அந்த எழுபதினாயிரம் பேர்களில் ஒவ்வொருத்தருக்கு எழுபதினாயிரம் பேராக எனக்குக் கொடுத்தருளினான். அப்போது நான் "என் ஆண்டவனே! என் உம்மத்து இவ்வளவிருக்குமா?" என்றுகேட்டதற்கு, "எல்லா அறபுகளையும் சேர்த்துக் கணக்கிட்டுக்கொள்" என்று அருளிச்செய்தான்" என்பதே. இன்னும் ரிவாயத்து செய்யப்பட்டிருப்பதாவது:—ஒரு சண்டையில் ஒருசிறுவனைச் சிறைபிடித்துக் கட்டிவைத்திருந்தார்கள். அன்று வெயிலின் கொதிப்பு அதிகமாயிருந்தது. கூடாரத்திலிருந்த ஒரு ஸ்திரீயின் பார்வை அந்தச் சிறுவன்மேல் விழுந்தது. அவள் அங்கிருந்து அவசரமாக ஓடினாள். அக்கூடாரத்திலிருந்தவர்களும் அவள் பின்னே ஓடினார்கள். அவள் போய் அந்தச் சிறுவனைத் தழுவி மார்போடணைத்து அவனுக்கு வெயில் படாதபடி அவனைத்

தன் நிழலால் மறைத்துக்கொண்டும் "இது என் பிள்ளை, இது என் பிள்ளை" என்று சொல்லிக்கொண்டுமிருந்தாள். அங்கிருந்த ஜனங்கள் இதைக் கண்டு அழுதுவிட்டார்கள். அவளது கிருபையின் மகிமையைப்பற்றி ஆச்சரியமுற்றவர்களாய் மற்றுங் காரியங்களை மறந்தவர்களாயிருந்தார்கள். நபிகள் நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்விடத்துக்கு வந்தபோது இந்தச் சம்பவத்தை அவர்களிடம் அறிக்கையிட்டார்கள். அப்போது நாயகமவர்கள் அந்த ஸ்திரீயின் கிருபையையும் அந்த ஜனங்களின் அழுகையையும் குறித்து மிகவும் சந்தோஷப்பட்டு "நீங்கள் இந்த ஸ்திரீயின் கிருபையைக் குறித்து அதிசயிக்கிறீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு ஜனங்கள் "ஆம் யாரசூலல்லா!" என்று சொன்னார்கள். அப்போது நாயகமவர்கள் "இந்த ஸ்திரீ தன் பிள்ளையின்மீது கிருபையாயிருப்பதிலும் அதிகமாக அல்லாகுதஆலா உங்கள் எல்லார்மீதும் பெரிய கிருபையுள்ளவனாயிருக்கிறான்" என்று அருளிச்செய்தார்கள். இதைக் கேட்ட முஸ்லிம்களுக்கு எப்போதுமுண்டாகாத ஓர் சந்தோஷம் பிறந்ததினால் அந்தச் சந்தோஷமானது அவர்கள் அங்கிருந்து கலைந்துபோகும்படி செய்தது" என்பதே. இபுராஹீமுபுனுல் அதஹம் றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—ஓரிரவில் ஒருவருமில்லாமல் ஒழிந்திருக்கிற சமயத்தில் நான் தனியாகக் கஃபாவைத் தவாபு செய்து கொண்டிருந்தேன். மழைபெய்துகொண்டிருந்தது. அப்போது நான் அல்லாகுதஆலாவினிடத்தில் "என் ஆண்டவனே! நான் எந்தப் பாவமும் செய்யாதபடி என்னைப் பாவத்தினின்றும் காத்தருள்" என்று துஆ செய்தேன். அப்போது கஃபாவிலிருந்து "ஓ இபுராஹீமே! நீர் பாவத்தில்நின்றும் உம்மைக் காக்கும்படி கேட்கிறீர். என் அடியார்கள் எல்லாரும் இப்படியே கேட்கிறார்கள். எல்லாரையும் பாவத்தினின்றும் நான் காப்பாற்றுகிறபக்ஷத்தில் பின்பு என்னுடைய வரிசை றஹ்மத்துகளை யார்பேரில் வெளியாக்குகிறது?" என்று ஒரு சத்தம் வரக்கேட்டேன்" என்பதே.

அறிந்துகோள்:—இப்படிப்பட்ட ஹதீசுகளும் ஆன்றோர் வாக்கியங்களும் இன்னும் அநந்தமிருக்கின்றன. எவனுக்கு அச்சம் மேலிட்டிருக்கிறதோ அவனுக்கு இவை சவுக்கியத்தைக் கொடுக்கும். எவனுக்கு மறதிமேலிட்டிருக்கிறதோ அவன் அறியவேண்டியதென்னவென்றால், இந்த ஹதீசுகளெல்லாமிருப்பதுடன் மூமினானவர்களில் சிலர் நரகம் போவார்கள் என்பதும், எழாயிரம் வருஷம் சென்ற பிறகு நரகத்தினின்றும் வெளியேறுகிறவனே ஜனங்களில் மிகவும்

கடையானவன் என்பதும் தெரிந்திருக்கிறது. எல்லா ஜனங்களினின்றும் ஒரே ஒருமனிதன் மாத்திரம் நரகத்துக்குப்போவான் என்றிருந்தபோதிலும் ஒவ்வொருவரும் அந்த மனிதனாயிருக்கக்கூடும். ஆதலால் அவரவரும் அந்த நரகவாளியாகிற மனிதனாயிராதபடி பேணுதலுடைய மார்க்கத்தை எடுத்துக்கொள்வதும் கூடியவரையில் முயற்சித்து நன்மைகளைச் செய்வதும் அவசியமாகும். ஒரு இராத்திரிக்கு நரகவேதனையினின்றுந் தப்புவதற்காகத் துன்யாவுடைய எல்லா இன்பங்களையும் விட்டுவிடுவது தகுமென்றால் எழாயிரம் வருஷம் வேதனைப்படுவதிலிருந்து தப்புவதற்காக இந்த இன்பங்களை விடுவது என்னபிரமாதம்? மொத்தத்தில் அச்சமும் ஆதரவும் இரண்டும் மிதமாயிருக்கவேண்டும். உதாரணமாக:—கியாமத்துநாளில் கூவிச்சொல்லுகிற மலக்கானவர் "எல்லா மனிதர்களினின்றும் ஒரே ஒருமனிதன் சுவர்க்கத்துக்குப்போவான் என்று கூவிச்சொல்லுவாராகில் அந்தச் சுவர்க்கவாளி நானாகவேயிருப்பேன் என்று நான் ஆதரவுவைப்பேன்" என்றும், "ஒரே ஒருமனிதன் நரகத்துக்குப்போவான் என்று கூவிச்சொல்லுவாராகில் அந்த நரகவாளி நானாகவேயிருப்பேன் என்று நான் அச்சப்படுவேன்" என்றும் உமர் ரலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள்.

## அச்சத்தின் மேம்பாட்டையும் அதன் ஹகீகத்தையும் அதன் வகைகளையும் விளக்கல்.

அறிந்துகொள்:—அச்சமானது பெரிய ஓர் மகாமாயிருக்கிறது. அதன் பயன்களுக்கும் காரணங்களுக்கும் தக்கவாறு அதன் மேம்பாடிருக்கும். இனி இல்மாகிய அறிவே அச்சத்துக்குக் காரணமாம். பின்னால் இது விபரிக்கப்பட்டுவரும். அச்சத்துக்கு இல்மு காரணமாயிருப்பதுபற்றியே அல்லாவுக்குப் பயப்படுகிறவர்கள் அவனுடைய அடியார்களில் இல்முள்ளவர்கள்தான் என்று அல்லாகு தஆலா கூறுகின்றான். இன்னும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் அல்லாவுடைய அச்சம் நுண்ணறிவுக்கு மூலம் என்று திருவுளமாயிருக்கிறார்கள். இனி அச்சத்தின் பயன்கள் யாவையெனில், இச்சைகளைவிடுவதும் வரகும் தக்வாவுமான பேணுதல்களுமேயாம். இவையெல்லாம் நற்பதவிக்குவித்தாயிருக்கிறது. ஏனெனில் இச்சைகளை விடாமலும் அப்படி விடுவதின்மேல் சபுருசெய்யாமலும் ஆகிரத்துடைய பாதையில் நடக்கமுடியாது. இச்சைகளை அச்சம் எரித்துவிடுவதுபோல் வேறு எந்தவஸ்துவும் அவ்வளவாக எரிக்

காது. இதனாலேதான் அல்லாகு தஆலா அச்சமுள்ளவர்களின் விஷயத்தில் ஹிதாயத்தையும் ரஹ்மத்தையும் இல்மையும் ரிலாவையும் ஒருங்கேசேர்த்து மூன்று ஆயத்துகளில் கூறுகின்றான். அவையாவன:—யார் தங்கள் நாயகனுக்குப் பயப்படுகிறார்களோ அவர்களுக்கு ஹிதாயத்தும் றஹ்மத்துமுண்டு என்பதும், அல்லாவுக்குப் பயப்படுகிறவர்கள் அவனுடைய அடியார்களில் இல்முள்ளவர்கள்தான் என்பதும், அல்லா அவர்களையும் அவர்கள் அல்லாவையும் பொருந்திக்கொள்வார்கள். தன் நாயகனுக்குப் பயந்தவன் எவனோ அவனுக்கே இந்தப பொருத்தம் வாய்க்கும் என்பதுமாம். இன்னும் அச்சத்தின் பயனாகிய தக்வாவை அல்லாகு தஆலா தன் பக்கம்சேர்த்து உங்களில் நின்றுமுள்ள தக்வாவே அவனைப் பெற்றுக்கொள்ளும் என்று அருளிச் செய்திருக்கிறான். இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருப்பதாவது:-"ஜனங்களைச் சேர்க்கப்படுகிற கியாமத்துடைய மைதானவெளியில் கூவிச்சொல்லுகிற மலக்கானவர் தூரத்திலிருப்பவர்களுக்கும் சமீபத்திலிருப்பவர்களுக்கும் கேட்கும்படி பலத்த சப்தமாக "ஓ ஜனங்களே! உங்களைப் படைத்தநாளிலிருந்து இதுகாலம்வரையில் நீங்கள் சொல்லியவைகளையெல்லாம் நான் கேட்டேன். இன்று நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் செயல்களையெல்லாம் உங்கள்முன்னால் எடுத்துரைக்கிறேன். அதற்கு நீங்கள் காது தாழ்த்துங்கள். ஓ ஜனங்களே! நீங்கள் ஒரு குலத்தை ஏற்படுத்திக்கொண்டீர்கள். நான் ஒருகுலத்தை ஏற்படுத்தினேன். நீங்கள் உங்கள் குலத்தை உயர்த்தி என் குலத்தைத் தாழ்த்தினீர்கள். உங்களில் தக்வாவுள்ளவனே அல்லாவினிடத்தில் சங்கையுள்ளவன் என்று நான் சொல்லியிருக்க, நீங்கள் இன்னான் மகன் இன்னான் மிகச் சங்கையுள்ளவன் என்றுசொன்னீர்கள். இன்று நான்சொன்ன குலத்தை உயர்த்தி நீங்கள் சொன்ன குலத்தைத் தாழ்த்துகிறேன் என்றுசொல்லி அயனல் முத்தகூன் "தக்வா செய்தவர்கள் எங்கே?" என்று ஓர் சப்தமிடுவார். பின்பு ஓர் கொடியை நாட்டி அதை முன்னால் தூக்கிக்கொண்டுபோக அதன் பின்னால் தக்வாசெய்த பேணுதல்காரர் வருவார்கள். வ அர்களெல்லாரும் கேள்வி கணக்கின்றிச் சுவர்க்கம் போய்ச் சேருவார்கள் என்பதே. இதனாலேதான் அச்சமுள்ளவர்களுக்கு இரட்டித்த சவாபு இருக்கிறது. தன் றப்புடைய ஸ்தானத்தில் பயந்தவன் எவனோ அவனுக்கு இரண்டு சுவர்க்கமுண்டு என்று அல்லாகு தஆலா கூறுகின்றான். இன்னும் அல்லாகு தஆலா தன்னுடைய வலிமையின்மேல் ஆணையிட்டு, நான் ஒரு அடியானில்

(துன்யாவுடையவும் ஆகிரத்துடையவுமான) இரண்டு அச்சத்தையும் இரண்டு அச்சம் தீர்தலையும் ஒருங்கே சேர்க்கமாட்டேன் என்றும், துன்யாவில் எவன் எனக்குப் பயந்தானோ அவனை ஆகிரத்தில் அச்சம் தீரவைப்பேன் என்றும், துன்யாவில் எவன் அச்சம் தீர்ந்திருந்தானோ அவனை ஆகிரத்தில் அச்சத்தில் ஆக்கிவைப்பேன்" என்றும் அருளிச்செய்ததாக றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "எவன் அல்லாவுக்குப் பயப்படுகிறானோ அவனுக்கு எல்லா வஸ்துக்களும் பயப்படும்" என்றும், "எவன் அல்லாவுக்குப் பயப்படவில்லையோ அவனை அல்லாகுதஆலா எல்லாவற்றிற்கும் பயப்படும்படி செய்வான்" என்றும், "உங்களில் அல்லாகு தஆலாவுக்கு அதிகமாய்ப் பயப்படுகிறவன் எவனோ அவனே பூரண புத்திசாலி" என்றும், "ஒரு மூமினானவன் தன் கண்ணிலிருந்து ஒருதுளி கண்ணீர் வரும்படி அழுவானாகில் அது ஒரு ஈயின் தலையளவா யிருந்தபோதிலும் அது அவன் முகத்தில் சிந்துமாகில் அவன் முகம் நரகத்தின்மேல் ஹறாமாகாமற்போவதில்லை" என்றும், "எந்த அடியானுக்கு அல்லாவுடைய பயத்தினால் சரீரத்திலுள்ள ரோமம் கிளர்த்தெழும்பி அவன் மனதில் திகிலுண்டாகின்றதோ அந்த அடியானுடைய பாவங்கள் மரத்திலிருந்து இலைகள் உதிர்வதுபோல் உதிர்ந்துபோம்" என்றும், "முலையிலிருந்து வெளிப்பட்டபால் மீண்டும் முலைக்குப்போகாததுபோல் அல்லாவுடைய பயத்தினால் அழுதவன் நரகத்துக்குப் போகமாட்டான்" என்றும் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "கேள்வி கணக்கில்லாமல் சுவர்க்கம் போகிறவர்கள் யார்?" என்று றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் ஜனங்களகேட்டதற்கு "யார் தன்னுடையபாவத்தை நினைத்து அழுதானோ அவன்" என்று நாயகமவர்கள திருவுளமானதாக ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் அல்லாவுடைய பயத்தினால சிந்தின கண்ணீரின் ஓர் துளியைக்காட்டிலும் அல்லது அல்லாவுடைய பாதையில் சிந்தின இரத்தத்தின் ஓர் துளியைக்காட்டிலும் அல்லாவுக்கு அதிக உவப்பான துளி எதுவுமில்லை" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "நாளை கியாமத்தில் அல்லாகு தஆலாவுடைய (அருஷின்) நிழலில் இருப்பவர்கள் எழுபேர் என்றும், அல்லாகு தஆலாவைத் தனிமையில் நினைத்தழுது கண்ணீர் சிந்தினவன் அந்த எழுபேரில் ஒருவன்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். ஹன்லா றலி

யல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறதாவது:—நாங்கள் றஸூல் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய சமுகத்தில் இருந்தோம். அவர்கள் எங்களுக்கு நஸீஹத்தான நற்போதனைகளை எப்படிப் போதித்தார்களென்றால், அதனால் எங்கள் மனம் நெருக்குண்டு எங்கள் கண்களிலிருந்து கண்ணீர் ஓடினது. பின்பு நான் என் வீட்டுக்குவந்தேன். என் மனைவி என்னுடன் பேச்சு கொடுத்ததினால் நான் துன்யா சம்பந்தமான பேச்சுகளில் பராக்காய்விட்டேன். அப்போது அந்த நஸீஹத்தும் அந்த அழுகையும் என் ஞாபகத்துக்கு வந்தது. உடனே நான் வெளியே புறப்பட்டு "ஆ ஹன்லலா முனாபிகாய்ப்போனான்" என்று முறையிட்டுக்கொண்டிருந்தேன். அப்போது அபூபகர் ஸித்தீகு றழியல்லாகு அன்கு அவர்கள் என் முன்னேவந்து "ஹன்லலா முனாபிகுமல்ல முனாபிகாகவுமில்லை" என்று சொன்னார்கள். நான் றஸூல் ஸல்லல்லாகு அலைஹிவஸல்லமவர்களிடம் போய் "ஹன்லலா முனாபிகாய்ப் போனான்" என்றேன். அப்போது நாயகமவர்கள் (கல்லா லம்யுனாபிக் ஹன்லலா) "ஒருபோதும் ஹன்லலா முனாபிகானதில்லை" என்று சொன்னார்கள். பின்பு நான் நடந்த சங்கதியைச் சொன்னேன். அப்போதவர்கள் "ஓ ஹன்லலா! நீங்கள் என்னிடத்திலிருந்தபோது உங்களுக்குண்டான அந்த ஹாலுடன் (எப்போதும்) இருப்பீர்களாகில் நீங்கள் நடக்கும் வழிகளிலும் நீங்களிருக்கும் வீடுகளிலும் மலக்குகள் வந்து உங்களுடன் முஸாபஹா செய்வார்கள். ஆனால் ஓ ஹன்லலாவே! அந்த ஹால் உங்களுக்குச் சிற்சில சமயங்களில்தானிருக்கும்" என்று அருளிச்செய்தார்கள்" என்பதே.

ஆன்றோர் வாக்கியங்கள்: ஷிப்லி றஹிமஹுல்லா அவர்கள் "எனக்கு அச்சம் மேலிட்டிருந்த ஒருநாளிலாவது என்மனதில் ஓர் ஞானறிவும்ஆராய்வுமான வாசல் திறக்காமலிருந்ததில்லை" என்று சொல்லுகிறார்கள். இன்னும் வேதனையின் அச்சத்துக்கும் றஹ்மத்தின் ஆதரவுக்கும் நடுவே மூமினுடைய பாவமானது இரண்டு சிங்கத்துக்கு நடுவே அகப்பட்ட ஓர் நரிக்குச் சமானமாயிருக்கிறது" என்று யஹ்யபுனுமஆது றஹ்மத்துல்லாஹி அலைஹியவர்கள் சொல்லுகிறார்கள். இன்னுமிவர்கள் ஏழைமனிதன் வறுமைக்கு பயப்படுவதுபோல் நரகத்துக்குப் பயப்படுவானாகில் அவன் சொர்க்கம்போவான்" என்று சொல்லியிருக்கிறார்கள் இன்னுமிவர்களிடத்தில் "நாளைகியாமத்தில் மிகவும் அச்சமற்றிருப்பவன் யார்?" என்றுகேட்டதற்கு "இன்று எவன்மிகவும் அச்சமுள்ளவனாயிருக்கிறானோ அவனே அன்று அச்சமற்றவன்" என்று சொன்னார்கள். ஹஸனபஸரீ றஹ்மத்துல்லாஹி அலைஹி

அவர்களிடத்தில்ஒருவர்வந்து"சிலவாகிஜு(பிரசங்கி)கள்எங்கள்மனம் துண்டுதுண்டாய்ப்போகும்படி அவ்வளவு அச்சமுறுத்துகிறார்கள்" என்றும், "அவர்களுடன் சகவாசிப்பதைப்பற்றித் தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்றும் கேட்டார். அதற்கவர்கள் "இன்று உங்களை அச்சம் தீரவைத்து நாளை அச்சத்தில் ஆக்குகிறவர்களின் சகவாசத்தைவிட இன்று உங்களை அச்சத்திலாக்கி நாளை உங்களுக்கு அச்சம் தீரவைப்பவர்களின் சகவாசம் மிக நல்லதாயிருக்கிறது" என்று சொன்னார்கள். "இன்னும் பாழடைந்தேதொழிய எந்தமனமும் அச்சத்தை விட்டொழிந்ததில்லை" என்று அபூசுலைமான் தாரானி றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் சொல்லுகிறார்கள். ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் "யாறசூலல்லா! குருஆனில் "அவர்கள் செய்வதைச் செய்கிறார்கள் பயப்படுகிறார்கள" என்று கூறப்பட்டிருக்கிறதே; அச்செய்கையாவது என்ன? களவும் ஜினாவுமாயிருக்குமோ? என்று கேட்டேன். அதற்கு நாயகமவர்கள் "அல்ல, அல்ல. அவர்கள் தொழுகிறவர்களாயும் நோன்பு வைக்கிறவர்களாயும் ஜக்காத்து கொடுக்கிறவர்களாயுமிருந்துகொண்டு அவை கபூல் ஆகாவென்று அச்சப்படுகிறார்கள் என்பதுதான் அதன்பொருள்" என்று அருளிச்செய்தார்கள்" என்பதே.

முஹம்மதுபுனுல் முன்கதிர் றஹிமஹுல்லா அவர்கள் அழும்போது வடிகின்ற கண்ணீரை முகத்தின்மேல் தடவிக்கொண்டு கண்ணீர்பட்ட இடம் ஒருபோதும் நரகத்தில்பற்றி எரியாது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று சொல்லுவார்கள். இன்னும் "நீங்கள் அழுங்கள்" என்றும், "இயலாமற்போனால் உங்களுக்கு அழுகை வரும்படி செய்துகொள்ளுங்கள்" என்றும் அபூபகர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். கஃபுல் அஹ்பார் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் "நான் ஆயிரம் தங்கக்காசுகளை சதகா செய்வதினும் என்முகத்தில் கண்ணீர் வடியும்படி நான் அழுவது அல்லாவின்மேல் ஆணையாக எனக்கு மிகவும் பிரியமுள்ளதாயிருக்கிறது" என்று சொல்லுகிறார்கள்.

### அச்சம் இதுவென அதன் ஹகீகத்தை விளக்கல்.

அறிந்துகொள்:—அச்சமென்பது இருதயத்தின் நிலைமைகளில் ஓர் நிலைமையாம். அது இருதயத்தினின்றும் வெளியாகின்ற ஓர் நெருப்பாயிருக்கிறது. அந்த நெருப்புக்குக்காரணமும் உண்டு காரியமும் உண்டு. அதன் காரணமென்றது இல்மும் மஃரிபத்துமேயாம்.

அதாவது, ஆகிரத்துடைய காரியத்தின் அபாயத்தைத் தெரிந்துகொள்வதும் தன்னுடைய கேட்டுக்குக் காரணங்களாயிருப்பவைகள் தன்னிடத்தில் பிரத்தியக்ஷமாயும் மீசுரமாயுமிருப்பதைத் தெரிந்துகொள்வதுமாம். இப்படித் தெரிந்துகொள்ளுவானாகில் அகத்தியம் அவனுடைய இருதயத்தில் அச்சமென்னும் அக்கினி சுவாலித்தெழும்பும். இந்த அக்கினி இரண்டுவிதமான அறிவுகளால் பற்றியெழும்பும். முதலாவது அறிவு:—தன்னையும் தன் பாவங்களையும் தன் ஐபுகளையும் வணக்கங்களின் ஆபத்துகளையும் தன்னுடைய துர்க்குணங்களின் கெடுதிகளையும் உள்ளபடி அறிந்து இந்தக்குற்றங்களெல்லாம் தன்னிலிருப்பதுடன் தனக்கு அல்லாகு தஆலா கொடுத்திருக்கிற நிருமத்துகளையும் நோட்டமிடுவதாம். இவனுக்கு உபமானம் ஒருமனிதனுக்குச்சமானமாம். அந்த மனிதன் ஓர் அரசனால் அநேகம் பரிவட்டங்களையும் நிருமத்துகளையும் அடைந்துவருகிறான். அவன் அரசனுடைய அரண்மனையிலும் பொக்கிஷத்திலும் கள்ளத்தனமாகக் கையாசூழி செய்துகொண்டிருக்கிறான். அவன் இப்படிச் செய்வதை அரசன் பார்த்துக்கொண்டிருப்பது திடீரென்று அவனுக்குப் புலப்பட்டு (ஆ! நான் செய்கிற துரோகம் அரசனுக்குத் தெரிந்திருக்கிறது என்றும்) அரசன் மிகவும் ரோஷமுள்ளவனாதலால் அவன் என்னைக் கடினமாக வதைசெய்வான் என்றும், "தாட்சண்ணியம் பார்க்கமாட்டான்" என்றும், அரசனிடத்தில் எனக்கு சிபார்சு செய்ய எவருமில்லை என்றும், எவ்வித உதவியும் பந்துத்துவமும் இல்லை என்றும்," அவன் உற்றுணரும்போது தன்னுடைய செய்கையின் கேட்டைப்பற்றி அகத்தியம் அவன் உயிருக்குள் துன்பமென்னும் நெருப்புத் துளிர்விட்டெழும்பும். இரண்டாவது அறிவு:—தன் குற்றத்தையல்ல, அல்லாகு தஆலாவுடைய நிர்தாக்ஷண்ணியத்தையும் அவனுடைய வலிமையையும் அறிவதாம். இதனால் அச்சமென்னும் அந்தநெருப்பு உண்டாகும். உதாரணமாக:—சிங்கத்தின் கையில் சிக்கின ஒருவன் அச்சப்படுவது அவன் பாவத்தைப்பற்றி அல்ல. மேலும் சிங்கத்தின் குணத்தை அறிந்து அது அவனைக்கொல்லும் சுபாவமுள்ளதென்றும், அவனுக்கும் அவனுடைய கேவல நிலைமைக்கும் அது இரக்கப்படாதென்றும் அவன் உணர்ந்திருப்பதினால் அவனுக்கு அச்சமுண்டாகிறது. இந்த அச்சம் மிகப் பரிபூரணமானதும் மேலானதுமாயிருக்கிறது. ஒருவன் அல்லாகு தஆலாஉடைய சிபத்துகளையும் அவனுடைய பெருமை, மகிமை, வலிமை, இலக்ஷியமில்லாமை இவைகளையும் அறிந்து இத்தன்மைபொருந்திய அல்லாகு

தஆலா சர்வ ஜனங்களையும் சாகடித்துச் சதாகாலமும் அவர்களை நரகத்தில் வைத்துவிட்டபோதிலும் அவனது இராஜரீகத்தில் ஓரணுவும் குறையாது என்றும், இரக்கமும் தயவும் என்றுசொல்லப்படுகிற இக்குணத்தின் உண்மையைவிட்டும் அவனுடைய ஜாத்து பரிசுத்தமுள்ளது என்றும் தெரிந்துகொள்ளுவானாகில் இதுவே அவன் அச்சப்படுவதற்கு இடமாகும். இந்த அச்சம் நபிமார்களுக்குமிருக்கும். அவர்கள் பாவத்தைவிட்டும் காவல்பெற்றவர்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தபோதிலும் சரியே. எவனொருவன் அல்லாகு தஆலாவை அதிகமாய் அறிந்தவனாகின்றானோ அவன் அதிகமாய் அச்சப்படுகிறவனாகின்றான். இதனாலேதான் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "நீங்கள் அறிந்ததிலும் அல்லாவை நான் அதிகமாய் அறிந்தவன். அவனுக்கு நான் அதிகமாய்ப் பயப்படுகிறவன்" என்று அருளிச்செய்திருக்கிறார்கள். இன்னுமிதனாலேயே அல்லாவுடைய அடியார்களில் அவனுக்குப் பயப்படுகிறவர்கள் அறிவாளர்தான் என்று குருஆனும் கூறுகின்றது. எவனொருவன் அல்லாவை அறியாத பெரியமூடனாயிருக்கின்றானோ அவன் மிகவும் அச்சமற்றவனாயிருப்பான். தாவூது அலைகிஸ்ஸலாமவர்களுக்கு, அல்லாகு தஆலா "ஓ தாவூதே! உக்கிரமுள்ள ஓர் சிங்கத்துக்குப் பயப்படுவது போல் நீர் எனக்குப் பயப்படுவீராக" என்று ஒஹி அனுப்பினான். அச்சமுண்டாவதற்குக் காரணம் இவைகளேயாம்.

இனி அச்சத்தின் காரியம் மனதிலும் சரீரத்திலும் அவயவங்களிலும் உண்டாகும். மனதில் அதன் காரியமாவது:- துன்யாவுடைய இச்சைகளை அவனுக்குக் கசப்பாக்குவதும் அவைகளைப் பற்றி அவனுக்கு இலக்ஷியமில்லாமற் போவதுமாம். ஏனெனில் ஒருவனுக்கு நிசாவின் இச்சையாவது உணவின் ஆசையாவது இருந்து அவன் ஒரு சிங்கத்தின் கையில் சிக்கிக்கொள்ளுவானாகில் அல்லது உக்கிரங்கொண்ட ஓர் அரசனுடைய மறியல்சாலையில் கைது செய்யப்படுவானாகில் அவனுக்கு அந்த இச்சையைப்பற்றி இலக்ஷியமிராது. அச்சத்தினால் அவனுடைய மனதின் நிலைமை முழுதும் தேவனமும் தாழ்மையும் அடைந்திருக்கும். அவன் தன் முடிவைப் பற்றிய கவலையில் முழுதும் அதே யோசனையும் அதே எண்ணமுமா யிருப்பான். அவனுக்குப் பெருமையுமிராது. பொறாமையுமிராது. துன்யாவுடைய இச்சையுமிராது. மறதியுமிராது. இனி, சரீரத்தில் அதன் காரியமாவது:—மெலிவும் தளர்ச்சியும் மெலிந்து வாடுதலுமாம். அவயவங்களில் அதன் காரியமாவது:-பாவங்களினின்

தும் அவைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுவதும் வணக்கத்தில் அவைகளை ஒழுங்காக வைத்துக்கொள்ளுதுமாம். இனி அச்சத்தின் தன்மைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படும். அச்சம் அவனை இச்சைகளினின்றும் நீக்குமாகில் அந்த அச்சம் இப்பத்து என்னப்படும். ஹராமைவிட்டும் நீக்குமாகில் அது வாகு எனைப்படும். ஷுபுஹத்தைவிட்டும் நீக்குமாகில் அல்லது ஹராமில் இழுக்குமென்ற ஐயமுள்ள ஓர் ஹலாலைவிட்டும் நீக்குமாகில் அது தக்வா என்னப்படும். ஆகிரத்துடைய வழியின் தங்கரிப்பல்லாததைவிட்டும் நீக்குமாகில் அது சிதுகு என்று சொல்லப்படும். இந்த அச்சமுள்ளவன் சித்தீகு எனப்படுவான். இப்பத்தும் வாகும் தக்வாவுக்குள் அடங்கும். இவை எல்லாம் சேர்ந்து சிதுகு என்னும் அச்சத்தில் அடங்கும். எதார்த்தத்தில் அச்சமென்பது இதுதான். ஆனால் சிணுங்கிக் கண்ணீரை வெளிப்படுத்துவதும் அதைத் துடைத்துக் கொண்டு லாஹவ்ல வலாகுவ்வத்த இல்லபில்லாஹி என்று சொல்வதும் பின்பு மறந்துபோவதுமான இந்த நிலைமைக்கு ஸ்திரீகளின் மன இளக்கம் என்று சொல்லப்படும். இது அச்சமென்றாகாது. ஏனெனில் ஒருவன் ஒரு வஸ்துவுக்குப் பயப்படுவானாகில் அதைவிட்டும் ஓடிப்போவான். தன் சட்டைக்கையில் ஏதோ தட்டுப்பட்ட ஒருவன் அது பாம்பெனக் காண்பானாகில் உடனே அதை உதறித் தள்ளுவான். லாஹவ்ல வலாகுவ்வத்த இல்லபில்லாஹி என்றுசொல்லிவிட்டுச் சும்மாயிருந்துவிடமாட்டான். "அச்சமுள்ள அடியான் யார்?" என்று சுன்னூனுல் மிஸ்ரீ றஹிமஹுல்லா அவர்களிடம் சிலர் கேட்டபோது "சாவுக்குப் பயந்து சகல இச்சைகளையும் விட்டுப் பத்தியங்காக்கின்ற ஓர் நோயாளியைப்போல் தன்னை வைத்துக் கொள்பவன் எவனோ அவனே அச்சமுள்ள அடியான்" என்று சொன்னார்கள்.

### அச்சத்தின் வகுப்புகள்.

அறிந்துகொள்:—அச்சமானது அற்பம், அதிகம், மிதம் என மூன்று வகுப்புகளையுடைத்தாயிருக்கிறது. இவற்றுள் மிதமான அச்சமே நல்லது. அற்ப அச்சமென்பது அமலின்பேரில் முயற்சிக்கச் செய்யாததாம். இது ஸ்திரீகளின் மன இளக்கம் போன்றது. எந்த அச்சத்தினால் நிராசையின் பயமும்; பிணி, பிரக்ஞைமாறல், மரணம் இவைகளின் ஐயமும் உண்டாகுமோ அது அதிக அச்சமாம். இவ்விரண்டும் கெட்டவைகள். ஏனெனில், அச்சத்துக்கு தன்னிலே யாதொரு சிறப்பில்லை. அது தவுஹீதும் மஃரிபத்தும்

மஹப்பத்தும் போன்றதல்ல. இதனாலேயே அச்சமென்னும் ஷெயத்து அல்லாகு தஆலாவில் ஆகாமென்றது. ஏனெனில், அச்சத்துக்கு அறிவின்மையும் அசக்தியுமே காரணமாம். அதாவது, ஒன்றன் முடிவைப்பற்றின அறிவும் அதன் அபாயத்தினின்றும் தப்பித்துக் கொள்ளச் சக்தியும் இல்லாமையினால் அச்சமுண்டாகின்றது. ஆனால் அச்சத்தை மறதியாளரின் நிலைமையோடு சேர்த்துப்பார்க்க அதற்கு ஓர் சிறப்புண்டு. அந்த அச்சம் சிறுவர்களைக் கல்வியில் பயிற்றுவதற்கும் மிருகங்களை வழி நடத்துவதற்கும் உதவியான ஓர் சாட்டிபோலிருக்கிறது. அது அடி உறைக்காத அவ்வளவு மிருதுவான சாட்டியாயிருந்தால் சிறுவனைக் கல்வியிற் பயிற்றாது. மிருகத்தை வழி நடத்தாது. அதிக கடினமாயிருந்தால் சிறுவனை அல்லது மிருகத்தைக் காயப்படுத்தும். அல்லது உறுப்புகளை முறிக்கும். இவ்விரண்டு அச்சமும் தோஷமுள்ளது. ஆகவே பாவச் செயல்களினின்றும் நீக்குவதற்காகவும் வணக்கத்தின்பேரில் தூண்டுவதற்காகவும் அச்சம் மிதமாயிருக்கவேண்டும். அதிகமாயிருந்து பெரிய ஆலிமாயிருப்பவனுக்கு அச்சம் ஏறுமலும் குறையாமலும் அதிக மிதமாயிருக்கும். ஏனெனில் அவனுக்கு அச்சம் அதிகப்பட்டால் ஆகிரத்தின் விஷயத்தில் வந்திருக்கிற ஆயத்து ஹதீசுகளை நோட்டமிடுவான். குறைந்தால்; காரியத்தின் அபாயத்தை நோட்டமிடுவான். ஒருவன் அச்சமில்லாதவனாயிருந்துகொண்டு தனக்கு ஆலிம் என்று பேர் சொல்லுவானாகில் அவன் படித்திருப்பது வீணேயொழிய இல்மல்ல. வயித்தியமே தெரியாமல் வீதிகளில் குறி கூறிக்கொண்டு திரிகிற குறிகாரன் தன்னை வயித்தியன் என்று சொல்வதுபோல் இவனும் தன்னை ஆலிம் என்று சொல்லுகிறான். எல்லா அறிவுகளுக்கும் மூத்தது தன்னையும் அல்லாகு தஆலாவையும் அறிவதாம். தான் குறைவும் குற்றமும் உள்ளவனென்றும் அல்லாகு தஆலா பெருமையும் மகிமையும் உள்ளவனென்றும் உலகம் கெட்டழிவது அவனுக்கு இலக்ஷியமில்லையென்றும் அறிந்துகொள்ளுவானாகில் இந்த இரண்டு அறிவுகளால் அச்சம் பிறக்கும். இதனாலேதான் அறிவில் மூத்தது ஜப்பாரை (அடக்கியாளும் அல்லாகு தஆலாவை) அறிவதும் காரியத்தில் கடைசியானது அதை அவன்வசம் சாட்டுவதுமாம் என்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இதன் கருத்து:—அல்லாகு தஆலாவை அவனுடைய பலாட்டியமும் உக்கிரமுமான சிபத்துடன் அறியவேண்டுமென்பதும், சுதந்திரமில்லாத அடிமையைப்

போல் நீ உன் காரியத்தை அவன்வசம் சாட்டவேண்டு மென்ப
தும், நீ யொரு பொருட்டுமல்ல உன்னால் ஒரு பொருட்டுமில்லை
என்று நீ அறியவேண்டு மென்பதுமாம். ஒருவன் இதை அறிந்தால்
அவன் எப்படி அச்சப்படாமலிருக்கக்கூடும்?

### அச்சத்தின் வகைகளை விளக்கல்.

அறிந்துகொள்:— அபாயத்தை அறிவதினால் அச்சம் பிறக்கும்.
ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அபாயம் நேரிடும். ஒருவனுக்கு
நரகமே நேரில் காணப்பட்டு அதனால் அவனுக்குப் பயம் பிடிக்கும்.
ஒருவனுக்கு நரகத்தில் தள்ளுகிற யாதொரு வஸ்துவைப்பற்றிப் பய
மிருக்கும். உதாரணமாக:- தவ்பா செய்யுமுன் மவுத்தாய்ப்போவான்
என்று பயப்படுவான். அல்லது தவ்பா செய்தபின் மீண்டும் பாவத்
தில் பிரவேசிப்பான் என்று பயப்படுவான். அல்லது அவனுடைய
மனம் வன்மையடைந்து மறதிகொள்ளுமென்று பயப்படுவான்.
அல்லது முந்திய வழக்கமானது அவனை மீண்டும் பாவத்தில் இழு
க்குமென்று பயப்படுவான். அல்லது செல்வத்தின் பொருட்டால்
அவனுக்குச் செருக்கு மேலிடும் என்று பயப்படுவான். அல்லது
ஜனங்களுக்கு அவன் செய்த கொடுமைகளைப்பற்றி கியாமத்தில்
அவனை விசாரிக்கப்படும் என்று பயப்படுவான். அல்லது அவனுடைய
மானக்கேடுகள் வெளியாகி அவன் நாணமடைந்து தலைகுனிவான்
என்று பயப்படுவான். அல்லது அவன் நினைக்கும் நினைவுகளில்
யாதொன்று அசங்கிதமான நினைவாயிருக்கிறதென்றும் அதை அல்
லாகு தஆலா கண்டறிகிறான் என்றும் பயப்படுவான். இப்படி எந்
தெந்த வஸ்துவைப்பற்றிப் பயப்படுகிறானோ அந்தந்த வஸ்துவில்
நின்றுந் தப்பித்துக்கொள்வதில் பராக்காகுவதே அந்தப் பயத்தின்
பலனாகும். ஆகவே முந்தியவழக்கமானது தன்னை மீண்டும் பாவத்தில்
கொண்டுபோமென்று பயப்படுகிறவன் அந்த வழக்கமான வழியி
லிருந்து அப்புறம் ஓடிப்போவான். தன் மனதிலிருக்கிற கெட்ட
எண்ணம் அல்லாகு தஆலாவுக்குத் தெரியுமென்று பயப்படுகிறவன்
தன் மனதைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுவான். இதுபோலவே
மற்றவைகளுமாம். அச்சமுள்ள அநேகர் பெரும்பாலும் முடிவைப்
பற்றிப் பயப்படுவார்கள். அதாவது;—மவுத்தின்போது ஈமானை இழ
ந்துவிடவும் கூடும் என்று அவர்களுக்குப் பயமிருக்கும். இவை
யெல்லாவற்றிலும் மிகப் பூர்ண அச்சம் ஆதிகற்பனையைப்பற்றிய
அச்சமேயாம். அதாவது தங்களுடைய நற்பதவி துர்ப்பதவிகளின்
விஷயமாய் ஆதியில் என்ன விதித்திருக்கிறதோ என்று பயப்படு

வார்கள். ஏனெனில் ஆதிகற்பனையின்படியே முடிவு மிருக்குமாதலாலென்க. இதன் அஸலாவது:—ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருநாள் மிம்பரின்மீதிருந்து "ஓ ஜனங்களே! அல்லாகு தஆலா ஒரு கிதாபை எழுதி யிருக்கிறான்" என்றும், அதில் சுவர்க்கவாசிகளின் பேர்கள் பதியப்பட் டிருக்கின்றன" என்றும் சொல்லித் தங்கள் வலதுகையை விரித்தார்கள். பின்பு "இன்னுமொரு கிதாபை எழுதியிருக்கிறான்" என்றும், 'அதில் நரகவாசிகளுடைய பெயரும் குறிப்பும் அவர்களுடைய குலமும் வரையப்பட் டிருக்கின்றன" என்றும் சொல்லி இடதுகையை விரித்தார்கள். பின்பு 'இந்த எழுத்தில் ஏறவும் குறையவுமாட்டாது" என்றும், "நல்லவன் என்று விதிக்கப்பட்ட ஒருவன் கெட்டவர்களின் செயலைச் செய்துகொண்டிருக்கவும், எல்லாரும் அவனைக் கெட்டவன் என்று சொல்லவும், பின்பு அவன் மவுத்தாகக் கொஞ்சநேரத்துக்கு முன்னே அல்லாகு தஆலா அவனைக் கெட்டவர்களுடைய வழியிலிருந்து விலக்கி நல்லவர்களுடைய வழியில் கொண்டுவரவுங் கூடும்" என்றும், "ஆகலால் ஆதிகற்பனையில் நல்லவன் என்று விதிக்கப்பட்டவனே நல்லவன்" என்றும், "ஆதிகற்பனையில் கெட்டவன் என்று விதிக்கப்பட்டவனே கெட்டவன்" என்றும், "காரியம் முடிவைப்பற்றினதாயிருக்கிறது" என்றும் அருளிச்செய்தார்கள். ஆரிபுகள் ஆதிகற்பனையைப் பற்றி அச்சப்படுவதற்கு இந்த ஹதீதே மூலகாரணமாயிருக்கிறது. தன் பாவத்தைக் குறித்து அச்சப்படுவதைப் பார்க்கிலும் அல்லாகு தஆலாவுடைய ஜலால் என்னும் மகத்துவத்தை நோக்கி அவனுக்கு அச்சப்படுவது எப்படி சிறப்பமானதோ இன்னுமது எப்போதும் நீங்காதோ அப்படியே இந்த அச்சம் மிகவும் சிறப்பமானதும் நீங்காததுமாயிருக்கிறது. தன் பாவத்தைக் குறித்து அச்சப்படுகிறவன் அந்தப் பாவத்தை விட்டுவிடும்போது இனி நான் ஏன் பயப்படவேண்டும் என்று இறுமாப்புக் கொள்ளவுங்கூடும்.

மொத்தத்தில் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மேலான சொர்க்கத்திலிருப்பார்கள் என்றும், அபூஜஹல் தாழான நரகத்தில் இருப்பான் என்றும் அறியாதவர் யாருமில்லை. இருவரும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னே அவர்களில் சுத்தமும் குற்றமுமான யாதொரு காரணமும் இருந்ததில்லை. இருவரும் சிருஷ்டிக்கப்பட்டபோது ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களில்நின்றும் யாதொரு காரணமின்றியே அவர்களுக்கு மஃரிபத்துடையவும் வணக்கத்துடையவுமான வழியை வாய்க்கப்பண்ணினான். அவ்வழியில்

அவர்களின் நாட்டத்தைச் செலவிடுவது (அவர்களால் மறுக்கமுடியாத) விதியாயிருந்தது. தங்களுக்கு வெளியாக்கப்பட்டதை வேண்டாமென்று தடுத்துக்கொள்ள அவர்கள் இயலாதவர்களாயிருந்தார்கள். இன்னும் அவர்கள் எதைக் கொல்லுகிற நஞ்சாக அறிந்தார்களோ அதைவிட்டும் தூரப்படாமலிருக்க அவர்கள் சக்திபெறவில்லை. இதேவிதமாக அபூஜஹலுக்குத் தீதார் என்னும் தெரிசனை வழி அடைக்கப்பட்டது. அதைக் கண்டுகொள்ள அவனுக்குச் சக்தியில்லை. அப்படிக் காணாமையினால் இச்சைகளை விட்டுவிட அவனால் முடியவில்லை. அவற்றால் உண்டாகும் ஆபத்துக்களும் அவனுக்குத் தெரியவில்லை. ஆகவே றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களும் அபூஜஹலும் இருவரும் விதிவசத்துக்கு அடங்கினவர்களாயிருந்தார்கள். ஆயினும் அல்லாகு தஆலா யாதொரு காரணமின்றி அபூஜஹலைக் கெட்டவனாகத் தீர்மானித்து அவனை நரகத்துக்கு ஓட்டினான். றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களை நல்லவர்களாகத் தீர்மானித்துப் பலாட்டியத்துடன் அவர்களை மேலான சொர்க்கபதிக்குக் கொண்டுபோனான். இப்படித் தன் இஷ்டப்படி செய்கிறவனும் உன்னை இலக்ஷியம் பண்ணாதவனுமான ஒரு நாயகனுக்குப் பயப்படுவது இன்றியமையாததேயாம். இதனாலேதான் "உக்கிரகோபமுள்ள சிங்கத்துக்குப்பயப்படுவதுபோல் நீ எனக்குப் பயப்படுவாயாக" என்று அல்லாகு தஆலா தாவூது அலைஹிஸ்ஸலாமவர்களுக்குச் சொன்னான். இதன்கருத்து:—சிங்கம் உன்னைக்கொல்லுகிறதாயிருந்தால் இலக்ஷியம் பண்ணாமலே கொன்றுவிடுகிறது. அப்படிக்கொல்வது உன் குற்றத்துக்காக அல்ல. மேலும் அதன் சிங்கத்தன்மையான அரசு அப்படி ஆக்கினைசெய்கின்றது. அது உன்னைக் கொல்லாமல் விட்டுவிடுகிறதாயிருந்தால் அப்படிவிடுவது அது உன்மீது இரக்கப்பட்டதினாலும் உனக்கும் அதற்கும் ஏதோ பந்துத்துவமிருப்பதினாலும் அல்ல. மேலும அதனிடத்தில் நீயொருபொருட்டல்லவென்பதினாலேயே விட்டுவிடுகிறது. இதே சிபத்தில் அல்லாகு தஆலாவை ஒருவன் அறிந்தானாகில் அவன் அச்சப்படாமல் ஒழிந்திருக்க இடமில்லை.

## முடிவின்கேட்டை விளக்கல்.

அறிந்துகொள்:—அச்சமுள்ள அநேகம்பேர் தங்கள் முடிவைப் பற்றிப் பயந்திருக்கிறார்கள். ஏனெனில், மனிதனுடைய கல்பானது ஓர்புறளா யிருப்பதினாலும் மவுத்துடைய நேரம் மிகவும் கஷ்டமான ஓர்நேரமாயிருப்பதினாலும் அந்த நேரத்தில் அந்த கல்பு எந்த விதமாகப் புறண்டுநிற்குமென்பதை அவன் அறியமாட்டாதவனா

யிருப்பதினாலுமென்க. ஆரிபுகளில் ஒருவர் சொல்லுகிறதாவது:— “ஒருவனை ஐம்பதுவருஷகாலமாக் முவஹ்ஹிதென்று நான் அறிந்து பின்பு அவன் அற்பநேரம் என்னைவிட்டும் மறைந்து ஓர் சுவற்றின் பின்னால் போவானாகில் அவனை முவஹ்ஹிதென்று நான் சாக்ஷி சொல்லமாட்டேன். ஏனெனில் கல்புடைய நிலைமை மாறுவதாயிருப்பதால் அது எப்படி மாறிற்றென்று எனக்குத் தெரியாததினால்” என்பதே. இன்னுமொருவர் சொல்லுகிறதாவது:—“வீட்டின் தெரு வாசற்படியிலோ அல்லது வீட்டின் அறைவாசற்படியிலோ எதில் ஒருவன் ஈமானுடன் மவுத்தானதாக நீர் சாக்ஷிசொல்லப் பிரியப்படுவீர்?” என்று யாராவது என்னைக் கேட்கிறபக்ஷம் வீட்டின் அறை வாசற்படியில் என்று நான்சொல்லுவேன். ஏனெனில் அவனந்த அறைவாயிலிலிருந்து தெருவாயிலில் போகிறவரையில் அவனுடைய ஈமான் இருந்ததா? இல்லையா என்பது எனக்குத் தெரியாததினால்” என்பதே. இன்னும் “எந்த மனிதனும் மவுத்துடைய நேரத்தில் தன் ஈமான் உரியப்படுமென்பதைவிட்டும் அச்சமற்றிருக்கமாட்டான்” என்று அபுத்தர்தா றலியல்லாகு அன்கு அவர்கள் ஆணையிட்டுச் சொல்லுகிறார்கள். இன்னும் “சித்தீக்குகள் ஒவ்வொரு மூச்சிலும் முடிவின் கேட்டைப்பற்றி அச்சப்படுகிறார்கள்” என்று சஹல்துஸ்தரீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் “சுபுயான் றஹிமஹுல்லா அவர்கள் மவுத்துடைய நேரத்தில் பதறிப்பதறி அழுதுகொண்டிருந்தார்கள்”. அங்கிருந்தவர்கள் “நீர் அழவேண்டாம்” என்றும், “அல்லாகு தஆலா உடைய மன்னிப்பானது உம்முடைய பாவத்தைக்காண மிகப்பெரிதாயிருக்கிறது” என்றும் சொன்னார்கள். அப்போதவர்கள் “என்பாவம் மலைமலையா யிருந்தபோதிலும் நான் ஈமானுடன் மவுத்தாவேன் என்று எனக்குத்தெரிகிறபக்ஷம் நான் பயப்படமாட்டேன்” என்று சொன்னார்கள். இன்னுமொரு பெரியவர் (மரணநெருக்கத்தில்) தம்முடைய பொருளை ஒருமனிதரிடம் கொடுத்து “நான் ஈமானுடன் மவுத்தானேன் என்பதற்கு இன்னது அடையாளம்” என்றும், “அந்த அடையாளத்தை நீர் காண்பீராகில் இந்தப் பொருளுக்குச் சர்க்கரையும் வாதுமைப் பயறும் வாங்கி இப்பட்டணத்துப் பிள்ளைகளுக்குப் பங்கிட்டு, இனனான் ஈமானுடன் மவுத்தானதற்காக இதுவோர்கொண்டாட்டம் எனச்சொல்லும்” என்றும், “அந்த அடையாளத்தை நீர் பார்க்காவிட்டால் மவுத்துக்குப் பிறகு (அல்லாவினிடத்தில்) நான் ரியாக்காரனென்றாகாதிருக்கும்பொருட்டு என்பேரில் ஜனாஜாத்தொழாமலும் என்னைக்

கொண்டுமருளாமலும்இருக்கும்படிஜனங்களுக்குச் சொல்லும்" என்றும்வசிய்யத்துசெய்தார்கள். இன்னும் "முரீது பாவத்தில்விழுவதைப் பயப்படுகிறான்" என்றும், "ஆரிபு குபுரில் விழுவதைப் பயப்படுகிறான்" என்றும் சஹல்துஸ்தரீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். அபூ எஜீதில்புஸ்தாமி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் பள்ளிவாயிலுக்குப் போகும்போது என் இடுப்பில் ஜுன்னார் என்னும் ஓர் சரடு இருப்பதாகக் காண்கிறேன். இதனால் கனீஸா என்னும் கோயிலுக்கு என்னைக் கொண்டுபோகிறார்கள் என்று நான் பயப்படுகிறேன். பள்ளிவாசலில் போய்ச்சேருமளவும் இப்படியே பயந்துகொண்டுபோகிறேன். தினந்தோறும் ஐந்துமுறை இதேவிதமாகின்றேன்" என்பதே. ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள ஹவ்ரிய்யூன்களைப் பார்த்து "நீங்கள் பாவத்துக்குப் பயப்படுகிறீர்கள். நபிமார்களாகிய நாங்களோ குபுருக்குப் பயப்படுகிறோம்" என்று சொன்னார்கள். இன்னுமோர் பெரிய நபியவர்கள் அநேக வருஷகாலமாக ஊண் உடைகளில்லாமல் வறுமையால் வருந்திக்கொண்டும் மிகவும் கஷ்டமான வேலை செய்துகொண்டு மிருந்தார்கள். பின்பு இதைப்பற்றி அல்லாகு தஆலாவினிடம் முறையிட்டார்கள். அல்லாகு தஆலா வஹியின் மூலமாக "ஓ நபியே! நான் உம்முடைய மனதைக் குபுரில்நின்றும் காப்பாற்றினேனே, இதற்காக நீர் சந்தோஷிப்பதில்லையா? துன்யாவைக் கேட்கிறீரே" என்று அறிவித்தான். அப்போதந்த நபியவர்கள் "என் ஆண்டவனே! நான் தவுபாச்செய்தேன். சந்தோஷமானேன்" என்று சொன்னதுமன்றித் தாங்கள் முறையிட்டதைப்பற்றி நாணமடைந்து தலையில் மண்ணையள்ளிப் போட்டுக் கொண்டார்கள். முனாபிகுத்தனமானது முடிவின் கேட்டைப்பற்றிய அடையாளங்களில் ஒன்றாயிருக்கிறது. இதனாலேதான் அஸ்ஹாபுகள் "எப்போதும் முனாபிகுத்தனத்துக்குப் பயந்துகொண்டிருந்தார்கள். இன்னும் ஹசன்பசரீ றஹிமஹுல்லா அவர்கள் "என்னில் முனாபிகுத்தனம் இல்லையென்று எனக்குத் தெரிகிறபக்ஷம் இதானது இவ்வுலகத்தின் சகலவஸ்துக்களிலும் எனக்கு மிகப் பிரியமானதாயிருக்கிறது" என்றும், "வெளியரங்கமும் அந்தரங்கமும் மனதும் நாவும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டிருப்பது முனாபிகுத்தனத்தில் சேர்ந்தது" என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

பசல்:அறிந்துகோள்:—எதற்குஎல்லாரும் பயந்திருக்கிறார்களோ அந்த முடிவின்கேடு என்பதற்குப் பொருள யாதெனில், மவுத்துடைய நேரத்தில் ஈமான் உரியப்படுவ தென்பதாம். அதற்குக் காரணங்கள் அநந்தமுண்டு. அவற்றின் இல்மு மறைந்ததாயிருக்

கிறது. என்கினும் இந்த கிதாபிற் சொல்லக்கூடியதும் ஈமானில் இடறை உண்டாக்குவதுமான காரணங்கள் இரண்டேயாம். அவற்றுள் ஒன்று:—எவனாயினுமொருவன் ஒரு கெட்ட பித்அத்தை நிர்ணயங் கொண்டு தன் வயதை அதில் கழித்தவனாயும் அந்த நிர்ணயம் பிசகாயிருக்குமென்று எண்ணாதவனாயுமிருப்பதாம். மவுத்துடைய நேரத்தில் காரியங்கள் அவனுக்கு வெளியாகும். அப்போது அவனுடைய பிசகை அவனுக்கு வெளியாக்கவும் அதனால் அவன் கொண்டிருந்த மற்ற நிர்ணயங்களிலும் அவனுக்குச் சந்தேகமுண்டாகவும் பின்பு அவன் தன் நிர்ணயத்தில் வைத்திருந்த நம்பிக்கை எடுபட்டு அவன் அதே சந்தேகத்தில் மவுத்தாய்ப்போகவும் கூடும். பித்அத்துக்காரனுக்கும் இல்முல் கலாமின் வாயிலாக வாதித்து அத்தாட்சியினால் ஈமான்கொண்ட முத்தகல்லிமுக்கும் இந்த அபாயம் இருக்கிறது. அவர்கள் பேணுதலும் வணக்கமும் உள்ளவர்களாயிருந்தபோதினும் சரியே. ஆனால் புத்திவிருத்திக்காத பேதை ஜனங்களும் லாஹிருகுர்ஆன் ஹதீசுகளின்படி ஈமான்கொண்டிருக்கிற அஹ்லுஸ்ஸலாமத்தி என்பவர்களும் இந்த அபாயத்தைவிட்டும் அச்சம் தீர்ந்திருப்பார்கள். இதனாலேதான் "நீங்கள் கிழப்பேதையர்களின் மார்க்கத்தை பற்றிக்கொள்வது உங்கள் கடமை" என்றும், "சுவர்க்கவாளிகளில் பெரும்பாலார் புத்திவிருத்திக்காத பேதை ஜனங்களே" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள். இன்னுமிதனாலேயே இல்முல்கலாமைக் கற்கவும் தர்க்கம்படிக்கவும் காரியங்களின் உண்மையைக் கண்டுபிடிக்க விசாரணைபுரியவும் கூடாதென்று சலபுகளான முன்னோர்கள் விலக்கியிருக்கிறார்கள். ஏனெனில் ஒவ்வொரு மனிதனுக்கும் அதை அறியச்சக்தியிராதென்றும், அதனால் அவன் யாதொரு பித்அத்தில் விழுவான் என்றும் அவர்கள் அறிந்ததினாலென்க.

இனி முடிவின் கேட்டுக்கு மற்றொரு காரணம் யாதெனின், அசலிலேயே ஈமான் பெலங்குன்றியிருப்பதும் துன்யாவின் ஆசை மேலிட்டிருப்பதும் அல்லாகுதஆலாவின் ஆசை அற்பமாயிருப்பதுமாம். அவனிச்சைகொண்டிருந்த பொருள்களையெல்லாம் மவுத்துடைய நேரத்தில் அவனிடத்திலிருந்து பிடுங்கிக்கொள்வதையும் அவனைத் துன்யாவிலிருந்தும் பலாத்காரமாக வெளியே இழுத்துக் கொண்டு போவதையும் அவன் விரும்பாத ஓர் இடத்துக்கு அவனை அனுப்புவதையும் அவன் பார்க்கின்றான். அதனால் அவனுக்கு ஓர் வெறுப்புண்டாகின்றது. அல்லாகுதஆலாவின்மீது அவன் வைத்

திருந்த அந்த அற்ப ஆசையும் போய்விடுகின்றது. உதாரணமாக:— ஒருவன் தன் மகன்மீது ஆசைகொண்டிருக்கிறான். ஆனால் அந்த ஆசை அற்பமாயிருக்கிறது. அந்த மகனானவன் தன் தகப்பனுக்குத் தன்னிலும் அதிக பிரியமாயிருக்கிற ஓர் பொருளை அவனிடத்திலிருந்து பிடுங்கிக்கொண்டால் அந்த மகனைத் தகப்பன் பகைக்கின்றான். அவன்மீதிருந்த அற்ப ஆசையும் போய்விடுகின்றது. ஷஹீதுடைய மர்த்தபா பெரிதாயிருப்பதற்கு இதுதான் காரணம். ஏனெனில் அந்த நேரத்தில் அவன் கண்முன் துன்யாவானது ஒரு பொருட்டாயிராமல் அலட்சியமாய்ப்போகின்றது. அவனுக்கு அல்லாஹு தஆலாவுடைய ஆசை அதிகரிக்கின்றது. மவுத்தில் மனதை வைத்துக்கொண்டிருக்கிறான். இப்படியாயிருக்கிற நிலைமையில் மவுத்தை அடைவதானது பெரியவோர் கொள்ளையாயிருக்கிறது. ஏனெனில், இப்படியான நிலைமை நெடுநேரம் தங்காது சீக்கிரத்தில் போய்விடும். மனம் அக்குணத்தைப் பொருந்தி அதிகநேரம் தரிபடாது. பின்னர் ஒருவனுக்கு எல்லா வஸ்துக்களின் ஆசையினும் அல்லாஹு தஆலாவின் ஆசை மேலிட்டிருக்குமாகில் அவன் முழுதும் தன்னைத் துன்யாவுக்கு ஒப்புக்கொடுப்பதிலிருந்து அந்த ஆசை அகத்தியம் அவனை விலக்கும். அவன் இந்த அபாயத்தை விட்டு மிகவும் அச்சம் தீர்ந்தவனாயிருப்பான். மவுத்துடைய நேரம் நெருங்கினால் அப்போதவன் தன் ஆசைநாயகனாகிய அல்லாஹு தஆலாவைத் தெரிசிக்கும் நேரம் வந்துவிட்டதென்றுணர்ந்து மவுத்தை வெறுக்காதிருப்பான். அவனுக்கு அல்லாஹு தஆலாவின் ஆசை இன்னும் அதிகப்படும். துன்யாவின் ஆசை அழிந்து நாசமாய்ப் போம். இது அவனுடைய முடிவின் நன்மைக்கு அடையாளமாம். ஆகவே ஒருவன் தன்முடிவின் கேடான அபாயத்தினின்றும் அதிக தூரமாக அகலவேண்டுமென்று நாடுவானாகில் அவன் பிதுஅத்தை விட்டும் அதிக தூரப்படவேண்டும். எதுவொன்று குர்ஆனிலும் ஹதீசுகளிலும் வந்திருக்கிறதோ அதன்மேல் ஈமான்கொள்ள வேண்டும். மனதுக்கு அமைந்ததை அங்கீகரிக்கவேண்டும். அமையாததை உண்மையென்று ஒப்புக்கொள்ளவேண்டும். எல்லாவற்றின் மீதும் ஈமான்கொள்ளவேண்டும். அல்லாஹு தஆலாவின் ஆசை அதிகப்படுவதற்கும் துன்யாவின் ஆசை குறைவதற்கும் தெண்டித்துப் பாடுபடவேண்டும். ஷரகுடைய ஹத்துகளைப் பேணுவதினால் துன்யாவின் வாழ்க்கை அவனுக்குக் கசப்பாகி அதன் ஆசை குறைந்து போம். அதை வெறுத்துவிடுவான். அல்லாஹு தஆலாவின் திருவை

இடைவிடாமல் செய்துவருவதினாலும் அவனை நேசிக்கிற அடியார்களுடன் எப்போதும் சகவாசிப்பதினாலும் அல்லாகு தஆலாவின் ஆசை அதிகரித்துப்பலப்படும். துன்யாவை நேசிக்கிறதுர்ச்சனங்களுடன் சகவாசிப்பதினால் அல்ல. பின்னர் துன்யாவின் ஆசை அதிகப்படுமாகில் காரியம் அபாயத்திலாகும். குர்ஆனில் அது வருமாறு:- உங்கள் தந்தையரும் மைந்தர்களும் பொருளும் செல்வமும் இன்னும் நீங்கள் வைத்திருப்பவைகளுமான இவைகளை நீங்கள் அல்லாவினும் அதிகமாக நேசிப்பீர்களாகில் அல்லாவுடைய ஆக்கினைவருமளவும் பொறுங்கள். அல்லாகு தஆலா தன்னுடைய உத்திரவை அனுப்புகிறவரையில் காத்திருங்கள் என்பதே.

### அச்சத்தை உண்டாக்கிக்கொள்ளப் பரிகாரம்.

அறிந்துகொள்:-தீனுடைய மகாமாத்துகளில் முந்தினது எகீனும் மஃரிபத்துமாம்(அதாவது சந்தேகமறத்தெளிதலும் அறிதலுமாம்). அறிவுக்குப்பின் அச்சம் பிறக்கும். அச்சத்தினால் ஜுஹ்தும் சபுரும தவ்பாவும் (தெண்டிப்பும் பொறுமையும் பாவ வழியிலிருந்து நீங்கலும்) உண்டாகும். ஜுஹ்தினாலும் தவ்பாவினாலும் அமலில் உண்மையும் இகுலாசு என்னும் நிஷ்காமியமும் திக்ருபிகுருகளில் இடைவிடாத நியமமும் உண்டாகும். அதனால்மருகலும் மஹப்பத்தும் உண்டாகும். இதுதான் மகாமாத்துகளில் முடிவானது. ரிலா, தவக்குல், ஷவுகு இவையாவும் மஹப்பத்தைச் சேர்ந்தவைகளாம். ஆகவே எகீன், மஃரிபத்து இவைகளுக்குப் பின்னால் அச்சமே நற்பதவியின் கீமியாவாயிருக்கிறது. இதற்குப் பின்னாலுள்ள மகாமாத்துகள் இதில்லாமல் நேர்படுவரா. இந்த அச்சம் மூன்று வழிகளால் உண்டாகும். அவற்றுள் ஒருவழி:—இல்மும் மஃரிபத்துமான அறிவாம். அதாவது மனிதன் தன்னையும் அல்லாகு தஆலாவையும் அறிவானாகில் அச்சங்கொள்வதற்கு அவன் யாதொரு பரிகாரமும் செய்யத் தேவையிராது. மேலும் அந்த அறிவே அச்சமாகும். ஒருவன் அல்லாகு தஆலாவைப் பரிபூரணன் என்றும் பெருமையும் வலிமையும் பொருந்தியவனென்றும் சிருஷ்டிகளின் தேவையற்றவன் என்றும், தன்னை எதுமற்றவோர் ஈனன் என்றும் இயலாதவன் என்றும் அறிந்தானாகில் உண்மையில் அவன் தன்னை ஓர் சிங்கத்தின் கையில் ஒப்புக்கொடுத்தவனபோலிருப்பான். இதன் நிமித்தமே மூஸா அலைகிஸ்ஸலாமுக்கும் ஆதம் அலைகிஸ்ஸலாமுக்கும் நடந்த ஓர் தர்க்க சம்பவத்தை றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் எடுத்துரைத்தார்கள். அதுவருமாறு:—மூஸா அலை

இஸ்ஸலாமவர்கள் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களை நோக்கி "அல்லாகு தஆலா தங்களுக்குச் சொர்க்கபதியைக் கொடுத்தான். இன்னின்னவிதமாகத் தங்களுக்கு உபகாரம் செய்தான். அப்படியிருக்கத் தாங்கள் ஏன் பாவத்தைச் செய்து தங்களையும் எங்களையும் துன்பத்துக் குள்ளாக்கினீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் மூஸா அலைஹிஸ்ஸலாமை நோக்கி "ஆதிகற்பனையில் அந்தப்பாவம் எனக்கு எழுதப்பட்டிருந்ததா? இல்லையா?" என்றுகேட்க, அவர்கள் "ஆம் எழுதப்பட்டிருந்தது" என்று சொன்னார்கள். அப்போது ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் "அந்த எழுத்துக்கு மாறுசெய்ய என்னால் இயல்வதாயிருந்ததா?" என்றுகேட்க, மூசா அலைஹிஸ்ஸலாம் "இல்லை" என்றார்கள். இவ்வாறு ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் கொடுத்த அத்தாட்சியினால் மூசா அலைஹிஸ்ஸலாமவர்கள் ஆக்ஷேபத்தைவிட்டு வாய்மூடினார்கள்" என்பதே. இனி எந்த அறிவினால் அச்சம் பிறக்குமோ அந்த அறிவின் பாபுகள் அநேகமாயிருக்கின்றன. எவனொருவன் அதிக ஆரிபாயிருக்கிறானோ அவன் அதிக அச்சமுள்ளவனாயிருப்பான். ஹதீசுகளில் வந்திருப்பதாவது:—றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களும் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமவர்களும் ஆக இருவரும் அழுதுகொண்டிருந்தார்கள். அப்போது அல்லாகு தஆலாவினிடத்திலிருந்து "நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?" என்றும், "நான் உங்களை அச்சந் தீர்ந்தவர்களாக்கியிருக்கிறேனே" என்றும் ஒஹிவந்தது. அப்போதவர்கள் "எங்கள் ஆண்டவனே! உன் மக்ரு என்னும் தந்திரத்துக்கு நாங்கள் அச்சந்தீரவில்லை" என்று சொன்னார்கள். அதற்கு அல்லாகு தஆலா "நீங்கள் அப்படியே அச்சமொழியாதவர்களாயிருங்கள்" என்று ஆக்கியாபித்தான். அச்சமற்றிருக்கும்படி இவர்களுக்குச் சொல்லப்பட்டிருந்தும் இவர்கள் "அப்படியிருக்கக்கூடாது" என்றும், "ஒருகால் இது ஒரு சோதிப்பாயிருக்கலாம்" என்றும், "இதில் நாம் அறியக்கூடாத யாதொரு இரகசியமிருக்கும்" என்றும் இவர்கள் தங்களுக்குள் சொல்லிக்கொண்டார்கள். இது இவர்களுடைய அறிவின் பூரணத்தன்மையில்நின்று முள்ளதாயிருந்தது.

பதுருப்போர் நடந்ததினத்தில் ஆரம்பத்தில் முஸ்லிம் வீரர்கள் சோர்வடைந்தார்கள். அப்போது றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் பயந்து "என் ஆண்டவனே! இந்த முஸ்லிம்கள் ஹலாக்காய்ப்போனால் பின்பு பூமியின்மீது உன்னை வணங்குவதற்கு ஒருவரு மிருக்கமாட்டார்" என்று சொன்னார்கள். அப்போது அபூபக்கர்

சித்தீகு றழியல்லாகு அன்கு அவர்கள் "யாறசூலல்லா! தாங்கள் அல்லாவுக்கு ஆணையிட்டுச் சொல்வானேன்? அவன் தங்களுக்கு வெற்றி கொடுப்பதாக வாக்களித்திருக்கிறான். அவன் தன் வாக்கை நிறைவேற்றுவான்" என்று சொன்னார்கள். ஆதலால் அந்தநேரத்தில் சித்தீகுடைய மகாமானது அல்லாவுடைய வாக்களிப்பில் நம்பிக்கை வைப்பதாயிருந்தது. றசூலுடைய மகாமானது அவனுடைய மக்ரு என்னும் தந்திரத்துக்கு அச்சப்படுவதாயிருந்தது. இது மிகவும் சிறப்பமானதாயிருக்கிறது. ஏனெனில் அல்லாகு தஆலா உடைய காரியங்களில் அவன் கருதியிருக்கிற இரகசியங்களையும் அவனது அரசாக்ஷியில் அவன் மறைத்திருக்கிற மர்மத்தையும் அவனது கற்பனையில் அவன் கொண்டிருக்கிற நோக்கத்தையும் எவரும் அறியார் என்று அவர்கள் அறிந்தார்களாதலாலென்க. இரண்டாவதுவழி: இல்மும் மஃரிபத்துமான தன் சுய அறிவால் அறியச் சக்திபெறுமற் போனால் அச்சமுள்ளவர்களின் சகவாசத்திலிருக்கவேண்டும். அதனால் அவர்களின் அச்சம் இவனிலும் உறையும். மறதியாளரின் சகவாசத்தைவிட்டு நீங்கியிருக்கவேண்டும். அச்சமுள்ளவர்களோடு சகவாசிப்பதானது அகத்தியம் அச்சத்தை யுண்டாக்கும். இதுதன் சுய அறிவினால் உண்டாகாமல் பிறரைப்பார்த் துண்டாகிற அச்சமேயாயினும் சரி. உதாரணமாக:—பாம்பைக்கண்டு பயந்தோடுகிற தகப்பனைப்பார்த்த ஓர் சிறுவன் அப்பாம்பின் தன்மையை அறியாமலிருந்தபோதிலும் தானும் பயந்து ஓடுகிறான். அறிவுடைய அச்சத்தைநோக்க இதுமிகவும் கேவலமான அச்சமாம். ஏனெனில் ஒருமந்திரவாதி பாம்பைத் தன் கையால் தொடுவதைப் பன்முறை அச்சிறுவன் பார்ப்பானாகில் முன்னே தகப்பனால் பயங்கொண்டிருந்த இவன் இப்போது பாம்பாட்டியால் பயந்தெளிந்து பாம்பைத்தொட ஆரம்பிப்பான். பாம்பின் தன்மையை அறிந்தவனோ பாம்பாட்டியினால் அச்சந்திரமாட்டான். ஆகவே தன் சுய அறிவின்றிப் பிறரைப் பின்பற்றுகிற முகல்லிது அச்சமில்லாதவர்களுடையவும் மறதியாளருடையவுமான சகவாசத்தைவிட்டும் பேணிக்கொள்ளவேண்டும். அதினும் ஆலிம்கள்போல் வேஷந் தரித்திருப்பவர்களின் சகவாசத்தைவிட்டும் அவசியம் நீங்கவேண்டும். மூன்றாவது வழி:—சகவாசிப்பதற்கு அச்சமுள்ளவர்கள் இக்காலத்தில் அருமையாய்ப்போனநிமித்தம் அவர்கள் அகப்படாதபக்ஷத்தில அவர்களிருந்த இருப்பையும் அவர்களின் கிதாபுகளையும் படிக்கவேண்டும். நாம் அம்பியா அவ்லியாக்களுடைய அச்சத்தின் சிலசங்கதிகளை எடுத்துச்சொல்வோம்.

ஏனெனில் ஜனங்களில் அவர்கள் மிகவும் புத்திமான்களாயும் அதிக அறிவாளராயும் பெரிய பேணுதலுள்ளவர்களாயும் இருந்தார்கள் என்றும், அவர்கள் அப்படிப் பயப்பட்டிருக்கிறபோது மற்றவர் அதினும் மேலாகப் பயப்படவேண்டும் என்றும் கொஞ்சமேனும் புத்தியுள்ளவன் தெரிந்துகொள்ளவேயாம்.

### நபிமார்கள், மலக்குகள் இவர்களின் ஹிக்காயத்துகள்.

அறிந்துகொள்:—ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது. இபுலீசு லகுனத்தை அடைந்தபோது ஜிப்ரயீல், மீகாயீல் அலைகிமஸ்ஸலாம் இருவரும் ஓயாமல் அழுதுகொண்டிருந்தார்கள். "ஏன் அழுகிறீர்கள்?" என்று அல்லாகு தஆலா அவர்களுக்கு வஹிசெய்தான். அப்போதவர்கள் "எங்கள் ஆண்டவனே! நாங்கள் உன் மக்ரு என்னும் தந்திரத்துக்கு அச்சம் தீராதவர்களா யிருக்கிறோம்" என்று சொன்னார்கள். அதற்கு அல்லாகுதஆலா "நீங்கள் இப்படியே அச்சந் தீராதவர்களா யிருக்கவேண்டும்" என்று ஆக்கியாபித்தான். முகம்மதுபுனுல் முன்கதிர் றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நரகத்தை யுண்டாக்கினபோது எல்லா மலக்குகளும் அழத்தொடங்கி ஓயாமல் அழுதுகொண்டிருந்தார்கள். மனிதர்களைப் படைத்தபோது நரகத்தை யுண்டாக்கினது நமக்காக அல்லவென்றறிந்து மலக்குகள் அழுவதைவிட்டு வாய்மூடினார்கள்" என்பதே. றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "ஜிப்ரயீல் என்னிடம் வந்த ஒருநேரத்திலாவது அல்லாவுடைய பயத்தினால் அவருடைய தேகத்தில் நடுக்கமில்லாமலிருந்ததில்லை" என்று அருளிச்செய்திருக்கிறார்கள். இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஜிப்ரயீல் அலைகிஸ்ஸலாமிடத்தில் "நான் மீகாயீலை ஒருபோதும் சிரிக்கக் கண்டதில்லை. (இதற்குக் காரணம் யாது?)" என்று கேட்டதாகவும், "நரகத்தைப் படைத்தது முதல் அவர் சிரித்ததில்லை" என்று ஜிப்ரயீல் அலைகிஸ்ஸலாம் சொன்னதாகவும் அனசு றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இபுறாஹீம் கலீல் அலைகிஸ்ஸலாமவர்கள் தொழுகையில் ஆய்விட்டால் அவர்களுடைய மனக்கொதிப்பின் இரைச்சலை ஒரு மைல் தூரத்திலிருப்பவர்களும் கேட்பார்கள். முஜாஹிது றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"தாவூது அலைகிஸ்ஸலாமவர்கள் நாற்பதுநாள்வரையில் சிஜ்தாவில் விழுந்து அழுதுகொண்டிருந்தார்கள். அந்த அழுகையினால் வடிந்த கண்ணீரின் சாரத்தால் புல்லும் முளைத்துவிட்டது. அப்போது "ஓ தாவூதே! நீர் ஏன் அழு

கிறீர்? நீர் பசியாளியாயிருந்தால் உணவனுப்புகிறேன்; அல்லது நிருவாணியாயிருந்தால் உடை அனுப்புகிறேன்; அல்லது தாகமுள்ளவராயிருந்தால் தண்ணீர் அனுப்புகிறேன்'' என்று உருத்தோற்றமில்லாமல் ஓர் சப்தம் வந்தது. இதைக்கேட்ட தாவூது அலைஹிஸ்ஸலாமவர்கள் ஓர் கதறு கதறினார்கள். அக்கதறுதலில் எழுந்த ஆவியினால் அங்குற்றகட்டையும் பற்றி எரிந்தது. பின்பு அல்லாகுதஆலா அவர்களுடைய தவுபாவை கபூல் செய்தான். அப்போதவர்கள் அல்லாகுதஆலாவினிடம் "என் ஆண்டவனே! என் பாவத்தை நான் மறந்துபோகாதபடி அதை என் உள்ளங்கையில் எழுதிவிடு'' என்று துஆ கேட்டார்கள். அந்ததுஆவை கபூல்செய்தான். பின்பு அவர்கள் உண்பதற்கும் குடிப்பதற்கும் கையை எடுக்கும்போதெல்லாம் அந்த எழுத்தைப் பார்க்காமலிருப்பதில்லை. பார்த்து அழாமலிருப்பதில்லை. சில சமயங்களில் அவர்கள் குடிப்பதற்குத் தண்ணீர் கொண்டுவரப்பட்டு அது பாத்திரத்தின் நிறைய இல்லாமல் அரைகுறையாயிருந்தால் (குடிக்கும்போது) அவர்களின் கண்ணீரால் அது நிரம்பிவிடுவதுமுண்டு.

இன்னும் ரிவாயத்து செய்யப்பட்டிருப்பதாவது:—"தாவூது அலைஹிஸ்ஸலாமவர்கள் ஒருபோது தங்கள் சக்தியொழிந்து சோர்வடைகிறவரையில் அவ்வளவாக அழுது "என் ஆண்டவனே! என் அழுகைக்கு இரங்கமாட்டாயா?'' என்று சொன்னார்கள். அப்போது அல்லாகு தஆலா "ஓ தாவூதே! நீர் உம்முடைய அழுகையைச்சொல்லுகிறீர். பாவத்தை மறந்துவிட்டீர்'' என்று வஹீ இறக்கினான். அப்போது தாவூது அலைஹிஸ்ஸலாமவர்கள் "என் ஆண்டவனே! நானெப்படி அதை மறந்துவிடுவேன்? நான் பாவம் செய்வதற்கு முன்னே ஜபூரை ஓதுவேனாகில் ஓடுகிற தண்ணீர் ஆற்றிலும், உலாவுகிற காற்று ஆகாயத்திலும் அப்படியே நின்றுவிடும். பறக்கின்ற பக்ஷிகள் என் தலைக்கு மேலால் அந்தரத்தில் வந்து நிற்கும். காட்டு மிருகங்கள் என் மிஃறாபில் வந்து கூடும். இப்போது அவைகளில் ஒன்றையேனும் காணேன், என் ஆண்டவனே! இதென்ன பிரகஷ்டியோ? தெரியவில்லை'' என்று சொன்னார்கள். அப்போது அல்லாகு தஆலா "ஓ தாவூதே! முன்னே அவை உம்மிடம் வந்துகூடினதற்குக் காரணம் உம்முடைய வணக்கமாயிருந்தது. இப்போது அவை பிரகஷ்டியடைந்ததற்குக் காரணம் உம்முடைய பாவமாயிருக்கிறது. ஓ தாவூதே! ஆதமாகிறவர் என் அடிமையாயிருந்தார். அவரை நான் என் அன்பானகரத்தினால் படைத்தேன். என்னுடைய ரூஹை

அவரில் ஊதினேன். மலக்குகளை அவருக்கு சிஜ்தா செய்யவைத்தேன். சங்கை என்னும் பரிவட்டத்தை அவருக்குச் சாற்றினேன். மரியாதை என்னும் மகுடத்தை அவர் தலையிற் சூட்டினேன். அவர் தமது தனிப்பை முறையிட்டார். ஹவ்வாவைப்படைத்து அவருக்குத் துணையாக்கினேன். இருவரையும் சொர்க்கத்தில் வசிக்கச் செய்தேன். அவர் ஒரே ஒரு பாவத்தைச் செய்தார். அதனால் அவர் சிறுமையடைந்து உடையிழந்து என் சமுகத்திலிருந்து ஓட்டிவிடப்பட்டார். ஓ தாவூதே! கேளும். கேட்பதை உண்மையாகக் கொள்ளும். நீர் எனக்கு வழிபட்டீர். நான் உமக்கு வழிபட்டேன். நீர் கேட்டதைக் கொடுத்தேன். நீர் பாவஞ்செய்தீர். நான் உமக்குத் தாமதங்கொடுத்தேன். இப்படிக்கெல்லாமிருப்பதுடன் இப்போது நீர் என்பக்கம் திரும்புவீராகில் நான் உம்மை ஏற்றுக்கொள்ளுவேன்" என்று அருளிச்செய்தான்" என்பதே. இன்னும் ரிவாயத்து செய்யப்பட்டிருப்பதாக யஜீதுபுனு அபீஸவிர் றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். அதாவது:—தாவூது அலைகிஸ்ஸலாமவர்கள் தங்கள் பாவத்தை நினைத்துப் புலம்ப நாடினால் ஏழுநாள் வரையில் எதையும் தின்னாமல் பட்டினியாயிருப்பார்கள். மனைவிகளிடம் போகமாட்டார்கள். பின்பு விசாலமான மைதான வெளியில் வருவார்கள். அவர்களுடைய உத்திரவின்பேரில் சுலைமான் அலைகிஸ்ஸலாமவர்கள் (ஊரைச்சுற்றி) "ஓ ஜனங்களே! தாவூதுடைய புலம்பலைக் கேட்கப் பிரியங்கொண்டவர்கள் வாருங்கள்" என்று கூவிச் சொல்லுவார்கள். பின்பு பட்டணங்களிலிருந்து ஜனங்களும் பஞ்சரங்களிலிருந்து பறவைகளும் காடுமலைகளிலிருந்து பற்பல மிருகங்களும் அந்த மைதான வெளியை நோக்கிவரும். அவர்கள் அல்லாகு தஆலாவுடைய புகழைக் கூற ஆரம்பிப்பார்கள். அங்கிருக்கும் ஜனங்கள் எல்லாரும் சப்தித்து முறையிடுவார்கள். பின்பு அவர்கள் சொர்க்க நரகங்களின் வர்ணிப்பைக் கூறி அதன்பிறகு தங்கள் பாவத்தின்பேரில் புலம்பத் தொடங்குவார்கள். அதைக் கேட்கும் ஜனங்கள் அச்சத்தினாலும் பயத்தினாலும் அநேகமாய் மவுத்தாய்ப் போவார்கள். பின்பு சுலைமான் அலைகிஸ்ஸலாமவர்கள் தங்கள் தந்தை முன்பாக எழுந்துநின்று "ஓ என் தந்தையே! அநேக ஜனங்கள் ஹலாக்காய்ப் போனார்கள். போதும் நிறுத்துங்கள்" என்று சொல்லுவார்கள். பின்பு மய்யித்துகளை எடுத்துக்கொண்டு போகும்படி கூவிச் சொல்லுவார்கள். அவரவரும் தங்கள் மய்யித்தைத் தூக்கிக்கொண்டு போவார்கள். ஒருநாள் அந்தச் சபையில் கூடியிருந்த நாற்பதினாயிரம்

பேர்களில் முப்பதினாயிரம்பேர் ஹலாக்காய்ப் போயிருந்தார்கள். இன்னுமவர்களுக்கு இரண்டு அடிமைப் பெண்களிருந்தார்கள். அஜரத்தவர்கள் பயப்படுகிற நேரத்தில் நடுங்கி ஆடுகின்ற அவர்களுடைய அவயவங்கள் அற்றுவிழாதபடி அவர்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வதும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்வதுமே அந்த அடிமைப் பெண்களுடைய வேலையாயிருந்தது" என்பதே. ஜகரிய்யா அலைகிஸ்ஸலாமவர்களுடைய மகன் யஹ்யா அலைஹிஸ்ஸலாமவர்கள் சிறுபிராயத்திலேயே பய்த்துல் முகத்தசில் இபாதத்து செய்வார்கள். மற்றும் சிறுவர்கள் அவர்களை விளையாடக் கூப்பிட்டால் "என்னை விளையாடுவதற்குப் படைக்கவில்லை" என்று சொல்லுவார்கள். அவர்களுக்குப் பதினைந்து வயதானபோது ஜனங்களின் நடுவேயிருந்து புறப்பட்டுக் காட்டுக்குப்போய்விட்டார்கள். ஒருநாள் அவர்களுடைய தகப்பனார் அவரைத் தேடிப்போய்ப் பார்க்கையில், அவர்கள் தாகத்தினால் மரணத்துக்கு நெருங்கியிருப்பதுடன் தங்கள் காலைத் தண்ணீரில் வைத்துக்கொண்டு "என் ஆண்டவனே! உன்னிடத்தில் என்பதவி இன்னது என்று எனக்குத் தெரியாதவரையில் உனது பெருமையின்மேல் ஆணையாக நான் தண்ணீர் குடிக்கமாட்டேன்" என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இன்னுமவர்கள் அழுதிருந்த அழுகையினால் அவர்களுடைய முகத்தின் சதை அறுப்புண்டு பற்கள் வெளியே தெரிகின்றனவாயிருந்தன. ஜனங்கள் அதைப் பார்க்காமலிருக்கும்பொருட்டு அவர்களுடைய முகத்தில் பஞ்சை வைத்துக்கொள்வார்கள். அம்பியாக்களுடைய ஹிகாயத்துகளில் இம்மாதிரியான சங்கதிகள் இன்னுமநேகமிருக்கின்றன. வல்லாஹு அஃலமு பிஸ்ஸவாப்.

அஸ்ஹாபுகள், சலபுகள் இவர்களின் ஹிக்காயத்துகள்.

அறிந்துகொள்:—அபூபக்ர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள் மேம்பதவியான பெருமையை உடையவர்களாயிருந்தும் அவர்கள் ஒரு பறவையைப் பார்த்தால் "ஆ நான் உன்னைப்போல் ஆயிருக்கவேண்டுமே" என்று சொல்லுவார்கள். அபூதர் றலியல்லாகு அன்கு அவர்கள் "ஆ நான் ஒர் மரமாயிருக்கவேண்டுமே" என்று சொல்லுவார்கள். ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள் "ஆ எனக்குப் பேரும் அடையாளமும் இல்லாமற் போகவேண்டுமே" என்று சொல்லுவார்கள். உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் ஒருபோது குர்ஆனிலிருந்தும் ஒரு ஆயத்தைக் கேட்டுக் கீழேவிழுந்து மூர்ச்சையானார்கள். சிலநாள்வரையில் ஜனங்கள் அவர்களை வியாதியின

வப் போய்க்கொண் டிருந்தார்கள். அவர்களின் அதிகமான அழுகையினால் அவர்களுடைய முகத்தில் (கண்ணீர் வடிந்த) இரண்டு கரிய வடுக்களிருக்கும். இன்னுமவர்கள் "ஆ உமரானவன் தன் தாய் வயிற்றிலிருந்து எப்போதும் பிறக்காம லிருக்கவேண்டுமே" என்று சொல்லுவார்கள். ஒருநாள் அவர்கள் ஒருவீட்டுத் தெருவாயிலிடம் வருகையில் அந்தவீட்டில் குருஆன் ஓதிக்கொண்டிருந்த ஒருவர் அந்தச் சமயத்தில் உன் ரப்புடைய வேதனைத் திடனாகச் சம்பவிப்பதுதான் எனப் பொருள் பொருந்திய ஆயத்தை ஓதினார். இதைக் கேட்ட உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் ஒட்டகைமீதிருந்து கீழே இறங்கினவர்கள் ஓர் சுவற்றில்போய் மோதிக்கொண்டார்கள். அதனால் அவர்கள் சக்திபிழந்து மெய்சோர்ந்ததினிமித்தம் அவர்களை வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு போனார்கள். ஒரு மாதம்வரையில் வியாதிப்பட்டிருந்தார்கள். அந்த வியாதிக்குக் காரணம் இன்னதென்று எவரும் அறியவில்லை. அலிப்புபுனுல் உசைன் றலியல்லாகு அன்ஹுமா அவர்கள் தொழுகைக்காக ஒழுசெய்தால் அவர்களுடைய முகம் மஞ்சளித்து வாடிப்போம். ஜனங்கள் "இதென்ன?" என்று அவர்களைக்கேட்பார்கள். அதற்கவர்கள் "நான் யார் முன்பாக நிற்கப்போகிறேன் ' என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று சொல்வார்கள். மிஸ்வருபுனுல் மஃறமா றலியல்லாகு அவர்கள் குருஆனைக் கேட்கச் சக்தி பெறாதவர்களா யிருந்தார்கள். ஒருநாள் ஒரு முசாபிரானவர் இதை அறியாமல் இந்த ஆயத்தை ஓதினார். அந்நாளில் அச்சமுள்ளவர்களை றஹ்மானிடம் விருந்து வந்தவர்களாக எழுப்புவோம். பாவிகளைத் தாகமுள்ளவர்களாக நரகத்தின் பக்கம் ஓட்டுவோம் என்பதே. இதைக் கேட்ட மிஸ்வர் றலியல்லாகு அவர்கள் "நான் பாவிகளில் ஒருவனாயிருக்கிறேன் அச்சமுள்ளவர்களிற் சேர்ந்தவனல்ல" என்று சொல்லி "இன்னு மொருமுறை ஓது" என்று சொன்னார்கள். அவர் ஓதினார். அவர்கள் அலறி ஓர் சப்தமிட்டுப் பிராணனைவிட்டார்கள்.

ஹாத்திமுல் அஸம்மு றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"உனக்கு நல்ல இடம் கிடைத்திருக்கிறதென்று நீ மருளாதே. சுவர்க்கத்தைவிட நல்ல இடம் எதுவுமில்லை. அதில் ஆதம் அலைகிஸ்ஸலா மவர்களுக்கு என்ன சம்பவித்தது? யோசித்துப்பார். அதிகமாக இபாதத்து செய்கிறதென்றுமருளாதே. இபுலீசு அநேகமாயிரம் வருஷம் இபாதத்து செய்தான் (என்னகதியானான்?; மிகுந்த இல்மைக் கற்றிருக்கிறதென்று மருளாதே. பல்ஆமுபுனுபாகூர்

இல்மினால் அல்லாகு தஆலாவுடைய (இஸ்முல்அஃலம் என்னும்) வலுப்பமான திருநாமத்தைத் தெரிந்துகொள்ளுகிற அவ்வளவு பெரும் பதவியைப் பெற்றிருந்தான். அவன் விஷயத்தில் அடியில் காணும் ஆயத்து வந்திருக்கிறது. அதாவது:—அவனுக்கு உபமானம் ஓர் நாய்க்குச் சமானமாம். அந்த நாயின்மேல் நீ சுமை ஏற்றினாலும் இளைக்கும் சும்மாவிட்டாலும் இளைக்கும்" என்பதே. இன்னும் நல்லோர்களைத் தெரிசித்திருக்கிறாய் என்று மருளாதே. ரஸூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களுடைய பந்துக்கள் அநேகமாய் அவர்களைக் கண்டுகொண்டும் அவர்களுடன் சகவாசித்துக்கொண்டுமிருந்தார்கள். அப்படியிருந்தும் அவர்கள் இஸ்லாமாகவில்லை. அதா சல்மீ றஹிமஹுல்லா அவர்கள் அச்சமுள்ள பேர்களில் ஒருவராயிருந்தார்கள். நாற்பதுவருஷம் அவர்கள் சிரித்ததேயில்லை. வானத்தை அண்ணாந்து பார்த்ததுமில்லை. ஒருதரம் வானத்தைப் பார்த்துப் பயத்தினால் கீழே விழுந்துவிட்டார்கள். தங்கள் ரூபம் மாற்றப்பட்டதோ என்னவோ என்று ஒவ்வொரு இரவிலும் பன்முறை தங்களைத் தடவிப் பார்த்துக்கொள்ளுவார்கள். ஜனங்களுக்கு யாதொரு பஞ்சமாவது பலாயாவதுவந்தால் இவை எல்லாம் என் தோஷத்தன்மையால் உண்டாகின்றன என்றும் நான்செத்தால் ஜனங்கள் இவற்றினின்றும் மீட்சிபெறுவார்கள் என்றும் சொல்லுவார்கள். ஸரிய்யுஸ்ஸகத்தி றஹிமஹுல்லா அவர்கள் என் முகம் கறுத்துப்போயிருக்குமென்று நினைத்து நான் தினந்தோறும் என் மூக்கைப் பார்த்துக்கொள்ளுகிறேன் என்று சொல்லுகிறார்கள். அஹமது ஹம்பல் றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது: அச்சத்தில்நின்றும் என்மீது ஒரு வாசலைத் திறக்கும்படி அல்லாகு தஆலாவினிடம் நான் துஆ கேட்டேன். துஆ கபூலாகி எனக்கு எவ்வளவு அச்சமுண்டாயிற்றென்றால் அதனால் என் புத்தி யொழிந்துபோம் என்று நான் பயந்து "என் ஆண்டவனே! என் சக்திக்குத் தகுந்த அளவாக எனக்கு அச்சத்தைக் கொடு" என்று கேட்டேன். பின்பு என் மனநடுக்கம் நின்றது" என்பதே. ஆபிதுகளில் ஒருவரை அழுதுகொண்டிருக்கக் கண்டு "நீர் ஏன் அழுகிறீர்?" என்று கேட்கப்பட்டது. அதற்கவர் சொன்னதாவது:—"ஜனங்களுக்கு அவரவருடைய கிரியைகளின்படி பலனளிக்கப்போகிறோம்" என்று கியாமத்தில் கூவிச்சொல்லுகிற அந்த வேதத்தைப்பயந்து அழுகிறேன்" என்பதே. ஒருவர் ஹசன்பசரீ றஹிமஹுல்லா அவர்களை "நீர் என்ன நிலைமையிலிருக்கிறீர்?" என்றுவினவினார். அதற்கவர்கள் கடல்

யாத்திரை செய்பவர்களின் கப்பல் உடைந்து அவரவரும் ஒவ்வோர் பலகையில் மிதந்துகொண்டிருந்தால் அவர்களுடைய நிலைமை எப்படியிருக்கும்?” என்று அவரைக் கேட்டார்கள். அதற்கவர் “மிகவும் கஷ்டமாயிருக்கும்” என்றார். அப்போதவர்கள் “என்னுடைய நிலைமையும் அப்படித்தான் இருக்கிறது” என்று சொன்னார்கள். இன்னுமிந்த ஹசன்பசரீ றஹிமஹுல்லா அவர்கள் ஒருமுறை “ஆயிரம் வருஷத்துக்குப் பிறகு ஒருமனிதன் நரகத்திலிருந்து விடுவிக்கப்படுவான்” என்று வந்திருக்கிற ஹதீஸைச் சொல்லி, “ஆ நான் அவனாவது இருக்கவேண்டுமே” என்றுசொன்னார்கள். இப்படிச்சொன்னதற்குக் காரணம் யாதெனில் முடிவின் கேட்டைப்பற்றிய அச்சத்தினால் அவர்கள் நித்தியநரகத்துக்குப் பயந்துகொண்டிருந்தார்கள்” என்பதேயாம்.

உமருபுனு அப்தில் அஸீஸ் என்னும் கலீபாசருக்கு ஓர் அடிமைப்பெண் இருந்தாள். அவள் ஒருநாள் நித்திரையினின்றெழுந்து “யா அமீரல் மூமினீன்! நான் அதிசயமான ஓர்சொப்பனங்கண்டேன்” என்றாள். அவர்கள் “அதென்ன? சீக்கிரம்சொல்” என்றார்கள். அப்போதவள் “நான் நரகத்தைக்கண்டேன். மலக்குகள் அதைஎரித்துக்கொண்டிருக்கிறார்கள். சிராத்து என்னும் பாலம் அதன்மேல் நீட்டிப்போடப்பட்டிருக்கிறது. மலக்குகள் கலீபாசர்களைக் கொண்டுவந்தார்கள். முதல்முதல் அப்துல்மலிகிபுனுமர்வானைக் கொண்டுவந்து ‘பாலத்தின்மேல் கடந்துபோ” என்றுசொல்ல அவர் நடந்து கொஞ்சதூரமும் போகாமல் நரகத்தில் விழுந்துவிடக் கண்டேன்” என்றாள். அப்போதவர்கள் “இன்னுமென்னகண்டாய் சீக்கிரம்சொல்” என்றார்கள். அவள் “பின்பு அப்துல்மலிக்குடைய மகனான வலீதைக் கொண்டுவந்தார்கள். அவரும் அப்படியே நரகத்தில் விழுந்துவிட்டார்” என்க, அவர்கள் “இன்னுமென்னகண்டாய்? சீக்கிரம்சொல்” என்றார்கள். “பின்பு அப்துல்மலிக்குடையமகனான சுலைமானைக்கொண்டுவந்தார்கள். அவரும் அப்படியே விழுந்துவிட்டார்” என்க, அவர்கள் ‘‘இன்னுமென்னகண்டாய்? சீக்கிரம் சொல்” என்றார்கள். அப்போதவள் “யா அமீரல் மூமினீன்! பிறகு தங்களைக்கொண்டுவந்தார்கள்” என்றுசொன்னாள். இதைக்கேட்ட அந்தக்ஷணமே அவர்கள் அலறி ஓர் சப்தமிட்டு உணர்வுமாறிக் கீழேவிழுந்தார்கள். அப்போதந்த அடிமைப்பெண் கூக்குரலிட்டு “(ஓ எங்கள் அரசே!) அல்லாவின் மீது ஆணையாகத் தங்களை அந்தப்பாலத்தினின்றும் சலாமத்துடன் கடந்துபோகக்கண்டேன்” என்று இரைந்திரைந்துசொல்லிக்கொண்

டிருந்தாள். அவளப்படியே கூவிக்கொண்டிருக்க அவர்கள் கீழே கிடந்து கைகால்களை மோதிக்கொண்டிருந்தார்கள். ஹசன்பசரீ றஹிமஹுல்லா அவர்கள் அநேக வருஷகாலம் சிரிப்பே இல்லாதிருந்தார்கள். கழுத்தைவெட்டும்படி கொண்டுவரப்பட்டிருக்கிற ஒருகுற்றவாளி எப்படியோ அப்படியாகத் திகில்கொண்டிருக்க ஜனங்கள் அவர்களைப்பார்ப்பார்கள். "தாங்கள் இவ்வளவு இபாதத்தையும் தெண்டிப்பையும் உடையவர்களாயிருந்தும் ஏன் இப்படித் திகில்கொண்டிருக்கிறீர்கள்?" என்று ஜனங்கள் கேட்டால், "அல்லாகுதஆலா என்னிடத்தில் யாதொரு செய்கையைக்கண்டு அதனால் அவன் என்மேல் கோபங்கொண்டு நீ உன் இஷ்டப்படி நடந்துகொள். நான் உனக்கு றஹ்மத்து செய்யமாட்டேன் என்று சொல்லுவான் எனப் பயந்துகொண்டிருக்கிறேன். இதற்கு நான் அச்சந்தீரவில்லை" என்று சொல்லுவார்கள். இவைபோன்ற ஹிகாயத்துகள் இன்னும் அநந்தமிருக்கின்றன. இப்போது நோட்டமிட்டுப்பார். இவர்கள் ஏன் இப்படிப் பயந்துகொண்டிருந்தார்கள்? நீ ஏன் பயப்படாமலிருக்கிறாய்? அவர்களுக்குப் பாவம் அதிகமாயிருந்ததினாலும் உனக்கு அப்படியில்லாததினாலுமா? அல்லது அவர்களுக்கு அறிவு மேலிட்டிருந்ததினாலும் உனக்கு அப்படியில்லாததினாலுமா? உண்மையில் நீ மிகுந்தபாவங்களை உடையவனாயிருப்பதுடன் மடமையினாலும் மறதியினாலும் அச்சந்தீர்ந்திருக்கிறாய். அவர்களோ அநந்தம் இபாதத்துகளை உடையவர்களாயிருப்பதுடன் அறிவினாலும் அகப்பார்வையினாலும் அச்சங்கொண்டவர்களாயிருந்தார்கள்.

பசல்: அச்சம், ஆதரவு இவை ஒவ்வொன்றின் வரிசையில் ஹதீசுகள் அநேகமாய் வந்திருக்கின்றனவே, இவ்விரண்டில் எது அதிக மேம்பாடுள்ளது? எது அதிகமாயிருக்கவேண்டும்? என்று யாராவது கேட்கக்கூடும். அறிந்துகொள்:—அச்சமும் ஆதரவும் இவ்விரண்டும் இரண்டு அமிழ்தங்களாயிருக்கின்றன. அமிழ்தத்துக்குப் பிரயோசனம் சொல்வதேயொழிய மேம்பாடு சொல்வதில்லை. ஏனெனில் நாம் முற்கூறியதுபோல் அச்சமும் ஆதரவும் (பூரணத்தன்மையுள்ளவையல்ல) குறைதன்மையுள்ள குணங்களாயிருக்கின்றன. மனிதனுடைய பூரணத்தன்மை எது என்றால் அவன் அல்லாகுதஆலாவுடைய மஹப்பத்தில் அமிழ்ந்துவிடுவதும் அவனை ஞாபித்தல் எனனும் திக்ரானது இவனை முழுதாக அவன் பாக்கில் ஆக்கிக்கொள்வதும் முடிவைப்பற்றியும் முதலைப் பற்றியும் இவனுக்கு ஒரு நினைவும் வராமலிருப்பதும் நோக்கத்தை

எதிர்பார்ப்பதும் நேரத்தையும் எதிர்பார்க்காமல் நேரத்தின் நாய கனையே பார்த்துக்கொண்டிருப்பதுமேயாம். ஏனெனில் அச்சத் திலும் ஆதரவிலும் பார்க்காயிருப்பானேயில் இந்தப்பார்க்கு தூர் திரையாகும். என்கிலும் இவ்வித பூரணத்தன்மையான நிலைமை யுண்டாவது அருமைபோலாம். ஆகவே ஒருவிளைருவன் மவுத்து டைய நேரத்துக்கு நெருங்கிவிட்டாலோ அவனுக்கு ஆதரவு அதிக மாயிருக்கவேண்டும். இது மஹப்பத்தை அதிகப்படுத்தும். இவ் வுலகத்திலிருந்து அவ்வுலகத்துக்குப் போகிறவன் அல்லாகு தஆலா வின் மஹப்பத்துள்ளவனு யிருக்கவேண்டும். அப்படி யிருந்தால் அவனைத் தெரிசிப்பது இவனுக்கு நன்மையுமாயிருக்கும். ஏனெனில், இவன் ஆசைகொண்ட வஸ்துவைத் தெரிசிப்பதில் இவனுக்கு இன்ப மிருப்பதினுலெனின், ஆனல் மவுத்துடைய நேரமல்லாத இதர நேரங்களில் எது அதிகப்படவேண்டுமென்றால், மனிதன் பத்தியான னாயிருக்கிறபடியும் அவனுக்கு அச்சம் அதிகமாயிருக்கவேண்டும். ஆத ரவு அதிகப்படுவதானது அவனைக்கெடுத்துவிடுகிறதாகும். பொறுதலு ள்ளவனும் மறுதலங்களால் இருந்தமட்டுக்கவனாயிருக்கிறபக்ஷம் அச்சமும் ஆதரவும் இரண்டும் சிதமாயும் சரியாயும் இருக்கவேண் டும். இபாதத்து செய்கிற நேரத்தில் ஆதரவு மிகுத்திருக்கவேண் டும். ஏனெனில் இபாதத்தில் மஹப்பத்தினுல் மனத்தெளிவு உண் டாகும். மஹப்பத்துண்டாவதற்கு ஆதரவு காரணமாகும். பாவத் துடைய நேரத்தில் அச்சம் மிகுத்திருக்கவேண்டும். முபாஹான காரியங்களை வழக்கமாகச் செய்கிறவனுக்கு அந்த நேரத்தில் அச்சம் மிகுத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் பாவத்தில் விழுவான். ஆக வே இதுவோர் அவிழ்தமாயிருக்கிறது. இதன் பிரயோசனம் அவ ரவருடைய நிலைமைகளுக்குத் தக்கபடி மாறும். ஆதலால் எல்லாவற் றிற்கும் பொதுப்படையாகச் சொல்வதற்கு ஓர் ஜவாபு கிடையாது. வல்லாஹு அஃலமு பிஸ்ஸவாப்.

### நான்காவது அஸ்லு-பக்ரு, ஜுஹ்து என்னும் எழிமை தேண்டிப்பு இவைகளின் பயான்.

அறிந்துகொள்:—இஸ்லாமுடைய உன்வான்களில் நாம் கூறி யிருப்பதுபோல் உன்று நபுசும், அல்லாகு தஆலாவும், துனியாவும், ஆகிரத்தும் ஆகிய இந்நான்கு மூலங்களின் திரட்சியே நேர்வழி யான சக்கரத்துக்கு அச்சாயிருக்கிறது. இதனாலே இரண்டை அடையவேண்டியதிருக்கும் இரண்டை விட்டுவிடவேண்டும். அதா வது:—அல்லாகு தஆலாவை அடைவதற்காகத் தன் நபுசையும் ஆகி

ரத்தைத் அடைவதற்காகத் துன்யாவையும் விட்டுவிடவேண்டும். ஆகவே நீ துன்யாவை விட்டு அல்லாகுதஆலாவின் பக்கம் முகம் நோக்கவேண்டியவனாயும் துன்யாவின் பாக்கை விட்டு ஆகிரத்தின் பக்கம் திரும்பவேண்டியவனாயுமிருக்கிறாய். அச்சம், சபுறு, தவுபா இவையெல்லாம் இதற்குரிய அமல்களாயிருக்கின்றன. துன்யாவை ஆசிப்பது மனிதனை ஹலாக்காக்குகிற கெட்ட குணங்களில் ஒன்றாம். இதற்கு நாம் பரிகாரமும் சொன்னோம். துன்யாவை வெறுப்பதும் அதன் பற்றை அறுப்பதும் அவனை நற்பதவியில் சேர்க்கின்ற நல்ல குணங்களாம். இப்போது நாம் இதன் வியாக்கியானத்தைக் கூறுவோம். இதுதான். பக்றும் ஜுஹ்துமென்பது ஆதலால் நீ முதலில் இதன் ஹகீகத்தையும் மேம்பாட்டையும் அறியவேண்டும்.

### பக்று, ஜுஹ்து இவற்றின் ஹகீகத்தான பொருள்.

அறிந்துகொள்:—தனக்குத் தேவைப்படும் பொருள் தன் கைவசத்தில் இல்லாதவன் ஏழையென்னப்படுவான். முதலில் மனிதனுக்குத் தன் தோற்றமான இருப்பும் பிறகு தன் தரிப்பும் தேவையாயிருக்கிறது. அதன்பிறகு உணவும் பொருளும் இன்னும் அநேக வஸ்துக்களும் தேவைப்படுகின்றன. இவைகளில் ஒன்றேனும் அவன் கைவசத்தில் இல்லை. அவன் இவையெல்லாவற்றின் தேவையுள்ளவனாயிருக்கிறான். இனி, தானல்லாதவனிடத்தில் எதுவும் தேவைப்படாதவன் சீமான் என்னப்படுவான். இப்படித் தேவைப்படாமலிருப்பவன் அல்லாகுதஆலா ஒருவனேயன்றி வேறு யாருமில்லை. தோன்றியுள்ள ஜின்னுகள் ஷைத்தான்கள் மனிதர்கள் மலக்குகள் மிருகங்கள் எல்லாருக்குமிருக்கிற இருப்பும் தரிப்பும் இவர்களின் சுயாதீனமல்ல. ஆதலால் எதார்த்தத்தில் எல்லாரும் ஏழைகளாயிருக்கிறார்கள். இதனாலேதான் அல்லாகுதஆலாவே சீமான், நீங்களெல்லாரும் ஏழைகள் என்று அல்லாகுதஆலா திருவுளமானான். ஏழை என்பதற்கு ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் பின்வருமாறு பொருள் விரித்தார்கள். அதாவது:— நான் என் செய்கைக்கு அடமானமாயிருக்கிறேன். காரியம் என்னல்லாதவன் வசத்திலிருக்கிறது. (என் செய்கையின் நிறைகோல் வேறொருவனிடத்தில் இருக்கிறது.) பின்பு என்னைவிட அதிக ஏழை (யார் இருக்கிறார் ?) எவருமில்லை என்பதே. இதுவுமன்றி அல்லாகுதஆலாவும் இதை விளக்கினான். அதெப்படியென்றால், சீமானாகிய உங்கள் நாயகன் கிருபையுள்ளவன். அவன் நாடினால் உங்களை அழித்துவிட்டுப் பிறகு அவன் நாடியபடி வேறு ஜனங்களை உண்டாக்குவான் என்று கூறுகின்றான். இப்படி எல்லாவற்றையும் அழிக்கவும் உண்டாக்கவும்

சக்தியுள்ளவன் எவனோ அவனே சீமான் என்பது இதன் கருத்து. ஆதலால் எல்லாச் சிருஷ்டியும் ஏழையேயாம். ஆனால் சூபியாக்களின் பரிபாஷையில் பகீர் (ஏழை) என்னும் பெயர் ஒரு மனிதனுக்குச் சொல்லப்படுகிறது. அவன் யாரென்றால், தான் ஒன்றுமில்லாதவனென்றும் இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் தன் இருப்பிலும் தரிப்பிலும் தனக்கு யாதொரு சுதந்திரமில்லை யென்றும் அறிந்து தன்னை இதே தகுணத்தில் காண்பவனும் தன்மீது இதே ஹால் அதிகப்பட்டவனுமிருப்பவனும். இனி, சில மூடர்கள், நீ ஒரு வணக்கமும் செய்யாமலிருக்கிறபக்ஷம் அப்போதுதான் நீ பகீராயிருப்பாய் என்றும், வணக்கஞ்செய்து அதன் சவாபை உனக்காக விட்டுவைப்பாயாகில் அது உனக்கொரு பொருளாயிருக்குமாதலால் அப்போது நீ பகீரல்ல என்றும் சொல்லுகிறார்களே; இதானது ஜந்தகத்து, இபாஹத்து என்னும் துன்மார்க்கத்துக்கு விதையாயிருக்கிறது. இந்த விதையை ஷைத்தான் அவர்களுடைய மனதில போட்டிருக்கிறான். தங்கள் புத்திக்கூர்மையைப்பற்றி மெச்சிப்பேசுகிற சில மூடர்களை ஷைத்தான் இப்படியே ஏமாற்றிவழிகெடுக்கின்றான். கெட்டபொருளை நல்ல சொல்லில் அமைத்துக்காட்டுகிறான். ஏமாளி அந்தச் சொல்லைக் கொண்டுமருண்டு இதுதான் புத்திக்கூர்மையென்று எண்ணிக்கொள்ளுகிறான். இது எப்படி இருக்கிறதென்றால், "அல்லாவை உடையவன் எல்லாவற்றையும் உடையவன்" என்றும், "அவன் பகீராவதற்கு அல்லாவை வெறுத்துவிடவேண்டும்" என்றும் ஒருவன் சொல்வதற்குச் சமானமாயிருக்கிறது. (உண்மை அப்படி யல்ல) மேலும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் சொன்னதுபோல் அல்லாவுக்கு வழிபடுகிறவனே பகீர் என்னப்படுவான். அவர்களோ வணக்கமும் என் சுயாதீனமல்ல என்றும், என் சுயசக்தியினால் ஆவதல்ல என்றும், என் தைவசக்தியிருப்பதால் என்றும் அதற்கு நான் அடாணமா யிருக்கிறேன் என்றும் சொல்லுகிறார்கள். மொத்தத்தில் பக்ரு (ஏழிமை) என்பதற்கு சூபியாக்கள் கருதியபொருளும் மனிதன் எல்லாவற்றிலும் தேவைப்படுவதென்னும் பக்ரின் பயானும் இங்குக் கருதப்படவில்லை. மேலும் பொருளில்லாமை என்னும் ஏழிமையை நாம் இங்கு விவரிப்போம். மனிதனுக்கு இருக்கிற நானாவிதம் ஹாஜத்துகளில் ஒவ்வொன்றும் ஏழிமையேயாம். அவற்றுள் பொருளின் ஹாஜத்தும் ஓர் ஏழிமையாம்.

பின்னர் அறிந்துகொள்:—இரண்டிலொரு காரணத்தால் பொருளில்லாமற்போம். அதாவது:—தன்னிச்சையாக அதை வேண்டாது

விட்டுவிடுவது, அல்லது அது கிடைக்காமலிருப்பதாம், வேண்டாது விட்டுவிடுவானாகில் அவனை ஜாஹித் (வெறுத்தவன்) என்பார்கள். அவனுக்குப் பொருளே கிடைக்காமலிருந்தால் அவனை பகீர் (ஏழை) என்று சொல்லுவார்கள். பகீருக்கு மூன்று நிலைமைகளுண்டு. முதலாவது:—அவனுக்குப் பொருளில்லாமற்போனாலும் தன்னால் ஆனமட்டும் அதைத் தேடுகிறவனாயிருப்பான். இவனை பகீருஹரீஸ் (ஆசைகொண்ட ஏழை) என்று சொல்லுவார்கள். இரண்டாவது:—தேடவுமாட்டான், கொடுத்தால் வாங்கவுமாட்டான், அதை வெறுத்தவனாயிருப்பான். இவனை ஜாஹிது (வெறுத்தவன்) என்று சொல்லுவார்கள். மூன்றாவது:—தேடவுமாட்டான், தள்ளவுமாட்டான், கொடுத்தால் வாங்கிக்கொள்வான், கொடாவிட்டாலும் சந்தோஷமாயிருப்பான். இவனை பகீருகானிஉ (உள்ளதைக்கொண்டு திருப்தியடையும் ஏழை) என்று சொல்லுவார்கள். நாம் முதலில் ஏழிமையின் மேம்பாட்டைச்சொல்லி அதன் பிறகு ஜுஹ்தின் பெருமையைக் கூறுவோம். இல்லாத ஏழை பொருளில் ஆவல்கொண்டவனாயிருந்தபோதிலும் பொருளில்லாமைக்கு ஓர் பெருமையிருக்கிறது.

## ஏழிமையின் மேம்பாடு.

அறிந்துகொள்:—அல்லாகு தஆலா ஏழிமையை ஹிஜ்ரத்தினும் முற்படுத்தி லில்புகராயில் முஹாஜிரீன் என்று கூறுகின்றான். (அதாவது:—புகரா என்ற பதத்தில் ஏழிமை என்பதை முற்படுத்தியும் முஹாஜிரீன் என்ற பதத்தில் ஹிஜ்ரத்து என்பதைப் பிற்படுத்தியும் கூறுகிறானென்பது) இன்னும் "அதிக குடும்பஸ்தனாயும் வணக்கமுள்ளவனாயுமிருக்கிற ஏழையை அல்லாகுதஆலா நேசிக்கிறான்" என்று ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னுமவர்கள் பிலால் றலியல்லாகு அன்குவுக்கு கலீஹத்தாக "ஓ! பிலாலே! நீர் இந்தத் துன்யாவைவிட்டுப் போகும்போது சீமானாயிராமல் ஏழையாயிருக்க முயற்சியும்" என்று அருளிச்செய்தார்கள். இன்னும் "என் உம்மத்திலேழையாயிருப்பவர்கள் சீமான்கள்சொர்க்கப்போக ஐந்நூறு வருஷத்துக்கு முன்னே சொர்க்கம்போய்ச் சேர்வார்கள்" என்று திருவுளமாயிருக்கிறார்கள். இன்னுமொரு ரிவாயத்தில் நாற்பது வருஷத்துக்கு முன்னே என்று வந்திருக்கிறது. ஆனால் இந்த ஹதீதில் பகீருஹரீஸ் என்னும் ஆவல்கொண்ட ஏழையையும் அந்தஹதீதில் பகீருகானிஉ என்னும் உள்ளதுபோதுமெனத் திருப்தியடையும் ஏழையையும் நாயகமவர்கள் கருதியிருப்பார்கள். இன்னும் "என்னுடைய உம்மத்தில் மிகவும் நல்லவர்கள் ஏழைகள்" என்

னும், "சுவர்க்கத்தில் துரிதமாகச்சுற்றி உலாத்துகிறவர்கள் இயலாத ஏழைகள்" என்றும்திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "எனக்குஇரண்டு தொழில்களிருக்கின்றன" என்றும், "எவனொருவன் அவ்விரண்டையும்நேசிக்கின்றானோ அவன் என்னைநேசித்தவனாவான்" என்றும், "எழிமையும் பீசபீல் யுத்தமுமான இவைகளே என்தொழில்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் ரிவாயத்து செய்யப்பட்டிருப்பதாவது:—"ஒருமுறை ஜிப்ராயில் அலைகிஸ்ஸலாமவர்கள்வந்து "ஓ முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே! உமக்கு அல்லாகுதஆலா சலாம் சொன்னதுமன்றி நீர் விரும்புகிறபக்ஷம் பூமியின்மீதுள்ள மலைகளைப் பொன்னாக்கி நீர் நாடியவிடத்துக்கு உம்முடன் வரச்செய்கிறேன் என்றும் சொல்லுகிறான்" என்று அறிவித்தார்கள். அப்போது நாயகமவர்கள் "ஓ ஜிப்ராயீலே! நான் அதை விரும்பவில்லை. ஏனெனில் துன்யாவானது வீடில்லார்க்கு வீடாயும் பொருளில்லார்க்குப் பொருளாயுமிருக்கிறது. அதில் பொருளைச் சேர்ப்பது புத்தியில்லாதவர்களின் வேலையாம்" என்று சொன்னார்கள். அப்போது ஜிப்ராயில் அலைகிஸ்ஸலாமவர்கள் "ஓ முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே! உறுதியான இந்தச் சொல்லில் உம்மை அல்லாகுதஆலா நிலைநிறுத்துவானாக" என்று சொன்னார்கள். இன்னும் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த ஒரு மனிதனிடமாக ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் போகையில் (அந்த மனிதனைக்கூவி) "ஓ மனிதனே எழுந்து அல்லாகுதஆலாவை ஞாபகம் செய்" என்று சொன்னார்கள். அதற்கவன் "நீர் என்னை என்ன செய்யச்சொல்லுகிறீர்? நான் துன்யாவைத் துன்யாக்காரர்களுக்கு விட்டுப்போட்டிருக்கிறேனே" என்றான். அப்போதவர்கள் "அப்படியானால் தூங்கு தோழா! சுகமாகத் தூங்கு" என்றுசொன்னார்கள். இன்னும் ஓர் கம்பளியேயன்றி வேறெதுவுமில்லாமல் தலைமாட்டில் ஓர் செங்கல்லை வைத்துக்கொண்டு தரையிற்படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த ஒரு மனிதனிடமாக மூஸா அலைகிஸ்ஸலாமவர்கள் போகையில் "என் ஆண்டவனே! இந்தமனிதன் சேதமுற்றவனாயிருக்கிறான். இவனிடத்தில் ஏதுமில்லை" என்றுசொன்னார்கள். அப்போது "ஓ மூசாவே! நான் யாரை என் முழுப்பிரியத்தோடு எதிர்சென்றழைக்கிறேனோ அவனிடத்திலிருந்து துன்யாவை முழுதாகத் தூரப்படுத்துகிறேன் என்பது உமக்குத் தெரியாதா?" என்று ஒஹி வந்தது.

அபூராபிகுறலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:- "ஒருநாள் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் வீட்டுக்கு ஓர்

விருந்தாளி வந்தார். அப்போதவர்களிடம் உணவுக்கு ஒன்றுமில்லாமையால் இன்ன எஹூதியினிடம் போய்க் கடனாகக் கொஞ்சம் மாவு கொடுக்கும்படிக்கும் றஜபுமாதம் முதலில் கடனைக்கொடுத்துவிடுவதாகவும் சொல்" என்று என்னை அனுப்பினார்கள். நான் போய் அப்படியே கேட்க, அந்த எஹூதி லாவல்லாஹி என்று ஆணையிட்டு "ஏதாவது ஈடுவைத்தாலேயொழிய நான் கொடுக்கமாட்டேன்" என்றான். நான் திரும்பிவந்து இதை றசூல்சல்லல்லாகு அலைவசல்லமவர்களுக்கு அறிவித்தேன். அப்போதவர்கள் அல்லாவின் மீதாணையிட்டு "நான் வானத்திலும் நம்பிக்கையுள்ள அமீனாயிருக்கிறேன். பூமியிலும் நம்பிக்கையுள்ள அமீனாயிருக்கிறேன். அவன் கொடுக்கிற பக்ஷத்தில் அந்தக் கடனை இறுத்தே தீர்ப்பேன். இப்போது நீ என்னுடைய இந்தப் போர்க்கவசத்தைக் கொண்டுபோய் ஈடாகவை" என்று சொன்னார்கள். நான் அதைக்கொண்டுபோய் அவனிடம் ஈடுவைத்தேன். அப்போதவர்களுடைய மனம் திருப்தியடையும்பொருட்டு வலாதமுத்தன்ன ஐனைக்க என்ற ஆயத்து முடிவுவரையில் இறங்கினது. அதன் கருத்து: நீர் துன்யாவையும் துன்யாக்காரரையும் ஏறெடுத்துப் பார்க்காமலிருக்கக்கடவீர். இவையெல்லாம் அவர்களுக்குச் சோதிப்பான பித்னாவாயிருக்கிறது. உமக்காக அல்லாவினிடம் இருப்பது மிக நல்லதும் நீளநிலைப்பதுமாம்" என்பதே. இன்னும் "ஓ மூசாவே! உமக்கு எழிமை வரத்தொடங்கினால் மர்ஹபன் பிஷிஆரிஸ்ஸாலிஹீன் (நல்லோர்களை அடுத்திருக்கிற எழிமையே உனக்குச் சோபனம்) எனச்சொல்லுவீராக" என்று மூஸா அலைகிஸ்ஸலாமவர்களுக்கு ஒஹீ வந்ததாகக் கஃபுல் அஹ்பார் றழியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "சுவர்க்கம் எனக்குக்காட்டப்பட்டது, அதில் ஏழைகளே அதிகமாயிருந்தார்கள்" என்றும், "நரகமும் எனக்குக்காட்டப்பட்டது, அதில் சீமான்களே அதிகமாயிருந்தார்கள்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் நான் சுவர்க்கத்தில் ஸ்திரீகளைக் கொஞ்சமாகக் கண்டு "மற்றவரெங்கே இருக்கிறார்கள்? எனக் கேட்டேன்" என்றும், "பொன்னும் * பூவுமான இரண்டு சிவப்புகள் அவர்களைப் பராக்கிலாக்கின என்று சொன்னார்கள்" என்றும் திருவுளமானார்கள். அதாவது பொன்னாபரணமும் பூச்சாயப்புடவையும் அவர்களைச் சிறையிலாக்கிவிட்டது என்பதே.

இன்னும் ரிவாயத்து செய்யப்பட்டிருப்பதாவது:—ஒரு நபி அலைகிஸ்ஸலாமவர்கள் ஓர் கடற்கரை ஓரமாகப் போகையில் அங்கு

---

* பூ என்பதைக் குங்குமப்பூ எனக் கொள்க.

ஒரு வலைக்காரன் அல்லாவுடைய பேரைச்சொல்லி வலை வீசினதை யும் அதில் ஒன்றும் அகப்படாமற் போனதையும், மற்றொருவன் ஷைத்தானுடைய பேரைச்சொல்லி வலை வீசினதையும் அதில் மீன் கள் அதிகமாய் அகப்பட்டதையுங்கண்டு, "என் ஆண்டவனே! இவை யெல்லாம் உன் செயலென்பது எனக்குத் தெரியும். ஆயினும் இதற் குக் காரணம் யாதோ அறியேன்" என்று சொன்னார்கள். அப் போது அல்லாகு தஆலா மலக்குகளை அனுப்பிச்சுவர்க்கநரகங்களில் அவ்விருவருடைய தானங்களை அந்த நபி அலைஹிஸ்ஸலா மவர்களுக் குக் காட்டும்படி உத்திரவு செய்தான். அப்படியே அவர்கள் காட்ட அந்த நபியவர்கள் பார்த்தபோது "என் ஆண்டவனே! நான் சமா தானத்தை அடைந்தேன்" என்று அறிக்கையிட்டார்கள். இன்னும் "நபிமார்களெல்லாரினும் கடைசியாகச் சொர்க்கம் போகிறவர் தாவூ துடையமகன் சுலைமான்" என்றும், "என் அஸ்ஹாபுகளில் கடைசியா கச் சொர்க்கம் போகிறவர் அவுபுடையமகன் அப்துர்ரஹ்மான்" என் றும், "இதற்குக் காரணம் அவர்களுடைய சீமான்தனம்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்கள் திருவுளமாயிருக்கிறார் கள். இன்னும் "சீமான்மிகவுங்கஷ்டப்பட்டுச் சொர்க்கம்போவான்" என்று ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன் னும் அல்லாகுதஆலா ஒரு அடியானை நேசிப்பானாகில் அவனைப் பற் பல துன்பங்களில் சிக்கச்செய்வான்" என்றும், "நேசம் மிகப்பூர்த்தி யாயும் அதிக பெரிதாயு மிருந்தால் அவனை இபுத்தினா செய்வான்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்கள் திருவுளமானார் கள். அப்போது அஸ்ஹாபுகள் "யாறசூலல்லா! இபுத்தினா ஆவது என்ன?" என்று கேட்டதற்கு "அவனுக்குப் பொருளையும் பெண்ஜாதி பிள்ளைகளையும் விடாமல் எல்லாவற்றையும் நாசஞ்செய்வதே இபுத் தினா" என்று விடை பகர்ந்தார்கள். இன்னும் மூஸா அலைகிஸ்ஸலா மவர்கள் "என் ஆண்டவனே! மனிதர்களில் உன்நேசர்கள்யார்? நான் அவர்களை நேசிப்பேன்" என்று கேட்டார்கள். அதற்கு அல்லாகு தஆலா எவர் ஏழையினும் ஏழையோ அவர்கள்" என்று அருளிச் செய்தான். இதன் கருத்து ஏழிமைத்தனத்தில் பூர்த்தியடைந்த வர் என்பதாம். இன்னும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்கள் திருவுளமா யிருப்பதாவது:—"கியாமத்தில் ஏழை மனிதனைக்கொ ண்டுவருவார்கள். ஜனங்கள் ஒருவருக்கொருவர் சமாதானம் சொல் லிக்கொள்வதுபோல் அல்லாகு தஆலா அந்த ஏழைக்குச் சமாதா னம் சொல்வான். "ஓ என் அடியானே! உனக்கு நான் துன்யாவைக்

கொடாமலிருந்தது உன்னைச் சிறுமைப்படுத்துவதற்கல்ல. மேலு
இன்று என்றால் அளிக்கப்படும் பரிவட்டங்களையும் சங்கை மரி
தைகளையும் நீ அடைவதற்கே அப்படிச் செய்தேன். இப்போது
இதோ அணியணியாக நிற்கின்ற ஜனங்களின் நடுவேபோய் என
நிமித்தம் யார் உனக்கு ஒருவேளைச்சோறாவது துணியாவதுகொடு
திருக்கிறானோ அவனைத் துன்யாவில் உனக்கு உதவச் செய்
தலால் இப்போது நீ அவனுக்கு உதவிசெய்" என்றுசொல்லுவா
அந்நாளில் ஜனங்கள் வெயர்வையில் அமிழ்ந்துபோயிருப்பார்க
அவன் அந்த ஜனங்களில் நுழைந்து தனக்கு உபகாரம் செய்திரு
பவனைக் கைப்பிடித்துக்கரையேற்றுவான்" என்பதே. இன்னும் "நீ
ங்கள் ஏழைகளோடுசிநேகம்பண்ணுங்கள்" என்றும், "அவர்களுக்கு
செல்வம் வழியில் கிடக்கிறது" என்றும் றசூல் சல்லல்லாகு அலை
வசல்லமவர்கள் திருவுளமானார்கள். அப்போது அஸ்ஹாபுகள் "யா
சூலல்லா! வழியிற் கிடக்கும் செல்வமாவது என்ன?" என்றுகேட்
தற்கு, "கியாமத்தில் அவர்களை நோக்கி உங்களுக்கு எவர்கள் ஒ
துண்டு ரொட்டியாவது ஒருமிடர் தண்ணீராவது ஒரு கந்தை
துணியாவது கொடுத்திருக்கிறார்களோ அவர்களின் கையைப் பிடி
துச் சொர்க்கத்துக்கு அழைத்துக்கொண்டுபோங்கள்" என்று சொ
லப்படும்" (இதுவே வழியிற் கிடக்கும் செல்வம்) என்று அருளி
செய்தார்கள்.

அலிறலியல்லாகு அன்கு அவர்கள் ரிவாயத்து செய்வதாவது
"எப்போது ஜனங்கள் துன்யாவைச் சேர்க்கவும் அதைச் செழிப்பி
கவும் ஏழிய ஜனங்களைப் பகைத்து வெறுக்கவும் தலைப்படுகி
களோ அப்போது அல்லாகுதஆலா அவர்களை நான்கு துன்பங்களி
சிக்கச்செய்வான்" என்றும், "அந்தத் துன்பங்களில்ஒன்று: காலக்க
பும், மற்றொன்று: அரசர்களின்கொடுமையும், மற்றொன்று: காழிகளி
மோசமும், மற்றொன்று: காபிர்களாலும் பகைவர்களாலும் கஷ்டமு
பலாட்டியமுமாம்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல ம
கள் திருவுளமானார்கள்" என்பதே. இன்னும் 'ஒருவன் ஏழையாயி
க்கிறநிமித்தம் அவனை இழிவாக்குகிறவனும் 'ஒருவன் சீமானாயி
கிறநிமித்தம் அவனைச் சிறப்பாக்குகிறவனும் லஃனத்து பெற
வன்" என்று இபுனு அப்பாஸ் றலியல்லாகு அன்குமா அவர்க
சொல்லுகிறார்கள். இன்னும் "சீமான்கள் சுபுயானுசவுரீ றஹ்மத்து
லாஹி அலைஹிபவர்களுடைய சபையில் சிறுமையடைவதுபோ
வேறு எந்தச் சபையிலும் அவர்கள் அவ்வளவு சிறுமை யடை

தில்லை" என்றும், "அவர்கள் சீமான்களை முதலில் உள்ளே விடுவதில்லை" என்றும், "எல்லாரினும் கடைசியான வரிசையில் சீமான்களிருப்பார்கள்" என்றும், "ஏழைகளைத் தங்களருகே உட்காரவைப்பார்கள்" என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் லுக்மான் அவர்கள் தங்கள் மகனுக்கு நஸீஹத்தாக, "மகனே! நீ அறிந்துகொள்:—ஒருவன் பழைய உடைதரித்திருப்பானாகில் அவனை நீ இழிவுபடுத்தாதே. ஏனெனில் நீ எந்த ஆண்டவனுக்கு அடிமையோ அந்த ஆண்டவனுக்கே அவனும் அடிமையா யிருக்கிறான்" என்று சொன்னார்கள். இன்னும் "ஏழைமனிதன் எழிமைக்குப் பயப்படுவது போல் நரகத்துக்குப் பயப்படுவானாகில் அவ்விரண்டையும் விட்டு அச்சந்தீருவான்" என்றும், "சீமான்தனத்தைத் தேடுவதுபோல் சுவர்க்கத்தைத் தேடுவானாகில் அவ்விரண்டையும் அடைவான்" என்றும், "வெளியரங்கத்தில் ஜனங்களுக்குப் பயப்படுவதுபோல அந்தரங்கத்தில் அல்லாவுக்குப் பயப்படுவானாகில் ஈருலகத்திலும் அதிஷ்டசாலியா யிருப்பான்" என்றும் யஹ்யபுனு மஆது றழியல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். ஒருவன் பதினாயிரம் திருஹங்கள் என்னும் வெள்ளிக் காசுகளைக் கொண்டுவந்து இபுராஹீமுபுனு அதுஹம் றழியல்லா அவர்களுக்குக் கொடுக்கப்போனான். அவர்கள் அதை வாங்கவில்லை. அவன் மிகவும் கெஞ்சினான். அப்போதவர்கள் "இவ்வளவு திரவியத்தால் நான் என் பெயரை பகீருகளின் நப்தரிலிருந்து அழித்துவிடுவேன் என்று பார்க்கிறாய்? ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டேன்" என்று சொன்னார்கள். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஆயிஷா றழியல்லாகு அன்ஹா அவர்களை நோக்கி "யா ஆயிஷா! நாளை கியாமத்தில் நீ என்னைக் கண்டுகொள்ள விரும்புவாயாகில் ஏழைகளைப்போல் ஜீவனஞ்செய். சீமான்களிடம் உட்காருவதைவிட்டும் தூரமாகு. ஒட்டுப்போட்டுத்தைக்காதிருக்கிறவரையில் ஒரு சட்டையையும் உடம்பிலிருந்து அப்புறப்படுத்தாதே" என்று அருளிச்செய்தார்கள்.

### பகீருகானிஉ அதாவது உள்ளது போதுமெனத் திருப்தியடையும் ஏழையின் மேம்பாடு.

அறிந்துகொள்:—"ஒரு மனிதனுக்கு இஸ்லாமை மார்க்கமாகக் காட்டப்பட்டும் அவசியத்தின் அளவாகப் பொருளைக் கொடுக்கப்பட்டுமிருந்து அவன் அது போதுமெனச் சந்தோஷமாகப் பொருந்திக்கொள்வானாகில் அவனே அதிஷ்டசாலி" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும்

"ஓ பகீருகளே! நீங்கள் எழிமையின் சவாபை அடையும்பொருட்டு உங்கள் மனதில் சந்தோஷமாக எழிமையைப் பொருந்திக்கொள்ளுங்கள்" என்றும், "இல்லாவிட்டால் சவாபை அடையமாட்டீர்கள்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இது பகீருஹரீசு என்னும் ஆவல் கொண்ட ஏழைக்கு சவாபு இல்லை என்பதின் இஷாராவாயிருக்கிறது. என்கினும் வேறு ஹதீசுகளில் அவனுக்கும் சவாபு உண்டென்று ஸ்பஷ்டமாக வந்திருக்கிறது. இன்னும் "ஒவ்வொரு வஸ்துவுக்கும் திறவுகோல் உண்டு" என்றும், "சபுருள்ள பகீருகளை நேசிப்பது சுவர்க்கத்துக்குத் திறவுகோல்" என்றும், "அந்த பகீருகள் நாளை கியாமத்தில் அல்லாகு தஆலாவுடைய சமுகத்தில் உட்காருகிறவர்களாயிருக்கிறார்கள்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "எந்த ஏழை தன்னிடத்திலிருப்பது போதுமெனத் திருப்தியடைந்தவனும் தனக்கு அளித்திருக்கும் இரணத்தில் அல்லாகு தஆலாவின் மீது சந்தோஷமுள்ளவனுமாயிருக்கிறானோ அந்த ஏழை அல்லாவுக்கு அதிக உவப்பான அடியான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "நாளை கியாமத்தில் எந்த ஏழையும் சீமானும் ஆ! நாம் துன்யாவில் ஊணுக்குமேல் ஒன்றையும் அடையாமல்தானிருந்தோமா என்று ஆசிக்காமலிருப்பதில்லை" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "அல்லாகுதஆலா இஸ்மாயீல் அலைகிஸ்ஸலாமவர்களுக்கு ஒஹியினால் "ஓ இஸ்மாயீலே! என்னை மனமுடைந்தவர்களிடத்தில் தேடும்" என்று அறிவித்தான். "அவர்கள் யார்"? என்று இஸ்மாயீல் அலைகிஸ்ஸலாம் கேட்டதற்கு "உண்மையுள்ள பகீருகள்" என்று அருளிச்செய்தான். இன்னும் "அல்லாகு தஆலா நாளை கியாமத்தில் "ஓ மலக்குகளே! ஜனங்களில் என்னிடம் சிறந்தவர்களும் என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்களும் எங்கே இருக்கிறார்கள்?" எனக் கேட்பான்" என்றும், மலக்குகள் "அவர்கள் யார்?" எனக் கேட்பார்கள் என்றும், அதற்கு அல்லாகு தஆலா "நான் கொடுத்ததைச் சந்தோஷத்துடன் பொருந்திக்கொண்ட முஸ்லிமான ஏழைகள்" எனச்சொல்லி, "அவர்களைச் சொர்க்கத்துக்குக் கொண்டுபோங்கள்" எனக் கூறுவான் என்றும், "ஜனங்கள் இன்னும் கணக்கு ஒப்பித்துக்கொண்டிருக்க அந்த ஏழைகள் சுவர்க்கத்துக்குப் போவார்கள்" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

இன்னும் "துன்யா அதிகரிப்பதைப்பற்றிச் சந்தோஷப்படுகிறவனும் வயது எப்போதும் குறைந்து கொண்டிருப்பதைப்பற்றித் துக்கப்படாதவனுமாயிருக்கிற எந்த மனிதனும் புத்தியில் குறைந்த

வன் என்றும், "சுபுஹானல்லா! மேலும் மேலும் வயது குறைந்துகொண்டிருக்கத் துன்யா அதிகப்படுவதில் என்ன நன்மையிருக்கிறது?" என்றும், அபுத்தர்தா றழியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் "ஒருவர் ஆமிருப்னு அபீகேஸ் றஹிமஹுல்லா அவர்களிடமாகப் போனபோதில் அவர்கள் ரொட்டியும் கீரையும் வைத்துப்புசித்துக்கொண்டிருந்தார்கள். அதைக்கண்ட அவர், "ஓ ஆமிரே! துன்யாவிலின்றும் நீர் இதைத்தானா போதுமாக்கிக்கொண்டீர்?" என்றுகேட்டார். அப்போதவர்கள் "இதினும் மிகக்கெட்டதும் அதிக அற்பமுமான ஓர் வஸ்துவைப் போதுமாக்கிக்கொண்ட ஓர் மனிதனை நான் அறிந்திருக்கிறேன்" என்றார்கள். "அவன் யார்?" என்று அவர் கேட்டதற்கு "ஆகிரத்தைத்தீர்த்துத் துன்யாவைவாங்குகிறவன் எவனோ அவன் இதினும் மிக அற்பமானதைப் போதுமாக்கிக் கொண்டவனாயிருப்பான்" என்றார்கள். ஒருநாள் அபூதர் றழியல்லாகு அன்கு அவர்கள் ஒரிடத்தில் உட்கார்ந்து சில ஜனங்களுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போதவர்களுடைய மனைவியர் அங்குவந்து "நீர் இங்கு உட்கார்ந்துகொண்டிருக்கிறீரே. அல்லாவின்றோ வீட்டில் ஒரு பண்டமுமில்லையே" என்றனர். அதற்கவர்கள் "ஓ பெண்ணே! நமக்கு எதிரே கஷ்டமான ஓர் கணவாயிருக்கிறது. சுமை குறைந்தவனேயன்றி மற்ற ஒருவனும் அந்தக் கணவாயைக் கடந்துபோக மாட்டான்" என்று சொன்னார்கள். இதைக்கேட்ட அந்த மங்கையர் சமாதானத்தை யடைந்து திரும்பிப்போயினர்.

பயன்: அறிந்துகொள்:—சபுரு செய்கிற ஏழையோ? அல்லது ஷுக்குருசெய்கிற சீமானோ? யார் அதிக வரிசையுள்ளவன்? என்பதில் உலமாக்கள் ஒருவர்க்கொருவர் விகற்பமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆயினும் ஷுக்குருசெய்கிற சீமானைவிட சபுருசெய்கிற ஏழையே அதிக வரிசையுள்ளவன் என்பதுதான் சரி. நாம் மேலே சொல்லிவந்திருக்கிற ஹதீஸ்கள் எல்லாம் இதற்கு அத்தாட்சியாயிருக்கிறது. என்றாலும் நீ இதன் மர்மத்தை அறிய நாடுவாயாகில், கேள். எந்த வஸ்து அல்லாகு தஆலாவை ஞாபிக்கவும் ஆசிக்கவும் விடாமல் மனிதனைத் தடுக்கின்றதோ அந்த வஸ்து உண்மையில் கெட்டது. ஒருவனுக்கு ஏழ்மைத்தனம் தடையாயிருக்கும். ஒருவனுக்குச் சீமான்தனம் தடையாயிருக்கும். இதன் விபரமாவது:—அவசியமான அளவுக்குப் பொருளிருப்பது அப்படி இல்லாமற்போவதைவிட மிக மேலாகும், ஏனெனில் இல்லாமை பொருள் துன்யாவைச் சொந்ததல்ல. ஆகிரத்தின் வழிக்குத் தக்கரிப்பாயிருக்கிறது. இத

னாலேதான் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் "என் ஆண்டவனே! நீ முகம்மதுடைய கிளையாருக்கு இரணத்தை அவசியத்தின் அளவாகக் கொடு" என்று துஆ கேட்டிருக்கிறார்கள். இனி எதுவொன்று அவசியமான அளவுக்கு மேற்பட்டிருக்கிறதோ அது இல்லாமற்போவதே மேல். ஆனால் இது எப்போது மேல் என்றால், ஆவல்கொள்வதிலும் உள்ளது போதுமென்று திருப்தியடைவதிலும், ஏழை, சீமான் இருவரும் சமமாயிருக்கும்போதுதான். ஏனெனில் ஆவல்கொண்ட பகீரும் சீமானும் இருவரும் பொருளில் மனதைச்செலுத்தி அதைச் சம்பாதிக்க முயல்கின்றார்கள். என்றாலும், (ஆவல்கொண்ட) ஏழையானவன் தனது வேலையின் கஷ்டத்தால் சோர்வடைகின்றான். அவன் ஒரு வருத்தத்தைக் காணும்போது துன்யா அவனுக்கு வெறுப்பாய்ப் போகிறது. ஏழினுக்குத் துன்யாவின் ஆசை எவ்வளவு குறைகின்றதோ அவ்வளவாக அல்லாவின் ஆசை அவனுக்கு அதிகரிக்கின்றது. துன்யா அவனுக்கு மறியற்சாலை போலாகி அதை அவன் வெறுத்திருக்கிறானாதலால் மவுத்துடைய நேரத்தில் அவ்வளவாக அவன் துன்யாவை நோக்கமாட்டான். (ஆவல்கொண்ட) சீமானோ துன்யாவிலிருந்தும் இன்பசுகங்களை அடைகிறவனும் அதனோடுமருவி வாழ்கிறவனுமாயிருப்பான். அவ்வித துன்யாவை விட்டுப்பிரிவதும் அவனுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கும். மவுத்துடைய நேரத்தில் இந்த இருவருடைய மனங்களுக்கு நடுவே வெகு வித்தியாசமிருக்கும். இப்படியே இபாதத்துடையவும் முனாஜாத்துடையவுமான நேரத்திலும் இவ்விருவருடைய மனங்கள் வெகு வித்தியாசப்பட்டிருக்கும். ஏனெனில் இபாதத்தில் ஏழை அடைகிற அந்த இன்பத்தைச் சீமான் ஒருபோதும் அடையமாட்டான். சீமானுடைய திக்ரானது நாவின் நுனியிலும் மனதுக்கு மேலாலுமிருக்கும். மனிதனுடைய மனமானது புண்படாமலும் துன்பத்தையடையாமலும் வருத்தமுறாமலும் துக்கங் கொள்ளாமலுமிருக்கிறவரையில் திக்ரின் இன்பம் அவனுடைய மனதுக்குள் இறங்காது. ஆவல் கொள்வதில் எப்படியோ அப்படியே உள்ளதுபோதுமென்று திருப்தி யடைவதிலும் ஏழை சீமான் இருவரும் சமமாயிருந்தால் அப்போதும் ஏழையே அதிக வரிசையுள்ளவன். இனி ஏழை ஆவல்கொண்டவனாயிருக்கிறான், சீமான் ஷுக்ரு செய்கிறவனாயும் உள்ளது போதுமென்த் திருப்தியடைகிறவனுமாயிருக்கிறான். அந்தப்பொருள் அவனிடத்திலிருந்து நீங்கிவிட்டால் அவன் அவ்வளவாக வருத்தங் கொள்ளாமல் முன்போலவே ஷுக்ரில் நிலைத்

திருக்கிறான். அந்த ஷுக்குரிலும் திருப்தியிலும் அவன் மனம் துன்யாவின் வாழ்க்கையிலும் சுகத்திலும்கிடந்து உழலாமல் தெளிவடைந்து சுத்தமா யிருக்கிறது. ஆவல்கொண்ட ஏழையின் மனம் ஆவலில் உழல்வதா யிருந்தபோதிலும் அவன் படுகிற கஷ்டம் துன்பம் துக்கம் இவைகளால் அவன் தன் மனதில் சுத்தத்தைக் காண்பானாகில் இந்த இருவரும் ஒருவருக்கொருவர் நெருங்கின பதவி யுள்ளவராவார். உண்மையில் அல்லாஹு தஆலாவினிடத்தில் இவர்களின் நெருக்கமும் தூரமும் துன்யாவின் விஷயத்தில் இவர்களுக்கிருந்த வெறுப்பு விருப்புகளின் அளவாயிருக்கும். இனி சீமானுக்குத் தன்னிடத்தில் பொருளிருப்பதும் இல்லாமற் போவதும் இரண்டும் சமமாயும் அவன் மனம் அதன் பாக்கியைவிட் டொழிந்ததாயுமிருந்து தன்னிடத்தில் உள்ள பொருளை ஜனங்களின் தேவைக்காக வைத்திருப்பானாகில் (அவன் பதவி பெரிதேயாம்). உதாரணமாக:—ஆயிஷா றளியல்லாஹு அன்ஹா அவர்கள் ஒருநாள் நூறாயிரம் திர்ஹங்களை ஏழைகளுக்குச் செலவுசெய்தார்கள். தாங்கள் நோன்பு திறப்பதற்காக ஒரு திர்ஹத்துக்குப் இறைச்சி வாங்கினார்களில்லை. அந்த ஏழையின் மனம் இக்குணத்தைப் பூணவில்லையோ அந்த ஏழையின் பதவியிலும் இதமிகவும் பெரியபதவியாயிருக்கிறது. இனி இருவருடைய நிலைமைகளும் சமம் எனப் பாவித்துக்கொண்டால் அப்போது ஏழையே மிக வரிசையுள்ளவன். ஏனெனில் சீமான்கள் செய்யும் அமல்களில் மிகவும் நல்ல அமல் சதகாகொடுப்பதும் நன்மைசெய்வதுந்தான். ஹதீஸில் வந்திருப்பதாவது:—சில ஏழைகள் தூது மூலமாக றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் சமுகத்துக்குமுறைப்பாடு சொல்லியனுப்பினார்கள். அதென்ன முறைப்பாடு என்றால், "சீமான்கள் சதகா கொடுக்கிறார்கள். ஐக்காத்தளிக்கிறார்கள். ஹஜ்ஜு செய்கிறார்கள். யார்க்கப் போர்புரிகின்றார்கள். ஆதலால் அவர்கள் துன்யா ஆகிரத்துகளின் நன்மைகளைக் கொண்டுபோகிறார்கள். நாங்கள் அப்படிச்செய்ய இயலாதவர்களாயிருக்கிறோம்" என்பதுதான். ஏழை ஜனங்கள் அனுப்பின அந்தத் தூதனை றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் அன்புடன் உபசரித்து, "மறுஹபா, உனக்கும உன்னை அனுப்பினவர்களுக்கும் சுபசோபனம் என்று மாராயங்கூறி நான் நேசிக்கிற ஜனங்களிடத்திலிருந்து நீ வந்திருக்கிறாய் என்றும், அல்லாவுக்காக ஒருவன் தன் எழிமைத்தனத்தின்பேரில் சபுரு செய்துகொள்ளுவானாகில் அவனுக்கு மூன்று சிறப்புகள் இருக்கின்றன என்றும், சீமான்களுக்கு அந்தச் சிறப்புகள் ஒருபோதும் உண்

டாகா என்றும், அவற்றுள் முதலாவது:—சுவர்க்கத்தில் அவர்களுக்கு உன்னதமான உப்பரிகைகள் இருக்கின்றன என்றும், துன்யாவிலிருப்பவர்கள் நக்ஷத்திரங்களைப் பார்ப்பதுபோல் சுவர்க்கத்திலிருப்பவர்கள் அந்த உப்பரிகைகளை அவ்வளவு உயரத்தில் பார்ப்பார்கள் என்றும், அந்த இடம் ஏழை நபி, அல்லது ஏழை மூமின், அல்லது ஏழை ஷஹீதுக்கேயன்றி மற்ற எவருக்கும் வாய்க்காது என்றும், இரண்டாவது:—சீமான்கள் சொர்க்கம்போக ஐந்நூறு வருஷத்துக்கு முன்னமே ஏழைகள் அதிற் பிரவேசிப்பார்கள் என்றும், மூன்றாவது:—ஏழையானவன் ஒருமுறை சுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் என்று சொல்வதினால் அவன் அடையும் பதவியைச் சீமானும் அப்படிச் சொல்லி அத்தோடு பதினாயிரம் திர்ஹம்களை ஸதகா செய்த போதிலும் ஒருபோதும் அடையமாட்டான் என்றும், இதைநீ அவர்களுக்குப் போய்ச்சொல்" என்றும் சொல்லியனுப்பினார்கள். இதைச் செவியுற்ற அந்த ஏழை ஜனங்கள் ரலீனா, ரலீனா (நாங்கள் சமாதானத்தை அடைந்தோம், சமாதானத்தை அடைந்தோம்) சந்தோஷமடைந்தோம் என்று சொன்னார்கள்.

ஏழையின் திருப்தி ஏதின பதவியுள்ளதென்று நாயகமவர்கள் சொன்னதற்குக் காரணம் யாதெனில், திருப்தியானது ஓர் விதையாயிருக்கிறது. அடியானுடைய மனம் துன்யாவின் பராக்கிலிருந்து பற்றொழிந்ததாயும் துக்கமுற்றதாயும் முறிவடைந்ததாயும் இருந்தால் அதில் அந்த விதைதரித்துப் பெரியவோர் குணத்தையுண்டாக்கும். துன்யாவைக்கொண்டு சந்தோஷம் அடைந்திருக்கிற மனதில் அந்த விதை தரிக்காமல், கெட்டியான கல்லின்மேல் விழுகிற தண்ணீரைப்போல் தெறித்து ஓடிப்போம். பின்னர் அவரவருடைய பதவியானது அவர்கள் அல்லாகு தஆலாவினிடம் நெருங்கின அளவாகவும் திருப்தி மஹப்பத்துகளில் அவர்கள் பராக்காகிற அளவாகவும் இருக்கும். அந்தப் பராக்கு ஒருவஸ்துவின் பற்றிலிருந்து மனம் ஒழிந்திருக்கிற அளவாயிருக்கும் சீமானுடைய மனம் ஒருபோதும் பற்றொழிந்திராது. இப்படியாயிருப்பதில் ஏழையுடைய மனமும் சீமானுடைய மனமும் எப்படிச் சரியாகும். ஒருபோதும் ஆகாது. ஆனால் சீமான் தன் சிந்தையில் எனக்குப் பொருளிருந்தபோதிலும் அந்தப்பொருளின் பராக்கிலிருந்து என்மனம் பற்றொழிந்திருக்கிறதென்று ஒருக்கால் எண்ணக்கூடும். இந்த எண்ணம் மருட்சியாகும். மருட்சியல்ல, உண்மைதான் என்பதற்கு அடையாளம் யாதெனில்

ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள் செய்ததுபோல் பொருளை மண்ணாகப் பாவித்து எல்லாவற்றையும் செலவு செய்வதேயாம். பொருளை வைத்துக்கொண்டு அதன் பற்றில்லாமல் மனம் ஒழிந்திருக்கக் கூடுமென்றால் நபிமார்கள் அலைஹிமிஸ்ஸலாமவர்கள் பொருளைவிட்டு ஏன் அப்படிப் பேணுதல் செய்தார்கள்? அதை விட்டுப் பேணுதல் செய்யும்படி மற்றவருக்கு ஏன் சொன்னார்கள்? துன்யாவானது றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சமூகத்தில் வந்து தன்னை அவர்களுக்குப் பகட்டிக் காட்டினபோது "அய்துன்யா! நீ என்னிடத்தில் நில்லாதே. தூரப்போ, தூரப்போ" என்று சொல்லுகிறவர்களாயிருந்தார்கள். இன்னும் ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் "நீங்கள் துன்யாவுடைய செல்வீகர்களின் செல்வத்தை ஏறெடுத்துப் பார்க்கவேண்டாம்" என்றும், அதன் சுடர் உங்கள் ஈமானின் இன்பத்தைப் பறித்துக்கொள்ளும்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்படிச் சொன்னதற்குக்காரணம் யாதெனில், செல்வத்தின் இன்பம் இருதயத்தில் வெளியானால் அது திக்றின் இன்பத்துக்கு இடையூற்றை யுண்டாக்கும். ஒருமனதில் இரண்டு இன்பம் அமையாது. உண்மைப்பொருள் ஒன்று, உண்மையல்லாப்பொருள் ஒன்று ஆக இரண்டேபொருள்தானிருப்பது. உண்மையல்லாப்பொருளில் உன் மனக்கயிற்றை நீ எவ்வளவாகச் சுற்றுகிறாயோ அவ்வளவாக அக்கயிறு உண்மைப்பொருளை விட்டும் பிரிந்துகொண்டிருக்கும். உண்மையல்லாப் பொருளைவிட்டும் அக்கயிறு எவ்வளவாகப் பிரிந்துகொண்டிருக்கிறதோ அவ்வளவாக உண்மைப்பொருளான அல்லாகு தஆலாவினிடம் நெருங்கிக்கொண்டிருக்கும். இன்னும் "ஒரு ஏழை ஒருவஸ்துவை ஆசித்து அவன் தன் ஏழைமைத்தனத்தினால் அதை அடையக்கூடாதவனாய்ப்போனசமயத்தில் அவனில்நின்றும் வெளிப்படுகிற தணிந்த ஒரு பெருமூச்சானது சீமானுடைய ஆயிரம் வருஷத்து வணக்கத்தைவிட மிக வரிசையுடையது" என்று அபூசுலைமான் தாரானி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் ஒருவர் பிஷ்ருல் ஹாபீ றஹிமஹுல்லா அவர்களிடம்வந்து, "நான் மனைவிமக்களுள்ள குடும்பஸ்தனாயிருக்கிறேன்" என்றும், "என்கையில் ஒருபொருளுமில்லை" என்றும், "எனக்குத் தாங்கள் துஆ செய்யுங்கள்" என்றும் சொன்னார். அதற்கவர்கள் அவரைநோக்கி "ரொட்டியில்லை தண்ணீரில்லையென்று உன் பெண்ஜாதி பிள்ளைகள் உன்னிடம் சொல்லும்போது அதைச் சம்பாதித்துக் கொண்டுவர உன்னால் முடியாமற்போய் அந்தவருத்தம்

உன்மனதில் பொருந்தியிருக்குமே அந்தச்சமயத்தில் நீ எனக்குத் துஆசெய்" என்றும், "அந்தநேரத்தில் நீ துஆசெய்வதுஎன் துஆவை விட மிகவரிசையுள்ளதாயிருக்கிறது" என்றும் சொன்னார்கள்.

## ஏழையானவன் தன் ஏழ்மையில் அனுசரிக்கவேண்டிய அதபுகள்.

அறிந்துகோள்:—உள்ளில் பொருத்தமாயிருப்பதும் வெளியில் முறையிடாமலிருப்பதும் இவ்விரண்டும் ஏழ்மைத்தனத்தின் அதபுகளாம். ஏழைக்கு இருதயத்தில் மூன்று நிலைமைகள் உண்டு. முதலாவது:—ஏழ்மைத்தனத்துக்குச் சந்தோஷப்படுகிறவனும் நன்றியறிந்தவனுமிருப்பதாம். ஏனெனில் ஏழ்மையானது அல்லாகு தஆலாவினால் அவன் நேசர்களுக்கு அருளப்படுகிற மெய்யான அருளாயிருப்பதினாலென்க. இரண்டாவது:—ஏழ்மைக்கு வெறுப்படைந்திருந்தபோதிலும் அது அல்லாகு தஆலாவுடைய செயலாயிருப்பதுபற்றி அவன்மேல் வெறுப்பாகாமல் சந்தோஷமாயிருப்பதாம். உதாரணமாக:—ஒருவனுடைய தேகத்தில் நஷ்தர் குத்தி இரத்தமெடுப்பதனால் உண்டாகிற வருத்தம் அவனுக்கு வெறுப்பாயிருந்தபோதிலும் நஷ்தர் குத்துகிறவன்மீது அவன் வெறுப்பாகமாட்டான். இதுவும் பெருமையுடையதுதான். மூன்றாவது:—ஏழ்மையின் நிமித்தம் அல்லாகு தஆலாவின்மீது வெறுப்பாயிருப்பதாம். இது ஹறாமாயும் ஏழ்மையின் சவாபைக் கெடுப்பதாயுமிருக்கிறது. மேலும் யாருக்கு எதைச் செய்யவேண்டுமோ அதையே அல்லாகு தஆலா செய்கிறான் என்றும், அவன்மேல் வெறுப்பு வைப்பதும் நிராகரிப்பதும் எவருக்கும் செல்லாது என்றும் எப்போதும் நிர்ணயங் கொண்டிருக்கவேண்டும். இனி வெளியில் முறைப்பாடு செய்யாமலிருப்பதும் கௌரவம் என்னும் திரைக்குப் பழுதுவராமல்காத்துக் கொள்வதும் வேண்டும். அலிறலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:—"ஏழ்மைத்தனம் ஒருக்கால் சிட்சையாக வரக்கூடும். அதற்கு அடையாளம் துர்க்குணமும் முறைப்பாடும் அல்லாகு தஆலா விதித்த விதியின்மேல் கோபமுமாம். இன்னுமொருக்கால் அது சீர்வதித்தனம் என்னும் நன்மையாகவுமிருக்கலாம். அதற்கு அடையாளம் நற்குணமும் முறைப்பாடு செய்யாமையும் ஷுக்ரு செய்தலுமாம்" என்பதே. இன்னும் தனது நிர்ப்பாக்கிய நிலைமையை மறைப்பது நிறைந்த பொக்கிஷங்களில் ஒன்றென்று ஹதீசில் வந்திருக்கிறது. ஏழ்மைத்தனத்தின் மற்றும் அதபுகளாவன:—சீமான்களுடன் கலவாமலிருப்பதும் அவர்களுக்குத் தாழ்மை காட்டாம

யிருப்பதும் உண்மையைச் சொல்வதில் அவர்களுடைய நாட்சண்ணியம் பார்க்காமலிருப்பதுமாம். சுபுயான் றஹிமஹுல்லா அவர்கள் "ஒரு ஏழையானவன் சீமானிடம் சுற்றிக்கொண்டிருப்பானாகில் அவனை ரியாக்காரன் என்று அறியுங்கள் என்றும், சுல்தானிடம் சுற்றிக்கொண்டிருப்பானாகில் அவனைத் திருடன் என்று அறியுங்கள்" என்றும் சொல்லுகிறார்கள். இதுவுந் தவிர ஏழையானவன் சில சந்தர்ப்பங்களில் தன் இச்சையை அடக்கிக்கொண்டு தன்னால் இயன்றதை சதகா செய்வதும் ஏழிமைக்குரிய ஓர் அதபாம். இன்னும் "ஒரு திர்ஹமானது சில சமயம் இலக்ஷம் திர்ஹங்களை மிகைக்கும்" என்று றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமானார்கள். அப்போது அஸ்ஹாபுகள் "அதெப்படி யாரசூலல்லா!" என்று கேட்டதற்கு, "இரண்டே திர்ஹங்களை வைத்துக்கொண்டிருக்கிற ஒரு மனிதன் அதில் ஒரு திர்ஹத்தைக் கொடுப்பானாகில் இதானது ஏராளமாகப் பொருள் வைத்திருப்பவன் இலக்ஷம் திர்ஹங்களைக் கொடுப்பதிலும் அதிக வரிசையுடையது" என்று அருளிச் செய்தார்கள்.

இனி கொடுப்பதை ஏற்கும் அதபுகளாவன:—ஷுபுஹத்தென்னும் சந்தேகமுள்ள பொருளை வாங்கமாட்டான். தன் தேவைக்கு மேல் அதிகமான பொருளையும் வாங்கமாட்டான். ஆனால் வாங்கி ஏழைகளுக்குக்கொடுக்கும் வழக்கமுள்ளவன் அதைப் பகிரங்கத்தில் வாங்கி இரகசியத்தில் கொடுப்பான். இது சித்தீக்குகளுடைய தரஜாவாயிருக்கிறது. இப்படிக் கொடுக்க இயலாதவன் அதை வாங்கமாட்டான், ஏனெனில் பொருளுக்குடையவன் அதைப் பாத்தியஸ்தருக்குக் கொடுத்துவிடவேயாம். இனி கொடுப்பவனுடைய நிய்யத்து இதுவென விசாரித்துக்கொள்வது முக்கியமான காரியம். அது ஹதியாவாக அல்லது சதகாவாக அல்லது ரியாவாக இருக்கலாம். ஹதியாவாயிருந்து அது உபகாரார்த்தமாகக் கொடுப்பதல்லவென்று தெரிந்தால் அதை கபூல்செய்வது சுன்னத்தா யிருக்கிறது. அப்பொருளில் சிலது உபகாரார்த்தமாகவும் சிலது உபகாரார்த்த மல்லாமலும் கொடுக்கப்படுகிறதென்று தெரிந்தால் உபகாரார்த்தமல்லாமல் கொடுக்கப்படுவது எவ்வளவோ அவ்வளவுக்குமேல் வாங்கமாட்டான். ஒருவர் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களுக்கு ஹதியாவாக, நெய்யும் பனீர் என்னும் பால்கோவையும் ஒரு ஆடும் கொண்டுவந்தார். நாயகமவர்கள் ஆட்டை ரத்து செய்து மற்றதை ஒப்புக்கொண்டார்கள். இன்னுமொருவர் பத்றாழுகிலி றஹிம

ஹுல்லா அவர்களுக்கு ஐம்பது திருஹம் ஹதியாவாகக் கொண்டுவந்தார். அவர்கள் அவரை நோக்கி "யாராவது தான் கேட்காமல் தனக்குக் கொடுக்கும் பொருளை வேண்டாமென்று ரத்துசெய்வானாகில் அவன் அதை அல்லாகு தஆலாவின்பேரில் ரத்து செய்தவனாவான் என்று ஹதீஸில் வந்திருக்கிறது" எனச் சொல்லி அதில் ஒரு திருஹத்தை எடுத்துக்கொண்டு மீதியை அவரிடம் திரும்பக் கொடுத்துவிட்டார்கள். இதே ஹதீஸை ஹஸன்பஸரீ றஹிமஹுல்லா அவர்கள் ஓர் மஜ்லிஸில் சொன்னார்கள். பின்பு ஒருநாள் ஒருவர் வெள்ளி நாணயங்கள் நிறைந்த ஓர் பையும் நேர்த்தியான பற்பல பிடவைகளும் அவர்களுக்கு ஹதியாவாகக் கொண்டுவந்தார். அவர்கள் அதை அங்கீகரிக்காமல், "சபை கூட்டிச் சற்போதனை செய்கிற ஒருவன் ஜனங்களிடத்தில் எதையாவது வாங்குவானாகில் அவன் நாளை கியாமத்தில் அல்லாகு தஆலாவைப் பார்க்கும்போது அவனிடத்தில் அவனுக்கு யாதொரு நஸீபுமிராது" என்று சொல்லி அதை ரத்துசெய்துவிட்டார்கள். ஏனென்றால், அவர்கள் சபை கூட்டி வகுலு சொல்வதில் ஆகிரத்துடைய சவாபை நிய்யத்து செய்திருப்பார்கள். அந்த ஹதியா வந்ததற்கு அந்த வகுலே காரணம் என்று எண்ணியிருப்பார்கள். ஆதலால் வகுலில் கருதிய இகுலாசு என்னும் கலப்பற்ற நிய்யத்துக்குப் பழுதுண்டாகுமென் றுணர்ந்ததினால் அதை வாங்குவதற்கு அவர்கள் மனம் சம்மதிக்கவில்லை. ஒருவர் தம்முடைய ஓர் சிநேகருக்கு ஓர் பொருளைக் கொடுக்கப்போனார். அந்தச் சிநேகர் அவரைநோக்கி "இதிருக்கட்டும், வைத்துக்கொள்ளும்; நான் இதை வாங்கிக்கொண்டால் உம்முடைய மனதில் என் மதிப்பு முன்னிலும் அதிகப்படுமா? என்று நிதானித்துப் பாரும். அப்படி அதிகப்படுகிறபக்ஷம் நான் இதை வாங்குவேன்" என்று சொன்னார். சுபியான் றஹிமஹுல்லா அவர்கள் எவரிடத்திலும் எதையும் வாங்காதவர்களாயும், கொடுப்பவர் சொல்லிக்காட்டாரென்று எனக்குத் தெரிகிறபக்ஷம் நான் வாங்கியிருப்பேன் என்று சொல்லுகிறவர்களாயுமிருந்தார்கள். இப்படிச்சொன்னதில் அவர்கள் கருதியது யாதெனில் கொடுப்பவன் ஏதோ உபகாரஞ்செய்ததாகத் தங்கள்மீது பெருமை பாராட்டுவான் என்பதுதான். இன்னும் சிலர் தங்கள் உரித்தான சிநேகரிடத்தில் மாத்திரம் வாங்குகிறவர்களாயும் மற்றவரிடத்தில் வாங்காதவர்களாயுமிருந்தார்கள். அப்படி வாங்குவதிலும் உபகாரார்த்தமான பொருளைவிட்டும் அவர்கள் எல்லாரும் பேணுகிறவர்களாயிருந்தார்கள். பிஷ்றுல் ஹாபி றஹிமஹுல்லா

அவர்கள் சொல்லுகிறதாவது:—“நான் எவரிடத்திலும் எதையும் கேட்டதில்லை. ஆனால் சரிய்யுஸ்ஸகதியினிடம் கேட்பதுண்டு: ஏனெனில், அவருடைய ஜகாத்து என்னும் தெண்டிப்பும் ஓர் பொருள் அவர் கையைவிட்டுக் கழிவதைப்பற்றி அவர் சந்தோஷப்படுவார் என்பதும் எனக்குத் தெரிந்திருப்பதினாலேயாம்” என்பதே. இனி, நியாவைநாடிக் கொடுக்கிறபக்ஷம் அதை வாங்காமலிருப்பது முக்கியமாம். பெரியோர்களில் ஒருவர் தமக்குக் கொடுத்த பொருளை வாங்காமல் ரத்துசெய்தார். அதைப்பற்றி அவரிடம் சிலர் ஆக்ஷேபித்தார்கள். அதற்கவர் “அதை நான் வாங்காமலிருந்தது அவர்களுக்கு நான் செய்த ஓர் கிருபையாயிருந்தது” என்றும், “ஏனெனில் அவர்கள் சொல்லிக்காட்டுவார்களாதலால் அவர்கள் பொருளும் போய்க் கூலியும் அழிந்துபோம்” என்றும் சொன்னார். இனி சதகாவைநாடிக் கொடுக்கிறபக்ஷம், தான் அதற்கு அருகனாயில்லாவிட்டால் அதை வாங்கமாட்டான். (அருகனாயிருந்தால் அதாவது) தேவையுள்ளவனாயிருந்தால் அதை ரத்து செய்வது அழகல்ல. ஏனெனில் கேட்பதன்றி ஒருவனுக்கு ஓர் பொருள் கொடுக்கப்பட்டால் அது அல்லாகு தஆலா அனுப்பின ஓர் இரணமாகும் என்று ஹதீதில் வந்திருப்பதினாலென்க. இன்னும் தனக்குக் கொடுக்கும்போது வாங்காதவன் எவனோ அவன் கேட்கும்போது அவனுக்குக் கொடாதபடி அவன் சோதிக்கப்படுவான் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். சரிய்யுஸ்ஸகதி றஹிமஹுல்லா அவர்கள் அஹ்மது ஹம்பல் றஹிமஹுல்லா அவர்களுக்கு எதையாவது ஒரு பொருளை அனுப்பும்போதெல்லாம் அவர்கள் அதை வாங்காமல் ரத்து செய்வார்கள். அப்போதவர்கள் “ஓ அஹ்மதே! ரத்து செய்வதென்னும் இந்த ஆபத்துக்கு நீர் பயந்துகொள்ளும்” என்று சொன்னார்கள். அதற்கு அஹ்மது ஹம்பல் றஹிமஹுல்லா அவர்கள், “என்ன சொன்னீர்? இன்னுமொருதரம் சொல்லும்” என்றார்கள். சரிய்யுஸ்ஸகதி றஹிமஹுல்லா அவர்கள் மறுமுறை அதைச் சொன்னார்கள். அப்போதவர்கள் சற்றுநேரம் ஆலோசித்துப் பின்பு சரிய்யுஸ்ஸகதி றஹிமஹுல்லாவை நோக்கி “என்னிடம் ஒருமாசத்துக்குப் போதுமான பொருளிருக்கிறது. அது செலவாய்ப்போனவுடன் வாங்கிக்கொள்ளுகிறேன். இதை அதுவரையில் நீர் காப்பாற்றிவையும்” என்று சொன்னார்கள்.

## அவசியமில்லாமல் சுவால் செய்தல் ஹராமென்பதை விளக்கல்.

அறிந்துகொள்:—ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் “சுவாலானது கெட்டவைகளில் சேர்ந்தது” என

னும், "கேட்டவைகள் அவசியத்தின்போதன்றி ஹலாலாகா" என்னும் அருளிச்செய்திருக்கிறார்கள். சுவாலில் மூன்று கெடுதிகளிருப்பதினால் அது கெட்டதாயிற்று. முதலாவது கெடுதி:—தன் எழிமைத்தனத்தை வெளிப்படுத்துவதும் அல்லாகு தஆலாவின்மீது முறைப்பாடு செய்வதுமாம். ஏனெனில் ஒருவனுக்கு அடிமையாயிருப்பவன் மற்றொருவனிடத்தில் ஒரு வஸ்துவைக் கேட்பானாகில் அவன் தன் எஜமானன்மீது முறைப்பாடு செய்தவனாவான். இத்தக்குற்றம் வராமலிருப்பதற்குப் பரிகாரம் யாதெனில், அவசர நிமித்தமாகவேயொழிய மற்றப்படி சுவால் செய்யாமலிருப்பதும் முறைப்பாடு செய்கிற விதமாகச் சொல்லாமலிருப்பதுமாம். இரண்டாவது கெடுதி:—சுவால் செய்வதில் தன்னைச் சிறுமைப்படுத்திக்கொண்டவனாவான். அல்லாகு தஆலாவுக்கு முன்பாகவேயன்றி மற்றவருக்கு முன்பாகத் தன்னைச் சிறுமைப்படுத்திக்கொள்வது மூமினுக்குத் தகுதியல்ல. ஆதலால் இக்கெடுதியினின்று நீங்கும்பொருட்டு அவன் தன்னாலியன்றமட்டும் இதராளிடத்தில் கேட்காமல் ஒரு சிநேகனிடத்தில் அல்லது ஒருபந்துவினிடத்தில் அல்லது ஒருதாராளக்காரனிடத்தில் அல்லது யார் தன்னை இழிவாகப்பார்க்கமாட்டாரோ அவனிடத்தில் இன்னும் இதுபோல் யாரிடத்தில் கேட்பதினால் தனக்குச் சிறுமையுண்டாகாதோ அவனிடத்தில் கேட்பானாக. அதற்கு இயலாமற்போனால் அவசியமின்றி இதராளிடத்தில் சொல்லாமலும் கேட்காமலுமாவது இருக்கவேண்டும். மூன்றாவது கெடுதி:—யாரிடத்தில் சுவால் செய்கிறானோ அவனை வருத்தப்படுத்துவதாம். ஒரு சமயம் அவன் கொடுப்பதை வெட்கத்தினால் கொடுப்பான். அல்லது ரியாவினால் அதாவது ஜனங்களின் பழிப்புக்குப் பயந்து கொடுப்பான். அப்படிக் கொடுப்பது அவனுக்குக் கஷ்டமாயிருக்கும். மனப்பொருத்தமிராது. கொடாமற்போனால் வெட்கமும் பழிப்புமான வேதனையில் விழுவான். இக்கெடுதியினின்று நீங்குவதற்குப் பரிகாரம் யாதெனில், அவனிடம் வெளிப்படையாகக் கேட்காமல் சமிக்கினையாகச் சொல்லுவான். அந்த சமிக்கினையும் எப்படியிருக்கவேண்டுமென்றால், அவன் அதை அறியாதவன்போல் பாராமுகமாயிருந்துவிட நாடினால் அவனுக்கு அதில் இடமிருக்கவேண்டும். வெளிப்படையாகச் சொல்லுகிற பக்ஷம் (கொடுப்பதற்கு) அவனைக் குறிப்பிடமாட்டான். மேலும் சபையில் பொதுவாகச் சொல்லுவான். அப்படிச் சொல்லுவதிலும் அந்தச் சபையில் ஒரு சீமானிருந்து, இரப்பவர் எல்லாரும் அவனிடம் ஆதரவு வைப்பவர்களாயும் அவன் கொடாவிட்டால்

அவனைப்பழிப்பவர்களாயிருக்கிறபக்ஷம் அப்போது சபையில்பொதுப்படையாகச்சொன்னாலும்கொடுப்பதற்கு அந்தச்சீமானையேகுறிப்பிட்டதுபோலாகும். இனி ஒருவன்மேல் ஸக்காத்து விதியாயிருக்கிறதென்றறிந்த ஒருவன் அவனிடத்தில் ஸக்காத்துக்கு அருகனாயிருக்கிற மற்றொருவனுக்காக சுவால் செய்வது ஆகும். அவன் வருத்தப்பட்டாலும் சரியே. அவன் தானே ஸக்காத்துக்கு அருகனாயிருந்தாலும் இதுபோலவேயாம். இனி, பழிப்புக்குப் பயந்தாவது வெட்கத்தினாலாவது கொடுக்கிறபக்ஷம் இது அபராதம்போலாகின்றதால் இதை வாங்குவது ஹறாமாகும். வெளிப்படையான பத்துவாவில் வாய்ச்சொல்லைப் பார்க்கிறார்கள். இது துன்யாவுடைய அரசர்களின் சட்டமாதலால் இவ்வுலகத்தில் இது செல்லும். அவ்வுலகத்தில் மனப்பிரியமே செல்லத்தக்கது. ஆதலால் ஒருவன் கொடுப்பதைத் தன் மனப்பொருத்தமில்லாமல் கொடுக்கிறான் என்று உன் மனம் சாக்ஷி சொன்னால் அதை நீ வாங்குவது ஹறாமாகும். மேற்கூறி வந்தவைகளால் தெரியவந்த தென்னவென்றால், அவசரநிமித்தமில்லாமல் அல்லது முக்கியமான ஓர் வேண்டுதல் இல்லாமல் சுவால் செய்வது ஹறாமாகும் என்று தெரியவந்தது. இனி டாம்பீகம் அதிகப்படுவதற்காக அல்லது நல்ல ஆனம் உண்பதற்காக அல்லது நல்ல உடை உடுப்பதற்காக சுவால் செய்வானாகில் இது தகாது. தளர்ச்சி யடைந்தவனும் ஏதுமில்லாதவனும் எத்தொழிலும் செய்ய இயலாதவனும் இருப்பவன் எவனோ அவனுக்கே சுவால் ஆகும். என்கினும் இல்மைப் படிப்பதில் பராக்காயிருக்கிற ஒருவன் தொழில் செய்யக்கூடியவனாயிருந்தபோதிலும் அவ்வாறு தொழில் செய்தால் இல்மைப்படிக்க அவனுக்குச் சாத்தியப்படாதபக்ஷம் அவன சுவால் செய்யத்தகும். இபாதத்தில் பராக்காயிருப்பானாகில் அவன் சுவால் செய்யத்தகாது. மேலும் தொழில் செய்வது அவன்மேல் வாஜிபாகும். இனி ஒருவனுக்கு உணவுப்பொருள் தேவையாகிறபக்ஷம் அவன் வீட்டில் அவனுக்குத் தேவையில்லாத ஓர் கிதாபாவது தேவைக்குமேல் அதிகமான முசல்லாவாவது தேவைக்குமேல் அதிகமான ஓட்டுச்சட்டையாவது உடுத்தாடையாவது இன்னுமிதுபோன்ற யாதொரு வஸ்துவாவது அவன் சுயாதீனத்தில் இருக்தால் உணவுக்காக அவன் சுவால் செய்வது ஹறாமாகும். ஆதலால் அதை முதலில் விற்று அவன் செலவு செய்யவேண்டும். இனி தன்னுடையவும் தன் பிள்ளைகளுடையவுமான டாம்பீகச் செலவுக்காக சுவால் செய்வானாகில் இது ஹறாமாகும். ரசூல் சல்லல்லாகு அலைஹி

வசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "தன் சுயாதீனத்தில் ஒருவன் துவை வைத்துக்கொண்டிருக்கிற ஒருவன் சுவால் செய்வானாகில் நாளை கியாமத்தில் அவன் முகமெல்லாம் சதை விழுந்துபோன வெறும் முள்ளாயிருக்கும்படி அவன் வருவான்" என்று அருளிச் செய்திருக்கிறார்கள். இன்னும் "தன்சுயாதீனத்திலே துமவைத்திருப்பவன் சுவால் செய்து வாங்குவானாகில் அப்படி வாங்கினது அதிகமாயிருந்தாலும் கொஞ்சமாயிருந்தாலும் அது நரகத்து நெருப்பாயிருக்கிறது" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

இன்னும் அஸ்ஹாபுகள் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சமுகத்தில் "யாரசூலல்லா! ஒருவன் சுவால்செய்வது தகாதென்பதற்கு அவனிடத்தில் எவ்வளவு பொருள் இருக்கவேண்டும்" என்று கேட்டார்கள். (இந்த கேள்வியின் ஜவாபில் இரண்டு ஹதீசுகளிருக்கின்றன). ஒரு ஹதீசில் காலை மாலைகளின் உணவு என்றும் மற்றொரு ஹதீசில ஐம்பது திருஹம் என்றும் வந்திருக்கிறது. என்னினும் ஐம்பது திருஹம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே. அதன் பொருள் ஐம்பது வெள்ளி நாணயமாம். அதுயாருக்கென்றால் தனியா யிருப்பவனுக்காம். ஏனெனில் அது அவனுக்கு ஒருவருஷச் செலவுக்குப் போதுமாகும். இவ்வளவு பொருள் ஒருவனிடத்தில் இல்லாமலும் ஸக்காத்து கொடுக்கும் காலம் ஒரேகாலமாயும் அக்காலத்தில் சுவால்செய்யாமற்போனால் வருஷம் முழுதும் கஷ்டமடைகிறதாயுமிருந்தால் இவ்வளவு வலாயில் சுவால் செய்வது ஆகும். இனி, காலை மாலைகளின் உணவு என்றது யார் விஷயத்திலென்றால், எவன் தினந்தோறும் பிச்சைகேட்டு வாங்கக்கூடியவனா யிருக்கிறானோ அவன் விஷயத்தில் சொல்லப்பட்டிருக்கும். ஏனெனில், அந்த மற்றொருவன் விஷயத்தில் ஒரு வருஷமெப்படியோ அப்படியே இவன் விஷயத்தில் ஒவ்வொரு நாளுமாதலாலென்க. இது தேவையின் காலத்தைக் குறித்தது. இனி தேவைப்படும் பொருள்களின் இனங்கள் மூன்று மூலத்தில் அடங்கும். அவை உணவும் உடையும் இடமுமாம். ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், "ஆதமுடைய மக்களுக்குத் துன்யாவில் மூன்று வஸ்துக்களிலன்றி மற்றவைகளில் யாதொரு ஹக்கில்லை" என்றும், "அவற்றுள் ஒன்று அவர்களின் முதுகை நேர்படுத்துகிற உணவும், மற்றொன்று அவர்களின் மானத்தை மறைப்பதும் சீதோஷ்ணங்களினின்றும் அவர்களைக் காப்பதுமான உடையும், மற்றொன்று அவர்களை மறைத்துக்கொள்ளுகிற ஜாகையுமாம்" என்றும் அருளிச்செய்

திருக்கிறார்கள். இன்னும் வீட்டில் அவசியமாயிருக்கவேண்டிய வீட்டுச் சாமான்களும் இதேபொருள்களில் சேரும். இனி, படுக்கைக்குப் பாயும் மெத்தையும் வைத்திருப்பவன் ரத்தினக கம்பளத்துக்காகச் சுவால்செய்வது கூடாது. மண்பாத்திரம் வைத்திருப்பவன் ஆப்தா பாஹுதலிய (செப்புப்) பாத்திரத்துக்காகச் சுவால்செய்வதுகூடாது. முக்கியமாகத் தேவைப்படும்பொருள்கள் அவரவருடைய நிலைமைகளுக்குத் தக்கவாறு வித்தியாசப்பட்டிருக்குமாதலால் அவைகளை மட்டிட்டுச்சொல்லமுடியாது. ஆனால் இதன்பொருத்தக்கருத்தாவது:— முக்கியமான ஓர் ஹாஜத்து இல்லாமல் பூதிப்பான ஓர் காரியத்தைச் செய்வது (அதாவது சுவால் செய்வது) கூடாது என்பதுதான்.

பசல்: அறிந்துகோள்:—பகீர்களின் வகுப்புகள் பலவாயிருக்கின்றன. பிஷ்றுல் ஹாபி றஹிமஹுல்லா அவர்கள்சொல்லுகிறதாவது:— "பகீர்கள் மூன்று வகுப்பாயிருக்கிறார்கள். முதல் வகுப்பார் எவரெனில்: கேட்காதவர்களாயும் கொடுத்தால் வாங்காதவர்களாயு மிருப்பவர்களாம். இவர்கள் ருஹானிய்யூன்களுடன் இல்லிய்யீன்என்ற சுவர்க்கத்திலிருப்பார்கள். இரண்டாவது வகுப்பார் எவரெனில்:கேட்காதவர்களாயும்கொடுத்தால் வாங்கிக்கொள்பவர்களாயு மிருப்பவர்களாம். இவர்கள் முகர்ரபூன்களுடன பிருதவுசு என்ற சுவர்க்கத்திலிருப்பார்கள். மூன்றாவது வகுப்பார் எவரெனில்: அவசியத்துக்காக மாத்திரம் கேட்பவர்களாம். இவர்கள் (சாதிகீன்களுடன்) அஸ்ஹாபுல்யமீன் என்னும் சுவர்க்கவாசிகளிற் சேர்ந்தவர்களாயிருப்பார்கள்" என்பதே. இபுறாஹீமுல் அதஹம் றஹிமஹுல்லா அவர்கள் ஷகீகுல் பல்கீ றஹிமஹுல்லா அவர்களை வந்து கண்டபோது "நீர் உமது பட்டணத்து பகீர்களை என்ன நிலைமையில் பார்த்து வந்தீர்" என்று ஷகீகு றஹிமஹுல்லா அவர்கள் கேட்டார்கள். அதற்கு இபுறாஹீம் றஹிமஹுல்லா அவர்கள் நான் அவர்களை நல்ல நிலைமையில் பார்த்துவந்தேன் என்றும், கிடைத்தால் அவர்கள் ஷுக்குரு செய்கிறார்கள், கிடைக்காமற்போனால் சபுரு செய்கிறார்கள்" என்றும் சொன்னார்கள். இதைக் கேட்ட ஷகீகு றஹிமஹுல்லா அவர்கள் "நானும் பல்குடைய நாய்களை இதே நிலைமையில் பார்த்துவந்தேன" என்றார்கள். அவர்களை நோக்கி இபுறாஹீம் றஹிமஹுல்லா அவர்கள் "நல்லது உம்முடைய அபிப்பிராயப்படி பகீர் என்பவர்கள் எப்படி இருப்பார்கள்?" எனக் கேட்டதற்கு, "கிடைக்காமற்போனால் ஷுக்குரு செய்பவர்களாயும் கிடைத்தால் தங்கள் ஹாஜத்தைவிட பிறர் ஹாஜத்தை முதலில் நிறைவேற்றுபவர்களாயும் இரு

ப்பார்கள்" என்று சொன்னார்கள். இதைக் கேட்ட இபுராஹீம் றஹிமஹுல்லா அவர்கள் ஷகீகு றஹிமஹுல்லா அவர்களின் சிரசை முத்தமிட்டு "இதுதான் சரி" என்று சொன்னார்கள். அபுல்ஹஸன் நூரி றஹிமஹுல்லா அவர்கள் சிலரிடம் கைநீட்டி சுவால்செய்து கொண்டிருந்ததை ஒருவர் கண்டு ஆச்சரியப்பட்டு உடனே இதை ஜுனைதுல்பக்தாதி றஹிமஹுல்லா அவர்களிடம் போய்ச் சொன்னார். அவரை நோக்கி ஜுனைது றஹிமஹுல்லா அவர்கள் சொன்னதாவது:—"அபுல்ஹஸன் ஏதோ பிச்சைகேட்டு ஜனங்களிடத்தில் கைநீட்டுகிறார் என்று நீ நினைக்காதே. மேலும் அந்த ஜனங்களுக்கு நன்மை யுண்டாகட்டுமென்றும் தமக்கு அதில் கஷ்டமில்லை யென்றும் நினைத்து அவர்களின் விஷயத்தில் ஆகிரத்துடைய கூலியையும் நன்மையும் நாடுகின்றார்" எனக் கூறினார்கள். பின்பு ஓர் தராசைக் கொண்டுவரச்சொல்லி அதில் நூறு திருஹங்களை நிறுத்து அதன்மேல் கணக்கில்லாமல் ஒரு பிடி திருஹங்களையும் போட்டு "இதை அபுல்ஹஸனிடம் கொண்டுபோய்க் கொடு" என்று சொன்னார்கள். அளவு தெரிவதற்காகவே நிறுப்பதாகையால் இவர்கள் கணக்கில்லாமல் அந்த நிறையின்மேல் கொஞ்சம் அள்ளிப்போட்டதைப்பற்றி அவர் ஆச்சரியப்பட்டு அதை எடுத்துக்கொண்டு அபுல்ஹஸன் றஹிமஹுல்லா அவர்களிடம் போனார். அவர்கள் நிறைகோல் கொண்டுவரச்செய்து அதில் நூறு திருஹங்களை அவரிடம் நிறுத்துக் கொடுத்து "இதைத் திருப்பக்கொண்டுபோய் ஜுனைதிடம் கொடுத்துவிடு" என்று சொல்லி மீதியை எடுத்துக்கொண்டதுமன்றி, "மெய்தான் ஜுனைது பூரணமுள்ள ஓர் மனிதராயிருக்கிறார் என்றும், கயிற்றை இரண்டு பக்கத்தாலும் பிடித்துக்கொள்ளப்பார்க்கிறார்" என்றும் சொன்னார்கள். இதைக்கேட்ட அவர் இன்னும் அதிக ஆச்சரியத்தை அடைந்து அந்த நூறு திருஹங்களைத் திருப்பக் கொண்டுவந்து ஜுனைது றஹிமஹுல்லாவினிடம் கொடுத்து நடந்தசங்கதியைச் சொன்னார். அப்போதவர்கள் அல்லாஹுல் முஸ்தஆனு என்று சொல்லி அவனுக்காக உள்ளதை அவர் எடுத்துக்கொண்டார். நமக்காக உள்ளதைத் திருப்பிவிட்டார் என்றும் கூறினார்கள். அப்போதந்த மனிதன் இதென்ன? என்று கேட்டார். அதற்கவர்கள் அந்த நூறும் ஆகிரத்துடைய கூலியை நாடிக்கொடுத்தது என்றும், கணக்கில்லாமல் போட்டது அல்லாஹுக்காகக் கொடுத்தது என்றும், அல்லாஹுக்காக உள்ளதை எடுத்துக்கொண்டார் என்றும், எனக்காகக் கொடுத்ததைத் திருப்பிவிட்டார் என்றும் சொன்

ளார்கள். அக்காலத்தில் பக்தர்கள் இவ்விதமாக இருந்திருக்கிறார்கள். ஒருவர் நாவினால் சொல்லாமலே அவருடைய எண்ணத்தை மற்றொருவர் தெரிந்துகொள்ளுகிறவர்களாயிருந்தார்கள். ஒருவன் இக்குணத்தைப் பூண்டவனாயில்லாமற்போனாலும் குறைந்தபக்ஷம் இதை அடையவேண்டுமென்ற ஆசையாவது அவனுக்கு இருக்க வேண்டும். இதுவுமில்லாதபக்ஷம் இதன்மேல் ஈமானாவது அவன் கொள்ளவேண்டும்.

## ஜுஹ்து இதுவென அதன் ஹகீகத்தையும் அதன் மேம்பாட்டையும் விளக்கல்.

அறிந்துகொள்:—ஒருவன் வெயிற்காலத்தில் தன்னிடம் பனிக்கட்டியை வைத்துக்கொண்டும் தாகமெடுத்தால் தண்ணீரை அதனால் குளிரவைத்துக் குடிக்கலாமென்று ஆசைகொண்டிருக்கிற சமயத்தில் மற்றொருவன் வந்து அந்தப் பனிக்கட்டியின் எடைக்குப் பொன் தருவதாக அதைக் கிரயத்துக்குக் கேட்டால் அப்போது பனிக்கட்டியின்மேல் அவனுக்கிருந்த ஆசையானது பொன்னாசையினால் போய்விடும். அவன் தன் மனதுக்குள்; இன்று நான் தண்ணீருக்குப் பதிலாக வெந்நீரைக் குடிப்பேன் என்றும், ஸபுறு செய்துகொள்ளுவேன் என்றும், இந்தப் பொன் ஆனது ஆயுளபரியந்தம் என்னோடிருக்கும் என்றும், இந்தப் பனிக்கட்டியானது நிலைநிற்காமல் மாலையில் உருகிப்போம் என்றும், இதைக்கொடுத்துப் பொன்னை வாங்கிக்கொள்வது மிக மேலாகும் என்றும் நினைப்பான். இப்படிப் பனிக்கட்டிக்குப் பதிலாக அதினும் மேலான ஓர் பொருளை நாடிப் பனிக்கட்டியை அவன் விரும்பாமல் விடுவது அந்த விஷயத்தில் ஜுஹ்து என்று சொல்லப்படும். துன்யா விஷயத்தில் அறிவுடைய நிலைமையும் இதுபோலவேயாம். அதாவது:—துன்யா போய்விடுவதென்றும், எப்போதும் போய்க்கொண்டிருக்கிறதென்றும், அது மவுத்துடைய நேரத்தில் முடிவை அடையுமென்றும், ஆகிரத்து சுத்தமானதென்றும், அழியாமல் நிலைத்திருப்பதென்றும், ஒருபோதும் முடிவாகிறதில்லையென்றும், துன்யாவை விட்டுவிடுவதென்னும் கிரயத்துக்கே அது விற்கப்படுவதென்றும் அறிய அறியும்போது துன்யா அவனுக்கு இலேசாகத் தெரியுமாதலால் துன்யாவிலும் மிக நல்லதாயிருக்கிற ஆகிரத்துக்குப் பதிலாகத் துன்யாவை விட்டுவிடுவான். இந்த நிலைமைக்கு ஜுஹ்து என்று சொல்லப்படும். ஆனால் இந்த ஜுஹ்து என்பதற்குச் சில ஷர்த்துகளுண்டு. முதலாவது:—இந்த ஜுஹ்து துன்யாவின் முபாஹாத்துகளில் அதாவது உபயோக

கித்துக்கொள்ள ஆகுமான பொருள்களில் இருக்கவேண்டும் ஷாரில் விலக்கப்பட்ட பொருள்களை விட்டும் பேணுதல் செய்வது எல்லார்பேரிலும் பர்ளாதலால் அந்தப் பேணுதல் ஜுஹ்து என்று சொல்லப்படாது. இரண்டாவது:—சக்தியிருப்பதுடன் விட்டுவிடுவதாம். துன்யாவின்மேல் சக்திபெறாத ஒருவன் ஜுஹ்து செய்கிறான் என்பது ரூபகரப்படாது. ஆனால் அவனுக்குக் கொடுத்தாலும் அவன் வாங்காதவனாயிருக்கிறபக்ஷம் அவனை ஜாஹிதென்று சொல்லலாம். என்கினும் இதைச் சோதிக்காதவரையில் உண்மையென்று கொள்ளமுடியாது. ஏனெனில் சக்தியுண்டானால் அப்போது நப்சானது வேறு குணத்தில் திரும்பும். அது செய்துகொண்டிருந்த இந்த ஜுஹ்து வேறு விதத்தில் மாறும். மற்றொரு ஷர்த்து:—பொருளை விட்டுவிடுவதும் அதைப் பதனப்படுத்தாமலிருப்பதுமாம். அன்றியும் பெரிய தனத்தையும் விட்டுவிடுவதாம். ஏனெனில், எவனொருவன் ஆகிரத்துடைய இன்பங்களுக்குப் பதிலாகத் துன்யாவுடைய இன்பங்களையெல்லாம் விட்டுவிட்டானோ அவனே சிறப்பான ஜாஹிது என்னப்படுவான். இப்படி விட்டுவிடுவது ஓர் வர்த்தகமாயிருக்கிறது. என்கிலும் இந்த வர்த்தகத்தில் ஏராளமான இலாபமுண்டு. அல்லாகு தஆலா அருளிச்செய்திருப்பதுபோல் அது வருமாறு:—மெய்யாகவே மூமின்களுக்குச் சொர்க்கமுண்டென்னும் கிரயத்துக்காக அவர்களின் உடலுயிர்களையும் பொருளையும் அல்லாகு தஆலா அவர்களிடம் கிரயத்துக்கு வாங்கினான் என்றும், இந்தக் கிரயம் உங்களுக்கு மங்களமாவதாக என்றும், இந்தக் கிரயத்தில் பெரிய லாபத்தை அடைவீர்கள் என்றும், ஆதலால் நீங்கள் சந்தோஷமாயிருங்கள் என்றும் கூறுகின்றான்.

அறிந்துகொள்:—ஒருவன் தன் சகாவத்து என்னும் கொடையை வெளிப்படுத்துவதற்காகவோ அல்லது ஆகிரத்துடைய சவாபின் தேட்டமின்றி வேறு நாட்டமான யாதொரு காரணத்துக்காகவோ துன்யாவைவிட்டுவிடுவானாகில் அவன் ஜாஹிதாகமாட்டான். இன்னுமறிந்துகொள்:—துன்யாவை ஆகிரத்துக்குப் பதிலாக விற்பதுகூட அதாவது:—ஆகிரத்தின் சவாபுக்காகத் துன்யாவை விட்டுவிடுவதுங்கூட ஆரிபுகளிடத்தில் கேவலமான ஜுஹ்தேயாம். மேலும் துன்யாவைப்போல் ஆகிரத்தையும் விட்டுவிட்டவன் எவனோ அவனே ஆரிபு என்னும் அறிவாளன். ஏனெனில் ஆகிரத்தில் அடையும் சொர்க்கமுங்கூட கண், உபஸ்தம், வயிறு இவற்றின் இச்சைகளுக்கு இணக்கமான பங்காயிருக்கிறது. ஆரிபு இவை யெல்லாவற்றையும் இழிவா

சுக் காண்பான். எந்த இச்சையில் மிருகங்களும் அவனுடன் கூட்டா குமோ அந்த இச்சைகளைக் கடைக்கண்ணாலும் பார்க்காதபடி அவன் தன்னை அவ்வளவு மேலாக வைத்துக்கொள்ளுவான். மேலும் துன்யா ஆகிறத்துகளினின்றும் அல்லாகுதஆலாவையன்றி வேறொன்றையும் அவன் நாடமாட்டான். அல்லாகு தஆலாவை அறிவதிலும் அவனைத் தரிசிப்பதிலுந் தவிர மற்றதில் அவன் திருப்தியடையமாட்டான். அவனைத் தவிர உள்ளவை யாவும் அவன் கண்ணுக்கு அற்பமாய்ப்போம். இதுதான் ஆரிபுகளுடைய ஜுஹ்தாயிருக்கிறது. இந்த ஆரிபு பொருளை விட்டுவிடாதவனும் கொடுத்தால் யாதொரு தடை சொல்லாமல் வாங்கிக் கொள்ளுகிறவனும் அதை உரித்தான ஓரிடத்தில் செலவு செய்கிறவனும் அருகருக்கு அதைத் தருகிறவனும் இருக்கக்கூடும். ஏதுபோலெனில் உமர் றலியல்லாகு அன்கு அவர்களின் ஆட்சியில் உலகத்தின் செல்வமெல்லாமிருந்தும் அவாகள் அதன் பற்றொழிந் திருந்ததுபோலவும் ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள் ஒருநாளில் நூறாயிரம் திருஹங்களைச் செலவுசெய்தும் தங்களுக்காக ஒரு திருஹத்துக்கு இறைச்சிவாங்காதது போலவுமா மென்க.

ஆகவே ஒருவன் தன்வசம் நூறாயிரம் திருஹங்களை வைத்திருப்பதுடன் அவன் ஜாஹிதாயிருக்கவும் மற்றொருவன் தன்வசத்தில் ஒரு திருஹமும் வைத்தில்லாத ஏழையாயிருப்பதுடன் அவன் ஜாஹிதாகாமலிருக்கவும் கூடும். மேலும் மனமானது முறிவடைந்து துன்யாவைத்தேடவும் அதைவிட்டுவிடவும் அதனிடம் சண்டை போடவும் சமாதானம் பண்ணவும் அதை நேசிக்கவும் பகைக்கவும் பராக்காகாமல் பற்றொழிந்திருப்பதில் தான் மனிதனுக்குப்பூரணத் தன்மையுண்டு. ஏனெனில், ஒருவன் ஒருவஸ்துவின்மீது பகைவைப்பவனாயிருந்தபோதிலும் அதை நேசிப்பவன் எப்படியோ அப்படியே அவனும் அந்த வஸ்துவின் பற்றொழியாமல் அதில் பராக்குள்ளவனாகின்றான். அல்லாகு தஆலா தவிர மற்றுமுள்ளவைகளின் பராக்கிலிருந்து பற்றொழிவதில்தான் பூரணத்தன்மை யிருக்கிறது. துன்யாவுடைய பொருளானது அவனிடம் சமுத்திரஜலம்போலவும் அவன் கையானது அல்லாகு தஆலாவுடைய பொக்கிஷம்போலவுமிருக்கிறது. அது அதிகரித்தாலும் குறைந்தாலும் வந்தாலும் போனாலும் அவன் அதன் பராக்கு ஒழிந்தவனா யிருப்பான். இதுதான் பூரணத்தன்மை. ஆனால் இது மூடர்கள் மருண்டு கர்வங்கொள்ளுகிற இடமா யிருக்கிறது. ஏனெனில், பொருளை வேண்டாது

விட்டுவிட சக்தியில்லாத ஒருவன் "நான் பொருளின் பராக்கு ஒழிந்தவனாயிருக்கிறேன்" என்று மருண்டு தன்னை வஞ்சிக்கத் தொடங்குவான். அவன் பொருளை ஒரு பாத்தியஸ்தன் எடுத்துக் கொள்வதற்கும் சமுத்திர ஜலத்தை மொண்டுகொள்ளுவதற்கும் ஒரு அன்னியனுடைய பொருளை எடுத்துக்கொள்ளுவதற்கும் இடையில் வித்தியாசப்படுத்துவானாகில் (அதாவது இம்மூன்றையும் சமமாக்காமல் பேதமாகக் காண்பானாகில்) அவன் மருட்சியில் இருக்கின்றான். பொருளின் தேட்டம் அவனுக்குள் மறைந்திருக்கிறது.

ஆதலால் சக்தியிருப்பதுடன் பொருளை வேண்டாது விட்டுவிடுவதும் பொருளின் வஞ்சகத்தினின்றுந் தப்பிக்கொள்ளும் பொருட்டு அதைவிட்டு ஓடிப்போவதுமே உண்மையில் ஜுஹ்தாயிருக்கிறது. அப்துல்லா ஹிப்னுல் முபாரக்கு றஹிமஹுல்லா அவர்களை ஒருவர் "ஓ ஜாஹிதே!" என்று கூப்பிட்டார். அதற்கவர்கள் (நான் ஜாஹிதல்ல) கலீபாசரான உமருப்னுல் அப்தில் அஜீஸ் ஜாஹிதாயிருக்கிறார் என்றும், துன்யாவின் செல்வம் அவர் ஆட்சியிலிருக்கிறது என்றும், அதை உபயோகித்துக்கொள்ள அவருக்கு வலிமையிருந்தும் அதை விட்டுவிட்டாராதலால் அதில் அவர் ஜாஹிதாயிருக்கிறார் என்றும், ஒருவஸ்துவையும் வைத்துக்கொண்டிராத என்னை ஜாஹிது என்றழைப்பது எப்படிச் சரியாகும்!" என்றும் சொன்னார்கள். இப்னு அபீலைலா என்பவர் இப்னு ஷிப்ரமா என்பவரிடத்தில் "ஓ ஷிப்ரமா குமாரரே! பார்த்தீரா? இந்தநெசவுக்காரன்மகன் அபூஹனீபா நாம் எது விஷயத்திலாவது பத்வா கொடுத்தால் அதை ஒப்புக்கொள்ளாமல் நம்மிடம் திருப்பிவிடுகின்றான்" என்று சொன்னார். அதற்கு ஷிப்ரமாகுமாரர் சொன்னதாவது:—"நெசவுக்காரன் மகனோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆயினும் எனக்கு ஒன்று தெரியும். அதாவது:—துன்யா அவரைத் தேடிவருகிறது. அவர் அதைவிட்டு ஓடுகின்றார். நாமோ துன்யாவைத் தேடுகின்றோம். அது நம்மைவிட்டு ஓடுகின்றது" என்பதே. இன்னும் 'உங்களிற் சிலர் துன்யாவை நாடுகிறவர்களாயும் சிலர் ஆகிரத்தை நாடுகிறவர்களாயும் இருக்கிறார்கள்' என்று அல்லாகு தஆலா கூறுகின்ற இந்த ஆயத்து இறங்குகிறவரையில் எங்களில் துன்யாவை நேசிப்பவர்கள் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது என்று இப்னுமஸ்ஊது றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் எந்தெந்தக் காரியங்களில் அல்லாகு தஆலாவின் மறைப்பதிருக்கிறதென்று எங்களுக்குத் தெரிந்திருக்கும் நாட்களில் அவை எல்லாவற்றையும் செய்து

வருவோம் என்று முஸ்லிம்கள் சொன்னார்கள். அப்போது பின் கூறும் ஆயத்து இறங்கிற்று. அதாவது:—நீங்கள் உங்கள் உயிரைக் கொடுங்கள், உங்கள் ஊரைவிட்டுக் கிளம்புங்கள் என்று நாம் அவர்களுக்கு விதித்திருக்கிறபக்ஷம் அவர்களிற் சிலரேயொழிய மற்றவர் அப்படிச் செய்யமாட்டார்கள் என்பதே.

அறிந்துகொள்:—பனிக்கட்டியைப் பொன்னுக்கு விற்க அது அவ்வளவு பெரிய ஓர் சரக்கல்ல. புத்திமான்கள் எல்லாரும் அதற்காகப் பொன்னைக் கொடுத்துவிட மாட்டார்கள். ஆகவே பொன்னை நோக்கப் பனிக்கட்டி மிகவும் அற்பமானதா யிருக்கிறது. அதைக் காட்டிலும் ஆகிறத்தை நோக்கத் துன்யாவானது அதிக அற்பமானதாயிருக்கிறது. என்கினும், மூன்று காரணத்தால் ஜனங்கள் ஆகிறத்தைவிட்டும் தடைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். முதலாவது:—ஈமானின் பெலக்குறைவும், இரண்டாவது:—தற்போதைய இச்சைகளின் மிகைப்பும், மூன்றாவது:—தாமதப்படுத்துவதும் பின்னிட்டுச் செய்துகொள்ளலாமென்று தன் நப்ஸுக்கு மோசடியான வாக்குச் சொல்லிக்கொண் டிருப்பதுமாம். இவை எல்லாவற்றிற்கும் மீசரப்பட்டிருப்பது இச்சைகளின் மிகைப்பேயாம். ஏனெனில், தற்சமயம் அவைகளை விட்டுவிட அவனால் முடிகிறதில்லை. கைக்கு மெய்யான ரொக்கத்தையே பார்க்கின்றான். கடனை மறந்துபோகின்றான்.

ஜுஹ்தின் மேம்பாடு.

அறிந்துகொள்:—துன்யாவை நேசிப்பதின் பழிப்பில் நாம் கூறியிருப்பவை யாவும் ஜுஹ்தின் மேம்பாட்டுக்கு அத்தாக்ஷியாகும். ஆயினும் துன்யாவை நேசிப்பது மனிதனைக் கெடுக்கின்ற முஹ்லிகாத்தைச் சேர்ந்ததாயும் அதைப் பகைப்பது அவனை நற்பதவியிலாக்குகின்ற முஞ்ஜியாத்திற் சேர்ந்ததாயு மிருக்கிறது. நாம் இந்த விடத்தில் துன்யாவைப் பகைப்பதில் வந்திருக்கிற ஹதீஸுகளைச் சொல்லுவோம். ஜுஹ்து என்னும் தெண்டிப்பு அறிவாளரிடம் இருப்பதாக குர்ஆனில் கூறுவது அந்த ஜுஹ்துக்குப் பெரிய ஓர் புகழா யிருக்கிறது. அதெப்படி யென்றால், காரூனானவன் தன் சேனைகளுடன் சிங்காரமாக வெளியே கிளம்பி வந்தால் அதைப்பார்க்கிற ஒவ்வொருவரும் ஆ, எனக்கும் இப்படி உண்டாகவேண்டுமே என்று ஆசைகொள்ளுகிறவர்களா யிருந்தார்கள். அறிவை யடைந்த இல்மாளிகள் (அந்த ஆசையைவிட்டு ஓ ஜனங்களே!) உங்களுக்குக் கைசேதம் என்றும், எவன் ஈமான்கொண்டு சாலிஹான அமல் செய்தானோ அவனுக்கு அல்லா அளிக்கும் கூலி நல்லதாயிருக்கும் என

றும் சொன்னார்கள். இதன் கருத்து:—துன்யாஉடைய சிங்காரங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் ஆகிரத்துடைய சவாபு அதிக நல்லதாயிருக்கும் என்று அறிவாளர் அந்த ஜனங்களுக்கு சொன்னார்கள் என்பதேயாம். இதனாலேதான் "துன்யாவில் யாராவதொருவன் நாற்பதுநாளைக்குஜாஹிதாயிருப்பானாகில் அவனுடையமனதிலிருந்து ஆழ்ந்த அறிவுகள் என்னும் ஊற்றுக்கண்கள் திறக்கும்" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் "அல்லாஹு தஆலா உன்னை நேசிக்க வேண்டுமென்று விரும்புவாயாகில் துன்யாவில் நீ ஜாஹிதாயிரு" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் நான் ஹக்காக மூமினாயிருக்கிறேனென்று ஹாரிசா றலியல்லாகு அன்கு அவர்கள் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடம் சொன்னபோது "அதற்கு அடையாளம் யாது?" என்று நாயகமவர்கள் கேட்டார்கள். அப்போது ஹாரிசா றலியல்லாகு அன்ஹு அவர்கள் "யாறசூலல்லா! இந்த என் நபுசானது துன்யாவை எவ்வளவாக வெறுத்துவிட்டதென்றால், பொன்னும் கல்லும் இரண்டும் என் பார்வையில் சமமாயிருக்கிறது. நான் சுவர்க்க நரகங்களைப் பிரத்தியக்ஷமாகப் பார்ப்பவன்போல் இருக்கிறேன்" என்று சொன்னார்கள். அப்போது நாயகமவர்கள் அவரை நோக்கி "நீர் அடையவேண்டியதை அடைந்துவிட்டீர். இனி அதைக் காப்பாற்றிக்கொள்ளும்" என்று ஆக்கியாபித்துப் பின்னர் சொன்னதாவது:—"அப்துன் நவ்வரல்லாஹு கல்புஹு இவர் ஓர் அடிமையாயிருக்கிறார். அல்லாஹு தஆலா இவருடைய கல்பை வெளிச்சமாக்கினான்" என்பதே. இன்னும் ஒருவனுக்கு அல்லாஹு தஆலா நல்வழி காட்ட நாடுவானாகில் அவன் மனதை இஸ்லாமில் விரிவாக்குவான் என்ற இந்த ஆபத்து இறங்கினபோது அஸ்ஹாபுகள் றசூல் நாயகமவர்களை நோக்கி, "யாறசூலல்லா! இந்த விரிவாக்கலுக்குப் பொருள் ஏதாயிருக்கும்" என்று கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் "அது! அவன் கல்பில் வீசுகிற ஓர் ஒளியாயிருக்கிறது" என்றும், "அதனால் அவன் மனம் விசாலிக்கும்" என்றும் அருளிச்செய்தார்கள். "அதற்கு அடையாளம் யாது?" என்று அஸ்ஹாபுகள் கேட்க "மனம் இந்த மருட்டுத் துன்யாவை வெறுத்து அழியாத ஆகிரத்தை ஆசிப்பதும் மவுத்துக்கு முன் அதற்குரிய சாமான்களைத் தயார் செய்யத் தொடங்குவதுமே அதற்கு அடையாளம்" என்று அருளிச்செய்தார்கள்.

இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அஸ்ஹாபுகளை நோக்கி, "நீங்கள் அல்லாஹு தஆலாவுக்கு வெட்கம் வைக்க

வேண்டிய விதமாக வெட்கம் வையுங்கள்" என்று ஆக்கியாபித்த போது, அஸ்ஹாபுகள் "யாரசூலல்லா! நாங்கள் அவனுக்கு வெட்கம் வைக்காமலிருப்போமா?" என்றுசொன்னார்கள். அதற்கு நாயகமவர்கள் "அப்படியிருந்தால் பின்பு நீங்கள் புசிக்கப்போகாத ஓர் பொருளைச் சேர்ப்பவர்களாயும் நீங்கள் வசிக்கப் போகாத ஓர் இடத்தில் வீட்டைக் கட்டுகிறவர்களாயும் இருப்பானேன்?" என்று சொன்னார்கள். ஒருநாள் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் குத்பா ஓதிக்கொண்டிருக்கையில், "யாராவதொருவன் லாஇலாஹ இல்லல்லாஹு வை வேறு வஸ்துவுடன் கலக்காதபடி விளங்க சுத்தியாகச் சொல்லுவானாகில் அவனுக்குச் சொர்க்கமுண்டு" என்று அருளிச் செய்தார்கள். அப்பொழுது அலிரலியல்லாகு அன்கு அவர்கள் எழுந்து, "யாரசூலல்லா! லாஇலாஹ இல்லல்லாஹுவில் கலக்கக்கூடாத அந்தவஸ்து ஏதாயிருக்கும்? அதை விவரிக்கவேண்டும்" என்றுகேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள், "துன்யாவை உவப்பதும் அதைத் தேடுவதுமான இக்குணம் அதில் கலக்கக்கூடாது" என்றும், "சில ஜனங்கள் நபிமார்களைப்போல் பேசுகிறவர்களாயும் ஜப்பார்களென்னும் கொடியவர்களின் செய்கையைச்செய்கிறவர்களாயும்இருக்கிறார்கள்" என்றும், "ஒருவனில் இக்குணம் இல்லாமல் அவன் லாஇலாஹ இல்லல்லாஹு என்று சொல்லுவானாகில் அவனுக்குச்சொர்க்கத்தில் ஜாகைஉண்டு" என்றும் திருவுளமானார்கள். இன்னும் "யாராவதொருவன் துன்யாவில் ஜாஹிதாவானாகில் அல்லாஹுதஆலா அவனுடைய மனதுக்கு ஹிக்மத்தென்னும் வாசலைத்திறந்து அவனுடைய நாவை அந்த ஹிக்மத்தின்படி பேசச்செய்வான்" என்றும், "துன்யாவில் வரும்நோயையும்அந்தநோய்க்கு அவிழ்தத்தையும்நோயாளிக்கு வைத்தியம்செய்யும்முறையையும்அவனுக்குக்காட்டுவான்" என்றும், "அவனைத் துன்யாவில் இருந்து சலாமத்துடன் தாருஸ்ஸலாம் என்னும் சொர்க்கபதிக்குக் கொண்டுபோவான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். ஒருநாள் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் அஸ்ஹாபுகளுடன் புறப்பட்டுப்போகையில் ஒட்டகங்களின் ஓர் மந்தையினிடம் சென்றார்கள். எல்லா ஒட்டகங்களும் கன்றுகச் சினைப்பட்டிருந்தன. அறபிகளுக்கு ஒட்டகம் மிகவும் சிறந்த செல்வமாயிருக்கிறது. ஏனெனில், அது அவர்களுக்குள் ஆஸ்தியாயிருப்பதுடன் அதன் பாலும் இறைச்சியும் உரோமமும் அவர்களுக்கு உபயோகப்படுவதினாலென்க. அந்த ஒட்டகங்களை றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஏறெடுத்துப்பார்க்காமல் முகத்தைத்திருப்பிக்கொண்

டார்கள். அப்போது அஸ்ஹாபுகள், "யாரசூலல்லா! இது மிகவும் சிறந்த பொருளாயிருக்கத் தாங்கள் இதைப்பார்க்காமல் முகத்தைத் திருப்பிக்கொண்ட காரணம் யாதோ?" என்று கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் "ஓ என் அஸ்ஹாபுகளே! இதைப் பார்ப்பதிலிருந்து அல்லாஹுதஆலா என்னை விலக்கி "ஓ நபியே! நாம் அவர்களிற் சிலருக்கு உபயோகப்படுத்திவைத்த பொருளின் பக்கம் நீர் உமது இருவிழியால் ஏறெடுத்துப் பார்க்கவேண்டாம் என்று ஆக்கியாபித்திருக்கிறான் என மொழிந்தார்கள். இன்னும் சிலர் ஈசா அலைகிஸ்ஸலாமவர்களின் சமூகத்தில் "யாரூஹல்லா! எங்களுக்கு உத்தரவளித்தால் தாங்கள் இபாதத்து செய்யப் போதுமான ஓர் ஜாகையைத் தங்களுக்கு நாங்கள் கட்டுகிறோம்" என்றார்கள். அவர்களை நோக்கி "ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் "ஓ ஜனங்களே! நீங்கள் ஜலத்தின்மேல் வீடுகட்டுவீர்களா?" என்றுகேட்க, அவர்கள் "அதெப்படிக் கட்டமுடியும்?" என்றார்கள். அப்போது ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் "ஓ ஜனங்களே! துன்யாவின் ஆசையுடன் எப்படி இபாதத்துசெய்ய முடியும்?" என்றார்கள். இன்னும் "அல்லாகு தஆலா உன்னை நேசிக்க வேண்டுமென விரும்புவாயாகில் நீ துன்யாவை விட்டுவிடு" என்றும், "ஜனங்கள் உன்னை நேசிக்கவேண்டுமென விரும்புவாயாகில் நீ அவர்களின் பொருளை விட்டுவிடு" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

ஹப்ஸா ரலியல்லாஹுஅன்ஹா அவர்கள் தங்கள் தகப்பனாரான உமர்ரலியல்லாகு அன்கு அவர்களை நோக்கி "என் தந்தையே! தங்களுக்குப் பற்பல பட்டணங்களிலிருந்து கொள்ளைப்பொருள் வருகின்றதால் தாங்கள் இந்த உடுப்பிலும் அதிக மெதுவான உடுப்பை உடுக்கவேண்டும்" என்றும், "தாங்களும் தங்களோடிருப்பவர்களும் உண்பதற்காக இந்த உணவிலும் அதிக நல்ல உணவைச் சமைத்துக்கொள்ளவேண்டும்" என்றும் சொன்னார்கள். அப்போது உமர்ரலியல்லாகு அன்கு அவர்கள் தங்கள் மகளை நோக்கி "ஹப்ஸாவே! புருஷனுடைய நிலைமையைப் பெண்ஜாதி அறிந்திருப்பதுபோல் மற்றவர் அவ்வளவு நன்றாய் அறியமாட்டார்கள். ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய நிலைமையை மற்றவர் அறிந்திருப்பதினும் நீ நன்றாய் அறிந்திருக்கிறாய். ஆதலால் அல்லாவின் மீது ஆணையாகச் சொல். ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு நபிபட்டம் வந்து பல வருஷங்கள் வரையில் அவர்களும் அவர்கள் வீட்டாரும் பகலில் உண்டால் இரவில் பட்டினியாயிருந்தும் இரவில் உண்டால்

பகலில் பட்டினியாயிருந்ததும் உனக்குத் தெரியாதா? இன்னும் நான் ஆணையிட்டுக் கேட்கிறேன். கைபர் கோட்டையைப் பிடிக்கிறவரையில் அவர்களுக்குப் பல வருஷங்கள் கழிந்தனும் அப்போது அவர்கள் பேரீத்தம்பழமும் வயிறுறப் புசிக்கவில்லை என்பதும் உனக்குத் தெரியுமல்லவா? இன்னும் நான் ஆணையிட்டுக் கேட்கிறேன். ஒருநாள் அவர்களுக்கு நன்றாக மறவையில் உணவு கொண்டுவந்து வைத்தபோது அது பொருத்தமில்லாமையால் அவர்கள் முகத்தில் கோபக்குறி யுண்டானதும் இதைத் தரையின்மேல் வையுங்கள் என்று அவர்கள் ஆக்கியாபித்ததும் உனக்குத் தெரியாதா? இன்னும் நான் ஆணையிட்டுக் கேட்கிறேன். இரவில் இரட்டையாக மடிக்கப்பட்ட ஓர் கம்பளியின்மேல் அவர்கள் சயனித்து வந்ததும் ஓரிரவில் அந்தக் கம்பளியை நாலாக மடித்துப் போட்டதில் அது அவர்களுக்கு அதிக மிருதுவாயிருந்தநிமித்தம் (அதைக் குறித்து மறுநாள் அவர்கள்) இந்த மிருதுவானது என்னை இரவின் தொழுகையிலிருந்து விலக்கிவைத்த தாகையால் கம்பளியை இரண்டு மடிப்புக்கு மேல் அதிகப்படுத்தாமல் முன்போலவே விரியுங்கள் என்று உத்திரவு செய்ததும் உனக்குத் தெரியாதா? இன்னும் நான் ஆணையிட்டுக் கேட்கிறேன். ஒருநாள் அவர்களின் உடையைக் கழுவி உலரவைத்தபோது அது உலர்வதற்குள்ளாகப் பிலால்வந்து தொழுகைக்குப் பாங்கு சொன்னதும் அப்போதவர்களுக்கு வேறு உடை யில்லாமையால் வெளியே புறப்படச் சாத்தியப்படாமலிருந்ததும் உனக்குத் தெரியுமல்லவா? இன்னும் நான் ஆணையிட்டுக் கேட்கிறேன். பனீலபர் என்னும் குலத்திலுள்ள ஓர் பெண்பிள்ளை அவர்களுக்காக ஓர் அரை வஸ்திரமும் மேல் போர்வையும் செய்துகொண்டிருந்து அவ்விரண்டும் முடிவுபெறுவதற்குள்ளாக முதலில் ஒன்றை செய்து முடித்து அவர்களுக்கு அனுப்பினதும் அவர்கள் அதை முதலில் போர்த்து முன்னால் முடிபோட்டுக்கொண்டு வெளியேபுறப்பட்டதும் அந்தப் போர்வையே தவிர அப்போது அவர்களுக்கு வேறு போர்வை யிருந்ததில்லை என்பதும் உனக்குத தெரியாதா?" என்று கேட்டார்கள். அப்போது ஹப்ஸா றலியல்லாகு அன்ஹா அவர்கள் "என் தந்தையே! தாங்கள் சொன்னதுபோல இவையெல்லாம் எனக்குத் தெரியும்" என்றார்கள். இதைக்கேட்ட உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் உணர்வுமாறுகிறவரையில் அவ்வளவாக அழுதார்கள். அவர்களின் அழுகையைக் கண்டு ஹப்ஸா றலியல்லாகு அன்ஹாவுங்கூட அழுதார்கள். பின்பு உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் ஹப்ஸாவை

நோக்கி "என்னுடைய இரண்டு தோழர்களான முகம்மது சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களும் அபூபக்கர் சித்தீகு றழியல்லாகு அன்கு அவர்களும் எனக்கு முன்னே போயிருக்கிறார்கள். அவர்கள் சென்ற வழி நானும் செல்லுவேனாகில் அவர்களைப் பெற்றுக்கொள்ளுவேன், இல்லையாயின் நான் வேறு வழியில் நடத்தப்படுவேன். ஆதலால் அவர்களுடன் நித்தியமான சுகஜீவனத்தை அடையும் பொருட்டு நானும் அவர்களைப்போல் கஷ்ட ஜீவனத்தைச்சகித்துக்கொள்ளக் கடமைப் பட்டவனாயிருக்கிறேன்" என்று சொன்னார்கள். றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்களுடைய அஸ்ஹாபுகளில் ஓர் ஸஹாபி றழியல்லாகு அன்கு அவர்கள் தாபியீன்களில் மூத்தின கூட்டத்தைக் கண்டு "ஓ ஜனங்களே! உங்கள் இபாதத்து அஸ்ஹாபுகளுடைய இபாதத்திலும் அதிகமா யிருக்கிறது" என்றும், "ஆனால் அஸ்ஹாபுகள் உங்களைவிடத் துன்யாவில் அதிக ஜாஹிதாயிருந்த நிமித்தம் அவர்கள் உங்களைக் காண அதிக நல்லவர்களா யிருந்தார்கள்" என்றும் சொன்னார்கள். இன்னும் ஜுஹ்தானது துன்யாவில் மனோசுகமுமாய்த் தேகாரோக்கியமுமா யிருக்கிறது" என்று உமர் றழியல்லாகு அன்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் "துன்யாவில் ஜாஹிதா யிருப்பவனில்நின்றும் இரண்டு ரக்அத்துத் தொழுகையானது எல்லா முஜ்தஹிதுகளும் தங்கள் மரணபரியந்தம் செய்கிற இபாதத்தைக் காண அதிக வரிசையுள்ளது" என்று இபுனுல் மஸ்ஊது றழியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் உணவில்லாமை, உடையில்லாமை; வறுமை, சிறுமை என்னும் இந்நான்கு வஸ்துக்களுக்கும் நீ பயப்படாமலிருக்கும்போதுதான் இகுலாசுடன் அமல் செய்ய உன்னால் முடியும்" என்று ஸஹ்லுத்துஸ்தரீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள்.

### ஜுஹ்தின் வகுப்புகளை விளக்கல்.

அறிந்துகொள்:—ஜுஹ்துக்கு மூன்று வகுப்புகள் உண்டு. முதலாவது வகுப்பு:—மனிதன் துன்யாவை வேண்டாது விட்டுவிடுவதும் அவன் மனம் அதை விருப்பத்துடன் நோக்கிக்கொண்டிருப்பதும், அந்த விருப்பத்தை அடக்குவதற்காக அவன் தெண்டித்து சபுறு செய்வதுமாம். இவனை ஜாஹிது என்றல்ல, முத்தஜஹ்ஹிது என்று சொல்லுவார்கள். என்கிலும் இது ஜாஹிதுடைய வழியின் ஆரம்பமாம். இரண்டாவது வகுப்பு:—அவன் மனம் துன்யாவை விருப்பமாக நோக்காமல் வெறுப்பாகப் பார்ப்பதும் அந்த வெறுப்பை ஓர் அமலாக அவன் நினைப்பதுமாம். இவன் ஜாஹிதுதான். ஆயினும் இந்த

ஜுஹ்தில் தோஷமில்லாமற் போகவில்லை. மூன்றாவது வகுப்பு:— ஜுஹ்திலும் ஜாஹிதா யிருப்பதாம். அதாவது:—நான் ஜுஹ்து செய்கிறேன் என்கிற எண்ணம் தனக்குவராமலும் அதை ஒரு அம லாக நினைக்காமலுமிருப்பதாம். இவனுக்கு உபமானம் ஓர் மனிதனுக் குச் சமானமாம். அந்த மனிதன் ஓர் அரசனிடத்தில் மந்திரியாய் அமர்வதற்காக அரசனுடைய மாளிகையை நாடிச்சென்றான். மாளி கைவாயிலில்நின்ற ஓர் நாயானது அவனை உள்ளே பிரவேசிக்கவிடா மல் தடுக்கின்றது. அந்தத் தடையிலிருந்து தப்பித்துக் கொள்வதற் காக அவன் ஓர் ரொட்டித்துண்டை அந்த நாய்க்கு முன்னே எறிந் தான். பின்பு மந்திராலோசனைச் சபையிற் போய்ச் சேர்ந்தான். அந்த ரொட்டித்துண்டு அவனுக்குக் கிஞ்சிற்றும் ஓர் பொருட்டா யிருக்குமென்பது பொருந்தாவிஷயம். துன்யா முழுவதும் ஓர் ரொ ட்டித்துண்டுக்குச் சமானமும் ஷைத்தான் ஓர் நாய்க்குச் சமானமு மாம். அவன் அல்லாகு தஆலாவுடைய சந்நிதான வாசலில் நின்று குரைத்துக்கொண் டிருக்கிறான். துன்யாவென்னும் ரொட்டித்துண் டை நீ அவனுக்கு எறிந்து விடுவாயாகில் அவன் உன்னைவிட்டு வில கிப்போவான். மந்திரி வேலையை நோக்க ரொட்டித்துண்டு மிகவும் அற்பமாம். ஆகிரத்தை நோக்க இந்தத் துன்யா முழுவதும் அதி லும் மிக அற்பமேயாம். ஏனெனில் ஆகிரத்துக்கு முடிவில்லை. துன் யாவுக்கு முடிவிருக்கிறது. முடிவை யுடையதற்கு முடிவில்லாத தோடு யாதொரு சம்பந்தமில்லை. இதனாலேதான் சில ஜனங்கள் பாயஜீதுல் புஸ்தாமி றஹ்மத்துல்லாஹி அலைஹி யவர்களிடத்தில் "இன்னார் ஜுஹ்து விஷயமாக ஏதோ பேசுகிறார்" என்று சொன் னதற்கு, "எது விஷயத்தில் அவர் ஜுஹ்தைப் பேசுகிறார்?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "துன்யா விஷயத்தில்" என்று சொன்னார்கள். அப்போதவர்கள் "ஒருவன் துன்யா விஷயத்தில் ஜுஹ்து செய்வதற்குத் துன்யா ஓர் பெரியவஸ்து அல்லவே; எதில் ஜுஹ்து செய்யக்கூடுமோ அப்படிப்பட்ட ஓர் பொருள் முதலில் வேண்டுமே" என்று சொன்னார்கள்.

இனி எதற்காக ஜுஹ்து செய்கிறார்களோ அது மூன்று வகுப் புகளாய்ப் பிரியும். முதலாவது:—ஆகிரத்துடைய அதாபைவிட்டுத் தப்புவதற்காக மாத்திரம் ஜுஹ்து செய்வதாம். அதற்காக இவன் தன் உயிரைக் கொடுக்கவும் சம்மதிப்பான். இது அச்சமுள்ளவர் களின் ஜுஹ்தெனப்படும். ஒருநாள் மாலிகுத்தீனா றஹ்மத்துல் லாஹி அலைஹியவர்கள் "நான் இன்றிரவில் அல்லாகு தஆலாவினிடத்

தில் பெரிய அவிஷாக்ஞ்செய்து அவனிடத்தில் போக்கத்தைக் கேட்டேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது:—ஆகிரத்துடைய சுவாபை அடைவதற்காக ஜுஹுது செய்வதாம். இது ஈஜா, மஹப்பத்துகளினால் அதாவது ஆதாவினாலும் ஆசையினாலும் எழுந்த ஜுஹுதாயிருப்பதால் மிகப்பூர்த்தியுள்ளதேயாம். இது ஆதாபுள்ளவர்களின் ஜுஹுது என்னப்படும். மூன்றாவது:—இது மிகவும் சிறப்பமான வகுப்பு. அதாவது:—அவன் மனதில் நரகத்தின் அச்சமுமில்லாமல் சொர்க்கத்தின் ஆதரவுமில்லாமல் அல்லாகு தஆலாவின் நேசமே குடிகொண்டு அந்த நேசமானது துன்யா ஆகிரத்துகளை அவன் மனதிலிருந்து நீக்கிவிடுவதாம். அவனைத் தவிர உள்ளதைக் கடைக்கண்ணாலும் பார்க்க அவன் வெட்கம் வைப்பதுமாம். உதாரணமாக:—ராபிஆ றலியல்லாகு அன்ஹா அவர்களிடத்தில் சிலர் சொர்க்கத்தைக் குறித்துப் பேசினபோது அவர்கள் அல்ஜாரு ஸும்மத்தாரு என்று சொன்னார்கள். இதன் கருத்து:—வீட்டுக்குடையவன் வீட்டைக்காண மிகவல்லவன் என்பதாம். ஒருவனுக்கு அல்லாகு தஆலாவுடைய மஹப்பத்து வெளியானால் இஹலோகம் ... இன்பத்துக்கு எதிரில் சிறுவர் பிடித்தாடும் விளையாடும் இன்பம் எப்படி இழிவாகத் தோற்றுமோ அப்படியே சுவர்க்கத்துடைய இன்பம் அவன் கண்ணுக்கு அற்பமாய்ப்போம். ஆனால் அந்த விளையாட்டானது இஹலோகத்தைக்காட்டிலும் சிறுவனுக்கு அதிக பிரியமாய் இருக்கக்கூடும். ஏனெனில் சிறுவன் இன்னும் புத்தி பூர்வமாகாமல் குறைச்சலுள்ளவனாயிருப்பதனால் இஹலோக இன்பமென்பதே அவனுக்குத் தெரியாமலிருப்பதினாலேயே. ஒருவனுக்கு அல்லாகு தஆலாவுடைய திருச்சமுகத்தின் தெரிசனையன்றி வேறு நாட்டமிருக்குமாயின் அவன் இன்னும் பாலிக ஆகாத நசீபனே; அதாவது இன்னும் புத்தி பூர்வகமாகாதவனாயும் மனுஷீக ஸ்தானத்துக்கு இன்னும் செல்லாதவனாயுமிருக்கிறான்.

இனி எதை விட்டுவிடவேண்டுமோ அதனிஷயத்தில் ஜுஹுது பலவகைப்பட்டிருக்கிறது. ஒருவன் துன்யாவிலுள்ளதும் சிலவற்றைக்கள விட்டுவிட்டவனாயிருப்பான். யாதொரு அவசியமும் ஆகிரத்தின்வழிக்குத் தேவையுமில்லாத எவ்வளவு வஸ்துவில் அவனுடைய நபுஸுக்கு ஓர் இன்பமிருக்கின்றதோ அவற்றை விட்டுவிடுவதே நிர்க்க ஜுஹுதாம். ஏனெனில், பொருளாலும் பெரியதனத்தாலும் உண்பதாலும் உடுப்பதாலும் பேசுவதாலும் தூங்குவதாலும் ஜனங்களுடன் உட்காருவதாலும் பாடம் போதிப்பதாலும் வகுத்து சொல்லுவ

தாலும் ஹஜ்ஜைச் சிவாயத்து செய்வதாலும் சுகப் படுகின்ற இன்பங்களை துன்யா என்பதாகப் பொருளாயிருக்கிறது. ஆனால் அல்லாவின் பக்கம் அழைக்கிற நாட்டங்கொண்டு ஒருவன் செய்கிற காரியமே தவிர மற்றப்படி அவன் தனது கபுஸின் பெருமைக்காகச் செய்கிற காரியமெல்லாம் துன்யாவிற் சேர்ந்ததேயாம். அபூசுலைமான் தாரானீ றஹிமஹுல்லா அவர்கள் "ஜுஹ்து விஷயத்தில் நான் அநேகம் சொற்களைக் கேட்டிருக்கிறேன்" என்றும், "ஆயினும் எதுவொன்று உன்னை அல்லாஹு தஆலாவின் ஞாபகத்திலிருந்து வேறு பாக்கில் ஆக்குகின்றதோ அதை நீ விட்டுவிடுவதே என்னிடத்தில் ஜுஹ்தாயிருக்கிறது" என்றும், "எவனொருவன் நிகாஹு செய்வதிலும் சபர் போவதிலும் ஹதீஸை எழுதுவதிலும் பாக்கியமாயிருக்கிறானோ அவன் துன்யாவின் பக்கம் முகம்நோக்கினவனாயிருக்கிறான்" என்றும் சொல்லுகிறார்கள். இன்னுமவர்களிடத்தில் கல்புல் ஸலீமுடன் சாதாமனத்துடன் அல்லாவினிடம் வந்தவன் அன்றி (மற்றவன் ஈடேறமாட்டான்) என்று சொல்லப்பட்டிருக்கிற இந்தச் சாதாமனம் எதாயிருக்கும்?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "எந்த மனதில் அல்லாஹு தஆலாவே தவிர வேறு யாதொரு வஸ்துவுமில்லையோ அந்த மனமே சதாமனம்" என்று சொன்னார்கள். ஸஹாபா அல்லாஹு அன்ஹும் அவர்களுடைய மக்கள் ஸஹாபா அலைஹிஸ்ஸலாமவர்கள் ரெட்டுச்சாக்கை உடுப்பவர்களாயிருந்தார்கள். ஏனெனில் மிருதுவான உடுப்பில் கபுசுக்கு ஓர் இன்பமிருப்பதுபற்றி அதனுல் தங்கள் தேகத்துக்குச் சுகம் கொடுக்கக்கூடாதெனக் கருதியேயாம். அந்தச்சாக்கை உடுத்திவந்ததினால் அவர்கள் தேகத்தில் சில்லிசில்லியாகக் குழிகள் விழுந்துபோயிருந்தன. அப்போதவர்களைப் பஷ்மி என்னும் கம்பளத்தை உடுக்கும்படி தாயாரவர்கள் கேட்டுக்கொண்டதினால் அதுபோல் பஷ்மியை உடுத்தார்கள். அப்போது "ஓ ஸஹ்யாவே! நீர் என்னைவிடத் துன்யாவை மேலாகத் தெரிந்துகொண்டீர்" என்று ஒலி வந்தது. ஸஹ்யா அலைஹிஸ்ஸலாம் அழுதார்கள். பின்பு முன்போலவே சாக்கை உடுத்திக்கொண்டார்கள். அறிந்துகொள்:—இது தீர்ந்த ஜுஹ்தாயிருக்கிறது. ஒருவனும் இந்த ஸ்தானத்தைத் தேட மாட்டான். ஆனால் ஜுஹ்து விஷயத்தில் அவரவருடைய ஸ்தானமாகிறது அவர்கள் விட்டுவிட்ட அந்த வஸ்துவின் மதிப்புக்குத் தக்க அளவாயிருக்கும். எப்படி சிலபாவங்களை விட்டுத் தவ்பாச்செய்வது ஆகுமோ அப்படியே [illegible] ஜுஹ்து செய்வதும் ஆகும், ஆகுமென்றது எப்பொருளைக் கருதியென்றால்

அவைகளில் சுவாபில்லாமலும் பிரயோசனமில்லாமலும் போகாது என்ற பொருளைக்கருதியேயாம். ஆனால் தவ்பாச்செய்கிறவனுக்கும் ஜுஹ்து செய்கிறவனுக்கும் ஆகிரத்தில் கொடுப்பதாக வார்த்தைப்பாடு செய்யப்பட்டிருக்கிற அந்த உன்னதஸ்தானம் யாருக்குக்கிடைக்குமென்றால், எல்லாப் பாவங்களினின்றும் தவ்பாச்செய்தவனுக்கு அல்லது எல்லா இன்பங்களையும்விட்டு ஜுஹ்து செய்தவனுக்கேயாமென்க.

## துன்யாவில்நின்றும் ஜாஹிது போதுமாக்கிக் கொள்ளவேண்டிய வஸ்துக்களின் விவரம்.

அறிந்துகொள்:— அநேக ஜனங்கள் துன்யாவென்னும் ஆழமான ஓடையில் விழுந்துபோயிருக்கிறார்கள். அதன் ஓடைகளின் ஆழத்துக்குத் தீர்மானமில்லை. என்கிலும் துன்யாவில் வேண்டிய முக்கிய வஸ்துக்கள் ஆறேயாம். அவை: ஊணும் உடையும் வீடும் வீட்டுச் சாமானும் பெண்ஜாதியும் பொருள், கௌரவம் இவைகளுமேயாம்.

முதலாவது முக்கியவஸ்து ஊணாகும். ஊணின் இனத்திலும் அதன் அளவிலும் அதற்கு வேண்டிய சால்னாவாகிய கறியிலும் கவனிக்கவேண்டியதிருக்கிறது. இனி இனத்தில் மிகவும் தாழ்ந்தது மனிதன் தன தேகத்துக்குத் திணியாகக் கொடுக்கின்ற யாதொரு வஸ்துவேயாம். முழுதும் கப்பிரொட்டியாயிருந்தாலும் சரியே. மத்திமமானது கார்கோதுமை, கம்பு இவைகளின் ரொட்டியாம். உயர்ந்தது மணிகோதுமையின் தெள்ளாத மாவின் ரொட்டியாம். தெள்ளிய மாவின் ரொட்டியைப் புசிக்கிறவனாயிருந்தால் அவன் தன் ஜுஹ்தைவிட்டு அப்புறப்பட்டு இன்பசுகத்துக்கு எட்டினவனாவான். இனி (ஓர் காலைக்கு வேண்டிய) உணவின் அளவில் மிகவும் தாழ்ந்தது அரைறாத்தலும் மத்திமமானது ஒருறாத்தலும் உயர்ந்தது ஒரு முத்துமாம். இந்தமுத்தே (கப்பாராவில்) மிஸ்கீன்களுக்காக ஷரகில் ஏற்படுத்தப்பட்ட அளவாயிருக்கிறது. இதற்கு மேல் அதிகப்படுத்துவானாகில் அவன் தொப்பையில் செய்யும் ஜுஹ்து அழிந்துபோகும். இனி, பின்னுக்கு வேண்டுமென்று காப்பாற்றிவைப்பதில் மிகவும் மேலான தரஜாவாகிறது பசி அதிகரிக்கும்போது அதைத் தணிக்கக்கூடிய யாதொரு வஸ்துவையன்றி வேறொன்றையும் தங்கவைத்துக்கொள்ளாமலிருப்பதாம். ஏனெனில் நீண்டகாலம் ஜீவித்திருக்கலாமென்ற நினைவைச் சுருக்குவது ஜுஹ்துக்கு அடிமூடாயும் அந்த நினைவை நீட்டுவது உதிருகைக்கு அடிமூடாயுமிருப்பதினாலென்க. அதில் மத்திமமானது ஒரு மாசத்தின்

அல்லது நாற்பது நாட்களின் உணவைத் தங்கரித்துக் கொள்வதும் தாழ்ந்தது ஒருவருஷத்தின் உணவைத் தங்கரித்துக்கொள்வதுமாம். ஒரு வருஷத்தின் உணவுக்குமேல் அதிகமாகத் தங்கரித்துக் கொள்ளுவானாகில் அவன் ஜுஹ்தை விட்டும் நிர்ப்பாக்கியனா யிருப்பான். ஏனெனில், ஒரு வருஷத்துக்குமேல் அதிகமாக ஆயுளை அண்டத்திருக்கலாமென்று ஆதரவுவைப்பவன் எவனோ அவனிடத்தில் ஜுஹ்து உண்டென்பது சரியாகாது. றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் (தங்கள் சம்ரக்ஷணைக் குட்பட்ட) தங்கள் வீட்டாருக்கு ஒரு வருஷத்தின் உணவைத் தங்கரித்து வைப்பவர்களா யிருந்தார்கள். ஏனெனில் சபுரு செய்துகொண்டிருக்க அவர்களுக்குச் சக்தியிருந்ததில்லையாதலினாலென்க. ஆனால் தங்களுக்காக இராத்திரிக்கு வேண்டுமென்றும் தங்கரித்து வைக்கமாட்டார்கள். இனி உணவுடன் சேர்த்துக்கொள்ளும் கறியில் மிகவும் தாழ்ந்தது சிருக்காவும் கீரையுமாம். நடுத்தரமானது (ஜைத்தூன்) நெய்யும் அதனால் செய்யப்படும் வஸ்துவுமாம். உயர்ந்தது இறைச்சியாம். இறைச்சியை எப்போதும் சேர்த்துக்கொள்ளுவானாகில் ஜுஹ்து போய்விடும். வாரத்தில் இரண்டொருதரத்துக்குமேல் அதிகமாகப் புசிக்காம லிருப்பானாகில் ஜுஹ்துடைய தரஜாவைவிட்டும் அவ்வளவாக அப்புறப்படமாட்டான். இனி உண்ணுகிற காலமாவது:—ஒருநாளில் ஒருதரத்துக்குமேல் உண்காமலிருக்கவேண்டும். இரண்டுநாளைக்கொருதரம் உண்பானாகில் இது மிகவும் நிறப்பமான ஜுஹ்தாம். ஒருநாளில் இரண்டுதரம் உண்பானாகில் இது ஜுஹ்தாகாது. யாராவதொருவன் ஜுஹ்தை அறிய நாடுவானாகில் அவன் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடையவும் அஸ்ஹாபுகளுடையவுமான அஹ்வால்களை நோட்டமிட்டு அறியக்கடவன். ஆயிஷா றளியல்லாகு அன்ஹா அவர்கள் சொல்லுகிறதாவது:—"ஒருபோது றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வீட்டில் நாற்பதுநாள்வரையில் (அடுப்பும்)விளக்கும் எரிந்ததில்லை. அப்போது பேரீத்தம்பழமும் தண்ணீருமேதவிர(சாலன்சேர்ந்த) வேறு உணவு இருந்ததில்லை. அவர்களுக்கு இப்படியும் ஓர்காலம் கழிந்தது" என்பதே. ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள்சொல்லுகிறதாவது: "ஒருவன் பிருதவுசென்னும் சொர்க்கபதியைத் தேடுகிறவனா யிருப்பானாகில் அவன் கார்கோதுமை ரொட்டியை உணவாகப் புசிப்பதும் நாய்களுடன் குப்பைமேட்டில் தூங்குவதும் அவனுக்கு அதிகமேயாம்" என்பதே. இன்னுமவர்கள் தங்கள் ஹவாரிய்யூன்களைப்பார்த்து "ஓ என் அஸ்ஹாபுகளே! நீங்கள் கார்கோதுமை

ரொட்டியையும் கீரையையும்உணவாகப் புசியுங்கள்" என்றும், "மல்
கோதுமையைப் புசிப்பீர்களாகில் அதன் ஷுக்ரை நிலைப்படுத்த
உங்களால் முடியாதாகையால் நீங்கள் அதனிடம் நெருங்கவேண்
டாம்" என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டாவது முக்கியவஸ்து உடையாம். ஜாஹிதுக்கு, ஒரு
உடுப்பைக்கான அதிகமாயிருக்கக்கூடாது. உடுப்பைத் தோய்த்தால்
அவனுக்கு வேறு உடையில்லாமல் அவன் நிருவாணனாயிருக்கவே
ண்டும். இரண்டு உடுப்புகள் இருக்குமாகில் அவன் ஜாஹிதாகமாட்
டான். உடுப்பில் மிகவும்குறைந்தது ஒருசட்டையும் ஒருதொப்பியும்
ஒரு செருப்புமாம். மிகவும் அதிகப்பட்டது இம்மூன்றுடன் ஒரு
தலைப்பாகும் ஒரு காற்சட்டையுமாம். இனி உடையின் இனத்தில்
மிகவும் தாழ்ந்தது ரெட்டுச்சாக்கும் நடுத்தரமானது உறத்த கம்
பளியும் உயர்ந்தது உறுத்த நூற்றுணியுமாம். மிருதுவாயும் மெல்லிய
தாயும் இருந்தால் அவன் ஜாஹிதாகமாட்டான். ரசூல் சல்லல்லாகு
அலைஹிவசல்லமவர்கள் வபாத்தை யடைந்தபோது ஆயிஷா றலியல்
லாகு அன்ஹா அவர்கள் ஒருகம்பளியையும் உறத்த ஒரு அரை வஸ்
திரத்தையும் வெளியே கொண்டுவந்து காட்டி "நாயகமவர்களுக்கு
இதுதான்" உடையாயிருந்தது என்று சொன்னார்கள். ஒருவன் அல்
லாகு தஆலாவினிடத்தில் நேசனாயிருந்தபோதிலும் பிரபல்லியமான
உடையை உடுப்பானாகில் அவன் அதைக் களைந்து அப்புறப்படுத்து
மிறவரையில் அவனைவிட்டு அல்லாகு தஆலா முகம் திருப்பாமலிருப்
பதில்லை என்றும், ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்களுடைய
அரை வஸ்திரமும் கம்பளமுமான இரண்டு உடைகளின் கிரயம்
பத்து திர்ஹத்துக்கு அதிகப்பட்டிருந்ததில்லை என்றும், சில
சமயங்களில் அவர்களின் உடையை எண்ணெய் வாணியனுடைய
உடையென்று ஜனங்கள் சொல்லும்படி அது அவ்வளவு அழுக்கா
யிருந்ததுமுண்டு என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. ஒருமுறை ரசூல்
சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்களுக்குப் பூட்டாக்கள் விழுந்த ஓர்
உடையை ஜனங்கள் ஹதியாவாகக் கொண்டுவந்தார்கள். அவர்கள்
அதை உடுத்துப் பின்பு களைந்துவிட்டதுமன்றி "இதில் விழுந்திருக்
கும் இந்தப் பூட்டாக்கள் என் கண்ணைக் கவர்ந்துகொண்டன" என்
றும், "இதைக் கொண்டுபோய் அபூஜஹைமுக்குக் கொடுத்து அவ
ருடைய கம்பளத்தை வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்றும் சொ
ன்னார்கள். இன்னும் ஒருமுறை அவர்களுடைய பாதரக்ஷைக்கு
புதியவார் மாட்டியிருந்தது. அப்போது நாயகமவர்கள் "தொழுகை

யில் என்கண் இதன் பக்கம் செல்வது எனக்கு இஷ்டமில்லை" என்றும், "இதைக் கழட்டிவிட்டு அந்தப் பழையவாரையே மாட்டுங்கள்" என்றும் சொன்னார்கள். இன்னும் ஒருமுறை அவர்கள் மிம்பரின்மீதிருந்தபோது தங்கள் விரலிலிருந்த மோதிரத்தின்மேல் அவர்கள் பார்வைவிழ உடனே அதைக்கழட்டி எறிந்துவிட்டு "எனக்கு இதன் மேல் ஒரு பார்வையும் உங்கள்மேல் ஒரு பார்வையுமா?" என்று சொன்னார்கள். இன்னும் ஒருமுறை அவர்களுக்காகப் புதிய பாதரக்ஷை ஒன்று கொண்டுவரப்பட்டது. அவர்கள அல்லாகு தஆலாவுக்கு சஜ்தாசெய்து பின்பு வெளியேவந்து முதல்முதல் எந்த ஏழையைக் கண்டார்களோ அந்த ஏழைக்கு அந்தப் பாதரக்ஷையைக்கொடுத்துவிட்டு "இது என் கண்ணுக்கு அழகாய்த்தோன்றினபடியால் அல்லாகுதஆலா என்மீது கோபிப்பான் எனப்பயந்தேன்" என்றும், அதற்காக சஜ்தாசெய்தேன்" என்றும் சொன்னார்கள். இன்னுமவர்கள் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹாவைநோக்கி "யா ஆயிஷா! நீ என்னை அடைய விரும்புவாயாகில் துன்யாவில்நின்றும் யாத்திரைக்காரர் வைத்துக்கொள்ளும் உணவின் அளவையே போதுமாக்கிக்கொள்" என்றும், "ஒட்டுப்போட்டுத் தைத்துக்கொள்ளாதவரையில் எந்த சட்டையையும் உடம்பிலிருந்து அப்புறப்படுத்தாதே" என்றும் சொன்னார்கள். உமர் றலியல்லாகு அன்கு அவர்களின் உடையில் பதினான்கு ஒட்டுகள்போட்டுத் தைத்திருந்ததை ஜனங்கள் எண்ணிப்பார்த்திருக்கிறார்கள்.

அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் அரசாக்ஷியின் காலத்தில் மூன்று திருஹத்துக்கு ஒருசட்டையைவாங்கி அதில் தங்கள்கையளவுக்குமேல் நீட்டாயிருந்ததைக்கிழித்துவிட்டதுமன்றி "இந்தப் பரிவட்டத்தைக் கொடுத்த அந்த ஆண்டவனுக்கே புகழ்" என்று நன்றியறிந்து ஷுக்குரும்செய்தார்கள். இன்னுமொருவர் "சுபுயானு சவ்ரீயவர்கள் வைத்திருந்த ஒவ்வொரு உடையையும் அவர்களின் செருப்பையும்சேர்த்து நான்கிரயம்வைத்தேன்" என்றும், "அவற்றின்கிரயம் ஒண்ணேகால் திருஹத்துக்குமேல் அதிகப்படவில்லை" என்றும் சொல்லுகிறார். இன்னும் யாராவதொருவன் டாம்பீகமான உடை உடுக்கச் சக்தியுள்ளவனாயிருந்து அல்லாவுக்காகத்தாழ்ச்சிசெய்யும்பொருட்டு அதை விட்டுவிடுவானாகில் அவனுக்குக் கூலியாகச் சுவர்க்கலோகத்தின் அப்கரிய்யு என்னும் அருமையானஉடையைமாணிக்கத்தாம்பாளங்களில் வைத்தளிப்பது அல்லாகுதஆலாவின்மீது ஹக்காயிருக்கிறதென்று ஹதீசில் வந்திருக்கிறது. இன்னும் அலிறலியல்

லாஹுஅன்ஹு அவர்கள் சொல்லுகிறதாவது:—"ஜனங்களால் பின்பற்றப்படுகிற வழிகாட்டிகளான இமாம்கள் உடுக்கும் உடையானது மற்றவர் உடுக்கும் உடையில் மிகவும் தாழ்ந்த உடையை ஒத்ததாயிருக்கவேண்டுமென்று அல்லாகுதஆலா அந்த இமாம்களிடத்தில் உறுதிமொழி வாங்கியிருக்கிறான். ஏனெனில் சீமான்கள் அவர்களைப் பின்பற்றி அதேவிதமான உடை உடுக்கவும் ஏழைகள் தங்கள் இருதயத்தில் ஏக்கங்கொள்ளாமலிருக்கவுமாம்" என்பதே. புலாலத்துபுனுல் உபைது ரலியல்லாகு அன்கு அவர்கள் மிசுருப்பட்டணத்துக்கு அமீராயிருந்தார்கள். சில ஜனங்கள் அவர்களை டாம்பீகமில்லாத சின்ன உடைதரித்து வெறுங்காலோடு நடந்துகொண்டிருக்கக் கண்டு "தாங்கள் இப்பட்டணத்து அமீராயிருக்கிறீர்களாதலால் இப்படிச் செய்ய வேண்டாம்" என்று சொன்னார்கள். அப்போதவர்கள் அந்த ஜனங்களை நோக்கி, "ரசூல் ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் எங்களை இன்பசுகங்களினின்றும் விலக்கியிருப்பதுடன் 'நீங்கள் சிற்சில சமயங்களில் காலில் பாதரக்ஷையில்லாமல் வெறுங்காலோடு நடவுங்கள்' என்றும் ஆக்கியாபித்திருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். முகம்மதுபுனுல் வாஸிகு றஹிமஹுல்லா அவர்கள் கம்பளி உடையுடன் கத்திபத்துபுனுல் முஸ்லிம் றஹிமஹுல்லா அவர்களிடம் போனார்கள். அவர்கள் "நீர் ஏன் கம்பளியுடை தரித்திருக்கிறீர்?" என்றுகேட்டார்கள். அதற்கவர்கள் பதில் சொல்லாமல் மவுனமாயிருந்தார்கள். "நீர் ஏன் பதில்சொல்லாமலிருக்கிறீர்?" என்றுகேட்டதற்கு அவர்கள் சொன்னதாவது:—"நான் ஜுஹ்தினால் தரித்தேன் என்று சொல்லுவேனாகில் அது தற்புகழாவதாலும், ஏழ்மையினால் தரித்தேன் என்று சொல்லுவேனாகில் அது அல்லாகு தஆலாவின்மீது முறைப்பாடாவதாலும் பதில்சொல்ல எனக்கு நாவெழவில்லை" என்பதே. சல்மான் றலியல்லாகு அன்கு அவர்களைச் சிலர் "நீர் ஏன் நல்ல உடை உடுப்பதில்லை?" என்று கேட்டபோது அவர்கள் "அடிமைக்கு நல்ல உடையினால் என்ன உபயோகம்? நாளை கியாமத்தில் அடிமைத்தனத்திலிருந்து உரிமைப்படவேனாகில் அப்போது நல்ல உடை எனக்குக் கிடைக்காமற்போகாது" என்று சொன்னார்கள். உமறுபுனுல் அப்தில் அஜீஸ் றஹிமஹுல்லா அவர்கள் ஒருமுரட்டுத்துணி வைத்துக்கொண்டிருந்தார்கள். இரவில் அவர்கள் தொழும்போது அதை உடுத்திக்கொள்ளுவார்கள். ஜனங்களுக்கு அது தெரியாமலிருக்கும்பொருட்டுப் பகலில் அதை உடுக்கமாட்டார்கள். அசன்பசரீ றஹிமஹுல்லா அவர்கள் பர்க்குதுல்லஞ்ஜீ றஹிமஹுல்லா அவர்களை நோக்கி "நீர் தரித்திருக்கிற இந்தக் கம்பளியினால் மற்றவர்மீது உமக்கு ஏதோ மேம்பாடிருக்கிற

தென்று நீர்மருள்கொண்டிருக்கிறீர். ஆனால் நரகவாசிகளில் பெரும்பாலோர் கம்பளியுடைக்காரரா யிருப்பார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று சொன்னார்கள்.

மூன்றாவது முக்கிய வஸ்து வீடாம்:—அதில் மிகவும் குறைந்தது அவனுக்குச் சொந்தமான யாதொரு இடமே யில்லாமல் பள்ளிவாசலின் ஓர் கோணத்தை அல்லது முசாபிர்கானாவின் ஓர் கோணத்தை அவன் போதுமாக்கிக் கொள்வதாம். அதில் அதிகமானது அவனுக்குச் சொந்தமாகவாவது அல்லது தேவையான அளவுக்கு வாடகையின்பேரிலாவது ஓர் அறைவீடு இருப்பதாம். அது உயரமில்லாததாயும் சித்திரங்கள் சமைக்கப்படாததாயும் தேவையான அளவுக்கு மிகவும் அதிகப்படாததாயும் இருக்கவேண்டும். அதன் மேல் முகட்டை ஆறுமுழத்துக்குமேல் அதிகமாக உயர்த்தி செங்கல், சுண்ணாம்பு இவைகளால் கட்டுவானாகில் ஈமானத்தைவிட்டும் விழுந்து போனான். மொத்தத்தில் வீடு என்றதில் கருத்து (மழை, வெயில் முதலிய) சீதோஷ்ணங்களினின்றும் அவனைக் காக்கின்ற ஜாகையேயாம். இதைத் தவிர வேறொன்றையும் அவன் தேடக்கூடாது. பெரியோர்கள் சொல்லியிருப்பதாவது:—ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குப் பிறகு ஜனங்களின் மேலெண்ணத்திலிருந்து அதாவது நெடுநாள் வாழலாமென்ற நினைவிலிருந்து வெளியான வஸ்துக்களில் முந்தினது செங்கல், சுண்ணாம்பு இவைகளால் கட்டிடம் கட்டுவதும் உடையின் இணைப்புகளை அதிகப்படுத்தித் தைப்பதுமாயிருந்தது. அக்காலத்தில் அதிகமாக ஒரு இணைப்பு மிருந்ததில்லை" என்பதே. அப்பால் றலியல்லாகு அன்கு அவர்கள் அழகிய உன்னதமான ஓர் கட்டிடம் கட்டியிருந்தார்கள். ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அதை இடித்துவிடும்படி அவர்களுக்கு உத்திரவு செய்தார்கள். ஒருநாள் அவர்கள் ஓர் தெருவழியாகச் செல்லுகையில் உயரமான ஓர் கும்பசு என்னும் மண்டபத்தைக் கண்டு "இது யாருக்குள்ளது?" என்று கேட்க, அங்கிருந்தவர்கள் இது இன்னாருக்குள்ளதென்று சொன்னார்கள். பின்பு ஒருபோது அந்த மண்டபக்காரர் ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சமூகத்துக்கு வந்தார். அவர்கள் அவரைப் பார்க்காமல் முகத்தைத் திருப்பிக்கொண்டார்கள். "அதற்குக் காரணம் யாது?" என்று அங்கிருந்தவர்களை அவர் விசாரித்தார். அவர்கள் சங்கதியைச் சொன்னார்கள். அவர் அந்தக் கட்டிடத்தை இடித்துவிட்டார். பின்பு ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவர்மீது சந்தோஷப்பட்டு

அவருக்காக துஆ செய்தார்கள். இன்னும் "ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் தங்கள் வயது முழுவதிலும் ஓர் செங்கல்லை மற்றொரு செங்கல்லின்பேரிலும் ஓர் மரத்தை மற்றொரு மரத்தின்பேரிலும் வைத்ததில்லை" என்று ஹஸன்றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "அல்லாகு தஆலா யாருக்காவது ஒரு கெடுதியை நாடுவானாகில் அவன் பொருளைத் தண்ணீரிலும் மண்ணிலும் அழித்துவிடுவான்" என்று அருளிச்செய்திருக்கிறார்கள். அப்துல்லாஹிபுனு உமர்றலியல்லாகு அன்குமா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நாங்கள் எங்கள் வீட்டைப்பிரித்து வேலைசெய்துகொண்டிருந்த ஓர் நாளில் ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் எங்களிடம் வந்து "இதென்ன நீங்கள் செய்கிறது?" என்று கேட்டார்கள். அப்போது நாங்கள் "யாரசூலல்லா! நாணலால் அமைக்கப்பட்டிருந்து பழமையாய்ப்போன எங்கள் வீட்டைப் புதுப்பிக்கிறோம்" என்று சொன்னோம். அதற்கு நாயகமவர்கள் இதை முடிக்க உங்களுக்குத் தாமதம் கிடைப்பதினும் காரியம் அதிக நெருக்கத்திலிருக்கிறது" என்று அருளிச்செய்தார்கள். இப்படிச் சொன்னதில் மவுத்து சமீபத்திலிருக்கிறதென்பது அவர்கள் கருத்து. இன்னும் "யாராவதொருவன் தன் தேவைக்குமேல் அதிகமான ஓர் வீட்டைக் கட்டுவானாகில் நாளைகியாமத்தில் அந்த வீட்டைத் தூக்கிச்சுமக்கும்படி அவனை இம்சைப் படுத்துவார்கள்" என்று ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "தண்ணீரிலும் மண்ணிலும் செய்கிற செலவு நீங்கலாக மற்ற எல்லாச் செலவுகளின்பேரிலும் கூலி யுண்டு" என்று திருவுளமாயிருக்கிறார்கள். நூகு அலைஹிஸ்ஸலாமவர்கள் நாணலால் ஓர் ஜாகை அமைத்திருந்தார்கள். ஜனங்கள் அவர்களை நோக்கிச் "செங்கல்லால் ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டாலென்ன?" என்றுகேட்டதற்கு, "எவனொருவன் மரணத்தையடைய வேண்டியவனாயிருக்கிறானோ அவனுக்கு இதுவே அதிகம்" என்று சொன்னார்கள். இன்னும் "மழையும் வெயிலுமானதோஷங்களினின்றும் மனிதனைக் காக்கக்கூடிய ஓர் ஜாகையை தவிர மற்றபடி அவன் கட்டுகிற ஒவ்வொரு கட்டிடமும் கியாமத்தில் அவனுக்குத் தீங்காய் முடியும்" என்று ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் ஷாமென்னும் சிரியாதேசத்துக்குப் போகும்போது வழியில் செங்கல்லால் கட்டப்பட்டிருந்த ஓர் மாடிவீட்டைக் கண்டு அவர்கள்

சொன்னதாவது : "பிருஅவுனுக்காக ஹாமான் கட்டினதுபோல் இந்த உம்மத்தில் இப்படி வீட்டைக்கட்டுவார்கள் என்று நான் ஒரு போதும் நினைக்கவில்லை; அவனே செங்கல்லை விரும்பி ஓ ஹாமானே நீ எனக்கு மண்ணைச்சுடு என்று சொன்னான்" என்பதே. இனி அஸ்ஹாபுகளின் வாக்கியங்களில் வந்திருப்பதாவது:— அடியான் தன் வீட்டை ஆறுமுழத்துக்குமேல் அதிகமாக உயர்த்துவானாகில் வானத்திலிருந்து ஓர் மலக்கு சப்தமிட்டு "அடே பாதகர்க்கெல்லாம் பெரும்பாதகா! நீ எங்கே வருகிறாய்" என்று சொல்லுவார். அதாவது நீ பூமியிலிருந்து கீழே கபுரை நோக்கிப் போகவேண்டியவனாயிருக்க வானத்தின் பக்கம் ஏன் வருகிறாய்? என்பது இதன் கருத்தாம். இன்னும் "ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வீடுகளில் மேல்முகடுகள் எல்லாம் கைக்கு எட்டுவதாயிருந்தது" என்று அசன்றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். புலைலுறலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:—"ஜனங்கள் வீட்டைக்கட்டி அதை விட்டுவிட்டுப் போகிறார்களென்பது எனக்கு ஆச்சரியமாய்த் தோன்றவில்லை. அப்படிப்போகிறதைக் கண்டு மற்றவர் அச்சப்பட்டு அறிவை அடையாமலிருப்பதுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது" என்பதே.

நாலாவது முக்கிய வஸ்து வீட்டுச் சாமான்களாம்:—இதுவிஷயத்தில் ஈஸா அலைகிஸ்ஸலாமவர்களுடைய தராஜாவே மிகவும் மேலான தராஜாவாயிருக்கிறது. ஏனெனில் அவர்களிடம் வீட்டுச் சாமான்களில் நின்றும் ஒருவஸ்துவுமிருந்ததில்லை. ஆனால் ஒரு சீப்பும் ஒரு கூசாவுமிருந்தது. ஒருவன் தன் கை விரலால் தாடியைக் கோதிச் சீவிக்கொண்டிருந்ததை அவர்கள் கண்டபோது சீப்பை எறிந்துவிட்டார்கள். மற்றொருவன் தன் கையால் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்ததைக் கண்டு தங்களிடமிருந்த கூசாவையும் போட்டுவிட்டார்கள். இதில் நடுத்தர தராஜா: அகத்தியம் வேண்டியவற்றில்நின்றும் ஒவ்வொரு வஸ்து மரத்தினாலாவது மண்ணினாலாவது இருப்பதாம். செம்பு பித்தளைகளால் இருந்தால் ஜுஹ்து இராது. சலபுகளான முன்னோர்கள் ஒரே வஸ்துவைப் பல வேலைகளுக்கு உபயோகப்படுத்திக்கொள்ள மிகவும் பிரயாசை யெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் படுக்கும்போது தலைமாட்டில்வைத்துக்கொள்ள அவர்களுக்குத்தோலினால் தைக்கப்பட்டதும் உள்ளே ஈந்தந்தோகைகள் அடைக்கப்பட்டதுமான ஒரு தலையணையும் கீழே விரித்துக்கொள்ள இரட்டையாக மடிக்கப்பட்ட ஒரு கம்

பளியும் இருந்தது. இதுவுமன்றி ஒருநாள் அவர்களுடைய விலாப் பக்கத்தில் ஈத்தம்பாய்ப் பதிந்திருந்த சுவடுகளை உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் கண்டு அழுதார்கள். "ஏன் அழுகிறீர்?" என்று நாயகமவர்கள் கேட்டதற்கு, "அல்லாவுக்கு விரோதிகளாயிருக்கிற கைசரும் கீஸ்ராவும் (ரோமாபுரி அரசனும் பாரிசு மன்னனும்) அந்தச் செல்வங்களி லிருக்கிறார்கள். அல்லாவுக்கு றசூலாயும் தோழராயும் இருக்கிற தாங்கள் இந்தக் கஷ்டங்களை அனுபவிக்கிறீர்களே" என்று சொன்னார்கள். அப்போது நாயகமவர்கள் "ஓ உமரே! அந்த அரசர்களுக்குத் துன்யாவுடைய வாழ்க்கை இருக்கிறதென்றால் நமக்கு ஆகிரத்துடைய வாழ்க்கையுண்டாவதைப்பற்றி நீர் சந்தோஷிக்க மாட்டீரோ?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "ஆம் சந்தோஷிப்பேன்" என்றார்கள். அதற்கு நாயகமவர்கள் "ஓ உமரே! அதேவிதம் ஆகும் என்று நீர் அறிந்திரும்" என்று அருளிச்செய்தார்கள். ஒருவர் அபூசர்றலியல்லாகு அன்கு அவர்களின் வீட்டுக்குப் போனார். அந்த வீட்டில் ஓரிடத்திலும் வீட்டுச் சாமான் ஒன்றுமில்லாததைக் கண்டு "அபூஜரே! உம்முடைய வீட்டில் ஒரு சாமானையும் காணோமே" என்றார். அப்போதவர்கள் தங்கள் மனதில் அவ்வுலகவீட்டைக் கருதிக்கொண்டு "எனக்கு வேறொரு வீடு இருக்கிறது" என்றும், "என் கையில் சிக்குவதையெல்லாம் அந்த வீட்டுக்கு அனுப்பிவிடுகிறேன்" என்றும் சொன்னார்கள். இதையறிந்த அவர்பின்பு அவர்களை நோக்கி "நீர் இந்த மன்ஜிலில் தங்கியிருக்கிறவரையில் ஒரு சாமானும் இல்லாமலிருக்கச் சாத்தியப்படாது" என்றார். அப்போதவர்கள் "மன்ஜிலுக்கு அதிகாரியான எஜமான் என்னை இங்கு தங்கியிருக்க விடமாட்டான்" என்றார்கள். ஹிம்சுக்கு அமீராயிருந்த உமைருபுனு சஅது றலியல்லாகு அன்கு அவர்கள் உமர்றலியல்லாகு அன்கு அவர்களின் சமூகத்துக்கு வந்தபோது அவர்கள் அவரை நோக்கி "உமைரே! துன்யாவுடைய சாமான்களில்நின்றும் உம்மிடத்தில் என்னென்ன இருக்கிறது?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் சொன்னதாவது:—"நான் ஒருகோல் வைத்திருக்கிறேன். அதை ஊன்றிநிற்பேன். அதனால் பாம்பை அடிப்பேன். இன்னும் என்னிடத்தில் ஒரு தோல் பை இருக்கிறது. அதில் உணவுப்பொருள்களை வைத்துக்கொள்ளுவேன். இன்னும் ஒரு பெரிய பாண்டமிருக்கிறது. அதில் உணவை வைத்து உண்பேன். அதனால் தலையையும் உடுப்பையும் கழுவிக்கொள்ளுவேன். இன்னுமொரு பாத்திரமிருக்கிறது. அதிலிருந்து தண்ணீர் குடிப்பேன். ஒலு செய்துகொள்ளுவேன். துன்யாவில்நின்றும் என்னிடத்திலிருக்கிற இந்த

சாமான்கள் தவிர மற்றவைகளெல்லாம் இவற்றிற்குச் சார்பானவைகளாயிருக்கின்றன" என்பதே. றசூல் ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருமுறை சபரிலிருந்து ஊருக்கு வந்து சேர்ந்து பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்களின் வீட்டுக்குப் போனார்கள். அவர்களுடைய வீட்டு வாசற்படியில் ஒரு திரைச்சீலையிட்டிருந்ததையும் அவர்களுடைய கையில் இரண்டு வெள்ளிக் காப்புகளிட்டிருந்ததையும் கண்டு அசங்கிதப்பட்டு அங்கிருந்து திரும்பிவிட்டார்கள். இதையறிந்த பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள் அந்த இரண்டுகாப்புகளையும் ஒன்றரை திருகத்துக்குவிற்று அந்தத் திரைச்சீலையுடன் அந்த திருஹத்தையும் சேர்த்து சதகா கொடுத்துவிட்டார்கள். பின்பு றசூல் ஸல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் அம்மாள்பேரில் சந்தோஷப்பட்டு "மகளே! நீ நல்லவேலை செய்தாய்" என்றுசொன்னார்கள். இன்னும் ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்களின் வீட்டில் ஒரு திரையிட்டிருந்தது. றசூல் ஸல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் ஒருநாள் "ஓ ஆயிஷாவே! இந்தத் திரையை நான் பார்க்கும்போதெல்லாம் துன்யா என் ஞாபகத்தில் வருகிறது. ஆகலால் இதைக்கொண்டுபோய் இன்னாருக்குக் கொடுக்கும்படி அனுப்பிவிடு" என்று ஆக்கியாபித்தார்கள். ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள் சொல்லுகிறதாவது:—"றசூல் ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இரவில் இரண்டாகமடிக்கப்பட்ட ஓர் கம்பளியின்மேல் சயனிப்பார்கள். ஓரிரவில் புதிய ஓர் விரிப்பை விரித்திருந்தேன். அந்த இரவெல்லாம் அவர்கள் தூங்காமற் புறண்டு புறண்டு படுத்துக்கொண்டிருந்தார்கள். மறுநாள் அவர்கள் என்னைநோக்கி "ஆயிஷாவே! இன்றிரவு இந்த விரிப்பானது என் தூக்கத்தைக்கெடுத்துவிட்டது, ஆகலால் இனி அந்தக்கம்பளத்தையே விரிக்கவேண்டும்" என்றுசொன்னார்கள். இன்னும் ஒருமுறை அவர்களிடம் ஜனங்கள் பொருள்கொண்டுவந்து கொடுத்தார்கள். அவையெல்லாவற்றையும் பங்கிட்டபின்பு ஆறுதீனார் மீதியாகத் தங்கிவிட்டது. அந்த இரவெல்லாம் அவர்கள் தூங்கவில்லை. இரவின்கடைசியில் அதையாருக்கோகொடுத்துவிட்டுப்பின்பு நல்ல நித்திரையிலானார்கள். அதன் பிறகு அவர்கள் "இந்த ஆறுதீனாரும் என்னிடத்திலிருக்க நான் மவுத்தாய்ப்போயிருப்பேனாகில் என் கதி எப்படியாகும்? என்று சொன்னார்கள்" என்பதே. ஹசன்பசரீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் எழுபது அஸ்ஹாபுகளைக் கண்டிருக்கிறேன். அவர்களில் ஒருவராவது தாம் உடுத்திக்கொண்டிருந்த உடையைத்தவிர மறு உடை வைத்துக்கொ

ண்டிருந்ததில்லை. அவர்கள் தனக்கும் மண்ணுக்கும் நடுவே தடை வைத்துக்கொள்ளார்கள். அவர்கள் படுத்தால் விலாவை மண்ணின் மேல் வைத்து ஒருக்கணித்துப் படுத்துக்கொள்ளுவார்கள். அந்த உடையையே இழுத்துப் போர்த்துக்கொள்ளுவார்கள்" என்பதே.

ஐந்தாவது முக்கியவஸ்து நிக்காஹாம்:—ஸஹல் துஸ்தரீ, சுபியானு புனு உயைனா ரஹிமஹுமல்லாகு இவர்களும் இன்னும் அநேகரும் அடியில்வருமாறு கூறுகின்றார்கள். அதாவது:—"ரசூல்சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் எல்லா ஜனங்களைக் காட்டிலும் பெரிய ஜாஹிதாயிருப்பதுடன் அவர்கள் ஸ்திரீகளை உவந்திருந்ததினாலும் அவர்களுக்கு ஒன்பது மனையாட்டிகளிருந்ததினாலும் இன்னும் அலிறலியல்லாகு அன்கு அவர்கள் தங்கள் ஜுஹ்துடன் நான்கு மனையாட்டிகளையும், பத்து, பன்னிரண்டு வெள்ளாட்டிகளையும் உடையவர்களாயிருந்ததினாலும் நிக்காகு விஷயத்தில் ஜுஹ்து இல்லை, (அதாவது நிகாகு செய்யாமலிருப்பது ஜுஹ்தில் சேராது) என்பதே.

அறிந்துகொள்:—இந்தப் பெரியோர்கள் இப்படிச் சொன்னதில் ஸ்திரீபோக இன்பத்தை அனுபவியாமலிருப்பது ஜுஹ்தில் சேர்ந்ததென்று நினைத்து ஒருவன் நிகாகை விட்டுவிடுவானாகில் அது ஆகாதெனக் கருதியிருப்பார்கள். ஏனெனில் மணம்புரிதலானது மக்கட்பேறுக்கும் வம்ச நிலைக்கும் ஓர் சாதனமாயும் அநேகம் பிரயோசனங்களுள்ளதாயுமிருக்கிறது. போக இன்பத்தை நீக்கும்பொருட்டு நிகாகை விட்டுவிடுவதானது ஒருவன் ஊணின் இன்பத்தைச் சுவைக்காமலிருக்கும்பொருட்டு அன்னபானாதிகளை அருந்தாமல் அறவே விட்டுவிடுவதுபோலாகும். அப்படி ஊணை விடுவதினால் அவன் உடலழிந்தொழிந்துபோவான். நிகாகை விடுவதினால் அவன் வம்சம் அற்றுப்போம். ஆனால் நிகாகு செய்தலானது ஒருவனை அல்லாகு தஆலாவுடைய ஞாபகத்திலிருந்து வேறு பராக்கில் ஆக்குமென்கிறபக்ஷம் அவன் நிகாகு செய்யாமலிருப்பது மிகவும் ஏற்றமாம். ஆசைமேலிட்டால் அந்த ஆசையை எழுப்புகிற ஓர் அழகியை அல்ல, அதைத் தணிக்கின்ற ஓர் அழகில்லாப்பெண்ணை நிகாகு செய்ய நாடுகிறவனே ஜாஹிதாவான். அஹ்மது ஹம்பல் றஹிமஹுல்லா அவர்களுக்கு ஒரு அழகிய பெண்ணைக் கொடுக்கப் பெண் வீட்டார் சித்தமானபோது சிலர் "இந்தப் பெண்ணுக்கு ஒரு சகோதரியிருக்கிறாள்" என்றும், "அவள் இவளினும் அதிக அறிவுள்ளவள்" என்றும், "ஆனால் அவளுக்கு ஒரு கண் பழுதாயிருக்கிறது" என்றும் சொன்னார்கள். பின்பு அவர்கள் அதிக அழகானவளை வேண்டாது

விட்டுப்பிரிக்க அறிவுள்ளவர்களையே விரும்புகிறார்கள். இதுவுமன்றி "ஆரம்ப முரீதாயிருப்பவன் எவனே அவன் தொழில்செய்வதையும் நிகாஹையும் ஹதீசு எழுதுவதையும் இம்மூன்றையும் விட்டுத் தன்மனதைப் பேணிக்கொள்வதே என்னிடத்தில் அதிக உவப்பானதாயிருக்கிறது" என்றும், "சூபியானவன் படிப்பதினாலும் எழுதுவதினாலும் அவன் மனம் சிதறுண்டு ஒர்மிக்காமல் போமாதலால் அவன் அப்படிச்செய்வது எனக்குப் பிரியமில்லை". என்றும் ஜுனைது ரஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள்.

ஆறாவது முக்கியமானது பொருளும் கௌரதையுமாம். இந்த இரண்டும் நஞ்சு என்றும், இதில் தேவையின் அளவாகக் கொள்ளப்பட்டிருப்பது (நஞ்சல்ல) சஞ்சீவி என்றும், அது தீன்வழிக்கு அவசியமான பொருட்களிற்சேர்ந்தது என்றும், துன்யாவிற்சேர்ந்ததல்ல என்றும், மூன்றாவது குதுபு முன்ஜியாத்தில் நாம் கூறியிருக்கிறோம். இபுராஹீம் கலீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஒரு மித்திரனிடத்தில் கொஞ்சம் பொருள் கடன் கேட்டார்கள். அப்போது அல்லாகு தஆலா "ஓ இபுராஹீமே! நீர் உம்முடைய கலீலான தோழனிடத்தில் கேட்காமற்போனதென்ன!" என்று வஹீ அனுப்பினான். அதற்கவர்கள் "ஓ என் ஆண்டவனே! நீ துன்யாவின்மேல் பகைவைத்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியுமாதலால் நான் உன்னிடத்தில் துன்யாவைக் கேட்க அஞ்சினேன்" என்று சொன்னார்கள். அப்போது அல்லாகு தஆலா "ஓ இபுராஹீமே! எதுவொன்று அவசியமாகத் தேவைப்படுகிறதோ அது துன்யாவிற் சேர்ந்ததல்ல" என்று உத்தரம் கொடுத்தான். மொத்தத்தில் ஒருவன் (ஆகிரத்தென்னும் அழியா உலகபோகத்தை அடையவேண்டிய நிமித்தம்) தன் இச்சைபாராட்டல்களையும் தேவைக்கு மேற்பட்ட அதிகங்களையும் தள்ளிவிட்டுப் பொருளில் நின்றும் கௌரவத்தில்நின்றும் அவசியமாக எவ்வளவு தேவையோ அவ்வளவைப்போதுமாக்கிக் கொள்ளுவானாகில் அவன்மனம் அதன் பற்றைவிட்டு ஒழிந்திருக்கும். துன்யாவை அவன் நேசிப்பவனாயிருக்க மாட்டான்.

ஆகவே மனிதன் மேலுலகமாகிய அவ்வுலகத்துக்குப் போனால் கீழுலகமாகிய இவ்வுலகத்தின் பக்கம் அவன்தலைகவிழ்ந்தாலும் அவன் முகம் இதைத்திரும்பிப்பாராமலிருக்கவேண்டுமென்பதே ஜுஹ்தில் கருதப்பட்ட பொருளாயிருக்கிறது. எவனுக்குத் துன்யாவானது சுகமும் ஆரோக்கியமுமுள்ள இடமாயிருந்ததோ அவனே அதைத் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டிருப்பான். அப்படிக்கில்லாமல்

மலங்கழிக்கும் அவசரத்திலன்றி மற்றநேரத்தில் அவன்போகவிரும்பாத புழக்கடைபோலத் துன்யாவானது அவனுக்கு அவ்வளவே அவசிய ஸ்தானமாயிருக்கிறபடியாலும் மரணத்தோடு அதன் அவசியம் அற்றுப்போகப்பின்பு அதைக் கடைக்கண்ணாலும் அவன் ஏன்பார்க்கின்றான்? இனி எவன் தன் இருதயத்தைத் துன்யாவுடன் சேர்த்துக் கட்டுகின்றானோ அவனுக்கு உபமானம் ஓர் மனிதனுக்குச் சமானமாம். அந்தமனிதனை எந்த இடத்தில் தங்கியிருக்கவிடாமல் இழுக்கப்போகின்றார்களோ அந்த இடத்தில் அவன் அழுந்த இருந்துக்கொண்டு தன்கழுத்துக்கும் அந்த இடத்துக்குமாகப் பலசங்கிலிகளைமாட்டித் தன்னை இறுக்கிக் கட்டிக்கொள்ளுகின்றான். அல்லது தன் தலைமயிரை அந்தஜாகையில் சுற்றிக் கெட்டியாக முடிந்துகொள்ளுகின்றான். பின்பு அவ்விடத்திலிருந்து அவனை இழுக்கும்போது மயிரில் தொங்கலாடுகின்றான். அவன் தலைமயிரெல்லாம் வேரோடு பிடுங்கிக்கொண்டு வருகிறவரையில் அவன் அந்தவிடத்தைவிட்டுக் கிளம்பவில்லை. அதனால் அவன் தலையில் உண்டான ரணம் அவனுடன் தங்கிவிட்டது. இவன்போன்றவனே அவனுமாம். ஹஸன்பசரீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் சில ஜனங்களைப் பார்த்தேன். நீங்கள் ஒருசெல்வத்தை அடையும்போது எவ்வளவாகச் சந்தோஷிக்கிறீர்களோ அதினும் அதிகமாக அவர்கள் துன்பங்களுக்குச் சந்தோஷிக்கிறவர்களாயிருந்தார்கள். அவர்கள் உங்களைப் பார்த்தால் இவர்கள் ஷைத்தான்களே தவிர வேறல்ல என்று சொல்லுவார்கள். நீங்கள் அவர்களைப் பார்த்தால் இவர்கள் பித்தர்களேயன்றிப் பிறர் அல்லர் என்று சொல்லுவீர்கள்" என்பதே. அந்த ஜனங்கள் துன்பங்களை அவ்வளவாக ஏன் விரும்பினார்களென்றால், அவர்களுடைய மனம் துன்யாவின் பற்றிலிருந்து நீங்குவதற்கும் மவுத்தாகிற நேரத்தில் அந்த மனதில் யாதொரு வஸ்துவின் பற்று அறவே இல்லாமற் போகவுமாமென்க.

## ஐந்தாவது அஸ்லு: நிய்யத்து, சிதகு, இகுலாசு இவைகளின் பயான்.

அறிந்துகொள்:—மனிதர்களில் ஆபிதுகளென்னும் வணக்கமுள்ளவர் நீங்கலாக மற்ற மனிதரெல்லாரும் ஹலாக்காய் (சேதமுற்றவர்களாய்)ப் போயிருக்கிறார்கள் என்பதும், ஆபிதுகளில் ஆலிம்களென்னும் அறிவாளர் நீங்கலாக மற்ற ஆபிதுகளெல்லாரும் ஹலாக்காய்ப் போயிருக்கிறார்கள் என்பதும், ஆலிம்களில் இகுலாசுள்ளவர் நீங்கலாக மற்ற ஆலிம்களெல்லாரும் ஹலாக்காய்ப் போயிருக்கிறார்கள் என்பதும், இகுலாசுள்ளவர்களும் பெரிய அபாய நிலைமையில்

இருக்கிறார்கள் என்பதும், அகப்பார்வை யுள்ளவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இகுலாசில்லாமற் போனால் எல்லாப் பிரயாசைகளும் நஷ்டமேயாம். இகுலாசு என்னும் கலப்பின்மையும் சிதுகு என்னும் உண்மையும் இவ்விரண்டும் நிய்யத்து என்னும் எண்ணத்திலன்றி வேறொன்றிலிராது. ஆகவே நிய்யத்தை ஒருவன் அறியாமற்போனால் அந்த நிய்யத்தில் இகுலாசையும் சிதுகையும் அவன் எப்படிக் காப்பாற்றுவான்? ஆதலால் நாம் ஒரு பாபில் நிய்யத்தின் பொருளையும் மற்றொரு பாபில் இகுலாசின் பொருளையும் வேறொரு பாபில் சிதுகின் பொருளையும் விவரித்துச் சொல்லுவோம்.

## முதலாவது பாபு நிய்யத்திற் கூறுவது.

அறிந்துகொள்:—முதலில் உனக்கு நிய்யத்தின் மேம்பாடு தெரியவேண்டும். எல்லா அமல்களுக்கும் உயிராயிருப்பது நிய்யத்தேயாம். அமலைப்பற்றி ஹுகுமுசெய்வது நிய்யத்தை நோக்கியேயாம். அமலில் அல்லாகு தஆலா பார்ப்பது நிய்யத்தையேயாம். இதனாலேதான் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "அல்லாகு தஆலா உங்கள் ரூபத்தையும் அமல்களையும் பார்க்கிறதில்லை" என்றும், "உங்கள் இருதயத்தையும் எண்ணத்தையுமேபார்க்கிறான்" என்றும் அருளிச்செய்திருக்கிறார்கள். இருதயத்தைப் பார்ப்பது ஏனென்றால் அது நிய்யத்துக்கு இடமாயிருப்பதினாலென்க. இன்னும் "அமல்களெல்லாம் நிய்யத்தைக்கொண்டுதான்" என்றும், "அவனவனும் தன் இபாதத்தில் எதை நிய்யத்து செய்தானோ அதுதான் அவனுக்கு உண்டு" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். ஒருவன் அல்லாவுக்காக ஹிஜ்ரத்து செய்வானாகில் அதாவது அவன் தன் குடிபதியை விட்டுப் புறப்பட்டு மார்க்கயுத்தம் செய்யவாவது ஹஜ்ஜு செய்யவாவது போவானாகில் அவனுடைய ஹிஜ்ரத்து அல்லாவுக்காகவேயாம். பொருளைச்சம்பாதிப்பதற்காக அல்லது ஒருபெண்ணை நிகாகு செய்வதற்காக ஒருவன் ஹிஜாரத்து செய்வானாகில் அவனுடைய ஹிஜாரத்து அல்லாவுக்காகச் செய்யும் ஹிஜாரத்தல்ல. அவன் எதைத் தேடிப் புறப்பட்டானோ அதற்காகச் செய்யும் ஹிஜாரத்தேயாம். இன்னும் "என் உம்மத்திலுள்ள ஷஹீதுகளில் பெரும்பாலார் தங்கள் பாயும் தலையணையுமான படுக்கையில் இறந்துபோகிறார்கள்" என்றும், "அநேகம்பேர்யுத்தவீரர்களின் இரண்டு அணிகளுக்குநடுவே வெட்டுண்டுபோயிருப்பார்கள்" என்றும், "அவர்களின் நிய்யத்தை அல்லாகு தஆலாவே நன்றாய் அறிவான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "அடியான் அநேகம் நல்ல அமல்களைச் செய்வான்".

என்றும்; "அந்த அமல்களை மலக்குகள் வானத்துக்குக் கொண்டுபோவார்கள்" என்றும், "அல்லாகு தஆலா அந்த மலக்குகளை நோக்கி, "ஓ மலக்குகளே! இந்த அமல்களை அவன் எனக்காகச் செய்யவில்லையாதலால் இதை அவன் பட்டோலையிலிருந்து அழித்துவிட்டு இன்னின்ன அமலை அவனுக்கு எழுதுங்கள்" எனச்சொல்லுவான்" என்றும், "அப்போது மலக்குகள் "எங்கள் ஆண்டவனே! அந்த அமல்களை அவன் செய்திருப்பதில்லை" எனச்சொல்லுவார்கள்" என்றும், "அதற்கு அல்லாகு தஆலா "அந்த அமல்களை அவன் நிய்யத்து செய்திருக்கிறான்" எனச்சொல்லுவான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருப்பதாவது: "நான்கு மனிதர்களிருக்கிறார்கள், அவர்களில் ஒருவன் பொருளுள்ளவனும் அப்பொருளை அறிவின்படி நன்மையில் செலவு செய்கிறவனும் இருக்கிறான். மற்றொருவன் எனக்கும் பொருளிருந்தால் நானும் இப்படிச் செய்வேனே என்று ஆசிக்கின்றான். இவர்களிருவரும் நன்மையான கூலிபெறுவதில் சமானமாயிருக்கிறார்கள். இன்னுமொருவன் தன் பொருளை விதிப்படியில்லாமல் வீணில் செலவு செய்கிறவனுமிருக்கிறான். மற்றொருவன் எனக்கும் பொருளிருந்தால் நானும் இப்படிச் செய்வேனே என்று ஆசிக்கின்றான். இவர்களிருவரும் பாதகத்தில் சமானராயிருக்கிறார்கள்" என்பதே. இந்த ஹதீதில் அமலில்லாத தனித்த நிய்யத்தானது அமலோடு கூடிய நிய்யத்து போலவாம் என்பது நாயகமவர்கள் கருத்து. இன்னும் அனஅறழியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது.—"தபூக்குயுத்தத்தில் ஒருநாள் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வெளியே வந்து "மதீனாவில் அநேகம்பேர் இருக்கிறார்கள்" என்றும், "நாம் யாத்திரையிலும் பசியிலும் அடைகின்ற ஒவ்வொரு கஷ்டத்தின் கூலியில் அவர்களும் கூட்டாகிறார்கள்" என்றும் அருளிச்செய்தார்கள். அப்போது நாங்கள் "யாறசூலல்லா! அவர்கள் நம்முடன் வராமலிருக்கிறார்களே, கூலியில் எப்படி நம்முடன் கூட்டாவார்கள்?" என்று கேட்டோம். அதற்கு நாயகமவர்கள் "அவசரமான ஓர் காரணத்தைமுன்னிட்டு அவர்கள் நம்முடன் வராமலிருந்தபோதிலும் அவர்களுடைய நிய்யத்தானது நம்முடைய நிய்யத்துபோலவே யிருக்கிறது" என்று அருளிச்செய்தார்கள்" என்பதே.

பனீ இஸ்ராயில் கூட்டத்தில் ஒருவன் ஒருபெரிய மணல்மேட்டின் பக்கமாகச் சென்றான். அக்காலம் பஞ்சகாலமாயிருந்தது. அவன் தன்மனதில் "இந்த மணல் முழுவதும் கோதுமையாயும் எனக்குச்

சொந்தமாயுமிருக்கிறபக்ஷம் நான் எல்லாவற்றையும் ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவேன்" என்று நினைத்தான். அப்போது அவனுக்குச் சொல்லும்படி அக்காலத்து நபியின்மீது வஹி வந்தது. அதாவது:—"அம்மனிதனே! உன்சதகாவை அல்லாகு தஆலா அங்கீகரித்தான். நீ அவ்வளவு கோதுமை வைத்துக்கொண்டிருந்து சதகாசெய்திருப்பாயாகில் அவன் உனக்கு எவ்வளவு சவாபைக் கொடுத்திருப்பானோ அவ்வளவு சவாபையே இப்போது உனக்குக்கொடுத்தான்" என்பதே. "ஒருவனுடைய நிய்யத்தும் நாட்டமும் (அதாவது அவனுடைய எண்ணமெல்லாம்) துன்யாவாயிருக்குமாகில் ஏழ்மையானது எப்போதும் அவனுடைய இரண்டுகண்களுக்கு முன்பாகவிருக்கும்" என்றும், "அவன் துன்யாவைவிட்டுப் போகும்போது அதன்மேல் ஆசைகொண்டவனாயிருப்பான்" என்றும், "எவனுக்கு ஆகிரத்துடைய நிய்யத்தும் நாட்டமுமாயிருக்கிறதோ அவனுடைய மனதை அல்லாகு தஆலா திருப்திகரப்படுத்துவான்" என்றும், "அவன் துன்யாவைவிட்டுப் போம்போது அதைவெறுத்தவனாயிருப்பான்" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "யுத்தகளத்தில் காபிர்களோடு முஸ்லிம்கள் எதிர்த்துநிற்பார்களாகில் மலக்குகள் அந்த முஸ்லிம்களுடைய நாமங்களை எழுதத் தொடங்கி இன்னான் பாரபக்ஷம் அல்லது ஜாதிமானத்துக்காக யுத்தஞ்செய்கிறான் என்றும் இன்னான் கௌரதைக்காக அதாவது அல்லாவுடைய பாதையில் வெட்டுண்டிறந்தானென்றபட்டம் பெறுவதற்காக யுத்தம்செய்கிறான் என்றும் அவர்கள் எழுதுவார்கள்" என்றும், "யாராவதொருவன் தவ்ஹீது கலிமா உயர்ந்தோங்கும்பொருட்டு யுத்தஞ் செய்வானாகில் அவன் அல்லாவுடைய பாதையில் இருக்கிறான்" என்றும் அருளிச் செய்திருக்கிறார்கள். "இன்னும்யாராவதொருவன் மஹர்கொடுக்கமாட்டேன் என்ற நிய்யத்துடன் நிகாகுசெய்வானாகில் அவன் ஜானி (ஜினா செய்கிறவன்) ஆகின்றான்" என்றும், "வாங்கும் கடனைத்திரும்பக்கொடுக்கமாட்டேன் என்ற நிய்யத்துடன் ஒருவன் கடன் வாங்குவானாகில் அவன் திருடன் ஆகின்றான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

இன்னுமறிந்துகொள்:—"முன்னதாக நீங்கள் அமலின் நிய்யத்தைக் கற்றுக்கொண்டு அதன்பிறகு அமலைச்செய்யுங்கள்" என்று உலமாக்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒருவன் உலமாக்களிடத்தில்போய் "நான் எந்நேரத்திலும் நன்மையைவிட்டொழியாமலிருக்கும்பொருட்டு இரவும்பகலும் அதில் நான் பராக்காயிருக்கும்படியான ஓர் அமலை எனக்குப் படித்துக்கொடுங்கள்" என்று கேட்கிறவனாயிருந்தான்.

அதற்கவர்கள் அவனை நோக்கி "எந்த நன்மையைச் செய்ய உன்னால் முடியவில்லையோ அந்த நன்மையை நீ எப்போதும் நிய்யத்து செய்கிறவனாயிரு" என்றும், "அப்படிச் செய்வாயாகில் அந்த நன்மையின் சவாபு உனக்கு உண்டாகிக்கொண்டிருக்கும்" என்றும் சொன்னார்கள். இன்னும் "அல்லாகு தஆலா கியாமத்துநாளில் மனிதர்களை அவர்களின் நிய்யத்துகளுடன் எழுப்புவான்" என்று அபூஹுறைறா றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் "நித்திய உலகமாகிய சொர்க்கம் கிடைப்பது நல்ல நிய்யத்தைக்கொண்டேயொழிய இந்த அற்பநாட்களின் அமலினால் அல்ல" என்றும், "அந்த நிய்யத்துக்கு அழிவிராது" என்றும் ஹசன்பசரீ றஹிமகுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள்.

### நிய்யத்து இதுவென அதன் ஹகீகத்தை விளக்கல்.

அறிந்துகொள்:—எச்செயலுக்கும் முன்னதாகத் தேவைப்படுகிற மூன்று வஸ்துக்களில்லாமல் மனிதனிடத்திலிருந்து ஓர் செயலும் தோன்றாது. அம்மூன்று வஸ்துக்கள் யாவையெனில், அறிவும் நாட்டமும் சக்தியுமாம். உதாரணமாக:—(உண்ணல் என்னும் செயல் நிகழ்வதற்கு முதலில் உணவின் அறிவும் உண்ணும் நாட்டமும் உண்க சக்தியும் தேவையாகின்றது) அவன் உணவைப் பார்த்தறியாமற்போனால் அதை உண்கமாட்டான். அப்படிப் பார்த்தறிந்தாலும் அதன் விருப்பமான நாட்டமில்லாமற்போனால் அப்போதும் அதை உண்கமாட்டான். நாட்டமிருந்தாலும் கை நீட்ட முடக்க வாராதபடி திமிர்த்துப்போனால் அப்போதும் அதை உண்கமாட்டான். ஏனெனில் எடுத்து உண்க சக்தி யில்லாததினாலென்க. இச்செயலுக்கு எப்படியோ அப்படியே எல்லாச் செயல்களுக்கும் முன்னதாக இம்மூன்று வஸ்துக்களும் நடைபெறும். ஆயினும் செயலானது சக்தியைத் தொடர்ந்ததாயும், சக்தியானது நாட்டத்தைத் தொடர்ந்ததாயு மிருக்கிறது. அதாவது நாட்டம் சக்தியை எழுப்பிச் செயலில் அமைக்கும் என்பதாம். நாட்டம் அறிவைத் தொடர்ந்ததல்ல. ஏனெனில், அவன் அநேகம் வஸ்துக்களைப் பார்த்து அவைகளை நாடாமலிருப்பதினாலென்க. என்கினும் ஒன்றன் அறிவின்றி அதை நாடுவதும் ரூபகரப்படாது. அவன் அறியாத ஒரு வஸ்துவை எப்படி நாடுவான்? இந்த மூன்று வஸ்துகளில்நின்றும் நாட்டமென்பதே நிய்யத்துக்குப் பொருளாயிருக்கிறது சக்தியும் அறிவுமல்ல. நாட்டமென்றது எதையெனில் ஓர் காரியத்தைச் செய்யும்படி மனிதனைத் தூண்டி அக்காரியத்தில் அவனை அமைப்பது எதுவோ அதை

யே நாட்டமென்றது. இந்த நாட்டத்தை (அறபிபாஷையில் இராதத்து என்று சொல்வதுபோல் கர்லு என்றும் கஸ்து என்றும் நிய்யத்து என்றும் சொல்லுவார்கள். இம்மூன்று சொற்களுக்கும் பொருள் ஒன்றேயாம். பின்பு மனிதனைத் தூண்டி அவனை ஓர் காரியத்தில் அமைக்கும் நாட்டமானது சில சமயம் ஒரே நாட்டமாயிருக்கும், சில சமயம் ஒரு காரியத்தில் இரண்டு நாட்டம் சேர்ந்திருக்கும். ஒரே நாட்டமாயிருந்தால் அதை காலிசு (கலப்பில்லாதது) என்று சொல்லுவார்கள். இதற்கு உபமானமாவது:—ஒருவன் உட்கார்ந்துகொண்டிருக்கிறான். ஓர் சிங்கமானது அவனை நாடி வருகின்றது. அவனதைக் கண்டு எழுந்து ஓடுகின்றான். இப்போது இவனுக்கு ஓடுகிற நாட்டமேயன்றி வேறொரு நாட்டமுமில்லை. கௌரவம் பொருந்திய ஓர் கனவான் வருவதைக் கண்ட மற்றொருவன் உடனே எழுந்து நிற்பதும் இது போலவேயாம். இவனை எழுப்பினது அவனைக் கனப்படுத்தும் நாட்டமே தவிர வேறு நாட்டமல்ல. இதுவே காலிசு என்னும் கலப்பற்றதாம். இனி இரண்டு நாட்டமுள்ள காரியம் மூன்று வகைப்படும்: அவற்றுள் முதலாவது வகை:—அந்த இரண்டு நாட்டங்களில் ஒவ்வொன்றும் தனிப்படயிருந்தாலும் அவனைக் காரியத்தில் அமைப்பதாயிருப்பதாம். உதாரணமாக:-பந்துவாயும் ஏழையாயும் இருக்கிற ஒருவன் மற்றொரு பந்துவினிடத்தில் ஒரு திருஹம் கேட்டால் அவன் தன் பந்துவாயும் ஏழையாயும் இருப்பதினால் கொடுப்பான். அப்போது அவன் தன் மனதில் இவன் ஏழையாயில்லாத பக்ஷத்திலும் கொடுப்பேன் என்றும், ஏழையாயிருந்து பந்துவாயில்லாத பக்ஷத்திலும் கொடுப்பேன் என்றும் எண்ணுகின்றான். இது இரண்டு நாட்டமாயும் கலப்புள்ள நிய்யத்தாயு மிருக்கிறது. இரண்டாவது வகை:—அவன் தன் மனதில், இவன் எனக்குப் பந்துவாயிருந்து ஏழையாயில்லாத பக்ஷத்தில் அல்லது ஏழையாயிருந்து பந்துவாயில்லாத பக்ஷத்தில் கொடுக்கேன் என்று எண்ணுவதும் ஏழ்மைத்தனமும் பந்துத்துவமும் சேர்ந்திருந்தால் அப்போது கொடுக்கும்படி அவனைத் தூண்டுவதுமாம். முந்தின வகைக்கு உபமானமாவது:- இரண்டுபேரில் ஒவ்வொருவனும் தனித்திருந்தாலும் தூக்கக்கூடிய ஓர் கல்லை இரண்டுபேரும் சேர்ந்து தூக்குவதுபோலவாம். இரண்டாவது வகைக்கு உபமானமாவது:—பெலவீனரான இரண்டுபேரில் ஒவ்வொருவனும் தனித்திருந்தால் தூக்கமுடியாத ஓர் கல்லை அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து தூக்குவதுபோலவாம். மூன்றாவது வகை:—அந்த இரண்டு நாட்டங்களில் ஒன்று

வேலையில் தூண்டாத பெலங்குன்றிய நாட்டமாயும் மற்றொன்று தனியாகவே வேலையில் தூண்டுகிற பெலத்த நாட்டமாயு மிருப்பதாம். ஆயினும் அந்த பெலங்குன்றிய நாட்டத்தினால் வேலை வெகு சுலபமாயிருக்கும். உதாரணமாக:—ஒருவன் இரவில் தனித்து தஹஜ்ஜுது தொழுகின்றான். ஆனால் அப்போது ஜனங்களிருந்தால் தொழுவது அவனுக்கு மிகச்சுளுவாயும் அதிக சந்தோஷமாயு மிருக்கிறது. என்கிலும் சவாபு கிடைக்குமென்ற ஆதரவு அவனுக்கு இல்லாமற்போனால் ஜனங்கள் பார்ப்பதற்காகத் தொழமாட்டான். இவனுக்கு உபமானமாவது:—பெலசாலியான ஒரு மனிதன் ஒரு கல்லைத் தூக்கக்கூடியவனாயிருந்து தூக்கும் வேலை அதிக சுலபமாவதற்காகப் பெலங்குன்றிய மற்றொருவனும் அவனுக்கு உதவியாயிருப்பது போலவாம். இவைகளில் ஒவ்வொன்றும் வெவ்வேறு ஹுக்முள்ளதாயிருக்கிறது. இதைக்குறித்து இக்லாசுடைய பாடத்தில் சொல்லப்படும். இந்த விவரத்தினால் நாடிய கருத்து என்னவென்றால், ஒரு வேலையை நாடுவதும் அவ்வேலையில் எழுப்புவதும் அவ்வேலையைச் செய்விப்பதும் நிய்யத்தின் பொருளாகும் என்றும், அந்த நிய்யத்து சிலசமயம் கலப்பில்லாததாயும் சில சமயம் கலப்புள்ளதாயும் இருக்கும் என்றும் நீ அறிந்துகொள்ளவேண்டுமென்பதுதான்.

பசல்: அறிந்துகொள்:—றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், மூமினுடைய நிய்யத்து அவனுடைய அமலைக் காண நல்லது என்று அருளிச்செய்திருக்கிறார்கள். இந்த ஹதீசினால் அமலில்லாத நிய்யத்தானது நிய்யத்தில்லாத அமலைவிட நல்லது என்பதாக நாயகமவர்கள் கருதவில்லை. ஏனெனில் நிய்யத்தில்லாத அமல் இபாதத்தாகாது என்பதும் அமலில்லாத நிய்யத்து இபாதத்தாகும் என்பதும் தெரியாத சங்கதியல்ல. பின்பு நாயகமவர்கள் இப்படிச் சொன்னதற்குப்பொருள் என்னவென்றால், மூமினுடைய அமல் அவன் தேகத்திலும் அவனுடைய நிய்யத்து இருதயத்திலும் இருக்கிறது. இது இரண்டுபகுதியாயிற்று. இந்த இரண்டுபகுதியிலும் இருதயத்திலிருக்கும் பகுதியே மிகநல்லது என்பது பொருளாமென்க. இருதயபகுதியே மிகநல்லது என்றதின் காரணம் யாதெனில், தேகத்தினால் அமல்செய்யவேண்டுமென்றது இருதயத்தின் குணம் திருந்தவேண்டுமெனக் கருதியேயாம். நிய்யத்து இருதய அமல் இவைகளால் நாடியநோக்கம் தேகத்தின்குணம் மாறவேண்டுமென்பதல்ல, அமலுக்காக நிய்யத்து வேண்டும் என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். எதார்த்தத்திலோ நிய்யத்துக்காகவே அமல் வேண்டியதாயிருக்

கிறது. எனெனில் எல்லா அமல்களாலும் நாடியநோக்கம் மனம் திருந்தவேண்டுமென்பதுதான். அவ்வுலகத்துக்கு யாத்திரை செய்வது மனமேயாம். நற்பதவியும் துர்ப்பதவியும் அதற்கேயாம். நடுவே சரீரமிருக்குமென்கிலும் இது ஹாஜியைத்தொடர்ந்த ஒட்டகம்போல் மனதைத் தொடர்ந்ததாயிருக்கிறது. ஒட்டகமில்லாமல் ஹாஜியில்லையாயினும் ஒட்டகம் ஹாஜியல்ல. மனந்திருந்தல் என்பது ஒரே ஒரு காரியம். அதாவது:—துன்யாவைவிட்டு ஆகிரத்தின் பக்கம் மனோமுகத்தைத் திருப்புவதாம். அன்றியும் துன்யா, ஆகிரத்து இவ்விரண்டையும்விட்டு அல்லாவின்பக்கம் அதைத் திருப்புவதுமாம். மனோமுகமென்பது மனதின் நாட்டமும் நோக்கமுமேயன்றி வேறொன்றல்ல. ஆகவே அவனுடைய மனதில் துன்யாவின் நாட்டம் மிகைத்திருக்குமாகில் அவன் முகம் துன்யாவின் பக்கமே திரும்பியிருக்கிறது. துன்யாவில் அவன் கட்டுண்டிருப்பது அவன் நாட்டத்தினாலேயாம். ஆரம்பத்தில் இவன் இப்படித்தானிருக்கிறான். பின்பு எப்போது இவனுக்கு அல்லாகுதஆலாவின் நாட்டமும் ஆகிரத்துடைய தாரின் தேட்டமும் மேலிட்டதோ அப்போது அவன்குணம் திரும்பிவிட்டது. மனோமுகத்தை வேறுபக்கத்தில் திருப்பிவிட்டான்.

ஆகவே எல்லா அமல்களாலும் நாடியநோக்கம் மனந்திரும்பவேண்டுமென்பதேயாம். ஸுஜூது செய்வதில் நெற்றியை ஆகாயவெளியிலிருந்து பூமியில் படியவைக்க வேண்டுமென்பது நோக்கமல்ல. மேலும் மனதின் குணம் மாறவேண்டுமென்பதுதான் நோக்கம். அதாவது:—மனம் தன்பெருமைக்குணத்தைவிட்டுத் தாழ்மைக்குணத்தில் மாறவேண்டுமென்பதேயாம். அல்லாகு அக்பர் என்று சொல்வதில் அவன் நாக்குப்புரண்டு அசையவேண்டுமென்பது நோக்கமல்ல. மேலும் அவன் மனம் அல்லாகு தஆலாவைக் கனப்படுத்துங் குணத்தில் மாறி அம்மனதில் அல்லாகு தஆலாவே கனம் பொருந்தியவனாயிருக்கவேண்டுமென்பது நோக்கமாம். ஹஜ்ஜு செய்யும் போது கல் எறிவதில் ஓர் இடத்தில் கற்கள் அதிகமாய்க் குவியவேண்டுமென்பதும் கை ஆட வேண்டுமென்பதும் நோக்கமல்ல. மேலும் * லப்பைக்க பிஹஜ்ஜதின் ஹக்கன் தஅப்புதன் வரிக்கன் என்று அவன் சொன்னதுபோல் அவன் மனமானது அடிமைத்தனத்தில் சரியாக நிற்கவேண்டுமென்பதும் அவன் தன் இச்சைக்கு வசப் படாமலும் புத்தியை ஊடாடாமலும் அதை ஒருபக்கத்தில் வைத்து

* இ-ள். வணங்கவேண்டிய விதிப்பிரகாரமும் அடிமைத்தனம் செய்யவேண்டிய விதிப்பிரகாரமும் ஹஜ்ஜு செய்வதற்கு நான் இதோ உன் சமுகத்தில் இருக்கிறேன் என்பதாம்.

விட்டு மார்க்க உத்திரவுக்கு வழிபட வேண்டுமென்பதும் தனக்கு மாட்டியிருக்கும் மார்க்க கடிவாளத்தைத் தன் கையில் பிடித்துக் கொள்ளாமல் மார்க்க உத்திரவின்வசம் ஒப்புக்கொடுக்கவேண்டுமென்பதுமே நோக்கமாம். குருபான் செய்வதில் ஆட்டைக் கொல்ல வேண்டுமென்பது நோக்கமல்ல. மேலும்உலோபகுணமான ஊத்தை உன் நெஞ்சைவிட்டு ஒழியவேண்டுமென்பதும் நீ அந்த மிருகங்களின்மேல் சுபாவ விதிப்படி இரக்கப்படாமல் மார்க்க விதிப்படி இரக்கப்படவேண்டுமென்பதுமே நோக்கமாம். மார்க்கமானது அதைக் கொல் என்று உனக்குக் கட்டளையிடும்போது (நீ அதை மறுத்து) இந்த ஏழை மிருகம் என்ன செய்தது? இதை நான் ஏன் வதை செய்யவேண்டும்? என்று சொல்லாதே. அவை எல்லாவற்றையும் உன்னிடத்திலிருந்து ஓர் பக்கத்தில் ஒதுக்கிவிடு. எதார்த்தத்தில் (நீ ஓர் பொருட்டல்ல என்று) நாஸ்தியாய்ப்போ. ஏனெனில், அடியான் தன் விஷயத்தில் இல்லாதவனே யாகின்றான். அல்லாகு தஆலா ஒருவனே எதார்த்தத்தில் உண்மைப் பொருளாய் விளங்குகின்றான்.

இப்படி மனம் திரும்பவேண்டுமென்கிற நோக்கமாகவே மற்ற இபாதத்துகளெல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆயினும் மனமானது எத்தன்மையாகப் படைக்கப்பட்டிருக்கிறதென்றால் அதில் யாதொரு நாட்டமும் விருப்பமும் பிறக்கும்போது தேகம் அதற்கு உடன்பட்டு உழைக்க எழுந்தால் அந்த நாட்டத்தின் குணம் மனதில் நன்றாய் உறைந்து மிகவும் உறுதிப்படும். உதாரணமாக:— தகப்பனையிழந்த எத்திமான ஒரு அனாதப்பிள்ளையின்மேல் ஒருவனுக்கு மனதில் இரக்கம் வரும்போது அதற்கு உடன்பாடாக அவன் தன் கையினால் அச்சிறுவனுடைய தலையைத் தடவிவிடுவானாகில் அந்த இரக்கம் நன்றாய்த் திறப்பட்டு மனதுக்கு அந்த இரக்கத்தின் உணர்ச்சி அதிகரிக்கும். மனதில் தாழ்ச்சியின் நாட்டம் பிறக்கும்போது தலை அதற்கு உடன்பட்டுத் தரைமட்டுங் குனிந்து தாழ்ச்சி செய்யுமாகில் மனதில் அந்தத் தாழ்ச்சி நன்றாய் உறுதிப்படும். எல்லா இபாதத்துகளின் நிய்யத்தென்பது; நான் துன்யாவின்பக்கம் முகம் நோக்குவதை விட்டு ஆகிரத்தின் பக்கம் நோக்குகிறேன் என்கிற நல்ல நாட்டமேயாம். அந்த நிய்யத்தின்படி அமல்செய்வது அந்த நாட்டத்தை மனதில் உறையச்செய்து திறப்படுத்தும். ஆதலால் நாட்டத்தையும் நிய்யத்தையும் திறப்படுத்துவதற்காகவே அமல் ஏற்பட்டிருக்கிறது. நிய்யத்திலிருந்தே அமல் உண்டாவதாயினும் சரியே. இப்படியாயிருந்தால், இந்த நிய்யத்தானது அமலைவிட நல்

லது என்பது நன்குவிளங்கும். ஏனெனில் நிய்யத்தானது மனந்தன்னிலேயே இருக்கிறது. அமலோ வேறொரு இடத்திலிருந்து மனதில் குணங்கொடுப்பதாயிருக்கிறது. குணங்கொடுத்தால் அந்த அமல் உபயோகப்படும். கொடாவிட்டால் அதாவது மனம் மறதியிலிருந்தால் அந்த அமல் வீணாகும். அமலில்லாத நிய்யத்து வீணாவதல்ல. இதற்கு உபமானமாவது:—ஒருவனுக்கு வயிற்றில் வலியிருக்கிறது. அவன் அதற்குப் பரிகாரமாக மருந்தைக் குடிப்பானாகில் அது வயிற்றுக்குட் போய்ச்சேரும். (அப்படிக் குடிக்காமல்) நெஞ்சின்மேல் தைலத்தைப் பூசுவானாகில் அதன்குணம் வயிற்றுக்குட் செல்கிறபக்ஷம் அந்த மேற்பூச்சு உபயோகமுள்ளதுதான். ஆயினும் நெஞ்சின் வழியாகச் செல்லுகிற தைலத்தைவிட இரைக்குடல் தன்னிலேயே போய்ச்சேருகிற மருந்து மிக நல்லதேயாம். பரிகாரம் வயிற்றுக்கேயொழிய நெஞ்சுக்கல்ல ஆகலால் நெஞ்சின்மேலிட்ட தைலம் இரைக்குடலுக்கு எட்டாமற்போனால் அது வீணேயாம், இரைக்குடலுக்குட்சென்ற மருந்து நெஞ்சுக்கு எறாமற்போனாலும் அது வீணாவதல்ல.

### இருதய வசனிப்பு, அதன்கெட்ட சிந்தனைகள் இவைகளில் பொறுக்கப்படுவது இதுவெனவும் பொறுக்கப்படாமல் குற்றம்பிடிக்கப்படுவது இதுவெனவும் விளக்கல்.

அறிந்துகொள்:—றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "அல்லாகு தஆலா என் உம்மத்தை இருதயவசனிப்பில்நின்றும் குற்றம்பிடிக்காமல் மன்னிப்பு செய்திருக்கிறான்" என்று அருளிச்செய்திருக்கிறார்கள். இன்னும் சஹீபுகாரியிலும் சஹீ முஸ்லீமிலும் இந்த ஹதீசு வந்திருக்கிறது. அதாவது:—"யாராவதொருவன் ஒருபாவத்தை நாடி அதைச் செய்யாமலிருந்தால் அதை அவன்பேரால் எழுதவேண்டாம்" என்றும், "செய்தால் ஒரேபாவமாக எழுதுங்கள்" என்றும், "அவன் ஒருநல்ல காரியத்தை நாடி அதைச் செய்யாமலிருந்தபோதிலும் ஒரு நன்மை எழுதுங்கள்" என்றும், "செய்தால் பத்துநன்மைகளை எழுதுங்கள்" என்றும் அல்லாகு தஆலா மலக்குகளுக்குச் சொல்லுவான்" என்பதே. இன்னும் "அந்த நன்மைகள் எழுநூறு வரையில் இரட்டிப்பாக்கப்படும்" என்று சில ஹதீசுகளில் வந்திருக்கிறது. (பாவத்தை நாடினால் அது எழுதப்படுவதில்லை என்று சொல்லியிருக்கிற) இந்தவிடத்தில் சிலர் மருண்டு நாட்டங்களிலும் எண்ணங்களிலும் எதுவொன்று மனதில் நிகழ்கின்றதோ அதைப்பற்றி அல்லாகு தஆலா குற்றம்-

பிடிக்கமாட்டான் என்று நினைத்திருக்கிறார்கள். இது பிசகு. ஏனெனில் மனமே அசலான முதல் என்றும் தேகம் அதைத் தொடர்ந்தது என்றும் நாம் விளக்கியிருக்கிறோம். வஇன் துப்தூமாபீ அன்புஸிக்கும் என்ற ஆயத்தில் "நீங்கள் உங்கள் இருதயத்திலிருப்பதை வெளிப்படுத்தினாலும் உள்ளடக்கினாலும் அதைக் குறித்து அல்லாகு தஆலா உங்களைக் கேட்பான்" என்றும், இன்னஸ்ஸம்அவல்ப்ஸ்ர என்ற ஆய்த்தில் "கண், காது, மனம் இம்மூன்றையும் குறித்துக் கேட்கப்படும்" என்றும், சத்தியஞ்செய்கிற விஷயத்தில் லாயுஆகிதுக்கு முல்லாஹு பில்லக்வி என்ற ஆயத்தில் "நாவின் வழுவைப்பற்றி அல்லாகு தஆலா உங்களைக் குற்றப்படுத்தமாட்டான்" என்றும், "ஆனால் மனதில் நாடியிருப்பதைப்பற்றிக் குற்றப்படுத்துவான்" என்றும் அல்லாகு தஆலா திருவுளமாயிருக்கிறான். இதுவுமன்றி பெருமை, அகம், பொறாமை, ரியா, நிபாகு என்னும் களவாமனம் இவையெல்லாவற்றையும் குறித்துக் கேட்கப்படும் என்பதில் எவர்க்கும் எதும் வாதிப்பில்லை, இவையெல்லாம் இருதயத்தின் செயல்களேயாம். பின்னர் இவ்விஷயத்தில் சம்பவிக்கப்பட்டது யாதெனில்,

அறிந்துகொள்:—மனிதனின் மனதில் நிகழ்கின்றதோ அது நான்கு வகைப்படும், அவற்றுள் இரண்டு சக்திக்குள் அடங்காததாயும் குற்றம் பிடிக்கப்படாததாயுமிருக்கிறது. இன்னுமிரண்டு அவன் சக்திக்கு அடங்கினதாயும் குற்றம் பிடிக்கப்படுவதாயுமிருக்கிறது. இந்நான்கில் ஒவ்வொன்றுக்கும் உதாரணம் மனதில் வருகிற ஓர் நாட்டமாம். அதெவ்வாறெனில் முதலாவது:—வழியில் நடந்துசெல்கையில் உனக்குப் பின்னே ஒரு பெண்பிள்ளை வந்தால் அப்போது அவளைத் திரும்பிப்பார்க்கலாம் என்று உன் மனதில் ஓர் எண்ணம் வரும். இந்த எண்ணத்தை இருதயவசனிப்பு என்று சொல்லுவார்கள். இரண்டாவது:—அந்த எண்ணம் மனதில் விம்பி எழுந்து அவளைத் திரும்பிப்பார்க்கும்படி தூண்டும். இதற்கு மனச்சாய்வு என்று சொல்லுவார்கள். இது இச்சையை எழுப்புவதாயிருக்கும். மூன்றாவது:—அவளைத் திரும்பிப்பார்க்கத்தான் வேண்டும் என்று மனம் ஏவும். அப்படி மனம் ஏவுவது எத்தவிடத்திலென்றால், அச்சமும் நாணமும் முதலானவை தடையில்லாத இடத்தில்தான். இச்சை எதைத் தேடுகின்றதோ அதையெல்லாம் செய்யவேண்டுமென்று மனம் ஏவாது மேலும் இது செய்யத்தகாத செயல் என்று மனச்சொல்லுதலுமுண்டு. இதற்கு மன ஏவல் என்று பேர்வைப்போம். நாலாவது:—அவளைத் திரும்பிப்பார்க்க நாடுவான். அப்

போது அவன் அல்லாஹ்வுக்கோ அல்லது ஜனங்களுக்கோ பயந்தாவது அல்லது அந்த மன எவலைக் கெட்டதென் றெண்ணியாவது அதை (மறுக்கவேண்டும்) மறுக்காமலிருப்பானாகில் அந்த நாட்டம் வெகு சீக்கிரத்தில் ஸ்திரமாய்ப்போம். ஆகவே இருதயவசனிப்பு, மனச்சாய்வு என்று நாம் சொன்ன முந்திய அதன் இரண்டு நிலைமைகளும் அடியானுடைய சக்திக்கு அடங்காதனவாதலால் அவைகளைப்பற்றி அவன் குற்றம்பிடிக்கப்படான்: அல்லாகு தஆலா எந்த நபுசையும் அதன் சக்தியின் அளவாகவேயன்றி (அதிகமாக) வருத்தப்படுத்தான் என்று அல்லாகு தஆலா கூறுகின்றான். இந்த இருதயவசனிப்பென்பது தனைதப்போல்வதென்றால் உசுமானுபுனுமள்ஊன் றழியல்லாகு அன்கு அவர்கள் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடம் சொன்னதைப்போல்வதாம். அது வருமாறு:—மள்ஊனுடைய மகன் உசுமான் றழியல்லாகு அன்கு அவர்கள் றசூல்நாயகமவர்களின் சமுகத்தில் "யாறசூலல்லா! எனக்கு நிசாவின் (ஸ்திரீபோகத்தின்) இச்சை நீங்கிப்போவதற்காக என்னை விரை எடுத்துக்கொள்ளும்படி என் மனம் எனக்குச் சொல்லுகிறது" என்றார்கள். அதற்கு நாயகமவர்கள் "நீ அப்படிச் செய்யாதே" என்றும், "நோன்பு வைப்பது என் உம்மத்தின் விரையெடுப்பாயிருக்கிறது" என்றும் சொன்னார்கள். பின்பு "பெண்ஜாதிக்குத் தலாக்கு கொடு என்று என் மனம் சொல்லுகிறது" என்றார்கள். அதற்கு நாயகமவர்கள் "நிகாகு என் சுன்னத்தாயிருப்பதால் நீ அப்படி கொடாதே பொறு" என்றார்கள். பின்பு "றஹுபான்கள் என்னும் கிறிஸ்துமார்க்க சன்னியாசிகளைப்போல் மலைக்குப்போய்விடு என்று என் மனம் சொல்லுகிறது" என்றார்கள். அதற்கு நாயகமவர்கள் "அப்படிச் செய்யாதே" என்றும், "என் உம்மத்துடைய சன்னியாசமாகிறது ஹஜ்ஜூம் மார்க்கயுத்தமுமாயிருக்கிறது" என்றும் சொன்னார்கள். பின்பு "இறைச்சி தின்னாதே என்று என் மனம் எனக்குச் சொல்லுகிறது" என்றார்கள். அதற்கு நாயகமவர்கள், "இல்லை, நான் இறைச்சியை ஆசிக்கிறேன், கிடைத்தால் புசிக்கிறேன். அதை அல்லாகு தஆலா இடத்தில் நான் கேட்டபடியும் அவன் கொடுப்பானு" என்று சொன்னார்கள். இப்படியாக அவர்களுக்கு வந்துகொண்டிருந்த எண்ணங்களை இருதயவசனிப்பாம். இது பொறுக்கப்படும். ஏனெனில் அதைச் செய்ய அவர்கள் நாடாமல் அதைப்பற்றி உசாவுதல் செய்துகொண்டிருந்ததினாலென்க.

இனி அவன் சக்திக்குள் அடங்கின மன எவலும் அந்த எவலுக்கு வசப்பட்டு அதைச் செய்யநாடுவதுமான இந்த இரண்டை-

யும்பற்றி அவன் குற்றம்பிடிக்கப்படுவான். அப்படி நாடினதை அல்லாவுக்காக அல்லாமல் வெட்கத்தினாலாவது பயத்தினாலாவது வேறு தடையினாலாவது அவன் செய்யவில்லையானாலும் சரியே. அடியான் குற்றம் பிடிக்கப்படுவான் என்றதின்பொருள், அவன்மேல் யாருக்கோ கோபம்வந்து அந்த கோபத்தைச் செலுத்த இப்போது அவனை வேதனைப்படுத்துவான் என்பதல்ல. ஏனெனில், அல்லாகு தஆலா கோபத்தையும் கோபஞ் செலுத்துவதையும்விட்டுத் தூய்யவனாயிருக்கிறான். பின்பு அதற்குப் பொருள் யாதெனில், அந்த நாட்டத்தினால் அவன் மனமானது அல்லாகு தஆலாவுடைய திருச்சமுகத்தைவிட்டுத் தூரத்தில்போய்விழும்படி ஓர் குணத்தை ஏற்கின்றது. இது அவனின் துர்ப்பதவியாயிருக்கிறது. ஏனெனில், அவன் தன்னையும் துன்யாவையும்விட்டு அல்லாகு தஆலாவின் பக்கம் முகம் நோக்குவதே அவனின் நற்பதவி என்று முதலில் நாம் விவரித்திருக்கிறோம். அவனுடைய முகமென்றது அவனின் நாட்டத்தையேயாம். அவனோ துன்யாவில் எப்படியாகச் சிக்கிக்கொண்டிருக்கிறானெனறால், துன்யா சம்பந்தமாக அவன் நாடுகிற ஒவ்வொரு நாட்டத்தினாலும் எண்ணுகிற ஒவ்வொரு எண்ணத்தினாலும், அந்தச் சிக்கல் மிகவும் உறுதிப்பட்டுக்கொண்டிருக்கிறது. எது அவனுக்கு அவசியமாய் வேண்டியதோ அதைவிட்டும் வெகுதூரத்தில்போய் விழுந்துவிட்டான். பிடிக்கப்பட்டான் என்றும் லகுனத்து செய்யப்பட்டான் என்றும் சொல்லுவதற்கு முறையே துன்யாவில் சிக்கிக்கொண்டான், அல்லாகு தஆலாவின் சமுகத்தைவிட்டும் தூரப்பட்டான் என்பது பொருளாம். இதானது அவனாலேயும் அவனோடேயும் அவனிலேயும் இருக்கிற ஓர் காரியமேயன்றி மற்றப்படி அவனுடைய வணக்கத்தினால் யாரோ சந்தோஷிக்கிறான் என்பதும் அவனுடைய பாவத்தினால் அவன் கோபங்கொண்டு அதற்குப் பதில் செய்கிறான் என்பதுங் கிடையாது. ஆயினும் ஜனங்களுடைய புத்தியின் பக்குவத்தை நோக்கி (அல்லாகு தஆலா குற்றம் பிடிப்பான், கோபிப்பான் என்று) வாசகம் வழங்கி வருகிறது. இந்த இரகசியத்தை அறிந்தவன் எவனோ அவனுக்கு இருதயத்தின இந்த நிலைமையைக்குறித்துக் குற்றம் பிடிக்கப்படுமென்பதில் கொஞ்சமும் சந்தேகமிராது. இதுவுந் தவிர இன்னும் இதன்மேல் உறுதியான அத்தாக்ஷி அடியில் வரும் ஹதீசாம். அதாவது—"இரண்டுபேர் கத்தியை உருவிப்பிடித்துக் கொண்டு ஒருவரோடொருவர் சண்டைபோட்டு ஒருவன் வெட்டுண்டால் வெட்டுண்டவனும் வெட்டினவனும் இருவரும் நரகம் போவார்கள்" என்று ரசூல் ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமா

னார்கள். அப்போது அஸ்ஹாபுகள் "யாரசூலல்லா! வெட்டுண்டவன் நரகம் போவதேன்?" என்று கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் "அவனும் அவனைக் கொல்லவேண்டுமென்று நாடிக்கொண்டிருந்ததினால்" என்றும், "அவனால் முடிகிறபக்ஷம் கொன்றேயிருப்பான்" என்றும் அருளிச்செய்தார்கள். இன்னும் ஒருவன் ஒரு பொருளை மார்க்க அறிவின்படி செலவுசெய்யாமல் விரோதமாகச் செலவுசெய்வதைக் கண்ட மற்றொருவன் எனக்கும் பொருள் இருந்தால் நானும் இப்படிச் செலவுசெய்வேன் என்று எண்ணுவானாகில் இந்த இருவரும் பாவத்தில் சமானராவார்கள்" என்று நாயகமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இதுவும் ஓர் அத்தாட்சியாம். இவையெல்லாம் இருதயத்தின் நாட்டமேயல்லது வேறல்ல. ஒருவன் தன் படுக்கையில் ஒரு பெண்பிள்ளையைக் கண்டு அவளை ஒரு அன்னியஸ்திரீ என்றெண்ணி அவளுடன் சேர்வானாகில் அவள் அவன் பெண்சாதியாயிருந்தபோதிலும் அவன் பாவியாவான் என்பதில் சந்தேகமில்லை. மேலும் ஒலுவில்லாமல் தொழுகிற ஒருவனுக்கு ஒலுவிருப்பதாக எண்ணமிருந்தால் அவனுக்கு சவாபுண்டு. ஒலுவில்லை என்கிற எண்ணத்துடன் தொழுதவன் ஒலுவிருந்ததாகப்பிறகு அவனுக்கு ஞாபகம் வந்தபோதிலும் அவன் பாவியாவான். இவையெல்லாம் இருதயத்தின் நிலைமைகளேயாம். இனி ஹதீதில் வந்திருப்பதுபோல ஒருவன் ஒருபாவத்தை நாடிப் பிறகு அல்லாவுக்குப் பயந்து அதைச் செய்யாமல் விட்டுவிடுவானாகில் அவனுக்கு ஒரு நன்மை எழுதப்படும். ஏனெனில் மனிதன் தனதியற்கைக்கு இணக்கமானது எதுவோ அதை விரும்புகிறவனா யிருக்கிறான். இயற்கைக்கு விரோதமாக அதை விட்டுவிடுவது முஜாஹதாவென்றும் தெண்டிப்பாம். (இந்த முஜாஹதா இருதயத்தை வெளிச்சமாக்கும், அந்தவிருப்பம் அதை இருட்டாக்கும்) இருதயத்தை வெளிச்சமாக்குவதில் இந்த முஜாஹதாவின் குணமானது அதை இருட்டாக்குவதில் அந்த விருப்பத்தின் குணத்தைக்கான அதிகமா யிருக்கிறது. நன்மையை எழுதுவதின் பொருள் இதுவேயாம். இதுதான் அந்த ஹதீசுக்குப்பொருள். என்கிலும் ஒருவன் ஒருபாவத்தை நாடிப் பிறகு அதைச்செய்ய ஏலாமையினால் விட்டுவிடுவானாகில் இப்படி விடுவது அந்த நாட்டத்துக்குக் கபாராவாகாது, அந்த இருட்டையும் போக்காது. ஆதலால், அந்த நாட்டத்துக்காக அவன் பிடிக்கப்படுகிறவனாவான். ஏலாமையினால் தன் எதிரியைக் கொல்லாமல்விட்டு அந்த எதிரியினால் வெட்டுண்டிறந்த ஓர் மனிதனுக்கு இவன் ஒப்பாவான்.

அமல்களில் எந்த அமல் நிய்யத்தினால் மாறும் என்பதை விளக்கல்.

அறிந்துகொள்:—அமல்கள் மூன்றுவகைப்பட்டிருக்கின்றன. அவை: வணக்கங்கள், பாவங்கள், (இரண்டுமல்லாத) முபாஹாத்கள் இவைகளேயாம். இன்னமல் அஃமாலு பின்னிய்யாத்தி அதாவது அமல்களென்பதெல்லாம் நிய்யத்தைக்கொண்டுதான் என்று நாயகம் ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்களே; இதைக் கொண்டு சிலர் மருண்டு பாவமும் நல்ல நிய்யத்தினால் நன்மையாக மாறும் என்று நினைக்கக்கூடும். அப்படி நினைப்பது பிசகு. மேலும் பாவங்கள் என்னும் இந்த ஒருவகையில் நல்ல நிய்யத்து ஒரு குணப்பாடும் செய்யாது. ஆனால் கெட்ட நிய்யத்து அந்தப் பாவத்தை மிகவும் கெட்டதாக்கும். இது எதைப்போல்வதென்றால் ஒருவன் மற்றொருவனுடைய மனதைச் சந்தோஷப்படுத்துவதற்காகப் புறம்பேசி அல்லது ஹராமான பொருளைக்கொண்டு பள்ளிவாசல், சத்திரம், மதரஸா இவைகளைக் கட்டி என் நிய்யத்து நல்நிய்யத்தாயிருக்கிறது என்று சொல்வதுபோலவாம். கெட்டதைக்கொண்டு நல்லதைச்செய்ய நாடுவது வேறொரு கெடுதியாகும் என்கிற இவ்வளவு அவனுக்குத் தெரியவில்லை. தெரிந்தேசெய்வானாகில் அவன் பாவிரு என்னும் பாதகனாயிருக்கிறான். இது ஒரு நன்மையாயிருக்கிறதென்று நினைப்பானாகில் அப்போதும் அவன் பாவிருதான். ஏனெனில், அறிவின்மையை அகற்றும்பொருட்டு அறிவைப்படிப்பது பர்லாயிருக்கிறது. ஜனங்களின் கேடுகளில் பெரும்பான்மையானவை அறிவின்மையினால் சம்பவிக்கின்றன. இதனாலேதான் ஸஹல்துஸ்தரி றஹி மஹுல்லா அவர்கள் "அறிவின்மையினும் அதிக பெரியபாவம் ஒன்றுமே இல்லை" என்றும் "அறிவின்மையை அறியாமலிருப்பது அதினும்மிகப்பெரியபாவம்" என்றும்சொல்லியிருக்கிறார்கள். ஏனெனில் தனக்கு அறிவில்லை என்பதை அறியாதவன் ஒருபோதும் அதைக் கற்றுக்கொள்ளமாட்டான். அந்த அறியாமை அவனுக்குத் திரையும் தடையுமாய்ப்போம். இதுபோலவே ஒருமானிடன் காஜிவேலையினாலும், தர்மசொத்து எதீம்களுடைய சொத்து இவைகளின் பாதுகாப்பு வேலையினாலும், சுல்தானுடைய சொத்திலிருந்தும் துன்யாவைச் சம்பாதிக்கலாமென்றும் தர்க்கவாதங்கள் செய்யலாமென்றும் நாட்டங் கொண்டிருக்கிறானென்று உனக்குத் தெரிகிறபக்ஷம் அவனுக்குஇல்மைப்போதிப்பது ஹறாமாயிருக்கிறது. முதர்ரிஸு என்னும் போதகன் மார்க்க அறிவைப் பரவச்செய்வதே என் நிய்யத்து என்னும் மானிடன் கெட்டகாரியங்களிலிருந்தாலும் தான் என் நிய்

பத்தினால் சவாபை அடைவேன் என்றும் சொல்லுவானாகில் இது சுத்த அறிவின்மையாம். இந்தப்போதகன் சொல்வது எப்படியிருக்கிறதென்றால், வழிபறி செய்கிற கள்ளனுக்குக் கத்தியையும் சாராயம் வடிப்பவனுக்குத் திராட்சப்பழத்தையும் கொடுக்கிற ஒரு மனிதன் என்னுடைய நிய்யத்தானது சகாவத்தென்னும் ஈகையாயிருக்கிறது என்றும், அல்லாகு தஆலா ஈகையுள்ளவனைக்காண அதிகமாக எந்த மனிதனையும் நேசிப்பதில்லை என்றும் சொல்வதுபோலிருக்கிறது. இது அந்த மனிதனுடைய அறிவின்மையாகும். மேலும் வழிபழி செய்வானென்று அவனுக்குத் தெரிந்தால் அக்கள்ளன் கையிலிருந்து கத்தியை அப்புறப்படுத்துவது அவசியமாயிருக்க வேறு கத்தியை அவனுக்கு எப்படி கொடுக்கக்கூடும்? சலபுகளான முன்னோர்களெல்லாம் பாவிகாகிய ஆலிமை விட்டு அல்லாகு தஆலாவினிடம் காவல் தேடுகிறவர்களாயும் எந்த ஷாகிர்துகளில் யாதொரு பாவக்குறியைக் கண்டார்களோ அந்த ஷாகிர்துகளைத் தங்களிடத்திலிருந்து தூரத்திவிடுகிறவர்களாயுமிருந்தார்கள். அஹ்மது ஹப்பல் றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் வெகுநாளாக ஓதிக்கொண்டிருந்த ஒரு ஷாகிர்து தன் வீட்டின் வெளிப்பக்கத்துச் சுவற்றை மண்ணால்மொழுகின இவ்வளவு குற்றத்துக்காக அவர்கள் அந்த ஷாகிர்தைக் கோபித்து "நீ முஸ்லிம்கள் நடக்கும் ராஜபாட்டையிலிருந்து ஒரு நகக் கனத்தளவை அபகரித்துக்கொண்டாயாதலால் உனக்கு இல்மைக் கற்றுக்கொடுக்கத்தகாது" என்றுசொல்லி இனி அவர்களிடம் வாரதபடி அனுப்பிவிட்டார்கள். ஆதலால் பாவங்கள் நல்ல நிய்யத்தைக்கொண்டு நல்லவை ஆகமாட்டா. மேலும் மார்க்கம் எதை நல்லது என்று கட்டளையிடுகிறதோ அதுதான் நல்லதாகும். இனி அமல்களில்,

இரண்டாவது வகை:— வணக்கங்களாம். இதில் நிய்யத்தானது இரண்டுவிதத்தால் குணமுள்ளது. ஒன்று:—அந்த வணக்கம் நிய்யத்தைக்கொண்டே நிலைப்பதாம். மற்றொன்று:— நிய்யத்து எவ்வளவு அதிகப்படுகிறதோ அவ்வளவாக அந்த வணக்கத்தின் சவாபு அதிகப்படுவதுமாம். ஒருவன் நிய்யத்துடைய இல்மைக் கற்றுக்கொண்டால் அவன் ஒரு வணக்கத்தில் பத்து நல்ல நிய்யத்துக்களைச் செய்யக்கூடும். அப்போது அந்த ஒரு வணக்கம் பத்து வணக்கமாகும். உதாரணமாக:—ஒருவன் பள்ளிவாசலில் இஃதிகாபு இருப்பானாகில் முதலாவது:—அவன் இது அல்லாகு தஆலாவுடைய வீடு என்று நிய்யத்து செய்வான். எவனொருவன் பள்ளிவாசலுக்குப் போகிறானோ அவன் அல்லாகு தஆலாவைக் கண்டுகொள்ளப் போகிறவனாவான், ரசூல்சல்லல்லாகு அலைஹிவசல்ல

மவர்கள் தங்கள் திருவாயினால் "யாராவதொருவன் பள்ளிவாசலுக்குப்போனால் அல்லாகு தஆலாவைக் கண்டுகொள்ளப்போனான்" என்றும், கண்டுகொள்ளப்படுகிறவன் கண்டுகொள்ளவந்தவனைக் கனப்படுத்தவேண்டிய ஞாயமிருக்கிறது" என்றும் அருளிச்செய்திருக்கிறார்கள். இரண்டாவது:—மறுதொழுகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன் என்று நிய்யத்துசெய்வான், தொழுகையை எதிர்பார்த்துக் காத்திருப்பவன் எவனோ அவன் தொழுகையிலேயே இருக்கிறான் என்று ஹதீஸில் வந்திருக்கிறது. மூன்றாவது:—நான் இந்த இஃதிகாபினால் என் கண், காது, நா, கை, கால் இவைகளைக் கெட்ட வேலைகளில் வழங்காதபடி காக்கின்றேன் என்று நிய்யத்து செய்வான். இது ஒருவித நோன்பாயிருக்கிறது. பள்ளிவாசலில் உட்கார்வது என் உம்மத்துடைய * ரஹ்பானிய்யத்து என்று ஹதீஸில் வந்திருக்கிறது. நாலாவது:—நான் என் முழுஇருதயத்தையும் அல்லாகு தஆலாவின் வணக்கத்திலும் திக்ரு, பிக்ரு, முனாஜாத்துகளிலும் ஆக்கும்பொருட்டு மற்றும் பராக்குகளைவிட்டு என்னைத்தூரப்படுத்துகிறேன் என்று நிய்யத்து செய்வான். ஐந்தாவது:—ஜனங்களுடன் கலந்திருப்பதினாலுண்டாகிற தீங்கைவிட்டும் சலாமத்தடைவதை நிய்யத்துசெய்வான். ஆறாவது:—பள்ளிவாசலில் யாதொரு கெடுதியைக்கண்டால் அதை விலக்குவேன் என்றும், யாதொன்றை நன்மையெனக்கண்டால் அதைப்பற்றி ஏவுவேன் என்றும், யாராவது தொழுகையை நல்லவிதமாகத் தொழாமல் கெடுத்தால் அவர்களுக்கு அதைக் கற்றுக்கொடுப்பேன் என்றும் நிய்யத்து செய்வான். ஏழாவது:— பள்ளிவாசலானது மார்க்கபக்தியிற் சிறந்தவர்களுக்கு மனோஞ்சித ஸ்தானமாயிருப்பதுபற்றி அதில் மார்க்கபக்தியிற் சிறந்த ஒருவரை நான் கண்டடையக்கூடுமாதலால் அவரிடம் நான் மார்க்க சிநேகம் பிடித்துக்கொள்வேன் என்று நிய்யத்து செய்வான். எட்டாவது:—அல்லாவுடைய வீடாகிய பள்ளிவாசலில் யாதொரு பாவத்தைச் செய்யவும் கெட்ட எண்ணங்கொள்ளவும் அவனுக்கு நான் வெட்கப்படுகிறவனாயிருப்பேன் என்று நிய்யத்து செய்வான். இதைப்போலவே எல்லாவணக்கங்களிலும் யோசித்துக்கொள்வான்.

* ரஹ்பானிய்யத்து = நஸாராக்களில் உள்ள சன்னியாசிகளின் தவம். அவர்கள் தங்கள் நபுஸை இன்பசுகங்களிலிருந்து விலக்குவதற்காக மாதர்போகம், மதுரமான உணவு முதலியவைகளைத் தள்ளிவிடுகிறார்கள். போக இச்சையை ஒழிப்பதற்கு இவர்கள் தங்கள் கோசத்தை அறுத்துப்போடுவதுமுண்டாம் - கியாசுல்லுகாத்து.

அவை ஒவ்வொன்றிலும் சவாபு அதிகரிக்கும்படி அநேக நிய்யத்துகளைச் செய்யக்கூடும். இனி அமல்களில்,

மூன்றாவதுவகை:—முபாஹான செயல்களாம். புத்திமானாயிருக்கிற எவனும் மறதியாளன்போல் முபாஹான செயல்களில் மிருகத்தன்மையாக நடக்கமாட்டான். இது மிகவும் பெரிய நஷ்டமாகும். ஏனெனில், எல்லாச் செயல்களுக்கும் கேள்வியுண்டு. எல்லா முபாஹாதுகளுக்கும் கணக்குண்டு. அவைகளில் அவன் நிய்யத்து கெட்டிருந்தால் அந்த முபாஹாதுகள் அவனுக்குக் கேடாய்முடியும். நிய்யத்து நல்லதாயிருந்தால் அவை பிரயோசனத்தைக் கொடுக்கும். ஒரு நிய்யத்துமே இல்லாவிட்டால் அவை செய்ய விலக்கில்லாச் செயல்கள்தாம், என்றாலும் அவைகளைச் செய்வதற்காகக் கழித்த காலத்தை நஷ்டப்படுத்திக்கொண்டவனும் அதனால் யாதொரு பயனை அடையாதவனும்போனான். அன்றியும் துன்யாவில்நின்றும் நீ உன்பங்கை மறந்துபோகாதே என்ற ஆயத்துக்கு மாறுசெய்தவனுமாயினான். இந்த ஆயத்தின் கருத்தென்னவென்றால், துன்யாவானது சென்றுபோவதா யிருப்பதால் ஆகிரத்தில் உன்னோடிருக்கக்கூடிய உன்பங்கை அதில்நின்றும் எடுத்துக்கொள் என்பதேயாம். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "அடியான் தன்கண்ணுக்குச் சுருமா இடுவதுமுதல் அல்லது அவன் தன்கையால் ஒருசிறு மண் கட்டியை நசுக்குவதுமுதல் அல்லது ஒரு சிநேகனுடைய உடுப்பின்மேல் கையை வைப்பதுமுதல் அவன் செய்திருக்கிற ஒவ்வொரு செயலையும் குறித்து அவன் கேள்வி கேட்கப்படுவான்" என்று அருளிச்செய்திருக்கிறார்கள்.

இனி முபாஹான செயல்களின் நிய்யத்துடைய இல்மும் வேண்டதாயிருக்கிறது. அதைக் கற்பது அவசியமாகும். இதற்கு உதாரணம் அடியில் வருவனவாம்:—வாசனை வழங்குவது முபாஹாயிருக்கிறது. ஒருவன் வெள்ளிக்கிழமைதினம் வாசனை பூசிக்கொள்ளுகிறான். அப்படிப் பூசிக்கொள்வதில் அவன் நிய்யத்து கெட்டிருக்கவும் கூடும். அதெப்படியென்றால், தன் சீமான்தனத்தை வெளிப்படுத்திப் பெருமை பாராட்டுகிற நிய்யத்திருக்கும். அல்லது ஜனங்களுக்குத் தன் சுசிகரத்தைக் காட்டுகிற நிய்யத்திருக்கும். அல்லது கெட்ட எண்ணத்தின்பேரில் அன்னியஸ்திரீகளின் மனதில் தனக்கோர் மதிப்பைத் தேடுகிற நிய்யத்திருக்கும். இனி வாசனை பூசுவதில் நல்ல நிய்யத்துகள் யாவையெனில், அல்லாகு தஆலாவுடைய வீட்டுக்கு மரியாதைவைத்து அதைக் கனப்படுத்துகிறேன் என்று நிய்யத்து

செய்வான். இன்னும் தனக்குச் சமீபமா யிருப்பவர்கள் சந்தோஷமடையும்பொருட்டுத் தன்னால் அவர்களுக்குக் கிஞ்சித்து சுகமுண்டாவதையும் நிய்யத்துசெய்வான். இன்னும் தன் சரீர துர்வாசனையால் அவர்களுக்கு வருத்தமுண்டாகாமலும் அதைப்பற்றி அவர்கள் புறம் பேசும் பாவத்தில் விழாமலும் இருக்கும்பொருட்டுச் சரீரத்தின் துர்வாசனையைத் தன்னிடத்திலிருந்து நீக்குவதையும் நிய்யத்து செய்வான். இன்னும் தன் தலைமூளை தெளிவையடைந்து திருகு, பிருகுகளின்பேரில் அது ஸ்திரப்படும்பொருட்டு அதற்கு வலுவைக் கொடுக்கிறேன் என்றும் நிய்யத்து செய்வான். நன்மையான வேலைகளின் நாட்டம் யாருக்கு மேலிட்டிருக்கிறதோ அவனுக்கே இம்மாதிரியான நிய்யத்து அதிகமாய்வரும். இவற்றில் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு சவாபிருக்கிறது. சலபுகளான முன்னோர்கள் (முபாஹான செயல்க ளெல்லாவற்றிலும்) இப்படியே நிய்யத்து செய்கிறவர்களா யிருந்தார்கள். எந்தமட்டுக்கென்றால், அவர்கள் உணவருந்துவதிலும் மலோபாதைக்குப் போவதிலும் மனையாளோடு சேர்வதிலும் இன்னுமிப்படியே ஒவ்வோர் செயலிலும் ஓர் நல்ல நிய்யத்து உண்டாகவேண்டுமென்கிற நாட்டமுள்ளவர்களா யிருந்தார்கள். யாதொரு நன்மைக்குக் காரணமா யிராதபடி எந்த முபாஹுமில்லை யாதலால் அதில் அந்த நன்மையைத் தனக்கு நிய்யத்து செய்தால் சவாபுண்டாகும். உதாரணமாக:—மனையாளோடு சேர்வதில் நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய உம்மத்து பெருகிப் பலுகும்பொருட்டு (அதற்குக் காரணமான) மக்கட்பேற்றை நிய்யத்து செய்வான். இன்னும் மனையாளுக்குச் சுகங் கொடுப்பதையும் முசீபத்தினின்றும் அவளைக் காப்பதையும் பாவத்தினின்றுந் தன்னைப் பேணுவதையும் நிய்யத்துசெய்வான். சுபுயானுசவ்ரீ றஹிமஹுல்லா அவர்கள் ஒருநாள் தங்கள் சட்டையை மறுபக்கமாகத் திருப்பி அணிந்திருந்தார்கள். "அதைச் சரியாக அணிந்துகொள்ளுவதற்குக் கையை எடுங்கள்" என்று சிலர் அவர்களிடம் நெருங்கிச் செல்ல, அவர்கள் கையை இழுத்துக்கொண்டு "நான் இதை அல்லாவுக்காக அணிந்திருக்கிறேனாதலால் அல்லாவுக்காகவேயன்றி இதை மாற்ற எனக்கு இஷ்டமில்லை" என்று சொன்னார்கள். ஜகரிய்யா அலைஹிஸ்ஸலாமவர்கள் ஓரிடத்தில் கூலி வேலைசெய்யப் போயிருந்தார்கள். அவர்களைக் கண்டுகொள்ள சில ஜனங்கள் அங்கு வந்தார்கள். அப்போதவர்கள் உணவருந்திக்கொண் டிருந்தார்கள். வந்த ஜனங்களை உண்கவாருங்கள் என்று அவர்கள் கூப்பிடவில்லை.

முழுமையும் உண்டு தீர்ந்தபிறகு, "நான் இந்த உணவு முழுமையும் உண்ணாமற் போவேனாகில் இவர்களுடைய வேலையில் தளர்ச்சியடைந்து அதை முடிக்கக் கூடாதவனாய்ப் போவேன்" என்றும்; "ஜனங்களை உபசரிக்கும் அன்னத்தின் பொருட்டால் பர்லான என் கடமை இறுக்கக்கூடாதவனாய்ப் போவேன்" என்றும் சொன்னார்கள். சுபுயானுசவ்ரீ றஹிமஹுல்லா அவர்கள் உணவருந்திக்கொண்டிருக்கும்போது ஒருவர் அவர்களிடம் போனார். அவரை "உண்" என்று அவர்கள் சொல்லவில்லை. முழுமையும் உண்டுமுடிந்த பிறகு அவரை நோக்கி, "நான் இந்த உணவைக் கடனாக வாங்கியிராத பக்ஷம் உண் என்று உனக்குச் சொல்லியிருப்பேன்" என்றார்கள். பின்பும் அவர்கள் சொன்னதாவது:—"ஒருவன் தன் மனவெறுப்புடன் மற்றொருவனை உண் என்று சொல்லி அவன் உண்ணாதபக்ஷம் சொன்னவன் முனாபிகுத்தனமான ஒரு பாவத்தைச் செய்தவனாவான். அவன் உண்கிறபக்ஷம் இவன் இரண்டு பாவங்களைச் செய்தவனாவான். ஒன்று முனாபிகுத்தனமும், மற்றொன்று அவன் அறிந்தால் உண்ணாத ஓர் வஸ்துவை உணவில் இட்டு அவனை வஞ்சித்ததுமாம். (உணவிலிட்ட அந்தவஸ்து இவனது மனவெறுப்பேயாம்.)

### நிய்யத்து சக்திக்குள் அடங்கினதல்ல வென்பதை விளக்கல்.*

அறிந்துகொள்:—முபாஹான எந்தச் செயலிலும் ஏதாவதோர் நல்ல நிய்யத்தைச் செய்யக்கூடுமென்று கேள்விப்படுகிற ஓர் சாதாமனத்தையுடையவன் தன் மனதைக்கொண்டோ அல்லது நாவைக் கொண்டோ நான் அல்லாகு தஆலாவுக்காக நிகாஹு முடிக்க நிய்யத்து செய்தேன் என்று அல்லது அல்லாகு தஆலாவுக்காக உணவை உண்ண நிய்யத்து செய்தேன் என்று அல்லது அல்லாகு தஆலாவுக்காகப் பாடம்போதிக்கவும் வஃலு சொல்லவும் நிய்யத்து செய்தேன் என்று சொல்லி இதுதான் நிய்யத்து என்று அவன் மருண்டுபோயிருக்கக் கூடும். இதுவோ மனோவசனிப்பு அல்லது நாவின் பேச்சென்றாகும். நிய்யத்தென்பது மனதில் பிறப்பதும் மனிதனை வேலையில் அமைப்பதுமான ஓர்விருப்பமும் நாட்டமுமேயாம். உதாரணமாக:—ஒருவனுடைய மனதில் ஒரு பொருளின் தேட்டமான நாட்டம் பிறந்தால் அப்பொருளை அடைவதற்குச் சார்பான வேலையைச் செய்யும்படி அந்த நாட்டம் அவன் தேகத்தைத் தூண்டிக்கொண்டிருக்கும். அப்படித் தூண்டும் நாட்டம் எப்போது பிறக்கிறதென்றால் அந்தத் தேட்டம் எழும்பி அவனை வாட்டும்போதேயாம். இ

த் தேட்டமான நாட்டமில்லாமல் நாவைக்கொண்டு நிய்யத்து சொல்வது எப்படியிருக்கிறதென்றால், திருப்திகரமாகத் தின்றிருக்கிற ஒருவன் "நான் பசியாயிருக்க நிய்யத்துசெய்தேன்" என்றுசொல்வதுபோல் அல்லது ஒருவன்மேல் நேசமில்லாமல் "நான் அவனை நேசிக்க நிய்யத்துசெய்தேன்" என்று சொல்வதுபோல் இருக்கிறது. இது பொருந்தாச் சொல்லேயாம். இதுபோலவே ஸ்திரீபோகத்தில் அவளைத் தூண்டினவை இச்சைகளாயிருக்கப் புத்திரனுண்டாவதற்காக நான் போகிக்க நிய்யத்து செய்தேன் என்று சொல்லுவானாகில் இது வீணாகும். இன்னும் நிகாஹ் முடிக்கும்படி அவனைத் தூண்டினவை இச்சைகளாயிருக்க நான் சுன்னத்துக்காக நிகாஹ் முடிக்க நிய்யத்து செய்தேன் என்று சொல்வானாயினும் இதுவும் வீணேயாம். மேலும் முதலில் அவனுடைய ஈமான் ஷரகில் உறுதிப்படவேண்டும். அதன்பிறகு நிகாஹ் முடிப்பதில் பிள்ளையின் பொருட்டால் உண்டாகிற சவாபு விஷயத்தில் வந்திருக்கிற ஹதீஸ்களை நோட்டமிடவேண்டும். அந்த சவாபின் ஆசை அவன் மனதில் துடித்து அவனை நிகாஹின்மேல் தூண்டவேண்டும். அப்போது அவன் சொல்வதன்றி இது தானாகவே (சுன்னத்துக்காக என்ற) நிய்யத்தாய்ப்போம். இதுபோலவே வழிபடல்என்னும் வணக்கத்தின் ஆசையானது அவனைத் தொழுகையின்பேரில் எழுப்பி நிலைநிற்கச் செய்யுமாகில் இது தானாகவே நிய்யத்தாய்ப்போம் (நவைத்து) நிய்யத்து செய்தேன் என்று நாவினாற் சொல்வது வீணேயாம். எதுபோலெனில், பசியுள்ள ஒருவன் நான் பசிக்காக உணவை உண்க நிய்யத்து செய்தேன் என்று சொல்வது வீணேபோலென்க. ஏனெனில் பசியுள்ளவன் தனது பசிக்காக உணவை அருந்துவதன்றி வேறு கதியில்லை. ஆகவே நபுசுக்கு இன்பத்தையுண்டாக்குகிற ஓர் காரியத்தில் ஆகிரத்தின் நிய்யத்துவருவது கஷ்டமேயாம். ஆனால் எல்லாவிஷயத்திலும் ஆகிரத்தின் அமல்கள் மிகைத்திருக்கிறபக்ஷம் அதில் ஆகிரத்தின் நிய்யத்து வரக்கூடும்.

இந்த விவரத்தினால் நாடிய கருத்தென்னவென்றால், நிய்யத்தானது உன் கைவசத்தில் இல்லையென்பதை நீ தெரிந்துகொள்ளவேண்டுமென்பதுதான். ஏனெனில் உன்னை வேலையில் அமைக்கின்ற ஓர் நாட்டமே நிய்யத்தாயிருக்கிறது. உன்வேலை உன் சக்திக்குள் அடங்கினதேயாம். அதை நீ செய்ய நாடினால் செய்வாய். விட்டுவிட நாடினால் செய்யமாட்டாய். உன் நாட்டமோ அப்படியல்ல. ஒன்றை நீ நாடவேண்டுமென்றால் நாடவும் அதை நீ நாடாம

விருக்கவேண்டுமென்றால் நாடாமலிருக்கவும் நாட்டம் உன் கைவசத்தில் இல்லை. மேலும் நாட்டத்தை உன் இருதயத்தில் படைப்பதுமுண்டு. படைக்காமலிருப்பதுமுண்டு. அந்த நாட்டம் வெளியாவதற்குக் காரணம் யாதெனில், இவ்வுலகத்திலோ அல்லது அவ்வுலகத்திலோ (எவ்வுலகத்திலாயினும்) நீ விரும்பியிருக்கும்பொருள் ஏதோ ஓர்வேலையினால் கிடைக்கும் என்று நீ நம்பியிருப்பதாம். அப்போது நீ அந்த வேலையை நாடுகிறவனாயிருப்பாய். இந்த இரகசியத்தை அறிந்தவன் எவனோ அவன் தனக்கு நிய்யத்துண்டாகாத நிமித்தம் வணக்கங்களில் அநேகத்தை விட்டுவிடுவான். இபுனுஸீரீன் றழிமஹூல்லா அவர்கள் ஹஸன்பசரீ றழிமஹூல்லா அவர்களின் ஜனாஜாவின்மேல் தொழாமலிருந்தார்கள் (ஏன் தொழவில்லை என்று கேட்டதற்கு) "எனக்கு நிய்யத்து உண்டாகவில்லை" என்று சொன்னார்கள். கூபாவுடைய உலமாக்களில் ஒருவராகிய ஹம்மாதபுனு அபீசுலைமான் என்பவருடைய ஜனாஜாவின்மேரில் சுபுயானுசவுரீ றழிமஹூல்லா அவர்கள் தொழாமலிருந்தபடியால் "நீர் ஏன் தொழுகவில்லை?" என்று கேட்டதற்கு "எனக்கு நிய்யத்திருந்திருக்கிறபக்ஷம் நான் தொழுதிருப்பேன்" என்று சொன்னார்கள். தாவூசு றழிமஹூல்லா அவர்களிடத்தில் ஒருவர் தமக்காகத் துஆ செய்யும்படி கேட்டதற்கு "நிய்யத்து வருமட்டும்பொறு" என்று சொன்னார்கள். இன்னுமிவர்களிடத்தில் ஹதீசை ரிவாயத்து செய்யும்படி யாராவது கேட்கும்போது சிலசமயம் ரிவாயத்து செய்யாதவர்களாயும் சிலசமயம் எரும் கேட்காமல் தாமாகவே ரிவாயத்து செய்கிறவர்களாயும் "நான் நிய்யத்து பிறப்பதை எதிர்பார்க்கிறேன்" என்று சொல்கிறவர்களாயுமிருந்தார்கள். பெரியோர்களில்நின்று மொருவர் "நான் இன்னெ வியாதியஸ்தனை விசாரிக்கப்போவதற்கு ஒரு மாசமாக நிய்யத்தைச் செம்மையாக்கிக்கொண்டிருக்கிறேன்" என்றும், "அது இன்னும் செம்மையாகவில்லை" என்றும் சொல்லுகிறார். மொத்தத்தில் ஒருவனுக்குத் துன்யாவின் ஆசை மேலிட்டிருக்குமட்டும் அவனுக்கு எந்த முபாஹான செயலிலும் நிய்யத்து பிறக்காது. மேலும் பர்ளுகளிலுங்கூட அவனுக்கு நிய்யத்து மிகப் பிரயாசையின்பேரில் பிறக்கும். இதுவுமன்றி அவன் நரகத்து நெருப்பை நினைத்துப்பாராமலும் அதைப்பற்றித் தனக்கு அச்சத்தை யூட்டாமலும் இருக்கிறவரையில் அவனுக்கு நிய்யத்து பிறக்காமலிருப்பதுமுண்டு. எப்போது மனிதன் இந்த இரகசியத்தை அறிந்தானோ அவன் பலாயிலு என்னும் வரிசையான அமல்களை விட்டுவிடுவதும் முபாஹாத்களில் அவன் நிய்

யத்தை அடைகிறதினால் அவைகளைச் செய்வதும் உண்டு. உதாரணமாக:—ஒருவன் பழிக்குப் பழிவாங்குவதில் நியயத்தைக் காண்பவனும் மன்னிப்பதில் நியயத்தைக் காணாதவனும் இருந்தால் அப்போது பழிக்குப் பழிவாங்குவதே அவன் விஷயத்தில் மேலாகும். ஒருவன் தஹஜ்ஜுது தொழுகையின் நியயத்தைக் காணாமல் நித்திரையின் நியயத்தைக் காண்பானாகில் அதாவது நித்திரைசெய்தால் சுபுஹு தொழுகைக்காக இருட்டோடே விழிக்கலாமென்ற நியயத்துவருமாகில் நித்திரைசெய்வதே அவன்விஷயத்தில் அதிக வரிசையுள்ளதாகும். மேலும் இபாதத்து செய்வதில் இன்னும் சடைவடைந்த ஒருவன் சற்றுநேரம் தன் மனையாளிடம் சரசவார்த்தை பேசுவதினால் அல்லது மற்ற எவரிடத்திலாவது சந்தோஷமாக வசனிப்பதினால் தனக்கு இபாதத்தில் உற்சாகம் பிறக்குமென்ற நியயத்தைக் காண்பானாகில் இந்த நியயத்தினால் அந்த சரசவார்த்தையும் சந்தோஷவசனிப்பும் சடைதலுடன் செய்கிற அந்த இபாதத்தைவிட அவன் விஷயத்தில் அதிகவரிசையுள்ளதாகும். அபுத்தர்தா ரலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:—"எனக்கு ஹக்குடைய இபாதத்தில் உற்சாகம் பிறக்கும்பொருட்டு சிற்சில சமயங்களில் விளையாட்டினால் என் மனதுக்குச் சுகத்தையூட்டுகிறேன்" என்பதே. இன்னும் "சடைதலுடன் சுமாவாக உன் மனதை ஓர் வேலையில் அமைப்பாயாகில அது குருடாய்ப்போம்" என்று அலி ரலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இது எதைப் போல்வதென்றால், ஒரு நோயாளி அதிக உஷ்ணம் கொண்டவனாயிருந்தபோதிலும் அவிழ்ந்ததை ஏற்க அவனுக்குச் சக்தி வரும்பொருட்டு வயித்தியன் அவனுக்கு இறைச்சியைக் கொடுப்பதுமுண்டே. இன்னும் சத்துருவைப் பிறகு சங்கரிக்கலாமென்று சண்டை முகத்திலிருந்து தோற்றோடிப் பின்னர்த் திடமென அவன் பேரில் விழுந்து வெட்டுவதுமுண்டே. அதைப்போல்வதே இதுவுமாம். தேர்ச்சையடைந்த ஆரிபுகள் இம்மாதிரியான அநேக தந்திரங்களைச் செய்வார்கள். தீனுடைய பாதைமுழுதும் கபடோபிப் ஷைத்தானோடும் சண்டையும் போருமாயிருப்பதால் அதில் தயவும் தந்திரமும் தேவையாகின்றது. அரைகுறையான ஆலிம்கள் இதை அறியாதவர்களாயிருக்கிறார்கள். இருந்தபோதிலும் தீனுடைய பெரியோர்களிடத்தில் இது பிரியமானதேயாம்.

பசல்:—அமலின்பேரில் தூண்டுகிற மனோநோக்கமே நியயத்துக்குப் பொருளாயிருக்கிறதென்று நீ தெரிந்துகொண்டாயாதலால்

இப்போது இதையும் அறிந்துகொள். அதாவது:—ஒருவனை அமலின்பேரில் தூண்டுகிற அவனது நாட்டமானது நரகத்தின் அச்சமாயிருக்கலாம். இன்னுமொருவனைத் தூண்டுவது சுவர்க்கத்தின் நிருமத்தாயிருக்கலாம். சுவர்க்கத்துக்காக அமல் செய்கிறவன் எவனோ அவன் தன் வயிற்றுக்கும் வெட்க உறுப்புக்கும் அடிமையாயிருந்து அவ்விரண்டும் திருப்தியடையக்கூடிய ஓர் இடத்துக்குத் தன்னை இழுக்கின்றான். நரகத்தின் அச்சத்தினால் அமல் செய்கிறவனோ கழியடிக்குப் பயந்தேயன்றி மற்றப்படி வேலைசெய்யாத ஓர் கெட்ட அடிமைப்பயலுக்கு ஒப்பாயிருக்கிறான். இவர்களிருவரிடத்திலும் அல்லாகு தஆலாவுக்காக யாதொரு அமலும் இல்லவே இல்லை. மேலும் தான் செய்கிற எந்த அமலையும் சுவர்க்க நரகங்களுக்காக அல்லாமல் அல்லாகு தஆலாவுக்காகவே செய்கிறவன் எவனோ அவனே பிரியமுள்ள அடியானாகுவான். இவனுக்குச் சமானம் பின்வரும் உபமானமாம். அதாவது:—ஒருவன் தான் ஆசைகொண்ட மருஷூகைப் பார்க்கும்போது அவனையே கருதிப் பார்ப்பதல்லாது அவன் இவனுக்குப் பொன்வெள்ளிபூஷணங்களைக்கொடுப்பானென்றல்ல. பொன்வெள்ளிகளுக்காக ஒருவன் பார்ப்பானாகில் அந்தப் பொன் வெள்ளிகளே அவன் ஆசைகொண்ட மருஷூகாம். ஆகவே ஒருவனுக்கு அல்லாகு தஆலாவுடைய ஜமால்ஜலால்களான பேரழகும்பெருமையுமே தனது மஃஷூகாயும் மஹ்பூபாயுமிராதபக்ஷத்தில் அவனால் இந்த நிய்யத்துண்டாவது ரூபகரப்படாது. இப்படி அல்லாகு தஆலாவிலே ஆசைகொண்டவனுடைய இபாதத்து முழுதும் எக்காரியத்திலாயிருக்குமென்றால் அவனுடைய ஜமாலான பேரழகைத் தரிசிப்பதிலும் அவனோடு தனித்திருந்து முனாஜாத்து செய்வதிலுமாமென்க. அவன் தன் தேகத்தால் யாதொரு வணக்கத்தைச் செய்கிறபக்ஷம் அது எதற்காகவென்றால் மஹ்பூபுடைய உத்திரவின்படி நடப்பதையும் அவன் உவந்ததற்காகவாம். இதுவுமன்றி மஹ்பூபுடைய பேரழகான அந்த ஜமாலைத் தரிசிப்பதிலிருந்து மனமானது அவனை விலக்காதிருக்கிறவிதமாக அவனுக்குச் சக்திவருமளவும் அந்த மஹ்பூபுடைய வணக்கத்திலும்பணிவிடையிலும் தேகத்தையும் இழுத்துப்பழக்கவேண்டுமென்ற நாட்டம் அவனுக்கிருக்கும். இன்னும் அவன் யாதொரு பாவத்தை விட்டுவிடுவது எதனாலென்றால், இச்சைகளைத் துயர்வதானது முஷாஹதா, முனாஜாத்து இவைகளில் இன்பம் பெறுவதிலிருந்து அவனைத் தடுப்பதினாலென்க. இவனே எதார்த்தத்தில் ஆரிபானவன். அஹ்மதுபுனு கில்ரவிய்யா றஹ்மத்துல்லாஹி அலைகியவர்கள் தக்கன்

சொப்பனத்தில் அல்லாகு தஆலாவைக்கண்டபோது அவன்சொன்னதாவது:—எல்லா ஜனங்களும் என்னிடத்திலிருந்து எதையும் கேட்கிறார்கள். ஆனால் பாயஜீது என்னையே கேட்கிறார் (அதாவது அவருக்கு நானேவேண்டுமென்கிறார்) என்பதே. ஷிப்லீ றஹிமஹுல்லா அவரை ஒருவர் சொப்பனத்தில் கண்டு "அல்லாகு தஆலா உம்முடன் செய்த நடவடிக்கை என்ன?" என்று கேட்டார். அதற்கவர்கள் சொன்னதாவது:—"சுவர்க்கம் தப்பிப்போவதினும் அதிக நஷ்டம் என்ன இருக்கிறது? என்ற சொல் ஒருநாள் என் நாவிலிருந்து வெளிப்பட்டநிமித்தம் அல்லாகு தஆலா என்னைக் கோபித்து "அப்படியல்ல, என்னுடைய தீதார் தப்பிப்போவதினும் அதிக நஷ்டம் என்ன இருக்கிறது? என்று சொன்னான்" என்பதே. அல்லாகு தஆலாவை இப்படி நேசித்து இன்புறுவதின் உண்மை மஹப்பத்துடைய அசலில் சொல்லிவரப்படும். இன்ஷா அல்லாஹு.

## இரண்டாவது பாபு-இகுலாசு, அதன் மேம்பாடு, அதன் ஹகீகத்து, அதன் வகுப்புகள இவைகளைக் கூறுவது.

### இகுலாசின் மேம்பாடுகள்.

அறிந்துகொள்:—கலப்பின்றி அல்லாகு தஆலாவுக்காகத் தீனைச் சுத்தப்படுத்தி அவனை வணங்கவேதவிர மற்றப்படி மனிதர்களுக்கு ஏவப்படவில்லை என்றும், கலப்பற்ற தீன் அல்லாஹுக்கே என்றும், அல்லாகு தஆலா அருளிச்செய்கிற இந்த ஆயத்துகளால் இபாதத்தில் வேறுநாட்டம் கலக்காதபடி அதை அல்லாகு தஆலாவுக்காகவே சுத்தமாகச் செய்யும்படிக்கும் கலப்பில்லாத தீன் ஒன்றே அல்லாவுக்காக உள்ளது என்றும் கூறுகின்றான். இன்னும் இகுலாசானது என்னுடைய இரகசியங்களில்நின்றும் ஓர் இரகசியமாயிருக்கிறது என்றும், அதை நான் நேசிக்கின்ற என் அடியானுடைய மனதில் வைத்திருக்கிறேன் என்றும் அல்லாகு தஆலா கூறுகிறதாக ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னுமவர்கள் மஆது றலியல்லாகு அன்கு அவர்களை நோக்கி "ஓ மஆதே! நீர் இகுலாசுடன் அமல் செய்யும். அப்படிச் செய்வீராகில் கொஞ்ச அமலே உமக்குப்போதும்" என்று அருளிச்செய்தார்கள். ரியாவின் (அதாவது தன் இபாதத்தைப் பிறர்பார்க்கவேண்டுமென்ற விருப்பத்தின்) பழிப்பில் நாம் கூறிவந்தவையாவும் இகுலாசின் விஷயமாகவேயாம். இபாதத்தில் இகுலாசைக்கெடுக்கின்ற காரணங்களில் ஒன்று ஜனங்களின் பார்வையாயிருப்பதுடன் இன்னும் பலகாரணங்களுமிருக்கின்றன. மகுருபுல்கர்கீ றஹிமஹுல்லா அவர்கள் தங்களைச்

சவுக்கால் அடித்துக்கொள்கிறவர்களாயும் நபுசைநோக்கி "ஓ நபுசே! நீ இகுலாசுடன்நட, அப்படிநடப்பையாயின் ஈடேற்றம்பெறுவாய்" என்றுசொல்லுகிறவர்களாயும் இருந்தார்கள். இன்னும் "அல்லாவையன்றிப் பிறிதொன்றை நாடாமல் தன் வயது முழுவதிலும் ஓர் அடியாவது இகுலாசுடன் எடுத்துவைத்தவன் எவனோ அவன் அதிஷ்டசாலி" என்று அபூசுலைமான் அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் "நிய்யத்துக்கு மூலமாகின்ற நாட்டம் பிறப்பது கஷ்டமாயிருப்பதிலும் அந்த நிய்யத்தில் இகுலாசுண்டாவது அதிககஷ்டமாம்" என்று அபூ அய்யூபு ஸஜஸ்தானி அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னுமொருவரைச் சிலர் சொப்பனத்தில்கண்டு "அல்லாகு தஆலா உம்முடன் செய்த நடவடிக்கை என்ன?" என்றுகேட்டதற்கு, அவர்சொன்னதாவது:—"நான் அவனுக்காகச் செய்த ஒவ்வொன்றையும் நன்மைகளின் தட்டில் கண்டேன். எந்தமட்டென்றால், வழியில் விழுந்துகிடந்து நான் எடுத்திருந்த ஓர் மாதுளைவித்துமுதல் என் வீட்டில் செத்துப்போயிருந்த பூனையையும் கண்டேன். இன்னும் என் தொப்பியில் இருந்த ஓர்பட்டிழையையும் நன்மைகளின் தட்டில்கண்டேன். நூறு தினார்விலையுள்ள என் கழுதை ஒன்று செத்துப்போயிருந்ததை நன்மைத்தட்டில் நான் காணாமையினால் வியப்படைந்து சுபுஹானல்லா! பூனை நன்மைத்தட்டிலிருந்து கழுதை அதில் இல்லாமற்போனதென்ன" என்று சொன்னேன். அப்போது அதற்கு ஜவாபாக "உன் கழுதையை நீ அனுப்பின இடத்திற்கு அதுபோய்விட்டது" என்றும், "அது செத்துப்போயிற்றென்ற சேதியை நீ கேள்விபட்டபோது இலா லகுனத்தில்லாஹி என்று நீ சொல்லியிருந்தாய்" என்றும், "பீ ஸபீலில்லாஹி என்று சொல்லியிருப்பாயாகில் அதை இப்போது நன்மைத்தட்டில் கண்டிருப்பாய்" என்றும்சொல்லப்பட்டது. இன்னும் "நான் அல்லாவுக்காக சதகா கொடுத்தேன். ஆனால் நான் கொடுத்ததை ஜனங்கள்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பார்த்ததினால் எனக்குச் சந்தோஷமுண்டாயிற்று. அந்த சதகா எனக்கு இலாபத்தையும் கொடுக்கவில்லை நஷ்டத்தையும் உண்டாக்கவில்லை" என்பதே. இதைக்கேட்ட சுபுயான் சவ்ரீ றஹிமகுல்லா அவர்கள், "எவனுடைய சதகா அவனுக்கு நஷ்டத்தை யுண்டாக்கவில்லையோ அவன் பெரியசெல்வத்தை அடைந்தான்" என்று சொல்லுகிறார்கள். இன்னுமொருவர் சொல்லுகிறதாவது:—"நான் பீசபீல்யுத்தம் செய்வதற்காக ஓர் கப்பலில் யாத்திரைசெய்துகொண்டிருந்தேன். எங்களோடிருந்த துணைவர்களில், ஒருவர் ஒரு தோபராவை விற்கநாடினார்.

அப்போது நான் அதை வாங்கி உபயோகப்படுத்திக்கொள்ளலாமெ ன்றும் இன்னபட்டணத்தில் அதை இலாபத்துக்கு விற்றுப்போடலாமென்றும் நாட்டங்கொண்டு வாங்கினேன். அன்று இரவில் சொப்பனத்தில் இரண்டுபேர் வானத்திலிருந்து இறங்கி வந்து ஒருவர் மற்றொருவரைப் பார்த்து "எழுது யுத்தவிரர்களின் பேரை" என்றும், "இன்னான் வேடிக்கை பார்க்கவந்தவன் என்றெழுது" என்றும், "இன்னான் வர்த்தகத்துக்காக வந்தவன் என்றெழுது" என்றும், "இன்னான் ரியாவுக்காக வந்தவன் என்றெழுது" என்றும் சொல்லிக்கொண்டுவந்து பின்பு என்னைப் பார்த்து "இவன் வர்த்தகத்துக்காக வந்தவன் என்றெழுது" என்று சொன்னார். அப்போது நான் "அல்லாவே, அல்லாவே! இதென்ன? இருங்கள் என் காரியத்தில் கொஞ்சம் பொறுங்கள். என்னிடத்தில் வர்த்தகச்சரக்கு ஒன்றுமில்லையே. நான் எப்படி வர்த்தகத்துக்காக வருவேன். நான் அல்லாவுக்காக வந்திருக்கிறேன்" என்று சொன்னேன். அப்போதவர் "ஓய் பெரியவரே! நீர் அந்த தோப்ராவை இலாபத்துக்கு விற்கலாமென்று வாங்கவில்லையா?" என்று சொன்னார். அவர் இதைச் சொன்னதும் நான் அழுதுகொண்டு "அல்லாவே! அல்லாவே! நான் வர்த்தகனல்லவே" என்று சொன்னேன். அப்போதவர் அந்த மற்றொருவரைப் பார்த்து "இன்னான் பீசபீல் யுத்தத்திற்காக வந்திருந்தான் என்றும், வழியில் இலாபமடைவதற்காக ஓர் தோப்ராவைக் கிரயத்துக்கு வாங்கினான் என்றும் எழுது. பிறகு அல்லாகுதஆலா அவனிஷ்டப்படி தீர்ப்புச்செய்யட்டும் என்று சொன்னார்" என்பதே. இதனாலேதான் "ஒரு மணிநேரத்தின் இகுலாசில் அடியானுக்கு ஈடேற்றமுண்டு" என்றும், "ஆனால் இகுலாசுண்டாவது அருமையாயிருக்கிறது" என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் இல்மானது வித்து என்றும், அமல் அதன் பயிர் என்றும், இகுலாசு அதற்குத் தண்ணீர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

பனி இஸ்ராயில் கூட்டத்தில் ஒரு ஆபிது இருந்தார். சிலர் அவரிடம்வந்து இன்ன இடத்தில் ஓர் மரமிருக்கிறது என்றும், சில ஜனங்கள் அதை ஆண்டவனாக எண்ணி வணங்கிவருகிறார்கள் என்றும், சொன்னார்கள். அப்போதந்த ஆபிதுக்கு மிகவும் கோபமுண்டாகிக் கோடாரியை எடுத்துத் தோளில் சாற்றிக்கொண்டு அதை வெட்டி வேர்களையவேண்டுமென்று புறப்பட்டார். இபுலீசானவன் ஓர் கிழவன்போல் ரூபந்தரித்து அவர் போகும் வழியில் வந்து குறுக்கிட்டு "நீர் எங்குபோகிறீர்?" என்றுகேட்டான். அதற்கவர் "ஆண்டவனாக

எண்ணி வணங்கப்படுகிற அதோ அந்த மரத்தை வெட்டி வேர்களை யப்போகிறேன்" என்றார். அப்போதவன் அவரை நோக்கி, "நீர் திரும்பிப்போம். போய் அல்லாகுதஆலாஉடைய இபாதத்தைச் செய்யும். அந்த இபாதத்து உமக்கு இதைவிட மிக நல்லதாயிருக்கிறது" என்றான். அதற்கவர் "இல்லை, இல்லை, இது இபாதத்தல்லவோ?" என்றார். அப்போதவன் நான் உம்மைப்போகவிடேன்" என்றான். இதனால் இருவரும் கைகலந்து சண்டைசெய்தார்கள். ஆபிது இபுலீசைத் தூக்கிக் கீழேபோட்டு அவனுடைய நெஞ்சின்மேல் ஏறி உட்கார்ந்தார். அப்போது இபுலீசு ஆபிதை நோக்கி "ஆபிதே! நீர் என்னைவிடும். நான் ஒருவார்த்தை சொல்லுகிறேன்" என்றான். அவர்விட்டார். அப்போதவன், "ஓ ஆபிதே! அல்லாகு தஆலாவுக்கு நபிமார்கள் இருக்கிறார்கள். இதை அகத்தியம் வெட்டவேண்டியதிருந்தால் வெட்டும்படி அந்த நபிமார்களுக்குக் கட்டளையிட்டிருப்பான். உமக்கும் இதை விதித்திருப்பதில்லை. ஆதலால் நீர் இதை வெட்டவேண்டாம்" என்றான். அப்போதவர் "இல்லை, இல்லை, நான் இதை வெட்டியே தீர்ப்பேன்" என்றார். அவன் "விடேன்" என்றான். பின்பு இருவரும் சண்டையிடத்தலைப்பட்டார்கள். ஆபிது மீண்டும் அவனைத் தூக்கிக் கீழே போட்டு மேலே ஏறி உட்கார்ந்தார். அப்போதவன் "ஓ ஆபிதே! நீர் என்னை விட்டுவிடும். நான் வேறொரு வார்த்தை சொல்லுகிறேன். அது உமக்குச் சம்மதமாயிராதபக்ஷத்தில் பின்பு உமதிஷ்டப்படி செய்துகொள்ளும்" என்றான். அவர் விட்டார். அப்போதவன் "ஓ ஆபிதே! நீர் ஒரு ஏழைமனிதராயிருக்கிறீர். உமக்கு வேண்டும் ஆகாரமுதலியவைகளை அன்னியர் உமக்கு உபகரித்துவருகிறார்கள். உம்மிடத்தில் ஏதும் பணமிருந்தால் அது உம்முடைய செலவுக்கும் உதவும். வேறு ஆபிதுகளுக்கும் கொடுத்து உதவலாம். அப்படிச் செய்வது இந்த மரத்தை வெட்டுவதிலும் அதிக நல்லதாயிருக்கும். அல்லவென்று நீர் இதை வெட்டிப்போட்டாலும் இதை வணங்குகிறவர்களுக்கு யாதொரு நஷ்டமில்லை. அவர்கள் வேறொரு மரத்தை வணங்கத்தலைப்படுவார்கள். ஆதலால் நீர் இதை வெட்டாமல் விட்டுவிடும். நான் தினந்தோறும் உமது தலைமாட்டில் இரண்டு தீனார் என்னும் தங்கக்காசுகளை வைப்பேன்" என்றான். இதைக் கேட்ட ஆபிதானவர் சற்று ஆலோசித்து இவன் சொல்வது சரிதான், இரண்டு தீனாரில் ஒரு தீனாரை சதகா கொடுப்பேன். மற்றொரு தீனாரை என் செலவில் உபயோகப்படுத்திக்கொள்ளுவேன். மரத்தை வெட்டி வேர்களைவதினும் இது நல்லதாயிருக்கிறது. இதை வெட்டும்படி

என்க்குக் கட்டளையிட்டிருப்பதுமில்லை. இது என்மேல் விதியாவதற்கு நான் நபியாயுமிருப்பதில்லை" என்று மனதுட் சொல்லிக்கொண்டு அங்கிருந்து திரும்பிப்போய்விட்டார். முதனாள் தம்முடைய தலைமாட்டிலிருந்து இரண்டு தீனார்களைக் கண்டடைந்தார். மறுதினத்திலும் இரண்டு தீனார்களைக் கண்டு எடுத்தார். அப்போது அவர் தம்முடையமனதில் "நான் அந்தமரத்தை வெட்டாமற்போனது நல்லாயிற்று" என்று எண்ணினார். மூன்றாம்நாளில் ஒன்றையும் அவர் காணவில்லை. அதனால் அவருக்குக் கோபம்பிறந்து கோடாரியை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். அப்போது இபுலீசு அவர் முன்பாக வந்து "நீர் எங்கு போகிறீர்?" என்றான். அதற்கவர் "நான் அந்த மரத்தை வெட்டி வேர்களையப்போகிறேன்" என்றார். அப்போதவன் அவரை நோக்கி "நீர் சொல்வது தப்பு. அல்லாவினாணை ஒருபோதும் அம்மரத்தை வெட்ட உம்மால் முடியாது" என்றான். இதனால் இருவரும் சண்டையிடத்தலைப்பட்டு இபுலீசு ஆபிதைத்தோற்கடித்து அவரை ஒருசிட்டுக்குருவிக்குச்சமானமாகக்கையிலடக்கிப்பிடித்துக்கொண்டு "நீர் திரும்பிப்போய்விடும், இல்லாவிட்டால் ஆட்டை அறுப்பது போல் இப்போது உமது தலையை அறுத்துவிடுவேன்" என்றான், அப்போது ஆபிது அவனைப் பார்த்து "நீ என்னை விட்டுவிடு, நான் திரும்பிப்போய்விடுகிறேன். ஆனால் முந்தின இரண்டு முறைகளில் நான் உன்னை மிகைத்துக்கொண்டதும் இந்தத் தடவையில் நீ என்னை மிகைத்துக்கொண்டதும் எதனால் என்பதை நீ எனக்குச் சொல்ல வேண்டும்" என்றார். அப்போதவன் ஆபிதை நோக்கி "முந்தின இரண்டுதடவைகளில் நீர் அல்லாவுக்காகக் கோபங்கொண்டிருந்தீர்" அதனால் அல்லாகுதஆலா என்னை உமக்குக்கீழ்ப்படுத்தினான். வேறு நாட்டம் கலவாதபடி அல்லாவுக்காகவே ஒருவன் யாதொரு அமலைச் செய்வானாகில் அவன்மேல் என் வலிமை செல்லாது. இந்தத் தடவையில் நீர் தமக்காகவும் தங்கக் காசுக்காகவும் கோபங்கொண் டெழுந்தீராதலால் நான் உம்மை மிகைத்துக்கொண்டேன். ஒருவன் தனது நபுசின் இச்சையைத் தயருவானாகில் அவனால் என்னை எதிர்க்க முடியாது" என்று சொன்னான்.

## இகுலாசு இதுவென அதன் ஹகீகத்தை விளக்கல்.

அறிந்துகொள் :—யாதொரு செயலில் எழுப்பும் நாட்டமும் அதைத்தேடும் தேட்டமுமே நிய்யத்தென்று நீ தெரிந்துகொண்டாய். தேட்டம்ஒன்றாயிருந்தால் நாட்டம்கலப்பற்றது என்று சொல்லப்படும். இரண்டாயிருந்தால் நாட்டம் கலப்புள்ளதாகும். அதைக் கலப்பற்றது என்று சொல்லப்படாது. நாட்டம் கலப்பாயிருப்பத

ற்கு உபமானமாவது:—ஒருவன் அல்லாவுக்காக நோன்புவைக்கின்றான். ஆனால் அந்த நோன்பில் தனது தேகசவுக்கியத்துக்காக ஊணைவிட்டும்பத்தியங்காக்கும் நோக்கமோ அல்லது வீட்டுச்செலவுகுறையவேண்டுமென்றோ அல்லது சோறு சமைக்கும் கஷ்டம் நீங்கவேண்டுமென்றோ அல்லது தன்வேலையைச் சல்லியமில்லாமல் செய்துகொண்டிருக்கலாமென்றோ அல்லது தன்னைத் தூக்கம் தொடாதபடியாதொருவேலையைச் செய்யலாமென்றோ இப்படி ஏதோ ஓர்தேட்டம் அவனுக்கிருக்கிறது. அல்லது தன் அடிமைப்பயலை உரிமையாக்குகிறான். அப்படியாக்குவதில் அவனுக்குக் கொடுக்கும் உணவு முதலிய செலவுகள் தன்னைவிட்டுக் கழியவேண்டுமென்றோ அல்லது அவனுடைய துர்க்குணங்களின் சல்லியத்தினின்றும் தன்னைத் தப்புவிக்கவேண்டுமென்றோ இப்படி ஏதோ ஓர்தேட்டம்அவனுக்குஇருக்கிறது. அல்லது ஹஜ்ஜுக்குப் போகிறான். அப்படிப் போவதில் யாத்திரையினால் தேகத்துக்கு வலுவும் சுகமும் உண்டாகவேண்டுமென்றோ அல்லது பற்பல காட்சிகளையும் பட்டணங்களையும் பார்க்கவேண்டுமென்றோ அல்லது பெண்ஜாதி பிள்ளைகளையும் அவர்களால் சம்பவிக்கின்ற இம்சைகளையும்விட்டுக் கொஞ்சநாள் சல்லியமொழிந்து சவுக்கியமா யிருக்கவேண்டுமென்றோ, அல்லது பகைவனால் நேரும் கஷ்டத்தினின்றும் நீங்கலாமென்றோ இப்படி ஏதோவோர் தேட்டமிருக்கிறது. அல்லது இரவில் விழித்துத் தஹஜ்ஜுது தொழுதுகொள்ளுகிறான். அப்படித் தொழுவதில் தூக்கமில்லாமல் தன் சரக்குகளைக் காவல்காத்துக்கொள்ளும் நோக்கம் அவனுக்கிருக்கிறது. அல்லது இல்மைப் படிக்கின்றான். அதில் தன் ஜீவனத்துக்கு ஏதும் சம்பாதிக்கலா மென்றோ அல்லது தனக்குள்ள பொருட்களையும் பூமிகளையும் காப்பாற்றிக்கொள்ளலாமென்றோ அல்லது ஜனங்களில் சிறப்பும் பெருமையும் பெற்றிருக்கலாமென்றோ அல்லது பாடம் போதிக்கலாமென்றோ வகுலுசொல்லலாமென்றோ அல்லது சபையில் பேசத்தெரியாமல் வாய்மூடி மனம் வருந்தும் துன்பத்திலிருந்து நீங்கலாமென்றோ இப்படி ஏதோ நோக்கம் அவனுக்கிருக்கிறது. அல்லது தன் எழுத்து அழகாவதற்காகவும் செம்மையாவதற்காகவும் குருஆனை எழுதுகிறான். அல்லது வாகனச் செலவை மீத்துவதற்காகக் கால் நடையாய்ப்போய் ஹஜ்ஜு செய்கிறான். அல்லது குளிர்ச்சியின் சுகத்துக்காகவும் சுத்தத்துக்காகவும் ஒலுசெய்கிறான். அல்லது சரீர துர்நாற்றம் நீக்குவதற்காகக் குளிக்கின்றான். அல்லது வீட்டுக்கு வாடகை கொடுக்கக் கூடாதென்று பள்ளிவாசலில்

இருத்திகாபுஇருக்கின்றான். அல்லது பிச்சைக்காரனுடைய இலச்சை அலட்டுகளைவிட்டும் நீங்குவதற்காக அவனுக்கு ஏதும் சதகா கொடுக்கின்றான். அல்லது ஒரு ஏழையானவன் ஏதும் கேட்கும்போது இல்லை என்க அவனுக்கு வெட்கமாயிருப்பதினால் அதைக் கொடுக்கின்றான். அல்லது வியாதியஸ்தர்களை வினவப்போவதில் அவர்கள் தனக்கு வியாதியுண்டாகும்போது தன்னைவந்து வினவுவார்களென்றாவது தான் வினவப்போகாவிட்டால் அவர்கள் குறை சொல்லி வருத்தப்படுவார்களென்றாவது போகின்றான். அல்லது தான் நல்லவனென்று ஜனங்களில் பிரபல்லியமாவதற்காக இவைகளில் நின்றும் யாதொரு அமலைச் செய்வானாகில் இதுவே ரியாவாயிருக்கிறது. ரியாவின் விதியைக் கூறியிருக்கிறோம். ஆனால் இந்த எல்லா நோக்கங்களும் இகுலாசைக் கெடுத்துப்போடும். அது அற்பமாயிருந்தாலும் சரி, அதிகமாயிருந்தாலும் சரி. ஆதலால் எதில் நபுசுக்கு யாதொரு பங்கில்லாமல் அல்லாகு தஆலாவுக்கே சொந்தமாயிருக்குமோ அதுவே காலிசு (கலப்பற்றவணக்கம்)என்றாகும். ஹதீசில் அதுவருமாறு:—றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் "இகுலாசு என்பது யாது?" என்று கேட்கப்பட்டபோது "என்னுடைய நாயகன் அல்லாகுதஆலா என்று நீ சொல்வதும் அதன்பிறகு அவன் உனக்கிட்ட கட்டளை எப்படியோ அப்படியாக நீ நிலைநிற்பதுமே இகுலாசு" என்று அருளிச்செய்தார்கள்.

மனிதன் தனது மனிதப் பண்புகளைவிட்டு நீங்காதவரையில் கலப்பின்மை என்னும் இந்த இகுலாசு அவனுக்கு வாய்ப்பது கஷ்டமாகவேயிருக்கும். இதனாலேதான் இகுலாசினும் அதிக வருத்தமும் கஷ்டமுமானபொருள் ஒன்றுமே இல்லையென்றும், வயதுமுழுவதிலும் அவன் நடக்கும் நடைகளில் இகுலாசுடன் சரியாக ஓர் அடியாவது எடுத்து வைத்திருப்பானாகில் அவனுக்கு ஈடேற்றமுண்டாகும் என்ற ஆதாரவு இருக்கிறது என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் மனிதப்பண்புகளுக்கும் மனநோக்கங்களுக்கும் நடுவேயிருந்து காலிசு என்னும் கலப்பற்ற சுத்தமான ஓர் அமலை வெளிக்குக் கொண்டுவருவதானது சாணத்துக்கும் இரத்தத்துக்கும் நடுவேயிருந்து பாலை வெளிக்குக் கொண்டுவருவதுபோலாகும். அல்லாகுதஆலா அருளிச்செய்திருப்பதுபோல் அதுவருமாறு: பானம் பண்ணுகிறவர்களுக்கு மனோரஞ்சிதத்தைக் கொடுக்கின்ற கலப்பில்லாத சுத்தமான பாலைச் சாணத்திற்கும் இரத்தத்திற்கும் மத்தியிலிருந்து உங்களுக்குப் புகட்டுகிறோம்" என்று கூறுகின்றான்.

இனி அந்தக் கஷ்டத்துக்குப் பரிகாரம் யாதெனில், அல்லாகுதஆலா உடைய ஆசை அதிகரிக்கும்படி மனதைத் துன்யாவின் தேட்டத்திலிருந்து தகர்த்து எதை நாடினாலும் தான் ஆசைகொண்ட மஃஷூகின்பொருட்டே நாடுகிற ஓர் ஆஷிகைப்போல் அவன் ஆய்விட வேண்டும். இப்படிப்பட்டவன் உணவை உண்டாலும் மலோபாதைக்குப் போனாலும் அதில் இகுலாசு வைக்கக்கூடும். துன்யாவின் ஆசைமேலிட்டவன் தொழுகை நோன்புகளிலும் இகுலாசு வைக்க முடியாதவனாயிருப்பான். ஏனெனில் எல்லாச்செயல்களும் இருதயத்தின் குணத்தை ஏற்பனவாயும் இருதயம் சாய்ந்தவழி அச்செயல்களும் இணங்கி நிகழ்வனவாயும் இருக்கின்றன. எவனுக்குக் கௌரவம் மேலிட்டிருக்கிறதோ அவன் செயல்களெல்லாம் ஜனங்களுக்காகவே நிகழும். எந்தமட்டென்றால், அவன் காலையில் எழுந்து முகங்கழுவி உடை உடுப்பதுங்கூட ஜனங்களுக்காகவாயிருக்கும். ஜனசகவாசமாக நிகழும் வஃளுசொல்லல், பாடம்போதித்தல், ஹதீசை ரிவாயத்து செய்தல் முதலிய இக்காரியங்களில் இகுலாசு அதிக கஷ்டமாயிருப்பதுபோல் வேறு எந்தக் காரியத்திலும் அவ்வளவு அதிக கஷ்டமாயிருப்பதில்லை. ஜனங்களில் ஒருவன் நோக்கம் வைப்பதற்குக் காரணம் பெரும்பான்மையில் அவர்கள் தன்னை ஏற்கவேண்டுமென்ற தேட்டமாயிருக்கும். அல்லது அல்லாகுதஆலாவை நாடும் நாட்டத்துடன் அந்தத் தேட்டமும் கலந்திருக்கும். அப்படிக் கலந்திருப்பதில் ஜனங்கள் ஏற்கவேண்டுமென்னும் தேட்டமானது அல்லாவை நாடும் நாட்டத்துக்குச் சமமாகவாவது அதினும் கூடவாவது குறையவாவது இருக்கும். என்கினும் ஜனங்கள் ஏற்கவேண்டுமென்ற தேட்டத்தினின்றும் நிய்யத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள அனேக ஆலிம்களும் இயலாதவர்களாயிருக்கிறார்கள். ஆனால் சில மூடர்கள் நாம் இகுலாசுள்ளவராயிருக்கிறோம் என்று மருண்டு அந்த மருட்சியினால் ஏமாந்துபோய்த் தங்கள் குற்றங்களை அறியாமலிருக்கிறார்கள். மூடர்களென்ன; அறிவாளர்களிலும் அநேகர் தங்கள் குற்றத்தை அறியக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். மஷாயிகுகளில்கின்றும் ஒருவர்சொல்லுகிறதாவது:—"நான் முப்பது வருஷகாலம் (ஒரு நேரமும் தவறாமல்) முந்தின சப்பில் தொழுது வந்தேன். ஒருநாள் நேரஞ்சென்று வந்தேனாதலால். (எனக்கு முந்தின சப்பு கிடைக்காமல்) பிந்தின சப்பில் நின்றேன். அப்போது நான் நேரஞ்சென்று வந்திருக்கிறதாக ஜனங்கள் சொல்லுவார்கள் என்ற ஓர் வெட்கத்தை என் மனதுக்குட் பரிசித்தேன். அதனால் முந்தின சப்பில் நான்

தொழுகிறதை ஜனங்கள் பார்க்கிறார்களென்ற சந்தோஷமே என்னை இப்படித் தொழச்செய்தது என்றறிந்தேனாதலால் முப்பதுவருஷமாகத் தொழுதுவந்த அந்தத் தொழுகைகளை எல்லாம் கலாச்செய்தேன்" என்பதே. ஆதலால் இக்லாஸை அறிவது கஷ்டமாயும் அதன்படி செய்வது அதினும் மிகக் கஷ்டமாயு மிருக்கிறது. எது வொன்று கலப்பாயும் இக்லாஸில்லாததாயும் இருக்கிறதோ அது ஏற்கப்படாததேயாம்.

பசல்: அறிந்துகொள்:—"ஜாஹிலான ஓர் மூடன் செய்கிற ஒரு வருஷத்தின் இபாதத்தைவிட ஆலிமான ஓர் அறிவாளன் தொழுகிற இரண்டு ரக்கஅத்துகள் மிக வரிசையுள்ளன" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் யாதெனில், ஜாஹிலானவன் அமலின் ஆபத்துகளை அறியமாட்டான். அந்த அமலில் கலந்திருக்கிற தனது நோக்கங்களும் அவனுக்குத் தெரியாது. தன் அமலை யெல்லாம் க்ாலிசு (கலப்பில்லாதது) என்று எண்ணிக்கொள்ளுவான். பொன்னாணயத்தில் எப்படி கலப்பு என்னும் மோசடியான சூதிருக்கிறதோ அப்படியே இபாதத்திலும் சூதிருக்கிறது. நாணயப்பரிட்சையில் தேர்ச்சையடைந்த கெட்டிக்காரனேயன்றி அப்படியல்லாத எந்த நோட்டக்காரனும் ஏமாந்துபோம்படி சில நாணயங்களிருப்பதுண்டு. மூடர்கள் எல்லாரும் எதுவொன்று நாணயரூபத்தில் பளபளத்த மஞ்சள் வர்ணமாயிருக்கிறதோ அதை எல்லாம் பொன்னாகவே மதிப்பார்கள். இபாதத்தில் மறைந்து இக்லாஸை அழிக்கின்ற மோசடியான சூது நாலுவகுப்பாம். அவற்றுள் சிலது மிக மறைந்ததாயும் அதிக ஆழ்ந்ததாயு மிருக்கிறது. அவை விளங்கும் பொருட்டு (ஓர் அமலில் வரும்) ரியாவில் ஒவ்வொன்றையும் உருப்படுத்திக் காட்டுவோம். முதலாவது:— ஒருவன் தொழுதுகொண்டிருக்கும்போது அங்கு சில ஜனங்கள் வந்தால் ஷைத்தான் அவனைத் தூண்டி இந்த ஜனங்கள் உன்னைப் பழிக்காமலிருக்கும்படி நீ நல்லவிதமாகத் தொழு என்று சொல்லுவான். இது மறைந்ததல்ல, தெரிந்த சூதேயாம். இரண்டாவது:—இது ஷைத்தானுடைய சூதென்றறிந்து அவன் இந்த ரியாவுக்குத் தப்பிக்கொள்ளுவானாகில் அப்போது ஷைத்தான் அவனைத் தூண்டி நீ நல்லவிதமாகத் தொழுதால் இந்த ஜனங்கள் உன் பின்னே தொடருவார்கள் என்றும், அவர்கள் தொடர்ந்த சவாபும் உனக்குக் கிடைக்கும் என்றும் சொல்லுவான். அப்போது இவன்; தன் உள்ளச்சலி மற்றவரில் குறைபாடுசெய்தால் மாத்திரமே அவர்கள் தொடர்ந்த சலாபு தனக்குக் கிடைக்கு

மென்பதை அறியாமல் ஏமாந்து ஷைத்தானுக்கு வழிபடவுங் கூடும். ஆயினும் அவன் உள்ளச்சமில்லாதவனாயிருந்து ஜனங்கள் அவனை உள்ளச்சமுள்ளவனென்றெண்ணித் தொடருவார்களாகில் அவர்களுக்கு சவாபு கிடைக்கவே கிடைக்கும். இவன் தன் முனாபிக்குத்தனத்திற்காகக் குற்றம் பிடிக்கப்படுவான். மூன்றாவது:—ஜனங்களின்முன் தொழுவதுபோல் தனிமையிலும் அப்படி நல்லவிதமாகத் தொழாமல் வேறுவிதமாகத் தொழுதால் அது முனாபிக்குத்தனமாகுமென்று அறிந்திருப்பான். ஆதலால் ஜனங்களின்முன் நல்லவிதமாகத் தொழ வேண்டியநிமித்தம் தனிமையிலும் அப்படி நல்லவிதமாகத் தொழும்படி தன்னைச் சீர்படுத்திக்கொள்ளுகிறான். இது மிகவும் ஆழ்ந்த சூதாயும் ரியாவாயுமிருக்கிறது. எங்கினும் இந்த ரியா அவன் தனக்குள் செய்துகொள்ளும் ரியாவாகும். அதாவது:—ஜனங்களின்முன் ஒருவிதமாகவும் தனிமையில் வேறுவிதமாகவும் தொழுவதற்கு அவன் மனம் வெட்கப்படுகிறது. அதனால் ஜனங்களின்முன் நல்லவிதமாகத் தொழுகிறதுபோல் தனிமையிலும் அப்படித் தொழுதுகொண்டு ஜனங்களின்முன் நல்லவிதமாகத் தொழுவதில் தன்னிடம் ரியா இல்லை என்று எண்ணுகிறான். உண்மையில் இவன் தனிமையிலும் ரியாவுக்காக அமல்செய்தவனாவான். நாலாவது:—இது மறைந்ததினும் மிக மறைந்த சூதாம். அது யாதெனில், ஜனங்களுக்காக அவர்கள் முன்னேயும் தனிமையிலும் அச்சத்துடன் தொழுவது உபயோகப்படாதென்பது அவனுக்குத் தெரிந்திருக்கிறது. ஆயினும் ஷைத்தான் அவனைத் தூண்டி நீ அல்லாகு தஆலாவின் பெருமையை ஆலோசித்துப்பார் என்றும், நீ யாருடைய சமுகத்தில் நிற்கிறாய் என்பது உனக்குத் தெரியாதோ? என்றும் சொல்லுவான். அவன் அதை யோசித்து அச்சமுள்ளவனாகி ஜனங்களின்முன் தன்னைச் சீர்படுத்திக்கொள்ளுவான். ஆனால் தனிமையில் தொழும்போது இப்படியான எண்ணம் அவன் மனதில் வாராமல் ஜனங்களின்முன் தொழும்போது வருவதாயிருந்தால் இதற்குக் காரணம் ரியாவேயாம். இவனுக்குத் தெரியாதபடி ஷைத்தான் கைவிட்டு மறைத்துக்கொண்டிருக்கிற இந்த சூதுகளை விட்டும் அவன் எப்போது கையை எடுப்பானென்றால், எந்த நாளில் ஜனங்களைப்பார்க்கும்போது அவர்கள் உதவமாட்டார்களோ அந்த நாளின் மகத்துவத்தை இவன் தன் ஞாபகத்தில் கொண்டுவரும்போதேயாம். அன்றியும் இவன் இபாதத்தை மனிதர்கள் பார்ப்பதும் மிருகங்கள் பார்ப்பதும் இரண்டும் இவனுக்குச் சமமாகவே தெரியவேண்டும். இவைகளில் ஏதாவது

வித்தியாசத்தைக் காண்பானாகில் இவன் இன்னும் ரியாவைவிட்டொழிந்தவனல்ல. ரியாவில் காட்டின இந்த சூதுகள்போல் இதற்குமுன் நாம்சொல்லியிருக்கிற மனநோக்கங்களிலும் அநேகம்சூதுகள் இருக்கின்றன. எவனொருவன் இந்த நுணுக்கங்களை அறியவில்லையோ அவன் பயனில்லாப்பாடுபட்டுக் கஷ்டத்தை யடைகின்றான். அவன் பாடெல்லாம் பாழாய்ப்போகின்றது. அவர்கள் எண்ணியிராதது அல்லாவின் பக்கத்திலிருந்து அவர்களுக்கு வெளியாகும் என்று கூறப்பட்டிருப்பது இவன் விஷயத்திலேயாம்.

பசல்: அறிந்துகொள்:—நிய்யத்து கலப்புள்ளதாயிருந்து இபாதத்தின் நிய்யத்தைவிட ரியாவின் நிய்யத்து அல்லது வேறுயாதொரு நோக்கத்தின் நிய்யத்து மேலிட்டிருந்தால் இது அதாபுக்குக் காரணமாகும். இபாதத்தின் நிய்யத்தும் இதரநிய்யத்தும் சமமாயிருந்தால் அது அதாபுக்கும் காரணமாகாது சவாபுக்கும் காரணமாகாது. இபாதத்தின் நிய்யத்தைவிட இதரநிய்யத்து மிகக்குன்றியிருந்தால் அந்த அமலுக்கு சவாபில்லாமற்போகாது. ஆனால் ஒருவனுடைய அமல் கலப்புள்ளதாயிருந்தால் நாளை கியாமத்தில் அவனைநோக்கி நீ இந்த அமலை யாருக்காகச் செய்தாயோ அவர்களிடத்தில் போய்க் கூலியைக்கேள் என்று சொல்லப்படும் என்பதாக ஹதீசுகள் சயிக்கினை செய்கின்றன. என்கிலும் இபாதத்தின் நிய்யத்தும் இதர நிய்யத்தும் சமமாயிருப்பதில் கூலியில்லையாதலால் அவன் கூலி கேட்கும்போது அப்படிச் சொல்லப்படும் என்பதே இந்த ஹதீசுகளில் கருதியகருத்தென்று நமக்கு வெளிப்படையாய்விளங்குகிறது. பின்பு அவன் அதாபு செய்யப்படுவான் என்று ஹதீசுகள் அறிவிக்கின்ற தானத்தில் அதன் கருத்து யாதெனில், அவன் நிய்யத்து முழுவதும் ரியாவாயிருந்தால் அல்லது இபாதத்தின் நிய்யத்தைவிட ரியாவின் நிய்யத்து மிகைத்திருந்தால் என்பது கருத்தாமென்க. ஆனால் அவனை இபாதத்தின்பேரில் எழுப்பின மூலநாட்டம் இபாதத்தின் நிய்யத்தாயும் இதர நிய்யத்து அதைவிடக் குன்றினதாயுமிருக்கிறபக்ஷம் அவனுக்கு சவாபில்லாமற் போவது கூடாது. நிய்யத்து கலப்பற்றிருப்பதில் கிடைப்பதுபோல் அவனுக்கு அவ்வளவு மேம்பதவி கிடைக்காதென்றாலும்சரியே. இதை நாம் இரண்டு அத்தாட்சிகளால் தெரிந்தெடுத்தோம்.

முதலாவது அத்தாட்சி:—அல்லாகு தஆலாவினது சமுகத்தில் நெருங்குந் தகுதியைவிட்டுமனம்தூரப்படுவதே அதாபு என்பதற்குப் பொருள் என்றும், அந்த சமுகத்தை மறைக்கின்ற திரையாகிய நெரு

ப்பில் அவன் வேவதற்கு அந்தத் தூரமாதலே காரணம் என்றும் திருஷ்டாந்தத்தினால் நமக்கு நன்கு விளங்கியிருக்கிறது. அல்லாகு தஆலாவுடைய சமுகத்தை அடுக்கும் நாட்டமிருந்தால் அது நற்பதவிக்கு வித்தாகும். துன்யாவின் தேட்டமிருந்தால் அது தூர்ப்பதவிக்கு விதையாகும். இந்த இரண்டு நாட்டங்களுக்கும் இருதயத்தில் இடங்கொடுப்பது அவைகளுக்கு உதவிகொடுப்பதாகும். ஒரு நாட்டம் சமுகத்தைவிட்டு அவனைத் தூரப்படுத்தும். மற்றொரு நாட்டம் சமுகத்துக்கு நெருங்கச்செய்யும். இரண்டு நாட்டங்களும் சமமாயிருக்கிறபக்ஷம் ஒன்று ஒரு சாணளவுக்குச் சமுகத்தைவிட்டு அவனைத்தூரப்படுத்தும். மற்றொன்று அதே ஒரு சாணளவுக்குச் சமுகத்தின் பக்கம் நெருங்கச்செய்யும். அப்படியாக்கினால் அவன் முன்னிருந்த விடத்திலேயே வந்து நிற்பான். தூரப்படுத்தல் ஒரு சாணளவாயும் நெருங்கச்செய்தல் அரை சாணளவாயுமிருந்தால் இதில்கொஞ்சம் தூரமும் நஷ்டமும்ஏற்படுகிறது. நெருங்கச்செய்தல் ஒருசாணளவாயும் தூரப்படுத்தல் அரை சாணளவாயுமிருந்தால் இதில் கொஞ்சம் சமீபமும்நயமும் ஏற்படுகிறது. உதாரணமாக:—சூடுள்ள அவிழ்தத்தைத் தின்று உஷ்ணங்கொண்ட ஓர் நோயாளி அந்தச் சூட்டின் அளவாகக் குளிர்ச்சியுள்ள ஓர்அவிழ்தத்தைத் தின்பானாகில் அந்தச் சூடும் குளிர்ச்சியும் சமமாய்ப்போம். சூட்டின் அளவிலும் குறைந்த குளிர்ச்சியுள்ள ஓர் அவிழ்தத்தைத் தின்பானாகில் அப்போது குளிர்ச்சியினும் சூடு கொஞ்சம் அதிகமாயிருக்கும். அதிக குளிர்ச்சியுள்ள அவிழ்தத்தைத் தின்பானாகில் சூடுகொஞ்சம் குறையும். தேகத்தை உஷ்ணப்படுத்துவதிலும் குளிர்ச்சியாக்குவதிலும் சூடுள்ள மருந்தும் குளிர்ச்சியுள்ள மருந்தும் எப்படித் தன்தன் குணத்தைக்காட்டுகின்றதோ அப்படியே இருதயத்தை இருட்டாக்குவதிலும் வெளிச்சப்படுத்துவதிலும் பாவமும் வணக்கமும் தன்தன் குணத்தைக் காட்டுகின்றது. அதில் ஓரணுவளவும் வீணாவதில்லை. நீதமென்னும் நிறைகோலினால்அவற்றின் குறைதலும் மிகைத்தலும் வெளியாகும். ஓரணுவளவு நன்மை செய்பவனும் அதைக் கண்டுகொள்ளுவான், ஓரணுவளவு தீமை செய்பவனும் அதைக் கண்டுகொள்ளுவான் என்றது இதுவேயாம். இனி இபாதத்தில் அல்லாவை நாடும் நாட்டத்திலும் துன்யாவின் தேட்டம் குறைந்திருந்தால் அவனுக்கு சவாபில்லாமற் போகாது என்று நாம் சொன்னபோதிலும் அந்தத்தேட்டம் அதிக வலுவை அடைந்திருக்கவும் அதை அவன் வலுவில்லாததென்றெண்ணி மருளவுங்கூடுமாதலால் பேணுதலாய் நடப்பதே கெட்டித்

தனமாம். ஆகவே இபாதத்தில் இதரநோக்கம் கலவாதபடி அதன் வழியை அடைப்பதில் சலாமத்திருக்கிறது.

மற்றொரு அத்தாட்சியாவது:—உலமாக்கள் ஒத்துச் சொல்லுகிற அடியில் வரும் விஷயமாம். அதாவது:—ஹஜ்ஜைநாடிப் புறப்பட்ட ஒருவன் வழியில் விற்பதற்காக யாதொரு வர்த்தகத்தைக் கூடவைத்துககொள்ளுவானாகில் அவனுடைய ஹஜ்ஜு பழுதாகாது. அவனுக்குக்கிடைக்கிற சவாபு ஒருவன் இதரநோக்கமில்லாமல் செய்கிற ஹஜ்ஜின் சவாபைப்போல் அவ்வளவு மேலாயிராதென்றாலும் சரியே. ஆனால் இவனுடைய முதல்நாட்டம் ஹஜ்ஜாயும் வர்த்தகநாட்டம் அதைத் தொடர்ந்ததாயு மிருக்கிறது. அது ஏதோ நஷ்டத்தைக் கொடுக்குமென்றாலும் ஹஜ்ஜின் சவாபு பூராவையும் அழித்துவிடாது. இன்னும் ஒருவன் மார்க்கயுத்தம் செய்கிறவனாயிருக்கிறான். யுத்தஞ் செய்யப் போகவேண்டிய இடம் இரண்டாயிருந்து ஓரிடம் சீமான்கள் உள்ளதும் குனைப்பொருட்கள் அதிகங் கிடைக்கக்கூடியதும் மற்றோரிடம் ஏழைகள் உள்ளதுமாயிருக்கிறது. அப்படியிருக்க அவன் சீமான்களிருக்கும் இடத்துக்கு யுத்தஞ்செய்யப் போவானாகில் அவனின் யுத்தத்திற்குள்ள சவாபு முழுமையுமே அழிந்துபோமென்பது கூடாது. ஏனெனில் மனிதன் தனக்குக் கொள்ளைப்பொருள் கிடைப்பதற்கும் கிடைக்காமற்போவதற்கும் நடுவே தன் மனதில் வித்தியாசத்தைக் காண்பானேயன்றி இரண்டையும் சமமாகப் பார்க்கமாட்டான். அப்படி வித்தியாசத்தைக் காணாமலிருப்பது ஷரத்தாயிருக்கிறபக்ஷம் அல்லாதான் காக்கவேண்டும் அந்த அமலுக்கு சவாபு கிடைப்பதில் அச்சமேயிருககிறது. ஏனெனில் இந்த ஷரத்தின்படி பார்த்தால் எந்த அமலும் கூடாது என்றாகும். அதிலும் வருலுசொல்லல், பாடமுரைத்தல், கிதாபு கோர்வை செய்தல் போல் எந்த அமலில் அவன் தனது நோக்கத்தை ஜனங்களில் வைத்திருக்கிறானோ அந்த அமல் அங்கீகரிக்கப்படாதென்றாகும். ஆகவே இந்த ஷரத்தை விதிப்பது சரியாகாது. ஏனெனில் மனிதனுடைய நபுசானியத்தென்னும் மனிதப்பண்புகள் எல்லாவற்றையும் அவனிடத்திலிருந்து நீக்காதவரையில் அவன் தன் மனதில் மாறுதலான இந்த வித்தியாசத்தைக் காணாமலிருக்கமாட்டான். உதாரணமாக:—அவன் கோர்வைசெய்த கிதாபை மற்றொருவன் கோர்வை செய்தான் என்றும், அவன் வாக்கியத்தை மற்றொருவன் வாக்கியம் என்றும் ஜனங்கள் சொல்லிக்கொள்வதை அவன் அறிந்தால் அதைப்பற்றி அவன் தன் மனதில் ஒருவித மாறுதலான வித்தியாசத்தை அதா

வது) வெறுப்பைக் காண்பான். அப்படிக் கண்டபோதிலும் அவனுடைய அமலின் சவாபு அழியாது.

மூன்றுவது பாபு-சிதுகு என்னும் சத்தியத்திற் கூறுவது.

அறிந்துகோள்:—சிதுகு என்னும் சத்தியம் இகுலாசுக்கு அடுத்ததாயிருக்கிறது. அதன் பதவி பெரியது. அதன் பூரணத்தன்மையை அடைந்தவன் எவனோ அவன் சித்தீகு என்று அழைக்கப்படுவான். அல்லாகுதஆலாகுருஆனில்சத்தியநிலையைப்புகழ்ந்து அவர்கள் எதன் மேல் அல்லாகு தஆலாவினிடம் சத்திய வாக்காக உறுதிமொழி பகர்ந்தார்களோ அதை உண்மையாக்கின சத்தியபுருஷர்கள் என்றும், அந்த சத்தியபுருஷர்களின் சத்தியத்தைக் குறித்து அல்லாகு தஆலா அவர்களைக் கேட்கும்பொருட்டு என்றும் திருவுளமாயிருக்கிறான். இன்னும் "மனிதனுக்குப் பூரணத்தன்மை எதில் இருக்கிறது" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் கேட்டதற்கு "அவன் சத்தியமாகப் பேசுவதிலும் சத்தியமாக நடப்பதிலும்" என்று அருளிச்செய்தார்கள். ஆகவே சத்தியம் என்பதின் பொருளை அறிவது அவசியமாயிருக்கிறது. சத்தியம் என்பதற்குப் பொருள் உண்மையும் நிசமுமாம். இந்த உண்மையும் நிசமும் ஆறுவஸ்துக்களில் இருக்கும். அந்த ஆறிலும் பூரணத்தன்மை அடைந்தவன் எவனோ அவன் சித்தீகு ஆவான்.

முதலாவ்து உண்மை:—நாவிலிருப்பதாம். அதாவது:—சென்றகால நிகழ்கால வர்த்தமானங்களை அவன் எடுத்துச் சொல்வதிலும் எதிர்காலத்தில் யாதொன்றைச்செய்வதாய் வாக்குக் கொடுப்பதிலும் யாதொரு பொய்யைச் சொல்லாமலிருப்பதாம். ஏனெனில் மனமானது நாவினால் ஓர் குணத்தை ஏற்கும் என்றும், நேரல்லாத தப்பு வார்த்தைகளை வசனிப்பதினால் மனம் நேர்தப்பிப்போம் என்றும், சத்தியமான வார்த்தைகளை வழங்குவதினால் மனம் சற்குணத்தை அடையும்என்றும்இதற்குமுன் நாம்சொல்லியிருக்கிறோம். நாவினது உண்மைஇரண்டுகாரியத்தினால்நிறப்பத்தையடையும். முதலாவது:—கேட்பவன் வேறு பொருளை விளங்கிக்கொள்ளும்படி உண்மையை ஒருவாறு ஒளித்தும் சொல்லாமல் ஸ்பஷ்டமாகவே சொல்வதாம். ஆனால்யுத்தத்திலும் புருஷன் பெண்ஜாதிகளுக்கிடையிலும் முஸ்லிம்களுக்கு நடுவே சமாதானஞ் செய்விப்பதிலும்போல் எந்தவிடத்தில் உண்மையைச் சொல்லத்தகாதோ அந்தவிடத்தில் பொய் சொல்ல அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் இப்படியான இடத்தில் ஸ்பஷ்டமாகப் பொய்யைச்சொல்லாமல்கூடியமட்டும் ஒளிப்பாக

உண்மையைச் சொல்வதே நிறப்பமாயிருக்கிறது. அப்படிச் சொன்னால் அவன் உண்மை உரைத்தவன்போலாவான். அன்றியும் அல்லாகுதஆலாவை நாடி ஓர் நன்மைக்காகச் சொன்னவனாவான். ஆதலால் அவன் சிதுகு என்னும் சத்தியநிலையின் தரஜாவிலிருந்து விழுந்துவிடமாட்டான். இரண்டாவது காரியம்:—அவன் அல்லாகுதஆலாவுடன் வசனிக்கும் முனாஜாத்தில் தன்னிடம் உண்மை உண்டா என்று அவன் தேடிப்பார்ப்பதாம். இன்னீவஜ்ஜஹ்து வஜ்ஹிய நான் என் முகத்தை அல்லாவின்பக்கம் திருப்பினேன் என்று அவன் சொல்லும்போது அவன் மனோமுகம் துன்யாவை நோக்கிக்கொண்டிருக்குமாகில் அவன் பொய்சொன்னவனும் அல்லாவின் பக்கம் முகத்தைத் திருப்பாதவனுமிருப்பான். இய்யாக்க நஃபுது நான் உன் அடிமை உன்னை வணங்குகிறேன் என்று சொல்லும்போது அவன் துன்யாவின் பந்தத்திலாவது இச்சைகளின் பந்தத்திலாவது கட்டுண்டு இச்சைகள் அவனுக்கு அடங்காமல் அவனே இச்சைகளுக்கு அடங்கியிருப்பானாகில் பொய் சொன்னவனாவான். ஏனெனில் அவன் எதில் கட்டுண்டிருக்கிறானோ அதற்கே அவன் அடிமையாயிருப்பதினாலென்க. இதனாலேதான் வெள்ளி நாணயத்தின் அடிமையும் பொன்னாணயத்தின் அடிமையும் கெட்டான் என்று ரசூல்சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமானதில் அவனை வெள்ளி பொன் நாணயங்களின் அடிமையென்று அழைத்தார்கள். ஆதலால் துன்யாவுடைய எல்லா இச்சைகளின் பந்தத்திலிருந்து அவன் உரிமை யாகாதவரையில் ஹக்குதஆலாவுக்கு அடிமைசெய்பவன் என்றாகான். இந்த உரிமைத்தனத்தின் நிறப்பம் யாதெனில், அவன் தனக்கு வேறு நாட்டம் வராமலிருக்க எப்படி கல்குகளைவிட்டும் உரிமையானானோ அப்படியே அவன் தன்னையும்விட்டு உரிமையாகவேண்டும். மேலும் தனக்கு அல்லாகுதஆலா நாடினதையன்றி வேறொன்றையும் விரும்பக்கூடாது. தனக்கு அல்லாகுதஆலா எதைச் செய்தாலும் அதன்மேல் பொருத்தமாயிருக்கவேண்டும். வணக்க விஷயத்தில் இதுவே பூரண சத்திய நிலைமையாம். எவனுக்கு இந்தச் சத்தியநிலைமை யில்லையோ அவனுக்கு *சித்தீகு என்றபெயர் பொருந்தாது. மேலும் ‡ சாதிகு என்ற பெயரையும உடையவனாகாவான்.

---

* சித்தீகு = உண்மை உரைப்பதிலும் ஒருவர்சொல்வதைஉண்மையெனக் கொள்வதிலும் மகாசத்தியவான்.

‡ சாதிகு = உண்மை யுரைப்பவன்.

இரண்டாவது உண்மை:—நாட்டத்திலிருப்பதாம். அதாவது:- எதைக்கொண்டு அவன் அல்லாகு தஆலாவினிடம் நெருங்குகின்றானோ அதில் (இபாதத்தில்) அல்லாகு தஆலாவையே நாடுவதன்றி வேறொன்றையும் கலக்காமலிருப்பதாம். இது இகுலாசாகும். இகுலாசையும் சிதுகு என்று சொல்லுவார்கள். அப்படிக்கில்லாமல் அவன் உள்ளத்தில் அல்லாகு தஆலாவின் நாட்டம் தவிர வேறு நோக்கமிருக்குமாகில் அவன் செய்யும் வணக்கத்தில் பொய்யனாவான்.

மூன்றாவது உண்மை:—இருதய எண்ணத்திலிருப்பதாம். அதாவது:—ஒருவன் தன் இருதயத்தில் எனக்கு ஓர் இராச்சியம் கிடைத்தால் நான் நீதமாக ஆளுவேன் என்றும், எனக்கு ஏதும் பொருள் கிடைத்தால் எல்லாவற்றையும் ஏழைகளுக்குக் கொடுப்பேன் என்றும், அதிகாரம் செலுத்துவதில் அல்லது சபை கூட்டிச் சற்போதனை செய்வதில் அல்லது பாடம் போதிப்பதில் என்னிலும் மேலான ஒருவன் ஏற்படுகிறபக்ஷம் இந்த வேலையை நான் அவனிடம் ஒப்புக்கொடுப்பேன் என்றும் எண்ணியிருப்பதாம். இந்த எண்ணம் மாறாமல் ஒரே உறுதியாக உறுதிபட்டிருப்பதுமுண்டு. உறுதிபடாமல் மாறிமாறி வருவதுமுண்டு. மாறாமல் உறுதிபட்டிருக்கிற அந்த எண்ணம் உறுதியான உண்மை என்று சொல்லப்படும். எது போலெனில், ஒருவனுக்கு ஓர் பொருளின்மீதெழுந்த ஆசை மாறாமலிருந்தால் இது அடிபெலமுள்ள மெய்யான ஆசை என்றும், மாறினால் இது அடிபெலமற்ற பொய்யான ஆசையென்றும் (அல்லது இது மெய்ப்பசி, இது பொய்ப்பசி என்றும் அனுபவத்தில்) சொல்வதுபோலென்க. உதாரணமாக:—உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:—"எந்த ஜனங்களின் தொகையில் அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்களும் ஒருவராயிருக்கிறார்களோ அந்த ஜனங்களின்மேல் நான் அமீராவதைப் பார்க்கிலும் என்கழுத்தை வெட்டிப்போடுவதை நான் அதிகமாய்நேசிக்கிறேன்" என்பதே. அபூபகரவர்களின்மேல் தாங்கள் அமீராவதினும் தங்களைக் கொல்வதின்பேரில் சபூறு செய்துகொள்ளும் உறுதியான எண்ணத்தைத் தங்களிடத்தில் கண்டதினாலேயே இப்படிச் சொன்னார்கள். இன்னும் முமீன்களில் ஒருவனை நோக்கி "உன்னையோ அபூபகரையோ உங்கள் இருவரில் யாரை வெட்ட உனக்குச் சம்மதம்? என்று கேட்டால் அவன் தன் ஜீவனை மிகவும் நேசிப்பவனாயிருக்கக்கூடும். இவனுக்கும் அபூபகரின்மேல் அமீராவதைவிட தம்

மை வெட்டிப்போடுவதை நேசிப்பவருக்கும் நடுவே எவ்வளவோ
வித்தியாசமிருக்கிறது.

நாலாவது உண்மை:—அந்த எண்ணத்தை நிறைவேற்றுவதி
லிருப்பதாம். ஏனெனில் ஒருவன் ஜிஹாது என்னும் மார்க்க யுத்
தத்தில் தன் உயிரைக் கொடுக்க அல்லது தன்னிலும் மேலான ஒரு
வன் தோன்றுங்காலத்தில் அவனிடம் தன் அதிகாரத்தை ஒப்புக்
கொடுக்க உறுதியான எண்ணங்கொண்டிருந்து பின்பு யுத்தம் நேர்
ந்த காலத்தில் அல்லது தன்னிலும் மேலானவன் தோன்றின காலத்
தில் அவ்வாறு நிறைவேற்ற அவன் மனம் சம்மதிக்காமற் போவது
முண்டு. இதனாலேதான் மன உறுதிப்படி நிறைவேற்றினவர்களை
அல்லாகு தஆலா புகழ்ந்து எதைக்குறித்து அவர்கள் அல்லாகு தஆலா
வினிடம் சத்தியவாக்களித்தார்களோ அதைஉண்மையாக்கின சத்திய
புருஷர்கள் என்று கூறுகின்றான். இதன் கருத்து: அவர்கள் தங்கள்
வாக்கை நிறைவேற்றினார்கள் உயிரைக் கொடுத்தார்கள் என்பதே.
இன்னும் எந்த ஜனங்கள் அல்லாவுக்காக நாங்கள் பொருளைச்செலவு
செய்வோம் என்று எண்ணங்கொண்டிருந்து அதன்படி நிறைவேற்
றாமற் போனார்களோ அந்த ஜனங்களின் விஷயத்தில் அல்லாகு
தஆலா பின்வருமாறு கூறுகின்றான். அதாவது:—அல்லாகு தஆலா
தனதருளில்நின்றும் நமக்கு ஏதுமளித்தால் மெய்யாக நாம் சதகா கொடு
த்துச் சற்சனங்களில் சேர்வோம் என்று அல்லாவினிடம் வாக்களித்த
சில ஜனங்களும் அவரைச் சேர்ந்தவர்கள். இந்த ஆயத்தைத் தொடர்
ந்து வரும் கடைசியான சொல்லில் இவர்கள் பொய் சொல்லுகிறவர்
களாயிருந்ததினால் எனக்கூறி இவர்களை வாக்குத் தவறின பொய்யர்
என்று அழைத்தான்.

ஐந்தாவது உண்மை யாதெனில்:—செயல்களில் தன் அகத்திலில்
லாத யாதொரு குணத்தைப்புறத்தில் காட்டாமலிருப்பதாம். உதா
ரணமாக:— அமரிக்கையாய் நடந்து செல்லுகிற ஒருவனுக்கு
அகத்தில் அந்த அமரிக்கையும் கனதிப்பாடும் இல்லாத பக்ஷத்தில்
அவன் உண்மையுள்ளவனாகான். அந்தரங்கத்திலும் பகிரங்கத்திலும்
தனது செயல்களைச் செம்மையாக வைத்துக் கொள்வதினால் இந்த
உண்மை உண்டாகும். எவனுடைய உட்செயலானது அவனின்
வெளிச் செயலினும் அதிக நல்லதாய் அல்லது வெளிச்செயலோ
டொத்ததாய் இருக்குமோ அவனிடத்தில்தான் இது உண்டாகும்.
இதன்நிமித்தமே ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "ஆண்
டவனே! என் வெளியரங்கத்தைவிட என் அந்தரங்கத்தை அதிக

நல்லதாக்கு, என் வெளியரங்கத்தையும் நல்லதாக்கு" என்று துஆ கேட்டார்கள். இக்குணத்தையடையாத ஒருவன் தன்வெளிச்செயலை உட்செயலுக்கு அத்தாட்சியாக்குவதில் பொய்யனுவான் பிறருக்குக் காட்டுங்கருத்து அவனுக்கில்லாமற்போனாலும் சரியே.

ஆறுவது உண்மை யாதெனில்:—தீனுடைய தானங்களாகிய ஜுஹ்து, மஹப்பத்து, தவக்குல், அச்சம், ஆதரவு, பொருத்தம் ஆகிய முதலிய மகாமாத்துகளில் அவற்றின் ஆரம்பங்களையும் வெளிப்படைகளையும் போதுமாக்கிக் கொள்ளாமல் அவற்றின் எதார்த்தமான உண்மையைத் தன்னிடத்தில் ஆராய்ந்து பார்ப்பதாம். இந்த மகாமாத்துகளின் அஹ்வால்களில் கொஞ்சமேனும் தன்னிடத்தில் இல்லாத மூமின் ஒருவனு மிருக்கமாட்டான். இருக்கினும் அந்த ஹால் கேவலமாயிருக்கும். எவன் அதில் உறுதியடைந்திருக்கிறானோ அவன் சத்திய புருஷனுவான். அல்லாகு தஆலா அருளிச்செய்தது போல் அதாவதுமாறு:—அல்லாவையும் அவன் றசூலையும் விசுவாசித்துப் பின்பு சந்தேகமே கொள்ளாமல் தங்கள் பொருட்களாலும் தங்கள் உயிர்களாலும் அல்லாவுடைய மார்க்கத்தில் யுத்தஞ்செய்தவர்கள் யாரோ அவர்கள்தான் மூமின்கள். அவர்களே சத்தியவான்கள் என்பதே. ஆதலால் அவர்களுக்கு ஈமான் நிறப்பமா யிருந்ததோ அவர்களைச் சத்தியவான்கள் என்று கூறினான்." இந்த உண்மைக்கு உபமானம் இது:—ஒருவன் எதற்காவது பயப்படுகிறபோது அவன் உறுப்புகள் நடுங்குவதும் அவன்முகம் பேதிப்பதும் உண்கவும் குடிக்கவும் அவனுக்கு ஏலாமற்போவதும் அவன் மனம் துடிதுடிப்பதும் அந்தப் பயத்துக்கு அடையாளமாம். இதேவிதமாக ஒருவன் அல்லாகு தஆலாவுக்குப் பயப்படுவானுகில் இது உண்மையான பயம் என்று சொல்லுவார்கள். பாவத்துக்கு நான் பயப்படுகிறேன் என்று சொல்லுகிறவன் அந்தப் பாவத்தை விடாமலிருந்தால் அவனைப் பொய்யன் என்று சொல்லுவார்கள். எல்லா மகாமாத்துகளிலும் இதேவிதமாக அநேக வித்தியாசமிருக்கிறது. ஆகவே எப்போதாவதொருவன் இந்த ஆறுவிதத்திலும் எல்லாமகாமாத்துகளிலும் உண்மையுள்ளவனுவானோ அப்போது அவனுக்குப் பூரணத்தன்மை வாய்க்கும். அவனை சித்தீகு என்று சொல்லுவார்கள். இவைகளில்நின்றும் சிலவற்றில்மாத்திரம் உண்மையுள்ளவனுயிருந்தால் அவனை சித்தீகு என்று சொல்லமாட்டார்கள். ஆயினும் அவனுடைய பதவியானது அவனுடைய உண்மைக்குத் தகுந்த அளவாயிருக்கும். வல்லாஹு தஆலா அஃலமு.

## ஆறுவது அஸ்லு-முஹாஸபா, முராகபா இவைகளிற் பேசுவது.

அறிந்துகொள்:—அல்லாகுதஆலா கியாமத்துநாளில் நாம் தராசுகளைச் சரியாகவைப்போம் என்றும், எவர்பேரிலும் கொடுமை செய்யோம் என்றும், ஒருவன் ஒரு அணுவளவு நன்மை செய்திருந்தாலும் தீமை செய்திருந்தாலும் அதைக்கொண்டுவந்து தராசில் வைப்போம் என்றும் கல்குகளின் கணக்கைக்கேட்க நாம் போதுமாயிருக்கிறோம் என்றும் கூறுகின்றான். நியாயத்தீர்ப்புநாளில் நீதமென்னும் நிறைகோலை நாம் வைப்போம், பின்பு ஒரு ஜீவனுக்கும் கிஞ்சித்தும் அநீதம் செய்யப்படாது. இந்த ஆயத்தில் அல்லாகு தஆலா தன்னுடைய சிருஷ்டிகளுக்கு இப்படி வார்த்தைப்பாடு செய்திருப்பதால் மற்றொரு ஆயத்தில் ஒவ்வொரு ஜீவனும் நாளை கியாமத்துக்காக என்ன அனுப்பியிருக்கிறதென்பதை நோட்டமிடக்கடவது என்று எச்சரித்து அவரவரையும் இவ்வுலகில் தங்கள் கிரியைகளின் கணக்கை நோட்டமிடும்படி ஆக்கியாபிக்கின்றான். ஹதீசில் வந்திருப்பதாவது:—ஒருவனுக்கு நாலு நேரங்கள் உண்டாயிருந்து ஒரு நேரத்தில் அவன் தன் (கிரியைகளின்) கணக்கை நோட்டமிடுகிறவனும் ஒரு நேரத்தில் அல்லாகுதஆலாவிடம் முனாஜாத்து செய்கிறவனும் ஒரு நேரத்தில் ஜீவனவேலை பார்ப்பவனும் ஒரு நேரத்தில் துன்யாவில்நின்றும் முபாஹான வஸ்துக்களைக்கொண்டு சுகம் பாராட்டுகிறவனுமிருப்பானாகில் அவனே புத்திமான் என்பதே. இன்னும் உங்களிடம் கணக்குக் கேட்கப்படுவதற்கு முன்னே நீங்கள் உங்கள் நப்சுகளிடம் கணக்குக் கேளுங்கள் என்று உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் ஓ ஈமான் கொண்டவர்களே! நீங்கள் சபுரு செய்யுங்கள் நிலை பெயராமலிருங்கள் என்று அல்லாகு தஆலா அருளிச்செய்திருப்பதில் "சபுரு செய்யுங்கள்" என்பதற்குப் பொருளாவது:—நீங்கள் சகித்துக்கொண்டு உங்கள் இச்சையோடும் நபுசோடும் நல்விதமாகப் போர்புரியுங்கள் அது நன்மையாகும் என்பதாம். "நிலைபெயராமலிருங்கள்" என்பதற்குப் பொருளாவது:—அந்தப் போரில் ஒரேநிலையாய் நில்லுங்கள் என்பதாம். ஆகவே நுண்ணறிவையுடையவர்களும் மார்க்கபக்தியிற் சிறந்தவர்களுமான மஹான்கள் நாம் இவ்வுலகத்தில் வியாபாரத்துக்காக வந்திருக்கிறோம் என்றும், அந்த வியாபாரம் நமது நபுசுடன் சம்பந்தப்பட்டிருக்கிறதென்றும், அந்தவியாபாரத்தின் நபநஷ்டங்கள் சுவர்க்க நரகங்களாயிருக்கின்றனவென்றும், அதிலும் அழியாத நற்பதவிதுர்ப்

பதவிகளே அதன் நயநஷ்டங்கள் என்றும் அறிந்தார்களாதலால் அவர்கள் தங்கள் நபுசை வர்த்தகம் நடத்தும், தங்கள் கூட்டாளியாக வைத்துக்கொண்டார்கள். எப்படி வர்த்தகக்கூட்டாளியினிடம் முதலில் ஷரத்துப்பேசி நிபந்தனை ஏற்படுத்துவதும் அதன்பிறகு அவனுடைய நடவடிக்கைகளைக் கவனித்து வருவதும் பிறகு அவனிடம் கணக்குக் கேட்பதும் அவன் வஞ்சகம் செய்திருந்தால் அவனை வாதனைப்படுத்திக் கடிந்து காய்வதும் வழக்கமோ அப்படியே இந்த மஹான்களும் தங்கள் நபுசுடன் ஆறுதானங்களை அமைத்திருக்கிறார்கள். அவை முஷாரதா, முராகபா, முஹாஸபா, முஆகபா, முஜாஹதா, முஆதபா என்பனவேயாம்.

### முதலாவது தானம்-முஷாரதா அதாவது நபுசின்மீது ஷரத்தை விதிப்பது.

அறிந்துகொள்:—வர்த்தகம் நடத்தும்படி எவனிடத்தில் முதலைக் கொடுக்கிறார்களோ அவன் அந்த முதலாளிக்குக் கூட்டாளியாகி அவனுக்கு நயத்தை யுண்டாக்குவதில் உதவிக்காரனா யிருக்கிறான். ஆயினும் அவன் அந்த முதலாளியை வஞ்சிக்கக்கருதி அவனுக்கு விரோதியாய்ப் போவதுமுண்டு. ஆதலால் முதலாளியானவன் எப்படி முன்னதாகக் கூட்டாளியினிடம் ஷரத்தைப்பேசி அதன் பிறகு எப்போதும் அவன்மேல் நோட்டமாயிருந்து அதன் பிறகு விற்கல் வாங்கல்களை நிறுத்தி அவனிடம் கண்டிப்பாகக் கணக்குக் கேட்கவேண்டுமோ அப்படியே அல்ல அதிலும் மேலாக நபுசின் மேல் நோட்டமாயிருந்து அதனிடத்தில் அதிக கண்டிப்பாகக் கணக்குக் கேட்கவேண்டும். ஏனென்றால், இந்த வர்த்தகத்தின் இலாபம் எப்போதும் அழியாமல் நிலைத்திருப்பதாயும் துன்யாவுடைய வர்த்தகத்தின் இலாபம் அற்பகால மிருந்து அழிந்துபோவதாயு மிருப்பதினாலென்க. அருமையானவனே! உன்வயதில்நின்றும் ஒவ்வொரு மூச்சும் உயர்ந்த ஓர் இரத்தினமா யிருக்கிறது. அவை ஒவ்வொன்றினாலும் ஓர் பொக்கிஷத்தை நீ நிறைத்து வைக்கக்கூடும். ஆதலால் நீ சற்றுநேரம் ஓய்வடைந்து அதுவிஷயத்தில் கண்டிப்பாகக் கணக்குப் பார்ப்பது மிகவும் உத்தமமாம். பின்னர் தினந்தோறும் சுபுஹு தொழுகைக்குப் பிறகு ஒரு ஸாஅத்து நேரம் இந்த வேலைக்காகத் தன் இருதயத்தை எப்பராக்கிலிருந்து மொழித்துப் பின்வருமாறு தன் மனதுக்குப் பேசுகிறவன் எவனோ அவனே புத்திமான்.

அதாவது:—

எனக்கு என் வயதாகிய முதலேயன்றி வேறுமுதல் கிடையாது. சென்ற மூச்சுக்குப் பதில் மூச்சுமில்லை. ஏனெனில் எனக்களித்திருக்கும் மூச்சுகள் இத்தனையென்று அல்லாகு தஆலா உடைய இல்மில் எண் குறிக்கப்பட் டிருக்கின்றன. அதற்குமேல் அவை அதிகப்படமாட்டா. வயது கழிந்துபோனால் வர்த்தகம்செய்ய முடியாது. அமலெல்லாம் இந்த அநித்தியமான அற்பகாலத்தில்தான் செய்யவேண்டும். நித்தியமான ஆகிரத்தில் ஒரு அமலும் இல்லை. ஏ நப்ஸே! இன்று என்னும் இத்தினமாகிறது அல்லாகு தஆலா உனக்களித்திருக்கும் புதியநாளாயிருக்கிறது. நீ மவுத்தாய்ப்போயிருக்கிறபக்ஷம் பின்பும் இவ்வுலகத்துக்குவந்து உன் அமலை நேர்படுத்திக்கொள்வதற்காக இன்னும் ஒருநாள் எனக்குத் தாமதம் கிடைக்கவேண்டுமே என்று நீ ஆசிப்பாயல்லவா? ஏ நப்ஸே! இந்தச் செல்வத்தை அல்லாகு தஆலா இதோ உனக்குக் கொடுத்திருக்கிறான். பத்திரம்; நீ இந்த ஆஸ்தியின் அருமையை அறிந்து மரியாதைசெய், இதைப் பாழாக்கிவிடாதே. நாளைய தினம் உனக்கு இந்தத் தாமதமே கிடைக்காமற்போய் எந்த நன்மையும் செய்யக்கூடாமல் நீ கைசேதப்படுவது சரியல்ல. ஆதலால் இன்று நீ இறந்துபோய் இருந்தாய் என்றும் இன்னும் ஒருநாள் உனக்குத் தாமதம் கொடுக்கும்படி அல்லாகு தஆலாவிடத்தில் நீ கேட்டுக்கொண்டாய் என்றும் அதுபோல் அல்லாகு தஆலா உனக்குத் தாமதங் கொடுத்தான் என்றும் அதுவே இந்நாள் என்றும் நீ எண்ணிக்கொள். அப்படியானால் நீ இந்த நாளில் உன் நற்பதவிக்குரியவைகளைத் தேடிக்கொள்ளாமல் இதைப் பழுதாக்குவாயாகில் இதைவிட மிகவும் பெரிய நஷ்டம் என்ன இருக்கும்? இரவும் பகலுங்கூடி இருபத்துநாலு மணிநேரம் ஆகின்ற இந்த ஒவ்வொரு நாளையும் நாளை கியாமத்தில் இருபத்துநாலு பொக்கிஷங்களாக அடியான் முன்பாக வைக்கப்படும் என்றும், அவைகளில் ஒன்றைத் திறப்பார்கள் என்றும், அந்த ஒருமணி நேரத்தில் அவன்செய்த நன்மைகளெல்லாம் ஒளியாகி அப்பொக்கிஷத்தில் நிறைந்திருக்கக் காண்பான் என்றும், அதனால் அவன் மனதில் அதிக சந்தோஷமும் மகிழ்ச்சியும் சுகமும் உண்டாகும் என்றும், அந்தச் சந்தோஷ சுகங்களை நரகவாளிகளில் பங்குவைக்கிறபக்ஷம் அவர்களுக்கு நரகத்தின் சூடு தெரியாமற்போம் என்றும், அந்த அடியான் அல்லாகு தஆலாவினிடம் ஏற்கப்படுவதற்கு இந்த ஒளி உதவியாக நிற்குமென்று அப்போதவன் தெரிந்துகொள்வதினாலேயே அவனுக்கு அவ்வளவு சந்தோஷமுண்டாகி

றது என்றும், பின்பு வேறொரு பொக்கிஷத்தைத் திறப்பார்கள் என்றும், அது கருமையும் இருளுமா யிருப்பதுடன் எல்லாரும் மூக்கைப் பிடித்துக்கொள்ளும்படி அதிலிருந்து பெரிய துர்நாற்றம் வீசும் என்றும், அது அவன் பாவஞ்செய்த நேரமாயிருக்கிறதென்றும், அதனால் அவன் மனதில் அச்சமும் நாணமும் உண்டாகும் என்றும், அந்த அச்ச நாணங்களைச் சுவர்க்கவாசிகளில் பங்குவைக்கிறபக்ஷம் சுவர்க்கபோகம் அவர்களெல்லாருக்கும் வெறுப்பாய்ப் போம் என்றும், இன்னுமொரு பொக்கிஷத்தைத் திறப்பார்கள் என்றும், அது இருளுமில்லாமல் ஒளியுமில்லாமல் ஒழிந்திருக்கும் என்றும், அது அவன் நன்மை செய்யாமல் பழுதாக்கின நேரமாயிருக்கிறதென்றும், அதனால் அவன் மனதில் மிகுந்த துக்கமுண்டாகிப் பெரிய ஒரு இராச்சியத்தையும் பெரிய ஒரு பொக்கிஷத்தையும் அடையக்கூடியவனாயிருந்து அது விருதாவாய்ப் போகும்படி வீணில் விட்டுவிட்ட ஒரு மனிதன்போல் அவன் அதிக கைசேதப்படுவான் என்றும், அவனுடைய எல்லாவயதிலுமுள்ள ஒவ்வொரு மணிநேரத்தையும் இதேவிதம் அவனுக்கு ஒவ்வோர் பொக்கிஷமாக எடுத்துக் காட்டுவார்கள் என்றும் ஹதீஸில் வந்திருக்கிறது. ஆகவே அவன் தன் நப்சுக்குச் சொல்லவேண்டியதென்னவென்றால்:—

ஓ மனமே! இப்படியான இருபத்துநாலுமணி நேரங்கள் என்னும் பொக்கிஷங்கள் உனக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் பத்திரம்; அவைகளில் ஒன்றையேனும் வெறும் பொக்கிஷமாக விட்டு வைக்காதே. பின்னிட்டு அதனால் உண்டாகும் துக்கத்தை நீ சகிக்கமாட்டாய் என்பதே. இன்னும் அல்லாகு தஆலா உன்னை மன்னித்துவிடுவான் என்றும், ஆனால் நல்லோர்களுக்குக் கிடைக்கிற சவாபும் பதவியும் உனக்குக் கிடைக்காமற்போம் என்றும், அதைப்பற்றி நீ கைசேதப்படுகிறவனா யிருப்பாய் என்றும் பாவித்துப்பார் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆதலால் மனிதன் தனது நாவாதி உறுப்புகளை யெல்லாம் நப்சினிடத்தில் ஒப்புக்கொடுத்து ஓ நப்சே! பத்திரம்; நீ நாவைப் பேணிக்கொள். கண்ணைக்காத்துக்கொள். இதுபோல் † சப்தகருவிகளையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள் என்றும், நரகத்துக்கு ஏழு நுழைவாசல்கள் உண்டெனச் சொல்லப்பட்டிருக்கின்றனவே

† சப்தகருவிகள் என்பன ஏழுறுப்புகளாம். அவை: தப்ஸீருஉஸைனியில் சொல்லப்பட்டிருக்கிறபடி கண், காது, நா, வயிறு, வெட்க உறுப்பு, கை, கால் இவைகளேயாம். கியாகல்லுகாத்து.

அந்த நரக வாசல்கள் உன்னுடைய இந்த உறுப்புகள்தாம் என்றும் சொல்லவேண்டும். ஏனெனில் இவை ஒவ்வொன்றினாலும் நரகத்துக்குப் போகக்கூடுமாதலாலென்க. பின்னர் இந்த உறுப்புகளாலாகும் பாவங்களை ஞாபித்து நபுசுக்குப் பயமுறுத்தவேண்டும். அந்தத்தினத்தில் ஓதக்கூடிய அவுராதையும் செய்யக்கூடிய இபாதத்தையும் ஞாபகத்தில் கொண்டுவந்து நபுசுக்கு அதில் விருப்பூட்டவேண்டும். அதில் உறுதியான நாட்டம் வைத்து "ஓ நபுசே! நீ இதைச் செய்ய உடன்படு. இல்லையாயின் உன்னை நான் வேதனைப்படுத்துவேன்" என்று நபுசுக்குப் பயங்காட்டவேண்டும். ஏனெனில் நபுசானது மீறுங்குணத்தை யுடையதா யிருந்தபோதிலும் அது நற்போதனையை ஏற்பதாயு மிருக்கிறது. நற்பழக்கம் அதில் நற்குணத்தை யுண்டாக்கும். இவையெல்லாம் அமலுக்கு முன்னதாகப் பார்க்க வேண்டிய கணக்காம். உங்கள் நபுசுகளில் இருப்பதைத் திடனாக அல்லாகுதஆலாஅறிகிறானென்றுணர்ந்து நீங்கள் அவனுக்குப்பயந்துகொண்டிருங்கள் என்று அல்லாகு தஆலா அருளிச்செய்திருப்பது இதற்கு அத்தாட்சியாகும். இன்னும்ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், "எவன் தன்னிடத்தில் கணக்குப் பார்த்துத் தனது மவுத்துக்குப்பின் உபயோகப்படத்தக்கதைச் செய்கிறானோ அவன் அதிக புத்திமான்" என்றும், "உனக்கு நேரிடுகிற ஒவ்வொரு காரியத்திலும் நீ உற்றுணர்ந்து அது மார்க்கமாயிருந்தால் செய் என்றும், மார்க்கமல்லாததாயிருந்தால் அதைவிட்டுந்தூரமாகு" என்றும் அருளிச்செய்திருக்கிறார்கள். ஆதலால் தினம்தினம் காலையில் நபுசுக்கு இவ்வித ஷரத்துகளை இடுவது அவசியமாம். ஆனால் ஒருவன் சன்மார்க்கநிலையில் சரிவர நிற்கிறவனாயிருந்தால் அப்போதும் அவன் தினம் ஏதேனுமோர் காரியத்தைவிட் டொழிந்திருக்கமாட்டான். ஆதலால் அக்காரியத்தில் அவன் தன் நபுசுக்கு ஷரத்திடுவது அவசியமேயாம்.

## இரண்டாவது தானம்—முராகபா.

முராகபா என்பதற்குப் பொருள் ஒன்றைக் கண்ணோட்டமாகப் பார்த்து வருவதாம். வர்த்தகவேலை பார்க்கும் கூட்டாளியினிடம் ஷரத்தைப்பேசி முதலைக்கொடுத்து அதன்பிறகு அவனை மறந்துபோகாமல் எப்படி அவன்மேல் கண்ணோட்டமா யிருக்கிறார்களோ அப்படியே நீ உன் நபுசையும் நிமிஷந்தோறும் கண்ணோட்டமாகப் பார்த்துவரவேண்டும். அப்படிப் பார்க்காமல் மறந்திருப்பாயாகில் பின்பு அது சோம்பலால் அல்லது சுகம் பாராட்டலால்

தன் சுபாவகுணத்தில் வந்துவிடும். இனி முராகபாவுக்கு அஸல் ஆகிய மூலகாரணம் யாதெனில், மனிதன் தான் செய்கிற செயலையும் எண்ணுகிற எண்ணத்தையும் அல்லாகு தஆலா அறிகின்றான் என்றும், ஜனங்கள் இவனுடைய வெளியரங்கத்தைப் பார்க்கிறார்கள் என்றும், அல்லாகு தஆலா இவனது வெளியரங்கத்தையும் அந்தரங்கத்தையும் பார்க்கிறான் என்றும் அறிவதேயாம். இவ்விதம் ஒருவன் அறிந்தானாகில் இன்னுமிந்த அறிவு அவன் மனதில் மேலிடுமாகில் அவனுடைய வெளியரங்கமும் அந்தரங்கமும் அதபிலும் ஒழுக்கத்திலும் ஆய்விடும். ஏனெனில், இவ்விதம் அல்லாகு தஆலா அறிகிறதாக ஈமான்கொண்டிராதபக்ஷம் அவன் காபிராய்ப் போவதினாலும் ஈமான்கொண்டிருந்தால் அதற்கு விரோதமாக நடப்பது பெரிய துணிகரமாயிருப்பதினாலுமென்க. திடனாக அல்லாகு தஆலா பார்க்கிறான் என்பதை அவன் அறியவில்லையோ என்று அவன் அருளிச்செய்த ஆயத்தில் உன்னை அவன் பார்க்கிறானென்பதை நீ அறியவில்லையோ? என்ற பொருள் பொருந்தியிருக்கிறது. இன்னும் ஒரு ஸஹாபியானவர் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் வந்து "நான் அதிக பாவங்களை யுடையவனாயிருக்கிறேன்" என்றும், "எனக்குத் தவ்பா உண்டோ? இல்லையோ?" என்றும் கேட்க, நாயகமவர்கள் "உண்டு" என்றார்கள். பின்பு அவர் "என்னால் பாவம் நிகழும்போது அல்லாகுதஆலா பார்த்துக்கொண்டிருந்தானா?" என்று கேட்க, நாயகமவர்கள் "ஆம், அவன் பார்த்துக்கொண்டிருந்தான்" என்றுரைத்தார்கள். இதைக் கேட்ட அந்த ஸஹாபியானவர் "ஆ" என்று அலறி ஓர் சப்தமிட்டு உயிரைவிட்டார். இன்னும் "நீ அல்லாகு தஆலாவைப் பார்க்காமற்போனாலும் அவன் உன்னைப் பார்க்கின்றானாதலால் நீ அவனைப்பார்க்கிறதாகப் பாவித்தே அவனை வணங்கு" என்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். திடனாக அல்லாகு தஆலா உங்கள்மீது காவலனாயிருக்கிறான் என்று அல்லாகு தஆலா திருவுளமாயிருப்பதுபோல் அவன் எல்லா நிலைமைகளிலும் உன்மீது காவலாயிருக்கிறான் என்று நீ எண்ணுவதுகொண்டே யொழிய மற்றப்படி உன் காரியம் நேர்பட்டு வராது. மேலும் நீ எப்போதும் அவனை ஷுஹூது செய்பவனுயும் அவனைப் பார்ப்பவனுயிருப்பதே மிகப் பூரணத்தன்மையாம். மஷாயிகுகளில் ஒருவருக்கு ஒரு முரீது இருந்தார். மற்ற முரீதுகளைவிட அந்த முரீதை அவர் அதிக பக்ஷமாகப் பார்த்துவந்தார். அதைப்பற்றி மற்ற முரீதுகளுக்கு ரோஷமாயிருந்தது. இதையறி

ந்த அந்த ஷைகானவர் ஒருநாள் ஒவ்வொரு முரீதிடத்திலும் ஒவ்வொரு கோழியைக் கொடுத்து "எவரும் பார்த்துக்கொண்டிராத ஓர் இடத்தில் இதை அறுத்துக்கொண்டு வாருங்கள்" என்றனுப்பினார். ஒவ்வொருவரும் யாருமில்லாமல் ஒழிந்திருக்கிற ஓர் இடத்தில் போய் அறுத்துக்கொண்டு வந்தார்கள். அந்த முரீது கோழியை உயிரோடே கொண்டுவந்தார். அவரை நோக்கி ஷைகானவர் "நீ ஏன் அறுக்கவில்லை?" என்று கேட்டார். அதற்கவர் "எவரும் பார்த்துக்கொண்டிராதபடி ஓரிடத்தையும் நான் காணவில்லை. எல்லாவிடங்களையும் அல்லாகு தஆலா பார்த்துக்கொண் டிருக்கிறான்" என்று சொன்னார். இதனால் ஷைகானவர் அந்த முரீதுடைய தரஜாவை மற்ற முரீதுகளுக்கு அறிவித்து "இவர் எப்போதும் ஷுஹூதில் இருக்கிறவர்" என்றும், "மற்ற எவரையும் எதையும் பார்ப்பவர் அல்ல" என்றும் காண்பித்தார். இன்னும் சுலைகா நாயகி யூசுபு அலைகிஸ்ஸலாமவர்களைத் தன்னுடன் இணங்கும்படி அழைத்த காலத்தில் முதலில் எழுந்து தனக்குத் தெய்வமாக வைத்துக்கொண்டிருந்த விக்கிரகத்தின் முகத்தை மூடினார். அப்போது யூசுபு அலைகிஸ்ஸலாமவர்கள் "நீ ஒரு கல்லுக்கு வெட்கப்படும்போது ஏழுவானங்களையும் பூமியையும் படைத்த ஆண்டவன் பார்த்துக்கொண்டிருக்க நான் அவனுக்கு வெட்கப்படமாட்டேனோ? என்றார்கள். ஒருவர் ஜுனைது றஹிமஹுல்லா அவர்களிடம் வந்து "என் கண்ணைக்காப்பாற்ற என்னால் முடிகிறதில்லை" என்றும், "எதனால் அதைக் காக்கலாம்?" என்றும் கேட்டார். அதற்கவர்கள் "நீ ஒரு சிருஷ்டியைப் பார்க்கும் பார்வையைவிட அல்லாகு தஆலா உன்னைப்பார்க்கும் பார்வை மிக மீசுரம் என்று நீ அறிவதினால் காக்கலாம்" என மொழிந்தார்கள். இன்னும் ஒருபாவத்தைச்செய்ய நாட்டங்கொண்டு பிறகு எனது மகத்துவத்தை ஞாபகம்செய்து நாணமடைந்து அந்தப் பாவத்தைவிட்டு விலகின மனிதர்கள் யாரோ அவர்களுக்கே அதன் என்னும் சுவர்க்கம் என்று அல்லாகு தஆலா திருவுளமானதாக ஹதீசில் வந்திருக்கிறது. இன்னும் அப்துல்லாகிபுனு தீனார் றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது: "உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் மக்கத்துக்குப் போகையில் வழியில் நானும் அவர்களோடிருந்தேன். ஓரிடத்தில் இறங்கியிருந்தோம். ஆடுமேய்க்கும் ஒரு அடிமையானவன் மலையிலிருந்து ஆடுகளைக் கீழே ஓட்டிக்கொண்டுவந்தான். உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் அவனைக் கூப்பிட்டு "எனக்கு ஓர் ஆட்டைக்கிரயத்துக்குக்கொடு" என்றுகேட்டார்கள். அதற்கவன் "ஆடுகள் எனக்குச்

சொந்தமல்ல. நான் ஓர் எஜமானனுக்கு அடிமையாயிருக்கிறேன்"
என்றான். அப்போதவர்கள் "ஒரு ஆட்டை ஓநாய் கொண்டுபோய்
விட்டதென்று நீ உன் எஜமானனுக்குச் சொல். அது அவனுக்குத்
தெரியாது" என்றார்கள். அதற்கவன் "என் எஜமானனுக்குத் தெரி
யாமற்போனாலும் கடைசியாக அல்லாகு தஆலாவுக்குத் தெரியுமே"
என்றான். இதைக்கேட்ட உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் அழு
துவிட்டார்கள். பின்பு அந்த எஜமானனை வரவழைத்து அவனிடம்
அந்த அடிமையைக் கிரயத்து வாங்கி அவனை உரிமையாக்கினார்கள்.
பின்பு அவனை நோக்கி "நீ சொன்ன இந்தவார்த்தையானது இவ்வுல
கத்தில் உன்னை உரிமைசெய்தது. இதுபோல் அவ்வுலகத்திலும் உரி
மையாக்கும் என்றுசொன்னார்கள்" என்பதே.

பசல்: அறிந்துகோள்:—முராகபாவானது இரண்டு தரஜாவின்
பேரிலிருக்கிறது. ஒன்று: சித்தீகுகளுடைய முராகபாவாம். இவர்களு
டைய மனமானது அல்லாகு தஆலாஉடைய மகிமையில் ஆழ்ந்து
அவனது அச்சத்தில் முறிவடைந்துபோயிருக்கும். அல்லாகு தஆலா
வையன்றி வேறொன்றை ஏறெடுத்துப்பார்க்க அந்த மனதில் இடமி
ராது. ஆனால் இந்த முராகபா அரிதேயாம். ஏனெனில் மனம் நேர்
பட்டுநின்றால் உறுப்புகள் தாமாகவே அதைத் தொடர்ந்து சரியாக
நிற்கும். அந்தநிலைமையில் அது முபாஹானவைகளையே விட்டுவிடுவதா
யிருக்கப் பாவத்தில் எப்படி பராக்காகும்? பாவத்தைவிட்டும் அவன்
தன் உறுப்புகளைக் காப்பதற்கு ஏதும் தந்திர உபாயங்கள் செய்யத்
தேவையாகாது. ஏருல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருவன்
காலையில் விழித்தெழும்பும்போது அவன் நாட்டமெல்லாம் ஒரே நாட்ட
மாயிருக்குமாகில் அவனுடைய துன்யா ஆகிரத்துகளின் நாட்டங்களு
ச்கு அல்லாகு தஆலா போதும் அதாவது அவனுடைய எல்லாக் காரி
யங்களையும் அல்லாகு தஆலா நடத்துகிறான் என்று திருவுளமாயிரு
ப்பது இந்த முராகபாவாகும். இன்னும் சிலர் இதில் எப்படி மூழ்கிப்
போயிருக்கிறார்களென்றால், அவர்களிடத்தில் நீ பேசினால் அந்தப்
பேச்சு அவர்கள் காதுக்கு எட்டுகிறதில்லை. அவர்கள் கண்திறந்து
பார்த்துக்கொண் டிருந்தபோதிலும் அவர்களுக்கு முன்பாக எவரும்
நடப்பது அவர்களுக்குத் தெரிகிறதில்லை. இன்னும் "வேறு பராக்கில்
லாமல் தம்முடைய ஹாலில் பராக்காயிருக்கிற எவரையாவது உமக்
குத் தெரியுமா?" என்று அப்துல் வாஹிதிபுனுஸைத றஹிமகுல்லா
அவர்களிடத்தில் சிலர் கேட்டதற்கு அவர்கள் "ஆம் எனக்குத் தெரி
யும், அவர் இப்போது வருவார்" என்றுசொன்னார்கள். பின்பு உத்

பத்துல்குலாம் றஹிமகுல்லா அவர்கள் அங்குவந்தார்கள். அவர்களை நோக்கி "நீர் வந்தவழியில் எந்த மனிதனையாவது பார்த்தீரா?" என்று கேட்க "நான் எவரையும் பார்க்கவில்லை" என்று சொன்னார்கள். அவர்கள் வந்தவழியோ கடைத்தெருவி லிருந்தது. ஜகரியாநபியவர்களுடைய மகன் யஹ்யா அலைஹிஸ்ஸலாமவர்கள் (நடந்துகொண்டிருக்கையில்) ஒரு ஸ்திரீயின்மீது சென்றபோது அவளைக் கையால் தள்ளினார்கள். அவள் குப்புறக் கீழேவிழுந்தாள். அப்போது ஜனங்கள் யஹ்யா நபியவர்களை நோக்கி "நீர் ஏன் இப்படிச்செய்தீர்?" என்று கேட்டதற்கு "நான் அவளை ஒரு சுவராக நினைத்தேன்" என்று சொன்னார்கள். இன்னுமொருவர் சொல்லுகிறதாவது:—"அம்பெய்துகொண்டிருந்த சில ஜனங்களின் பக்கமாக நான் செல்லுகையில் அந்த இடத்துக்குச் சற்றுதூரத்தில் ஒருவர் உட்கார்ந்துகொண்டிருந்தார். நான் அவரிடம் நெருங்கிப் பேச்சுக்கொடுத்தேன். அவர் என்னைநோக்கி "அல்லாகு தஆலாவை திக்றுசெய்வது பேசுவதைவிட அதிமேலாயிருக்கிறது" என்றார். "நீர் தனியாயிருக்கிறீரோ" என்றேன். அதற்கவர் "இல்லை, அல்லாகு தஆலாவும் இரண்டு மலக்குகளும் என்னோடிருக்கிறார்கள்" என்றார். பிறகு நான் "இதோ அம்பெய்துகொண்டிருக்கிற ஜனங்களில் ஜெயமடைந்தவர் யார்?" என்றேன். அதற்கவர் "அல்லாகு தஆலா எவர்களுடைய பாவங்களை மன்னித்தானோ அவர்களே ஜெயமடைந்தவர்கள்" என்றார்.—"வழி எந்தப்பக்கத்திலிருக்கிறது?" என்றேன். அவர் வானத்தின் பக்கம் தலையைத் தூக்கிக்காட்டி அங்கிருந்து எழுந்து நடந்துவிட்டார். அப்படிநடக்கும்போது "என் ஆண்டவனே! உன் சிருஷ்டிகளில் பெரும்பாலார் உன் சமூகத்தைவிட்டு விலக்குகிறவர்களா யிருக்கிறார்கள்" என்று சொன்னார் என்பதே. ஷிப்லி றஹிமஹுல்லா அவர்கள் ஒருமுறை நூரி றஹிமஹுல்லாவினிடம் போனபோது அவர்கள் தங்கள் உடம்பில் ஒருஉரோமமும் அசையாதவிதமாக மிகவும் அமைதியோடு முராகபாவில் உட்கார்ந்திருந்தார்கள். இதைக்கண்ட ஷிப்லி றஹிமகுல்லா அவர்கள் நூரி றஹிமஹுல்லாவை நோக்கி "நீர் இவ்வளவு அழகான முராகபாவை யாரிடத்தில் படித்தீர்?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "இதை நான் ஒரு பூனையினிடத்தில் படித்தேன். அந்தப் பூனையானது எலியை எதிர்பார்த்து ஒரு வளையினிடத்தில் காத்திருக்கக் கண்டேன். நீர் என்னிடத்தில் கண்ட இந்த அமைதியைக்காண அந்தப் பூனையின் அமைதி அதிகமாயிருந்தது" என்று சொன்னார்கள். இபுனுல் கபீபு றஹிமகுல்லா அவர்கள் சொல்

லுகிறதாவது:—"ரூர் என்ற ஊரில் ஒருவயோதிபரும் வாலிபரும் இருவரும் எப்போதும் முராகபாவில் உட்கார்ந்திருக்கிறார்கள்" என்று சிலர் எனக்குக் குறிப்பாக அறிவித்தார்கள். நான் அங்கு போனேன். கிப்லாவை முன்னோக்கி இரண்டுபேர் உட்கார்ந்திருக்கக் கண்டு அவர்கள்மீது மூன்றுமுறை சலாம் சொன்னேன். அவர்கள் ஜவாபு கொடுக்கவில்லை. அப்போது நான் உங்களுக்கு அல்லாவின் ஆணையிடுகிறேன். நீங்கள் என் சலாமுக்கு ஜவாபு கொடுங்கள்" என்றேன். வாலிபர் தம் தலையை உயர்த்தி, "ஓ கபீபுடைய குமாரரே! துன்யா கொஞ்சமானது. அந்தக்கொஞ்சத்திலும் இன்னும் கொஞ்சமேயொழிய மீதியில்லை. ஆதலால் இந்தக் கொஞ்சத்தில்நின்றும் அதிக பங்கை எடுத்துக்கொள்வீராக. ஓ கபீபுடைய குமாரரே! நீர் பெரிய வேலையற்ற வீணராயிருக்கிறீர். ஆதலால் எங்கள்மீது சலாம் சொல்வதில் பராக்கானீர்" என்று சொல்லிவிட்டுத் தலையைக் குனித்துக்கொண்டார். அப்போது பசியும் தாகமும் உள்ளவனாயிருந்த எனக்கு அந்தப்பசியும் தாகமும் நினைவில்லாமற்போய்விட்டது. அவர்கள் என் முழுமனதையும் இழுத்துக்கொண்டார்கள். நான் எழுந்து அவர்களுடன் லுகரையும் அசரையும் தொழுதேன். அவர்களிடம் "எனக்கு ஏதாவது நஸீஹத்து செய்யுங்கள்" என்றுகேட்டேன். அப்போதவர் "ஓ கபீபுடைய குமாரரே! நாங்கள் துன்பமுற்றவர்களாயிருக்கிறோம். நசீகத்து செய்ய எங்களுக்கு நாவெழாது" என்றார். பின்பு நான் மூன்றுநாள் அவ்விடம் நிலைத்திருந்தேன். அந்த மூன்று நாளும் நாங்கள் ஒன்றைப் புசிக்கவுமில்லை தூங்கவுமில்லை. பின்பு எனக்கு ஏதாவது நசீஹத்து செய்யும்படி இவர்களுக்கு ஆணையிடவேண்டுமென்று என் மனதில் எண்ணினேன். அப்போதந்த வாலிபர் தம் தலையைத் தூக்கி "ஓ கபீபுடைய குமாரரே! நீர் எவரைப்பார்ப்பதினால் அல்லாகு தஆலாவின் ஞாபகமும் அவனின் அச்சமும் உம்முடைய மனதில் உண்டாகுமோ எவர் தம் சொல்லாகிய நாவால் நசீஹத்து செய்யாமல் செயலாகிய நாவால் நஸீஹத்து செய்கிறாரோ அப்படிப்பட்ட ஒருவருடைய சகவாசத்தைத் தேடிக்கொள்" என்றுரைத்தார்" என்பதே. இதுதான் சித்திக்குகளுடைய முராகபாவின் தரஜாவும் ஹா"லுமாம். அதாவது இவர்களுடைய முழுமனதும் ஹக்கு தஆலாவில் மூழ்கிப்போயிருக்குமென்பதாம்.

இரண்டாம் தரஜாவான முராகபா யாதெனில் அஸ்ஹாபுல் யமீன் என்னும் வலங்கைக்கார வணக்கவாளிகளின் முராகபாவாம். இவர்கள் அல்லாகு தஆலா தங்களைப் பார்க்கிறானென்றுணர்ந்து அத

ற்காக அவனுக்கு வெட்கப்படுவார்கள். ஆயினும் அவனது மகத்துவ மாட்சிமைகளில் ழனமாழாதவர்களும் அதில் மூழ்காதவர்களுமாயிருப்பார்கள். தங்களைப்பற்றியும் உலக விஷயங்களைப்பற்றியும் இவர்களுக்கு உணர்விருக்கும். ஒருவன் தனிமையில் ஏதோ ஓர் செயலைச் செய்துகொண்டிருக்கும்போதோ அல்லது அவன் ஆடைகளைந்து அம்மணமாயிருக்கும்போதோ அங்கு ஒரு சிறுவன் வந்துவிட்டால் அச்சிறுவனுக்கு அவன் வெட்கப்படுவானென்றாலும் உணர்வு மாறாமல் தன் மானத்தை மறைத்துக்கொள்வான். இது இந்த வகுப்பாருக்கு உபமானமாம். அங்குத் திடும்பிரவேசமாக ஒரு பாதுஷா வந்துவிட்டாலோ அவனின் அச்சத்தினால் மெய்ம்மறந்து மனந்தடுமாறி உணர்விழந்தவனாய்ப் போவான். இது அந்த முந்தின வகுப்பாருக்கு உபமானமாம். ஒருவன் இந்த இரண்டாம் வகுப்பி லிருப்பானாகில் அவன் தன் அஹ்வால்களையும் எண்ணங்களையும் செயல்களையும் எல்லாவற்றையுமே முராகபா செய்யவேண்டும். (கவனித்து வரவேண்டும்). அவன் செய்ய நாடுகிற ஒவ்வொரு காரியத்திலும் அவனுக்கு இரண்டு நோட்டமிருக்கவேண்டும்.

முதலாவது நோட்டம்—அந்தக் காரியத்தைச் செய்வதற்குமுன் இடவேண்டிய நோட்டமாம். அதினும் அதைச் செய்யும் எண்ணம் மனதில் தோன்றிய ஆரம்பத்திலேயே நோட்டமிடுவான். எப்போதும் மனதைக் கவனித்து அதில் என்ன எண்ணம் வருகிறதென்று பார்த்துக்கொண்டிருப்பான். ஒரு எண்ணம் வந்தால் அதை நோட்டமிட்டு அது அல்லாவுக்காயிருந்தால் அதன்படி செய்வான். நபுசின் இச்சைக்காயிருந்தால் · அதைவிட்டு விலகிநிற்பான். அல்லாவுக்கு வெட்கம் வைப்பான். இந்த எண்ணம் தன்னில் ஏன் வந்தது என்று தன்னை நிந்திப்பான். அதனால் கடைசியில் உண்டாகிற பழிப்பான பங்கத்தைத் தன்னில் பாவித்துப் பார்ப்பான். எல்லா எண்ணங்களின் ஆரம்பத்தில் இந்த முராகபா (ஹதீசின்படி) பர்லாயிருக்கிறது. அந்த ஹதீசு யாதெனில், அடியான் தன் உணர்வுடன் செய்கிற ஒவ்வொரு செயலையும் செயலொழிந்து சும்மாயிருக்கிற ஒவ்வொரு அமைதியையும் குறித்து (நாளை கியாமத்தில்) ஏன், எப்படி, யாருக்கு என்ற மூன்று கேள்விகளின் தப்தர்கள் அவன் முன்பாக வைக்கப்படும். ஏன் என்பதின் பொருளாவது:—அவனை நோக்கி "நீ இதை ஏன்செய்தாய்? (உன் எஜமானாகிய) அல்லாகு தஆலாவுக்காக உன் மீது விதியாயிருந்ததினாலா? அல்லது உன் நபுசின் இச்சைக்கும் ஷைத்தானுக்கும் நீ இணங்கினதினாலா?" என்றுகேட்பார்கள். அவன்

"அல்லாகுதஆலாவின் விதிக்காகச் செய்திருந்து இத்தக்கேள்விக்குத் தப்பித்துக்கொள்ளுவானாகில் பின்பு அவனை நோக்கி "நீ இதை எப்படிச் செய்தாய்? விதிக்காகச் செய்யவேண்டிய ஒவ்வொரு அமலுக்கும் ஓர் புறவிதியும் ஒழுக்கமும் உணர்ச்சியு மிருக்கிறதே. நீ செய்த இந்த அமல் அந்த விதிப்படிக்கும் ஒழுக்கத்தின்படிக்கும் உணர்ச்சியின் படிக்கு மிருந்ததா? அல்லது உணர்ச்சியின்றி மூடத்தனத்தால் சுளுவாக எடுத்துக்கொண்டாயா?" என்றுகேட்பார்கள். அவன் அவ்விதிப்படி செய்திருந்து இக்கேள்விக்குத் தப்புவானாகில் பின்பு அவனை நோக்கி "நீ இதை யாருக்காகச் செய்தாய்? வேறு நோக்கங் கலக்காதபடி அல்லாகுதஆலாவுக்காகவே செய்யவேண்டிய கடமை உனக்கிருந்தது. நீ இதைஅல்லாவுக்காகச்செய்தாயா? அப்படிச்செய்திருந்தால் நற்கூலியைப் பெற்றுக்கொள்வாய். அல்லது எவருக்கும் காட்டுவதற்காகச் செய்தாயா? அப்படிச் செய்திருந்தால் அவரிடத்தில்போய்க் கூலியை வாங்கிக்கொள். அல்லது துன்யாவில் எதையாவது அடைவதற்காகச் செய்தாயா? அப்படியிருந்தால் (துன்யா அழிந்து) உன் கூலி ஒழிந்தது. வேறு யாருக்காவது செய்திருப்பாயாகில் அல்லாகுதஆலா உடைய கோபத்திற்கும் வேதனைக்கும் உள்ளானாய். ஏனெனில் கலப்பற்ற மார்க்கமே அல்லாவுக்குள்ளது என்றும், அல்லாவை யன்றி கூப்பிடுகிறவர்கள் உங்களைப்போன்ற அடிமைகளே என்றும் உனக்குச் சொல்லப்பட்டிருந்தது" என்றுசொல்லுவார்கள் என்பதே. இதை அறிந்தவன் எவனோ அவன் புத்திமானாயிருக்கிறபக்ஷம் தன் மனதைக் கவனித்தல் என்னும் இந்த முராகபாவை மறக்கமாட்டான். முதல் எண்ணத்தைக் கவனிப்பது இதற்கு மூலமாம். ஏனெனில் அப்படிக் கவனித்து அதைத் தள்ளிவிடாதபக்ஷத்தில் அதனால் விருப்பம் பிறக்கும். பின்பு அந்த விருப்பம் திடப்பட்டு அதைச்செய்ய நாட்டமுண்டாகி உறுப்புகளின்மீது செயல் நிகழும். நீ ஒரு எண்ணம் எண்ணும்போது அல்லாவுக்குப் பயந்துகொள்" என்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். அதாவது ஒரு காரியத்தைச் செய்ய உன்மனதில் நாட்டம் வரும்போது இது அல்லாவுக்காக உள்ளதா? அல்லது நபுசின் இச்சைக்காக உள்ளதா? என்பதைக் கவனித்து நபுசின் இச்சைக்காக உள்ளதாயின் அல்லாவுக்குப் பயந்து அதை விட்டுவிடு என்பதே.

அறிந்துகோள்:—எண்ணங்களில் அல்லாவின் பக்கத்தால் உள்ளது எது? நபுசுடைய இச்சையின் பக்கத்தால் உள்ளது எது?

என்று அறிவது கஷ்டமும் அருமையுமான ஓர் இல்மாயிருக்கிறது.
இதை யறியும் சக்தியில்லாதவன் எவனோ அவன் எப்போதும் பய
பக்தியுள்ள ஓர் ஆலிமுடைய சகவாசத்தி லிருக்கவேண்டும். ஏனெ
னில், அந்த ஆலிமுடைய பாயபக்திகளென்னும் ஒளி அவனில் வீசு
வதற்கேயாமென்க. துன்யாவில் பேராவல் கொண்டிருக்கிற ஆலிம்
களுடைய சகவாசத்தைவிட்டும் நீங்கவேண்டும். ஏனெனில் ஷை
தான் தன் வேலையைப் பார்க்கும்படி இந்த ஆலிம்களுக்கு நியாபத்து
என்னும் உத்தியோகத்தைக் கொடுத்திருக்கிறதினாலென்க. இன்னும்
தாவூது அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு அல்லாகுதஆலா வஹியினால், "ஓ
தாவூதே! எந்த ஆலிம் துன்யாவுடைய ஆசையில் லாகிரிகொண்
டிருக்கிறானோ அந்த ஆலிமிடத்தில் நீர் எதையும் வினாவவேண்டாம்.
அவன் உன்னை என் ஆசையிலிருந்து அப்புறம் தள்ளிவிடுவான். இப்
படிப்பட்டவர்கள் என் அடியார்கள்மீது வழிப்பறி கள்ளராயிருக்கி
றார்கள் என்று அறிவித்தான். இன்னும் "ஷுபுஹாத்து என்னும் சந்
தேகப்பொருளில் கூர்மையாய் நோட்டமிடுகிறவனும் ஆசைமிகை
த்த சமயத்தில் நிறைந்த புத்தியுள்ளவனும் இருப்பவன் எவனோ
அவனை அல்லாகு தஆலா நேசிக்கிறான்" என்று ரசூல் ஸல்லல்லாகு
அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். ஏனெனில் காரிய
உண்மையைக்கூரிய நோட்டத்தினால் பரிக்ஷித்தறிவதும் அதன்பிறகு
நிறைந்த புத்தியினால் இச்சையை வெல்லுவதுமான இந்த இரண்டில்
தான் மனிதனுக்குப் பூரணத்தன்மை யிருக்கிறது. இவ்விரண்டும்
ஒன்றோடொன்று தொடர்ந்ததா யிருக்கிறது. எவனுக்கு இச்சையை
வெல்லும் புத்தியில்லையோ அவனுக்குச் சந்தேகப் பொருள்களின்
பரிக்ஷித்தறிய கூரிய நோட்டமுமிராது. இதைக்குறித்தே ரசூல் ஸல்
லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் "எவன் பாவஞ்செய்தானோ அவனை
விட்டும் அக்லு நீங்கிவிட்டது" என்றும், "அது ஒருபோதும் மீண்டு
வராது" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். "இன்னும் காரியங்கள்
மூன்று வகைப்படும்" என்றும், "அவற்றுள் பரிஷ்காரமாகச் ச
யெனத் துலங்கும் காரியமொன்று" என்றும், "அதை நீ எடுத்துக்
கொள்" என்றும், "பரிஷ்காரமாகச் சரியல்லவெனத் துலங்கும்
காரியமொன்று" என்றும், "அதை நீ தள்ளிவிடு" என்றும், "ச
என்றாவது சரியல்லவென்றாவது விளங்கிக்கொள்ளக் கஷ்டமாயிருக்
கிற காரியமொன்று" என்றும், "அதை நீ ஆலிமோடு விட்டுவிடு"
என்றும் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டாவது நோட்டம்:—அந்தக் காரியத்தைச் செய்யும்
போது இடவேண்டிய நோட்டமாம். அவனுடைய எல்லாக் காரிய

களும் மூன்று நிலைமைகளை விட்டொழியமாட்டா. அவையாவன:—அவன் செய்யும்காரியம் ஒருவணக்கமாயிருக்கும் அல்லது ஒருபாவமாயிருக்கும் அல்லது வணக்கமும் பாவமுமல்லாத ஒரு முபாஹாயிருக்கும். வணக்கத்தில் முராகபாவாவது:—அதில் வேறு நோக்கமில்லாமல் அதை அல்லாவுக்கே சொந்தமாகச் செய்வான். கல்பை ஹாஸிராக்குவான். பூரண ஒழுக்கத்தையும் நோட்டத்தில் வைப்பான். அவ்வணக்கத்தில் எக்காரியத்தைச் செய்வதில் வரிசை அதிகப்படுமோ அக்காரியத்தை விட்டுவிடமாட்டான். பாவத்தில் முராகபாவாவது:-வெட்கமடைந்து அதைவிட்டும் தவ்பாசெய்து அதை நிவர்த்திக்கும் கபாராவில பரீக்காருவான். முபாஹில் முராகபாவாவது:—அதில் அதபைப் பேணுவான். அல்லாகுதஆலா அளித்த நிகுமத்தில் அவனின் நன்றியை நினைத்துப்பார்ப்பான். எப்போதும் அவன் சமுகத்திலிருப்பதாக எண்ணிக்கொள்ளுவான். உதாரணமாக:—உட்கார்ந்தால் அதபாக உட்காருவான். படுத்தால் வலதுகையின்மீது கிப்லாவை நோக்கிப் படுப்பான். இன்னும் உதாரணமாக:—யாதொரு உணவை உண்டால் ஆராய்ந்து நோட்டமிடுவது அமல்களெல்லாவற்றிலும் அதிக வரிசையுள்ளதாதலால் உண்ணும்போது அவ்வாறு நோட்டமிடாதபடி மனதை வெறுமையாக வைத்துக்கொள்ளமாட்டான். ஏனெனில் ஒவ்வொரு உணவின் உற்பத்தி, உருவம், நிறம், வாசனை, சுவை அதன் ரூபம் முதலியவைகளிலும் அந்த உணவை உண்க மனிதனுக்கு உதவியாயிருக்கிற விரல், வாய், பல், தொண்டை, இரைக்குடல், ஈரல், நீர்ப்பை முதலிய அவயவங்களிலும் அந்த உணவை ஏற்றுக்கொள்வதற்கு அமைத்திருக்கும் சக்தியிலும் அது செமிக்குமட்டும் அதைக் காத்துக்கொள்ளுவதற்கு அமைத்திருக்கும் சக்தியிலும் சக்கையை வெளியே தள்ளுவதற்கு அமைத்திருக்கும் சக்தியிலும் இப்படி நோட்டமிடுவதற்கு சிருஷ்டியின் அநேக அதிசயங்களிருக்கின்றன. இந்த எல்லா அதிசயங்களும் அல்லாகுதஆலாஉடைய சிருஷ்டிகளேயாம். இப்படியான பொருள்களில் ஆராய்ந்து நோட்டமிடுவது பெரியதோர் இபாதத்தாயிருக்கிறது. இது உலமாக்களுடைய தாஜாவாம். இன்னும் சிலர் இதில் எப்படி இருப்பார்களென்றால், சிருஷ்டியின் இந்த அதிசயங்களை அவர்கள் பார்க்கும்போது சிருஷ்டிகர்த்தாவினது மகிமையை ஏற்றிப்போற்றி அவனது பெருமையிலும் பேரழகிலும் பூரணத்தன்மையிலும் நோட்டமிடுவதில் ஆழ்ந்துபோவார்கள். இது சித்தீக்குகளான முவஹ்ஹிதுகளின் தாஜாவாயிருக்கிறது. இன்னும் சிலர் தங்கள் இச்சைக்குவிரோத

மாகவும் அவசியத்தின் பொருட்டும் உணவைக் கோபக்கண்ணா லும் வெறுப்பாகவும் பார்ப்பார்கள். அன்றியும் நமக்கு இந்த உண வின் தேவை ஒழிந்துபோக வேண்டுமே என்று அது விஷயமாக நோட்டமிடுவதில் அகத்தியம் பராக்காவார்கள். இது ஜாஹிதுகளின் தராஜாவாயிருக்கிறது. இன்னும் சிலர் அதை ஆசைக்கண்ணால் பார்ப் பார்கள். அவர்களுடைய நோக்கமெல்லாம் இதை நன்றாகவும் ருசி யாகவும் அதிகமாகவும் தின்பதற்கு எப்படி சமைக்கலாம் என்கிற நோக்கமாகவேயிருக்கும். ஆதலால் சமைத்த உணவையும் சமைத்த வேலைக்காரனையும் மற்றும் தின்பண்டங்களையும் பழவர்க்கங்களையும் குற்றங் கூறுவார்கள். இவையெல்லாம் அல்லாகு தஆலாஉடைய சிருஷ்டி என்பதையும் சிருஷ்டியில் குற்றங்கூறுவது சிருஷ்டிகர்த் தாவில் குற்றங்கூறுவதாமென்பதையும் அவர்கள் நினைத்துப்பார்க்க மாட்டார்கள். இது மறதியாளருடைய தராஜாவாயிருக்கிறது. எல்லா முபாஹுகளிலும் இதேவிதமாக தராஜாக்கள் ஏற்படும்.

### மூன்றாவது தானம்-அமலுக்குப்பின் செய்யவேண்டிய முஹாஸபாவாம்.

அதாவது:—தினக்கடைசியில் நித்திரை செய்யப்போகும் சம யத்தில் அந்தத்தினம் முழுவதிலும் அவன் செய்த அமல்களைப் பற்றித் தன் நப்ஸினிடத்தில் கணக்குப் பார்ப்பதும் முதலில் நின் றும் லாபநஷ்டங்களைப் பிரிப்பதுமாம். முதல் என்பது பர்ளுகளும் லாபம் என்பது நபிலுகளும் நஷ்டமென்பது பாவங்களுமாம். எப் படி வர்த்தகக் கூட்டாளியினால் வஞ்சகம் நிகழாதபடி அவன்மேல் கண்டிப்பாயிருக்கிறார்களோ அப்படியே தனது நப்ஸின்மீதும் அதிக கண்டிப்பா யிருக்கவேண்டும். ஏனெனில் நப்ஸானது பெரிய கள்ளத் தனமும் வஞ்சகமும் தந்திரமும் உள்ளதாயிருக்கிறது. அது தனது நோக்கத்துக்காகச் செய்யும் செயலை இலாபச்செயலென்று நீ எண் ணும்படி உனக்கு அதை ஒரு வணக்கமாகக் காட்டுகிறது. அது உன க்கு நஷ்டச்செயலா யிருக்கக்கூடும். ஆகவே எல்லா முபாஹான செய்கையிலும் "இதை ஏன் செய்தாய்? எதற்காகச் செய்தாய்?" என்று கணக்கு கேட்கவேண்டும். பின்பு அமலில் ஏதாவது குற்றஞ் செய்திருக்கக்கண்டால் அந்த அமலை நப்ஸின்மேல் பாக்கியாக வை த்து அதனிடத்தில் அபராதம் கேட்கவேண்டும். பெரியோர்களில் நின்றும் இபுனுஸ்ஸம்மா என்ற ஒருவர் தம்முடைய வயதைக்கணக் கிட்டுப் பார்த்தார். அறுபது வருஷம் என்று தெரியவந்தது. பின்பு நாட்களைக் கணக்கிட்டுப் பார்க்க இருபத்தோராயிரத்து ஐந்நூறு

நாட்களாகின்றனவென்றறிந்து அப்போதவர் சப்தமிட்டு "ஆ! கை சேதமே! தினம் ஒரு பாவத்துக்குமேல் இல்லாமற்போனாலும் இருபத்தோராயிரத்து ஐந்நூறு பாவங்கள் சேர்ந்துவிட்டனவே. என்னால் ஆயிரம் பாவங்கள் நடந்த ஓர் நாளுமிருக்குமே" என்றுரைத்து ஆ என்று அலறிச் சப்தமிட்டுக் கீழேவிழுந்தார். விழுந்தவரை அங்கிருந்தவர்கள் நெருங்கிப்பார்க்க அவர் மவுத்தாய்ப்போயிருந்தார். ஆனால் மனிதனானவன் தன்னிடத்தில் கணக்குக் கேட்பதைவிட்டும் ஒழிந்தவனாயிருக்கிறான். அவன் செய்கிற ஒவ்வொருபாவத்தின்போதும் ஒவ்வோர் கல்லை ஒருவீட்டில் போட்டுக்கொண்டு வருவானாகில் சொற்பகாலத்தில் அந்த வீடு கல்லால் நிறைந்துவிடும். கிராமன்காதிபீன் என்ற மலக்குகள் அந்தப்பாவங்களை எழுதுவதற்கு அவனிடம் கூலிவாங்குகிறபக்ஷம் அவன் சொத்தெல்லாம் அதில் செலவாய்ப் போம். ஆயினும் அவன் மறதியுடன் சிலமுறை சுபுஹானல்லாஹ் என்று சொல்ல நாடுவானாகில் அதற்காகத் தஸ்பீஹ் மணியைக் கையில் வைத்துக்கொண்டு எண்ணுவான். நூறுதரம் ஓதினேன் என்று சொல்லுவான். நாள் முழுதும் பேசுகிற வீண்பேச்சுகள் ஆயிரத்துக்குமேல் ஏறிவிட்டன வென்பதை அவன் அறிவதற்காகக் கையில் ஒரு மணியையும் வைத்திருப்பதில்லை. பின்பு நன்மைகளின் தாசு கனக்குமென்று ஆதரவு வைப்பானாகில் இது அறிவின்மையேயாம். இதனாலேதான் "உங்கள் அமல்களை உங்களுக்கு நிறுத்துக் காட்டுமுன் நீங்கள் அதை நிறுத்துப்பாருங்கள்" என்று உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னுமிவர்கள் இரவின் ஆரம்பத்தில் தங்கள் காலின்மீது சவுக்காலடித்துக்கொள்ளுகிறவர்களாயும் "நீ இன்று என்ன செய்தாய்?" என்று சொல்லுகிறவர்களாயுமிருந்தார்கள். ஆயிஷா றலியல்லாகு அன்ஹா சொல்லுகிறதாவது:—"என் தந்தை அபூபகர் சித்தீகுறலியல்லாகு அன்கு அவர்கள் ஒபாத்தாகும் சமயத்தில் "உமரைவிட ஒருவரும் எனக்கு அதிக உவப்பானவர்களில்லை" என்று சொன்னார்கள். பின்பு என்னை நோக்கி "நான் இப்போது என்ன சொன்னேன்?" என்று கேட்டார்கள். அதற்கு நான் "தங்களுக்கு உமரைவிட அதிக உவப்பானவர் எவருமில்லை என்று சொன்னீர்கள்" என்றேன். அப்போதவர்கள் "அப்படியல்ல உமரைவிட எனக்கு அதிக சிறந்தவர் எவருமில்லை" என்றார்கள் என்பதே. இவ்வளவுக்குக் கணக்குப் பார்த்தார்கள். முன் சொன்னது சரியாயிராமையினால் அதற்குச் சரிசொல்லி ஒப்படைத்தார்கள். இபுனு சலாம் அவர்கள் விறகு சுமையைத் தோ

யில் தூங்கிக்கொண்டதைப் பார்த்த ஜனங்கள் இதை அடிமைகள் செய்வார்கள்" என்று சொன்னதற்கு "நான் என் நப்ஸைச் சோதித்து இது விஷயத்தில் அது எப்படி இருக்கிறது என்று பரீக்ஷிக்கிறவனாயிருக்கிறேன்" என்றார்கள். இன்னும் உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் ஒரு தோட்டத்தின் மதில்மறைவில் தங்கள் நப்ஸுடன் வசனித்து "ஓ நப்ஸே! உன்னை அமீருல் மூமினீன் என்று சொல்லுகிறார்கள். ஆஆ நல்லாயிருக்கிறது!! அல்லாவின்மீதாணையாக, நீ அல்லாவுக்குப் பயந்துகொள். இல்லையாயின் அவனால் வரும் வேதனையை ஏற்கத் தயாராயிரு" எனச் சொல்வதைக் கேட்டேன்" என்று அனஸுறலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் ஹஸன் றஹிமஹுல்லா அவர்கள் "நீ இன்னவேலையைச் செய்தாயே இன்ன தீனியைத் தின்றாயே, ஏன் செய்தாய்! ஏன் தின்றாய்" என்று தன்னை நிந்திக்கின்ற நப்ஸு எதுவோ அதுவே நப்ஸுல்லவ்வாமா" என்று சொல்லி அவ்விதம் தங்களை நிந்திப்பவர்களாயிருந்தார்கள். ஆகவே கழிந்த காரியங்களைப்பற்றிக் கணக்குப்பார்ப்பது கட்டாயமேயாம்.

### நாலாவது தானம்-நப்சின்மேல் முஆகபா செய்வதாம்.

அறிந்துகொள்:—நீ உன் நப்ஸினிடத்தில் கணக்குப் பார்த்ததில் அது ஏதும் குற்றஞ்செய்திருப்பதைக் கண்டு அதைச் சும்மாவிட்டுவிடுவாயாகில் அது துணிகரமுள்ளதாய்ப்போம். அன்றியும் அதை வழிக்குக்கொண்டுவர உன்னால் முடியாமலும்போம், ஆதலால் அது செய்திருக்கிற எந்தக் குற்றத்துக்கும் அதை வேதனைப்படுத்து. சந்தேகமான யாதொரு வஸ்துவைத் தின்றிருந்தால் பட்டினிபோடுவதினால் அதை வேதனைப்படுத்து. ஒரு அன்னிய ஸ்திரீயைப் பார்த்திருந்தால் கண் பார்க்காதபடி அதைக் கட்டிவைப்பதினால் வேதனைப்படுத்து. மற்றும் எல்லா உறுப்புகளையும் இதேவிதமாக யோசித்துக்கொள். ஸலபுகளான முன்னோர்கள் இதேவிதம் செய்திருக்கிறார்கள். ஆபிதுகளில்நின்றுமொருவர் ஒரு பெண்பிள்ளையைத் தொட்டதற்காகத் தம்முடையகையை நெருப்பில்வைத்து வேகடித்திருக்கிறார். பனீ இஸ்ராயீல்களில் ஒரு ஆபிது வெகுகாலம் ஸவ்மஆ என்னும் வணக்க வீட்டிலிருந்து வணங்கிவந்தார். அவருக்கு ஒரு ஸ்திரீயானவள் தன்னைப் பகட்டிக் காட்டினதினால், அவர் அவளிடம் போகக்கருதி ஸவ்மஆவிலிருந்து ஓர் காலை வெளியே தூக்கிவைத்தார். அப்போது அவருக்கு அல்லாவுடைய பயமுண்டானதினால் உடனே தவ்பா செய்தார். பின்பு அந்தக்காலை உள்ளே எடுத்து வைக்கநாடி. அந்த நாட்டத்தை மறுத்து "இக்கால் பாவத்தின்பொருட்டு வெளி

யேவந்த இந்தக்கால் மீண்டும் சவுமஆவில் வருவது சரியல்ல" என்று அதை அப்படியே வெளியே விட்டுவைத்தார். அது பனியின் குளிரிலும் வெயிலின் வெப்பத்திலும் அடியுண்டு புண்பட்டு அவர் தேகத்திலிருந்து இற்றுவிழுந்துவிட்டது. இபுனுல் கசீனிறஹிமஹுல்லா அவர்கள் சொன்னதாக ஜுனைதுறஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"ஒரு இரவில் எனக்கு இஹ்திலாமாய்விட்டது. அப்போதே குளிக்கவேண்டுமென்று நாடினேன். அந்த இரவில் அதிக குளிராயிருந்தபடியால் என் நபுசு சோம்பலடைந்து "நீ உன்னை ஹலாக்காக்கிக்கொள்ளாதே, பொறு, பொழுது விடியட்டும், வென்னீர்ப்பொறைக்குப் போகலாம்" என்று சொல்லிற்று. அப்போது நான் "என் சட்டையோடு குளிப்பேன்" என்றும், "பின்பு சட்டையைப்பிழியாமல் அப்படியேஉடம்பின்மேல்விட்டுக்காயவைப்பேன்" என்றும், சத்தியம் செய்துகொண்டேன். பின்பு அதேவிதம் செய்து "அல்லாகு தஆலாவின் விஷயத்தில் குற்றஞ்செய்கிற நபுசுக்கு இதுதான் தண்டனை" என்று என் நபுசுக்குச் சொன்னேன்" என்பதே. இன்னுமொருவர் ஒரு ஸ்திரீயை மோகமாகப்பார்த்துப் பின்பு அதிக வெட்கத்தையடைந்து "நான் இதற்கு சிட்சையாக இனி எப்போதும் குளிர்ந்தஜலம் குடிக்க விடாதபடி என் நபுசை வேதனைப்படுத்துவேன்" என்று சத்தியம் செய்துகொண்டு அதுபோல் குடிக்காமலேயிருந்தார். ஹஸ்ஸானுபுனு அபீசனுன் அவர்கள் அழகான ஓர் கட்டிடத்தின் பக்கமாகச் செல்லுகையில் "இதை யார் கட்டினது?" என்று கேட்டார்கள். பின்பு தங்கள் நபுசைநோக்கி "உனக்கு அவசியமில்லாத ஒரு விஷயத்தைப்பற்றி நீ கேட்கிறாய். அல்லாவின் மீதாணையாக இதன் சிட்சையில் ஒரு வருஷகாலம் நோன்பு வைத்து உன்னை உபத்திரப்படுத்துவேன்" என்றார்கள்.

அபூதல்ஹா றலியல்லாகு அன்கு அவர்கள் ஒருநாள் தங்கள் பேரீத்தந்தோப்பில் தொழுதுகொண்டிருந்தார்கள். அங்கு அழகான ஒரு பக்ஷி பறந்துபோயிற்று. அந்தப்பக்ஷியினது அழகினால் தொழுகையில் அவர்களுக்கு மறதி சம்பவித்தது. றக்அத்துகளின் எண்ணிக்கையில் சந்தேகமுண்டாய்விட்டது. அதற்கு சிட்சையாக அந்தத்தோட்டம் முழுவதையும் சதகாசெய்துவிட்டார்கள். மாலிகுபுனு ழைகம் அவர்கள் சொல்லுகிறதாவது:—"ஒருநாள் அசருதொழுகைக்குப்பின் ரிபாஹுல்கீஸி என்பவர் வந்து என் தகப்பனாரைக் கூப்பிட்டார். "அவர் நித்திரைசெய்கிறார்" என்று நான் சொன்னேன். அதற்கவர் "என்ன இது நித்திரைநேரமா?" என்று சொல்லித் திரு

ம்பிவிட்டார். நான் அவர் பின்னே சென்றேன். அவர் நடந்துபோ
கையில் தமது நபுஸைநோக்கி "ஏ அதிகப்பிரசங்கியான நபுஸே! இது
நித்திரை நேரமா? என்று கேட்கிறாயே. இந்தக் கேள்வியில் உனக்
கென்ன கவையிருக்கிறது? நான் இதற்கு சிட்சையாக ஒருவருஷ
காலம் உன்னைத் தலையணையில் தலைவைக்கவிடுவதில்லை என்று இதோ
அருதிமானம் செய்துகொண்டேன்" எனச் சொல்லி அழுதுகொண்
டும், "நீ அல்லாவுக்குப் பயப்படமாட்டாயா?" என்று சொல்லிக்கொ
ண்டும் போனார்" என்பதே. தமீமுதாரி என்பவர்கள் ஒரு இரவில்
தூங்கிவிட்டதினால் அவர்களுக்குத் தஹஜ்ஜாதுதொழுகை தப்பிவிட்
டது. அதற்கு சிட்சையாக "ஒரு வருஷம் வரையில் ஒரு இரவிலா
வது தூங்குவதில்லை" என்று அருதிமானம் செய்துகொண்டார்கள்.
தல்ஹா றவியல்லாகு அன்கு அவர்கள் ரிவாயத்து செய்கிறதாவது:--
ஒருவர் தமது உடம்பில் உடையில்லாமல் வெயிலின் வெப்பத்தினால்
கொதிப்பேறிய கல்லிலும் மணலிலும் படுத்துப் புறண்டுகொண்டும்
"ஏ இராப்பிணமே! ஏ பகற்சோம்பேறி, உன்னால் பொறுக்கக்கூடிய
வரையில் சூட்டைப்பொறு. (நரகத்து நெருப்பின் சூடு இதைவிட
அதிக கொதிப்பாயிருக்கும்)" என்று சொல்லிக்கொண்டிருந்தார்.
அப்போது றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அங்கு வந்து
அவரை நோக்கி "நீர் ஏன் இப்படிச் செய்கிறீர்?" என்று கேட்டார்
கள். அதற்கவர் "என் நபுசானது எனக்கு மீறுகின்றது" என்று
சொன்னார். நாயகமவர்கள் அவரைநோக்கி "இதோ உமக்காக வான
வாசல்களைத் திறந்தார்கள். அல்லாகு தஆலா தன் மலக்குகளிடத்தில்
உம்மைக்குறித்துப் பெருமை பேசுகிறான்" என்றுரைத்துப் பின்பு
அஸ்ஹாபுகளை நோக்கி "நீங்கள் இவரிடத்தில் உங்கள் தங்கரிப்புக்
காகத் துஆவைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று உத்திரவு செய்
தார்கள். பின்பு எல்லாரும் அவரிடம் போய்க்கொண்டும் தங்களுக்கு
துஆ செய்யும்படி கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர் ஒவ்வொரு
வருக்கும் துஆ செய்துகொண்டிருந்தார். அப்போது றசூல் சல்லல்
லாகு அலைகிவசல்லமவர்கள் அவரை நோக்கி "நீர் எல்லாருக்கும்
சேர்த்து துஆ செய்யும்" எனச் சொன்னார்கள். அப்போதவர் "என்
ஆண்டவனே! தக்வாவை இவர்களுக்குத் தங்கரிப்பாக்கு, எல்லாரை
யும் நேர்வழியில் நிலைக்கச்செய்" என்று துஆ கேட்டார். அப்போது
நாயகமவர்கள் "என் ஆண்டவனே! இவருக்கு தஸ்தீது செய் அதா
வது:—நல்லவோர் துஆவை இவர் நாவில் கொடு" என்று துஆ கேட்
டார்கள். பின்பு அவர் "என் ஆண்டவனே! சுவர்க்கத்தை இவர்கள்

இருந்து வாழும் இடமாக்கு" என்று துஆ கேட்டார் என்பதே. மஞ்மா என்பவர் பெரியோர்களில்நின்று மொருவராயிருந்தார். அவர் ஒரு வீட்டு மெத்தையை நோக்கிப் பார்த்ததில் அங்கு ஒரு பெண் பிள்ளையைக் கண்டதினுல் "இனி நான் எப்போதும் வானத்தையும் பார்ப்பதில்லை" என்று சத்தியம் செய்துகொண்டார். அஹ்னபுப்னுல் கைஸ் றஹிமகுல்லா அவர்கள் இரவுகாலத்தில் விளக்கைக் கையில் பிடித்துக்கொண்டு அதன் சுடரில் சற்றுநேரத்துக் கொருமுறை விரலை வைத்து வைத்து "நீ இன்னதினத்தில் இன்னவேலையை ஏன் செய்தாய்? இன்ன வஸ்துவை ஏன் தின்ருய்?" என்று சொல்லுகிறவர்களாயிருந்தார்கள். ஆகிரத்தின் காரியத்தில் ஆலோசித்து உறுதிகொண்ட மஹான்கள் இவ்விதங்களாகச் செய்திருக்கிறார்கள். ஏனெனில், இந்த நபுசானது முறட்டுத்தனமுள்ளதென்றும், இதற்கு நீ இம்சைகொடுக்காமற் போனுல் இது உனக்கு அடங்காமல் மீறிப் போம்என்றும், அதனுல் நீ கெட்டழிவாய்என்றும் அவர்கள் அறிந்திருந்ததினுல் தங்கள் நபுசுக்கு சிட்சை செய்கிறவர்களா யிருந்தார்கள்.

ஐந்தாவது தானம்-முஜாஹதா அதாவது பெரும்பிரயாசையாம்.

அறிந்துகோள்:—பெரியோர்களில் சிலர் தங்கள் நபுசினிடத்தில் சோம்பலைக் கண்டால் அதற்குத் தண்டனையாக அதன்மேல் அதிக இபாதத்துகளை விதித்து அதைக் கஷ்டப்படுத்தி யிருக்கிறார்கள். இபுனு உமர்றலியல்லாகு அன்ஹுமா அவர்களுக்கு எப்போதாவது ஒருநேரத்தில் ஜமாஅத்துடன் தொழுவது தப்பிப்போனுல் அந்த இரவு முழுதும் தூங்கமாட்டார்கள். இன்னுமிவர்கள் ஒருநாள் இரண்டு நக்ஷத்திரங்கள் தென்படுகிறவரையில் தாமதித்து மகுரிபு தொழுததற்காக இரண்டு அடிமைகளை உரிமையாக்கினர்கள். உமர்றலியல்லாகு அன்கு அவர்களுக்கு ஒரு நேரம் ஜமாஅத்துடன் தொழுவது தப்பிப்போனதற்காக இரண்டு லக்ஷம் திருஹம் கிரயமுள்ள ஒருதோட்டத்தை சதகாசெய்துவிட்டார்கள். இம்மாதிரியான ஹிகாயத்துகள் ஏராளமாயிருக்கின்றன. நபுசானது இந்த இபாதத்துகளில் உழைக்க உடன்படாவிட்டால் அதற்குப் பரிகாரமாவது:—உழைத்துப் பாடுபடுகிற ஒரு முஜாஹிதுடைய சகவாசத்தில் இருப்பதேயாம். அப்படியிருந்து அவரைப் பார்ப்பதினுல் அவனுக்கு இபாதத்தில் ஆசையுண்டாகும். பெரியோர்களில்நின்று மொருவர் சொல்லுகிறதாவது:—"எனக்கு இபாதத்தில் ஆசை குன்றி நான் சோர்வடைகிற சந்தர்ப்பங்களில் முஹம்மதுப்னுல்வாஸிது றஹி

மஹுல்லா அவர்களைப் போய்ப்பார்ப்பேன். அதனால் ஒருவாரம் வரையில் எனக்கு இபாதத்தின் ஆசையிருக்கும்" என்பதே. அப்படி ஒரு முஜாஹிதைப் பெற்றுக்கொள்ளாதபக்ஷம் முற்காலத்து முஜாஹிதுகளின் அஹ்வாலுகளையும் ஹிகாயத்துகளையும் அவன் பார்வையிடவேண்டும். அந்த முஜாஹிதுகளில்நின்றும் சிலபேரை நாம் இவ்விடத்தில் காட்டுகிறோம்:—

தாவூது தாயிறஹிமஹுல்லா அவர்கள் ரொட்டி தின்னுதவர்களாயும் மாவைத் தண்ணீரில் கரைத்துக் குடிப்பவர்களாயும் இப்படிக்குடிப்பதற்கும் ரொட்டியாகத் தின்பதற்கும் இடையில் நான் ஐம்பது ஆயத்துக்களை ஓதக்கூடிய நேரமிருக்கிறதாகையால் அந்த நேரத்தை நான் ஏன்பழுதாக்குவேன்? என்று சொல்லுகிறவர்களாயுமிருந்தார்கள். இவர்களுடைய வீட்டுக்குள்போன ஒருவர் வீட்டை அண்ணாந்து பார்த்து "உங்கள் வீட்டுத்தூலம் எப்போது முறிந்தது?" என்று கேட்டார். அதற்கவர்கள் "இருபது வருஷகாலமாக நான் இந்தவீட்டில் இருக்கிறேன். இதை நான் பார்க்கவில்லை" என்று சொன்னார்கள். விருதாவான பார்வை அந்தப் பெரியோர்களுக்கு வெறுப்பாயிருந்திருக்கிறது. அஹ்மதுபுனுல்ஜர்பின் றஹிமஹுல்லா அவர்கள் சுபுஹிலிருந்து அசர்தொழுகைவரையில் எப்பக்கமும் பாராமல் உட்கார்ந்திருப்பார்கள். "நீர் ஏன் இப்படிச் செய்கிறீர்?" என்று கேட்டதற்கு "அல்லாகு தஆலா நமக்குக் கண்ணைத் தந்தது நாம் அவனது சிருஷ்டியின் புதுமைகளைப் பார்த்து அவனது மகத்துவத்தை ஆராய்ந்து நோட்டமிடுவதற்கே" என்றும், "ஒருவன் அந்தச் சிருஷ்டிகளில் ஆராய்ந்து நோட்டமிடாமல் வெறும்பார்வையாகப் பார்ப்பானாகில் அதை அவன்மேல் ஒரு குற்றமாக எழுதுவார்கள்" என்றும் சொன்னார்கள். அபுத்தர்தா றலியல்லாகு அன்கு அவர்கள்சொல்லுகிறதாவது:—"நான் நீட்சியுள்ள இரவுகளில்சுஜூது செய்யவும் நீட்சியுள்ள பகல்களில் தாகித்திருக்கவும் பேச்செல்லாம் சத்விஷயமாகவும் சற்புத்தியாகவும்பேசுகிறஜனங்களின் சகவாசத்திலிருக்கவும் ஆக இந்த மூன்றுக்காகவே எனது ஜீவியத்தை நேசிக்கிறேன்" என்பதே. அல்கமத்துபுனுல்கீஸ் றஹிமஹுல்லா அவர்களைச் சிலர் "நீர் உம்முடைய இந்த நபுசை ஏன் இவ்வளவு கஷ்டப்படுத்துகிறீர்?" என்று கேட்டதற்கு, "நான் அதன்மேல் வைத்திருக்கிற நேசத்தினால் அதை நரகத்தினின்றும் காத்துக்கொள்ளுகிறேன்" என்று சொன்னார்கள். பின்பு அந்த ஜனங்கள் "இவைகளையெல்லாம் உமதுபேரில் விதியாக்கவில்லை" என்று சொன்னார்

கன். அதற்கவர்கள் "இதை என் செய்யாமற்போனேன் என்று நாளை கியாமத்தில் நான் கைசேதப்படாமலிருக்கும்பொருட்டு இப்போது என்னால் இயன்றமட்டும் செய்துகொள்ளுகிறேன்" என்று சொன்னார்கள். ஜுனைது றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"சரியுஸ்ஸகதீயைவிட அதிக ஆச்சரியமான ஓர் மனிதனை நான் பார்க்கவில்லை. அவர் தொண்ணூற்றெட்டு வருஷம் ஜீவித்திருந்தார். அவர் மவுத்தானபோதேயொழிய மற்ற எப்போதாவது அவர் பூமியிற் படுத்ததை எவரும் பார்த்ததில்லை" என்பதே. அபூமுகம்மது ஹரீரீ றஹிமஹுல்லா அவர்கள் மக்கத்தில் ஒருவருஷம் தங்கியிருந்தார்கள். அந்த ஒருவருஷகாலமும் அவர்கள் பேசினதுமில்லை. தூங்கினதுமில்லை. ஒன்றில் சாய்ந்ததுமில்லை. காலை நீட்டினதுமில்லை. அப்போது அபூபகருல் கத்தானி றஹிமஹுல்லா அவர்கள் "நீர் எதனால் இப்படி இருக்கச் சகிக்கிறீர்?" என்று அவர்களைக் கேட்டதற்கு "என் உள்ளத்திலிருக்கும் உண்மையானது உற்றுணர்ந்ததினால் அது என் வெளிபக்கத்துக்கு வலுவைக்கொடுத்திருக்கிறது" என்று சொன்னார்கள். இன்னுமொருவர் சொல்லுகிறதாவது:—"பத்ஹு மவுசிலி றஹிமஹுல்லா அவர்களை நான் கண்டேன். அவர்கள் அழுதுகொண்டிருந்தார்கள். அவர்களின் கண்ணீர் இரத்தங் கலந்ததாயிருந்தது. நான் அவர்களை நோக்கி "இதென்ன?" என்று கேட்டேன். அதற்கவர்கள் என் பாவங்களின்பேரில் ஒருகாலம் கண்ணீராக அழுதேன். அந்தக் கண்ணீர் இகுலாசில்லாததாயிருந்திருக்கக்கூடுமாதலால் அது சரியல்லவென்று இப்போது இரத்தமாக அழுகிறேன்" என்று சொன்னார்கள். பின்பு ஒருபோது அவர்களைச் சொப்பனத்தில் கண்டு அல்லாகு தஆலா "உமக்கு என்னசெய்தான்?" என்று கேட்டதற்கு "அந்த அழுகைகளின் பொருட்டால் அவன்-எனக்குப் பெருமையைக் கொடுத்ததுமன்றி தனது மகிமையின்பேரில் ஆணையிட்டு "மலக்குகள் நாற்பது வருஷகாலம் உம்முடைய பட்டோலைகளைக் கொண்டுவந்தார்கள்" என்றும், "அவைகளில் ஒரு குற்றமு மிருந்ததில்லை" என்றும் கூறினன் எனச் சொன்னார்கள்" என்பதே. இன்னும் சிலர் தாவூதுத்தாயி றஹிமஹுல்லா அவர்களை நோக்கி "நீர் உம்முடைய தாடியைச் சிப்பிட்டுச் சீவினால் என்ன குற்றமாய்ப்போம்" என்று கேட்டதற்கு நான் அதில் பராக்காகிறபக்ஷம் வேலையற்ற ஓர் மனிதனென்றாவேன்" என்று சொன்னார்கள்.

உவைசுல்கர்னீ றஹிமஹுல்லா அவர்கள் இரவுகளை முறைமுறையாகப் பாகித்து "இது ருகூவுடைய இரவு" என்றும், "இது

சுஜூதுடைய இரவு" என்றும் சொல்லுவார்கள். ருகூவுடைய இரவில் ஒரே ருகூவில் பொழுது விடிந்துபோம். சுஜூதுடைய இரவில் ஒரே சுஜூதில் பொழுது விடிந்துபோம். உத்பத்துல் குலாம் றஹிமஹுல்லா அவர்கள் தங்கள் ஜுஹ்தினால் நல்ல ஊண்குடிப்புகள் ஒன்றையும் உண்பதும் குடிப்பதுமில்லை. அவர்கள் தாயார் தம் மகனைநோக்கி "மகனே! நீ உன் நபுசினிடத்தில் கொஞ்சம் தயவாயிரு" என்று சொன்னார்கள். அப்போதவர்கள் "அம்மா! நான் அதற்குத் தயவைத்தான் தேடுகிறேன். நித்தியமாக எப்போதும் தயவிலும் சுகத்திலும் இருப்பதற்காக இப்போது சிலநாள் கொஞ்சம் கஷ்டத்தை அநுபவிக்கிறேன்" என்று சொன்னார்கள். றபீஉ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது.—"நான் உவைசு றஹிமஹுல்லா அவர்களைப் பார்க்கலாமென்று போனேன். அவர்கள் சுபுஹு தொழுகையிலிருந்தார்கள். தொழுது ஆனபிறகு அவர்களின் தஸ்பீஹு ஓதலுக்கு நான் தடையாகாம லிருக்கும்பொருட்டு இப்போது பேசக்கூடாதென்று நினைத்து சபுருசெய்துகொண்டிருந்தேன். அவர்கள் அப்படியே அந்தவிடத்தைவிட்டெழும்பாமல் ளுகரு, அசரு தொழுகைகளையும்; மக்ரிபு, இஷாத் தொழுகைகளையும் தொழுது மறுநாள் சுபுஹு தொழுகையையும் தொழுதார்கள். அப்போது அவர்களுடைய கண் கொஞ்சம் நித்திரைபோய்விட்டது, அவர்கள் உடனே விழித்து "என் ஆண்டவனே! இப்படி அதிகமாய்த் தூங்குகிற கண்ணைவிட்டும் அதிகமாய்த் தின்னுகிற வயிற்றைவிட்டும் நான் உன்னிடம் காவல் தேடுகிறேன்" என்று சொன்னார்கள். பின்பு நான் "எனக்கு இதுவே போதும்" என்று என்மனதில் சொல்லிக்கொண்டு ஒன்றும்பேசாமல் திரும்பிவிட்டேன்" என்பதே. அபூபகருல் அயாஷ் றஹிமஹுல்லா அவர்கள் நாற்பதுவருஷம் பூமியில் உடம்பைச் சாய்க்கவில்லை. அவர்களுடைய கண்ணிலிருந்து கருமையான நீர்வடிந்தது. இருபது வருஷகாலம் அவர்கள் தம் வீட்டாருக்குத் தென்படாமல் எங்கேயோ மறைந்துபோயிருந்தார்கள். தினம் ஐந்நூறு றக்ஆத்து தொழுவது அவர்களுக்கு நித்தியவிர்தாயிருந்தது. வாலிபத்தில் தினந்தோறும் முப்பதினாயிரம் முறை குல்ஹுவல்லா ஓதுவார்கள். குர்ஜுபுனுவப்ரா றஹிமஹுல்லா அவர்கள் அப்தாலுகளின் தொகையிற் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய பிரயாசை எவ்வளவாயிருந்ததென்றால் தினம் மூன்று முறை குருஆன் ஓதிமுடிப்பார்கள். சிலர் அவர்களைநோக்கி "நீர் உமது நபுசுக்கு அதிக கஷ்டத்தைக் கொடுக்கிறீர்" என்று சொன்னதற்கு, அவர்

கள் "துன்யாவுடைய வயது எவ்வளவு?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "எழாயிரம் வருஷம்" என்றார்கள். "கியாமத்துநாளின் காலம் எவ்வளவு?" என்றுகேட்டார்கள். "ஐம்பதினாயிரம் வருஷம்" என்று சொன்னார்கள். அப்போதவர்கள் "ஐம்பதுநாள் சுகத்தை அடையும்பொருட்டு ஏழுநாள் கஷ்டத்தை எடுத்துக்கொள்ளாதவன் யாராயிருப்பான்?" என்றார்கள். இதில் அவர்கள் கருதியது யாதெனில், "நான் ஏழாயிரம் வருஷம் ஜீவித்திருந்து கியாமத்துநாளின் பொருட்டுப் பாடுபடுவேனாகில் அப்போதும் அது கொஞ்சமேயாம். பின்பு அபது என்னும் அழியாத நித்திய காலத்தைப்பற்றி என்ன சொல்லக்கிடக்கிறது. அதிலும் குறிப்பாக நான் அடைந்திருக்கிற இந்த அற்பவயதின் பிரயாசை அந்நாளுக்கு எந்தமூலை" என்பதே. சுபுயானுசுவரீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது: "நான் ஓர் இரவில் ருபீஆவினிடம் சென்றேன். அம்மங்கையர் தம் வீட்டு மிஹ்ராபில் விடியுமட்டும் தொழுதுகொண்டிருந்தனர். நான் அவ்வீட்டின் ஒருபக்கத்தில் சஹருநேரம் வரையில் தொழுதுகொண்டேன். அப்போது நான் "இரவு முழுவதும் தன்னை வணங்கித் தொழும்படி நமக்கு உதவிபுரிந்த அல்லாகு தஆலாவுக்கு எதைக்கொண்டு நாம் ஷுக்ரு செய்வோம்" என்றேன். அதற்கம்மங்கையர் "நாளைக்கு நாம் நோன்பு வைப்பதுகொண்டு ஷுக்ரு செய்வோம்" என்றனர். என்பதே. இவைகளே முஜ்தஹிதுகளின் அஹ்வால்களாம். இவை போன்றவை இன்னும் அநந்தமிருக்கின்றன. அவற்றை எடுத்துச் சொன்னால் நீளமாகும். எஹ்யாவில் இதற்குமேல் அதிகமாய்க்கொண்டுவந்திருக்கிறோம். அடியான் இம்மாதிரியான அஹ்வால்களை அனுசரித்து நடக்கச் சாத்தியப்படாதவனாயிருந்தால் அவைகளைக் கேட்கவாவது வேண்டும். ஏனெனில், அதனால் அவன் தன் குறைகளைத் தெரிந்துகொள்ளவும் அவனில் நன்மையின் ஆசை துடிக்கவும் அவன் தன் நபுசுடன் போர்புரியவுமாமென்க.

### ஆறாவதுதானம்-முஆத்தபா அதாவது நபுசைக்கண்டிப்பதென்பதாம்.

அறிந்துகொள்:—இந்த நபுசானது நன்மையைக் கண்டால் ஓட்டம் பிடிப்பதாயும் தீமையைக் கண்டால் அதைத்தொடர்ந்து நிற்பதாயும் படைக்கப்பட்டிருக்கிறது. சோம்பலும் சுகம் பாராட்டலுமே அதன் சுபாவகுணமாம். அதனுடைய இக்குணத்தை மாற்றும்படிக்கும் அதைத் தப்புவழியிலிருந்து நேர்வழியில் கொண்டுவரும்படிக்கும் உனக்குக் கட்டளையிட்டிருக்கிறது. அதனிடத்தில் நீ சில சமயம் கண்டிப்பாயிருப்பதினாலும் சிலசமயம் தயவாயிருப்பதினா

லும் சிலசமயம் நற்புத்தி கூறுவதினாலும் அதை நீ நேர்வழிக்குக் கொண்டுவரக்கூடும். ஏனெனில், அது எதிலாவதொரு காரியத்தில் தனக்கு நன்மையுண்டெனக்கண்டால் அதைச்செய்ய விரும்புகிற சுபாவமுள்ளதாக அது படைக்கப்பட்டிருக்கிறது. அக்காரியத்தில் கஷ்டமிருந்தபோதிலும் அந்தக் கஷ்டத்தை அது சகித்துக்கொள்ளும். ஆயினும் அறிவின்மையும் மறதியுமான திரையே அதற்குப் பெரும்பான்மையாயிருக்கும். அந்த மறதி என்னும் தூக்கத்திலிருந்து அதை எழுப்பி அழுக்கில்லாத சுத்தமான கண்ணாடியை அதன் முகத்துக்கெதிரில் வைப்பாயாகில் அதாவது சரியான ஞாயத்தோடு அதற்கு நற்புத்தி போதிப்பாயாகில் அதை அது ஏற்றுக்கொள்ளும். இதனாலேதான் அல்லாகு தஆலா நீ நஸீஹத்துசெய் என்றும், நஸீஹத்தானது திடனாக மூமின்களுக்கு நயத்தைக் கொடுக்கும் என்றும் திருவுளமாயிருக்கிறான். மற்றவர்களுடைய நபுசு எப்படியோ அப்படியே உன்னுடைய நபுசுமாம். ஆதலால் அதற்கு நீ பயங்காட்டி நற்புத்தி கூறுவதும் பயங்காட்டிப் பலாட்டியஞ் செய்வதும் அதில் குணத்தைக் கொடுக்கும். ஆகவே நீ முதலில் அதற்கு நஸீகத்துசெய்து அதைக்கண்டி. மேலும் எந்த சந்தர்ப்பத்திலும் அதைக் கண்டிக்காமல் சும்மாயிருந்துவிடாதே. அதனிடத்தில் இவ்விதம்சொல். அதாவது:—

“ஓ நபுசே! நீ பெரியபுத்திமான் என்று பிரஸ்தாபிக்கிறாய். யாராவது உன்னை மூடன் என்று சொன்னால் நீ மூர்க்கங்கொள்ளுகிறாய். உன்னைவிடப் பெரியமூடன் எவன் இருக்கிறான்? ஏனெனில் ஒருபட்டணத்துக்குள்ளிருக்கும் ஒரு மனிதனைப் பிடித்துக் கொல்லும்படி அனுப்பப்பட்ட ஒருபடை வந்து பட்டணத்து நுழைவாசலண்டையில் இறங்கி அவனை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற நேரத்தில் அந்த மனிதன் விளையாடிக்கொண்டும் சிரித்துக்கொண்டு மிருப்பானாகில் அவனைவிடப் பெரியமூடன் எவன் இருக்கிறான்? மரித்தோர்களென்ற பண்டயானது பட்டணத்து வெளிவாசலிடமிருந்து உன்னைப் பிடித்துக்கொண்டு போகிறதேயொழிய மற்றப்படி அந்தவிடத்தைவிட்டுக் கிளம்புகிறதில்லையென்று சத்தியம்செய்து உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சுவர்க்க நரகங்கள் உனக்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன. உன்னை இன்றைக்கே கொண்டுபோகவும் கூடும். அப்படி கொண்டுபோகாமற்போனாலும் எந்தக்காரியம் நடக்கவேண்டியதோ அது நடந்துவிட்டதென்றே எண்ணிக்கொள். மவுத்தானது நான் இரவில் வருவேன் அல்லது பகலில் வருவேன் அல்லது துரிதமாக வருவேன் அல்லது தாமதயாக வருவேன் அல்லது குளிர்கால

த்தில் வருவேன் அல்லது வேனிற்காலத்தில் வருவேன் என்று ஒருவருக்கும் வாக்குக் கொடுத்திருப்பதில்லை. அது எல்லாரையும் திடும்பிரவேசமாகவும் அதன் நினைவேயில்லாமல் அச்சமொழிந்திருக்கிற நேரத்திலும் வந்துபிடிக்கும். அதற்கு நீ தயாராயில்லாமற்போனால் இதற்குமேல் பெரியமூடத்தனம் என்ன இருக்கிறது? ஓ துஷ்டநபுசே! நீ நாள்முழுதும் பாவத்தில் பராக்காயிருக்கிறாய். உன் பாவத்தை அல்லாகு தஆலா பார்க்கமாட்டானென்று நீ நினைக்கிறபக்ஷம் நீ காபிராயிருக்கிறாய். அவன் பார்க்கிறானென்று நீ அறிகிறபக்ஷம் அந்தப் பார்வைக்கு நீ பயப்படாததினால் பெரிய துணிகரமுள்ளவனாயும் வெட்கமில்லாதவனாயு மிருக்கிறாய். ஓ மூடநபுசே! உன் சுயாதீனத்தில் அடங்கின ஒரு அடிமைப்பயல் உனக்கு மாறுசெய்தால் அவன்மேல் உனக்கு எப்படிக்கோபம்வருகிறது. பின்பு நீ அல்லாகு தஆலாவுடைய கோபத்துக்குப் பயப்படாத காரணமென்ன? அவன் செய்யும் நரகவேதனையைச் சகித்துக்கொள்ள உனக்கு வலிமையிருக்கிறதென்று நீ நினைக்கிறபக்ஷம் உன்விரலை விளக்கில்வைத்துப்பார். அல்லது கொதிப்பான வெயிலில் கொஞ்சநேரம் உட்கார்ந்துபார். அல்லது சூடான ஆவியுள்ள ஓர் ஜாகையில்போய் இருந்துபார். அப்போது அதைச் சகிக்கும் வலிமையும் பொறுமையும் உன்னில் இல்லை என்பது உனக்குத் தெரியவரும். நீ செய்கிற பாவத்தைக்குறித்து அல்லாகு தஆலா உன்னைக் குற்றம் பிடிக்கமாட்டான் என்று நீ நினைக்கிறபக்ஷம் அப்போது நீ குருஆனையும் இலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களையும் மறுத்து எல்லாவற்றையும் பொய்யெனக் கொண்ட காபிராயிருக்கிறாய். ஏனெனில் ஒருவன் ஒரு தீமையைச் செய்வானாகில் அதற்குக் கூலியை அடைவான், தீமைசெய்தவன் தீமையைக்காண்பான் என்று அல்லாகு தஆலா திருவுளமாயிருப்பதினாலேயாம். ஓ மந்தநபுசே! ஒருக்கால் நீ அல்லாகு தஆலா ரஹீமாயும் கரீமாயு மிருக்கிறதினால் அவன் என்னை அதாபு செய்யமாட்டானென்று சொல்லுவாய். அப்படியானால் உலகத்தில் அவன் அநேகமாயிரம் பேர்களைப் பசி, நோய்முதலிய பலவித கஷ்டத்தில் வைத்திருப்பானேன்? விரைக்காதவன் அறுக்காமலிருப்பானேன்? உனக்குத் துன்யாவில்நின்றும் ஏதோ ஒன்றன் இச்சையுண்டாகும்போது அதற்குப் பணம் சம்பாதிப்பதற்காக உலகத்திலுள்ள உபாய தந்திரங்களையெல்லாம் ஏன்செய்கிறாய்? அல்லாகு தஆலா கரீமாயும் ரஹீமாயுமிருக்கிறதினால் நான் கஷ்டப்படாமல் அவனே என் காரியத்தைச் சரிப்படுத்துவான் என்று அப்போது நீ ஏன் சொல்லுகிறதில்லை.

ஓ ஏழைநபுசே! ஒருக்கால் நீ, காரியம் நீங்கள் சொன்னபடிதான் என்றும், ஆயினும் கஷ்டத்தை எடுத்துக்கொள்ள எனக்குச் சக்தியில்லையென்றும் சொல்லவருவாய். அப்படிக் கஷ்டத்தை சகிக்கமுடியாதவன் எவனோ அவன் நரகவேதனைக்குத் தப்பும்பொருட்டுத் தற்போதுகொஞ்சம்கஷ்டத்தை எடுத்துக்கொள்வது அவனுக்கு முக்கிய கடமையாமென்பதை நீ அறிகிறாயில்லை. இன்றைக்குக் கஷ்டத்தை எடுத்துக்கொள்ளாதவன் நாளைக்குக் கஷ்டத்தைவிட்டும் தப்பமாட்டான். இன்றைக்கு இவ்வளவு அற்பகஷ்டத்தைச் சகிக்க உன்னால் முடியவில்லையென்றால் நாளைக்கு நரகவேதனையும்சிறுமையும்பழிப்பும் சமுகத்தினின்று தூரத்தப்படுதலும் லஃனத்தை அடைதலுமான அனந்தங் கஷ்டங்களை நீ எப்படிச் சகிப்பாய்? ஏ கள்ள நபுசே! வெள்ளி பொன் முதலிய திரவியங்களைச் சம்பாதிப்பதில் மாத்திரம் நீ ஏன் அதிக கஷ்டங்களை எடுத்துக்கொள்ளுகிறாய்? நீ வியாதிபட்டால் சவுக்கியத்தைச் சம்பாதிப்பதற்கு ஒருயூத வயித்தியனுடைய சொல்லின்பேரில் உன்னுடைய எல்லா இச்சைகளையும்விட்டுக் கஷ்டத்துடன் ஏன் பத்தியங் காக்கின்றாய்? வறுமையைக் காட்டிலும் வியாதியைக் காட்டிலும் நரகவேதனை மிகவும் கஷ்டமானதென்பதும் துன்யாவுடைய வயதைக் காட்டிலும் ஆகிரத்துடைய காலம் அதிக நீட்சியுள்ளதென்பதுமான இவ்வளவை நீ அறிகிறாயில்லை. ஏ சோம்பேறி நபுசே! ஒருக்கால் நான் இப்பாவத்தைவிட்டுத் தவ்பாச் செய்யவும் நல்ல அமல்களை எடுத்துக்கொள்ளவும் நாட்டமாயிருக்கிறேன் என்று சொல்லுவாய். நீ தவ்பாச்செய்யுமுன் திடும்பிரவேசமாக மரணம்வந்து புகுதவும் அப்போது நீ கைசேதப் படுவதொழிய வேறொன்றையும் செய்ய உன்னால் ஏலாமற் போகவும்கூடும். இன்றைக்குத் தவ்பாச் செய்வதைவிட நாளைக்குச் செய்வது மிகவும் சுளுவாகும் என்று நீ நினைக்கிறபக்ஷம் இது மூடத்தனமாயிருக்கிறது. ஏனெனில் நீ எவ்வளவு அதிகமாகத் தாமதப்படுத்துகிறாயோ அவ்வளவு அதிகமாக அது காரியம் பளுவாய்ப்போம். பின்பு மரணம் வந்து நெருங்கின சமயத்தில் நீ தவ்பாச்செய்வாயாகில் மேட்டின்மேல் ஏற மாட்டுக்கு வலிமை வரும்பொருட்டு ஏறும் சமயத்தில் அதற்குக் கோதுமையைத் தீனியாக வைப்பது எப்படிப் பயன்படாதோ அப்படியே மரணம்வந்த சமயத்தில் நீ செய்கிற அந்தத் தவ்பா பயன்படமாட்டாது. இப்படித் தவ்பாவைப் பிற்படுத்துவதில் நீ ஒரு தாலிபுல்இல்முக்கு ஒப்பாவாய். அவன் யாரெனில், இல்மைப் படிக்கப்போய் அக்குச் சோம்பேறியாயிருந்துகொ

ண்டு நான் ஊருக்குப் போகிற நாளின் நெருக்கத்தில் கஷ்டப்பட்டு இல்மைப் படித்துக்கொள்ளுவேன் என்று சொல்லுகிறவனேயாம். இல்மைப்படிக்க நீண்டகாலம் வேண்டுமென்கிற இவ்வளவை இவன் அறிகிறதில்லை. இதுபோலவே கேடுகள் நிறைந்துள்ள நபுசை நெடுங்காலம் கஷ்டமென்னும் புடத்தில் வைக்கவேண்டிய திருக்கிறது. ஏனெனில் அது சுத்தப்படுவதற்கும் அல்லாவினிடத்தில் மருவியிருத்தலும் அவனது மஹப்பத்தும் மஃரிபத்துமான பதவியில் அது சேர்வதற்கும் வழியிலுள்ள கஷ்டங்களான எல்லாக் கணவாய்களையும் அது கடந்து செல்வதற்குமேயாம். வயது கழிந்து சேதமாகி உனக்கு நெடுங்காலம் வாய்க்காமற்போனால் இதைச்செய்ய உன்னால் எப்படி முடியும்? உனக்கு வயோதிபபருவம் வருவதற்குமுன் வாலீபத்தையும், நோய் வருவதற்குமுன் ஆரோக்கியத்தையும், பராக்கு வருவதற்குமுன் பராக்கு ஒழிவையும், மரணம் வருவதற்குமுன் ஜீவியத்தையும் நீ ஏன் கொள்ளைவாழ்க்கையென எடுத்துக்கொள்ளுகிறாயில்லை? ஏ சூதகார நபுசே! குளிர்காலத்துக்கு வேண்டிய எல்லா சாமக்கிரியைகளையும் கோடைகாலத்தில் ஏன் சித்தப்படுத்தி வைத்துக்கொள்ளுகிறாய்? அப்படி சித்தப்படுத்திவைப்பதை நீ பிற்படுத்தாமலும் அல்லாகு தஆலாவுடைய கிருபை ரஹ்மத்துகளில் நம்பிக்கை வைக்காமலும் போவானேன்? கடைசியில் நரகத்துடைய குளிரும் கொதிப்பும் உலகத்துடைய குளிர் கொதிப்புகளுக்குக் குறைந்ததல்லவே. இவைகளிலெல்லாம் நீ ஒரு குறைவும் செய்கிறாயில்லை. ஆகிரத்துடைய காரியத்தில் மாத்திரம் அளவிறந்த குறைகளைச் செய்கிறாய். நீ இப்படிச்செய்வதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்கவேண்டுமல்லவா? அந்தக்காரணம்; நீ ஆகிரத்தின் பேரிலும் கியாமத்துநாளின்பேரிலும் ஈமான்கொள்ளாமலிருப்பதேயாம். இந்தக்குறையை நீ உன் மனதுக்குள் உனக்கும் தெரியாமல் மறைத்து வைத்திருக்கிறாய். இதானது இனி எப்போதும உன்னை விட்டு நீங்காத நித்தியவேதனைக்குக் காரணமாய் முடியும். ஏ மதிகெட்ட நபுசே! ஒருவன் அல்லாவை அறிதல் என்னும் மஃரிபத்தினது ஒளியில் அடைக்கலம் புகாமலிருந்துகொண்டு அவன் தன் மவுத்துக்குப் பிறகு தனது ஆன்மாவுக்குள் அகிலத்தாசை என்னும் அக்கினி விழாதென்று நினைப்பானாகில் * இது எப்படி இருக்கிறதென்றால், குளிர்காலத்தில் சட்டையின் ‡ பாதுகாப்பில்லாமல் நட

---

* இதன் கருத்தாவது:—ஒருவன் இறந்துபோம்போது அவன் இச்சித்து வந்த பொருளைவிட்டுப் பிரிகின்றானாதலால் அந்தப் பொருளின் ஆசை அவனது உயிரைக் கொளுத்துகிற நெருப்பாகும். அந்தநெருப்பு அவன் உயிரைத் தொடாமலிருப்பதற்கு அவன் அல்லாவை அறிந்து அவனை ஆசித்து அதற்குச் சார்பான அமல்களைச் செய்துவரவேண்டுமென்பதாம்.

‡ சட்டை: உடம்புக்குக் காப்பு. மக்ரிபத்தும் மஹப்பத்தும் உயிருக்குக் காப்பு.

ந்துசெல்லுகிற ஒருவன் அல்லாவுடைய கிருபையினால் குளிர் என் உடம்பைத் தொடாது என்று நினைப்பதுபோலிருக்கிறது. இங்கு அல்லாவுடைய கிருபை என்பதற்குப் பொருளாவது:— அவன் குளிர் காலத்தைப் படைத்திருப்பதினால் அதற்காகச் சட்டை சமைக்கும் உபாயத்தை உன் உள்ளத்தில் உதிக்கப்பண்ணி அதற்கு வேண்டிய முதற்காரணப்பொருளையும் படைத்து அதைக் காரியப்படுத்தும் துணைக்காரணப் பொருள்களையும் செம்மையாக்கித் தந்ததேயாம். இதே தவிர சட்டையில்லாமலே குளிர் நீங்கிவிடவேண்டுமென்பது அதற்குப் பொருளல்ல. இவ்வளவை அவன் அறிகிறதில்லை. ஏ மூடமதி! பத்திரம்: பாவத்தின்பொருட்டு உனக்கு வேதனையுண்டாமென்றது உன்பாவத்தில் அல்லாகு தஆலாவுக்குக் கோபம் வருவதினால் என்று நினைக்கப்போகிறாய். அதில் அவனுக்குக் கோபம் வருகிற பக்ஷம் உன்பாவத்தினால் அவனுக்கு என்ன நஷ்டம் என்று நீ சொல்லலாம். இது அப்படியல்ல. மேலும் நரகத்து நெருப்பு உனக்குள்ளேயே உன் இச்சையினாலேயேஉண்டாக்கப்படுகிறது. இதனைப் போல்வதென்றால், வியாதியானது உன் தேகத்திலிருந்தே இன்னும் நஞ்சுள்ளதும் நஷ்டந்தருவதுமான வஸ்துக்களை நீ புசிப்பதினாலேயே சனிக்கிறதுபோல்வதாம். இதனாலேயேதவிர மற்றப்படி வயித்தியனுடைய உத்திரவுக்கு நீ விரோதம் செய்ததில் அவன் கோபங்கொண்டதினால் அல்ல. ஓ நபுசே! உனக்கு நான் பரிதாபப்படுகிறேன். நீ துன்யாவுடைய செல்வத்திலும் இன்பத்திலும் நிலைத்திருக்கிறாய். உன் முழுமனதாலும் அதை நீ ஆசித்து அதிற் கட்டுண்டுபோயிருக்கிறாய். இதுவேயொழிய நீ வழிபடாமலிருப்பதற்குக் காரணம் வேறொன்றில்லை. ஏ பாதகா! சுவர்க்க நரகங்கள் உண்டென்பதை நீ நம்பாதபக்ஷத்தில் மவுத்து உண்டென்றாவது ஈமான்கொண்டிருக்கிறாய். ஆகவே நீ செத்தால் இந்த எல்லாச் செல்வங்களையும் இன்பங்களையும் உன்னிடத்திலிருந்து பிடுங்கிக்கொள்ளப்போகிறார்கள். இவை உன்னைவிட்டுப் பிரிந்துபோவதைப்பற்றி நீ எரிந்து வதையப்போகிறாய். ஆதலால் பிரிவினையின் வேதனை உன் ஆசைக்குத் தக்கவிதமாயிருப்பதற்கு நீ துன்யாவை எவ்வளவாக ஆசிக்க நாடுகிறாயோ அவ்வளவாக ஆசித்து அதை மனதில் உறுதிப்படுத்திக்கொள். ஏ பேதை நபுசே! நீ என் துன்யாவில் மாட்டிக்கொண்டுதொங்குகிறாய்? மஷ்ரிகு முதல் மகுரிபுவரையிலுமுள்ள துன்யாவையெல்லாம் உனக்குக் கொடுத்தாலும் உலகத்திலுள்ள ஜனங்களெல்லாரும் உன்னைப் பணிந்து வணங்கினாலும் சொற்பகாலத்தில் நீயும் அவர்களும் மாண்டு மண்

றும்போகிறவர்கள்தாம். சென்றுபோன பாதுஷாக்களை இப்போது எவரும் நினைக்காமலிருப்பதுபோல் உங்களையும் ஒருவர் நினைக்கப்போகிறதில்லை. உனக்கோ துன்யாவுடைய வாழ்க்கையில் நின்றும் கொஞ்சமேயொழிய கொடுக்கப்படவில்லை. அந்த வாழ்க்கையுமோ பல கஷ்டங்களும் துன்பங்களும் உள்ளதாயிருக்கிறது. கஷ்டத்தோடு கூடிய இந்த அற்பவாழ்க்கைக்குப் பதிலாக நித்திய சொர்க்கத்தை நீ விற்கிறாயென்றால் உன் கதி எப்படியாகும்? ஒருவன் அருமையானதும் அழியாமலிருப்பதுமான ஒரு இரத்தினத்தைக் கொடுத்து ஓட்டையான ஒரு மட்பாத்திரத்தை வாங்குவானாகில் அவனைப்பற்றி நீ எப்படி சிரிப்பாய்? துன்யாவானது ஒரு மட்பாத்திரமாயிருக்கிறது. அது இருந்தாப்போலிருந்து பொட்டென விழுந்து உடைந்துபோமென்று எண்ணிக்கொள். அந்த அழியாத இரத்தினமும் உன்கையைவிட்டுத் தப்பிப்போனதாகப் பாவித்துக்கொள். அது உடைந்தும் இது தப்பியும் போனதைப்பற்றி உன் மனதில் கைசேதமும் வேதனையும் தங்கிவிட்டதாக நினைத்துக்கொள் என்பதே. இவைகளும் இவைபோன்றனவுமான கண்டித்தல்களை எப்போதும் மனிதன் தன் நபுசுக்குச் செய்துவரவேண்டும். அப்போதவன் தன் ஹக்கை நிறைவேற்றினவனும் நசீஹத்து செய்வதில் தன் நபுசைக்கொண்டு தொடங்கினவனுமாயிருப்பான்.

## ஏழாவது அஸ்லு-தபக்குரு அதாவது ஆராய்ந்து பார்ப்பதில் பேசுவது.

அறிந்துகொள்:—றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், "ஒரு ஸாஅத்துநேரம் ஆராய்ந்து பார்ப்பது ஒரு வருஷத்தின் இபாதத்தைவிட நல்லதாகும் என்று அருளிச்செய்திருக்கிறார்கள். இன்னும் ஆராய்ந்து பார்ப்பதென்னும் இந்தச் செயலுக்கு அல்லாகுதஆலா குர்ஆனில் பலவிடங்களில் தபக்குரு என்றும் ததப்புரு என்றும் நல்று என்றும் இஃதிபாரு என்றும்பேர்சொல்லுகிறான். இவை முறையே ஆராய்தல் யோசித்தல் நோட்டமிடல் விசாரணைபுரிதல் என்று சொற்கள் பலவாயிருக்கினும் இவற்றின் பொருள் ஒன்றேயாம். ஒருவன் ஆராய்ந்து பார்ப்பதின் பொருளை அறியாதிருக்கிறவரையில் அதன் மேம்பாட்டை அவன் அறியமாட்டான். அன்றியும், இந்த ஆராய்தல் எதில் என்பதும் எதற்காக என்பதும் இதன் பயன் என்ன? என்பதும் அவனுக்குத் தெரியாது. ஆதலால் இதை விளக்கிச்சொல்வது முக்கியகாரியமாயிருக்கிறது. நாம் முதலில் ஆராய்தலின் மேம்பாட்டையும் பின்பு ஆராய்தல் இதுவென அதன் பொருளையும் பின்பு எதற்காக ஆராய்வதென்பதையும் பின்பு எதில் ஆராய்வதென்பதையும் கூறுவோம்.

## ஆராய்ந்து பார்ப்பதின் மேம்பாடு.

அறிந்துகொள்:—ஒரு ஸாஅத்து நேரத்தில் செய்யப்படுகிற எந்த அமல் ஒரு வருஷத்தின் இபாதத்தைவிட அதிக வரிசையுள்ளதாயிருக்கிறதோ அந்த அமலின் பதவி பெரிதேயாம். இபுனு அப்பாஸ் றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:—"சில ஜனங்கள் அல்லாகு தஆலாவினது ஜாத்தில் ஆராய்ந்து விசாரணை புரிந்துகொண்டிருந்தார்கள். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அந்த ஜனங்களை நோக்கி "நீங்கள் அவனுடைய சிருஷ்டியில் ஆராய்தல் செய்யுங்கள்" என்றும், அவனது ஜாத்தில் ஆராய்தல் செய்யவேண்டாம்" என்றும், "அதற்கு நீங்கள் சக்திபெறமாட்டீர்கள்" என்றும், "அதன் மகிமையை அறிய உங்களால் முடியாது" என்றும் அருளிச்செய்தார்கள்" என்பதே. ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள் சொல்லுகிறதாவது:—"றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருபோது தொழுதுகொண்டும் அழுதுகொண்டுமிருந்தார்கள். அப்போது நான் அவர்களை நோக்கி "நாயகமே! தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கத் தாங்கள் அழுவானேன்?" என்று கேட்டேன். அதற்கவர்கள் "நான் ஏன் அழமாட்டேன்? இந்த ஆயத்து என்மீது இறங்கியிருக்கிறதே" என்றார்கள். அதாவது:—அறிவாளருக்கு வானங்கள் பூமிகள் இவைகளின் சிருஷ்டியிலும் இரவு பகல்களின் வித்தியாசத்திலும்திடனாக அத்தாட்சிகளிருக்கின்றன" என்பதுதான். பின்பு எவன் இந்த ஆயத்தை ஓதி இதில் ஆராய்ந்து நோட்டமிடாமலிருக்கிறானோ அவன்மீது கைசேதம்" என்று அருளிச்செய்தார்கள்" என்பதே. சிலர் ஈஸா அலைகிஸ்ஸலாமவர்களை நோக்கி "யாரூஹல்லா! இப்பூவுலகத்தில் உங்களைப்போன்ற ஒருவர் உண்டோ?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "ஆம் உண்டு. எவனுடைய பேச்செல்லாம் அல்லாவுடைய திக்ராயும் மவுனமெல்லாம் யோசனையாயும் பார்வையெல்லாம் உற்றுணர்வதாயும் இருக்கிறதோ அவனே என்னைப்போன்றவன்" என்று சொன்னார்கள். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "நீங்கள் இபாதத்திலின்றும் உங்கள் கண்களுக்குப் பங்கைக் கொடுங்கள்" என்று அருளிச்செய்தார்கள். அப்போது அஸ்ஹாபுகள் "யாறசூலல்லா! அதெவ்விதமாகக் கொடுப்பது?" என்று கேட்க "குர்ஆனென்கிய முஸ்ஹபைப் பார்த்து ஓதுவதினாலும் அதில் ஆராய்ந்து நோட்டமிடுவதினாலும் அதன் அதிசயங்களை உற்றுணர்ந்து அச்சப்படுவதினாலுமாம்" என்று திருவுளமானார்கள். இன்னும் "தன்யாவிஷயமாக ஆராய்ந்து நோட்டமிடுவது ஆகிறத்துக்குத் திரையாயிருக்கிறது" என்றும், "ஆகிறத்து விஷயமாக ஆராய்ந்து நோட்டமிடுவதின் பயனாகிறது ஆழிய

அறிவும் ஆன்மஜீவியமுமா யிருக்கிறது" என்றும், அபூசுலைமான் தாராணி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். தாவூதுதாயி றஹிமஹுல்லா அவர்கள் ஓரிரவில் வீட்டு மெத்தையின் மேலிருந்தார்கள். அப்போதவர்கள் வானலோகத்தின் அரசாட்சியில் நோட்டமிட்டு ஆராய்ந்துபார்த்துக்கொண்டும் அழுதுகொண்டுமிருந்து உணர்வுமாறி அண்டைவீட்டில் விழுந்துவிட்டார்கள். விழுந்த சத்தங் கேட்ட அண்டைவீட்டுக்காரன் யாரோ கள்ளன் குதித்தான் என்று சடுதியிலெழுந்து வாளை எடுத்துக்கொண்டு கிட்டேவந்து அவர்களைப் பார்த்தபோது "உம்மை யார் தள்ளினது?" என்று கேட்டான். அதற்கவர்கள் "நான் உணர்வுமாறியிருந்தேன், எனக்குத்தெரியாது" என்று சொன்னார்கள்.

### ஆராய்ந்தல் இதுவென அதன் பொருளை விளக்கல்.

அறிந்துகொள்:—ஆராய்தல் என்பதற்குப் பொருள் அறிவை அடைய விசாரணைபுரிதலென்பதாம். விசாரணைபாலன்றி விரைவில் விளங்காத எந்த அறிவையும் விளங்கிக்கொள்ள விசாரணைபுரியவேண்டும். விசாரணைபுரிவதற்கும் வேறு இரண்டு அறிவுகள் இல்லாமற்போனால் அந்த அறிவை விசாரித்து அறியவும் அடையவும் முடியாது. அந்த வேறு இரண்டு அறிவுகளையும் ஒன்றாகச்சேர்த்து அவ்விரண்டும் ஜோடாகக்கூடும்படி ஒன்றை மற்றொன்றோடு புணர்த்துவான். பின்பு அந்த இரண்டு அறிவுகளாலும் மூன்றாவது அறிவைப் பிறப்பிப்பான். எதுபோலெனில் கிடாவையும் பெட்டையையும் புணரவிட்டுக் குட்டியைப் பிறப்பிப்பதுபோலென்க. ஆகவே அந்த இரண்டு அறிவும் இந்த மூன்றாவது அறிவுக்கு (தகப்பனும் தாயும் போல்) இரண்டு மூலங்களா யிருக்கின்றன. பின்பு இந்த மூன்றாவது அறிவையும் வேறொரு அறிவுடன் ஜோடாகச்சேர்ப்பித்து நாலாவது அறிவு பிறக்கும்படி செய்வான். இதேவிதமாக அறிவுகளின் வம்சத்தை அதிகப்படுத்துவான். ஒருவன் இந்த வழியாக அறிவுகளை அடையக்கூடாமலிருப்பதற்குக் காரணம் யாதெனில், அசலாயிருக்கிற அந்த மூல அறிவுகளை அவன் அறியாமலிருப்பதேயாம். இவன் வர்த்தகத்துக்கு முதல் இல்லாத ஒரு மனிதனுக்கு ஒப்பாவான். முதலே இல்லாதவன் வர்த்தகம் எப்படிச் செய்வான்? இனி அசலான அறிவுகளை அறிந்திருந்தும் அவைகளை ஒன்றோடொன்று புணர்த்தி மற்றொரு அறிவை உண்டாக்க முடியாதவனாயிருக்கிறபக்ஷம் இவன் முதலிருந்தும் வர்த்தகஞ் செய்யத்தெரியாத ஒரு மனிதனுக்கு ஒப்பாவான். இதன் ஹகீகத்தான பொருளின் விஸ்தரிப்பு நீளமா யிருக்கிறது. இரண்டு அறிவுகளைச் சேர்த்து மூன்றாவது அறிவைப் பிறப்பிப்பது இப்படி என்பது உனக்கு விளங்கும் பொருட்டு இதோ

ஒருபமானத்தில் சொல்லுகிறேன். ஒருவன் துன்யாவைவிட ஆகிரத்து நல்லதென்பதை விசாரித்தறிய நாடுவானாகில் அவனுக்கு இரண்டு அறிவுகளில்லாதவரையில் அதை விசாரித்தறிய அவனால் முடியாது. முதலாவது:- அழியும் பொருளைவிட அழியாப்பொருள் நல்லது என்று அறிவதாம். இரண்டாவது:—துன்யா அழிந்துபோவதும் ஆகிரத்து அழியாமலிருப்பதும் என்று அறிவதாம். எப்போது அவன் இந்த இரண்டு அஸ்லான மூல அறிவுகளை அறிந்தானோ அப்போது இவற்றால் துன்யாவைவிட ஆகிரத்து நல்லதென்ற மூன்றாவது அறிவு அவசியம்பிறக்கும். பிறக்குமென்றதில் முஃதஸிலாக்கள் வைக்கும் கருத்தை நாம் வைக்கவில்லை. இதை விஸ்தரித்தாலும் நீளும். மொத்தத்தில் எல்லா ஆராய்தல்களுக்கும் பொருளாவது, இரண்டு அறிவுகளை மனதில் கொண்டுவருவதினால் உண்டாகிற மூன்றாவது அறிவை விசாரணை புரிதல் என்பதேயாம். ஆனால் எப்படி இரண்டு குதிரைகள் சேர்வதினால் ஆடு பிறக்காதோ அப்படியே எந்த இரண்டு அறிவாயிருந்தாலும் அதனால் நீ நாடுகிற ஒவ்வொரு அறிவும் பிறந்துவிடமாட்டாது. மேலும் ஒவ்வொரு வகையான அறிவுக்கும் பிரத்தியேகமான இரண்டு இரண்டு அஸ்லுகள் என்னும் மூல அறிவுகள் உண்டு. அந்த இரண்டு மூலங்களை நீ உன் மனதில் கொண்டுவராத வரையில் அந்த மூன்றாம் அறிவு வெளியாகாது.

### எதற்காக ஆராய்தல் செய்யவேண்டும் என்பதை விளக்கல்.

அறிந்துகொள் :—மனிதனானவன் இருளிலும்மூடத்திலும் படைக்கப்பட்டிருக்கிறான். அவனுக்கு ஒரு வெளிச்சம் வேண்டியதாயிருக்கிறது. ஏனெனில், அவன் தன் காரியங்களைச் செய்ய வழிதெரிந்து அந்த இருட்டைவிட்டு வெளியே வருவதற்கும் அவன் என்ன செய்யவேண்டும்? எந்தப் பக்கம் போகவேண்டும்? துன்யாவின் பக்கமா? அல்லது ஆகிரத்தின் பக்கமா? தன்னில் பராக்காக வேண்டுமா? அல்லது அல்லாவில் பராக்காக வேண்டுமா? என்பதை அவன் தெரிந்துகொள்வதற்குமென்க. இந்த வெளிச்சம் அறிவாகிய ஒளியினாலன்றி உண்டாகாது. அறிவாகிய ஒளி ஆராய்ந்து பார்ப்பதினாலன்றி உண்டாகாது. சிருஷ்டிகள் இருட்டில் படைக்கப்பட்டன. பின்பு அல்லாகு தஆலா அவைகளின்மீது தனது ஒளியை வீசினான் என்று ஹதீஸில் வந்திருப்பது மேலே சொன்னதற்கு அத்தாட்சியாம். இருட்டில் வழியைத் தெரிந்துகொள்ளக் கூடாமல் இடர்பட்டிருக்கிற ஒருவன் சகிமுகிக்கல்லை இரும்பில் தட்டி நெருப்பையுண்டாக்கி விளக்கைக் கொளுத்திக்கொள்ளுகிறான். அந்த விளக்கினால் அவனுடைய முந்திய நிலைமை மாறி கண் தெரிந்து வழியல்லாததில்நின்றும் வழியைப் பிரிந்தறிந்து பின்பு நடந்து செல்லு

கிறான். இதேவிதமாக மூன்றும், அறிவு பிறப்பதற்குப் புணர்த்தவேண்டிய அந்த இரண்டு அஸ்லுகள் என்னும் மூல அறிவுகளானவை சக்கிமுக்கியும் இரும்பும்போ லிருக்கின்றன. ஆராய்வதால் பிறக்கின்ற அறிவானது சக்கிமுக்கியைத் தட்டுவதால் உண்டாகின்ற நெருப்பொளிக்கு ஒப்பா யிருக்கின்றது. இந்த அறிவினது வெளிச்சத்தால் அவனுடைய மனதின் முந்திய நிலைமை மாறிவிடும். மனநிலைமை மாறிவிட்டால் செயலும் அமலும் மாறிவிடும். உதாரணமாக:— ஆகிரத்து நல்லதென்று அவன் காண்பானாகில் துன்யாவை முதுகுப்புறந் தள்ளிவிட்டு ஆகிரத்தின்பக்கம் முகம் நோக்குவான். ஆதலால் மனிதன் அறிவை அடைவதற்கும் அவன் மனம் நல்ல நிலைமையில் மாறுவதற்கும் அவன் நல்ல அமலில் திரும்புவதற்கும் ஆக இந்த மூன்று வஸ்துக்களுக்காகவே ஆராய்தல் செய்யவேண்டுமென்றது. ஆனால் அமலானது மன நிலைமையைத் தொடர்ந்ததாயும், மனநிலைமையானது மஃரிபத்தாகிய அறிவைத் தொடர்ந்ததாயும், அறிவானது ஆராய்தலைத் தொடர்ந்ததாயு மிருக்கிறது. ஆகவே ஆராய்தலானது எல்லா நன்மைகளுக்கும் திறவுகோலாயும் அடிவேராயுமிருக்கிறது. இதனால் அதன் மேம்பாடு நன்கு விளங்கும்.

## ஆராய்தலுக்கிடமான மைதானவெளி எது, அது எந்தமட்டும் போகும் என்பதை விளக்கல்.

அறிந்துகொள்:— ஆராய்தலுக் கிடமான மைதானவெளி எல்லை யற்றதா யிருக்கிறது. ஏனெனில் அறிவுகளுக்கு அளவில்லை யாதலாலும் அவை எல்லாவற்றிலும் ஆராய்தல் நிகழ்வதாலுமென்க. ஆயினும் எதுவொன்று தீன்வழியோடு சம்பந்த மில்லாததா யிருக்கிறதோ அதை விவரிக்க வேண்டுமென்பது நமது நோக்கமல்ல. தீன்வழியோடு சம்பந்த முள்ளதின் விஸ்தரிப்போ அளவு கடந்ததா யிருக்கிறது. இருந்தபோதிலும் அதன் இனங்களை மொத்தமாகத் தொகுத்துச் சொல்லக்கூடும். இப்போது அறிந்துகொள்:— நாம் தீன்வழி என்றதில் அடியானுக்கும் ஹக்கு தஆலாவுக்கும் நடுவே அடியான் நடந்துகொள்ளும் நடவடிக்கைகளையே கருதுகிறோம். அந்த நடவடிக்கையே அவன் ஹக்கு தஆலாவினிடம் சேருவதற்கு வழியாயிருக்கிறது. அடியானுடைய ஆராய்தல் அவன் தன் விஷயத்திலாயிருக்கும், அல்லது ஹக்கு தஆலாவின் விஷயத்திலாயிருக்கும். ஹக்கு தஆலாவின் விஷயத்திலாயிருந்தால் அந்த ஆராய்தல் அவனது ஜாத்து சிபத்துகளிலாயிருக்கும் அல்லது அவனுடைய செயல்களிலும் சிருஷ்டிகளின் புதுமைகளிலுமாயிருக்கும். தன் விஷயத்திலாயிருந்தால் அந்த ஆராய்தல் அல்லாகு தஆலாவுக்குப் பிரியமில்லாதவைகளும் தன்னை அவன் சமுகத்தைவிட்டுத் தூரப்படுத்துகிறவைகளுமான குணங்களிலாயிருக்கும். அக்குணங்கள் பாவங்களாயும்

அவனைக் கெடுக்கிறவைகளாயு மிருக்கின்றன. அல்லது அந்த ஆராய்தல் ஹக்குதஆலாவுக்குப் பிரியமுள்ளவைகளும் அடியானை அவன் சமுகத்தில் நெருங்கச் செய்கிறவைகளுமான குணங்களிலாயிருக்கும். அவை வணக்கங்களாயும் அவனை ஈடேறச் செய்கிறவைகளாயு மிருக்கின்றன. ஆகவே ஆராயு மிடங்களின் மொத்தத்தொகுப்பு நான்கு மைதானவெளிகளாயிருக்கிறது. அடியான் ஒரு ஆஷிகானவனுக்குச் சமானனா யிருக்கிறான். ஆஷிகானவனுடைய யோசனை எவ்விதத்திலும் அவன் மஃஷூக்கைவிட்டு நீங்காது. அப்படி நீங்கினால் அவனுடைய இஷ்கு முற்றாத இஷ்கேயாம். ஏனெனில் வேறு எந்த வஸ்துவுக்கும் கொஞ்சமும் இடங்கொடுக்காத இஷ்கே முற்றின இஷ்காதலாலென்க. பின்னர் ஆஷிகுடைய யோசனையானது தன் மஃஷூகுடைய முகத்தழகிலும் அவளுடைய உடம்பின் வடிவழகிலும் இருக்கும் அல்லது அவளுடைய செயல்களிலும் குணங்களிலு மிருக்கும். அவன் தன்விஷயத்தில் யோசித்தால் எதை யோசிப்பானென்றால் நான் எதைச் செய்தால் அவள் என்னைப் பிரியமாக ஏற்றுக்கொள்வாள் என்பதில் யோசித்தறிந்து அதைச் செய்ய முயற்சிப்பான் அல்லது நான் எதைச் செய்தால் அவளுக்குப் பொருத்தமில்லை என்பதில் யோசித்தறிந்து அதைவிட்டு நீங்குவான். இஷ்கினால் ஏற்பட்ட எந்த யோசனையும் இந்த நான்கைவிட்டும் புறம்பாகாது. தீனுடைய இஷ்கின் யோசனையும் ஹக்கு தஆலா உடைய ஆசையின் ஆராய்வும் இப்படியேயாம்.

### முதலாம் மைதான வெளி - மனிதன் தன்னில் ஆராய்தல்.

ஆராயுமிடமாக மேலே கூறப்பட்ட நான்கு மைதான வெளிகளில் முதலாவது யாதெனில், மனிதன் அல்லாகு தஆலாவுக்குப் பொருத்தமில்லாத செயல்களையும் குணங்களையும் விட்டுத் தன்னைச் சுத்தமாக்கும்பொருட்டு அச்செயல்களும் குணங்களும் எவை என்பதில் ஆராய்வதாம். அவை இருக்கில் வெளிப்படையான பாவங்களாயிருக்கும். அல்லது உள்ளேயிருக்கிற கெட்டகுணங்களா யிருக்கும். இவை அநேகமா யிருக்கின்றன. வெளிப்படையான பாவங்களில் சிலது நா, கண், கை, கால் முதலியவைபோன்ற எழுறுப்புகளுடன் சம்பந்தப்பட்டவைகளாயும் சிலது சர்வாங்கத்தோடு சம்பந்தப்பட்டவைகளாயு மிருக்கின்றன. உள்ளேயிருக்கும் கெட்ட குணங்களும் இதேபோல் பலவாயிருக்கின்றன. இவற்றில்நின்றும் ஒவ்வொன்றையும் மூன்றுவிதத்தில் ஆராயவேண்டும். முதலாவது:— இன்னசெயலும் இன்னகுணமும் கெட்டதா? அல்லவா? என்பதில் ஆராய்வதாம். ஏனெனில் எல்லாவிடத்திலும் இது துலக்கமாய் விளங்குவதில்லை. ஆராய்வதால் அறியக்கூடும். இரண்டாவது :—அது

கெட்டதாயிருந்தால் (அச்செயல் அல்லது) அக்குணம் என்னில் இருக்கிறதா? இல்லையா? என்பதில் ஆராய்வதாம். ஏனெனில், நபுசினுடைய குணங்களையும் ஆராய்வதாலன்றி இலகுவில் அறியமுடியாது. மூன்றாவது:—தன்னிடத்தில் அக்குணமிருந்தால் அதைவிட்டும் நீங்குவதற்குத் தந்திரமென்ன? என்பதில் ஆராய்வதாம். ஆகவே தினந்தோறும் காலையில் ஒரு ஸாஅத்து நேரத்தை இந்த ஆராய்தலுக்காகக் குறித்துக் கொள்ளவேண்டும். முதலில் வெளிப்படையான பாவங்களில் நாவின் பாவத்தைப்பற்றி ஆராய்வான். அதாவது: நான் இன்றையில் எந்தப்பேச்சில் சிக்குவேன்? ஒரு சமயம் புறம்பேசுவதிலும் பொய்சொல்லுவதிலும் விழக்கூடும் என்று ஆராய்தல் செய்து அதை விட்டும் எப்படித் தப்புகிறது? அதற்குத் தந்திரமென்ன? என்பதில் நோட்டமிடுவான். இதேபோல் ஹறாமான உணவை உண்ண நேரிடுமென்கிற அச்சமிருந்தால் அதைவிட்டும் தப்புவதெப்படி என்பதில் ஆராய்வான். இப்படியே தன் ஒவ்வொரு உறுப்புகளைப்பற்றி ஆராய்வான். எல்லா வணக்கங்களிலும் ஆராய்வான். இவற்றின் ஆராய்தல் முடிந்தால் அதிகவரிசைப்பாடுள்ள அமல்களையும் செய்வதற்காக அவைகளைப்பற்றி ஆராய்தல் செய்வான். உதாரணமாக:—அவன்தன் மனதுக்குள் இந்த நாவானது திக்ருக்காகவும் முஸ்லிம்களுக்குச்சுகத்தை யுண்டாக்கவும் படைக்கப்பட்டிருக்கிறது என்றும், நான் இன்ன திக்ரைச்செய்யவும் இன்ன நல் வார்த்தையைச் சொல்லி ஒருவரைச் சந்தோஷப்படுத்தவும் சக்தியுள்ளவனாயிருக்கிறேன் என்றும், கண்ணானது என் கற்பதவிக்குரிய சன்மார்க்கத்தை நான் வேட்டையாடும்பொருட்டு எனக்கு ஒரு வலையாகப் படைக்கப்பட்டிருக்கிறது என்றும், இதனால் இன்ன ஆலிமை நான் கனப்படுத்தும் பார்வையாகப் பார்ப்பேன், இன்ன பாவியை இழிவாக்கும் பார்வையாகப் பார்ப்பேன் என்றும், பொருளானது முஸ்லிம்களின் சவுக்கியத்துக்காகப் படைக்கப்பட்டிருக்கிறது என்றும், இன்னானுக்கு நான் சதகா கொடுப்பேன் என்றும், என் வேண்டுதலுக்கு அது தேவையாகிற பக்ஷம் நான் சபுருசெய்துகொண்டு அதை ஈஸாரு செய்வேன் என்றும், இப்படித் தினந்தோறும் இவைகளிலும் இவை போன்றவைகளிலும் நோட்டமிட்டு ஆராய்தல் செய்வான். இப்படி ஒரு ஸாஅத்து நேரம் ஆராய்வதினால் ஒரு சமயம் அவன் ஆயிசு பரியந்தம் இனி பாவமே செய்யாமலிருக்கும்படி ஏதோ ஓர் எண்ணம் வந்து நுழையவும் கூடும். இதுநிமித்தமே ஒரு ஸாஅத்து நேரம் ஆராய்தல் ஒரு வருஷத்தின் இபாதத்தைவிட அதிக நல்லதென்றது. ஏனெனில் அதன் பயன் வயது முழுவதுமிருப்பதினாலென்க. வெளிப்படையான

வணக்கங்களிலும் பாவங்களிலும் ஆராய்தல்செய்து ஆய்விட்டால் பிறகு உள்ளத்தில் பிரவேசிப்பான். கெட்டகுணங்களைப் போக்கும் பொருட்டு அவைகளில்நின்றும் தனது உள்ளத்தில் எந்தெந்தக் குணங்களிருக்கின்றன என்றும், நல்ல குணங்களைச் சம்பாதிக்கும் பொருட்டு அவைகளில்நின்றும் தன்னிடத்தில் இல்லாத குணங்கள் எவை என்றும் ஆராய்தல் செய்வான். இதுவும் நீண்டதாயிருக்கிறது. ஆயினும் கெட்டகுணங்களின் மூலங்கள் பத்தேயாம். அவை: உலோபகுணம்,பெருமை, அகம், ரியா, பொறாமை,கொடுங்கோபம், ஊணுவல்; பேச்சு விருப்பம், பொருளாசை, பெரியதனப்பிரியம் இவைகள்தாம். இவற்றினின்றும் மீட்சியடைவானாகில் போதும். நல்ல குணங்களின் மூலங்களும் பத்தேயாம். அவை: பாவத்தின் மீது மனம் நாணல், துன்பத்தில் சபுருசெய்தல், கற்பனைக்குப் பொருத்தமாயிருத்தல், செல்வத்தில் ஷுக்குருசெய்தல், அச்சத்தையும் ஆசையையும் சமனாகவைத்தல், துன்யாவில் வெறுப்புவைத்தல், வணக்கத்தில் பிறிதொன்றைக் கலக்காதிருத்தல், ஜனங்களோடு நற்குணமாயிருத்தல், அல்லாகு தஆலாவை ஆசித்தல் இவைகள்தாம். இக்குணங்களில்நின்றும் ஒவ்வொன்றிலும் ஆராய்தலுக்கு விசாலமான இடமிருக்கிறது. இதில் ஆராயும் வழி யாருக்குத் திறக்குமென்றால், இக்குணங்களைக் குறித்து இக்கிதாபில் சொல்லியிருக்கிற அறிவுகளை அறிந்தவன் எவனோ. அவனுக்கே என்க. முரீதானவன் இக்குணங்களின் அட்டவணையொன்று தனக்காக எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். நற்குணங்களில் ஒன்றைச் சம்பாதித்துக் கொண்டால் அல்லது கெட்டகுணங்களில் ஒன்றைத் தன்னிடத்திலிருந்து நீக்கினால் அட்டவணையில் எழுதப்பட்டிருக்கிற அக்குணத்தின்பேரில் ஒரு கோடு கீறுவான், பின்பு மற்றொரு குணத்தில் பராக்காகுவான். இக்குணங்களின் ஆராய்வுகளில்நின்றும் சில ஆராய்வு சிலருக்கு மிகவும் முக்கியமாயிருக்கக்கூடும். ஏனெனில் யார் எக்குணத்தில் அதிகமாகச் சிக்குண்டிருக்கிறார்களோ அவர்கள் அதில் ஆராய்வது ஆவசியகமாதலாலென்க. உதாரணமாக:—இந்தத் துர்க்குணங்களையெல்லாம் விட்டுப் பேணுதலுள்ளவனாயிருக்கிற ஒரு ஆலிம் அநேகமாகத் தன் இல்மினால் தன்னை மற்றவருக்கு மேலாக நினைக்காமலும், அதனால் தனக்குக் கீர்த்திபிரக்கியாதிகளைத் தேடாமலும்,ஜனங்களுடைய கண்களில் தன் இபாதத்தையும் ரூபத்தையும் அழகுபடுத்திக் காட்டாமலும், ஜனங்கள் தன்னை ஏற்கும்போது சந்தோஷப்படாமலும், யாராவது தன்னைத் தூஷணம் செய்தால் அவனைப்பற்றி மனதில் வஞ்சகம்வைக்காமலும் அவனுக்குப் பதில் செய்வதில் பராக்காகாமலும் இருக்கமாட்டான். இவையெல்லாம் கெட்டவைகளாயிருக்கின்

றன. ஆனால் அதிக மறைவாயிருக்கின்றன. இவையெல்லாம் தீனைக் கெடுக்கிற வித்துகளாம். ஆதலால் அந்த ஆலிம் இவைகளைவிட்டு நீங்குவதெப்படி என்பதில் தினந்தோறும் ஆராய்தல் செய்யவேண்டும். அவனுடைய முழு நோக்கமும் அல்லாகு தஆலாவில் இல்லாத வரையில் ஜனங்கள் பார்ப்பதையும் பார்க்காமலிருப்பதையும் அவன் எப்படிச் சமமாக எண்ணுவான்? இதில் ஆராய்தலுக்கு அதிக இடமிருக்கிறது. இதனால் விளங்குகிறதென்னவென்றால் அடியான் தன்னுடைய நற்குண துர்க்குணங்களான இவ்விருவகைக்குணங்களில்ஆராயும் ஆராய்வே எல்லையற்றதா யிருக்கிறதென்றால் அதன் முழுவிஸ்தரிப்பைச்சொல்ல முடியாதென்பதுதான். வஸ்ஸலாம்.

இரண்டாவது மைதான வெளி—ஹக்கு தஆலாவில் ஆராய்தல்.

ஹக்கு தஆலாவில் ஆராய்தலென்பது இருந்தால் அவனது ஜாத்து ஸிபாத்துகளிலாயிருக்கும். அல்லது அவன் செயல்கள் ஸிருஷ்டிகளிலாயிருக்கும். அல்லாகு தஆலாவுடைய ஜாத்து ஸிபாத்துகளில் ஆராய்தல் எல்லாவற்றினும் மேலான தானமாயிருக்கிறது. ஆயினும் ஜனங்கள் அதற்குச் சக்தியில்லாதவர்களாயும் புத்திகள் அதில் செல்லாதனவாயு மிருப்பதால் ஷரீஅத்தானது அந்த விசாரணையை வேண்டாமென விலக்கி "நீங்கள் அதில் ஆராய்தல் செய்யாதீர்கள்" என்றும், "திடனாக நீங்கள் அதன் மகத்துவத்தை அறியமாட்டீர்கள்" என்றும் சொல்லியிருக்கிறது. அவனது ஜலாலியத்தென்னும் மகத்துவத்தை அறியக் கஷ்டமாயிருப்பது அது மறைந்திருப்பதினால் அல்ல, மேலும் அதன் பிரகாசத்தினாலேயாம். ஏனெனில் அது பெருஞ் சோதியாயும் ஜனங்களுடைய அறிவாகிய பார்வைப் பெலங் குன்றினதாயும்இருப்பதால் அதைப்பார்க்க அவ்வறிவுக்குச் சக்தியில்லை. மேலும் அதில் திகில்கொண்டு அவ்வறிவு தடுமாறும். உதாரணமாக :— வௌவாலானது பகலில் பறப்பதில்லை. ஏனெனில் அதன்கண் பெலஹீனமா யிருப்பதுபற்றிச் சூரிய வெளிச்சத்தைப்பார்க்க அதற்குச் சக்தி யில்லாமையால் பகலில் அதற்குக் கண் தெரிகிறதில்லை. இரவில் சூரிய வெளிச்சம் ஏதோ கொஞ்சம் மிச்சப்பட்டிருப்பதினால் அதற்குக் கண்தெரிகிறது. அவாமுன்னாஸ் என்னும் சாமானிய ஜனங்கள் இதே பதவியி லிருக்கிறார்கள். ஆயினும் ஸித்தீகுகளுக்கும் மஹான்களுக்கும் இந்தப் பார்க்கும் சக்தியுண்டு. என்றாலும் இடைவிடாமல் எப்போதும் பார்த்துக்கொண்டிருக்க அவர்களும் சக்தியற்றவர்க ளாவார்கள். உதாரணமாக:—ஜனங்கள் சூரிய வட்டத்தைப் பார்க்கச் சக்தியுள்ளவர்களா யிருந்தபோதி

னும் இடைவிடாமல் ஒரே பார்வையாகப் பார்ப்பார்களாகில் அவர்கள் கண் குருடாய்ப்போ மென்கிற அச்சமிருக்கிறது. இதேவிதமாக ஹக்கு தஆலாவில் பார்ப்பதும் அறிவின்மையாய்ப்போம். பின்னர் பெரியோர்களான மஹான்கள் ஹக்கு தஆலாவுடைய சிபத்துகளின் உண்மைகளில் எதையாவது அறிந்தால் அதை ஜனங்களுக்குச்சொல்ல அவர்களுக்கு உத்தரவில்லை. ஆனால் அந்த சிபத்துகளை ஜனங்களுடைய சிபத்துகளுக்குச் சற்று அடுத்திருக்கும்படியான சொற்களால் சொல்லும்படி உத்தரவிருக்கிறது. எதுபோலெனில் ஆலிமுன், முரீதுன், முத்தகல்லிமுன் என்று நீ சொல்வதுபோலென்க. இந்தச் சொற்களால் மனிதன் ஏதோ ஒரு பொருளை விளங்கிக் கொள்ளுகிறான். அன்றியும் தன் சிபத்துகளின் இஸத்திலுள்ளதாகவும் தெரிந்துகொள்ளுகிறான். இது ஒரு தஷ்பீஹா (ஒப்பாக்கல்) என்றாகும். ஆனால் இந்த சிபத்துகளில்நின்றும் உதாரணமாக :— அவனை முத்தகல்லிமுன் (பேசுகிறவன்) என்று சொல்லும்போது அவன் பேச்சு உன்னுடைய பேச்சைபபோல் எழுத்தும் சப்தமும் ஒன்றன்பின் ஒன்றான தோரணையும் இடையில் விடுவதென்னும் தறிப்பும் உள்ளதல்ல என்று இவ்வளவு அவனுக்குச் சொல்லவேண்டும்.நீ இதைச்சொன்னால் ஒரு சமயம் அவன் இதை விளங்கச் சக்தியில்லாதவனாய் மறுக்கவும் கூடும். எதுபோலெனில்,நீ அவனிடத்தில் அல்லாகு தஆலாவுடைய ஜாத்தானது உன்னுடைய ஜாத்தைப்போன்றதல்ல அவன் ஜவ்ஹரும் அல்லன், அர்ளும் அல்லன், ஒருதலத்தில் இருப்பவனும் அல்லன், ஒருதலத்தின்மேல் இருப்பவனும் அல்லன்,திசையில் இருப்பவனும் அல்லன், ஆலத்துடன் சேர்ந்திருப்பவனும் அல்லன், ஆலத்தைவிட்டுப் பிரிந்திருப்பவனும் அல்லன், ஆலத்துக்கு வெளியே இருப்பவனும் அல்லன், ஆலத்துக்கு உள்ளே இருப்பவனும் அல்லன் என்று சொல்லும்போது அவன் இதையும் மறுத்து இப்படியாக ஒரு பொருள் இருப்பது அசாத்தியம் என்று சொல்வதுபோலென்க. அவன் இப்படி மறுப்பதற்குக் காரணம் யாதெனில் அல்லாகு தஆலாவை அவன் தன்னோடு ஒத்திட்டுப் பார்ப்பதும் அதனால் ஒரு மகிமையும் அவனுக்கு விளங்காமலிருப்பதுமாம். ஏனெனில் ஜனங்கள் பார்த்திருக்கக்கூடிய மாட்சிமையெல்லாவற்றிலும் மேலிட்டது அரசாங்க மாட்சிமையேயாம். அரசன் சிம்மாசனத்தில் கொலுவிருப்பதையும் அவன் முன்பாக வேலைக்காரர் நின்றுகொண்டிருப்பதையும் இவர்கள் அறிவார்கள். ஆகவே அல்லாகு தஆலாவையும் அதேபோல் நினைத்து அவனுக்கும் கை, கால்,

கண், வாய், நா இவை இருப்பது அவசியம் என்று சொல்லுகிறார்கள். இவ்வுறுப்புகள் இவர்களுக்கு இருக்கக் காண்கிறதினால் அவனுக்கு இவை இல்லாமற்போவது தோஷமாகும் என்று எண்ணுகிறார்கள். இவர்களுக்கிருப்பதுபோல் ஈக்கும் ஒரு புத்தியிருந்தால் அது என்னைப்படைத்த இறைவனுக்கு இறக்கையும் சிறகும் இருக்கும் என்றும், எனக்குப் பெலமாயும் வலுவாயுமிருக்கிற ஒரு வஸ்து என்னில் இருக்க அவனில் அது இல்லாமற் போவதுகூடாது என்றும் சொல்லும். இதுபோலவே எல்லாக் காரியங்களையும் மனிதன் தன் காரியத்தோடு ஒத்திட்டுப் பார்க்கிறான். இதன்நிமித்தமே அல்லாகு தஆலாவில் விசாரணை புரியவேண்டாம் என்று ஷரீஅத்தானது தடைசெய்திருக்கிறது. இன்னுமிதனாலேயே இல்மூல்கலாமைப் படிக்கவேண்டாம் என்று சலபுகளான முன்னோர்கள் விலக்கியிருப்பதுமன்றி "அல்லாகு தஆலா ஆலத்துக்கு உள்ளேயும் இல்லை ஆலத்துக்கு வெளியேயுமில்லை சேர்ந்துமில்லை பிரிந்துமில்லை" என்று இப்படி வெளிப்படையாகச்சொல்வது கூடாது எனக் காண்பவராயுமிருந்தார்கள். மேலும் அவர்கள் ஒரு வஸ்தும் அவனைப்போன்றதல்ல. அவன் ஒரு வஸ்துவைப் போன்றவன் அல்லன் என்று இதை விஸ்தரிக்காமல் மொத்தமாகச்சொல்லி இதையே போதுமாக்கிக் கொண்டவர்களாயும் இதை விஸ்தரிப்பது பித்அத்து என்று எண்ணுகிறவர்களாயுமிருந்தார்கள். ஏனெனில் ஜனங்களில் பெரும்பாலாருடைய புத்திகளில் அந்த விஸ்தரிப்பு அமையாதாகையினாலென்க. இன்னுமிதனாலேயே நபிமார்களில் ஒருவருக்கு அல்லாகு தஆலா "ஓ நபியே! நீர் என் அடியார்களுக்கு என் சிபத்துகளை அறிவிக்கவேண்டாம்" என்றும், "அவற்றை அவர்கள் மறுப்பார்கள்" என்றும், "அவர்கள் விளங்கிக்கொள்ளக்கூடியதையே அவர்களுக்குச் சொல்லும்" என்றும் வஹீ அனுப்பினான். ஆதலால் இதைக்குறித்துப் பேசாமலும் விசாரணைபுரியாமலும் இருப்பதே மிகவுத்தமமாகும். எங்கிலும் கிறப்பத்தையுடையவனாயிருந்தால் அவன் ஆராய்தல் செய்யலாம். பின்பு அவனும் கடைசியாக திடுக்கங்கொண்டு அகத்தியம் தடுமாறி விழுவான். ஆதலால் மனிதர்கள் அவனது மகிமையை அவனுடைய சிருஷ்டியின் புதுமைகளில் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஏனெனில் தோன்றியிருப்பவை யாவும் அவனது மகிமையும் வல்லமையுமான ஒளி. வீசின்றும் ஓர் ஒளியாயிருக்கிறது. ஒருவன் சூரியவட்டத்தைப்பார்க்கச் சக்திபெறாதவனாயிருந்தபோதிலும் பூமியின்மீது விழுந்து பரவியிருக்கிற அதன் பிரகாசத்தைப் பார்க்கக்கூடும்.

## மூன்றும் மைதான வெளி—அல்லாகு தஆலாஉடைய சிருஷ்டியின் புதுமைகளில் ஆராய்வதாம்.

அறிந்துகொள்:—தோன்றியிருப்பனவெல்லாம் அல்லாகுதஆலா உடைய சிருஷ்டிகளாயிருக்கின்றன. அவை யாவும் புதுமையும் விநோதமுமேயாம். வானம் பூமிகளில் நிறைந்துள்ள அணுக்களில் நின்றும் ஓரணுவாவது தன் சிருஷ்டிகர்த்தாவைத் தனது நிலைமையென்னும் நாவால் தஸ்பீஹு செய்து அவனைத் துதித்து இதுவே பூரணவல்லமை! இதுவே எல்லையற்றஞானம்!! என்று சொல்லாதபடி இருப்பதில்லை. இதுவோ விவரித்துச் சொல்லவராத அவ்வளவு விரிவாயிருக்கிறது. மேலும் எல்லாச்சமுத்திரங்களும் மையாகி எல்லா விருக்ஷங்களும் எழுதுகோலாகி எல்லாச் சிருஷ்டிகளும் எழுதுகிறவர்களாகி அவர்கள் நீடிய வயது ஜீவித்திருந்து எழுதினாலும் உள்ள புதுமைகளில்நின்றும் அவர்கள் எழுதினது கொஞ்சமேயாம். அல்லாகுதஆலா அருளிச்செய்திருப்பதுபோல் அது வருமாறு:—முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே! நீர்சொல்லும். என்றப்புடையகலிமாக்களை எழுதுவதற்காகச் சமுத்திரம் மையாய்ப்போகிறபக்ஷம் என்றப்புடையகலிமாக்கள்எழுதித்தீருமுன்சமுத்திரமைசெலவாய்ப்போம். உதவிக்காக அச்சமுத்திரம்போல் இன்னுமொன்றை நாம் கொண்டுவந்தாலும் சரி என்பதே. ஆயினும் மொத்தத்தில் நீ அறிந்துகொள்ள வேண்டியதாவது:— சிருஷ்டிகள் இருவகைப்பட்டிருக்கின்றன. அதில் ஒருவகைச் சிருஷ்டியைக்குறித்து நமக்கு ஒன்றுமே தெரியாது ஆதலால் அதில் விசாரணைபுரியவும் நம்மால் முடியாது. உதாரணமாக:—பூமி முளைப்பிக்கிறவைகளில்நின்றும் இன்னும் மனிதர்களில்நின்றும் இன்னும் அவர்கள் அறியாதவைகளில்நின்றும் இனம் இனமாக அவை எல்லாவற்றையும் படைத்தவன் தூயவன் என்று அல்லாகு தஆலா திருவுளமாயிருக்கிறான். இனி நாம் அறிந்திருக்கிற மற்றொருவகைச் சிருஷ்டியும் இருவகைப்படும். அதில் ஒருவகை அருஷு, குருசி, மலக்குகள், ஜின்னுகள் முதலியவைபோல் நாம் பார்க்கமுடியாதவைகளாம். அவைகளில் ஆராயும் விஸ்தரிப்பை இந்தச் சுருக்கத்தில் சொல்லமுடியாது. ஆதலால் நமது கண்ணுக்குப் புலப்படுகிற மற்றொருவகையை மாத்திரம் நவில்கின்றோம். அவை வானமும் சூரியனும் சந்திரனும் நக்ஷத்திரங்களும் பூமியும் அதன்மீதுள்ள மலைகள், காடுகள், சமுத்திரங்கள், நாடு நகரங்கள் இவைகளும் மலைகளில் புதைந்துள்ள இரத்தினங்களும் மற்றும் புதைப்பொருள்களும் பூமியில் முளைத்தெழும்பும் தாவரவர்க்கங்களும் மனிதன் நீங்க

லாகப் பூமியிலும் சமுத்திரத்திலும் உண்டாகி மனிதனுக்கு உபயோகப்படுகிற ஜீவவர்க்கங்களுமாம் மனிதனே எல்லாவற்றிலும் பெரிய புதுமையானவன். இன்னும் வானத்துக்கும், பூமிக்கும் மத்தியிலுள்ள மேகம், மழை, பனி, கல்மழை, இடி, மின்னல், வானவில், மற்றும் ஆகாயத்தில் தோன்றும் அடையாளங்கள இவைகளுமாம். ஆதலால் ஆராய்தலின் மொத்தத்தொகுதியான இடங்கள் இவைகளேயாம். விசாரணை புரிவதற்கு இவை ஒவ்வொன்றிலும் விசாலமான இடமிருக்கிறது. இவையாவும் அவனது சிருஷ்டியின் அதிசயங்களாயிருக்கின்றன. இனி நாம் இவைகளில்நின்றும் சிலவற்றைச் சுருக்கமாகக் காட்டுகிறோம். இவையெல்லாம் நீ ஆராய்ந்து நோட்டமிடும்படி அல்லாகு தஆலா உனக்கு ஆக்கியாபித்துக் கூறியிருக்கிற அவனுடைய ஆயத்துகளாயிருக்கின்றன. உதாரணமாக:— வானங்களிலும் அவர்கள் நடந்துசெல்லும் பூமியிலும் எத்தனையோ திருஷ்டாந்தங்க ளிருக்கின்றன. அவர்களதைக் கவனிக்காமல் புறக்கணித்தவர்களாக அதன்மேல் நடந்துசெல்லுகிறார்கள் என்றும், வானங்களுடையவும் பூமியுடையவுமான அரசாட்சியிலும் மற்றும் பொருட்களில்நின்றும் அல்லாகு தஆலா படைத்திருப்பதிலும் அவர்கள் நோட்டமிடவில்லையா என்றும், வானங்களுடையவும் பூமியுடையவுமான சிருஷ்டிப்பிலும் இரவு பகல்களின் மாறுட்டத்திலும் அறிவாளருக்குத் திடனாக அத்தாட்சிக ளிருக்கின்றன என்றும் அல்லாகு தஆலா திருவனமாயிருக்கிறான். இவ்விதமான ஆயத்துகள் இன்னும் அநேகமிருக்கின்றன. ஆதலால் இந்தத் திருஷ்டாந்தகளில் ஆராய்தல்செய்.

உனக்கு அதிக சமீபமாயிருக்கிற முதல் திருஷ்டாந்தம் நீயாயிருக்கிறாய். உன்னைவிட அதிக ஆச்சரியமானது இப்பூமியில் ஒன்றுமேயில்லை. நீயோ உன்னை மறந்தவனாயிருக்கிறாய். உங்கள் நபுசுகளில் திருஷ்டாந்தமிருக்கிறது. நீங்கள் அதை ஆராய்ந்து பார்க்கிறதில்லையா? என்று அல்லாகு தஆலா திருவுளமாயிருப்பதில் "நீ நம்முடைய மகத்துவத்தைப் பார்ப்பதற்கு உன்னில் நோட்டமிடு" என்று அவன் உன்னை விளித்துச்சொல்லுகிறான். ஆதலால் நீ எங்கிருந்து வந்தவன் என்று உன் ஆரம்பத்தை விசாரணைசெய். ஏனெனில் துவக்கமாக அல்லாகு தஆலா உன்னை ஒரு நீர்த்துளியிலிருந்து படைத்திருக்கிறான். அந்தநீர்த்துளிக்குத் தகப்பனுடைய முதுகையும் தாயுடைய நெஞ்சையும் ஆதியிடமாக அமைத்தான். பின்பு அதை உன் உற்பத்திக்கு வித்தாக்கினான். தாய்தந்தையருக்கு ஆசையைவிட்டான். தாய்மார்களுடைய கருப்பையை பூமியாகவும் ஆடவர்களுடைய முதுகில்

தங்கியநீரை விதையாகவும்செய்து அவ்விருவருக்கும் ஆசையைவிட்டுப் பூமியில் விதையைத் தூவும்படி தூண்டினான். அந்தவிதைகருச் ருதுக உதிரத்தைத் தண்ணீராக்கினான். ஆகவே உன்னை விந்தினாலும் ருதுக உதிரத்தினாலும் உண்டாக்கினான். முதலில் அதை அலகா என்று சொல்லப்படுகிற இரத்தக்கட்டியாக்கினான். பின்பு முல்கா என்றுசொல்லப்படுகிற சதைக்கட்டியாக்கினான். பின்பு அதில் ரூஹை ஊதினான். பின்பு ஒரே குணமுள்ள அந்த நீரிலும் இரத்தத்திலுமிருந்து தோல், சதை,நரம்பு,சவ்வு,எலும்புபோல் பற்பலவகையான பொருள்களை உன்னில் வெளியாக்கினான். பின்பு அவைகளால் உன் அவயவங்களை உருவப்படுத்தினான். உருண்டையான ஒரு தலையையும் நீண்ட இரண்டு கை கால்களையும் ஒவ்வொன்றின் முனையில் ஐந்து விரல்களையும் அமைத்தான். பின்பு வெளியங்கத்தில் கண், மூக்கு, காது, வாய், நா இவைகளையும் இதர உறுப்புகளையும் அமைத்தான். உள்ளங்கத்தில் இரைக்குடல், ஈரல், மண்ணீரல், குண்டிக்காய், பித்து, கருப்பை, நீர்ப்பை, மணிக்குடல் இவைகளை அமைத்தான். இவைகளில் ஒவ்வொன்றையும் வெவ்வேறு ரூபத்திலும் வெவ்வேறு குணத்திலும் வெவ்வேறு அளவிலும் உண்டாக்கினான். பின்பு இவைகளில் ஒவ்வொன்றையும் பலபாகங்களாய்ப் பிரித்தான். ஒவ்வொரு விரலுக்கு மூன்று கணுக்கள் வைத்தான். ஒவ்வொரு உறுப்பையும் தோல் சதை நரம்பு சவ்வு எலும்பு இவைகளால் கூட்டினான். ஒரு வாதுமைப்பயறின் அளவுக்குமேல் அதிகமில்லாத உன் கண்ணை ஏழுவகுப்புகளாகப் படைத்திருக்கிறான். ஒவ்வொரு வகுப்பையும் வெவ்வேறு குணமுள்ளதாகப் படைத்தான். அவைகளில் ஒன்று சேதப்படும்பக்ஷத்தில் உலகம் உனக்கு இருண்டுபோம். கண்ணின் புதுமைகளைத் தனியாக நாம் விஸ்தரித்தெழுதுகிற பக்ஷத்தில் அநேகம் காயிதங்களைக் கறுப்பாக்கவேண்டும். பின்பு நுண்ணியதும் மெல்லியதுமான நீரினால் அவன் உன் எலும்புகளை எப்படிக் கெட்டியும் உறுதியுமுள்ள ஒரு உடம்பாகப் படைத்திருக்கிறான் பார். அவைகளில் ஒவ்வொரு துண்டையும் வெவ்வேறு ரூபமும் அளவுமுள்ளதாகவும் சிலவற்றை உருண்டையாகவும் சிலவற்றை நீளமாகவும் சிலவற்றை அகலமாகவும் சிலவற்றைப் போரையாகவும் சிலவற்றைக் கெட்டியாகவும் படைத்தான். எல்லாவற்றையும் ஒன்றோடொன்றுபொருந்தும்படி இணைத்துவிட்டான். ஒவ்வொன்றின் வடிவத்திலும் ரூபத்திலும் அளவிலும் ஆழ்ந்த ஒவ்வோர் கருத்திருக்கிறது. ஒருகருத்தென்ன? மேலும் அநேகம் நோக்கங்க ளிருக்கின்

றன. பின்பு எலும்புகளை உன் உடம்புக்குத் தூணாக்கி அதன்மேல் எல்லாவற்றையும் எழுப்பியிருக்கிறான். அந்த எலும்பு ஒரே துண்டாயிருந்தால் நீ உன் முதுகை வளைக்கமுடியாது. பலதுண்டுகள் ஒன்றோடொன்று பொருந்தியிராவிட்டால் நீ யுன் முதுகை நேராக்கவும் காலை ஊன்றி நிற்கவும் முடியாது. ஆதலால் நீ குனியவும் நிற்கவும் சாதகமாயிருக்கும்படி அந்த எலும்புகளை மணிமணியாகப் படைத்து ஒன்றோடொன்றைப் பொருத்திவிட்டான். பிறகு அதன்மேல் சவ்வையும் நரம்புகளையும் சுற்றி உறுதிப்படுத்தினான். ஏனெனில் ஒரே எலும்புபோல் நேராய்நிற்கவேயாம். இணைப்புக்குந் தேவையாயிருந்தநிமித்தம் ஒவ்வொரு மணியெலும்பிலும் கோலிகள்போன்ற நாலுதுண்டுகளை வெளியே நீட்டி அதற்குக்கீழிருக்கும் மணியெலும்பில் அவைபொருந்தி உறுதியாகநிற்கும்படி அதில் குழிகுழியாக நான்கு பள்ளங்களை அமைத்தான். மணியெலும்புகளின் ஓரங்களைச் செட்டைகள்போல் வெளியே புறப்படவைத்து அவ்வெலும்புகளின் உறுதிக்காக அவற்றின்மேல் சுற்றப்பட்டிருக்கிற சவ்வுகளை அந்தச் செட்டைகளில் கெட்டியாகப் பிடித்திருக்கும்படி செய்தான். உன் தலைமுழுவதையும் ஐம்பத்தைந்து துண்டெலும்புகளால் அமைத்து அவை ஒவ்வொன்றையும் சிறு சிறு பொருத்துவாய்களால் இணைத்துவிட்டான். ஏனெனில் தலையின் ஒருபக்கத்துக்கு ஏதும் ஆபத்தணுகினால் மற்றொருபக்கம் இடர்படாமலிருக்கவும் எல்லாம் நொறுங்கிப் போகாமலிருக்கவுமேயாம். இன்னும் பற்களை அமைத்தான். ஆகாரத்தை மசிய அரைக்கும்பொருட்டுச் சில பற்களின் தலையை (திருகைபோல்) அகலமாகவும் ஆகாரத்தை நறுக்கிச் சிறு துணிக்குகளாக்கி அந்தப்பற்களான திருகையில் தள்ளும்படி. சில பற்களின் முனையை மெல்லியதாகவும் கூரியதாகவும் அமைத்தான். பின்பு கழுத்தை எழு துண்டெலும்புகளால் அமைத்து அதன்மேல் சுற்றப்பட்டிருக்கிற நரம்பாலும் சவ்வாலும் அதைப்பெலப்படுத்தித் தலையை அதன்மேல் பொருத்தினான். முதுகை இருபத்துநான்கு மணியெலும்புகளால் அமைத்துக் கழுத்தை அதன்மேல்வைத்தான். பின்பு இந்த முதுகெலும்புகளின் அகலத்தில் நெஞ்செலும்புகளை ஆக்கினான். மற்றும் எலும்புகளையும் இதுபோலவே ஆக்கினான். அதன் விஸ்தரிப்பு நீளமாயிருக்கிறது. மொத்தத்தில் உன் உடம்பில் இருநூற்று நாற்பத்தேழு துண்டெலும்புகளைப் படைத்திருக்கிறான். ஒவ்வொன்றையும் வெவ்வேறு ஆழ்ந்த கருத்துக்காக உண்டாக்கினான். ஏனெனில் உன் காரியத்துக்கு நேராயும் தயாராயுமிருக்கவே

யாம். இவை எல்லாவற்றையும் நுண்ணியதும் மெல்லியதுமான ஓர் நீரினால் உண்டாக்கினான். இந்த எலும்புகளில் ஒன்றாயினும் குறைந்திருக்கிறபக்ஷம் நீ ஒருவேலையையும் செய்யக்கூடாதவனாயிருப்பாய். ஒரு எலும்பு அதிகமாயிருக்கிற பக்ஷத்திலும் நீ கஷ்டப்படுவாய். நீ இந்த எலும்புகளையும் உறுப்புகளையும் அசைக்கவேண்டியவனாயிருப்பதுபற்றி உன்னுடைய எல்லா உறுப்புகளிலும் ஐந்நூற்று இருபத்தேழு நரம்புகளை உண்டாக்கினான். ஒவ்வொரு நரம்பையும் மச்சரூபத்தில் நடுதடித்தும் முனைமெலிந்துமிருக்கும்படி அமைத்தான் அவை ஒவ்வொன்றையும் சதையும் சவ்வுமான திரையால் உறைபோல் மூடிக்கொண் டிருக்கச்செய்தான். அந்த நரம்புகளில்நின்றும் இருபத்தாறு நரம்புகள் நீ உன்கண்ணையும் இமையையும் எல்லாப் பக்கத்திலும் திருப்பக் கூடுவதற்காக அமைக்கப்பட் டிருக்கின்றன. மற்றவைகளை யெல்லாம் இதன்படி யோசித்துக்கொள். ஏனெனில் அதை விஸ்தரிப்பதும் நீளமாகும். பின்பு உன் தேகத்தில் மூன்று சிறு குளங்களை உண்டாக்கி அவைகளிலிருந்து தேகமுழுமைக்கும் கால்வாய்களைத் திறந்தான். முதலாவது:—தலைமூளை யென்னுங் குளமாம். அதிலிருந்து அஃஸாபு என்னும் நரம்புகளான கால்வாய்கள் புறப்பட்டுத் தேகமுழுமைக்கும் செல்லுகின்றன. ஏனெனில் ஐம்புலன்களுக்கும் அசைவுக்கும் ஆதாரமாயிருக்கிற சக்தி அவற்றின் வழியால் செல்வதற்கேயாம். அவைகளில் ஒரு கால்வாயை முதுகெலும்புகளுக்குள்ளே அமைத்தான். ஏனெனில் முதுகெலும்பின் மூளை வறண்டுபோகாதபடி அந்த நரம்பு அதன் கிட்டேயிருந்து அதைக் காத்துக்கொள்ளவேயாம். இரண்டாவது:—ஈரல் என்னுங் குளமாம். அதிலிருந்து சர்வாங்கத்தின் நரம்புகள் பிரிந்து அவற்றின் வழியாய் ஆகாரசத்து தேகமுழுமைக்கும் செல்லுகின்றது. மூன்றுவது:—இருதயகமலமென்னுங் குளமாம். அதிலிருந்து தேகமுழுமைக்கும் ரூஹ ஹைவானி நடப்பதற்கு நரம்புகளென்னும் கால்வாய்களைத் திறந்தான். ஏனெனில் சர்வாங்கத்திற்கும் ஜீவன் இருதயத்திலிருந்தே செல்லுகின்றதாலென்க.

ஆதலால் நீ உன்னுடைய ஒவ்வொரு உறுப்பிலும் யோசித்து அல்லாகுதஆலா அவைகளை என்னவிதமாக அமைத்திருக்கிறான் என்பதையும்எதற்காகஅவ்விதமாகப்படைத்தான்என்பதையும் நோட்டமிடு. கண்ணை எழுவகுப்புகளாக வகுத்து இதினும் நல்லமாதிரி அமைவது சாத்தியப்படாதென்கிற வடிவமாகவும் நிறமாகவும் அமைத்திருக்கிறான். அதில்படும் தூசியைத் துடைத்துச் சுத்தப்படுத்தும் பொருட்டு இமைகளைப் படைத்திருக்கிறான். இமைகளை நேர்மையாக

வும் கருமையாகவும் படைத்தான். இவ்விதமாக அமைத்தது எதற்கெனில், நீ அழகாயிருப்பதற்கும் கண்பார்வை அதனால் பெலத்தை அடைவதற்கும் புழுதிபறக்கும்போது அது கண்ணில்படாமல் இமைகளால் அதை நீ மூடிக்கொள்வதற்கும் இரண்டுக்கும் நடுவேயிருந்து நீ வெளியே பார்க்கக்கூடுவதற்கும் மேலாயிருந்து குப்பை கூளங்கள் விழுந்தால் இமைகள் அதைக் காத்துக்கொள்வதற்குமாமென்க. அப்போது அது சுகம் நிறைந்த கண்ணாயிருக்கும். இவை யெல்லாவற்றிலும் பெரிய புதுமை என்னவென்றால், கண்ணில் அமைந்துள்ள கருவிழியானது சில பயறுகளின் அளவுக்குமேல் அதிகமில்லை. அப்படியிருந்தும் இவ்வளவு பெரிதான வானம் பூமிகளின் ரூபம் அதில் தோன்றுகிறது. எந்தமட்டென்றால், நீ கண்ணைத் திறந்த அதே நிமிஷத்தில் அவ்வளவு தூரத்திலிருக்கிற வானத்தைப் பார்க்கிறாய். கண்காட்சி, கண்ணாடிகாட்சி, அதில் தோன்றுகிற பெரிய காட்சி இவைகளின் புதுமைகளைக் குறித்துச் சொல்லுவார்களாகில் அநேகம் வாலியங்களில் சொல்லக்கூடும். பின்பு காதைத் துவாரமாகப்படைத்து ஒருஜந்துவும் அதில் நுழையாமலிருக்கும்படி அதற்குள்ளே கசப்பான ஒரு நீரை உண்டுபண்ணினான். பின்பு சப்தத்தை ஒருங்கே சேர்த்து அந்தத் துவாரத்தில் செலுத்தும்படி காதுமடலை அமைத்தான். அந்த மடலில் அநந்தம் சுற்றுகளை உண்டுபண்ணினான். ஏனெனில், நீ நித்திரைசெய்துகொண்டிருக்கும்போது ஒரு எறும்புவந்து உன் காதுக்குள் நுழையப்பார்த்தால் உள்ளே செல்லும் வழி அதற்குத் தூரமாயிருக்கவும் அதிகமாகச் சுற்றிக்கொண்டிருக்கவும் அதற்குள்ளாக நீ உணர்ச்சியடைந்து விழித்துக்கொள்ளவுமேயாம். இனி வாய், மூக்கு முதலிய மற்றும் உறுப்புகளைக் குறித்து விவரிப்போமாகில் நீளும். இதைச் சொன்னதில் நமது கருத்தென்னவென்றால், இதனால் நீ வழியடைந்து ஒவ்வொன்றிலும் நோட்டமிட்டு இது எதற்காக என்பதை நீ விசாரணைபுரிந்து உனது கேசாதிபாதம்வரையில் எல்லாம் புதுமைகளாயிருக்கின்றனவென்பதை நீ அறிந்து அதனால் சிருஷ்டிகர்த்தாவாகிய அல்லாகு தஆலாவினது அழிய பூராயத்தையும் மகத்துவத்தையும் அவனது அன்பையும் தயவையும் அறிவையும் வல்லபத்தையும நீ தெரிந்துகொள்ள வேண்டுமென்பதுதான்.

இனி உள்ளேயிருக்கிற அதிசயங்களும் தலை மூளையில் புதையுண்டிருக்கிற பொக்கிஷங்களும் அதில் வைத்திருக்கிற ஐயறிவுகளின் சக்திகளும் எல்லாவற்றிலும் பெரிய புதுமைகளாயிருக்கின்றன. அன்றியும் நெஞ்சிலும் வயிற்றிலுமிருக்கும் புதுமை இதைபோல் பெரும் புதுமையாம். ஏனெனில், தீனிப்பையை ஓயாமல்

கொதித்துக்கொண்டிருக்கிற ஒரு அண்டாவுக்கு ஒப்பாகப் படைத்திருக்கிறான். நாம் உட்கொள்ளும் உணவு அதில் வெந்துபதப்படுகின்றது. ஈரலானது பதப்பட்ட அந்த உணவை இரத்தமாக்குகின்றது. நரம்புகளானவை அந்த இரத்தத்தைச் சர்வாங்கத்துக்கும் செலுத்துகின்றன. பித்தானது அந்த இரத்தத்தில் நுரைத்தெழும்புகிற பித்தநீரை இழுத்துக்கொள்ளுகிறது. மண்ணீரலானது அந்த இரத்தத்தில் எஞ்சிநின்ற வண்டலாகிய கரும்பித்தத்தை எடுத்துக்கொள்ளுகிறது. குண்டிக்காயானது அந்த இரத்தத்தில்நின்றும் நீரைப் பிரித்து நீர்ப்பைக்குத் தள்ளுகிறது. கருப்பையினுடையவும் பிறப்புக்குரிய கருவிகளுடையவும் அறுவகைக் குடல்களுடையவுமான புதுமைகளும் இதேவிதமாம். இனி உருவந்தோன்றாத அருவப் பொருள்களுடையவும் அவற்றில் அமைத்துள்ள பார்வை கேள்வி புத்தி அறிவு இன்னுமிவைபோன்ற தத்துவங்களுடையவுமான புதுமைகளோ அநேகமாயிருக்கின்றன.

ஏ மனிதனே! ஸுப்ஹானல்லா! ஒருவன் ஒரு சுவற்றின்மீது அழகான ஒருரூபத்தை எழுதுவானாகில் அவனுடைய அறிவையும் சமர்த்தையும்பற்றி நீ ஆச்சரியப்படுகிறாய். அவனை ஏற்றிப் புகழ்கிறாய். எழுதுகோலும் எழுதுகிறவனும் தோன்றாமல் ஒரு நீர்த்துளியின்மீது இந்த எல்லாரூபங்களையும் அதன் உள்ளேயும் வெளியேயும் அமைத்திருக்கிற அந்த எழுத்துக்காரனுடைய மகத்துவத்துக்கு நீ ஆச்சரியப்படுகிறாயில்லை. அவனுடைய பூரண ஞானத்தையும் பூரண சமர்த்தையும்பற்றி நீ திடுக்கிட்டு பிரமைகொள்ளுகிறாயில்லை. அவனுடைய பூரண அன்பையும் தயவையும் குறித்து நீ அதிசயப்படுகிறாயில்லை. நீ உன் தாயினுடைய கர்ப்பத்திலிருக்கும்போது உனக்கு ஆகாரம் வேண்டியநிமித்தம் நீ வாயைப்பிளந்துகொண்டிருப்பாயாகில் உன் இரைக்குடலில் சூதக உதிரம் அளவுக்குமேல் அதிகமாகச் சென்று நீ சேதப்படுவாய் என்று உன் ஆகாரத்தை உன் உந்தி வழியாய்ச் சேரும்படி செய்தான். பின்பு நீ கருப்பையைவிட்டு வெளியே வந்தபோது உன் உந்திவழியை அடைத்து உன் வாயைத் திறந்துவிட்டான். ஏனெனில் உன் தாயானவள் உனக்கு வேண்டிய அளவாக ஆகாரத்தையூட்டக் கூடியவளாயிருப்பதினாலென்க. இன்னும் அந்தப் பருவத்தில் உன் உடம்பு பெலமற்றதாயும் நுண்ணியதாயும் கனமுள்ள உணவுகளை ஏற்கும் சக்தியில்லாததாயும் இருந்த நிமித்தம் உன் தாயினுடைய மெல்லிய பாலை உனக்கு ஆகாரமாக்கினான். அவளுடைய மார்பில் ஸ்தனங்களையுண்டாக்கி அவற்றின் காம்புகளை உன் வாயளவுக்குத்தக்க விதமாக அமைத்தான். ஏனெனில் பால் உன் வாயை மிகைக்காமலிருக்கவேயாம்.

இன்னும் அவளின் மார்புக்குள்ளே வண்ணானாகிய ஒரு வெளுப்பாளை ஏற்படுத்தியிருக்கிறான். ஏனெனில் அதில் செல்லுகின்ற சிவந்த இரத்தத்தை வெண்ணிறப்பாலாக்கிச் சுத்தமாகவும் மெல்லியதாகவும் உனக்கு அனுப்பவேயாம். உன்மீது உன் தாய்க்கு இரக்கத்தைக் கொடுத்தான். நீ கொஞ்சநேரம் பசித்திருப்பாயாகில் அவள் அமைதியும், சுகமும் அற்றவளாய்ப் பதறுகிறாள். பால்குடிப்புக்குப் பல் வேண்டியதில்லையாதலால் நீ உன் தாய் முலையைக் காயப்படுத்தாமலிருக்கும்பொருட்டு அந்தப் பருவத்தில் உனக்குப் பல்லை முளைப்பிக்கவில்லை. பிறகு உனக்கு உணவை உண்க சக்தியுண்டான சமயத்தில் பருவத்துக்குத் தக்கபடி பல்லை முளைப்பித்தான். ஏனெனில் மெதுவில்லாத கடின பதார்த்தங்களை நீ மெல்லக்கூடுவதற்கேயாம்.

எவன் இந்தப் புதுமைகளையெல்லாம் பார்த்து இவைகளைப் படைத்தவனுடைய மகிமையைப்பற்றித் திடுக்கிட்டு மலைக்காமலும் அவனுடைய பூரண அன்பையும் தயவையும்பற்றி அதிசயித்து பிரமிக்காமலும் அவனது ஜலால் ஜமால்களான பெருமை பேரழகுகளில் பேராசைகொள்ளாமலு மிருக்கின்றானோ அவனே கபோதியும் கண்கெட்டவனுமானவன். இன்னும் எவன் இந்தப் புதுமைகளில் ஆராய்ந்து விசாரணைபுரியாதவனும் தனது தேகத்தில் நோட்டமிடாதவனும் எல்லாவற்றிலும் அருமையானதும் தனக்கு அளிக்கப்பட்டிருப்பதுமான புத்தியை வீணாக்கினவனும் பசித்தால் பருக்கை தின்னவும் கோபம் வந்தால் ஒருவர்மேல் குதித்து விழவுமே தவிர இதற்குமேல் ஒன்றும் தெரியாதவனும் ஹக்கு தஆலாவை அறியும் மஃரிபத்தென்னும் மணமான பூஞ்சோலையில் உல்லாசமாக உலாவுவதற்கு அருகனாகாமல் மிருகங்கள்போல் நஸீபு கெட்டவனும் இருக்கிறானோ அந்த மிருகக்குணத்தனே பெரிய மறதியாளனானவன். உணர்ச்சிக்கு இவ்வளவு போதும். இது உன் சிருஷ்டிப் புதுமைகளில்நின்றும் இலக்ஷத்தில் ஒருமடங்குமல்ல. இந்தப் புதுமைகளில் பெரும்பான்மையானவை எல்லாஜீவராசிகளிலும் உண்டு. கொசுமுதல் குஞ்சரம் வரையில் எடுத்தாராய். அதை விரித்தால் பெருகும்.

இன்னுமொரு திருஷ்டாந்தம். பூமியும் அதன்மீதுள்ளவைகளும் அதற்குள்ளே யிருப்பவைகளுமாம். நீ உன்னிலுள்ள புதுமைகளை ஆராய்ந்து பார்த்தபின் இன்னும் எக்கிப் பார்க்கவேண்டுமென்று நாடுவாயாகில் பூமியைப்பார். அல்லாகு தஆலா அதை உனக்கு எப்படி விசாலமாக விரித்திருக்கிறான்! எவ்வளவாக நடந்தபோதிலும் நீ அதன் கரையோரத்துக்குச் செல்லக்கூடாதவண்ணம் அதன் பக்

கங்களை அகட்டி * விரிவாக்கியிருக்கிறான். அது உன் காலின்கீழ் அசையாமல் நிலையாய் நிற்பதற்கு அதன்மேல் மலைகளை ஆப்புகளாக அறைந்திருக்கிறான். கெட்டியான கற்களின் கீழேயிருந்து மிருதுவான நீர் நெகிழ்ச்சிகளை நடைபெறச்செய்தான். ஏனெனில் அவை கொஞ்சங் கொஞ்சமாக வெளிப்பட்டுப் பூமியின்மேல் செல்வதற்கேயாம். அந்த நீர்நெகிழ்ச்சி கெட்டியான கல்லினால் தடுக்கப்பட்டிராதபக்ஷத்தில் அது சடுதியில் வெளிப்பட்டு ஜலப்பிரளயத்தால் உலகம் மூழ்கிப்போம், அல்லது பயிர்கள் கொஞ்சங் கொஞ்சமாக ஜலத்தைக் குடிப்பதற்குள்ளாக அது ஒரே முறையில் வந்து பாய்ந்து அவைகளை நாசமாக்கும். பின்பு வசந்தகாலமென்னும் செழும் பருவத்தை நோட்டமிடு. அதாவது பூமி முழுவதும் உயிரில்லா உடம்புபோல் ஒரே மண்பிண்டமாகத் தோன்றிக்கொண்டிருக்கிற சமயத்தில் மாரிகாலம் வந்து அதன்மேல் மழைபொழிய அது எப்படி உயிரடைந்து செழிப்புற்று எழுவர்ணச் சித்திரப்பட்டாடைபோல் இலங்குகின்றது பார். அல்ல, அல்ல ஆயிரம் வர்ணமாகத் தோன்றுகிற அதன் அலங்காரத்தை நோட்டமிடு. பின்பு அதில் முளைத்தெழும் தாவரவஸ்துக்களிலும் அவைகளில் பூக்கும் பூக்களிலும் மொக்குகளிலும் நோட்டமிடு. ஒவ்வொன்றும் வெவ்வேறு ரூபமும் வெவ்வேறு நிறமும் உள்ளதாய் இருக்கிறது. ஒன்றைவிட ஒன்று அதிக அழகாயும் நேர்த்தியாயுமிருக்கிறது. பின்பு மரங்களிலும் அவற்றின் காய் கனிகளிலும் நோட்டமிடு. ஒவ்வொன்றின் உருவமும் அழகும் சுவையும் வாசனையும் உபயோகமும் வெவ்வேறாயிருக்கிறது. அன்றியும் புற்பூடு இலை கொடி வேர் முதலிய மூலிகைகளில்நின்றும் நீ அறியாத அநேகம் மூலிகைகளில் அருமையான பிரயோசனங்களை எப்படி மறைத்து வைத்திருக்கிறான் பார். அவைகளில் ஒன்று கசப்புள்ளதும் ஒன்று புளிப்புள்ளதும் ஒன்று இனிப்புள்ளதும் ஒன்று பிணியை உண்டாக்குவதும் ஒன்று சவுக்கியத்தைக் கொடுப்பதும் ஒன்று உயிரை ரக்ஷிப்பதும் ஒன்று உயிரைப்பக்ஷிக்கிற விஷமுள்ளதும் ஒன்று பித்தத்தை எழுப்புவதும் ஒன்று பித்தத்தை அகற்றுவதும் ஒன்று கரும்பித்தத்தை நரம்புகளிலிருந்து கழித்து விடுவதும் ஒன்று அதை உற்பத்திசெய்வதும் ஒன்று சூடுள்ளதும் ஒன்று குளிர்ச்சியுள்ளதும் ஒன்று வறட்சியுள்ளதும் ஒன்று கொழுமையுள்

* தப்சிரு அஜீஜியில் காஷியா என்னும் சூரத்தின் வியாக்கியானத்தில் பூமியின் வடிவம் உருண்டை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் அவ்வுருண்டை வடிவத்தின் கவிர்சல் நமது கண்ணுக்குப் புலப்படாமல் நாலுபக்கமும் பூமி விரிந்து தோன்றுவதால் அத்தோற்றத்தைக் கருதி இங்கு "அதன் பக்கங்களை அகட்டி விரிவாக்கியிருக்கிறான்" என்று இமாமவர்கள் சொன்னது.

ளதும் ஒன்று நித்திரையை வருத்துவதும் ஒன்று நித்திரையைப்போக்குவதும் ஒன்று சந்தோஷத்தைக் கொடுப்பதும் ஒன்று துக்கத்தையுண்டாக்குவதும் ஒன்று உனக்கு ஊணாவதும் ஒன்று மிருகங்களுக்குத் தீனியாவதும் ஒன்று பக்ஷிகளுக்கு இரையாவதுமாயிருக்கின்றன. பின்பு இவை எத்தனை ஆயிரம் என்பதையும் ஒவ்வொன்றிலும் எத்தனைஆயிரம் புதுமைகளிருக்கின்றன என்பதையும்நோட்டமிட்டுப்பார். அப்போது எல்லாப் புத்திகளும் மலைத்து மயங்கவேண்டுமென்றவிதமாக அல்லாகு தஆலாஉடைய அத்தியந்தவல்லமையின் பூரணத்தன்மை உனக்கு நன்கு விளங்கும். இதுவும் எல்லையற்றதாயிருக்கிறது.

இன்னுமொரு திருஷ்டாந்தம்: மலைகளின்கீழ் மறைத்துக்காக்கப்படுவனவும் கனிபொருள் என்று சொல்லப்படுவனவுமான அரிய புதைப்பொருள்களாம். அவைகளில்நின்றும் அலங்காரத்துக்குத் தகுமான பொன், வெள்ளி, மாணிக்கம், கோமேதகம், வைடூரியம், நீலம், மரகதம், படிகம் இன்னு மிவைபோன்றவைகளும் பாத்திரங்களுக்குத் தகுமான இரும்பு, செப்பு, பித்தளை, ஈயம் முதலியவைகளும் மற்றும் புதைப்பொருள்களில்நின்றும் வேறு உபயோகங்களுக்குத் தகுமான உப்பு, கந்தகம், * நிப்து, † கீர் முதலியவைகளும் வெளிப்படுகின்றன. இந்தப் புதைப்பொருள்களெல்லாவற்றிலும் தாழ்ந்தது உப்பு. இது எப்படிப்பட்ட பொருளாயிருக்கிறதென்றால், இதனால் ஊண் ருசிக்கிறது. உப்பு எந்த ஊரிலாவது இல்லாமற்போனால் அவ்வூரின் உணவுகளெல்லாம் கெட்டுப்போம். உணவுகளின் சுவையெல்லாம்போய்விடும். மனிதர்களெல்லாரும் நோய்கொள்வார்கள். அவர்கள் மாண்டுபோவார்களென்ற அச்சமுண்டாகும். ஆகவே அல்லாகு தஆலாஉடைய அன்பையும் தயவையும் நோட்டமிட்டுப்பார். அவன் உன் ஆகாரத்துக்காக உணவைக் கொடுத்தது

---

* நிப்து என்றும் நப்து என்றும் சொல்லப்படுகிற இது ஒருவித எண்ணெய். இது வெண்மையாகவும் கருமையாகவும் இருவகைப்பட்டிருக்கும். வெண்மை உயர்ந்தது. ஷேர்வான் நகரத்தில் நிலத்தில்நின்றும் பொங்கி வருவது. கியாகுல்லுகாத்து. இன்னும் இதில் வெண்மையாயிருப்பதை மருந்துகளுக்கும் கருமையாயிருப்பதை விளக்கு எரிக்கவும் உபயோகப்படுத்திக்கொள்வார்கள் என்றும், ஷேர்வான் நகரத்தில் ஒரு நிலயிருக்கிறது என்றும், அந்த நிலத்தைத் தோண்டினால் இது ஜலம்போல் சுரந்துவரும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

† கீர் என்பது கருமையான ஒருவித எண்ணெய். சொரிபிடித்த ஒட்டகங்களுக்கு அதைப் பூசுவார்கள். இன்னும் அது பிசினிபோன்ற ஒரு ஒட்டும் பொருள் என்றும் கப்பலின் இணைப்புவாய்களில் தண்ணீர் புகாதபடி கப்பல்களுக்கு அதைப் பூசுவார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மன்றி அந்த உணவில் உனக்கு நல்ல சுவையும் சந்தோஷமும் உண்டாக இன்னுமொரு பொருளின் தேவையிருந்ததினால் அதையும் வஞ்சனையின்றி அளிப்பதற்கு மழையில் வரும் தெள்ளிய நீரினால் இந்த உப்பை உண்டாக்கினான். அந்த நீர் பூமிக்குள் சேர்ந்து உறைந்து உப்பாய்ப்போகிறது.

இன்னுமொரு திருஷ்டாந்தம்: பூமியின்மீது சஞ்சரிக்கின்ற ஜீவராசிகளாம். அவைகளிற் சிலது நடப்பதும் சிலது பறப்பதும் சிலது இரண்டு கால்களுள்ளதும் சிலது நான்கு கால்களுள்ளதும் சிலது அநேகம் கால்களுள்ளதும் சிலது வயிற்றால் நகர்வதுமாயிருக்கிறது. ஆகாயத்தில் பறக்கும் பறவைகளிலும் பூமியில் ஊர்ந்து திரியும் பிராணிகளிலும் நோட்டமிடு. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு ரூபத்திலும் வடிவத்திலு மிருக்கின்றன. ஒன்றைவிட ஒன்று அதிக அழகாயிருக்கிறது. அது தன் இரையை எப்படிச் சம்பாதிப்பது? குஞ்சு வளர்ந்து பெரிதாகுமட்டும் அதை எப்படிக் காப்பாற்றுவது? கூட்டை எப்படிக் கட்டுவது? என்ற இந்த உபாயங்களையெல்லாம் ஒவ்வொன்றுக்கும் கற்பித்தான். ஆகவே எறும்பை நோட்டமிடு. அது தருணத்தில் தன் இரையை எப்படிச் சேர்த்துவைக்கிறது பார். கோதுமை முழுமணியாயிருந்தால் அது கெட்டுப்போம் என்றும் அதில் உளுர் பிடிக்காமலிருக்கவேண்டுமென்றும் அறிந்து அதை இரண்டிரண்டுகளாக்கிவிடுகின்றது. மல்லி என்னும் தனியாவானது முழுவித்தாயிராமற்போனால் கெட்டுப்போம் என்றுணர்ந்து அதை அப்படியே முழுவித்தாக வைத்துக்கொள்ளுகிறது. இன்னும் சிலந்தியைப் பார். அது தன் வீட்டை எப்படிக் கட்டுகிறது. கட்டுவதில் உபயோகிக்கவேண்டிய திட்டமான கணக்கை அது எப்படிக் கவனத்தில் வைக்கின்றது. அது தன் வாய்நீரினால் நூல்நூர்த்து இழையாக்குகின்றது. இரண்டு சுவர்கள் கூடுகின்ற ஒரு மூலையைத் தேடி அதன் ஒரு பக்கத்தில் அந்த இழையால் தன் வீட்டுக்கு அடிபோட்டு பின்பு மற்றொரு பக்கத்துக்கு அதை நெடுக்கிழையாக இழுத்துக்கொண்டுபோய் அங்கு அதைப் பொருத்தி மீண்டும் நெடுக்கிழையாக இழுத்துக்கொண்டுவந்து இங்கு மாட்டி இப்படியே பாவுகளெல்லாம் முடிந்தபிறகு ஊடையாகிய குறுக்கிழைகளைப்போட்டு வலை பின்ன ஆரம்பிக்கின்றது. வலையின் கண்கள் ஒன்றுக்கொன்று பெரிதும் சிறிதுமாயில்லாமல் சரியாயும் பார்வைக்கு அழகாயுமிருக்கும்படி பின்னி முடிக்கின்றது. பின்பு ஈ என்னும் ஜந்து அதற்கு இரையாதலால் சுவற்றின் ஒரு பக்கத்தில் ஓரிழையில் தொங்கிக்கொண்டும் ஏதாவதொரு ஈ பறந்து வருவதை எதிர்பார்த்துக்கொண்டுமிருக்கிறது. ஈ வந்தமாத்திரத்தில் அதன்மேல் பாய்ந்து அதை

வேட்டையாடி அதன் கைகால்களை அந்த இழையால் சுற்றிவிடுகிறது. ஏனெனில் அது ஓடிப்போமென்ற அச்சம் ஒழிந்திருக்கவேயாம். பின்பு அதைப் பதனமாக வைத்துவிட்டு மற்றொரு ஈயைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. இன்னும் தேன்குளவியை நோட்டமிடு. அது தன் கூட்டை முழுதும் அறுகோணமாகவே அமைக்கின்றது. நாற்சதுரமாக அமைக்கிறபக்ஷம் குளவியின் உருவம் வட்டவடிவமாயிருப்பதால் நாற்சதுரமான கூட்டின் கோணங்கள் வெறுமையாயும் வீணாயுமிருக்கும். வட்டவடிவமாக் அமைக்கிறபக்ஷம் வட்டவடிவங்களை ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக வைப்பதில் வெளிச்சந்துகள் வீணாய்க்கிடக்கும். எல்லா வடிவங்களிலும் வட்டவடிவத்துக்கு அதிக அடுத்திருப்பது ஷட்கோணமேயொழிய வேறுவடிவமில்லையென்று அங்ககணிதத்தின் அத்தாட்சியினால் அறிந்திருக்கிறார்கள். சர்வசிருஷ்டிகர்த்தனாகிய அல்லாகு தஆலா இந்தச் சிறிய ஜந்துவுக்கு இவ்வித அறிவை உதிக்கப்பண்ணினதில் அவன் எவ்வளவு அன்பும் இரக்கமும் உள்ளவனா யிருக்கிறான் என்பதை யோசி. இதற்கு மாத்திரமா! கொசுவுக்கும் ஒரு அறிவை உதிக்கப்பண்ணினான். உதிரம் அதற்கு ஆகாரம் என்று உணர்ந்து கொள்ளுகிறது. கூரியதும் மெல்லியதும் நடுவில் போரை யுள்ளதுமான ஒரு தும்பிக்கையை அதற்குப் படைத்திருக்கிறான். அதனால் அது உன் உடம்பில் குத்தி உதிரத்தை உறிஞ்சி இழுக்கின்றது. நீ அதைப் பிடிப்பதற்கு உன் கையை ஆட்டும்போது அதை அறிந்து ஓட்டம் பிடிக்கவேண்டிய நிமித்தம் அதற்கும் ஒரு அறிவைக் கொடுத்திருக்கிறான். இன்னும் பறப்பதற்கும் சடுதியில் ஓடிப்போவதற்கும் சடுதியில் திரும்பிவருவதற்கும் சாத்தியப்படும்படி அதற்கு மெல்லிய இரண்டு செட்டைகளையும் சிருஷ்டித்திருக்கிறான். அதற்கு நாவும் புத்தியு மிருக்கிறபக்ஷம் தன்னைப் படைத்த சிருஷ்டிகர்த்தாவின் நன்றியை அறிந்து எல்லாமனிதர்களும் ஆச்சரியப்படும்படி அவனை அவ்வளவு புகழாகப் புகழ்ந்து துதிக்கும். ஆயினும் அதன் கேசாதிபாதம் வரையில் அதன நிலைமை யென்னும் நாவினால் இவ்விதமாகப் புகழ்ந்து துதித்துக்கொண்டேதா னிருக்கிறது. என்கினும் அவைகள் துதிப்பதை நீங்கள் விளங்கிக்கொள்ளமாட்டீர்கள். இவ்வகைப் புதுமைகளும் எல்லையற்றவைகளா யிருக்கின்றன. இவைகளில் இலக்ஷத்தில் ஒன்றையாவது அறியவும் புகழவும் யாருக்கு வல்லமையிருக்கிறது? நீ என்ன சொல்லுகிறாய்? இந்த ஜீவராசிகள் இந்த அருமையான உருவங்களோடும் அதிசயமான வர்ணங்களோடும் அழகானரூபங்களோடும் சரியான அவயவங்களோடும்தம்மைத் தாமே உண்டாக்கிக் கொண்டனவா? அல்லது நீ அவைகளைச் சிருஷ்டித்தாயா? சுபுஹானல்லா! கண்களில் வெளிச்சமிருந்தும் அவை

பார்க்காதபடி அவற்றைக் கபோதியாக்கவும் மனம் யோசிக்காதபடி அதை மறதியிலாக்கவும் அந்த நாயகநாயகனே வல்லமையுள்ளவன். ஜனங்கள் முகக்கண்ணால் பார்க்கிறார்கள். அகக்கண்ணைக்கொண்டு ஆராய்தல்செய்து அச்சத்தை அடைகிறார்களில்லை. எதைக் கேட்கவேண்டுமோ அதைக் கேட்காதபடி இவர்கள் செவிப்புலன் நீக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவர்கள் மிருகங்களுக்கு ஒப்பாக சப்தத்தையன்றி வேறொன்றையும் கேட்கிறார்களில்லை. அக்ஷர சப்தமில்லாமல் பக்ஷிகள் பாடும் பாட்டைக் கேட்டு நோட்டமிட இவர்களுக்கு வழிதெரியவில்லை. இன்னும் எதைப் பார்க்கவேண்டுமோ அதைப் பார்க்காதபடி இவர்களுடையபார்வை நீக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அக்ஷரங்களின்றியும் வெள்ளைக்காயிதத்தில் கறுப்பு மையால் வரைவின்றியும் எழுதப்பட்டிருக்கிற ஒவ்வொரு எழுத்தையும் இவர்கள் பார்க்கிறார்களில்லை. அக்ஷரரூபமும் வரிவடிவமுமில்லாமல் அகிலத்துடைய எல்லா அணுக்களின் உள்ளேயும் வெளியேயும் அல்லாஹ்தஆலா எழுதியிருக்கிற எழுத்துக்களைப் பார்க்க இவர்களுக்கு வழிதெரியவில்லை.

அருமையானவனே! ஒரு அணுவின் சிலபாகத்துக்குமேல் அதிகமாயிராத ஒரு எறும்பின் முட்டையில் நோட்டமிடு. அது என்ன சொல்லுகிறதென்று காது தாழ்த்திக் கேள். அது தன் நிலைமையும் நாகரீகமுமான நல்ல நாவினால் கூவிச்சொல்லுகிறதாவது:—ஏ சாதா மனத்தையுடைய பேதை மனிதனே! உருவஞ்சமைக்கிற ஒரு சிற்பியானவன் ஒரு சுவற்றின்மேல் ஒரு ரூபத்தை வரைந்தால் நீ அவனுடைய சிற்பத்தொழிலையும் அவன் சமர்த்தையும் வியந்து ஆச்சரியப்படுகிறாயல்லவா? இங்கேவா, என்னிடத்தில் உற்று நோட்டமிடு, ஒரு பெரிய சிற்பி உனக்குத் தென்படுவான். அதெப்படியென்றால், இதோ முட்டையாயிருக்கிற நான் ஒரு அணுவளவுக்குமேல் அதிகமில்லேன். அந்தச் சிற்பியானவன் கருவாயிருக்கிற என்னை உருவாக்க ஆரம்பித்தால் என்னிடத்தில் எறும்பைச் சமைப்பான். நீ நோட்டமிட்டுப்பார். என்னுடைய உடம்பின் பாகங்களை அவன் எப்படி வகுக்கின்றான்? எந்தமட்டுக்கென்றால், எனக்கு இருதயம், சிரசு, கை, கால் மற்றும் அவயவங்களையும் உருப்படுத்துகின்றான். என்னுடைய சிரசிலும் தலைமூளையிலும் எத்தனையோ சன்னல்களையும் புதையல்களையும் அமைக்கின்றான். ஒன்றில் ருசி அறியும் சக்தியையும் ஒன்றில் வாசனை அறியும் சக்தியையும் ஒன்றில் சப்தமறியும் சக்தியையும் அமைக்கின்றான். என் தலையின் வெளிப்பக்கத்தில் எத்தனையோ புலன்களுக்குவழியை வைக்கின்றான். பார்க்கக்* கண்ணையும்

* எறும்புக்குக் கண்ணும் காதுமில்லையென்பது திண்ணமாயின் இங்கு மனிதனை எச்சரித்து உணர்த்துவதற்காக எறும்புக்கு இவற்றை அமைத்துச் சொன்னதில் ஏதும் தோஷமில்லை யென்றறிக.

வாசனை அறிய மூக்கையும் இரை செல்லும் வழியான வாயையும் உருப்படுத்துகிறான். என் உடம்பின் வெளியே கைகால்களையும் உடம்பின் உள்ளே இரைபோய்த் தங்கிச் செமிக்க ஓர் இடத்தையும் அந்த இரையின் கழிவுகள் வெளிப்படுவதற்கு ஒரு இடத்தையும் அமைக்கின்றான். இப்படி எல்லா அவயவங்களையும் சிருஷ்டித்துப் பின்பு எனக்குச் சுறுசுறுப்புள்ள உடம்பை அமைத்து அந்த உடம்பை மூன்று பாகங்களாக வகுத்து ஒன்றோடொன்று பொருந்தச் செய்கிறான். இன்னும் காவற்சேவகன்போல் என் இடுப்பில் சேவக இடுப்புக்கட்டைக்கட்டிக் கறுப்பு உடுப்பையும்மாட்டி எல்லாம் உனக்காகவே படைக்கப்பட்டிருப்பதாக நீ நினைக்கிற இந்த உலகத்தில் நான் தோன்றும்படி என்னைக் கொண்டுவந்து நீ அடையும் செல்வத்தில் உன்னைப்போல் என்னையும் இருக்கச் செய்கின்றான். அல்ல அல்ல உன்னை எனக்குவேலைக்காரனாக வைக்கின்றான். ஏனெனில், நீ பயிரிடுவதற்கு அல்லும் பகலும் அலைந்து கஷ்டப்பட்டு நிலத்தைப் பண்படுத்தி விதையைத் தூவுகின்றாய். தண்ணீர் பாய்ச்சுகின்றாய். பின்பு கோதுமை முதலிய தானியங்களையும் பருப்பினங்களையும் கொண்டுவந்து வீட்டில் பதனப்படுத்தி வைக்கின்றாய். நீ எந்த இடத்தில் ஒளித்துவைத்தபோதிலும் அது தெரியும்படி அவன் எனக்கு வழிகாட்டுகின்றான். நான் பூமியின்கீழ் என் வளைக்குள்ளிருந்தே அதன் வாசனையைத்தெரிந்துகொண்டு அங்கு வந்து சேருகின்றேன். நீ இவ்வளவு கஷ்டங்களை அடைந்து கைவசப்படுத்துகிற ஒரு உணவுப்பொருள் ஒரு சமயம் உனக்கு ஒரு வருஷத்தின் செலவுக்குப் போதாமலும் போகும். நானோ சரியாக ஒருவருஷத்தின் உணவைச் சம்பாதித்து மிகவும் கெட்டித்தனமாக வைத்துக்கொள்ளுகிறேன். என் உணவை வளையிலிருந்து வெளியே கொண்டுவந்து மைதானத்தில் காயப்போடுவேனாகில் மழைவருவதற்கு முன்னதாக என் சிருஷ்டிகர்த்தா அதை எனக்கு அறிவிக்கின்றான். அப்போது மழை சேதப்படுத்தாத ஓரிடத்துக்கு நான் அதை எடுத்துக்கொண்டு போய்ப் பதனப்படுத்துகிறேன். நீயோ தானியப்போரைக் களத்தில் போட்டு வைத்திருப்பாய். நடுவில் மழையும் வெள்ளமும் வந்துவிடும். அது வருமென்ற அறிவு உனக்குக் கொஞ்சமும் இராது. தானியமெல்லாம் சேதமாய்ப்போம். ஆகலால் என்னை ஒரு அணுவிலிருந்து இவ்வளவு அழகும், சுறுசுறுப்புமுள்ள ஒரு பிராணியாகப் படைத்து என் உணவுப்பொருளை விதைக்கவும் அறுக்கவும் அதற்காக உழைக்கவும் உன்னைப்போன்ற ஒரு பெரியவனை எனக்கு

வேலைக்காரனாக ஏற்படுத்தி எனக்கு முன்பாக நிற்கச்செய்கிறவனும் இந்தவிதமாக எனக்கு இரையளிக்கிறவனுமான அந்த இறைவனுடைய. நன்றிக்கு நான் அவனை எந்தவிதமாகப் புகழ்வேன் என்பதே. சிறியவைகளும் பெரியவைகளுமான ஜீவராசிகளில் நின்றும் ஒன்றேனும் தன்னைப்படைத்த சிருஷ்டிகர்த்தாவினது மகிமையைக் குறித்துத் தனது நிலைமையென்னும் நாவினால் அவனை இவ்விதம் புகழ்ந்து போற்றாமலிருப்பதில்லை. ஜீவராசி என்ன? தாவர ஜாதிகளிலும் இப்படிப் புகழாத தாவரம் ஒன்றுமேயில்லை. மேலும் அகிலத்தினுடைய அணுக்களில் ஒரு அணுவேனும் அது கல்போன்ற தாதுப்பொருளாயிருந்தாலும் சரியே. இவ்விதம் கூறிச் சொல்லாமலிருப்பதில்லை. மனிதர்கள் இந்தக் கூச்சலைக் கேட்காமல் மறதியானராயிருக்கிறார்கள். திடனாக அவர்கள் அதைக் கேட்பதைவிட்டும் நீக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள் அவனுடைய புகழைக் கூறி தஸ்பீஹு செய்யாத வஸ்து ஒன்றுமேயில்லை. ஆயினும் நீங்கள் அவைகளின் தஸ்பீஹை விளங்கிக்கொள்ளுகிறதில்லை. புதுமைகளில்நின்றும் இதுவும் எல்லையற்ற ஒரு உலகமாயிருக்கிறது.

இன்னுமொரு திருஷ்டாந்தம்:—பூமியின்மீதுள்ள கடல்களாம், இவற்றுள் ஒவ்வொன்றும் பூமியைச் சூழ்ந்திருக்கிற ஒரு மகாசமுத்திரத்தின் ஒவ்வொரு பாகமாயிருக்கிறது. பூமியெல்லாம் என்பது சமுத்திரத்தின் சிலதிடல்களேயன்றிவேறொன்றல்ல. "கடலில் நிலங்களானவை நிலத்தில் சில குதிரை லாயங்கள் போல்வனவாம்" என்று ஹதீஸில் வந்திருக்கிறது. ஆகலால் நீ தரையின் புதுமைகளைப் பார்த்து முடித்தால் தண்ணீரின் புதுமைகளைப் பார்க்க முயலு. பூமியைவிட சமுத்திரம் எவ்வளவு பெரிதாயிருக்கிறதோ அவ்வளவாக அதில் அதிசயங்களும் அதிகமாயிருக்கும். பூமியிலிருக்கிற எல்லா உயிரினங்களுக்கும் நிகரான உயிரினங்கள் சமுத்திரத்திலிருக்கின்றன. அன்றியும் பூமியில் இல்லாத அநேகம் ஜீவராசிகள் கடலில் உண்டு. அவைகளில் ஒவ்வொன்றும் வெவ்வேறு ரூபத்திலும் வெவ்வேறு குணத்திலுமிருக்கின்றன. உதாரணமாக:—ஒன்று கண்ணுக்குப் புலப்படாத அவ்வளவு சிறிய உருவாயிருக்கும். இன்னுமொன்று அவ்வளவு பெரிதாயிருக்குமென்றால், கப்பல்காரர்கள் அதன் முதுகைப் பூமியாக நினைத்து அங்கு கப்பல் ஜனங்களை இறக்கவும் அவர்கள் அடுப்பெரிக்கும் அக்கினிச்சூட்டினால் ஒரு சமயம் அது நெளிந்து அசையவும் அதனால் அவர்கள் அதை ஒரு உயிரினமென்று உணரவுமான அவ்வளவு பெரும்படைப்பாயிருக்கும் கடலின் புது

மைகளைக்குறித்து அநேகம் கிதாபுகளை எழுதியிருக்கிறார்கள். அவைகளை விவரித்துச் சொல்ல எப்படி முடியும். கடற்பிராணிகளில் ஒரு பிராணியின் மேற்கூடான ஓட்டைப்பார். அதாவது:—சமுத்திரத்தின் ஆழத்தில் அல்லாகு தஆலா ஒரு பிராணியைப் படைத்திருக்கிறான். முத்துச்சிப்பி என்று வழங்குவது அதன் ஓடுதான். அந்தப் பிராணிக்கு அவன் ஒரு உதிப்பைக் கொடுக்கின்றான். அது மழை ஜலம் நல்ல சுவையாயிருக்குமென்றும் கடல்நீரைப்போல் கைப்பாயிராதென்றும் அறிந்து மழைக்காலத்தில் கடலோரத்தில் வந்து மழைத்துளிகள் தனக்குள் விழவேண்டுமென்று தன்னை மூடிக்கொண்டிருக்கிற ஓடுகளை விரித்துக்கொள்ளுகிறது. மழைத்துளிகளை வாங்கி வாயைமூடிக்கொண்டு கடலின் அடித்தரைக்குப் போய்விடுகின்றது. கருப்பையில் இறங்கின விந்துவைப்போல அந்தத் துளிகளைத் தன் வயிற்றுக்குள் வைத்துப் பரிபாலித்து வருகிறது. சிப்பிகளை உடைத்தாயிருக்கிற அந்தப் பிராணியில் முத்துச்சத்தைப் படைத்திருப்பதினால் ஒரு நீண்ட காலம் வரையில் அது அந்த மழைத்துளிகளுக்குத் தன் சத்தை ஏற்றிக்கொண்டிருக்கிறது. அதனால் ஒவ்வொரு துளியும் ஒவ்வொரு முத்தாய்ப்போகிறது. அவைகளில் சில முத்துக்கள் சன்ன மணிகளாயும் சில முத்துக்கள் பெரிய மணிகளாயுமிருக்கின்றன. அவை எதற்காகவெனில் நீ ஆபரணங்களைச் செய்வதற்கேயாம். இன்னும் சமுத்திரத்துக்குள் கற்பாறையிலிருந்து இரத்த வர்ணமுள்ள ஒரு தாவரத்தை முளைப்பிக்கின்றான். அதன் உருவம் ஒரு செடியைப்போலிருக்கிறது. அதன் சுயமான திரவியமோ கல்லைப்போல் அழுத்தமாயிருக்கிறது. அதை மர்ஜான் பவளம் என்று சொல்லுகிறார்கள். இன்னும் கடலானது நுரையில் ஒரு திரவியத்தைக் கரையில் ஒதுக்குகின்றது. அதை* அம்பர் என்று சொல்லுகிறார்கள். உயிரினத்தின் வெளியுடம்பிலும் இக்

* அம்பர் ஒரு வாசனைத் திரவியமென்று எல்லாருக்கும் தெரியும். ஆனால் அதன் உற்பத்தி விஷயத்தில் விகற்பமிருக்கிறது. சிலர் அதைக் கடல்மாட்டின் சாணம் என்கிறார்கள். சிலர் அது கடலில் சுயமாக உற்பத்தியாகின்ற ஒரு திரவியம் என்கிறார்கள். ஆயினும் அது இந்தியா, சைனா இந்தேசங்களின் மலைகளில் வசித்துப் பற்பல வாசனைத் தழைகளை மேய்ந்துவருகிற தேன்குளவிகளினின்றுமுண்டாகிற ஒரு மெழுகு என்பதே சரி. அந்த மெழுகு மழை வெள்ளத்தினால் கடலில் போய்ச்சேர்ந்து சுத்தமாகக் கழுவப்படுகிறது. கடற்பிராணிகளிற் சிலது அதை விழுங்கிவிடுகிறது. அது செமிக்காமையால் கக்கிவிடுகின்றது. இதனால் சிலர் அதைக் கடல்மாட்டின் சாணம் என்கிறார்கள். அம்பரில் தேன்குளவிகள் கலப்புண்டிருந்ததாகச் சில சற்சன கனவான்கள் சொன்னது செவிக்கு எட்டியிருக்கிறது. அன்றியும் அது நெருப்பில் உருகுகின்றது. ஆகவே அது மெழுகுதான் என்பதற்கு இது ஸ்பஷ்டமான திருஷ்டாந்தமாம். கியாகல்லுகாத்து.

தப் புதுமைகள் அநேகமா யிருக்கின்றன. இனி, கடலின்மீது கப்பலை ஓட்டுவதும் அது ஜலத்தில் மூழ்கிப் போகாதவிதமாக அதன் உருவத்தை அமைப்பதும் கெட்டகாற்றிலின்றும் நல்ல காற்றைப் பிரித்தறிய மாலுமிக்கு வழிகாட்டுவதும், எல்லாப் பக்கமும் ஒரே ஜலமாயும் ஒரு அடையாளமும் தெரியாமலுமிருக்கிற அந்தரமான இடத்தில் அவன் திசையறிந்து கப்பலை நடத்துவதற்கு நக்ஷத்திரத்தை அவனுக்கு வழிகாட்டியாக்குவதும் இவையாவும் புதுமையேயாம். மேலும் ஜலத்தை மெல்லியதாகவும் தெளிவாகவும் அதன் அணுக்கள் ஒன்றோடொன்று நெருங்கிச் சேர்ந்ததாகவும் நெகிழுந் தன்மையுள்ளதாகவும் தாவரசாதிகளும் ஜீவராசிகளுமான சிருஷ்டிகளெல்லாவற்றின் உயிர் வாழ்க்கைக்கு உரித்தான பொருளாகவும் இருக்கும்படி அதன் ரூபத்தைப் படைத்திருப்பது எல்லாவற்றிலும் பெரிய புதுமையாம். உனக்கு ஒரு மிடர் ஜலம் தேவைப்பட்டு அது கிடைக்காதபக்ஷம் உலகத்திலுள்ள பொருளை யெல்லாம் அதற்காகக் கொடுத்துவிடுவாய். அந்த ஜலம் உன் வயிற்றுக்குட் சென்று வெளியே வரக்கூடாதபடி தடைப்பட்டிருந்தால் அதைவிட்டும் சவுக்கிய மடைவதற்காக உன்னிடத்திலிருக்கும் ஆஸ்தியையெல்லாம் அளித்துவிடுவாய். மொத்தத்தில் ஜலத்துடையவும் சமுத்திரத்துடையவுமின புதுமைகளும் எல்லையற்றவைகளா யிருக்கின்றன.

இன்னுமோரு திருஷ்டாந்தம்:—ஆகாயமும் அதிலுற்ற வாயுவுமாம். ஆகாயமும் அலைமோதிக்கொண்டிருக்கிற ஒரு கடலாயிருக்கிறது. அதன் அலைமோதலே வாயுவாம். வாயுவானது கண்ணுக்குப் புலப்படாததும் கண்ணை மறைக்காததுமான அவ்வளவு நுண்ணிய ஒரு சடப்பொருளாயும் உன் ஜீவனுக்கு எப்போதும் வேண்டிய ஆகாரமாயும் இருக்கிறது. சோறும் ஜலமும் ஒருநாளில் உனக்கு ஒரேமுறை தேவையாகும். வாயுவில்லாமல் நீ கொஞ்ச நேரமும் இருக்கமுடியாது. சற்றுநேரம் நீ மூச்சு வாங்காமலும் வாயுவென்னும் பதார்த்தம் உனக்குட்செல்லாமலும் இருக்கிறபக்ஷம் நீ மாண்டு போவாய். நீ இதை உற்றுணராமல் மறந்துபோயிருக்கிறாய். கப்பல்களைத் தண்ணீரில் மூழ்கவிடாமல் இழுத்துக்கொண்டிருப்பது வாயுவின் குணங்களில் ஒன்றாம். இதன் பண்புகளை விஸ்தரித்தால் பெருகும். நீ வானத்தில் ஏறிப் பார்ப்பதற்கு முன்னதாக இந்த ஆகாய வெளியில் மேகம், மழை, இடி, மின்னல், பனி இவைகளில் என்னென்ன படைக்கப்பட்டிருக்கிறதென்று பார். இன்னும்

மாசுமருவில்லாத ஆகாயத்தினிடமாகத் திடீரென வந்து தோன்றுகிற சூல்கொண்ட அந்தக் கரியமேகத்தைப் பார். அது சமுத்திரத்திலிருந்து ஜலத்தை எடுத்துக்கொண்டு எழும்பியிருக்கும். அல்லது பூமியில்நின்றும் ஆவியா யெழுந்த ரேணுக்கூட்டங்கள் ஒருங்குசேர்ந்து தடித்து மலைகளில் அடைபட்டு எழும்பியிருக்கும். அல்லது ஆகாயம் தன்னிலிருந்தே தோன்றியிருக்கும். அந்த மேகமானது மலை, கடல், சுனைகள் இவைகளைவிட்டும் வெகுதூரப்பட்டிருக்கிற இடங்களுக்குப் போய்த் தூத்தலாகவும் தாரையாகவும் முறைமுறையாகவும் தண்ணீரை இறைக்கின்றது. விழுகிற ஒவ்வொரு துளியும் எந்த இடத்தில் இறங்கும்படி ஆதிகற்பனையில் அதற்கு விதித்திருக்கிறதோ அந்த இடத்தைக்குறிக்கின்ற ஓர் நேர்க்கோட்டின் வழியாகவே அது விழுகின்றது. ஏனெனில் நீர்வேட்கையால் வருந்துகின்ற இன்ன ஜந்து தாகந்தீரவேண்டுமென்றும் காய்ந்துபோகுந்தருவாயிலிருக்கிற இன்னசெடி ஈரங்கொண்டு செழிக்கவேண்டுமென்றும் தண்ணீரின் தேவையுள்ள இன்னவித்துக்குத் தண்ணீர் தரவேண்டுமென்றும் இன்னமரத்தில் காய்த்திருக்கிற இன்னகாய் வதங்கிப்போவதால் அம்மரத்தின் அடிவேரில் தண்ணீர்பாய்ந்து அதன் உள்ளே ஈரஞ்சோரி மயிர்போல் சன்னமாயிருக்கிற அதன் நரம்புகள் வழியால் அந்த ஈரம் அக்காய்க்கு ஏறி அது செழித்து கொழுமை பெறவேண்டுமென்றும் அதை நீ புசிக்கவேண்டுமென்றும் அவன் கற்பித்திருந்தபடியினாலேயாம். நீயோ அதைப்புசிக்கும்போது மழையின் ஒவ்வொரு துளியிலும் இது இன்னவிடத்திலிறங்குவதென்றும் இன்னானுடைய இரணம் என்றும் எழுதியிருக்கிற அல்லாகு தஆலாவின் அன்பையும் இரக்கத்தையும் உற்றுணர்ந்து பார்க்கிறாயில்லை. உலகத்திலுள்ளவர்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து மழைத்துளிகள் இத்தனை என்பதை எண்ணிப்பார்க்க நாடுவார்களாகில் அது அவர்களால் முடியாது. இன்னும் நீ நோட்டமிட்டுப்பார். மழை ஒரே முறையில் வருஷித்துப் பின்பு நின்றுபோனால் தாவரங்கள் முறைமுறையாகத் தண்ணீரை அடையமாட்டாவாதலால் அந்த மழைஜலத்தின்மீது வாடை என்னும் குளிர்காற்றைவிட்டு அதை உறையப்பண்ணி கொட்டப்படுகிறபஞ்சின் அணுக்கள்போல் கொஞ்சங்கொஞ்சமாக வந்துகொண்டிருக்கச் செய்தான். மலைகள் குளிர்காற்றுள்ள இடமாயிருப்பதுபற்றி மழை உறைந்து கட்டியாவதற்கும் சீக்கிரம் உருகாமலிருப்பதற்கும் ஏதுவாயிருப்பதால் உறைபனிக்கூட்டங்களைச் சேர்த்துவைக்க மலைகளை யிடாக்கினான். இப்

படியில்லாமல் எப்போதும் மழை பொழியவேண்டுமென்றால் இம்சை அதிகமாய்ப்போம். ஒரே முறையில் பெய்து பின்பு நின்றுவிட்டால் வருஷம்முழுதும் தாவரங்கள் தாகத்தில் தயங்கிக்கொண்டிருக்கும். ஆகவே உறைபனியில் இவ்வளவு அன்பும் கிருபையும் ஆழ்ந்த கருத்துமிருக்கிறது. அதில் மாத்திரமா? ஒவ்வொரு வஸ்துவிலும் இப்படியேயாம். மேலும் வானம் பூமிகளில் உள்ள எல்லா அணுக்களையும் எதார்த்த ஞாயமாகவும் நீதமாகவும் ஆழ்ந்த கருத்தமைந்ததாகவும் படைத்திருக்கிறான். இதனாலேதான் அல்லகு தஆலா வானங்களையும் பூமியையும் அவ்விரண்டின் மத்தியிலிருப்பவைகளையும் நாம் விளையாட்டாகப் படைக்கவில்லை. அவ்விரண்டையும் எதார்த்த ஞாயத்தோடேயே நாம் படைத்தோம். ஆனால் அவர்களில் அனேகர் இதை அறிகிறதில்லை என்று அருளிச்செய்திருக்கிறான். இதன் கருத்தாவது:—எப்படியிருக்கவேண்டுவது ஞாயமோ அப்படியாகப் படைத்தோம் என்பதாம்.

இன்னுமொரு திருஷ்டாந்தம்: வானராச்சியமும் நக்ஷத்திரங்களுமாம். பூமியும் அதன்மீதுள்ளவைகளும் வானத்துக்கு எதிரில் மிகவும் சிறியதாயிருப்பதே பெரிய ஆச்சரியம். வானங்கள் நக்ஷத்திரங்கள் இவைகளின் புதுமைகளில் ஆராய்ந்து விசாரணை புரியும்படி குருஆன் முழுதும் எச்சரித்துக் கூறுகின்றது. உதாரணமாக:— நாம் வானத்தைக் காவலான ஒரு மேல்தளமாக்கினோம், அவர்கள் அதன் அடையாளங்களைப் பார்க்காமல் புறக்கணித்தவர்களாயிருக்கிறார்கள் என்றும், நீடனுக மனிதர்களைப் படைப்பதினும் வானங்களையும் பூமியையும் படைப்பது மிகப் பெரியது, ஆனால் அநேக ஜனங்கள் இதை அறிகிறதில்லை என்றும் திருவுளமாயிருக்கிறான். வானராச்சியத்தின் புதுமைகளில் ஆராய்ந்து விசாரணை புரியும்படி உனக்குக் கட்டளையிட்டிருப்பது நீ கண்ணைத் திறந்துகொண்டு வானத்தின் நீலவர்ணத்தையும் நக்ஷத்திரங்களின் வெண் பிரகாசத்தையும் பார்ப்பதற்கல்ல. எல்லா மிருகங்களும் இவ்வளவு பார்வை பார்க்கின்றன. என்கிலும் உனக்கு அதிக சமீபமாயிருக்கிற நீயும் உன் புதுமைகளும் சேர்ந்து வானம் பூமிகளுடைய புதுமைகளின் தொகைக்கு ஒரு அணுவுமாகாது. அப்படியிருந்தும் நீ உன்னையும் உன் புதுமைகளையும் அறிகிறாயில்லை. பின்பு வானராச்சியத்தின் புதுமைகளை எப்படி அறியப்போகிறாய். மேலும் நீ படிப்படியாக ஏறவேண்டியதிருக்கிறது. எல்லாவற்றிற்கும் முன்னதாக நீ உன்னை அறியவேண்டும். பின்பு பூமியையும் தாவரஜாதிகளையும் ஜீவராசி

களையும் கனிப்பொருள் என்னும் புதைப் பொருள்களையும் அறிய வேண்டும். பின்பு வாயுவாகாயங்களையும் மேகத்தையும் அவற்றின் புதுமைகளையும் அறியவேண்டும். பின்பு வானங்களையும் பின்பு நக்ஷத்திரங்களையும் பின்பு குருசியையும் பின்பு அருஷையும் அறியவேண்டும். அதன்பிறகு நீ சடலோகத்தைவிட்டு அப்புறப்பட்டு சித்து லோகமான ஆன்ம லோகத்துக்குப் போய் மலக்குகள் ஷைத்தான்கள் ஜின்னுகள் இவர்களை அறியவேண்டும். பின்பு மலக்குகளின் வகுப்புகளையும் அவர்களின் வித்தியாசமான ஸ்தானங்களையும் அறிய வேண்டும். அதன்பிறகு நீ வானத்திலும் நக்ஷத்திரங்களிலும் அவற்றின் அசைதல் சுற்றல்களிலும் அவற்றின் உதய அஸ்தமனஸ்தானங்களிலும் ஆராய்தல் செய்யவேண்டும். அது என்ன? எதற்காக? என்பதை விசாரணை செய். எவரும் எண்ணியறியாத நக்ஷத்திரங்களின் பெருக்கத்தைப்பார். ஒவ்வொன்றும் வெவ்வேறு நிறமாயிருக்கிறது. சிலது செந்நிறமும் சிலது வெண்ணிறமும் சிலது இரசம் போன்றதும் சிலது சிறியதும் சிலது பெரியதுமா யிருக்கிறது. பின்பு அவைகளில் ஒவ்வொன்றும் வெவ்வேறு ரூபத்திலிருக்கிறது. ஒன்று ஆட்டுரூபத்திலும் ஒன்று எருதுரூபத்திலும் ஒன்று தேள் ரூபத்திலும் * இன்னுமிப்படியே பல ரூபங்களில் பல நக்ஷத்திரங்களிருக்கின்றன. மேலும் பூமியின்மீதிருக்கிற ஒவ்வொரு ரூபத்துக்கும் நிகரான நக்ஷத்திரரூபம் வானத்திலிருக்கிறது. பின்பு அவைகளின்நடையும் இயக்கமும் வெவ்வேறாயிருக்கிறது. ஒன்று வானம் முழுவதையும் ஒரு மாதத்தில் சுற்றி முடிக்கிறது. ஒன்று ஒரு வருஷத்திலும் ஒன்று பன்னிரண்டு வருஷத்திலும் ஒன்று முப்பதுவருஷத்திலும் சுற்றி முடிக்கிறது. வானம் அழியாமலும் கியாமத்து நாள் வராமலு மிருக்கிறபக்ஷத்தில் அநேக நக்ஷத்திரங்கள் முப்பத்தாறுயிரம்வருஷத்தில் ஒருமுறை வானத்தைச் சுற்றி முடிப்பனவாயிருக்கின்றன. அவைகளைக் குறித்த அறிவுகளின் புதுமைகளுக்கும் அளவில்லை.

நீ பூமியினுடைய புதுமைகளிற் சிலவற்றை அறிந்தாயாதலால் இப்போது அவ்வவற்றின் புதுமைகள அவ்வவற்றின் உருவங்களுக்

---

* வானத்தில் பன்னிரண்டு புருஜுகள் என்னும் இராசிகள் இருக்கின்றன. அவை: ஹமல், சவ்று, ஜவ்ஸா, சர்தான், அஸது, சும்புலா, மீஜான், அக்றபு, கவ்சு, ஜத்யு, தல்வு, ஹூத்து என்பவைகளாம். இவை முறையே மேஷம், ரிஷபம், மிதுனம் கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்று சொல்லப்படும். மேலே ஆட்டுரூபம், எருதுரூபம், தேள்ரூபம் எனச் சொன்னது ஹமல், சவ்று, அக்றபு (மேஷம், ரிஷபம், விருச்சிகம்) இம்மூன்றையு மெனக்கொள்க.

குக் தக்கவிதமாக வித்தியாசப்பட்டிருக்குமென்பதைத் தெரிந்து கொள். பூமியானது எவரும் இதன் ரூபத்தைக் காணமுடியாத விதமாக அவ்வளவு பெரிதாயிருக்கிறது. சூரியனோ பூமியைப் பார்க்கிலும் நூற்று அறுபதுமடங்கு பெரியது. அப்படியிருந்தும் அது உன் கண்ணுக்கு இவ்வளவு சிறிதாய்த் தோன்றுகிறது. இதனால் அது எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென்பது உனக்கு ஏற்படும். இன்னும் அதன் வட்டவடிவம் முழுதும் அரைமணிநேரத்தில் பூமியைவிட்டு வெளியே கிளம்புவதினால் அது எவ்வளவு விரைவாகச் செல்லுகிறதென்பதும் பூமியினும் நூற்று அறுபது மடங்கு பெரிதான அதன் பாரியுருவம் அந்த அற்பநேரத்தில் பூமியைக் கடந்து செல்ல அது எவ்வளவு வேகமாய் * ஓடியிருக்கவேண்டுமென்பதும் உனக்கு வெளிபாகும். இதனாலேதான் ரசூல் சல்லல்லாகு அலைஹிவ்சல்லம்வர்கள ஒருநாள் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமவர்களிடத்தில் "சூரியனுக்கு † ஜவால் ஆய்விட்டதா" என்று கேட்டதற்கு அவர்கள் "லா, நஅம் (ஆகவில்லை, ஆய்விட்டது) என்றுசொன்னார்கள். அதற்குநாயகமவர்கள் "இதெப்படி?" என்றுகேட்க, அவர்கள் "நான் லா என்றெடுத்து நஅம் என்று முடிப்பதற்குள்ளாகச் சூரியன் ஐந்நூறு வருஷத்தூலை ஓடியிருந்தது" என்று சொன்னார்கள். இன்னும் வானத்தில் இந்தப் பூமிக்கு நூறுமடங்கு பெரிதான ஒரு நக்ஷத்திரமு மிருக்கிறது. ஒருநக்ஷத்திரம் இவ்வளவுபெரிதாயிருந்தால் பூரா வானம் எவ்வளவு பெரிதாயிருக்குமென்பதை யோசித்துக்கொள். அருமையானவனே! அல்லாகு தஆலா உடைய இராஜரீகத்தையும் அவன் மகத்துவத்தையும் நீ அறிவதற்காகவே இந்தப் பெரிய படைப்புகளெல்லாம் உன் சிறிய கண்ணுக்குள் அடங்கும்படி உருப்படுத்தப்பட்டிருக்கின்றன. பின்பு ஒவ்வொரு நக்ஷத்திரத்திலும் அது நிலைபெயராமலிருப்பதிலும் சுற்றியோடிக்கொண் டிருப்பதிலும் திரும்பித் திரும்பிவருவதிலும் அதன் உதய அஸ்தமனங்கள் நேர்நேரே சரியாயிருப்பதிலும் இப்படி ஒவ்வொன்றிலும் ஆழ்ந்த பூராயமிருக்கிறது. எல்லாப் பூராயங்களிலும் சூரியனில் அமைந்துள்ள பூராயம் நமக்குப் பரிஷ்காரமாக விளங்குகின்றது. அதாவது:—சூரியனிருக்

---

* பத்லமூஸ் என்பவர் பூமி நிலைபெயராமல் ஓரிடத்தில் இருக்கிறதென்றும், சூரியன் பூமியைச் சுற்றி ஓடுகிறதென்றும் சித்தாந்தப்படுத்தியிருக்கிறார். இதுவே முற்காலஜனங்கள் அநுஷ்டித்துவந்த பூர்வசித்தாந்தம். பைதாகரஸ் சித்தாந்தமோ இதற்கு நேர்மாறும் அபசித்தாந்தமுமாம். இந்த சித்தாந்தம் இமாமவர்கள் காலத்தில் ஏற்பட்டிருந்ததில்லை. † ஜவால்=சூரியன் உச்சியில் இருக்கும் நேரம்.

கும் வானத்துக்கும் பலகுல்புருஜி என்னும் மேல் வானத்துக்கும் ஒருவித சம்பந்தத்தை யுண்டாக்கி யிருக்கிறான். அதனால் வருஷத்தின் சிலநாட்களில் அது தலைநடுவுக்கு நெருங்கியும் சிலநாட்களில் தூரமாகியும் செல்லுகின்றது. அதனால் ஆகாயம் மாறுதலடைந்து சிலகாலம் சீதளம் அதிகமாயும் சிலகாலம் உஷ்ணம் அதிகமாயும் சிலகாலம் இரண்டும் மிதமாயும் இருக்கிறது. இன்னுமிதனாலேயே இரவும் பகலும் வித்தியாசப்பட்டுச் சிலகாலம் இரவு குறுகிப் பகல் நீண்டும் சிலகாலம் இரவு நீண்டுப் பகல் குறுகியும் சிலகாலம் இரண்டும் சமமாகியும் இருக்கிறது. இது இன்ன காரணத்தினால் என்பதை நாம் விவரித்துக் கூறுவோமாகில் காலநீட்சியாகும். சிருஷ்டி விவரத்தில் அல்லாகு தஆலா நமக்கு இந்த அற்பவயதில் அளித்திருக்கிற அறிவுகளை விவரித்துச்சொல்ல ஒரு நீண்டகாலம் வேண்டும். *இந்த அறிவோ மற்றும் அறிவாளரும் அவுலியாக்களும் அறிந்திருக்கிற அறிவுகளுக்கு முன்பாக மிகவும் அற்பமேயாம். சகல அறிவாளரும் அவுலியாக்களும் அறிந்திருக்கும் அறிவானது நபிமார்களுடைய அறிவுகளுக்குமுன்பாக அற்பமேயாம். நபிமார்களுடைய அறிவானது முகர்ரபாகிய மலக்குகளின் அறிவுக்குமுன்பாகக் கொஞ்சமேயாம். இந்தஎல்லா அறிவுகளையும் அல்லாகு தஆலாஉடைய அறிவோடு சேர்த்துப் பார்ப்பாயாகில் இவைகளை நீ அறிவென்றே சொல்லத்தகாது. உங்களுக்கு அறிவிற் கொஞ்சமேயொழிய கொடுக்கப்படவில்லை என்று அல்லாகு தஆலா கூறுகின்றான். சுபுஹானல்லா! அவன் தன் அடியார்களுக்கு இத்தாதி அறிவுகளைக் கொடுத்துப் பின்பும் அவர்கள் எல்லார்பேரிலும் நீங்கள் அறிவீனராயிருக்கிறீர்கள் என்ற சூட்டைச் சூடிவிட்டான்.

அருமையானவனே! ஆராய்ந்து விசாரணைபுரியும் தானங்களில் நின்றும் மாதிரிகளாக இவ்வளவைச் சொன்னது எதற்கெனில் நீ உன் மறதியைத் தெரிந்துகொள்ளவேயாம். ஏனெனில் சித்திரகசிதமாக நற்சாந்திட்டுக் கட்டப்பட்டிருக்கிற ஒரு பிரபுவின் வீட்டுக்கு நீ போவாயாகில் வெகுநாள்வரையில் அதன் அலங்காரத்தைச் சொல்லி ஆச்சரியப்படுகிறாய். நீயோ எப்போதும் அல்லாகு தஆலா உடைய வீட்டில் வசித்துக்கொண்டிருக்கிறாய். அதைப்பற்றிக் கொஞ்சமும் ஆச்சரியப்படுகிறாயில்லை. இந்தச் சடரூபங்களான உலகமெல்லாம் அல்லாகு தஆலாஉடைய வீடாயிருக்கிறது. பூமி அந்த வீட்டின் அடித்தரையாயும் வானம் மேல்தளமாயு மிருக்கிறது. என்

* இங்கு இமாமவர்கள் தங்கள் அறிவின் பெருமையை அல்ல, சிறுமையை எடுத்துக்காட்டுகிறார்கள். பின் சொல்லை நோக்குக.

கினும் இந்த மேல்தளமோ கீழ் ஆதாரமில்லாமல் அந்தரத்தில் நிற்கிறது. இது எல்லாவற்றிலும் பெரிய புதுமை. இன்னும் மலைகள் அந்த வீட்டின் புதையல்களாயும் சமுத்திரங்கள் பொக்கிஷங்களாயும் ஜீவவர்க்கங்களும் மூலவர்க்கங்களும் அந்த வீட்டில் ஆளும் சாமான்களாயும் சந்திரன் அந்த வீட்டுக்கு விளக்காயும் சூரியன் பந்தமாயும் நக்ஷத்திரங்கள் குலோப்புகளாயும் மலக்குகள் அவைகளைக் கொளுத்தும் மஷால்சிகளாயும் இருக்கும்படி இவ்விதம் அந்த வீடு அமைக்கப்பட்டிருக்கிறது. நீயோ இந்த வீட்டின் புதுமைகளை அறியாமல் மறந்துபோயிருக்கிறாய். இதற்குக் காரணம் யாதெனில், அந்த வீடு அதிக பெரிதாயும் உன் கண் மிகச் சிறிதாயு மிருப்பதினால் அது உன் கண்ணுக்குள் அடங்காம லிருக்கிறது. நீ ஒரு எறும்புக்குச் சமானமாவாய். அந்த எறும்பு ஒரு அரசனுடைய மாளிகையில் ஒரு இடுக்கு வளை வைத்துக்கொண்டிருக்கிறது. அதற்குத் தன் இடுக்கும் தன் இரையும் தன் இனத்தாருமே தவிர வேறொன்றும் புலப்படுகிறதில்லை. மாளிகையின் அழகும் அரசனுடைய வேலைக்காரர்களின் பெருக்கமும் அவன் சிம்மாசனமும் அவன் அரசாட்சியும் இவை ஒன்றும் அதற்குத் தெரிகிறதில்லை. உனக்கு இந்த எறும்பின் பதவியே போதுமென்று திருப்தியடைந்திருக்க நீ நாடுகிறபக்ஷம் இப்படியே மறதியாளனாயிரு. இல்லையாயின் நாயகனை அறிவதென்னும் மஃரிபத்தான நறுமணச்சோலையில் உல்லாசமாக உலாவுவதற்கு உனக்கு வழி காட்டப்பட்டிருந்தால் வெளியே வா. வந்து கண்ணைத் திற. திறந்து அதிசயங்களைப் பார். அப்படிப் பார்ப்பாயாகில் நீ திடுக்கிட்டு மலைத்து மதிமயங்கிப் பிரமைகொள்வாய். வல்லாஹு சுபுஹானஹு வதஆலா அஃலமு.

### எட்டாவது அஸ்லு-தவக்குல் அதாவது அல்லாகு தஆலாவின்மேல் ஆதரவு வைப்பதில் பேசுவது.

அறிந்துகொள் :—தவக்குலானது அல்லாகு தஆலாவின் சமுகத்தை அடுக்கின்ற முகர்ரபுகளுடைய தானங்களில் ஒருதானமாம். அதன் பதவி பெரிதாயிருக்கிறது. ஆனால் அதைக்குறித்த அறிவானது தன்னிலே மிகநுட்பமும் கஷ்டமுமா யிருப்பதுமன்றி அதன்படி அமல் செய்வதும் பாரமாகின்றது. இந்தக் கஷ்டத்துக்குக் காரணம் யாதெனில், காரியங்களைச் செய்ய அல்லாகு தஆலாவுக்கன்றி பிறிதொன்றுக்கு ஏதோ சக்தியிருப்பதாக ஒருவன் காண்பானாகில் அல்லாவை ஒன்றுபடுத்தல் என்னும் தவுஹீதில் அவன் குறைச்சலுள்ளவனாகிறான். எல்லாக் காரணங்களையும் இடையிலிருந்து எடு

த்துவிட்டால் அப்போது ஷரகில் அவன் நிந்திக்கப்பட்டவனாகின்றான். காரணங்களையும் உண்டாக்குகிற ஒரு காரணகர்த்தன் உண்டென்று காணுதபக்ஷம் அவன் தன் புத்திக்கு விரோதம் செய்கிறவனாவான். உண்டென்று கண்டாலும் ஒருசமயம் அவன் அக்காரணங்களில் ஒன்றன்மேல் சாரவும் அவன் தவ்ஹீதில் குறைவு நேரவும்கூடும். ஆகவே புத்தியும் ஷரகும் தவ்ஹீதும் ஒத்துச் சொல்லுகிறவிதமாகவும் இம்மூன்றையும் ஒன்றாகச் சேர்க்கிற விதமாகவும் தவக்குலை வகுத்தறிவது ஆழ்ந்த ஓர் அறிவாயிருக்கிறது. எல்லாருமே இதை அறியமாட்டார்கள். நாம் முதலில் தவக்குலின் மேம்பாட்டையும் பிறகு அதன் பொருளையும் பிறகு அதன் நிலைமைகளையும் அமல்களையும் கூறுவோம்.

### தவக்குலின் மேம்பாடு.

அல்லாகுதஆலா எல்லாரையும் தவக்குல்வைக்கும்படி ஆக்கியாபித்திருப்பதுமன்றி நீங்கள் முமின்களாயிருந்தால் அல்லாவின்மேல் தவக்குல் வையுங்கள் என்று கூறுவதில் தவக்குலை ஈமானுக்கு ஷாத்தாக்கி யிருக்கிறான். இன்னும் தவக்குல் வைப்பவர்களைத் திடனாக அல்லாகுதஆலா நேசிக்கிறான் என்றும், ஒருவன் அல்லாகுதஆலாவின் மேல் தவக்குல் வைப்பானாகில் அவனுக்கு அவன் போதுமானவன் என்றும், அல்லாகுதஆலா தன்அடிமைக்குப் போதுமானவ னல்லவா? என்றும் திருவுளமாயிருக்கிறான். இந்த ஆயத்துகள் போன்றவை இன்னும் வந்திருக்கின்றன. ரசூல் சல்லல்லாகு அலைஹி வசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "உம்மத்துகள் எனக்கு எடுத்துக்காட்டப்பட்டன" என்றும், "அந்தஉம்மத்துகளில் என் உம்மத்தைக் கண்டேன்" என்றும், "மலைகளும் வனாந்திரங்களும் என்உம்மத்தால்நிறைந்திருந்தன" என்றும், "அவர்களின் பெருக்கத்தைக்கண்டு நான் ஆச்சரியமடைந்து சந்தோஷித்தேன்" என்றும், "அப்போது அல்லாகு தஆலா நீர் சந்தோஷமடைந்தீரா? என்று கேட்க, "நான் சந்தோஷமடைந்தேன் எனச் சொன்னேன்" என்றும், "அதற்கு அல்லாகு தஆலா இவர்களெல்லாரோடும் எழுபதினாயிரம் பேர் கேள்வி கணக்கில்லாமல் சொர்க்கம் போவார்கள் எனச்சொன்னான்" என்றும் அருளிச்செய்தார்கள். அப்போது அஸ்ஹாபுகள் "யாரசூலல்லா! அவர்கள் யாராயிருப்பார்கள்?" என்று கேட்டதற்கு, "எந்த ஜனங்கள் தங்கள் காரியங்களை மந்திரமோதல், சூடுபோடல், பால்பார்த்தல் இவைகளின் ஆதாரத்தின்மேல் செய்யாமல் அல்லாகு தஆலாவையே நம்பி அவன்மேல் தவக்குல் வைப்பவர்களாயிருக்கிறார்களோ அவர்களே" என்று அருளிச்செய்தார்கள். அப்போது அக்காஷாறனி

யல்லாகு அன்கு அவர்கள் எழுந்து "யாரசூலல்லா! என்னை அவர்களில் ஒருவனாக்கும்படி தாங்கள் எனக்கு துஆ செய்யவேண்டும்" என்றார்கள். அப்போது நாயகமவர்கள் "என் ஆண்டவனே! அக்காஷாவை அவர்களில் ஒருவராக்கு" என்று துஆ செய்தார்கள். பின்பு மற்றொருவர் எழுந்து இதே துஆவைத் தமக்கும் செய்யும்படி கேட்டார். அதற்கு நாயகமவர்கள் உம்மைவிட அக்காஷா அதற்கு முந்திக்கொண்டார் என்றார்கள். "இன்னும் எப்படித் தவக்குல் வைக்கவேண்டிய ஹக்கோ அப்படியாக நீங்கள் அல்லாகுதஆலாவின்மேல் தவக்குல் வையுங்கள்" என்றும், "பக்ஷிகளுக்கு இரணம் செலுத்துவதுபோல் அவன் உங்கள் இரணத்தை உங்களுக்குச் செலுத்துவான்" என்றும், "பக்ஷிகள் காலையில் பசியும் வயிறுகாலியுமுள்ளவைகளாகப்போய் மாலையில் எல்லாம் வயிறு நிறைந்து திருப்தியடைந்து திரும்பிவருகின்றன" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "எவனொருவன் அல்லாகுதஆலாவினிடம் காவல் புகுந்தானோ அவனுடைய எல்லாக் காரியங்களுக்கும் அல்லாகு தஆலா போதுமானவன்" என்றும், "அவன் அறியாத இடத்திலிருந்து அவனுக்குஇரணம்செலுத்துவான்" என்றும், "துன்யாவினிடம்காவல் புகுந்தவன் எவனோ அவனைத்துன்யாவுடன்விட்டுவிடுவான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இபுறாஹீம் கலீல் அலைகிஸ்ஸலாமவர்களை இடங்கணியில் தெறிப்பதற்காக மஞ்சனீகு என்னும் எறிகருத்திரத்தில் அவர்களை வைத்தபோது அவர்கள் ஹஸ்பியல்லாஹு வ நிஃமல் வகீல் நம்புதலுக்கு நல்ல வகீலான அல்லா எனக்குப் போதும்என்று சொன்னார்கள். பின்பு சூத்திரம் மேலே உயர்த்தப்பட்டு அவர்கள் அந்தரத்திலானபோது ஜிப்ராயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் வந்து "உமக்கு ஏதும் வேண்டுதல் உண்டா?" என்று கேட்டதற்கு "உம்மிடத்தில் எனக்கு ஏதும்வேண்டுதல் இல்லை" என்று சொன்னார்கள். அவர்கள் ஏன் இப்படிச் சொன்னார்களென்றால், ஹஸ்பியல்லாஹு (அல்லா எனக்குப்போதும்) என்று முதலில் அவர்கள் சொன்ன வாக்கை நிறைவேற்றினவர்களென்றாவதற்கேயாம். இதனாலேயே அல்லாகு தஆலா அவர்களை வருணித்து வாக்கை நிறைவேற்றின இபுறாஹீம் என்றும் புகழ்கின்றான். இன்னும் தாவூது அலைகிஸ்ஸலாமவர்களுக்கு வஹியினால் "ஓ தாவூதே! எல்லாவற்றையும் விட்டு என்னிடத்தில் காவல் புகுந்த அடிமையை வஞ்சித்து மோசஞ் செய்ய வானம் பூமிகளெல்லாம் எழுந்தபோதிலும் நான் அவன் கஷ்டத்தை நீக்காமலிருப்பதில்லை" என்று அறிவித்தான். சயீதுபுனுல் ஜுபைர்

றழியல்லாகு அன்குஅவர்கள் சொல்லுகிறதாவது:—"ஒருதரம்தேள் என் கையில்கொட்டிவிட்டது. "மந்திரிப்பவர் மந்திரிக்குப்பொருட்டு கையைக்காட்டு" என்று என் தாயாரவர்கள் எனக்கு ஆணையிட்டுச் சொன்னார்கள். அப்போது நான் சவுக்கியமுள்ள மற்றொரு கையை நீட்டினேன்" என்பதே. இவர்கள் ஏன் இப்படிச் செய்தார்களென்றால், "மந்திரித்துக்கொள்பவனும் சூடுபோட்டுக்கொள்பவனும் முதவக்கில் ஆகான்" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருப்பதினாலென்க. இபுறாஹீமுல் அத்ஹம் றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் ஒரு நஸ்ரானிய சன்னியாசியிடத்தில் "நீ எங்கிருந்து உணவுஉண்கிறாய்?" என்றுகேட்டேன். அதற்கவன் "அது எனக்குத் தெரியாது. உணவளிப்பவன் எவனோ அவனிடத்தில் நீ இதை எங்கிருந்து அனுப்புகிறாய்எனக்கேள்" என்று சொன்னான்" என்பதே. இன்னுமொருவரை நோக்கி "நீர்எப்போதும் இபாதத்து செய்துகொண்டிருக்கிறீரே, ஆகாரம் எங்கிருந்து அருந்துகிறீர்? என்று கேட்டதற்கு அவர் தம் பல்லைத் தொட்டுக் காட்டினார். இதில் அவர் கருத்து யாதெனில், கமறைதயைச் சமைத்தவன் தானியத்தை அனுப்புவானென்பதே. ஹறமுபுனுல்ஹய்யான் றஹிமஹுல்லா அவர்கள் உவைசுல்கர்னீ றஹிமஹுல்லா அவர்களைக் கண்டுகொண்டபோது "தாங்கள் எந்த ஊரில் குடியிருக்கும்படி உத்திரவுசெய்கிறீர்" என்று அவர்களிடம் கேட்டதற்கு, "ஷாமில் இரும்" என்று சொன்னார்கள். அதற்கு ஹறமுபுனுல் ஹய்யான் "அங்கு ஜீவனம் எப்படியிருக்கும்?" என்று கேட்டார்கள். அப்போது உவைசு றஹிமஹுல்லா அவர்கள் இப்படிச் சந்தேகமுள்ளனவும் சற்புத்தியினால் பயனை அடையாதனவுமான இருதயங்களுக்குத், தூ; என்று இகழ்ந்து "இந்த இருதயங்களைச் சந்தேகம் மிகைத்துவிட்டதால் சற்புத்தி பயனைத்தராது" என்று சொன்னார்கள்.

## தவக்குல் எதன்மேல் நிலைபெற்றிருக்கிறதோ அந்த தவுஹீதின் ஹக்கீகத்து இதுவென அதன்பொருளை விளக்கல்.

அறிந்துகொள்:—தவக்குலானது இருதய நிலைமைகளில் ஒன்றாம். அது ஈமானின் பலனாயிருக்கிறது. ஈமானுக்கு அநேகம் பாபுகள் உண்டு. எனினும் அவைகளில் இரண்டு வஸ்துக்களின் ஈமான் தவக்குலுக்கு நிலைக்களமாயிருக்கின்றன. அவற்றுள் ஒன்று: தவுஹீது அதாவது:—அல்லாவை ஒன்றுபடுத்தி அவனன்றி வேறு கர்த்தாவில்லை என்று உறுதியாக நம்புவதாம். மற்றொன்று: அல்லாகு தஆலா அதிக அன்பும் மிக்க கிருபையும் உள்ளவனென்று நம்புவதாம்.

தவ்ஹீதின் வியாக்கியானம் வெகுவிரிவா யிருக்கிறது. எல்லா இல்முகளின் முடிவு தவ்ஹீதின் இல்மேயாம். என்கிலும் தவக்குல் எதன் மேல் நிலைபெறுகிறதோ அந்த தவ்ஹீதின் அளவாக நாம் கொஞ்சம் சயிக்கினை செய்வோம். ஆதலால் நீ அதை அறிந்துகொள்ள வேண்டும். அதாவது:—

தவ்ஹீது நாலு வகுப்பா யிருக்கிறது. (பருப்பினங்களுக்குப் போல்) அதற்கு ஒருமணியும் அந்த மணிக்குள் ஒருமணியும் ஒரு தோலியும் அந்தத் தோலிக்குள் ஒருதோலியு மிருக்கிறது. ஆகவே தவ்ஹீதானது இரண்டுமணிகளையும் இரண்டு தோலிகளையும் பொருந்தினதா யிருக்கிறது. இதற்குப் பச்சையான ஒரு அக்ரோட்டுக் காய் உபமானமாகும். அக்ரோட்டுக்காயில் ஒருமணியும் இரண்டு தோலிகளும் இருப்பது தெரிந்ததுதான். பின்பு மணிக்குள் மணி யென்றது அதன் நெய்யையேயாம். தவ்ஹீதில் முதலாவது வகுப்பு யாதெனில், "லாஇலாஹ இல்லல்லாஹு" (அல்லா ஒருவனேயன்றி வேறு நாயகனில்லை) என்று நாவினால் சொல்வதும் அது உண்மை யென்று மனதால் நிர்ணயிக்காம லிருப்பதுமாம். இது முனாபிகுடைய தவ்ஹீதா யிருக்கிறது. இரண்டாவது வகுப்பு யாதெனில், மேற்கூறிய கலிமாவின்பொருளை ஆமி என்னும் சாமானியனைப் போல் கேள்வியின் மூலமாயாவது முத்தகல்லிம் என்னும் தர்க்க சாஸ்திரியைப்போல் அத்தாட்சியின் மூலமாயாவது மனதில் நிருணயித்துக் கொள்வதாம். மூன்றாவது வகுப்பு யாதெனில், இந்தக் கலிமாவின் பொருளைப் பிரத்தியக்ஷமாகப் பார்ப்பதாம். அதெவ்வாறெனின், எல்லாம் ஒரே மூலத்திலிருந்து நிகழ்கின்றன என்றும் ஒரு கர்த்தாவுக்குமேல் வேறு கர்த்தாயில்லை என்றும், அந்தக் கர்த்தாவுக்கேயன்றி வேறு எவருக்கும் கர்த்தத்துவம் இல்லையென்றும் அறிவதாம். இது அவன் மனதில் உதிக்கின்ற ஒரு ஒளியாயிருக்கிறது. அந்த ஒளியில் இந்தப் பிரத்தியக்ஷ காக்ஷி அவனுக்கு உண்டாகின்றது. இது ஆமியும் முத்தகல்லிமும் நிருணயித்துக்கொண்ட அகீதாவைப் போன்றதல்ல. ஏனெனில் இவர்களுடைய அகீதாவானது தக்லீது என்னும் கேள்வியின் மூலமாய் அல்லது அநுமானப் பிரமாணம் என்னும் தந்திரோபாயத்தினால் இவர்கள் தங்கள் மனதில் போட்டுக்கொண்ட ஒரு முடிச்சாயிருக்கிறது. இந்தக்காட்சி அப்படியல்ல. இது மனதின் விரிதலாயும் எல்லா முடிச்சுகளையும் அவிழ்த்துப் போடுவதாயும் இருக்கிறது. ஒருவன் இன்ன கனவான் வீட்டிலிருக்கிறான் என்று இன்னான் சொல்லுகிறதினால் அந்தக்

கனவான் வீட்டிலிருப்பது நிஜம் என்று நிருணயிக்கின்றான். இந்த
நிருணயம் தன் தந்தை தாய்களிடம் கேட்டிருந்தபடி அகீதாவைக்
கின்ற ஒரு ஆமியின் தக்லீதுக்கு ஒப்பாகும். இன்னுமொருவன் அந்தக்
கனவானுடைய குதிரையும் வேலைக்காரனும் அவன் வீட்டுத் தெரு
வாசலில் இருப்பதைக்கண்டு அந்த அநுமானத்தினால் அக்கனவான்
வீட்டிலிருப்பது நிஜம் என்று நிருணயிக்கின்றான். இந்த நிருணயம்
அத்தாட்சிகளால் முடிவுசெய்துகொள்ளுகிற முத்தகல்லிமுடைய
அகீதாவுக்குச் சமானமாகும். இன்னுமொருவன் அந்தக் கனவானை
அவன் வீட்டில் பிரத்தியக்ஷமாகப் பார்க்கின்றான். இது ஆரிபுகளின்
தவ்ஹீதுக்கு உபமானமாகும். இம்மூவருக்கும் நடுவே வித்தியாச
மிருக்கிறது. இந்த மூன்றாவது வகுப்பு தவ்ஹீது பெரும்பதவியுள்
ளதுதான். இருந்தபோதிலும் இதில் ஆரிபு சிருஷ்டியையும் பார்க்
கின்றான். சிருஷ்டிகர்த்தாவையும் பார்க்கின்றான். சிருஷ்டியானது
சிருஷ்டிகர்த்தனால் என்று அறிகின்றான். ஆகவே இந்தத் தவ்ஹீதில்
பலவாகக் காணல் நுழைகின்றது. ஆரிபு ஒளிதங் காண்பவனாயிருக்
கிறவரையில் அவன் பிரித்தலில்தானிருப்பான். சேர்த்தல்வாய்க்காது.
இது தவ்ஹீதின் நிறைவல்ல. உசைனுல்ஹல்லாஜி றஹிமஹுல்லா
அவர்கள் கவாஸ்ஸு றஹிமஹுல்லா அவர்களை ஒருகாட்டில் சஞ்
சரித்துக்கொண்டிருக்கக்கண்டு "நீர் இங்கு என்ன செய்கிறீர்?"
என்றுகேட்டார்கள். அதற்கவர்கள் "நான் தவக்குலில்நிலைநிற்கும்படி
என்னை நேர்படுத்திக்கொண்டிருக்கிறேன்" என்றார்கள். அப்போது
உசைனுல்ஹல்லாஜியவர்கள் நீர் இத்தகைக் நற்குணங்களால் உம்மு
டைய மனதைச் செழிக்கப் பண்ணுவதில் வயதைக் கழித்தீர், பின்பு
பனாபித்தவ்ஹீதி (ஒன்றுபடுத்தலில் நாஸ்தியாதல்) என்னும் தான
த்தில் எப்போது சேர்வீர்?" என்று கேட்டார்கள். இதனால் கவாஸ்
றஹிமஹுல்லா அவர்கள் தவ்ஹீதில் மூன்றாவது மகாமை நேர்படு
த்திக்கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களிடம் ஹுஸைனுல் ஹல்
லாஜீ றஹிமஹுல்லா அவர்கள் இந்த நாலாவது மகாமைக் கேட்டார்
கள் என்றும் ஏற்படுகிறது.

பின்னர் தவ்ஹீதில் மூன்றினது முனைபிருடைய தவ்ஹீதாம். இது
தொலிக்குமேல் ஒரு தொலியைப்போன்றது. அக்ரோட்டுக் காயின்
மேற்றோலை நீ தின்பாயாகில் உனக்கு அருவருப்பாயிருக்கும். அந்
தத்தோலின் மேல்பக்கம் கண்ணுக்குப் பசுமையாகத் தோன்றின
போதிலும் அதன் கீழ்பக்கம் விகாரமாயிருக்கும். அந்தத்தோலை
விறகாக எரிக்கும்பொருட்டு அடுப்பில் போடுவாயாகில் புகைச்சலை

உண்டாக்கும். நெருப்பை அவித்துப்போடும். வீட்டில் வைத்திருப்பாயாகில் அது ஒன்றுக்கும் உபயோகப்படாது. இடத்தை அடைக்கும். ஆகவே அது எந்த வேலைக்கும் தகுமானதல்ல. ஆனால் கொஞ்ச நாள்வரையில் அந்தத்தோலைக் காயின்மேல் அப்படியே விட்டுவைக்கிறார்கள். ஏனெனில் அதன் மேலிருக்கிற தோலிக்குக் கொழுமையை உண்டாக்கவும் சேதங்களினின்றும் அதைக் காக்கவுமேயாம். இதேபோல் முனாபிகுடைய தவ்ஹீதும் எந்த வேலைக்கும் தகாததாயிருக்கிறது. ஆனால் அது அவன்தோலை வாளுக்குத் தப்புவிக்கும். தோலை என்றது அவன் உடம்பை. உண்மை கொள்வதின்றி வெளிப்படைக்கு அவன் கலிமா மொழிவதினால் யுத்தவாளுக்கு அவன் உடம்பு தப்புகின்றது. என்றாலும் உடம்பொழிந்து உயிர் மிஞ்சி நிற்கும்போது அவன் தவ்ஹீது ஒன்றுக்கும் உபயோகப்படாது. அக்ரோட்டின் உள்தோல் அடுப்பெரிக்கத் தக்கதாயிருக்கிறது. ஆனால் உள்மணி சேதமாகாதபடி அதைக் காத்துக்கொண்டிருக்கும்பொருட்டு அந்த உள்தோல் மணியின்மீது விட்டுவைக்கத் தகுந்ததே. ஆயினும் மணியை நோக்க அது அற்பமேயாம். ஆகவே சாமானியனுடைய தவ்ஹீதும் தர்க்க சாஸ்திரியுடைய தவ்ஹீதும் தகுமானவைகளே. ஏனெனில் அவன் உயிராகிய மணியை நரகத்துநெருப்பினின்றும்காத்துக்கொள்ளவேயாம். இது இவ்வளவு உபயோகப்படுவதாயிருந்தாலும் மணியும் நெய்யுமான தவ்ஹீதின் தெளிவைப்போல் அவ்வளவுதெளிவில்லாததாயிருக்கிறது. இன்னும் அக்ரோட்டில் கருதப்படுவதும் விரும்பப்படுவதுமான பொருள் அதன் மணியாயிருக்கிறது. இருந்தபோதிலும் அதை அதன் நெய்யோடுசேர்த்துப்பார்க்கும்போது அதுதன்னிலேசுத்தமானதெளிவு நிறைந்ததாயிராமல் திப்பியாய்க் கழிகின்றது. இதேபோல் மூன்றாவதுவகுப்பு தவ்ஹீதும் பலவாகக்காணல், அதிகமாகக்காணல், பிரித்துக்காணல் என்னும் திப்பியை உடையதாயிருக்கிறது. ஆதலால் நாலாவது வகுப்பு தவ்ஹீதே நிறைவான தெளிவையுடையது. அதில் ஹக்கு தஆலா ஒருவனே மிஞ்சிநிற்பான். அந்த ஒருவனையன்றி வேறொன்றையும் அவன் காணமாட்டான். தன்னையும் மறந்துபோவான். இன்னும் அவன் பார்வையில் மற்றும் பொருள்கள் எப்படி நாஸ்தியாய்விட்டனவோ அப்படியே அவன் தன்னையும் பார்க்காதபடி நாஸ்தியாய்ப் போவான்.

பசல்: அகத்தியம் நீ இந்த நாலாவது வகுப்பு தவ்ஹீது எனக்குக் கஷ்டமாய்த் தெரிகிறதென்றும் இதை நான் அறியும்படி விவரித்

து காட்டவேண்டும் என்றும், எல்லாம் ஒன்றில்நின்றுமே உள்ள தென எப்படிக் காண்பதென்றும் நான் பல காரணங்களைப் பார்க்கிறவனுயிருக்க எல்லாவற்றையும் ஒன்றாக எப்படிக் காணமுடியும் என்றும், வானம், பூமி, மற்றும் சிருஷ்டி இவைகளை வெவ்வேருக பார்த்துக்கொண் டிருக்கிறேனுதலால் இவையெல்லாம் ஒன்றல்ல என்றும் சொல்வாய். அறிந்துகொள்:—நாவினுல் மாத்திரம் மொழிகின்ற முனுபிகுடைய தவுஹீதையும் கேள்வியின் மூலமாய் நிருணயித்துக்கொள்ளுகிற ஆமியுடைய தவுஹீதையும் அத்தாட்சியினுல் அனுமானித்து நிருணயித்துக்கொள்ளுகிற முத்தகல்லிமுடைய தவுஹீதையும் இம்மூன்றையும் நீ விளங்கிக்கொள்ளக்கூடும். இதற்குப் பின்னுள்ள தவுஹீதுகளில்தான் கஷ்டமிருக்கிறது. ஆனுல் தவக்குலுக்கு நாலாவதுவகுப்பு தவுஹீது தேவையில்லை. மூன்ருவது வகுப்பு தவுஹீதே தவக்குலுக்குப் போதும். இந்த நாலாவது வகுப்பு தவுஹீதை இதன் தானத்திற் சேராதவனுக்கு விளக்கிக்காட்டுவதும் விரித்துரைப்பதும் கஷ்டமேயாம். ஆயினும் மொத்தத்தில் இவ்வளவை அறிந்துகொள்: அதாவது:—பொருட்கள் பலவாயிருக்கினும் ஒருவாறு அவைஒன்ருேடொன்றுகட்டுண்டுபொருந்தியிருந்தால்அதனுல் அப்பொருட்களெல்லாம் ஒரே பொருள்போல் ஆகலாம். இந்தக் கட்டுண்ணல் ஆரிபுடையபார்வையில் அமையும்போது அவன் எல்லாவற்றையும் ஒன்றெனக் காண்பவனுயும் பலவாகக்காணுதவனுயுமிருப்பான். உதாரணமாக:—மனிதனில் சதை, தோல், தலை, கால், இரைப்பை, ஈரல்முதலிய பலபொருள்களிருக்கின்றன. மனிதன் என்னும் பொருளில் அவையெல்லாம் ஒரே பொருளாம். எந்தமட்டுக்கென்ருல், ஒருவன் ஒரு மனிதனைப்பார்க்கும்போது மனிதனென்ற பொருளையே கருதுவதன்றி மற்றப்படி அவன் உறுப்புகளைப் பிரித்தறிவதில் அவன் ஞாபகம் செல்வதில்லை. நீ எதைக் கண்டாய் என்று அவனைக் கேட்டால் ஒரே பொருளை அதாவது மனிதனைப் பார்த்தேன் என்று அவன் சொல்லுகிருன். ஒரு ஆஷிகானவனை நீ உன்சிந்தையில் என்ன சிந்திக்கிருய் என்று கேட்டால் நான் ஒரே வஸ்துவை அதாவது என் மாஷூகையே சிந்திக்கிறேன் என்று சொல்லுகிருன். ஆகவே அவன் சிந்தை முழுதும் அவன் மாஷூகாகவே மாறியிருக்கும்.

ஆதலால் நீ அறிந்துகொள். மஃரிபத்துடைய தானங்களில் ஒருதான மிருக்கிறது. அந்தத் தானத்துக்குச் செல்லுகின்றவன் எவனே அவன் உலகமாகத் தோன்றியிருக்கிற இவையெல்லாம் ஒன்ருேடொன்று கட்டுண் டிருக்கின்றன என்றும், சர்வமும் ஒரே ஜீவன்போல் இருக்கிறதென்றும், ஒரு ஜீவனுடைய உறுப்புகள்

ஒன்றோடொன்று சேர்ந்திருப்பதுபோல் வானம், பூமி, நக்ஷத்திரங்கள்முதலிய ஆலத்தின் பாகங்களெல்லாம் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கின்றன என்றும், சர்வலோகத்தோடும் அதை ஆள்பவனுக்கிருக்கிற சம்பந்தமானது ஒருவிதத்தில் (எல்லாவிதத்திலுமல்ல) ஒரு உடம்பாகிய ராச்சியத்தோடு அதை ஆளும் உயிர் உணர்வுகளுக் கிருக்கிற சம்பந்தம்போல்வதென்றும் எதார்த்தத்தில் காண்கின்றான். ஒருவன் இதை அறியாதிருக்கிறவரையில் திடனாக ஆதமை அல்லாது தஆலா தன்ரூபத்தில் படைத்தான் என்பதின் பொருள் அவன் புத்தியில் அமையாது. உன்வானில் இதைப்பற்றி நாம் கொஞ்சம் சயிக்கினை செய்திருக்கிறோம். இதுவிஷயத்தில் பேசாமல் வாய் பொத்துவதே மிக உத்தமம். ஏனெனில் இது பயித்தியக்காரர்களின் (தர்க்க) சங்கிலியை ஆட்டிவிடும். எல்லாருமே இதை விளங்கிக்கொள்ள சக்தியுள்ளவர்களாயிருக்கமாட்டார்கள். இனி, செயலில் ஒன்றுபடுத்தல் என்னும் மூன்றாம் தவ்ஹீதுக்கு எஹ்யா என்னும் கிதாபில் விரிவான ஓர் வியாக்கியானம் கூறியிருக்கிறோம். நீ அதற்கு அருகனாயிருந்தால் அதில் தேடிப் பார்த்துக்கொள். இங்கு ஷுக்ருடைய பாடத்தில் நாம் சொல்லியிருக்கிற அளவாகக் கொஞ்சத்தை நீ அறிவது போதுமாயிருக்கிறது. அதாவது:—சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், மேகம், மழை, காற்று இன்னுமிவற்றைப்போல் எவைகளை நீ காரிய நிகழ்ச்சிக்குக் காரணங்களாகக் காண்கிறாயோ அவையெல்லாம் எழுத்துக்காரனுடைய கைக்கு வசப்பட்ட எழுதுகோல்போல் ஒன்றுக்கு வசப்பட்டவைகளாயிருக்கின்றன என்று நீ அறியவேண்டும். இவைகளில் ஒன்றேனும் தானாக அசைகிறதில்லை. இவைகளை எப்படி வேண்டுமோ அப்படியாக அதனதன் கால அளவுகளில் அசைக்கின்றார்கள். ஆதலால் காரியங்களை இவைகளின்வசம் சாட்டுவது பிசகாயிருக்கிறது. எதுபோலெனில் பரிசளிக்கும்படி அரசன் கையெழுத்திட்ட கட்டளையை எழுதுகோல் காகிதம் இவைகளின் வசம் சாட்டுவது பிசகேபோலென்க. இனி ஜீவராசிகளின் இகுதியாருவிஷயம் யோசிக்கப்படவேண்டியதிருக்கிறது. ஏனெனில் நீ மனிதனுடைய ஐக்கியத்தில் ஏதோ இருக்கிறதாக எண்ணுகிறாய். இந்த எண்ணம் பிசகானது. மனிதனே தனது சுயம்புவில் ஒரு பலாட்டிய சக்தியினால் வேலைவாங்கப்படுகிறவனும் தனது சுயேச்சையினால் ஒன்றையும் செய்யக்கூடாதவனுமிருக்கிறான். இதை நாம் முன்னமே (நிப்யத்துடைய பாடத்தில்) கூறியிருக்கிறோம். அதாவது:—மனிதன் செயல் அவன் சக்திக்கு ஐக்கியமானது என்றும், சக்தி நாட்டத்துக்கு ஐக்கியமானது என்றும், அவன் எதைச்செய்ய நாடுகிறானோ அதைச் செய்வான் என்றும், ஆனால் நாட்டம் அவன் ஐக்கியத்தில்

இல்லை என்றும், நாட்டம் வரவேண்டுமென்று அவன் விரும்பினாலும் விரும்பாமற்போனாலும் அல்லாகு தஆலா நாட்டத்தை அவனில் படைக்கின்றான் என்றும், அப்போது அவன் நாடுகின்றான் என்றும் சொல்லியிருக்கிறோம். ஆகவே அவன் செயலின் சக்தியானது அவன் நாட்டத்துக்கு ஐக்கியப்பட்டதென்றும் அவன்நாட்டத்தின் திறவுகோல் அவன் கைவசத்தில் இல்லை என்றும் ஏற்பட்டபடியால் எந்தவஸ்துவும் அவன்வசத்தில் இல்லை என்றாயிற்று.

மனிதன்வசத்தில் ஆக்கப்படுகிற செயல் (இயற்கைச்செயலெனவும் எண்ணச்செயலெனவும் இஷ்டச்செயலெனவும்) மூன்றுவகைப்படுமென்பதை நீ அறிவதினால் (எச்செயலும் மனிதன் வசத்திலில்லை என்கிற) இந்தவிஷயத்தைப பூராவாக நீ உணர்ந்துகொள்வாய். அம்மூன்றுவகைச் செயல்களில் முதலாவது உதாரணமாக:—ஒருவன் ஜலத்தின்மேல் காலைவைத்தால் கால்ஜலத்துக்குள் இறங்கிவிடுகிறது. அப்போது அவன் ஜலத்தைக் கிழித்து அதன் அணுக்களின் சேர்க்கையைப் பிரித்தான் என்று சொல்லுகிறார்கள். இதற்கு இயற்கைத்தொழில் என்றுசொல்லப்படும். இரண்டாவது:—மனிதன் மூச்சுவிடுகிறான் என்று சொல்லுகிறார்கள். இது எண்ணத்தொழில் என்று சொல்லப்படும். மூன்றாவது:—மனிதன் பேசினான், நடந்தான் என்று சொல்லுகிறார்கள் இது இஷ்டத்தொழில் என்று சொல்லப்படும். பின்னர் அந்த இயற்கைச்செயல் அவன் செயலல்லவென்பது மறைந்ததல்ல. ஏனெனில் அவன் ஜலத்தின்மேல் ஆகும்போது அவனது கனத்தால் ஜலம் கிழிவது இயற்கையேயாம். இந்தச் செயல் அவனுக்குள் அடங்கினதல்ல. அவன் நாடினாலும் நாடாமற்போனாலும் இப்படியே செயல் நிகழும். மேலும் ஜலத்தின்மேல் நீ ஒரு கல்லை வைத்தாலும் அது ஜலத்துக்குள் இறங்கிவிடும். அப்படி இறங்குவது கல்லின் தொழிலல்ல. கல்லினது கனத்தால் இயற்கையாக இறங்குந்தொழில் நிகழ்கின்றது. இனி மூச்சுவிடல்போன்ற எண்ணச்செயலை நீ நிதானித்துப் பார்க்கிறபக்ஷம் இதுவும் இயற்கைச்செயல்போலவே உனக்குள் அடங்காச் செயலாயிருக்கிறதென்று ஏற்படும். ஏனெனில் மனிதன் மூச்சைப்பிடித்துக்கொண்டிருக்க நாடினால் அது அவனால் முடிகிறதில்லை. அவன் நாடினாலும் நாடாமற்போனாலும் மூச்சுவிடவேண்டுமென்ற எண்ணம் அகத்தியம் அவனில் பிறக்கும்படி அல்லாகு தஆலா அவனைப் படைத்திருக்கிறான். ஒருவன் தூரத்திலிருந்து மற்றொருவனுடைய கண்ணை ஊசியால் குத்த நாடினால் அவன் அகத்தியம் கண்ணை மூடிக்கொள்ளுகிறான். மூடாமலிருக்க எண்ணங் கொள்ளுவானாகில் அப்படியிருக்க அவனால் முடிகிறதில்லை. ஏனெனில் அவன் ஜலத்தின்மேல் நின்றால் எப்படி

ஜலத்துக்குள் அமிழ்ந்துவிடுகிற விதமாக அவன் படைக்கப்பட்டிருக்கிறானோ அப்படியே கண்ணை மூடவேண்டுமென்ற அந்த எண்ணம் அகத்தியம் அவனில் பிறக்கும்படி படைக்கப்பட்டிருக்கிறான். ஆகவே இவ்விரண்டு செயல்களிலும் மனிதனுக்கு இக்தியாரு இல்லையென்று தெரியவந்தது. இனி நடக்குதல் பேசுதல்போன்ற இஷ்டச் செயலை அவன் இஷ்டமிருந்தால் செய்கிறவனாயும் இல்லாமற்போனால் செய்யாதவனாயு மிருப்பதால் இதில் அவனுக்கு இகுத்தியாரு இல்லை எனக்காண்பது கஷ்டமேயாம். ஆயினும் நீ அறியவேண்டியதென்னவென்றால், இந்தச்செயலில் நன்மையுண்டு என்று உன் புத்தி உனக்குக் கட்டளையிடும்போதுதான் அச்செயலில் உனக்கு இஷ்டம் வருகிறது. அப்படி இஷ்டம் வருவதற்கு நீ சற்று யோசிக்கவேண்டியதுமிருக்கும். அப்படி யோசித்தபின் இதைச் செய்வதில் நன்மையிருக்கிறதென்று உன் புத்தி உனக்குக் கட்டளையிட்டால் அப்போது அதைச் செய்கிற இஷ்டமான நாட்டம் உன்னில் அகத்தியம் பிறந்து அச்செயலில் உன் இந்திரியங்களை இயக்க ஆரம்பிக்கும். எதுபோலெனில், கண்ணுக்கெதிரே ஊசி வரும்போது அதை மூடும் பொருட்டு இமைகளை இயக்குவதுபோலென்க. ஆனால் ஊசி கண்ணுக்கு வருத்தத்தை யுண்டாக்குமென்பதும் கண்ணை மூடிக்கொள்வது நன்மை யென்பதுமான இந்த உணர்வு எப்போது மிருப்பதாயும் யோசிக்கவேண்டுவதின்றியே விரைவில் விளங்குவதாயுமிருக்கிறது. அதாவது இங்கு கண்ணைமூடல் நன்மையென்பது அவன் யோசிக்காமலே அவன் உணர்வில் அமைந்திருக்கிறது. நன்மையென் றுணர்ந்ததினால் அச்செயலில் நாட்டம் பிறக்கும். நாட்டம் பிறப்பதினால் அகத்தியம் சக்தியெழுந்து அச்செயலுக்கு உதவியாக நிற்கும். எப்போது இங்கு யோசிப்பைவிட்டும் ஒழிந்தானோ அப்போது எண்ணத்தொழிலிற்போலவே இங்கும் இகுதியாரில்லாதவனாய் மாறுகின்றான். இத்தொழில் நிகழவேண்டிய அவசியமும் உண்டாய்விடுகின்றது. ஒருவன் ஒரு கோலை யெடுத்து மற்றொருவனை அடிக்க நாடினால் அவன் இயல்பாகவே ஓடிப்போகிறான். எந்தமட்டுக்கென்றால், அவன் ஒரு மெத்தையிலிருந்து ஓடி அதன் ஓரம் வரையில் சென்றுவிட்டால் அப்போது அவன் அறிவில் அடியுண்பதைவிடக் குதித்துவிடுவது இலேசு என்று தோன்றினால் குதித்துவிடுவான். குதிப்பது மகாகஷ்டமெனக் கண்டால் அகத்தியம் அவன் கால் நின்றுவிடும். குதித்துவிடப்பார்த்தால் அவனால் முடியாது. ஏனெனில் காலின் சக்தி நாட்டத்தின் ஐக்கியத்திலும் நாட்டம் புத்தியின் ஐக்கியத்திலு மிருக்கின்றது. இது நல்லது என்றும் செய்யத்தக்கது என்னும் புத்தி அவனுக்குச் சொல்லும்போது

தான் அதைச் செய்ய அவனில் நாட்டம் பிறக்கும். இதன் நிமித்தமே ஒருவன் தற்கொலை செய்துகொள்ள நாடினால் அவனுக்குக் கையும் கத்தியுமிருந்தபோதிலும் தன்னைக் கொலைசெய்துகொள்ள அவன் சக்தி பெறுகிறதில்லை. ஏனெனில் கையினது சக்தி நாட்டத்தின் வசத்திலிருக்கிறது. நாட்டமோ புத்தி இது நல்லது என்றும் செய்யத்தக்கது என்றும் சொன்னால் மாத்திரமே பிறப்பதாயிருக்கிறது. புத்தியுமோ இகுதியாரில்லாததேயாம். ஏனெனில், அது ஒரு கண்ணாடிபோ லிருக்கிறது. எது நன்மையா யிருக்கிறதோ அதன் ரூபம் அதில் தோன்றுகிறது. தன்னைக் கொல்வது நன்மையாயிராததால் அதன் ரூபம் அதில் தோன்றுகிறதில்லை. ஆனால் அவன் பொறுக்கமுடியாத ஒரு பெரிய துன்பமுற்றவனாயிருந்து அந்தத் துன்பத்தைச் சகிப்பதினும் சாவது நல்லதெனக் காண்பானாகில் அவன் தன்னைக் கொலைசெய்துகொள்வான். பின்னர் இதை இஷ்டச்செயல் என்று சொன்னது எதனாலென்றால், வகுத்தறிவதில் இதன் நன்மை விளங்குகிறதென்ற கட்டுக்குள் இது அடங்கி இருப்பதினாலேயாம். அப்படியில்லாமல் இத்தொழில் நிகழவேண்டிய அவசியமுண்டானால் இந்த அவசியமானது மூச்சுவிடலும் கண்ணைமூடலுமான தொழிலின் அவசியம் போல்வதேயாம். இவ்விரண்டு அவசியங்களும் ஜலத்தில் அமிழ்க்கும் தொழிலின் அவசியத்தைப் போல்வனவாம். இக்காரணங்கள் ஒன்றோடொன்று கட்டுண்டிருக்கின்றன. காரணங்களின் சங்கிலித்தொடரான வளையங்கள் அநேகமாயிருக்கின்றன. இதன் விஸ்தரிப்பை எஹ்யா என்னும் கிதாபில் சொல்லியிருக்கிறோம். பின்னர் மனிதனில் படைக்கப்பட்டிருக்கிற சக்தியானது அந்தச் சங்கிலித்தொடரின் வளையங்களில் ஒன்றாயிருக்கிறது. இதனால் அவனில் ஏதோ இருக்கிறதாக அவன் எண்ணிக்கொள்ளுகிறான். இந்த எண்ணம் சுத்தப்பிசகானது. ஏனெனில் அவன் அந்த சக்திக்கும் இகுதியாருக்கும் இடமாயும் அவை நடக்கும் வழியாயும் இருப்பதுமாத்திரமேயன்றி மற்றப்படி அந்த சக்தி, இகுதியாருகளுக்கும் அவனுக்கும் அதிக சம்பந்தம் ஒன்றுமில்லை. ஆகவே அவனில் படைக்கப்படுகிற இகுதியாரும் அவனில் கிருத்தி செய்யப்படுகிறசக்தியும் நடைபெறுவதற்கு அவன் ஒருவழியாயிருக்கிறான். பின்னர் மரமானது காற்றினால் அசைகின்றது. அதில் சக்தியையும் இகுத்தியாரென்னும் சுயதந்திரத்தையும் படைப்பதில்லையாதலால் அம்மரம் அவற்றிற்கு இடமாக எண்ணப்படுவதில்லை. இந்த அசைவுக்கு அவசரநிமித்தம் இல்திராருமஹ்லு (நாட்டமில்லாத வெற்றசைவு) என்று பேரிட்டார்கள். அல்லாகுதஆலா செய்கிற எந்தச் செயலிலும் அவன் சக்தியானது அவனுக்கு வேறாயுள்ள யாதொன்றிலும் கட்

டுண்டதல்லவாதலால் அவன் செயலுக்கு இகுதிராகு, கல்கு (சிருட்டித்தல், படைத்தல்) என்று பேரிட்டார்கள். மனிதன் இப்படியுமில்லாமல் அப்படியுமில்லாமல் (மத்திய நிலைமையில்) இருக்கின்றான். அவன் சக்தியும் நாட்டமும் அவன் வசத்திலில்லாத வேறு காரணங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கிறநிமித்தம் அவன் செயல் அல்லாவுடைய செயலைப்போலில்லையாதலால் அச்செயலுக்கு இகுதிராகு அல்லது கல்கு என்று பேரிட ஏதுவில்லை. அவசரநிமித்தம் அவனில் படைக்கப்படுகிற சக்திக்கும் நாட்டத்துக்கும் அவன் இடமாயிருப்பதை நோக்க அவன் மரத்தைப்போலுமில்லையாதலால் அவன் செயலை இல்திராருஹ்லு என்று சொல்லவும் ஏதுவில்லை. மேலும் இது பிரத்தியேகமான ஒருவகைச் செயலாயிருப்பதால் இதற்கு வேறு பெயரைத் தேடி கஸபு (வேலை, தொழில்) என்று சொன்னார்கள். இவை எல்லாவற்றினாலும் ஏற்பட்டதென்னவென்றால், மனிதனுடைய செயல் அவன் இகுதியாருகொண்டு ஆவதாயிருந்தபோதிலும் அந்த இகுதியாரை அடைவதில் அவன் இகுதியாரில்லாதவனாயிருக்கிறான் என்றும், அவன் வேண்டுமென்றாலும் வேண்டாமென்றாலும் அந்த இகுதியாரு அவனில் படைக்கப்படுகிறதென்றும், ஆதலால் அவன் ஐக்கியத்தில் ஏதோ இருக்கிறதென்பது கிடையாது என்றும் தெரியலாயிற்று.

பசல்:—அகத்தியம் நீ சொல்லக்கூடும். அதாவது:—இப்படியாயிருக்கிறபக்ஷம் பின்பு நன்மை தீமைகளுக்குப் பிரதிபலனாக சவாபு கொடுப்பானேன்? அதாபு செய்வானேன்? ஷரீஆத்து எதற்காக? எவர் வசத்திலும் ஏதுந்தானில்லையே என்பாய். அறிந்துகொள்:—இதானது ஷரீஅத்தில் தவுஹீது, தவுஹீதில் ஷரீஅத்து என்று சொல்லப்படுகிற ஒரு தானமாயிருக்கிறது. இவைகளுக்கிடையில் கேவல ஜனங்கள் அநேகம்பேர் ஆழ்ந்துபோகிறார்கள். (இந்த சமுத்திர) ஜலத்தின்மேல் நடக்க சக்தியுள்ளவன் எவனோ அல்லது இதில் நீந்தவாவது சக்தியுள்ளவன் எவனோ அவனே இந்த ஆழ்தலுக்குத் தப்புவான். அநேக ஜனங்கள் தாங்கள் ஆழ்ந்து போகாதபடி தங்களை இக்கடலில் இறக்காமலிருந்ததினால் அவர்கள் சலாமத்தை அடைந்தார்கள். அவாமுன்னாஸ் என்னும் சாமானிய ஜனங்களோ இதை அறியவேமாட்டார்கள். இவர்களை இக்கடலோரத்துக்குச் செல்லவிடாமலிருப்பதே இவர்கள்மீது வைக்கும் தயவாகும். ஏனெனில் இவர்கள் அங்கு போகும்பக்ஷத்தில் திடீரென விழுந்து ஆழ்ந்துபோவார்கள். தவுஹீது என்னும் சமுத்திரத்தில் இறங்கினவர்களில் அநேகப்பேர் தங்களுக்கு நீந்தத்தெரியாமையினால் அதில் ஆழ்ந்துபோனார்கள். நீந்தத் தெரியாமையென்றது தவுஹீதின் உண்மை

யை விளக்கியறிய அவர்களுக்கு அறிவு போதாமையாயிருக்கலாம், அல்லது அவர்கள் மேது கைவசத்தில் ஒன்றுமில்லையென்றும், எல்லாம் அல்லாகு தஆலா செய்கிறான் என்றும், எவனுக்கு அல்லாகு தஆலா துர்ப்பதவியை விதித்திருக்கிறானோ அவன் தன் பிரயாசையினால் அதை மாற்றமுடியாதென்றும், இன்னும் எவனுக்கு நற்பதவியை விதித்திருக்கிறானோ அவன் பிரயாசைப்படவேண்டியதில்லை என்றும், தங்களுக்குள் தப்பெண்ணங்கொண்டு தவ்ஹீதின் உண்மையை அறிய முயலாதவர்களாயிருந்து அதில் ஆழ்ந்துபோயிருக்கவுங்கூடும். இந்த எண்ணமெல்லாம் சுத்த அறிவின்மையும் வழிகேடும் கேட்டுக்குக் காரணமுமாயிருக்கிறது. எப்படியும் இக்காரியங்களின் உண்மையை அறியும் விபரத்தைக் கிதாபுகளில் எழுதத்தகாது. என்கினும் பேச்சுத்தொடர் இந்தமட்டும் இழுத்துவிட்டதால் கொஞ்சம் சொல்லப்படுகிறது.

அறிந்துகொள்:—நன்மை தீமைகளுக்குப் பிரதிபலனாக சவாபு கொடுப்பானேன்? அதாபு செய்வானேன்? என்றல்லவா நீ சொன்னாய்? கேள், அதாபுபடுத்தல் என்பது நீ ஒரு கெட்டகாரியத்தைச் செய்ததினால் யாரோ உன்மேல் கோபங்கொண்டு அந்தக் கோபத்தைச்செலுத்தி அவன் உன்னை வேதனைப்படுத்துகிறான் என்பதல்ல. இதேபோல் சவாபளித்தல் என்பது நீ ஒரு நல்ல காரியத்தைச்செய்ததினால் அவன் உன்மேல் சந்தோஷப்பட்டு அதற்குப் பிரத்தியாக உனக்குப் பரிசளிக்கிறான் என்பதல்ல. மேலும் அதற்குப் பொருள் யாதெனில், உன் தேகத்துக்குள் உதிரம், அல்லது பித்தம் அல்லது வேறு யாதொரு தாது அதிகரித்து சேட்டைசெய்தால் அதனால் உனக்கு ஏதோ ஒன்றுண்டாகி உன் நிலைமை மாறுகின்றது. அதற்குப் பிணியென்றுபேரிடுகிறார்கள். அவிழ்தம் அதன் சேட்டையை அடக்கினால் அதனால் வேறுநிலைமை யுண்டாகின்றது. அதற்கு ஆரோக்கியம் என்று சொல்லுகிறார்கள். இதேபோல் உனக்கு இச்சையும் கோபமும் மேலிட்டு அவற்றிற்கு நீ வசப்பட்டிருப்பாயாகில் அதனால் ஒரு நெருப்பு உண்டாகி உன் உயிருக்குள் கிடக்கும். அது உன் அதாபுக்குக் காரணமாகும். இதனாலேதான் கோபமானது நெருப்பில் நின்றும் ஒரு துண்டாயிருக்கிறது. அதாவது:—நீ உன்மீதுவெற்றிக்கொண்ட இது கோபமல்ல. இது நெருப்பின் ஒரு துண்டாயிருக்கிறது என்று றசூல் சல்லல்லாகு அலைஹி வசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். புத்தியென்னும் ஒளியானது பெலத்தையடைந்தால் எப்படி இச்சை, கோபங்களான நெருப்பைத் தணிக்கின்றதோ அப்படியே ஈமானின் ஒளி நரகத்து நெருப்பைக் தணித்துவிடுகின்றது. எந்த மட்டுக்கென்றால் நரகமானது ஓ மூமினே! நீ போய்விடு. திடனாக உன்

ஒளி என் நெருப்பை அவித்துப்போட்டது எனச் சொல்லும். நரகமே ஈமானிடம் முறையிடும்போது நடுவில் வேறுபேச்சில்லை. மேலும் மசகும் காற்றக்குமுன் நிற்காமல் ஓட்டம் பிடிப்பதுபோல் நரகம் அந்த ஒளிக்கு ஆற்றாது ஓட்டம் பிடிக்கும். இப்படியே இச்சையென்னும் நெருப்பானது புத்தியென்னும் ஒளிக்குத் தோற்றோடிப்போம். பின்னர் உன்னை அதாபு செய்வதற்கு வேறே இடத்திலிருந்து ஒரு வஸ்துவைக்கொண்டு வருவதில்லை. உன் வஸ்துவையே உனக்குக் கொடுப்பார்கள். இந்தப் பிரதிபலன் உங்களுக்குத் திருப்பப்படுகிற உங்கள் அமல்களையன்றி வேறல்ல. ஆகவே உன் கோபமும் இச்சையும் நரக நெருப்புக்குக் கருவாயிருக்கிறது. இந்தக் கருவு உன்னோடேயே உனக்குள்ளேயே இருக்கிறது. நீ இல்முல்எகீன் என்னும் ஐயமில்லாத ஞானத்தை அடைந்தாயாகில் இதைக் காண்பாய். அல்லாகு தஆலா அருளிச்செய்ததுபோல் அது வருமாறு:—அப்படியல்ல நீங்கள் இல்முல் எகீனை அறிந்தால் திடனாக நரகத்தைக் காண்பீர்கள் என்பதே. ஆகலால் நீ அறிந்துகொள்:—நஞ்சுள்ள பண்டம் மனிதனை நோய்கொள்ளச்செய்கிறது. அந்த நோய் அவனை கபுருக்குக் கொண்டுபோகின்றது. அவன் நோய்கொள்வதும் கபுருக்குப் போவதும் எவரும் அவன்மேல் கோபத்தைச் செலுத்திப் பதில் வாங்குவதினால் அல்ல. இதேபோல் பாவமும் இச்சையும் உன் மனதை நோய்கொள்ளச் செய்கிறது. அந்த நோய் உனக்கு நெருப்பாக மாறும். அந்த நெருப்பு நரகநெருப்பின் இனமாயிருக்கும். இவ்வுலக நெருப்பைப்போன்றதல்ல. இனத்தோடினம் என்ற விதிப்படி காந்தம் இரும்பைத் தன்பக்கம் இழுப்பதுபோல் நரகம் நரகவாளியைத் தன்பக்கம் இழுக்கும். இதே தவிர இடையில் உன்மேல் எவரும் கோபம் செய்வதில்லை. சவாபு கொடுக்கும் விஷயத்தையும் இதேபோல் என்றறிந்துகொள். அதை விரித்தால் பெருகும். சவாபு ஏன்? அதாபு ஏன்? என்று நீ சொன்னதற்கு இது விடையாயிற்று.

இனி ஷரீஅத்தையும் நபிமார்களையும் அனுப்பினது எதற்காக? என்று சொன்னையல்லவா? அறிந்துகொள்:—(பாடசாலைச் சிறுவர்களுக்குப் பலாட்டியத்தினால் அறிவைக் கற்பித்து அவர்களை மேலுக்குயர்த்துவதுபோல்) ஷரிஅத்தும் ஒரு பலாட்டியமாயிருக்கிறது. ஏனெனில் ஜனங்களைப் பலாட்டியமென்னும் சங்கிலியினால் இழுத்து அவர்களைச் சொர்க்கத்துக்கு அனுப்புவேயாம். உதாரணமாக:—சங்கிலிகளால் சுவர்க்கத்தின்பக்கம் இழுக்கப்படுகிற சில ஜனங்களைப் பற்றி நீ ஆச்சரியப்படுகிறாயோ? என்று நாயகமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் ஜனங்கள் நரகத்தின்பக்கம் போகாதபடி பலாட்டியமென்ற வலையினால் அவர்கள் காக்கப்படுகிறார்கள். உதாரணமாக:—நீங்கள் நெருப்பில் விழுகிறீர்கள். நான் உங்கள் இடுப்பைப்

பிடித்திழுக்கின்றேன் என்று றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இதன் கருத்து:—விளக்கில் வந்து விழும் விட்டிலைப்போல் நீங்கள் நெருப்பில் விழப்பார்க்கிறீர்கள். நீங்கள் அதில் விழாதபடி நான் உங்கள் இடுப்பைப் பிடித்திழுக்கிறேன் என்பதாம். அறிந்துகொள். நபிமார்களுடைய நற்போதனையானது பலாட்டியமென்னும் சங்கிலித்தொடரின் வளையங்களில் ஒன்றாயிருக்கிறது. அந்தப் போதனையினால் உனக்கு விளக்கம் பிறக்கின்றது. அப்போது நீ வழியல்லாததில்நின்றும் வழியைப் பிரித்தறிகின்றாய். அவர்கள் பயமுறுத்துவதினால் உன்னில் அச்சம் பிறக்கின்றது. இந்த அச்சமும் அந்த விளக்கமும் புத்தியாகிய கண்ணாடியில் படிந்திருக்கிற தூசியைத் துடைத்துவிடுகின்றது. அப்போது துன்யாவின் வழியை எடுப்பதினும் ஆகிறத்தின் வழியை எடுப்பது மிகவும் நல்லதென்ற ஞாயம் அந்தக் கண்ணாடியில் தோன்றுகிறது. அந்தத் தோன்றலால் அவ்வழியில் நடக்க நாட்டம் பிறக்கின்றது. அந்த நாட்டத்தினால் அவயவங்கள் அகத்தியம் வேலையில் ஆகின்றன. ஏனெனில் அவை நாட்டத்துக்கு வசப்பட்டனவா யிருப்பதினாலென்க. இந்தச் சங்கிலித் தொடரினாலேயே பலாட்டியமாக உன்னை நரகத்துக்கு நெருங்கவிடாமல் அப்புறப்படுத்துகிறார்கள். சொர்க்கத்துக்குக் கொண்டு போகிறார்கள். நபிமார்களுக்கு உபமானம் ஆட்டுமந்தை வைத்திருக்கிற ஒரு மேய்ப்பனுக்குச் சமானமாம். அந்த மந்தையின் வலதுபக்கத்தில் வளம்பொருந்திய ஒரு மேய்ப்புக்காலும் இடது பக்கத்தில் ஓநாய்கள் நிறைந்துள்ள ஒரு மலைப்பொதும்பும் இருக்கிறது. மேய்ப்பன் அந்தப் பொதும்போரத்தில் நின்றுகொண்டு ஆடுகள் அங்கு வரும்போதெல்லாம் கோலை ஆட்டிக்கொண்டிருக்கிறான். ஏனெனில் கோல் பயத்தினால் ஆடுகள் பிரட்சியடைந்து பொதும்பின் பக்கத்தைவிட்டு மேய்ப்புக்கால்பக்கம் போகவேயாம். இதுதான் நபிமார்களை அனுப்பினதற்குப் பொருள்.

இனி துர்ப்பதவியை விதித்திருந்தால் பிரயாசை என்ன பயனை விளைக்கும் என்றாயே. இச்சொல் ஒருவிதத்தில் சரிதான். ஒரு விதத்தில் பிசகாயிருக்கிறது. சரியென்ற இந்தச் சொல் உன் கேட்டுக்குக் காரணமா யிருக்கிறது. ஏனெனில், ஒருவனுக்குத் துர்ப்பதவியை விதித்திருப்பதின் அடையாளம் அவன் இந்தச் சொல்லைத் தன் மனதில் போட்டுக்கொள்ளவதேயாம். அப்போதவன் விதைக்கமாட்டான். விதைக்காமையினால் அறுக்கவுமாட்டான். ஒருவன் பசியினால்சாவான் என்று விதித்திருப்பதின் அடையாளமாகிறது அவன் தன் மனதில்

நான் பசியினால் சாவேன் என்று ஆதியில் விதித்திருந்தால் சோறு எனக்கு என்ன சுகத்தைக் கொடுக்கும் என்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு சோற்றைத் தொடாமலும் அதை உண்ணாமலு மிருப்பான். அதனால் அகத்தியம் அவன் சாவான். இன்னும் எனக்கு வறுமையை விதித்திருந்தால் நான் பயிரிடுவது எனக்கு என்ன பலனைத் தரும் என்றெண்ணி விதைக்கவு மாட்டான் அறுக்கவு மாட்டான். என்கினும் யாருக்கு நற்பதவியை விதித்திருக்கிறானோ அவனுக்கு அதன் இலக்கணத்தை அறிவிக்கின்றான். அதாவது:—நான் பயிரிடுகிறவனும் வர்த்தகம் செய்கிறவனும் உணவருந்துகிறவனும் இருக்கிற காரணசம்பந்தமாக எனக்குச் சீமான்தனத்தையும் ஜீவிவத்தையும் விதித்திருக்கிறானாதலால் நற்பதவியென்னும் இத்தவிதி (காரணசம்பந்தமின்றி) வீணில் விதிக்கப்பட்டதல்லவென்றும் என் பிரயாசையான சில காரணங்களுடன் சம்பந்தப்பட் டிருக்கிறதென்னும் அவன் தெரிந்துகொள்ளுகிறான். அல்லாகு தஆலா யாரை எக்காரியத்துக்காகப் படைத்தானோ அக்காரியத்துக்குரிய காரணங்களை அவனுக்குச் சித்தப்படுத்தி வைக்கின்றான். இதே தவிர அக்காரணங்களில்லாமல் அவனை அக்காரியத்துக்குச் செல்லவிடுகிறானென்பதில்லை. இதனாலேதான் ஜனங்கள் எக்காரியத்துக்காகப் படைக்கப்பட்டிருக்கிறார்களோ அக்காரியத்தைச்செய்ய அவர்கள் எல்லாருக்கும் இலேசு படுத்தப்பட்டிருக்கிறது, ஆதலால் நீங்கள் அமல் செய்யுங்கள் என்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். பலாட்டியமாக உன்னால் நடத்தப்படுகிற அமல்களைக் கொண்டும் அஹ்வாலுகளைக்கொண்டும் உன் முடிவின் நன்மையைப்பற்றி உன் மனதுக்கு மாராயங்கூறு. இல்மைப் படிப்பதில் உனக்கு உழைப்பும் ஊக்கத் திருப்பலும் அதிகமாயிருந்து நீ அதில் முழுமுயற்சியுள்ளவனும் சோம்பல் செய்யாதவனும் வீண்காலம் போக்காதவனுமிருப்பாயாகில், இது அல்லாகு தஆலா உனக்கு இமாமத்தென்னும் மேற்பதவியை விதித்திருக்கிறான் என்பதை அறிவிக்கின்ற ஒரு நன்மாராயம் என்று எண்ணிக்கொள். சோம்பலும் வீண்காலப் போக்கும் உன்னை மேற்கொண்டிருக்கிறபக்ஷம் அப்போது உன் மனதில் நான் இல்மில்லாத மூடன் என்று ஆதியில் விதிக்கப்பட்டிருந்தால் இல்மைப் பன்முறை நான் திருப்பித்திருப்பிப் படிப்பதில் என்ன பயனிருக்கிறது? என்ற வீண் எண்ணம் விழுந்து கிடக்கிறது. ஆதலால் உனக்கு மடமையை விதித்தெழுதியிருக்கிற அந்தப் பத்திரத்தை நீ இப்போது எடுத்து வாசி. இதானது நீ ஒருபோதும் இமா

மத்தென்னும் மேம்பதவிக்குச் செல்லமாட்டாய் என்பதை அறிவிக்கின்ற அடையாளமென்றெண்ணிக்கொள். ஆகக்கூடி துன்யாவின் முயற்சியோடு ஆகிரத்தின் முயற்சியை ஒத்திட்டுக்கொள். உங்களைப் படைப்பதும் உங்களை எழுப்புவதும் ஓரே நபுஸைப்போலன்றி வேறில்லை; இன்னும் அவர்களின் ஹயாத்தும் அவர்களின் மவுத்தும் சமமேயாம். நீ இந்த இரகசியங்களை அறிந்தாயாகில் (நன்மை தீமைகளுக்குப் பலனளிப்பானேன்? ஷரீஅத்து எதற்காக? துர்ப்பதவியை விதித்திருந்தால் பிரயாசை என்ன பயனைத்தரும்? என்ற) இந்த மூன்று சந்தேகங்களும் நிவர்த்தியாகி உன்னில் தவுஹீது நிலைப்படும். இதுவுமன்றி யாருக்கு அகக்கண் திறக்கப்பட்டிருக்கிறதோ அவனிடத்தில் ஷரீஅத்துக்கும் புத்திக்கும் தவுஹீதுக்கும் யாதொரு முரண் இல்லை என்பது தெரியலாகும். இதற்குமேல் அதிகமாக விஸ்தரித்துச்சொல்ல அம்மாதிரியான சொற்களுக்கு இந்த கிதாபு இடந்தாராதாகையால் இனி நாம் இதில் பேச்சை வளர்த்தோம்.

### தவக்குலுக்கு நிலைக்களமாகிய மற்றொரு ஈமானை விளக்கல்.

அறிந்துகொள்:—தவக்குலானது இரண்டு ஈமானின் பலனாயிருக்கிறதென்று நாம் சொன்னோம். அவற்றுள் ஒரு ஈமான் தவுஹீதென்றோம். அது மேலே விவரிக்கப்பட்டிருக்கிறது. மற்றொரு ஈமான் யாதெனில், அல்லாகு தஆலாவே சிருஷ்டிகன் என்றும், அவனாலேயே எல்லாம் ஆகின்றது என்றும், படைப்புகள் எல்லாவற்றின்மீதும் அவன் கிருபையுள்ளவனாயும் அவைகளில் ஆழிய பூராயமுள்ளவனாயும் அன்புள்ளவனாயும் இருக்கிறான் என்றும், ஒவ்வொரு எறும்பின் விஷயத்திலும் மசகம்முதல் மனிதன் வரையிலுமுள்ள எல்லா ஜீவர்களின் விஷயத்திலும் அவனுக்கிருக்கிற அன்பும் தயவும் ஹதீஸில் வந்திருப்பதுபோல் மக்கள் விஷயத்தில் மாதாவுக்கிருக்கிற அன்பையும் தயவையும்விட மிக்க அதிகம் என்றும் நீ அறியவேண்டும். இன்னும் ஆலமும் ஆலத்தில் உள்ளதுமான யாவும் இதற்குமேல் நல்லதாய் அமைய இடமில்லை என்ற விதமாக அவைகளை நிறைவும் அழகும் நுணுக்கமும் பூராயமும் உள்ளவைகளாகப் படைத்திருக்கிறான் என்றும் நீ அறியவேண்டும். இன்னும் எதற்கும் தன் கிருபை அன்புகளில் கிஞ்சித்தும் குறைக்காமல் எது எப்படி இருக்கவேண்டுமோ அதை அப்படியாகப் படைத்திருக்கிறான் என்றும் நீ அறியவேண்டும். உலகத்திலுள்ள புத்திமான்களெல்லாம் ஒருங்கேசேர்ந்து அவர்களுக்குப் பூரணபுத்தியும் நுண்ணறிவும் கொடுக்கப்பட்டு உலகத்திலுள்ள ஒரு மயிர் முனையை

யோ அல்லது மசகத்தின் இறக்கையையோ எதையாயினும் இது இப்படி இருக்கக்கூடாது என்றும், இதினும் சிறிதாய் அல்லது இதினும் பெரிதாய் அல்லது இதினும் அவலக்ஷணமாய் அல்லது இதினும் இலக்ஷணமாய் இருக்கவேண்டுமென்றும் ஆலோசித் தெடுக்கப் பார்ப்பார்களாகில் அப்படிப்பட்ட ஒரு ரூபத்தைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். எல்லாம் இப்போ திருக்கிறதுபோல்தான் இருக்கவேண்டும் என்று தெரிந்துகொள்ளுவார்கள். இன்னும் எது அவலக்ஷணமாயிருக்கிறதோ அது அப்படி அவலக்ஷணமா யிருப்பதில்தான் அதற்கு நிறைவிருக்கிறது. அது அப்படியில்லாமற்போனால் குறைச்சலுள்ளதாயிருந்துவிடும். அன்றியும் அதில் கருதப்பட்ட ஒரு ஆழக்கருத்து தப்பிப்போகும். ஏனெனில் உதாரணமாக, அவலக்ஷணமென்ப தில்லாமற்போனால் ஒருவரும் இலக்ஷணத்தின் அருமையை அறியமாட்டார்கள். அதனால் இன்பத்தை அடையமாட்டார்கள். குறைச்சலுள்ளது ஒன்று இல்லாமற் போகிறபக்ஷம் நிறைவுள்ள தென்பதும் இராது. நிறைவுள்ளதற்குத் தன்நிறைவைப்பற்றிய இன்பமிராது. ஏனெனில் ஒன்றை மற்றொன்றோடு சேர்த்துப் பார்ப்பதினாலேயே நிறைவுள்ள தென்றும் குறைவுள்ள தென்றும் தெரிந்துகொள்ளக்கூடும். உதாரணமாக:—தகப்பன் இல்லையாயின் மகன் இல்லை. மகன் இல்லையாயின் தகப்பனும் இல்லை. இந்தப் பொருள்கள் ஒன்றுக்கொன்று எதிர்ப்பொருள்களா யிருக்கின்றன. எதிர் என்பது இரண்டு பொருள்களில் உண்டாவதாம். இரண்டென்பது எடுபட்டுப் போனால் அப்போது எதிர் என்பதும் எதிர் என்பதில் ஏற்படக் கூடியதும் இல்லாமல் ஒழியும். இன்னும் அறிந்துகொள்:—காரியங்களில் அமைந்துள்ள ஆழ்ந்த கருத்து ஜனங்களுக்குத் தெரியாதபடி அல்லாகு தஆலா அதை மறைப்பது ஆகும். ஆயினும் அவன் எதை விதித்திருக்கிறானோ அதில்தான் நன்மையிருக்குமென்றும், ஒவ்வொன்றும் எப்படி ஆயிருக்கிறதோ அப்படியாகவே இருக்கவேண்டுமென்றும், ஆதலால் உலகத்தில் சம்பவிக்கின்ற வியாதி, இயலாமை, பாவம், குப்ரு, அழிவு, குறைவு, துக்கம், வருத்தம் முதலான இவை ஒவ்வொன்றிலும் ஓர்நோக்கமான ஆழ்ந்த கருத்திருக்கிறதென்றும், எதுவும் இப்போ திருப்பதுபோ லிருப்பதே சரியென்றும், எவனை ஏழையாக்கி யிருக்கிறானோ அவனுக்கு அந்த ஏழ்மையில் நன்மையும் அவன் சீமானாயிருப்பதில் அவனுக்குக் கேடும் இருக்கிறதினாலேயே அவனை ஏழையாக்கினான் என்றும், ஒருவனைச் சீமானாக்கி யிருக்கிறதும் இதுபோல்தான் என்றும் ஈமான் கொள்ளவேண்டும், இதுவும்

தவ்ஹீதென்னும் கடலைப்போல் பெரிய ஓர் கடலாயிருக்கிறது. அநேகம்பேர் இந்தக் கடலில் மூழ்கிப்போயிருக்கிறார்கள். இதில கலா, கதுரு என்னும் விதிப்பயனின் இரகசியம் மறைந்திருக்கிறது. அதை வெளிப்படுத்த உத்திரவில்லை. இந்தக் கடலில் இறங்குவேனாகில் பேச்சு வளரும். ஆயினும் மனிதனுடைய எல்லா ஈமானுக்கும் இது தலையாயிருப்பதுமன்றி தவக்குலுக்கும் இந்த ஈமான் தேவையாயிருக்கிறது.

## தவக்குல் இதுவென அதன் ஹகீகத்தான பொருளை விளக்கல்.

அறிந்துகொள்:—தவக்குலானது இருதய நிலைமைகளில் ஓர் நிலைமையாயிருக்கிறது. இந்த நிலைமையோ சிருஷ்டிகனாகிய அல்லாகு தஆலாவினது தவ்ஹீதிலும் அவனது அன்பிலும்கொண்ட ஈமானின் பயனாயிருக்கிறது. இருதய நிலைமையான இந்தத் தவக்குலுக்குப் பொருள் யாதெனில், இரணவிஷயத்தில் மனதைப் பந்திக்காமலும் அதன் வெளிக்காரணங்கள் கெடுவதினால் மனமுடைந்து வருத்தப் படாமலும் வகீல் என்ற நாமம் பொருந்திய அல்லாகு தஆலாவின் மீது மனதை நாட்டி அந்த நாட்டலைத் திடப்படுத்தித் தனக்கு அல்லாகு தஆலா இரணஞ் செலுத்துவான் என்று அவனையே நம்பி மனதை அலையவிடாமல் அமைதியாக வைத்துக்கொள்வதேயாம். இதற்கு உபமானமாவது:—சில ஜனங்கள் மோசடியாக ஒருவன் மேல் தப்பு வழக்குச் செய்கிறார்கள். அவன் அந்த மோசத்தை நிவர்த்திக்க ஒருவனை வகீலாக நியமகம் செய்கின்றான். வகீலுடைய மூன்று அம்சங்களில் அவனுக்கு உண்மையிருந்தால் அவன் மனம் அந்த வகீலின்மேல் நம்புதல் வைத்து அச்சந் தீர்ந்திருக்கும். அந்த அம்சங்களில் ஒன்று:—அவன் தன் கல்வி நிறைவால் மோசங்களின் வகைகளை நன்றாய் அறிந்திருப்பதாம். இரண்டாவது:—அவன் அறிந்த ஞாயத்தை அவன் தன் மனவலிமையான தைரியத்தினாலும் நாவலிமையான நாகரீகப்பேச்சினாலும் எடுத்துக்காட்டுந் திறனாயிருப்பதாம். ஏனெனில் ஒருவன் ஞாயந்தெரிந்தவனாயிருந்தபோதிலும் மனதின் கோழைத்தனத்தால் அல்லது நாவின் திக்கலால் அதை எடுத்துச்சொல்ல இயலாதவனாயிருப்பதுமுண்டு. மூன்றாவது:—அவனை வகீலாக்கிக்கொண்ட வழக்காளியின்மேல் அவன் பூரணதயவுள்ளவனாயிருப்பதாம். ஏனெனில், அவன் பாத்தியதையைக் காப்பாற்றுவதில் ஆவல்கொண்டவனாயிருக்கவேயாம். இந்த மூன்று அம்சங்களும் தன் வகீலிடத்தில் அமைந்திருப்பதாக அவன் உண்மைகொண்

டிருந்தால் அவன் தன் மனதில் அச்சமொழிந்து அந்த வகீலின் மேல் நம்புதல் வைத்துத் தனது தந்திரோபாயங்களை யெல்லாம் ஒருபக்கம் ஒதுக்கிவிடுவான். இதேபோல் ஒருவன் அல்லாகு தஆலா நல்ல எஜமானனும் நல்ல வகீலுமாயிருக்கிறான் என்ற ஆயத்தின் பொருளை அறிந்தானாகில் இன்னும் ஆயிருப்பனவெல்லாம் அல்லாகு தஆலாவினால் ஆயிருக்கின்றனவென்றும் அவனன்றி வேறு கர்த்தா யாருமில்லை என்றும், அப்படி யிருப்பதுடன் அவனுடைய அறிவிலும் வல்லமையிலும் எவ்விதகுறைவுமில்லை என்றும், அவனுடைய கிருபையும் கொடையும் இதற்குமேலிருப்பது அசாத்தியமென்ற அவ்வளவு பூர்த்தியாயிருக்கிறதென்றும், ஈமான் கொண்டானாகில் அப்போது அவன் தன் மனதால் அல்லாகு தஆலாவின் கொடையில் நம்புதல் வைத்துத் தனது தந்திரோபாயங்களை ஒரு பக்கத்தில் ஒதுக்கி விடுவான். இன்னும் இரணமானது ஒவ்வொருவருக்கும் விதிக்கப்பட்டிருக்கிறதென்றும், தருணத்தில் அது தனக்குச்சேரும் என்றும், தன்னுடையஎல்லாக்காரியங்களும்அல்லாகுதஆலாவுடைய கிருபை றஹ்மத்துகளில் அமைந்திருக்கிற விதமாக நிறைவேற்றப்படும் என்றும் அறிந்துகொள்ளுவான். இன்னும் ஒருவனுக்கு இவ்விதமான நம்புதல் உண்டாயிருந்தும் சுபாவமாக அவன் மனதில் ஒருவித ஐயந்தோன்றி அவன் திகில்கொண்டவனா யிருப்பதுமுண்டு. ஏனெனில், மனிதன் உண்மையென்று நம்புவதற்கெல்லாம் அவன் சுபாவம் இணங்கி வழிபடும் என்பதில்லை. மேலும் இந்த ஐயம் பிசகானது என்று அவன் நன்றாய் அறிந்தாலும் அவன் சுபாவம் அந்த ஐயத்துக்கே இணங்கி வழிபடுவது முண்டு. உதாரணமாக:—ஒருவன் ஹல்வா தின்றுகொண்டிருக்கிற சமயத்தில் மற்றொருவன் அதை மலத்துக்கு ஒப்பிடுவானாகில் அது பிசகென்று அறிகிறவனாயிருந்தும் அதைத் தின்க அவனால் முடியாத விதமாக அருக்களிக்கின்றான். இன்னும் வீட்டில் ஒரு பிணத்துடன் தனியாகப் படுத்திருக்க அவனால் முடிகிறதில்லை. இந்தப்பிணம் ஒருகல்லுக்குச் சமானம் என்றும் இது எழுந்திருக்கமாட்டாது என்றும் அவன் சந்தேகமின்றி நன்றாய் அறிகிறவனாயிருந்தாலுஞ் சரியே. ஆகவே தவக்குலுக்கு உறுதியான நம்புதல் வேண்டியதுடன் மனவலிமையும் வேண்டும். ஏனெனில் இந்த ஐயம் அவன் மனதை விட்டுப் போகாமலும் பூர்த்தியான அமைதியும் நம்புதலும் அவனுக்கு உண்டாகாமலும் இருக்கிறவரையில் அவன் முதவக்கிலு என்றாக மாட்டான். ஏனெனில் காரியங்களில் அல்லாகு தஆலாவின்மீது

நம்புதல் வைப்பதே தவக்குலுக்குப் பொருளாயிருப்பதினாலென்க.
இபுராஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு ஈமானும் எகீனும் பூர்த்தி
யாயிருந்தது. என்கினும் அவர்கள் என் நாயகனே! மவுத்தானவர்
களை நீ எப்படி ஹயாத்தாக்குவாய்? எனக்குக் காட்டு என்றார்கள். நீர்அப்
படி ஈமான் கொள்ளவில்லையா? என்றான். நான் ஈமான் கொண்டேன்
ஆனால் என் மனம் அமைதியடைவதற்காக (கேட்கிறேன்) என்றார்
கள். ஏனெனில், ஆரம்பநிலைமையில் ஒரு விஷயம் நினைவுக்கும் பார்
வைக்கும் ரூபகரப்படுவதினால் மாத்திரம் மனம் அதில் அமைதி
யடைகின்றது. பிறகு தீர்ந்தநிலைமைக்குச் சென்றுவிட்டால் வெளிப்
படையாகப் பார்க்கவேண்டிய தேவையில்லாமல் அவன் மனம்
தானே எகீனைத் தொடர்ந்து அமைதி அடைந்திருக்கும்.

## தவக்குலின் வகுப்புகள்.

அறிந்துகோள்:—தவக்குல் மூன்று வகுப்பாயிருக்கிறது. முதலா
வது வகுப்பு: அவனுடைய நிலைமையானது வழக்கில் தனக்கு ஒரு
நல்ல வகீலை நியமகம் செய்துகொண்டவனுடைய நிலைமையை ஒத்
திருப்பதாம். அதாவது:—சுறுசுறுப்பும் சூட்சங்காட்டலும் பேச்சு
நாகரீகமும் தைரியமும் தயவும் உள்ள ஒரு மனிதனை வகீலாக
வைத்துக்கொள்ளுகிறவன் அவனை நம்பி அச்சந்தீர்ந்திருப்பதுபோல்
இந்த முதவக்கில் அச்சந் தீர்ந்திருப்பான். இரண்டாவது வகுப்பு:
அவனுடைய நிலைமை ஒரு குழந்தையின் நிலைமையை ஒத்திருப்ப
தாம். அதாவது:—குழந்தை தனக்கு எது சம்பவித்தாலும் தாயைத்
தவிர வேறு யாரையும் அது அறிகிறதில்லை. பசியெடுத்தாலும் தா
யையேகூப்பிடுகிறது. பயந்தாலும் தாயையே போய்த்தாவுகின்றது.
இது அதன் சுபாவம். பிரயாசையினால் தெரிந்தெடுப்பதல்ல. இதே
போல் இந்த வகுப்பில் சேர்ந்த முதவக்கில் தன் தவக்குலும் தனக்
குத் தெரியாதபடி தன் வகீலாகிய அல்லாகு தஆலாவில் மூழ்கிவிடு
கிறான். அந்த முதல் வகுப்பு முதவகிலுக்குத் தன் தவக்குலைப்பற்
றிய உணர்ச்சியிருக்கும். அவன் அந்தத் தவக்குலுடன் தன் பிரயா
சையையும் சுயதந்திரத்தையும் ஊடாடியிருப்பான். மூன்றாவது வகு
ப்பு: அவனுடைய நிலைமையானது குளிப்பாட்டுகிறவனுக்குமுன்பாக
மய்யித்துடைய நிலைமை எப்படியோ அப்படியாயிருப்பதாம். அதா
வது:—மய்யித்து தானே அசையாமல் எப்படி குளிப்பாட்டுகிறவனால்
அசைக்கப்படுகிறதோ அப்படியே இவன் தன்னை ஒரு மய்யித்தென்
றும் தானே அசைகிறவன் அல்லவென்றும் ஆதிவல்லமையினால்
அசைக்கப்படுகிறவன் என்றும் எண்ணுவான். இவன் தனக்கு ஏதா

வது சம்பவிக்கும்போது குழந்தை தன் தாயைக் கூப்பிடுகிறதுபோல இவன் துஆவும் செய்யமாட்டான். மேலும் தாயைக் கூப்பிடாமலிருந்தாலும் அவள் என் நிலைமையை அறிந்து என் காரியத்தைச் சரிப்படுத்துவாள் என்று அறிகின்ற புத்தியுள்ள ஒரு குழந்தையைப்போல் ஆய்விடுவான். ஆகவே இந்த மூன்றாவது தானத்தில் முதவக்கிலுக்கு ஒரு இகுத்தியாரும் இராது. இரண்டாவது தானத்திலும் இகுதியாரு இராது. என்கினும் வகீலிடத்தில் கெஞ்சுவதும் முறையிடுவதும் காரியத்தை அவனிடம் சாட்டுவதுமான இகுதியாரு இருக்கும். முதலாவது தானத்தில் இகுதியாரு இருக்கவே இருக்கும். ஆயினும் வகீலுடைய வழக்கமான நடவடிக்கைக்கு எதைத் தயார் செய்து கொடுக்கவேண்டுமென்று தெரிந்திருக்கிறதோ அந்த ஆதாரங்களைச் சித்தப்படுத்துவதில்தான் இவனுக்கு இகுதியாரு இருக்கும். எதுபோலெனில், இவன் ஆஜிராகாமலும் ஆகாரங்களைக் கொண்டுவந்து காட்டாமலும் இருக்கிறவரையில் வகீல் இவன் வழக்கில் பிரவேசிக்கமாட்டான் என்ற அவன் வழக்கம் இவனுக்குத் தெரிந்திருப்பதால் அவசியம் இவன் அந்த ஆதாரங்களுடன் ஹாஜிராவான். பின்பு வகீல் என்ன செய்கிறான் என்று முழுதும் எதிர்பார்ப்பதில் இருப்பான். நடப்பதெல்லாம் அவனாலேயே நடக்கிறதென்றும் ஆதாரம் தயார் செய்வதற்கு அவனே வழிகாட்டினதால் அதை ஹாஜிர்படுத்தினதும் அவனால்தான் என்றும் எண்ணுவான். ஆகவே இந்த முதல் வகுப்பு தவக்குலில் இருப்பவன் வர்த்தகம் செய்தல், பயிரிடல் முதலிய மற்றும் வெளிக்காரணங்களை விட்டுவிடமாட்டான். ஏனெனில் இது அல்லாகு தஆலாஉடைய சுன்னத்தான வழக்கமாயிருப்பதினாலென்க. ஆயினும் அத்தொழில்களை அவன் செய்தபோதிலும் அவன் முதவக்கில் ஆவான். ஏனெனில் அவன் வர்த்தகம் செய்தல் பயிரிடுதல் இவைகளின்பேரில் ஆதரவு வைக்காமல் அல்லாகு தஆலாஉடைய கிருபை அன்புகளில் ஆதரவுவைத்து அத்தொழில்களுக்குரிய சக்தியையும் காரணங்களையும் அவன் தனக்குச் செலுத்தினதுபோல் இன்னும் அதற்கு வழிகாட்டினதுபோல் அத்தொழில்களின் மூலமாய்த் தனக்கு இரணத்தைச் செலுத்துவான் என்று எண்ணுகின்றதலால் அத்தொழில்களைச் செய்கின்றான். அவன் எதை அடைந்தாலும் இதை அல்லாகு தஆலாவினால் அடைந்தேன் என்று நினைக்கின்றான். இதன் விஸ்தரிப்புப் பின்னால் வரும். இதுதான் லாஹவ்ல வலா குவ்வத்த இல்லாபில்லாஹி என்பதின் பொருள். ஏனெனில் ஹவ்லு என்ற பதத்துக்குத் திரும்பல் என்பது அர்த்தம். திரும்பல்

என்பது ஒரு அசைவு. குவ்வத்து என்ற பதத்துக்கு சக்தி என்பது அர்த்தம். ஆகவே அவன் தன் அசைவும் சக்தியும் தன்னால் ஆவதல்ல என்றும் அல்லாகு தஆலாவினால் ஆவதென்றும் எப்போது அறிந்தானோ, அப்போது அவன் எதைக்கண்டாலும் அது அல்லாகு தஆலாவினால் ஆவதென்று காண்கின்றான். மொத்தத்தில் காரியங்களைக் காரணங்களின் வசம் சாட்டுவது அவன் பார்வையிலிருந்து எடுபட்டுப்போனால் அப்போதவன் எக்காரியத்தையும் அல்லாகு தஆலாவினாலன்றி வேறொன்றால் நிகழ்வதெனக் காண்பதில்லையாதலால் அவன் முதவக்கில் ஆகுவான். ஆனால் தவக்குலுடைய தானங்கள் எல்லாவற்றையும் விட மேலானது அபூஎஜீதில் புஸ்தாமி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லியிருப்பதேயாம். அது வருமாறு:—அபூமூசாதைலி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் அபூ எஜீதில் புஸ்தாமி யவர்களிடத்தில் 'தவக்குல் என்பது என்ன?' என்று கேட்டேன். அதற்கவர்கள் 'நீர் என்ன சொல்லுகிறீர்?' என்று கேட்டார்கள். அதற்கு நான் "உன் வலதிடது பக்கங்களில் முழுதும் பாம்பும் பெருஞ் சர்ப்பங்களுமா யிருந்தபோதிலும் உன் மனம் அசையாம லிருப்பதே தவக்குல் என்று பெரியோர்கள் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள்' என்றேன். அதற்கவர்கள் "இது சுளுவானதாயிருக்கிறது. ஆனால் என்னிடத்தில் ஒருவன் நரகவாளிகளை முழுதும் இம்சையான வேதனையிலும் சுவர்க்கவாளிகளை முழுதும் இன்பமான சுகத்திலு மிருக்கக்கண்டு இவ்விருவகையாருக்கும் நடுவே தன் இருதயத்தில் ஏதும் வித்தியாசத்தைக் காண்பானாகில் அவன் முதவக்கில் ஆகமாட்டான்' என்று சொன்னார்கள்" என்பதே. அபூமூசா அவர்கள் சொன்னது: தவக்குலில் (மூன்றாவதாகிய) மேலான தானமாயிருக்கிறது. ஆயினும் சர்ப்பத்தினின்றும் தன்னைக் காக்காம லிருக்கவேண்டுமென்பது தவக்குலுக்கு ஷர்த்தல்ல. ஏனெனில் அபூபகர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள் முதவக்கிலா யிருந்தார்கள். அவர்கள் கார் என்னும் கெவியிலிருந்தபோது தங்கள் குதிக்காலால் பாம்பின் வளையை அடைத்தார்கள். ஆயினும் அவர்கள் பயந்தது பாம்புக்கல்ல, மேலும் அப்பாம்புக்கு விஷபலத்தையும் விஷச்செயலையும் கொடுக்கின்ற அதன் சிருஷ்டிகனாகிய அல்லாகு தஆலாவுக்கே அவர்கள் பயந்தார்கள். இப்படியான முதவக்கில் லாஹவ்லவலாகுவ்வத்த இல்லா பில்லாஹி என்பதின் பொருளை எல்லா விஷயத்திலும் காண்பான். இனி அபூ எஜீதில் புஸ்தாமி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லியிருக்கிறார்களே, அந்தச்சொல்லால் தவக்குலுக்கு அடிவேரான ஒரு ஈமானின்

பக்கம் இஷாரா செய்திருக்கிறார்கள். அந்த ஈமானே மிகவும் அரிதாயிருக்கிறது. அது யாதெனில், அல்லாகு தஆலாவுடைய நீதம், அவனது ஆழிய பூராயம், அவனது மேன்மை, அவனது அன்பு இவைகளில் வைக்கும் ஈமானேயாம். அதாவது:—அவன் எதைச் செய்தாலும் அவன் செய்கிறதே சரியென்று உண்மையாக உணர்ந்திருப்பதாம். ஆதலால் இந்தப் பொருளின்படி இன்பதுன்பங்களுக்கு நடுவே வித்தியாசத்தைக் காணமாட்டான்.

### தவக்குலின் அமல்கள் இவையென விளக்கல்.

அறிந்துகொள்:—தீனுடைய தானங்களெல்லாம் மூன்று மூலங்களை உடையனவாயிருக்கின்றன. அவை:—இல்மு என்னும் அறிவும் ஹால் என்னும் நிலைமையும் அமல் என்னும் செயலுமாம். தவக்குலுடைய இல்மையும் ஹாலையும் குறித்து மேலே விவரித்துரைக்கப்பட்டது. அமல் ஒன்று மிச்சப்பட்டிருக்கிறது. ஒருசமயம் யாராவதொருவன் எல்லாக் காரியங்களையும் அல்லாகு தஆலாவின் பொறுப்பில் விட்டுவிடுவதும் தன் இக்தியாரான சுயதந்திரத்தினால் யாதொரு தொழிலைச் செய்யாமலிருப்பதும் தவக்குலுக்கு ஷரத்து என்று எண்ணக்கூடும். அப்போதவன் அறவே யாதொரு தொழிலைச் செய்யமாட்டான். யாதொரு வஸ்துவை நாளைக்கு வேண்டுமென்று வைத்துக்கொள்ளமாட்டான். பாம்பு, தேள், புலி இவைகளை விட்டு ஓடமாட்டான். வியாதிப்பட்டால் மருந்து தின்னமாட்டான். இவையெல்லாம் பிசகாயிருக்கிறது. ஏனெனில் இவைமுழுதும் ஷரீஅத்துக்கு விரோதமாயிருப்பதினாலேயாம். தவக்குலை ஷரீஅத்தின் பேரில் எடுத்திருக்கிறபோது அது ஷரீஅத்துக்கு எப்படி விரோதப்படும்? மனிதனுடைய இக்தியாரு என்னும் அவன் சுயதந்திரம் எது காரியத்திலிருக்குமென்றால், அவன் கையில் இல்லாத ஒரு பொருளைச் சம்பாதிப்பதில் அல்லது கையிலிருக்கிற பொருளைக் காப்பாற்றுவதில் அல்லது இனியுண்டாகக்கூடிய ஒரு இம்சையைத் தடுப்பதில் அல்லது இப்போதுண்டான ஒரு இம்சையை நிவர்த்திப்பதில் சுயதந்திரமிருக்கும். இவை ஒவ்வொன்றிலும் தவக்குலின் விதி வெவ்வேறாயிருக்கிறது. ஆதலால் இந்த நாலு மகாம்களையும் விவரித்துச் சொல்லவேண்டுவது அவசியமாம்.

### முதலாவது மகாம்—செயலைச்செய்து இலாபத்தை ஏற்பதில பேசுவது.

அறிந்துகொள்:—இது மூன்று வகைக்கப்படும். முதலாவது வகை:—அல்லாகு தஆலா வழக்கமாக நடத்திவருகிற சுன்னத்துக்

களில் ஒருசுன்னத்தாக நாம் அறிந்திருக்கிற இன்றியமையாக்காரணங்களாம். அக்காரணங்களை நாம் அநுஷ்டிப்பதன்றி ஒரு காரியமும் உண்டாகாது. ஆதலால் அக்காரணங்களை அறவே விட்டுவிடுவது பயித்தியமேயொழிய அது தவக்குலாகாது. உதாரணமாக:—(பசியைத் தீர்க்க உணவை உண்பதும் பிள்ளையைச் சிருஷ்டிக்க மனையாளிடம் சேர்வதும் இன்றியமையாக்காரணமாக அல்லாகு தஆலா உலகத்தில் வழக்கப்படுத்தி யிருக்கிறான்) ஒருவன் அல்லாகு தஆலா என் பசியைத் தீர்ப்பான் என்றாவது சோற்றை யெழுப்பி என் வாய்க்குக் கொண்டுவருவானென்றாவது நினைத்துச் சோற்றில் கையைவைக்காமலும் எடுத்து வாயுட்கொள்ளாமலுமிருந்துகொண்டு அல்லதுநிகாகு செய்து கொள்ளாமலும் மனையாளிடம் சேராமலும் மிருந்துகொண்டு அல்லாகு தஆலா எனக்குப் புத்திரனைச் சிருஷ்டிப்பான் என்று நினைத்து இதுதான் தவக்குல் என்று எண்ணுவானாகில் இந்த எண்ணம் மடத்தனமே யொழிய தவக்குல் அல்ல. மேலும் இன்றியமையாத ஒவ்வொரு காரணத்திலும் தவக்குலாகிறது அறிவாலும் நிலைமையாலுமேயன்றி அந்தக் காரணமான அமலையும் செயலையும் விடுவதினால் அல்ல. அறிவால் தவக்குலாவது:—கை, சோறு, சக்தி, செயல், வாய், பற்கள் இவையெல்லாவற்றையும் அல்லாகு தஆலா படைத்திருக்கிறான் என்று அறிவதாம். நிலைமையால் தவக்குலாவது:—இருதய நிலைமையான ஆதரவு தன் உறுப்பையும் உணவையும் சார்ந்திராமல் அல்லாகு தஆலாஉடைய கிருபையைச் சார்ந்திருப்பதாம். ஏனெனில் அப்போதே கைதிமிர்த்துப்போகவும் சோற்றை ஒருவன் பிடுங்கிக்கொள்ளவும் கூடுமாதலா லென்க. ஆகவே அவற்றைப் படைப்பதிலும் காப்பதிலும் அவனது நோக்கமெல்லாம் அல்லாகு தஆலாஉடைய கிருபையின்பேரில் இருக்கவேண்டும். தன் செயலின்பேரிலும் சக்தியின்பேரிலும் அல்ல.

இரண்டாவது வகை:—இன்றியமையாக் காரணங்களாயிராமல் அவையில்லாதபக்ஷம் பெரும்பான்மையில் மனநோக்கம் நிறைவேறாததாயும் சிறுபான்மையில் நிறைவேறக்கூடியதாயும் இருப்பதாம். எதுபோலெனில்:—யாத்திரையில் வழிக்கு வேண்டிய உணவு முதலியவைகளைத் தங்கரித்து வைத்துக்கொள்வதுபோலென்க. தவக்குலில் இதையும் விட்டுவிடவேண்டுமென்ற விதியில்லை. ஏனெனில் இது றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சுன்னத்தாயும் சலபுகளான முன்னோர்களுடைய நடவடிக்கையாயு மிருப்பதனாலேயாம். ஆனால் அவனுடைய மனதின் ஆதரவு அந்தத தங்கரிப்

லைப் சார்ந்திராமல் அதைச் சிருஷ்டித்துக் காப்பவனாகிய அல்லாகு தஆலாவுடைய கிருபையைச் சார்ந்திருக்குமோ அவனே இதில் முதவக்கிலாவான். ஏனெனில் அந்தத் தங்கரிப்பை வழியில் திருடன் பறித்துக்கொண்டு போய்விடக் கூடுமாதலினாலென்க. என்னினும் வழிக்குவேண்டிய தங்கரிப்பில்லாமல் வனாந்தரத்தில் நடப்பானாயின் இது ஆகுமென்பதுடன் தவக்குலின் நிறைவுமாயிருக்கிறது. சோற்றை உண்காமலிருப்பதிற்போல் இந்த இது தவக்குல் ஆகாதென்பதில்லை. என்றாலும் இப்படி இருப்பது யாருக்கு ஆகுமென்றால், எவன் ஒருவாரம்வரையில் பசித்திருக்க நேரிட்டால் அப்படியிருக்கக்கூடிய சக்தியைச் சம்பாதித்துக் கொண்டவனாயும் இலைதழைகளைத் தின்று வெகுநாள் ஜீவித்திருக்கக் கூடியவனாயும் இருப்பானோ அவனுக்கே ஆகும் என்க. முசாபிரானவன் இக்குணங்களை உடையவனாயிருப்பானாயின் அனேகமாய்க் காடுகளில் அவன் எண்ணுதலா இடத்திலிருந்து அவனுக்கு உணவுவரக்கூடியகாடுமிருக்கும். இபுறாஹீமுல் கவாஸ் றஹிமஹுல்லா அவர்கள் ஒருமுதவக்கிலாயும் இக்குணத்தை யுடையவர்களாயு மிருந்தார்களாதலால் வழிக்குவேண்டிய தங்கரிப்பில்லாமல் வனாந்திரத்தில் தனியாக நடப்பவர்களாயிருந்தார்கள். என்றாலும் ஊசி, கத்திரி, கயிறு, பாத்திரம் இவை அவசியமானவையாதலால் எப்பொழுதும் அவர்களிட மிருக்கும். ஏனெனில் கயிறும் பாத்திரமுமில்லாமல் கிணற்றிலிருந்து ஜலம் வெளியேவராது. காட்டில் கயிறும் பாத்திரமுமிராது. உடைகிழிந்து போனால்ஊசியின் தானத்திலே வேறெந்தவஸ்துவும்உபயோகப்படாது. ஆகவே இந்தவஸ்துக்களில் தவக்குலென்பது இவைகளை விட்டுவிடுவதல்ல. மேலும் இந்த வஸ்துக்களின்பேரில் ஆதாரவு வைக்காமல் அல்லாகு தஆலாவுடைய கிருபையின்பேரில் ஆதாரவுவைப்பதே இவைகளில் தவக்குலாகும். பின்னர் ஒருவன் எந்த ஜனமும் நடமாடாததும் மரஞ்செடிகள் முளைக்காததுமான ஒரு மலைக்குகையில் உட்கார்ந்துகொண்டு நான் தவக்குல் செய்கிறேன் என்று சொல்லுவானாகில் இது ஹறாமாகும். அவன் தானே தன்னை மாய்த்துக்கொண்டவனாவான். இன்னும் அல்லாகு தஆலாவுடைய சுன்னத்தான வழக்கத்தையும் அறியாதவனாவான். வழக்கில் வகீலை நியமகம்செய்து அந்த வகீல் ஆதாரமில்லாமல் வழக்கை எடுத்துப் பேசுவதில்லை என்று அவன் வழக்கத்தை அறியாமலும் ஆதாரத்தை அவனிடம்கொண்டு போகாமலு மிருக்கிற ஒரு வழக்காளிக்கு இவன் ஒப்பாவான். முற்காலத்தில் ஒரு ஜாஹிதானவர் பட்டணத்தை விட்டு வெளிப்பட்டு

ஓர் மலைக்கெவியில் போய்த்தங்கி அல்லாகு தஆலா எனக்கு இரணம் செலுத்துவான் என்று தவக்குல் செய்துகொண்டிருந்தார். ஒருவாரம் வரையில் அவருக்கு ஒரு உணவும் கிடைக்காமையினால் உயிர் துறக்கும் தருவாயிலாய்விட்டார். அப்போது அல்லாகு தஆலா "நீ பட்டணத்துக்குத் திரும்பிப்போய் ஜனங்களின் நடுவே உட்காராமலிருக்கிறவரையில் எனது சிறப்பின்மேல் ஆணையாக நான் உனக்கு இரணம் கொடேன்" என்று அவருக்குச் சொல்லும்படி அக்காலத்திலிருந்த நபியவர்களுக்கு ஒஹி அனுப்பினான். அவர் பட்டணத்துக்குள் வந்தபோது பல விடங்களிலிருந்து பற்பல உணவுகளைக் கொண்டு வந்தார்கள். அவர் தம் மனதில் ஏதோ எண்ணினார். அதைப் பற்றிவந்த ஒஹியாவது:—"நீ உன் ஜுஹ்தினால் என் ஹிக்மத்தாகிய ஆழிய பூராயத்தைப் போக்கிவிடப் பார்த்தாய். நான் என் அடிமையின் இரணத்தை என் குதரத்தாகிய கையால் கொடுப்பதைவிட வேறு அடிமைகளின் கையால் கொடுப்பதை நான் அதிகமாக நேசிக்கிறேன் என்பது உனக்குத் தெரியாமல் போய்விட்டது" என்பதே. இதேபோல் ஒருவன ஊருக்குள் தன் வீட்டில் மறைந்து கதவை அடைத்துக்கொண்டு தவக்குல் செய்வானாகில் அது ஹறாமாகும். ஏனெனில் இன்றியமையாப் பொருள்களின் வழியிலிருந்து எழுந்துவிடுவது தகுதியல்லவாதலினாலென்க. கதவை அடைக்காமல் தவக்குலில் உட்கார்ருவானாகில் இது ஆகும். என்றாலும் இதற்கு விதியாவது:—எவரும் எதையாவது கொண்டுவருவார்கள் என்று அவன் தன் நோக்கத்தையெல்லாம் கதவின்மேல் வைக்காமலிருக்க வேண்டும். அவனுடைய முழுமனதும் ஜனங்களில் இருக்கக்கூடாது. மேலும் மனதை அல்லாகு தஆலாவில் ஆக்கி அவனை வணங்குவதில் பராக்காயிருக்கவேண்டும். இன்றியமையாக் காரணங்களின் வழியிலிருந்து அறவே அவன் எழுந்துவிடவில்லை யாதலால் இரணத்தை அடையக்கூடுமென்று எதார்த்தத்தில் அவன் அறிகின்றான். அடியான் தன் இரணத்தைவிட்டு ஓடுவானாகில் இரணம் அவனைத் தேடுமென்றும் அவன் தன் இரணத்தைக் கொடுக்கவேண்டாமென்று அல்லாகு தஆலாவினிடத்தில் கேட்பானாகில் அப்போது அல்லாகு தஆலா அவனைநோக்கி ஏ மூடா! இரணம் கொடுக்காமலிருக்கத்தானா உன்னைப் படைத்தேன்? இது ஒருபோதும் ஆகாதெனச் சொல்லுவான் என்றும் சிலர் கூறியிருக்கிறார்களே அது இந்த இடத்தில்தான் நேர்பட்டுவரும். ஆகவே காரணங்களின் வழியைவிட்டு எழுந்திருக்காமலிருப்பதுடன் அக்காரணங்களால் இரணம் கிடைக்கிற

தென்று எண்ணாமல் காரணகர்த்தனாகிய அல்லாகு தஆலாவினால் கிடைக்கிறதெனக் காண்பதினால் தவக்குலாகும். ஏனெனில் எல்லா ஜீவர்களும் அல்லாகு தஆலாவுடைய இரணத்தையே புசிக்கிறார்கள். என்கிலும் வறியர்போல் சிலர் பிச்சை கேட்கும் சிறுமையினாலும் வர்த்தகர்போல் சிலர் விற்பனையை எதிர்பார்க்கும் இம்சையினாலும் தொழிலாளர்போல் சிலர் வேலைசெய்யும் கஷ்டத்தினாலும் சூபியாக்கள்போல் சிலர் சங்கையுடன் கனவான்களாலும் இரணத்தைப் புசிக்கிறார்கள். இவர்கள் தங்கள் நோக்கத்தை அல்லாகு தஆலாவின்மேல் வைக்கிறார்கள். இவர்களுக்குச் செலுத்தப்படுகிற ஒவ்வொன்றையும் ஹக்கு தஆலாவினால் கிடைப்பதெனக் காண்கிறார்கள். இடையிட்ட ஜனங்களின்மேல் இவர்கள் நோக்கம் செல்லுகிறதில்லை.

மூன்றாவது வகை:—இன்றியமையாக் காரணமல்லாதவைகளாயும் பெரும்பான்மையில் தேவையில்லாதவைகளாயு மிருப்பதுடன் அவை தந்திரோபாயங்களெனவும் தாராளத் தேட்டங்களெனவும் எண்ணப்படுவனவுமான காரணங்களாம். இக்காரணங்களுக்கு இரண சம்பாத்தியத்தோடிருக்கிற சம்பந்தமானது எதைப்போல்வதென்றால் சகுனம் பார்த்தல், மந்திரமோதல், சூடுபோடல் இவைகளுக்கு வியாதியை நீக்கலோடிருக்கிற சம்பந்தம்போல்வதாம். ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மூதவக்கிலுகளை வர்ணித்ததில் அவர்கள் மந்திரமோதார்கள், சூடுபோடார்கள் என்று சொன்னார்களே தவிர அவர்கள் தொழில் செய்யார்கள் பட்டணத்தைவிட்டு வெளிப்பட்டுக் காட்டுக்குப் போய்விடுவார்கள் என்று சொல்லவில்லை. ஆதலால் மேலே கூறிவந்தபடி இந்த முதலாவது மகாமில் தவக்குலுக்கு மூன்று பதவிகளிருக்கின்றன. அவற்றுள் முதற்பதவியுள்ளது இபுராஹீமுல் கவாஸ் றஹிமஹுல்லா அவர்கள் எடுத்துக்கொண்ட தவக்குலாம். அவர்கள் உணவு முதலிய தங்கரிப்பில்லாமல் காட்டில் சஞ்சரிப்பவர்களா யிருந்தார்கள். இந்தத் தவக்குல் மிகவும் மேலானது. பசித்திருக்க அல்லது இலைகளைத்தின்று ஜீவிக்கசக்திபெறுவதினால் இந்த தவக்குலுண்டாகும். ஒன்றும் கிடைக்காமற்போனால் மரணமடைவதையும் இலக்ஷியம் பண்ணாமல் அதில் தனக்கு நன்மையிருக்கிறதாக அறிவதினால் உண்டாகும். ஏனெனில், ஒருவன் உணவாகிய தங்கரிப்பை வைத்துக்கொண்டிருந்தால் அப்போதும் அதை எவரும் பறித்துக்கொண்டு போய்விடவும் அவன் பசியால் மாண்டு போகவும் கூடுமாதலினாலென்க. அருமையாகச் சம்பவிக்கக்கூடியது வழியில் எப்போதுமுண்டு. ஆதலால் அதைவிட்டுப்பேணுதல் வாஜி

பல்ல. இரண்டாம் பதவியுள்ளது அவன் தொழில் செய்யாமலிருப்பதுடன் காட்டுக்குப் போய்விடாமல் ஒரு பட்டணத்துப் பள்ளிவாசலில் இருந்து ஜனங்களில் நோக்கம் வைக்காமல் அல்லாஹு தஆலா உடைய கிருபையில் ஆதரவு வைத்துக்கொண்டிருப்பதாம். மூன்றாம் பதவியுள்ளது தொழில் செய்வதற்காக வெளியே போவதாம். ஆனால்(இரண்டாம் ருகுனாகிய முஆமலாத்தில்)தொழிலுடைய பாடத்தில் நாம் சொல்லியிருப்பதுபோல் சுன்னத்தையும் ஷரகின் அதபையும் அனுசரித்துத் தொழில் செய்யவேண்டும். தாராளத்தை தட்டத்தினாலும் தந்திரோபாயத்தினாலும் நுண்ணிய ஆலோசனைகளினாலும் சமர்த்தினாலும் இரணம் சம்பாதிப்பதைவிட்டும் பயந்துகொண்டிருக்கவேண்டும். இப்படிப்பட்ட காரணங்களில் பராக்காவானாகில் அவன் முதவக்கிலாகமாட்டான். மந்திரமோதுகிறவனும் சூடுபோடுகிறவனுமான ஒரு மனிதனுடைய பதவியில் ஆய்விடுவான். தொழிலை விட்டுவிடுவது தவக்குலுக்கு ஷர்த்தல்லவென்பதின்பேரில் அத்தாட்சியாவது:—அபூபகர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள் முதவக்கிலாயிருந்தார்கள். தவக்குலின் எந்தப் பதவியும் அவர்களுக்கில்லாமலிருந்ததில்லை. அவர்கள் கிலாபத்தென்னும் அதிகாரத்தை ஏற்றுக்கொண்ட காலத்தில் ஜவளி மூட்டையை எடுத்துக்கொண்டு வர்த்தகம் செய்வதற்காகக் கடைவீதிக்குப் போனார்கள். அப்போது ஜனங்கள் அவர்களை நோக்கி "நீங்கள் கிலாபத்தை அடைந்திருக்க இதை ஏன் செய்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "நான் என் குடும்பத்தைக் கஷ்டமுறச் செய்வேனாகில் மற்றவர்களை வெகு சீக்கிரத்தில் கஷ்டத்திலாக்குவேன்" என்றார்கள். பின்பு அவர்களுக்கு பய்துல்மாலில்நின்றும் செலவுக்குக் கொடுத்துவர ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் பிறகு அவர்கள் தங்கள் நேரத்தை முழுதும் கிலாபத்தின் காரியத்தில் கழிப்பவர்களாயிருந்தார்கள். பின்பு அவர்களின் தவக்குல் எதனால் ஏற்பட்டதென்றால் பொருளில் அவர்கள் ஆவல்கொள்ளாதவர்களாயும் கிடைத்ததைத் தங்களுக்குப் போதுமான ஆகாரமெனவும் ஆஸ்தியெனவும் காணாமல் அல்லாஹு தஆலாஉடைய கிருபையை ஆதரவு வைப்பவர்களாயும் தங்கள் பொருளைவிட மற்ற முஸ்லிம்களின் பொருளைக் காப்பதில் அதிக உவப்புள்ளவர்களாயுமிருந்ததினாலென்க. மொத்தத்தில் தவக்குலுக்கு ஜுஹுது என்னும் தெண்டிப்பு ஷர்த்தாயிருக்கிறது. ஜுஹ்துக்குத் தவக்குல் ஷர்த்தல்லவென்கினும் சரியே.

அபூஜகுபரில் ஹத்தாதி றஹிமஹுல்லா அவர்கள் ஜுனைதுல்பகுதாதி றஹிமஹுல்லா அவர்களுக்குப் பிராயும் முதவக்கில்

களிற் சேர்ந்தவராயும் இருந்தார்கள். அவர்கள் சொன்னதாவது:—
"நான் இருபது வருஷம் என் தவக்குலை வெளிக்குக் காட்டாமல்
மறைத்து வைத்திருந்தேன். தினம் கடை வீதிக்குப்போய் ஒரு
தீனர் (கால்பவுன்) சம்பாதிப்பேன். அதில் ஒரு சின்னப் பணத்தை
யும் வெந்நீர்ப் பொரைக்குக் கொண்டுபோகேன். எல்லாவற்றையும்
சதகா செய்துவிடுவேன்" என்பதே. இவர்கள் சமூகத்தில் ஜுனைது
றஹிமஹுல்லா அவர்கள் தவக்குல் விஷயமாக ஏதும் பேசுவதில்லை.
"அவர்களிருக்கும் ஒருதானத்தை அவர்கள்முன்பாக எடுத்துப்பேச
எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்றுசொல்லுவார்கள். இனி தங்கள்
வேலையாட்கள் வெளியே போய்வரவும் தாங்கள் கான்காஹில் உட்
காரவுமாயிருக்கிற சூபியாக்களின் தவக்குலானது தொழில் செய்
பவர்களின் தவக்குலைப்போல் கேவலமானதேயாம். அந்த தவக்குல்
சரியாவதற்குரிய ஷர்த்துகள் அநந்த மிருக்கின்றன. ஆனால் என்
ணாத புரத்திலிருந்து அல்லாகு தஆலா ஏதும் இரணமளிப்பானெ
ன்றஆதரவின்பேரில் உட்காருவார்களாகில் இது தவக்குலுக்கு அதிக
அடுத்ததாகும். ஆயினும் அவர்கள் இருக்குமிடம் எல்லாருக்கும்
தெரிந்த ஓர் இடமாயிருந்தால் அப்போதவர்கள் ஒரு வியாபாரிக்கு
ஒப்பாவார்கள். எல்லாருக்கும் தெரிந்திருக்கிறதென்கிற அந்த எண்
ணத்தினாலேயே அவர்கள் மனம் அமைதி யடையக்கூடுமென்கிற
அச்சமிருக்கிறது. அவர்களுக்கு அந்த நோக்கம் இல்லாமற்போகிற
பக்ஷம் அவர்களின் தவக்குல் தொழிலாளியின் தவக்குலுக்கு ஒப்
பாகும். ஆகக்கூடி மனிதர்களில் நோக்கம் வைக்காமலும் யாதொரு
காரணத்தின்பேரில் ஆதரவு வைக்காமலும் காரண கர்த்தனாகிய
அல்லாகு தஆலாவின்மீது ஆதரவு வைப்பதே தவக்குலுக்கு அடி
வேராயிருக்கிறது. இபுராஹீமுல் கவாஸ் றஹிமஹுல்லா அவர்கள்
சொல்லுகிறதாவது:—"நான் கிழுரு அலைகிஸ்ஸலா மவர்களைக் கண்
டேன். அவர்கள் என்னோடிருக்கச் சம்மதித்தார்கள். ஆயினும் என்
மனம் அவர்கள்மீது ஆதரவுவைத்து அதனால் அமைதியடைந்திரு
க்குமென்றும் அப்போது என் தவக்குல் நிறைவில்லாத தவக்குலாய்ப்
போம் என்றும் நான் அவர்களை விட்டுவிட்டேன்" என்பதே. இமாம்
அகமது ஹம்பல் றஹிமஹுல்லா அவர்கள் வேலைக்காக ஒரு கூலி
யாளை நியமித்தார்கள். பின்பு அவன் கூலிக்குமேல் கொஞ்சம் அதிக
மாக அவனுக்குக் கொடுக்கும்படி தங்கள் ஷாகிர்திக்குச் சொன்னார்
கள். அப்படிக் கொடுத்ததில் அவன் வாங்கவில்லை. வெளியே போய்
விட்டான். அப்போது அவர்கள் அந்த ஷாகிர்தை நோக்கி "நீ

அவன் பின்னேபோய் அதைக்கொடு வாங்கிக்கொள்ளுவான்" என்றார்கள். "அந்த ஷாகிர்து அதேதன்?" என்றான். அதற்கவர்கள் "நீ முன் கொடுக்கும்போது அதில் அவனுக்கு ஆவல் எழும்பியிருந்தது. ஆதலால் அவன் அதை வாங்கவில்லை. இப்போது அந்த ஆவல் அற்றுப்போயிற்று வாங்கிக்கொள்ளுவான்" என்றார்கள். மொத்தத்தில் சம்பாதிப்பவனுடைய தவக்குல் என்பது அவன் தன் சம்பாத்தியத்தில் ஆதரவுவைக்காமலிருப்பதேயாம். அதற்கு அடையாளம் யாதெனில், அந்த சம்பாத்தியத்தை எவரும் திருடிக்கொண்டால் அவன் இருதயநிலைமை மாறாமலிருக்கவேண்டும். இரணம் போய்விட்டதென்ற நிராதரவு அவன் மனதில் வரக்கூடாது. அவனுக்கு அல்லாகு தஆலாவுடைய கிருபையில் ஆதரவிருந்தால் எண்ணாதபுரத்திலிருந்து தனக்கு இரணம்வரும் என்றும் அப்படி வராவிட்டாலும் அதில் தனக்கு நன்மையிருக்கிறதென்றும் அறிவான்.

இந்த நிலைமையை உண்டாக்கிக் கொள்வதற்குப் பரிகாரம் யாதெனில், அறிந்துகொள்:—ஒருவன் ஏதோ கொஞ்சம் பொருள் வைத்துக்கொண்டிருந்து அது களவுபோய்விட்டால் அல்லது அதற்குச் சேதம் வந்தால் அவன் மனங் கலங்காம லிருப்பதென்ற இந்த நிலைமை மிகவும் அரிதான நிலைமையா யிருக்கிறது. அரியதா யிருந்தபோதிலும் அசாத்தியமானதல்ல. முதலாவது:— அல்லாகு தஆலாவினது பூரண அன்பையும் தயவையும் அவனது பூரணவல்லபத்தையும் உறுதியாக நம்பி ஈமான் கொள்வதினால் இந்த நிலைமை உண்டாகும். அப்போதவன் தன் இருதயத்தில் அல்லாகு தஆலா ஆஸ்தியில்லாத அநேக ஜனங்களுக்கு ஆகார மளிக்கிறான் என்றும், ஆஸ்திவந்தாயிருக்கிற அநேகம்பேருக்கு அந்த ஆஸ்தியே ஆபத்தாயிருக்கிறதென்றும், ஆதலால் அது ஒழிந்துபோனதில் நன்மையிருக்கிறதென்றும் எண்ணிக்கொள்வான். றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், "மனிதன் இரவில் ஒரு(வர்த்தக) காரியத்தில் யோசிப்பான்" என்றும், "அதில் அவனுக்குக் கெடுதியிருக்கும்" என்றும், "அல்லாகு தஆலா அருஷின்மேலாலிருந்து அவனைக் கிருபையாகப் பார்த்து அந்தக் காரியத்தை அவனைவிட்டு நீக்கிவிடுவான்" என்றும், "காலையில அவன் துக்கமும் வருத்தமும் உள்ளவனாக எழுந்து இதை எவன் செய்தான்? ஏன் செய்தான்? என்று கெட்ட எண்ணங்கொள்வான்" என்றும், "அவனுக்கு அண்டை வீட்டுக்காரன்செய்தான், சிற்றப்பன்மகனான அண்ணன் செய்தான், இன்னான்செய்தான் என்று எண்ணமிருக்கும்" என்றும், "ஆனால் அக்காரியம் அவனை

விட்டும்தப்பிப்போகும்படி செய்தது அல்லாகு தஆலாஉடைய றஹ்மத்தாயிருக்கும்" என்றும் அருளிச்செய்திருக்கிறார்கள். இதனாலேதான் உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் "ஏழையாயிருப்பதிலோ அல்லது சீமானாயிருப்பதிலோ எதில் எனக்கு நன்மையுண்டென்பது எனக்குத் தெரியாமையினால் நான் காலையில் ஏழையாகவாவது சீமானாகவாவது எழுந்திருப்பதைப்பற்றி இலக்ஷியம்பண்ணமாட்டேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது:—வறுமைக்குப் பயப்படுவதும் கெட்ட எண்ணங்கொள்வதும் ஷைத்தான் உங்களுக்கு வறுமையை வாக்களித்துப் பயமுறுத்துவான் என்றபடி இது ஷைத்தானுடைய போதனையா யிருக்கிறதென்று அறியவேண்டும். அன்றியும் இப்படிப்பட்ட விஷயங்களில் அல்லாகு தஆலாஉடைய கிருபையான பார்வையின்பேரில் உறுதியான நம்பிக்கை யிருக்கவேண்டும். அதினும் சொந்தமாக எவரும் அறிந்துகொள்ளக்கூடாத மறைந்த காரணங்களின் மூலமாக அளிக்கப்படுகிற இரணம் அநேகமிருக்கிறதென்றும் அறிந்திருக்கவேண்டும். மொத்தத்தில் அந்த மறைந்த காரணங்களிலும் ஆதாவுவைக்காமல் அல்லாகு தஆலா இரணத்துக்குப் பிணையா யிருப்பதின்பேரில் ஆதாவுவைக்கவேண்டும். முதவக்கிலாயிருந்த ஒரு ஆபிது ஒரு பள்ளிவாசலில் இருந்தார். அந்தப் பள்ளிக்கு இமாமாயிருப்பவர் பன்முறை அந்த ஆபிதை நோக்கி "நீர் ஒன்றுமில்லாதவரா யிருக்கிறீராதலால் எதும் தொழில்செய்வது உமக்கு அதிக வரிசையுள்ளதாயிருக்கிறது" என்று சொன்னார். அதற்கந்த ஆபிது "இந்தத் தெருவிலிருக்கிற ஒரு எஹூதி எனக்குத் தினம் இரண்டு ரொட்டிகளனுப்புவதாகப் பிணைப்பட்டிருக்கிறான்" என்றார். அப்போதந்த இமாம் "அப்படியானால் நீர்தொழில் செய்யாமலிருப்பது ஆகும்" என்றார். அப்போதவர் அந்த இமாமை நோக்கி "ஓ வாலிபரே! இரணத்துக்கு அல்லாகு தஆலா பிணைப்பட்டிருப்பதைவிட எஹூதியின் பிணைப்படுதல் உமக்கு அதிக உறுதியெனத் தெரிவதால் நீர் இமாமத்து செய்யாமலிருப்பது உமக்கும் அதிக வரிசையுள்ளதாயிருக்கிறது" என்றார். இதுபோல் இன்னுமொருபள்ளியின் இமாமானவர் ஒருமனிதனைப்பார்த்து "நீர் எங்கிருந்து இரணத்தை அடைகிறீர்?" என்றுகேட்க, அவர் அந்த இமாமை நோக்கி "கொஞ்சம்பொறும், உம்முடன் தொழுததொழுகையை கலா செய்து வருகிறேன்" என்றார். இதில் அவர் கருத்து யாதெனில், இரணத்துக்கு அல்லாகுதஆலா பிணைப்பட்டிருப்பதில் உமக்கு ஈமானில்லை என்பதுதான். எண்ணாத புரத்திலிருந்து இரணங்களை யடைந்து

பரிசுத்திருப்பவர் யாரோ அவர்கள் ஊறும் பிராணிகளில்நின்றும் எதன் இரணமும் அல்லாவின் பொருப்பிலிருந்தேயொழிய ஒரு பிராணியும் உலகத்தில் இல்லை என்று அல்லாகு தஆலா அருளிய திருவசனத்தில் தங்கள் ஈமானை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். சிலர் ஹஜ்ரத் ஹஸைபத்துல் மருஅஷி றஹிமஹுல்லா அவர்களை நோக்கி "நீர் இபுறாஹீமுல் அதுஹம் றஹிமஹுல்லா அவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தீரே, அவர்களிடத்தில் என்ன அதிசயத்தைக் கண்டீர்?" என்று கேட்டதற்கு அவர்கள் சொன்னதாவது:—"நானும் அவர்களும்மக்கத்துக்குப்போகும்போதுவழியில் கடும்பசியால்கஷ்டமடைந்தோம். கூபாவில் போய்ச்சேர்ந்தபோது அந்தப்பசியின் கூறு என்னில் வெளித்தோற்றினது. அப்போதவர்கள் என்னைநோக்கி "நீ பசியால் சோர்வடைந்தாயோ?" என்றார்கள். நான் "ஆம்"என்றேன். "காயிதமும் மைக்கூடும்கொண்டுவா"என்றார்கள். நான்கொண்டுவந்து கொடுத்தேன். அவர்கள் அந்தக்காயிதத்தில் "பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர்றஹீம்" என்றெழுதி அதன்பின் "எந்த நிலைமையிலும் நின்னையே நாடப்படுகிறவனே; எல்லாப்பொருளிலும் நின்னையே சுட்டப்படுகிறவனே; யான் நின்னைப் புகழ்கிறவனும் ஷுக்குரு செய்கிறவனும் திக்குருசெய்கிறவனுமா யிருக்கிறேன்; ஆனால் பசியுள்ளவனும் தாகமுள்ளவனும் உடையில்லாதவனுமாயிருக்கிறேன்; என்பங்காகிய அந்த மூன்றுக்கும் யான் பிணையாயிருக்கிறேன், உன்பங்காகிய இந்த மூன்றுக்கும் நீ பிணையாயிரு" என்றெழுதி அதை என்வசம் கொடுத்து "நீ யுன்மனதை அல்லாகுதஆலாவிலன்றி வேறுமனிதரில் நாட்டாமல் வெளியேபோய் முதலில் யாரைக்காண்கிறாயோ அவனிடத்தில் இந்தக்கடிதத்தைக்கொடு" என்று சொன்னார்கள். நான் அப்படியே வெளியில் புறப்பட்டுவந்தேன். ஒருவனை ஒட்டகத்தின்மீதேறி வரக்கண்டு அவனிடம் அக்கடிதத்தைக்கொடுத்தேன். அவன் அதை வாசித்துப்பார்த்துக் கண்ணீர்விட்டழுது "இக்கடிதக்காரர் எங்கே இருக்கிறார்?" என்றான். நான் "பள்ளிவாசலில்இருக்கிறார்"என்றேன். அறுநூறு தீனார்களடங்கிய ஒருபையை எடுத்து என்னிடம்கொடுத்தான். அங்கிருந்தவர்களிடம் "இவன் யார்?" என்று விசாரித்தேன். "இவன் ஒரு நஸ்ரானியன்" என்று சொன்னார்கள். பின்பு இபுறாஹீமுல் அதுஹம் றஹிமஹுல்லா அவர்களின் சமுகத்தில் வந்து நடந்த சங்கதிகளைச் சொன்னேன். அவர்கள் "நீ இதில் கையிடாதே பொறு,இதைக்கொடுத்தவனும் இப்போதிங்குவருவான்" என்றார்கள். உடனே அந்த நஸ்ரானியன் வந்து அவர்களின் பாதம்பணிந்து முத்

தஞ்செய்து முஸ்லிமாய்ப்போனான்" என்பதே. அபூயாகூபில்பசரீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் ஹறமுஷரீபில் பத்துநாள்வரையில் பட்டினியாயிருந்தேன். பின்பு பொறுக்க முடியாமல் வெளியே புறப்பட்டேன். ஒரு சிகப்புமுள்ளங்கி கீழே விழுந்து கிடப்பதைக்கண்டு அதை எடுக்கலாமென்று நினைத்தேன். அப்போது என்மனதிலிருந்து யாரோ "நீ பத்துநாளாகப் பட்டினி கிடந்தாய். பின்பு கடைசியில் இந்த அழுகினமுள்ளங்கிதானா உன் பங்கு?" என்று அடுத்தடுத்துச் சொன்னதுபோலிருந்தது. நான் அதை எடுக்காமல் பள்ளிவாசலுக்குப் போய்விட்டேன். அங்கு ஒருவன் வந்துபுகுந்தான். அவன் ஒருபெட்டி நிறைய நெய்படைகளும் சர்க்கரையும் தோல்போக்கிய வாதுமைப்பயரும் கொண்டுவந்து என் முன்பாகவைத்து "நான் கப்பல் யாத்திரை செய்தேன், கப்பலில் புயல்காற்று வந்து விழுந்தது. அப்போது நான் அதற்கு உயிர் தப்புவேனாகில் கரைசேர்ந்து நான் முதலில் காணுகிற பகிருக்கு இந்த வஸ்துக்களைக்கொடுப்பேன் என்று பிரார்த்தனைசெய்துகொண்டேன்" என்றான். நான் அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பிடி எடுத்துக்கொண்டு மீதியை அவனிடமேகொடுத்து "இதை நான் உனக்குக் கொடுத்தேன் (எடுத்துக்கொண்டுபோ) என்றேன். அப்போது நான் என்மனதில் எண்ணினதாவது:—சமுத்திரத்தின் நடுவே உன் இரணத்தைச் சரிப்படுத்தி வைக்கும்படி காற்றுக்குக் கட்டளையிட்டிருக்க நீ இதர இடங்களில் தேடுகிறாய்" என்பதே. ஆதலால் இம்மாதிரியான அரிய சம்பவங்களை அறிவது ஈமானைப் பெலப்படுத்தும்.

## குடும்பஸ்தனுடைய தவக்குலை விளக்குவது.

அறிந்துகொள்:—குடும்பியானவன் காட்டுக்குப் போய்விடுவதும் சம்பாத்தியத்துக்குரிய காரணங்களை விட்டுவிடுவதும் அவனுக்குச் சரியல்ல. மேலும் குடும்பியின் தவக்குல் மூன்றும் பதவியிலன்றி வாய்க்காது. அது தொழில்செய்பவனுடைய தவக்குலாம். எதுபோலெனில், அபூபகர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள் செய்ததுபோலென்க. இதற்குக் காரணமாவது:—தவக்குல் இரண்டு பொருட்களால் நேர்பட்டுவரும். ஒன்று:—பசித்திருக்கவும் இலைமுதலிய தாவரவஸ்துவா யிருந்தபோதிலும் உள்ளதைக் கொண்டு போதுமாக்கிக்கொள்ளவும் சக்தி பெறுவதாம். மற்றொன்று:—அவன் பசித்திருப்பதும் மவுத்தாவதுமே அவனுக்கு இரணமா யிருக்கலாமென்றும் அதிலேயே அவனுக்கு நன்மையா யிருக்கலாமென்றும் அவன் ஈமான் கொள்வதாம். ஆனால் அவன் தன் குடும்பத்தை இவ்விதமா

யிருக்கும்படி வைக்கமுடியாது. மேலும் அவனது நபுசும் பசியைப் பொறுக்கச் சக்தி பெறாததாயும் சோர்வடைந்து துடிதுடிப்பதாயுமிருந்தால் அப்போது அதுவும் அவன் குடும்பமாகும். ஆதலால், அவன் தொழிலை விடுவதகொண்டு தவக்குல் செய்வது தகாது. ஆனால் அக்குடும்பம் பசியைப் பொறுக்கச் சக்தியுள்ளதாயிருந்து தவக்குல்செய்ய அவனுக்குச் சம்மதம் கொடுக்கிற பக்ஷத்தில் அப்போது அவன் தொழிலை விட்டுவிடுவது ஆகும். இதில் வித்தியாசம் என்னவென்றால், அவன் தனது நபுசைப் பலாட்டியஞ்செய்து பசியாயிருக்க வைக்கலாம். குடும்பத்தை அப்படி வைப்பது ஆகாது. இதற்குமேல் வித்தியாசம் ஒன்றுமில்லை. ஒருவனுக்கு ஈமான் நிறப்பமாயிருந்து தகுவாவுடன் அமல்செய்வதில் பராக்காவானாகில் அவன் தொழில் செய்யாமற்போனாலும் அவனுடைய இரணத்துக்குரிய சாதனங்கள் தயார் செய்யப்பட்டு வெளியாகும். எதுபோலெனில், சிசுவானது தாய்வயிற்றி லிருக்கும்போது தொழில்செய்ய இயலாததா யிருந்ததினால் அதன் இரணத்தை உந்திவழியாக அதற்குச் செலுத்துகிறான். கர்ப்பத்தைவிட்டு வெளியே வந்தபிறகு தாயின் மார்பிலிருந்து இரணம்செலுத்துகிறான். வேறு உணவுகளைப் புசிக்கச் சக்தி வந்தபோது தருணத்தில் பல்லை முளைப்பிக்கின்றான். தாயும் தகப்பனும் இறந்துபோய் பிள்ளை எதீமாயிருந்தால் அதை நல்லவிதமாக வைத்துக்கொள்வதில் தாய்க்கு எப்படி அன்பைக் கொடுத்திருந்தானோ அப்படியே மற்றவருக்கும் அதன்மேல் இரக்கத்தைக் கொடுக்கிறான். அப்போது எதீமாகிய அந்த அநாதப்பிள்ளையின்மேல் ஜனங்களுடைய மனதில் கிருபைஉண்டாகின்றது. இதற்குமுன் அந்தப் பிள்ளையின்மீது தாய் ஒருத்தியே இரக்கமுள்ளவளாயிருந்தாள். மற்றவர் அவள் பொறுப்பிலேயே அந்தப்பிள்ளையை விட்டுவிட்டார்கள். தாய் இறந்தபின் அந்தப்பிள்ளைக்குக் கிருபைசெய்யும்படி ஆயிரம்பேரை எழும்பி நிற்கச்செய்தான். அவன் வளர்ந்து பெரியவனானபோது அவனுக்குத் தொழில்செய்யும் சக்தியைக் கொடுத்தான். அதற்குரிய தகுதியாகிய யோக்கியதையை அவன்மீது சாட்டினான். ஏனெனில், தாயானவள் தனது அன்பினால் அவனைச் சம்ரக்ஷித்ததுபோல் அவன் அந்தத்தகுதியைக்கொண்டு தன்னில்வைத்திருக்கும் அன்பினால் தன்னைச்சம்ரக்ஷித்துக்கொள்ளவேயாம். அந்தத் தகுதி அவனிடத்திலிருந்துநீக்கப்பட்டால் அப்போதவன் தொழிலை விட்டும் எதீமாய்ப் போவான். பின்பு அவன் தகுவாவின்பேரில் அமல்செய்தானாகில் எல்லாருடைய இருதயங்களிலும் அவன்மீது

அன்பை நிறைந்துவிடுவான். அப்போது எல்லாரும் இந்த மனிதன் அல்லாகு தஆலாஉடைய இபாதத்தில் பாராக்காயிருக்கிறான் என்றும், இவனுக்கு அதிக நல்லதும் அதிக நேர்த்தியுள்ளதுமாயிருக்கிற பண்டங்களைக் கொடுக்கவேண்டுமென்றும் சொல்லுவார்கள். இதற்குமுன் இவன் தானே தன்னை சம்ரக்ஷித்துக்கொள்ளுகிறவனாயிருந்தான். இப்போது எதீமான பிள்ளையின்மேல் எல்லாரும் கிருபைசெய்வதுபோல் இவன்மேல் எல்லாரும் கிருபை செய்கிறார்கள். ஆனால் அவன் தொழில்செய்யச் சக்தியுள்ளவனாயும் வீண்காலம் போக்குகிறவனாயும் இருப்பானாகில் ஜனங்களுடைய இருதயங்களில் அவன்மேல் இந்த இரக்கம் உண்டாகாது. அவன் தவக்குல் செய்து தொழிலை விட்டுவிடுவது கூடாது. ஏனெனில், அவன் தன் நபுசுடன் பாராக்காயிருப்பதினால் அவனே தன்னை சம்ரக்ஷித்துக்கொள்ளவேண்டியவனாயிருக்கிறான். பின்பு அவன் ஹக்கு தஆலாவின்பக்கம் முகம் நோக்குவானாகில் தன்னைக்கொண்டு எதிமாகிறான். ஆகவே பிறகு ஹக்கு தஆலா ஜனங்களுடைய மனங்களை அவன்மேல் கிருபையாகும்படி செய்கிறான். இதனாலேதான் தருவாவுடனிருந்த எந்த மனிதனும் பசியால் மவுத்தாய்ப்போனதாக எவரும்எப்போதும்கண்டதில்லை. பின்பு இராச்சிய பரிபாலனஞ்செய்கின்ற நாயகன் பூலோக வானலோகங்களின் காரியங்களை எப்படி ஏற்படுத்தியிருக்கிறான்? எப்படி நிறைவாக அமைத்திருக்கிறான்? என்ற இந்த உறுதியான ஏற்பாட்டை ஒருவன் நோட்டமிடுவானாகில் ஊறும் பிராணிகளில்நின்றும் எதன் இரணமும் அல்லாவின் பொருப்பிலிருந்தேயொழிய உலகத்தில் ஒரு பிராணியுமில்லை என்ற இந்த ஆயத்து அவசியம் அவன் ஞாபகத்தில் வரும். ஒருவரும் பசியால் இறந்துபோகாதவண்ணம் உலக காரியத்தை அல்லாகு தஆலா அழகாக ஏற்படுத்தியிருக்கிறான் என்றும், அரிதாக எங்கேனும் ஒருவன் பசியால் மாண்டுபோனாலும் அதில் அவனுக்கு நன்மையிருந்ததினால் அப்படி ஆயிருக்குமென்றும் அவன் தொழில் செய்யாததினால் அல்ல என்றும் உணர்ந்துகொள்ளுவான். ஏனெனில், அதிகமாகப் பொருளைச் சம்பாதித்து வைத்துக்கொண்டிருப்பவனும் சில சமயம் பசியால் மாண்டுபோகும் சம்பவம் அரிதாக நேர்வதுண்டு. முஷாஹதா என்னும் பிரத்தியக்ஷ காட்சியில் இந்த நிலைமையைக் கண்ட அசன்பசரி றஹிமஹுல்லா அவர்கள் "பசராவிலுள்ளவர்களெல்லாம் என் குடும்பமாயிருக்கவும் ஒரு கோதுமை அரிசியின் விலை ஒரு தீனாராய்ப் போகவும் நான் விரும்புகிறேன்" என்று

சொல்லியிருக்கிறார்கள். இன்னும் வஹபுப்னுல் வர்து றஹிமஹு ல்லா அவர்கள் "வானம் இரும்பாயும் பூமி ஈகுவாயும் போனபோதிலும் என் இரணவிஷயத்தில் எனக்கு ஏதும் கவலையிருக்கக் காண்பேனு கில் நான் முஷ்ரிகாய் விடுவதைப்பற்றிப் பயப்படுகிறேன்" என்று சொல்லுகிறார்கள். அல்லாகு தஆலா இரணத்தை வானத்தின்பக் கம் சாட்டினது இரணத்தின்மேல் எவர்க்கும் சக்தியில்லையென் பதை ஜனங்கள் அறிவதற்கேயாம். சிலஜனங்கள் ஜுனைது றஹி மஹுல்லா அவர்களிடம் போய் "நாங்கள் இரணத்தைத் தேடு கிறோம்" என்று சொல்ல "இரணம் இருக்கிற இடம் உங்களுக்குத் தெரிந்தால் தேடுங்கள்" என்றார்கள். "நாங்கள் அல்லாகு தஆலாவினி டம் கேட்போம்" என்க, "அல்லாகு தஆலா உங்களை மறந்துபோயி ருக்கிறானென்று உங்களுக்குத் தெரிந்தால் அவனுக்கு நினைப்புண்டாக் குங்கள்" என்றார்கள். "நாங்கள் அல்லாகு தஆலாவின்மீது தவக்குல் வைத்து என்ன ஆகிறதென்றுபார்ப்போம்" என்க, "சோதித்துப்பார்க்கத் தவக்குல் வைப்பது சந்தேகமென்றாகும்" என்றார்கள். அதற் கவர்கள் "பின்பு என்ன தந்திரம் செய்கிறது?" என்று கேட்க, "தந் திரத்தைவிட்டுவிடுவதே தந்திரம்" என்றார்கள். ஆதலால் இரணத்தில் அவன் பிணையே போதுமாயிருக்கிறது. எவனுக்கு இரணம் அவசிய மோ அவன் அல்லாகு தஆலாவின் பக்கத்திலேயே முகம் நோக்க வேண்டும்.

இரண்டாவது மகாம்-தவக்குலில் வைப்பொருளைக் காப்பதும் பின்னுக்கு வேண்டுமெனத் தங்கரித்துக்கொள்வதுமாம்.

அறிந்துகொள்:—எவனொருவன் தனக்கு ஒரு வருஷத்துக்கு வேண்டியவைகளைச் சேகரித்துக்கொள்ளுகிறானோ அவன் தவக்குலு டைய தானத்தைவிட்டும் விழுந்துபோவான். ஏனெனில் மறைவான காரணங்களைவிட்டு வருஷப்பிரதிவருஷம் மடக்கிவருகிற வெளிப் படையான காரணங்களின்பேரில் அவன் ஆதரவு வைத்ததினாலே ன்க. இனி எவனொருவன் அவசியத்தின்போது தன் பசியைத் தீர்க் கக்கூடிய உணவின்பேரிலும் தன்னை மறைக்கக்கூடிய உடையின் பேரிலும் போதுமாக்கிக்கொண்டானோ அவன் தவக்குலை நிறை வேற்றினவனாவான். ஆனால் நாற்பது நாளைக்குப் போதுமானவை களைச் சேகரித்துக் கொள்ளுவானாகில் அவன் தவக்குல் கெடாது என்றும், அதற்குமேல் அதிகமாகச் சேகரித்துக் கொள்ளுவானாகில் கெடும் என்றும் இப்ராஹீமுல் கவாஸ் றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் "சேர்த்து வைத்தல் எவ்வளவாயிருக்

கிறதோ அவ்வளவாகத் தவக்குல் கெடும்" என்று ஸஹல் துஸ்தரீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் "சேர்த்துவைத்திருக்கும் பொருளின் மேல் ஆதரவில்லாத பக்ஷத்தில் நாற்பது நாட்களின் செலவுக்குமேல் அதிகமாயிருந்தாலும் தவக்குல் கெடாது" என்று அபூதாலிபில்மக்கீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். ஹுஸைனுல் மகாஸிலி அவர்கள் பிஷ்ருல்ஹாபி றஹிமஹுல்லா அவர்களுடைய முரீதுகளில் ஒருவராயிருந்தார்கள். அவர்கள் சொல்லுகிறதாவது:—"ஒருநாள் பிஷ்ருல் ஹாபி றஹிமஹுல்லா அவர்களிடம் ஒருவர் வந்தார். அவர் வாலிபருமல்லாமல் விருத்தாப்பியருமல்லாமல் நடுத்தரமான வயதையுடையவராயிருந்தார். பிஷ்ருல்ஹாபி றஹிமஹுல்லா அவர்கள் ஒருபிடி வெள்ளிநாணயத்தை என்னிடம் கொடுத்து, "இதற்கு மிகவும் இனியதும் அதிக நல்லதுமான உணவுகளை வாங்கிக்கொண்டுவா" என்றார்கள். இப்படியாக ஒருபோதும் அவர்கள் சொல்ல நான் கேட்டதில்லை. நான்போய் அப்படியே உணவுகளை வாங்கிக்கொண்டு வந்தேன். அவர்கள் வந்தவரோடிருந்து உணவருந்தினார்கள். அப்படியவர்கள் எவரோடுமிருந்து உணவருந்தினதை நான் ஒருபோதும் கண்டதில்லை. உண்டு முடிந்தபிறகு உணவு அதிகமாக மிச்சப்பட்டிருந்தது. மிச்சப்பட்டிருந்த அந்த உணவையெல்லாம் வந்தவர் எடுத்துக்கொண்டு போய்விட்டார். உத்திரவில்லாமல் அவர் எடுத்துக்கொண்டு போனதைப்பற்றி எனக்கு ஆச்சரியமாயிருந்தது. பிஷ்ருல்ஹாபி றஹிமஹுல்லா அவர்கள் என்னை நோக்கி "நீ ஆச்சரியப்படுகிறாயோ" என்றார்கள். நான் "ஆம்" என்றேன். அப்போதவர்கள்; இங்குவந்து போனவர்கள் பத்ஹுல்மவுஸிலீயாயிருக்கிறார்கள். அவர்கள் என்னைக் கண்டுகொள்வதற்காக இன்று மவுஸில் என்கிற ஊரில் இருந்து வந்தார்கள், மிச்சப்பட்டிருந்த உணவை அவர்கள் எடுத்துக்கொண்டுபோனது எதற்கெனில், தவக்குல் நேராய்விட்டால் தங்கரிப்பு நஷ்டத்தை யுண்டாக்காது என்பதை நமக்குப் படித்துக் கொடுப்பதற்கே என்று சொன்னார்கள்" என்பதே. பின்னர் நெடுநாள் ஜீவித்திருப்போம் என்கிற எண்ணத்தைச் சுருக்குவதே எதார்த்தத்தில் தவக்குலுக்கு அடிவேராயிருக்கிறது. இதற்கு விதியாவது:—தனக்காக யாதொன்றைத் தங்கரித்துக் கொள்ளாமலிருப்பதாம். அப்படித் தங்கரித்துக்கொண்டால் அதை அல்லாகு தஆலாவுடைய கஜானாவில் இருப்பதாகவும் (தன்னிடத்திலிருக்கிறதென்று) அதன்மேல் ஆதரவு வைக்காமலும் இருப்பானாகில் அவன் தவக்குல் கெடாது. இதுவரையில் நாம் சொன்னது தனியாயிருப்பவனுடைய தவக்குலின் விதியாயிருக்கிறது.

இனி குடும்பஸ்தனு யிருப்பவன் ஒரு வருஷத்துக்காகத் தங்கரித்துக் கொள்வானுகில் அவன் தவக்குல்கெடாது. ஆனால், ஒரு வருஷத்தினும் அதிகத்துக்காகத் தங்கரித்துக் கொள்வானுகில் தவக்குல் கெடும். ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் குடும்பத்தின் இருதயபலம் குன்றியிருந்த நிமித்தம் அவர்களுக்காக ஒரு வருஷத்து உணவைத் தங்கரித்து வைப்பவர்களா யிருந்தார்கள். தங்கள் சொந்தத்துக்காக ஒருநாள் உணவையும் தங்கரித்துக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் அப்படித் தங்கரித்துக் கொண்டாலும் அவர்கள் தவக்குலுக்கு யாதொருதோஷமும் அணுகாது. ஏனெனில் அது அவர்கள் வசத்திலிருந்தாலும் பிறர்வசத்தி லிருந்தாலும் இரண்டும் சமமெனக் காண்பவர்களாயிருந்தார்கள். ஆனால் ஜனங்களுடைய கேவலதரத்தின்படி அவர்களுக்கு அதைக்கற்பித்தார்கள். இன்னும் சபா என்கிற சத்திரத்திலிருந்த அஸ்ஹாபுகளில் ஒருவர்மவுத்தாய்ப்போனதாகவும் அவருடைய அங்கவஸ்திரத்தில் இரண்டு தீனர் இருந்ததாகவும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அதைக் கண்டு இது இரண்டு சூடாயிருந்தது என்றுசொன்னதாகவும் ஹதீசில் வந்திருக்கிறது. சூடாயிருந்ததுஎன்றது இருவித அர்த்தத்துக்குஇடங் கொடுக்கிறது ஒருவிதம்:—அவர் துன்யாவை ஆசித்தவரா யிருந்து அதை வெளியிடாமல் கள்ளத்தனமாக வெறுத்தவர்போல் காட்டியிருப்பாராகில் அந்த இரண்டு தீனரும் அவரை வேதனைப்படுத்துகிற வழியால் இரண்டு நெருப்புச்சூடாகும் என்பதாம். மற்றொருவிதம்:—அவர் கள்ளத்தனமாயிராமல் பின்னுக்கு வேண்டுமென்று தங்கரித்துக்கொண்டவராயிருந்தால் முகத்தில் சூட்டுவடுக்கள் எப்படி அழகைக் குறைக்கின்றதோ அப்படியே அந்த இரண்டு தீனரும் அவ்வுலகத்தில் அவருடையபதவியைக் குறைத்துவிடுமென்பதாம். எதுபோலெனில், வேறொரு பகீர் மவுத்தானபோது ரசூல் சல்லல்லாகுஅலைகிவசல்லமவர்கள் திருவுளமானது போலென்க. அதாவது:—“இவர் கியாமத்துநாளில் வரும்போது இவர்முகம் பூரணச்சந்திரன்போலிருக்கும். ஆனால் இவர் குளிர்காலத்து உடையை மறுவருஷம் குளிர்காலம் வரையில் வேனிற்காலத்து உடையை மறுவருஷம் வேனிற்காலம் வரையில் வைத்துக் கொள்ளுகிறவராயிருந்தார். இந்த ஒரு குணம் இவரில் இல்லாதிருக்கிறபக்ஷம் இவர்முகம் சூரியனுக்கு ஒப்பாயிருக்கும்” என்று திருவுளமானார்கள். இன்னும் “உங்களுக்கு மிகவும் கொஞ்சமாகக் கொடுக்கப்பட்டிருப்பது எகீனும் சபுருமேதவிர வேறொன்றல்ல” என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இதன்கருத்து:—

உடையைக் காப்பாற்றி வைத்துக்கொள்வது எகீன் குறைச்சலினால் உண்டாவதாம். ஆனால் கூசா, சுபுரா, பானை, கலயம் இப்படி எப்போதும் வேலைக்கு உபயோகப்படுகிற சாமான்களைத் தங்கரித்து வைத்துக்கொள்ளலாமென்பதில் எவருக்கும் ஆக்ஷேபமில்லை. ஏனெனில் அல்லாகு தஆலாஉடைய வழக்கம் எவ்வாறு நடந்துவருகிறதென்றால் ஒருவிதத்தில் வருஷப்பிரதிவருஷம் ஊணும் உடையும் உற்பத்தியாவதாயிருக்கிறது. சாமான்சட்டுகள் அப்போதைக்கப்போது கிடைக்காது. அல்லாகு தஆலா நடத்திவரும் வழக்கத்துக்கு விரோதம்செய்வது கூடாது. ஆனால் கோடைகாலத்து உடை குளிர்காலத்துக்கு உபயோகப் படாதாகையால் அதைக் காப்பாற்றி வைப்பது எகீன் குறைச்சலினாலேயாம்.

பசல்: அறிந்துகோள்:—ஒருவன் ஏதும் தங்கரித்துவைத்துக் கொள்ளாதபக்ஷம் அவன்மனம் அமைதியடையாமல் அலைவதாயும் ஜனங்களில் ஆதரவு வைப்பதாயும் இருந்தால் அவன் தங்கரித்துக் கொள்வது மிகவும் உத்தமம். மேலும் அவனுக்குப் போதுமான உணவை அடையக்கூடிய ஒருநிலம் இருந்தாலேயன்றி மற்றப்படி அவன் மனம் அமைதியடையாததாயும் அல்லாகு தஆலாஉடைய திகுரு பிகுருகளில் பராக்காகக்கூடாததாயும் இருக்கிறபக்ஷம் அவன் அவசியத்தின் அளவாகக் கொஞ்சம் நிலம் வைத்துக் கொள்வது மிக மேலேயாம். ஏனெனில் இவையெல்லாவற்றினாலும் கருதியநோக்கம் மனமானது அல்லாகு தஆலாஉடைய திகுரில் ஆழவேண்டுமென்பதுதான். இன்னும் சிலமனம் எப்படியிருக்கிறதென்றால் பொருளிருப்பது அதைபபராக்கில் ஆக்கிவிடுவதாயும் இல்லாமை யென்னும் எழிமையில் அது அமைதி அடைவதாயுமிருக்கிறது. இது மிகவும் சிறந்தமனமாம். இன்னும்சிலமனம் அவசியத்தின் அளவாகக் கொஞ்சம் பொருளில்லாமற்போனால் அமைதியடையாது. இவனுக்குக்கொஞ்சம் நிலம் இருப்பது மிகவும் உத்தமம். ஆனால் ஒருவனுக்கு அதிக பொருளும் அதிகாரப்பெருமையும் இருந்தால் மாத்திரமேயன்றி மற்றப்படி அவன் மனம் அமைதி யடையாததாயிருந்தால் இந்த மனம் தீனவர்களின் மனங்களைச் சேர்ந்ததல்லவாதலால் இது கணக்கில் சேராது.

### மூன்றாவது மகாம்-இம்சையை நிவர்த்திப்பதில் அதன் காரணங்களை அறிவது.

அறிந்துகோள்:—அகத்தியம் வேண்டியதாய் அல்லது பெரும்பான்மையில் வேண்டியதாய் இருக்கிற ஒவ்வொரு காரணத்தையும்

விட்டுவிடுவது தவக்குலுக்கு ஷரத்தல்ல. மேலும் தவக்குல் செய்பவன் தன் சாமான்களைக் கள்ளன் திருடிக்கொள்ளாதபடி வீட்டுக் கதவை அடைத்துப் பூட்டிக்கொள்வானாயின் அவன் தவக்குல் கெடாது. இதேபோல் பகைவனால்வரும் இம்சையை நிவர்த்திப்பதற்கு ஆயுதம் வைத்துக்கொள்வானாயின் தவக்குல் கெடாது. இன்னுமிதே போல் வழியில் நேர்கின்ற குளிரின் இம்சையை நிவர்த்திப்பதற்காக ஜுப்பா வைத்துக்கொள்வானாகில் தவக்குல்கெடாது. ஆனால் ஒருவன் உதாரணமாக:—தன்தேகத்தில் அனல் அதிகரிப்பதற்கும் குளிரின் குணம் குறைவதற்கும் வெள்ளைப்பூண்டைத் தின்பானாகில் இப்படிப்பட்ட மறைவான நுண்ணிய காரணங்கள் சூடுபோடலும் தம்விசு கட்டலும்போல் தவக்குலுக்குக் குறைச்சலை உண்டாக்கும். ஆயினும் வெளிப்படையான காரணங்களை விட்டுவிடுவது ஷரத்தல்ல. ஒருநாட்டறபி றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களிடம் வந்த போது "நீ உன் ஒட்டகத்தை என்னசெய்தாய்?" என்றுகேட்டார்கள். அதற்கவர் "நான் அதை வெளியேவிட்டு அல்லாவின்மேல் தவக்குல் வைத்துக்கொண்டேன்" என்றார். அப்போது நாயகமவர்கள் "நீ அதைக் கட்டிவிட்டு அல்லாவின்மேல் தவக்குல்வை" என்று ஆக்கியாபித்தார்கள். ஒருமனிதனால் யாதொரு இம்சை நேர்ந்தால் அதைச் சகித்துக் கொள்வதும் அதை நிவர்த்திக்காம லிருப்பதும் தவக்குலில் சேர்ந்ததேயாம். அல்லாகுதஆலா அருளிச்செய்ததுபோல் அதுவருமாறு:— அவர்களால் நேர்ந்த இம்சையை விட்டுவிடு. அல்லாவின்மேல் தவக்குல் வை என்றும், நீங்கள் நம்மை இம்சித்ததற்குத் திடனாக நாம் சபுரு செய்துகொண்டோம். பின்னர் தவக்குல்செய்பவர்கள் அல்லாவின்மேல் தவக்குல் வைக்கக்கடவர் என்றும் திருவுளமாயிருக்கிறான். ஆனால் பாம்பு, தேள், புலி, கரடி முதலியவைகளால் நேரும் இம்சையைச் சகிப்பது தகுதியல்ல. அதை நிவர்த்திக்கவேண்டும். பின்னர் பகைவனால் நேரும் இம்சையை நிவர்த்திப்பதற்காக ஆயுதம் வைத்துக் கொள்பவன் அந்த ஆயுதபலத்தின்மேல் ஆதரவு வைக்காமல் அல்லாகுதஆலாவின்மேல் ஆதரவுவைப்பதினால் முதவக்கிலாவான். வீட்டைப் பூட்டுகிறவன் அந்தப் பூட்டின்மேல் ஆதரவு வைக்கான். ஏனெனில் கள்ளனுக்குத் தடையாயிராத பூட்டுகள் அநந்தமுண்டு. வீட்டைப் பூட்டிப் போனவன் பின்பு வந்து பார்க்கும்போது சாமான் களவுபோயிருந்தால் அவன் அல்லாகு தஆலாவுடைய கற்பனைக்குப் பொருத்தமா யிருப்பதும் வருத்தப்படாம லிருப்பதும் தவக்குலுக்கு அடையாளமாம். மேலும் அவன் வெளியே போம்போது தன்

நிலைமை என்னும் நாவினால் "என் ஆண்டவனே! நான் உன் கற்பனையைத்தடுப்பதற்காக வீட்டைப்பூட்டவில்லை" என்றும், "உன் சுன்னத்தான வழக்கத்துக்கு உடன்பட்டு நடக்கிறேன்" என்றும், "இந்தப் பொருளை நீ வேறொருத்தருக்கு இரணமாகப்படைத்து என்னிடம் இரவலாகவைத்திருக்கிறாயோ அல்லது எனக்குஇரணமாகப்படைத்திருக்கிறாயோ? இது எனக்குத் தெரியாதாதலால் நீ இந்தப்பொருளின்மேல் எவரையும் ஏவினால் நான் உன் கற்பனைக்குப் பொருந்தமாயிருக்கிறேன்" என்றும்சொல்லவேண்டும். ஆகவே வீட்டுக்கதவைப் பூட்டிவிட்டுப் போனவன் பின்பு வந்து சாமான்கள் களவுபோயிருப்பதைக் கண்டு வருத்தப்படுவானாகில் அவன் தவக்குல் சரியல்லவென்பதையும் அதைத் தவக்குலாக நினைத்தது அவனுடைய நப்ஸின் ஏமாற்றலாயிருந்த தென்பதையும் அவன் தெரிந்துகொள்வதே அந்தக்களவின் பயனாயிருக்கிறது. ஆனால் அவன் அதைப்பற்றி முறையிடாமல் வாய்பொத்திக்கொள்வானாகில் சபுருடைய பதவியையாவது பெற்றுக்கொண்டான். முறையிடத்தொடங்கிக் கள்ளனைத்தேடுவதில் முழுமுயற்சி செய்வானாகில் சபுருடைய பதவியையும்விட்டு வீழ்ந்துபோனான். இதனால் அவன் சபுருள்ளவர்களிலும் சேர்ந்தவனல்ல என்றும் தவக்குல் செய்பவர்களிலும் சேர்ந்தவனல்ல என்றும் உணர்ந்து கொள்ளுகிறானாதலால் இனி அந்தத்தானங்கள் தனக்குண்டென்று பிரஸ்தாபிப்பதையாவது ஒருமூலையில் ஒதுக்கிவைப்பான். இந்த உணர்வே அவனுக்குக் கள்ளனால் ஏற்பட்ட பெரியலாபமாயிருக்கிறது.

சுவால்:—அவன் அந்தப் பொருளின் தேவையில்லாதவனாயிருந்தால் கதவைப் பூட்டி அதைப் பதனப்படுத்தமாட்டான் என்றும், தேவைக்காகப் பதனப்படுத்தி வைத்திருந்த பொருளைக் கள்ளன் கொண்டுபோய்விட்டால் அவன் வருத்தப்படாமலிருக்க எப்படி சாத்தியப்படும்? என்றும யாராவது கேட்கிறபக்ஷம் அதற்கு

ஜவாபாவது:—அல்லாகு தஆலா அவனுக்குக் கொடுத்திருந்த அந்தப்பொருள அவனிடத்திலிருந்ததில் அவனுக்கு நன்மையிருக்கிறதென்றும் அதை அவனுக்குக் கொடுத்திருந்ததே அந்த நன்மைக்கு அடையாளம் என்றும் இப்போது அந்தப் பொருள் அவனிடத்தில் இல்லாமற்போவதில் அவனுக்கு நன்மையிருக்கிற தென்றும் அதைத் திரும்ப எடுத்துக்கொண்டதே அந்த நன்மைக்கு அடையாளம் என்றும் அவன் எண்ணுவதினால் வருத்தப்படாமலிருக்கச் சாத்தியப்படும். ஆகவே இரண்டு நிலைமைகளிலும் தனக்கு நன்மை

யிருப்பதைக்கொண்டு அவன் சந்தோஷிப்பான். இன்னுமவனுக்கு நன்மையாயிருப்பதையன்றி அவன் விஷயத்தில் அல்லாகு தஆலா வேறொன்றையும் செய்யான் என்று ஈமான் கொள்வான். இவனோ தனது நன்மையை அறியமாட்டான். அல்லாகு தஆலா இவனது நன்மையை நன்றாய் அறிவான். உதாரணமாக:—அன்பு நிறைந்த வயித்தியனாகிய தகப்பனையுடைய ஒரு நோயாளிக்கு அந்தத் தகப்பன் சோற்றையும் இறைச்சியையும் கொடுப்பானாகில் அப்போதந்த நோயாளியான மகன் சந்தோஷப்பட்டு என் தகப்பன் என்னில் சவுக்கியத்தின் குறியைக் காணாமற்போனால் இதைக்கொடுக்கமாட்டான் என்று சொல்லுவான். இறைச்சி கொடுக்காமல் நிறுத்திக்கொண்டால் அப்போதும் அவன் சந்தோஷப்பட்டு இறைச்சி கொடுப்பதில் கெடுதியிருக்கிறதென்று என் தகப்பன் அறிந்ததினாலேயே அதை நிறுத்திக்கொண்டான் என்று சொல்லுவான். இந்தவிதமாக ஈமான் இல்லாத வரையில் தவக்குல் நேர்பட்டு வராததுந்தவிர அந்தத் தவக்குல் ஆதாரமில்லாத வெறும் பேச்சாகும்.

### பொருளைக் கள்ளன் கொண்டுபோய்விட்டால் தவக்குல் செய்பவன் அநுஷ்டிக்கவேண்டிய அதபுகள்.

அறிந்துகொள்:—பொருள் களவு போய்விட்டால் முதவக்கிலாயிருப்பவன் ஆறு அதபுகளைக் கவனிக்கவேண்டும். முதலாவது:—அவன் கதவை அடைத்தபோதிலும் அதில் கடினம் செய்யாமலும் அதிகப் பூட்டுகளைப் பூட்டாமலும் அண்டை வீட்டுக்காரரைக் காவலாகப் பார்க்கும்படி சொல்லாமலும் இருப்பதாம். ஆனால் இலேசான வழியை எடுத்துக்கொள்வான். மாலிகுபுனு தீனார் றஹிமஹுல்லா அவர்கள் கதவில் ஒருநூலைக் கட்டுகிறவர்களாயும், "நாயின் பயமில்லாமற்போனால் நூலாலும் கட்டமாட்டேன்" என்றுசொல்லுகிறவர்களாயுமிருந்தார்கள். இரண்டாவது:—எதை அருமையான பொருளென்றும் கள்ளன் அதில் ஆசைவைப்பான் என்றும் அறிகின்றானோ அதை வீட்டில் வைக்காமலிருப்பதாம். ஏனெனில், கள்ளனுக்குப் பாவத்தில் ஆசையை எழுப்ப அது ஒரு காரணமாயிருப்பதினாலென்க. முகைரா என்பவர் மாலிகுபுனுதீனார் றஹிமஹுல்லா அவர்களுக்கு ஜக்காத்துப்பொருள் அனுப்பினார். அவர்கள் அதை வாங்கி வைத்திருந்து பின்பு "கள்ளன்கொண்டுபோய்விடுவான் என்று ஷைதான் என்மனதில் வஸ்வாஸைப் போடுகிறானாதலால் நீ இதைத் திரும்ப வாங்கிக்கொள்" என்று அதை முகைராவுக்கே அனுப்பிவிட்டார்கள். அவர்களுக்கு வஸ்வாஸ் உண்டாவதையும் கள்ளன் பாவத்தில்

விழுவதையும் அவர்கள் பிரியப்படவில்லை. இந்தச் சங்கதியை அபூ சுலைமான் தாரானி றஹிமஹுல்லா அவர்கள் கேள்விப்பட்டபோது "இது சூபிகளுடைய மனதின் கேவலத்தன்மையில் உள்ளதென்றும், அவர் துன்யாவை வெறுத்தவரா யிருக்கும்போது அதைக் கள்ளன் கொண்டுபோய்விட்டால் அதனால் அவருக்கு என்ன?" என்று சொன்னார்கள். இது பூரண நோட்டமாயிருக்கிறது. மூன்றாவது:—அவன் வெளியே புறப்படும்போது நிய்யத்துசெய்வதாம். அதெப்படியெனில், இப்பொருளைக் கள்ளன் கொண்டுபோய்விட்டால் இது அவனுக்கு ஹலாலாயிருக்கட்டும். ஏனெனில் கள்ளன் ஏழையாயிருந்தால் அவன் வேண்டுதல்கள் இதனால் நிறைவேறக்கூடும். இந்தக்களவினால் அவன் சீமானாய்ப்போகிறபக்ஷம் இனி மற்றொருவருடைய பொருளை அவன் திருடாமலிருக்கக்கூடும். அப்போது இந்தப்பொருள் மற்றொருமுஸ்லிமுடைய பொருளுக்குக் குருபானியாகும். இப்படி நிய்யத்து செய்வானாகில் இதான கள்ளன்மீதும் மற்ற முஸ்லிம்கள்மீதும் பெரிய ஓர் கிருபையாகும். இன்னும் இந்த நிய்யத்தினால் அல்லாகு தஆலா விதித்தவிதி மாறமாட்டாது என்றும், ஆனால் அவனுக்கு ஒரு திருஹத்துக்குப் பகரத்தில் எழுநூறு திருஹம் சதகாகொடுத்த சவாபு கிடைக்கும் என்றும், அதைக் கள்ளன் திருடிக்கொண்டாலும் திருடாமற்போனாலும் அவன் தன் நிய்யத்துக்கு சவாபை அடைவான் என்றும் அவன் அறியவேண்டும். உதாரணமாக:—ஒருவன் தன் பெண்ஜாதியைச் சேர்வதில் அஸ்லு செய்யாமல் விந்துவை உள்ளே இறக்குவானாகில் பிள்ளை தரித்தாலும் தரிக்காவிட்டாலும் அவனுக்கு அல்லாவுடைய பாதையில் யுத்தம்செய்து ஷஹீதாய்ப்போன ஒரு பிள்ளையின் சவாபு எழுதப்படும் என்று ஹதீசில் வந்திருக்கிறது. இப்படி ஏன் எழுதப்படுகிறதென்றால் அவன் தான் செய்யவேண்டியதைச் செய்ததினாலென்க. இனி, பிள்ளை தரித்தால் அதை உருப்படுத்துவதும் உயிர்கொடுப்பதும் அவனால் ஆவதல்ல, அவனுக்கு சவாபு கொடுப்பதும் அதாபு செய்வதும் அவன் செயலைப்பற்றியேயாம். நாலாவது:—துக்கப்படாமலிருப்பதும், அதைக் கள்ளன் கொண்டுபோய்விட்டதில் தனக்கு நன்மையிருக்கிறதென்று எண்ணுவதுமாம். அதை அல்லாவுடைய பாதையில் ஆக்கிவிட்டேன் என்று சொல்லியிருப்பானாகில் பின்பு அதைத்தேடமாட்டான், திரும்பக்கொடுத்தால் வாங்கமாட்டான். அப்படி வாங்கிக்கொண்டாலும் அது அவன் சுயாதீனமேயாம். நிய்யத்து செய்ததினாலேயே அது அவன் சுயாதீனத்தைவிட்டு நீங்காது. என்கிலும், அவனுடைய தவக்குலின்

தானம் புகழத்தக்கதானமாகாது. இபுனு உமர்றலியல்லாகுஅன்ஹு அவர்களுடைய ஒரு ஒட்டகையைத் திருடர் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். அவர்கள அதைத் தேடிப்பார்த்துக் கடைசியாக பீசபீலில்லாஹி (அல்லாவுடைய பாதையில் ஆக்கினேன்) என்று சொல்லிவிட்டுப் பள்ளிவாசலில் வந்து தொழுதுகொண்டார்கள். அப்போது ஒருவர் வந்து ஒட்டகம் இன்ன இடத்தில் இருக்கிறது என்று சொன்னார். இதைக்கேட்டு அவர்கள் அதைத் தேடிப்போகக் கருதி காலைப்பாதரட்சையில் மாட்டினார்கள். பின்பு அஸ்தகுபிருல்லா என்றுசொல்லி உட்கார்ந்துகொண்டதுந் தவிர "நான் அதை அல்லாவுடைய பாதையில் ஆக்கினேன் என்று சொல்லியிருந்தேன். ஆதலால் இனி அதைத்தேடித்திரியேன்" என்றார்கள். மஷாயிகுகளில்ஒருவர் சொல்லுகிறதாவது:—"நான் என் சொப்பனத்தில் ஒரு சினேகரைச் சுவர்க்கத்தில் கண்டேன். ஆனால் அவர் விசனமுற்றவராயிருந்தார். "நீர் என் விசனமுற்றிருக்கிறீர்?" என்றுகேட்டேன். அதற்கவர் சொன்னதாவது:—"இந்தவிசனம் கியாமத்துவரையில் என்னைவிட்டு நீங்காது. ஏனெனில் இல்லிய்யீன் என்ற சொர்க்கத்தில்உன்னதமான மாளிகைகள் எனக்குக்காண்பிக்கப்பட்டன. அவைகளுக்கு ஒப்பான மாளிகைகள் எந்தச் சுவர்க்கத்திலும் இருந்ததில்லை. அதனால் நான் சந்தோஷப்பட்டுஅவைகளிடம்நெருங்க நாடினபோது "இவனை அப்பாலே தள்ளுங்கள், எவன்தன்வழியைநடத்தியிருந்தானோ அவனுக்கே இந்தமாளிகைகள் உரித்தானவை" என்று ஒருசப்தம் வந்தது. அப்போது நான் "வழியை நடத்தல் என்பது என்ன?" என்று கேட்டேன். அதற்கு ஜவாபாக "நீ இன்ன வஸ்துவை அல்லாவுடைய பாதையில் ஆக்கினேன் என்றுசொல்லிப் பின்பு அதன்படி நிறைவேற்றவில்லை. அப்படி நிறைவேற்றியிருந்தாயாகில் இவைகளையும் உனக்குப் பூராவாகக் கொடுத்திருப்பான்" என்று சொல்லப்பட்டது" என்பதே. இன்னும் மக்காவில் ஒருவன் நித்திரையிலிருந்து விழித்தெழுந்தபோது தன்னிடத்திலிருந்த பணப்பையைக் காணாமையினால் அங்கிருந்த ஒரு பெரிய ஆபிதின்மேல் தூர் எண்ணங்கொண்டு "அவரே அந்தப் பையை எடுத்துக்கொண்டார்" என்று சாதித்தான். அந்த ஆபிது அவனைத் தம் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் "அந்தப்பையில்எவ்வளவு பணமிருந்தது" என்று கேட்டார். அவன் இவ்வளவு இருந்தது என்று சொன்னான். அவர் பணத்தை எண்ணிக்கொடுத்தார். அவன் அதை எடுத்துக்கொண்டு வெளியேபுறப்பட்டு வருகிறபோது அவன் சினேகர்களில் ஒருவன்

பரியாசமாக அந்தப்பையை எடுத்து வைத்திருக்கிறான் என்ற சேதியைக்கேட்டு அங்கிருந்து திரும்பி ஆமிதிடம்போய் அவர் கொடுத்த பணத்தை வாங்கிக்கொள்ளும்படி எவ்வளவோ சொன்னான். அவர் அதை அங்கீகரிக்காமல் "நான் இதை உனக்குக் கொடுக்கும்போது அல்லாஉடைய பாதையில் என்று நிய்யத்துசெய்திருக்கிறேன்" என்றார். கடைசியாக அதை ஏழைகளுக்குச் சதகா கொடுத்துவிடும்படி சொன்னார். இதேபோல் ஒருவன் உதாரணமாகத் தன் தெருவாசலில் வந்து பிச்சைகேட்ட பகீருக்கு ரொட்டியைக் கொண்டுபோக அதற்குள்ளாக அந்த பகீர் போய்விட்டால் சலபுகள் அந்த ரொட்டியைத் திரும்ப வீட்டுக்குக் கொண்டுபோவதும் அதைத் தின்பதும் மக்ரூஹெனக்கண்டு அதை வேறு பகீருக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஐந்தாவது:—அவன் பொருளைத் திருடின கள்ளனுக்கும் அக்கிரமம் செய்தவனுக்கும் பத்துஆ செய்யாமலிருப்பதாம். செய்வானாகில் அவன் தவக்குலும் கெடும், ஜஸாஹும் கெடும். ஏனெனில் கழிந்துபோனதைப்பற்றிக் கைசேதப்படுகிறவன் ஜாஹிதாகான். றபீஉபுனுகைசம் றஹிமஹுல்லா அவர்களுடைய குதிரை ஒன்றைக் கள்ளர்கள் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். அது இருபதினாயிரம் திருஹம் பெறுமானதாயிருந்தது. "அதைக் கள்ளர்கள் கொண்டுபோகும்போது நான் பார்த்தேன்" என்று அவர்கள் சொன்னார்கள். "ஏன் விட்டீர்கள்?" என்று கேட்டதற்கு "நான் அப்போது செய்துகொண்டிருந்த காரியம் அதாவது நான் தொழுதுகொண்டிருந்தது, அந்தக் குதிரையைவிட எனக்கு அதிகப்பிரியமாயிருந்ததினால் விட்டேன்" என்றார்கள். ஜனங்கள் அந்தக் கள்ளர்களுக்கு பத்துஆ செய்தார்கள். அதற்கவர்கள் அந்த ஜனங்களை நோக்கி "நீங்கள் பத்துஆ செய்ய வேண்டாம்" என்றும் "நான் அதை அந்தக்கள்ளருக்கு ஹலாலாக்கி அவர்களுக்கு சதகா கொடுத்துவிட்டேன்" என்றும் சொன்னார்கள். இன்னுமொருபெரியோரைநோக்கி "உமக்குக் கொடுமைசெய்தவனுக்கு நீர் பத்துஆசெய்யும்" என்று ஜனங்கள் சொன்னதற்கு "அவன் தனக்கே கொடுமைசெய்துகொண்டான்" என்றும், "எனக்குச்செய்யவில்லை" என்றும், அவனுக்கு அந்தத்தீங்கே போதுமாயிருக்கிறது" என்றும், "அதற்குமேல் அதிகத்தை நான் அவன்மீது சுமத்தமாட்டேன்" என்றும் சொன்னார். இன்னும் அடியான் தன்மேல் கொடுமைபுரிந்தவனுக்கு பத்துஆ செய்து அவனைத் திட்டுகிறான் என்றும், அதனால் பழிக்குப்பழி அவனிடத்தில் பூராவாக வாங்கிக்கொள்ளுகிறதுமன்றி சிலசமயம் அவனுக்கு இவன் குற்றஞ்செய்தவனாய்ப்

போவதுமுண்டு என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. ஆறுவது:—கள்ளனுக்காகத் துக்கமடைந்து அவன்மீது பரிதாபப்படவேண்டும். ஏனெனில், அவனால் ஒருபாவம் நிகழ்ந்ததினாலும் அவன் வேதனையில் சிக்குவதினாலுமென்க. இன்னும் தான் கொடுமை செய்தவனாயிராமல் கொடுமையி லகப்பட்டவனாயிருப்பதைப்பற்றியும் தீன்விஷயத்தில் நஷ்டம் நேரிடாமல் துன்யாப்பொருளில் நஷ்டம் நேர்ந்ததைப்பற்றியும் ஷுக்குரு செய்யவேண்டும். பாவத்தை ஹலாலாக்கிக் கொண்டொரு மனிதனைப்பற்றி மனதில்துக்கப்படாமற்போவானாகில் பிறருக்கு நன்மையை நாடுவதும் அவர்கள்மேல் இரக்கப்படுவதுமான குணத்தைக் கைவிட்டவனாவான். புலைலு றஹிமஹுல்லா அவர்களின் புதல்வரான அலி என்பவருடைய பொருள் களவுபோனபோது அவர் அழுதுகொண்டிருந்தார். அவரைநோக்கி "நீ பொருள் போய்விட்டதென்று அழுகிறாய்?" என்று புலைலு றஹிமஹுல்லா அவர்கள் கேட்டதற்கு "நான் அதற்காக அழவில்லை. அந்த மிஸ்கீன் இப்படிப்பட்ட வேலையைச் செய்தானே, நாளை கியாமத்தில் இதற்கு யாதொரு சமாதானமும் சொல்ல அவனுக்கு வழியிராதே என்று அழுகிறேன்" என்றார்.

### நாலாவது மகாம்—பிணிக்குப் பரிகாரம்செய்வதும் அணுகின துன்பத்தை அகற்றுவதுமாம்.

அறிந்துகொள்:—பரிகாரம் மூன்றுவகைப்பட்டிருக்கிறது. அவற்றுள் முதலாவது:—சந்தேகமின்றி குணங்கொடுக்கின்ற பரிகாரமாம். எதுபோலெனில், பசியைத் தீர்க்கப் பக்ஷணம் அருந்துவதுகொண்டும் தாகத்தைத் தணிக்கத் தண்ணீர் குடிப்பதுகொண்டும் ஓரிடத்தில் பற்றின நெருப்பை அவிக்க நீரை இறைப்பதுகொண்டும் பரிகாரம் செய்வதுபோலென்க. இந்தப் பரிகாரங்களை விட்டுவிடுவது தவக்குலில் சேர்ந்ததல்ல. மேலும் இதை விடுவது ஹராமாயிருக்கிறது. இரண்டாவது:— சந்தேகமின்றி குணங்கொடுப்பதாயாவது குணங்கொடுக்குமென்று பெரும்பான்மையில் எண்ணப்படுவதாயாவது இராமல் சந்தேகமாக ஒருக்கால் குணங்கொடுக்கவுங் கூடுமென்று எண்ணப்படும் பரிகாரமாம். எதுபோலெனில் மந்திரமோதல், பால்பார்த்தல், சூடுபோடல்போலென்க. ஹதீதில் வந்திருக்கிறபடி இந்தப் பரிகாரங்களை விட்டுவிடல் தவக்குலுக்கு ஷர்த்தாயிருக்கிறது. ஏனெனில், இவைகளை அநுஷ்டிப்பதானது காரணங்களில் கிஞ்சித்தையும் விடாமல் அவைகளில் முழுமுயற்சி செய்கிறான் என்பதற்கும், அவைகளின்மேல் ஆதரவு வைக்கிறான்

என்பதற்கும் அறிகுறியான அடையாளமா யிருக்கிறது. இவைகளில் மிகவும் பலமானது சூடுபோடுவதாம். இதினும் தாழ்ந்தது மந்திரமாம். இவ்விரண்டினும் பெலங்குன்றியது பால்பார்ப்பதாம். இது சகுணம் பார்க்கல் குறிபார்க்கல் என்றும் சொல்லப்படுகிறது. மூன்றாவது:-மேற்கூறிய இரண்டுவகைப் பரிகாரங்களுக்கும் மத்தியவகைப் பரிகாரமாம். அதாவது:—சந்தேகமின்றி குணங்கொடுப்பதா யிராமற்போனாலும் பெரும்பான்மையில் குணங்கொடுப்பதென்று எண்ணப்படும் பரிகாரமாம். எதுபோலெனில் தேகத்தில் நஷ்தர்வைத்து இரத்தமெடுப்பதும் பேதிக்கு மருந்து குடிப்பதும் உஷ்ணத்துக்குக் குளிர்ச்சியைக்கொண்டு குளிர்ச்சிக்கு உஷ்ணத்தைக்கொண்டு பரிகாரம் செய்வதும்போலென்க. இந்தப் பரிகாரங்களை விட்டுவிடுவது ஹராமல்ல. என்கினும், தவக்குலுக்கும் ஷரத்தல்ல. சிலநிலைமைகளில் இதை விடுவதினும் செய்வதே மேலாகும். இன்னும் சிலநிலைமைகளில் செய்வதினும் விடுவதே மேலாகும்.

இந்த மூன்றாவதுவகைப் பரிகாரத்தை விடுவது தவக்குலுக்கு ஷரத்தல்லவென்பதின்பேரில் அத்தாட்சியாகிறது ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சொல்லும் செயலுமேயாம். சொல்லாவது யாதெனில், அவர்கள் தங்கள் திருவாயினால், "அல்லாவுடைய அடியார்களே! நீங்கள் மருந்தை உபயோகித்துக்கொண்டிருங்கள்" என்றும் "மவுத்து நீங்கலாக மருந்தில்லாத வியாதி ஒன்றுமேயில்லை" என்றும், "ஆனால் மனிதர்கள் அந்த மருந்தை அறிந்திருப்பதுமுண்டு அறியாமலிருப்பது முண்டு" என்றும் அருளிச் செய்தார்கள். அப்போது அஸ்ஹாபுகள் "யாரசூலல்லா! மருந்தும் மந்திரமும் அல்லாவுடைய கற்பனையை மாற்றுமா?" என்றுகேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் இவைகளும் அல்லாவுடைய கற்பனையைச் சேர்ந்தவைகள்தாம்" என்று விடையளித்தார்கள். இன்னும் நான் சந்தித்துச் சென்ற மலக்குகளில்நின்றும் ஒரு கூட்டமாவது என்னைநோக்கி "நீர் உம்முடைய உம்மத்தை அவர்கள் தேகத்திலிருந்து இரத்தமெடுக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிடும் என்று சொல்லாமலிருந்ததில்லை" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இதுவுமன்றி மாதத்தின் பதினேழு, பத்தொன்பது, இருபத்தொன்று இத்தேதிகளில் இரத்தமெடுங்கள், உதிரப்பெருக்கு உங்களை ஹலாக்காக்காமலிருக்கட்டும்" என்றும், "அல்லாவுடையஉத்திரவுப்படி உதிரமானது ஹலாகத்துக்குக்காரணமாயிருக்கிறது" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். சரீரத்திலிருந்து இரத்தமெடுப்பதற்கும் சட்டைக்

குள்ளிருந்து சர்ப்பத்தை (உதறித்தள்ளுவதற்கும்) அல்லது வீட்டில் பிடித்தநெருப்பை அவிப்பதற்கும் நடுவே யாதொரு வித்தியாசமில்லை. ஏனெனில், இவையெல்லாம் ஹலாகத்துக்குக் காரணங்களாயிருக்கின்றன. இவைகளை விடுவது தவக்குலுக்கு ஷாத்தல்ல. இன்னும் மாதத்தின் பதினேழாம் புரை செவ்வாய்க்கிழமையாக வருகிறதினத்தில் இரத்தமெடுப்பதானது ஒருவருஷத்தின் வியாதியைப் போக்கும்" என்று திருவுளமாயிருக்கிறார்கள். இதை மூன்கதிஉ என்னும் ஒரு ஹதீஸில் ரிவாயத்து செய்திருக்கிறார்கள். இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சஅதுபுனுல் மஆது றலியல்லாகு அன்கு அவர்களை இரத்தமெடுத்துக்கொள்ளும்படி ஏவியிருக்கிறார்கள். அலி றலியல்லாகு அன்கு அவர்களுக்குக் கண்வலி வந்திருந்தபோது அவர்களை நோக்கி நாயகமவர்கள் "நீர் இன்னதைத் தின்னவேண்டாம் இன்னதைத் தின்னும், அதாவது கொழுமை வற்றாத புதிய பேரீத்தம்பழத்தைத் தின்னவேண்டாம்" என்றும், "சில்கு என்னும் தர்க்காரியைக் கோதுமை மாவுடன் சேர்த்துச் சமைத்துத் தின்னும்" என்றும் ஆக்கியாபித்தார்கள். சுஹைபு றலியல்லாகு அன்குவை நோக்கி "உமக்குக் கண்ணோய் வந்திருக்க நீர் பேரீத்தம்பழத்தையா தின்னுகிறீர்" என்று கேட்டார்கள். அதற்கவர் "யாறசூலல்லா! நான் மறு கன்னத்தின் பக்கமாகத் தின்னுகிறேன்" என்று சொன்னார். இதைக்கேட்ட நாயகமவர்கள் நகைத்துவிட்டார்கள்.

இனி அவர்களின் செயலாவது யாதெனில், ஒவ்வொரு இரவிலும் அவர்கள் தங்கள் கண்ணுக்குச் சுருமா இட்டுக்கொள்வார்கள். ஒவ்வொரு மாதத்திலும் இரத்த மெடுத்துக்கொள்வார்கள். ஒவ்வொரு வருஷத்திலும் மருந்து குடிப்பார்கள். (அப்படி குடிப்பது சூரத்துநிலாவிரைக் கியாழமென்னும் சொல்லப்பட்டிருக்கிறது) அவர்களுக்கு ஒஹி இறங்கும்போது அவர்கள் தலையில் வலி தோன்றும். அதற்காகத் தலையில் மருதனியைக் கட்டுவார்கள். திருமேனியில் எங்கேயாவது யாதொரு சிரங்கு தோன்றினால் அதன்மேல் மருதனியைக் கட்டுவார்கள். சிலசமயம் அதன்மேல் மண்ணைப்போடுவதுமுண்டு. இவ்விதமாக அவர்கள் செய்ததும் ஏவினதுமான பரிகாரங்கள் அநந்தமிருக்கின்றன. அந்தப் பரிகாரங்களெல்லாம் திரட்டிச் சேர்க்கப்பட்ட திப்புந்நபவிய்யி என்ற பேருள்ள கிதாபொன்றிருக்கிறது. மூசா அலைகிஸ்ஸலாமவர்களுக்கு ஓர் பிணியுண்டாயிற்று. பனி இஸ்றாயீல் ஜனங்கள் இந்தப் பிணிக்கு இன்ன வஸ்து மருந்தென்று சொன்னார்கள். அப்போது மூஸா அலைகிஸ்ஸலாமவர்கள் அந்த ஜனங்களை நோக்கி "நான் இதற்கு மருந்தைக்கொண்டு பரி

காரம் செய்யமாட்டேன், அவனே ஆரோக்கியத்தைக் கொடுப்பான்" என்று சொன்னார்கள். அந்தப் பிணி அதிகரித்துவிட்டது. அப்போதந்த ஜனங்கள் அந்த மருந்து மிகப் பிரபலமானதும் பரீக்ஷிக்கப்பட்டதுமா யிருக்கிறது" என்றும், "அதைத் தின்றால் இப்போதே சவுக்கியமாய்ப்போம்" என்றும் சொல்ல அவர்கள் "அது எனக்கு இஷ்டமில்லை" என்றார்கள். பிணி நீடித்துவிட்டது. அப்போது அல்லாகு தஆலாவின் சமுகத்திலிருந்து "ஓ மூசாவே! எனது மகிமையின்மேல் ஆணையாக நீர் அவிழ்தம் அருந்தாதவரையில் நான் உமக்கு ஆரோக்கிய மனுப்பேன்" என்று ஒஹி வந்தது. அவர்கள் அவிழ்தம் தின்றார்கள். பிணி நீங்கிச் சவுக்கிய முண்டாயிற்று. அவர்கள் மனதில் ஏதோ ஓர் எண்ணம் வந்து விழுந்தது. அப்போது அல்லாகு தஆலா "ஓ மூசாவே! நீர் உம்முடைய தவக்குலால் என் ஹிக்மத்தான அழிய பூராயத்தை அழிக்கப்பார்த்தீர். அவிழ்தத்தில் பிரயோசனத்தை அமைத்தவன் நானேயன்றி வேறு யார்?" என்று ஒஹி அனுப்பினன். இன்னும் ஒரு ஜாதியார் தங்களுக்குப் பிறக்கும்பிள்ளைகள் அழகுகெட்டவர்களாயிருந்ததைப்பற்றி முறையிட்டதற்கு அல்லாகு தஆலா அக்காலத்து நபியவர்கள்மீது ஒஹியனுப்பி "அந்த ஜாதியாருடைய ஸ்திரீகளைக் கர்ப்பகாலத்தில் பேதாணுப்பழம் தின்னச் சொல்லும்" என்றும், "அவர்கள் கர்ப்பகாலத்தில் பேதாணுப்பழத்தையும் நிபாசு (பிரசவ உதிர) காலத்தில் புதிய பேரீத்தம்பழத்தையும் தின்று வருவார்களாகில்அவர்களுக்குப்பிறக்கும் பிள்ளைகள் அழகாயிருப்பார்கள்" என்றும் அருளிச்செய்தான். இவையெல்லாவற்றினாலும் ஏற்பட்டதென்னவென்றால், பசி, தாகம் இவைகளைத் தணிக்க உணவும் ஜலமும் எப்படிக் காரணமாயிருக்கிறதோ அப்படியே பிணியைப் போக்க மருந்தானது காரணமாயிருக்கிறது என்பதும், காரணகர்த்தனாகிய அல்லாகு தஆலாவினது பண்படுத்தலால் எல்லாம் ஆகின்றன என்பதுமாம். மூசா அலைஹிஸ்ஸலாமவர்கள் "என் ஆண்டவனே! பிணி யாரால் வருவது? சவுக்கியம் யாரால் வாய்ப்பது?" என்று கேட்க, "அவ்விரண்டும் என்னால்தான்" என்று அல்லாகு தஆலா விடையளித்ததாகவும் அப்போதவர்கள் "என் ஆண்டவனே! அப்படியானால் பின்பு வயித்தியர் எதுக்கு?" என்று கேட்க "வயித்தியத்தொழிலால் அவர்கள் தங்கள் இரணத்தை உண்டு என் அடியார்களுக்குத் தேறுதல் சொல்லி அவர்கள் மனதுக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பதற்கே" என்று அருளிச்செய்ததாகவும் ஹதீஸில் வந்திருக்கிறது. ஆகவே இந்தப்

பரிகாரத்திலும் தவக்குல் என்பது அறிவினாலும் நிலைமையினாலும் ஏற்படும். அதாவது:—மருந்தைத் தின்று அம்மருந்தைச் சிருஷ்டித்த அல்லாகு தஆலாவே சவுக்கியத்தைக் கொடுப்பவன் என்று அறிவதும் அவன்மேல் ஆதரவு வைப்பதுமாம். மருந்தின்மேல் அல்ல. ஏனெனில் சவுக்கியத்துக்கென்று மருந்தைத் தின்ற அநேகம் பேர் சாவுக்குட்பட்டு மாண்டுபோனதினாலென்க.

பசல்: அறிந்துகோள்:—சூடுபோட்டுக்கொள்வதும் ஒரு கூட்டத்தின் வழக்கமாயிருக்கிறது. ஆனால் அப்படிச் செய்வது மனிதனைத் தவக்குலுடைய தானத்திலின்றும் தள்ளிவிடும். மேலும் சூடுபோட்டுக்கொள்வது கூடாது என்று விலக்கல் வந்திருக்கிறது. மந்திரத்தைப்பற்றி அவ்விதம் விலக்கல் வந்திருப்பதில்லை. அது கூடாதென்ற காரணம் யாதெனில், நெருப்பைக் கொண்டு சுடுவது அபாயமுள்ள ஓர் புண்ணாயிருக்கிறது. அந்தப்புண்ணின்குணம் பயப்படத்தக்கது. இது நஷ்தர் வைத்து இரத்தமெடுப்பது போன்றதல்ல. இதன் பிரயோசனமும் இரத்தமெடுப்பதின் பிரயோசனம்போல் அப்படி வெளிப்படையானதல்ல. இதன் தானத்தில் வேறு பரிகாரம் நிற்கும். இம்ரானுப்னுல் ஹசின் றஹிமஹுல்லா அவர்களுக்கு ஒரு நோய் உண்டாயிற்று. அதற்காக அவர்களைச் சூடு சுட்டுக்கொள்ளும்படி ஜனங்கள் சொன்னார்கள். அவர்கள் அப்படிச் செய்யவில்லை. செய்யவேவேண்டுமென்று ஜனங்கள் அலட்டினதினால் பிறகு அவ்விதம் செய்துகொண்டார்கள். பின்பு அவர்கள் சொன்னதாவது:—இதற்குமுன் நான் ஒரு ஒளியைத் தெரிசித்துக்கொண்டிருந்தேன். ஒரு ஓசையைக் கேட்டுக்கொண்டிருந்தேன். மலக்குகள் எனக்கு சலாம் செய்துகொண்டிருந்தார்கள். இந்தச் சூட்டைச் சுட்டுக்கொண்டதுமுதல் அவையெல்லாம் என்னிலின்றும் நீங்கி மறைவில் ஆய்விட்டன" என்பதே. இதன்பிறகு அவர்கள் அல்லாவினிடம் தவுபா இஸ்திகுபாரு செய்து தங்கள் பிழையைப் பொறுக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். பிறகு ஒருபோது அவர்கள் முத்ரிபுப்னு அப்தில்லா என்பவரைக் கண்டு "முத்ரிபே! சில காலத்துக்குப் பிறகு அல்லாகு தஆலா அந்த காமத்தைத் திரும்ப எனக்குக் கொடுத்தான்" என்று சொன்னார்கள்.

### சில நிலைமைகளில் மருந்தை உபயோகிக்காமலிருப்பது மிகமேல் என்பதையும், அது ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் செய்கைக்கு விரோதமாகாது என்பதையும் விளக்கல்.

அறிந்துகோள்:—பெரியோர்களிலின்றும் அநேகம்பேர் பிணிக்குப் பரிகாரம் செய்துகொள்ளாதவர்களாயிருந்திருக்கிறார்கள். இங்கு

யாராவது மருந்தைவிடுவது சிறந்த செயலாயிருந்தால் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மருந்தை உபயோகித்திருக்கமாட்டார்களே என்று சொல்லக்கூடும். இந்தச் சந்தேகம் எதனால் நீங்குமென்றால், மருந்தை உபயோகிக்காமலிருப்பதற்கு ஆறு காரணங்களுண்டென்பதை நீ அறிவதினாலேயாம். முதலாவது:—அந்த மனிதன் கஷ்பு என்னும் வெளிப்பாடுள்ளவனாயும் மரணம் வந்துவிட்டதென்று அறிந்துகொண்டவனாயு மிருப்பதாம். அபூபகர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள் வியாதிப்பட்டிருக்கும்போது "தங்களுக்காக வயித்தியனை வரவழைத்தால் என்ன?" என்று ஜனங்கள் சொன்னதற்கு அவர்கள் "வயித்தியன் என்னைப்பார்த்து நான் என் சித்தப்படிசெய்கிறேன் என்று சொன்னான்" எனக்கூறியிருப்பது இக்காரணத்திற் சேர்ந்ததேயாம். இரண்டாவது:—நோயாளி ஆகிரத்துடைய பயத்தில் பராக்குற்று பிணிக்குப் பரிகாரம் செய்ய அவன் மனதில் நினைவு வராமலிருப்பதாம். உதாரணமாக:—அபுத்தர்தா றலியல்லாகு அன்கு அவர்கள் வியாதிப்பட்டு அழுதுகொண்டிருந்தபோது "ஏன் அழுகிறீர்?" என்று கேட்டதற்கு, "என் பாவங்களை நினைத்து அழுகிறேன்" என்றார்கள். "எதன்மேல்இச்சையிருக்கிறது" என்று கேட்டதற்கு "அல்லாவுடைய றஹ்மத்தின்மேல்" என்று சொன்னார்கள். "வயித்தியனை அழைக்கிறோம்" என்றதற்கு "வயித்தியனே என்னை நோயாளியாக்கினான்" என்றார்கள். அபூஜர் றலியல்லாகு அன்கு அவர்களுக்குக் கண்ணோய் வந்திருந்தது. அவர்களை நோக்கி "நீர் இதற்குப்பரிகாரம் செய்கிறதில்லையா?" என்றுசொன்னதற்கு, "இதைவிட மிக மேலான ஓர் காரியத்தில் நான் பராக்காயிருக்கிறேன்" என்றார்கள். இதற்கு உபமானமாவது:—ஒருவனைச்சிரசாக்கினை செய்வதற்காக இராஜசமுகத்திற்குக் கொண்டுபோகும்போது மற்றொருவன் அவனைநோக்கி "நீ பசிக்கு ஆகாரம் அருந்துகிறதில்லையா?" என்க, அவன் "எனக்குப் பசியைப்பற்றி என்ன இலக்ஷியம்?" என்று சொல்லுகிறான். இப்படிச்சொல்வதில் உண்பவர்மீது தூஷணமும் அவர்களுக்கு விரோதமும் ஒன்றுமில்லை. பின் கூறுவதுபோல் அவன் ஆகிரத்துடைய காரியத்தில் மூழ்கிப்போயிருக்கிறான். அதாவது:—ஸஹல்துஸ்தரீ றஹிமஹுல்லா அவர்களை (வினவப்போனவர்கள்) "உமக்கு ஆகாரம் என்ன?" என்று கேட்க, அவர்கள் "ஹய்யுல் கய்யூமுடைய திகுரே ஆகாரம்" என்றார்கள். "உணவைக்குறித்துக் கேட்கிறோம்" என்க, "உணர்வே உணவு" என்றார்கள். "தீனியைக்குறித்துக் கேட்கிறோம்" என்க, "திகுரே தீனி" என்றார்கள். சரீ

ரத்தின் புசிப்பைக்குறித்துக் கேட்கிறோம்" என்க, "சரீரத்தை விடுங்கள் அதைச் சமைத்தவன்வசம் காட்டுங்கள்" என்றார்கள். மூன்றாவது:—நோய் நாட்பட்டதாயும் நோயாளியின் அபிப்பிராயத்தில் அந்த நோயின் மருந்து குணங்கொடுப்பதானது மந்திரத்தின் குணம்போல் அரிதெனக் காணப்பட்டதாயு மிருப்பதாம். வயித்திய மறியாதவர்மருந்துகளில் அநேகத்தை இதேவிதமாகக்காண்பார்கள். றபீஉபுனுகைசம் றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:— "நான் என்பிணிக்கு மருந்துதின்ன எண்ணங் கொண்டேன். பின்பு சென்றுபோன ஆது சமூதுகளின் கூட்டத்தில் அநேக வயித்தியர்களிருந்தும் அவர்களின் வயித்தியம் பயனற்றதாகி அவர்களெல்லாரும் மாண்டுபோனார்களே என்கிற ஓர்யோசனை என்மனதில் நிகழ்ந்தது" என்பதே. இதனால் அவர்கள் வயித்தியத்தை ஒரு வெளிக்காரணமாக எண்ணவில்லை என்பது ஏற்படுகிறது. நாலாவது:—நோயாளி அந்த நோயின் சவாபு தனக்கு உண்டாக வேண்டுமென்றும் சபுரு செய்வதில் தன்னைப் பரிக்ஷிக்க வேண்டுமென்றும் கருதி அந்த நோய் நீங்கவேண்டுமென்கிற விருப்ப மில்லாதவனா யிருப்பதாம். "பொன்னை நெருப்பிலிட்டுப் பரிக்ஷிப்பதுபோல் அல்லாகு தஆலா அடியானுக்குப் பலாயைவிட்டுப் பரிக்ஷிக்கிறான்" என்றும், "நெருப்பில்நின்றும் சுத்திகரிக்கப்பட்டு சுத்தமாக வெளிப்படுவது போன்றவனும் சேதமுற்று வெளிப்படுவது போன்றவனும் இருப்பான்" என்றும் ஹதீசில் வந்திருக்கிறது. ஸஹல் றஹிமஹுல்லா அவர்கள் மற்றவரை மருந்து தின்னும்படி ஏவுகிறவர்களாயும் தங்களுக்கிருந்த பிணிக்குத் தாங்கள் மருந்துதின்னாதவர்களாயும் "பிணியுடன் அதன்மேல் பொருத்தமாக உட்கார்ந்து தொழுவதானது சவுக்கியத்துடன் நின்றுதொழுவதைவிட அதிக வரிசையுள்ளது" என்று சொல்லுகிறவர்களாயு மிருந்தார்கள். ஐந்தாவது:—நோயாளி அதிக பாவங்களை யுடையவனா யிருப்பதுபற்றி அவன் தன் பாவங்களுக்கு அந்த நோய் கபாராவாக வேண்டுமென விரும்புவதாம். ஏனெனில் அடியானுக்குக் காய்ச்சல் வந்தால் அந்தக் காய்ச்சலானது அவன்மேல் ஒருபாவமும் இல்லாதபடி எத்துசியுமில்லாத கன்மழைக் கல்லைப் போல் அவனை எல்லாப் பாவங்களினின்றும் சுத்தப்படுத்துகிற வரையில் அவனைப் பற்றிக்கொண்டிருக்கும் என்று ஹதீசில்வந்திருக்கிறது. இன்னும் "ஒருவன் தன் தேகத்திலும் திரவியத்திலும் அணுகின துன்பத்தில் அது தன் பாவங்களுக்குக் கபாராவாகுமென்கிற ஆசையினால் சந்தோஷிக்காமற் போவானாகில் அவன் ஆலிமாகான்"

என்று ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மூஸா அலைகிஸ்ஸலாமவர்கள் ஒரு நோயாளியைப் பார்த்து (இரக்கப்பட்டு) "என் ஆண்டவனே இவனுக்கு ரஹ்மத்துசெய்" என்று சொன்னார்கள். அப்போது அல்லாகு தஆலா "ஓ மூசாவே! எப்பொருளால் அவனுக்கு நான் ரஹ்மத்துசெய்யநாடுகிறேனோ அப்பொருளில் எப்படி ரஹ்மத்து செய்கிறது? ஏனெனில், இந்த நோயை அவன் பாவ நிவர்த்திக்குக் கபாராவாக்குகிறேன். இன்னுமிதனால் அவன் பதவியை அதிகப்படுத்துகிறேன்" என்று அருளிச்செய்தான். ஆறாவது:- சரீர சவுக்கியமானது மகிழ்வுக்கும் மறதிக்கும் மீறலுக்கும் காரணமாகுமென்று அவன் அறிந்திருப்பதினால் அக்குணங்கள் வந்தணுகாமலிருக்கும்பொருட்டுத் தன்னிடத்தில் நோய்தங்கியிருக்கவேண்டுமென விரும்புவதாம். அல்லாகு தஆலா யாருக்கு நன்மையை நாடியிருக்கிறானோ அவனை எப்போதும் பலாயினாலும் வியாதியினாலும் கண்டித்து உணர்த்துகிறான். இதனாலேதான் "மூமின் வறுமையும் வியாதியும் சிறுமையுமான இம்மூன்று வஸ்துக்களைவிட்டும் ஒழிந்திருக்கமாட்டான்" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அல்லாகு தஆலா அருளிச்செய்ததாக ஹதீஸில் வந்திருப்பதாவது:— வியாதியானது என் கட்டாயும் வறுமையானது என் மறியல் சாலையாயு மிருக்கிறது. யாரை என் கட்டினும் மறியல் சாலையினும் ஆக்குகிறேனோ அவனை நான் நேசிக்கிறேன் என்பதே. ஆகலால் சரீர சவுக்கியமானது பாவத்தின்பக்கம் இழுக்கின்றதால் வியாதிப்பட்டிருப்பதில்தான் நன்மையிருக்கிறது. சில ஜனங்கள் தங்களை ஆடையாபரணங்களால் அலங்கரித் திருந்ததை அலிறலியல்லாகு அன்கு அவர்கள் கண்டு அங்கிருந்தவர்களை "இதென்ன?" என்று வினவினார்கள். அதற்கவர்கள் "இன்று இவர்களுக்கு ஓர் பெருநாள்" என்று சொன்னார்கள். அப்போது அலிறலியல்லாகு அன்கு அவர்கள் "எந்த நாளில் நாம் பாவஞ்செய்யாம லிருக்கிறோமோ அதுவே நமக்குப் பெருநாள்" என்று சொன்னார்கள். பெரியோர்களில்நின்று மொருவர் ஒரு மனிதனை நோக்கி "நீ எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டார்கள். அதற்கவன் "நான் சுகஜீவியாயிருக்கிறேன்" என்றான். அப்போதந்தப் பெரியவர் "நீ பாவஞ் செய்யாத ஒவ்வொரு நாளும் நீ சுகஜீவிதான். பாவஞ் செய்வாயாகில் அதைவிடக் கடினமான வியாதி வேறு என்ன இருக்கிறது" என்றார்கள். இன்னும் "பிரு அவுன் நானூறுவருஷம் ஜீவித்திருந்ததில் அவனுக்குத் தலைவலி, சுரம் முதலிய எந்தப் பிணியும் வந்ததில்லையாதலால் அவன் தன்னை ஆண்டவ

னென்று பிரஸ்தாபித்தான்" என்றும், ஒரு சாஅத்து நேரம் அவனுக்கு ஒற்றைத்தலைவலியாவது வந்திருக்கிறபக்ஷம் அவன் அவ்விதவீண் பிரஸ்தாபத்தை இலக்ஷியம் செய்திருக்கமாட்டான்" என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அடியான் ஒருநாள் வியாதிப்பட்டுத் தவுபா செய்யாமலிருப்பானாகில் மலக்குல் மவுத்து அவனை நோக்கி "ஏ மறதியாளனே! நான் பன்முறை என் தூதனை உன்வசம் அனுப்பியும் பயனில்லாமற்போய்விட்டது" என்று சொல்லுகிறதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் "மூமினான அடியானுக்கு நாற்பதுநாள் வரையில் யாதொரு வருத்தமாவது பிணியாவது பயமாவது நஷ்டமாவது வராமலிருக்கக்கூடாது" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒரு பெண்ணை நிகாகுசெய்ய நாடினார்கள். அப்போது சிலர் "அந்தப் பெண்ணுக்கு ஒருபோதும் ஒருபிணியும் வந்ததில்லை" என்று அதை ஒரு புகழாகக் கருதிச் சொன்னார்கள். அதற்கு நாயகமவர்கள் "அப்படியிருந்தால் அந்தப் பெண்ணை நான் நிகாகு செய்வதில்லை" என்றார்கள். இன்னும் தலைநோயைப்பற்றி ஒருநாள் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்பேசிக்கொண்டிருக்கையில்ஒருநாட்டறபி நாயகமவர்களைநோக்கித் "தலைநோய்என்பதுஎன்ன? எனக்கு எப்போதும் எந்தநோயும் வந்ததில்லை" என்று சொன்னார். அதற்கு நாயகமவர்கள அவரை நோக்கி "நீ என்னைவிட்டும் தூரப்போ" என்று சொன்னதுமன்றி "யாராவது நரகவாளிகளில் ஒருவனைப் பார்க்கவேண்டுமென விரும்பினால் இதோ இந்த மனிதனைப் பார்த்துக்கொள்ளும்படி அவனுக்குச் சொல்லுங்கள்" என்றும் ஆக்கியாபித்தார்கள். ஆயிஷா றளியல்லாகு அன்ஹா ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப் பணிந்து "யாரசூலல்லா! ஷஹீதுடைய மர்த்தபா வேறு யாருக்காவது உண்டா?" என்று கேட்டதற்கு, தினந்தோறும் மவுத்தை இருபதுதரம் நினைப்பவருக்கு ஷஹீதுடைய மர்த்தபா உண்டு" என்று அருளிச்செய்தார்கள். பிணியுள்ளவன் அதிகமாக மவுத்தை நினைப்பான் என்பதிற் சந்தேகமில்லை.

மேற்கூறிவந்த (ஆறு) காரணங்களினாலேயே அநேகம் பெரியோர்கள் தங்கள் பிணிக்குப் பரிகாரம் செய்துகொள்ளாதவர்களாயிருந்தார்கள். ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இக்காரணங்களின் வேண்டுதலுள்ளவர்களா யிருந்ததில்லை யாதலால் அவர்கள் பரிகாரத்தை அநுஷ்டித்து வந்தார்கள். மொத்தத்தில் வெளிக்காரணங்களைவிட்டும் பேணுவது தவக்குலுக்கு விரோதமல்ல. உமர்

ரலியல்லாகு அன்கு அவர்கள் ஷாம் தேசத்துக்குப் போக நாடினார்கள். அங்கு பேதிப்பிறளி அதிகமா யிருக்கிறதென்று சேதி எட்டினது. சிலர் "நாம் அங்குப்போகக்கூடாது" என்றார்கள். இன்னும் சிலர் "அல்லாவுடைய கற்பனைக்கு நாம் நம்மைக் காக்கோம்" என்றார்கள். அப்போது உமர்ரலியல்லாகு அன்கு அவர்கள் "நாம் அவனுடைய கற்பனையைவிட்டு ஓடுவதும் கற்பனையினால்தான்" என்று சொன்னதுமன்றி "உங்களில் ஒருவனுக்கு இரண்டு மைதான வெளிகளிருந்து அதில் ஒன்று வளம் பொருந்தியதாயும் மற்றொன்று வறண்டு காய்ந்ததாயும் இருக்கும்போது அவன் தன் ஆட்டை எந்த வெளிக்கு ஓட்டிக்கொண்டு போனாலும் கற்பனையின்படிக்கே கொண்டுபோனவனாவான்" என்றும் சொன்னார்கள். பின்பு அப்துர்ரஹ்மானி புனு அவுபு ரலியல்லாகு அன்கு அவர்களை வரவழைத்து "இது விஷயத்தில் நீர் என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் சொன்னதாவது:—"ஓரிடத்தில் விஷபேதி யிருக்கிறதாகக்கேள்விப்பட்டால் நீங்கள் அந்த விடத்துக்குப் போகவேண்டாம்" என்றும், "நீங்கள் இருக்கிற விடத்தில் விஷபேதியிருந்தால் அந்த விடத்திலிருந்து நீங்கள் வெளியே கிளம்பிப் போய்விடவேண்டாம்" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அருளிச்செய்ய நான் கேட்டிருக்கிறேன்" என்பதே. இதைக்கேட்ட உமர்ரலியல்லாகு அன்கு அவர்கள் "அல்ஹம்துலில்லா (என்று ஆல்லாகு தஆலாவைப் புகழ்ந்து) ஹதீசு என் அபிப்பிராயத்துக்கு ஒத்திருக்கிறது" என்று கூறினார்கள். இதன்பேரிலேயே எல்லா அஸ்ஹாபுகளும் ஒருமித்தார்கள். இனி வெளியே கிளம்பிப் போகக்கூடாதென்று விலக்கினது ஏனென்றால், சவுக்கியமா யிருப்பவர்கள் வெளியே கிளம்பிவிட்டால் பேதி கண்டவர்கள் சேதமுற்று ஹலாக்காய்ப் போவார்களென்றேயாம். அன்றியும் விஷக்காற்று உள்ளே தாக்கினால் அவன் வெளியே கிளம்புவது பிரயோசனப்படாது. இன்னும் சில ஹதீசுகளில் "விஷபேதிக்குப் பயந்து ஓடுவதானது ஒருவன் காபிர்களின் படையிலிருந்து மிரண்டோடுவதற்குச் சமானமாம்" என்று வந்திருக்கிறது. இதில் உபமானப் பொருத்தமாவது:-படையிலிருந்து ஓடினால் எப்படி மற்றமுஸ்லிமான வீரர்களின் மனம் முறிவடைகின்றதோ அப்படியே பேதிகண்டவர்களை விட்டு ஓடினால் அவர்களின் மனம் முறிவடையுமென்பதாம். அன்றியும் அவர்களுக்கு அன்னந் தண்ணீர் கொடுத்து ஆதரிக்க ஒருவருமிருக்கமாட்டார்களாதலால் சந்தேகமின்றி அவர்கள் சாவுக்கிரையாய்ப் போவார்கள். ஓடினவன் தப்புவான் என்பதும் சந்தேகத்திலிருக்கிறது.

(பசல்) அறிந்துகோள்:—பிணியை மறைத்துக்கொள்வது தவக்குலின் ஷார்த்தாயிருக்கிறது. மேலும் அதைப் பிரஸ்தாபிப்பதும் முறையிடுவதும் மக்ருஹாயிருக்கிறது. ஆனால் பரிகாரம் செய்துகொள்ள வயித்தியனிடம் சொல்லல் அல்லது தன் தாழ்மையை வெளிப்படுத்தல் அகத்தையும் தீவிரதாத்தையும் தன்னிடத்திலிருந்து அப்புறப்படுத்தல்போல் ஓர் அவசரநிமித்தமாகப் பிரஸ்தாபித்தால் குற்றமில்லை. உதாரணமாக:—அலிறலியல்லாகு அன்கு அவர்கள் வியாதிப்பட்டிருந்தபோது (அவர்களை வினவப்போனவர்கள்) "நீர் நல்லா இருக்கிறீரா? சுகமாயிருக்கிறீரா?" என்று கேட்டதற்கு அவர்கள் "இல்லை" என்றார்கள். வினவப்போனவர்கள் ஒருவர் முகத்தையொருவர் பார்த்து அதிசயித்தார்கள். அப்போது அலிறலியல்லாகு அன்கு அவர்கள் அந்த ஜனங்களை நோக்கி "என் வீரத்துவ பெலத்தையும் தீவிரதாத்தையும் அல்லாவினிடத்திலும் காட்டுவேனா?" என்று சொன்னார்கள். இப்படிச் சொல்வது அவர்களின் நிலைமைக்கே தகுமாகும். ஏனெனில் அவர்கள் அப்படிப்பட்ட பலமும் பெருமையும் உள்ளவர்களாயிருப்பதுடன் தாழ்மையைக் காட்டினதினாலென்க. இதனாலேயே அவர்கள் "என் ஆண்டவனே! எனக்குப் பிணியின் மேல் பொறுமையைக் கொடு" என்று கேட்டார்கள். இதைச் செவியுற்ற ரசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் "நீர் அல்லாவினிடத்தில் அசௌக்கியத்தைக் கேட்காமல் இனி ஆரோக்கியத்தைக் கேளும்" என்று அருளிச்செய்தார்கள். பின்னர் யாதொரு அவசரமின்றி முறைப்பாடு செய்கிற விதமாகப் பிணியைப் பிரஸ்தாபிப்பது ஹறாமாயிருக்கிறது. முறைப்பாடு செய்யாமல் பிரஸ்தாபித்தல் ஆகும். ஆயினும் அதை விடுவதே மிகவும் உத்தமம். ஏனெனில், பிரஸ்தாபிப்பதில் ஒரு சமயம் அதிகமாகக் கூட்டிச்சொல்ல நேரிடுமாதலாலும் அப்படிச் சொன்னால் முறையிடல் என்ற சந்தேகத்துக்கு இடமுண்டாவதாலுமென்க. இன்னும் "பிணியில் முணங்குவது பாவமாயும் அதைப் பிரஸ்தாபிப்பதாயும் இருக்கிறது" என்றும் "அய்யூபு அலைகிஸ்ஸலாமவர்களில்நின்றும் முணக்கத்தையேயன்றி வேறொன்றையும் இபுலீசு (தன்பங்காக) அடையவில்லை" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. புலைலுபுனு இயால், பிஷ்ருல்ஹாபீ, வஹுபுப்னுல்வர்து றஹிமஹுமுல்லா இவர்கள் வியாதிப்பட்டால் வீட்டுக்குள் ஒருவரும் பிரவேசிக்காதபடி கதவை அடைத்துப் போடுகிறவர்களாயும், "எவரும் எங்களை வினவவராதபடி நாங்கள் வியாதிப்பட்டிருப்பதை விரும்புகிறோம்" என்று சொல்லுகிறவர்களாயுமிருந்தார்கள்.

## ஒன்பதாவது அஸ்லு—மஹப்பத்து, ஷவுகு, ரிலா இவைகளிற் பேசுவது.

அறிந்துகோள்:— அல்லாகு தஆலாவை நேசித்தல் என்னும் மஹப்பத்தானது மகாமாத்துகளில் மிகவும் மேலான மகாமாயிருக்கிறது. மேலும் எல்லா மகாம்களாலும் நாடியநோக்கம் இந்த மஹப்பத்தேயாம். ஏனெனில், அல்லாகு தஆலாவை நேசிக்க விடாமல் வேறு பாக்கில் ஆக்குகின்ற எப்பொருளையும்விட்டு இருதயத்தைச் சுத்தப்படுத்துவதற்காக முஹ்லிகாத்தின் ருகுனு ஏற்படுத்தப்பட்டது. தவுபா, சபுரு, ஷுகுரு, ஜுஹ்து, கவுபு முதலியனபோல் இதற்குமுன் நாம் கூறிவந்திருக்கிற முன்ஜியாத்துகளெல்லாம் இந்த மஹப்பத்துக்கு முதலில் வேண்டிய ஷரத்துகளாம். இந்த மஹப்பத்துக்குப் பிந்தியுண்டாகின்ற ஷவுகு, ரிலாபோன்றவை இதன் பயனாயும் இதைத் தொடர்ந்ததாயும் இதன் முடிவாயுமிருக்கிறது. முழு மனதையும் கிரகித்துக்கொள்ளுகிற விதமாக அல்லாகு தஆலாவுடைய நேசம் இருதயத்தில் மேலிடுவதே அடியானுக்குப் பூரணத்தன்மையாயிருக்கிறது. அப்படி மேலிடாமற் போனாலும் மற்றவைகளின் மீதுள்ள நேசத்தைவிட அல்லாவின்மீதுள்ள நேசம் அதிகப்பட்டாவது இருக்கவேண்டும். மஹப்பத்தென்னும் இந்த நேசத்தின் உண்மையை அறிதல் எவ்வளவு கஷ்டத்திலாய்விட்டதென்றால், முத்தகல்லிம்களில் ஒருகூட்டம் இந்த நேசத்தை இல்லையென மறுத்து "நம் இனத்திலின்றுமாயிராத ஒருவனை நாம்நேசிக்கமுடியாது" என்றும், "ஏவலை எடுத்து விலக்கலைத் தள்ளுவது மாத்திரமே அல்லாவை நேசிப்பதற்குப் பொருள்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்படி என்னுகிறவர்கள் யாரோ அவர்கள் தீன் மார்க்கத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர்களாயிருப்பார்கள். ஆதலால் இதை விஸ்தரித்துச்சொல்வது முக்கியமாயிருக்கிறது. நாம் முதலில் அல்லாகு தஆலாவின் நேசத்தை ரூபிக்க ஷரகுடைய அத்தாட்சிகளைக் கூறுவோம். பிறகு அதன் ஹகீகத்தான பொருளையும் அதன் விதிகளையும் விளம்புவோம்.

### அல்லாகு தஆலாவை நேசிப்பதின் வரிசைப்பாடு.

அறிந்துகோள்:—அல்லாகு தஆலாவை நேசிப்பது பர்லு என்று இஸ்லாம் மார்க்கத்தார் எல்லாரும் ஒரே வாக்காக ஒத்துச்சொல்லுகிறார்கள். அவர்களை அவன் நேசிக்கிறான், அவர்கள் அவனை நேசிக்கிறார்கள் என்று அல்லாகு தஆலா கூறுகின்றான். இன்னும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "ஒருவன் அல்லாவையும் ரசூலையும் அவ்விருவரல்லாத மற்றவைகளைவிட அதிகமாக நேசிக்காதவனாயில்

அவன் ஈமான் சரியாகாது" என்று அருளிச்செய்கிறார்கள். இன்னு மவர்களிடம் "ஈமான் ஆவது என்ன?" என்று கேட்டதற்கு "எல்லா வற்றையும்விட அல்லாவையும் ரசூலையும் அதிகமாக நேசிப்பது ஈமான்" என்று விடையளித்தார்கள். இன்னும் "ஒருவன் தன் மனைவி மக்களையும் பொருளையும் மற்றும் சிருஷ்டிகளையும் நேசிப்பதிலும் அதிகமாக அல்லாவையும் ரசூலையும் நேசிக்காதவரையில் அவன் ஈமானுள்ள அடியானல்ல" என்று திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் அல்லாகு தஆலாவும் குல்இன்கான ஆபாஉகும் என்ற ஆயத்தினால் அச்சத்தையூட்டி "நீங்கள் அல்லாவையும் ரசூலையும் நேசிப்பதிலும் அதிகமாக உங்கள் பிதாக்களையும் பிள்ளைகளையும் வர்த்தகத்தையும் வசிக்குமிடத்தையும் மற்றும் நீங்கள் வைத்திருப்பவைகளையும் நேசிப்பவர்களாயிருந்தால் அவன் ஆக்கினை வருவதற்குத் தயாராயிருங்கள்" என்று எச்சரிக்கின்றான். ஒருவர் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சமூகத்தில் "யாரசூலல்லா! நான் தங்களை நேசிக்கிறேன்" என்று சொன்னபோது (அப்படியானால் உன்னிடம்) வறுமை வருவதற்கு நீ தயாராயிரு" என்றார்கள். பின்பு அவர் "நான் அல்லாவையும் நேசிக்கிறேன்" என்க, "பலா என்னும் துன்பங்களுக்கு நீ சித்தமாயிரு" என்றார்கள். இன்னும் ஹதீசில் வந்திருப்பதாவது:—மலக்குல் மவுத்து அலைகிஸ்ஸலாமவர்கள் இபுராஹீம் கலீல் அலைகிஸ்ஸலாமவர்களுடைய ரூஹைக் கைப்பற்றுகிறபோது அவர்கள் மலக்குல் மவுத்தை நோக்கி "ஒரு தோழன் தன் தோழனுடைய ரூஹை வாங்க எப்போதாவது நீர் கண்டீரா?" என்று கேட்டார்கள். அப்போது அல்லாகு தஆலாவின் சமூகத்திலிருந்து "ஓ இபுராஹீமே! ஒரு தோழன் தன் தோழனை வந்து தெரிசிக்க வெறுப்பாயிருந்ததை நீர் கண்டீரா?" என்று ஒஹீவந்தது. அப்போதவர்கள் மலக்குல் மவுத்தை நோக்கி "இப்போது நான் உமக்குச் சம்மதம்கொடுத்தேன். நீர் என் ரூஹைக் கைப்பற்றிக்கொள்ளும்" என்று சொன்னார்கள்" என்பதே. இன்னும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய துஆவில் அல்லாஹும்மஜ்அல் ஹுப்பக வஹுப்பமன் அஹப்பக வஹுப்பமா யுகர்ரிபுனீ இலாஹுப்பிக வஜ்அல் ஹுப்பக அஹப்ப இலைய்ய மினல்மாஇல் பாரிதி என்று வந்திருக்கிறது. இதன் பொருளாவது:—என் ஆண்டவனே! எனக்கு உனது நேசத்தையும் உன்னை நேசிப்பவரின் நேசத்தையும் உனது நேசத்தின் பக்கம் என்னை நெருங்கச் செய்கிற வஸ்துவின் நேசத்தையும் தந்தருள். இன்னும் (தாகமுள்ளவனுக்குத்) தண்ணீரின்மீதிருக்கிற பிரியத்தைவிட அதிகமாக

எனக்கு உன் பிரியத்தைக்கொடு என்பதே. ஒரு நாட்டறபி வந்து
“யாரசூலல்லா ! கியாமத்துநாள் எப்போது வரும்?” என்று கேட்
டார். அவரை நோக்கி நாயகமவர்கள் “நீ அந்த நாளுக்காக என்ன
வைத்திருக்கிறாய் ?” என்று வினவினார்கள். அவர் “என்னிடம்
தொழுகை நோன்புகள் ஏராளமாயில்லை. ஆயினும் நான் அல்லாவை
யும் ரசூலையும் நேசிக்கிறேன்” என்றார். அப்போது நாயகமவர்கள்
“ஒவ்வொருவரும் இன்று எவரை நேசிக்கிறார்களோ அவரோடு
அன்று இருப்பார்கள்” என மொழிந்தார்கள். இன்னும் “அல்லாகு
தஆலாவுடைய நேசத்தின் இன்பத்தைக் கலப்பில்லாமல் சுத்தமாக
அனுபவித்தவன் எவனோ அவன் துன்யாவை விட்டுவிட்டான்” என்
றும், “சிருஷ்டிகளை வெறுத்துவிட்டான்” என்றும் அபூபகர் சித்தீகு
றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும்
“அல்லாவை அறிந்தவன் அவனை நேசிப்பான்” என்றும், “துன்யாவை
அறிந்தவன் அதைப்பகைத்து வெறுப்பான்” என்றும், ஹசன் பசரீ
றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். மூமினானவன் மறதி
யாளனாகாதவரையில் சந்தோஷிக்கமாட்டான். அவன் ஆலோசித்
துப் பார்க்கிறபக்ஷம் துக்கமுள்ளவனாய்ப் போவான். தேகங் கரை
ந்து மெலிவுற்றிருந்த ஒரு கூட்டத்தினிடமாக ஈஸா அலைகிஸ்ஸலா
மவர்கள் சென்றபோது அந்தக் கூட்டத்தை நோக்கி “உங்களுக்கு
என்ன சம்பவித்தது ?” என்று கேட்டதற்கு, அவர்கள் “அல்லா
வுடைய அதாபின் அச்சத்தால் நாங்கள் உருகிப்போயிருக்கிறோம்”
என்றார்கள். அப்போது ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் “அதாபில்
நின்றும் உங்களை அச்சந்தீரச் செய்வது அல்லாவின் மீது பொருப்பா
யிருக்கிறது” என்றார்கள். பின்பு அவர்கள் அக்கூட்டத்தைவிட்டு மற்
றொரு கூட்டத்தினிடமாகச் சென்றபோது முற்கண்ட கூட்டத்தி
னும் அவர்களை அதிக கரைவும் மெலிவுமுள்ளவர்களாயிருக்கக்
கண்டு “உங்களுக்கு என்ன சம்பவித்தது?” என்று கேட்டார்கள்.
அதற்கவர்கள் “சுவர்க்கத்துடைய ஆசையானது எங்களை உருக்கிவிட்
டது” என்றார்கள். அப்போது ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் “நீங்கள்
ஆசித்ததில் உங்களைச் சேர்ப்பது அல்லாவின்மீது பொருப்பாயிருக்
கிறது” என்றார்கள். பின்பு மற்றொரு கூட்டத்தினிடமாகப் போனார்
கள். அவர்கள் முந்திய இரண்டு கூட்டத்தைவிட மிகவும் கரைந்தும்
மெலிந்தும்போயிருந்தார்கள். அவர்களுடைய முகமானது பளிங்கு
போல் இலங்கிக்கொண்டிருந்தது. அவர்களை நோக்கி “உங்களுக்குச்
சம்பவித்திருப்பதென்ன?” என்று கேட்டதற்கு, அவர்கள் “அல்லா

வுடைய நேசமானது எங்களை உருக்கிவிட்டது" என்றார்கள். இதைக் கேட்ட ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் அங்கு உட்கார்ந்து "நீங்களே சமுகத்தை அடுத்தவர்கள்! நீங்களே சமுகத்தை அடுத்தவர்கள்" என்று வியந்துகூறி "உங்களோடிருந்து உறவாடும்படி எனக்கு உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது" என்று சொன்னார்கள். சரியுஸ்ஸகதி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—நாளை கியாமத்தில் அல்லாவுடைய நேசர்கள் நீங்கலாக மற்றவர்களை அவரவர்களின் நபிமார்களுடன்சேர்த்து "ஓமூசாஉடையஉம்மத்துகளே! ஓஈசாஉடைய உம்மத்துகளே! ஓமுகம்மதுடைய உம்மத்துகளே!" என்று கூப்பிடுவார்கள். அல்லாவைநேசித்த அடியார்களை "ஓ அல்லாவுடைய அவ்லியாக்களே! அல்லாவினிடம் விரைந்தோடிவாருங்கள்" என்று கூப்பிடுவார்கள். அவர்களுடைய இருதயங்களானவை சந்தோஷத்தினால் அவற்றின் தானங்களிலிருந்து கழண்டுவிடப்பார்க்கும்" என்பதே. இன்னும் சில நபிமார்கள்மீதிறங்கிய கிதாபுகளில் "ஓ என் அடியானே! நான் உன்னை நேசிக்கிறேன். உன்மீதுள்ள என் ஹக்கின்பொருட்டு நீயும் என்னை நேசிப்பாயாக" என்று எழுதப்பட்டிருக்கிறது.

### மஹப்பத்து என்னும் நேசத்தின் பொருள் இதுவென விளக்கல்.

அறிந்துகோள் :—அல்லாகு தஆலாவை நேசிப்பதென்பது எவ்வளவு கஷ்டத்தில் ஆய்விட்டதென்றால், உலமாக்களில் சிலர் அதை மறுத்து அல்லாகு தஆலாவை நேசிப்பது அசாத்தியமென்று சாதித்திருக்கிறார்கள். ஆகவே இதை விவரித்துச் சொல்வது முக்கியமாம். இது விஷயத்தில் பேச்சு மிக நுண்ணியதாயும் ஒவ்வொருவரும் அறியக்கூடாததாயு மிருக்கிறது. இருந்தபோதிலும் இதில் தெண்டிப்பவன் தெரிந்து கொள்ளுகிற விதமாக உபமானங்களால் நாம் நன்கு விளக்குவோம். நேசத்துக்கு அஸலாகிய மூலம் என்ன என்பதை முன்னதாக அறியவேண்டும். ஆதலால் நீ அறிந்துகொள். நேசம் என்பதற்கு இன்பப் பொருளின்மீ துண்டாகிற மனவிருப்பமே பொருளாம். அந்த விருப்பம் முற்றி உறுதிப்பட்டால் அதற்கு இஷ்கு (மோகம்) என்று சொல்லுவார்கள். பகைமை என்பதற்குப் பொருள் துன்பப் பொருளின்மீ துண்டாகிற மன வெறுப்பாம். ஆகவே எந்தப்பொருள் இன்பதுன்பங்களை விளைக்காதோ அந்தப் பொருளின்மீது நேசமுமிராது பகையுமிராது; இப்போது இன்பப் பொருள் இது, (துன்பப்பொருள் இது) என்பதை நீ அறியவேண்டு மாதலால் தெரிந்துகொள். அதாவது:—பொருட்கள் உனது இயற்கையான சுபாவத்துக்கு மூன்று வகைப்பட்டிருக்கின்றன.

அவற்றுள் ஒன்று: உன் சுபாவத்துக்கு ஒத்ததாயும் உடன்பட்டதாயு மிருப்பதாம். மேலும் உன் சுபாவமே அதை விரும்புவதாயிருக்கும். ஒத்ததும் உடன்பட்டதுமான அந்தப்பொருள் உனது இன்பப் பொருள் என்று சொல்லப்படும். இனி உன் சுபாவத்துக்கு ஒத்ததாயும் உடன்பட்டதாயு மிராமல் விரோதப்பட்டதா யிருந்தால் அந்தப் பொருள் உனது துன்பப்பொருள் என்று சொல்லப்படும். இனி எதுவொன்று உன் சுபாவத்துக்கு ஒத்ததாயும் விரோதப்பட்டதாயு மிராதோ அதை உனது இன்பப்பொருள் என்றும் சொல்லமாட்டார்கள். துன்பப்பொருள் என்றும் சொல்லமாட்டார்கள். இப்போது நீ அறிய வேண்டியதாவது:—ஒரு பொருளைப்பற்றி நீ உணர்ச்சி யடையாத வரையில் அதில் உனக்கு இன்பதுன்பங்கள் ஏற்படமாட்டா. பொருட்களைப்பற்றி உணர்ச்சியடைவது புலன்களாலும் புத்தியினாலுமேயாம். புலன்கள் ஐந்துண்டு. ஒவ்வொரு புலனுக்கும் பிரத்தியேகமான ஒவ்வோர் இன்பமிருக்கிறது. அந்த இன்பங் காரணமாக அப்பொருளை அது நேசிக்கும் அதாவது அவன் சுபாவம் அதை விரும்பு மென்பதாம். கண்ணாகிய புலனுக்கு நல்ல வடிவமான ரூபத்திலும் புற்பூடுகளான பசுமையிலும் ஓடுகிற ஜலத்திலும் இன்னு மிவைபோன்றவைகளிலும் இன்பமிருப்பதால் இப்பொருட்களை அது அகத்தியம் ஆசிக்கும். காதாகிய புலனுக்கு இனிய ஓசைகளிலும் இசைபொருந்திய இராகத்திலும் இன்பமிருக்கிறது. நாவாகிய புலனுக்கு நல்ல ருசிகரமான உணவுகளில் இன்பமிருக்கிறது. நாசியாகிய புலனுக்கு நல்லவாசனையில் இன்பமிருக்கிறது. பரிசமாகிய புலனுக்கு நல்ல மிருதுவான பொருட்களில் இன்பமிருக்கிறது. இவையெல்லாம் ஆசிக்கப்படும் பொருட்களேயாம். அதாவது: இப்பொருட்களை அவன் சுபாவம் விரும்பு மென்பதாம். இந்த ஐம்புலாதிகளின் இன்பங்களெல்லாம் மிருகங்களுக்கும் உண்டு.

இனி உன் மனதில் ஆறுவது புலன் ஒன்று உண்டென்பதைத் தெரிந்துகொள். அதை அக்லு (புத்தி) என்றும் பஸீரத்து (அகப்பார்வை) என்றும் நூரு (ஒளி) என்றும் சொல்லுவார்கள். இவைகளில் எந்தப் பெயரைச் சொல்ல உனக்கு இஷ்டமோ அதைச் சொல்லிக்கொள். அந்த ஆறும்புலனைக் கொண்டே மற்ற ஜீவராசிகளில்நின்றும் மனிதன் * சிறந்தவனாகப் பிரிக்கப்பட்டிருக்கிறான். அப்புலனுக்கும் வசியமாகின்ற பொருட்க ளிருக்கின்றன. ஐம்புலாதிகளுக்கு வசியமாகின்ற இந்த இன்பப்பொருள்கள் எப்படி ஆசிக்கப்படுவனவா யிருக்கின்றனவோ அப்படியே அந்த ஆறும் புலனுக்கு வசிய

* "மக்கடாமே யாறறிவுயிரே" எனத் தொல்காப்பியங் கூறுவதின் கறியத்தக்கது.

மாகின்ற இன்பப் பொருளும் ஆசிக்கப்படுவதா யிருக்கிறது. ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், "துன்யாவில் எனக்கு உவப்பாக்கப்பட்டவை மூன்று பொருட்கள்" என்றும், "அவை ஸ்திரீகளும் நல்லமணமும் தொழுகையில் எனது கண் குளிர்ச்சியுமாம்" என்றும் அருளிச்செய்திருப்பதில் தொழுகை இந்த இன்பத்தைச் சேர்ந்ததேயாம். தொழுகையின் இன்பத்தை அதிகப்படுத்திக் கூறியிருக்கிறார்கள். பின்னர் எவன் மிருகங்களுக்கு ஒப்பாயும் ஐம்புலன்களையன்றி ஆறாம்புலனாகிய மனதை அறியாதவனாயு மிருக்கின்றானோ அவன் மேற்கண்ட ஹதீதில் கூறப்பட்டிருக்கிறபடி தொழுகையானது இன்பப்பொருளா யிருக்கிறதென்றும் அதை ஆசிக்கக்கூடுமென்றும் ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டான். எவனுக்கு அக்லாகிய அறிவு மேலிட்டு மிருகங்களின் குணங்களிலிருந்து மிகவும் தூரமாய்விட்டானோ அவன் வெளிக்கண்ணைக்கொண்டு விநோதரூபங்களையும் பசுமையான புற்பூடுகளையும் ஓடுகிற ஜலத்தையும் கண்டுகளிப்பதைவிட அகக் கண்ணைக்கொண்டு அல்லாகு தஆலாவுடைய திருச்சமூகத்தின் ஜமாலாகிய பேரழகையும் அவனது சிருஷ்டியின் புதுமைகளையும் அவனது ஜாத்து சிபத்துகளின் நிறைவான பெருமையையும் காட்சிசெய்ய அதிகமாக ஆசிப்பான். மேலும் அல்லாகு தஆலாவினது திருச்சமூகத்தின் ஜமாலான பேரழகு அவனுக்கு வெளிப்படும்போது இந்த எல்லா இன்பங்களும் அவன் கண்ணுக்கு இழிவாய்த் தோன்றும்.

## நேசத்துக்குரியவன் அல்லாகு தஆலாவன்றி வேறு யாருமில்லை என்பது விளங்கும்பொருட்டு அதன் காரணங்களை விளக்கல்.

அறிந்துகொள்:—நேசத்துக்கு ஐந்து காரணங்க ளிருக்கின்றன.
முதலாவது:—(தானும் தனது தரிப்பும் தனது சிறப்புமாம்) மனிதன் தன்னையும் தனது இருப்பான தரிப்பையும் தனது பண்புகளின் நிறைவான சிறப்பையும் நேசிக்கின்றான். தன் இல்லாமை என்னும் நாஸ்தியை வெறுக்கின்றான். அந்த நாஸ்தியில் அவனுக்கு நோயும் துன்பமும் இல்லையென்றாலும் சரியே. சுபாவத்துக்கு ஒத்திருப்பதே நேசத்துக்குக் காரணமா யிருக்கும்போது அவன் அதை ஏன் நேசிக்கமாட்டான்? அவன் சுபாவத்துக்கு அதிக ஒத்துமையும் உடன்பாடுமுள்ள பொருள் அவன் இருப்பையும் அவன் தரிப்பையும் அவனது நிறைவான சிறந்த பண்புகளையும்விட வேறு என்ன இருக்கிறது? அவனும் அவனின் நிறைவான சிறப்புகளும் இல்லாமல் நாஸ்தியாவதைவிட அவன் சுபாவத்துக்கு அதிக விரோதமுள்ளதும் ஒவ்வாததுமான

பொருள் வேறு ஏது இருக்கிறது? பின்னர் இதே காரணத்தினால் அவன்
தன் மகனையும் நேசிக்கின்றான். ஏனெனில் மகன் இருப்பை அவன்
தன் இருப்பாக எண்ணுவதினாலென்க. தான் தரித்திருக்கச் சாத்தியப்
படாதானமையால் மகன் தரிப்பு ஒருவாறு தன் தரிப்புக்குச் சமான
மாயிருப்பதுபற்றி அவனையும் நேசிக்கின்றான். எதார்த்தத்திலோ
அவன் தன்னையே நேசிக்கின்றான். இன்னும் பொருளையும் நேசிக்
கின்றான். ஏனெனில் பொருளானது அவன் (உயிர்வாழ்க்கைக்குரிய)
பண்புகளுக்கு உதவியான ஒரு உபகரணமாயிருப்பதினாலென்க. இன்
னும் பந்துக்களையும் நேசிக்கின்றான். ஏனெனில், அவர்களைத் தன்
செட்டையும் இறக்கையுமாக நினைக்கிறதினாலும் அவர்களால் தனக்
குப் பெருமையுண்டு என்று எண்ணுவதினாலுமென்க. இரண்டா
வது:—நன்றிசெய்தலாம். அவனுக்கு யாராவது நன்றி செய்திருந்
தால் சுபாவமாகவே அவனை நேசிக்கிறான். இதனாலேதான் இன்
ஸான் நன்றியின் அடியான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நன்றி
செய்தவனை மனம் இயல்பாகநேசிக்குமென்றும், அந்தநேசம் முயற்சி
யால் மாறாதென்றுங் கருதியே நபிகள் சல்லல்லாகு அலைகிவசல்ல
மவர்கள் "என் ஆண்டவனே! எனக்கு உபகாரஞ்செய்ய எந்தப்பாதக
னுக்கும் சக்தியளிக்காதே, அவன் எனக்கு உபகாரஞ் செய்தால்
என் மனம் அவனை நேசிக்கும்" என்று துஆ கேட்டிருக்கிறார்கள்.
எதார்த்தத்தில் இந்த நேசமும் தன்னை நேசித்தலுக்குச் சார்பாய்
வருவதாம். ஏனெனில், தனக்கு உபகாரம் செய்தலென்பது ஒருவன்
இவனுடைய தரிப்புக்குக் காரணமான அல்லது இவனுடைய பண்பு
களின் சிறப்பத்துக்குக் காரணமான ஒரு காரியத்தைச் செய்தலென்
பதேயாம். ஆனால் மனிதன் தன்னுடைய தேகசவுக்கியத்தை நேசிப்
பது தனக்காகவேயன்றி வேறொன்றுக்காக அல்ல. வயித்தியனை நேசி
ப்பதோ அவனால் தேகசவுக்கியம் வாய்த்த காரணங்கொண்டு அதற்
காக அவனை நேசிக்கிறான். இதேபோல் அவன் தன்னை நேசிப்பதா
னது வேறு காரணங்கொண்டல்ல. தனக்கு உபகாரஞ்செய்தவனை
நேசிப்பது எதனாலென்றால் அந்த உபகாரம் தனது நன்மைக்குக்
காரணமாயிருந்ததினால் அதற்காக அவனை நேசிக்கின்றான். மூன்றா
வது:—(நற்செய்கையாம்) ஒருவன் நல்ல செயல்களை உடையவனா
யிருந்தால் அவனையும் நேசிக்கின்றான். தனக்கு அவன் யாதொரு நன்
மையைச் செய்திருப்பதில்லையென்றாலும் சரியே. ஏனெனில் மக்ரிபு
ராச்சியத்தில் ஒரு பாதுஷா ஆலிமாயும் நீதியாகச் செங்கோல்
செலுத்துகிறவனாயும் இருக்கிறான் என்றும், பிரஜைகளெல்லாரும்

அவனால் சுகமுற்று வாழ்கிறார்களென்றும் ஒருவன்கேள்விப்பட்டால்
மகுரிபு ராச்சியத்துக்கு அவன் போய்ச் சேரவும் அவனது நன்றி
யைப் பார்க்கவும் முடியாதென்று அவன் அறிகிறவனாயிருந்தபோ
திலும் அவன் மனமானது இயல்பாகவே அந்த பாதுஷாவை நேசிக்
கும். நாலாவது காரணம்:—அழகாம். ஒருவன் அழகான முகத்தை
யுடையவனாயிருந்தால் அவனையும் நேசிக்கின்றான். அப்படி நேசிப்
பது அவனால்யாதொன்றை அடைவதற்காக அல்ல. அவனது சுந்தர
முகத்துக்காகவும் அவனது அழகுக்காகவுமேயாம். ஏனெனில் அழ
கானது தன்னிலே சுபாவமாக நேசிக்கப்படுவதாயிருக்கிறது. ஒரு
வன் ஒருஅழகானரூபத்தை இச்சைக்காகஅல்லாமல் நேசிக்கக்கூடும்.
எதுபோலெனில்,பசுமையான தாவரவஸ்துவையும் ஓடுகிறஜலத்தை
யும் நேசிப்பது அதைத் தின்பதற்காகவும் குடிப்பதற்காகவு மல்ல
வாதல்போலென்க. ஆனால் அதைப் பார்ப்பதில் கண்ணுக்கு ஒரு
இன்பமிருப்பதுபற்றியே அதைநேசிக்கின்றான். அழகும் சுந்தரமும்
ஆசிக்கப்படுவதேயாம். ஹக்கு தஆலாவுடைய ஜமால் என்னும் பேர
ழகு வெளியாகிறபக்ஷம் அதை அவன் ஆசிக்கக்கூடுமென்பது சரி
யாகும். ஜமால் என்னும் அழகின் பொருள் இன்னது என்று பின்
னால் சொல்லிவரப்படும். ஐந்தாவது காரணம்:—இரண்டு சுபாவங்கள்
ஒன்றுக்கொன்று ஒற்றுமையுடையனவாயிருப்பதாம். ஒருவனுடைய
சுபாவம் மற்றொருவனுடைய சுபாவத்துக்கு ஒத்திருந்தால் அவனை
அவன் நேசிப்பவனாயிருப்பதுமுண்டு. அப்படிநேசிப்பது அழகினால்
அல்ல சுபாவ ஒற்றுமையினாலேயாம். இந்தஒற்றுமையானது சிலசம
யம் வெளிப்படையாயிருக்கும். எதுபோலெனில், சிறுவனுக்கு மற்
றொரு சிறுவனோடும்கடைக்காரனுக்கு மற்றொரு கடைக்காரனோடும்
ஆலிமுக்கு மற்றொரு ஆலிமோடும் இப்படியே ஒவ்வொருவனுக்கும்
அவனவன் இனமான மற்றொருவனோடு நேசமிருப்பதுபோலென்க.
இன்னும் சிலசமயம் இது மறைந்திருக்கும். பிறக்குங்காலத்தில் மேவி
டுகின்ற உற்பத்தி மூலத்திலும் இயற்கைக் காரணங்களிலும் அப்
போது ஒரு ஒற்றுமை நேர்பட்டிருக்கும். எவரும் அதை அறிய
வழியில்லை. இதே அர்த்தபாகமாக ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல
மவர்கள் அருளிச்செய்திருப்பதாவது:—"ரூஹுகள் கூட்டங்கூட்ட
மா யிருப்பவை. அவைகளில்நின்றும் ஒன்றையோன் றறிந்தவை
சேர்ந்து பொருந்தின. அறியாதவை சேராமல் பிரிந்தன" என்பதே.
இதன் கருத்து:—ஆன்மாக்களுக்கு ஒன்றோடொன்று அறிமுகமு
மிருக்கிறது பராமுகமுமிருக்கிறது என்றும்,உற்பத்தி மூலத்தில் அ

முகமிருந்தால் அவை ஒன்றோடொன்று நேசிக்கும் என்றும் (இல்லாவிட்டால் நேசிக்காது என்றும்) திருவுளமாயிருக்கிறார்கள் என்பதே. இந்த அறிமுகமென்பதற்கு எவரும் விவரிக்கமுடியாதென்று மேலே சொல்லிவந்த அந்த ஒற்றுமையே பொருளாம்.

ஜமால் என்னும் அழகு இதுவென அதன் பொருளை விளக்கல்.

அறிந்துகொள்:—எவனொருவன் மிருகங்களுக்கு அடுத்தவனும் விழிப்புலனாலன்றி மனப்புலனால் வழியை அறியாதவனும் இருக்கின்றானோ அவன் அழகு என்பதற்கு முகம் செம்மைகலந்த வெண்மையாயும் உறுப்புகள் தக்கவிதமாயும் இருப்பதே தவிர அதற்கு வேறுபொருள் இல்லை என்று சொல்லக்கூடும். இதன்கருத்து:—முகரூபத்திலும் நிறத்திலுமே அழகுபுலப்படுமென்பதும் எதுவொன்று ரூபமும் நிறமும் இல்லாததாயிருக்கிறதோ அது அழகாயிருப்பது அசாத்தியமென்பதுமாம். இதுவோ பிசகான சொல், ஏனெனில் புத்திமான்கள் இது அழகான எழுத்து என்றும் அழகான சப்தம் என்றும் அழகான உடுப்பு என்றும் அழகான குதிரை என்றும் அழகான வீடு என்றும் அழகான தோட்டம் என்றும் அழகான பட்டணம் என்றும் சொல்வது அநுபவமாதலாலென்க. ஆகவே ஒவ்வொரு வஸ்துவிலும் அழகுஎன்பதின் பொருள் அதற்குத் தகுமான ஒரு சிறப்பு அதில் இருப்பதும் அந்தச் சிறப்பில் வேறு எந்த வஸ்துவும் சேராமலிருப்பதுமாம். ஒவ்வொரு வஸ்துவின் சிறப்பு வெவ்வேறுவிதமாக இருக்கும். ஏனெனில், எழுத்தின் சிறப்பு என்பது அதன் அக்ஷரங்கள் ஒன்றுக்கொன்று நேர் பொருந்தியும் அதற்குரிய மற்றும் அம்சங்கள் சரியாய் அமைந்து மிருப்பதாம். அழகான எழுத்தையும் அழகான வீட்டையும் பார்ப்பதில் கண்ணுக்கு ஒரு இன்பமுண்டு என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை. ஆதலால் அழகு என்பது முகரூபத்தைக்கொண்டே சொந்தப்பட்டதல்ல. ஆனால் இவையெல்லாம் வெளிக்கண்ணுக்குப் புலப்படுவனவாயிருக்கின்றன. இவற்றின் அழகை ஒருவன் ஒப்புக்கொள்ளக்கூடும். என்கினும் வெளிக்கண்ணால் பார்க்கக்கூடாதபொருளில் அழகு எப்படியிருக்கும்? என்று சொல்லுவான். இதுவும் அறியாமையாயிருக்கிறது. ஏனெனில், இன்னான் அழகான நற்குணத்தை யுடையவனாயிருக்கிறான் என்றும் அழகான மனிதத்தன்மை யுடையவனாயிருக்கிறான் என்றும் நாம் சொல்லுகின்றோம். அன்றியும் பயபக்திகளோடு கூடிய இல்மு மிக்க அழகானதென்றும், ஈகையோடு கூடிய வீரத்துவம் மிக்க அழகானது என்றும், பயபக்திகளும் அவாவின்மையும் உள்ளது போதுமென்ற திருப்திகரமும் எல்லாவற்றிலும்

மிக்க அழகானது என்றும் சொல்லுகிறார்கள். இன்னுமிவைபோன்ற அழகுகள் அநுபவத்தில் தெரிந்தவைகளா யிருக்கின்றன. இவற்றில் ஒன்றையும் வெளிக்கண்ணால் பார்க்கமுடியாது. மேலும் அக்லு என்னும் அகப்பார்வையினாலேயே இவற்றின் அழகைப் பரிசிக்கக்கூடும். மூன்றாவது ருக்னு (முஹ்லிகாத்தில்) நபுசுடைய தெண்டிப்பின் பாடத்தில் ரூபமானது வெளிரூபம், உள்ரூபம் என இருவிதப்பட்டிருக்கிறது என்றும், அவற்றில் ஒவ்வொன்றுக்கும் அழகுமுண்டு அழகுக்கேடுமுண்டு என்றும், நற்குணமே உள்ரூபத்தின் அழகுக்குப் பொருள் என்றும், அது சுபாவத்தில் ஆசிக்கப்படுவது என்றும் கூறியிருக்கிறோம்.

இது நேசிக்கப்படுவதென்பதற்கு அத்தாட்சியாவது:—ஒருவன் ஷாபிஈ றலியல்லாகு அன்குவையும் உமர் றலியல்லாகு அன்குவையும் அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்குவையும் நேசிப்பது அசாத்தியமல்ல. அது எப்படி அசாத்தியமாகும்? இந்த நேசத்தில் தன் பொருளையும்உயிரையும் குருபானி செய்கிறவனுமிருக்கிறானே. இந்த நேசம் உண்டாவது அவர்களின் வடிவத்துக்காகவும் முகரூபத்துக்காகவும் அல்ல. ஏனெனில் அவர்களை இவன் பார்த்திருப்பதே இல்லை. அவர்களுடைய ரூபமோ இப்போது மண்ணுக்குள் மறைந்துபோ யிருக்கிறது. ஆதலால் இந்த நேசம் அவர்களுடைய உள்ரூபத்தின் அழகுக்காகவேயாம். உள்ரூபத்தின் அழகு என்பது இல்மும் தக்வாவும் ராச்சிய பாதுகாப்பும் இன்னு மிவைபோன்ற நற்குணங்களுமாம். இதேபோல்நபிமார்களையும்இதற்காகவேநேசிக்கிறார்கள். ஒருவன் அபூபக்கர் சித்தீகு றலியல்லாகுஅன்குஅவர்களை நேசிப்பது எதற்காகவென்றால் அவர்களுக்கிருந்த உள்ரூபமான ஒவ்வொரு நற்குணத்துக்காகவாம். ஏனெனில் எந்தக் குணத்தைக்கொண்டு அவர்கள் சித்தீகு என்கிற பெயர் பொருந்தினவர்களா யிருக்கிறார்களோ அந்தக் குணத்துக்காகவே அவர்களை நேசிக்கின்றான். சிதுகு என்பதும் இல்மு என்பதும் சித்தீகுறலியல்லாகுஅன்குஅவர்களில்நின்றும்ஒருபொருளின் குணமாயிருக்கிறது. அந்தப்பொருளுக்கு ஜுஸ்வுலாயதஜஸ்ஸா(பாகமேற்காதஅணு) என்கிறார்கள். ஏனெனில் அது ரூபமும் நிறமும் உள்ளதல்ல. சிலர் அது ஒரு இடத்தை எடுப்பதல்லவென்கிறார்கள். எப்படியிருந்தாலும் அதற்குரூபமும் நிறமுமில்லை. என்கிலும் நேசிக்கப்படுவது அதுவேயாம். வெளித்தோலும் சதையுமல்ல. ஆகவே எவனுக்குப் புத்தியிருக்கிறதோ அவன் உள்ரூபத்தின் அழகை நிராகரிக்கமாட்டான். வெளிரூபத்தினும்,

அவனை அதிகமாக நேசிப்பான். ஏனெனில் ஒரு சுவற்றின்மீதெழுதி யுள்ள ரூபத்தை நேசிப்பவனுக்கும் ஒரு நபியை நேசிப்பவனுக்கும் நடுவே வெகு வித்தியாச மிருக்கிறது. மேலும் புத்தியுள்ள ஒரு சிறுவனுக்கு மற்றொருவன்மீது விருப்பத்தை யுண்டாக்க நாடினால் அவனிடம் அந்தமற்றொருவனுடைய கண்ணையும் இமைகளையும் புரு வத்தையும் வருணித்துச் சொல்வதில்லை. மேலும் அவனது ஈகை யையும் இல்மையும் சமர்த்தையும் புகழ்ந்து சொல்லுகிறார்கள். இன் னும் அச்சிறுவனுக்கு ஒருவன்மீது வெறுப்பையுண்டாக்க நாடினால் அவனிடத்தில் அவன் குணக்கேட்டைச் சொல்வதேயன்றி வெளி ரூபத்தின் அழகுகேட்டைச் சொல்லுகிறதில்லை. குணத்துக்காகவே மூமின்கள் அஸ்ஹாபுகளை நேசிக்கிறார்கள். அபூஜஹலைப் பகைக் கிறார்கள். ஆகவே அழகானது வெளியழகு எனவும் உள்ளழகு என வும் இருவிதப்பட்டிருக்கிறது என்றும், வெளியழகு எப்படியோ அப்படியே உள்ளழகும் நேசிக்கப்படுவதாயிருக்கிறது என்றும், மேலும் கொஞ்சமாவது அறிவுள்ளவனிடத்தில் உள்ளழகு அதிக மாக நேசிக்கப்படுவது என்றும் விளக்கமாயிற்று.

### அல்லாகு தஆலா ஒருவன்மாத்திரமே நேசத்துக்கு அருகன் என்பதை விளக்கல்.

அறிந்துகொள் :—எதார்த்தத்தில் நேசத்துக்கு அருகனாயிருப் பவன் அல்லாகு தஆலாவேயன்றி வேறு யாருமில்லை. வேறொரு வனை நேசிக்கின்றவன் எவனோ அவன் அல்லாவை அறியாமலிருக் கிற காரணத்தினால் அப்படி நேசிக்கின்றான். ஆனால் ஒருவன் அல் லாகு தஆலாவுடன் சம்பந்த முள்ளவனாயிருந்தால் அவனை நேசிப் பது அல்லாவை நேசிப்பதென்றாகும். எதுபோலெனில், றசூல் சல் லல்லாகு அலைகிவசல்ல மவர்களை நேசிப்பது அல்லாவை நேசிப்ப தென்றாவதுபோலென்க. ஏனெனில், ஒருவன் மற்றொருவனை நேசி த்தால் அவனுடைய தூதனையும் அவனால் நேசிக்கப்படுகிறவனையும் நேசிப்பான். ஆகவே உலமாக்களை நேசிப்பதும் தக்வாவுள்ளவர்களை நேசிப்பதும் அல்லாவை நேசிப்பதாகும். இதானது நாம் முதலில் கூறிவந்தபடி நேசத்தின் ஐந்து காரணங்களைக் கூர்மையாக நோட்ட மிடுவதினால் நன்கு விளங்கும்.

முதலாவது காரணம்:—மனிதன் தன்னையும் தனது பண்புகளின் நிறைவான சிறப்பையும் நேசிப்பதென்றோம். இந்நேசத்தின் அவசிய த்தினால் அல்லாகு தஆலாவை நேசிப்பதுண்டாகும். ஏனெனில் இவ னது இருப்பும் இவனது நிறைவான சிபத்துகளின் இருப்பும் எல்

லாம் அவனளித்த கொடையா யிருக்கிறது. அவன் தனது கிருபை யினால் இவனைச் சிருஷ்டிக்காமற்போனால் இவன் உண்டாகமாட் டான். அவன் தனது கிருபையினால் இவனைக் காத்திரக்ஷிக்காமற் போனால் இவன் தரித்திருக்கமாட்டான். அவன் தன் கிருபையினால் இவன் அவயவங்களையும் இவனது நிறைவான சிபத்துகளையும் சிரு ஷ்டிக்காமற்போனால் இவனிலும் வின்னப்பட்டவன் எவனு மிருக்க மாட்டான். பின்பு வெயிலின் சூடு பொறுக்காமல் ஓடுகிற ஒருவன் மரத்தினது நிழலை நேசித்து அந்த நிழலுக்கு ஆதாரமான மரத்தை நேசிக்காமற்போனால் இது மிகவும் பெரிய புதுமையாம். நிழலின் இருப்பு மரத்தைக்கொண்டாயிருப்பதுபோல் தன் இருப்பும் சிறப் பும் அல்லாகு தஆலாவைக்கொண்டிருப்பதாக அறிகின்றவன் ஏன் அவனை நேசிக்கக்கூடாது? ஆனால் இந்த அறிவு இல்லாதவன் அவனை நேசிக்கமாட்டான். ஏனெனில் அவனை நேசிப்பது அவனை அறிவதி னால் உண்டாகிற பயனா யிருப்பதால் அப்படி அறியாத மூடன் அவனை நேசிக்கான் என்பதிற் சந்தேகமில்லை.

இரண்டாவது காரணம்:—உபகாரம் செய்தநிமித்தம் ஒருவனை நேசிப்பதென்றோம். அல்லாகு தஆலாவையன்றி வேறொருவன் தன க்கு உபகாரம் செய்ததாக அவனை நேசிப்பானாகில் இது அறிவின் மையாகும். ஏனெனில் அல்லாகு தஆலாவன்றி வேறு யாரும் இவ னுக்கு உபகாரம் செய்யவும் முடியாது அப்படி யாரும் செய்திருப் பதுமில்லை. அல்லாகு தஆலா தன் அடியார்களுக்குச் செய்திருக்கிற நன்றியுபகாரங்களின் வகைகளை எவரும் எண்ணிச்சொல்ல முடியாது. இதைக்குறித்து ஷுக்குருடையபாடத்திலும் தபக்குருடைய பாடத் திலும் நாம் சொல்லியிருக்கிறோம். பின்னர் அல்லாகு தஆலாவன்றி வேறொருவன் உனக்கு உபகாரம் செய்ததாக நீ நினைப்பது உனது அறியாமையாயிருக்கிறது. ஏனெனில் ஒருவன் ஒரு பொருளை உனக் குக் கொடுக்காமல் வைத்துக்கொள்வதற்கு அவனால் கூடாதவண் ணம் அவனைத் தூண்டிப் பலாட்டியஞ் செய்கிற ஒரு மூவக்கலை அல் லாகு தஆலா அவன்மேல் சாட்டாதவரையில் அவன் எந்தப் பொ ருளையும் உனக்குக் கொடுக்கமாட்டான். அந்த மூவக்கலாவது யாதெ னில், அப்பொருளை உனக்குக் கொடுப்பதில் ஆகிரத்திலோ அல்லது துன்யாவிலோ அவனுக்கு சவாபும் நயமுமிருக்கிறதென்று அவன் நினைக்கும்படி அவன் இருதயத்தில் அல்லாகு தஆலா போட்ட எண் ணமேயாம். அவன் தனது நாட்டமான சவாபையோ அல்லது பிர யோசனத்தையோ அடையும்பொருட்டு அப்பொருளை உனக்குக்

கொடுக்கின்றான். பின்பு அப்பொருளை அவன் தனக்கே கொடுத்த
னான். ஏனெனில் ஆகிரத்துடைய சவாபை அடைவதற்கு அ
லது துன்யாவில் நல்ல பேரும் கீர்த்தியுமான புகழைப் பெறுவதற்
உன்னை ஒரு காரணமாக்கிக்கொண்டான். எதார்த்தத்தில் அல்லா
தஆலாவே அப்பொருளை உனக்குக் கொடுத்தான். அவன் உன்னு
யாதொரு பயனையுங் கருதாமல் ஒரு முவக்கலை அதாவது:—உனக்
கொடுப்பதில் தனக்கு நயமுண்டு என்ற எண்ணத்தை அவன் ப
தில் போட்டதினால் அவன் அப்பொருளை உனக்குக் கொடுத்தா
இதை ஷுக்ருடைய பாடத்தில் விளக்கிக் காட்டியிருக்கிறோம்.

மூன்றாவது காரணம்:—தனக்கு ஒருவன் நன்மைசெய்யவில்
யானாலும் அவன் தன்னிலே நல்லவனாயும் நன்றி செய்கிறவனாயு
ப்பானாகில் அவனை நேசிப்பதென்றோம். உதாரணமாக:—மகு
ராச்சியத்தில் ஒரு பாதுஷா நீதிமானாயும் பிரஜைகளின்மீது ப
முள்ளவனாயும் தன் பொக்கிஷத்தை ஏழைகளின் உதவிக்காக வ
திருப்பவனாயும் தன் ராச்சியத்தில் எவரும் கொடுமைசெய்யச்
மதம் கொடாதவனாயும் இருக்கிறான் என்று கேள்விப்பட்டால் அ
தியம் மனமானது இயல்பாக அவனை நேசிக்கும். அங்குபோய்
னைக் கண்டுகொள்ளவும் அவனால் யாதொரு நன்றியைப் பெற்
கொள்ளவும் முடியாதென்று மனதுக்குத் தெரியுமென்றாலும்
யே. இந்தக் காரணத்தினாலுங்கூட அல்லாது தஆலாவைய
அன்னியனை நேசிப்பது அறியாமையாயிருக்கிறது. ஏனெனில், ந
செய்தலென்பது அல்லாது தஆலாவினாலன்றி தன்னிலே உண்ட
தல்ல. அன்றியும் மனிதர்களால் செய்யக்கூடிய நன்றி மிகவும்
பமேயாம். எல்லாச் சிருஷ்டிகளையும் சிருஷ்டித்ததும் அவை
க்கு வேண்டியவைகளைக் கொடுத்ததும் அழகுக்கும் அலங்காரத்
குமே தவிர மற்றப்படி அவசியமில்லாத வஸ்துக்களையும் அவைக
குத் தந்ததுமான இதுவே பூரண நன்றியாம். மனிதன் இதை
னால் அறிவானென்றால், பூலோகம், வானலோகம், தாவரம்,
ரினம் இவைகளில் பொறுமையுடன் நோட்டமிடுவதினாலெனக.
படி நோட்டமிட்டால் அவன் எண்ணிறந்த புதுமைகளையும் ந
யுபகாரங்களையும் காண்பான்.

நாலாவது காரணம்:—ஒருவனது அழகுக்காக அவனை நேசி
தென்றோம். அழகு என்றதில் நமது கருத்து உள்ளழகேய
உதாரணமாக:—ஒருவன் அபூஹனீபா றஹிமஹுல்லா அவர்
நேசிக்கின்றான். ஒருவன் ஷாபியீ றஹிமஹுல்லா அவர்களை நே

இன்றான். ஒருவன் அலீ றலியல்லாகு அன்கு அவர்களை நேசிக்கின்றான். ஒருவன் அபூபகர், உமர் றலியல்லாகு அன்ஹுமா இவர்களை நேசிக்கின்றான். ஒருவன் இவர்கள் எல்லாரையும் நேசிக்கின்றான். அன்றியும் நபிமார்களையும் நேசிக்கின்றான். இந்த நேசத்துக்குக் காரணம் யாதெனில், அவர்களுடைய ஜாத்தும் சிபத்துகளுமான (குணியும் குணங்களுமான) உள்ளழகேயாம். நீ உற்று நோக்குவாயாகில் இந்த உள்ளழகு மூன்று வஸ்துக்களாலாவதென்பது புலப்படும். முதலாவது:—இல்மினாலுண்டாகிற அழகாம். இல்மாகிய அறிவும் ஆலிமாகிய அறிவாளனும் அழகுற்றுச் சிறந்து விளங்குவதினால் இல்மும் நேசிக்கப்படுகிறது, ஆலிமும் நேசிக்கப்படுகிறான். எவ்வளவுக்கு அறிவு அதிகமாயும் அறியப்படும் பொருள் அதிக சிறந்ததாயுமிருக்கிறதோ அவ்வளவாக அழகு அதிகரித்திருக்கும். அறிவுகளெல்லாவற்றினும் மிகச் சிறந்த அறிவு அல்லாகு தஆலாவை அறியும் அறிவேயாம். இன்னும் மலக்குகளையும் வேதங்களையும் றசூல்மார்களையும் நபிமார்களுடைய ஷரீஅத்துகளையும் வானம் பூமிகளின் ஆட்சியையும் துன்யா ஆகிறத்துகளையும் பொதிந்த அவனது திருச்சமூகத்தின் அறிவும் மிகச்சிறந்ததாம். சித்தீக்குகளுக்கும் நபிமார்களுக்கும் இந்த அறிவுகளில் நிறைந்திருந்த காரணத்தினாலேயே அவர்கள் நேசிக்கப்படுகிறவர்களாயிருக்கிறார்கள். இரண்டாவது:—வலிமையினால் உண்டாகிற அழகாம். இவர்கள் தங்கள் நப்சுகளைத் திருத்தி சீராக்குக் கொண்டுவருவதின்பேரிலும் அல்லாவுடைய அடியார்களைத் திருத்தி அவர்களை அடக்கி யாளுவதின்பேரிலும் துன்யாவுடைய வெளிப்படையான ராஜரீகத்தையும் தீனுடைய அந்தரங்கமான ராஜரீகப்பொருளையும் ஒழுங்குபடுத்திக் கோர்வையாக வைப்பதின் பேரிலும் வலிமை பெற்றிருந்தார்கள். மூன்றாவது:—உள்ளத்தின் துர்க்குணங்களான கெட்டதிகளையும் குற்றங்களையும் ஐபுகளையும் விட்டுச் சுத்தமும் தூய்மையும் வாய்ந்திருப்பதனால் உண்டாகிற அழகாம். இவர்களில் நேசிக்கப்படுவனவாயிருப்பவை அறிவும் வலிமையும் சுத்தமுமான இந்த சிபத்துகளேயன்றி இவர்களுடைய செயல்களல்ல. ஏனெனில் இந்த சிபத்துகளால் உண்டாகாத எந்தச் செயலும் அழகாகாது. எதுபோலெனில் நாட்டமில்லாமல் சமய ஒற்றுமையினால் சம்பவித்த அல்லது மறதியினால் சம்பவித்த எந்தச் செயலும் அழகாகாததுபோலென்க. இனி யார் இந்த சிபத்துகளில் அதிக சிறப்பத்தை அடைந்திருக்கிறார்களோ அவர்கள்மேல் நேசம் மிகவும் அதிகப்படும். இதனாலேயே ஜனங்களுக்கு அபூபக்கர் சித்தீக் றலி

யல்லாகு அன்கு அவர்கள்மீதுள்ள நேசமானது உவமையில் ஷாபியீ, அபூஹனீபா றஹிமஹுமல்லா இவர்கள்மீதுள்ள நேசத்தைக் காட்டிலும் அதிகப்பட்டிருக்கிறது. அபூபகர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்களின்மீதுள்ள நேசத்தைக்காட்டிலும் அம்பியா அலைகிமிஸ்ஸலாமவர்கள்மீதுள்ள நேசம் மிகவும் அதிகப்பட்டிருக்கிறது.

இப்போது அல்லாகு தஆலா நேசிக்கப்படுவதற்கு அருகன் என்பதையும் (இல்மும் வலிமையும் பரிசுத்தமுமான) இந்த மூன்று சிபத்துகளும் அவனிடம் சிறந்து விளங்குவதையும் நீ கவனித்துப் பார். ஏனெனில் மலக்குகளில்நின்றும் மனிதர்களில்நின்றும் முன்னோரும் பின்னோருமான இவர்கள் எல்லாருடைய இல்மும் அல்லாகு தஆலாஉடைய இல்முக்கு எதிரில் ஒரு பொருட்டுமல்ல என்ற இவ்வளவை அறியாத பேதைமனிதன் எவனு மிருக்கமாட்டான். அல்லாகு தஆலா எல்லாரையும் விளித்து உங்களுக்கு அறிவிற் கொஞ்சமே யொழிய அளிக்கப்படவில்லை என்று கூறியிருக்கிறான். மேலும் சர்வலோகத்தாரும் ஒன்றுகூடி அல்லாகு தஆலா எறும்பை அல்லது கொசுவைப் படைத்திருப்பதில் அவனுடைய இல்மும் ஹிக்மத்துமான ஆழ்ந்த நோக்கமென்ன என்பதைப் பூராவாகத் தெரிந்துகொள்ள நாடுவார்களாகில் அவர்களால் முடியாது. ஏதோ கொஞ்சத்தை அறிந்தார்களாகில் அதையும் அவனாலேயே அறிந்தவர்களாவார்கள். ஏனெனில் அந்த அறிவையும் அல்லாகு தஆலாவே அவர்களில் படைப்பதினாலென்க. அல்லாகு தஆலா அருளிச்செய்ததுபோல் அது வருமாறு:—மனிதனைப்படைத்தான். (பொருள்விளங்கப்புகலும்) விளக்கத்தை அவனுக்குப் படிப்பித்தான் என்பதே. அன்றியும் மனிதர்கள்முதல் மற்றும் சிருஷ்டிகள் அறிந்திருக்கும் அறிவானது அளவில் அடங்கினதாயும் அல்லாகு தஆலாஉடைய இல்மு எல்லையற்றதாயு மிருக்கிறது. சிருஷ்டிகளின் அறிவும் அவனைக்கொண் டாயிருக்கும்போது அதை நோக்க இது இத்தன்மையுடையதென்று அதனோடு இதைச்சேர்த்துப் பார்ப்பதெங்ஙனம்? ஆகவே எல்லாம் அவனறிவாகவே யிருக்கிறது. அவனறிவு சிருஷ்டிகளால் ஆனதல்ல. இனி வலிமையில் நோட்டமிடுவாயாகில் வலிமையும் நேசிக்கப்படுவதாம். இதனாலேதான் ஜனங்கள் அலிறலியல்லாகு அன்கு அவர்களுடைய வீரபராக்கிரமத்தையும் உமர்றலியல்லாகு அன்கு அவர்களுடைய அரசாக்ஷி சமர்த்தையும் நேசிக்கின்றார்கள். ஏனெனில் இவ்விரண்டும் வலிமையில் ஓர் வகை வலிமையாயிருப்பதினாலென்க. சகல சிருஷ்டிகளுக்கு மிருக்கிற வலிமையானது

அல்லாகு தஆலாவுடைய வலிமைக்கு முன்பாக ஒரு பொருட்டுமல்ல. மேலும் சகல சிருஷ்டிகளுக்கும் அல்லாகு தஆலா அளித்திருக்கும் அற்ப வலிமையினாலன்றி மற்றப்படி ஒன்றையும் செய்ய எவரும் ஏலாதவர்களாயிருக்கிறார்கள். ஒரு ஈயானது ஒரு வஸ்துவை அவர்களிடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டால் அதைத் திரும்ப வாங்கிக்கொள்ள அவர்களால் முடியாதபடி அவர்களை அவ்வளவு அசக்தராக்கிவிட்டான். ஆகவே அவனது வலிமை அத்தியந்த வலிமையாயிருக்கிறது. வானமும் பூமியும் அதிலுள்ள ஜின்னுகளும் மனிதர்களும் மற்றும் ஜீவராசிகளும் தாவரவஸ்துக்களும் இவை யாவும் அவனது வலிமையின் அடையாளமாம். இவைபோன்ற இன்னும் அளவிறந்த உலகங்களைச் சிருஷ்டிக்க அவன் வல்லமையுள்ளவனாயிருக்கிறான். பின்னர் வலிமை காரணமாக அவனையன்றி மற்றவரை எப்படி நேசிக்கலாம்? இனி ஐபுகளான குறைகளைவிட்டும் பரிசுத்தனாயிருக்க மனிதனுக்கு அவ்வளவு பூரணத்தன்மை எப்போது வாய்க்கப்போகிறது? முதலாவது அவன் ஒரு அடிமையாயும் அவன் இருப்பு தன்னைக்கொண்டாயிராமல் ஒருவனால் சிருஷ்டிக்கப்பட்டதாயு மிருப்பதே குறைவாம். இதைவிடப் பெரிய குறைவு என்ன இருக்கிறது? பின்பு அவன் தனது அந்தரங்கத்தையறியாமல் மூடனாயிருப்பது மற்றொரு குறைவாம். வேறு வஸ்துவை எப்படி அறியப்போகிறான்? அவன் மூளையில் ஒரு நரம்பு கோணினால் பயித்தியக்காரனாய்ப் போகிறான். இதற்குக் காரணம் என்ன என்பதை அறியமாட்டான். அதற்கு மருந்து அவன் முன்பாக இருந்து அதை அவன் அறியாமலிருக்கவும் கூடும். மனிதனுடைய அசக்தியையும் அறியாமை யென்னும் மடமையையும் எவ்வளவென்று கணக்கிட்டுப் பார்ப்பாயாகில் அந்த அசக்திக்கும் மடமைக்கும் முன்பாக அவனது வலிமையும் அறிவும் அற்பமாய்த் தோன்றும். அவர் சித்தீகாயிருந்தாலும் சரி. நபியாயிருந்தாலும் சரி. ஆகலால் எவனுடைய இல்மு என்னும் ஞானம் எல்லையற்றதாயும் மயக்கம், மடமை இவைகளுக்கு இடமில்லாததாயு மிருக்கிறதோ இன்னும் எவனுடைய குதுரத்து என்னும் வல்லமை பூரணத்தன்மையுள்ளதாயும் ஏழுவானம் பூமி முதலிய சர்வசிருஷ்டியும் அந்த வல்லமைக்குள் அடங்கினதாயு மிருக்கிறதோ அந்த நாயகனே எவ்வித குறைவுமில்லாத ஏகபரிசுத்தன். எல்லாவற்றையும் அவன் அழித்துவிட்டபோதிலும் அவனது பெருமைக்கும் அரசாங்கத்துக்கும் ஏதும் குறையுண்டாகாது. இன்னுமிவைபோன்ற நூறாயிரம் உலகங்

களை ஒரு இமைப்பொழுதில் சிருஷ்டிக்க அவன் சக்தியுள்ளவனே யாயினும் அதனால் அவனது பெருமையில் ஓரணுவும் அதிகரித்து விடாது. ஏனெனில் அதிகரித்தல் என்னும் பண்பு அவனைச் சார வழியில்லையாதலாலென்க. இன்னும் அவனது ஜாத்து, சிபத்துகளின் பக்கம் நாஸ்தியாகிய இல்லாமைக்கு வழியுண்டென்னும் தோஷத்தைவிட்டும் அவன் தூய்பவனாயிருக்கிறான். மேலும் தோஷமென்பதே அவன் விஷயத்தில் பொருந்தக் கூடியதல்ல. பின்னர் யாராவதொருவன் அவனையன்றி மற்றவரை நேசிப்பானாகில் அது அவனுடைய முழுமூடத்தனத்தால் உண்டான நேசமாம். வலிமை காரணமாக உண்டாகின்ற இந்த நேசமானது, உபகாரங்காரணமாக உண்டாகிற நேசத்தைக் காட்டிலும் மிகவும் சிறந்த நேசமாம்! ஏனெனில் உபகாரமாக அடைந்த செல்வத்தின் அதிகத்துக்கும் குறைச்சலுக்கும் தக்க அளவாக அந்த நேசம் அதிகப்படுவதாயும் குறைவதாயுமிருக்கும். வலிமை காரணமாக உண்டாகிற நேசமாயிருந்தால் எந்த நிலைமையிலும் அந்த நேசம் முற்றி நிறைவை அடைந்திருக்கும். இதன் நிமித்தமே தாவூது அலைகிஸ்ஸலாமவர்களுக்கு "ஓ தாவூதே! எவனொருவன் (நரகசுவர்க்கங்களின்) அச்சத்துக்காகவும் [illegible]க்காகவு மல்லாமல் எனது எஜமானத்துவ பாத்தியத்தை இ[illegible]ற்காக என்னை வணங்குகின்றானோ அவனே என்னிடத்தில் அதிக நேசமுள்ள அடிமை" என்று ஒஹிவந்தது. இதுவுந்தவிர ஜபூர்வேதத்தில் "சுவர்க்க நரகங்களுக்காக என்னை வணங்குகிறவன் எவனோ அவனைப்பார்க்கிலும் பெரிய அநியாயக்காரன் எவனிருக்கிறான்" என்றும், "சுவர்க்க நரகங்களை நான் படைக்காமற்போனால் வணக்கத்துக்கு நான் அருகனல்லனோ?" என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

ஐந்தாவது காரணம்:—சேர்பொருந்தல் என்னும் ஒற்றுமையினால் உண்டாகிற நேசமாம். மனிதனுக்கும் அல்லாகு தஆலா உடன் சொந்தமான ஓர் ஒற்றுமையுண்டு. ரூஹானது என் ரப்புடைய அம்ரில்நின்று முள்ளதெனச் சொல்லும் என வந்திருப்பது இந்த ஒற்றுமையைக் குறித்த சயிக்கினையாயிருக்கிறது. இன்னும் "ஆதமை அல்லாகு தஆலா திடனாகத் தன் சூரத்தில் படைத்தான்" என்றதும் இதைக் குறித்த சயிக்கினையேயாம். இன்னும் "என் அடியான் என்னிடம் நெருங்குகின்றான். அப்போது நான் அவனை நேசிக்கின்றேன். நான் அவனை நேசித்தால் அவனுக்கு நான் காதாயிருக்கிறேன், கண்ணாயிருக்கிறேன், நாவாயிருக்கிறேன்" என்று அல்லாகு தஆலா சொல்லியிருப்பதும், அவன் மூசா அலைகிஸ்ஸலாமவர்களை

விளித்து ஓ மூசாவே! நான் வியாதிப்பட்டிருந்தேன், நீர் என்னை வினவ வரவில்லை என்றபோது மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் "என் ஆண்டவனே! ஜகத்கர்த்தாவாயிருக்கிற நீ எப்படி வியாதிபடுவாய்" என்று கேட்டதற்கு "இன்ன அடியான் வியாதிப்பட்டிருந்தான் நீர் அவனை வினவப் போயிருந்தால் என்னை வினவவந்தவரா யிருப்பீர்" என்று சொன்னான் என்பதும் இவையாவும் இந்த ஒற்றுமையைக் குறித்த இஷாராக்களேயாம். ஆதமுடைய ஸூரத்தை (ரூபத்தை) அல்லாகு தஆலாவுடன் சம்பந்தப்படுத்திச் சொல்லப்பட்டிருக்கிற ஹதீசுக்குக் கிதாபின் ஆரம்பமாகிய உன்வானில் கொஞ்சம் விவரம் கூறப்பட்டிருக்கிறது. இதைப்போன்ற மற்றும் பொருட்களைக் கிதாபுகளில் விஸ்தரித்துச் சொல்லமுடியாது. ஜனங்களுடைய புத்திகள் அப்பொருட்களை விளங்கிக்கொள்ள சக்திபெறமாட்டா. மேலும் நன்னறிவாளரில் அநேகம்பேர் இதில் இடறிக் குப்புற விழுந்துபோயிருக்கிறார்கள். இன்னும் சிலர் ஸூரத்து என்பதற்கு வெளிரூபமேயன்றி வேறு பொருளில்லையென மருண்டு அவனைத் தஷ்பீஹு செய்ய (அதாவது ஆதமுக்கு எப்படியோ அப்படியே அவனுக்கும் முகமுண்டு கையுண்டு காலுண்டு என்று ஒப்பிடத்) தலைப்பட்டார்கள். இன்னும் சிலர் ஹுலூல் என்னும் ஊடே நுழைதலும் இத்திஹாது என்னும் இரண்டறக் கலத்தலுமான எண்ணத்தில் விழுந்தார்கள். இதை விளங்கிக்கொள்வது கஷ்டம்.

இந்த விவரத்தினால் நாடிய கருத்தென்னவென்றால், நேசத்துக்குக் காரணங்கள் இவை என்று நீ தெரிந்துகொண்டால் அல்லாகு தஆலாவுடைய நேசத்தைச் சார்ந்தேயன்றி உண்டாகிற ஒவ்வொரு நேசமும் அறிவின்மையால் உண்டாகிற நேசமென்று உனக்கு ஏற்படுமென்பதுதான். இன்னும் ஒருவன் தன் இனத்திற் சேராதவனை எப்படி நேசிக்க முடியும் என்றும், அல்லாகு தஆலா நம் இனத்திற் சேர்ந்தவனல்லவாதலால் அவனை நாம் நேசிப்பதென்பது அசாத்தியம் என்றும், அவனுக்கு வழிபடுவதே அவனை நேசிப்பதற்குப் பொருள் என்றும் சொல்லுகிற முத்தகல்லிம் என்னும் வாதியின் பேதைமன்றும் இதனால் உனக்குத் தெரியலாகும். கதியற்ற இந்தப் பேதையான வாதி நேசமென்பதற்கு ஸ்திரீகளை நேசிக்கிற இச்சையையன்றி வேறுபொருளை அறியவில்லை. இந்த இச்சையானது இனத்தை நாடுமென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் நாம் விவரித்த அந்த நேசமானது வெளிரூப சம்பந்தத்தையல்ல உள்ளழகையும் நிறைவான சிறப்பையும் நாடும், ஏனெனில் நபியை ஒருவன் நேசிக்கிறது

ஏதனாலென்றால் அவர்களும் தன்னைப்போல் தலையும் முகமும் கையும் காலும் உள்ளவர்களா யிருக்கிறதினால் அல்ல. மேலும் தனக் கிருப்பதுபோல் அவர்களுக்கும் ஆன்மாவும் அறிவும் நாட்டமும் பேச்சும் கேள்வியும் பார்வையுமான இந்த உட்பொருட்கள் இருந்த சம்பந்தத்தினாலும் இந்தப் பண்புகள் அவர்களில் விசேடித்து நிறப் பத்தை அடைந்திருந்ததினாலுமேயாம். இந்த சம்பந்தத்துக்கு மூலம் (அவர்களிட மிருப்பதுபோல) இவனிடத்திலு மிருக்கிறது. என்றா லும் இப்பண்புகளின் நிறப்பத்தில் (அவர்களுக்கும் இவனுக்கும்) அளவிறந்த வித்தியாசமிருக்கிறது. இவ்வளவான ஒற்றுமை சம்பந் தம் உண்டென்பதை எல்லாரும் ஒத்துக்கொள்வது மன்றி உணர்ந் துங்கொள்ளுவார்கள். இந்த ஒற்றுமையின் இரகசியமும் எதார்த்த மும் இதுவென்பதை அவர்கள் அறியவில்லையானாலும் சரியே. ஆதமை அல்லாகு தஆலா திடனைத் தன் ரூபத்தில் படைந்தான் என்று வந்திருப்பது அந்த இரகசியத்தைக் குறித்த சங்கதியேயாம்.

### எந்த இன்பமும் அல்லாகு தஆலாவைத் தெரிசிக்கும் இன்பத்துக்கு நிகரல்லவென்பதை விளக்கல்.

அறிந்துகொள்:—அல்லாகு தஆலாவைத் தெரிசிக்கும் இன்பத் துக்குஎந்தஇன்பமும் நிகரல்லவென்ற இது எல்லாமுஸ்லிம்களும்நாவி னால் மாத்திரம் மொழிகின்ற கொள்கையாயிருக்கிறது. என்கினும் ஒரு திசையில் இல்லாததும் ரூபமில்லாததும் நிறமில்லாததுமான ஒரு பொருளைத் தெரிசிப்பதில் இருக்கிற இன்பம் என்ன? என்று இதன் உண்மையைத் தங்களுக்குள் தேடிப்பார்ப்பார்களாகில் அதை அறியமாட்டார்கள். ஆனால் ஷரகில் அப்படி வந்திருக்கிறதென்ற அச்சத்தினால் (அதை மறுக்கக்கூடாத நிமித்தம்) நாவினால் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்களின் உள்ளத்தில் அதைப்பற்றி ஒரு ஆசையுமிராது. ஏனெனில் ஒருவன் தான் அறியாத பொருளை எப்படி ஆசிப்பான்? எப்படியும் இந்த இரகசியத்தின் உண்மையை இம்மாதிரியான கிதாபில் விளக்கிக்காட்டுவது கஷ்டமேயாம். என் றாலும் நாம் ஒரு சயிக்கினையால் இதன் இலக்கணத்தைச் சுருக்கிக் கூறுவோம். அறிந்துகொள்:—இது நான்கு அஸ்லுகள் என்னும் அடிப் படைகளின்பேரில் எழுப்பப்பட்டிருக்கிறது. முதலாவது:—அல்லாகு தஆலாவை அறியும் இன்பத்தினும் அவனைத் தெரிசிக்கும் இன் பம் அதிகமென்றறிவது. இரண்டாவது:—அல்லாகுதஆலாவை அறி யும் இன்பம் அவனல்லாத மற்றவைகளை அறியும் இன்பத்தினும் மிக அதிகம் என்றறிவது. மூன்றாவது:—மனதுக்கு அறிவிலும்

ஞானத்திலும் இன்பமும் சுகமும் இருக்கிறதென்றும் அந்த இன்ப சுகங்களில் கண்ணுக்கும் சரீரத்துக்கும் யாதொரு பங்கில்லையென்றும் அறிவது. நாலாவது:—கண் காது முதலிய பஞ்சபுலன்களுக்குண்டாகிற ஒவ்வொரு இன்பத்தைவிட மனதுக்கே உரித்தாயுண்டாகிற இன்பம் மிக்க அதிகமாயும் மேலிட்டதாயும் பெலப்பட்டதாயு மிருக்கும் என்றறிவது. ஒருவன் இவைகளையெல்லாம் அறிந்தானுகில் அவனுக்கு ஹக்கு-தஆலாவின் தெரிசனையைவிட அதிக இன்பமான ஒரு பொருள் இருக்கவிடமில்லை என்பது அகத்தியம் தெரியலாகும்.

முதலாவது அஸ்லு:—அறிவில் மனதுக்குச்சுகமுண்டென்பதை அதாவது ஒன்றை அறிவதினால் தேகத்துக்கில்லாமல் மனதுக்கு மாத்திரம் ஓரின்ப முண்டென்பதை நீ உணர்வதாம். அறிந்துகோள்:—மனிதனில் பலதத்துவங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் பிரத்தியேகமான ஒவ்வோர் காரியத்துக்காக உண்டாக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தத்துவத்தின் சுபாவம் அக்காரியத்தையே விரும்பும். அதன் சுபாவம் விரும்பினதில் அதற்கு இன்பமிருக்கிறது. உதாரணமாக:—கோபமென்னும் தத்துவமானது ஒன்றை அடக்கி மேற்கொள்வதற்காகவும் பிரத்தி செய்வதற்காகவும் படைக்கப்பட்டிருக்கிறது. அப்படி மேற்கொள்வதிலும் பதில் செய்வதிலுமே அதற்கு இன்பமிருக்கிறது. இச்சையென்னும் தத்துவமானது உண்வைச் சம்பாதிப்பதற்காக உண்டாக்கப்பட்டிருக்கிறது. அப்படிச் சம்பாதிப்பதில் அதற்கு இன்பமிருக்கிறது. கேள்வி பார்வை முதலிய மற்றும் தத்துவங்களையும் இதன்படி யோசித்துக்கொள். ஒவ்வொன்றும் ஓர் இன்பத்தையுடையதாயிருக்கிறது. இந்த இன்பங்கள் ஒன்றுக்கொன்று பேதப்பட்டனவா யிருக்கின்றன. ஏனெனில் கோபஞ்செலுத்துவதிலிருக்கிற இன்பமானது போகஞ்செய்வதிலிருக்கிற இன்பத்துக்கு வேறாயிருக்கிறது. அன்றியும் இந்தத் தத்துவங்கள் பெலத்திலும் ஒன்றுக்கொன்று பேதப்பட்டு சிலது அதிக பெலமுள்ளதாயும் சிலது அற்ப பெலமுள்ளதாயும் இருக்கிறது. ஏனெனில் நல்ல வாசனைகளை முகர்வதில் மூக்குக்கிருக்கிற இன்பத்தைவிட நல்ல ரூபங்களைப் பார்ப்பதில் கண்ணுக்கிருக்கிற இன்பம் மேலிட்டதா யிருக்கிறது. பின்னர் இவனுடைய மனதிலும் ஒரு தத்துவம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அதை அக்லு என்றும் நூரு என்றும் சொல்லுவார்கள். நினைவுக்கும் ஐயறிவுகளுக்கும் புலப்படாத வஸ்துக்களை அறிவதற்காகவும் உணர்வதற்காகவும் அது படைக்கப்பட்டது. அதன் சுபாவமும் அந்த வஸ்துக்களைச்

சேர்ந்ததுதான். அவைகளிலேயே அதற்கு இன்பமிருக்கிறது. அந்த அக்லு என்னும் தத்துவத்தினாலேயே அவன் இந்த ஜகம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்றும் இதைச் சிருஷ்டிக்க வல்லமையும் ஆழ்ந்த ஞானமும் உள்ள ஒரு கர்த்தா அவசியமென்றும் அறிகின்றான். இதேபோல் அந்த சிருஷ்டிகனுடைய ஸிபத்துகளையும் சிருஷ்டிப்பில் அவனது ஆழிய பூராயமான நோக்கத்தையும் இந்த அக்லினாலேயே அறிகின்றான். இவையெல்லாம் ஐயறிவுகளிலும் நினைவிலும் வராது. இன்னு மிதனாலேயே நுண்ணிய வித்தைகளை அறிந்து அவைகளை வெளிப்படுத்துகின்றான். எதுபோலெனில், பேசுவதற்கு மூலமான பாஷையை அமைப்பதும் கல்விநூல்களை இயற்றுவதும் அங்ககணிதத்தையும் மற்றும் நுண்ணறிவுகளான சாஸ்திரங்களையும் சமைப்பதும்போலென்க. அவனுக்கு இவையெல்லாவற்றிலும் இன்பமிருக்கும். எந்தமட்டுக்கென்றால், கேவலமும் அற்பமுமான ஒரு பொருளின் அறிவு அவனுக் கிருப்பதைப்பற்றி எவரும் அவனைப் புகழ்ந்தால் சந்தோஷிக்கிறான். அறியாதவனென்றால் விசனப்படுகிறான். ஏனெனில் அறிவானது தனது சிறப்புக்குக் காரணமென்று அவன் அறிந்திருப்பதினாலென்க. மேலும் அவன் அறிந்திருக்கிற அற்ப வித்தையாகிய சதுரங்க விளையாட்டை மற்றொருவனுக்குப் படித்துக் கொடுக்க அவன் நாடும்போது எவரும் அதை அவனுக்குப் படித்துக் கொடுக்காதே என்றுசொல்லி எத்தனையோ ஆணையிட்டாலும் அப்படிப் படித்துக்கொடுக்காமல் மவுனமாயிருக்க அவனால் முடிகிறதில்லை. ஏனெனில் அற்ப வித்தையில் அவனுக்கு உண்டாயிருக்கிற அவ்வளவு சந்தோஷத்தினாலும் இன்பத்தினாலும் அவன் அதைக் கற்றுக் கொடுக்காமல் சும்மாயிருக்கச் சாத்தியப்படாதவனாய்ப் போகிறான். அதனால் மற்றவர்மீது பெருமை பாராட்ட நாடுகிறான். அறிவு ஏன் இன்பப் பொருளாகாது? மனிதன் அதைக்கொண்டு மற்றவர்மீது ஏன் பெருமை பாராட்டமாட்டான்? அறிவானது அல்லாகுதஆலா உடைய ஸிபத்துகளில் ஒன்றாயிருக்கிறதே. மனிதனுக்குத் தனது சிறப்பிலும் அதிக இன்பப்பொருள் என்ன இருக்கிறது? அல்லாகுதஆலாவுடைய ஸிபத்துகளினின்றும் உண்டாகிற ஒரு சிறப்பைவிட அதிக பெருமைபொருந்திய சிறப்பு ஏது இருக்கிறது? ஆகவே இந்த அஸ்லில் கூறிவந்த விவரத்தினால் மொத்தத்தில் மனதுக்கு அறிவினால் ஒரு இன்பமிருக்கிறது என்றும் அந்த இன்பத்தில் கண்ணுக்கும் சரீரத்துக்கும் யாதொரு பங்கில்லையென்றும் நீ தெரிந்து கொண்டாய்.

இரண்டாவது அஸ்லு:—மனதால் அறியப்படுகிற பொருட்களின் இன்பமானது ஐம்புலன்களால் அறியப்படுகிற பொருட்களின் இன்பத்தைவிடவும் இச்சைநுகர்தலின் இன்பத்தைவிடவும் மிக்கப் பெலமுள்ளது என்பதை நீ உணர்வதாம். ஒருவன் சதுரங்கம் விளையாடிக்கொண்டிருந்தால் ஒருநாளெல்லாம் உணவருந்தாமலே யிருந்துவிடுகிறான். உணவருந்திக்கொள் என்று யாராவது அவனுக்குச் சொன்னால் அவன் உண்ணாமல் அப்படியே விளையாடிக்கொண்டிருக்கிறான். இதனால் சதுரங்கம் விளையாடுவதிலும் அதில் கெலிப்பதிலும் அவனுக்குண்டாகிற இன்பமானது உணவருந்துவதின் இன்பத்தைவிட மிக்க உறுதிப்பட்டிருக்கிறதென்றும் அதனாலேயே அவன் அதை முற்படுத்துகிறான் என்றும் நாம் அறிகின்றோம். பின்னர் இரண்டு இன்பங்கள் ஏற்பட்டு அதில் ஒன்றை முற்படுத்துவதினால் அந்த இன்பம் அவனுக்கு அதிக உறுதிப்பட்டிருக்கிறதென்று நமக்குத் தெரிகின்றது. இதை நீ அறிந்துகொண்டாயாதலால் இப்போது இதையும் தெரிந்துகொள். அதாவது:—எவன் அதிக புத்திமானாயிருக்கிறானோ அவனுக்கு அந்தரங்க தத்துவங்களின் இன்பம் மிகவும் அதிகரித்திருக்கும், ஏனெனில், ஒரு புத்திமானை நோக்கி "நீ பாதம் ஹல்வாவும் பொரித்த கோழியிறைச்சியும் தின்பதையோ அல்லது ஒரு சத்துரு அடங்கும்படி ஒரு காரியத்தைச் செய்து ஒரு அதிகாரத்தை ஒப்புக்கொள்வதையோ இந்த இரண்டில் எதை எடுத்துக்கொள்ள உனக்குச் சம்மதம் என்று கேட்டால் அவன் அதிகாரத்தையும் மேற்கொள்ளலையுமே தெரிந்துகொள்ளுவான். ஆனால் அவன் ஒரு சிறுவனைப்போல் இன்னும் புத்திபூர்த்தியாகாதவனாயிருந்தால் அல்லது பித்தனைப்போல் புத்தியொழிந்தவனாயிருந்தால் அதைத் தெரிந்துகொள்ளமாட்டான். பின்னர் எவனில் ஊணாசையும் அதிகாரப் பிரியமும் படைக்கப்பட்டிருக்கிறதோ அவன் அதிகாரத் தேட்டத்தை முற்படுத்துவானாகில் இந்த இன்பமே அவனில் அதிகப் பெலப்பட்டிருக்கிறதென்று நாம் அறிகின்றோம். இதேபோல் கணிதசாஸ்திரத்தையோ அல்லது அங்ககணிதத்தையோ அல்லது வயித்திய நூலையோ அல்லது ஷரகுடைய இல்மையோ அல்லது இன்னும் எதையோ வாசித்தறிந்த ஒரு கல்விமானுக்கு அதில் ஓர் இன்பமிருக்கும். அந்த அறிவு குறைவாயிராமல் நிறைவா யிருக்குமாகில் எல்லா இன்பங்களையும்விட அந்த இன்பத்தை முற்படுத்துவான். மேலும் ஆட்சி அதிகாரம் இராச்சியபரிபாலனம் இவைகளையும்விட அதை முற்படுத்துவான்.

ஆனால் அறிவில் குறையுள்ளவனாயிருந்தால் அதன் இன்பத்தைப் பூர்த்தியாக அடைந்திருக்கமாட்டான். பின்னர் இதனால் அறிவின் இன்பமானது மற்றும் எல்லா இன்பங்களைப்பார்க்கிலும் மிகவும் மேலிட்டது என்று தெரியலாயிற்று. ஆயினும் இது யாருக்கென்றால் எவன் அறிவில் குறைவில்லாமல் பூர்த்தி யடைந்தும் இரண்டு இச்சைகளும் தன்னில் படைக்கப்பட்டும் இருக்கின்றனவோ அவனுக்கே என்க. ஏனெனில் ஒரு சிறுவன் ஸ்திரீபோக இன்பத்தை விடவும் அதிகார இன்பத்தை விடவும் கோலி விளையாட்டின் இன்பத்தை முற்படுத்தினபோதிலும் அந்த விளையாட்டிச்சையோடு ஸ்திரீ போக இச்சை அல்லது அதிகார இச்சை அவனுக்கு இருக்கிற பக்ஷம் அதையே முற்படுத்துவான் என்கிற அத்தாக்ஷியினால் அவனுக்கு ஸ்திரீபோக இச்சையும் அதிகார இச்சையும் இல்லையென்றும் அப்படி இல்லாத குறைவினாலேயே அவன் விளையாட்டை முற்படுத்துகிறான் என்றும் நாம் சந்தேகமின்றி தீரமாகச் சொல்வோம்.

மூன்றாவது அஸ்லு:—அல்லாகு தஆலாவை அறிகின்ற அறிவானது மற்றெல்லாவற்றின் அறிவுகளைவிட மிகவும் இன்பமுள்ளதென்று நீ உணர்வதாம். எப்போது அறிவும் ஞானமும் இன்பமுள்ளதென்று உனக்குத் தெரியவந்ததோ அப்போது அந்த அறிவுகளிற் சிலது அதிக இன்பமுள்ளதென்பதில் சந்தேகமிராது. ஏனெனில் அறியப்படுகின்றபொருள் எவ்வளவு அதிக சிறப்பும் அதிக பெருமையு முள்ளதா யிருக்குமோ அவ்வளவாக அதை அறிகிற அறிவும் அதிக இன்பமுள்ளதாயிருக்கும். உதாரணமாக:—சதுரங்க விளையாட்டை அமைக்கும் அறிவானது அதை விளையாடும் அறிவினும் அதிக இன்பமுள்ளதா யிருக்கிறது. இராச்சிய பாதுகாப்பின் அறிவும் மந்திராலோசனையான அறிவும் விவசாயத்தொழில், தையல் வேலை இவைகளைப்பற்றின அறிவைவிட மிகவும் இன்பமுள்ளதா யிருக்கிறது. ஷாருடைய பொருளையும் அதன் இரகசியங்களையும் அறிகின்ற அறிவானது வானசாஸ்திரம் இலக்கியம் இவைகளின் அறிவைவிட அதிக இன்பமுள்ளதா யிருக்கிறது. மந்திராலோசனையில் மந்திரியுடைய காரியத்தின் மர்மங்களை அறிகின்ற அறிவானது மற்றும் பாஜாரிகளுடைய காரியத்தின் மர்மங்களை அறிவதினும் அதிக இன்பமுள்ளதாயிருக்கிறது. அரசனுடைய இரகசியங்களை அறிவது மந்திரியினுடைய இரகசியங்களை அறிவதினும் அதிக இன்பமுள்ளதாயிருக்கிறது. ஆகவே அறியப்படுகிறபொருள் எவ்வளவு அதிக சிறந்திருக்கிறதோ அவ்வளவாக அதை அறிகின்ற அறிவும் அதிக

இன்பமுள்ளதாயிருக்கும். பின்பு நீ நோட்டமிட்டுப்பார். தோன்றியுள்ள எந்தப்பொருளாவது அல்லாகு தஆலாவைப்போல் அதிக மேன்மையும் அதிக கனதியும் அதிக பூரணத்துவமானசிறப்பு முள்ளதாயிருக்கிறதா? எல்லாச் சிறப்புகளையும் அழகுகளையும் சிருஷ்டித்தவன் அவனாயிருக்கின்றானே. இராச்சியத்தின் பாதுகாப்பில் எந்த அரசனுடைய ஆளுகையாவது வானம் பூமிகளின் அரசாக்ஷியிலும் இவ்வுலக அவ்வுலக காரியங்களின் கோர்வையிலும் அல்லாகு தஆலா ஆளுகிற ஆளுகைக்குச் சமானமாயிருக்கிறதா? எந்தச் சமூகமாவது அல்லாகு தஆலாவுடைய சமூகத்தைப்போல் அதிக அழகும் அதிக சிறப்புமுள்ளதாயிருக்கிறதா? இல்லையென்றால், பின்னர் அகக்கண் திறக்கப்பட்டு இவ்வுலக இரகசியங்களை அறிவதிலும் அதிக நல்லவிதமாக அவ்வுலக இரகசியங்களை அறிந்தவனுக்கு அல்லாவுடைய சமூகத்தின் தெரிசனையைவிட மற்றொன்றின் தெரிசனை எப்படி அதிக இன்பமுள்ளதாகும்? பின்னர் இதனால் ஏற்பட்டதென்னவென்றால், அல்லாகு தஆலாவை அறிவதும் அவனுடைய சிபத்துகளை அறிவதும் அவனுடைய இராஜரீகத்தை அறிவதும் அவனது நாயகத்தன்மையின் இரகசியங்களை அறிவதுமான இந்த அறிவு மற்றெல்லா அறிவுகளையும்விட அதிக இன்பமுள்ளது என்பதே. ஏனெனில் இந்த அறிவினால் அறியப்படுகிறபொருள் மற்றும் அறியப்படுகிற பொருட்களெல்லாவற்றிலும் அதிக சிறந்ததாயிருப்பதினாலென்க. மேலும் அவனை அதிக சிறந்தவன் என்று சொல்வதுங்கூட சொற்பிழையும் பிசகுமாயிருக்கிறது. ஏனெனில் எந்தப் பொருளையாவது அவனோடு சேர்த்துப் பார்ப்பாயாகில் நீ அதைச் சிறந்தது என்றுசொல்வதற்கு அது தகுதியுடையதாகாது. அப்படி ஆகிறபக்ஷம் அதைவிட அவன் அதிக சிறந்தவன் என்று சொல்லக்கூடுமா யிருந்தது. ஆதலால் ஆரிபாகிய ஞானி இவ்வுலகத்தில் எப்போதும் ஒரு பெரிய சுவர்க்கத்திலிருக்கிறான். அந்தச் சோர்க்கத்தின் விசாலமானது வானம் பூமிகளின் விசாலத்துக்கு நிகரானது. மேலும் வானம் பூமிகளின் விசாலத்திலும் அதன் விசாலம் அதிகமாயிருக்கும். ஏனெனில் அவைகளின் விசாலத்துக்கு ஓர் முடிவு உண்டு. மஃரிபத்தென்னும் மைதான வெளியோ எல்லையற்றதாயிருக்கிறது. ஆரிபுடைய காக்ஷி ஸ்தானமாகிய தோட்டம் கரையோரமில்லாதது. வானம் பூமிகளுக்குக் கரையோரமுண்டு. இந்தத் தோட்டத்தின் கனிகள் பறிக்கப்படுவனவுமல்ல புசிக்கத் தடைசெய்யப்படுவனவுமல்ல. மேலும் எப்போதும் அப்படியே

இருக்கும். (புகிப்பவருக்கு) அதன் கனிகள் அடுத்திருப்பவைகள்
அரிபுக்குத் தன்னிலேயே இருக்கிற ஒருபொருளைக்காட்டிலும் அ
னுக்கு மிகவும் அடுத்திருக்கிற பொருள் வேறு என்ன இருக்கிறது
இந்தச் சொர்க்கத்தில் தடை, பகை, பொறுமை இவை வருவதற்
வழியில்லை. ஆரிபு எவ்வளவு அதிகமாக அறிந்தவனாகின்றானோ அ
வளவாக அவனுக்கு இன்பமும் நேசமும் அதிகரிக்கும். இன்னுப
இந்தச் சொர்க்கமானது இதில் இருப்பவர்களின் ஏராளத்தினா
நெருக்கமாகாமல் விசாலிக்கின்ற தன்மையுள்ளதாயிருக்கும்.

நாலாவது அஸ்லு:—அறிவின் இன்பத்தைவிட காட்சியின் இன்
பம் மிகவும் அதிகரித்திருக்குமென்று நீ உணர்வதாம். அறிந்
கொள்:-அறிதல் என்பது இரண்டுவிதப்பட்டிருக்கிறது. ஒன்று: நிற
களும் வடிவங்களும்போல் நினைவில் வருவதாம். மற்றொன்று: அ
லாகு தஆலாவும் அவன் சிபத்துகளும்போல் புத்தியினால் அறியப
படுவதும் நினைவில் வராததுமாம். மேலும் உன் சக்தியும் அறிவுட
நாட்டமும் ஜீவியமுமான சிபத்துகள்போன்ற இவற்றிற்கெல்லாட
நிறமும் ரூபமும் இல்லையாதலால் இவை நினைவில்வரமாட்டா. அன்
யும் கோபம், ஆசை, இச்சை, சுகம், துக்கம் இப்பண்புகளெல்லா
நிறமும் ரூபமும் உள்ளவை அல்ல. ஆதலால் இவைநினைவில் அமைட
தில்லை. புத்தியே இவை யெல்லாவற்றையும் உணர்கின்றது. எத
வொன்று நினைவில் அமைகின்றதோ அதை நீ காக்ஷிப்பது இரண்
விதமாயிருக்கிறது. ஒருவிதம்:—உன் கண்ணுக்கெதிரே இல்லாத ஒ
பொருளை இதோ நான் அதைப்பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்
நீ சொல்லக்கூடியவிதமாக அந்தப் பொருள் உன் நினைவில் ரூபிகரி
துத் தோன்றுவதாம். இது அற்ப காக்ஷியாயிருக்கிறது. மற்றொ
விதம்:—அந்தப்பொருள் உன் கண்ணுக்கெதிரே இருப்பதாம். இத
பரிபூரணக் காட்சியாகும். தான் ஆசைகொண்ட மாஷூக்கைத் தன
கண்ணால் பார்க்கும்போதுள்ள இன்பமானது அவன் ரூபம் தனத
நினைவுக்குத் தோன்றும்போதுள்ள இன்பத்தைவிட அகத்தியப
மிகவும் அதிகமாயிருக்கும். அப்படி இன்பம் அதிகப்படுவதான
நினைவுக்குத் தோன்றுகிற ரூபத்தினும் கண்ணுக்குத் தோன்றுகி
ரூபம் வேறாகப் பேதப்பட்டு அல்லது அதிக அழகுபட்டு இருக்கி
தென்றல்ல. மேலும் நினைவில் தோன்றுகிற அந்த ரூபமே கண்ணு
கும் தோன்றுகிறது. பின்பு எதனால் இன்பம் அதிகப்படுகிறதென
றால், அப்போது அந்த ரூபம் எவ்வித மறைவுமின்றி மிகவும் துலங
விளங்குவதினாலேயாம். உதாரணமாக:—பூமியின்மீது சூரிய வெளி

சம் பர்வீப் பிரகாசமுற்றிருக்கிற நேரத்தில் நீ ஆசைகொண்ட உன் மாஷூகைப் பார்ப்பாயாகில் அந்த இன்பம் நீ சூரியோதயத்திற்கு முன் அவளைப் பார்க்கும் இன்பத்தைவிட மிகவும் அதிகமாயிருக்கக் காண்பாய். அப்படியிருப்பது ரூபபேதத்தினுல் அல்ல. மேலும் அப்போது அந்த ரூபம் கொஞ்சமும்' மறைவில்லாமல் அதிக் துலக்கமுற்றிருப்பதினுலேயாம். இதேபோல் எதுவொன்று நினைவில் அமையாததாயும் புத்தியினுல் அறியப்படுவதாயும் இருக்கிறதோ அதுவும் இருவகுப்புள்ளதா யிருக்கிறது. ஒன்று மஃரிபத்தாகிய ஞானம் என்று சொல்லப்படுகிறது. இதற்குப்பின் ஒரு வகுப்பிருக்கிறது. அது ரூயத்து, அல்லது முஷாஹதா அல்லது தீதார்(தெரிசனம்) என்றுசொல்லப்படுகிறது. நினைவினது காட்சியைவிடக் கண்ணினது காட்சிஎப்படி அதிகதுலக்கமாயிருக்கிறதோ அப்படியே மஃரிபத்து என்னும் ஞானத்தைவிட ரூயத்து என்னும் தெரிசனம் அதிக துலக்கமாயிருக்கும். இன்னும் எப்படிக் கண்ணை மறைக்கின்ற இரெப்பைகள் கண்காட்சிக்கு மாத்திரம் தடையாவதே யன்றி நினைவின் காட்சிக்குத் தடையாவ தில்லையோ அப்படியே மனிதனுனவன் மண் தண்ணீர் (முதலிய சதுர்ப்பூதங்களான) இவைகளின் சேர்க்கையா லாக்கப்பட்ட இந்தத் தேகத்துடன் சம்பந்தப்பட்டும் இவ்வுலக இச்சைகளில் பராக்குற்று மிருப்பது ரூயத்து என்னும் தெரிசனைக்குத்தடையாகுமேயன்றி மஃரிபத்துஎன்னும் ஞானத்துக்குத் தடையாகாது. கண்ரெப்பை திறக்கப்படாதவரையில் கண்காட்சியுண்டாகாததுபோல் மனிதனுக்கு இந்தச் சம்பந்தமும் பராக்கும் நீங்காதவரையில் ரூயத்து என்னும் தெரிசனம் உண்டாகாது. இதனுலேதான் அல்லாகு தஆலா மூசா அலைகிஸ்ஸலாமவர்களை நோக்கி லன்தாரனீ நீர் என்னைப் பார்க்கவே மாட்டீர் என்று சொன்னுன். பின்னர் தெரிசனை அதிக துலக்கமாயும் பரிபூரணமாயு மிருந்தால் அகத்தியம் அதன் இன்பம் மிகவும் அதிகமாகவே யிருக்கும். எதுபோலெனில் நினைவின் காட்சியிற் பார்க்கிலும் கண்காட்சியில் அதிக இன்பமிருப்பதுபோலென்க.

இன்னுமறிந்துகொள்:—விந்து எப்படி மனிதனுகிப் பூரணத் தன்மையை அடைகின்றதோ இன்னும் விதை எப்படி மரமாகி நிறைவை அடைகின்றதோ அப்படியே எதார்த்ததில் இந்த மஃரிபத்தாகிய ஞானமே அவ்வுலகத்தில் வேறு நிலைமையில் ஆய்விடுகின்றது. அந்த நிலைமைக்கும் முந்திய நிலைமைக்கும் நெருங்கிய சம்பந்தம் ஒன்றுமிராது. அது மிகவும் நிறைவான நிலைமையில் மாறிவிடும்,

இந்த மாறலால் அது மிகவும் பிரகாசமுற்றுத் துலங்கும். அதற்கு முஷாஹதா என்றும் நஜரு என்றும் தீதார் என்றும் சொல்லுகிறார்கள். ஏனெனில் தீதார் என்பதற்குப் பரிபூரண உணர்ச்சியே பொருளாதலாலென்க. இந்த உணர்ச்சியின் பரிபூரணத்தன்மையே இந்த முஷாஹதா என்னும் தெரிசனையாயிருக்கிறது. இதனாலேதான் இவ்வுலகத்தில் மஃரிபத்தான ஞானம் திசையைத் தேடாததுபோல் அவ்வுலகத்தில் ரூயத்து என்னும் தெரிசனையும் திசையைத்தேடாதென்றது. ஆதலால் மஃரிபத்தென்னும் ஞானமே ரூயத்து என்னும் தெரிசனைக்கு வித்தாயிருக்கிறது. எவனுக்கு மஃரிபத்தில்லையோ அவன் சதாவாகத் தெரிசனைக்குத் தடைப்பட்டிருக்கின்றான். ஏனெனில், விதைவைத்துக்கொண்டிராதவனால் பயிர் செய்தலென்பது ரூபகரப்படாது. எவனுக்த மஃரிபத்து அதிக சிறப்பத்தை அடைந்திருக்குமோ அவனுக்குத் தெரிசனையும் பரிபூரணமாயிருக்கும். இனி தெரிசனையிலும் அதன் இன்பத்திலும் எல்லாரும் சமானராயிருப்பார்களென்று நீ நினைக்காதே. மேலும் ஒவ்வொருவருக்கும் தெரிசனையானது அவரவர்களின் மஃரிபத்தான ஞானத்தின் அளவாயிருக்கும். திடனாக அல்லாகு தஆலா ஜனங்களுக்குப் பொதுவாகவும் அபூபக்கருக்குச் சொந்தமாகவும் தெரிசனை கொடுப்பான் என்றதின் பொருள் இதுவேயன்றி; அவர்கள் தனியாகத் தெரிசிப்பார்களென்பதும், மற்றவர்கள் அவர்களோடு தெரிசிக்கமாட்டார்க ளென்பதுமல்ல. மேலும் அவர்கள் தெரிசிக்கிறதுபோல் விசேஷ தெரிசனையாக மற்றவர் தெரிசிக்கமாட்டார்களென்பதே அதற்குப் பொருளாம். அந்தத் தரிசனை அவர்களுக்கே சொந்தம். ஏனெனில் மற்றவரில் இல்லாமல் அவர்களில்மாத்திரமிருந்த ஒரு மஃரிபத்தே அந்தத் தரிசனைக்கு வித்தாயிருந்தது. இன்னும் "அபூபக்கருக்குவரிசைப்பாடானது அதிகமான தொழுகை நோன்புகளைக் கொண்டல்ல" என்றும், "அவர்களுடைய இருதயத்தில் நிலைபெற்றிருக்கிற ஒரு இரகசியத்தைக் கொண்டே" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமான அந்த இரகசியம் ஒருவகை மஃரிபத்தாயிருந்தது. அந்த மஃரிபத்தே அவர்களுக்குச் சொந்தமா யுண்டாதப்போகிற அந்த விசேஷ தெரிசனைக்கு வித்தாயிருக்கிறது. பின்னர் அல்லாகு தஆலா ஒருவனாயிருப்பதுடன் ஜனங்களுக்கு அவனது தெரிசனை வித்தியாசப்படுவது எதைப்போல்வதென்றால், பலவகைக் கண்ணாடிகளில் பிரதிபிம்பித்த ஒரே ரூபம் பலரூபங்களாக வித்தியாசப்பட்டு ஒன்று சின்னதும் ஒன்று பெரியதும் ஒன்று அதிக தெளிவும் ஒன்று அதிக மங்க

னும் ஒன்றுகோணலும் ஒன்றுநேருமாயிருப்பதைப்போல்வதென்க.
எந்தமட்டுக்கென்றால் இலக்ஷணமாயிருப்பது அவலக்ஷணமாகத்
தோன்றும்படி கோணலில் அவ்வளவு கெடுத்துப்போடுவதுமுண்டு.
உதாரணமாக:—அழகிய நல்ல ரூபமானது பார்வைக்கு இன்பமா
யிருப்பதுடன் அதே ரூபத்தை (சாணையால் துலக்கின) வாளின்
அகலத்திலும் நீளத்திலும் பார்த்தால் மனதுக்கு வெறுப்பாயும் கண்
ணுக்கு அசங்கிதமாகவும் தெரிகின்றது. ஒருவன் தன் மனமென்
னும் கண்ணாடியை அவ்வுலகத்துக்குக் கொண்டுபோம்போது அது
இருளடைந்து அல்லது கோணல்பட்டிருக்குமாகில் எந்தத்தெரிசனை
மற்றவருக்கு இன்பமாயிருக்குமோ அதுவே அவன் துன்பத்துக்குக்
காரணமாக மாறும். ஆதலால் தெரிசனையில் நபிமார்கள் அடைகிற
இன்பத்தை மற்றவர்களும் அடைவார்களென்றாவது என்று அல்லது
ஆலிம்கள் அடையும் இன்பத்தை அவாம் என்னும் சாமானியர்கள்
அடைவார்களென்றாவது அல்லது பேணுதலும் அல்லாவின் மீது பிரிய
மும் உள்ள ஆலிம்கள் அடையும் இன்பத்தை அப்படியில்லாத ஆலிம்
கள் அடைவார்களென்றாவது நீ எண்ணாதே. அல்லாகு தஆலாவின்
மீது நேசம் அதிகரித்திருக்கிற ஒரு ஆரிபுக்கும் அப்படி அதிகரித்
திராத மற்றொரு ஆரிபுக்கும் இன்பத்தில் வித்தியாசமிருக்குமேயன்றி
மற்றப்படி இருவரும் ஒன்றையே தெரிசிக்கிறார்களாதலால் தெரி
சனையில் வித்தியாசமிராது. தெரிசனைக்கு வித்தாயிருப்பது மஃரிபத்
தாகிய ஞானமேயாதலால் அவ்விருவரின் ஞானவித்துக்கள் ஒன்றுக்
கொன்று சமமேயாம். ஆயினும் ஒரு அழகியின்மேல் மோகங்
கொண்ட ஒருவனும் அப்படி மோகக்கொள்ளாத மற்றொருவனும்
இருவரும் அந்த அழகியைப் பார்க்கும்போது இருவருடைய கண்
காட்சி ஒன்றாயிருந்தபோதிலும் அவள்மேல் மோகக்கொண்டிருப்
பவனுக்கு அகத்தியம் அந்தக்காட்சியில் இன்பம் அதிகமாயிருக்கும்.
ஒருவன் இன்னும் அதிகமாக அவள்மேல் ஆசைகொண்டிருந்தானா
கில் அந்தக் காட்சியில் அவனுக்கு இன்பமும் மிக்க அதிகமாயிரு
க்கும். அல்லாகு தஆலாவைத் தெரிசிப்பதில் ஆரிபுகளுக்கும் இது
போலவேயாம். ஆகவே பூரண நற்பதவிக்கு மஃரிபத்து மாத்திரம்
போதாது. மஃரிபத்துடன் மஹப்பத்துமிருக்கவேண்டும். மனிதனு
க்கு அல்லாவின்மீது மஹப்பத்து மேலிடுவதற்கு அவன்மனம் துன்
யாவின் மஹப்பத்தைவிட்டும் சுத்தமாகவேண்டும். இந்தச் சுத்தம்
ஜுஹ்தினாலும் தக்குவாவினாலுமேயன்றி வாய்க்கமாட்டாது. ஆத
லால் அல்லாவை அறிந்து துன்யாவை வெறுத்து அவன்மீது ஆசை

கொண்டிருக்கிற முஹிப்பாகிய ஜாஹித்தாகிய ஆரிபுக்கே தெரிசனையில் பரிபூரண இன்பமிருக்கும்.

பசல்:—தெரிசனையின் இன்பமானது அறிவின் இன்பத்தைப் போன்றதாயிருக்கிறபக்ஷம் இது அவ்வளவு அதிகமான ஓர் இன்பமல்ல என்று அகத்தியம் நீ சொல்லுவாய். மஃரிபத்தான அறிவின் இன்பம் இன்னதென்று உனக்கு அறவே தெரியாததினால் இப்படிச் சொல்லுகிறாய். ஆயினும் நீ ஒரு கிதாபிலிருந்து ஏதோ சிலவாக்கியங்களைப்படித்து மனப்பாடம் செய்திருக்கக்கூடும் அல்லது யாரிடத்திலாவது கற்றிருக்கக்கூடும். அதற்கு மஃரிபத்தென்று நீ பேரிட்டுக் கொண்டாய். எந்த நிலைமையிலும் நீ இந்த மஃரிபத்தினால் ஒரு இன்பத்தையும் அடையமாட்டாய். கடைந்த கீரைக்குப் பாதம் ஹல்வா என்று பேர்வைத்துக்கொண்ட ஒருவன் அதைத் தின்னுவதினால் அதில் பாதம் ஹல்வாவின் இன்பத்தை அடையமாட்டான். ஆனால் மஃரிபத்தின் எதார்த்தத்தை உணர்ந்தவன் அதில் எவ்வளவு இன்பத்தை அடைவானென்றால் அதற்குப் பதிலாக இவ்வுலகத்தில் அவனுக்குச் சொர்க்கத்தைக்கொடுத்தால் அந்தச்சொர்க்கத்தைவிட மஃரிபத்தையே அவன் அதிகமாக ஆசிப்பான். எதுபோலெனில், ஒரு புத்திமான் ஊணின் இன்பத்தைவிடவும் ஸ்திரீபோக இன்பத்தைவிடவும் இராஜரீக இன்பத்தை அதிகமாக ஆசிப்பதுபோலென்க. இனி மஃரிபத்தின் இன்பம் மாட்சிமையுள்ளதேயாயினும் இதை ஆகிரத்திலுண்டாகிற தீதார்தெரிசனையின் இன்பத்தோடு சேர்த்துப் பார்க்கிறபக்ஷம் இந்த இன்பத்துக்கு அந்த இன்பத்துடன் நெருங்கின சம்பந்தம் ஒன்றுமில்லை. இதை ஒரு உபமானத்தாலன்றி விளங்கிக்கொள்ளமுடியாது. ஆதலால் ஒருஸ்திரீயின்மீது ஆசைகொண்ட ஒரு ஆஷிக் இருப்பதாகப் பாவித்துக்கொள். சூரியவெளிச் சம்பரவாமல் இருளாயிருக்கிற காலைநேரத்தில் அவனுக்கு ஆசைகுன்றியும் மோகங் குறைந்தும் குளவியுந்தேளும் அவன்சட்டைக்குள்ளிருந்து அவனைக் கொட்டிக்கொண்டும் அதனோடு அவன் வேறுவேலைகளில் பராக்குற்றும் ஒவ்வொன்றிலும் அச்சப்பட்டுக்கொண்டுமிருக்கும்போது அவன் தன் மஃஷூக்காகிய அந்த ஸ்திரீயைப் பார்க்கிறான் என்று வைத்துக் கொள். இந்த நிலைமையில் அவனுக்கு அந்தக்காக்ஷியின் இன்பம் குன்றியே இருக்குமென்பதிற் சந்தேகமில்லை. அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கையில் திடீரெனச் சூரியன் புறப்பட்டு வெளிச்சம் அதிகரித்தும் அவனது ஆசையும் மோகமும் மிக்கப்பெலமடைந்தும் வேறுவேலைகளின் பராக்கும் அச்சமும் அவன் மனதைவிட்டொழிந்

தும் குளவி தேள்களின் கொட்டலாலுண்டான இம்சை நீங்கியும் போமாகில் அவன்பெரிய இன்பத்தை அடைவான். இந்தஇன்பத்து க்கும் பூர்த்திய இன்பத்துக்கும் யாதொருசம்பந்தமிராது. துன்யாவில் ஆரிபுடைய நிலைமையும் இதுபோலவேயாம். உபமானத்தில் இருள் என்றது ஒருவன் திரைமறைவிலிருந்து அதற்கு வெளியேயிருக்கிற ஒரு ரூபத்தைப் பார்க்கும்போது அதன் காட்சி மங்கலாயிருப்பது போல் இவ்வுலகத்தில் மஃரிபத்து மங்கலாயிருப்பதற்கு உபமான மாம். ஆசை குன்றலுக்குக் காரணம் மனிதன் பூரணத்தன்மையை அடையாமலிருப்பதாம். அவன் இவ்வுலகத்தி லிருக்கிறவரையில் பூர ணத்தன்மை குறைந்தவனுயிருப்பான். அந்த ஆசையும் நிறப்பத்தை அடையாது. தேளும் குளவியுமென்றது துன்யாவின் இச்சைக்கும் துக்கத்துக்கும்இன்னுமிதுபோல்சம்பவிக்கின்றஇம்சைகளுக்கும்உப மானமாம். இவையெல்லாம் மஃரிபத்தின் இன்பத்தைச் சிதறப்பண் ணுகிறவைகளாகும்.பராக்கும் அச்சமும் என்றது வயிற்றுப்பிழைப் பின் கவலைக்கும் இரணசப்பாத்தியத்துக்கும் இன்னுமிவைபோன்ற வைகளுக்கும் உபமானமாம். இவையெல்லாம் மரணத்தோடு ஒழிந்து போம். அப்போது நீதாரின் ஆசையும் இச்சையும் பூரணத்தன்மை யடையும். மறைக்கப்பட்டிருந்தவை திறக்கப்பட்டனவாக மாறும். துன்யாவின் துக்கமும் விசனமும் பராக்கும் அற்றுப்போம். பின்னர் இதேகாரணத்தினல் அந்த இன்பம் மிகவும் பூரணத்தன்மையை அடையும். அது மஃரிபத்தின் அளவுக்குமேல் அதிகப்பட்டிராதென் ருலுஞ்சரியே. இன்னும் பசியுள்ளவன் ஒரு உணவின் வாசனையால் அடையும் இன்பமானது அதை உண்பதினல் அடையும் இன்பத்து டன் எப்படி யாதொரு சம்பந்தமில்லாததா யிருக்கிறதோ அப்படி யே மஃரிபத்தின் இன்பமானது நீதாரின் இன்பத்துடன் யாதொரு சம்பந்த மில்லாததா யிருக்கிறது.

பசல்:—ஒருக்கால் நீ மஃரிபத்தென்னும் ஞானம் மனதோடு சம்பந்தப்பட்டதாயும் ரூபத்தென்னும் தெரிசனம் கண்ணோடு சம் பந்தப்பட்டதாயு மிருக்கிறதென்றும், ஞானமே எப்படி தெரிசன மாகும்? என்றும் சொல்லக்கூடும். அறிந்துகொள்:—தெரிசனை யைத் தெரிசனை யென்றதெல்லாம் நினைவு அதை நிறைபூரணமாக அடைகிறதென்றே யல்லாது அது கண்ணுக்குத் தோன்றுகிறதென் றல்ல. தெரிசனையை நெற்றியில் படைக்கிறபக்ஷம் அப்போதும் அது தெரிசனையேயாம். பின்னர், அதைக் கண்ணினிடத்தில் தேடு வது வீணேயாம். மேலும் இந்தத் தெரிசனையானது நீதார் என்ற

சொல்லில்வந்திருப்பதாலும் அச்சொல்லின் வெளிப்படையான அர்த்தம் கண்காட்சியென்றுவதாலும். ஆகிரத்தில் கண்ணுக்குத் தெரிசனையில் பங்குண்டு என்று நீ நிருணயம் கொள்ளவேண்டியதாயிருக்கிறது. ஆனால் ஆகிரத்தின கண்ணானது துன்யாவின கண்ணைப்போலிராதென்று நீ அறிந்திரு. ஏனெனில் இந்தக்கண் திக்குதிசைகளிலன்றி பார்க்காததாயும் அந்தக்கண் திக்குதிசைகளின்றியே பார்ப்பதாயுமிருக்கிறது. ஆமியாகிய சாமானியன் இதற்குமேல் அதிகமாகப் பேசுவதும் வாதிப்பதும் அவனுக்கு ஆகாது. ஏனெனில் இந்தக் காரியம் அவனது சக்தியின் அளவுக்குள் அடங்கினதல்ல. கம்மாளத்தொழில் குரங்கின் வேலையல்ல. இன்னும் பிகுஹு, ஹதீஸ், தப்ஸீரு இவைகளை ஓதுவதில் உழைத்திருக்கிற ஒவ்வொரு அறிவாளியும் இந்தத்தெரிசனையின் பொருளையுணர்வதில் சாமானியன்போலிருக்கிறான். ஆதலால் இது அவன்வேலையல்ல. மேலும் இல்முல்கலாமில் உழைப்பெடுத்துக்கொண்ட தர்க்கசாஸ்திரியும் இந்தப்பொருளின் உண்மையில் சாமானியன்போன்றவனே. ஏனெனில், முதகல்லிமானவன் சாமானியனுடைய இஃதிகாதைக்காவல்காக்கின்ற கொத்துவாலாயிருக்கிறான். அவன் தன் இல்மினால் சாமானியன்கொண்டிருக்கிற நிருணயத்தைக் காத்துக்கொள்ளுகிறான். பிதுஅத்துக்காரனால் அந்தச் சாமானியனுக்கு உண்டாகிற கேட்டை நிவர்த்தி செய்கின்றான். அப்படிக் காக்கவும் நிவர்த்தி செய்யவுமான வழியைத் தர்க்கமுறையில் அறிந்திருக்கிறான். ஆனால் மஃரிபத்தென்னும் வீதியே வேறாயிருக்கிறது. அந்த வீதியில் வசிப்பவர்கள் பிரத்தியேகமான ஓர் கூட்டமாயிருக்கிறார்கள். அதைச் சொல்வது இக்கிதாபுக்குத் தகுமல்லவாதலால் நாம் இவ்வளவோடு சுருக்குவது மேலாயிருக்கிறது.

பசல்:—ஒருக்கால் நீ சுவர்க்கத்துடைய இன்பத்தை ஜனங்கள் மறந்துபோகிறவிதமான அப்படிப்பட்ட ஒருஇன்பம் உண்டென்று உலமாக்கள் எவ்வளவோ சொல்லியிருந்தபோதிலும் எவ்விதத்திலும் இது எனக்கு ரூபகரப்படவில்லையென்றும் அந்த இன்பம் என்னில் உண்டாகாமற்போனாலும் அது உண்டென்று ஈமானாவது வருவதற்கு என்னபரிகாரம்? என்றும் சொல்லுவாய். அறிந்துகொள்:— நாலு வஸ்துக்கள் இதற்குப் பரிகாரமாயிருக்கிறது. முதலாவது:— இது விஷயத்தில் சொல்லப்பட்டிருக்கிற வாக்கியங்களை நீ அதிகமாகக் கவனித்துப் பார்க்கவேண்டும். அப்போதுனக்கு ஒருசமயம் இது விளங்கக்கூடும். ஏனெனில் செவியில் விழுகிற ஒரு வார்த்தை ஒரே முறையில் மனதில் அமையாது. இரண்டாவது:—இச்சை கொள்வதி

னும் இன்பமடைவதிலும் மனிதனுடைய சிபத்துகளான பண்புகளையெல்லாம் ஒரே முறையில் படைப்பதில்லை என்று நீ அறிய வேண்டும். ஏனெனில் குழந்தையா யிருப்பவனுக்கு முதல்முதல் ஊணில் இச்சையும் இன்பமும் இருக்கும். இந்த இன்பம்தவிர வேறு இன்பம் அவனுக்குத் தெரியாது. அவன் ஏழுவயதுக்கு நெருங்குவானாகில் அவனுக்கு விளையாட்டில் இச்சையும் இன்பமும் எவ்விதமாக உண்டாகிறதென்றால் அந்த இன்பத்தில் அவன் ஊணையும் விட்டு விளையாடப்போவதுண்டு. பத்துவயதுக்கு நெருங்கினால் அலங்கரிப்பிலும் அழகிய உடுப்பிலும் அவனுக்கு எத்தன்மையான இன்பம் உண்டாகிறதென்றால், அதன் ஆசையில் விளையாட்டைவிட்டு விடுகின்றான். பதினைந்து வயதுள்ளவனாய்ப் போனால் அப்போது அவனுக்கு ஸ்திரீகளில் இச்சையும் இன்பமும் எவ்வளவாக உண்டாகிறதென்றால் அதன் தேட்டத்தில் எல்லாவற்றையும் விட்டுவிடுகின்றான். எப்போது இருபது வயதுக்கு நெருங்குகின்றானோ அப்போது தலைமைத்தனம், பெருமைபாராட்டல், கௌரவந்தேடல் இவைகளின் இச்சையும் இன்பமும் அவனில் பிறக்கின்றது. இது துன்யாவுடைய இன்பங்களின் வகுப்புகளெல்லாவற்றிலும் கடைசியானது. அல்லாகு தஆலா குர்ஆனில் கூறியிருப்பதுபோல் அது வருமாறு:—இகலோகமான துன்யாவின் இன்பவாழ்க்கை என்பதெல்லாம் விளையாட்டும் வீண்தன்மையும் அலங்கரிப்பும் உங்களுக்குள் ஒருவருக்கொருவர் பெருமைபாராட்டுவதும் பொருட்சம்பத்து புத்திரபாக்கியம் இவைகளில் நீங்கள் விருத்தியடைவதுமேயன்றி வேறல்ல என்பதே. பின்னர் அவன் இதைவிட்டும் தாண்டுவானாகில் துன்யா அவன் உள்ளத்தை முழுதும் கெடுத்துப்போடாமலும் அவன் மனதைப் பிணிக்குள்ளாக்காமலு மிருக்கிறபக்ஷம் பின்பு ஜகத்தையும் ஜகத்கர்த்தாவையும் இகபரங்களின் இரகசியங்களையும் அறிவதென்னும் மஃரிபத்தான இன்பம் அவனில் பிறக்கும். மேற்கூறி வந்த ஊணாதி இன்பங்கள் எப்படி ஒன்றன்பின்னொன்றாக உண்டாகின்றதோ இன்னும் முன்னதாகிய அந்த இன்பம் பின்னதாகிய இன்பத்துக்கு எதிரில் சின்னதாய்ப் போகின்றதோ அப்படியே இந்தத் தலைமையாதி இன்பங்களும் மஃரிபத்தான இன்பத்துக்கு எதிரில் இழிவாய்ப்போம். சொர்க்கத்துடைய இன்பமென்பதெல்லாம் வயிற்றின் இன்பமும் வெட்க உறுப்பின் இன்பமும் கண்ணின் இன்பமுமேயன்றி இவற்றிற்கு மேவிட்ட இன்பம் ஒன்றுமில்லை. அதாவது:— சொர்க்கமாகிய தோட்டத்தில் உல்லாசமாக உலாவு

வதும் நல்லருசிகரமான உணவுகளை உண்பதும் பசுமையான சோலைகள், ஜலப்பிரவாகமான நீரோட்டங்கள், சித்திரகசிதமான மாளிகைகள் இவைகளைப் பார்ப்பதுமே சொர்க்க போகமாம். இதுவோ அற்ப இச்சை. இவ்வுலகத்திலும் இந்த இச்சையானது தலைமை பூணல், ஜெயமடைதல், அதிகாரம் செலுத்தல் முதலிய இச்சைகளுக்கு எதிரில் இழிவும் கேவலமுமாய்ப் போவதுண்டு. அப்படியிருக்க இது மஃரிபத்தான இன்பத்துடன் சேர்வதெங்ஙனம்? ரஹ்பான் என்னும் நஸ்ரானிய சன்னியாசியொருவன் சௌமஆவாகிய வணக்கஸ்தலத்தைத் தனக்கு மறியற்சாலைபோல் ஆக்கிக்கொண்டு தினம் ஒரு கழற்காய் அளவுக்குமேல் அதிக உணவெடுத்துக்கொள்ளாமலிருந்திருக்கிறான். கௌரவப்பிரியத்தினாலும்ஜனங்கள் அவனை மதித்து மரியாதைசெய்யும் இச்சையினாலும் அதன் இன்பத்தினாலும் அவன் அப்படி இருந்திருக்கவும் சொர்க்கத்தைவிட கௌரவம் மதிப்பு இவைகளின் இன்பத்தை அவன் அதிகமாக ஆசித்திருக்கவும் கூடும். ஏனெனில் சுவர்க்க இன்பமென்பது வயிறு, வெட்க உறுப்பு, கண் இவைகளின் இன்பத்துக்கு மேலிட்ட ஓரின்பமல்லவாதலாலென்க. பின்னர் எல்லா இச்சைகளையும் இழிவாக்குகின்ற கௌரவ இன்பமானது மஃரிபத்தின் இன்பத்துக்கு எதிரில் இழிவாய்ப்போம். நீ இவையெல்லாவற்றையும் உண்மையென்று நம்பி ஈமான்வை. ஏனெனில் நீ இச்சைகளில் ஒவ்வொன்றையும் தாண்டிக் கடைசியாக கௌரவ இச்சைக்கு வந்திருக்கிறாய். கௌரவ இச்சைக்கு இன்னும் வராமலிருக்கிற ஒரு சிறுவன் அதன்மேல் ஈமான் கொள்ளமாட்டான். அவனுக்குத் தலைமைத்தனத்தின் இன்பத்தை அறிவிக்க நாடுவாயாகில் உன்னால் முடியாது. ஒரு சிறுவனுக்கு இதை அறிவிக்க உன்னால் முடியாமல் நீ அவன் கையில் அகப்பட்டு விழிப்பதுபோல் ஆரிபாகிய ஞானியும் உன் கையிலும் உன் குருட்டுத்தன்மையிலும் அகப்பட்டு விழிக்கின்றான். ஆயினும் உனக்குப் புத்தியென்னும் சரக்குக்கொஞ்சமாவது இருந்து நீ பொறுமையுடன் யோசித்துப் பார்ப்பாயாகில் இது உனக்கு விளங்காமற்போகாது. மூன்றாவது:—ஆரிபுகளின் அஹ்வால்களை நீ நோட்டமிடுவதும் அவர்கள் சொல்லியிருக்கிற வாக்கியங்களை நீ கேட்பதுமாம். ஏனெனில் (ஆண்மைவிட்டுப் பெண்மையை இச்சிக்கின்ற) பேடியும் ஆண்மையற்றவனுமான இவரும்ஸ்திரீபோகத்தின் இச்சை இன்பங்கள் இன்னவென்பதை அறியாதவர்களாயிருந்தபோதிலும் மற்றஆடவர்கள் அந்த இச்சை இன்பங்களில் தங்கள் ஆஸ்தியை எல்லாம் அழித்துவிடுவதை இவர்கள் பார்

க்கும்போது இவர்களுக்கில்லாத பிரத்தியேகமாக ஓர் இச்சையும் இன்பமும் அவர்களுக்கிருக்கிறதென்ற ஓர் அறிவு அகத்தியம் இவர்களுக்கு உண்டாகும். றாபிஆ றலியல்லாஹு அன்ஹா என்பவர் ஒரு பெண்பிள்ளையாயிருந்தனர். அன்னாரிடம் சொர்க்கத்தைக் குறித்துப் பேசினதற்கு அல்ஜாரு சும்மத்தாரு முதலில் வீட்டின் எஜமானனும் அவனுக்குப்பின் வீடும் என்றனர். அபூசுலைமான் தாரானி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—அல்லாகு தஆலாவுக்குச் சில அடியார் இருக்கிறார்கள். நரகத்துடைய அச்சமும் சுவர்க்கத்துடைய ஆதரவும் இவ்விரண்டும் அவர்களை அல்லாவுடைய பராக்கிலிருந்து தன் பராக்கில் ஆக்கிக்கொள்ளாது. அப்படியிருந்தால் பின்பு துன்யா அவர்களை எப்படித் தன் பராக்கில் ஆக்கிக்கொள்ளும்?" என்பதே. மஃறூபுல் கர்கீ றஹிமஹுல்லா அவர்களின் சிநேகர்களில் ஒருவர் அவர்களை நோக்கி "நீர் ஜனங்களையும் துன்யாவையும்விட்டுத் தனிக்கிற விதமாக உமக்கு வெறுப்பையுண்டாக்கி உம்மை கல்வத்திலும் இபாதத்திலும் பராக்காகும்படி செய்தது மவுத்தின் அச்சமோ? அல்லது கபுரின் பயமோ? அல்லது நரகத்தின் அச்சமோ? அல்லது சொர்க்கத்தின் ஆதரவோ இவைகளில் எதாயிருக்கும்? எனக்குச் சொல்லவேண்டும்" என்றார். அதற்கவர்கள் சொன்னதாவது:— "இவையெல்லாம் என்ன? எவனது சக்திக்குள் இவையாவும் அடங்கியிருக்கிறதோ அந்த பாதுஷாவின்மீது உனக்கு நேசமிருந்தால் இவை எல்லாவற்றையும் நீ மறந்துவிடுவாய். உனக்கு அவனது மஃரிபத்தும் மஹப்பத்தும் உண்டானால் இவையெல்லாவற்றையும்பற்றி நீ வெட்கப்படுவாய்" என்பதே. சிலர் பிஷ்ருல்ஹாபி றஹிமஹுல்லா அவர்களைச் சொப்பனத்தில் கண்டு "அபூநஸ்ரு சிமாரும் அப்துல் வஹ்ஹாபில் வர்ராகும் எப்படி இருக்கிறார்கள்?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "நான் இப்போதுதான் அவர்களைச் சொர்க்கத்தில் பார்த்துவந்தேன். அவர்கள் சொர்க்க உணவுகளை உண்டுகொண்டிருந்தார்கள்" என்று சொன்னார்கள். "நீர் எப்படி இருக்கிறீர்?" என்று கேட்டதற்கு "ஊண் குடிப்புகளில் எனக்கு விருப்பமேயில்லை என்பதை அல்லாகு தஆலா அறிந்தவனாதலால் அவன் எனக்குத் தன் தீதார் என்னும் தெரிசனை கொடுத்தான்" என்று சொன்னார்கள். அலிய்யிபுனுல் முவப்பிகு றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் என்சொப்பனத்தில் சொர்க்கத்தைக் கண்டேன். அதில் அநேக ஜனங்கள் உணவருந்திக்கொண்டிருந்தார்கள். மலக்குகள் சுவர்க்கத்துடைய நல்ல நல்ல உணவுகளையெல்லாம் அவர்களுக்கு ஊட்டிக்கொண்டிருந்தார்கள். கதீரத்துல்குதுசி என்னும் மகா பரிசுத்தசமு

கத்துக்கு முன்பாக ஒருவரைக்கண்டேன். அவர்தமது கண்விழிகளை அசைக்காமல் கீழ்நோக்கினவராயும் மதிமயக்க முற்றவராயும் பார்த்துக்கொண்டிருந்தார். சொர்க்கத்து அதிகாரியாகிய ரிலுவான் என்ற மலக்கினிடத்தில் "இவர் யார்?" என்றுகேட்டேன். "இவர்நரகத்தின் பயத்தினாலுமல்லாமல் சுவர்கத்தின் ஆசையினாலுமல்லாமல் (அல்லாவுக்காகவே) இபாதத்து செய்த மஃறூபுல் கர்கியாயிருக்கிறார்" என்றும்; "அல்லாகுதஆலா இவருக்குத் தனது தீதாராகிய தெரிசனையை முபாஹாக்கியிருக்கிறான்" என்றும் ரிலுவான் சொன்னார்" என்பதே. இன்னும் "எவன் இன்று தன்னில் பராக்காயிருக்கிறானோ அவன் நாளைக்கும் அப்படியேஇருப்பான்" என்றும், "எவன் இன்றுஅல்லாகு தஆலாவில் பராக்காயிருககிறானோ அவன் நாளைக்கும் அப்படியே இருப்பான்" என்றும் அபுசுலைமான் தாரானி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். யஹ்யபுனுல் மஆது றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—நான் ஓர் இரவில் பாஎஜீதுல்புஸ்தாமி றஹிமஹுல்லா அவர்களைக்கண்டேன். அவர்கள் இஷாத்தொழுகை முதல் சுபுஹுவரையில் இருகால்விரல்களையூன்றிக் குதிகால்மேல் உட்கார்ந்தவர்களாயும் இருவிழிகளையும் அசைக்காமல் அவைகளைக் கீழ்நோக்கில் இறக்கினவர்களாயும் பிரமைகொண்டவர்போல் மயக்கமுற்றவர்களாயுமிருந்தார்கள். கடைசியாக சஜ்தாசெய்து அதில்வெகுநேரம் தாமதித்திருந்து பிறகு தலையை உயர்த்தி "என் ஆண்டவனே! சில ஜனங்கள் உன்னைத் தேடினார்கள். நீ அவர்களுக்குத் தண்ணீரின் மேல் நடக்கவும் ஆகாயத்தில் பறக்கவுமான கராமத்துகளைக் கொடுத்தாய். நான் இதைவிட்டும் உன்னிடம் காவல் தேடுகிறேன். இன்னும் சிலஜனங்களுக்குப் பூமியின் பொக்கிஷங்களைக்கொடுத்தாய். சிலருக்கு வெகுதூரமான வழியை ஓரிரவில் கடந்துசெல்லும் கராமத்தைக் கொடுத்தாய். அவர்கள் அதைக்கொண்டு சந்தோஷமடைந்தார்கள். நான் இவையெல்லாவற்றையும்விட்டு உன்னிடம் காவல்தேடுகிறேன்" என்று சொன்னார்கள். பின்பு என்னைத் திரும்பிப்பார்த்து "யஹ்யாவே! நீர் இங்குதானா இருக்கிறீர்?" என்று கேட்டார்கள். நான் "ஆம் எனது நாயகமே!" என்றேன். "என்னேரமாக இருக்கிறீர்?" என்று கேட்டார்கள். "நான் வெகுநேரமாயிருக்கிறேன்" என்றேன். பின்பு நான் அவர்களிடத்தில் "எனது நாயகமே! இந்த அஹ்வால்களைப் பற்றி எனக்குச் சொல்லவேண்டும்" என்றேன். அப்போதவர்கள் "நான்உமக்குச்சொல்லத்தகுந்ததைச்சொல்லுகிறேன்கேளும்" எனத் தொடங்கி "யஹ்யாவே! மேலுலகத்திலும் கீழுலகத்திலும் உலாவி

வரும்படி (மலக்குகள்) என்னை அழைத்துக்கொண்டுபோய் அருஷை, குருசி; வானங்கள், சுவர்க்கங்கள் இவையெல்லாவற்றையும் எனக்குக் காட்டினார்கள். அல்லாகு தஆலா என்னை விளித்து "பாயஜீதே! இவைகளில் உனக்குப் பிரியமானதைக்கேள் தருகிறேன்" என்றான். "நான் இவைகளில் ஒன்றையும்விரும்பவில்லை" என்றேன். அப்போது அல்லாகு தஆலா என்னை நோக்கி "நீயே எதார்த்தமாக என் அடிமையாயிருக்கிறாய்" என்றான் எனச்சொன்னார்கள்" என்பதே.

அபூதுராபின்னக்ஷபிய்யி றஹிமஹுல்லா அவர்களுக்கு ஒரு பெரிய முரீது தமது (திகுருமிகுருகளான) காரியத்தில் மூழ்கினவராயிருந்தார். அபூதுராபவர்கள் ஒருநாள் அந்தமுரீதைநோக்கி "நீபாஎஜீதைப்போய்க் கண்டுகொள்வது நன்மை" என்றார்கள். அதற்கவர் "நான் பாஎஜீதைவிட்டும் வேறுபாராக்குள்ளவனாயிருக்கிறேன்" என்றார். பின்பு பன்முறை அவர்கள் அப்படியே சொன்னார்கள். அப்போதவர் "நான் பாஎஜீதுடைய ஆண்டவனைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது பாஎஜிதைப் பார்த்து நான்என்னசெய்கிறது?" என்றார். அதற்கு அபூதுராபவர்கள் அந்த முரீதை நோக்கி "நீ பாஎஜீதை ஒருமுறை பார்ப்பதானது அல்லாகு தஆலாவை நீ எழுபதுமுறை பார்ப்பதினும் மிக்க நல்லது" என்றார்கள். இதைக்கேட்ட அந்தமுரீது திடுக்கிட்டு மதிமயங்கி "அதெப்படி நல்லது" என்றுகேட்டார். அப்போதவர்கள் "எவிளக்கமில்லாத மனிதனே! நீ அல்லாகுதஆலாவை உன்னிடத்தில் காணும்போது உனது தகுதிக்குத்தக்க அளவாக அவன் உனக்கு வெளியாவான். பாஎஜீதை அல்லாகு தஆலாவிடத்தில் அவனது பெருமைக்குத் தக்கவிதமாகப் பார்ப்பாய்" என்றார்கள். அந்த முரீதுக்கு இந்தச் சொல்லின் அர்த்தம் விளங்கினது. அப்போதவர் அபூதுராபவர்களைநோக்கி "நாயகமே! தாங்களும்வாருங்கள் போவோம்" என்றார். அபூதுராபவர்கள சொல்லுகிறதாவது:— "நானும் அந்த முரீதும் பாஎஜீதிடம்போனோம். அவர்கள் ஓர்காட்டிலிருந்துகொண் டிருந்தார்கள். அக்காட்டை நோக்கி நாங்கள் சென்றுகொண் டிருக்கையில் அவர்கள் அக்காட்டுக்குள்ளிருந்து நரித்தோற் சட்டையை மறுபக்கமாகத் திருப்பி அணிந்துகொண்டு வெளியே புறப்பட்டார்கள். அந்தமுரீது அவர்களைப் பார்த்தவுடன் ஆ என்று அலறி ஓர் சப்தமிட்டு உயிரைவிட்டான். அப்போது நான் அவர்களை நோக்கி "பாஎஜீதே! உம்மை ஒருமுறை பார்ப்பவர் உயிரை இழக்கவேண்டியவரோ?" என்றேன். அதற்கவர்கள் அப்படியல்ல. அந்தமுரீது உண்மையுள்ளவனாயிருந்தான். அவ

னில் ஓர் இரகசிய மிருந்தது. அது அவன் சக்திக்கு வெளியாகாமலிருந்தது. எம்மை அவன் பார்த்தபோது அந்த இரகசியம் அவனுக்கு வெளியாய்விட்டது. ஆயினும் அவன் கேவலனாயிருந்தபடியால் அதைச் சகிக்கமுடியாமல் உயிரை இழந்தான்" என்று சொன்னார்கள்" என்பதே. இன்னும் இபுராஹீம் அலைகிஸ்ஸலா மவர்களுக்குள்ள குல்லது என்னும் சிறந்த நட்பையும் மூஸா அலைகிஸ்ஸலா மவர்களுக்குள்ள முனாஜாத்து என்னும் சிறப்பாகிய தனித்த வசனிப்பையும் ஈசா அலைகிஸ்ஸலா மவர்களுக்குள்ள ரூஹானியத்து என்னும் சிறந்த ஆன்ம ஜீவியத்தையும் உனக்குக் கொடுத்தபோதிலும் நீ இவை போதுமெனத் திரும்பிவிடாதே என்றும், இவற்றினும் மேலிட்ட (எண்ணிறந்த) காரியங்கள் அவனிட மிருக்கின்றன (ஆதலால் அவைகளையும் தேடு) என்றும், பாஎஜீதுல் புஸ்தாமி றஹிமஹுல்லா அவர்களசொல்லுகிறவர்களாயிருந்தார்கள். இன்னுமிந்த பாஎஜீது றஹிமஹுல்லா அவர்களுக்கு முஜக்கீ என்கிற நாமமுள்ள ஓர் நண்பர் இருந்தார். அவர் ஒருநாள் அவர்களை நோக்கி "நான் முப்பதுவருஷகாலமாக இரவில் தூங்காமல் வணங்குகிறவனாயும் இடைவிடாமல் பகலில் நோன்பு வைக்கிறவனாயு மிருக்கிறேன். நீர் சொல்லுகிற காட்சிகளில் ஒரு காட்சியாவது எனக்கு வெளியாகவில்லை" என்று சொன்னார். பாஎஜீது றஹிமஹுல்லா அவர்கள் அவரை நோக்கி "நீர் இப்படியாக முன்னூறுவருஷம் வணங்கினபோதிலும் அந்தக் காட்சிகளில் ஒன்றேனும் உமக்கு வெளியாகாது" என்று சொன்னார்கள். "அதேன்" என்று கேட்டார். "நீர் தம்பாராக்கில் தடைப்பட்டிருக்கிறதினால்" என்றார்கள். "அதற்கென்ன பரிகாரம்?" என்றார். "பரிகாரம் செய்துகொள்ள உம்மால் முடியாது" என்றார்கள். "நான் செய்துகொள்வேன் சொல்லும்" என்றார். பின்பும் "உம்மால் முடியாது" என்றார்கள். கடைசியாகச் "சொல்லவே வேண்டும்" என்றார். அப்போதவர்கள் "நீர் இந்தக்ஷணமே அம்பட்டனிடம் போய் உமது தலையையும் தாடியையும் மழுங்க மொட்டை யடித்துக்கொள்ளும். இந்த உடுப்பைக் களைந்துவிட்டு இடுப்பில் மாத்திரம் ஓர் வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ளும். குதிரைக்குத் தீனி கட்டுகின்ற தோபுராவான தோல்பையில் அக்குரோட்டுக் காய்களை நிறைத்து அதைக் கழுத்தில் கட்டிக்கொள்ளும். அப்படியே கடைவீதிக்குப்போய்க்கூவிக்கூவி "ஓபிள்ளைகளே! உங்களில் யார்யார் என் கழுத்தில் ஒவ்வொரு குத்து குத்துகிறார்களோ அவர்களுக்கு நான் ஒவ்வொரு அக்குரோட்டு கொடுப்பேன்" என்றுசொல்

ஹும், பின்பு அப்படியே காஜிபிடத்திலும் மற்றும் நீதிபதிகளிடத்திலும் போம்" என்றார்கள். இதைக் கேட்ட அவர் வியப்படைந்து "சுபுஹானல்லா! இதென்ன நீர் சொல்வது?" என்றார். பாஜிதவர்கள் அவரை நோக்கி "நீர் இப்போது சுபுஹானல்லா! என்று துதித்ததில் (அல்லாவை அல்ல) உம்முடைய கௌரவத்தையே மதித்துத் துதித்தீராதலால் ஷிர்க்கைக் கொண்டுவந்தீர்" என்றார்கள். அவர் "இது என்னால்முடியாது வேறு பரிகாரம்சொல்லும்" என்றார். அதற்கவர்கள் "இப்போது நான் சொன்னதுதான் முக்கிய பரிகாரம்" என்றார்கள். அவர் "இது என்னால் முடியாது" என்றார். "உம்மால் முடியாது என்று முன்னமே நான் உமக்குச் சொன்னேனே" என்றார்கள். தன் கௌரவத்தையும் பெருமையையும் தேடுவதில் பராக்காயிருக்கிற மனிதனைப் பிடித்த அந்தப் பிணிக்கு இதுவே பரிகாரமாகுமெனக் கருதி பாஜீது றஹிமஹுல்லா அவர்கள் அவருக்கு இப்படிச் சொன்னார்கள். இன்னும் அல்லாகு தஆலா ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு ஒஹியனுப்பி "ஓ ஈசாவே! நான் என் அடிமையின் இருதயத்தைப் பார்க்கும்போது அதில் துன்யா ஆகிறத்துகளின் இச்சையைப் பார்க்காமல் எனது நேசத்தையே அதில் பார்ப்பேனாகில் அந்த நேசத்தைக் காப்பதற்கு நானே காரியகர்த்தனாகிறேன்" என்று அறிவித்ததாக ஹதீதில் வந்திருக்கிறது. இபுறாஹீமுல் அத்ஹம் றஹிமஹுல்லா அவர்கள் அல்லாகு தஆலாவினிடத்தில் "என் ஆண்டவனே! நீ எனக்கு அளித்திருக்கிற இந்த நேசத்துக்கும் உனது திக்ரில் எனக்கு நீ கொடுத்திருக்கிற இந்த இன்பத்துக்கும் எதிரில் சுவர்க்கமானது என்னிடத்தில் ஒரு கொசுகின் இறக்கைக்கும் ஈடாகாது" என்று சொன்னார்கள். சிலர் ராபிஆ றலியல்லாஹு அன்ஹாவை நோக்கி "நீங்கள் ரசூலை எப்படி நேசிக்கிறீர்கள்?" என்று கேட்க, அம்மங்கையர் "இக்கேள்விக்கு நான் பதிலுரைப்பது மிகவும் கஷ்டம்" என்றும், "ஆயினும் சிருஷ்டிகனாகிய அல்லாகு தஆலாவின் நேசமானது என்னைச் சிருஷ்டியின் நேசத்திலிருந்து நீக்கியிருக்கிறது" என்றும் சொன்னார்கள். இன்னும் "அமல்களில் எது அதிக வரிசையுள்ளது?" என்று ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களிடத்தில் கேட்டதற்கு "அல்லாகு தஆலாவை நேசிப்பதும் அவனது கற்பனைக்குப் பொருத்தமாயிருப்பதுமே அதிக வரிசையுள்ள அமல்" என்று விடையளித்தார்கள். மொத்தத்தில் இம்மாதிரியான ஹிகாயத்துகள் அநேகமிருக்கின்றன. இந்தக் கூட்டத்தினுடைய அஹுவால்களை கவனித்துப் பார்ப்பதினால் அத்தியம் அல்

லாகு தஆலாவினது மஃரிபத்து மஹப்பத்துகளின் இன்பமான சுவர்க்கத்தின் இன்பத்தைவிட மிகவும் அதிகமாயிருக்குமென்ப நன்கு விளங்கும். ஆதலால் நீ இதவிஷயத்தில் பொறுமையுட யோசித்துப்பார்க்கக் கடமைப்பட்டவனா யிருக்கிறாய்.

### அல்லாகு தஆலாவை அறிதலென்னும் மஃரிபத்து மறைந் திருப்பதற்குக் காரணம் இதுவென விளக்கல்.

அறிந்துகொள்:—ஒரு வஸ்துவை அறியக்கூடாமலிருப்பதற் இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று:—அந்தவஸ்து பரிஷ்காரமாக துலங்கி விளங்காமல் மறைந்திருப்பதும், மற்றொன்று:—அந்த வஸ் அதிக பிரகாசமுற்றிருக்கிற நிமித்தம் அதைப்பார்க்கக் கண்ணு க்குச் சக்தியற்றிருப்பதுமாம். வௌவாலானது பகலில் பார்க்காம இரவில் பார்ப்பது இதே காரணத்தினாலன்றி மற்றப்படி இரவி பொருட்கள் வெளிப்படையாகத் துலங்கி விளங்குகிறதென்றும் லில் அப்படி விளங்குகிறதில்லை யென்றுமல்ல. மேலும் பகல பொருட்கள் அதிக பிரகாசமுற்று விளங்குவதினாலும் அதைப்ப க்க அதன் கண்ணுக்கு வலுவில்லாததினாலுமே பொருட்கள் அத குத் தெரிவதில்லை. இதேபோல் அல்லாகு தஆலா அதிக பிரகா முற்று விளங்குவதினாலும் இருதயங்கள் அவனை விசாரித்தறிய சக் யற்றவைகளாயும் இருப்பதினாலேயே அவனை அறிவதென்னு மஃரிபத்து கஷ்டமாயிருக்கிறது. அல்லாகு தஆலா அதிக பிரகா முற்று விளங்குவதை நீ எதனால் அறியலாமென்றால், யோசித்து பார். அழகா யெழுதப்பட்டிருக்கிற ஒருகாகிதத்தை அல்லது அ க்காரமாகத் தைக்கப்பட்டிருக்கிற ஒரு ஆடையை நீ பார்ப்பாயா அதில் அந்த எழுத்துக்காரனுடையவும் தையற்காரனுடையவும்ம சமர்த்தும் அறிவும் ஜீவியமும் நாட்டமுமேயன்றி வேறொன் உனக்கு அவ்வளவாகத் துலங்கி விளங்காது. அவர்களுடைய இந் செயலானது அவர்களின் அந்தரங்கத்திலிருக்கிற இந்தச் சமர்த்த இலக்ஷணங்களைத் துரிதமாக நீ அறிந்துகொள்ளும்படி அவ்வ துலக்கமாக விளக்கிவிடும். அல்லாகு தஆலா சர்வலோகங்களிலு ஒரே ஒருபக்ஷியை அல்லது ஒரே ஒரு செடியைத்தவிர அத மேல் வேறொன்றையும் சிருஷ்டிக்காதபக்ஷத்தில் அந்தச் சிருஷ் யைப் பார்க்கிறவன் சிருஷ்டிகர்த்தாவின் சமர்த்தையும் அறி யும் மகிமை மாட்சிமைகளையும் சீக்கிரத்தில் அறிந்துகொள்ளுவா ஏனெனில் காகிதம் தனது எழுத்துக்காரனை அறிவிப்பதிலும் ஷ்டி தனது சிருஷ்டி கர்த்தாவை அறிவிப்பது அதிக வெளிப்ப

யாதலாலென்க. ஆயினும் சிருஷ்டியாகத்தோன்றியுள்ள வானம், பூமி, ஜீவவர்க்கம், மூலவர்க்கம், தாதுவர்க்கம் இவைகளும் இன்னும் மனதுக்குப் புலப்படுகிற மற்றும் சிருஷ்டிகளும் இவையாவும் ஒரே பண்பான கோர்வையிலமைந்து தமது சிருஷ்டிகர்த்தாவின் மாட்சிமையைக்குறித்து சாக்ஷி பகர்ந்துகொண்டிருக்கின்றன. சிருஷ்டிகளை அறிவிக்கின்ற அத்தாட்சிகளின் பெருக்கத்தினாலும் அவற்றின் பிரகாசத்தினாலும் அவனை அறிதலென்னும் மஃரிபத்து மறைந்துபோயிருக்கிறது. சிலசிருஷ்டிகள் அவன் செயலாயும் சிலது அப்படியல்லவாயு மிருக்கிற பக்ஷத்தில் அப்போது (அப்படியல்லாத சிருஷ்டிக்கு வேறாயுள்ள) அவன் சிருஷ்டியானது அவன்சமர்த்தாதி இலக்ஷணங்களை உனக்கு விளக்கிக்காட்டும். எல்லாம் ஒரே பண்பான கோர்வையிலமைந்து பெருஞ்சோதியாகத் துலங்குவதால் அவற்றின் கர்த்தாவை அறிவதென்னும் மஃரிபத்து மறைந்துவிட்டது. இதற்கு உபமானம்:—சூரியனுடைய ஒளியைவிட அதிக பிரகாசமானபொருள் ஒன்றுமேயில்லை. எல்லாப் பொருட்களும் அந்த ஒளியினாலேயே துலங்கி விளங்குகின்றன. என்கினும் சூரியன் இரவில் மறைந்துபோகாமல் அல்லது நிழலால் அது தடுக்கப்படாமல் இருக்கிறபக்ஷத்தில் பூமியின்மீது ஒரு ஒளி இருக்கிறதென்று எவரும் அறியவே மாட்டார்கள். வெண்மை, கருமைமுதலிய மற்றும் நிறங்களேயன்றி இவற்றிற்குமேல் அதிகமான ஒரு ஒளி இல்லவே இல்லையெனச் சொல்லுவார்கள். பின்னர் சூரியன் அஸ்தமித்து இருள்கவிந்து நிறங்களெல்லாம் மறைந்துபோனதினாலும் சூரியனிற் பார்க்கினும் நிழலில் அவை மிகவும் மறைந்துபோயிருந்ததினாலும் அந்நிறங்களை விளக்கிக் காட்டுகின்ற பிரத்தியேகமான ஒரு ஒளி உண்டென்று அறிந்தார்கள். ஆகவே ஒளிக்கு நேர்மாறான இருளைக்கொண்டு ஒளியை யுணர்ந்தார்கள். இதேபோல் சிருஷ்டிகர்த்தாவாகிய அல்லாகு தஆலாவுக்கு மறைவும் இல்லாமையும் சம்பவிக்க இடமிருந்திருக்கிறபக்ஷம் வானம் பூமிகளெல்லாம் அழிந்து நாசமாய்ப் போயிருக்கும். அப்போது அகத்தியம் அவன் உண்டென்பதை உணர்ந்துகொள்ளுவார்கள். ஆயினும் எல்லாச் சிருஷ்டிகளும் ஒரே வாக்காக சாக்ஷி பகர்வதனாலும் இந்த சாக்ஷியம் இடைவிடாமல் எப்போது மிருப்பதினாலும் அவன் அதிக பிரகாசமுற்றுத் துலங்குகிறான். அந்தப் பிரகாசத்தினாலேயே அவனை அறிதல் மறைந்துவிட்டது.

இதுவுந்தவிர இந்தசிருஷ்டிகள் பகர்கின்ற சாக்ஷியத்தை அறிய புத்தியில்லாத காலமாகிய சிறு பிராயத்திலிருந்து இச்சிருஷ்டிகள்

இவன் கண்ணில் நிலைத்து இவன் அவற்றிற்பழகி நேசித்து வருகிற ஒரு பிருப்பதினால புதிதிவந்த பிறகும் அவற்றின் சாக்ஷியத்தைக் குறித்து இவன் உணர்ச்சியடைகிறதில்லை. ஆனால் எப்போதாவது அருமையாக ஓர் அரிய பிராணியை அல்லது ஓர் அதிசயமான செடியைக் கண்டால் அப்போது இவன் நாவிலிருந்து இவனுக்கும் தெரியாமல் சுபுஹானல்லா! என்கிற வியப்புச்சொல் வெளியாகின்றது. ஏனெனில், அதன் சாக்ஷியம் அவன் மனதுக்கு உணர்ச்சியை உண்டாக்குவதினாலென்க. பின்னர் எவனுக்குப் பெலங்குன்றாத வலிப கண் இருக்கின்றதோ அவன் எப்பொருளைப் பார்த்தாலும் அப்பொருளை அல்லாவுடைய சிருஷ்டியெனக்கருதியே பார்ப்பதல்லாது அப்பொருளைப் பார்ப்பதில்லை. அவன் வானத்தையும் பூமியையும் பார்ப்பது இது அல்லாவுடைய படைப்பு என்பதைக் கருதியேயாம். உதாரணமாக:—எழுதப்பட்டிருக்கிற காகிதத்தை ஒருவன் பார்ப்பது அது மையும் காகிதமுமாயிருக்கிறதென்றல்ல. இது படிக்கத் தெரியாதவன் பார்க்கும் பார்வையாயிருக்கிறது. படிக்கத் தெரிந்தவனோ அதன் வாசகக்கட்டான கோர்வையை உற்றுணர்ந்து அதை எழுதினவனையே அதில் பார்க்கின்றான். எதுபோலெனில் ஒரு நூலைப்பார்க்கிறவன் அதன் எழுத்தையல்லாமல் அதன் ஆசிரியனையே பார்ப்பது போலென்க. மனிதன் இத்தன்மையுடையவனாய்ப் போனால் அவன் எதைப் பார்த்தாலும் அல்லாவையே பார்ப்பான். ஏனெனில் அவனுடைய சிருஷ்டி யல்லாதபொருள் ஒன்றுமேயில்லையாதலாலென்க. மேலும் சர்வலோகமும் அவன் சிருஷ்டியாயும் அவன் கோர்வையாயுமிருக்கிறது. அவனைக்கொண்டு அல்லவும் அவன் அல்லவுமான ஒருபொருளைப் பார்க்கவேண்டுமென விரும்புவாயாகில் அப்படிப் பார்க்க உன்னால் முடியாது. எல்லாம் தமது நிலைமையாகிய நாவென்று சொல்லப்படுகிற நாகரீக நாவினால் அல்லாகு தஆலாவின் பூரண சமர்த்தையும் மகிமை மாட்சிமைகளையும் குறித்து சாக்ஷி பகர்ந்துகொண்டிருக்கின்றன. இந்த சாக்ஷியத்திற்குமேல் அதிக பிரகாசமுற்றது உலகத்தில் ஒன்றுமேயில்லை. ஆயினும் ஜனங்கள் இந்த மஃரிபத்தை அடையக்கூடாமலிருப்பது அவர்களின் கேவலத் தன்மையினாலேயாம்.

### அல்லாவின்மீது மஹப்பத்துண்டாவதற்குப் பரிகாரம் இதுவென்பது.

அறிந்துகொள்:—மஹப்பத்தானது எல்லா மகாம்களிலும் மிகப் பெரிய ஓர் மகாமாயிருக்கிறது. அதன் பரிகாரத்தை அறிவது மிக

கியமாம். ஒருவன் ஒரு அழகியின்மீது ஆசைகொள்ள நாடுவானாகில் அதற்கு முந்தின பரிகாரம் யாதெனில், அவளல்லாத மற்றவைகளை விட்டு அவன் தன் முகத்தைத் திருப்புவதும் எப்போதும் அவளில் பார்த்துக்கொண் டிருப்பதுமாம். அவளின் முகத்தழகைப் பார்க்கும் போது கைகால்களின் அழகு அவனுக்குப் புலப்படாது. அவ்வுறுப்புகளும் அழகுற்றிருக்கு மாதலால் அவற்றின் அழகையும் பார்க்க முயற்சிப்பான். இப்படி ஒவ்வொரு அழகையும் பார்க்கிறதினால் அவனுக்கு ஒருவித ஆசை அதிகரிக்கின்றது. இப்படியே பழக்கப் படுத்தி வருவானாகில் அகத்தியம் அவள்மீது அற்பமாகவோ அதிகமாகவோ அவனுக்கு ஒருவித மயலுண்டாகும். பின்னர் அல்லாகு தஆலாவின்மீது மஹப்பத்துண்டாவதும் இதுபோல்தான். அதற்கு முந்தின ஷர்த்து என்னவென்றால், துன்யாவைவிட்டு முகத்தைத் திருப்புவதும் அதன் ஆசையிலிருந்து மனதைச் சுத்தப்படுத்துவதுமாம். ஹக்குதஆலா அல்லாத மற்றவைகளின் ஆசையானது அவனது ஆசைக்குத் தடையாகும். இப்படி மனதைச் சுத்தப்படுத்துவது ஒரு பூமியில் முளைத்திருக்கிற முட்செடிகளைப் பிடுங்கி அதைச் சுத்தப்படுத்துவதற்குச் சமானமாகும். அதன் பிறகு அவனை அறிவதென்னும் மஃரிபத்தில் பராக்காகவேண்டும். ஏனெனில் எவரும் அவனை அறியாதிருப்பதினாலேயே அவனை நேசிக்காம லிருக்கிறார்கள். இல்லையாயின் அழகும் அறிவாதி சிறப்பும் இயற்கையில் நேசிக்கப் படுவதாயிருக்கிறது. எந்தமட்டுக்கென்றால், அபூபக்கர் சித்தீகு உமருல் பாரூகு றலியல்லாகு அன்ஹுமா அவர்களை அறிந்த ஒருவன் அவர்களை நேசிக்காமலிருக்க முடிகிறதில்லை. ஏனெனில் மாட்சிமை தங்கிய அவர்களின் குணாதிசயங்கள் இயல்பாகவே நேசிக்கப்படுவனவா யிருப்பதினாலென்க. மஃரிபத்தை அடைவது பூமியில் விதையைத் தூவுவதற்குச் சமானமாயிருக்கிறது. அதன் பிறகு நியமமாக அவனது திக்ருபிக்ருகளில் பராக்காகவேண்டும். இது அந்தவிதைக்குத் தண்ணீர் பாய்ச்சுவதுபோலாகும். ஏனெனில் ஒருவன் தானறிந்த மற்றொருவனை அதிகமாக ஞாபித்து வருவானாகில் அகத்தியம் அவன்மீது அவனுக்கு ஒரு நேசமுண்டாகும்.

இன்னுமறிந்துகொள்:—அல்லாவுடைய நேசமென்ற வேர் தன் மனதில் ஊன்றாதபடி எந்த மூமினுமில்லை. ஆனால் மூன்று காரணங்களால் அவர்களின் நேசம் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டிருக்கும். முதலாவது:—அவர்கள் துன்யாவுடைய நேசத்திலும் அதன் பராக்கிலும் ஒருவருக்கொருவர் வித்தியாசப்பட்டிருக்கிறார்கள். மன

தில் ஒன்றன் நேசமிருந்தால் (அதற்கு மாறான) மற்றொன்றின் நேசத்துக்கு அது குறைவையுண்டாக்கும். இரண்டாவது:—அவர்கள் மஃரிபத்தென்னும் அறிவில் ஒருவருக்கொருவர் வித்தியாசப்பட்டிருக்கிறார்கள். அதெப்படியெனில் ஒரு சாமானியன் உதாரணமாக:—ஷாபிஃ றலியல்லாஹு அன்ஹு அவர்களை ஒரு பெரிய ஆலிமாயிருந்தார்களென்று மொத்தமாக அறிந்ததினால் அவர்களை நேசிக்கின்றான். பிக்ஹு ஓதிய ஆலிமோ அவர்களுடைய இல்முகளில் சிலவற்றின் விஸ்தாரத்தை நன்றாய் அறிந்து அதனால் அவர்களை அதிகமாக நேசிக்கின்றான். அவர்களுடைய ஷாகிர்துகளில் ஒருவராயிருந்த முஜ்னி என்பவர் அவர்களுடைய எல்லா இல்முகளையும் அஹ்வால்களையும் குணாதிசயங்களையும் நன்றாய் அறிந்தவராதலால் அவர் மற்ற பகீஹுகள் நேசித்ததினும் அதிகமாக நேசித்தார். ஆகவே அல்லாஹு தஆலாவை எவன் நன்றாய் அறிகின்றானோ அவன் அவனை அதிகமாக நேசிப்பான். மூன்றாவது:—திக்ரினாலும் இபாதத்தினாலும் உண்டாகிற பிரியத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசப்பட்டிருப்பார்கள். ஆகவே இந்த மூன்று காரணங்களினாலேயே மஹப்பத்தில் வித்தியாசம் ஏற்படும். ஆனால் அறவே அல்லாஹு தஆலாவை அறியாதவன் அறவே அவனை நேசிக்கமாட்டான். வெளிரூபத்தின் அழகு எப்படி சுபாவத்தில் நேசிக்கப்படுவதாயிருக்கிறதோ அப்படியே உள்ரூபத்தின் அழகும் சுபாவத்தில் நேசிக்கப்படுவதாயிருக்கிறது. ஆதலால் மஹப்பத்தானது மஃரிபத்தின் பலனாயிருக்கிறது. இனி மஃரிபத்தின் நிறைவை அடைவதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று:—சூபியாக்களின் வழியாம். அதாவது:-தெண்டித்துப் பாடுபடுவதினாலும் எப்போதும் திக்ருசெய்து வருவதினாலும் தன்னையும் ஹக்கல்லாதவைகளையும் மறந்துபோகும்படி இருதயத்தை அவ்வளவு சுத்தமாக வைத்துக்கொள்வதாம். அதன்பிறகு அவன் மனதில் அநேகம் காரியங்கள் வெளிப்படத் தொடங்கும். அவற்றால் அல்லாஹு தஆலாவின் மகிமை அவனுக்குத் துலங்கி விளங்கும் பிரத்தியக்ஷ காட்சியைப் போல் ஆய்விடும். இந்த வழியானது வேட்டைக்காக ஒருவன் வலை விரிப்பதற்குச் சமானமாகும். அதாவது வலையில் வேட்டை விழுவதுமுண்டு. விழாமற் போவதுமுண்டு. அதில எலி சிக்குவதுமுண்டு இராஜாளி சிக்குவதுமுண்டு. அவரவர் பாக்கியத்துக்கும் இரணத்துக்கும் தக்கவிதமாக இதில் பெரியவித்தியாசமிருக்கும். மற்றொருவழி:- இல்முல் மஃரிபா என்னும் ஞானநூலைக் கற்பதாம். இல்முல்கலாம் என்னும் தர்க்கசாஸ்திரத்தையும் மற்ற சாஸ்திரங்களையுமல்ல. மஃ

ரிபாவில் முந்தினது அல்லாகு தஆலாவினது சிருஷ்டியின் புதுமைகளில் ஆராய்ந்து நோட்டமிடுவதாம். இதைப்பற்றி ஏழாம் அசலாகிய தபக்குருடைய பாடத்தில் கொஞ்சம் சயிக்கினையாகக் காட்டியிருக்கிறோம். அதன்பிறகு இன்னும் எக்கி அவனது ஜாத்தின் அழகிலும் பெருமையிலும் நோட்டமிடுவான். அதனால் அவனது அஸ்மா வ் சிபாத்து என்கிற நாமவிலக்ஷணங்களின் இரகசியங்கள் வெளிப்படும். இது பெரிய ஓர் இல்மாயிருக்கிறது. என்கினும் ஆரிபாகிய உஸ்தாதை அடைந்திருக்கிற கூரிய புத்தியுள்ள ஷாகிர்து இந்த இல்மை அடையக்கூடும். மந்தபுத்தியுள்ளவன் இதை அடையமாட்டான். இது வலை விரிப்பதுபோன்ற வழியல்ல. வலையில் வேட்டை விழுவதுமுண்டு விழாமற் போவதுமுண்டு. மேலும் இது வர்த்தகம் பயிர்த்தொழில் கைத்தொழில்போன்ற வழியாயிருக்கிறது. இன்னும் பெட்டையும் கிடாவுமான ஆடுகளை வைத்திருப்பவன் அவைகளை இணைய விடுவதற்குச் சமானமாயிருக்கிறது. இக்காரியங்களால் அகத்தியம் பொருள் விருத்தியாகும் என்கினும் இடிமுதலிய ஆபத்துகளால் மாத்திரம் இவை அழிந்துபோவதுமுண்டு. எவனாயினும் மஃரிபத்தின் வழியாலன்றி வேறுவழியால் மஹப்பத்தை அடையப் பார்ப்பானாகில் அவன் முடியாத காரியத்தில் முயற்சியெடுத்துக் கொண்டவனாயிருக்கின்றான். இன்னும் எவனாயினும் மேலே கூறப்பட்ட இரண்டு வழிகளாலன்றி வேறு வழியால் மஃரிபத்தை அடையப் பார்ப்பானாகில் அதை அடையமாட்டான். இன்னும் எவனாயினும் ஹக்கு தஆலாவின் மஹப்பத்தில்லாமல் ஆகிரத்தில் பூரண நற்பதவியை அடையலா மென்று எண்ணுவானாகில் அவன் எண்ணம் தப்பாயிருக்கிறது. ஏனெனில், ஆகிரத்து என்பது நீ அல்லாவினிடம் சேர்வதென்பதேயன்றி வேறல்ல. ஒருவன் ஒரு பொருளை அடைந்து அதுமுதல் அதை நேசிப்பவனாயும் சில தடைகளால் அப்பொருளைவிட்டும் தடுக்கப்பட்டவனாயும் வெகுநாள் அதன் ஷௌகாகிய ஆசையிற் கழித்தவனாயும் இருப்பானாகில் பின்பு அந்தத் தடைகள் நீங்கி அப்பொருளை அடைகிறபோது அவனுக்குப் பெரிய ஓர் இன்பம் உண்டாகும். இது அவன் நற்பதவியாம். அடைந்தவன் அதை நேசித்திராதபக்ஷத்தில் பின்பு அதில் யாதொரு இன்பத்தை அடையமாட்டான். அற்பமாக நேசித்திருப்பானாகில் அற்ப இன்பத்தை அடைவான். ஆகவே நற்பதவியென்பது ஆசைக்கும் மஹப்பத்துக்கும் தகுந்த அளவாயிருக்கும். (பின்னர் அல்லாகு தஆலா காக்கவேண்டும்) அவன் அதற்கு நேர்

பாறான ஓர் வஸ்துவை நேசிப்பவனையும் அதில் தனக்கு ஆசையும்
ஒற்றுமையும் உண்டாய்ப்போகிறவிதமாக உள்ளத்தை அப்படியா
கக் கெடுத்துக்கொண்டவனையுமிருக்கிறபக்ஷம் ஆகிரத்தில்வெளியாகு
வது அதற்கு நேர்மாறாய்ப்போய் அவனுக்குக் கேடாய் முடியுமாத
லால் அவன் துன்பத்தில் சிக்குவான். எதைக்கொண்டு மற்றவர்
தங்கள் நற்பதவியான இன்பத்தை அடைவார்களோ அதைக்கொ
ண்டே அவன் தன் துர்ப்பதவியான துன்பத்தை அடைவான். இவ
னே மலம் வாருகிற ஒரு தோட்டிக்கு ஒப்பாவான். அந்தத் தோட்டி
பரிமளாதிகள் விற்கும் கடைவீதிக்குப் போனான். அங்கு பரவியிரு
ந்த பரிமளகந்தம் அவனுக்கு ஏற்காமையினால் மயக்கமுற்றுக் கீழே
விழுந்து உணர்வுமாறினான். இதைக் கண்ட ஜனங்கள் அங்கு வந்து
அவன்மேல் பன்னீரைத் தெளித்துக் கஸ்தூரியைப் பூசினார்கள்.
அவன் நிலைமை இன்னும் அதிக கேடாக மாறிக்கொண்டிருந்தது.
அப்படியிருக்கையில் முன்னொருபோது மலம் வாருகிற வேலையி
லிருந்த ஒரு தோட்டி அங்கு வந்து அவனைப் பார்த்து அவன் நிலை
மை இன்னதெனத் தெரிந்துகொண்டான். உடனே கொஞ்சம் மலத்
தைக் கொண்டுவந்து தண்ணீரில் இளக்கி அவன் மூக்கில் தடவினான்.
அவன் மூர்ச்சை தெளிந்து உணர்வடைந்து "ஆ இதுதான் நல்ல
வாசனை" என்றான். ஆகவே எவனொருவன் துன்யாவே தனக்கு மஃ
ஷூகாகும்படி அதன் இன்பத்தில் பிரியமுள்ளவனாய்ப் போனானோ
அவன் அந்தத் தோட்டிக்குச் சமானமாவான். இன்னும் பரிமளாதிக
ளிருக்கிற கடைவீதியில் எப்படி மலத்தை அவன் அடையானோ
மேலும் அங்கிருப்பதெல்லாம் அவன் சுபாவத்துக்கு நேர்மாறாயும்
அவனுக்குத் துன்பத்தை அதிகப்படுத்துவதாயுமிருக்கிறதோ இன்
னும் அவனுக்குப் பிரியமாயிருந்த அந்த மலம் அந்தக் கடையில் அகப்
படாதோ அப்படியே ஆகிரத்திலும் இந்தத் துன்யாவுடைய இச்
சைகளில் ஒரு இச்சையையும் அடையமாட்டான். அங்கிருப்பதெல்
லாம் அவன் சுபாவத்துக்கு நேர்மாறாயிருக்கும். ஆகவே எல்லாம்
அவனது துன்பத்துக்கும் துர்ப்பதவிக்கும் காரணமாகும். பின்
னர் ஆகிரத்தென்பது ஆலமுல் அர்வாஹ் என்னும் சித்து லோக
மும் அங்கு வெளியாகின்ற ஹக்கு தஆலாவினது சமுக ஜமால் என்
னும் அழகிய லோகமுமாயிருக்கிறது. அந்த உலகத்துக்கு ஒத்ததா
யிருக்கும்படி தனது சுபாவத்தை இவ்வுலகத்தில் நேர்படுத்திக்கொ
ண்டவன் எவனோ அவனே நற்பதவியென்னும் சிர்வதித்தன முள்
ளவனாவான். எல்லாத் தெண்டிப்புகளும் இபாதத்துகளும் மஃரிபத்து

களும் இந்த நேர்பாட்டுக்காகவேயாம். அல்லாகு தஆலாவை நேசிப்பதில் இந்த நேர்ப்பாடு இருக்கவே இருக்கிறது. மனதைச் சுத்தப்படுத்தினவன் திடனாக ஜெயமடைந்தான் என்றது இதுவேயாம். இனி எல்லாப் பாவங்களும் இச்சைகளும் துன்யாவுடைய ஆசைகளும் இந்த நேர்பாட்டுக்கு நேர்மாறானவைகளா யிருக்கின்றன. தன்னைக் கீழ்தரத்துக்கும் கீழே தாழ்த்தினவன் திடனாக நஷ்டமடைந்தான் என்றது இதுவேயாம். அகப்பார்வையுள்ளவர்கள் தக்லீது என்னும் கேள்விப் பிரமாணத்தைவிட்டும் தாண்டி இப்பொருளைப் பிரத்தியக்ஷமாகத் தெரிந்துகொண்டார்கள். இதை நபியவர்களுடைய உண்மைகளில் ஒன்றாக அறிந்திருக்கிறார்கள். மேலும் அவர்களுடைய உண்மைக்கு முஃஜிஸாவின் அத்தாட்சியில்லாமலே இந்தப் பிரத்தியக்ஷ அறிவினால் அது உண்மையென்று நேர்நேரே தெரிந்துகொண்டார்கள். உதாரணமாக:—வயித்தியமறிந்த ஒருவன் மற்றொரு வயித்தியனுடைய வார்த்தையைக் கேட்டால் இவன் வயித்தியன்தான் என்று அறிந்துகொள்ளுகிறான். வயித்திய வேடம்பூண்டு தெருசுற்றுகிற போலிவயித்தியனுடைய வார்த்தையைக் கேட்டால் இவன் தெரியாதவனென்று அறிந்துகொள்ளுகிறான். ஆகவே தன்னை நபியென்று பொய்யாக வெளிப்படுத்துகிற கள்ளனில்நின்றும் உண்மையுள்ள நபியை இந்த அகப்பார்வை யென்னும் வழியினால் வெகு சீக்கிரத்தில் அவன் பிரித்தறிகின்றான். பின்பு அவன் தனது அகப்பார்வையினால் அறியக்கூடிய ஒரு அறிவானது ஒரு நபியினிடத்தில் கேட்பதைவிட விசேஷித்திருக்கும். இது விரைவில் விளங்குகிற ஐயமில்லாத அறிவாகும். மூசாவுடைய கோல்பாம்பாகுவதினால் உண்டாகிற அறிவுபோன்றதல்ல. ஏனெனில் இந்த அறிவு சாமிரிய்யுடைய கன்று கத்துவதினால் அழியுமென்ற சந்தேகத்துக்குள்ளிருப்பதினாலென்க. இந்த அறிவினால் ஸிஹ்ராகிய சூனியம் இதுவென்றும் முஃஜிஸாவாகிய அற்புதம் இதுவென்றும் பிரித்தறிய முடியாது.

### அல்லாகு தஆலாவை நேசிப்பதற்கு அடையாளங்கள்.

அறிந்துகொள்:—அல்லாகுதஆலாவைநேசித்தலென்பது அரியதோர் இரத்தினமாயிருக்கிறது. ஒருவன் அல்லாவில் நேசமுள்ளவனாகத் தன்னைப் பிரஸ்தாபிக்க அது அவ்வளவு சுளுவானதல்ல. ஆதலால் மனிதன் தன்னை நேசமுள்ளவர்களிற் சேர்ந்தவனென்று நினைப்பது கூடாது. நேசத்துக்கு அடையாளமும் அத்தாட்சியுமுண்டு. அந்த அடையாள அத்தாட்சிகளைத் தன்னிடத்தில் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். அவை எழுகாரியங்களா யிருக்-

கின்றன. முதலாவது:—மவுத்தை வெறுக்காம லிருப்பதாம். ஏனெனில் எந்த நேசனும் தன் நேசனுடைய தெரிசனையை வெறுத்தவனு யிருக்கமாட்டான். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம்வர்கள் தங்கள் திருவாயினால் "எவன் அல்லாகு தஆலாவைத் தெரிசிக்க ஆசிக்கின்றானோ அவனை அல்லாகு தஆலா தெரிசிக்க ஆசிக்கின்றான்" என்று அருளிச்செய் திருக்கிறார்கள். பவீதி என்பவர்கள் ஒரு ஆபிதை நோக்கி "நீர் மவுத்தை நேசிக்கிறீரா?" என்று கேட்க, அந்த ஆபிது ஒன்றும் பதில் சொல்லாமல் மவுனமாயிருந்தார். அப்போதவர்கள் "நீர் (அல்லாவுடைய நேசத்தில்). உண்மையுள்ளவரா யிருந்தால் மவுத்தை ஆசித்திருப்பீர்" என்று சொன்னார்கள். இனி அல்லாவுடைய நேசம் இருந்து மவுத்தினது சுயத்தை வெறுக்காமல் அது சீக்கிரத்தில் வருவதை வெறுத்தவனாய் இருக்கக்கூடும். ஏனெனில் மவுத்துக்கு வேண்டிய தங்கசிப்பு இன்னும் தயாராகாமையினால் அதைத் தயார் செய்துகொள்ளவேயாம். இதற்கு அடையாளம் யாதெனில், தங்கரிப்பைத் தயார்செய்வதில் அவன் விடாமுயற்சியாயிருப்பதாமென்க. இரண்டாவது:— அல்லாகு தஆலாவுக்குப் பிரியமுள்ளவைகளின்பேரில் தனக்குப் பிரியமுள்ளவைகளை வேண்டாது விட்டுவிடுவதும் அவனிடம் நெருங்குவதற்குக் காரணமாயிருக்கிற எந்தக் காரியத்தையும் கைவிடாமலிருப்பதும் அவனைவிட்டும் தூரப்படுவதற்குக் காரணமாயிருக்கிற எந்தக் காரியத்தையும்விட்டு நீங்குவதுமாம். எவன் அல்லாகு தஆலாவைத் தன் முழுமனதாலும் நேசிக்கின்றானோ அவனுமேலேயே இதுகாரியம் ஆகக்கூடும். இதற்கு அத்தாட்சியாக றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், "அல்லாகு தஆலாவைத் தன் முழுமனதாலும் நேசிக்கிற ஒருமனிதனை யாராவது பார்க்க நாடினால் ஹுதைபாவுடைய மவுலாவாகிய ஸாலிமைப் பார்க்கும்படி அவனுக்குச் சொல்லுங்கள்" என்று அருளிச்செய்திருக்கிறார்கள். இனி அவன் யாதொரு பாவத்தைச் செய்வானாகில் அவனுக்கு அல்லாவுடைய நேசமேயில்லை என்பதற்கு அந்தப் பாவம் அத்தாட்சியாகாது. மேலும் அவனது நேசம் முழுமனதாலும் இல்லை என்பதற்கு அது அத்தாட்சியாகும், நேசமே இல்லாமைக்குப் பாவம் அத்தாட்சியல்ல வென்பதின்பேரில் சாக்ஷியாவது:—நுஃமான் என்ற அசுஹாபி சாராயம் குடித்துவந்த குற்றத்திற்காக அவரைப் பன்முறை ஹத்தடித்தார்கள். ஒருவர் அவரை முனிந்து லஃனத்து செய்தார், அவரை நோக்கி றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "நீர் அவரை லஃனத்து செய்யவேண்டாம்

அவர் அல்லாவையும் ரசூலையும் நேசிக்கின்றார்" என்று அருளிச் செய்தார்கள். இன்னும் "நீ அல்லாவை நேசிக்கிறாயா? என்று உன்னை யாராவது கேட்கிறபக்ஷம் நீ இல்லை என்பாயாகில் காபிராவாய் ஆகலாலும் நேசிக்கிறேன் என்பாயாகில் உனது செய்கை நேசமுள்ளவர்களின் செய்கையைப்போல் இல்லை ஆதலாலும் நீ அந்தக் கேள்விக்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் மவுனமாயிரு" என்று புலைலு றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள்.

மூன்றாவது:— அல்லாவை திக்று செய்தல் என்னும் அவனை ஞாபித்தல் எப்போதும் அவன் மனதில் புதிதாயிருப்பதும் அதற்காக அவன் கஷ்டமெடுத்துக்கொள்வதின்றி இயல்பாகவே அதில் அவனுக்கு ஆசையுண்டாயிருப்பதுமாம். ஏனெனில் ஒரு வஸ்துவை ஆசித்தவன் அதை அதிகமாக ஞாபகத்தில் கொண்டுவருவான். அதன் ஆசை நிறைவாயிருந்தால் அதைக் கொஞ்சநேரமும் மறக்கமாட்டான். ஆதலால் அவன் மனதைக் கஷ்டத்துடன் திக்றில் அமைக்கவேண்டியவனாயிருக்கிறபக்ஷம் அப்போது எதனுடைய ஞாபகம் அவன் மனதில் அதிகரித்திருக்கிறதோ அதுவே அவனது நேசப்பொருளாயிருக்கிறதென்ற ஐயத்துக்கு இடமாகின்றது. ஒரு சமயம் அவனுக்கு அல்லாவின் நேசம் மேலிட்டிராமல் அவனுடைய நேசரின் நேசம் மேலிட்டிருக்கவும் அதனால் அந்த நேசனை நேசிக்க அவன் விருப்பமுள்ளவனாயிருக்கவும் கூடும். அல்லாவை நேசிப்பதென்பது வேறாயும் நேசனை நேசிப்பதென்பது வேறாயும் இருக்கிறது. நாலாவது:- அவன் திருவசனமாயிருக்கிற குருஆனையும் அவன் ரசூலையும் இன்னுமிப்படியே அவனோடு சேர்க்கப்படுகிற மற்றும் பொருட்களையும் நேசிப்பதாம். இந்த நேசம் உறுதிப்பட்டால் அப்போதவன் எல்லா ஜனங்களையும் அல்லாவுடைய அடிமைகளென்ற நோக்கத்தால் நேசிப்பான். மேலும் எல்லாச் சிருஷ்டிகளையும் அல்லாவுடைய படைப்புகளென்ற நோக்கத்தால் நேசிப்பான். எதுபோலெனில் ஒருவன் மற்றொரு மனிதனை நேசித்தால் அந்த மனிதனுடைய காயிதத்தைத் தன் சிநேகனுடைய எழுத்தென்ற நோக்கத்தாலும் அவன் கோர்வைசெய்த நூலைத் தன் சிநேகனுடைய கோர்வையென்ற நோக்கத்தாலும் நேசிப்பதுபோலென்க. ஐந்தாவது:- தனித்திருப்பதிலும் முனாஜாத்திலும் ஆவல்கொண்டவனாயும் இரவு வருவதை ஆசித்தவனாயுமிருப்பதாம். ஏனெனில் தடைகளின் தொந்திரவு நீங்கித் தனிமையில் தன் நேசனுடன் முனாஜாத்து செய்வதற்கேயாம். தனித்திருப்பதைவிட இரவும் பகலும் தூக்கத்தையும்

பேச்சையும் அதிகமாக நேசிப்பானாகில் அவனுக்கு அல்லாவின்மீதுள்ள நேசம் அற்பமேயாம். தாவூது அலைகிஸ்ஸலாமவர்களுக்கு வந்த ஒஹியாவது:—“ஓ தாவூதே! நீர் (என்னையன்றி) ஜனங்களில் ஒருவரையும் உமக்குத் துணையாக எடுத்துக்கொள்ளவேண்டாம். பிரதிபலனைத்தேடுவதில் அவசரப்பட்டு (இபாதத்துசெய்து) அந்தப் பிரதிபலன் தாமதமாகக் கிடைத்தால்(இபாதத்தில்) சோம்பல் செய்கிறவனும் என்னை மறந்து தன்னுடைய நிலைமையின்பேரில் திருப்தியடைந்தவனும் ஆக இவ்விருவரேயன்றி மற்றெவனும் என்னைவிட்டு அகலமாட்டான். இவன் என்னைவிட்டு அகன்றதற்கு அடையாளமாக நான் இவனை இவன் பராக்கில் விட்டுவிடுகிறேன். துன்யாவில் இவனைத் திகைப்புற்றவனாயிருக்கச் செய்கிறேன்” என்பதே. ஆதலால் அல்லாகுதஆலாவின் நேசம் நிறைபூரணமாய்விட்டால் பிறகு வேறு எந்தவஸ்துவையும் துணை தேடவிராது. பனிஇஸ்ராயீல் கூட்டத்தில் ஒருஆபிதுஇரவில்விழித்துவணங்குகிறவராயிருந்தார். அவர்ஒருபக்ஷியிருந்து இனிமையாகக் கூவிக்கொண்டிருந்த ஒரு மரத்தின் கீழ தொழுக ஆசித்து தமது தொழுகையை அந்த மரத்தினிடமாக மாற்றிக்கொண்டார். அப்போது அந்த ஆபிதுக்குச் சொல்லும்படி அக்காலத்து நபியின்மீது வந்த ஒஹியாவது:—“ஓ ஆபிதே! நீ ஒரு சிருஷ்டியை உனக்குத் துணை சம்பாதித்துக்கொண்டா யாதலால் உன் பதவிகளில்நின்றும் ஒரு பதவி இறங்கிவிட்டது. இனி எந்த அமலாலும் நீ அந்தப்பதவிக்குச் செல்லமாட்டாய்” என்பதே. இன்னும் சிலர் அல்லாவுடன் தனித்தலும் முனாஜாத்து செய்தலுமான இந்தப் பதவியில் எவ்வளவு ஏறிவிட்டார்களென்றால், அவர்களுடைய வீட்டின் மற்றொரு பக்கத்தில் நெருப்புப் பிடித்தாலும் அவர்களுக்குத் தெரியாமற்போயிருக்கிறது. இன்னுமொருவருடைய காலில் ஏதோ நலியிருந்தநிமித்தம்; அவர் தொழுதுகொண்டிருக்கும்போது அந்தக் காலை அறுத்தது அவருக்குத் தெரியாமற்போயிருக்கிறது. இன்னும் அல்லாகுதஆலா தாவூது அலைகிஸ்ஸலாமவர்களுக்கு ஒஹியினால் “ஓ தாவூதே! எவன் என்னை நேசிப்பதாகப் பிரஸ்தாபித்து இரவெல்லாம் தூங்குகிறானோ அவன் பொய்ப்பிரசங்கியா யிருக்கிறான்” என்றும், “நேசன் தன்னுடையநேசனைத் தெரிசிக்க ஆசைப்படானோ?” என்றும், “எவன் என்னைத் தேடுகிறானோ அவனிடம் நான் இருக்கிறேன்” என்றும் அறிவித்தான். மூசா அலைகிஸ்ஸலாமவர்கள் அல்லாகுதஆலாவைப் பணிந்து “என் ஆண்டவனே! நான் உன்னைத் தேடிப் பார்க்கும்பொருட்டு நீ எங்கே யிருக்கிறாய்? என

க்கு அறிவிக்கவேண்டும்" என்றார்கள், அதற்கு அல்லாகுதஆலா "ஓ மூசாவே! நீர் என்னைத்தேட நாடினபோதே என்னை அடைந்தீர்" என்று அருளிச்செய்தான். ஆறுவது:—இபாதத்து அவனுக்குப் பாரமாய்த்தோன்றாமல் சுளுவாயிருப்பதாம். ஒரு ஆரிபு சொல்லு கிறதாவது:—"இரவில் தொழுவது எனக்குப் பாரமாய்த்தோன்றும் படி இருபதுவருஷகாலம் அவ்வளவு கஷ்டத்துடன் தொழுதுவந் தேன். அதன்பிறகு மறு இருபதுவருஷம் அந்தத் தொழுகையில் நான் இன்பத்தை அடைந்தேன்" என்பதே. நேசம் உறுதிப்பட்டால் எந்த இன்பமும் இபாதத்தின் இன்பத்துக்கு எட்டாது. அப்போது கஷ்டமென்பது எங்கே யிருக்கப்போகிறது? ஏழாவது:—அல்லாகு தஆலாவுக்கு வழிபடுகிற எல்லா அடியார்களையும நேசிப்பதும் அவர் களின்மீது கிருபையாயிருப்பதும் அவனுக்குமாறுசெய்கிற எல்லாக் காபிர்களையும் பாவிகளையும் பகைப்பதுமாம். அல்லாகு தஆலா அரு ளிச்செய்திருப்பதுபோல் அது வருமாறு:—(எந்தஜனங்கள் முஹம் மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப் பின்பற்றினவர்களாயிருக் கிறார்களோ) அவர்கள் காபிர்களின்மீது அதிக கடினமுள்ளவர்களா யும் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் கிருபையுள்ளவர்களாயு மிருப்ப வர்கள் என்பதே. நபிமார்களிலொருவர் அல்லாகு தஆலா வினிடத்தில் "என் ஆண்டவனே! உன் அவ்லியாக்களான நேசர்கள் யாவர்? அவர்கள் எப்படியிருப்பார்கள்?" என்றுகேட்டதற்கு அல்லாகு தஆலா சொன்னதாவது:—"குழந்தையானது தன்தாயைத்தேடி ஏக்க முற்றிருப்பதுபோல் அவர்கள் என்னில் ஏக்கமுற்றிருப்பார்கள். இன்னும் பறவையானது தன் கூட்டில் காவல் புகுவதுபோல் அவர் கள் என் திகுரில் காவல் புகுவார்கள். இன்னும் புலியானது தனக் குக் கோபமுண்டாகிறபோது ஒன்றுக்கும் அஞ்சாததுபோல் ஒரு வன் யாதொரு பாவத்தைச்செய்தால் அவர்கள் கோபப்படுவார்கள்" என்பதே. நேசத்துக்கு இவைகளும் இவைபோன்றவைகளுமான அடையாளங்கள் அநந்தமிருக்கின்றன. எவனுக்கு நேசம் நிறைபூர ணமா யிருக்கிறதோ அவனில் இவையெல்லாம் உண்டாயிருக்கும். இவைகளிற் சில அடையாளங்க ளிருக்குமாயின் அவன் நேசமும் அதற்குத் தகுந்த அளவாயிருக்கும்.

## அல்லாவின்மேல் ஷவுகு இதுவென அதன்பொருளை விளக்கல்.

அறிந்துகோள்:—எவன் அல்லாவை நேசித்தல் இல்லவே இல்லை யென்று நிராகரிக்கின்றானோ அவன் அல்லாவின்மேல் ஷவுகு வைப் பதும் இல்லையென்று சாதிப்பான். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல

மவர்கள், "என் ஆண்டவனே! நான் உன்னிடத்தில் உன் தெரிசனையின் ஷவுக்கையும் பெருமைபொருந்திய உன் திருமுகக் காட்சியின் இன்பத்தையும் கேட்கிறேன்" என்று துஆ இரந்திருக்கிறார்கள். அல்லாஹு தஆலாவும் "(ஹதீசுகுதுசியில்) என் தெரிசனையை எதிர்பார்ப்பதில் சாதுக்களின் ஷவுகு நீடித்துவிட்டது. நான் அவர்களைத் தெரிசிக்க அவர்களைவிட அதிக ஷவுகுள்ளவனா யிருக்கிறேன்" என்று கூறுகின்றான். ஆதலால் ஷவுகு என்பதின்பொருளை நீ அறியக்கடமைப்பட்டவனா யிருக்கிறாய். அறிந்துகொள்:—ஷவுகு மஹப்பத்தைச் சேர்ந்ததா யிருக்கிறது. ஆனால் ஜனங்கள் அறவே தெரிந்துகொள்ளாத ஒருவன்மீது அவர்களுக்கு ஷவுகு இராது. தெரிந்துகொண்டாலும் அவன் அவர்களுடைய கண்ணுக்கு முன்பாக இருப்பவனாயும் அவர்கள் அவனைப் பார்க்கிறவர்களாயுமிருந்தால் அப்போதும் ஷவுகு இராது. ஆகவே ஒரு மஃஷூகைப்போல் ஒருவிதத்தில் தோன்றியும் ஒருவிதத்தில் மறைந்தும் அதாவது நினைவில் தோன்றியும் கண்ணுக்கு மறைந்துமிருக்கிற ஒரு பொருளில்தான் ஷவுகு இருக்கும். அந்தப்பொருள் கண்ணுக்குத் தோன்றவும் அதைப் பூர்த்தியாக அடையவும் வேண்டுமென்கிற தேட்டமே ஷவுகு என்பதற்குப் பொருளாகும். பின்னர் இதனால் அல்லாவின்மீதுள்ள ஷவுகு துன்யாவில் அவனை அடைவது அசாத்தியமென்பதை நீ தெரிந்துகொண்டாய். ஏனெனில் அல்லாஹு தஆலா அறிவுக்குப் புலப்படுகிறவனா யிருந்தபோதிலும் தெரிசனைக்கு மறைந்தவனாயு மிருக்கிறான். நிலவின் நிறைவு எப்படி தெரிசனையா யிருக்கிறதோ அப்படியே அறிவின் நிறைவுந் தெரிசனையா யிருக்கிறது. இந்த ஷவுகு மவுத்தைக் கொண்டேயொழிய நீங்கமாட்டாது. இன்னுமொருவித ஷவுகு மவுத்துக்குப்பின் ஆகிரத்திலும் நீங்காமல் தங்கியிருக்கும். ஏனெனில் இவ்வுலகத்தில் அல்லாஹு தஆலாவை அறிதல் என்னும் மஃரிபத்து இரண்டுவிதத்தால் குன்றியிருக்கிறது. ஒருவிதம்:—மெல்லிய திரைக்குளிருந்து வெளியே ஒன்றைப் பார்ப்பதற்குச் சமானமாய் அல்லது சூரியோதயத்திற்குமுன் சிற்றிருட்டாயிருக்கிற நேரத்தில் ஒன்றைப் பார்ப்பதற்குச் சமானமாய் மஃரிபத்து மங்கலா யிருக்கிறது. ஆகிரத்தில் இது பிரகாசமாகும். அப்போது ஷவுகு அற்றுப்போம். மற்றொருவிதம்:—தான் ஆசைகொண்ட தன் மஃஷூகுடைய முகத்தை மாத்திரம் பார்த்து அவளுடைய கரிய கூந்தலழகையும் மற்றும் அவயவங்களின் அழகையும் பார்க்காமல் அவையெல்லாம் அழகாயிருக்கிறதென்றறிந்த ஒருவனுக்கு அவைகளையும் பார்க்க

வேண்டுமென்கிற ஷவுகு இருக்கும். இதேபோல் அல்லாகு தஆலாவினது திருச்சமுகத்தின் அழகுக்குத் தீர்மானமில்லையாதலால் ஒருவன் எவ்வளவு அதிகமாய் அறிந்தபோதிலும் அவன் அறிந்தது கொஞ்சமும் அறியாமல் மிச்சப்பட்டிருப்பது அதிகமுமேயாம். ஏனெனில், அவனறியும் பொருட்களுக்குத் தீர்மானமில்லை. அவன் எல்லாவற்றையும் அறியாமலிருக்கிறவரையில் திருச்சமுகத்தின் பூரண அழகைப் பெற்றுக்கொள்ளாதவனாயிருப்பான். இதுவோ மனிதனுக்கு இவ்வுலகத்திலும் வாய்க்காது, அவ்வுலகத்திலும் வாய்க்காது. ஏனெனில் மனிதனுடைய அறிவு ஒருபோதும் முடிவற்றதாகாது. பின்னர் ஆகிரத்தில் எவ்வளவாகத் தெரிசனை அதிகப்படுகிறதோ அவ்வளவாக இன்பம் அதிகப்படும். அந்தத் தெரிசனையோ தீர்மானமற்றதாயிருக்கும். பிரசன்னமான ஒரு தெரிசனையில் அவன் மனப்பார்வை நோக்கிக்கொண்டிருந்தால் அதனால் அவனுக்கு முழுதும் ஆநந்தமும் மகிழ்ச்சியுமான நிலைமையிருக்கும். அந்த நிலைமைக்கு உன்சு என்று சொல்லப்படுகிறது. பிரசன்னமாகாமல் மிச்சப்பட்டிருக்கிற மற்ற தெரிசனையை அவன் மனம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தால் அந்த நிலைமைக்கு ஷவுகு என்று சொல்லப்படுகிறது. இந்த உன்சுக்கும் இந்த ஷவுகுக்கும் இவ்வுலகத்திலும் முடிவில்லை, அவ்வுலகத்திலும் முடிவில்லை. ஆகிரத்தில் எப்போதும் அவர்கள் எங்கள் ஆண்டவனே! எங்கள் ஒளியை எங்களுக்கு நிறைவாக்கு என்று கேட்டுக்கொண்டிருப்பார்கள். ஏனெனில் அல்லாவுடைய திருச்சமுகத்தின் அழகில்நின்றும் வெளியாவதெல்லாம் ஒளியாகவேயிருக்கும். அவர்களுக்கு அதன் நிறைவை அடையவேண்டுமென்ற தேட்டமிருக்கும். என்றாலும் அதன் நிறைவுக்கு முடிவிராது. ஏனெனில் அல்லாத தஆலாவை அல்லாகு தஆலாவன்றி எவனும் பூர்த்தியாக அறியமாட்டான். பூர்த்தியாக அறிய முடியாமற்போனால் பூர்த்தியாகத் தெரிசிக்கவும் முடியாது. என்றாலும் ஷவுகுள்ளவர்களுக்கு வழி விசாலிக்கும். அவர்களுக்கு எப்போதும் அந்த வெளிப்பாடும் தெரிசனையும் அதிகரித்துக்கொண்டேயிருக்கும். சுவர்க்கத்தில் இன்பத்துக்கு முடிவில்லை என்றதின் உண்மை இதுவேயாம். இதுவாயிராதபக்ஷத்தில், அந்த இன்பத்தின் உணர்ச்சியில்லாமற்போகவும் கூடும். ஏனெனில் எதுவொன்று எப்போதுமிருப்பதாயும் மனம் அதில் பழகிப்போனதாயுமிருக்கிறதோ அதில் புதிதாக யாதொரு விசேஷம் தோன்றுதவரையில் அதன் இன்பத்தை மனம் உணராது. ஆகவே சுவர்க்கத்தில் முன்

னடைந்த நிஃமத்தை இனிவரும் நிஃமத்திலும் இலேசாகக் காண்கி
விதமாகச் சுவர்க்கவாளிக்கு நிமிஷந்தோறும் நிஃமத்துகள் புதிதாகி
கொண்டிருக்கும். அதனால் தினம் தினம் இன்பமும் அதிகரித்து
கொண்டிருக்கும். இந்த ஆதாரத்தினாலுங்கூட நீ உன்சு என்பதின்
பொருளைத் தெரிந்துகொண்டாய். அதாவது:—இன்னும் அடையாத
மிச்சப்பட்டிருக்கிற நிஃமத்தை நோக்காமல் இப்போது அடை
திருக்கிற நிஃமத்தை நோக்கிக்கொண்டிருக்கிற மனநிலைமையே
உன்சு என்னப்படும். மிச்சப்பட்டிருக்கிற நிஃமத்தைத் தேடுகி
மனத்தேட்டமே ஷவுகு என்னப்படும். ஆதலால் ஹக்கு தஆல
வை நேசிப்பவர்கள் இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் உன்சுக்கும்
ஷவுகுக்கும் நடுவே மாறுதலடைந்துகொண்டிருப்பார்கள்.

தாவூது அலைகிஸ்ஸலாமவர்களுக்கு அல்லாகு தஆலா சொன்ன
தாக அவர்களுடைய அக்பாருகளில் எழுதியிருப்பதாவது:—"ஓ தா
வூதே! நீர் பூலோகத்தாருக்கு என்னைக்குறித்து அறிவிக்கவேண்டிய
தென்னவென்றால், என்னை நேசிப்பவன் எவனோ அவனுக்கு நான்
நேசனாயிருக்கிறேன். என்னோடு தனித்துட்காருகிறவன் எவனோ
அவனோடு நானிருக்கிறேன். எனது திக்று என்னும் ஞாபகத்தி
மருவியிருப்பவன் எவனோ அவனோடு நான் மருவியிருக்கிறேன்
எனது துணையைத் தேடுகிறவன் எவனோ அவனுக்கு நான் துணை
வனாயிருக்கிறேன். என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் எவனோ அவனை
நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். என் கட்டளையைத் தழுவிக்கொள்ளு
கிறவன் எவனோ அவன் கட்டளையை நான் தழுவிக்கொள்ளுகிறேன்
என்னை நேசிக்கிற ஒருவன் தன் மனதால் நேசிக்கிறான் என்று நான்
அறிந்தேனாகில் அவனை அங்கீகரித்து மற்றவர்மேல் அவனை முதன்
மையாக்காமலிருப்பதில்லை. என்னைத் தேடுகிறவன் மெய்யாக என்
னை அடைவான். பிறிதொன்றைத் தேடுகிறவன் என்னை அடைய
மாட்டான். ஓ பூலோகத்தாரே! நீங்கள் எக்காரியங்களில் ஆசை
கொண்டிருக்கிறீர்களோ அக்காரியங்களில் பொறுமையாக நோட்ட
மிடுங்கள். என்னோடு சகவாசித்தலும் என்னோடிருத்தலும் என்
னோடு மருவி வாழலுமான இக்காரியங்களின் பக்கம் உங்கள் மன
தைத் திருப்புங்கள். நீங்கள் என்னோடு உறவாடினால் நான் உங்க
ளோடு உறவாடுவேன். நான் என் தோழராகிய இபுராஹீமுடைய
சுபாவத்திற் கொஞ்சமும் என் இரகசிய நேசராகிய மூசாவுடைய
சுபாவத்திற் கொஞ்சமும் என்னால் ஏற்கப்பட்ட (என் ஹபீபாகிய
முகம்மதுடைய சுபாவத்திற் கொஞ்சமும் எடுத்து என் நேசர்களு
டைய சுபாவத்தைப் படைத்திருக்கிறேன். ஷவுகுள்ளவர்களின்

இருதயங்களை நான் என் ஒளியினால் படைத்து என் மகிமையினால் பரிபாலித்தேன்'' என்பதே. இன்னும் நபிமார்களில் ஒருவருக்கு வந்த ஒஹியாவது:—"எனக்குச் சில அடியார்களிருக்கிறார்கள். அவர்கள் என்னை நேசிக்கிறார்கள். நான் அவர்களை நேசிக்கிறேன். அவர்கள் என்னில் ஆசைகொண்டிருக்கிறார்கள். நான் அவர்களில் ஆசைகொண்டிருக்கிறேன். அவர்கள் என்னை ஞாபகம் செய்கிறார்கள். நான் அவர்களை ஞாபகம் செய்கிறேன். அவர்களுடைய நோக்கம் என்னிலிருக்கிறது. என்னுடைய நோக்கம் அவர்களில் இருக்கிறது. நீரும் அவர்களுடைய மார்க்கத்தை எடுத்துக்கொள்ளுவீராகில் நான் உம்மையும் நேசிப்பேன். நீர் அவர்களுடைய மார்க்கத்தைவிட்டுத் திரும்புவீராகில் நான் உம்மை விரோதியாக்கிக்கொள்ளுவேன்'' என்பதே. மஹப்பத்து, ஷவுகு, உன்சு இவ்விஷயங்களில் இப்போது கூறிவந்தவைபோல் இன்னும் அநேகம் ஹதீசுகளும் ஆன்றோர் வாக்கியங்களும் இருக்கின்றன. இங்கு இவ்வளவு போதும்.

### ரிலாவாகிய பொருத்தம் இதுவென அதன் பொருளையும் அதன் மேம்பாட்டையும் விளக்கல்.

அறிந்துகொள்:—அல்லாகு தஆலா விதித்த விதியாகிய கற்பனைக்குப் பொருந்துவதென்னும் ரிலாவானது எல்லாமகாம்களிலும் மிக்க மேலானது. இதற்குமேல் யாதொரு மகாமும் இல்லை. ஏனெனில் மஹப்பத்தென்னும் மகாம் மிகவும் பெரியது. அல்லாகு தஆலா செய்கிற ஒவ்வொன்றையும் பொருந்திக்கொள்வதென்னும் ரிலாவானது அந்த மஹப்பத்தின் பலனாயிருக்கிறது. ஆனால் இது அரைகுறையான மஹப்பத்தின் பலனல்ல. நிறைவான மஹப்பத்தின் பலனும். இதனாலேதான் கற்பனைக்குப் பொருந்துவது அல்லாகுதஆலா உடைய (சமூகங்களெல்லாவற்றினும்) பெரிய ஓர் சமூகமாயிருக்கிறது என்றாருல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சில ஜனங்களைநோக்கி "உங்கள் ஈமானுக்கு அடையாளமென்ன?" என்றுகேட்க அந்த ஜனங்கள் "நாங்கள் துன்பத்தில் சபுருசெய்வோம் நிஃமத்தில் ஷுகுரு செய்வோம் அல்லாவுடைய கற்பனைக்குப் பொருந்தமாயிருப்போம்" என்று சொன்னார்கள். அப்போது நாயகமவர்கள், "இந்த ஜனங்கள் ஹுகமாக்களாயிருக்கிறார்கள், உலமாக்களாயிருக்கிறார்கள், இவர்களுடைய விளக்கத்தின் மகிமையினால் இவர்கள் நபிமார்களாகின்ற பக்குவம் நெருங்கியிருக்கிறது" என்று அருளிச்செய்தார்கள். இன்னுமவர்கள் திருவுளமாயிருப்பதாவது:—"கியாமத்து

உண்டானால் என் உம்மத்தில் ஒரு கூட்டத்துக்கு செட்டையும் சிற
கும் சிருஷ்டிக்கப்படும். அவர்கள் சுவர்க்கத்தில் பறந்துகொண்டிருப்
பார்கள். மலக்குகள் அவர்களைப்பார்த்து "நீங்கள் கணக்கையும் தரா
சையும் சிறாத்தென்னும் பாலத்தையும் பார்த்தாய்விட்டதா?" என்று
கேட்பார்கள். அதற்கவர்கள் "இவைகளில் ஒன்றையும் நாங்கள் பார்
க்கவில்லை" என்றுசொல்லுவார்கள். அப்போதவர்கள் "நீங்கள்யார்?"
என்றுகேட்பார்கள். நாங்கள் "முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல
மவர்களுடைய உம்மத்து" என்று சொல்லுவார்கள். பின்பு "நீங்கள்
இந்த எல்லாக் கராமத்தையும் பெற்றிருக்கிறீர்களே, உங்கள் அமல்
எதாயிருந்தது?" என்றுகேட்பார்கள். அதற்கவர்கள் "எங்களுக்குஇர
ண்டு குணங்களிருந்தன. முதலாவது:—நாங்கள் தனிமையி லிருக்கும்
போதும் யாதொரு பாவத்தைச்செய்ய அல்லாகு தஆலாவுக்கு
வெட்கப்பட்டுக்கொண்டிருந்தோம். இரண்டாவது:—அல்லாகு தஆ
லா எங்களுக்குக் கொடுத்த கொஞ்ச இரணத்தைப் பொருந்திக்கொள்
ளுகிறவர்களாயிருந்தோம்" என்று சொல்லுவார்கள். அப்போது மல
க்குகள், "அப்படியிருந்தால் உங்களுக்கு இந்த கராமத்து எதார்த்த
மானதேயாம்" என்றுசொல்லுவார்கள்" என்பதே. ஒருகூட்டம்மூசா
அலைகிஸ்ஸலாமவர்களிடம் "தாங்கள் அல்லாகு தஆலாஉடைய சமு
கத்தில் அவன் ரிலாவான பொருத்தம் எதில் இருக்கிறதென்று
கேளுங்கள். நாங்கள் அதைச் செய்வோம்" என்று சொன்னார்கள்.
அப்போது அல்லாகு தஆலாவுடைய சமுகத்திலிருந்து "நீங்கள்
என்னைக்கொண்டு பொருந்தி சந்தோஷமாயிருந்தால் நான் உங்களைக்
கொண்டு பொருந்தி சந்தோஷமாவேன்" என்று ஒஹி வந்தது.
தாவூது அலைகிஸ்ஸலா மவர்களுக்குவந்த ஒஹியாவது:—"என் முனு
ஜாத்தின் இன்பத்தை என் அவுலியாக்களுடைய மனதிலிருந்து
எடுத்துப் போடுவதற்குத் துன்யாவின் துக்கவிஷயமான காரியம்
அவர்களுக்கு என்ன இருக்கிறது? ஓ தாவூதே! என் நேசர்கள் எப்
பொருளைப்பற்றியும் துக்கப்படாமலும் இருதயத்தைத் துன்யாவில்
எதனோடும் இறுக்கிக் கட்டாமலும் அப்படியாக அவர்கள் ஆன்ம
பெலத்தை யடைந்திருக்கிறார்களே அதுவே அவர்களில் எனக்கு
நேசப் பொருளாயிருக்கிறது" என்பதே. அல்லாகு தஆலா அருளிச்
செய்கிறதாக றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள திருவுளமா
யிருப்பதாவது:—"நான் நானேயன்றி வேறு நாயகனில்லாத ஒரு
நாயகனாயிருக்கிறேன். எவன் என்னால் வரும் துன்பத்தில் சபுரு
செய்யாமலும் என்னால் அளிக்கப்படும் நிஃமத்தில் ஷுக்குரு செய்

யாமலும் என் கற்பனையில் பொருத்தமில்லாமலு மிருக்கிறானோ அவன் வேறு நாயகனைத் தேடிக்கொள்ளும்படி அவனுக்குச் சொல்லும்'' என்பதே. இன்னும் அல்லாகு தஆலா கூறுகிறதாக அவர்கள் சொன்னதாவது:—“சிருஷ்டிகளை நிருமித்தேன். அவற்றின் பிரயத்தனங்களை யுண்டுபண்ணினேன். என் அமைப்பைப் பெலப்படுத்தினேன். எது வேண்டுமோயிருந்ததோ அதை விதித்தேன். இதற்குப் பொருத்தமாயிருப்பவன் எவனோ அவனுக்கு என்பொருத்தமுண்டு. பொருத்தமற் றிருப்பவன் எவனோ அவன் என்னைக் காணுகிற வரையில் அவனுக்கு என் முனிவாகிய கோபமுண்டு'' என்பதே. இன்னும் அல்லாகு தஆலா கூறுகிறதாக அவர்கள் சொல்லியிருப்பதாவது:—“நான் நன்மை, தீமைகளைப் படைத்தேன். நான் எவனை நன்மைக்காகப் படைத்து அந்த நன்மையை அவன் கைக்குச் சுளுவாக்கினேனோ அவனே அதிஷ்டசாலி. இன்னும் எவனைத் தீமைக்காகப் படைத்து அந்தத் தீமையை அவன் கைக்குச் சுளுவாக்கினேனோ அவனுக்கே கைசேதம். இன்னும் எவன் இது ஏன்? இது எப்படி? என்று கேட்கிறானோ அவனுக்கே கைசேதம்'' என்பதே. நபிமார்களில்நின்றும் ஒரு நபியவர்கள் இருபது வருஷகாலம் பசியினாலும் உடையில்லாமையினாலும் வேலையின் அதிககஷ்டத்தினாலும் சோதிக்கப்பட்டு வந்தார்கள். இது நிவர்த்தியாக வேண்டுமென்று துஆ கேட்டார்கள். அந்த துஆ அங்கீகரிக்கப் படவில்லை. பின்பு அவர்களுக்குவந்த ஒஹியாவது:—“நான் வானம் பூமிகளைப் படைப்பதற்குமுன் இதுவே உமது பங்காயிருக்கும்படி நான் பாகித்த என் கற்பனையா யிருக்கிறது. இப்போது உமக்காக வானம் பூமிகளின் சிருஷ்டிப்பையும் எனது ராஜரீகத்தின் ஏற்பாட்டையும் புதிதாக மாற்றவேண்டுமென்றும் நான் விதித்திருக்கும் விதியை எனதிஷ்டப்படி நடத்தாமல் உமதிஷ்டப்படி மாற்றவேண்டுமென்றும் காரியங்கள் நான் விரும்புகிறபடி ஆகாமல் நீர் விரும்புகிறபடி ஆகவேண்டுமென்றும் எண்ணுகிறீர். இனி யொருமுறை இந்த எண்ணம் உம்மில் எழும்புமாகில் எனது பெருமையின்மேல் ஆணையாக உமது நாமத்தை நபிமார்களுடைய தப்தரிலிருந்து அழித்துவிடுவேன்'' என்பதே. அனசு றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:—நான் இருபதுவருஷம் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குப் பணிவிடை செய்துவந்தேன். நான் ஒன்றைச் செய்தால் இதை ஏன் செய்தாய்? என்றும் ஒன்றைச் செய்யாமற்போனால் இதை ஏன் செய்யவில்லை? என்றும் அவர்கள் என்னைக் கேட்கமாட்டார்கள்.

அதைப்பற்றி யாராவது என்னைக் கடிந்து பேசினால் "(விடுங்கள்)
விதியிலுள்ளது நிகழ்ந்தது" என்று சொல்லுவார்கள்" என்பதே.
தாவூது அலைகிஸ்ஸலாமவர்களுக்கு வந்த வஹியாவது:—"தாவூதே!
நீர் ஒன்றை நாடுகிறீர். நான் ஒன்றை நாடுகிறேன். நான் நாடுவதே
யன்றி வேறொன்றும் நடக்காது. நான் நாடுவதை நீர் பொருந்திக்
கொள்ளுவீராகில் நீர் நாடுவதை நான் உமக்குப் போதுமாக்குவேன்.
பொருந்திக் கொள்ளாமற்போனால் நீர் நாடினதின்பேரில் உமக்கு
வருத்தத்தைக் கொண்டுவருவேன். பிறகு நான் நாடுவதேயன்றி
வேறொன்று நடக்காது" என்பதே. உமருப்னு அப்தில் அஜீஸ் றஹி
மஹுல்லா அவர்கள் "அல்லாகுதஆலா விதித்த கற்பனையதுவாயிருந்
தாலும் அதில் எனக்குச் சந்தோஷம்" என்று சொன்னார்கள். "நீர்
எதை நாடுகிறீர்?" என்று அவர்களைக் கேட்டதற்கு அல்லாகுதஆலா
எதைக் கற்பித்திருக்கிறானோ அதையே நாடுகிறேன்" என்று
சொன்னார்கள். இன்னும் "இல்லாததை ஆசித்து ஆ! அது இருக்க
வேண்டுமே என்று சொல்வதைப் பார்க்கிலும் இருப்பதை வெறு
த்து ஆ! இது இல்லாமற் போகவேண்டுமே என்று சொல்வதைப்
பார்க்கிலும் நெருப்பைத் தின்பது எனக்கு அதிக பிரியமாய்த்
தெரிகிறது" என்று இபுனுமஸ்ஊது றலியல்லாகு அன்கு அவர்கள்
சொல்லுகிறார்கள். பனீ இஸ்ராயீல் கூட்டத்தில் ஒரு ஆபிதானவர்
ஒரு நீண்டகாலம் மிகுந்த பாடுகள்பட்டு இபாதத்து செய்துவந்தார்.
பின்பு அவர் ஒரு சொப்பனங் கண்டார். அதில் யாரோ சுவர்க்கத்
தில் உமக்குத் துணைவியா யிருப்பவள் இன்னஸ்திரீ என்று சொல்வ
தாகக்கேட்டு விழித்தெழுந்து அந்தஸ்திரீயின் இபாதத்தைப் பார்க்க
நாடி அவளைத் தேடிப்போய்ப் பார்த்தார். அவளிடத்தில் பர்லு தொ
ழுகைகளையன்றி மற்றப்படி அவள் இரவில் விழித்து வணங்கவும்
பகலில் நோன்பு வைக்கவும் பார்க்காமையினால் அவளை நோக்கி "உன்
அமல் என்ன?" என்று கேட்டார். அதற்கவள் "நீர் பார்த்ததே என்
அமல்" என்றாள். பின்பு அவர் "இதினும் விசேடித்த அமல் உன்னில்
இருக்கும் ஞாபித்துச் சொல்" என்று பன்முறை வலிந்துக் கேட்டார்.
அப்போதவளுக்கு ஞாபகம்வந்து "ஓ ஆபிதே! எனக்கு எதாவது தான்
பழும் நோயுமிருந்தால் அதில்நின்றும் நான் சுகத்தை யடையவே
ண்டுமென்று நாடமாட்டேன். நான் வெயிலில் இருந்தால் நிழலில்
போகவேண்டுமென்று நாடமாட்டேன். நிழலில் இருந்தால் வெயி
லில் வரவேண்டுமென்று நாடமாட்டேன். அல்லாகுதஆலா விதித்த
விதிக்குப் பொருத்தமா யிருப்பேன். இந்த ஒரு குணந்தான் என்

னில் இருப்பது" என்று சொன்னாள். அப்போதந்த ஆபிது தம் தலையின்மீது கையை வைத்துக்கொண்டு "இது இலேசான ஒருகுணமல்ல. மிகவும் பெருத்த ஓர்குணமாயிருக்கிறது" என்று சொன்னார்.

### ரிலா என்னும் பொருத்தத்துக்குப் பொருள்.

அறிந்துகொள்:—உலமாக்களில் ஒரு கூட்டம் துன்பத்திலும் இச்சைக்கு விரோதமாயிருப்பதிலும் ரிலா என்னும் பொருத்தம் வருவது அசாத்தியமென்றும் சபுரு செய்தலே அதன் முடிவு என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது பிசகாகும். மேலும் ஆசை முற்றினால் இச்சைக்கு விரோதமாயிருப்பதிலும் இரண்டு விதத்தால் பொருத்தம் வரக்கூடும். முதலாவது விதம்:—தன் வருத்தம் தனக்குத் தெரியாதபடி ஆசையில் அவ்வளவு மூழ்கியும் மெய்மறந்தும் போவதாம். உதாரணமாக:—ஒருவன் தன் சத்துருவோடு யுத்தஞ் செய்யும்போது அவனைச் சங்கரித்து அவன் உதிரத்தைப் பார்க்கிற வரையில் தன்மீது விழுகிற காயங்களின் வருத்தம் தனக்குத் தெரியாதபடி அவ்வளவு மெய்மறந்தவனாகத் தன் சத்துருவின் நோக்கத்திலேயே இருப்பதுமுண்டு. இன்னும் ஒன்றன்மீது ஆவலாய் ஓடுகிறவனுக்குக் காலில் முள் தைத்தால் அதை அவன் அறியாமலிருப்பதுமுண்டு. இன்னும் மனமானது ஒன்றில் பராக்காயிருந்தால் பசியும் தாகமும் தெரியாமலிருப்பதுமுண்டு. ஒரு சிருஷ்டியின் ஆசையிலும் துன்யாவின் ஆவலிலும் இவையெல்லாம் உண்டாகக்கூடுமாயிருக்கும் போது சிருஷ்டி கர்த்தாவாகிய அல்லாகு தஆலாவுடைய ஆசையிலும் ஆகிரத்துடைய ஆசையிலும் இது ஏன் உண்டாகக்கூடாது? வெளிரூபத்தின் அழகைவிட உள்ரூபத்தின் அழகு மிகவும் அதிகமென்பது தெரிந்தேயிருக்கிறது. ஏனெனில் வெளிரூபமானது எதார்த்தத்தில் மலக்கூட்டின்மேல் போர்த்தப்பட்ட ஒரு தோலாயிருக்கிறது. உள்ளழகைப் பார்க்கின்ற அகக்கண்ணானது முகக்கண்ணைவிட அதிக வெளிச்சமுள்ளதாயிருக்கிறது. ஏனெனில் முகக் கண்ணானது அநேகமாகப் பிசகிப்போகும், பெரியதைச் சிறியதாகவும், சிறியதைப் பெரியதாகவும், தூரத்தைச் சமீபமாகவும் பார்க்கும். இரண்டாவதுவிதம்:—நோயும் வருத்தமும் தெரிந்தபோதிலும் அதில் தன் நேசனுக்குச் சம்மதமிருப்பதாக அறிவதினால் அதைப் பொருந்திக் கொள்வதாம். உதாரணமாக:—ஒரு சிநேகன் அவனை நஷ்தர் குத்தி இரத்தமெடுத்துக்கொள்ளும்படி அல்லது கசப்பான மருந்தைத்தின்னும்படி சொன்னால் அதனால் அந்தச் சிநேகனுடைய சமாதானத்தைச் சம்பாதிக்கவேண்டிய நிமித்தம் அதைப் பொருந்திக்கொள்ளு

கிறான். ஆதலால் துன்பத்தில் அல்லாகு தஆலாவுக்குச் சம்மதமிருக்கிறதாக அறிகின்றவன் அதைப் பொருந்திக்கொள்ளுவான். அவன் எதைச்செய்தாலும் சமாதானமாயிருப்பான். வறுமையிலும் வியாதியிலும் துன்பத்திலும் பொருத்தமாயிருப்பான். எதுபோலெனில், துன்யாவில் அவாகொண்டவன் யாத்திரையின் இம்சையையும் கடலின் பயங்கரத்தையும் மற்றும் அநந்தக்கஷ்டங்களையும் பொருந்திக்கொள்வதுபோலென்க. அல்லாகு தஆலாவின்மீது ஆசைகொண்ட அநேகம் முஹிப்புகள் இந்தப் பதவிக்கு எட்டியிருக்கிறார்கள். பத்ஹுமவுசிலி றஹிமஹுல்லா அவர்களுடைய மனைவியருக்கு நகம் முறிந்து கீழே விழ அம்மங்கையர் சிரித்தனர். "உனக்கு வருத்தம் தோன்றவில்லையா?" என்று கேட்டதற்கு "சவாபின் சந்தோஷம் அவ்வருத்த உணர்ச்சியை நீக்கிவிட்டது." என்றுரைத்தனர். ஸஹல் துஸ்தரி றஹிமஹுல்லா அவர்களுக்கு ஒரு நோயிருந்தது. அதற்கு அவர்கள் பரிகாரமொன்றும் செய்துகொள்வதில்லை. ஒரு சிநேகர் அவர்களை நோக்கி "நீர் இந்த நோய்க்கு ஏன் பரிகாரம் செய்துகொள்கிறதில்லை?" என்று கேட்டதற்கு, அவர்கள் "ஓ நண்பரே! ஒருநேசனால் உண்டான காயம் நோவாது" என்று சொன்னார்கள். ஜுனைது றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் ஸரிய்யுஸ் ஸகதியினிடத்தில் "அல்லாகு தஆலாவின்மீது ஆசை கொண்டவன் துன்பத்தின் வருத்தத்தைப் பரிசிப்பானா?" என்று கேட்டேன். அதற்கவர் "பரிசிக்கமாட்டான்" என்றார். பின்பு "வாளால் வெட்டினாலோ" என்றேன். அதற்கவர் "அதுவும் அவனுக்குத் தெரியாது, எழுபது வெட்டு வெட்டினாலும் சரி" என்றார்" என்பதே. இன்னுமொருவர் "அல்லாகு தஆலாவுக்கு எது பிரியமோ அது எனக்குப்பிரியம்" என்றும், "அவனுக்கு நான் நரகத்துக்கேபோகவேண்டுமென்று நாட்டமிருக்கிறபக்ஷம் அது எனக்குச் சம்மதம் அது எனக்குப்பிரியம்" என்றும் சொல்லுகிறார். பிஷ்ருல்ஹாபி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் பகுதாதில் ஒருவனைக் கண்டேன். அவனைக் கழியால் ஆயிரம் அடி அடித்தார்கள். அவன் வாய்திறந்து ஒன்றையும் சொல்லவில்லை. "நீ ஏன் சத்தங் காட்டாமலிருந்தாய்?" என்று நான் அவனைக்கேட்டேன். அதற்கவன் "என் மஃஷுகு என் முன்பாக இருந்து என்னைப் பார்த்துக்கொண்டிருந்ததினால் நான் சப்தம் போடவில்லை" என்றான். அப்போது "நீ பெரிய மஃஷுகைப் பார்த்தால் என்னசெய்வாய்?" என்றேன். இதைக்கேட்ட அவன் "ஆ" என்று அலறி ஓர் சப்தமிட்டு உயிர் துறந்தான்" என்பதே. இன்னு

மிந்த பிஷ்ருல்ஹாபியவர்கள் சொல்லுகிறதாவது: "உப்பாதானுக்குப் போகவேண்டுமென்று என் மனதில் நாட்டம் பிறந்ததினால் நான் புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கையில் வழியில் ஒருவரைக்கண்டேன். அவர் குஷ்டநோயுள்ளவராயும் பயித்தியங் கொண்டவர்போலும் தரையில் விழுந்து கிடந்தார். கறையான் அவரை அரித்துக்கொண்டிருந்தது. நான் அவர் தலையை என்மடிமீது தூக்கிவைத்தேன். அவர் உணர்வில் வந்து, "எனக்கும் என் நாயகனுக்கும் நடுவே தடையாய்க் குறுக்கிட இந்த வீணன்யார்!" என்றுசொன்னார்" என்பதே. இன்னும் யூசுபு அலைகிஸ்ஸலாமவர்களைப்பார்த்த ஸ்திரீகள் அவர்களின்பேரழகினால் தங்கள் கைகளை அறுத்துக்கொண்டார்களென்ற இந்தச்சங்கதி குர்ஆனால் விளங்குகின்றது. இன்னும் மிசுரில் பஞ்சம் நேரிட்ட காலத்தில் ஜனங்களுக்குப் பசியுண்டானால் யூசுபு அலைகிஸ்ஸலாமைத் தெரிசிக்கப்போவார்கள். அந்தத் தெரிசனையில் தங்கள் பசியை மறந்துவிடுவார்கள். இது ஒரு சிருஷ்டியின் அழகினாலுண்டான குணப்பாடாயிருந்தது. சிருஷ்டி கர்த்தாவாகிய அல்லாகு தஆலாவுடைய அழகு ஒருவனுக்கு வெளியாகிற பக்ஷம் அவனுக்குத் தன் நோய் தெரியாமற்போவது ஒரு ஆச்சரியமா? காட்டில் ஒரு மனிதன் குடும்ப சகிதமாகக் குடியிருந்தான். அல்லாகு தஆலா அவனுக்கு எதை விதித்தாலும் அவன் இதில் நன்மை இருக்கிறதென்று சொல்லுகிறவனாயிருந்தான். அவன் சாமானைக் காக்கின்ற ஒரு நாயும் அவன் சுமைகளைத் தூக்குகின்ற ஒரு கழுதையும் விடியற்காலத்தில் கூவி அவர்களை எழுப்புகின்ற ஒரு சேவலும் அவனிடம் இருந்தது. ஒரு ஓநாய்வந்து அவன் கழுதையின் வயிற்றைக் கிழித்துவிட்டது. "அப்போதவன் இதில் நன்மையிருக்கிறது" என்றுசொன்னான். நாயானது அந்தச்சேவலைக் கடித்துக் கொன்றுபோட்டது. அப்போதும் அவன் "இதில் நன்மையிருக்கிறது என்றான்." பின்பு நாயும் ஏதோ ஓர் காரணத்தினால் செத்துப்போயிற்று. அப்போதுமவன் "இதில் நன்மையிருக்கிறது" என்றான். அவன் குடும்பத்தார் துக்கத்தையடைந்து "எதுபோனாலும் நீ இதில் நன்மையிருக்கிறதுஎன்று சொல்லுகிறாய், நமக்குக் கையும் காலும்போல உதவியாயிருந்த கழுதையும் நாயும் சேவலும் செத்துப்போய்விட்டனவே. இது எப்படி நன்மையாகும்!" என்றார்கள். அப்போதுமவன் "இதிலும் நன்மையிருக்கக்கூடும்" என்றான். பிறகு இரவு கழிந்து பொழுதுவிடிந்தபோது அந்த இடத்துக்குச் சமீபமான சுற்றுப்புறங்களில் வசித்துக்கொண்டிருந்தவர்களுடைய நாயின் சத்தத்தையும் கோழியின்

கூச்சலையும் கேட்ட கள்ளர்கள்வந்து அவர்களெல்லாரையும் கொன்றுபோட்டுச் சாமான்களைக் கொள்ளையடித்துக்கொண்டு இவர்களிருந்தவிடத்தை அறியாமற் போய்விட்டார்கள் என்கிற சேதி தெரிந்தது. அப்போதந்த மனிதன் தன் குடும்பத்தாரை நோக்கிக் "காரியத்தின் நன்மையை அல்லாகு தஆலா அறிவான் என்பதைப் பார்த்தீர்களா?" என்று சொன்னான். ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் ஒருமனிதன் பக்கமாகச் சென்றார்கள். அவன் அந்தகனும் வெண்மேகமும் கருமேகமுமான வியாதியுள்ளவனும் கைகால்களில்லாதவனும் இரண்டு பாரிசங்களிலும் திமிர்வாத ரோகமுள்ளவனுமிருந்ததுடன் ஷுக்ரு செய்தவனாக "ஜனங்களில் அநேகம்பேர் எந்தத் துன்பத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்களோ அந்தத் துன்பத்தினின்றும் எனக்குச் சுகத்தைக் கொடுத்த ஆண்டவனுக்கே புகழ்" என்று சொல்லிக்கொண்டிருந்தான். ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் அவனை நோக்கி "உனக்குவராமல் மீதியாயிருப்பதும் அதைவிட்டு நீ ஆரோக்கியத்தை அடைந்ததுமான அந்தத்துன்பம் எது?" என்று கேட்டார்கள். அப்போதவன் என் இருதயத்தில படைக்கப்பட்டிருக்கிற மஃரிபத்து எவனுடைய இருதயத்தில் படைக்கப்படவில்லையோ அவனை நோக்க நான் மிகவும் ஆரோக்கியமுள்ளவனாயிருக்கிறேன்" என்றான். ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் அவனை நோக்கி "நீ உண்மை சொன்னாய்" என்று சொன்னதுமன்றி அவன் கையைப் பிடித்துக்கொண்டு அவன்தேகத்தைத் தங்கள் திருக்கரத்தால் தடவிவிட்டார்கள். உடனே அவன் சவுக்கியத்தையடைந்து கைகாலுள்ளவனாகவும், அழகிய முகமும் பார்வையுமுள்ளவனாகவும் எழுந்து நின்றான். பின்பு ஈஸா அலைகிஸ்ஸலாமவர்களுடன் சகவாசித்துக்கொண்டும் இபாதத்து செய்துகொண்டுமிருந்தான். ஷிப்லி றஹிமஹுல்லா அவர்களைப் பைத்தியக்காரர் என்று வியாதியஸ்தர்களிருக்கிற வைத்தியசாலையில் கொண்டுபோய் வைத்திருந்தார்கள். சில ஜனங்கள் அவர்களிடம்போனார்கள். ஷிப்லி றஹிமஹுல்லா அவர்கள் அந்த ஜனங்களை நோக்கி "நீங்கள் யார்?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "நாங்கள் உங்கள் நேசர்கள்" என்றார்கள். ஷிப்லி றஹிமஹுல்லா அவர்கள் அந்த ஜனங்களின்மேல் கல்லையெறியத் தொடங்கினார்கள். அவர்கள் ஓட்டம்பிடித்தார்கள். அவர்களை விளித்து ஷிப்லி றஹிமஹுல்லா அவர்கள் "நீங்கள் பொய் சொன்னீர்கள் என்றும் நீங்கள் என் நேசர்களாயிருந்தால் என்னால் வரும் துன்பத்தைச் சகித்துக்கொள்ளுவீர்கள" என்றும் சொன்னார்கள்.

பசல்:—உலமாக்களில் ஒரு கூட்டம் (நீ ரிலாவின் மகாமுக்குச்
சென்றால் பின்பு)நீ துஆ செய்யாமலிருப்பதும் இல்லாத வஸ்துவை
அல்லாவினிடம் கேட்காமலிருப்பதும் உள்ளதைக்கொண்டு பொரு
த்தமாயிருப்பதும் பாவமானது அல்லாவுடைய கற்பனையில் ஒன்றா
யிருப்பதால் அதையும் நீ மறுத்துப் பேசாமலிருப்பதும் பாவமும்
விஷபேதியும் அதிகரித்திருக்கிறபட்டணத்தைவிட்டோடுவது அல்லா
வுடைய கற்பனைக்குப் பயந்து ஓடுவதென்றாவதால் நீ அப்படி ஓடாம
லிருப்பதுமான இவை ரிலாவுக்கு ஷரத்தாகும்" என்றுசொல்லி
யிருக்கிறார்கள். இவையாவும் பிசகேயாம். ரசூல் சல்லல்லாகு அலைகி
வசல்லமவர்கள் துஆ இரப்பவர்களாயும் துஆ இரக்கும்படி ஜனங்
களுக்குக் கட்டளை செய்கிறவர்களாயும் அதைப்பற்றி விருப்பூட்டு
கிறவர்களாயும் இருந்ததுமன்றி "துஆவானது இபாதத்தின் சாரமா
யிருக்கிறது" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். எதார்த்தத்தில்
துஆவானது மனதில் இரக்கமும் முறிவும் அல்லாவினிடம் தாழ்
மையுடன் அழுது கெஞ்சிக்கேட்கலுமான குணங்கள் உண்டாவதற்
குக் காரணமாயிருக்கிறது. இவையெல்லாம் நல்ல குணங்களாயிருக்
கின்றன. தாகந்தீர்வதற்காகத் தண்ணீர் குடிப்பதும் பசி நீங்குவதற்
காகச் சோறு உண்பதும் குளிர் போவதற்காகத் துணிபோர்ப்பதும்
எப்படி ரிலாவுக்கு விரோதமாகாவோ அப்படியே துன்பம் அகல்வ
தற்காகத் துஆ செய்வதும் ரிலாவுக்கு விரோதமாகாது. மேலும்
அல்லாகு தஆலா எதை ஒரு காரணமாக்கி அதை அநுஷ்டிக்கும்படி
உத்திரவுசெய்திருக்கிறானோ அந்த உத்திரவுக்கு மாறுசெய்வதுதான்
அவன் கற்பனையில் பொருத்தமாயிருப்பதற்கு விரோதமாகும். இனி
பாவத்தைக்குறித்து விலக்கு வந்திருக்கும்போது அதற்குச்சம்மதம்
கொடுப்பது எப்படிக்கூடும். ஒருவனுடைய பாவத்தின்மேல் மற்றொ
ருவன் பொருத்தமாயிருப்பானாகில் அந்தப் பாவத்தில் அவனும்
கூட்டாவான் என்றும், ஒரு அடிமையை மஷ்ரிகில் கொலைசெய்ய
ஒருவன் மகுரிபிலிருந்து அதைப் பொருந்திக்கொள்ளுவானாகில்
அந்தக்கொலையில் அவனும் கூட்டாவான்என்றும்சொல்லப்பட்டிருக்
கிறது. ஆதலால் பாவமானது எவ்விதத்திலும் அல்லாவுடைய கற்
பனையில்நின்றுமுள்ளதாயிருந்தபோதிலும் அதற்கு இரண்டு முகங்க
ளுண்டு. பாவத்தை அடியான் தனதிஷ்டமாகத் தெரிந்தெடுக்கிறான்
என்பதை நோக்க ஒரு முகம் அடியான் பக்கம் சேர்ந்ததாயிருக்
கிறது. அடியான் ஹக்கு தஆலாவுடைய சக்தியாதி சிபத்துகளை
அடைந்திருப்பதே இதற்கு அடையாளமாம். இனி அந்தப் பாவம்

அல்லாவுடைய கற்பனையாயிருக்கிற தென்பதை நோக்க அதன் மற்றொரு முகம் அல்லாவுடன் சேர்ந்ததாயிருக்கிறது. ஆகவே உலகமானது குபுரைவிட்டும் பாவத்தைவிட்டும் ஒழிந்திராதென்று அல்லாகு தஆலா கற்பித்திருப்பதைக்கொண்டு பொருந்தியிருத்தல்வேண்டும். பாவத்தை அடியான் தனநிஷ்டமாகத் தெரிந்தெடுப்பதினாலும் அது அவன் சிபத்தா யிருப்பதினாலும் அவனை அல்லாகு தஆலா பகைக்கிறான் என்கிற அத்தாட்சியினாலும் அதைக்கொண்டு பொருத்தமாயிருத்தல் கூடாது. இது ஒன்றுக்கொன்று நேர்மாறுவதென்னும் முரண் அல்ல. ஏனெனில், தனக்கும் பகைவனாய் தன் பகைவனுக்கும் பகைவனாயிருந்த ஒரு மனிதன் இறந்துபோனால் தனக்குத் துக்கமு மிருக்கலாம் சந்தோஷமு மிருக்கலாம். ஆனால் இந்தத் துக்கமும் சந்தோஷமும் பிரத்தியேகமான ஒவ்வோர் காரணத்தைப் பற்றினதாயிருக்கும். இரண்டும்ஒரே காரணத்தைப்பற்றினதாயிருந்தால் அப்போதுதான் ஒன்றுக்கொன்று முரணாகுமென்பது. இதேபோல் எந்தவிடத்தில் பாவம் அதிகரித்திருக்கிறதோ அதை வெறுத்து ஓடிப்போவது மிக முக்கியமாம். அல்லாகுதஆலா அருளிச்செய்ததுபோல் அது வருமாறு:—எங்கள் ஆண்டவனே! கொடுமைக்காரர்கள் வசிக்கின்ற இந்த ஊரைவிட்டு எங்களை வெளிப்படுத்து என்பதே. இம்மாதிரியான பட்டணங்களிலிருந்து முன்னோர்கள் எப்போதும் ஓடிப்போகிறவர்களாயிருந்தார்கள். ஏனெனில் பாவத்தின் குணம் அவர்களில் உறையுமென்றும் அப்படி உறையாமற்போனாலும் அதன் பலாயும்வேதனையும்அவர்களைத் தாக்குமென்றுமேயாம். உங்களில் கொடுமை செய்தவர்களுக்கே குறிப்பாய்வராத (எல்லாருக்கும் பொதுவாய் வருகிற) பித்னாவான வேதனைக்கு நீங்கள் பயப்படுங்கள் என்று அல்லாகு தஆலா அருளிச்செய்திருப்பது இதற்கு அத்தாட்சியாம். மஹ்ரமல்லாதவர்கள்மேல் தன் பார்வை விழுகிற ஓர் இடத்தில் வசிப்பானாகில் அந்த விடத்தைவிட்டு ஓடிப்போவது ரிலாவுக்கு விரோதமாகாது. இதேபோல் ஒரு பட்டணத்தில் நெருக்கமும் பஞ்சமுமாயிருந்தால் அதைவிட்டும் போய்விடுவது ஆகும். ஆனால் தாஊன் (விஷபேதி முதலிய கொள்ளைநோய்) இருக்கிற வூரைவிட்டு ஓடக்கூடாது என்று விலக்கு வந்திருக்கிறது. ஏனெனில் சவுக்கியமா யிருப்பவர்கள் போய்விட்டால் வியாதியஸ்தர்கள் சேதமாவார்கள். ஆனால் மற்ற துன்பங்களுக்கு இப்படிப் போகக்கூடாதென்பதில்லை. மேலும் எக்காரியத்துக்கு எக்காரணங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ அக்காரியத்துக்கு அக்காரணங்களை மார்க்க

உத்திரவுக்கு விரோதமில்லாமல் செய்துவரவேண்டும். மார்க்க உத்திரவுக்கு மாறில்லாதபடி நீ அவைகளைச் செய்தபிறகு அவன் விதித்தவிதி எதுவோ அதன்மேல் நீ பொருத்தமாயிருக்கவேண்டும். இன்னும் அதில் நன்மையிருப்பதாகவும் நீ அறிந்திருக்கவேண்டும்.

பத்தாவது அஸ்லு * மவுத்தை நினைப்பதின் பயான்.

அறிந்துகொள்:—எவன் தன் காரிய முடிவு எவ்விதத்திலும் மரணம் என்றும் தான் இறங்குமிடம் கபுரு என்றும் தன்மீது சாட்டப்படுகிறவர்கள் முன்கர்நகீருகள் என்றும் தனக்கு ஆசை அச்சங்களையூட்டி வார்த்தைப்பாடு செய்த இடம் கியாமத்து என்றும் தான் போகிற இடம் சுவர்க்கம் அல்லது நரகம் என்றும் அறிந்தானோ அவன் புத்திமானாயிருக்கிறபக்ஷத்தில் மரணத்தின் நினைவேயன்றி வேறு எந்த நினைவும் அவனுக்கு அவ்வளவு முக்கியமாயிராது. மரணத்துக்கு வேண்டிய தங்கரிப்பின் முயற்சியேயன்றி வேறு எந்த

---

* கீமியாயெ ஸஆதத்து 1-வது வால்யம் 92-ம் பக்கத்தில் "மறுதரம் உயிர்கொடுத் தெழுப்புவதற்கு முன்னிருந்த சரீரமே வேண்டுமென்ற அவசியமில்லை" என்று சொன்னதில் மேற்படி கிதாபின் ஆசிரியரான இமாமவர்களின் கருத்துக்கு விரோதமாகச் சிலர் வேறு தாத்பரியங்கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அது இமாமவர்களின் சம்மதமல்ல என்பது விளங்கும்பொருட்டு அவர்கள் கோர்வைசெய்த எஹ்யாஉலூமித்தீன் என்ற கிதாபில் இருந்து அடியிற்கண்ட அறபி வாசகம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. அதாவது:—

'மவுத்துடைய ஹகீகத்து விஷயத்தில் ஜனங்களுக்குப் பல தப்பெண்ணங்களிருக்கின்றன. அதில் அவர்கள் இடறுகப் பிசகிப்போனார்கள். சிலர் மனிதன் நாஸ்தியாவதே மவுத்து என்றும், பின்பு உயிர்பெற்றெழும்புவதும் நன்மை தீமைகளைப்பற்றிய ஞாயவிசாரணைக்கு நடுத்தீர்ப்புநாளும் கிடையாது என்றும் மற்றும் ஜீவராசி எப்படி மரித்து (நாசமாய்)ப் போகிறதோ மரஞ்செடிகள் எப்படிக் காய்ந்து (செத்துப்) போகின்றனவோ அப்படியே மனிதனும் மரித்து நாஸ்தியாய்ப்போகிறான் என்றும் எண்ணங்கொண்டிருக்கிறார்கள். இது முல்ஹிதுகளுக்கும் அல்லாவும் ஆகிரத்தும் உண்டென்று ஈமான் கொள்ளாத ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட எண்ணமாயிருக்கிறது. இன்னும் சிலர் ரூஹானது மவுத்தினால்அழிந்துபோகிறது என்றும் ஹஷ்ருடைய காலத்தில் அதைச் சரீரத்துக்குத் திருப்புகிறவரையில் அவன் கபுரில் இருக்குங் காலமெல்லாம் அவன் யாதொரு வேதனையைக்கொண்டு துன்பப்படுவதும் யாதொரு சவாபைக்கொண்டு சுகம்பெறுவதும் இல்லை என்றும் எண்ணியிருக்கிறார்கள். வேறு சிலர் ரூஹானது நிலைத்திருக்கும் என்றும் மவுத்தினால் அழியாது என்றும் இன்பதுன்பங்களை அடைவதெல்லாம் அந்த ரூஹுகளேயன்றி சரீரங்கள் அல்லவென்றும் சரீரங்கள் அறவே எழுப்பப்படுவதில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இவையாவும் தப்பெண்ணங்களாயும் எதார்த்தத்தை

முயற்சியும் அவனிடத்தில் அவ்வளவாக அதிகரித்திராது. உதாரணமாக:—ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், எவன் தன் நபுஸை வழிபடுத்தி மரணத்துக்குப்பின் வேண்டிய தங்கரிப்புக்காக அமல்செய்தானோ அவனே புத்திமான் என்று அருளிச் செய்திருக்கிறார்கள். எவன் மவுத்தை அதிகமாக நினைக்கின்றானோ அவன் அகத்தியம் அதன் தங்கரிப்பைச் சித்தப்படுத்துவதில் பராக்காவான். அவன் தன் கபுரை சுவர்க்கத்துடைய பூங்காவுகளில் ஒரு பூங்காவாகக் கண்டுகொள்வான். இன்னும் எவன் மவுத்தை மறந்திருக்கிறானோ அவன் எண்ணமெல்லாம் துன்யாவாகவே யிருக்கும். ஆகிரத்துடைய தங்கரிப்பை மறந்தவனாயிருப்பான். அவன் தன் கபுரை நரகத்துடைய பொதும்புகளில் ஒரு பொதும்பாகக் கண்டு கொள்வான். மவுத்தை நினைப்பது பெரிய ஓர் வரிசைப்பாடுள்ளதா யிருப்பதற்குக் காரணம் இதுவேயாம். "இன்பங்களை இடித்துத் தார்க்கின்றதை நீங்கள் அதிகமாக நினையுங்கள் அதாவது:— துன்யாவுடைய இன்பங்களில் பராக்கா யிருப்பவர்களே! அந்த இன்பங்

---

விட்டு (இதாபகத்தில்) சாய்ந்தவைகளாயுமிருக்கின்றன. மேலும் நிலைமை மாறலே மவுத்துக்குப் பொருள் என்றும் ரூஹானது சரீரத்தைவிட்டுப் பிரிந்த பிறகு அழியாமல் நிலைபட்டுத் துன்பத்தையாவது இன்பத்தையாவது அடைந்துகொண்டிருக்குமென்றும் (ஆன்றோர்) ஆராய்ந்தறிந்த வழிகள் சாக்ஷி பகர்கின்றன. (அதற்குச்சார்பாக) ஆயத்துகளும் ஹதீசுகளும் அறைந்துரைக்கின்றன. அது சரீரத்தை விட்டுப்பிரிவதென்பதற்குப் பொருள் யாதெனில், சரீரம் அதன் வழிபாட்டிலிருந்து நீங்குவதினால் சரீரத்தைவிட்டு அதன் ஆட்சி அதிகாரங்கள் அற்றுப்போவதேயாம். அவயவங்கள் ரூஹுக்குக் கருவிகளாயிருக்கின்றன. அவைகளை அது தன் வேலைகளில் வழங்குகின்றது. எந்தமட்டென்றால் கையைக்கொண்டு பிடிக்கின்றது, காதைக்கொண்டு கேட்கின்றது, கண்ணைக்கொண்டு பார்க்கின்றது, கல்பைக்கொண்டு வஸ்துக்களின் உண்மையையறிகின்றது. இங்கு கல்பு என்றது ரூஹு தன்னையேதான். ரூஹானது வஸ்துக்களைக் கருவி சம்பந்தமின்றி தானாகவே அறிகின்றது. இதனாலேதான் துக்கம், விசனம், சஞ்சலம் முதலிய பண்புகளாலுண்டாகிற வருத்தத்தையும் சந்தோஷம் ஆநந்தம் முதலியவைகளாலுண்டாகிற சுகத்தையும் அது தானாகவே உணர்கின்றது. இந்தப் பண்புகளெல்லாம் அவயவங்களோடு சம்பந்தப்பட்டவைகளல்ல, ஆதலால் எவை ரூஹுக்கே உரித்தான குணங்களோ அவை சரீரம் நீங்கினபின் ரூஹுடன் தங்கியிருக்கும். அவயவங்களின் சம்பந்தமாக (ரூஹுக்கு) உண்டாகிற குணங்கள் சரீரம் செத்தபின் அதில் ரூஹைத் திருப்புகிறவரையில் நீக்கப்பட்டிருக்கும். கபுரிலே சரீரத்தில் ரூஹு திருப்பப்படுவதும் எழுப்பும் நாளாகிய கியாமத்துவரையில் பிற்படுத்தப்படுவதும் (புத்திக்குத்) தூரமாகாது என்பதே. (எஹ்யாஉல்உலூம் 4-வது ஜில்து மவுத்துடைய ஹக்கத்தின் பயான்).

களை நாசமாக்குகின்ற மவுத்தை நீங்கள் அதிகமாக நினைத்துப்பாருங்கள்" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "மரணவிஷயத்தில்நின்றும் நீங்கள் அறிந்திருக்கிறதை மிருகங்கள் அறிகிறபக்ஷம் ஒருபோதும் அம்மிருகங்களில் புஷ்டியான ஓர் மிருகத்தின் இறைச்சி ஒருவனுக்கும் தின்னக்கிடைக்காது" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். ஆயிஷா றலியல்லாகு அன்கா அவர்கள் நாயகமவர்களைப் பணிந்து "யாறசூலல்லா! எவராவது ஷஹீதுகளின் பதவியிலிருப்பாரா?" என்று கேட்டதற்கு "யார் தினந்தோறும் இருபது தரம் மவுத்தைநினைக்கிறார்களோ அவர்களே" என்று அருளிச்செய்தார்கள். இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒரு கூட்டத்தினிடமாகப் போனபோது அந்தக் கூட்டத்துடைய சிரிப்பின் சப்தம் அதிகமாயிருந்தது. அவர்களைநோக்கி நாயகமவர்கள் "நீங்கள் எல்லா இன்பங்களையும் கசப்பாக்குவதின் நினைவோடு உங்கள் சபையைச் சேருங்கள்" என்று சொன்னார்கள். "அது என்ன? யாறசூலல்லா!" என்று அவர்கள் கேட்டார்கள். "அது மவுத்து" என்று விடையளித்தார்கள். இன்னும் "நீ மவுத்தை அதிகமாக நினை" என்றும், "அந்தநினைப்பானது உன்னை துன்யாவில் ஜாஹிதாக்கி உன் பாவங்களை அழிக்கும்" என்றும் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானதாக அனசு றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் ஜனங்களுக்கு சற்புத்தி போதிக்க மரணம் ஒன்றே போதும் என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். அஸ்ஹாபுகள் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு முன்பாக ஒருவரை அதிகமாகப் புகழ்ந்துபேசினார்கள். அப்போது நாயகமவர்கள் "அவருடைய மனதில் மவுத்துசங்கதி எப்படியிருந்தது" என்று கேட்டார்கள். அதற்கு அஸ்ஹாபுகள் "அவர் மவுத்து விஷயமாக ஒன்றும் பேச நாங்கள் கேட்டதில்லை" என்றார்கள். அப்போது நாயகமவர்கள் "அவர் விஷயத்தில் நீங்கள் நினைப்பதுபோல் அவர் அப்படிப்பட்டவரல்ல" என்று அருளிச்செய்தார்கள். இபுனு உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:—"நாங்கள் பத்துபேர் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் சமுகத்துக்குப் போனோம். அன்ஸாருகளில் ஒருவர் நாயகமவர்களை நோக்கி "யாறசூலல்லா! மிக நுண்ணறிவும் அதிக சங்கையும் பொருந்திய மனிதர் எவர்?" என்று கேட்டார். அதற்கு நாயகமவர்கள் "யார் அதிகமாய் மவுத்தை நினைப்பவர்களாயும் ஆகிரத்துக்கு வேண்டிய தங்கரிப்புகளைத் தயார் செய்வதில் பேராவல்கொண்டவர்களாயுமிருக்கிறார்

களோ அவர்களே" என்றும், "அவர்கள் துன்யாவில் மேன்மையும் ஆகிரத்தில் சங்கையும் அடைகிறவர்கள்" என்றும் அருளிச்செய்தார்கள்" என்பதே. இபுறாஹீமுத் தய்மி றஹிமஹுல்லா அவர்கள் "இரண்டு வஸ்துக்களிருக்கின்றன" என்றும், "அவை துன்யாவின் சுகத்தை என்னிடத்திலிருந்து நீக்கிவிட்டன" என்றும், "அவற்றுள் ஒன்று மவுத்துடைய நினைவும் மற்றொன்று அல்லாகுதஆலாவின் சமுகத்தில் நிற்கிற பயமுமாம்" என்றும் சொல்லுகிறார்கள். உமருப்னு அப்தில் அஜீஸ் என்னும் கலீபாசரவர்கள் இரவில் ஆலிம்களைத் தங்கள் சமுகத்துக்கு வருவிப்பார்கள். அவர்கள் கியாமத்தையும் மவுத்தையும் குறித்துப் பிரசங்கம் செய்வார்கள். மய்யித்துத் தங்கள் முன்பாகக் கிடத்தப்பட்டிருக்க அதைப் பார்த்து அழுகிற இழவாளிகள்போல் அந்தப் பிரசங்கத்தில் அவர்கள் அழுவார்கள். ஹசன்பசரீ றஹிமஹுல்லா அவர்கள் உட்கார்ந்தால் அவர்கள் பேச்செல்லாம் மவுத்தையும் நரகத்தையும் ஆகிரத்தையும் குறித்தவைகளாகவே யிருக்கும். ஒரு பெண்பிள்ளை தனது கல்நெஞ்சைக்குறித்து ஆயிஷா றலியல்லாகு அன்காவினிடம் முறையிட்டாள். அப்போதவர்கள் அவளை நோக்கி "நீ மவுத்தை அதிகமாக நினைப்பாயாகில் உன் மனம் இளகியிருதுவடையும்" என்றார்கள். அவள் அப்படியே நினைத்து வந்ததில் அந்தக் கடினம் அவன் மனதைவிட்டு நீங்கிவிட்டது. பின்பு ஆயிஷா றலியல்லாகு அன்ஹாவினிடம் வந்து அதற்கு நன்றியறிதலான புகழைக் கூறி ஷுக்குரு செய்தாள். றபீஉப்னு கைசம் றஹிமஹுல்லா அவர்கள் தங்கள் வீட்டில் ஒரு கபுரு தோண்டி வைத்திருந்தார்கள். மனதுக்கு மவுத்தின் ஞாபகத்தைப் புதுப்பிக்கிறதற்காகத் தினந்தோறும் அந்தக் கபுரில் பன்முறை படுப்பவர்களாயும், "ஒரு ஸாஅத்துநேரம் நான் மவுத்தை மறந்துபோவேனாகில் என் மனம் இருளடைந்துபோம்" என்று சொல்லுகிறவர்களாயு மிருந்தார்கள். உமருப்னு அப்தில் அஜீஸ் அவர்கள் ஒரு மனிதனை நோக்கி "நீ மவுத்தை அதிகமாக ஞாபகம் செய். நீ கஷ்டத்திலிருந்தால் அந்த ஞாபகம் உன் மனதுக்கு ஒரு ஆற்றலாயிருக்கும். சுகத்திலிருந்தால் அந்த ஞாபகம் அதைக் கசப்பாக்கும்" என்று சொன்னார்கள். அபூசுலைமான் தாறானி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:— "நான் உம்முஹாரூன் என்ற மங்கையரிடத்தில் "நீர் மவுத்தை நேசிக்கிறீரோ" என்று கேட்டதற்கு அம்மங்கையர் "இல்லை" என்றனர். நான் "ஏன்?" என்றேன். அப்போதம்மங்கையர் "நான் ஒரு மனிதருக்கு ஏதாவது குற்றஞ் செய்தால் அந்த மனிதரைப் பார்க்க என

க்கு இஷ்டம்வருவதில்லை. பின்னர் அநேக பாவங்களுடன் நான் அல்லாகு தஆலாவை எப்படிப்போய்ப் பார்க்கப் பிரியப்படுவேன்" என்றுரைத்தனர்" என்பதே.

பசல்: அறிந்துகொள்:—மவுத்தை நினைப்பது மூன்று விதமாயிருக்கிறது. முதலாவது:—துன்யாவின் வாழ்க்கையில் பராக்கா யிருக்கிற மறதியாளன் நினைப்பதாம். அவன் மவுத்தை நினைப்பான். அதனால் துன்யாவுடைய இச்சைகளான சுகத்திலிருந்து நீங்கிவிடுவதைப் பயந்து அதை வெறுத்தவனா யிருப்பான். ஆகவே அவன் மவுத்தைக் கெட்டதாக எண்ணித் தனக்கு முன்னாலிருக்கிற இந்த மவுத்து ஒரு பொல்லாங்கா யிருக்கிறதென்றும், "ஆ வங்கேசதமே! இத்தரி சுகங்களுடன் இந்தத் துன்யாவை விடவேண்டியதா யிருக்கிறதே" என்றும் சொல்லுவான். இவ்விதமாக மவுத்தை நினைப்பது அல்லாகு தஆலாவுடைய சமுகத்தைவிட்டு அவனை மிகவும் தூரப்படுத்திவிடும். ஆனால் துன்யாவின் வாழ்க்கை எவ்விதத்தினாலாவது அவனுக்குக் கசப்பாகி அவன் மனம் அதை வெறுத்துவிடுகிறபக்ஷம் அது பிரயோசனத்தை விட்டொழியாது. இரண்டாவது:—பாவங்களைவிட்டுத் தவுபா செய்கிறவன் தன் மவுத்தை நினைப்பதாம். ஏனெனில், தனக்கு அச்சம் மேலும்மேலும் அதிகப்படுவதற்காகவும் தவுபாவில் அதிக நல்லவிதமாகத் தவுபா செய்வதற்காகவும், விட்டுப்போனவைகளை நிறைவேற்றுவதில் அதிக பிரயாசை யெடுத்துக் கொள்வதற்காகவுமென்க. இதன் சவாபு பெரிதேயாம். தவுபா செய்கிறவன் மவுத்தை வெறுத்தவனா யிருக்கமாட்டான். ஆனால் மவுத்து சிக்கிரத்தில் வருவதை வெறுப்பான். ஏனெனில், தங்கரிப்பு தயாராகாமல் மவுத்தாய்ப்போவதை அவன் பயந்ததினாலென்க. இந்த விதத்தினால் மவுத்தை வெறுப்பது நஷ்டங் கொடுப்பதல்ல. மூன்றாவது:—ஆரிபானவன் தன் மவுத்தை நினைப்பதாம். ஆரிபு மவுத்தை நினைப்பது எதனாலென்றால் மவுத்துக்குப் பின் தீதார் தெரிசனை யுண்டென்று வார்த்தைப்பாடு செய்யப்பட்டிருப்பதினாலென்க. நேசன் வார்த்தைப்பாடு செய்த இடம் மறக்கமாட்டாது. எப்போதும் அந்த இடத்தையே எதிர்பார்த்துக்கொண்டிருப்பான். மேலும் அதை ஆசித்தவனாயிருப்பான். உதாரணமாக:—ஹுதைபா றலியல்லாகு அன்கு அவர்கள் தங்கள் மவுத்தின்போது நான் ஆசித்துக்கொண்டிருக்கிற சமயத்தில் நேசன் வந்தான் என்று சொன்னார்கள். பின்பும் "என் ஆண்டவனே! நான் சீமான்தனத்தைவிட ஏழ்மையை அதிகமாக நேசித்தேன் என்பதும் சவுக்கியத்தைவிட

நோயை அதிகமாக நேசித்தேன் என்பதும் ஜீவிப்பைவிட மரணத்தை அதிகமாக நேசித்தேன் என்பதும் உனக்குத் தெரிந்திருந்தால் இப்போது நான் உன் தீதாரைக்கொண்டு சுகமடைவதற்காக மவுத்தை என்மீது இலேசாக்கு" என்று சொன்னார்கள். இந்த தரஜாவுக்குப் பின் இதினும் மிகப் பெரிதான ஒரு தரஜாயிருக்கிறது. அந்த தரஜாவுக்கு எட்டினவர்கள் மவுத்தை வெறுத்தவர்களாயு மிருக்கமாட்டார்கள். அதைத் தேடுகிறவர்களாயு மிருக்கமாட்டார்கள். அது சீக்கிரத்தில் வரவேண்டுமென்றும் நாடமாட்டார்கள். தாமதமாகவர வேண்டுமென்றும் நாடமாட்டார்கள். அல்லாகுதஆலா என்ன விதித்திருக்கிறானோ அதையே நேசிப்பவர்களா யிருப்பார்கள். தங்கள் சுயதந்திரத்தை ஒரு மூலையில் ஒதுக்கிவிடுவார்கள். பொருத்தமும் தலைசாய்ப்புமான தானத்துக்கு எட்டினவர்களா யிருப்பார்கள். இவையெல்லாம் எப்போதென்றால் அவர்களுக்கு மவுத்து ஞாபகத்துக்கு வரும்போதுதான். அநேகமாக அவர்கள் மவுத்தைக் குறித்துக் கவனிப்பதில்லை. ஏனெனில் அவர்கள் இவ்வுலகத்திலேயே அல்லாகு தஆலாவை முஷாஹதா செய்வதி லிருப்பார்கள். அவன் ஞாபகம் அவர்களுடைய மனதில் மிகைத்திருக்கும். அவர்களுக்கு மரணமும் ஜீவிப்பும் இரண்டும்சமமாகவேயிருக்கும். ஏனெனில் அவர்கள் எந்த நிலைமையிலும் அல்லாகு தஆலாஉடைய ஆசையிலும் அவன் ஞாபகத்திலும் மூழ்கிப்போ யிருப்பார்கள்.

### மவுத்தின் நினைவு மனதில் குணஞ்செய்வதற்குப் பரிகாரம்.

அறிந்துகொள்:—மவுத்தானது பெரிய ஓர் காரியமாயிருக்கிறது. அதன் பயங்கரம் பெரியது. ஜனங்களோ அதை மறந்தவர்களாயிருக்கிறார்கள். அது அவர்கள் ஞாபகத்துக்கு வந்தபோதிலும் அவர்கள் மனதில் அது ஒரு குணமுஞ் செய்வதில்லை. ஏனெனில் மனதில் வேறு நினைவுக்கு இடமில்லாதபடி மனமானது துன்யாவுடைய பராக்கில் அவ்வளவாக மூழ்கிப்போ யிருக்கிறது. இதனாலேயே அவர்கள் அல்லாகு தஆலாவுடைய தஸ்பீஹிலும் திகுரிலுங்கூட இன்பத்தை அடைகிறதில்லை. ஆதலால் இதற்குப் பரிகாரம் யாதெனில், ஒரு பயங்கரமான காட்டைக் கடந்து செல்லவேண்டிய ஒரு மனிதன் அப்படிச் செல்வதற்கு அவன் தன் மனதை வேறு பராக்கிலிருந்து எப்படி ஒழிக்கின்றானோ அப்படியே இவன் தனியான ஒரு இடத்தைத் தேடி ஒருஸாஅத்துநேரம் தன் மனதைத் துன்யாவுடைய பராக்கிலிருந்து ஒழித்துட்கார்ந்து "ஓ மனமே! மரணம் நெருங்கிவந் திருக்கிறது. பயங்கரமான அந்தமரணம் இன்றைக்கே

வரவுங்கூடும். உன்னை இருளான ஒரு சுரங்க வழியாகப் போகும்படி சொன்னால் அந்தச்சுரங்கத்தில் ஓர் கிணறு இருக்கிறதென்றாவது அல்லது அதன் வழியில் ஓர் கல் இருக்கிறதென்றாவது அல்லது எவ்வித அச்சமுமில்லையென்றாவது உனக்குத் தெரியாதபக்ஷத்தில் அதில் பிரவேசிக்க உன் மனம் நடுநடுங்குமல்லவா? மரணத்துக்குப் பின்பும கபுரிலும் உனக்கு நேர்கின்ற பயங்கரமான காரியங்கள் உனக்குத் தெரியாமல் மறைந்திருப்பதானது அந்தச் சுரங்கத்தின் மறைவிலும் குறைந்ததல்லவே. இந்த நிலைமையை நீ எந்த தைரியத்தின்மேல் மறந்திருக்கிறாய்?" என்று அவன் தன்மனதுக்குச் சொல்ல வேண்டும். இதினும் மிக நல்ல பரிகாரமாவது:—அவன் தன் காலத்தில் மவுத்தாய்ப் போயிருக்கிற ஜனங்களில் நோட்ட மிடுவதாம். அதெவ்வாறெனின், அவர்களின் ரூபத்தை ஞாபகத்தில் கொண்டு வருவான். துன்யாவில் அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் அந்தஸ்துகளிலும் தங்கள் காரியங்களிலும் எப்படி இருந்தார்கள என்பதையும் துன்யாவைக்கொண்டு அவர்கள் மகிழ்ந்த மகிழ்ச்சி எவ்வளவா யிருந்த தென்பதையும் பின்பு ஆகிரத்துக்கு வேண்டிய தங்கரிப்பைத் தயார் செய்யாதவர்களா யிருக்கிற நிலைமையில் திடீரென மரணம்வந்து அவர்களை எப்படிக் கொண்டுபோய்விட்ட தென்பதையும் இப்போது கபுரில் அவர்களுடைய ரூபங்கள் எப்படி அழிந்துபோயின வென்பதையும் அவயவங்கள் ஒன்றைவிட்டு ஒன்று எப்படிப்பிரிந்துபோயின வென்பதையும் புழுக்களும் பூச்சிகளும் அவர்களுடைய தோலையும் சதையையும் கண்ணையும் நாக்கையும் எப்படி அரிக்கின்றன வென்பதையும் அவர்கள் இந்த கதியிலிருக்க வாரிசுகள் அவர்களுடைய ஆஸ்திகளைப் பங்கிட்டுக்கொண்டு சுகம் பாராட்டுவதையும் அவர்களுடைய பெண்ஜாதிகள் அவர்களை மறந்து வேறு புருஷரோடிருந்து சுகிப்பதையும் நோட்டமிடுவான். பின்பு தன் காலத்தின் ஒவ்வொரு மனிதனையும் நோட்டமிடுவான். அவர்களுடைய வேடிக்கை விளையாட்டுகளையும் சிரிப்பையும் மறதியையும் இருபதுவருஷமானாலும் அவர்கள் அடையமுடியாத காரியங்களின் பிரயத்தனத்தில் அவர்கள் பராக்கா யிருந்ததையும் அதற்காக அவர்கள் அநந்தங் கஷ்டங்க ளடைந்ததையும் ஜவளிக்கடையில் அவர்களுடைய கபன்புடவை வெளுத்து வைத்திருக்க அவர்கள் அதை யுணராமல் மறந்துபோ யிருந்ததையும் கோட்டமிடுவான். பின்பு தன் மனதை நோக்கி "ஓ மனமே! நீயும் அவர்களைப்போல்தா னிருக்கிறாய். உன் மறதியும் மடமையும் ஆவலும் அவர்களுடைய மறதியைப்போல்தா னிருக்கிறது. என்றாலும் அவர்கள உனக்குமுன்சென்றுபோய் அவர்களைக்கொண்டு நீ உன் மனதுக்கு அச்சத்தை யூட்டும்படி இந்தப் பாக்கியம் உனக்கு ஏற்பட்டிருக்கிறது" என்றுசொல்லுவான். தானல்லாத பிறனைக்கொண்டு சற்புத்தி யடைகின்றவன் எவனோ அவன் சந்தேகமின்றி அதிஷ்டசாலியா யிருக்கிறான். பின்பு தன்னுடைய

கை, கால், கண், நா, விரல்முதலிய உறுப்புகளில் நோட்டமிட்டு இவையெல்லாம் ஒன்றைவிட்டொன்று பிரிந்துபோய்க் கூடிய சீக்கிரத்தில் பூமியிலூறும் புழுமுதலிய பிராணிகளுக்கு இரையாகுமென்பதையும் கவனிப்பான். இன்னும் கபுரிலே உறுப்புகள் விண்டு அழுகி நாற்றமெடுத்து பிணமாய்ப்போகிற தன்னுடைய அந்தக் கோலத்தையும் தன் நினைவில் உருவப்படுத்திப் பார்ப்பான். இவைகளையும் இவைபோன்றவைகளையும் தினந்தோறும் ஒரு ஸாஅத்துநேரம் தன் மனதுக்கு எடுத்தோதிக்கொண்டிருப்பான். அப்போது அவன் உள்ளம் மரணத்தை யுணரக்கூடும். வாய்ப்பேச்சினால் மேற்பூச்சாக மவுத்தை நினைப்பது மனதுக்கு யாதொரு குணத்தைக் கொடாது. ஜனாஸாவைத் தூக்கிக் கொண்டுபோக மனிதன் எப்போதும் பார்த்திருக்கிறான். தான் எப்போதும் பார்ப்பவனென்று தன்னை எண்ணியிருக்கிறான். அதாவது மற்றவர் மவுத்தாவதை நான் எப்போதும் பார்ப்பேன் என்று அவன் எண்ணுவதேயன்றி தன்னை மய்யித்தாக ஒருபோதும் அவன் காண்பதில்லை. காணாதது மனதில் அமையாது, இதனாலேதான் ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் ஒரு கொத்பாவில் "ஓ மனிதனே! நீ உண்மையாகச் சொல். இந்த மரணம் நமக்கு விதித்திருப்ப தில்லையா? இன்னும் உண்மையாகச்சொல். தோள்மீது தூக்கிக்கொண்டுபோகிற இந்த ஜனாஸா வென்னும் பேழைக்குள் ளிருப்பவர்கள் யார்? முசாபிர்களா? சீக்கிரத்தில் திரும்பிவருவார்களா? வாரிசுகள் இவர்களை மண்ணில் மறைத்துவிட்டு இவர்களுடைய ஆஸ்திகளைத் தின்னுகிறார்கள். தங்கள் மவுத்தை மறந்துபோயிருக்கிறார்கள்" என்று பிரசங்கித்தார்கள். அநேகமாக மவுத்தை நினைக்காம லிருப்பதற்குக் காரணம் நெடுநா ளிருக்கலா மென்கிற மேலெண்ணமேயாம். எல்லாக் கேட்டுக்கும் இதுவே மூலமாம்.

### நெடுநாளிருக்கலாமென்கிற மேலெண்ணத்தைச் சுருக்குவதின் மேம்பாட்டை விளக்கல்.

அறிந்துகொள்:—ஒருவன் தனது உள்ளத்தில் நான் நெடுநாள் ஜீவித்திருப்பேன் என்றும் வெகுநாள் வரையில் எனக்கு மவுத்து வராதென்றும் நினைத்துக்கொண் டிருப்பானாகில் ஆகிரத்துடைய அமல் ஒன்றும் அவனால் நிகழாது. ஏனெனில் அவன் இன்னும் காலமிருக்கிறதென்றும், நீ நாடியபடி எக்காரியத்தையும் செய்துகொள்ளலாமென்றும் தன் மனதுக்குச் சொல்லிக்கொண்டிருப்பான். தற்போது சுகம்பாராட்டும் வழியை எடுத்துக்கொள்ளுவான். எவனொருவன் தன் மவுத்து சமீபமாயிருக்கிறதென்று நினைக்கிறானோ அவன் எந்த நிலைமையிலும் அதற்குரிய அமல்களில் பராக்கா யிருப்பான். இது எல்லா நற்பதவிக்கும் மூலமாயிருக்கிறது. இப்னு உமர் றலியல்

லாகு அன்கு அவர்களுக்கு ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்
சொன்ன நஸீஹத்தாவது:-"நீ காலையில் எழுந்திருக்கும்போது உன்
மனதில் நான் சாயரட்சை ஜீவித்திருப்பேன் என்றுஎண்ணதே, சாய
ரட்சையானல் நான் காலையில் ஜீவித்திருப்பேன் என்று எண்ணதே.
ஜீவிப்பில் மவுத்துக்குவேண்டிய தங்கரிப்பை எடுத்துக்கொள். சவு
க்கியத்தில் நோய்க்குவேண்டிய தங்கரிப்பை எடுத்துக்கொள். நாளை
கியாமத்தில் அல்லாகு தஆலாவினிடத்தில் உன்பேர் எப்படியா
குமோ அது உனக்குத் தெரியாது" என்பதே. இன்னும் "இச்சைக்கு
வழிபடுவதும் நெடுநாள் ஜீவித்திருப்போமென்று. ஆதரவுவைப்பது
மான இந்த இரண்டு குணங்களைப்பற்றி நான் பயப்படுவதுபோல்
வேறு எந்த வஸ்துவைப்பற்றியும் உங்கள்மீது நான் அவ்வளவாகப்
பயப்படுகிறதில்லை" என்று ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்
திருவுளமா யிருக்கிறார்கள். உசாமாறலியல்லாகு அன்கு அவர்கள்
ஒரு மாதத்துக்குப் போதுமான ஒரு பொருளைக் கிரயத்துக்கு வாங்
கினார்கள். அப்போது ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்
"உசாமா ஒரு மாதத்துக்கு வேண்டியபொருளை வாங்கினரென்று நீ
அவரைப்பற்றி ஆச்சரியப்படாதே" என்றும், "திடனாக உசாமாவாகி
றவர் மேலெண்ண நீட்சியுள்ளவராயிருக்கிறார் அதாவது ஜீவிப்பில் மிக
வும் நீண்ட ஆதரவுள்ளவராயிருக்கிறார்" என்றும், "எவன்வசத்தில்
என் உயிர் இருக்கிறதோ அந்த நாயகன்மேல் ஆணையாக நான் இமை
களையொட்டி கண்ணை மூடுவேனாகில் அதைத் திறப்பதற்குள்ளாக
மவுத்து வருமென்று நான் எண்ணமலிருப்பதில்லை" என்றும், இன்
னும் "இமைகளை எடுத்து நான் கண்ணைத்திறப்பேனாகில் அதை மூடு
வதற்குள்ளாக மவுத்து வருமென்று நான் எண்ணமலிருப்பதில்லை"
என்றும், "நான் வாயுட்கொண்ட எந்த உணவும் வயிற்றிற்செல்வதற்
குள்ளாக மவுத்து வருவதினல் அது தொண்டையில் தங்கிவிடுமெ
ன்று நான் நினைக்காமலிருப்பதில்லை" என்றும் அருளிச்செய்தார்கள்.
பிறகு அவர்கள் சொன்னதாவது:—"ஓ ஜனங்களே! நீங்கள் புத்தி
யுள்ளவர்களாயிருந்தால் உங்களைச் செத்த சவமாக நினையுங்கள்.
எவன் வசத்தில் என் உயிர் இருக்கிறதோ அந்த நாயகன்மேல் ஆணை
யாக உங்களுக்கு வார்த்தைப்பாடு செய்திருப்பது வந்தேதீரும், அதை
விட்டும் நீங்கள் மீட்சிபெறமாட்டீர்கள்" என்பதே. இன்னும் ரசூல்
சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கலாஹாஜத்துக்கிருந்து முடிந்
தால் அப்போதே தயம்மும் செய்துகொள்வார்கள். தண்ணீர் சமீ
பத்தி லிருக்கிறதென்று அஸ்ஹாபுகள் சொன்னல் அதற்கு நாயக

மவர்கள் "நான் தண்ணீரிடம்போகிற நேரத்தை யடையாமல் அதற்குள்ளாக மவுத்தையடையவும் கூடும்" என்று சொல்லுவார்கள். அப்துல்லா ஹிபுனுமஸ்ஊது றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:—"ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒரு நாற்சதுரமான கோடுகள் அமைத்து அதற்கு நடுவே ஒரு நேர்க்கோடும் அந்த நேர்க்கோட்டின் இரண்டு பக்கங்களிலும் பல சிறுகோடுகளும் அந்த நாற்சதுரத்துக்கு வெளியே ஒருகோடும் இழுத்து "இந்தச் சதுரக்கோட்டுக்கு நடுவே இருக்கிற நேர்க்கோடு மனிதன்" என்றும், "இந்தச் சதுரக்கோடானது அவன் மவுத்து" என்றும், "அவன் அதைவிட்டும் தாண்டாதபடி அது நாலாபக்கமும் அவனைச் சூழ்ந்துக்கொண்டிருக்கிறது" என்றும், "நேர்க்கோட்டின் இரண்டுபக்கங்களிலுமிருக்கிறசிறுகோடுகள் அவனுக்கு நேரிடுகின்ற ஆபத்துக்களும் துன்பங்களுமாயிருக்கின்றன" என்றும், "ஒரு ஆபத்தைவிட்டும் அவன் தாண்டினால் மற்றஆபத்தைவிட்டும்தாண்டமாட்டான்" என்றும், "கடைசியில்மவுத்துடைய விழ்ச்சியாக அவன் விழுந்துபோவான்" என்றும், "சதுரக்கோட்டுக்கு வெளியே இருக்கிற கோடு அவனுடைய மேலெண்ணமும் ஆதரவுமாயிருக்கிறது" என்றும், "அதனாலவன் எப்போதும் ஏதோ ஒரு காரியத்தைப்பற்றி எண்ணம் வைத்துக்கொண் டிருக்கிறான்" என்றும், "அந்தக்காரியம்அவன்மவுத்துக்குப்பிறகு உண்டாவதென அல்லாகு தஆலாஉடைய இல்மில் இருக்கிறது" என்றும் அருளிச்செய்தார்கள்" என்பதே. இன்னும் "மனிதன் தினம்தினம் கிழத்தன்மையை அடைந்துவருகிறான்" என்றும், "ஆனால் பொருளாசையும் வயதின் ஆசையுமான இந்த இரண்டு வஸ்துக்களும் அவனில் வாலிபத்தையடைந்துவருகின்றன" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் ஹதீசில் வந்திருப்பதாவது:—ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் ஒரு கிழவனைக் கண்டார்கள். அவன் ஒரு மண் வெட்டியைக் கையில் பிடித்து வேலைசெய்துகொண்டிருந்தான். அப்போது ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் "என் ஆண்டவனே! இவன் மனதிலிருந்து மேலெண்ணத்தை நீக்கிவிடு" என்று துஆகேட்டார்கள். அப்படியே அல்லாகு தஆலா அதை நீக்கிவிட்டான். உடனே அக்கிழவன் தன்கையிலிருந்த மண்வெட்டியைக் கீழே வைத்துவிட்டுப்போய் படுத்துக்கொண்டான். ஒரு ஸாஅத்து நேரம் சென்றபிறகு ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் "என் ஆண்டவனே! அவன் மேலெண்ணத்தை அவனுக்குக்கொடு" என்று துஆகேட்டார்கள். கிழவன் உடனே எழுந்து வேலைசெய்யத் தொடங்கினான். ஈசா

அலைகிஸ்ஸலாமவர்கள் அவனை நோக்கி "(நீ வேலையை விட்டுப்போய் படுத்துக் கொண்டதும் பின்பு எழுந்து வேலை செய்கிறதுமான) இது என்னகாரணத்தினால்" என்றுகேட்டார்கள். அதற்கவன் "இருந்தாப்போலிருந்து என்மனதில் நீ எந்தமட்டும் வேலைசெய்வாய்?" என்றும், "கிழவனாய்விட்டாயே சீக்கிரத்தில் மவுத்தாய்ப் போவாய்" என்றும் ஓர் எண்ணம் வந்தது. அதனால் நான் மண்வெட்டியை வைத்துவிட்டேன். பின்பு மறுமுறை என் மனதில் நீ சாகிறவரையில் உனக்குச் சோறுவேண்டிய அவசிய மிருக்கிறதே என்கிற ஓர் எண்ணம் வந்து விழுந்தது. அதனால் எழுந்தேன்" என்று சொன்னான். ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அஸ்ஹாபுகளை நோக்கி "நீங்கள் சொர்க்கத்துக்குப் போக நாடுகிறீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "ஆம் நாடுகிறோம்" என்றார்கள். அப்போது நாயகமவர்கள் நீங்கள் மேலெண்ணத்தைச் சுருக்குங்கள். மவுத்தை எப்போதும் உங்கள் கண்ணுக்கெதிரே வைத்துக்கொள்ளுங்கள். அல்லாகுதஆலாவுக்கு எப்படி வெட்கப்படவேண்டிய ஞாயமோ அப்படியாக நீங்கள் அவனுக்கு வெட்கப்படுங்கள்" என்று அருளிச்செய்தார்கள். ஒருவர் தம்முடைய ஒரு சினேகருக்குக் எழுதின காயிதத்தின் வாசகமாவது:—"அம்மாபஃது துன்யா நித்திரையாயும் ஆகிரத்து விழிப்பாயும் இப்போது நாம் அனுபவிப்பதெல்லாம் கனவும் நினைவுங்கலந்த சொப்பனமாயுமிருக்கிறது" என்பதே.

### மேலெண்ணத்துக்குக் காரணங்கள் இவையென விளக்கல்.

அறிந்துகொள்:—மனிதன் இரண்டு காரணங்களால் நீண்ட காலஜீவிப்பைத் தன் மனதில் உருவப்படுத்திக்கொண்டான். அவற்றுள் ஒன்று: அறிவின்மையான மடமையும்; மற்றொன்று: துன்யாவுடைய உவப்பான ஆசையுமாம். துன்யாவுடைய ஆசை மேலிட்டிருக்கும்போது மவுத்து வந்து அந்த ஆசைப்பொருளை அவனிடத்திலிருந்து பிடுங்கிக்கொள்வதாயிருந்தால் அவன் அகத்தியம் அந்த மவுத்தைத் தனக்கு விரோதியாகவே வைத்துக்கொள்ளுவான். அது அவனுக்கு ஒற்றுமையுடையதாயிராது. மனிதன் தனக்கு ஒற்றுமையாயிராததை எப்போதும் தன்னைவிட்டுத் தூரத்திலாக்குவான். அவன் தன் மனதுக்கு ஆசை வார்த்தைகளைச் சொல்லி எப்போதும் அந்த ஆசைக்கு ஒற்றுமையான பொருட்களையே மனதில் உருவப்படுத்திக்கொண்டிருப்பான். ஆகவே உயிர் வாழ்க்கையும் பொருளும் மனைவி மக்களும் மற்றும் துன்யாவுடைய சாமான்களும் நிலையாக இப்படியே யிருக்குமெனப் பாவித்துக்கொள்ளுகிறான். தன் ஆசைக்கு விரோதியான

மவுத்தை மறந்துவிடுகிறான். அது எப்போதாவது ஞாபகத்துக்கு வந்தபோதிலும் அப்போது ஓ மனிதனே! காலம் இன்னுமிருக்கிறது என்றும், மவுத்துக்கு வேண்டிய தங்கரிப்புகளைப் பின்னிட்டுத் தயார்செய்துகொள்ளலாமென்றும் சொல்லுகிறான். பெரியவனாய்ப் போனால் கிழவனாகிறவரையில் பொறு என்று சொல்லுவான். கிழவனாய்ப்போனால் அப்போது இன்னும் கொஞ்சநாள் பொறு இந்தக் கட்டிடத்தைக் கட்டி முடித்துக்கொள், இந்த மகனுக்குக் கலியாண சாமான்களைத் தயார்செய்துகொள், மனதை அந்தக் கவலையிலிருந்து ஒழித்துவிடு, இந்நிலங்களுக்குத் தண்ணீர்பாயும் வழிகளைச் சரிபடுத்திக்கொள், அப்போதுனக்கு உணவைப்பற்றிய கவலை யொழிந்திருக்கும், இபாதத்தில் இன்பத்தை அடைவாய், நீ கெடுவதைப்பற்றிச் சந்தோஷிக்கிற உன் பகைவனாகிய இபுலீசை நசுக்கிவிடுவாய் என்று சொல்லுவான். இப்படியே வேலைகள் நீங்கி ஒழிவு கிடைக்கவேண்டுமென்று தாமதஞ்செய்துகொண்டிருப்பான். ஒவ்வொரு வேலையிலிருந்து வேறு பத்துவேலைகள் பிறக்கும். துன்யாவை விடாமலும் அதை வீசிப்போடாமலுமிருக்கிறவரையில் அதன் வேலைகளிலிருந்து ஒருபோதும் ஒழிவை அடையமுடியாதென்று இந்த மூடன் அறிகிறதில்லை. ஒரு காலும் அதைவிட்டும் ஒழிவை அடையலாமென்று இவன் தன் மனதில் எண்ணுகிறான். இப்படியே தினம் தினம் நாளைப் போக்குகின்றான். இருந்தாப்போலிருந்து மவுத்து வந்துவிடுகிறது. அப்போது இவனுக்குக் கைசேதமே மிச்சப்படுகின்றது. இதனாலேதான் நரகவாளிகளில் அநேகம்பேர் பின்னிட்டுச் செய்யலாமென்று பிற்படுத்தினதைப்பற்றி முறையிட்டழுவார்களென்றது. இவையெல்லாவற்றிற்கும் மறதியும் துன்யாவுடைய ஆசையுமே மூலமாயிருக்கிறது. றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "நீ எதை நாடுகிறாயோ அதை நேசித்துக்கொண்டிரு. பின்னிட்டு அதை உன்னிடத்திலிருந்து பிடுங்கிக்கொள்ளுவார்கள்" என்று அருளிச்செய்தது நீ துன்யாவுடைய ஆசையை விட்டுவிடு என்பதற்கேயாம். இனி இதில் அறிவின்மையான மடமை யாதெனில், அவன் தன் வாலீபத்தின்மேல் ஆதரவு வைப்பான். கிழத்தன்மை வருவதற்குமுன் இறந்துபோவான் என்பதும் ஆயிரக்கணக்கான குழந்தைகளும் வாலிபர்களும் மவுத்தாய்ப் போகிறார்கள் என்பதும் கொஞ்சம்பேரே யொழிய அநேகம்பேர் கிழத்தன்மை வருவதற்குமுன் இறந்துபோவதினாலேயே ஊர்களில் கிழவர்களின் தொகை குறைந்திருக்கிறது என்பதுமான இவ்வளவை அவன் அறிகிறதில்லை. இதுவுமன்றி சுகவாழ்க்

கையில் திடும்பிரவேசமான மவுத்து வருவது வெகு தூரமென்று நினைக்கின்றான். திடும்பிரவேசமான மவுத்து அரிதென்றாலும் திடும் பிரவேசமான வியாதி அரிதல்லவென்பதும் வியாதியெல்லாம திடும் பிரவேசமாகவே வருவதென்பதும் வியாதி வந்தால் அந்த வியாதியினால் திடீரென மாள்வது அரிதல்ல வென்பதுமான இவ்வளவு அவனுக்குத் தெரிகிறதில்லை. ஆதலால் அவன்மீது பிரகாசத்தை வீசிக்கொண்டிருக்கிற சூரியனைப்போல் மவுத்தை எப்போதும் அவன் தன் முன்பாக இருக்கிறதென்று பாவிக்கவேண்டும். முன்னே போவதும் ஒருபோதும் பிடிக்கக்கூடாததுமான நிழலைப்போல் பாவிக்கக் கூடாது.

நெடுநாள் ஜீவித்திருக்கலாமென்கிற மேலெண்ணத்துக்குப் பரிகாரம்.

அறிந்துகொள்:—மேலெண்ணத்தின் காரணங்களை நிவர்த்திப்பதே அதை யொழிக்கின்ற பரிகாரமாம். மேற்கூறிவந்ததில் அதன் காரணங்கள் இன்னவென்று நீ தெரிந்துகொண்டாயாதலால் இப்போது அவற்றை நீக்குவதில் பராக்காகவேண்டும். ஆகவே துன்யாவுடைய ஆசையென்னும் காரணத்தை யொழிப்பதற்கு நாம் துன்யாவுடைய ஆசையின் பாடத்தில் சொல்லியிருக்கிறபடி பரிகாரம் செய்யவேண்டும். மொத்தத்தில் துன்யாவின் உண்மையை அறிந்தவன் எவனோ அவன் அதை ஆசிக்கமாட்டான். ஏனெனில் அதன் இன்பம் அற்பநாளிருந்து மரணத்தினால் திடீரென அழிந்துபோம். அன்றியும் தற்போதும் அந்த இன்பம் கஷ்டத்தையும் கலக்கத்தையும் விட்டொழிந்திருப்பதில்லை. கலக்கமில்லாத சுத்தமான இன்பம் எப்போதும் எவருக்கும் உண்டானதில்லை. ஒருவன் துன்யாவுடைய அற்பவயதையும் ஆகிரத்துடைய நீண்டகாலத்தையும் நோட்டமிட்டுப் பார்ப்பானாகில் துன்யாவுக்காக ஆகிரத்தை விற்பதானது விழிப்பில் ஒரு பொன்னாணயத்தை நேசிப்பதினும் சொப்பனத்தில் ஒரு வெள்ளி நாணயத்தை அதிகமாக நேசிப்பதுபோலாகுமெனத் தெரிந்துகொள்வான். ஏனெனில் மனிதரெல்லாரும் தூக்கத்திலிருக்கிறார்கள் என்றும் அவர்கள் மவுத்தானால் விழிப்பார்கள் என்றும் வந்திருப்பதுபோல் துன்யாவானது நித்திரையாயிருக்கிறது. இனி அறிவின்மையான மடமைக்குப் பரிகாரமாவது தெளிந்தமனதால் உற்று நோக்குவதும் உண்மையை உணர்வதுமாம். அதாவது:—மரணம் அவன் கைவசத்தில் இல்லையெனவும் அது அவன் நாடுகிறபோது வருவதல்லவெனவும் நன்குணர்ந்து வாலிபத்தின்பேரிலாவது வேறு காரியத்தின்பேரிலாவது ஆதரவுவைப்பதை நீக்கவேண்டும்.

## மேலெண்ணத்தின் வகுப்புகள்.

அறிந்துகொள்:—ஜனங்கள் இதில் பல வகுப்பினராய் வித்தியாசப்பட்டிருக்கிறார்கள். ஒருவன் எப்போதும் துன்யாவி லிருக்கவேண்டுமென்று நாடுகிறவனா யிருப்பான். உதாரணமாக:—அவர்களில் ஒருவன் ஆயிரம் வருஷம் ஆயிசு பெற்றிருக்க வேண்டுமே என்று ஆசிக்கிறானே! என்று அல்லாகு தஆலா கூறுகின்றான். இன்னுமொருவன் கிழவனாகிற வரையில் இருக்கவேண்டுமென்று நாடுவான். ஒருவன் ஒருவருஷத்துக்குமேல் அதிகமாக ஆதரவு வைக்காதவனாயும் மறுவருஷத்துக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யாதவனாயு மிருப்பான். ஒருவன் ஒருநாளைக்குமேல் அதிகமாக ஆதரவு வைக்காதவனாயும் மறுநாளைக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யாதவனாயு மிருப்பான். உதாரணமாக:— ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள், "நாளையின் இரணத்தைப்பற்றி நீங்கள் கைந்துருகவேண்டாம்" என்றும், "மரணத்தவனை இன்னுமிருந்தால் இரணமும் இருக்கும்" என்றும், "ஒருவனுடைய ஜீவிப்பு மிச்சப்பட்டிராதபக்ஷம் அவன் கஷ்டமெடுத்துக்கொள்வது மற்றவருடைய ஜீவிப்புக்கேயாம்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். இன்னுமொருவன் ஒரு ஸாஅத்து நேரங்கூட ஜீவிப்பை ஆதரவு வைக்காதவனாயிருப்பான். உதாரணமாக:—றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தண்ணீரை அடையக்கூடுமான நேரத்தில் அதை அடைவதற்குமுன் மவுத்து வருமென்ற எண்ணத்தினால் அப்போதே தயம்மும் செய்துகொள்ளுகிறவர்களா யிருந்தார்கள். இன்னுமொருவனுக்கு மவுத்து எப்போதும் கண்ணுக்கெதிரே நிற்கும். கொஞ்ச நேரமும் மறைந்திராது. உதாரணமாக:—றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மஆது றலியல்லாகு அன்கு அவர்களை நோக்கி "உமது ஈமானின் உண்மை என்ன?" என்று கேட்டதற்கு "நான் ஒருவேலையைத் தொடங்கினால் அதை முடிப்பேன் என்று நான் எண்ணுவதில்லை" என்றுசொன்னார்கள். அஸ்வதுல்ஹப்ஷீ என்பவர்கள் தொழுதுகொள்ளுவார்கள். பின்பு பல பக்கமும் பார்ப்பார்கள். "என்ன பார்க்கிறீர்?" என்று கேட்டால் "மலக்குல் மவுத்து எந்தப்பக்கத்தால் வருகிறாரோ என்று எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறேன்" என்று சொல்லுவார்கள். மொத்தத்தில் ஜனங்கள் இதுவிஷயத்தில் வித்தியாசப்பட்டவர்களா யிருக்கிறார்கள். எவன் ஒரு மாசத்திற்குமேல் அதிக ஆயுளை ஆதரவு வைக்காதவனா யிருக்கிறானோ அவன் நாற்பதுநாள் ஆதரவு வைப்பவனைவிட அதிக வரிசையுள்ளவனாவான். இந்த வித்தியாசத்தின் அடையாளம் அவரவர் நடவடிக்கைகளினால் வெளியாகும். எனெனில் ஒருவனுக்கு இரண்டு சகோதரர்

தின் யாத்திரை போயிருந்து அவர்களில் ஒருவன் இன்னும் ஒருமாதத்தில் ஊருக்கு வருகிறவனும் மற்றொருவன் இன்னும் ஒரு வருஷத்தில் வருகிறவனுமிருந்தால் அப்போது ஒரு மாதத்தில் வருகிற சகோதரனுக்கு வேண்டிய முயற்சிகளை முற்படுத்துகிறவனும் மற்றொரு சகோதரனுடைய முயற்சிகளைப் பிற்படுத்துகிறவனுமிருப்பான். ஆகவே ஒவ்வொருவனும் தன்னை மேலெண்ணம் சுருங்கினவனென்று நினைக்கக்கூடும். ஆயினும் அதற்கு அடையாளமாவது:—அமலில் சுறுசுறுப்புடன் முந்துவதும் அவனுக்கு அளிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு மூச்சையும் கொள்ளை வாழ்க்கையாக நினைப்பதுமாம். உதாரணமாக:—றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "ஐந்துவஸ்து வருமுன் ஐந்துவஸ்துவை அதாவது:—வயோதிபம் வருவதற்குமுன் வாலிபத்தையும், நோய் வருவதற்குமுன் ஆரோக்கியத்தையும், வறுமை வருவதற்குமுன் வளமையையும், பராக்கு வருவதற்குமுன் பராக்கொழிவையும், மவுத்து வருவதற்குமுன் ஹயாத்தையும் கொள்ளை வாழ்க்கையாக எண்ணுங்கள்" என்று அருளிச்செய்திருக்கிறார்கள். இன்னும் "இரண்டு நிஃமத்துகள் இருக்கின்றன" என்றும், "அவற்றில் அநேகஜனங்கள் நஷ்டமடைகிறவர்களாயிருக்கிறார்கள்" என்றும், "அவை தேகசவுக்கியமும் திரவியப்பெருக்குமாம்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். அஸ்ஹாபுகளில் மறதியின் யாதொரு அடையாளத்தைக் கண்டால் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள், அந்த அஸ்ஹாபுகளின் நடுவே சப்தமிட்டு "மவுத்து வந்திருக்கிறது, அது நற்பதவியையோ அல்லது துர்ப்பதவியையோ கொண்டுவந்திருக்கிறது" என்று சொல்லுவார்கள். இன்னும் "கூவிச் சொல்லுகிற ஒரு மலக்கு அர்ரஹீல், அர்ரஹீல் (பிரயாணம், பிரயாணம்) என்று சொல்லாதபடி ஒரு காலநேரமும் இல்லை" என்று ஹுதைபா றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். தாவூதுதாயீ றஹிமஹுல்லா அவர்கள் அவசரம் அவசரமாகத் தொழுகைக்குப் போய்க்கொண்டிருந்ததைக் கண்ட சிலர் அவர்களை நோக்கி "இதென்ன அவசரம்?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "பட்டணத்து வெளிவாசலண்டை படைகள் வந்து என்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். இதில் அவர்கள் கருத்து என்னவென்றால், கபுருகளில் அடங்கியிருக்கிற மரித்தோர்கள் என்னைத் தங்களோடு கொண்டுபோகாதவரையில் அந்தவிடத்தைவிட்டுக் கிளம்பமாட்டார்கள் என்பதே. அபூமூசா அஷ்அரீ றஹிமஹுல்லா அவர்கள் தங்கள் அந்திய காலத்தில் மிகவும்

தெண்டித்துப் பாடுபடுகிறவர்களாயிருந்தார்கள். அவர்களை நோக்கிச் சிலர் "நீர் உமது நபுசின்மீது இரக்கம் வைத்தால் என்ன ?" என்று கேட்டதற்குஅவர்கள் சொன்னதாவது:—"மைதானங்களில் குதிரையை ஓட்டிவிட்டுப் பரிக்ஷிப்பவர்கள் கடைசியான மைதானத்தில் அது தன் பெலத்தையெல்லாம் காட்டும்படி செய்கிறார்கள். இது என் வயதின் கடைசிமைதானமாகி மவுத்து நெருங்கி வந்திருப்பதால் தெண்டிப்பைவிட்டும் கொஞ்சமும் நான் சும்மாயிரேன்" என்பதே.

## மவுத்துடைய சக்ராத்தையும் உயிர் வாங்கலின் கஷ்டத்தையும் விளக்கல்.

அறிந்துகொள்:—உயிர் வாங்கலும் அதன் கஷ்டமுந் தவிர வேறு யாதொரு கஷ்டமும் மனிதனுக்கு எதிரில் இல்லாமற்போனால் அப்போதும் அவன் புத்திமானாயிருக்கிறபக்ஷம் துன்யாவில் அவன் ஒரு இன்பத்தையும் அடையாமலிருக்கத்தகும். ஏனெனில், ஒரு தருக்கியான யுத்த சேவகன் இவன் வீட்டுக்குள் நுழைந்து இவனைத் தண்டாயுதத்தால் ஒரு சாற்று சாற்றுவான் என்று இவன் பயப்படுவானாகில் அந்தப் பயத்தினால் இவன் இன்பத்தையும் நித்திரை சுகத்தையும் விட்டுவிடுவான். அந்த சேவகன் இவன் வீட்டுக்கு வராமலிருக்கவும் கூடும். மலக்குல் மவுத்து வருவதும் உயிரை வாங்குவதும் கொஞ்சமும் சந்தேகமில்லாத சத்தியமாயிருக்கிறது. இதுவோ யாதொரு சந்தேகமின்றி யுத்த சேவகனுடைய தண்டாயுதத்தினும் அதிகமாகப் பயப்படத்தக்கது. ஆனால் இதற்குப் பயப்படாமலிருப்பது மறதியினாலேயாம். உயிரை வாங்குவதிலுண்டாகிற கஷ்டம் எத்தன்மையுடையதென்றால், ஒருவனை வாளால் வெட்டுவதிலும் அல்லது வெட்டி இரண்டு துண்டாக்குவதிலும் அதிக கஷ்டத்தையுண்டாக்குமென்று எல்லாரும் ஒரே வாக்காக ஒத்துச்சொல்லுகிறார்கள். ஏனெனில் காயம்பட்ட இடம் அதன் வருத்தத்தை ரூஹுக்கு அறிவிக்கிறதினாலேயே வருத்தம் தெரிகிறது. வாளானது வெட்டு விழுந்த இடத்தில் எவ்வளவு ரூஹைப் பார்க்குமென்பது தெரிந்த விஷயம். நெருப்பானது சரீரத்தின் ஒவ்வொரு பாகத்திலும் ஊடே—ஊடே நுழைந்துச் செல்வதினால் அதன் வருத்தம் அதிகமாயிருக்கிறது. உயிர் வாங்கும் இம்சையோ உயிர் தன்னிலேயே உண்டாகிற ஓர் வேதனையாயிருக்கிறது. அவனுடைய எல்லா உறுப்புகளும் அதற்குள் அடங்கியிருக்கின்றன. உயிர் வாங்கும்போது அவனுக்குச் சக்தியில்லாமையினாலேயே அவன் வாய் திறந்து பேசக்கூடாமல் போகிறது. அதன் கடினத்தால் நாவெழாமல் ஊமையாய்ப்போ

கிறான். அவன் புத்தி தடுமாறிப்போகிறது. இதை அனுபவித்தவனே இதை அறிவான். அல்லது இதை அனுபவிக்குமுன் நுபுவ்வத்தினது ஒளியால் அறியக்கூடும். உதாரணமாக:—ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் ஹவாரிய்யூன்களை நோக்கி "என் மரணவேதனையை எளிதாக்கும்படி அல்லாகுதஆலாவினிடம் நீங்கள் துஆசெய்யுங்கள்" என்றும், "மரணத்தின் பயத்தினாலேயே மவுத்தாய்ப் போவேனென்ற விதமாக நான் மரணத்துக்கு அவ்வளவு பயப்படுகிறேன்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அந்த நேரத்தில் அல்லாஹும்ம ஹவ்வின் அலா முஹம்மதின் சகாரத்தில் மவுத்தி ஆண்டவனே! முஹம்மதின்மேல் மரணவேதனையை எளிதாக்கு என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆயிஷா றலியல்லாகு அன்கா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய மரணவேதனையின் கஷ்டத்தைக் கண்ட பிறகு எவருக்கும் மரணவேதனை இலேசாக்கப்படும் என்று நான் ஆதரவு வைக்கமாட்டேன். நாயகமவர்கள் அந்த நேரத்தில் "என் ஆண்டவனே! என் எலும்புகளுக்கும் நரம்புகளுக்கும் நடுவேயிருந்து இந்த என் ஆவியை வெளியே இழுக்கிறாய், இந்த வேதனையை எனக்கு இலேசாக்கு" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்" என்பதே. றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மரணவேதனையின் தன்மையைப் பேசி "மரணத்தின் ஒவ்வொரு வேதனையும் வாளைக்கொண்டு முன்னூறு வெட்டு வெட்டுவதற்குச் சமானமாயிருக்கும்" என்றும், "மிகவும்இலேசாக்கப்பட்ட வேதனையானது கம்பளியில் ஒட்டின நெரிஞ்சிமுள் எப்படி இல்குவில் வெளிப்பட முடியாதோ அப்படியாயிருக்கும்" என்றும் அருளிச்செய்திருக்கிறார்கள். மரணநெருக்கத்திலிருந்த ஒரு நோயாளியை றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் போய்ப்பார்த்தபோது "இவன் இப்போதிருக்கிற நிலைமையெனக்குத்தெரிகிறது" என்றும், "இவனுடைய தேகத்தின் ஒவ்வொரு நரம்பிலும் வெவ்வேறு வேதனை ஆகின்றது" என்றும் அறிவித்தார்கள். இன்னும் "நான் பாயில் கிடந்து மரணவேதனையை அடைவதினும் வாளால் என்னை ஆயிரம் வெட்டு வெட்டுவது எனக்கு இலேசாயிருக்கிறது" என்றும், "ஆதலால் நீங்கள் வெட்டுண்டு (ஷஹீதாய்ப்) போகும்படி யுத்தஞ் செய்யுங்கள்" என்றும் அலிறலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பனீஇஸ்ராயில் கூட்டத்தில்நின்றும் சிலர் ஒரு கபுருஸ்தானை நோக்கிச் செல்லுகையில் அங்கு அடங்கியிருப்பவர்களில் ஒருவனை ஹயாத்தாக்கும்படி

அல்லாகு தஆலாவினிடம் துஆ கேட்டார்கள். ஒருவன் உயிர்பெற்றெழுந்து "ஒ ஜனங்களே! நீங்கள் என்னிடம் என்ன கேட்கிறீர்கள்? நான் மவுத்தாகி ஐம்பது வருஷமாகியும் சகராத்தில் நான் அடைந்த கஷ்டத்தின் கூறு இன்னும் என்னில் இருக்கிறது" என்று சொன்னான். இன்னும் "மூமின் அடையவேண்டிய சில தரஜாக்கள் தங்கியிருக்கும்" என்றும், "அமலால் அவன் அந்த தரஜாவைப் பெற்றுக்கொள்ளமாட்டான்" என்றும், "சகராத்து வேதனை அவன்மீது அதிகமாக்கப்படுவதினால் அவன் அந்த தரஜாவைப்பெற்றுக்கொள்ளுவான்" என்றும், "நன்மைசெய்திருக்கிற காபிருக்கு கியாமத்தில் யாதொரு ஹக்கும் இல்லாமற்போகும்படி அந்த நன்மைக்குப் பிரதிபலனாக சகராத்து வேதனை அவனுக்கு இலேசாக்கப்படும்" என்றும் ஆன்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் திடும்பிரவேசமாகச் சம்பவிக்கிற மரணம் மூமினுக்கு ராஹத்தாயும் காபிருக்குக் கைசேதமாயும் இருக்குமென்று ஹதீசில் வந்திருக்கிறது. இன்னும் மூசா அலைகிஸ்ஸலாமவர்களுக்கு மவுத்து சம்பவித்தபோது அல்லாகு தஆலா அவர்களை நோக்கி "மூசாவே! உமது மரணத்தில் நீர் உம்மை எவ்விதமாகக்கண்டீர்" என்றுகேட்டதற்கு "உயிருள்ள ஒருபக்ஷியை அழலிலிட்டு வறுக்கும்போது அது எப்படி பறக்கவும் கூடாமல் சடுதியில் சாகவும் கூடாமல் தப்பிப்பிழைக்கவும் கூடாமல் வதைகின்றதோ அப்படியாகக் கண்டேன்" என்று சொன்னதாக ஹதீசில் வந்திருக்கிறது. உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் கஃபுல் அஹ்பார் றலியல்லாகு அன்கு அவர்களை நோக்கி "மரணவேதனை எப்படிப்பட்டது?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "முள் நிறைந்த ஒரு கிளையை ஒருவனுக்கு உள்ளேசெலுத்தி ஒவ்வொருமுள்ளும் ஒவ்வொரு நரம்பில் போய்ப் பிடித்துக்கொண்ட பிறகு பெலமுள்ள ஒரு மனிதன் அந்தக் கிளையைப்பிடித்து இழுத்தால் எப்படி இருக்குமோ அப்படியாயிருக்கும்" என்று சொன்னார்கள்.

### சகராத்தின்போதுண்டாகிற பயங்கரமான சம்பவங்கள்.

அறிந்துகொள்:—உயிர் வாங்கும் வேதனைக்குப் புறம்பான வேறு மூன்று பயங்கரமான சம்பவங்கள் நேரிடும். முதலாவது:—மலக்குல் மவுத்து அலைகிஸ்ஸலாமவர்களுடைய ரூபத்தைப் பார்ப்பான். ஹதீசில் வந்திருப்பதாவது;—இபுராஹீம் அலைகிஸ்ஸலாமவர்கள் மலக்குல் மவுத்து அலைகிஸ்ஸலாமவர்களை நோக்கி "நீர் பாவிகளுடைய ரூஹை வாங்குகிறபோது எந்த ரூபத்திலிருப்பீரோ அந்த ரூபத்தில் நான் உம்மைப்பார்க்கநாடுகிறேன்" என்றார்கள், அதற்கவர்கள் "அந்த

ரூபத்தைப்பார்க்க உம்மால் முடியாது" என்க, அவர்கள் "அகத்தியம் பார்க்கவேவேண்டும்" என்றார்கள். பின்பு அவர்கள் அந்த ரூபத்தை அவர்களுக்குக் காட்டினபோது அவர்களைக் கறுப்பான நிறமும் வெறுப்பான வாடையும் சிலுர்த்தெழும்பிய உறப்பான ரோமங்களும் கறுப்பான உடைகளும் வாயிலிருந்து புகையும் நெருப்பும் வெளிப்படுவதுமாயிருக்கிற ஒரு கோலத்தில் கண்டு இபுறாஹீம் அலைகிஸ்ஸலாமவர்கள் உணர்வுமாறிக் கீழே விழுந்துவிட்டார்கள். பின்பு தெளிவுபெற்று எழுந்தபோது மலக்குல் மவுத்து அலைகிஸ்ஸலாமவர்களைப் பழயரூபத்திலாயிருக்கக்கண்டு "மலக்குல்மவுத்தே! பாவியானவன் உம்முடைய ரூபத்தைப் பார்ப்பதற்குமேல் வேறு கஷ்டத்தை அடையாமற்போனாலும் இதுவே அவனுக்குப் போதுமாயிருக்கிறது" என்று சொன்னார்கள்" என்பதே. இன்னு மறிந்து கொள்:—வழிபடுகிற முமின்கள இந்தப் பயங்கரத்துக்குத் தப்பினவர்களாயிருப்பார்கள். ஏனெனில் அவர்கள் மலக்குல் மவுத்து அலைகிஸ்ஸலாமவர்களைப் பார்க்கும்போது மிகவும் அழகான ஓர் ரூபத்தில் காண்பார்கள். அந்தரூபம் எப்படியிருக்குமென்றால் அவர்கள் வேறு யாதொரு சுகத்தை அடையவிரும்பாமல் அந்தரூபத்தின் அழகையே பார்த்துக்கொண்டிருப்பார்களாகில் அதுவே அவர்களுக்குப் போதுமாயிருக்கும். சுலைமானுபுனுதாவூது அலைகிஸ்ஸலாமவர்கள் மலக்குல் மவுத்து அலைகிஸ்ஸலாமவர்களிடத்தில் "நீர் ஜனங்களுக்கு நடுவே ஏன் நீதம் செய்கிறதில்லை? ஒருவனைச் சடுதியில் கொண்டுபோகிறீர், ஒருவனை அதிகநேரம் விட்டுவைக்கிறீர்" என்று கேட்டதற்கு, அவர்கள் "இது என் கைவசத்தில் இல்லை" என்றும், "ஒவ்வொருவன் பேரால் ஒவ்வொரு பத்திரம் என்னிடம் கொடுக்கப்படுகிறது" என்றும், "அதில் கண்டிருக்கும் உத்திரவுப்படி நான் செய்கிறேன்" என்றும் சொன்னார்கள். வஹபுப்னுல் முனப்பா றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"ஒரு பாதுஷாவானவன் ஒருநாள் வெளியே புறப்பட நாடி உடுப்புகளைக் கொண்டுவரச்சொன்னான். எத்தனையோ உடுப்புகளைக் கொண்டுவந்து காட்ட அவன் "இது வேண்டாம் இது வேண்டாம்" என மறுத்து மிகவும் சேர்த்தியான ஓர் உடுப்பைத் தரித்துக்கொண்டான். பின்பு குதிரையைக்கொண்டுவரச்சொன்னான். அநந்தம் குதிரைகளை ஹாஜிர்படுத்த எல்லாவற்றையும் வேண்டாமெனத் தள்ளி அதிக அழகான ஓர் குதிரையின்மீதுஏறினான். பின்பு பெரும் படைகள் புடைசூழ வெளியேபுறப்பட்டான். அவன் தனது கர்வத்தினால் எவரையும் ஏறெடுத்துப்பார்க்காமல்சென்றுகொண்டிருந்தான்.

அப்போது மலக்குல்மவுத்து அலைகிஸ்ஸலாமவர்கள் அழுக்கு உடை தரித்த ஒரு பகீருடைய கோலத்தில் அவன் முன்பாக வந்து சலாம் சொன்னார்கள். அவன் ஜவாபு கொடுக்கவில்லை. அவர்கள் அவன் குதிரைக்கடிவாளத்தைப் பிடித்தார்கள். அப்போதவன் "ஏ பகீரே! விடு, நீ என்னசெய்கிறாய் என்று உனக்குத் தெரியவில்லைபோலிருக்கிறது" என்றான். அதற்கவர்கள் அவனை நோக்கி "உன்னிடத்தில் எனக்கு ஓர்வேண்டுதல் இருக்கிறது" என்றார்கள். அவன் "பொறு இறங்கிவருகிறேன்" என்றான். அவர்கள் "இல்லை இப்போதே கேட்கிறேன்" என்றார்கள். அவன் "சொல்" என்றான். அப்போதவர்கள் அவன் காதினிடத்தில் நெருங்கி "நான் மலக்குல் மவுத்தாயிருக்கிறேன், இப்போது உன் உயிரை வாங்க வந்திருக்கிறேன்" என்றார்கள். இதைக் கேட்ட பாதுஷாவுக்கு முகம் பேதலித்து "நாவுளதி என்னைக் கொஞ்சநேரம் விடுங்கள் நான் என் வீட்டுக்குப்போய் என் பெண் ஜாதி பிள்ளைகளுக்குப் பிரயாணம் சொல்லிக்கொண்டு வருகிறேன்" என்றான். அவர்கள் "விடமாட்டேன்" என்று அப்போதே அவன் உயிரை வாங்கிக்கொண்டார்கள், அவன் குதிரையிலிருந்து கீழேவிழுந்தான். அவர்கள் அங்கிருந்து ஒரு மூமினிடம்போய் அவனைக்கண்டு "நான் உன்னிடத்தில் ஒரு இரகசியம் பேசவேண்டியதிருக்கிறது" என்று சொன்னார்கள். அந்த மூமின் "அதென்ன சொல்லும்" என்க, "நான் மலக்குல் மவுத்தாயிருக்கிறேன்" என்றார்கள். அப்போதவன் மருஹபா வாருங்கள், நான் வெகுநாளாக உங்களை எதிர்பார்த்துக்காத்துக்கொண்டிருக்கிறேன். என்னிடத்தில் உங்களிலும் அதிக பிரிய முள்ளவர் எவர் வரப்போகிறார்? இப்போதே என் உயிரை வாங்கிக் கொள்ளுங்கள்" என்றுசொன்னான். அப்போதவர்கள் "உனக்கு ஏதாவது வேண்டுதலிருந்தால் அதை முதலில் நிறைவேற்றிக்கொள்" என்று சொன்னார்கள். அதற்கவன் "என் நாயகனைத் தரிசிப்பதிலும் அதிக முக்கியமான வேண்டுதல் ஒன்றுமே இல்லை" என்று சொன்னான். அதற்கவர்கள் "இப்போது நீ எந்தநிலைமையில் உன் உயிரைக் கொடுக்க நாடுகிறாயோ அந்தவிதமாகவாங்குவேன்" என்றார்கள். அப்போதவன் "இருங்கள், நான் ஒலுசெய்து தொழுதுகொள்ளுமளவும் பொறுத்து நான் ஸஜூதிலிருக்கும்போது என் உயிரை வாங்குங்கள்" என்றுசொன்னான். அவர்கள் அதேபோல் செய்தார்கள்" என்பதே இன்னுமிந்த வஹபுப்னுல் முநப்பா அவர்கள் சொல்வதாவது: "பூமியில் ஒரு பாதுஷா இருந்தான். அவனிலும் மிக்கப் பெரிய பாதுஷா ஒருவனுமிருந்ததில்லை, மலக்குல்மவுத்து அலைகிஸ்ஸலா

ம்வர்கள் அவன் ரூஹை வாங்கிக்கொண்டு வானத்துக்குப் போன
போது அங்குள்ள மலக்குகள் அவர்களை நோக்கி "நீர் எப்போதா
வது எவருடைய உயிரையாவது வாங்கினபோது அவர்மேல் உம
க்கு இரக்கம் வந்ததுண்டா?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள்
"காட்டில் ஒரு கர்ப்பஸ்திரீ பிள்ளைபெற்ற சமயத்தில் அவள் உயிரை
வாங்கும்படி அல்லாகுத்தஆலா எனக்குக் கட்டளை செய்ததினால் நான்
அவள் உயிரைக் கைப்பற்றிக்கொண்டு அந்தப் பிள்ளையைத் திக்கற்ற
தாக விட்டுவிட்டேன். அப்போது அவள்பேரில் அவளின் பரதேசி
நிலைமையைப்பற்றியும் அந்தப் பிள்ளையின்பேரில் அதன் தனிப்பான்
திக்கற்றநிலைமையைப்பற்றியும்எனக்குப்பரிதாபமாயிருந்தது" என்று
சொன்னார்கள். அப்போது மலக்குகள் அவர்களை நோக்கி "உலகத்
தில் இவனுக்கு ஒருவரும் நிகரில்லாத இந்தப் பாதுஷாவைப் பார்த்
தீரா?" என்க அவர்கள் "ஆம் பார்த்தேன்" என்றார்கள். அதற்கவர்
கள் "நீர் காட்டில் விட்டுவந்த அந்தக் குழந்தையே இவன்" என்
றார்கள். இதைக் கேட்ட மலக்குல் மவுத்து அலைகிஸ்ஸலாமவர்கள்
அதிசயப்பட்டு சுபுஹானல்லலத்தீபுல் லிமாயஷாஉ என்று ஸ்தோத்தி
ரம் செய்தார்கள்" என்பதே. இன்னும் அதிலே வந்திருப்பதாவது:—
"ஷஃபான் மீ 15உ இரவில் மலக்குல்மவுத்து அலைகிஸ்ஸலாமவர்கள்
வசம் ஒரு கணக்கு கொடுக்கப்படும். அந்த வருஷத்தில் எவரெவரு
டைய ரூஹை வாங்கவேண்டுமோ அவரவருடைய நாமங்கள் அந்தக்
கணக்கில் எழுதப்பட்டிருக்கும். ஒருவன் வீடுகட்டிக்கொண்டிருப்
பான். ஒருவன் கலியாண முயற்சியி லிருப்பான். ஒருவன் வழக்கு
செய்துகொண்டிருப்பான். இவர்களுடைய நாமங்களெல்லாம் அதில்
எழுதப்பட்டிருக்கும்" என்பதே. அஃமஷ் றலியல்லாகு அன்கு அவர்
கள் சொல்லுகிறதாவது:—"மலக்குல்மவுத்து அலைகிஸ்ஸலாமவர்கள்
சுலைமான் அலைகிஸ்ஸலா மவர்களிடம்வந்து அவர்களுடைய சபையி
லிருந்த ஒரு மனிதனை உறுக்கிப் பார்த்துவிட்டுப் போய்விட்டார்கள்.
அப்போதந்த மனிதன் சுலைமான் அலைகிஸ்ஸலாமவர்களை நோக்கி
"யாநபியல்லா, இவ்விதமாக என்னை உறுக்கிப்பார்த்த இந்த மனிதன்
யாராயிருப்பார்?" என்றுகேட்டார். "அவர் மலக்குல்மவுத்து" என்று
அவர்கள் சொன்னார்கள். அப்போதந்தமனிதன் "ஒருக்கால் அவர்என்
உயிரைவாங்கவந்திருப்பாராதலால் பின்பு அவர் திரும்பிவந்தால்இங்கு
என்னைக்காணாமலிருக்கும்பொருட்டுத் தாங்கள் என்னை ஹிந்துதேசத்
தில் கொண்டுபோய்விடும்படி காற்றுக்கு உத்திரவு செய்யவேண்டும்"
என்றார். அப்படியே கொண்டுபோய் விடும்படி அவர்கள் காற்றுக்கு

உத்திரவு செய்தார்கள். பிறகு மலக்குல்மவுத்து அலைகிஸ்ஸலா மவர்கள் அங்குவர அவர்களை நோக்கி சுலைமான் அலைகிஸ்ஸலாமவர்கள் "நீர் என் சபையிலிருந்த இன்ன மனிதனை உறுக்கிப்பார்த்த காரணம் என்ன?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "அந்த மனிதனுடைய ருஹை இந்நேரத்தில் இந்துதேசத்தில் வாங்கும்படி எனக்கு உத்திரவிருந்தது. அவனை நான் இந்தவிடத்தில் கண்டதினால் இவன் ஒரு ஸஆத்து நேரத்தில் இந்துதேசத்துக்கு எப்படிப்போவான் என்று எனக்குள் சொல்லிக்கொண்டுபிறகு இந்துதேசத்துக்குப்போனேன். அங்கு அவனைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்" என்று சொன்னார்கள்" என்பதே. இந்த ஹிக்காயத்துகளைச் சொன்னதில் நாடிய கருத்தென்னவென்றால்; மலக்குல்மவுத்து அலைகிஸ்ஸலாமவர்களைப் பார்க்காமலிருக்க வழியில்லை என்பதை நீ உணர்ந்துகொள்ளவேண்டுமென்பதுதான். இரண்டாவது சம்பவம்:—ஒவ்வொருவர்பேரிலும் சாட்டப்பட்டிருக்கிற அந்த இரண்டு மலக்குகளைப் பார்ப்பதாம். மரணத்தின் முடிவில் இந்த இரண்டு மலக்குகளும் அவனுக்குத் தென்படுவார்கள் என்றும், அவன் வழிபாடுள்ளவனாயிருந்தால் அவர்கள் அவனை நோக்கி ஜஸாக்கல்லாஹு ஹைரா அல்லாகு தஆலா உனக்கு நற்கூலி யளிப்பானாக; நீ எங்கள் முன்பாக அநேக வணக்கங்களைச் செய்து எங்களுக்குச் சுகத்தைக் கொடுத்தாய் என்று சொல்லுகிறதாயும், பாவியாயிருந்தால் லாஜஸாக்கல்லாஹு ஹைரா அல்லாகு தஆலா உனக்கு நற்கூலி யளிக்காதிருப்பானாக. நீ எங்கள் முன்பாக அநேகம் பழிப்புகளையும் பாவங்களையும் செய்தாய் என்று சொல்லுகிறதாயும் இந்த நேரத்தில் அவன் கண்விழி திறக்கப்பட்டுப் பிறகு மூடாதபடி ஆகாய வெளியை நோக்கிக்கொண்டிருக்கும் என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. மூன்றாவது சம்பவம்:-மரணநேரத்தில் அவரவரும் தங்கள் ஜாகையை சுவர்க்கத்திலும் நரகத்திலும் பார்ப்பதாம். அப்போது மலக்குல் மவுத்து அலைகிஸ்ஸலாமவர்கள் வழிபட்டவனை நோக்கி, "ஓ அல்லாவுடைய நேசனே! உனக்குச் சுவர்க்கத்தைக்கொண்டு சுபசோபனம் கூறுகின்றேன்" என்று சொல்லுவார்கள். வழிபடாத பாவியை நோக்கி "ஏ அல்லாவுடைய பகைவனே! உனக்கு நரகத்தைக்கொண்டு கல்மாராயம் கூறுகின்றேன்" என்று சொல்லுவார்கள். பிறகு இந்த கஷ்டத்துக்குப் பின்னால் உயிர் வாங்கும் கஷ்டத்தில் மாறுவான். அதைவிட்டும் அல்லாகு தஆலா நம்மைக் காக்கவேண்டும். இவ்வ துன்யாவிலேயே பார்க்கிற பயங்கரங்களாயிருக்கின்றன. இதுவோ கபுரிலும் அதற்குப்பிந்தியும் பார்க்கிற பயங்கரங்களை நோக்க மிகவும் இலேசானதாயிருக்கிறது.

## மய்யித்தினிடம் கபுரு பேசுவது.

றசூல் ஸல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவுளமா யிருப்ப தாவது:—“மய்யித்தைக் கபுரில்வைத்த நேரத்தில் கபுரு அந்த மய் யித்தை நோக்கி “ஏ ஆதமுடைய மகனே! உனக்குக் கைசேதம். நீ என்னை மறந்து மருண்டுபோயிருந்த காரணமென்ன? நான் கஷ்ட மான வீடாயும் இருளான வீடாயும் தனிமையான வீடாயும் பூச்சி கள் நிறைந்த வீடாயும் இருக்கிறேன் என்பது உனக்குத் தெரியாதா? நீ எதனால் மருண்டுபோ யிருந்தாய்? நீ என்மீது நடந்து செல்லுகை யில் பயந்தவனைப்போல் ஒருகாலை முந்தியும் ஒருகாலைப் பிந்தியுமாக வைத்தாயே” என்றுசொல்லும். பின்னர் அவன் நல்லவனாயிருந்தால் அவனுக்காக ஒருவர் அந்த கபுரை விளித்து “ஓ கபுரே! நீ என்ன சொல்லுகிறாய்? அவன் நன்னடக்கையி லிருந்தான். நன்மையைக் கொண்டு ஏவினான். தீமையைவிட்டு விலக்கினான்” என்று ஜவாபு சொல்லுவார். அப்போதந்த கபுரு “அப்படியானால் அவனுக்கு நான் பூங்காவனமாய்ப்போவது அவசியம்” என்று சொல்லும். பிறகு அவன் சரீரம் ஒளியாய்ப்போம், அவன்ரூஹு—வானத்திலாய்விடும்” என்பதே. இன்னும் ஹதீசில் வந்திருப்பதாவது :—“மய்யித்தை கபுரில் வைக்கிறார்கள். அதாபுசெய்கிறார்கள். அவனைச் சூழ்ந்திருக்கிற கபுராளிகள் அவனை விளித்து “ஏ பின்னவனே! நீ கொஞ்சநாளாவது எங்களுக்குப்பின் உலகத்தில் தரித்திருந்தாய், நாங்கள் உனக்கு முந்தி வந்திருக்கிறோம். நீ எங்களில் ஆராய்ந்துணர்ந்து ஏன் அச்சத்தை யடையாமலிருந்தாய்? நாங்கள் வந்துவிட்டதையும் எங்கள் அமல்கள் அற்றுப்போனதையும் நீ பார்க்கவில்லையா? உனக்குத்தாமதம் கிடைத் திருந்ததே, எங்களுக்குத் தப்பிப்போனதை நீ ஏன் செய்துகொள் ளாமலிருந்தாய்?” என்று சொல்லுவார்கள். இப்படியே பூமியின் கோ ணங்களெல்லாம் அவனைக் கூப்பிட்டு “ஏ துன்யாவின் வெளிக்கோலத் தைக்கண்டு அதில் பைத்தியங்கொண்டவனே! உனக்குமுன் சென்று போனவர்களும் உன்னைப்போல் பயித்தியங்கொண் டிருந்தவர்களு மான ஜனங்களில் ஆராய்ந்து நோட்டமிட்டு நீ ஏன் அச்சத்தை அடையாமற்போனாய்?” என்றுசொல்லும்” என்பதே. இன்னும் ஹதீ சில் வந்திருப்பதாவது:—“நல்ல அடியானை கபுரில் வைத்தால் அவ னுடைய நல்ல அமல்கள் அவனைச் சூழ்ந்திருந்து அவனைக் காக்கும். அதாபு செய்கிற மலக்குகள் அவன் கால் பக்கத்தால் வரும்போது தொழுகையானது முன்னால் நின்று “இங்கு வழியில்லை” என்றும், “இவன் அல்லாவுக்காக அநேகமாய்நின்றிருக்கிறான்” என்றும் சொல

லும். தலையின் பக்கமாக வரும்போது நோன்பானது "இங்கு வழி யில்லை" என்றும், "இவன் துன்யாவில் அநேகமாய்ப் பசியையும் தாகத்தையும் பொறுத்திருக்கிறான்" என்றும் சொல்லும். சரீரத்தின் பக்கத்தால் வந்தால் ஹஜ்ஜும் மார்க்கயுத்தமும் "இங்கு வழியில்லை" என்றும், "இவன் தன் சரீரத்தால் அநந்தங் கஷ்டங்களை அனுபவித்திருக்கிறான்" என்றும் சொல்லும். கையின்பக்கம் வந்தால் சதகாவானது "கையைத்தொடாதீர்கள்" என்றும், "இந்தக் கையானது மிகுந்த சதகா கொடுத்திருக்கிறது" என்றும் சொல்லும். அப்போதந்த மலக்குகள் "சந்தோஷமும் மங்களமும் உண்டாவதாக" என்று சொல்லுவார்கள்? றஹ்மத்துடைய மலக்குகள் வருவார்கள். அவனுக்காகச் சுவர்க்கத்திலிருந்து ஒருவிரிப்பைக் கொண்டுவந்து விரிப்பார்கள். கண்ணுக் கெட்டினதூரம் வரையில் கபுரை அவனுக்கு விசாலமாக்குவார்கள். இன்னும் சுவர்க்கத்திலிருந்து ஒரு விந்தீலைக் கொண்டுவருவார்கள். கியாமத்துவரையில் அவன் அதன் பிரகாசத்தி லிருப்பான்" என்பதே. இன்னும் "மய்யித்தை கபுரில் வைப்பார்கள்" என்றும், "ஜனஜா உடன்வந்த ஜனங்களின் காலடி சத்தத்தை மய்யித்து கேட்கும்" என்றும், "கபுரேயன்றி வேறு எந்தமனிதனும் மய்யித்தினிடம் பேசமாட்டான்" என்றும், "கபுரானது மய்யித்தைநோக்கி என் பயங்கரத்தையும் நெருக்கத்தைப்பும் குறித்து ஜனங்கள் உனக்கு அநேகமாகச் சொல்லியிருந்ததில்லையா? நீ எனக்காக எதைத் தயார்செய்தாய் என்றுசொல்லும்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுள்மானதாக அப்துல்லாஹிபுனு உபைதுறஸியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள்.

## முன்கர் நகீருகளுடைய சுவால்.

றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுள்மா யிருப்பத்ாவது:—"அடியான் மவுத்தானால் இரண்டு மலக்குகள் அவனிடம் வருகிறார்கள். அவர்கள் முகம் கறுப்பாயும் கண்கள் நீலவர்ணமாயுமிருக்கும். ஒருவர் முன்கர் என்றும் மற்றொருவர் நகீரு என்றும் சொல்லப்படுவார். அவர்கள் அந்த அடியானை நோக்கி "நீ நபியவர்களைக் குறித்து என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்பார்கள். அவன் முமினாயிருந்தால் அக்கேள்விக்கு "அவர்கள் அல்லாவுடைய அடியாரும் அவனுடைய றசூலுமா யிருக்கிறார்கள். அல்லா ஒருவன் என்றும் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவனுடைய றசூல் என்றும் நான் சாக்ஷி கொடுக்கிறேன்" என்று ஜவாபு சொல்லுவான். அப்போதவர்கள் அவன் கபுரை எழுபதுக் கெழுபது முழ

மாக விசாலப்படுத்தி அதை ஒளியால் நிறப்புவார்கள். பின்பு அவனை நோக்கி "நீ புதுமாப்பிள்ளையைப்போல் பெருந்தூக்கமாகத் தூங்கு. நீ நேசித்தவனன்றி வேறு எவரும் அந்தத் தூக்கத்திலிருந்து உன்னை எழுப்பமாட்டார்கள்" என்று சொல்லுவார்கள். அவன் முனாபிகாயிருந்தால் அக்கேள்விக்கு "நான் அவர்களை அறியமாட்டேன்" என்றும், "ஆனால் அவர்கள் ஏதோ சொல்லிக்கொண்டிருந்ததாக ஜனங்கள் சொன்னதைக்கேட்டு நானும் அவ்விதம் சொல்லிக்கொண்டிருந்தேன்" என்றும் சொல்லுவான். அப்போது பூமியை நெருங்கிச் சேரும்படி உத்திரவுசெய்வார்கள்; அவனுடைய விலாவெலும்புகளெல்லாம் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்தில் வரும்படியாகப் பூமி அவனை நெருக்கும். இதேபோல் கியாமத்துவரையில் அவன் வேதனைபட்டுக்கொண்டிருப்பான்" என்பதே. றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் உமர்றலியல்லாகு அன்கு அவர்களை நோக்கி "ஓ உமரே! நீர்மரணத்தையடைந்து உமக்காக உமது பந்துக்கள் நாலுமுழ நீளமும் ஒன்றேகால்முழ அகலமுமான கபுரைவெட்டி உம்மைக்குளிப்பாட்டிக் கபனிட்டு அந்த கபுருக்குள் வைத்து உம்மீது மண்ணைத்தள்ளிவிட்டுத் திரும்பினபிறகு கபுரில் வாதனைப்படுத்துகிற இரண்டு மலக்குகள் இடிமுழக்கம்போல் சத்தமும் மின்னல்போல் கண்களும் முன்கர் நகீறுகள் என்ற நாமமும் உள்ளவர்களாய்த் தங்கள் உரோமம் தரையில் சிக்கும்படி இழுத்துக்கொண்டு வந்து பற்களால் கபுரு மண்ணைப்பரித்து உம்மைப்பிடித்து ஆட்டுவார்களே அந்தச் சமயத்தில் நீர் உம்மை என்ன கதியில் காண்பீர்?" என்று கேட்டார்கள். அதற்கு உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் "யாறசூலல்லா! அப்போது எனக்குப் புத்தியிருக்குமா?" என்று கேட்டதற்கு, நாயகமவர்கள் "இருக்கும்" என்று சொல்ல, உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் "அப்படியிருந்தால்எனக்குஅச்சமில்லைநான் அவர்களுக்குப் போதுமானவேன்" என்று சொன்னார்கள். இன்னும் ஹதீசில் வந்திருப்பதாவது:—"கபுரிலே காபிரின்மீது இரண்டு பிராணிகள் விடப்படும். அவ்விரண்டும் குருடும் செவிடுமாயிருக்கும். ஒவ்வொன்றின் கையிலும் ஒரு இருப்புக் கதையிருக்கும். அதன் முனை ஒட்டகத்துக்குத் தண்ணீர் வைக்கும் பாத்திரம்போல் இருக்கும். அக்கதையினால் அப்பிராணிகள் அவனை கியாமத்து வரையில் அடித்துக்கொண்டிருக்கும். அவன் படுகிற வேதனையையும் இடுகிற சப்தத்தையும் பார்த்துக் கேட்டு அவன்மீது இரக்கப்படுவதற்கு அந்தப்பிராணிகளுக்குக் கண்ணுமிராது காதுமிராது" என்பதே. இன்னும் "கபுருக்கு நெருக்கல்

உண்டு" என்றும், அது மய்யித்தைநெருக்கும்" என்றும், "அதற்கு எவரும் தப்புகிறபக்ஷத்தில் சஅது புனுல் மஆது தப்பியிருப்பார்" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானதாக ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள் சொல்லுகிறார்கள். அனசு றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:—"ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடையமகள்ஜய்னபு றலியல்லாகு அன்ஹா மவுத்தாகி அவர்களைக் கபுரில்வைக்கும்போது ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய முபாரக்கான முகம் சோங்கி யிருந்தது. கபுரைவிட்டு வெளியே வந்த பிறகு அந்த முகம் முந்திய நிலைமைக்கு மாறினது. அப்போது அஸ்ஹாபுகள் "யாரசூலல்லா! தங்கள் முகம் இப்படிச் சோங்கினதும் பிறகு மாறினதும் என்ன காரணத்தினால்" என்று கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் "கபுரு நெருக்கமும் அதன் அதாபும் என் ஞாபகத்துக்கு வந்தது. பிறகு அது காரியம் ஜய்னபுக்கு இலேசாக்கப்பட்டதென்று எனக்கு அறிவிக்கப்பட்டது. இப்படி இலேசாக்கப்பட்டிருப்பதுடன் கபுரானது ஜய்னபை ஒரு நெருக்கு எப்படி நெருக்கினதென்றால் அதன் சப்தம் உலகமெல்லாம் கேட்கும்" என்று திருவுளமானார்கள் என்பதே. இன்னும் "கபுரிலே காபிருக்கு அதாபென்பது அவன்மேல் தொண்ணூற்றொன்பது சர்ப்பங்கள் விடப்படுவதே" என்றும் "அந்தச் சர்ப்பங்களென்பவை ஒவ்வொன்றும் தொண்ணூற்றொன்பது தலைகளையுடையபாம்புகளே என்று நீங்கள் அறிந்திருங்கள்" என்றும்; "அவை கியாமத்து வரையில் அவனைக் கடித்துக்கொண்டும் நக்கிக்கொண்டும் அவன்மேல் சீறிவிழுந்துகொண்டுமிருக்கும்" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "கபுரானது முந்தினமன்ஜில்" என்றும், "அது இலேசாகும்பக்ஷத்தில் அதற்குப்பிந்தியுள்ளவை மிகவும் இலேசாய்ப்போம்" என்றும், "அது கஷ்டமாகும்பக்ஷத்தில் அதற்குப் பிந்தியுள்ளவை மிகவும் கஷ்டமும் கடினமுமாயிருக்கும்" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

அறிந்துகோள்:—கபுருக்குப் பிந்தியுள்ள பயங்கரங்களில் முந்தினது சூருதும் பயங்கரமாம். பின்பு கியாமத்து நாளும் அதன் நீட்சியும் அதில் உண்டாகிற வெப்பம் வெயர்வைகளுமான இவைகளின் பயங்கரமாம். பின்பு கணக்கு ஒப்பித்தல், பாவங்களைக் குறித்துக் கேட்கல் இவைகளின் பயங்கரமாம். பின்பு பட்டோலைகள் வலதுகையிற் கொடுக்கப்படுமோ அல்லது இடதுகையிற் கொடுக்கப்

படுமோ என்கிற பயங்கரமாம். பின்பு அதனால் வெளிபாகின்ற மானபங்கமும் பழிப்புமான பயங்கரமாம். பின்பு மீஜானில் நன்மைத்தட்டு கனக்குமோ தீமைத்தட்டு கனக்குமோ என்கிற பயங்கரமாம். பின்பு பிறருக்குச்செய்த கொடுமைகளைக் குறித்து அவர்கள் வழக்கிடுவதும் அவர்களுக்கு ஜவாபு சொல்வதுமான பயங்கரமாம், பின்பு ஸிராத்து என்னும் பாலத்தின் பயங்கரமாம். பின்பு நரகம், ஜபானியாக்கள், துன்பங்கள், அரிகண்டங்கள், கள்ளி, பாம்பு, தேள் மற்றும் அதன் வேதனைகள் இவைகளைப் பற்றின பயங்கரமாம், இந்த வேதனைகள் சரீரசம்பந்தமானவை எனவும் ஆன்மசம்பந்தமானவை எனவும் இருவிதப்பட் டிருக்கின்றன. சரீரசம்பந்தமான வேதனைகளின் விஸ்தரிப்பை எஹ்யா என்னும் கிதாபின் இறுதியில் விபரமாகக் கூறியிருக்கிறோம். அந்த வேதனை விஷயமாக வந்தவைகளை அதில் கொண்டுவந்திருக்கிறோம். இதேபோல் மவுத்தின் உண்மை இதுவென அதன் ரகசியத்தையும் ரூஹினது ஹகீகத்தையும் மவுத்துக்குப் பிறகு ரூஹினது நிலைமைகளையும் உன்வானில் விவரித்திருக்கிறோம். ஆதலால் சரீரசம்பந்தமான வேதனைகளின் விவரத்தை அறிய விரும்புகிறவன் எஹ்யாவிலும் ஆன்மசம்பந்தமான வேதனைகளின் விவரத்தை அறிய விரும்புகிறவன் இக்கிதாபின் முதல்வால்யம் உன்வானிலும் தேடிப்பார்க்கக்கடவன். அவைகளை இந்தக் கிதாபில் கொண்டுவந்தால் கிதாபு விரிவாகும். அப்படி ஆகாமலிருக்கும் பொருட்டு இப்போது சொல்லிவந்த அளவே போதுமெனச் சுருக்கி மவுத்தானவர்களுடைய அஹ்வால்களில்நின்றும் பெரியோர்கள் கண்டிருக்கிற சொப்பனங்களின் ஹிகாயத்துகளைக் கூறி கிதாபை முடிவுசெய்வோம். ஏனெனில் இவ்வுலகத்தி லிருப்பவர்களுக்கு நித்திரையிலாவது விழிப்பிலாவது உள்வழிதிறந்தால் மாத்திரமேயன்றி மற்றப்படி இவர்கள் மவுத்தானவர்களுடைய அஹ்வால்களை அறிய வழியில்லை. ஆனால் அந்த அஹ்வால்களை ஐம்புலன்களால் அறியமுடியாது. ஏனெனில் நிறங்கள் எப்படி காதுக்கு எட்டாவோ ஓசைகள் எப்படி கண்ணுக்கு எட்டாவோ அப்படியே மவுத்தானவர்கள் போயிருக்கிற உலகம் இந்த எல்லாப் புலன்களுக்கும் எட்டாத ஓர் உலகமாயிருக்கிறது. மேலும் (ஐம்புலன்களன்றி ஆறாம்புலனாகிய)சிறந்தபுலனொன்று உண்டு. அதனால் அவன் அந்த உலகத்தாரைப் பார்க்கலாம். என்கிலும் அந்தப் புலனானது ஐம்புலன்களின் சேட்டையினாலும் துன்யாவுடைய பராக்கினாலும் மறைந்துபோயிருக்கிறது. நித்திரையின்போது அந்தச்

சேட்டையையும் பராக்கையும்விட்டு நீங்குகிறானாதலால் அப்போது அவன் நிலைமை அவர்கள் நிலைமைக்கு அடுத்ததாக மாறும். அவர்களுடைய ஹால்களும் வெளிப்படத் தொடங்கும். இன்னும் மவுத்தானவர்களுக்கு ஹதீசில் வந்திருப்பதுபோல் நம்மைப்பற்றி உணர்விருப்பதும் நம்முடைய நல்ல அமல்களைக்கொண்டு அவர்கள் சந்தோஷப்படுவதும் நம்முடைய பாவங்களைக்கொண்டு துக்கப்படுவதும் இந்த (ஆறும்) புலனாலேயாம். எதார்த்தத்தில் லவ்ஹுல்மஹ்பூழின் மூலமாகவேயன்றி அவர்கள் செய்தி நமக்குத் தெரியாது நம் செய்தி அவர்களுக்குத் தெரியாது. ஏனெனில் நம்முடையவும் அவர்களுடையவுமான செய்திகள் லவ்ஹுல்மஹ்பூழில் எழுதப்பட்டிருக்கின்றன. நித்திரையில் மனிதனுடைய மனதுக்கும் அந்த லவ்ஹுல்மஹ்பூழுக்கும் ஒரு நேர்ப்பாடுண்டானால் அவர்களுடைய செய்திகளை அதில் பார்ப்பான், அவர்களுக்கு நேர்பாடுண்டானால் அதில் நம் செய்திகளை அவர்கள் பார்ப்பார்கள். லவ்ஹுல்மஹ்பூழானது எல்லாரூபங்களும் பிரதிபிம்பித்திருக்கிற ஒரு கண்ணாடிக்குச் சமானமாம். மனிதனுடைய ரூஹும் ஒரு கண்ணாடிபோலிருக்கிறது. மவுத்தானவனுடைய ரூஹும் அங்ஙனமேயாம். ஆகவே ஒரு கண்ணாடியில் உள்ளது மற்றொரு கண்ணாடியில் தோற்றுவதுபோல் லவ்ஹுல்மஹ்பூழில் உள்ளது நம்மிலும் அவர்களிலும் தோன்றுகிறது.

அருமையானவனே! லவ்ஹுல்மஹ்பூழ் என்பது மரத்தால் அல்லது மூங்கிலால் அல்லது இக் கண்ணுக்குப் புலப்படக்கூடிய வேறு யாதொரு வஸ்துவாலாகிய நாற்சதுர பலகைபோன்ற ஒரு சடப்பொருளென்றும் அதில் எழுதப்பட்டிருப்பவை வாசிக்கக் கூடியவை என்றும் நீ நினைக்காதே. மேலும் அதற்கொரு உபமானம் தெரியவேண்டுமென விரும்புவாயாகில் உன்னிடத்திலேயே தேடிப்பார். ஏனெனில் சிருட்டியிலிருக்கின்ற ஒவ்வொன்றுக்கும் உன்னில் நமூனா அமைக்கப்பட்டிருக்கிறது. எதற்காகவெனில் அதனால் நீ எல்லாவற்றையும் அறியும்பொருட்டு உனக்கு வழியுண்டாகவேயாம். என்கிலும் நீ உன்னையே மறந்தவனாயிருக்கும்போது மற்றவைகளை எப்படி அறியப்போகிறாய்? லவ்ஹுல்மஹ்பூழுக்கு நமூனாவாகிறது குர்ஆன் முழுவதையும் பாடமிட்டிருக்கிற ஒரு ஹாபிழுடைய தலைமூளையேயாம். அதையும் அதன் அக்ஷரங்களையும் அதன் வரிகளையும் அவன் பார்க்கிறவிதமாக அவன் மூளையில் குர்ஆன் எழுதப்பட்டிருக்கிறதென்று நீ சொல்லுவாய். ஆயினும் ஒருவன் அவன் மண்டையைத் துண்டுதுண்டாக்கி இந்த வெளிக்கண்ணைக்கொண்டு பார்ப்பானாகில் அதில் ஓரிடத்திலும் குர்ஆனையும்

தின் எழுத்துகளையும் காணமாட்டான். லவுஹுல்மஹ்பூலில் செய்திகள் வரையப்பட்டிருத்தல் இதேமாதிரி என்று நீ அறியவேண்டும். அதில் எண்ணிறந்த செய்திகள் வரையப்பட்டிருக்கின்றன. கண்ணோ எல்லையுள்ளதா யிருக்கிறது. எல்லையுள்ளதில் எல்லையற்றது புலப்படுகிறவிதமாக ரூபிகரிப்பது முடியாதகாரியம். ஆகவே அல்லாகு தஆலாவும் எப்படி உன்போல் அல்லவோ அப்படியே அவன் முகமும் அவன் லவுகும் அவன் கலமும் அவன் கையுமான இவை யெல்லாவற்றிற்கும் உன்னிடத்தில் யாதொரு ஒப்பில்லை. மேலும் அத்துப்பொருள் யாவும் அகத்தானை யொத்திருக்கும் என்று சொல்லப்பட்டு வருவதுபோல் அவனது லவுஹுல் மஹ்பூலும் அவனை யொத்திருக்கிறது. இதைச் சொன்னதில் நாடிய கருத்தென்னவென்றால்; மவுத்தானவர்களுக்கு நம் செய்திகளும் நமக்கு அவர்கள் செய்திகளும் தெரிவது அசாத்தியமல்லவென்று நீ அறியவேண்டுமென்பதுதான். உதாரணமாக:—நீ கனவில் காண்கிறாய்: மவுத்தானவர்களை நல்ல நிலைமைகளிலும் கெட்ட நிலைமைகளிலும் நாம் கனவில் பார்ப்பதானது அவர்கள் சுகத்திலாவது துக்கத்திலாவது ஹயாத்தா யிருக்கிறார்கள் என்பதற்கும் அழிந்து நாஸ்தியாய்ப் போகவில்லை என்பதற்கும் செத்தவர்களாயிருப்பது மில்லை என்பதற்கும் பெரிய ஓர் அத்தாட்சியாயிருக்கிறது. அல்லாகு தஆலா அருளிச்செய்ததுபோல் அது வருமாறு:—"அல்லாவுடைய மார்க்கத்தில் வெட்டுண்டவர்களை மவுத்தானவர்களென்று நீங்கள் எண்ணவேண்டாம். மேலும் அவர்கள் தங்கள் ரப்பிடத்தில் ஹயாத்தானவர்களா யிருக்கிறார்கள். அவன் தனது கிருபையினால் அவர்களுக்குக் கொடுப்பதைக்கொண்டு அவர்கள் சந்தோஷத்தை யடைந்தவர்களாக உணவளிக்கப்படுகிறார்கள்" என்பதே.

### மவுத்தானவர்களுடைய அஹ்வால்களில்நின்றும் சொப்பனத்தின் வழியாக வெளியாயிருக்கிற அஹ்வால்களை விளக்கல்.

ரசூல்சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் "எவராவது என்னைச் சொப்பனத்தில் கண்டால் அவர்கள் என்னையே கண்டிருப்பார்கள்" என்றும், "ஷைதான் என்ரூபத்தில்வர சக்திபெறமாட்டான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் "நான் ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களைச் சொப்பனத்தில் கண்டேன்" என்றும், "அவர்கள் என்னைப்பார்க்காமல் முகத்தைத்திருப்பிக் கொண்டிருந்ததினால் "யாரசூல்லல்லா! என்னால் என்ன குற்றம் நிகழ்ந்தது" என்று நான் கேட்டதற்கு "நீர் நோன்புவைத்திருக்கும்போது உமது மனையாளை முத்தமிடாமலிருக்க உம்மால் முடிகிறதில்லை" என்று சொன்னார்கள்" என்றும் கூறியிருக்கிறார்கள். இதற்குப் பிறகு

அவர்கள் எப்போதும் மற்றொரு முறை அப்படிச் செய்ததில்லை. இது ஹராமல்லவென்றாலும் இப்படிச் செய்யாமலிருப்பது மிகவும் ஏற்றமாம். அன்றியும் இவ்விதமான நுண்ணிய கருமங்களில் மற்றவருக்கு இலேசுபடுத்தப்பட்டாலும் சித்தீகுகளுக்கு இலேசுபடுத்தப்படுவதில்லை. அப்பாசு றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது :— எனக்கு உமர்றலியல்லாகு அன்குவுடன் சிநேகமிருந்தது. அவர்கள் மவுத்தானபிறகு அவர்களை மனுமில் காணவேண்டுமென்று ஆசித்தேன். ஒருவருஷத்துக்குப் பிறகு அவர்களைக் கண்டேன். அவர்கள் முகத்தைத் துடைத்துக்கொண்டு இப்போதுதான் எனக்குக் கவலை நீங்கிற்று என்றும் அல்லாகு தஆலா பெருமைபொருந்திய தயாளுயிராதபக்ஷத்தில் காரியம் அபாயத்திலிருந்தது என்றும் சொல்லுகிறவர்களாயிருந்தார்கள் என்பதே. இன்னுமிந்த அப்பாசு றலியல்லாகு அன்கு அவர்கள் "நான் அபூலஹபைச் சொப்பனத்தில் கண்டேன்" என்றும், "நரகாக்கினியில் அவன் பற்றி எரிந்துகொண்டிருந்தான்" என்றும், "நீ எப்படி யிருக்கிறாய்?" என்று கேட்டதற்கு, "திங்கட்கிழமை இரவில் தவிர மற்றப்போதெல்லாம் வேதனை யடைந்துகொண்டிருக்கிறேன். திங்கட்கிழமை இரவில் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நம்மில் வெளியான நல்மாராயத்தைக் கேட்ட சந்தோஷத்தினால் நான் அடிமையை உரிமையாக்கிவிட்ட நிமித்தம் அதன சவாபில் பிரதி திங்கட்கிழமை இரவிலும் என்னைவிட்டு அதாபு நீக்கப்படுகிறது" எனச் சொன்னான்" என்றும் கூறியிருக்கிறார்கள். உமருபுனு அப்தில் அஜீஸ் றஹிமஹுல்லா அவர்கள சொல்லுகிறதாவது:—"நான் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைச் சொப்பனத்தில் கண்டேன். அவர்கள் அபூபக்கர், உமர்றலியல்லாஹு அன்ஹுமா இவர்களுடன் உட்கார்ந்திருந்தார்கள். நானும் அவர்களுடன் உட்கார்ந்த பிறகு அலிறலியல்லாகு அன்கு அவர்களையும் மஆவியா றலியல்லாகு அன்கு அவர்களையும் கொண்டுவந்து இருவரையும் ஒரு வீட்டிற்குள விட்டுக் கதவைச் சாற்றினார்கள. உடனே அலிறலியல்லாகு அன்கு அவர்களை வெளியே வரக்கண்டேன். வந்து கலாலீ வறப்பில் கஃபத்தி என்று சொன்னார்கள். இப்படிச் சொன்னதில் "எனக்கே ஞாயம் கிடைத்தது" என்பது அவர்கள் கருத்து. பிறகு சடுதியில் மஆவியா றலியல்லாகு அன்கு அவர்கள் வெளியே வந்தார்கள். வந்து கபரலீ வறப்பில் கஃபத்த என்று சொன்னார்கள். இப்படிச் சொன்னதில் "எனக்கும் பிழைபொறுத்து மன்னித்தான்" என்பது அவர்கள் கருதது என்பதே. ஹுசைன றலியல்லாகு அன்குஅவர்கள் ஷஹீதாவதற்கு முன இபுனு அப்பாஸ் றலியல்லாகு அன்கு அவர்கள் ஒருநாள நித்திரையிலிருந்தெழுந்து இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹிராஜிஊன் என்று சொன்னார்கள். அங்கிருந்தவர்கள "என்ன சம்பவித்தது?" என்று கேட்க, "ஹுசைனை வெட்டிப்போட்டார்கள" என்று

சொன்னார்கள். அதெப்படி என்று கேட்க, "நான் இப்போது ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைச் சொப்பனத்தில் கண்டேன்" என்றும், "அவர்கள் கையில் இரத்தம் நிறப்பிய ஒரு சீஷா இருந்தது" என்றும், "அதை எனக்குக் காட்டி என் உம்மத்துகள் எனக்கு என்ன செய்தார்கள் பார்த்தாயா? என் மகன் உசைனைக் கொன்றுபோட்டார்கள். இது அவருடையவும் அவர் அஸ்ஹாபுகளுடையவுமான இரத்தமாயிருக்கிறது. இந்த அநீதத்தை அல்லாவினிடம் முறையிடுவதற்கு இதைக்கொண்டுபோகிறேன்" எனச் சொன்னார்கள்" என்றும் கூறினார்கள். இதற்குப் பின் இருபத்துநான்காம் நாள் அவர்களை அன்று ஷஹீதாக்கின சேதிவந்தது. ஒருவர் அபூபகர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்களைச் சொப்பனத்தில் கண்டு "தாங்கள் எப்போதும் தங்கள் நாவைத் தொட்டுக்காட்டி இது வெகு வேலைகளை எனக்கு முன்னால் வைத்திருக்கிறது என்று சொல்லிக்கொண் டிருந்தீர்களல்லவா?" எனக் கேட்டதற்கு அவர்கள் "ஆம் இந்த நாவினால் நான் லாஇலாஹ இல்லல்லாஹு என்று சொன்னேன். சொர்க்கம் என் முன்பாக வைக்கப்பட்டது" என்று பதில் சொன்னார்கள். ஒருவர் யூசுபுப்னுல் உசைன் அவர்களைச் சொப்பனத்தில் கண்டு "அல்லாகு தஆலா உமக்கு என்ன செய்தான்" என்று கேட்டதற்கு "ரஹ்மத்து செய்தான்" என்று சொன்னார்கள். "எதனால்" என்று கேட்டதற்கு "சங்கை பொருந்திய வார்த்தைகளைச் சரசவார்த்தையுடன் நான் ஒருபோதும் கலக்காததினால்" என்று சொன்னார்கள். மன்சூருபுனு இஸ்மாயீல் என்பவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் அப்துல்லாஹில் பஸாஸ் என்பவரைச் சொப்பனத்தில் கண்டு "அல்லாகு தஆலா உமக்கு என்ன செய்தான்" என்று கேட்டேன். அதற்கவர் "என்னால் நிகழ்ந்ததாக நான் எடுத்துச் சொன்ன ஒவ்வொரு பாவத்தையும் அவன் எனக்கு மன்னித்தான். ஆனால் ஒரே ஒரு பாவத்தை வெளிப்படுத்த நான் வெட்கப்பட்டதினால் என்னைப் புழுக்கத்தில் நிறுத்தினான். என் முகச்சதை யெல்லாம் உருகி விழுந்துவிட்டது" என்று சொன்னார்கள். "அதென்ன பாவம்?" என்று கேட்டேன். ஒருநாள் ஒரு சிறுவனைப் பார்த்தேன்" என்றும், "அவன் அழகில் எனக்குப் பிரியம் வந்தது" என்றும், "அதைச் சொல்ல நான் வெட்கப்பட்டேன்" என்றும் சொன்னார்கள்" என்பதே. அபூஜஃபருஸ்ஸந்தலானியவர்கள் சொல்லுகிறதாவது:—"ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை நான் சொப்பனத்தில் கண்டேன். தர்வேஷுகளான சூபி

யாக்களின் ஒருகூட்டம் அவர்களுடன் உட்கார்ந்திருந்தார்கள். வர்னித்திலிருந்து இரண்டு மலக்குகள் இறங்கிவந்தார்கள். ஒருவர் கையில் தண்ணீர் கூசாவும் மற்றொருவர் கையில் தஷ்தும் இருந்தது. அவர்கள் முதலில் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கும் பின்பு தர்வேஷுகளுக்கும் கைகழுவத் தண்ணீர் வார்த்தார்கள். எனக்கும் தண்ணீர் வார்ப்பதற்காக தஷ்தை என் முன்பாகக் கொண்டுவந்து வைத்தபோதுஒருவர் "இவர் தர்வேஷ்களிற்சேர்ந்தவரல்லர் இவருக்குத் தண்ணீர் வார்க்கவேண்டாம்" என்றுசொன்னார். அப்போதுநான் "யாரசூலல்லா! ஒருவன் ஒரு கூட்டத்தை நேசித்தால் அவனும் அக்கூட்டத்தைச் சேர்ந்தவனாவான்" என்று தாங்கள் திருவுளம்பற்றினதாக ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது. நான் இவர்களை நேசிக்கிறவனாயிருக்கிறேன்" என்றுசொன்னேன். அப்போதுரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "இவருக்குத் தண்ணீர் வாருங்கள். இவரும் அவர்களைச்சேர்ந்தவர்தாம்" என்றுசொன்னார்கள்" என்பதே. மஜ்மஉ றஹிமஹுல்லா அவர்களைச் சொப்பனத்தில் கண்டு "காரியம் எப்படி இருக்கக்கண்டீர்?" என்று கேட்க, "ஜாஹிதுகள் துன்யா, ஆகிரத்துடைய நன்மைகளைக் கொண்டுபோனார்கள்" என்று சொன்னார்கள். ஒருவர் ஜர்ரத்துப்னு அபீ அவுபா றஹிமஹுல்லா அவர்களைச் சொப்பனத்தில் கண்டு "அமல்களில் எந்த அமல் அதிக வரிசையுள்ளதெனக்கண்டீர்?" என்று கேட்டதற்கு, "அல்லாகுதஆலா விதித்த விதிக்குப் பொருத்தமாதல் என்னும் ரிலாவும் சுருங்கியமேலெண்ணமும்" என்று சொன்னார்கள். எஜீதுபுனுமதுனர் என்பவர் சொல்லுகிறதாவது:—"நான் அவுஜாஈ றஹ்மத்துல்லாஹி அலைகியவர்களைச்சொப்பனத்தில் கண்டு "நான் அல்லாவுடைய சமுகத்தில் நெருங்குவதற்கு (உதவியான) ஒரு நல்ல அமலை எனக்கு அறிவிக்க வேண்டும்" என்று கேட்டேன். அதற்கவர்கள் "உலமாக்களுடைய தரஜாவினும்மேலிட்ட ஒரு தரஜாவை நான் பார்க்கவில்லை" என்றும், "அதற்குத் தாழ்ந்தது துக்கமுள்ளவர்களின் தரஜா" என்றும் சொன்னார்கள்" என்பதே. இந்த எஜீதாகிறவர் விருத்தாப்பியரான ஒரு மனிதராயிருந்தார். இந்தச் சொப்பனத்திற்குப் பிறகு இவர் மரணத்தை யடைகிறவரையில் எப்போதும் அழுதுகொண்டிருந்தார். அதனால் கண் இருண்டுபோயிற்று. இப்னுஉயைனா றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் என் சகோதரரைச் சொப்பனத்தில்கண்டு "அல்லாகுதஆலா உமக்கு என்ன செய்தான்?" என்று கேட்டதற்கு "எந்தெந்த பாவத்தைவிட்டு நான் தவுபாசெய்தேனோ அந்தப்பாவம் ஒவ்வொன்

னையும் மன்னித்தான்" என்றும், "எதைவிட்டுத் தவுபா செய்யவில்லையோ அதை மன்னிக்கவில்லை" என்றும் சொன்னார்" என்பதே. (ஹாரூன் றஷீதுடைய மகளான) ஜுபைதா என்பவரைச் சொப்பனத்தில் கண்டு "அல்லாகுதஆலா உமக்கு என்ன செய்தான்" என்று கேட்டதற்கு, "றஹ்மத்துசெய்தான்" என்று சொல்லினர். "நீர் மக்கா வழியில் செலவுசெய்த பொருளைக் கொண்டுதானோ (உமக்கு றஹ்மத்துசெய்தது?") என்று கேட்டதற்கு, "அல்ல, அந்தப்பொருளின் சவாபு உடையவருக்காய்விட்டது. எனது நிய்யத்தின் பொருட்டால் என்னை மன்னித்தான்" என்று சொல்லினர். சுபுயானு சவுரீ றஹிமஹுல்லா அவர்களைச்சொப்பனத்தில்கண்டு "அல்லாகுதஆலா உமக்கு என்னசெய்தான்?" என்றுகேட்டதற்கு "நான் ஒருகாலை சிராத்தென்கிற பாலத்தில் வைத்து மற்றொருகாலைச் சொர்க்கத்தில் வைத்தேன்" என்று சொன்னார்கள். அஹ்மதுபுனு அபில்ஹவாரீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:-"நான் என் மனையாளைச் சொப்பனத்தில் கண்டேன். அவ்வளவு அழகிய ரூபத்தில் ஒருவரையும் ஒருபோதும் நான் கண்டதில்லை. அவள் முகம் ஒளியினால் இலங்கிக் கொண்டிருந்தது. "உன் முகத்தில் இந்த ஒளி எதனாலாகியது?" என்றேன். அதற்கு "நீர் இன்ன இரவில் அல்லாகு தஆலாவை ஞாபகம்செய்து அழுதது உமக்கு நினைவிருக்கிறதா?" என்று கேட்டாள். நான் "ஆம் இருக்கிறது" என்றேன். அந்தக் கண்ணீரைத் துடைத்து நான் என் முகத்தில் தடவிக்கொண்டேன், அதனாலாகியதுதான் இந்த ஒளியெல்லாம்" என்று சொன்னாள்" என்பதே. கத்தானி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் ஜுனைது றஹிமஹுல்லா அவர்களைச் சொப்பனத்தில் கண்டு "அல்லாகு தஆலா உமக்கு என்ன செய்தான்" என்று கேட்டதற்கு "அவன் எனக்கு றஹ்மத்து செய்தான்" என்றும், "அந்த எல்லா இபாதத்துகளும் இஷாரத்துகளும் காற்றில் பறந்துவிட்டன" என்றும், "நான் இரவில் தொழுதுவந்த இரண்டு றக்ஆத்துகளை தவிர மற்றது ஒன்றும் உபயோகப்படவில்லை என்றும் சொன்னார்கள்" என்பதே. ஜுபைதா என்கிற மங்கையரைச் சொப்பனத்தில் கண்டு "அல்லாகு தஆலா உமக்கு என்னசெய்தான்" என்று கேட்டதற்கு லாஇலாஹ இல்லல்லாஹு அப்னீபிஹாஉம்ரீ, லாஇலாஹ இல்லல்லாஹு அத்குலு பிஹாகப்ரீ, லாஇலாஹ இல்லல்லாஹு அக்லூ பிஹா வஹ்தீ, லாஇலாஹ இல்லல்லாஹு அல்காபிஹாறப்பீ என்று நான் சொல்லிவந்த இந்த நாலு கலிமாக்களின் பொருட்டால் அவன்

எனக்கு றஹ்மத்து செய்தான்" என்று சொல்லினர். பிஷ்றுல் ஹாபீ றஹிமஹுல்லா அவர்களைச் சொப்பனத்தில் கண்டு "அல்லாகு தஆலா உமக்கு என்ன செய்தான்?" என்று கேட்டதற்கு அவன் எனக்கு ரஹ்மத்து செய்து என்னை நோக்கி "நீ அவ்வளவு கஷ்டத்தை அடைந்துவந்தும் என்னிடத்தில் பயந்துகொண் டிருந்தாயே அதைப்பற்றி நீ எனக்கு வெட்கம் வைக்கவில்லையா?" என்று கேட்டான்" என்று சொன்னார்கள். அபூசுலைமான் றஹிமஹுல்லா அவர்களைச் சொப்பனத்தில் கண்டு "அல்லாகுதஆலா உமக்கு என்னசெய் தான்" என்று கேட்டதற்கு "அவன் எனக்கு ரஹ்மத்துசெய்தான்" என்றும், "இந்த ஜனங்கள் என்னைச் சுட்டிக்காட்டின எந்த வுஸ்துவும் எனக்கு நஷ்டத்தைக் கொடுக்கவில்லை" என்றும் சொன்னார்கள். இப்படிச் சொன்னதில் அவர்கள் கருதியது யாதெனில், தீனவர்களின் நடுவே நான் சிறந்தவனென்று ஜனங்கள் என்னைச் சுட்டிக்காட்டினது எனக்கு நஷ்டந்தரவில்லை" என்பதே.

அபூஸஈதில் கிஜார் றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"இபுலீசை நான் சொப்பனத்தில் கண்டு அவனை அடிப்பதற்காகத் தடியைத் தூக்கினேன். அவன் அதற்கு அஞ்சவுமில்லை பயப்படவுமில்லை. அப்போது அசரீரிவாக்காக "இவன் இதற்குப் பயப்படமாட்டான்" என்றும், "கல்பில் உண்டாகிற ஒரு ஒளிக்குப் பயப்படுவான்" என்றும் ஒருசப்தம் வந்தது. மஸூஜி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"இபுலீசை நான் சொப்பனத்தில் கண்டு "நீ மனிதர்களுக்கு வெட்கப்படுவதில்லையா" என்றேன். அதற்கவன் "இவர்கள் மனிதர் அல்லர்" என்றும், "இவர்கள் மனிதராயிருந்தால் பிள்ளைகள் பந்து வைத்து விளையாடுவதுபோல் நான் இவர்களை வைத்து விளையாடமாட்டேன்" என்றும், "என்னை நோய் கொண்டு மெலியச்செய்த அந்தக் கூட்டமே மனிதராயிருக்கிறார்கள்" என்றும் சொல்லி சூபியாக்களைச் சுட்டிக்காட்டினான்" என்பதே. அபூ ஸஈதில்கிஜார் றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது;—"நான் திமிஷ்கில் இருந்தேன். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைச் சொப்பனத்தில் கண்டேன். அவர்கள் அபூபகர், உமர் றலியல்லாகு அன்குமா இவர்களுடைய தோளைப் பிடித்துக் கொண்டு நடந்துவருகிறார்கள். அப்போது நான் நெஞ்சின்மேல் விரலைத்தட்டிக்கொண்டு ஒருபய்த்தைப் பாடினேன். இதைக்கண்ணுற்ற நாயகமவர்கள் "இதன் கெடுதியானது இதன் நன்மையைக்காட்டிலும் அதிகமாயிருக்கிறது" என்று சொன்னார்கள்" என்பதே. ஷிப்லி

றமஹுல்லா அவர்கள் மவுத்தாகி மூன்றுநாள் சென்றபிறகு அவர்களைச் சொப்பனத்தில் கண்டு "அல்லாகு தஆலா உமக்கு என்ன செய்தான்?" என்று கேட்டதற்கு, "என்னிடத்தில் மிகவும் நெருக்கடியாகக் கணக்குவாங்கினுன். நான் நிராதரவாய்ப்போனேன். அவன் என் நிராதரவைக் கண்டு என்மீது றஹ்மத்து செய்தான்" என்று சொன்னுர்கள். சுபுயானுசவுரி றஹிமஹுல்லா அவர்களைச் சொப்பனத்தில் கண்டு "அல்லாகு தஆலா உமக்கு என்ன செய்தான்?" என்று கேட்டதற்கு, "றஹ்மத்து செய்தான்" என்று சொன்னுர்கள். அவர்களிடத்தில் அப்துல்லாஹில் முபாரக்கு றஹிமஹுல்லா உடைய நிலைமை என்ன?" என்று கேட்க, "அவர்களுக்குத் தினம் இரண்டுமுறை அல்லாகுதஆலாவைத் தரிசித்துக்கொள்ளும்படியான பெருமை கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று சொன்னுர்கள். மாலிகுல் அனசு றஹிமஹுல்லா அவர்களைச் சொப்பனத்தில் கண்டு அல்லாகு தஆலா உமக்கு என்ன செய்தான்?" என்று கேட்டதற்கு ஜனுஸாவைக்கண்டால் ஓதும்படி உசுமானுபுனு அப்பான் றலியல்லாகு அன்கு அவர்கள் எனக்குச் சொல்ல நான் கேட்டிருந்த சுபுஹானல்லாஹில் ஹைய்யில்லதீ லாயமூத்து என்ற-கலிமாவின் பொருட்டால் எனக்கு றஹ்மத்து செய்தான்" என்று சொன்னுர்கள், ஹசன்பசரீ றஹிமஹுல்லா அவர்கள் மவுத்தான இரவில் ஒருவர் தம் சொப்பனத்தில் வானவாசல்கள் திறந்திருந்ததுபோலும், மலக்குகள் சப்தமிட்டு "ஹசன்பசரீ அல்லாகு தஆலாவைத் தெரிசித்தார், அவனைக் கொண்டு பொருத்தமானுர்" என்று சொல்லிக்கொண்டிருந்ததுபோலும் கண்டார். ஜுனைது றஹிமஹுல்லா அவர்கள் இபுலீசை மனுமில் கண்டு "நீ மனிதர்களுக்கு வெட்கப்படமாட்டாயா?" என்று கேட்டதற்கு "இவர்கள் மனிதரல்லர்" என்றும், "ஷுனீஸிய்யாவில் இருப்பவர்களே மனிதர்" என்றும், "அவர்கள் என்னை மெலிவுறச் செய்தார்கள்" என்றும் இபுலீசு சொன்னுன். ஜுனைது றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் காலையில் எழுந்து ஷுனீஸிய்யா மஸ்ஜிதுக்குப் போனேன். வாசற்படியினிடம் சென்றபோது அந்த மனிதர்களைக் கண்டேன். அவர்கள் தபக்குரில் தலைகுனிந்தவர்களாக "நீர் அந்த அசுத்தனுகிய இபுலீசு மல்ஊனுடைய சொல்லின்பேரில் மருளவேண்டாம்" என்று சொன்னுர்கள்" என்பதே. உத்பத்துல்குலாம் றஹிமஹுல்லா அவர்கள் தங்கள் சொப்பனத்தில் சுவர்க்கத்துடைய ஹூருகளில் ஒரு ஹூரை மிகவும் அழகான ரூபத்தில் கண்டார்கள். அந்த ஹூரு அவர்களை நோக்கி

"ஒ உத்பாவே! நான் உம்மீது ஆசைகொண்டிருக்கிறேன். உம்மை விட்டு என்னை நீக்கும்படி நீர் யாதொரு காரியத்தைச் செய்யப்போதீர் பத்திரம்!" என்றாள். அதற்கவர்கள் "துன்யாவுக்கு நான் மூன்று தலாக்கு கொடுத்துவிட்டேன். பிறகு உன்னை அடைவதற்காக இனி துன்யாவைச் சுற்றிக்கொண்டிருக்கமாட்டேன்" என்று சொன்னார்கள். அபூஅய்யூபுஸஜஸ்தானி என்பவர்கள் ஒரு பொல்லாத மனிதனுடைய ஜனாஸாவைக் கண்டு அவன்மேல் ஜனாஸாத் தொழுகை தொழக்கூடாதென்ற எண்ணத்தினால் மெத்தைமேல் ஏறிவிட்டார்கள். ஒருவர் அந்த மனிதனை மனாமில் கண்டு "அல்லாகு தஆலா உனக்கு என்ன செய்தான்" என்று கேட்டார். அதற்கவன் "அல்லாது தஆலா எனக்கு றஹ்மத்து செய்தான்" என்று சொல்லி நீர் அபூஅய்யூபிடம்போய் லவ்அன்தும் தம்லிகூன கஜாயின றஹ்மத்தி றப்பீ இதன்லஅம்ஸக்தும் கஷ்யத்தல் இன்பாகிஎன்ற இதைச் சொல்லும்" என்றான். இதில் அவன் கருத்து யாதெனில், அல்லாவுடைய றஹ்மத்தின் பொக்கிஷங்கள் உங்கள் கைவசமிருக்கிறபக்ஷம் நீங்கள் உலோபகுணத்தினால் ஒன்றும்செலவிடமாட்டீர்கள்" என்பதே. தாவூதுதாயி றஹிமஹுல்லா அவர்கள் மவுத்தான இரவில் ஒருவர் தம் சொப்பனத்தில் வானத்திலிருந்து மலக்குகள் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருப்பதாகக் கண்டு "இன்று என்ன இரவு" என்று கேட்டார். அதற்கவர்கள் இன்றிரவில் தாவூதுதாயீ வபாத்தையடைந்திருக்கிறார். அவருக்காகச் சொர்க்கம் அலங்கரிக்கப்படுகிறது. என்று சொன்னார்கள். அபூஸஈதிஷ்ஷிஹாம் அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் ஸஹ்லுஸஃலூகி றஹிமஹுல்லா அவர்களை மனாமில் கண்டு "ஓ நாயகமே!" என்றேன் அதற்கவர்கள் "நாயகமென்பதை விடு அதுவெல்லாம் போய்விட்டது" என்றார்கள். அப்போது நான் "உங்களுடைய அந்த அமல்களும் செயல்களும எங்கு போயின?" என்றேன். அதற்கவர்கள் "கிழவிகள்கேட்ட அந்தமஸ்அலாக்குகளுக்குப் பதில்சொன்னது தவிர மற்றவை ஒன்றும் உபயோகப்படவில்லை" என்று சொன்னார்கள்" என்பதே. றபிஉபுனு சுலைமான் அவர்கள் சொல்லுகிறதாவது:—நான் ஷாபிஈ றஹிமஹுல்லா அவர்களை மனாமில்கண்டு "அல்லாகுதஆலா தங்களுக்கு என்ன செய்தான்" என்று கேட்டதற்கு "என்னைக் குருசியின்மேல் இருத்தி சொர்னத்தையும் பிரகாசம் பொருந்திய முத்துக்களையும் என்மீது வாரி இறைத்தான்" என்று சொன்னார்கள்" என்பதே. ஷாபிஈ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"எனக்கு ஒரு கஷ்டகாரியம் நேரிட்டது, நான் அதில் ஆஜிஸாய்ப் போனேன். என் சொப்பனத்தில் ஒருவர்வந்து "ஓ முகம்மது இதுரீசே! நீர் அல்லாஹும்ம இன்னீ லாஅம்லிகு லிநப்ஸீ ஸிரன் வலாநப்அன் வலாமவ்தன் வலாஹயாதன் வலாநுஷூரன் வலாஅஸ்ததீஉ அன்ஆகுத இல்லாமா அஃதைத்தனீ வலாஅன்அத்தகி இல்லாமாவக்கைத்தனீ அல்லாஹும்ம வப்

பிக்னீ லமா தஹிப்பு வதர்லா மினல்கவுலி வல்அமலி பீ ஆபியதின் என்கிற இந்த துஆவை ஓதும்" என்று சொல்லக்கண்டேன். நான் காலையில் விழித்தெழுந்து இந்த துஆவை ஓதினேன். முற்பகலாகிய ளுஹ்றா நேரத்தில் அந்தக்காரியம் இலகுவாயிற்று" என்பதே. "நீ இந்த துஆவை மறக்காமலிருக்கக்கடவாய், ஒருவர் உத்பதுல்குலாம் றஹிமஹுல்லா அவர்களை மனாமில் கண்டு "அல்லாகு தஆலா உமக்கு என்ன செய்தான்?" என்று கேட்டதற்கு, அவரை நோக்கி, "உமது வீட்டுச் சுவற்றில் எழுதியிருக்கிற அந்த துஆவைக்கொண்டு என்னை மன்னித்தான்" என்று சொன்னார்கள். மனாம் கண்டவர் சொல்லுகிறதாவது:—நான் விழித்தெழுந்து பார்க்கும்போது சுவற்றில் உத்பதுல்குலாம் அவர்களின் கையெழுத்தாக யாஹாதியல்முலில்லீன் யாராஹிமல் முத்னிபீன் வியாமுகீல அசராத்தில் ஆஷிரீன் இர்ஹம் அப்திக தல்கதரில் அலிமி வல்முஸ்லிமீன் குல்லஹும் அஜ்மயீன் வஜஅல்னா மஅல் அஹ்யாயில் மர்ஜூகீனல்லதீன அன்அம்த அலைஹிம் மினன்நபிய்யீன வஸ்ஸித்தீகீன் வஷ்ஷுஹதாயி வஸ்ஸாலிஹீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன் என்று எழுதியிருக்கக் கண்டேன் என்பதே. மவுத்து விஷயமாக இதுவரையில் சொல்லிவந்த அளவு போதுமாயிருக்கிறது. இதைக்கொண்டே ஜியாயெ ஸஆதத்தென்னும் இந்த கிதாபை முடிவு செய்தோம்.

இந்த கிதாபைப் பார்வையிட்டு இதனால் பயனடைபவர்கள் இதை இயற்றின எமக்கு நலவுகொண்டு துஆசெய்ய மறக்கமாட்டார்கள்" என்றும், "எம்மை மன்னிப்பதற்கும் எம் பிழைகளைப் பொறுப்பதற்கும் அல்லாகு தஆலாவினிடத்தில் கேட்பார்கள்" என்றும், "எம் சொல்லில் யாதொரு மறதியோ அல்லது வழுவோ சம்பவித்திருந்தால் அல்லது எமது எண்ணத்திலும் நிய்யத்திலும் யாதொரு பகட்டோ அல்லது ரியாவோ கலப்புண்டிருந்தால் அல்லாகு தஆலா தன்து மேன்மையும் சங்கையும் பொருந்திய கிருபையினாலும் அவர்களுடைய துஆவின் பரக்கத்தினாலும் அவைகளைப் பாராட்டாமல் மன்னித்தருள்வான்" என்றும நாம் ஆதரவு வைக்கின்றோம். ஒருவன் மனிதர்களை அல்லாவின் பக்கம் அழைத்து அவன் தனது நோக்கத்தை மனிதர்களில் வைக்கிறநிமித்தம் அல்லாவைவிட்டு தூரப்படுவதைப் பார்க்கிலும் மிகப் பெரிய நஷ்டம் ஒன்றுமிராது; நஊதுபில்லாஹி. மின்ஹா வநஸ்அலு பீகாதிமதில் கிதாபி "அல்லாஹும்ம இன்னா நஊது பிஅபுவிக மின் இகாபிக வநஊதுபிரிலாக மின்சகதிக வநஊதுபிக மின்க லாநுஹ்ஸீ சனாஅன் அலைக அன்தகமா அஸ்னைத அலாநப்ஸிக வல்ஹம்து லில்லாஹி வஹ்தஹு."

தம்மத்தில்கிதாபு பிஅவுனில் மலிகில் அல்லாம்

முற்றிற்று.

2-184 456-

# பிழைதிருத்த அட்டவணை.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 15 | 31 | வலுப்பானவைகள் | வலுப்பமானவைகளா |
| 16 | 20 | போனுள் | போனுன் |
| 18 | 15 | சர்வாடஙகத்திலுமிருப்பதி | சர்வாங்கத்திலுமிருப்பது |
| 37 | 8 | கிராசரிப்பார்கள் | திராகரிப்பார்கள் |
| 54 | 5,6 | நான் உங்களுக்கு ஷாகுருசெய் வேன் | கன்றியைமறக்காதீர்கள் |
| 60 | 16 | இரு | இது |
| 72 | 15 | மேலுல் | மேலும் |
| 96 | 13 | களையயும் | களையையும் |
| 96 | 26 | (ஆசை) | (வெற்றுதாவு) |
| 102 | 1 | போது உங்களுக்கு | போர் துநன்றியறிந்துபுகழ்வேன் கெட்ட அமல்களைக் காணும் போ உங்களுக்கு |
| 107 | 3 | பின்பு தாரின் ஒரு தட்டிலும் அக்களல்லாப்பட்டோலைகளும் | பின்பு அக்களல்லாப்பட்டோலை களும் தாரின் ஒருதட்டிலும் |
| 107 | 31 | ஹயத்து | ஹயாத்து |
| 108 | 14 | சஹிபுகாரி | சஹீபுகாரி |
| 111 | 27 | அபனல்[illegible]தகூன் | அய்னல்மூத்தகூன் |
| 111 | 30 | வஅர்[illegible]ல்லாரும் | அவர்களெல்லாரும் |
| 129 | 29 | இ[illegible]ாஹிம்கலில் | [illegible]ராஹீமகலீல் |
| 138 | 10 | [illegible]தான், பகரும் ஜா[illegible] [illegible]பது | [illegible]தான் பக்ரும் ஜாஹ்றதுமெ[illegible] [illegible]பது |
| 139 | 26 | வி[illegible]பதால் என்றும் | வி[illegible]பதல்ல என்றும் |
| 148 | 1 | [illegible]ஸ்லாமவர்கள் | அ[illegible]வசல்லமவர்கள் |
| 196 | 35 | [illegible]ம்பிப்பார்க்க | திரும்பிப்பார்க்க |
| 212 | 33 | [illegible]வென்று | [illegible]ண்டுமென்று |
| 218 | 34 | [illegible] | [illegible]ளச்சவொளி |
| 218 | 35 | ச[illegible] | [illegible]வாபு |
| 231 | 30 | ? சப்[illegible] | * சப்தகருவி |
| 242 | 16 | மூஹுஸபா[illegible] | மூஹாஸபாவாம் |
| 270 | 18 | பலபாகங்களாயப் | பலபாகங்களாகப் |
| 312 | 3,4, | சரிப்படுத்துவான் | சரிபடுத்துவாள் |
| 312 | 5,6, | மூதவக்கிலுக்கு | மூதவக்கிலுக்கு |
| 334 | 5,6. | என்றுசொன்னுர்கள் | என்றும் சொன்னுர்கள் |
| 375 | 12 | அடைவார்களென்றுவது என்ற அல்லது | அடைவார்களென்றுவீது அல் லது |
| 380 | 32 | இவரும் | இவ்விருவரும் |
| 421 | 17 | சினே[illegible]ருக்குக் | சினேகருக்கு |
| 421 | 25 | உவபபான | உவப்பான் |
| 431 | 16 | சுபுஹானலலத்திபுல் | சுபுஹான்ல்லத்தீபு |

35-முதல் 39-வது பக்கம் வரையில் தலைப்பில் முஞ்ஜியாத்து 1-வது அஸ்லு என்றதை முஞ்ஜியாத்து 2-வது அஸ்லு என்று திருத்தவேண்டும்.